புது சிருஷ்டி

NEW CREATION

வேதாகமப் பாடங்கள்

''நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்.''

தொகுதி 6

புது சிருஷ்டி
NEW CREATION

''ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம். இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாய் இருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.''

– 2கொரி. 5:16,17

முதற்பதிப்பு : 2007

சென்னை வேதமாணவர் சபை

22, முதல் தெரு, ராஜீவ் நகர்,

காலாடிப்பேட்டை, சென்னை – 600 019.

STUDIES IN THE SCRIPTURES
VOLUME VI

THE NEW CREATION
Tamil Version

I Edition 2007 - 1400 copies

NOT FOR SALE

Translated by :
CHENNAI BIBLE STUDENTS
No. 22, Ist Steet, Rajiv Nagar,
Kaladipet, Chennai - 600 019,
INDIA.

<u>அர்ப்பணிப்பு</u>

ராஜாதிராஜாவும் கர்த்தாதிகர்த்தாவுமானவருக்கும்

புத்திர சுவிகாரத்திரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்
பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்

மற்றும்

கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்

மற்றும்

தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
தவித்து பிரசவவேதனைப்படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.

"தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு," "அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக் குள்ளே கூட்டப்படவேண்டுமென்று தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம் முடைய தயவுள்ள சித்தத் தின் இரகசியத்தை எங் களுக்கு அறிவித்தார்."

(எபே. 3:11; 1:8&10)

போதகர் ரசல் அவர்களால் 1904 ல் எழுதப்பட்டது.

வெளியீட்டாளரின் முன்னுரை

சகோதரர் சார்லஸ் டி. ரஸ்ஸல் அவர்கள் எழுதிய ஆறு தொகுதிகளும் (Volumes) வேதமாணவர்களுக்கு மிகச் சிறந்த பொக்கிஷமாகும். ஏனெனில் அவர் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை மற்றும் ஆழ்ந்த சத்தியங்களை மிகத்தெளிவாக ஆறு தொகுதிகளில் கொடுத்திருக்கிறார். தமிழ் அறிந்த மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் நமது மூத்த சகோதரர்கள் **''யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு''** என்ற முதல் தொகுதியை தமிழில் மொழிபெயர்த்து நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அடுத்து **''காலம் சமீபமாயிருக்கிறது''** என்ற இரண்டாம் தொகுதியை நாங்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறோம். காலம் மிகச் சமீபமாயிருப் பதினால் **''புது சிருஷ்டி''** என்கிற இந்த ஆறாவது தொகுதியை தமிழாக்கம் செய்து வெளியிட்டிருக்கிறோம்.

கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் தேவனுடைய புது சிருஷ்டி ஆகியவைகளைப்பற்றி புரிந்துகொள்ளுதலுக்கேற்ற அடிப்படைப் பாடங்கள் இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. புது சிருஷ்டி சம்பந்தப்பட்ட அதன் பொறுப்புகள், சிலாக்கியங்கள் உட்பட எல்லா விவரங்களையும் நுணுக்கமாக இந்த பாடம் விளக்குகிறது. நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஏதுவான வகையில் இந்த பாடங்கள் முழுமையாக வேதாகமகத்தின் அடிப்படையில், மாத்திரமல்ல முழு ஆலோசனையுடனும் அளிக்கப்படுகிறது. இந்த புத்தகம் அறிவு, ஆலோசனை ஆகியவற்றின் நிஜமான பொக்கிஷ பண்டகசாலையாக இருக்கிறபடியினால் உங்கள் அனுதின கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகளையும், சந்தேகங்களுக்கான பதில்களையும் இந்த புத்தகத்தை திரும்ப திரும்ப படிப்பதின் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

நாங்கள் அதிக களிப்புடன் பெற்ற ஆசீர்வாதங்களை இதன் வாசகர்களும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த பதிப்பை ஜெபத்துடன் வழங்குகிறோம்.

வெளியீட்டாளர்

புது சிருஷ்டி

ஆசிரியரின் முன்னுரை

தேவனுடைய ஒவ்வொரு ஊழியக்காரரின் பெரும்பாலான வேலைகள் இருளிலே நடப்பிக்கப்படுகின்றன. எப்படியெனில், ஓர் அழகான கம்பளத்தை நெய்பவர்போல நாம் பின்னால் நின்று நம்முடைய முயற்சியின் பலன்களை சிறிதளவு பார்ப்பதோடு ஆண்டவர் குறித்தக் காலத்தில் ''நீ நன்றாய் செய்தாய்'' என்பதைக் கேட்போம் என்றும், சிறு பலனைக் காண்போம் என்றும் நம்புகிறோம். ''நான் அவருடைய சாயலில் விழிக்கும்போது திருப்தியாவேன்.''

இந்த புத்தகமானது உலகத்தின் பல்வேறு பாகங்களில் உள்ள தேவனுடைய மக்களின் இருதயங்களில் கிரியை செய்வதின் மூலமாக எங்களுக்கு ஆண்டவர் மிகுந்த கிருபையாக உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறார். தேவனுடைய வார்த்தையில் சபையாருக்கு வாக்குதத்தம் பண்ணப்பட்ட நீதிமான்களாக்கப்படுதல், பரிசுத்த மாக்கப்படுதல், மீட்பு ஆகியவற்றை நன்றாக புரிந்துகொண்டதின் நிமித்தம் பெற்ற ஆசீர்வாதங்களை அநேகரிடமிருந்து கேள்விப்படுவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. சமாதானம், நீதி, கிருபையில் வளர்தல் ஆகிய வழிகளைப் பற்றி புருஷர்களுக்கும், மனைவிகளுக்கும், பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்ட வேத ஆலோசனைகள் மூலம் பெற்ற ஆசீர்வாதங்களை அநேகர் எங்களுக்கு சொல்லியிருக்கிறார்கள். சபையில் வேத ஒழுங்கு முறைகளைக்குறித்தும், மூப்பர், உதவிக்காரர் ஆகியோரின் கடமைகள், சிலாக்கியங்கள் மற்றும் வேலைகளைக் குறித்தும் பெற்ற பெரும் ஆசீர்வாதங்களையும், உதவிகளையும் பற்றி மேலும் அநேகர் எங்களுக்கு தெரிவித்துள்ளார்கள். அவருடைய ஜனங்களின் ஆறுதலுக்கும், பக்தி விருத்திக்கும் ஆண்டவருடைய புகழ்ச்சிக்கும் ஏதுவாக தெய்வீக வழிநடத்துதலுக்குள்ளாக இந்த நற்கிரியைகள் தொடரும் என்று நம்பி நாங்கள் இவைகளில் களி கூறுகிறோம்.

இந்த புத்தகம் எழுதப்பட்ட நாளிலிருந்து தேவனுடைய பெரிய உடன்படிக்கைகளைக் குறித்த வெளிச்சம் இன்னும் தெளிவாக வளர்ந்திருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். நியாயப்பிரமாண உடன்படிக்கை தலையாகிய இயேசுவும், சரீரமாகிய சபையும் சேர்ந்த பெரிய மத்தியஸ்தரால் இரண்டாம் வருகையில் ஸ்தாபிக்கப்பட போகிற புது (நியாயப்பிரமாண) உடன்படிக்கைக்கு ஒரு முன்னடையாளமாக இருந்ததை இப்பொழுது நாம் காண்கிறோம். ''என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்'' என்று எழுதின மோசேயின் கூற்றுக்கு ஒத்த வண்ணமாக இயேசு நிஜப்பொருளாயிருக்கிறார் (பெரிய தீர்க்கதரிசியாக இருக்கிறார்). மோசே இந்த பெரிய தீர்க்கதரிசிக்கு ஒரு முன்னடையாளம் மட்டுமே. மோசே மத்தியஸ்தராக இருந்து கொடுத்த அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கை ஆயிர வருஷ யுகத்தின் பெரிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கைக்கு வெறும் முன்னடையாளம் அல்லது நிழலாக மாத்திரம் இருந்தது.

தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின போது அவர் முதலாவது இந்த பெரிய மத்தியஸ்தரின் தலையாக எழுப்பினார். அந்த காலத்திலிருந்து அவர் சபையை ஒரு புது சிருஷ்டியாக எழுப்பிக்கொண்டிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமான சபையிலுள்ள எல்லா சகோதரர்களும் உலகத்திலிருந்து சத்தியத்தை அறிகிற அறிவின் மூலமாக கூட்டி சேர்க்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் பரிசுத்த மாக்கப்பட்டு, மரண பரியந்தம் விசுவாசத்தின் மூலம் தகுதி உள்ளவர்களாகக் காணப்பட்டு எல்லோரும் தேவனுடைய வல்லமையினால் பூமிக்குரிய நிலைமையிலிருந்து கிறிஸ்துவின் சரீரமான சபையாக பரலோக நிலைமைக்கு உயர்த்தப்பட்டிருக்கும் போது பெரிய நிஜப்பொருளான மெல்கிசேதேக் முழுமையடைந்து ஓர் ஆசாரியராக, புது உடன்படிக்கையின் பெரிய மத்தியஸ்தராக, தெய்வீக வல்லமையினால் அவருடைய சிங்காசனத்தில் ஏறுவார். ''இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை உண்டு பண்ணுவேன்'' என்று தேவன் இஸ்ரயேலருக்கு சொன்ன பிரகாரமாக இந்த புது உடன்படிக்கை பிறகு செயல்பட துவங்கும்.

ஆதாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் ஈடுபலியை தேவ நீதிக்கு முழுமையாகவும், எக்காலத்திற்குரியதாகவும் செலுத்திய பிறகு, நிஜப்

பொருளாயிருக்கிற மத்தியஸ்தர் முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்வார். மேலும், புது உடன்படிக்கையின் கீழ், இப்படியாக முத்திரையிடப்பட்டு, ஆதாமின் சந்ததியில் மனப்பூர்வமாக கீழ்ப்படிவோருக்கு ஆசீர்வதிக்கும் வேலையையும், இழந்து போனதைத் திரும்பக்கொடுக்கும் வேலையையும் செய்யத் தொடங்குவார். தேவனோடு ஒருமனப்படுபவர்கள் எல்லோரும் ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியின் பகுதியாக எண்ணப்படுபவர்கள்; ஆயிர வருஷ அரசாட்சியின் முடிவு வரைக்கும், விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் கடைப்பிடித்தால் ஆபிரகாமின் சந்ததியாக தேவனுக்கு விளங்குவார்கள். ''அந்த சந்ததியாக மாறும்போது, தேவாசீர்வாதத்தை பெற்றுக் கொள்வார்கள்.''

புது உடன்படிக்கை என்ற பெயர் ஆயிர வருஷ அரசாட்சியில் தேவன் உலகத்தாரோடு தொடர்புகொள்ளுவதற்கு சொந்தமானது. ஆனால் இந்த பெயர் இந்த சுவிசேஷ யுகத்தில் சபையோடு செய்யும் உடன்படிக்கைக்கு தவறுதலாக உபயோகப்படுத்தப்படுகிறது. நம்முடைய உடன்படிக்கை உண்மையிலேயே சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட யூத உடன்படிக்கையிலும் வித்தியாசமான ஒரு புது உடன்படிக்கையா யிருக்கிறது. ஆனாலும் இது புது உடன்படிக்கையல்ல. சபையின் உடன்படிக்கை வேதத்தில் ''பலியினால் உண்டான உடன்படிக்கை'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த விஷயங்களை மனதில் வைத்துக் கொள்வது இந்த புத்தக வாசகர்களுக்கு பிரயோஜனமாயிருக்கும். இந்த உடன்படிக்கைகள் எல்லாம் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை களாகும். தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையும் மற்ற உடன்படிக்கைகளும் அவனுக்குள் முன்மாதிரியாகவும் முன்னடையாள மாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சபையானது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி என்று அழைக்கப்படுவதுடன் வானத்து நட்சத்திரங்களுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. மனுக்குலம் தேவனோடு ஒருமனப்படும்போது, அவர்கள் கடற்கரை மணலைப்போல ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியாவார்கள். ஆவிக்குரிய சந்ததியார் ஜென்மசுபாவமுள்ள சந்ததியாருக்கு ஆசீர்வாதத்தின் வழியாக இருப்பார்கள்.

நீதிமானாக்கப்படுதல் என்பதின் பொருள் மாறவில்லை. ஆனால் அது விரிவாகியும், தெளிவாகியும் இருக்கிறது. இன்று இந்த புத்தகத்தை எழுதும்போது ஆசிரியர் உபயோகிக்கிற மொழியில் சிறிது மாறுதல்களை

செய்தாலும் நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தையின் பொருளும் செயல்பாடும் எந்தவித மாற்றமும் அடையவில்லை.

வாழ்க்கைக்கு நீதிமானாக்கப்படுவது என்ற ஒன்றையும், தேவனுடன் ஏறத்தாழ உள்ள நட்புக்காக நீதிமானாக்கப்படுதல் என்ற வேறொன்றையும் நாம் இப்போது காண்கிறோம். உதாரணமாக, ஆபிரகாமும், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னாக உள்ள விசுவாச மார்க்கத்தாரும், தேவனோடு நட்புக் கொள்வதற்கும், ஜெபத்தின் மூலமாக ஏறத்தாழ தொடர்பு கொள்வதற்கும் நீதிமானாக்கப்பட்டார்கள். ஆனால் பாவநிவாரண இரத்தம் சிந்தப்பட்டு தெய்வீக நியாயாதிபதியாகிய பிதாவி னிடத்தில் அளிக்கப்பட்டு அவரால் அங்கீகரிக்கப்படும் வரை அவர்கள் முழுமையாக நீதிமானாக்கப்படுதலை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அது போலவே இன்றைக்கு பாவி தன்னுடைய பாவத்தை நோக்குவதைக் காட்டிலும் தேவனிடத்தில் நெருங்கி வரும்போது அவன் நீதிமானாக்கப்படுதலின் வழியில் இருப்பதாக சொல்லப்படுவான்; அவன் தேவனுடைய அநேக அநுக்கிரகங்களைப் பெற்றிருப்பான். நீதிமானாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையில் இருந்த ஒரு பாவியைக் குறித்து நாங்கள் ஒருமுறை பேசினோம். ஏனென்றால், அவன் இயேசுவை தன் இரட்சகராக விசுவாசித்து ஒரு முழுமையான பிரதிஷ்டைக்கு நேராக தன்னை நடத்திக்கொண்டிருந்தான். ஆனால் ஒரு பாவியினுடைய மனோநிலை பழைய ஏற்பாட்டு விசுவாசிகளைப் போல ‘‘பரிஷார்த்தமான நீதிமானாக்கப்படுதல்’’ என்று எண்ணப்படுவதாக இருந்தாலும் அவன் தன்னை பிரதிஷ்டையில் முற்றிலுமாக நம்முடைய மகா பிரதான ஆசாரியரான இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்து, இயேசு அதை பிதாவின் நாமத்தில் ஏற்றுக்கொள்ளும் வரையில் அது பாவத்திலிருந்து முழுமையான பூரமாண நீதிமானாக்கப்படுதலின் நிலையை அடையாது என்று நாம் இப்பொழுது காண்கிறோம். அதன் பின்னர் கிறிஸ்துவின் பலியின் பலனுக்குட்பட்டு அந்த பாவி பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு கிறிஸ்துவின் வஸ்திரத்திற்குள்ளாக பிதா ஏற்றுக்கொள்ளும் நிலையிலிருப்பான்.

அதிர்ஷ்டவசமாக இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டு அரைகுறையாக நம்பின ஜனங்களுக்கு அவர்கள் தேவனோடு கொண்டிருந்த ஸ்தானம் முழுமையாக நீதிமானாக்கப்பட்டது என்பதல்ல.

ஏனெனில் எவரையும் அவர் உடன்படிக்கையின்படி தனது சீஷர்களாகாமல், அவருடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றாதவரை அவர்களை முற்றிலுமாக நீதிமான்களாக்க மறுக்கிறார். இது இப்படியாக இருப்பதின் காரணமென்னவென்றால், நீதிமானாக்கப்படுவது என்பது ஒருவருக்கு ஒருமுறைதான் கிட்டும். அது மாத்திரமல்ல, அவன் அந்த நீதியை தவறாக பயன்படுத்தி, நித்திய ஜீவனைப் பெற தவறினால் அவன் நீதிமானாக்கப்படாமலிருந்த நிலையைக்காட்டிலும் மோசமான நிலையிலிருப்பான். தற்போது அவன் நீதிமானாக்கப்படாமல் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாமலிருந்தால் அவன் சபையைச் சேர்ந்தவனல்ல. ஆனால் மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவருடைய ராஜ்யத்தில் அருளப்படுகிற, இயேசுவின் பலியினாலுண்டான நன்மையிலும், நீதியிலும் ஒரு பங்கை உடையவனாயிருப்பான். இது சபையிலிருந்து தனியானது – சபை மேலான காரியத்தைப் பெறுகிறது. அவையாவன : தேவன் தன்னில் அன்பு கூறுகிறவர்களுக்கென்று ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற மகிமை, கனம், அழியாமை, தெய்வீக சுபாவம் போன்றவைகளே.

நீதிமானாக்கப்படுதல் என்ற பொருளில் உள்ள சிறப்புகளைக் குறிப்பிடுவது அநேகருக்கு பிரயோஜனமுள்ளதாக தோன்றாது. இருந்த போதிலும், தெய்வீக திட்டத்தை குறித்ததான மிகத் தெளிவான மேன்மையை பெற்றுக்கொண்ட பிறகு, நீதியின்மேல் பசி தாகமுள்ளவர் களுக்கு – எங்குமுள்ள எல்லா வேத மாணவர்களுக்கு, இதை அறிவிப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியை அடைகிறோம்.

தேவன் தன்னுடைய ஜனங்களின் நன்மைக்கென்று இந்த புத்தகத்தை ஆசீர்வதிக்க வேண்டுமென்பதே ஆக்கியோனின் ஜெபமாக இருக்கிறது.

புருக்கிலின், நியுயார்க். சார்லஸ் டி ரஸ்ஸல்.
அக்டோபர் 1, 1916.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

ஆதியிலே

பலவித ஆதிகள்–முன்னிருந்த பூமி –அதை ஒழுங்குபடுத்தும் ஒரு சிருஷ்டிப்பின் வாரம்–யுக நாளின் கால அளவு–விஞ்ஞானிகளின் அனுமானங்கள் பொருத்தமில்லாதது என பேராசிரியர் தானாவின் ஒப்புதல்–பல வகையான இனங்களின் மாறாத்தன்மை பரிணாமக் கொள்கையை தவறு என நிரூபிக்கிறது– டார்வினின் புறாக்கள்– பிரபஞ்ச தோற்றத்தின் ஒரு கோட்பாடு–பேராசிரியர் சில்லிமேன் மற்றும் தானாவின் உண்மையுள்ள சாட்சியங்கள்– முதலாவது சிருஷ்டிப்பின் யுக நாள் – இரண்டாவது....நாள் – மூன்றாவது.... நாள் – நான்காவது....நாள் – ஐந்தாவது....நாள்–ஆறாவது.... நாள்–ஏழாவது யுக நாளின் விடியலில் மனிதன், பூமியின் ராஜா சிருஷ்டிக்கப்பட்டான்– சர்.ஜே.டபிள்யு.டாசன், எல்.எல்.டி., எப்.ஆர்.எஸ். அவர்களின் ‘‘புவியியலும் சரித்திரமும் சந்திக்கும் இடம்’’ என்ற நூலின் சாராம்சம்–சிருஷ்டிப்பின் வாரத்தின் ஏழாவது யுக நாள்–அதன் காலஅளவு– அதன் நோக்கமும் பலனும்– வானத்துக்குரிய, பூமிக்குரிய பெரிய யூபிலி, அதன் நிறைவின் காலம். 1

அத்தியாயம் 2

புது சிருஷ்டி

புதுசிருஷ்டி மற்ற எல்லாவற்றிலுமிருந்து வித்தியாசமானது, வேறுபட்டது – மற்றவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளாமல் மனுக்குலத்திலிருந்து ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் – இந்த தெரிந்து கொள்ளுதலின் நோக்கம்–தற்கால, எதிர்கால காரியங்கள் – எப்படி புது நிலைமைக்கு உற்பவித்து பிறக்கிறது – அதன் எல்லா அங்கத்தினர்களுக்கிடையேயும் மற்றும் அவர்களது தலையும் தலைவரும் மணவாளனுமானவரோடும் உள்ள நெருங்கிய உறவு – அங்கத்தினர்களின் அபிவிருத்தியும் சோதனைகளும் – புது சிருஷ்டி

ஆவிக்குரியவைகளை பகுத்துணர் வதற்கான ஆறாவது அல்லது ஆவிக்குரிய அறிவு–தலையானவரிடம் விசுவாசமாயிருப்பதற்கும் எந்த சகோதரரிடமிருந்தும் பிரியாமலிருப் பதற்கும், எந்த நாமத்தின் மூலம் புது சிருஷ்டி அழைக்கப்பட வேண்டும்? 57

அத்தியாயம் 3

புது சிருஷ்டியின் அழைப்பு

''அழைக்கப்பட்டவர்கள்'' மட்டுமே தகுதியானவர்கள் –இந்த ''பெரிய இரட்சிப்பு''க்கான அழைப்பு எப்பொழுது ஆரம்பித்தது – மனந்திரும்பு தலுக்கான ஓர் அழைப்பு, திவ்விய சுபாவத்திற்கான ஓர் அழைப்பல்ல– யூதயுக அழைப்பு–சுவிசேஷ யுக அழைப்பு–ஞானிகள், வல்லவர்கள், கற்றுத்தேர்ந்தவர்கள் ஏன் அநேகரில்லை–உண்மையான தாழ்மையின் மேல் மேலான நிபந்தனை– அழைப்புக்கு குணாதிசயம் ஒரு நிபந்தனை– ஆயிர வருட யுகத்தில் உலகம் அழைக்கப்படாது, கட்டளையிடப்படும் – சுவிசேஷ யுக அழைப்பு காலவரையரைக்குட்பட்டது– புது சிருஷ்டி பிதாவினால் அழைக்கப்படுகிறது அல்லது இழுத்துக் கொள்ளப் படுகிறது–கிறிஸ்துவே நமது ஞானம்–கிறிஸ்துவே நமது நீதி – உண்மையான நீதிமானாக்கப்படுதலும், நீதிமானாக எண்ணப் படுதலும் வெவ்வேறானது–''புதுசிருஷ்டிக்கு'' நீதிமானாக்கப்படுதல் அவசியமா? – பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகளின் நீதிமானாக்கப்படுதல் நம்முடையதைக் காட்டிலும் வித்தியாசமானது – ஆயிரம் வருட யுக நீதிமானாக்கப்படுதல் – கிறிஸ்து நமக்கு பரிசுத்தமானார்– ஆயிரம் வருட யுக பரிசுத்தமாக்கப்படுதல் – லேவியரின் மாதிரியான இரண்டு விதமான அர்ப்பணிப்புகள்–நிலபுலன்களில் சுதந்திரமில்லை–திரள் கூட்டம் – பரிசுத்தமாகுதலின் இரு பகுதிகள் –தேவனுடைய பங்கு – மனிதனுடைய பங்கு – அனுபவங்கள் இயற்கையான பண்புகளிலிருந்து மாறானது – பரிசுத்தமாகுதல் பூரணப்படுதலோ அல்லது உணர்ச்சிவசப்படுதலோ அல்ல–''உன் நோய்களுக்கெல்லாம் அவரே பரிகாரி– கிருபையின் சிங்காசனத்தின் அவசியம்– எப்படி நீதிமானாக்கப்படுதல் பரிசுத்த மாகுதலோடு இணைகிறது–''பரம அழைப்பு'' முற்றுப்பெற்றதிலிருந்து பிரதிஷ்டை– சபையின் மீட்பு அல்லது இரட்சிப்பு. 91

அத்தியாயம் 4

புது சிருஷ்டி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது

தெரிந்துகொள்ளப்படுதலைப்பற்றி பொதுவான கண்ணோட்டம்– சரியான சிந்தனை – தெரிந்துகொள்ளப்படாதவர்களுக்கு தீங்கு ஏதும் இல்லை –தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும், விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் – மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு–''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாய் இருக்குமே ''– திரள்கூட்டம் – அவர்களுடைய வஸ்திரங்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுக்கப்பட்டது–தெரிந்துகொள்ளப்பட்ட திராட்சை செடியும் அதன் கொடிகளும் – கடந்த காலத்தில் உள்ள பல்வேறுவிதமான தெரிந்து கொள்ளுதல் – இவைகளில் சாகாமைக்குரியது ஏதுமில்லை –ஏசாவும் யாக்கோபும் முன்னடையாளம் – ''யாக்கோபு நான் உன்னை நேசித்தேன்'' – ''ஏசாவை நான் வெறுத்தேன்''–பார்வோன்–இந்த காரணத்திற்காகவே உன்னை நிலை நிறுத்தினேன்–தேவன் ஒருபோதும் சித்தத்தை பலவந்தம் பண்ணுகிறவரல்ல – பார்வோனும் இதற்கு விதிவிலக்கல்ல – ''தேவன் பார்வோனின் இருதயத்தை கடினப் படுத்தினார் ''– இஸ்ரேல் தேசம் தெரிந்து கொள்ளப்பட்டது –''இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது'' – தெரிந்து கொள்ளப்பட்ட ''புது சிருஷ்டி''–கிருபையின் முக்கியத்துவம் – ''இராஜாவுக்கு சொந்தமானவர்கள்'' என்பதின் விளக்கம்–அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறிக்கப் பட்டவர்கள் – ''அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள்'' – அழைக்கப்பட்டவர்களின் தகுதிகளும் குணாதிசயங்களும்–''தேவன் நம் பட்சத்தில் இருந்தால்''–அப்போஸ்தலரின் விவாதத்தின் சுருக்கம் – நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் – ஒட்டப் பந்தயம் – நான் இலக்கை நோக்கி தொடர்கிறேன் – ''நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதை அறிந்துகொள்ளுதல்.'' 197

அத்தியாயம் 5

புது சிருஷ்டியின் அமைப்பு

ஆவிக்குரிய ஆலயத்தின் ''ஜீவனுள்ள கற்கள்''–உண்மையான புது சிருஷ்டிக்கும் பெயரளவான புது சிருஷ்டிக்கும் இடையே உள்ள வித்தியாசம்–''தேவ இரகசியமும் '' ''அக்கிரமத்தின் இரகசியமும் '' – அந்திக் கிறிஸ்துவின் மாபெரும் அமைப்பு–வேத வாக்கியங்கள் நம்பத்தகுந்தவை – உலகத்துக்கும் ஆலயம் செல்வோருக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள சுயாதீனம் – குழப்பத்தில் ஓர் ஒழுங்கு – ''குறித்தகாலத்தில்'' –''யுகங்களின் முடிவு''–பிதாவினால் நடப்பட்ட திராட்சை செடி – ''ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்'' – யூதாசின் இடத்துக்கு வந்த பவுல் – அப்போஸ்தலரின் எண்ணிக்கை பன்னிரெண்டுதான் – அப்போஸ்தல அதிகாரம்– அப்போஸ்தலரின் உறுதியான குணாதிசயங்கள்– அப்போஸ்தலர் பவுல், மற்ற அப்போஸ்தலரிலும் ஒன்றிலும் குறைவானவர் அல்ல– பன்னிருவரின் ஊக்கம்– அப்போஸ்தலர்கள் எழுதியவைகளின் மேல் தெய்வீக கண்காணிப்பு –''இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்''– சுவிசேஷங்களின் இசைவு–அதிகாரத்தின் திறவுகோல் – அப்போஸ்தலரின் தவறாமை–எதிர்ப்புகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன – ''கிறிஸ்து ஒருவரே உங்கள் குருவாயிருக்கிறார்'' – ''தேவனுடைய மந்தையே'' உண்மையான சபை– அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், ஊழியக்காரர்கள், போதகர்கள்– தேவனின் அமைப்பாகிய புது சிருஷ்டி முழுமையாக நிறைவடைந்தது– அதன் மேற்பார்வையாளரும் அவரே–ஆவியின் வரங்கள் அதன் தேவைக்குப் பிறகு நின்று போனது–''பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தின்'' ஐக்கியம் –சக்திகளின் ஐக்கியம், கிறிஸ்தவனுக்கு எதிரானவர்கள் – பிஷப்புகள், மூப்பர்கள், உதவிக்காரர்கள் – ''தீர்க்கதரிசி'' என்ற வார்த்தையின் விசேஷித்த பொருள் – மனத்தாழ்மை மூப்பருக்கு அத்தியாவசியமானது – மற்றத் தேவையான தகுதிகள் – உதவிக்காரர்கள், ஊழியக்காரர்கள், வேலையாட்கள் – சபையில் போதகர்கள்– அநேகர் போதிக்க சாமர்த்தியம் உள்ளவர்களாயிருக்க வேண்டும் – ''சகோதரரே, உங்களில் அநேகர் போதகர்களாகா

திருப்பீர்களாக'' –''ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டு வதில்லை'' – ''போதிக்கிறவனும் போதிக்கப்படுகிறவனும்'' – சபையில் ஸ்திரீகளின் பங்கு – ஸ்திரீகள் உடன் வேலையாட்களாக– ''அவள் தலையை முக்காடிட்டுக்கொள்ளக்கடவள்.'' 241

அத்தியாயம் 6

புது சிருஷ்டியில் முறையும் ஒழுங்கும்

நியமனம் பண்ணுதலின் பொருள்–பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மட்டுமே பூரண அதிகாரம் பெற்றவர்கள்–''மதகுருமார்களும்'' ''பொது ஜனங்களும்''– மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் – ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துதல் – யார் மூப்பரை தேர்ந்தெடுக்கலாம், எப்படி – பெரும்பான்மையாயிருப்பது போதுமானதல்ல – பல்வேறுவிதமான ஊழியங்கள் – சம்பளம் பெறும் ஒரு ஊழியமா?– சபையில் ஒழுங்கு முறை – பிரசங்கிக்கும்படியாக அழைப்பு வந்தது என்று தவறாகப் புரிந்து கொள்வது – ஒழுங்கில்லாதவர்களை எச்சரியுங்கள்– எச்சரிக்க வேண்டும் என்பது பொதுவான கட்டளை அல்ல– வெளிப்படையாகக் கடிந்துகொள்ளுதல் அரிதானது–''ஒருவருக்கும் தீமைக்கு தீமை செய்யாதிருக்கப் பாருங்கள்''– அன்பு காட்ட ஏவப்படுதல் – நாம் சபையாக கூடிவருவது – நமது கூடுதல்களில் உள்ள விதங்களும் குணாதிசயங்களும்– உபதேசம் இன்னும் அவசியம்– கேள்விகளுக்கான தருணங்கள்–அனுகூலமான கூட்டங்களின் விளக்கம் – ''அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக் கடவன்''–அடக்க ஆராதனைகள்– தசமபாகங்கள், காணிக்கைகள், தானதருமங்கள். 349

அத்தியாயம் 7

புது சிருஷ்டியின் பிரமாணம்

ஒரு பிரமாணம் கொடுக்கப்படுதல் அதைக் காத்துக்கொள்ளத் திறமை உள்ளது என்பதைக் குறிக்கிறது – ஆதியிலேயே எழுதப்பட்டபடியான

திவ்விய பிரமாணம் –விழுந்து போன சந்ததியினருக்கு ஜீவனுக்குரிய பிரமாணம் கொடுக்கப்பட முடியாது – மீட்பு பிரமாணத்தின்படியல்ல, ஆனால் கிருபையின் படியாகும் – நியாயப்பிரமாணம் நிறைவேற்றப் பட்டு, கிறிஸ்துவின் ஒரே பலியினால் புது உடன்படிக்கை ஊர்ஜிதம் பண்ணப்பட்டது – சீனாய் மலைப் பிரமாணம் மாம்சீக இஸ்ரயேலருக்கு மாத்திரமே – புது உடன்படிக்கையின் பிரமாணம் – பரிசுத்தவான்களை அபிவிருத்தி செய்யும் பிரமாணம் – புது சிருஷ்டி தெய்வீக உறவிலும் உடன்படிக்கையிலும் வித்தியாசமானது, வேறுபட்டது – பரிபூரண பிரமாணத்தை மதிப்பதில் வளர்ச்சி பெறுதல்– இலக்கை நோக்கி ஓடுதலும் அங்கே நிலைத்து நிற்பதும்–பொன்னான கற்பனை– சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம். 455

அத்தியாயம் 8

புது சிருஷ்டியின் ஓய்வு நாள் அல்லது இளைப்பாறுதல்

சிலுவையிலிருந்து தெய்வீக விவகாரங்களின் காலத்தின் மாறுதல்கள் – அப்போஸ்தலர்கள் யூத ஜெப ஆலயங்களில் ஓய்வு நாளில் பிரசங்கித்தது யூத ஓய்வுநாளை அல்லது முறைமையை அங்கீகாரம் செய்து புது சிருஷ்டியின் மேல் திணிக்க அல்ல–ஒருவர் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் கட்டிடம் அவரது செய்தியை பாதிப்பதில்லை–அந்த நாளும் கூட பாதிப்பதில்லை– வாரத்தின் முதலாவது நாள் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளாக ஆரம்பம்– இந்த ஆசரிப்பு கான்ஸ்டன்டைன் காலத்திற்கு வெகு முன்னரே ஆரம்பமானது – உயிர்த்த ஆண்டவரின் தரிசனங்கள் பெரும்பாலும் வாரத்தின் முதல் நாளிலேயே நிகழ்ந்தன– முதல் நாளை ஓய்வு நாளாக பொதுவாக ஆசரித்தது ஒரு நன்றியறிதலான காரியம்–எனினும் அது தேவ ஏற்பாடல்ல–பிரான்சு தேசமும் ஏழு என்கிற எண்ணும்– இஸ்ரயேலரின் ஓய்வு நாள் நிழலானது – புது சிருஷ்டியின் ஓய்வு நாள் எப்பொழுது ஆரம்பித்து எப்படி தொடருகிறது. 497

அத்தியாயம் 9

புது சிருஷ்டியின் நியாயத்தீர்ப்பு

யேகோவா தேவன் பூலோகத்தின் பெரிய நியாயாதிபதி – ஆசீர்வாதங்கள், நன்மைகள் முதலானவைகள் எல்லாம் யேகோவாவிடமிருந்து அவர் குமாரன் மூலமாக வருகிறது – புது சிருஷ்டி கிறிஸ்துவோடு கூட உடன் சுதந்திரரும் அவரோடு கூட இருப்பவர்களுமானவர்கள் –''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ''– மனுக்குலத்திற்கு ஆக்கினைத் தீர்ப்பு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது – ஆயிரவருட யுகத்தில் கிருபையுடனும் உதவியுடனும் கூடிய நியாயத்தீர்ப்பு – முடிவான தீர்ப்பு இரக்கமற்ற, நீதியுள்ள தீர்ப்பாக இருக்கும் – சுவிசேஷ யுகத்தின் போது, புது சிருஷ்டியின் நியாயத்தீர்ப்பு–பூரண அன்பின் பிரமாணத்தால் புது சிருஷ்டி நியாயந்தீர்க்கப்படுதல்– சரீரத்தின் மேலாக மகிமையான தலையின் மேற்பார்வை – ''நீ எதைக்கொண்டு நியாயந்தீர்க்கிறாயோ அதே தீர்ப்பினால் நீயும் தீர்க்கப்படுவாய்''– நம்மை நாமே சரியானபடி நியாயந்தீர்க்க வேண்டும்– ''என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே''– சபை சில காரியங்களை தீர்க்க வேண்டும் – ''உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றம் செய்தால்'' – ஏழெழுபது தடவை மன்னிக்க வேண்டும் – சபைக்கு எதிரான குற்றங்கள்–நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். 519

அத்தியாயம் 10

புது சிருஷ்டியின் ஞானஸ்நானம்

இரண்டாம் நூற்றாண்டில் உள்ள ஞானஸ்நானம்–ஞானஸ்நானத்தின் ஆதரவாளர்கள்–ரோம சபையின் ஞானஸ்நான சடங்காச்சாரங்கள் – குழந்தை ஞானஸ்நானம், ஏன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது – ஞானஸ்நானத்தைக் குறித்து வேத வாக்கியங்களின் சாட்சி –'' சீஷர்கள்'' சபையின் கருத்து – ''பேப்டிஸ்ட்'' சபையின் கருத்து – உண்மையான கருத்து–கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் – ''எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்

பண்ணப்பட்டோம்''–அக்கினி ஞானஸ்நானம் – தண்ணீரால் செய்யப்படும் அடையாள ஞானஸ்நானம் –அடையாள ஞானஸ்நானம் அவசியமா?–சரியான அடையாளம்–யார் அதைக் கொடுக்கலாம் – உபயோகப்படுத்தப் படவேண்டிய வார்த்தைகள்–அடையாளத்தை திரும்பத் திரும்ப உபயோகிப்பது –''மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்.'' 555

அத்தியாயம் 11

புது சிருஷ்டியின் பஸ்கா

எகிப்தின் அடிமைத்தனமும் அதிலிருந்து விடுதலையும், நிழலும் பொருளும்–''முதற் பேறானவர்களின் சபை'' – ''நாம் அநேகராயிருந்தும் ஒரே அப்பமாக இருக்கிறோம்''– நினைவு கூறுதல் இன்னும் பொருத்தமானது–யார் இதை ஆசரிக்கலாம்–யார் இதை நடத்தலாம் – ஆராதனை முறைமை – ஈஸ்டர் பஸ்கா–மெக்ளின்டோக் (McClintock), ஸ்ட்ராங் (Strong) என்பவர்களின் வேத அகராதியிலிருந்து சில கருத்துக்கள். 607

அத்தியாயம் 12

புது சிருஷ்டியின் விவாகம் மற்றும் சிலாக்கியங்களும், கடமைகளும்

புது சிருஷ்டியின் பல்வேறு கடமைகள்–'' நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்''– தராதரமற்ற இணைப்பு கூறப்படவில்லை–தெய்வீக ஒழுங்கில் புருஷனும் ஸ்திரீயும்– மனிதன் தலையாக இருப்பது எதேச்சாதிகாரம் அல்ல–புது சிருஷ்டியின் விவாகம் – விவாக இணைப்பின் பல்வேறு நிலைமைகளில் புது சிருஷ்டிக்கான அறிவுரைகள்–கைவிடப்பட்ட நிலைமை ஏற்படும்போது– மனசாட்சியே கடைசியான பரீட்சை– அன்னகர்கள், கன்னிகைகள், பிரம்மச்சாரிகள்– ''ஆண்டவருக்குட்பட்டவர்கள்''–பெற்றோர்களின் பொறுப்பு. 645

அத்தியாயம் 13

பெற்றோர் என்ற முறையில் புது சிருஷ்டியின் கடமை

இனப்பெருக்கத்திற்கான சக்திகளுக்கு பயிற்சியும் பெரிதான கடமைகளாக சேர்க்கப்பட்டுள்ளது– பெற்றோரின் செல்வாக்குகள் – ''பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து''– நீதிமானாக்கப்பட்டு பிறந்த பிள்ளைகள்–இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே–கொள்ளை நோயான பொல்லாத யோசனைகள்–ஞாயிறு பள்ளிகளின் செல்வாக்கு–பிள்ளைகளின் நம்பிக்கை – பிள்ளையை நடத்துவதில் யோசனை கூறும் திறமை – ஆபத்துக் காலத்தில் நமது பிள்ளைகள்–முறையான கேளிக்கைகள் – புது சிருஷ்டியினுடைய பிள்ளைகளின் விவாகம் – நம்முடைய பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு உக்கிராணத்துவம். 691

அத்தியாயம் 14

புது சிருஷ்டியின் பலவிதமான பூலோக கடமைகள்

''எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளை செய்ய நாடுங்கள்''–''எதிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்''–''திரும்பக் கொடுப்பார்கள் என்று நம்பி கடன் தரவேண்டாம்''–கிறிஸ்தவ உபசரிப்பு–''நாளைய தினத்தைக் குறித்து கவலைப் படாதே''–''கிறிஸ்து மட்டுமே என் நம்பிக்கை''–''ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்''–காப்பீட்டு நிதி–பரஸ்பர உதவி போன்றவைகளுக்கான ஸ்தாபனம்–வீண் அலுவல்காரராய் இருப்பது–''தேவனை துதித்து மனிதனை சபிப்பது''–சமூக கடமைகள்–''எல்லா மனிதரையும் கனப்படுத்துங்கள்''– புது சிருஷ்டி பொது தேர்தலில் பங்கு பெறலாமா?–புது சிருஷ்டியும்

மனமாற்றமும்–விலையேறப்பெற்ற வஸ்திரங்களை அணிதல் –'' மகிமையினாலும, கனத்தினாலும், அழியாமையினாலும்'' நாம் தரிக்கப்படக் காத்திருப்போம். 751

அத்தியாயம் 15

புது சிருஷ்டியின் சத்துருக்களும், அவனுக்கு வருகிற தாக்குதல்களும்

''பழைய மனிதன்''–புது சிருஷ்டிக்கு உலகம் ஒரு சத்துரு–பெரிய சத்துரு–ஆதியிலிருந்து அவன் ஒரு பொய்யனும், கொலைபாதகனுமா யிருக்கிறான்–பொல்லாங்கில் சாத்தானின் கூட்டாளிகள்– பிசாசுகளின் கூட்டங்கள்–சாத்தானின் முதல் பொய் எப்படி நிலைநிறுத்தப்பட்டது – கிறிஸ்தவ விஞ்ஞானமும், பிரம்ம ஞானமும்–''நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் மாத்திரம் போராடவில்லை'' – பொல்லாங்கான ஊழியம் – சத்துருவின் தாக்குதல்கள் – ''விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்'' – ''சாத்தானை சாத்தானே துரத்தினால்'' அவனுடைய இராஜ்யம் நலிவுறும்–நீதியை போற்றுங்கள் – அக்கிரமத்தை வெறுத்துத்தள்ளுங்கள்–மாற்கு 16:9–20 – பேர் கிறிஸ்தவ சபை புது சிருஷ்டிக்கு ஒரு சத்துரு–தேவனுடைய சர்வாயுதவர்க்கம். 801

அத்தியாயம் 16

புது சிருஷ்டியின் தற்கால சுதந்தரம்

ஆவியின் முதற்கனிகள்–சரியான நம்பிக்கைகளும் தவறான நம்பிக்கைகளும்–நம்முடைய நம்பிக்கை –பரதீசில் கள்ளன்–பரி. பவுலின் ஊக்கமான வாஞ்சை –'' நம்முடைய பூமிக்குரிய வீடும்'' ''நம்முடைய பரலோக வாசஸ்தலமும்''–மறுரூபக்காட்சி– மரித்தோரி லிருந்து முதலாவது எழுந்திருக்கவேண்டியவர்–புது சிருஷ்டியின்

தற்கால சந்தோஷங்கள்–''கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்ளுவீர்கள்''– விசுவாசம் ஆவியின் ஒரு கனி, புது சிருஷ்டியின் தற்கால சுதந்தரத்தின் ஒரு பங்கு. 883

அத்தியாயம் 17

புது சிருஷ்டியின் உயிர்த்தெழுதலின் சுதந்திரம்

ஆவிக்குரிய காரியங்களை தெளிவாக புரிந்துகொள்ள விசுவாசக் கண்ணும் காதும் பயிற்சிக்கப்பட வேண்டும் –''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' – உயிர்த்தெழுதலுக்கு பின்னர் உள்ள வாழ்க்கை – அனாஸ்டசிஸ் – மறுபடியும் எழுதல் அல்லது உயிர்த்தெழுதல் – கடந்தகால பாவங்களுக்காக தண்டனையோ அல்லது தீர்ப்போ அல்ல; ஆனால் ஜீவனுக்கான இன்னொரு பரீட்சை – ''மரித்தோரிலிருந்து உயிர்த்தெழ பாத்திரவான்கள்'' – இந்த வாழ்க்கையின் பாவங்களுக்கான தண்டனை – ''சிலருடைய பாவங்கள் நியாத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும்'' – ''(விசேஷமாக) மரித்தோரின் (பிரதான) உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்'' – ''இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை '' – '' அவருக்கு ஒப்பாயிருப்போம்.'' 931

அத்தியாயம் 1

ஆதியிலே

பலவித ஆதிகள்–முன்னிருந்த பூமி –அதை ஒழுங்குபடுத்தும் ஒரு சிருஷ்டிப்பின் வாரம்–யுக நாளின் கால அளவு–விஞ்ஞானிகளின் அனுமானங்கள் பொருத்தமில்லாதது என பேராசிரியர் தானாவின் ஒப்புதல்–பல வகையான இனங்களின் மாறாத்தன்மை பரிணாமக் கொள்கையை தவறு என நிரூபிக்கிறது– டார்வினின் புறாக்கள்– பிரபஞ்ச தோற்றத்தின் ஒரு கோட்பாடு–பேராசிரியர் சில்லிமேன் மற்றும் தானாவின் உண்மையுள்ள சாட்சியங்கள்– முதலாவது சிருஷ்டிப்பின் யுக நாள்– இரண்டாவது....நாள் – மூன்றாவது.... நாள் – நான்காவது....நாள் – ஐந்தாவது....நாள் – ஆறாவது.... நாள் – ஏழாவது யுக நாளின் விடியலில் மனிதன், பூமியின் ராஜா சிருஷ்டிக்கப்பட்டான்– சர்.ஜே.டபிள்யு.டாசன், எல்.எல்.டி., எப்.ஆர்.எஸ். அவர்களின் ''புவியியலும் சரித்திரமும் சந்திக்கும் இடம்'' என்ற நூலின் சாராம்சம்–சிருஷ்டிப்பின் வாரத்தின் ஏழாவது யுக நாள்–அதன் காலஅளவு– அதன் நோக்கமும் பலனும் – வானத்துக்குரிய, பூமிக்குரிய பெரிய யூபிலி, அதன் நிறைவின் காலம்.

யேகோவா தேவனின் சிருஷ்டிப்பிலே ஒருவரோடொருவர் சம்பந்தங் கொண்ட தூதர்கள் அநேகர், எண்ணிலடங்காதவர்கள் உண்டு. ஆனால் அவர்களுக்குப் பின்னால் அவரது சொந்த சிருஷ்டிப்பின் ஞானமும் வல்லமையும் இருக்கின்றன. அவர் மாத்திரமே சிருஷ்டிகர். வேதம் உறுதிப்படுத்துகிறபடி ''அவருடைய கிரியைகளெல்லாம் பூரணமாயிருக்கிறது.'' அவருடைய பூரண கிரியைகளை தவறான முறையில் பயன்படுத்தவும், மாற்றவும் பொல்லாத தேவ தூதர்களையும் பொல்லாத மனிதர்களையும் அவர் அனுமதிக்கலாம். ஆனால் தீமை சிருஷ்டிகளை கெடுக்கவோ, அழிக்கவோ தொடர்ந்து நீண்ட காலத்திற்கு அனுமதிக்கப்படமாட்டாதென்று அவர் நமக்கு உத்திரவாதமாக

சொல்கிறார். அவர் கடைசியில் தீமையை தடைப்படுத்தி அழிக்கும் போது, அதை அவர் தமது சிருஷ்டிகளை சோதிக்கவும், சுத்திகரிக்கவும், நிரூபிக்கவும், பொலிவூட்டவும் மாத்திரமல்ல அவருடைய பரிசுத்தம், இரக்க குணம், மற்றும் திட்டத்தை அவருடைய ஞானமுள்ள சிருஷ்டிகளின் பார்வையில் மிக பிரகாசமுள்ளதாக்கவும் அதை அனுமதித்ததின் காரணம் என்பதை நாம் புரிந்து கொள்வோம்.

ஆதியாகமத்தில் ''ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்'' என்று வாசிக்கும்போது, இந்த ஆதி பிரபஞ்சத்தை குறிக்காமல் நமது பூமியை மட்டுமே குறிக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்தி, ''மேகத்தை சமுத்திரத்திற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் உடுத்தின போது,'' ''விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவ புத்திரர் எல்லோரும் கெம்பீரித்தார்களே.'' (யோபு 38: 4–11) ஆனாலும் இதைவிட முந்திய ஆதியைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தேவபுத்திரர் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னான ஒரு ஆதி; நாம் வாசிக்கும் வண்ணமாக : ''ஆதியிலே வார்த்தை (லோகாஸ்) இருந்தது, அந்த லோகாஸ் தேவனிடத்திலிருந்தது, அந்த லோகாஸ் ஒரு தேவனாயிருந்தது; அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.'' (யோவான் 1:1–3) (தொகுதி 5ல், 3வது அத்தியாயத்தைப் பார்க்கவும்). யேகோவா தேவன் அநாதியாய் இருக்கிறபடியால் அவருக்கு ஆரம்பமே இல்லை.''ஒரே பேரானவரே'' எல்லா ஜீவிகளுக்கும் மேலானவர்; ''தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்''– ''சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்'' (வெளி. 3:14; கொலோ. 1:15). தேவ தூதகணங்களின் சிருஷ்டிப்பின் ஆதிகள் அதன்பின் வரிசையாக வருகின்றன; இந்த ஆதிகள் பூமியின் சிருஷ்டிப்புக்கு முன்னதாக இருந்திருக்க வேண்டும்; அப்பொழுது தான் தேவ தூத கணங்கள் பூமி சிருஷ்டிக்கப்படும்போது கெம்பீரித்திருக்க முடியும்.

ஆதியாகமத்தில் சொல்லப்பட்டவைகளை தீர்க்கமாக பரிசோதித்துப் பார்க்கும் போது, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப் பட்டதற்கும் (வசனம் 1), அதைத் தொடர்ந்து ஒழுங்குப்படுத்தப்

பட்டதற்கும் அல்லது, இவைகள் முறைப் படுத்தப்பட்டதற்கும், தாவரம், மிருக ஜீவன்கள் சிருஷ்டிக்கப் பட்டதற்கும் இடையே வேறுபாடு இருப்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. இந்த தொடர் முறை செயல்கள் தேவனுடைய ஆறு யுக நாட்களின் தெய்வீக வேலை என்று வருணிக்கப்படுகிறது. வசனம் 2 சொல்கிறது : சிருஷ்டிப்பின் வாரத்தின் முதல் நாளின் துவக்கத்தில் பூமியானது ஒழுங்கின்மையும் (முறை யில்லாமல்) வெறுமையுமாய் (ஒன்றுமில்லாமல்), பிரயோஜனமற்றதாக, வெற்றிடமாக, இருளாக **இருந்தது.** இந்த முக்கியமான விஷயம் தனிப்பட்ட முறையில் கவனிக்கப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப் படுமாயின், உடனடியாக, அது இதுவரையிலிருந்த பூமியின் அமைப்பியலின் அத்தாட்சியை பலப்படுத்தும் சாட்சியாயிருக்கும். ஆனாலும் புவியியல் வல்லுநரின் கோட்பாடுகளில் சில காரியங்களை எதிர்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம். வேதாகமத்தினிமித்தம் வற்புறுத்திக்கூற தேவையற்ற காரியங்களை அகற்றி விட்டு ஏற்றுக் கொள்ள வேண்டியவைகளை உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த **ஆதிக்கும்** தேவன் பூமியை மனித குடியிருப்புக்கு தகுதியுள்ளதாக மாற்றும் சிருஷ்டிப்பின் வாரத்தின் **ஆதிக்கும்** இடைப்பட்ட காலம் எவ்வளவு என்பதை வேதம் கூறவில்லை. இந்த இடைவெளி எவ்வளவு என்பதில் புவியியல் வல்லுநர்களுக்குள்ளே ஒத்த கருத்து இல்லை– ஒரு சில தீவிர வல்லுநர்கள் அது லட்சக்கணக்கான வருஷங்கள் இருக்கலாம் என்று தீவிர சிந்தனையுடன் தங்கள் இஷ்டப்படி சொல்கிறார்கள்.

மீண்டும் சிருஷ்டிப்பின் காலத்திற்கு வரும்போது – நமது வானத்திலும் பூமியிலும் மனிதனின் நித்திய வாசஸ்தலத்திற்காக தேவனின் பரதீசை ஆயத்தப்படுத்தும் காரியங்களின் ஒழுங்குகளை நாம் பார்க்கும்போது இந்த ''நாட்கள்'' இருபத்து நான்கு மணி நேரங்கொண்டது என்று எந்த ஒரு இடத்திலும் அறிவிக்கப்படவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆகவே நாமும் அவைகளை அவ்விதமாக குறைத்து எண்ண வேண்டியதில்லை. வேதாகமத்தில் **'நாள்'** என்ற வார்த்தை ஒரு யுகம் (சகாப்தம்) அல்லது ஒரு காலப்பகுதியை குறிக்கிறது. இருபத்து நான்கு மணி நேரங் கொண்ட நாளை குறிப்புகளில் **அதிகமாக** பயன்படுத்தினாலும் எல்லா இடத்திலும் அது பயனற்றது. ஏனெனில் சில குறிப்புகள் ''வனாந்தரத்தில் சோதனை நாள்'' என்பது ''நாற்பது வருஷம்'' என்றும் சில சமயம் ''ஒரு நாள்''

என்பது ''ஒரு வருஷம்'' என்றும் தெரிவிக்கின்றன. (சங். 95:8–10 ; எண். 14:33,34 ; எசே. 4:4–6) மேலும் ''கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும்'' என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (2பேது.3:8) நிச்சயமாக இந்த ''யுக–நாட்களெல்லாம்'' சூரிய நாட்களல்ல. ஏனெனில் நான்காவது நாள்–நான்காவது யுகம் வரை சூரியன் காணப்படவில்லை.

இந்த ''யுக–நாட்களின்'' கால அளவு சொல்லப்படா விட்டாலும், அவைகள் ஒரே அளவான காலப்பகுதி என நாம் நியாயமாக யூகிப்பது சரி என்று வாசகர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். ஏனெனில் அவைகள் எல்லாம் ஒரு சிருஷ்டிப்பின் வாரத்தில் உள்ள (சமமான) நாட்கள் ஆகும். ஆகவே இந்த ஒரு நாளின் கால அளவு குறித்து தகுதியான ஆதாரம் கிடைக்கும் பட்சத்தில் நாம் மற்றவைகளும் இதே மாதிரியான கால அளவை கொண்டதாக இருந்தன என்று யூகிப்பது நியாயமானதாகும். இந்த சிருஷ்டிப்பின் நாட்களில் ஒரு நாள் என்பது ஏழாயிர வருஷ கால அளவு என்றும், அப்படியெனில் மொத்த சிருஷ்டிப்பின் வாரம் என்பது 7000 x 7 = 49000 வருஷங்கள் என்பதற்கு திருப்தியான ஆதாரத்தை காண்கிறோம். சில புவியியல் வல்லுநரின் யூகப்படி ஒப்பிடும்போது இந்த காலம் மிகச் சிறிய அளவாக இருந்தாலும், அங்கே குறிப்பிடப்பட்ட வேலைகள் முடிவதற்கு போதுமானதாக இருந்தது என்று நம்புகிறோம் –கட்டளை பிறப்பித்தல், பூமியை நிரப்புதல் –ஏற்கனவே பூமி இருந்தது; ஆனால் '' ஒழுங்கின்மையும் (முறையில்லாமல்) வெறுமையுமாய் (ஒன்றுமில்லாமல்) இருந்தது.''

விஞ்ஞானிகளுடைய அனுமானத்திற்கு காரணமாயிருந்த புள்ளிவிபரங்களைக் குறித்தும், அதை கணித்த முறை குறித்தும் பேராசிரியர் தானா (Prof. DANA) கூறுகிறதாவது:–

''தொடர்ந்து படியும் வண்டல் மண்ணின் தடிமனை கணக்கிட்டு அதன்மூலம் கடந்து சென்ற காலத்தை கணக்கிடும் முறையில் வண்டலின் இந்த தடிமனில் எப்போதும் சந்தேகமே எழும்புகிறது. தண்ணீரிலிருந்து சேகரிக்கப்பட்ட வண்டல் மண்ணின் படிவ கணக்கை வைத்து, ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் உதாரணமாக கடந்த 2000 வருட காலத்தில் வந்து குவிந்த மண்ணின் தடிப்புத் தன்மையை சார்ந்து புள்ளி விபரங்களை கணக்கிடும்போது இதனால் ஏற்படுகிற சந்தேகம் ஆரம்ப நாளிலிருந்து எடுக்கப்பட்ட கணக்கைப் பாதிக்கிறது– இது கிட்டத்தட்ட உபயோக மற்றதாக இருக்கிறது..... மதிப்பீடு..... ஒரு தண்ணீர் ஓடை ஒதுக்குகின்ற மென்மையான மண்ணை சார்ந்திருக்கும்போது அதிக

மதிப்புள்ளதாயிருக்கிறது; என்றபோதிலும் இங்கேயும் பெரிய சந்தேகத்திற்கு இடமிருக்கிறது.''

இந்த விஷயத்தை வேதாகமத்தின் அடிப்படையில், அது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட ஒன்று என்று நம்பி சோதித்துப் பார்ப்போம். வேதாகமத்தின் கூற்றுக்கும் புவியியல் வல்லுநர்களின் யூகத்திற்கும் முரண்பாடு எதுவும் காணப்பட்டால், தவறுகள் புவியியல் வல்லுநர்களுடையது; ஏனென்றால் அவர்களுடைய தத்துவங்கள் நன்றாக ஆராயப்பட்ட விஞ்ஞான அடிப்படையிலோ அல்லது விஞ்ஞான வளர்ச்சியிலோ அமையவில்லை.

மேலும், ஆதியாகமத்தை எழுதியவர், தான் குறிப்பிட்டுள்ள நாட்களின் கால அளவு, அவைகளின் துல்லியமான விடைகள் எல்லாவற்றையும் அறிந்திருந்தார் என்று எண்ண தேவையில்லை. நாங்கள், ஆதியாகமத்தின் குறிப்புகளை வேதத்திலுள்ள பெரிய தெய்வீக வெளிப்படுத்துதலின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளுகிறோம். அதின் சில வாக்கியங்களுக்குள் உள்ள மேலான அறிக்கைகளை வியக்கும் வகையில் மிக துல்லியமாக செய்யப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளும் ஒப்புக்கொள்வதைக் காண்கிறோம். மாறாக, புறஜாதியாரின் சமய புத்தகங்கள் ஒன்றிலும் இந்த பொருள் பற்றி காணப்படவில்லை; ஆனால் இதைப் பற்றி அபத்தமான அறிக்கைகள் உள்ளன.

''ஆதியிலே தேவன் .....சிருஷ்டித்தார்'' என்று துவக்குகின்ற வெளிப்படுத்துதலின் அறிவிப்பு எளிமையின் மேன்மையான தோற்றமாக காணப்படுகின்றது. நான் எப்பொழுது வந்தேன், யாருக்கு நான் பொறுப்பாளியாக இருக்கிறேன் என்று ஆர்வமுடன் கேட்கப்படும் முதல் கேள்விக்கு அது விடை தருகிறது. இந்த பிரகாசமான நாளிலே சில பிரகாசமான உள்ளங்கள் ஞானமுள்ள சிருஷ்டிகரைப் பற்றிய சிந்தனையிலிருந்து திரும்பி பரிணாமக் கொள்கையின் கீழ் கிரியை செய்கிற ஒரு குருட்டு நம்பிக்கையை அங்கீகரிப்பதும் திடகாத்திரம் உள்ளவர்கள் மட்டும் வாழமுடியும் என்பதும் துரதிருஷ்டவசமானது. ஐயோ! பரிதாபம், இந்த கருத்து அறிவாற்றலை தருகின்ற பெரிய ஸ்தாபனங்களில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறதோடல்லாமல், நம்முடைய பொதுவான பள்ளிக்கூட பாட புத்தகங்களிலும் படிப்படியாக சேர்க்கப்பட்டு வருகிறது.

உண்மைதான், ஒரு சிலர் மட்டுமே இன்றும் சிருஷ்டிகரை முற்றிலுமாக மறுதலிக்க துணிகரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள், என்றாலும் பக்தியுள்ளவர்கள் கூட இந்தக் கருத்தின்படி சிருஷ்டிப்பு இயற்கையின் சட்டப்படிதான் என்று சொல்லும்போது அவர்கள் தங்கள் விசுவாசத்தின் அடிப் படையையே பலகீனப்படுத்துவதோடு அல்லாமல் மற்றவர் களுடைய விசுவாசத்தையும் பலகீனப்படுத்துகிறார்கள். இன்னும் அதிகமாக பின்னோக்க வேண்டியதில்லை, அவர்கள் அனுமானிக் கிறார்கள் – நம்முடைய சூரியன் அதிகமான அளவில் வாயுக்களை வெளியேற்றியது, அவைகள் சேர்ந்து திரட்சியாகி பூமி உருவாகியது; சிறிது சிறிதாக **''புரோட்டோபிளாசம்''** உருவானது, அதன்பிறகு ''ஒரு **சிறிய ஜீவ அணு''** தொடங்கியது, ஆனால் எப்படி என்று தெரியாது. இந்த சிறிய ஜீவனை தொடங்குவதற்கு கூட ஒரு தெய்வீக வல்லமை வேண்டும் என்று அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும், ஆனால் அவர்களோ ஒரு தேவன் – சிருஷ்டிகர் தேவையில்லை என்பது போல் இதற்கும் சில இயற்கைச் சட்டத்தை இயந்திரகதியில் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த கண்டுபிடிப்பு கிட்டத்தட்ட முடிந்துவிட்டது போல் சொல்லப்படுகிறது. இந்த அறிஞர்கள் தேவனுக்குப் பதிலாக ஒரு குருட்டு, செவிட்டு தேவனை –இயற்கையை, அதன் வேலைகள், சட்டங்கள், சீற்றங்கள் ஆகியவைகளைக்குறித்து சிந்திக்கிறார்கள், பேசுகிறார்கள்.

இயற்கையின் விதிகளின்படி **புரோட்டோபிளாசம் (**Protoplasm) ஜீவஅணுவை உற்பத்தி செய்தது, அது நெளிந்து வளைந்து தனது சொந்த இனங்களை உற்பத்தி செய்தது, பின்னர் ஒரு வால் தேவை என அறிந்து அதையும் உருவாக்கிக் கொண்டது என்று அவர்கள் சொல்கிறார்கள். பிறகு அவற்றில் அதிபுத்திசாலியான சந்ததி ஒன்று **(**மீன்**)** சிறகு தேவை என தீர்மானித்து அதையும் உருவாக்கினது. இன்னொன்று, பின்னர், பசியுள்ள ஒரு சகோதரனால் துரத்துதலுக்குட்பட்டு, தண்ணீரைவிட்டு வெளியே குதித்ததினிமித்தம் யோசனைப் பெற்று சிறகிலிருந்து இறக்கையை உருவாக்கினது; பின்னர், இந்த நவீனத்தை விரும்பி தண்ணீருக்கு வெளியே இருந்து விட்டது; அதன் பின்னர் கால்களும் விரல்களும் பிரயோஜனமாயிருக்கும் என்று தீர்மானித்து அவைகளையும் உருவாக்கினது; இந்த குடும்பத்தைச் சேர்ந்த மற்றவை வேறு எண்ணங்களை பின் பற்றி நம்மை சுற்றியிருக்கிற பல்வேறு வகையான

மிருகங்களுக்கு சாட்சியாக இருப்பதுபோல குறைவில்லாத அளவுக்கு உற்பத்தி செய்தன. எனினும் காலப்போக்கில் முதல் ஜீவஅணுவின் சந்ததிகளில் ஒன்று குரங்கைப் போன்ற பரிணாமத்தைப் பெற்றது. எனினும் அதன் மனதில் ஒரு நூதன எண்ணம் தோன்றியது– அது தனக்குத்தானே சொல்லிக் கொண்டது : என் வாலை விட்டு விடுவேன்; என் கரங்களை கால்களைப்போல உபயோகிப்பதை நிறுத்தி விடுவேன்; என் அடர்த்தியான ரோமங்களையும் உதறிவிடுவேன்; மேலும் ஒரு மூக்கு, முன் நெற்றி, மற்றும் நீதிநெறி சம்பந்தமாகவும் சிந்திக்கும் உறுப்புகளோடும் கூடிய மூளை ஆகியவற்றை உண்டுபண்ணுவேன்; தைத்த ஆடைகளையும் ஒரு உயர்ந்த பட்டு தொப்பியையும் அணிந்து கொள்வேன், என்னை நான் டார்வின், எல் எல் டி,. என்று அழைப்பதோடு எனது பரிணாம வளர்ச்சியின் பதிவேட்டை எழுதுவேன்.

அந்த டார்வின் திறமைசாலி என்பதற்கு அவர் தன்னுடைய கோட்பாடுகளை தன் சக மனிதர்கள்மேல் திணித்தது சான்று பகருகிறது. இருந்தபோதிலும் பக்தியுள்ள தேவ பிள்ளை, ஒரு ஆள்தத்துவமுடைய சிருஷ்டிகர்மேல் நம்பிக்கை வைத்து, வேதம் அவரது வெளிப்பாடு என்பதை அவசரப்பட்டு விட்டுவிடாதிருக்கும் போது, டார்வினின் கோட்பாட்டிலுள்ள குதர்க்கத்தை சீக்கிரமாக கண்டுகொள்ள முடியும். டார்வின் புறாக்களைக்கொண்டு சில விநோதமான இனங்களை உருவாக்க முடிந்தது. அதாவது அவைகளின் கால்களில் சிறகுகள், தலைகளில் கிரீடங்கள், பிதுக்கிக் கொண்டிருக்கிற தொண்டைகள் போன்றவைகளை உருவாக்க முடிந்தது. மற்றவர்களும் இதுபோன்றே கோழி, நாய், குதிரை போன்றவைகளுடன் செய்திருக்கிறார்கள். புஷ்பக் கலைஞரும் பூக்கள், செடிகள் போன்றவைகள் மேல் பரிசோதனை செய்து மேற்கூறிய அதே பலனை பெற்றிருந்தார்கள். டார்வினிடம் உள்ள புதிய காரியம், அவருடைய **கோட்பாடு**–அதாவது எல்லா ஜீவராசிகளும் ஒரு பொதுவான ஆரம்பத்திலிருந்து **விருத்தியாயின** என்பதாகும்.

ஆனால், டார்வின் தன் புறாக்களோடு செய்த பரிசோதனை களும், மற்ற ஒவ்வொரு நூதன இனங்களோடு செய்த பரிசோதனை களும், தேவன் ஒவ்வொரு சிருஷ்டியையும் அதனதன் **ஜாதிகளின்படி** படைத்தார் என்ற வேதத்தின் கூற்றை ஊர்ஜிதப் படுத்துவதாகத்தான் இருக்கிறது. ஒவ்வொறு **இனத்திலும்** அற்புதமான வகைகளுக்கு சாத்தியக்கூறுகள் உள்ளன; ஆனால் அந்த வகைகள் இணைக்கப்பட

முடியாது, அல்லது புது **இனங்கள்** உருவாக்கப்பட முடியாது. சாதாரணமாக செய்யக்கூடியது வெவ்வேறு இனங்களை ஒன்றோடொன்று இணைப்பது. மேலும் இப்படி உருவாக்கப்பட்ட புதிய இனங்கள் தங்களின் இனங்களை விருத்தியாக்க முடியாது என்பதை அனைவரும் அறிந்திருக் கிறார்கள். மற்றவர்கள் செய்திருப்பது போலவே தன்னுடைய நூதன புறாக்களை அவைகளின் மற்ற இனத்திலிருந்து கவனமாக தனித்து வைக்க வேண்டியிருக்கிறது என்பதை டார்வின் புரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவைகள் சீக்கிரமாக சீரழிந்து சாதாரண நிலைமைக்கு வந்துவிடும். ஆனால் இயற்கையில் நாம் பலவிதமான இனங்களைப் பார்க்கிறோம்; ஒவ்வொன்றும் அதனதன் வகையைப்போல முற்றிலுமாக ஒன்றிலிருந்து ஒன்று தனியாக, எந்தவிதமான செயற்கையான கவனிப்பும் இல்லாமல் அவைகளின் சிருஷ்டிகரின் நியமத்தின்படி வைக்கப்பட்டுள்ளன. ஆதியாகமத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நமது தேவனையும், அவரது ஞானத்தையும், அவரது வல்லமையையும், மனிதனுடைய யூகம் ஒதுக்கிவைத்துவிட்டு, உண்மையை தவற விட்டுவிட்டாலும், ஆள்தத்துவமுடைய சிருஷ்டிகரில் விசுவாசிகளாயிருக்கிற நாம் தைரியமாக இருக்கலாம்.

ஆதியாகமத்தின் யுகநாட்களை 24 மணிநேர நாட்களென்று தவறாக புரிந்து கொள்ளும்போது நாம் சிருஷ்டிகராகிய தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை பெலவீனப்படுத்துவதோடு ஆதியாகமத்தில் சொல்லப் பட்டவைகள் அவருடைய வெளிப் பாடுகள் என்பதையும் மறைக்கிறது. பாறைகள், களிமண்களின் பலவித அடுக்குகள், அவைகள் காண்பிக்கக் கூடிய பெரிய மாறுதல்களுக்கு நீண்ட காலங்கள் சென்றிருக்கும் என்ற எல்லா சர்ச்சைகளையும் தாண்டி விளக்குகிறது. வேதாகமம் ஒரு யுக நாளை கற்றுக் கொடுக்கிறதை நாம் காணும்போது, பாறைகள் வேதாகம குறிப்புகளுக்கு மிக இசைவாக கொடுக்கும் சாட்சியத்தை கேட்க நாங்கள் ஆயத்தமாக இருப்பது மட்டுமல்லாமல் நமது வேதத்தில் நாம் வைத்திருக்கிற விசுவாசம் இன்னும் பலப்படுத்தப் படுகிறது. நாம் நம்முடைய எண்ணத்தின்மேலோ அல்லது மற்றவர்களின் யூகங்களின் மேலோ நம்பிக்கை வைக்காமல் இயற்கையின் உண்மைகளைப் பூரணமாக உறுதிப்படுத்தும் சிருஷ்டிகரின் வார்த்தையின்மேல் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம் என்று உணர்கிறோம்.

பிரபஞ்ச தோற்றத்தின் ஒரு கோட்பாடு

நம்முடைய ஒரு சில வாசகர்களின் பிரயோஜனத்திற்காக ஆசிரியரின் கவனத்தை அதிகமாய் ஈர்த்த ''வைலியன் கோட்பாடு'' (Vailian Theory) அல்லது''கெனாபி தியரி'' (Canopy Theory) என்ற சிருஷ்டிப்பின் காலத்தைப்பற்றிய கருத்துக்களில் ஒன்றை நாங்கள் சுருக்கமாக இங்கு தருகிறோம். அதைத் தொடர்ந்து இந்தக் கருத்துக்கும் ஆதி. 1:1; 2 :3 ஆகியவற்றில் சொல்லப்பட்டவை களுக்கும் உள்ள ஒருமைப்பாட்டை பார்க்க முயற்சிப்போம்.

''பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையும், இருள் சூழ்ந்ததுமாயிருந்தது'' என்று ஆதி. 1:2 ல் சொல்லப்பட்ட நிலைமையில் ஆரம்பிக்கும்போது, தேவன் எப்படி பூமியின் அணுக்களை முன்பு கூட்டிச்சேர்த்தார் என்பதை வெளிப்படுத்தாமல் விட்டதை ஞானவான்கள் யூகிக்க முயற்சிக்கமாட்டார்கள். வெளிப்படுத்தப்படாதவைகள் தேவனுக்குரியவைகள்; ஏற்றக் காலத்தில் அவருடைய மற்ற வெளிப்படுத்துதல்களுக்கு நாம் பொறுமையுடன் காத்திருப்பது நல்லது. பூமியின் உட்பாறைகளைத் தவிர அவைகளின் மேல் ஏறக்குறைய ஒன்றன்மேல் ஒன்றாக மென்மையாகவும் ஈரப்பதமுள்ளதாகவும் அநேக அடுக்குகளால் பூமியின் மேற்பாகம் முற்காலத்தில் (இப்படி இருந்ததற்கு ஆதாரம் உண்டு) இருந்ததை பகுத்து ஆராயும் கண்களினாலும், கடப்பாறை, மண்வெட்டி போன்றவைகளின் மூலமும் மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். இந்த உட்பாறைகள் ஒருகாலத்தில் அதிகமான வெப்பத்தினிமித்தமாக மென்மையாகவும் திரவமாகவும் இருந்தன என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. மேலும் பூமியானது மேற்பாகத்திலிருந்து அதிக ஆழமில்லாத உட்புறத்தில் இன்னும் உஷ்ணமாயும் உருகிய நிலையிலும் இருப்பதாக விஞ்ஞானிகள் பொதுவாக ஒத்துகொள்கிறார்கள்.

ஒரு காலத்தில் இந்த ஆதாரமான, எரிமலை பாறைகள் (கருங்கற்கள், கடினமான கற்கள் முதலியன) எல்லா எரியக்கூடிய மூலப்பொருட்களை வெளியேற்றும் அளவுக்கு உஷ்ணமாக இருந்திருக்க வேண்டும். மேலும் அவைகள் அடித்தளத்திலுள்ள பாறைகளாக இருக்கிற படியால் ஒரு காலத்தில் முழு பூமியானது அதிக உஷ்ணமாக இருந்ததென்று உறுதியாக நாம் முடிவெடுக்கலாம். அந்த சமயத்தில்,

தண்ணீரும் தாதுப் பொருட்களும் (இப்போது தண்ணீருக்குள் பலவித அடுக்குகளாக மேல் அடுக்கில் காணப்படுகிறவைகள்) வாயுக்களாக வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும்; மேலும் பூமியைச்சுற்றி ஒவ்வொரு திசையிலும் ஊடுறுவிச்செல்ல முடியாத மண்டலமாக மைல் கணக்கில் இருந்திருக்க வேண்டும். பூமி அதன் அச்சைக்கொண்டு சுழலும் சுழற்சி அதைச் சுற்றியுள்ள இந்த வாயுக்களையும் பரப்புகிறது. இதன் விளைவு அவைகளை குறிப்பாக பூமத்திய ரேகையின்மேல் ஒன்றுசேர்ப்பதாக இருக்கும். பூமி குளிர்ந்தால் இவைகளும் குளிரும்; மேலும் இவ்வாறாக வாயுக்களிலிருந்து திடப்பொருளாகவும் திரவப்பொருளாகவும் பிரிக்கப்படுகின்றன; கனமான தாதுக்கள் பல அடுக்குகளில் கீழ்பாகத்தை நோக்கி ஈர்க்கப்படுகின்றன. பூமி அந்த காலக்கட்டத்தில், இப்போது சனிக்கிரகம் தன் ''வளையங்களுடன்'' தோற்றமளிப்பதுபோல காணப்பட்டிருக்கும்.

இந்த குளிர்படுத்தும் செயல் முன்னேற்றமடைந்ததால் பிரிக்கப்பட்டு தூரத்திலிருந்த இந்த வளையங்கள் படிப்படியாக பூமியைக்காட்டிலும் ஒரு வித்தியாசமான சுழற்சியை பெற்றதினால் இவ்வாறாக பூமியை நோக்கி நெருங்கி நெருங்கி வந்தன. இவைகள் பூமியின் மேற்பரப்பை நோக்கி வேகமாக தள்ளப்பட்டன. ''ஆகாயவிரிவு'' அல்லது ''பரந்தவெளி'' அல்லது ''காற்றுமண்டலம்'' உருவாக்கப்பட்ட பின்பு இந்த ஜலப்பிரளயம் கீழிறங்கிக் கொண்டிருக்கும் வளையங்களிலிருந்து இரு துருவங்களின் திசையிலிருந்து இயல்பாக வந்தடையும். பூமியின் மையவிலக்கு விசையின் மையமாகிய பூமத்திய ரேகையிலிருந்து இந்த துருவங்கள் தூரத்திலிருப்பதால் அங்கே குறைந்த எதிர்ப்புப் சக்தியே இருந்திருக்கும். வெவ்வேறான நீண்ட காலங்களில் இந்த வளையங்கள் உடைந்து அநேக பிரளயங்களை கொடுத்து பூமியின் பரப்பின் மீது அடுக்குகளின் மேல் அடுக்குகளை குவித்தது. பூமத்திய ரேகையை நோக்கி துருவங்களிலிருந்து பாய்ந்து வந்த தண்ணீர்கள் மணல், சேறு, மற்றும் தாதுப் பொருட்களை பலவிதமாக பரப்பும். ஆதியாகமத்தின் வருணனையின் ஆரம்பத்தில் விவரிக்கப்பட்ட பிரகாரம் தண்ணீர் தாதுப்பொருட்களால் திடமாக நிறைந்து பூமியின் முழு மேற்பரப்பையும் இவ்வாறாக நிரப்பிற்று.

ஆதியாகமத்தில் சொல்லப்பட்டபடி எவ்வேழாயிரம் வருஷங்களைக்கொண்ட இந்த நீண்ட ''நாட்கள்'' ஒவ்வொன்றின்

போதும் ஒரு குறிப்பிட்ட வேலை அபிவிருத்தியடைந்தது. ஒவ்வொன்றும் அநேகமாக ஒரு பிரளயத்தில் முடிந்து, பெரிய மாற்றங்களை உண்டுபண்ணி சிருஷ்டிப்பின் இன்னும் சில படிகளுக்கும் மனிதனுக்காக ஆயத்தம் செய்யவும் வழியை உண்டு பண்ணிற்று. இந்த ''வைலியன் கோட்பாடு'' கூறுகிறதாவது: இந்த வளையங்களில் கடைசியான வளையம் தாதுப் பொருட்கள், மாசுகள் இல்லாத சுத்தமான ஜலமாக இருந்தது; மேலும் இது ஆதாமின் சிருஷ்டிப்பின் நாளில் உடைபடாமலும் கீழே வராமலும் இருந்தது; ஆனால் இது காற்று மண்டலத்திற்கு மேலாக சிறிதளவு ஒளி ஊடுருவும் ஒரு திரையைப்போல பூமியைச் சுற்றி முழுவதுமாக வியாபித்திருந்தது. ஒரு உஷ்ண வீட்டில் வெண்மையாக்கப் பட்ட கண்ணாடி பயன்படுவது போல இந்த தண்ணீர் மண்டலம் பூமியில் சீதோஷ்ண நிலையை சமப்படுத்த பயன்பட்டது; துருவங்களில் சீதோஷ்ண நிலை பூமத்திய ரேகையிலிருப்பதைக் காட்டிலும் வேறுபட்டிருந்தாலும் அது மிக குறைவாகவே இருந்திருக்கும். இப்படிப்பட்ட ஒரே சீரான நிலைமையில், புவியியல் அமைப்பியல் கூறுவதுபோல, உஷ்ண பிரதேச செடிகள் எங்கும் வளரும்; சீதோஷ்ண நிலையின் வேகமான மாறுதலினால் எற்படக்கூடிய புயல்கள் அப்போது காணப்படாமல் இருந்திருக்கும்; மேலும் இது போன்ற காரணங்களினால் அப்போது அங்கே மழை இல்லாதிருந்திருக்கும்.

ஜலப்பிரளயம் வரையில் பூமியில் மழையில்லாதிருந்தது. தாவரங்கள் மூடுபனியினால் (ஒரு பனி போன்ற, அல்லது சற்று ஈரமான, உஷ்ண வீடு போன்ற நிலை) நனைக்கப்பட்டன. (ஆதி.2: 5,6) நோவாவின் நாட்களில் வந்த ஜலப் பிரளயத்தைத் தொடர்ந்து பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன; மனிதனின் ஆயுசு நாட்கள் மிகவும் குறைவுபடத்தொடங்கின; தண்ணீர் மண்டலம் உடைந்தபோது உஷ்ண வீடு போன்ற நிலை அற்றுப்போயிற்று; சூரியனின் பூமத்திய ரேகை பாதை அதிக உஷ்ணமாக மாறிற்று; அதே சமயத்தில் துருவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மிக பயங்கரமாக இருந்திருக்கவேண்டும். அதாவது ஒரு உஷ்ண வீட்டின் சீதோஷ்ண நிலையிலிருந்து ஆர்டிக் (வட துருவ) குளிர் நிலைக்கு சடுதியான ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

இந்த சீதோஷ்ண நிலையின் மாற்றத்திற்கு பலமான சாட்சியங்கள் வட துருவத்தில் காணப்பட்டன. இரண்டு முழு பெரிய மிருகங்கள் திடமான பனிக் கட்டியில் பதிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

அவைகளை அந்த பனிக் கட்டிகள் துரிதமாக உறைந்து போக செய்தது. சரித்திரபிரகாரமாக யானைகள், பெரிய மிருகங்கள் போன்றவை வசிக்கவே முடியாத அளவுக்கு குளிரான இதே உறைந்த சைபீரியாவில் டன் கணக்காக யானைத் தந்தங்கள் காணப்பட்டுள்ளன. அதே போலவே ஒரு கருப்பு மானும் அந்த வட துருவத்தில் ஒரு பெரிய பனிப்பாறையில் பதிந்திருப்பது காணப்பட்டது. தற்சமயம் புல் வளரமுடியாத ஓர் இடத்தில் அந்த கருப்பு மான் பனிக்கட்டியில் உறைந்து மரணம் அடைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பே புல்லை சாப்பிட்டிருக்கவேண்டும். ஏனென்றால் அதன் வயிற்றில் ஜீரணமாகாத புல் காணப்பட்டது. இந்த உண்மையின் மூலம் அந்த கருப்பு மான் திடீரென அழிக்கப்பட்டது என்பது தெளிவாக நிரூபிக்கப்படுகிறது.

திடீரென்று தண்ணீர் கீழே வந்ததின் காரணம்– பூமி மற்றும் சூரியனுடைய வெப்பநிலையை சமநிலையில் வைத்து மூடியிருந்த நீர் மண்டலம் திடீரென்று உடைந்து, இது வடதுருவ பகுதிகளில் பெரிய பரப்பளவு பனிநிலங்களையும், பனிப்பாறைகளையும் உண்டு பண்ணிற்று. இந்த இடத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான பனிப்பாறைகள் சுழன்று தெற்குபுறமாக பூமியின் மத்திய ரேகையை நோக்கி மிதந்து வருகின்றன. நம்மால் நிதானிக்க முடிந்தவரை, பல நூற்றாண்டுகளாக இது வழக்கமாக இருந்திருக்க வேண்டும், ஆனால் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. பெரிய பனிப்பாறைகள் வேகமாக நகருகிற தண்ணீரால் சுமந்து வரப்பட்டு வடஅமெரிக்கா முழுவதுமாக குன்றுகளில் தெளிவாகக் காணக்கூடிய பாதாளப் பிளவுகளை உண்டு பண்ணினபோது புவி அமைப்பியல் வல்லுநர்களின் பனிக்காலம் அல்லது பனியாற்றின் காலத்தை நாம் இங்கே காண்கிறோம். வடமேற்கு ஐரோப்பாவும் அதன் குன்றுகளில் இதே விதமாக இருப்பதற்கு சாட்சி பகருகிறது. ஆனால் தென்கிழக்கு ஐரோப்பா, அர்மீனியா மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள இடங்களில் இப்படியில்லை– இந்த இடம் மனுக்குலத்தின் தொட்டில், இங்கு (நோவாவின்) பேழையும் கட்டப்பட்டு, இதற்கு சமீபமான அரராத் மலையில் கடைசியாக தங்கியது. பேராசிரியர் ரைட் மற்றும் சர்.ஜே. டபிள்யு. டாசன் எல்.எல்.டி., எப்.ஆர்.எஸ்., ஆகியோரின் கருத்தின்படி ஐரோப்பாவுக்கு அருகாமையில் ஒரு பொதுவான பூமியின் மூழ்குதலும் தொடர்ந்து எழும்புதலும் நடந்தன. பொதுவாக இந்த சாட்சி அறிவிப்பது போல் தோன்றுவது என்னவெனில், பேழையானது வேகமாக செல்கின்ற

தண்ணீரிலிருந்து விலகி கிட்டதட்ட நீர்ச்சுழியற்ற இடத்தில் மிதந்தது. அந்த பகுதிமுழுவதும் மிக அதிகமான வண்டல் சேர்க்கை இருப்பதாக அறிவிக்கப்பட்டதின் மூலம் இது சுட்டிகாட்டப்படுகிறது. பார்த்த வண்ணமாக முழு பூமியும் வட, தென் துருவங்களிலிருந்து வந்த ஜலப்பிரளயத்திற்கு உட்படுத்தப்பட்டது; அந்த சமயம் மனுக்குலத்தின் ஆரம்பம் விசேஷமாக முதலில் குறைக்கப்பட்டு பின்பு ஏற்ற சமயத்தில் விருத்தியாக்கப்பட்டது. இதைக்குறித்து (ஒபர்லின் ஓ கல்லூரியின்) பிரபல புவி அமைப்பியல் வல்லுநரும் பேராசிரியருமான ஜீ.எப். ரைட்டின் வார்த்தைகள் 30.3.1901ல் நியூயார்க் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது பின் வருமாறு :

ஜலப்பிரளயம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது

''பிரபல புவி அமைப்பியல் வல்லுநரும் ஒபர்லின் ஓ கல்லூரியின் பேராசிரியருமான ஜார்ஜ் ஃப்ரெட்ரிக் ரைட் ஐரோப்பாவிலிருந்து திரும்பினார். அவர் 'வட அமெரிக்கவின் பனி'' மற்றும் பனிக்கட்டி யாற்றின் காலத்தை ஆராய்ந்து விளக்குவது குறித்த மற்ற புவி அமைப்பியல் வேலைகளையும் எழுதினார். அவர் பூமியெங்கும் விஞ்ஞான சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். அவருடைய ஆராய்ச்சிகள் ஆசியாவின் மற்ற பகுதிகளுக்கும், ஆப்பிரிக்காவுக்கும் அவரை கொண்டு சென்றாலும், சைபீரியாவில் புவி அமைப்பியலினால் உண்டான அறிகுறிகளையும் அமைப்புகளையும் குறித்து ஆராய்வதில் அவரது நேரத்தின் பெரும் பகுதியை செலவிட்டார்.

''பேராசிரியர் ரைட்டின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் வெகுகாலமாக புவி அமைப்பியல் வல்லுநருடைய சர்ச்சையாக இருந்து வந்த பனிக்கட்டியாற்றின் காலத்தின் போது வட அமெரிக்காவும் ஐரோப்பாவின் சில பகுதிகளும் பனியால் மூடப்பட்டிருந்தது போல சைபீரியாவும் மூடப்பட்டிருந்ததா என்ற கேள்விக்கு முடிந்தவரை விடை கண்டு பிடிப்பதே.

''அதிகமான பெரிய புவி அமைப்பியல் வல்லுநர்கள், அநேகமான பிரபல ரஷ்ய விஞ்ஞானிகள் உட்பட, சைபீரியா பனியினால் மூடப்பட்டிருந்தது என்று நம்புகிறார்கள்.

''அவரது தற்கால ஆராய்ச்சிகளின் முடிவின்படி பழங்காலத்தில் வட அமெரிக்கா பனிக்கட்டியாலும், சைபீரியா ஜலத்தினாலும் சூழப் பட்டிருந்தது என்று பேராசிரியர் ரைட் உறுதியாக நம்புகிறார்.

''மேலும் அந்த ஜலமும், பனிக்கட்டியும் வேதாகமத்தில் சொல்லப்பட்ட ஜலப்பிரளயத்தினால் உண்டானவைகள்.

முதலாவது ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட ஜலப்பிரளயத்தின் விளக்கங்களை சுருக்கமாக பார்ப்போம் :

''ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானபோது, ஜலம் பெருகி, பேழையைக் கிளம்பப்பண்ணிற்று. அது பூமிக்குமேல் மிதந்தது.

''ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால் வானத்தின் கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன.

''மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய் பதினைந்து முழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று.

''வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவ சுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின....நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன.

''ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் மிகவும் பிரவாகித்துக் கொண்டிருந்தது.'' (ஆதி.7: 17–24)

இப்பொழுது பேராசிரியர் ரைட் இதைக் குறித்து என்ன குறிப்பிடுகிறார் என்பதைக் கேட்போம்:

''56 ஆவது பாகையின் தெற்கே பனிக்கட்டியாற்றின் அபூர்வ தோற்றம் இருந்ததற்கான அறிகுறிகளை நான் காணவில்லை. அதன் வட பகுதிக்கு நான் செல்லவில்லை; ஆனாலும் நியூயார்க்கின் தூர தெற்குப்பகுதியில் பனிக்கட்டி யாற்றின் அறிகுறிகள் நாம் சொல்லுகிற வண்ணம் இப்பொழுது காணப்படுவதி லிருந்து அந்த நிலம் பனிக்கட்டியால் சூழப்பட்டிருந்தது என்பதை மற்றக் காரியங்களிலிருந்து நான் ஏற்றுக் கொள்கிறேன்.

''அந்த முழுப்பகுதியின் விஸ்தாரமான தாழ்விற்கான அறிகுறிகளை நாங்கள் காணவில்லை. இது இங்கே ஒவ்வொன்றிலும் ஒரு புது வெளிச்சத்தை காட்டுகிறது.

''கருங்கடலின் கடற்கரையில் ட்ரெபிசாண்ட்டில் 700 அடி பள்ளத்தாக்கு இருந்ததற்கான ஆதாரம் கிடைத்தது. குன்றுகளின் மேல் சரளைக்கல் படிமாணங்களின் மூலம் இது காட்டப்பட்டது.

''துருக்கிஸ்தானின் மத்திய பகுதியில் தண்ணீர்கள் அதன் உச்சியை அடைந்தது. ஏன் என்றால் அங்கே கடல் மட்டத்திற்கு மேலாக 2000 அடி உயரத்திற்கு இந்த படிமாணங்களை நாங்கள் கண்டோம்.

'' நாங்கள் துருக்கிஸ்தானில் கண்ட அதே கறுப்பு மண்படிவத்தால் தென் ரஷ்யா பரந்திருந்தது.

''பூமியின் இந்த பகுதி ஜலத்தினால் மூடப்பட்டிருந்தது என்பதற்கு இன்னும் வேறு ஆதாரங்கள் இருந்தன. சைபீரியாவில், கடல் மட்டத்திற்கு 1600 அடிகளுக்கு மேல் இருக்கும் பைக்கால் ஏரியில் இன்னும் நீர் நாய்கள் இருப்பது ஆதாரங்களில்

ஒன்றாகும். காஸ்பியன் கடலில் காணப்படுகிற அதே இன நீர் நாய்களை, வட துருவங்களில் நாங்கள் கண்டோம்.

"எனவே வெள்ளம் வடிந்த போது அவைகள் அங்கேயே தங்கி விட்டன என்பது ஒரே சாத்தியகூறு. கீஃப்(Kief) நகரில் நிப்புர்(Nippur) நதியில், மனிதனுடைய காலத்திற்கு பின்பு வெள்ளம் வந்ததைக் காட்டும் கற்கருவிகள், கறுப்பு மண் படிவத்திற்கு ஐம்பத்து மூன்று அடிகளுக்கு கீழே காணப்பட்டதே எல்லாவற்றையும் விட மிகவும் அற்புதமான கண்டுப்பிடிப்பு.

"எனவே, இந்த நிலத்தாழ்வின் (depression) காலத்தை நிர்ணயிக்க இது எங்களுக்கு பிரயோஜனமாயிருந்தது. மனிதன் வந்ததிலிருந்து ட்ரெபிசாண்ட்டில் (Trebizond) 750 அடி பள்ளம் (நிலத் தாழ்வு) இருந்திருக்கிறது என்பதையும் தெற்கு துருக்கிஸ்தானில் 2000 அடிகளுக்கு ஆழத்தில் ஜலம் இருந்தது என்பதையும் காட்டுகிறது. பனிக்கட்டியாற்றின் காலத்திற்கு முன்பு வட அமெரிக்காவில் அவை செய்யப்பட்டது போல அந்த கற்கருவிகள் காணப்பட்டன. பனிக்கட்டியாறு திடீரென்று இங்கு ஏற்பட்டபோது, அந்த பள்ளம் ஏற்பட்டது என்பதை நம்புவதற்கான நல்ல ஆதாரத்தை இது கொடுக்கிறது.

"உண்மையாக சொல்லப்போனால் இது ஜலப்பிரளயம்."

ஆரம்பத்திலிருந்து முடிவை அறிந்த யேகோவா தேவன் மனிதனை பூமியில் கொண்டுவந்து, கடைசி வளையமானது பூமியில் வந்து நோவாவின் காலத்தில் பொல்லாத சந்ததியாரை ஜலப்பிரளயத்தினால் சரியான நேரத்தில் அழிப்பதற்கும், "இப்பொழுது இருக்கிற பொல்லாத உலகம்" என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த யுகத்தை ஆரம்பிப்பதற்கும் சரியாக காலத்தை நியமித்தார்.

நீர் மண்டலம் அகற்றப்பட்டதினிமித்தம் கோடைக்காலம் குளிர்காலம் என்று மாறி மாறி வரும் சீதோஷ்ண நிலை ஏற்பட்டதுமல்லாமல், கொடிய புயல்களுக்கும் அது வழி வகுத்தது; ஜலப்பிரளயத்திற்கு பின்னர் முதன் முதலில் காணப்பட்ட வான வில்லையும் உண்டாக்கியது. ஏனெனில் இதற்கு முன்பதாக வானவில் தோற்றத்தை ஏற்படுத்த சூரியனின் நேரடி ஒளிக்கதிர்கள் நீர்மண்டலத்திற்குள் புக முடியவில்லை. (ஆதி.9:12–17)

மேற்சொல்லப்பட்டதை எழுதிய பின்னர், பேராசிரியர் வைல் தானே எழுதிய சுருக்கமான அறிக்கையை **"சயின்டிஃபிக் அமெரிக்கன்"** என்ற பத்திரிக்கையிலிருந்து நாங்கள் எடுத்து கீழே தருகிறோம் :–

"உறைந்த மாபெரும் மிருகம்"

"சயின்டிஃபிக் அமெரிக்கன் பத்திரிக்கையின் ஆசிரியருக்கு :

"பனிக்கட்டி நிறைந்த கிழக்கு சைபீரியாவின் பகுதியில் டாக்டர் ஹெர்ஸ் மூலம் சமீபத்தில் ஒரு பெரிய மிருகத்தின் உடல் பனியில் புதைந்திருப்பதை கண்டுபிடிக்கப்பட்ட செய்தியை ஏப்ரல் 12 ல் வெளியிடப்பட்ட உங்கள் பத்திரிக்கையின் செய்தியை மிகவும் ஆர்வத்துடன் படித்திருக்கிறேன். இது எனக்கு புவி அமைப்பியல் வல்லுநரின் பாதையில் கிடைத்த ஒரு அரும் பெரும் காரியமாக தோன்றுகிறது. வியாழன் மற்றும் சனி கிரகங்களை தற்போது மேகம் போன்ற வாயுக்கள் சூழ்ந்திருப்பது போல புராதன பூமியை சூழ்ந்திருந்த வாயுக்கள் தொடர்ந்து படிப்படியாக குறைந்ததினிமித்தம் பூமியில், பனிக்கட்டி ஆற்றின் சகாப்தங்களும், ஜலப்பிரளயங்களும் ஏற்பட காரணமாயிருந்தது என்று கூறுவதற்கு இது முக்கிய சாட்சியாக இருக்கிறது.

*"சமீபத்திய புவி அமைப்பியல் காலம் வரைக்கும் கூட அண்டவெளியில் மீதமுள்ள நீராவிகள் வியாழன் கோளின் வாயு வளையத்தை போல பூமியை சுற்றிக் கொண்டிருந்திருக்கும் என்று எனது புவி அமைப்பியல் வல்லுநர்களாகிய சகோதரர்களுக்கு யோசனை சொல்லுகிறேன். இப்படிப்பட்ட நீராவிகள் முக்கியமாக எதிர்ப்புசக்தி குறைவாகவும், ஈர்ப்புசக்தி அதிகமாகவும் உள்ள துருவ பிரதேசங்களில் உள்ள வழிகள் மூலமாக பெரிய பனிக்கட்டி சரிவுகளாக வந்து விழ வேண்டும். இங்கும் கூட, இப்படிப்பட்ட வாயு மண்டலம் அல்லது உலகத்தின் கூரை துருவங்கள் வரைக்கும் சீதோஷ்ண நிலையை பக்குவப்படுத்தி, வட துருவத்தில் உள்ள அந்த மாபெரும் மிருகத்துக்கும் அதன் இனத்துக்கும் புல் வெளியை – பசுமையான கூரையின் கீழ் பசுமையான பூமியை உண்டாக்கியிருக்க வேண்டும். இது ஏற்றுக்கொள்ளப்பட்டால், செழிப்பான உலகத்தை அழிக்க வந்த போர்வை போன்ற தீடீர் பனிக்கட்டி சரிவுகளின் அளவிற்கும், திறமைக்கும் நாம் எல்லைகளை வரையறுக்க முடியாது. டாக்டர் ஹெர்ஸின் பெரிய மிருகமும், தங்கள் வயிறுகளில் ஜீரணமாகாத உணவுடன் பனிக்கட்டியில் புதையுண்டு காணப்பட்ட மற்ற மிருகங்களைப் போல, திடீரென்று பனிக்கட்டி வந்ததினிமித்தம் புதையுண்டு போயிருக்கவேண்டும் என்று நிரூபிக்கிறது. இந்தவிஷயத்தில் அதன் வாயில் புல் அரைக்கப்படாமலிருந்தது பனிக் கல்லரையில் தன் மரணத்தை சந்தித்ததை கூறுகிறது. மேலே சொல்லப்பட்டது ஏற்றுக்கொள்ளப் படுமென்றால் **பனியாற்றுக்கான ஆதாரங்கள்**_இருந்திருக்கிறது. பூமி பனியைப் பெற்றுக் கொள்ள குளிர வேண்டியிருந்தது என்ற தவறான கருத்துக்கு நாம் தப்பித்துக் கொள்ளலாம். நாம் பார்க்கிற வண்ணமாக பூமி பனியைப் பெற்று குளிர்ச்சி பெற்றது.*

"எரிமலை யுகத்தில் சமுத்திரங்கள் அளவற்ற தூய்மையாக்கப்பட்ட தாதுப் பொருட்களோடும், உலோகப் பொருட்களோடும் ஆகாயத்திறகு சென்றன. நாம்

இந்த வாயுக்கள் வளைய அமைப்பில் உருவானது என்றும், பெரிய தவணைகளில் யுகங்களின் போது திரும்பி வந்தன என்றும், அவற்றில் சில மனிதனின் யுகம் வரைக்கும் அசைவாடிக் கொண்டிருந்தன என்றும் ஏற்றுக் கொண்டால் நாம் அறியாத மற்றும் இன்றைக்கு குழப்பமாக இருக்கும் அநேக காரியங்களை விளக்கலாம்.

''நான் மறுபடியும் 'கெனாபி தியரி' என்று அழைப்பதை இந்த 20 ஆம் நூற்றாண்டின் சிந்தனையாளர்கள் அவைகளைப் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்பிக்கையுடன் 1874 ல் இந்த கருத்துக்களை துண்டு பிரதியில் நான் வெளியிட்டேன்.

ஐசக் என். வைல்.''

சிருஷ்டிப்பின் வாரம்

இந்த சிருஷ்டிப்பின் பொதுவான கருத்துக்களை நம் மனதில் வைத்து, நாம் ஆதியாகமத்திற்கு திரும்பி அதில் சொல்லப் பட்டுள்ளவைகளோடு, மேற்சொல்லப்பட்டுள்ள அனுமானங்களையும் ஒப்பிட்டு பார்க்க முயற்சிப்போம். முதலாவதாக சிருஷ்டிப்பின் வாரம் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம் : (1) இரண்டு நாட்கள் அல்லது யுகங்கள் (நமது கணக்கின்படி 2 × 7000 = 14000 வருஷங்கள்), மிருகங்கள் வாழ்விற்கு பூமியை ஆயத்தப்படுத்த பயன்படுத்தப் பட்டன. (2) அடுத்த இரண்டு நாட்கள் அல்லது யுகங்கள் (நமது கணக்கின்படி மேலும் 2 × 7000= 14000 வருஷங்கள்), தாவர வகைகளை உருவாக்கவும், கிளிஞ்சல் போன்ற சிறிய ஜீவராசிகளை உருவாக்கவும், சுண்ணாம்புக்கல், நிலக்கரி போன்ற மற்ற தாதுப் பொருட்களை அமைக்கவும் பயன்படுத்தப்பட்டன. (3) அடுத்த இரண்டு யுக நாட்கள் (நமது கணக்கின்படி 2 × 7000 = 14000 வருஷங்கள்), சமுத்திரத்திலும், பூமியிலும் நடமாடும் ஜீவ ஜந்துக்களை சிருஷ்டிப்பதற்கும், ''மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப் பட்டு'' பூமியின் ராஜாவாகவும், சிருஷ்டிகரின் பூமிக்குரிய சாயலிலும் சிருஷ்டிக்கப்படும் மனிதனுக்காக பூமியை ஆயத்தப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன. (4) மனிதனுடைய சிருஷ்டிப்பு, கடைசி கிரியை ஆறாம் நாளின் அல்லது யுகத்தின் முடிவிலும் ஏழாம் நாளின் ஆரம்பத்திலும் வந்தது. வேதத்தில் எழுதப்பட்ட பிரகாரமாக ''தேவன்.... தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.'' (ஆதி.2:2)

இரு உண்மையுள்ள சாட்சியங்கள்

பேராசிரியர் சில்லிமேன் அறிவிப்பதாவது:–

"கிரகத்தின் அமைப்பிலுள்ள ஒவ்வொரு பெரிய விசேஷ அம்சமும் புனித சரித்திரத்தில் சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கு முறைகளோடு ஒத்திருக்கிறது....இந்த சரித்திரம் (வேதாகமம்) தத்துவத்திற்கும், மதத்திற்கும் முக்கியமான குறிப்பைக் கொடுக்கிறது; கிரகத்திலேயே வேதாகமக் குறிப்பு உண்மையானது என்பதையும் பார்க்கிறோம்."

பேராசிரியர் தானா ஆதியாகமத்தில் சிருஷ்டிப்பின் காரியங்களைக் குறித்து அறிவிப்பதாவது:

"இதன் தொடர்ச்சியாக விஞ்ஞானத்திலிருந்து எடுக்கப்பட்டதைப் போன்ற நிகழ்ச்சிகளின் ஒழுங்கை மாத்திரம் நாம் கவனிக்காதபடிக்கு அவருடைய ஏற்பாட்டில் ஒழுங்கும், யாரும் அடையமுடியாத தீர்க்கதரிசனமும் இருப்பதைக் காண்கிறோம். தத்துவம் எவ்வளவுதான் போதிக்கப்பட்டிருந்தாலும் இந்த தீர்க்கதரிசன ஞானத்தை அடைய முடியாது."

மேலும் அவர் கூறுகிறதாவது:–

"இந்த நிகழ்ச்சிகளுக்கு எந்த ஒரு மனிதனும் சாட்சியாக இல்லை; அப்படிப்பட்ட அறிவு ஆதிகாலத்தில் இருந்ததில்லை. தெய்வீக ஞானம் கொடுக்கப்பட்டால் ஒழிய உலகத்தின் ஆதிகாலத்து மனிதனெவனும் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுத்திருக்க முடியாது; அல்லது வெளிச்சத்தின் சிருஷ்டிப்புக்கு நீண்ட காலத்திற்குப் பிறகு, பூமிக்கு வெளிச்சத்தின் ஆதாரமாயிருக்கும் சூரியனின் சிருஷ்டிப்பின் திட்டத்தை நான்காவது நாளிலும் வைத்திருக்க முடியாது; தாவரங்கள் மற்றும் மிருக ஜீவன்களின் சிருஷ்டிப்புகளுக்கு இடையே இவை இரண்டிற்கும் சிறப்பான ஒன்று எது, எப்பொழுது அவைகளுக்கு அது முக்கியமானதாக இருக்கும் என்ற இந்த முழுத்திட்டத்திலும் உள்ள தத்துவத்தின் ஆழத்தை யாராலும் அடைந்திருக்க முடியாது."

முதலாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. (ஆதி. 1:2,3)

வெளிச்சத்தின் தன்மையும், இயற்பியல் காரணமும் இன்னும் பரிபூரணமாக புரிந்துக் கொள்ளப்படவில்லை. வெளிச்சம் என்றால்

என்ன என்ற கேள்விக்கான திருப்திகரமான விடை இன்னும் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும், இயற்கை முழுவதிற்கும் அது ஒரு முக்கிய தேவை என்று நாம் அறிகிறோம்; பயனற்றதும் வெறுமையுமா யிருந்த பூமியை மனிதனுக்கு ஆயத்தம் செய்வதற்கு தெய்வீக வல்லமை செயல்படும் வேளை வந்தபொழுது தெய்வீக முறைமையில் வெளிச்சம் முதலிடத்தில் இருப்பதை பார்க்க நாங்கள் ஆச்சரியப் படவில்லை. ''ஆழ்ந்த ஆலோசனை'' என்று குறிக்கப்படுகிற தெய்வீக வல்லமையின் தன்மை அநேகமாக வடக்கத்திய வெளிச்சம் அல்லது வடதுருவ விண்ணொளி போன்ற வெளிச்சங்களுக்கு மின்சாரசக்திகளும் ஒளி ஆற்றலைக் கொடுத்திருப்பதாக தோன்றுகிறது. அல்லது அநேகமாக, நீர் மற்றும் தாதுப்பொருட்களின் பெரிய வளையங்களில் சிலவற்றை, அந்த சக்தி கீழே கொண்டு வந்து இவ்வாறாக வெளிச்சத்தையும் இருளையும், பகலையும், இரவையும் பிரிக்கத்தக்கதாக ஆயிற்று. இருந்த போதிலும் பூமியை இன்னும் சுற்றியிருந்த பெரிய வளையங்கள் அல்லது பல மடிப்புள்ள வளையங்களினிமித்தம் நட்சத்திரங்களையும், சந்திரனையும், சூரியனையும் சிறிதளவும் கண்டுக்கொள்ள முடியவில்லை.

''சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி–முதலாம் நாளாயிற்று.'' தேவனுடைய நோக்கத்தை படிப்படியாக அதன் பூரணத்திற்கு செயல்படுத்த, எபிரேய சூரிய நாட்களில் இருப்பது போல இந்த யுக நாட்களிலும் சாயங்காலம் முதலில் வந்தது, மற்றொரு 7000 வருஷ நாள் மற்றொரு கிரியைக்காக ஒதுக்கப்படும்போது, அது சாதாரணமாக தொடங்கி பூரணத்திற்கு முன்னேறும். இந்தக் காலம் அல்லது ''நாள்'' விஞ்ஞான ரீதியாக Azoic அல்லது ஜீவராசிகளற்ற காலமாக வர்ணிக்கப்படுகிறது.

இரண்டாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன் : ஜலத்தின் மத்தியில் (இடையில்) ''ஆகாயவிரிவு'' (பரந்தவெளி , வளிமண்டலம்) உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார். தேவன்....ஆகாயவிரிவுக்கு கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்.(ஆதி 1:6–8)

இந்த இரண்டாவது 7000 வருஷங்களையுடைய யுக நாள் ஒரு

வளிமண்டலத்தை உண்டாக்க முழுவதுமாக பயன்படுத்தப்பட்டது. தேவனுடைய திட்டமிடுதல், முறைப்படுத்துதல், சிருஷ்டித்தல் ஆகியவற்றில் குறைவில்லாதிருந்த போதிலும், அது அவருடைய அற்புதமான கிரியைகளெல்லாம் இருப்பது போல அநேகமாக பூரணமான இயற்கையின் வழியில் உருவாக்கப்பட்டது. முதல் யுக நாளின் போது தண்ணீர் மற்றும் தாதுப்பொருட்களின் வளையம் விழுந்ததினால் பூமிக்கு வெளிச்சம் ஊடுருவி வர முடிந்தது. அந்த வெளிச்சம் நிறைந்த பூமியையும் வெப்பம் கொதித்து நீராவியை உண்டுபண்ணும் அதின் மேற்பரப்பு தண்ணீர்களையும் அடைந்து, பல்வேறு வாயுக்களை உண்டாக்குகிறது; அவைகள் எழும்பி பூமியை சுற்றிலும் மெத்தையை அல்லது ஆகாயவிரிவை அல்லது வளிமண்டலத்தை அமைத்து, எஞ்சியிருக்கும் வளையங்களின் தண்ணீர்களை பூமிக்கு அப்பால் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கும். இந்த 'நாள்' கூட இதுவரை வேதாகமம் காட்டிய வண்ணமாக, Azoic அல்லது ஜீவராசிகளற்ற காலத்திற்கு உரியதாகும்; ஆனால் புவி அமைப்பியல் இதை மறுக்கிறது; ஏனெனில் இந்த காலத்துப் பாறைகள் புழுவின் அடிச்சுவடு களையும், அதிக அளவில் சிறு கிளிஞ்சல்களின் எஞ்சிய பொருள்கள் பெரிய சுண்ணாம்புக்கல் அடுக்குகளில் இருக்கிறதையும் காட்டுகிறது. அவைகள் இந்த முதல் ஜீவராசிகளின் (Palaeozoic) காலத்தை–சிலுரியன் காலத்தை குறிக்கிறது. இது வேதத்தில் சொல்லப்பட்டவைகளோடு வேறுபடவில்லை. ஏனெனில் வேதம் இந்த மிகச் சிறிய ஜீவ ராசிகளை பெரிதாக எடுத்துக் கொள்ளாததினால் இவைகளைக் குறிப்பிடவில்லை.

சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி–இரண்டாம் நாள்– அதற்குள்ள தெய்வீக நோக்கத்தின் முழு செயல்பாடோடு அதாவது மேகங்கள், நீராவிகள் முதலானவற்றை மேற்பரப்பிலுள்ள ஜலத்தினின்று வளிமண்டலத்தால் பிரித்த செயலோடு முடிந்தது.

மூன்றாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஒரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமியென்றும், சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்றும் பெயரிட்டார்.இது நிறைவேறி தேவன் நல்லது என கண்ட பிறகு அவர்: பூமியானது

புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.

புவி அமைப்பியல் இந்த வசனங்களை முழுமையாக உறுதி படுத்துகிறது. பூமியின் மேற்பாகம் குளிர்ந்தவுடன் ஜலத்தின் எடையானது அதை மேலும் கீழுமாக செய்ய முயற்சித்திருக்கும்; இதனால் சில பகுதிகள் அழுத்தப்பட்டு சமுத்திரங்களின் ஆழங்களாயின; மற்ற பகுதிகள் மேல் நோக்கி தள்ளப்பட்டு மலைத் தொடர்கள் ஆயின –ஆனால் திடீரென்று அல்ல, படிப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக ஆயின என்பதை இது நமக்கு காண்பிக்கிறது. இந்த எல்லா மாற்றங்களும் இந்த மூன்றாவது யுக நாளின் 7000 வருஷங்களில் தான் நடைபெற்றன என்று நாம் எடுத்துகொள்ளக் கூடாது. ஆனால் தாவரங்களின் சிருஷ்டிப்பின் ஆயத்தத்திற்கு தேவையான ஆரம்ப வேலைகளுக்கு அது சாட்சி பகர்ந்தது; இப்படிப்பட்ட சில பெரிய மாற்றங்கள் சமீப காலத்தில் தான் ஏற்பட்டன என்று புவி அமைப்பியல் சொல்வது சரியானதாகும். ஒரு நூற்றாண்டுக்குள் இந்த சக்தியைக் குறித்த சிறு உதாரணங்களை நாம் கண்டிருக்கிறோம்; மேலும் அடுத்த சில வருஷங்கள் இயற்கையின் திடீர் மாற்றங்களினால் ஏற்படும் துன்பங்களை நமக்கு தந்தாலும் நாம் ஆச்சரியப்பட மாட்டோம்; ஏனென்றால், நாம் இன்னொரு மாறுதலின் காலத்தில்– மாற்றப்பட்ட நிலைமைகள் தேவைப்படுகிற ஆயிர வருட யுக துவக்கத்தில் இருக்கிறோம்.

பெரிய மிருக ஜீவன்களுக்கு முன்னதாக தாவரங்கள் உண்டானது என்பதை புவி அமைப்பியல் ஒத்துக்கொள்கிறது; ஆரம்பக்காலத்தில் தாவரங்கள் புதர் போன்று அதிகமாக வளர்ந்தன என்பதையும் புவி அமைப்பியல் ஒத்துக்கொள்கிறது. வளி மண்டலம் கரியமில வாயுக்களாலும், நைட்ரஜன் வாயுக்களாலும் முழுவதும் நிறைந்திருந்தபடியால், பாசிகளும் பெரணி செடிகளும் கொடிகளும் அளவற்றதாகவும் இப்போது வளர்வதைவிட துரிதமாகவும் வளர்ந்தன. அப்போது அந்த வாயுக்கள் அவ்வளவு நிறைந்திருந்தபடியால் சுவாசிக்கிற மிருக ஜீவன்கள் அபிவிருத்தி அடைந்திருக்கமுடியாது. இப்போது பூமத்திய ரேகை பகுதியில் ஒரு சில அங்குலம் அல்லது ஒரு சில அடிகள் உயரத்திற்கு மட்டும் வளரும் செடிகள், அப்போது

நாற்பதிலிருந்து எண்பது அடி வளர்ச்சியைப் பெற்றிருந்ததுமல்லாமல் சில சமயங்களில் இரண்டு அல்லது மூன்று அடிகள் சுற்றளவு உள்ளதாகவும் இருந்தன. இவற்றை புராதன காலத்து மிருகம் அல்லது தாவரத்தின் எஞ்சிய பகுதிகள் நிரூபிக்கின்றன. அப்பொழுது இருந்த சூழ்நிலைகளில், அவைகளின் வளர்ச்சி அளவற்றதாகவும் வெகு வேகமாகவும் இருந்திருக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் நமது நிலக்கரி அடுக்குகள் உருவாக்கப்பட்டன என்று புவி அமைப்பியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள்: செடிகளும் பாசிகளும் கரியமில வாயுவை ஈர்க்கும் சக்தியை அதிகமாகக் கொண்டிருந்து, கரியை தங்களுக்குள்ளே சேகரித்து, நிலக்கரியை உருவாக்கியது; பின் வரும் யுக–நாட்களில் மிருகங்களின் ஜீவனத்திற்காக வளி மண்டலத்தை சுத்தம் செய்கையில் இவ்வாறாக இப்பொழுது நாம் காணும் நிலக்கரி அடுக்குகளை ஆயத்தப்படுத்தியது. பெரிய அலைகளினாலும், ஆகாய விரிவுக்கு மேலே உள்ள மற்ற தண்ணீர் வளையங்கள் இறங்கி வருவதினாலும், பூமியின் மேற்பரப்பில் உண்டான தொடர் ஏற்ற தாழ்வினாலும் இந்த மத்திய தாவரங்களின் பரந்த மிருதுவான நிலங்களும் பாசிகளின் அடுக்குகளும் மணல், களிமண் போன்றவைகளினால் மூடப்பட்டன. களிமண், மணல், சுண்ணாம்புக் கல் போன்றவைகளின் அநேக அடுக்குகளோடு இடையிடையே ஒன்றின் மேல் ஒன்றாக நிலக்கரி அடுக்குகளையும் நாம் காண்கிறோம். எனவே மேற்சொல்லப்பட்ட அதே செயல் மீண்டும் மீண்டும் அடிக்கடி நடந்திருக்கவேண்டும்.

சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி, மூன்றாவது 7000 வருஷ யுக – நாள் தெய்வீகத் திட்டத்தின்படி உலகத்தை ஆயத்தப்படுத்தும் அதன் பங்கை செய்து முடித்தது. நிலக்கரி, எண்ணெய் போன்றவைகள் படிந்ததினால் புவி அமைப்பியலில் அது நிலக்கரி உருவான காலம் (Corboniferous era) என்று அழைக்கப்படுகிறது.

நான்காவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங் களையும் நாட்களையும் வருஷங்களையும்

குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கும்படி வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன், பகலை ஆளப் (பகல் நேரத்தை குறிக்க) பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார் (நியமித்தார்).

ஒரு யுக நாளின் செயல்பாடுகள் அடுத்த நாளுக்கு கொண்டு செல்லப்பட்டன. மேலும் நான்காவது யுக நாளில் சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் காணப்படும் வரைக்கும், ஆகாய விரிவின் மேலிருக்கும் ஜலங்கள் வளையம் வளையமாக அதற்கு கீழிருக்கும் ஜலத்துக்கு வந்ததினால் முதல் நாளின் வெளிச்சம் அடுத்த இரண்டு நாட்களின் போது அதிகதிகமாக தெளிவானது என்று கருதுவது நியாயமானது. ஆனால் நோவாவின் கால ஜலப்பிரளயம் வரைக்கும்–கடைசி வளையம் வரைக்கும் இப்போது நாம் ஒரு பிரகாசமான நாளில் காண்பது போல அவ்வளவு தெளிவாக காணப்படவில்லை; ஆனால் இப்பொழுது பனிமூட்டமான நாள் அல்லது இரவின் போது நான் காணும் விதமாக கொஞ்சம் ஒளி புகும் தண்ணீர் திரையின் வழியே தெளிவாக பார்க்க முடியும். சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் நீண்ட காலமாக பூமியின் வெளித்திரையின் மேல் பிரகாசித்துக் கொண்டிருந்தன; ஆனால் இந்த வெளிச்சம் தென்படும்படியான காலம் வந்தது. மேகங்களினிமித்தமாக சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் காணப்படாமல் இருக்கும் போது நாம் காணும் சில மழைக் கால காலை நேரங்களைப் போல மந்தமான வெளிச்சத்தை முன்பு குறிக்கப்பட்ட நாட்கள் பெற்றிருந்தன; மனிதனும் மிருகங்களும் சிருஷ்டிக்கப்பட்ட போது அவர்களுக்கு பகலில் பூமி அதன் ஓட்டத்தின் மூலம் காலத்தைக் குறிக்கும்படியாகவும், இதற்கிடையில் சுவாசிக்கிற மிருகங்களுக்கு ஆயத்தம் பண்ணும்படியாக காற்றை, பிராண வாயுவாக்க ஆரம்பிக்கும் படியாகவும் மிகவும் தெளிவாக மாறுவதற்கான காலம் வந்தது. அதன் பின்னர், அதே 7000 வருஷ நாளில், அலைகளை கட்டுப்படுத்தவும், மனிதனின் வசதிக்காக இரவில் நேரத்தைக் குறிக்க தயாராக இருக்கவும் சந்திரனும், நட்சத்திரங்களும் கூட தோன்றின.

நான்காவது நாளின் போது தாவர வளர்ச்சியின் முன்னேற்றம் முடிந்து விட்டது என்று நாம் எண்ணலாகாது. ஆனால், மாறாக சூரியன், சந்திரனின் ஆதிக்கம் அதிகரித்து இன்னும் பல்வேறு வகையான புல் புதர்களையும், மரங்களையும் வளரச் செய்தபடியால் அது வளர்ச்சியை

அதிகரித்தது. புவி அமைப்பியல் இந்த காலத்தில் பூச்சிகள், நத்தைகள், நண்டுகள் போன்றவைகளின் வளர்ச்சிகளையும் காட்டுகிறது. மீன் முட்களும், செதில்களும் நிலக்கரியின் மெல்லிய படிவுகளிலும் கூடக் காணப்பட்டன. ஆனால் இது ஒழுங்கை பாதிக்கவில்லை. ஏனெனில் நிலக்கரி அடுக்குகள் உண்டாகுதல் மூன்றாவது நாளுக்குப் பிறகும் ஊர்வனவற்றின் காலத்திற்குள் இவ்வாறு தொடர்ந்தது தெளிவாகிறது. இந்த 'நாள்' புவி அமைப்பியல் குறிப்பிடும் ''ட்ரையாஸ்'' (Trias) காலத்துடன் மிக நெருக்கமாக ஒத்திருக்கிறது. சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி 7000 வருஷங்களைக் கொண்ட நான்காவது நாள் அல்லது பூமியை மனிதனுக்காக ஆயத்தப்படுத்துவதில் பெரும் முன்னேற்றத்தை சாட்சி பகரும் இந்த சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்து 28000 வருஷங்கள் முடிந்தன.

ஐந்தாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

பூமியின் குளிரடக்கமான சமுத்திரங்கள் ஜெல்லி மீனிலிருந்து திமிங்கிலம் வரைக்கும் உள்ள ஜீவஜந்துக்களால் எப்படி நிரம்பியிருந்தன என்பதை தற்காலத்தில் குளிரடக்கமான தென்கடல்களில் காணப்படும் அபரிமிதமான உயிரினங்களின் மூலம் தீர்மானிக்கலாம். நீரிலும் நிலத்திலும் வாழும் ஊரும் பிராணிகள் இந்த காலத்திற்கும் உரியதாகும். அந்த காலத்தின் போது, இப்போதிருக்கிற கண்டங்களும் தீவுகளும் ஒரு சமயம் கீழ்நோக்கி வந்த சிறிய அல்லது பெரிய (நீர்) வளையங்களின் நீரினால் மூழ்கடிக்கப்பட்டும், மற்றொரு சமயம் இராட்சத அலைகளினால் கழுவப்பட்டும் படிப்படியாக உயர்ந்தும் தாழ்ந்தும் கொண்டிருந்தன. சிப்பிகளின் எஞ்சிய பொருட்கள் போன்றவை உயர்ந்த மலைகளில் காணப்படுவது அதிசயமல்ல. மேலும் உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் காணப்படும் ஏராளமான சுண்ணாம்புக்கல் அடுக்குகள் சில வேளைகளில் ''சிப்பி மீன் கல்லறைகள்'' என்று அழைக்கப்படுவது

ஆச்சரியமல்ல. ஏனென்றால் அவைகள் கிட்டத்தட்ட முற்றிலுமாக பெருந்திரளான மேலோடுகளால் நிறைந்திருந்தன. சொல்லமுடியாத கோடிக்கணக்கான சிறிய ஜீவஜந்துக்கள் பிறந்து அவைகளின் சிறிய மேலோடுகளை விட்டு ஒன்றன்பின் ஒன்றாக இறந்தவைகள் எவ்வளவு பெருந்திரளாக இருந்திருக்கவேண்டும்! தேவன் அவைகளை பலுகிப் பெருக வேண்டும் என்று ஆசீர்வதித்தார் என்று வாசிக்கிறோம். ஆம், இத்தனை சிறிய ஒரு ஜீவியாயிருப்பதும், ஒரு குறுகிய காலத்திற்குரியதா யிருப்பதும் ஓர் அனுக்கிரகம், ஓர் ஆசீர்வாதம்.

வேதத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு மேலாக நாம் விவாதம் செய்யாமல் இருப்போமாக. கணக்கிலடங்காத வகையில் மீன்களையும், ஊரும் பிராணிகளையும் தனித்தனியாகவும், வெவ்வேறாகவும் தேவன் சிருஷ்டித்தார் என்று வேதம் வலியுறுத்தவில்லை. ஆனால் அந்த தெய்வீக வல்லமை அல்லது ஆவி அடைகாக்குதலை மாத்திரம் செய்தது. தெய்வீக நோக்கத்தின் மூலமாக சமுத்திரம் பல்வேறு வகைகளான அதன் ஜீவஜந்துக்களைப் பிறப்பித்தது. செய் முறைகள் அறிவிக்கப்படவில்லை – ஒருவித இனங்கள் வித்தியாசமான நிலைமைகளில் இன்னொன்றாக உருவாகியிருக்கலாம் ; அல்லது அதே மூல ப்ரோட்டோபிளாசத்தி லிருந்து (ஜீவன்) ஜீவஜந்துக்களின் வித்தியாசமான முறைகள் வேறுபடும் நிலைமைகளில் உருவாகியிருக்கலாம்; ஒருவனும் அறியான்; மேலும் பிடிவாதமாக இருப்பது ஞானமற்றது. அந்தக் கடல்களின் அதிக தாதுப்பொருட்கள் நிறைந்த தண்ணீர்களின் இரசாயன செயல்பாடு மூலமாக(Palaeozoic) கொழகொழப்பான திரவத்தின் ப்ரோட்டோ–பிளாசம் கூட ஜீவியத்திற்கு வந்திருக்க முடியாது என்று தர்க்கம் செய்வது நமக்குரியதல்ல. நாங்கள் சொல்வது என்னவென்றால், எல்லாம் தெய்வீக நோக்கம் மற்றும் ஏற்பாட்டின் பலன்களாக வந்தன. எனவே எந்த வழிகளாயிருந்தாலும், எந்த ஏஜென்சிகளாயிருந்தாலும் அவைகள் தெய்வீக சிருஷ்டிப்புக்கள். ஆதியாகமத்தின் வார்த்தை களின்படி மாத்திரமல்ல இயற்கையின் உண்மைகள் மூலம் இது காட்டப்படுகிறது என்று நாங்கள் சொல்கிறோம். சமுத்திர ஜீவஜந்துக்கள் எப்படி உண்டாக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொன்றும் இருக்கிறபடியே அதனதன் இனங்களும் மற்ற இனங்களாக மாறமுடியாதபடி உள்ள நிலைமைக்கு கொண்டு வரப்பட்டன. அவைகள் எப்படி பிறப்பிக்கப் பட்டாலும், இது தேவனுடைய கிரியையே. இந்த நாள் அல்லது யுகம் விஞ்ஞானியின் ஊரும் ஜந்துவின் காலத்திற்கு ஒத்திருக்கிறது. பூமியை

மனிதனுடைய குடியிருப்பாகவும் இராஜ்யமாகவும் ஒழுங்குபடுத்தும் வேலையின் துவக்கமுதல் 35,000 வருஷங்களாகி – சாயங்காலமும் விடியற்காலமும் ஆகி ஐந்தாம் நாள் ஆயிற்று.

ஆறாவது சிருஷ்டிப்பின் யுக–நாள்

பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும் காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாக பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

இந்தக் காலத்தில் பூமியின் மேற்பரப்பில் உள்ளவைகளெல்லாம் மிகவும் நிலையானதாகிக் கொண்டிருந்தன. பூமியின் மேற்பரப்பு மணல், களிமண், மேலோடுகள், நிலக்கரி, மற்றும் சேர்க்கப்பட்ட பலதரப்பட்ட தாது பொருட்களால் நூற்றுக்கணக்கான அடிகள் தடிப்பாக இருந்தது. அந்த தாதுப்பொருட்கள் சேர்க்கப்பட்டது எப்படியெனில், சில பூமியதிர்ச்சிகளினால் தூக்கியெறியப்பட்டு நொறுங்கின பாறைகளி லிருந்தும், சில பூமியை முன்பு சுற்றியிருந்த வளையங்களிலிருந்தும், சில மிருகங்கள் மற்றும் தாவரங்களின் குவியல்களிலிருந்தும் சேர்க்கப்பட்டன. அதோடுகூட அந்த 35,000 வருஷங்களின்போது பூமியும் கூட அதிகமாக குளிர்ந்திருக்க வேண்டும். மூன்று வகைகளாக பிரிக்கப்பட்ட சிறிய மிருகங்களுக்கு ஆயத்தமாக மலைத்தொடர்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் மூலம் தண்ணீர் நன்றாக வெளியேற்றப்பட்டு பூமியின் மேற்பரப்பு போதுமான அளவு சமுத்திரத்திற்கு மேலாக இருந்தது. இந்த மூன்று வகைகளாவன: (1) ஊர்வன, கொடிய சுவாசிக்கும் ஜீவஜந்துக்கள்– பல்லிகள், பாம்புகள் போன்றவை; (2) பூமியின் மிருகங்கள், அல்லது வீட்டு மிருகங்களிலிருந்து வித்தியாசப் படுத்தப்பட்ட காட்டு மிருகங்கள்; (3) கால்நடைகள் என்று குறிக்கப் பட்டு, விசேஷமாக மனிதனுக்கு துணையாக இருக்கும் வீட்டு மிருகங்கள். சிறிய கிளிஞ்சல்கள் போன்ற ஜீவராசிகள் மூலம் சமுத்திரத்திலிருந்து அதிகப்படியான ஹைட்ரோ–கார்பன்கள் உறிஞ்சப்பட்டு சுவாசிக்கிற கூட்டமாக வாழும் கடல் ஜீவராசிகளுக்கு ஆயத்தப்படுத்தியதைப் போல நிலக்கரி உருவான காலத்தில்

(Corboniferous era) பல வகையான தாவரங்களின் மூலம் சுவாசிக்கும் மிருக ஜீவன்களுக்கு காற்றிலுள்ள தேவையற்ற மூலகங்கள் நீக்கப்பட்டு காற்றும்கூட இந்த காலத்தில் சுத்தமாக்கப்பட்டிருக்கும்.

மீண்டும் நாம் பரிணாமக் கொள்கைக்காரரிடம் தேவையில்லாமல் இங்கு தர்க்கிக்க வேண்டியதில்லை. தேவன் விரும்பியிருந்தால், ஒன்றிலிருந்து மற்றொன்றை அபிவிருத்தி செய்து எல்லாவித வேறுபட்ட மிருக இனங்களை அவர் கொண்டு வந்திருக்க முடியும், அல்லது முதல் ஜீவாதார சத்துப்பொருளிலிருந்து (protozoan slime) தனித்தனியாக ஒவ்வொரு இனத்தையும் அவர் அபிவிருத்தி செய்திருக்கமுடியும் என்பதை ஒப்புக்கொள்வோம். அவர் எந்த முறையைக் கையாண்டார் என்று நாம் அறியோம். ஏனெனில் வேதத்திலும் வெளிப்படுத்தப் படவில்லை, பாறைகளிலும் வெளிப்படுத்தப்படவில்லை. இருந்த போதிலும் இந்த சிருஷ்டிப்பை நிறைவேற்ற தேவன் எந்த முறையை தெரிந்தெடுத் திருந்தாலும் ஜாதி ஜாதியான மிருக ஜீவன்கள் மாறாத வகையிலும், மனித அறிவின் சாமார்த்தியத்தால் அவைகளை மாற்ற முடியாத வகையிலும் அந்த மிருக இனங்கள் அவரால் நிர்ணயிக்கப் பட்டிருப்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய கரத்தின் கிரியைகள் ஞானமுள்ள சிருஷ்டிகரை உறுதிப்படுத்து கிறது.''இயற்கையோ'' அல்லது ''குருட்டு சக்தியோ'' சிருஷ்டிகராக இருந்திருக்குமேயானால் சில சமயங்களில் பரிணாமம் அடையவும் சில சமயங்களில் பழைய நிலைக்கு பின் நோக்கிச் செல்லவும் குருட்டுத் தனமாக கிரியை நடந்து கொண்டிருப்பதை நாம் இன்னும் கண்டிருப்போம்; நாம் இயற்கையில் நம்மை சுற்றியுள்ளவற்றை கவனிக்கும்போது, இனங்களின் மாறாத்தன்மையை நாம் காண முடியாது.

இது தேவன் மனிதனை சிருஷ்டித்த ஆறாவது யுக–நாளின் முடிவில் என நாம் யூகிக்கலாம். எனெனில் அவனுடைய சிருஷ்டிப்பு கடைசியாக இருந்தது. மேலும் ஆறாம் நாளில் அல்ல, ஆனால் ஏழாம் நாளில் தன் சிருஷ்டிப்பின் கிரியைகளை (மனிதன் ஆணும், பெண்ணுமாக இருவராக பிரிக்கப்பட்டதே தேவனுடைய கடைசி கிரியை) தேவன் முடித்தார் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கு வோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும்

சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

எங்கள் கருத்துக்களின் கண்ணோட்டத்தில் மேற்சொல்லப் பட்டதிலிருந்து, தாவரங்கள், நீர் வாழ்வன மற்றும் நிலத்தில் வாழ்வன அவைகளின் வெவ்வேறு ஜாதிகளின்படியே ஏறக்குறைய அபிவிருத்தி யடைந்து, அல்லது பரிணாம வளர்ச்சியடைந்து இருப்பதற்கான சாத்தியக்கூற்றை வேதாகமம் மறுக்கவில்லை. இவைகளின் சிருஷ்டிப்பைக் குறித்தும் மனிதனுடைய சிருஷ்டிப்பைக் குறித்தும் வேதம் சொல்லும் முறைகளில் அதிக வித்தியாசம் இருப்பதை நாம் கூர்ந்து கவனிப்பது நல்லது. தெய்வீக சிருஷ்டிப்பின் வல்லமையின் நேரடி கிரியையாக மனித சிருஷ்டிப்பு இருப்பதாக குறிப்பாக சொல்லப் பட்டுள்ளது. ஆனால் மற்றவைகள் அப்படியல்ல, சரியாகச் சொல்லப்போனால் அபிவிருத்தியடைந்தது என உணர்த்துகிறது:–

''பூமியானது புல்லையும்....முளைப்பித்தது.'' (ஆதி. 1:12)

''நீந்தும் ஜீவஜந்துக்களையும்....ஜநிப்பிக்கக்கடவது.'' (ஆதி. 1:20)

''பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும்.... பிறப்பிக்கக்கடவது.'' (ஆதி. 1:24)

சிருஷ்டிப்பில் இரண்டு விவரங்கள் உள்ளன. ஒன்று, யுகநாளின் ஒழுங்கின் படியும், சுருக்கமாகவும் சொல்லப்பட்டுள்ளதை இப்பொழுது நாம் கவனித்துக் கொண்டிருப்பது. மற்றொன்று, ஆதி. 2 : 4–25 ல் சொல்லப்பட்டுள்ளவைகள். வேறுவிதத்தில் சொல்லப்போனால், தவறான இடத்தில் அதிகாரங்கள் (chapters) பிரிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு விபரங்களும் தனித்தனி அதிகாரங்களாக பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது விபரம் முதலாவது விபரத்தின் வர்ணணையும் விளக்கமுமாகும். எந்தவித தாவரமும் செடியும் இல்லாத ஒரு காலத்திலிருந்து, வானமும் பூமியும், அதன் சிருஷ்டிகளும் வளர்ச்சியடைந்த அல்லது ''சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே.''

முதலாவதும் முக்கியமானதுமான விவரம் சிருஷ்டிகரைப்பற்றி பேசும்போது ''தேவன்'' என்ற வார்த்தையைக் கொடுக்கிறது; இரண்டாவது அல்லது வியாக்கியான விவரம், அந்த நாளின் முழு கிரியைகளையும் யேகோவா தேவன் செய்தார் என்று சுட்டிக் காட்டுகிறது. முன்னமே கணக்கிடப்பட்ட ஆறு நாட்களின் கிரியைகளையும் சேர்த்து, இன்னும் ஒரு பெரிய யுக நாளாகிய அந்த நாளில் அவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார்.

முதல் அதிகாரத்தில் உள்ள தேவன் என்ற வார்த்தை ஏலோஹிம் (Elohim) என்ற பொதுவான எபிரேயு வார்த்தையிலிருந்து வருகிறது. அது ஒரு பன்மைச்சொல், அதை தேவர்கள் (Gods) என்று மொழி பெயர்க்கப்படலாம், நாம் முன்னமே பார்த்திருக்கிற பிரகாரமாக அது வல்லமையுள்ளவர்கள் (mighty ones) என்பதைக் குறிக்கிறது. பிதாவினுடைய ''ஒரே பேறானவர்'' அவருடைய சிருஷ்டிப்பின் வேலையில் நிச்சயமாக அவருடைய தீவிர ஏஜெண்ட்டாக இருந்தார், மேலும் அதன் காரியங்களை செயல்படுத்துவதில் அவரோடே இணைந்திருக்கலாம். ஏலோஹிம் என்ற வார்த்தை வேதாகமத்தில் மற்ற இடங்களில் இருப்பது போல இங்கே தூதர்களின் சேனைக்கும் பொருத்தமாயிருக்கும். எனவே அவருடைய கனத்திற்குரிய பிரதிநிதிகளாகவும் கருவிகளாகவும் யார் உபயோகப்படுத்தப் பட்டிருந்தாலும், எல்லாருக்கும் பிதாவாகிய, யேகோவா தேவன் சிருஷ்டிகராய் இருந்தார் என்ற உண்மைக்கு இரண்டாவது அல்லது வியாக்கியான விவரம் நம்முடைய கவனத்தை ஈர்ப்பது சரியானதே. மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்த இரண்டாவது விவரத்தில் அதிகமாகச் சொல்லப்பட்ட குறிப்புகளை இங்கே சரியாக கவனிக்கலாம். அது அறிவிக்கிறதாவது:–

> யேகோவா தேவன் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.

அவருடைய எல்லா முந்தைய கிரியைகளிலும் ஒவ்வொரு சிருஷ்டியும் அற்பமாயிருந்தாலும் ஒன்றும் அவருக்கு சரியாக நன்றியை செலுத்தவும், பாராட்டவும், அவரைத் தெரிந்து கொள்ளவும் முடியாத போதிலும் தேவன் அவைகளில் மகிமைப்பட்டார். தெய்வீக நோக்கம் ஆதியிலிருந்தே இவைகள் எல்லாவற்றையும் முன்னறிந்து, பூமிக்குரிய அல்லது மிருக சிருஷ்டிப்பில் மிகச்சிறந்த சிருஷ்டிப்பாக

இருக்கவேண்டுமென்று கருதப்பட்ட மனிதனுக்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. ''ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது'' என்று சமுத்திர ஜீவராசிகளுக்கு சொல்லப்பட்ட பிரகாரமாகவோ அல்லது ''பூமியானது.....பிறப்பிக்கடவது'' என்று பூமியின் மிருக ஜீவன்களுக்கு சொல்லப்பட்ட பிரகாரமாகவோ மனிதனுக்குச் சொல்லப்படவில்லை; மாறாக '' தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்'' என்று பதிவு செய்யப்பட்டுள்ளபடி மனிதன், அவனுடைய சிருஷ்டிகரின் விசேஷ சிருஷ்டிப்பாக இருந்தான். ''ஏலோஹிம்மின்'' சாயலா அல்லது யேகோவாவின் சாயலா என்று புரிந்துகொள்ளப்படுவது காரியமல்ல, ஏனெனில் ''ஏலோஹிம்மாகிய'' ''தேவனுடைய புத்திரர்கள்'' அவருடைய சாயலாகிய சன்மார்க்க ஞானேந்திர அறிவுடையவர்களாக இருக்க வில்லையா?

இந்த ''ரூபம்'' என்பதை நாம் சரீர தோற்றம் என்று புரிந்து கொள்ளக் கூடாது. ஆனால் மாறாக, பூமிக்குரிய சுபாவத்திற்கும் தன்மைக்கும் ஏற்றாற்போல் தேவ ஆவியின் சாயலாகிய சன்மார்க்க ஞானேந்திரிய அறிவு என்று புரிந்து கொள்ள வேண்டும். ''சாயல்'' என்று சொல்லும்போது அது ஆளுகையை சந்தேகத்திற்கு இடமில்லாமல் குறிக்கிறது; அதாவது தேவன் இந்த அண்ட சராசரத்திற்கும் இராஜாவாக இருப்பதைப் போல மனிதனும் இந்த பூமிக்கும் அதில் நிறைந்திருக்கும் சிருஷ்டிகளுக்கும் இராஜாவாக இருக்க வேண்டியதைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தைக்கும் நவீன விஞ்ஞானத்திற்கும் ஒரு யுத்த களம் இருக்கிறது. முழு உலகமும், விசேஷமாக கற்றுத் தேர்ந்தவர்கள், வேத சாஸ்திர கல்விச்சாலை களிலுள்ள சிந்தனையாளர்கள், பிரசித்திப் பெற்ற பிரசங்க பீடங்களிலுள்ள ஊழியக்காரர்கள் அனைவரும் ''பரிணாமம்'' அன்று அழைக்கப்படுகிற நவீன விஞ்ஞான கடவுளை பணிந்து குனிந்து ஆராதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இரு கொள்கைகள் தற்போது முடிவெடுக்க வேண்டியவைகள்: பரிணாமக்கொள்கை உண்மையா யிருக்கும் என்றால், ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை வேதாகமம் பொய்யாயிருக்கும். நாம் எண்ணுகிறபடி வேதாகமம் உண்மை யென்றால் மனிதனைப் பற்றிய பரிணாமக் கொள்கையின் எல்லா கூற்றுகளும் முற்றிலும் பொய்யாகும்.

தேவனுடைய சாயலில் மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்த ஆதியாகமத்தின் விவரம் மாத்திரம் இதை முடிவுசெய்யாமல் தேவ வார்த்தைகள் உறுதியாக அறிவிக்கிற பிரகாரமாக, வேதாகமத்தின்

எல்லா வார்த்தைகளும் ஆதியாகம பதிவை சார்ந்து ஆதரிக்கிறது. ஏனென்றால், பரிசுத்தமும், பூரணமும், வளர்ச்சியடைந்த மனோ நிலையும் உள்ளவனாக மனிதன் சிருஷ்டிக்கப்படாவிட்டால், நிச்சயமாக அவன் தேவனுடைய ஒரு ''சாயல்'' என்று அழைக்கப்பட முடியாது; ஏதேனில் நித்திய ஜீவனுக்கேதுவான அவனது தகுதியை பரீட்சித்து பார்க்க சோதனைக்குட்படுத்தியிருக்க முடியாது; விலக்கப்பட்ட கனியைப் புசித்ததினால் உண்டான அவனது கீழ்ப்படியாமை பாவமாக எண்ணப்பட்டு, மரண தண்டனை கொடுத்திருக்கவும் முடியாது; அந்த தண்டனையிலிருந்து அவனை மீட்கவேண்டிய அவசியமும் இருந்திருக்காது.

மேலும் இந்த முதல் மனிதனின் மீறுதலுக்கு ''மனிதனாகிய கிறிஸ்து இயேசு'' மீட்கும் பொருளாக (சரியான விலைக் கிரையமாக) இருந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. ஆகவே முதல் மனிதன் பாவம் செய்து தேவ தண்டனையான மரணத்திற்கு உட்படுத்தப்படுவதற்கு முன்பு இருந்தது போல அவரும் ஒரு நிழலாக அல்லது ஓர் உதாரணமாக கருதப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் இருந்தது போலவே இன்றைக்கும் அநேக உயர்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாரையும் பாவிகள் என்று தேவன் அறிவிக்கிறார் என்பது நாமறிந்ததே. ஆகவே அவர்கள் பாவ உணர்வுடன் கிறிஸ்துவின் புண்ணியத்தில் அண்டி, அவரது பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டாலொழிய யேகோவா தேவனால் அங்கீகரிக்கப்படமாட்டார்கள் என்பதும் நமக்குத் தெரியும். தேவனுக்குள் வருகிற யாவரும் கிறிஸ்துவின் வஸ்திரத்திற்குள்ளாக அவருடைய கிருபையினால் மாத்திரமே இருக்கிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. இதனுடைய பலன் ஒரு உயிர்த்தெழுதலாகவோ அல்லது திரும்பக்கொடுத்தலாகவோ இருக்கவேண்டும் என்று நமக்கு அறிவிக்கப்படுகிறது. அந்த காலத்தில்தான் எவரும் சிருஷ்டிகருக்கு முன் தனிப்பட்ட முறையில் முழுவதும் திருப்திகரமாக இருக்க முடியும். ஆதாமுடைய மீறுதலுக்கு முன்பு அவனோடு உறவாடி அவனை குமாரன் என்று அழைத்த அதே சிருஷ்டிகர், அவருடைய பிள்ளைகளாகிய ஆதாமும், நாமும் பாவத்தினிமித்தம் குற்றப்படுத்தபட்டதினால் ''கோபாக்கினையின் பிள்ளைகளானோம்'' என்று அறிவிக்கிறார். ஆதாம் ''தேவனால் உண்டான போது'' அவனிடத்தில் பாவம் இல்லை. (லூக்.3:38)

எனவே, நிச்சயமாகவே ''உலக தோற்றமுதல் பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாரும்'' வரக்கூடிய ஆயிர வருட அரசாட்சிதான் **''திரும்பக் கொடுத்தலின் காலங்கள்''** என்று அறிவித்திருக் கிறார்கள். அதுபோலவே எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலமாக உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளுக்கு பரிணாமக் கொள்கை நிச்சயமாகவே பயங்கரமான எதிரிடையாக இருக்கிறது. பரிணாமக் கொள்கை சரியென்றால், திரும்பக் கொடுத்தல் மனுக்குலத்திற்கு ஓர் ஆசீர்வாதமாக இருப்பதற்குப் பதிலாக சாபமாக இருக்கும். குருட்டு சக்தியினால் அல்லது பரிணாம செயல்பாட்டின்மூலம், மனிதன் கடின வழிமுறைகளினாலும், சிரமமான முயற்சிகளினாலும், ஜீவ அணுவி லிருந்து சிப்பிக்கும், சிப்பியிலிருந்து மீனுக்கும், மீனிலிருந்து ஊர்வனவிற்கும், ஊர்வனவிலிருந்து குரங்குக்கும், குரங்கிலிருந்து கீழ் நிலையிலுள்ள மனிதனுக்கும், கீழான மனிதனிலிருந்து நாம் இப்போது இருக்கும் நிலைக்கும் முன்னேறிக் கொண்டிருப்பானே யானால், ஆதாமை **முந்திய நிலைக்கு கொண்டுவர** தேவனின் பிரயாசங்கள் மனிதனுக்கு பயங்கரமாக ஊறு விளைவிப்பதாக இருக்கும். அல்லது ஒரு வேளை திருப்பிப் பெற்றுக் கொள்ளும் நிலையை பின் நோக்கி உந்தித் தள்ளி பழையபடி ஜீவ அணு நிலைக்கு கொண்டு செல்வதாக இருக்கும். இந்த வினாவில் மத்திய நிலை என்று ஒன்று இல்லை. தேவனுடைய ஜனங்கள் எவ்வளவு சீக்கிரம் தேவனுடைய வார்த்தைக்கு இசைய உறுதியான தீர்மானம் எடுக்கிறார்களோ அந்த அளவு அவர்களுக்கு அது நல்லதாயிருக்கும்; முடிந்தால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக தற்போது பரவிவருகிற ஈடுபலி இல்லை, பரிணாமம் போன்ற சில கருத்துகளில் நிச்சயமாக விழமாட்டார்கள். பரிணாம கொள்கையுடைய ஒவ்வொருவனும் பொய்யன் என்று அது நிரூபித்தபோதிலும் தேவன் நீதிபரராக இருப்பாராக. (ரோமர் 3:4)

ஆதாமின் அங்க அமைப்புகள் அல்லது சரீரம், அவனுடைய ஆவி அல்லது ஜீவசுவாசம் எல்லாம் எப்படி இணைந்து அவனை ஒரு ஜீவியாக அல்லது ஜீவாத்துமாவாக ஆக்கியது என்ற அவனுடைய சிருஷ்டிப்பைக் குறித்ததான விபரங்களுக்குள்ளாக இங்கு நாம் செல்ல இயலாது; இந்த விபரங்கள் இது சம்பந்தப்பட்ட இன்னொரு இடத்தில் ஏற்கனவே கொடுக்கப் பட்டுள்ளன. (தொகுதி 5, அத்தியாயம் 12)

சிலர் எண்ணுவது போல, அவர்களுடைய வருங்கால சந்ததியின் பலுகிப் பெருகுதல் எவ்விதத்திலும் மீறுதலோடு சம்பந்தப்பட்டிருக்க

வில்லை; ஆனால் அது திவ்ய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக இருந்தது. வீழ்ச்சி, அதன் சாபம் அல்லது தண்டனை–இது சம்பந்தமாக ஏற்பட்ட ஒரே விளைவு, கூறப்பட்டபடி, மனிதனின் உழைப்புக்கும், நெற்றி வேர்வைக்கும் இணையாக தாயின் பிரசவ வேதனைகளிலும் துக்கங்களிலும் ஒரு அதிகரிப்பாகும். மனுக்குலமானது, மனதிலும் சரீரத்திலும் பெலகீனமடைந்து சீர்கெட்டிருப்பதினால் இவைகள் விகிதாசாரப்படி அளவிற்கு அதிகமான சுமையாக இருக்கிறது. போதுமான சந்ததியினர் பூமியை நிரப்பும் (மறுபடியும் பலுகிப் பெருகி அல்ல) அளவிற்கு பிறந்தவுடன் பலுகிப் பெருகுதலின் நோக்கம் நிறைவேறி யிருக்கும். உண்மைதான், ஏற்கனவே மனுக்குலம் ஒருமிகப் பெரிய எண்ணிக்கையில் பிறந்து– கிட்டதட்ட 5000 கோடி பேர்– மரணம் என்கிற மாபெரும் சிறைச்சாலையில் தற்போது உறங்குகின்றனர். ஆனால் இவைகள் ஒன்றும் அவ்வளவு பெரிதல்ல. இறுதியில் நிறைவேறப் போகிறபடி தற்கால பூமியின் மேற்பரப்பு எல்லாம் மனிதனுக்கு ஏற்றபடி மாற்றப்பட்டுவிட்டால் அவைகள் இந்த எண்ணிக்கையைக் காட்டிலும் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகம் கொள்ளும், அதுவும் இப்போதிருக்கிற கண்டங்கள் கடந்த காலங்களில் இருந்தது போல இன்னும் வேறு கண்டங்கள் சமுத்திரங்களின் ஆழங்களிலிருந்து எழுப்பப் படக்கூடிய சாத்தியக்கூற்றை கணக்கில் எடுக்காமல் இருக்கும் போது அப்படி நடக்கும்.

சந்தேகத்தினால் பீடிக்கப்பட்ட மனதையுடைய விஞ்ஞானிகள் வெகு காலமாகவே, ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட காலத்திற்கு முன்பே மனிதன் பூமியிலிருந்தான் என்று நிரூபித்து காட்டுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். 'தேவனுடைய வார்த்தை, பொய் என்று காட்டிய மனிதன்' என்று விஞ்ஞானிக்கு உலகளாவிய புகழ்ச்சி வருவதற்காக கீழ்மட்டத்தில் களிமண் அல்லது சரளை கற்களில் கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு எலும்பும் ஆராய்ந்து பார்க்கப்படுகிறது. முந்திய காலத்தில் உள்ள சரளை கற்களின் மத்தியில் கண்டெடுக்கப்பட்ட அம்புகளின் தலைமுனைகள் இதற்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் அல்ல என்று எற்கனவே குறிப்பிட்டுள்ளோம். (ஆதாமிற்கு முன்னதாக மனிதன் இருந்தான் என்கிறதும் இப்படியாக மனுக்குலத்தின் பல்வேறு வித்தியாசமான ஜாதிகளுக்கும் வழியுண்டாயிற்று என்று ஒருவாதம் இருப்பதைக் குறித்தும் நாங்கள் அறியாமலில்லை. ஆனால் நாங்கள் வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடு என்றும் ஆகவே எல்லா மனுஷீக யூகங்களுக்கும் மேம்பட்டது என்றும் உறுதியாக

இருக்கிறோம். ''மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் தேவன் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணினார்.'' (அப். 17:26) மேலும், ''முந்தின மனுஷனாகிய ஆதாம்'' (1கொரி. 15:45,47) என்று திட்டவட்டமாக ஏகோபித்து அது அறிக்கையிடுகிறது. மேலும் பேழையில் எட்டு ஜீவன்கள் மாத்திரம் காப்பாற்றப்பட்டன, அவர்கள் எல்லாரும் நோவாவின் பிள்ளைகள், ஆதாமின் வம்ச வழியினர் என்று ஜலப்பிரளய கதை துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. சீதோஷ்ண நிலை, பழக்க வழக்கங்கள், உணவு போன்றவைகளைச் சார்ந்து வித்தியாசமான மனிதர்கள் அல்லது ஜாதியினர் உண்டாயினர் என்றும், விசேஷமாக, பலதரப்பட்ட ஜனங்கள் வித்தியாசமான இடங்களில் ஒருவரை விட்டு ஒருவர் ஒதுங்கி வாழ்ந்ததினிமித்தம் என்றும், அதினிமித்தம் அவர்கள் மத்தியில் விசேஷ குணங்கள் நிலையானது என்றும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த உண்மை, ஐரோப்பியர்கள், இந்தியா அல்லது சீனாவிலுள்ள மக்கள் மத்தியில் வெகுகாலம் வசிக்கும் போது, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அவர்களுடைய அயலகத்தாரையொத்த சாயலைப் பெறுவதும், அந்த பிரதேசங்களில் பிறக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும், தாய்க்கு பிள்ளைகள் கருவில் இருக்கிற காலத்தில் சூழ்நிலைகளால் ஏற்படுகின்ற பாதிப்பின் நிமித்தம் இன்னும் அதிகமாக, தங்கள் தோலிலும் அங்க வடிவிலும் அயலகத்தாரின் சாயலைப் பெறுகிறார்கள் என்பதன் மூலம் தெளிவாக்கப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒற்றுமைக்கு ஆதாரமாக கிட்டத்தட்ட கி.பி. 70ம் வருடத்தில் யூத யுகத்தை முடிவுறச் செய்த உபத்திரவங்களினால் சிதறுண்ட இஸ்ரயேலர்களோடு ஒரு மாவட்டத்திலுள்ள சீனர்கள் தங்களை தன்மயமாக்கிக் கொண்டதற்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஜாதிகளுக்குள் திடமானவர்களான இந்த யூதர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு சீனர்களைப்போன்றே ஆகிவிட்டனர்.) தகுந்த சிக்கிமுக்கி கற்களை கண்டு பிடித்த இடத்திற்கு அருகில் இந்த அம்புகளின் தலை நவீன இந்தியர்களின் வேலைப்பாடு என்பது சில காரியங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சற்று காலத்திற்கு முன்பதாக **விக்டோரியா தத்துவ ஞான சாஸ்திர வித்யாசாலையில்** நடந்த ஒரு கூட்டத்தில் கீழ்கண்டவாறு அறிவிக்கப் பட்டது: ''பேராசிரியர் ஸ்டோக்ஸ், எஃப். ஆர்.எஸ்., சர். ஜே.ஆர்.பென்னட் (Vice-Pres. R.S.)., பேராசிரியர் பீலே, எஃப். ஆர்.எஸ்., மற்றும் ஏனையோரும் இணைந்து பரிணாமத்தைப் பற்றிய வெவ்வேறான கொள்கைகளைக் குறித்து, ஒரு கவனமான கணிப்பு நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதில் தாழ்ந்த மிருகங்களிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதற்கு இதுவரை **விஞ்ஞான ரீதியிலான எந்தவித ஆதாரமும் இல்லை** என்றும்

சொல்லப்பட்டது. மேலும் பேராசிரியர் விர்ச்சோ, மனிதன் உண்டாக்கப்படுவதில் புராதன தன்மை போன்ற கீழ் நிலையும் முற்றிலுமாக காணப்படவில்லை என்றும் மிருக இராஜ்யத்துடன் இந்த விதமான தொடர்பு உண்டு என்பதை சரித்திர காலத்திற்கு முந்திய மனிதனின் பூர்வீகத்தைக் குறித்த ஆராய்ச்சியில் ஏற்பட்டிருக்கிற தீர்க்கமான முன்னேற்றம் அகற்றிவிட்டது என்றும் அறிக்கையிட்டார். மாபெரும் palaeontologist பேராசிரியர் பாராயுட், அவருடைய ஆராய்ச்சிகளில் ஒன்றிலும் கூட மண்ணுக்கடியில் புதையுண்டிருந்த புராதனங்கள் மேலும் இன்னொரு புராதன வர்க்கமாக மாறுவதைக் காணவில்லை என்று அறிக்கையிட்டு, மேற்கூறியவற்றை ஒத்துக் கொண்டார். சொல்லப்போனால், மனிதனுக்கும் வாலில்லா குரங்குக்கும் இடையிலும், மீனுக்கும் தவளைக்கும் இடையிலும், முதுகெலும்புள்ள மிருகங்களுக்கும் முதுகெலும்பில்லா மிருகங்களுக்கும் இடையிலும் உள்ள ஜீவராசியை இன்னமும் எந்த விஞ்ஞான மனிதனும் கண்டு பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது; மேலும் எந்த ஒரு இனமும் தங்களுக்கே உரித்தான குணாதிசயங்களை இழந்து, மற்ற இனங்களுக் குரியவைகளை பெற்றுக் கொள்வதற்கான ஆதாரமும் இல்லை என்றும் கூறினார். உதாரணமாக நாய் ஓநாயைப் போல் தோன்றினாலும் இரண்டுக்கும் இடையில் எந்த வித ஜீவராசியும் இல்லை; அழிந்து போன இனங்களின் நிலையும் இதுதான், ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு படிப்படியான மாற்றமும் கிடையாது. மேலும் பூமியிலிருந்த முதல் மிருகங்கள் எவ்விதத்திலும் தரக்குறைவானது அல்லது இழிவானது என்று எண்ணப்படக்கூடாது.''

''புவி அமைப்பியலும் சரித்திரமும் சந்திக்கும் இடம்'' என்பதைக் குறித்து சர்.ஜே. டபிள்யு. டாசனின் (Sir J.W.Dawson LL.D.,F.R.S.,) சமீபத்திய கண்டுபிடிப்புகளின் திரட்டிலிருந்து சுருக்கமாக குறிப்பிடுகிறோம். அவர் கூறுகிறதாவது:–

''மனிதனுக்கு முன்பாக இருந்த தாழ்ந்த மிருகங்களோடு அவனை சம்பந்தப்படுத்தும் மூலக்கருத்துக்கு தொடர்பு இல்லை என்று நாங்கள் கண்டறிந்தோம். எங்களுக்கு முன்பாக அவன் பிறவி குணங்களை உடைய மிருகங்களின் வாழ்க்கையோடு எந்த வித நேரடி தொடர்புமின்றி சிருஷ்டிப்பில் தனிப்பட்டவனாக தோன்றுகிறான். ஆதிமனிதர்கள் தங்கள் வம்சா வழியினரைக் காட்டிலும் குறைத்து மதிப்பிடத்தக்கவர்கள் அல்ல. இப்போதையவர்களைப் போல

அவர்களும் தங்கள் திறமைக்கேற்ப புதியவைகளை கண்டு பிடிப்பவர்களாக, புதுமையை புகுத்துபவர்களாக இருந்தார்கள். இன்னமும் எங்களால் மனிதனை அவனுடைய தீங்கற்ற, பழைய பொற்கால யுக(சொர்க்கம் போன்ற)வாழ்க்கைக்கு ஒத்து பார்க்க முடிய வில்லை. குகைகளிலும் சரளைக் கற்களிலும் அவனைக் காணும்போது அவன் ஏற்கனவே விழுந்து போனவனாக, அவனுடைய சூழ்நிலைக்கு எதிர்மாறாக உள்ளவனாக, அவனுடைய சக சிருஷ்டிப்புகளுக்கு சத்துருவாக, மாம்சம் புசிக்கும் காட்டு மிருகங்களுக்கு இயற்கை அளித்திருப்பதைக்காட்டிலும் அதி பயங்கரமான உபகரணங்களை அவைகளுக்கெதிராக கண்டுபிடிக்கிற வனாக இருக்கிறான்.... சொல்லப் போனால் மனிதன் அவனுடைய சரீரத்தைப் பொறுத்தவரையில் ஒரு மிருகம்; பூமியிலுள்ளவன்; பூமிக்குரிய தன்மையுடையவன்; அவன் முதுகெலும்புள்ள இனங்களிலும் பாலூட்டி இனங்களிலும் ஒரு அங்கத்தினனுமாக இருக்கிறான்; ஆனால் அந்த வகுப்பில் அவன் நேரடியான வகை அல்லது இனத்தை மாத்திரமல்ல, ஆனால் துல்லியமான ஒரு குடும்பத்தை அல்லது முறைமையை அமைக்கிறான்; வேறுவிதமாக சொல்வோமென்றால் அவனுடைய இனத்தில், குடும்பத்தில் அல்லது முறைமைகளில் அவன் மாத்திரம் தனித்தன்மையுடையவன். இவ்விதமாக அவனுக்கு அருகாமையிலுள்ள எல்லா மிருகங்களிலுமிருந்தும் அவன் மிகவும் தனித்திருக்கிறான். மேலும் தாழ்ந்த மிருகங்களைப் பொறுத்தவரையில் ஒரு இனத்திலிருந்து இன்னொன்று உண்டாயிற்று என்று இன்னமும் நிரூபிக்கப்படாத கோட்பாட்டை அனுமதித்தாலும் கூட, மனிதனை கீழ்நிலையிலுள்ள எப்படிப்பட்ட மிருகங்களோடும் இணைத்து காட்டுவதற்கான தொடர்பை எங்களால் காட்ட முடியவில்லை.... புவிஅமைப்பியல் காலத்தில் மனிதனின் சமீபத்திய வருகையைக் காட்டிலும் வேறு எந்த விஞ்ஞான ஆதாரமும் திட்டவட்டமாக நிலைநிறுத்தப் படவில்லை. முந்தைய புவி அமைப்பியல் காலங்களில் உள்ள அமைப்புகளில் மனிதன் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படாதது மாத்திரமல்ல, அவனுக்கு அருகிலுள்ள மிருகங்களும் இருந்ததற்கான ஆதாரங்களும் காணப்படவில்லை. மேலும் அந்த காலங்களின் நிலைமைகள் மனிதன் ஜீவிப்பதற்கு தகுதியற்றவை போல் காணப்படுகின்றன. வழக்கத்தில் உள்ள புவிஅமைப்பியல் முறையைப் பின்பற்றினால், பூமியின் முழு சரித்திரத்தையும் நான்கு பெரிய காலங்களாக பிரிக்கலாம். அதாவது, நமக்கு தெரிந்த பாறைகளின் காலத்திலிருந்து, தொடர்ந்து, பூமிக்கடியில் புதைந்து கிடந்த புராதன பொருட்களின் (eozoic), அல்லது அதற்கும் முந்தின பழைமையான காலத்திலிருந்து (archaean) நவீன காலம் வரைக்கும் பார்க்கும்போது நான்காவது காலத்தில், அதாவது நவீன காலத்தின் பிற்பகுதியில் மாத்திரமே மனிதனைக் குறித்த ஆதாரங்களை, அல்லது அவனுடைய வேலைகளை நாம் காண்கிறோம். குறிப்பாக சொல்லப்போனால் நவீன காலத்தின் ஆரம்ப காலத்திற்கு வரும்வரை மனிதன் இருந்ததற்கான மறுக்க முடியாத ஆதாரம் இல்லை....அநேக ஜாதிகளும்

வகுப்பினரும் இருந்தாலும் மனிதனில் ஒரே ஒரு இனம் தான் உண்டு; இந்த ஜாதிகளும் வகுப்புகளும் அவர்கள் தங்களை முன்னேற்றிக் கொள்வதற்காக மிக ஆரம்பக் காலத்தில் ஏற்பட்டதாக காணப்படுகிறது; பிற்காலத்தில் அது அப்படியே குறிப்பிடத்தக்கபடி நிலைத்துவிட்டதாக தற்போதைய கண்டு பிடிப்புகள் காண்பிக்கின்றன...ஆதியாகமத்தின் சரித்திரம் நவீன சரித்திரத்தை எதிர்பார்த்திருந்தது. இந்த பழமையான புத்தகம் ஒவ்வொரு வழியிலும் நம்பிக்கைக்குரியது; இது புராணக்கதைகளுக்கும் பண்டைய புறச்சமய கதைகளுக்கும் மிகவும் அப்பாற்பட்டது.''

கிருமிகளைப் பற்றிய பெரிய அறிவியல் வல்லுநர் பேராசிரியர் பாஸ்சுர் (Prof. Pasteur) டார்வினின் கொள்கையை வெளிப்படையாக எதிர்ப்பவர். அவர் தன்னைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:–

''வருங்கால சந்ததியினர் ஒரு நாள் நவீன உலக தத்துவ ஞானிகளின் முட்டாள்தனத்தை பார்த்து சிரிப்பார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக இயற்கையை நான் தெரிந்து கொள்ள கவனம் செலுத்துகிறேனோ அவ்வளவுக்கு அதிகமாக சிருஷ்டிகரின் கிரியைகளைப் பார்த்து ஆச்சரியப்படுகிறேன். என்னுடைய பரிசோதனைக் கூடத்தில் என்னுடைய வேலையில் ஈடுபட்டிருக்கும் போது நான் ஜெபிக்கிறேன்.''

விர்சே என்ற ரஷ்ய பண்டிதர், செயல் முறை கிறிஸ்தவரல்லாத வராக இருந்தாலும், இவ்வண்ணமாகவே உயிரற்ற பிராணிகளிலிருந்து (inorganic) உயிர்பிராணிகள் (organic) உண்டாயின என்ற டார்வினின் கோட்படுகளை எதிர்த்து பின்வருமாறு அறிக்கையிட்டார்:–

''மாறும் முறையினால் மிருகத்திலிருந்து மனிதன் வந்தான் என்று கூறும் எந்த முயற்சியும் முற்றிலும் தோல்வியில் முடிந்துள்ளது. இரண்டுக்கும் இடையிலுள்ள இணைப்பு (link) காணப்படவில்லை, காணப்படவும் முடியாது. மனிதன் வாலில்லாக் குரங்கிலிருந்து வரவில்லை. கடந்த ஐந்தாயிரம் ஆண்டுகளில் மனுக்குலத்தில் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு எந்த வித்தியாசமான மாறுதலும் ஏற்படவில்லை என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டிருக்கிறது.''

இயற்கையைப்பற்றி ஆராய்கிற மற்றவர்களும் டார்வினின் கருத்துகளுக் கெதிராக தங்கள் குரலை எழுப்பி உள்ளார்கள்.

இந்த குறிப்புகளைப் பார்க்கும்போது ''காணாமல் போன இணைப்புகளை'' (missing links)பற்றி விவாதங்கள் மூலம் ஆராய்ச்சி

செய்கிறோம் என்று கற்பனை செய்கிற பண்டிதர்கள் அல்லது பேராசிரியர்களின் அவ்வப்போது வெளிவரும் கட்டுரைகளும் மனிதனின் கால்களிலுள்ள கட்டைவிரல்கள் உபயோகமற்றதாக ஆகிக்கொண்டு வருகின்றன என்றும் ''குரங்கின் வால்கள் எற்கனவே விழுந்துவிட்டது போன்று'' கட்டைவிரல்களும் வெகு விரைவில் ''இயற்கையாகவே விழுந்துவிடும்'' என்று உத்தேசமாக சொல்வதும் எவ்வளவு முட்டாள்தனமாக தோன்றுகிறது. நாலாயிரம் வருடங்களாக நன்கு பாதுகாக்கப்பட்ட பிணங்கள் (mummies) நம்மிடத்தில் இல்லையா? கிட்டதட்ட அதேமாதிரியான பழமையான முழு அளவு நிர்வாண சிலைகள் நம்மிடத்தில் இல்லையா? இவற்றில் எவைகளிலாவது வால்கள் காட்டப் பட்டுள்ளனவா? அவைகளின் கட்டை விரல்கள் இன்றைக்கு நம்முடையதைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்கின்றனவா? இயற்கையின் எல்லா போக்கும் கீழ்நோக்கி இல்லையா? தாவரங்களோடும் கீழான மிருகங்களோடும் உயர்ந்த மாதிரியைக் கடைப்பிடிப்பதற்கு மனிதனுடைய ஞானமும் உதவியும் தேவையில்லையா? இப்போது நாம் ''இருண்ட ஆப்பிரிக்காவில்'' காண்பது போன்ற மிகுந்த சீர்கேட்டை தடுத்து நிறுத்துவதற்கும் தேவனுடைய உதவி தேவையில்லையா? இவைகள் வேதத்தில் சொல்லப்பட்டவைகளோடு ஒத்துப்போகவில்லையா? (ரோம.1:21,24,28)

அப்.பவுல் மூலம் தீமோத்தேயுவுக்கு வழங்கப்பட்ட எச்சரிக்கையை தேவனுடைய ஜனங்கள் மனதில் வைத்துக்கொள்வது நல்லது. ''ஓ, தீமோத்தேயுவே .....சீர்கேடான வீண் பேச்சுகளுக்கும் ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு.'' (1 தீமோ. 6:20) எந்த உண்மையையும் தெளிவாக பார்ப்பதற்கு நாம் தெய்வீக வெளிப்பாட்டின் நிலையிலிருந்து பார்க்க வேண்டும். நாம் ''அவருடைய வெளிச்சத்தில் வெளிச்சத்தைப் பார்க்க வேண்டும்.'' பின்பு வெளிப்புறத்தை, இயற்கை மூலம் இயற்கைக் கடவுளின் வழிநடத்துதலின்படி பார்க்கும் போது அதனால் உண்டாகும் விளைவு இருதயத்தையும் அறிவாற்றலையும் பெருகப்பண்ணுவதோடு, நம்முடைய சர்வ வல்ல சிருஷ்டிகரின் மகிமை, மாட்சிமை, வல்லமையை பரவலாக நொடிப்பொழுதில் காணும்போது வியப்பினாலும் தொழுகையினாலும் நம்மை நிரப்புகிறது.

சாயங்காலமும், விடியற்காலமுமாகி, ஆறாம் நாள் முடிவிலே, கிரியைஆரம்பித்து 42,000 வருடத்திற்கு பின்னர் பூமியானது மனிதனால்

கீழ்ப்படுத்தப்பட ஆயத்தமாயிருந்தது– இருந்த போதிலும் முழுமையாக அவனுக்கு தகுதியற்றதாக இருந்தது. தேவன் தமது சிருஷ்டியின் கீழ்ப்படியாமையை முன்னரே அறிந்திருந்து (அவனுடைய தண்டனையான மரணம், அவனுடைய மீட்பு, தங்ளுடைய அனுபவத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட, இறுதியாக பாவத்திலிருந்தும் மரணத்தி லிருந்தும் திரும்பி வருதல் என்பதைக் குறித்ததான அவருடைய முழு திட்டத்தை) பூமியெல்லாம் அவனுக்கு ஆயத்தமாகும் வரை மனிதனின் சிருஷ்டிப்புக்குக் காத்திராமல், சாதாரணமாக ஏதேனில் ஒரு தோட்டத்தை பரதீசாக ஆயத்தம் பண்ணினார். பரிபூரணமான ஜோடியின் சோதனைக்கென்று ஒவ்வொரு விதத்திலும் அதை பூரணப்படுத்தி, மனுக்குலம் குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளர் போன்று பூமியை கீழ்ப்படுத்தவும் அதன் மூலம் அதே வேளையில் விலையுயர்ந்த பாடங்களையும் அனுபவங்களையும் பெறுவதற்காகவும் விட்டுவைத்தார்.

சிருஷ்டிப்பு வாரத்தின் ஏழாவது யுக நாள்

தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளை யெல்லாம் முடித்தபின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.

மேல் நோக்கிப் பார்க்கும் போது, ஆறு நாட்களில் உண்டான முன்னேற்றம், மேலும், ஏழு என்ற எண், நிறைவுபெறுதலையும், பூரணத்தையும் குறிக்கும் என்பதை மனதில் வைத்துக்கொள்வதோடு, இயல்பாகவே ஏழாவது யுக நாள் அதன் முந்திய நாட்களைவிட மிகச் சிறந்ததாக இருக்கும் என்று எதிர்பார்ப்போம். அப்படியாகவே நாம் காண்கிறோம். அதின் முக்கியத்துவம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே – ‘‘ஏற்ற காலம்’’ வரைக்கும்– தேவன் தன்னுடைய கிரியைகள் எல்லாவற்றையும் முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்ற பொதுவான அறிக்கையை புரிந்து கொள்ளும் திறமையுள்ள நமது மனக்கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேலையாள், ஒரு கட்டிடத்திற்கு என்று எல்லா பொருட்களையும் தயார்பண்ணி விட்டு, அவன் ஆரம்பத்தில் தீர்மானித்தபடி செய்துமுடிக்காமல், பின்னர் மேற்கொண்டு செயல்படுவதிலிருந்து நின்று விடுவது போன்று, சிருஷ்டிப்பின் வேலை ஆயத்தமாயிருக்கிறது என்ற நிலையில் அந்த வேலையை அவர் நிறுத்தி வைப்பது எவ்வளவு வினோதமானது!

அவருடைய திட்டங்கள் இன்னொரு முறையில் சிறப்பாக செயல்படுத்த முடியும் என்று அவருடைய ஞானத்தில் முன்னதாகவே கண்டறிந்திருந்ததினால், யேகோவா தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலையை நிறுத்தினார், அதைத்தொடர்ந்து செய்யவில்லை என்று காணும் போது முழுவிஷயமும் நமக்கு முன்பாக அழகாக தெளிவாகிறது. தேவன், அவருடைய சிருஷ்டியான ஆதாமை, அவனுடைய சுயசித்தத்தை பயன்படுத்தவும், தூண்டுதலினால் பாவத்திற்குள்ளும், அதனால் வரும் நியாயமான தண்டனையான மரணத்திற்குள் விழவும், நீண்ட காலமான 6,000 வருஷங்கள் பொல்லாத சூழ்நிலையில் குற்றவாளியாக போராடவும், மரிக்கவும், அனுமதிப்பது நல்லது என்று கண்டார். பூமியை முன்பு சொல்லப்பட்ட பிரகாரம் முற்றுமாக பரதீசின் நிலைக்கு கொண்டு வருவது இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனிதனுக்கு பிரயோஜனமாய் இருக்கும்படிக்கு தேவன் அவனை ஒரு குற்றவாளியைப்போன்று பூமியைக் கீழ்ப்படுத்தும் வேலையில் ஒரு பகுதியை செய்ய அனுமதிப்பது நல்லது என்று கண்டார். மனிதன் தெய்வீக நீதிக்கு ஏதுவான முக்கியமான நியமங்களையும், அதிகமான பாவத்தினால் வரும் பாவ உணர்வையும் புரிந்து கொண்டு, இவ்விதமாக ஏற்ற காலத்தில் உலகத்திற்கு கொண்டுவரப்பட இருக்கிற கிருபைக்கு ஆயத்தமாய் இருப்பது நல்லது.

எப்படியாயினும், யேகோவா தேவன் சிருஷ்டிப்பின் வேலையை நிறுத்தியதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, சந்தேகத்திற்கிடமின்றி, இன்னொருவரால்– அவருடைய ஒரே பேறானவரால் – அது குமாரனைமாத்திரம் மகிமைப்படுத்தாமல், பிதாவையும் கூட மகிமைப்படுத்தும் படியாக, வேறு எந்த வழி முறையும் செய்ய முடியாத முறையில் அவருடைய திவ்ய குணாதிசயங்களின் பூரணத்தைக் காட்டும்படி செய்து முடிக்கப்பட வேண்டும் என்பதாகும். இது அவருடைய குமாரனை மனிதனின் மீட்பராக இருக்கும்படி கொடுப்பதின் மூலம் ஆயிற்று. இது தெய்வீக நியமத்தை மாத்திரம் காட்டவில்லை, எவ்வழியிலும் அது ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்ற பிரமாணத்தை மீறவில்லை என்பதையும், ஆனால் அதே நேரத்தில் விழுந்து போன சிருஷ்டிகளின் மேலே உள்ள இரக்கம், குமாரன் மனிதன் சார்பில் மரிக்கும் அளவுக்கான தெய்வீக அன்பை விளக்கிக் காட்டியது. இறுதியில் எல்லாம் நிறைவு பெறும்போது ஒழுங்கு முறைகளின் ஒவ்வொரு விசேஷ அம்சங்களிலும் தெய்வீக ஞானமும் வல்லமையும் கூட வெளிப்படுத்தப்படும்.

ஆயிர வருட அரசாட்சியின்போது, குமாரன் இந்த கிரியையை, திரும்பக் கொடுத்தல் முறைகளின் மூலம் செய்யக்கூடும் என்பதற்காக சிருஷ்டிப்பின் திட்டத்தை பூரணப்படுத்துவதினின்று பிதா நின்று விட்டார் என்று ஒரு வேளை கூறப்படலாம். அது முந்திய சிருஷ்டிப்பின் செயல்பாடுகளிலிருந்து வித்தியாசமா யிருக்காது, அவைகள் எல்லாம் பிதாவினுடையவைகள், குமாரன் மூலம் உண்டாயிற்று, உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. ஆனால் நாங்கள் இல்லை என்று பதில் அளிக்கிறோம். திரும்பக்கொடுத்தலோடு இந்த ஏழாவது யுக நாள் முற்றுப்பெற்று பூமியில் பூரணத்தை கொண்டு வரும். திரும்பக் கொடுத்தலின் வேலையோடு குமாரனுக்கு உள்ள உறவு, அவருடைய முந்திய கிரியைகள் எல்லாவற்றையும்விட முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். முந்திய சிருஷ்டிப்புக்கள் எல்லாவற்றிலும் குமாரன் தனக்கென்று வல்லமைகளையும், திறன்களையும் எந்த விதத்திலும் உபயோகப்படுத்தாமல் யேகோவா தேவனுக்காக சாதாரணமாக செயல்பட்டார். ஆனால் வரவிருக்கிற இந்த மாபெரும் கிரியையில், அவரது 34 வருட அவமானத்தின் உச்சநிலையாகிய சிலுவை மரணத்தின் மூலம் சம்பாதித்த அவருடைய சொந்த வல்லமையையும் அதிகாரத்தையும் உபயோகிப்பார். அவருக்கென்று பிதாவின் ஞானமும், அன்பும் திட்டமிட்டிருந்த அந்த நடவடிக்கையினால் அவர் உலகத்தை ''வாங்கினார்;'' ஆதாமையும், அவனுடைய சொத்தாகிய பூமியையும், ''தேவனுடைய சாயலில்'' படைக்கப்பட்டிருந்த பூமியின் சக்கரவர்த்தி என்ற அந்தஸ்தையும் வாங்கினார். பிதா ''முதற்பேறானவரை'' கனப்படுத்துவதில் களிகூர்ந்தார். குமாரன் அவரை கனப்படுத்தவும், அவரால் கனப்படுத்தப்படவும் இவ்விதமாக அவர் திட்டமிட்டு ஒய்ந்திருந்தார், அல்லது சிருஷ்டிப்பின் செயல் முறையை நிறுத்தினார்.

தேவன் ஒய்ந்திருந்தார் என்பது களைப்பிலிருந்து மீள்வதற்கு அல்ல, ஆனால் சிருஷ்டிப்பின் வேலையை நிறுத்தியிருந்தார். பாவத்தின்நிமித்தம் அவருடைய பூமியின் உயர்ந்த சிருஷ்டிப்புக்கு வந்த அழிவையும் வீழ்ச்சியையும் பார்த்தார், இருந்தபோதிலும் மரண தண்டனையின் பாதையை முடக்க எந்த வல்லமையையும் முன் வைக்கவில்லை. மேலும் பழைய நிலைக்கு கொண்டு வரும் (திரும்பக் கொடுத்தல்) செயல் முறையையும் ஆரம்பிக்கவில்லை. உண்மையிலேயே அவர் விதித்த பிரமாணத்தின்படி ஆதாமுக்கும் அவன் சந்ததியினருக்கும், ஈடுபலி கொடுப்பவர் மூலமாகவே அல்லாமல் அவருடைய தயவையும்

கருணையையும் அப்பியாசப்படுத்துவதற்கான எந்த ஒரு சந்தர்ப் பத்தையும் தவிர்த்தார். தண்டனை மரணமாக, அதுவும் எல்லை யில்லாமல், நித்திய மரணமாக, நித்திய அழிவாக இருக்க, மேலும் பொய் சொல்வது தேவனுக்கு முடியாததாயிருக்க அண்டசராசரத்தின் பிரதான நியாயாதிபதிக்கு அவராலேயே கொடுக்கப்பட்ட நீதியுள்ள கட்டளையை மாற்ற முடியாமலிருக்க, இப்படியாக மனுக்குலத்தை நேரடியாக பழைய நிலைக்கு கொண்டு வர முடியாத சிருஷ்டிகராக ஆக்கப்பட்டார். அல்லது குற்றவாளியாக தீர்க்கப்பட்ட மனிதனில் அல்லது அவனது சொத்தான பூமியில், எவ்விதத்திலும் அவருடைய சிருஷ்டிப்பின் கிரியை தொடர முடியாமல் ஆயிற்று.

இப்படியாக யேகோவா தேவன் அவருடைய யுகங்களின் தேவ ஏற்பாட்டிலும் அதை நிறைவேற்றும்படியாக அவர் ஒப்படைத்திருந்த தன்னுடைய ஒரே பேரான குமாரனிலும் அவருடைய நம்பிக்கையை வெளிப்படுத்தினார். பிதாவானவர் குமாரனில் வைத்திருந்த இந்த நம்பிக்கையை, அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய விசுவாசம் அதைப்போன்று அபிஷேகம் பண்ணப்பட்டவரை உறுதியாக பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதையும், ஆகவே, நாமும் நம்முடைய, நமக்கன்பான நண்பர்களுடைய, பொதுவாக உலக மக்களுடைய ஒவ்வொரு அக்கறைக்காகவும், கவலைக்காகவும் அவரை நம்பலாம் என்பதையும் விளக்குவதற்காக உபயோகப்படுத்தியிருக்கிறார். அப்போஸ்தலருடைய அறிக்கை: ‘‘விசுவாசித்த நாம் இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்..... அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தது போல, தானும் தன்னுடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்.’’ விசுவாசிகள், தேவனைப் போன்றே, நமது ஓட்டத்திற்கு யேகோவா வைத்திருக்கிற எல்லா பெரிய திட்டங் களையும் நிறைவேற்றுவதற்கு, கிறிஸ்துவின் திறமையிலும் ஆர்வத்திலும், பூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே இளைப்பாறுதலானது, சரீரபிரகாரமான களைப்பிலிருந்து அல்ல, ஆனால் கவலையிலிருந்தும், கிறிஸ்துவின் அதிகாரத்தை விட்டு விஷயங்களை வெளியே எடுக்கும்படியான எந்த ஆசையிலிருந்தும் அல்லது பலனை வேறு எந்த வழியிலாவது பெற்றுக்கொள்ளும்படியான முயற்சியிலிருந்தும் உண்டான களைப்பிலிருந்து இளைப்பாறுதலாகும்.

நம்முடைய சிருஷ்டிகரின் இளைப்பாறுதல் அல்லது விழுந்து போன அவருடைய சிருஷ்டிகளின் உதவிக்கு உடனடியாக வராமல் இருப்பது, அல்லது அசிரத்தைபோல் காணப்பட்டாலும், உண்மையில் அவ்விதமாக அல்ல, ஆனால் மனிதனின் உதவிக்காக, ஒரு மத்தியஸ்தர் மூலமாக உண்டாகும் ஞானமுள்ள, சிறந்த முறையின் வெளித் தோற்றமாகும். திரும்பக்கொடுத்தலின் வேலை சீக்கிரமாக தொடங்கப் பட்டிருக்க வேண்டும் என்று சொல்லப்படுமானால், பாவம், மரணத்தின் ஆட்சியின் காலமான 6000 வருடங்கள், ஒரு வம்சமானது ''பூமியை நிரப்புவதற்கு'' போதுமான எண்ணிக்கையில் பிறப்பின் மூலம் கொண்டு வருவதற்கு அப்படியொன்றும் அதிகமான காலம் கிடையாது என்றும் கூறுகிறோம்; ''அளவு மீறிய நிறைவான பாவம்,'' அதற்கான கடுமையான சம்பளத்தைக் குறித்தும் எல்லாருக்கும் ஒரு பாடத்தை புகட்டுவதற்கும், மனிதர்கள் தங்கள் சொந்த முன்னேற்றத்திற்காக தங்கள் சொந்த உபாயங்களை முயற்சித்து பார்க்க அனுமதிப்பதற்கும் அது பிரயோஜனமற்றது என்று அவர்கள் அறிந்து கொள்வதற்கும், அப்படியொன்றும் அது அதிகமான காலம் கிடையாது என்றும் நாங்கள் பதில் சொல்கிறோம். நம்முடைய ஆண்டவரின் முதலாவது வருகை உலகத்தை மீட்கும்படியாக (விலைக்கிரயம் கொடுத்து வாங்கும்படியாக) இருந்தபடியால், அவருடைய கிருபையை ஏற்றுக்கொள்பவர்கள் எல்லாரையும் மறுபடியும் வந்து ஆசீர்வதிக்கவும், உயர்த்தவும், பழைய நிலைக்கு கொண்டு வரவும், சரிசமமான நியாயமான உரிமை உள்ளவராக இருப்பார். பாவம் என்ற நோயும், மரணமும் உட்புகுந்து 6000 வருடங்களுக்கு மேலாக ஆகிவிட்டது. இருந்த போதிலும், அந்தக் காரியங்களெல்லாம் தேவனுடைய குறித்த காலத்தில் நிறைவேறும் என்று வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. ''குறித்த காலத்தில்'' தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார். உண்மையிலேயே ஆயிரவருட அரசாட்சியின்போது மீட்பரோடு சேர்ந்து உலகத்தை ஆசீர்வதிக்கும்படியான தெரிந்துகொள்ளப்பட்ட சபையை, அழைத்து, கூட்டிச்சேர்த்து, மெருகேற்றி, ஆயத்தம் பண்ணும் தெய்வீகத் திட்டத்திற்கேயன்றி, அந்த காலமானது அப்போது குறித்த காலமாக இருந்திருக்காது என்று நாம் காண்கிறோம். இந்த தெரிந்தெடுத்தலுக்கு முழு சுவிசேஷ யுகமும் தேவைப்படும் என்று தேவன் முன்னறிந்து, மீட்பின் வேலையை முடிக்கும்படியாக போதிய கால அளவிற்கு முன்னதாக தமது குமாரனை அனுப்பினார்.

பூமி சம்பந்தப்பட்ட சிருஷ்டிப்பின் கிரியையிலிருந்து இளைப்பாறுதலின் காலம்

யேகோவா தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலையிலிருந்து ஓய்ந்து அல்லது அதை நிறுத்தி எவ்வளவு காலமாயிற்று? அது இப்போது 6000 வருடங்களைக் காட்டிலும் சற்று கூடுதலாயிற்று என்று பதில் சொல்லுகிறோம். அவருடைய நிறுத்தம் அல்லது ஓய்வு எவ்வளவு காலத்திற்கு தொடரும்? அது ஆயிர வருட யுக முழுவதுமாக, மாபெரும் சிருஷ்டிகரின் ஆயிர வருட அரசாட்சியின் போதும், ''உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும் காலங்கள் வருமளவும்'' (அப்.3:21) தொடரும் என்று நாங்கள் பதில் கூறுகிறோம். தன்னுடைய திட்டங்கள் நிறைவேற்றப்படுதலில் யேகோவா தேவன் வைத்திருந்த நம்பிக்கை இவ்வாறாக அவைகள் எல்லாவற்றையும் இயேசுவின் பொறுப்பில் விட்டது நியாயமானதே என்று நிரூபிக்கப்படுமா? முடிவு திருப்திகரமாக இருக்குமா? முடிவை ஆரம்பத்திலிருந்தே அறிந்திருந்த தேவன் அப்படியாகும் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்; மேலும் குமாரன் விலைக்கிரயம் செலுத்துவதினால் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதனால் ''அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்'' (ஏசா.53:11) என்கிறார். ஆம், தங்களுடைய மீட்பரின் கிரியையில் விசுவாசத்தின் மூலம் நம்பிக்கைக் கொண்டிருக்கும் (கடந்த கால, வருங்கால) விசுவாசிகள் அனைவரும் ''தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை'' என்று விசுவாசத்தின் முழு நம்பிக்கை உடையவர்களாக இருக்கலாம். இது விசேஷமாக சபைக்கு, மாத்திரமல்ல ஆயிர வருட அரசாட்சியின் நாளன்று, அற்புதமான தெய்வீக நன்மைகளை, தெய்வீக நிபந்தனையில் மனதார ஏற்றுக் கொள்ளக்கூடிய, உலகத்தில் தெரிந்து கொள்ளப்படாமல் இருப்பவர்கள் எல்லாருக்கும் நீளம், அகலம், உயரம், ஆழம் நிறைந்த அன்பும் இரக்கமும் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களும் உண்டு என்று முழுமையாக விசுவாசிக்கலாம்.

ஆறாயிரம் வருடம் கடந்தாயிற்று, ஏழாவது ஆயிர வருடம் வர இருக்கிறது; இது யேகோவா தேவனின் ''இளைப்பாறுதல்;'' இது, வாஞ்சையும் கீழ்ப்படிதலும் உள்ள மனுக்குலத்திற்கு(புது சிருஷ்டிக்கு) திவ்விய சாயலை கொடுக்கும் திட்டமும், மனிதனுக்கு பூமியை அவனுடைய சொத்தாக, இராஜ்யமாக கீழ்ப்படுத்தும் திட்டமும் நிறைவடைந்து, குமாரனின் ஆயிரம் வருட அரசாட்சி முற்றுப்பெறும் காலத்திற்கு நம்மைக் கொண்டு செல்லும். அதன் பின்னர் மத்தியஸ்த சிங்காசனமும், ஆட்சியும், அவைகளின் நோக்கமும் நிறைவேற்றப் பட்டுவிடுவதால், பூமியிலுள்ள எல்லா சீர்கேடானவர்களும் அழிக்கப் பட்ட பின்னர், குமாரன் இராஜ்யத்தை எழுதியிருக்கிற பிரகாரம் ஆரம்பத்தில் யாருக்கென்று ஏற்படுத்தப்பட்டதோ அந்த மனுக்குலத்திற்கு கொடுத்து, ''தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ஒப்படைப்பார்.'' (1கொரி.15:24–28) ''அப்போது ராஜா அவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, (அங்கீகரிக்கப் பட்டவர்களே) உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் (இம்மைக்குரிய சிருஷ்டி) என்று சொல்வார்.'' (மத்.25:34)

சரித்திரத்தினாலும் தீர்க்கதரிசனத்தினாலும் தெளிவாக குறிக்கப்பட்டுள்ள இந்த யுக நாளின் நீளம், சிருஷ்டிப்பின் வாரத்திலுள்ள மற்ற எல்லா யுக நாட்களின் நீளத்திற்கு தடயத்தைத் தருகிறது. முழுக்காலமான ஏழாயிரம் வருடங்கள் ஏழு என்ற எண்ணினால் பெருக்கப்பட்டு முற்றுப்பெறும்போது நாற்பத்தொன்பது ஆயிரம் வருடங்கள் கடந்து பெரிய ஐம்பதாவது ஆயிர வருடம் என்று அறிமுகமாகிறது. அதை ஏற்கனவே (தொகுதி 2, அத்தியாயம் 6) வேதாகமத்தில் முக்கியமானதாக தெய்வீக திட்டத்தின் மாபெரும் உன்னத நிலையை காட்டுவதாக பார்த்திருக்கிறோம். இஸ்ரயேலின் ஓய்வு நாட்கள் 7×7=49 க்கு சமம் என்று முடியும்போது, அது ஐம்பதாவது அல்லது பெந்தெகொஸ்தே என்ற அதன் விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்கு கொண்டு செல்கிறது. அவர்களுடைய ஏழேழு ஓய்வு வருடங்கள் 7×7=49க்கு சமமாகி, ஐம்பதாவது அல்லது யூபிலி வருஷத்தை அறிமுகப்படுத்துகிறது. இன்னும் சற்று விரிவாக 50×50 என்ற சுற்றுக்கள், ஆயிரம் வருட அரசாட்சியை பூமியின் மகா யூபிலியாக அறிமுகப் படுத்துகிறது. ஆகவே கடைசியாக, இப்போது, ஓய்வு நாள் அல்லது 7 நாள் முறை பூமியின் சிருஷ்டிப்பை இன்னும் சற்று விரிவான முறையில்

அதன் ஆரம்பத்திலிருந்து அதன் பூரண நிலை வரை, 7முறை 7000 வருடங்கள் 49000 வருடங்களுக்கு சமமாகி, இனி பெரு மூச்சு இல்லாத, அழுகை இல்லாத, மரணம் இல்லாத பெரிய யுகத்தை அறிமுகப்படுத்துகிறது. ஏனென்றால் பூமியை பொறுத்தவரையில் தேவனின் சிருஷ்டிப்பின் கிரியை அப்போது நிறைவடைந்திருக்கும். அந்த நாள் (தேதி) யூபிலி நாள் (தேதி) என்று குறிப்பிட வேண்டும் என்றால் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

பூமியின் சிருஷ்டிப்பின் வாரத்தின் விடியற்காலத்து வேளையில் தேவபுத்திரர் எல்லாரும் ''கெம்பீரித்தார்கள்'' (யோபு 38: 7). மேலும், படிப்படியான அபிவிருத்தியை பார்த்த பின்னர், கடைசியாக மனிதனை அதன் இராஜாவாக, தெய்வீக சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதை பார்த்தார்கள். அதன் பின்பு, தங்கள் ஆதி மேன்மையை காத்துக்கொள்ளாத விழுந்து போன தூதர்களின் பயங்கரமான அனுபவங்களாலும், பாவம் மரணத்தினிமித்தமாக மனிதனின் சுயநலமான மேலும் கொடூரமான சரித்திரத்தினாலும் கீழ்ப்படியாமையின் நிமித்தம் பாவத்திற்குள்ளும் மரணத்திற்குள்ளும் வீழ்ச்சி வந்தது. அதன் பின்பு அடுத்தடுத்து மீட்பும், பலியின் மூலமாக அபிஷேகம் பண்ணப்பட்டவரின் (தலையும் சரீரமும்) தெரிந்தெடுத்தலும், மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதலும், உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லா ருடைய வாக்கினாலும் உரைத்த இழந்து போனவைகளை திரும்பக்கொடுத்தலும் வந்தன. இவ்விதமாக யேகோவா தேவனின் ஞானம் நிறைந்த சிருஷ்டி களெல்லாம் அவரது அன்பின் நீளம், உயரம், அகலம், ஆழங்களை மாத்திரமல்ல, அவருடைய நீதி, ஞானம், வல்லமை ஆகியவற்றின் நீளம், உயரம், அகலம், ஆழங்களை நோக்கிப்பார்க்கும் போது வானத்திலும் பூமியிலும் ஒரு சந்தோஷ ஆரவாரம் உண்டாவதில் ஆச்சரியமில்லை.

அப்போது வானத்திலும் பூமியிலும் உள்ள தேவனின் எல்லா சிருஷ்டிகளினாலும் கீழ்க்கண்ட புதிய பாட்டு நிச்சயமாக பாடப்படும்.

''சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள் !

யுகங்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமு மானவைகள்!

கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப் படுத்தாமலும் இருக்கலாம் ?

ஏனென்றால் நீர் மாத்திரமே தயாளம் உள்ளவர்,

எல்லா ஜாதிகளும் உமக்கு முன்பாகத் தொழுது கொள்வார்கள்,

ஏனென்றால் உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின.'' (வெளி.15:3,4)

''வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்க சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; நானே கர்த்தர், வேறோருவர் இல்லை.''(ஏசா.45:18)

''அப்போது, வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும்..... சமுத்திரத்திலுள்ளவைகளும்.... சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற வருக்கும், ஆட்டு குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும், கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்.'' (வெளி.5:13)

மேற்சொல்லப்பட்டதை எழுதிய பின்னர், நவம்பர் 12,1902 ல் சிருஷ்டிப்பைக் குறித்து ஆதியாகமத்தின் அறிக்கை என்று Prof. G.Frederic Wright, D.D.L.L.D., எழுதியதை நாம் கீழே தருகிறோம்.

ஆதியாகமத்தின் அறிக்கை

''உலகத்தின் சிருஷ்டிப்பைக் குறித்ததான ஆதியாகமத்தின் முதலாவது அதிகாரம், மிகவும் குறிப்பிடத்தக்கதான ஒரு பத்திரமாகும். எழுத்தின் பிரகாரமாக பார்க்கையில், விஞ்ஞான கண்டு பிடிப்பின் பயனோடு ஒரு வேளை ஏற்படக்கூடிய முரண்பாட்டைத் தவிர்க்கும் அதன் திறமை சிறப்பானது. அது பெற்றிருந்த செல்வாக்கை அளவுகோல் வைத்து பார்க்கும் போது அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படியான அளவிற்கு வேறு எந்த விதத்திலும் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றும் கிடையாது. அதன் வெளிப்படையான நோக்கம் பல தெய்வ கொள்கையை தவிர்க்கவும், தேவத்துவத்தின் ஒருத்துவத்தை (ஒரே தேவன் என்பதை) உறுதியாக கூறவும் மாத்திரமே. பொதுவாகவும், விபரமாகவும் பல தெய்வ கொள்கையை மறுப்பதன் மூலமாகவும் வானத்தையும் பூமியையும் மாத்திரமல்ல, விக்கிரக ஆராதனைக்காரர்கள் வழக்கமாக ஆராதித்துக்கொண்டிருக்கிற அதில் காணப்படும் எல்லா வஸ்துக்களையும் உண்டாக்கினவர் இஸ்ரயேலின் தேவன் ஒருவரே என்றும் உறுதிப்படுத்துகிறது.

''அதன் செல்வாக்கு இல்லாத இடங்களிலெல்லாம் பல தெய்வ கொள்கையும் விக்கிரக ஆராதனையும் பழக்கத்திலிருப்பது இந்த அதிகாரத்தின் மேன்மையைக் காட்டுகிறது. இந்த அதிகாரத்தை ஓர் உண்மையான, தேவனுடைய வெளிப்பாடு என்று ஏற்றுக்கொண்ட ஜாதிகள் மாத்திரமே, ஒரே தேவன்,

அவருடைய ஆராதனை, எல்லாவற்றையும் அவர் ஒருவரே சிருஷ்டித்தார் என்று ஏற்றுக் கொள்கின்றன.

விஞ்ஞானத்தோடு ஒத்திருத்தல்

''அதே நேரத்தில் விஞ்ஞானத்தில் ஏற்பட்ட முன்னேற்றமானது இந்த கம்பீரமான தெய்வீக வெளிப்பாட்டின் புத்தகத்தின் அருமையான பகுதியைப் பற்றிய எங்களுடைய பிரமிப்பை அதிகப்படுத்தியிருக்கிறதே யொழிய குறைக்கவில்லை. அதன் விசாலமான உள்ளடக்கத்திற்குள் விஞ்ஞானத்தின் ஒவ்வொரு உண்மையான கண்டுபிடிப்பும் தஞ்சம் புக வாய்ப்புண்டு. இந்த அளவுக்கு குறிப்பிடத்தக்க விதத்தில் இந்த அதிகாரத்தின் மொழியானது, நவீன விஞ்ஞானத்தோடு முரண்பாட்டைத் தவிர்க்கும் வகையில் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளது. தெய்வீக ஏவுதலின்படியில்லாமல் வேறுவழிப்படி இல்லை என்று யேல் கல்லூரி (Yale college) யைச் சேர்ந்த பேராசிரியரும் புவிஅமைப்பியல் வல்லுநருமான Y.D.Dana அதிக முக்கியத்துவத்தோடு உறுதிப்படுத்தினார்.

''ஆதியிலே வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டன என்ற சிறிய அறிக்கையினால், பூமியின் வயதைக் குறித்தும், உண்மையிலே சூரியனோடு சம்பந்தப்பட்ட ஒழுங்குகளைக் குறித்தும் உள்ள வாக்குவாதத்தை எவ்வளவு காலத்திற்கு முன்பாக ஆதி (ஆரம்பம்) இருந்தது என்று சொல்லாமலே முடக்கிவிடுகிறது. சூரியனோடு சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறைகளுக்கு ஒரு ஆரம்பம் இருந்தது என்பது நவீன விஞ்ஞானத்தில் மிகவும் நிரூபிக்கப் பட்டிருப்பதால் தீவிர பரிணாமக் கொள்கைக் காரர்களும் எதிர்ப்பு தெரிவிக்கமுடியாது. சக்தியை சேமித்தலைக்குறித்த நவீன கொள்கை, இப்போது இருக்கிற முறைமைகள் இதற்குமுன்பு எப்போதும் இருந்ததில்லை என்பதை நிரூபிக்கிறது. சூரியன் குளிர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. அதன் வெப்பம் அதிவேகமாக கதிர்வீச்சடைந்து, தானே அதை வெற்றிடத்தில் வீணாக்கிக் கொண்டிருக்கிறது. சுருக்கமாக சொன்னால், சூரியன் சம்பந்தமான ஒழுங்குகள் குறைந்து கொண்டு வருவதுடன், இவ்விதமாக இந்த ஒழுங்குகள் என்றைக்கும் போய்க்கொண்டிருக்க முடியாது என்பது நண்பகலைப் போல் தெளிவாகிறது. தெளிவற்ற, ஆதாரமற்ற அனுமானம்கூட ஓர் ஆரம்பத்தைக் குறிக்கிறது. எக்காலத்திலும் மனிதனின் சாதுரியம் வேதாகமத்தின் ஆரம்ப வசனத்தில் காணப்படுகிற உண்மையைவிட மேலான அறிக்கையை உண்டாக்கவில்லை.

சிருஷ்டிப்பு படிப்படியானது

''ஆதியாகமத்தின் முதலாவது அதிகாரம் முழுவதும் இந்த முறையிலான சிருஷ்டிப்பில் முன்னேற்றம் என்ற கொள்கையின் அடிப்படையிலானது. பிரபஞ்சம் உடனே உண்டாகவில்லை; தொடக்கத்திலேயே அது முடிவுபெறவில்லை;

ஆரம்பத்தில் வெளிப்புற சக்திகள் மாத்திரம் நமக்கு இருந்தன, அவைகளிலிருந்து படிப்படியாக விரிகின்ற ஒரு பெரிய அமைப்பு உண்டாக்கப்பட வேண்டும். (ஏற்கனவே குறிப்பிட்டபடி மனிதனின் சிருஷ்டிப்பைக்குறித்து மாத்திரமே பரிணாமக்கொள்கை வேதாகமத்திற்கு முரண்பாடாக இருக்கிறது, அதுவும் இந்த குறிப்பை எதிர்க்கவே அந்த கொள்கை இருக்கிறது அல்லது அதை ஆதரிக்கிறவர்கள் இருக்கிறார்கள்). இப்படி ஒருவர் சொல்ல விருப்பப்பட்டால் அது பரிணாமக் கொள்கை. நாள் (எபிரேயு பாஷையில் ``yom") என்ற வார்த்தையைக்குறித்து ஒருவர் எப்படிப்பட்ட கருத்துடையவராயிருந்தாலும் இது சமமான உண்மையாக இருக்கிறது. இந்த உலகத்தை சிருஷ்டிப்பதற்கு, ஒரு நாள் 24 மணி நேர காலத்தையுடையதாயிருந்தாலும், 6 நாட்கள் சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகருக்கு ஏன் தேவைப்பட்டன? சிருஷ்டிகர் சர்வ வல்லமையுள்ளவர் மாத்திரமல்ல, அளவில்லாத ஞானம் உள்ளவர். சிருஷ்டிப்பில் 'முதலாவது இலை, அதன்பின் தானியக்கதிர், பின்பு தானியக்கதிரில் முழுமையான தானியம்' என்ற சிருஷ்டிப்பின் முறையை தெரிந்து கொண்டார் என்பதே இதற்கான பதில் ஆகும்.

''இந்த முழு அதிகாரத்தின் முகப்பில் பரிணாமக்கொள்கையின் (ஏற்கனவே குறிப்பிட்டபடி மனிதனின் சிருஷ்டிப்பைக்குறித்து மாத்திரமே பரிணாமக் கொள்கை வேதாகமத்திற்கு முரண்பாடாக இருக்கிறது, அதுவும் இந்த குறிப்பை எதிர்க்கவே அந்த கொள்கை இருக்கிறது, அல்லது அதை ஆதரிக்கிறவர்கள் இருக்கிறார்கள்) தெய்வீக திட்டம் இருக்கிறதாக தோன்றுகிறது. மிகவும் சாதாரண உருவ வஸ்துகளை தோன்றச்செய்வதின் மூலம் சிருஷ்டிப்பு ஆரம்பிக்கப்பட்டு, வெளிச்சத்தை உருவாக்கும் சக்தியையும் திறனையும் கொண்ட செயல்பாடுகளை அவைகள் மேல் செயல்படுத்துவதன் மூலம் சிருஷ்டிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து பூமியை உருவாக்குகிற மூலகங்கள் பிரிக்கப்படுகிறது. அதன் பிறகு தண்ணீரிலிருந்து நிலத்தைப் பிரிப்பதும், காற்றில் மிதந்து கொண்டிருக்கும் தண்ணீரிலிருந்து பூமியின் மேலுள்ள தண்ணீரைப் பிரிப்பதும் தொடர்கிறது. யாராவது 'ஆகாய விரிவு' என்ற வார்த்தையில் குற்றம் கண்டுபிடிக்க விரும்பினால், அதன் மேலோட்டமான சொல்லர்த்தத்தில் பிடிவாதமாக நின்றால் கீழே கொடுக்கப்படுகிற அறிக்கையின் பிரகாரம் அப்படி செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். (ஆதி.1:20) பறவைகள் பூமியின்மேல் திறந்த ஆகாய விரிவிலே பறக்கும்படியாக உண்டாக்கப் பட்டிருக்கின்றன. மேகத்தில் தண்ணீரை பிடித்து வைத்திருந்த ஊடகத்தின் மூலமாகத்தான் பறவைகள் பறக்க முடிந்தது.

தாவரங்களின் சிருஷ்டிப்பு

''மூன்றாவது நிலையில் நிலமானது தாவரங்களால் மூடப் பட்டிருந்தது, அதன் ஜீவன் எளிமையானது. ஆனால் ஒரு முறை உற்பவிக்கப்பட்ட பின்னர், தன்னோடுகூட தாவர விருத்தியை எடுத்துச்செல்லக் கூடியது. தாவர வர்க்கங்களின்

சிருஷ்டிப்பு அறிவிக்கப்பட்டிருக்கும் விதமானது அவ்வளவு அறிவை ஊட்டும் வகையில் அமைந்திருக்கிறபடியால் தானாகவே உற்பத்தி செய்து கொள்ளும் கொள்கைக்கு போதிய அளவு ஆதரவு உண்டு. ஏனெனில் உயிரியலில் இன்னும் விவாதத்துக்குரிய கேள்விகளில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. இதன் வெளிச்சத்தில் பார்க்கும் போது, 'தேவன் பூமியானது புல்லை முளைப்பிக்கடவது என்றார்..... பூமியானது புல்லை முளைப்பித்தது' என்ற வார்த்தை எவ்வளவு விசேஷமானதாக இருக்கிறது.

''நீந்தும் ஜீவஜந்துக்களை திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்று தேவன் சொன்னார் (ஆதி.1:20) என்று ஐந்தாம் நாளுக்குரிய கிரியையின் தொடர்ச்சியை அறிவிக்கும் முறையும் இவ்விதமாக குறிப்பிடத்தகுந்த விதத்தில் கூறப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். ஆறாம் நாளின் கிரியையை அறிவிக்கும்போது இதே சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. (ஆதி.1:24) 'பூமியானது.... ஜீவஜந்துக்களாகிய.... ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கடவது....' இப்படியாக கூறப்பட்டவைகளை ஒருவர் சொல்லர்த்தமாக மாத்திரமே அர்த்தப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவாரானால் அவர் விஞ்ஞானம் கூறுவதையோ அல்லது வேதசாஸ்திரத்தையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்.

ஒரு விசேஷித்த சிருஷ்டிகர்

''மனிதனின் சிருஷ்டிப்புக்கு வரும்போது, இன்னொரு வித்தியாசமான அறிவிப்பு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. தேவன் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார், ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இத்தருணத்தில் மனிதனின் சிருஷ்டிப்பு எவ்விதமாக அமைந்திருந்தது என்று குறிப்பிடப்படுகிறது என்பதை ஆழ்ந்து சிந்திக்க அவசியமில்லை. ஆனால் மற்ற மிருகங்களின் சிருஷ்டிப்போடு ஒப்பிடும்போது, மனிதனுக்கு உரித்தான உயர்வான கௌரவத்திற்கு அறிவிக்கும்முறை சரியாக பொருந்துகிறது. மனிதனுடைய குறிப்பிடத்தகுந்த அநேக குணாதிசயங்கள், அவனுடைய ஆரம்பத்தின் செயல்பாடுகளைக் குறித்ததான அறிவிப்புகள் இதிலும் இன்னும் தொடர்ந்து வருபவைகளிலும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. மனிதன் தேவசாயலில் உருவாக்கப்பட்டது மாத்திரமல்லாமல், பூமியிலுள்ள மிருகங்களையும் ஆளுகை செய்யவும் தகுதியாக்கப்பட்டான். அவனுக்கு மொழியும் பரிசாக கிடைத்திருந்தது, அதன் மூலமாக அந்த மிருகங்களுக்கு அவனால் பெயரிடவும் முடியும். இதற்கும் மேலாக, சுய சித்தம் உள்ளவனாக, நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிகிறான். சுருக்கமாக சொல்லும் போது, அவன் நல்நடத்தைக்குரிய தன்மையை அறிவதினால் அவன் தன்னை ஒரு தனி இடத்தில் வைத்துக்கொள்கிறான்.

''சிருஷ்டிப்பைக்குறித்து இவ்வளவு அதிகமான விஷயங்கள் நமக்கு சொல்லப் பட்டிருக்கிறது. இவற்றில் முட்டாள்தனமானவைகள், மிக

கற்பனையானவைகள் ஏதுமில்லை. மேலும் நவீன விஞ்ஞானத்தோடு ஒத்துப்போவதில் சிறிதளவே சிரமம் இருப்பதும், அது தெய்வீக ஏவுதலின்படியே வழங்கப்பட்டது என்பதற்கு தெளிவான ஆதாரமாக உள்ளது. மில்ட்டனும் கூட எல்லா கல்வி அறிவோடும் அவருக்கு முன்பாக இருக்கிற இந்த விஷயங்களின் அனுகூலத்தோடும் மிருக ராஜ்யம் சிருஷ்டிப்பைக் குறித்ததான அவருடைய முழு எண்ணத்தையும் பரிகாசம் பண்ணாத படிக்கு அவருடைய கற்பனையை போதுமான அளவிற்கு அவரால் தடுத்து நிறுத்தமுடியவில்லை. எழுப்புதலின் கரமேயன்றி வேறு எது ஆதியாமத்தின் முதலாவது அதிகாரத்தின் ஆசிரியரை இப்படியாக தடை பண்ணி வழி நடத்தியிருக்கக்கூடும்?

மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான், பரிணாமம் அடையவில்லை

''கீழான ஜீவராசிகளின் மூளையின் அளவிற்கும் அதன் விருத்திக்கும் மனிதனின் மூளையின் அளவிற்கும் அதன் விருத்திக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. அவனுடைய வரிசையில், கீழ்மட்டத்தில் வந்தவைகளோடு மனிதன் இன்றும் அதிகமாக விசாலமாக, சரீரபிரகாரமாகவும் மனோதத்துவபிரகாரமாகவும் வித்தியாசமாக இருக்கிறான். அவனுக்கு இலக்கணத்தோடு பேசக்கூடிய திறமை உண்டு. அவனுடைய சிந்தனைகளை அவனால் வாக்கியங்களில் அமைக்க முடியும். அவைகளை தன் இஷ்டப்படி குறிப்புகள் மூலம் தாளின்மேல் அல்லது எந்த பொருளின் மீதும் அடையாளப்படுத்த முடியும். எந்த மிருகத்திற்கும் இல்லாதபடி மனிதனுக்கு இசைக்கு இசைந்து போகும் ஒரு காது உண்டு. இது மிகவும் அற்புதமான முறையில் கேட்கும் அங்கங்களை மென்மையான முறையில் சம்பந்தப்படுத்துகிறது. மிருக சிருஷ்டிப்பின் மனப்பக்குவத்திற்கு உள்ள பேதத்தை பார்க்கும்போது மனிதனின் மன இயல்புகளில் விஞ்ஞானபூர்வமான அல்லது விவாதித்து ஏற்றுக்கொள்ளும் தன்மை மிகவும் குறிப்பிடத்தக்கது.

''மனவளர்ச்சியின் பரிணாமம் என்பதை குறித்ததான Romanes *என்பவரின் அருமையான வேலையில் அவர் தாழ்ந்த மிருகங்களில் மனிதனின் மனத்திறனின் எல்லா ஆரம்ப நிலைகளையும் பார்ப்பதாக எண்ணுகிறார். ஆனால் அவைகள் மிகவும் ஆரம்ப நிலையில் இருப்பதால், மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி எப்பொழுதும் போல் மிக அதிகமாகவே உள்ளது. மிருகங்கள் வெளிப்படுத்தும் அறிவு எல்லாவற்றையும் சேர்த்து பார்க்கும் போது, அவைகளெல்லாம் 15 மாத வயதில் ஒரு குழந்தை செய்வதற்கு ஒத்த அறிவுக்கு ஏற்றதாக இருக்கிறது. ஆனால் இந்த அறிவு எந்த ஒரு தனிப்பட்ட இனத்திலும் இல்லை, ஒரு இனம் ஒரு வரிசையில் அந்த அளவுக்கு முன்னேறுகிறது, இன்னொன்று இன்னொரு வகையில்.....*

விவேகமும் சுபாவமும்

''நாயின் மோப்ப சக்தி பாராட்டுக்குரியதாக இருந்தாலும் அதற்கு பூமி அமைப்பு சாஸ்திரம் கற்றுக் கொடுப்பதில் பிரயோஜனமில்லை. கழுகின் கூர்மையான பார்வை, அதற்கு வான சாஸ்திரம் படிக்க உபயோகப்படப் போவதில்லை. பனிக்கட்டி ஆற்றின் காலத்தின்போது உள்ள பனிப்படலத்தை படிக்கும்படியாக ஒருவர் ஒரு நாயை எடுத்துச்செல்வார் என்றால் அது பயனற்றதாயிருக்கும். ஏனென்றால் கனடா தேசத்தில் உள்ள பாறை பிளவுகளோடு அமெரிக்காவிலுள்ள பாறைகளை சம்பந்தப்படுத்தி பார்க்கக்கூடிய சிந்தனையின் ஆற்றல் கிடையாது. அல்லது, ரஷ்யாவின் சமவெளியிலுள்ள சிராய்க்கப்பட்ட கற்களை ஸ்காண்டிநேவியா மலைத்தொடரோடும் ஒத்துபார்க்க முடியாது. இந்த கற்கள் கடந்து செல்லுகிற பனியினால் பாறை பிளவுகளிலிருந்து பலவந்தமாய் பிடுங்கி எடுக்கப்பட்டவைகளாகும். இப்படியான அனுமானம் நாய்க்குலத்தின் சக்திக்கு முற்றிலும் அப்பாற்பட்டது.

மதத்தை கிரகிக்கும் சக்தி

''இலக்கியம் மூலமாக மதத்தின் கருத்துக்களை கிரகிக்கும் சக்தி மனுக்குலத்திற்கு இருக்கிறது. இந்த மனித மனதின் மேன்மை வேறொன்றிலும் இல்லை. சில சாதாரண வார்த்தைகளின் உச்சரிப்பை காட்டுவதற்கு என பயிற்றுவிக்கப்பட்ட பன்றிகள் ஒருசில எழுத்துக்களை தெரிந்தெடுக்க, சில முறையில் கற்பிக்கப்பட்டு ஒரு வகையில் அவற்றை செய்துகாட்டும் பொருட்காட்சிகள் நடைபெறுவது உண்மையிலேயே அற்புதமானதுதான். ஆனால் எந்த மிருகத்திற்கும் தெளிவாக பேச கற்றுக்கொடுக்க முடியாது. இப்படி சொல்லும் போது பச்சைக் கிளிகளும் விதிவிலக்கல்ல. ஏனென்றால் அதன் வார்த்தைகள் அதற்கே தெளிவில்லாத சில சப்தங்களைத்தான் அது திருப்பி செய்கிறது. போகட்டும், ஒரு மிருகத்திற்கு கூட வாசிக்கவோ, புத்திசாலிதனமாக ஒரு சொற்பொழிவையோ, அல்லது செய்தியையோ கேட்கும்படி கற்றுக் கொடுக்க முடியாது.

''இன்னொரு பக்கம், வேதாகமம், பல்வேறான இலக்கியங்களை கொண்ட புத்தகமாகும். அது எக்காலத்திலும் எழுதப்பட்டிராத அளவுக்கு மேன்மையான காவிய நடையும், சொல்வன்மையும் உள்ளதாக தேவனின் கம்பீரமான எண்ணங்களையும் இதற்கு முன்பு எப்போதும் சொல்லப் பட்டிராத வருங்கால வாழ்க்கையைக் குறித்தும் சொல்வதாக இருக்கிறது. அது வானத்திற்கு கீழே உள்ள அனேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் அந்த மொழியில் அதன் கருத்துக்களை வலிமையாக எடுத்துரைக்கவும் சரியான மொழி நடையையும் பெற்றுள்ளது. உயர்ந்த அறிவுள்ள மனதுடன் பார்க்கும்போது மிருக சிருஷ்டிப்பில்

மனிதனின் தனித்தன்மை நன்றாகவே தெரிகிறது. அறிவாற்றலில் அவன் தனித்து நிற்கிறான். மனித இனத்திற்கு விஞ்ஞானப் பெயர் 'homo' ஆகும். ஆனால் இந்த இனத்திற்கு 'homo sapiens' அதாவது மனித ஞானம் இணையப்பெற்ற மனித வடிவம்.....

''ஆல்ஃபிரெட் ரசல் வாலேஸ் (Alfred Russell Wallace) என்பவர் இயற்கையாகவே தெரிந்தெடுக்கும் கொள்கையை தானாகவே கண்டுபிடித்து டார்வின் பிரசுரித்த அதே நேரத்தில் தானும் பிரசுரித்தபோது, மனிதனின் பல தரப்பட்ட சரீர வினோதங்கள் தானாகவே ஏற்பட்டிருக்க முடியாது என்றும், அவைகள் மறுப்பு சொல்ல முடியாத அளவுக்கு, மிகவும் உயர்ந்த வல்லமையின் மூலமாகத்தான் வந்திருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டினார்.

ஆடைகளும் கருவிகளும்

''அவைகளில் மனிதனுக்கு இயற்கையிலே பாதுகாப்பான மூடுதல் இல்லாதிருப்பதை சுட்டிக் காட்டுகிறார். எல்லா மிருகங்களுக்குள்ளும் மனிதனுக்கு மாத்திரமே ஆடைகளை அளிக்கிறார். அவன் தாவரங்களின் நார் கொண்டு கம்பளியை (போர்வையை) நெய்து, அல்லது மற்ற மிருகங்களுடைய தோலை எடுத்து, கடுமையான சீதோஷ்ணத்திலிருந்து தன்னை காப்பதற்காக தன்னுடைய நிர்வாணமான பகுதியில் போட்டுக் கொள்ள அவற்றை உபயோகப்படுத்துகிறான். பறவைகளுக்கு சிறகுகள் உண்டு, ஆடுகளுக்கு ரோமம் உண்டு, மற்ற மிருகங்களுக்கு தங்கள் பாதுகாப்புக்கென வியக்கத்தக்க வகையில் அவைகளுக்கு ஏற்றது போல மெல்லிய உரோமங்களுண்டு. மனிதன் மாத்திரம் தன்னுடைய சொந்த அறிவை உபயோகிக்காத வரையில் பாதுகாப்பு இல்லாதவனா யிருக்கிறான். அதைக்குறித்து சிந்திக்க நாம் நிற்கும் வரை தனக்கு ஆடைகளைத் தேடிக்கொள்வதற்கான எவ்வளவு அதிகமான மனிதனின் அறிவு உபேயாகப் படுத்தப்படுகிறது என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. தனக்கு ஒரு அலங்கார அங்கியை பெறுவதற்காக ஒரு மிருகத்தின் தோலை எடுக்க வேண்டும் என்ற சிறு விஷயத்தில் கூட, முதலாவதாக கருவிகளை கண்டுபிடிக்கிறவனாக இருக்கும்படி உந்தப்படுகிறான். ஏதோ ஒரு கத்தி உபயோகப்படுத்தப்படாமல் எந்த மிருகமும் இன்னும் தோலுரிக்கப்பட்டதில்லை.

''இது மனிதனைக் குறித்து கருவிகளைப் பயன்படுத்துகிற மிருகம் என்ற நல்ல வரையறையைத் தருகிறது. மிருகங்கள் கருவிகளைப் பயன் படுத்துகின்றன என்று சொல்லக்கூடிய வகையில் பார்ப்போமானால், யானையிலும் குரங்கிலும் அந்த யுக்தி காணப் படுகிறது. யானை தன்னுடைய உடலில் தனக்கு எட்டாத பகுதியில் உள்ள ஏதாவது பொருட்களை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்காக ஒரு தூரிகை போன்றதை எடுத்து தன்னுடைய தும்பிக்கையின் மூலம் அது அந்த பகுதியை அடையச் செய்கிறது. ஒரு குரங்கு ஒரு குச்சியை உபயோகித்து ஒரு

கதவை திறக்க துருவிப்பார்ப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் எந்த மிருகமும் எப்போதாவது ஒரு கருவியை உருவாக்கினதாக அறியப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் எந்த மனித ஜாதியும், எவ்வளவு குறைவான அறிவுள்ளவர்களாக இருந்தாலும், விநோதமான, சிக்கலான கருவிகளை உண்டு பண்ணாமல் இருந்ததில்லை.

''எளிமையான முறையில் நடத்தப்படும் போட்டிகளுக்கான படகுகளும் கூட அதிக புத்திசாலித்தனமாக உண்டாக்கப்பட்டு, தங்கள் தேவைக்கேற்றப்படி பயன்படுத்தப்படுகின்றன. நெருப்பூட்டும் உபகரணமான கல்லும் அதிகமான, முன்னதாக தீர்மானிக்கப்பட்ட வடிவத்தை பெறுவதற்கும் அதை ஏற்றவாறு செதுக்க அதிகமான திறமை தேவைப்படுகிறது. உராய்வு மூலம் நினைத்தவுடன் நெருப்பை உண்டாக்க நாகரீகமற்ற ஜாதிகள் உபயோகித்த புத்திசாலித்தனமான முறைகள், நாகரீகமுள்ள மனிதனுக்கு நன்மை செய்யும்; அம்பும் வில்லும், அவைகளை உபயோகப்படுத்தின விதமும், மிகவும் மேலான கண்டு பிடிப்பு முறையை காட்டுகிறது. மிருக சிருஷ்டிப்பு, இதோடுகூட ஒப்பிட்டு பார்ப்பதற்கு கொஞ்சம் கூட தகுதியற்றதாக இருக்கிறது.

சங்கீதத்தை கிரகிக்கும் தன்மை

''மேலும் வாலேஸ் என்பவர், மனிதக் குரலானது, இயற்கையாக உண்டாக்கப்படக் கூடியவைகள் எல்லாவற்றையும் காட்டிலும் மேலானது என்பதை நிரூபிக்கிறார். குரங்குகளுக்கு தங்கள் ஆத்மாவில் சங்கீதம் கிடையாது என்பதுடன் தங்கள் குரல்வளையில் அதற்கேற்ற தன்மையும் கிடையாது. ஆனால் மனுக்குலத்தில் அடிமட்டத்திலுள்ள மனித ஜாதிக்கு இரண்டும் உண்டு. முன்னனியில் உள்ள நம்முடைய இசை அமைப்பாளர்களுக்கு நாட்டுபுறப்பாட்டுகள் மூலக்கருத்தை கொடுக்கின்றன. காலம் சென்ற தியோடர் எஃப். சேவார்டு (Theodore F. Seward) என்பவர் தான் பிரதி எடுத்த நீக்ரோ மக்களின் தோப்புகளில் பாடப்படுகிற பாடல்களைக் குறித்துச் சொல்லும்போது, அவைகளின் இசைவும் முன்னேற்றமும் சங்கீதம் இயற்றப்படுவதற்கு, விஞ்ஞான விதிமுறைகளை கடைப்பிடிப்பனவாக இருந்தன என்றார். முற்றுமாக முன்னேற்றமடைந்த மனிதனுக்கு சங்கீதத்தை கிரகிக்கும் தன்மை பிரயோஜனமுள்ளதாக இருந்த போதிலும், மனித குரங்கு போன்ற மிருகங்களுக்கு அது பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நாம் நினைத்துப்பார்க்க முடியாது. மனிதன் அல்லது மனுஷிக்கு கவனத்தை ஈர்க்கக்கூடிய சங்கீதக்குரல், சிறிதளவே மனித குரங்கை ஈர்க்கிறது.

''மனிதனுக்கு கீழாக உள்ள உயர்ந்த மிருக சிருஷ்டிக்கு தேவைப்படும் மூளையை பார்க்கும் போது, மனிதனின் மூளை அளவு எல்லாவிதத்திலும் மேம்பட்டது, அதுவும் மனித உதவியின்றி அது அதற்கு பிரயோஜனமற்றதாகத் தோன்றும். ஆகவே, இந்த இரண்டும் ஒரே நேரத்தில் தோன்றியிருக்க வேண்டும்,

அது தானாகவே வந்தது என்று பற்றிக்கொண்டு பாதுகாத்து, அபிவிருத்தி பண்ணுவதற்கு அனுகூலமானதாக இருந்திருக்க வேண்டும்....

''மனித குரங்கின் பின்புறமுள்ள அங்கத்தின் பெருவிரல் பெரிய கால் விரலாக மாறி, இனியும் பொருட்களை பிடிக்க பிரயோஜனப்படாமல் நிமிர்ந்து நடக்க மாத்திரமே உபயோகப்படுவதற்கு அநுகூலமாக இருந்திருக்கும் என்பதை பார்க்க கடினமாக உள்ளது. ஒரு மனித குரங்கின் முன்னங்கால்கள் குறுகலாக்கப்பட்டு ஒரு மனிதனின் புஜங்களைப்போல் மாற்றப்படுமானால் அதற்கு என்ன அனுகூலம் வருமென்பதைப் பார்க்க கடினமாக உள்ளது. இடுப்பு எலும்பு, கழுத்து எலும்புக்கு வரும் மாற்றங்களினால் மனித குரங்குக்கு வரும் அனுபவங்கள் எப்படி அனுகூலமாக இருந்திருக்க முடியும் என்பதைக் காணவும் கடினமாக உள்ளது. நான்கையும் உபயோகித்து நடப்பதை தடைபண்ணும், மாத்திரமல்ல நிமிர்ந்து இரண்டு கால்களால் மாத்திரம் நடப்பதற்கு உதவும்.

''இவைகளெல்லாம் படிப்படியாகத்தான் நடந்தன என்றும், புலப்படாத அல்லது கிட்டதட்ட புலப்படாத அளவிற்கு மனுக்குலம் பூரணப்படுவதற்கு மேலே சொல்லப்பட்ட மாற்றங்கள் வழி உண்டாக்கின என்றும் சொல்லி நாம் வற்புறுத்தப்பட்டால் மனிதனின் ஆரம்பம் தன்னாலேயே உண்டாயிற்று என்ற நிலையைக் குறித்த நம்முடைய புரிந்துகொள்ளும் தன்மைக்கு மிகவும் கடினமான நிலை அதிகரித்து வருகிறது. இந்த ஆரம்ப நிலையில் உள்ள மாற்றங்கள் பிரயோஜன மற்றவைகள் என்று சொல்லும் நம்முடைய நிலைமையை இன்னும் கஷ்டத்துக்குள்ளாக்குகிறது. பிரயோஜனமுள்ளதாக இருப்பதற்கு அவைகள் நிறைய இருந்திருக்கவேண்டும். சரீரப்பிரகாரமான, மனரீதியான மாற்றங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒத்துப்போகிற சட்டங்களோடு சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்.

''மனிதனின் தோற்றத்தைக் குறித்த மர்மம் டார்வினின் உத்தேசங்களாலோ, பரிணாமக் கொள்கைகளின் வெளிச்சத்தினாலாவது எந்த விதத்திலும் குறைந்து போகவில்லை. பூமியில் ஜனத்தொகைக்கு சேர்க்கப்பட்ட இனங்களில் மனிதன் மிக சமீபமானவன், மனம் சம்பந்தப்பட்டதில், அவன் கீழ்மட்டத்திலுள்ள மிருகங்களுக்கு மேல் உயர்ந்து இருப்பவன். மற்ற காரணத்திற்காக இல்லாவிட்டாலும் அந்த காரணத்திற்காக, தனித்து நிற்பவன் என்று பூமி அமைப்பியல் சாஸ்திரப்படி எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவன். ஒரு சரீர அமைப்போடும், உடற்கூறு கட்டமைப்போடும் அதன் செயல்முறைக்கு ஏற்ற வண்ணமாக இருக்கும்போது மனிதன் இவ்வளவு அதிக மன வளர்ச்சியை எப்படி உடையவனான் என்பதுதான் மர்மமாக உள்ளது. இம்முறைமையில் உள்ள அறிவுள்ள ஜீவிகளிலிருந்து ஊதப்பட்டவை களினால் வந்தன என்று சொல்பவர்கள், வேதாகமம் எளிமையான முறையில் சொல்லுகிறபடி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்,–தேவசாயல் என்பதை ஏற்றுக்கொள்பவர்களைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாக (மனோ) தத்துவ கஷ்டங்களை சந்திப்பார்கள்.''

“ஆழம் அறியப்படாத சுரங்கங்களில்
திறமை தவறாதிருக்க,
அவர் அவருடைய பிரகாசமான திட்டங்களைப்
பொக்கிஷமாக வைக்கிறார்,
அவருடைய சர்வ சித்தத்தை நிறை வேற்றுகிறார்.

“அவருடைய நோக்கங்கள் சீக்கிரம் நிறைவேறும்,
ஒவ்வொரு மணி நேரமும் விளங்குகிறது.
கசப்பாக இருக்கலாம் மொட்டு,
ஆனால் இனிப்பாக இருக்கும் பூ.

“குருடான அவநம்பிக்கை நிச்சயம் தவறும்,
அவருடைய கிரியையை அலசுவது வீண்.
தேவன் தானே தனது திட்டத்திற்கு அர்த்தம் கூறுகிறவராயிருந்து
அவர் அதை வெளியரங்கமாக்குவார்.”

அத்தியாயம் 2

புது சிருஷ்டி

புதுசிருஷ்டி மற்ற எல்லாவற்றிலுமிருந்து வித்தியாசமானது, வேறுபட்டது – மற்றவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளாமல் மனுக்குலத்திலிருந்து ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் – இந்த தெரிந்து கொள்ளுதலின் நோக்கம் – தற்கால, எதிர்கால காரியங்கள் – எப்படி புது நிலைமைக்கு உற்பவித்து பிறக்கிறது – அதன் எல்லா அங்கத்தினர்களுக் கிடையேயும் மற்றும் அவர்களது தலையும் தலைவரும் மணவாளனு மானவரோடும் உள்ள நெருங்கிய உறவு – அங்கத்தினர்களின் அபிவிருத்தியும் சோதனை களும் – புது சிருஷ்டி ஆவிக்குரியவைகளை பகுத்துணர்வதற்கான ஆறாவது அல்லது ஆவிக்குரிய அறிவு – தலையானவரிடம் விசுவாசமாயிருப்பதற்கும் எந்த சகோதரரிடமிருந்தும் பிரியாமலிருப்பதற்கும், எந்த நாமத்தின் மூலம் புது சிருஷ்டி அழைக்கப்பட வேண்டும்?

சுவிசேஷ யுகத்திலுள்ள சபை, ஒரு புது சிருஷ்டியென்று வேதத்தில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. ஜெயங்கொள்ளுகிற அதன் இறுதியான அங்கத்தினர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள் ''புது சிருஷ்டிகள்'' என்று விசேஷமாக குறிப்பிடப்பட்டுள்ளது. (2 கொரி. 5:17) துரதிஷ்டவசமாக, முற்றும் பிரதிஷ்டை பண்ணப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கூட, தெய்வீக வெளிப் பாட்டினால் வந்த வார்த்தைகளை கலங்கிய–தெளிவற்ற முறையில் வாசிப்பது வழக்கமாகிவிட்டது; இது அந்த வார்த்தைகள் அவர்களுக்கு முழு கருத்தை கொடுக்க தவறுகிறது; மேலும் வாசிப்பவன் அதிகமாக, முழுமையாக சீஷத்துவ ஆவியினால் நிரப்பப்பட்டு, தெய்வீக வெளிப்பாட்டை புரிந்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையுடன், தொடர்ந்து முறையாக வாசிப்பதினால் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகமான ஆசீர்வாதத்தையும் ஆறுதலையும் அறிவையும் பெறாதபடிக்கு அது பிடுங்கிக் கொள்கிறது. இவ்வளவு பெரிய கஷ்டமான நிலை

வருவதற்கு காரணம் என்னவென்றால், தேவனுடைய வார்த்தையை வாசிக்கிற சாதாரண வாசகர்கள் அந்த வார்த்தை அவர்களுக்கு போதிக்கவேண்டும் என்று எதிர்பார்க்காமல் ஒரு கடமையாக அல்லது நேரம் இருக்கும்போது கடனுக்கென்று வாசிப்பதேயாகும். அப்படி வாசிக்கும்போது அவர்களுக்கு தெய்வீக திட்டத்தைக் குறித்து ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால், உடனடியாக வேத வியாக்கியான புத்தகங்களையும் ஞான உபதேசத்தையும் தேடுகிறார்கள். இந்த வியாக்கியானங்களும் நமது ஆசிரியர்களும் சீயோனின் யாத்ரீகர்களை தெய்வீக திட்டத்திற்கும், குணாதிசயங்களுக்கும், தெளிவான அறிவிற்கும் நேராக வழி நடத்துகிற உதவிக்கரங்களாக இருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக, அநேக தடவைகளில் அவைகள் மாறாக இருக்கின்றன. அநேக நேரங்களில் அவைகள் நம் கண்ணை மறைக்கின்றன; நமது சிந்தையை குழப்புகின்றன; தேவனுடைய வார்த்தையை தவறான முறையில் காட்டுகின்றன. ஆகவே அவைகளில் நம்பிக்கை வைப்பவர்கள்,வெளிச்சத்துக்கு நேராக வழிநடத்தப் படுவதற்கு பதில் அதற்கு எதிர் மாறாக நடத்தப்படுகிறார்கள்.

இந்த தவறான வழிநடத்துதல் வேண்டுமென்றே செய்யப் படுவதில்லை என்று நாம் நினைக்கிறோம். ஏனென்றால் ஆசிரியர்களும், புத்தக ஆசிரியர்களும் தங்களிடம் இருப்பதில் சிறந்ததை வாசகர்களுக்கு அறிவிக்கிறார்கள். இந்த பிரச்சனைக்குரிய ஆரம்ப ஊற்று வெகு காலத்துக்கு முன்னதாகவே உள்ளது. 1800 வருஷங்களுக்கு முன்னதாகவே அப்போஸ்தலர்கள் ''நித்திரையடைந்தபோது'' சத்துருவாகிய சாத்தான் ஆண்டவருடைய கோதுமை நிலமான சபையில் ஓர் இடத்தை எடுத்துக் கொண்டதுடன், நமது ஆண்டவர் தீர்க்கதரிசனமாக சொன்ன உவமை பிரகாரம், தப்பறை என்னும் களைகளை ஏராளமாக விதைத்துவிட்டான். (மத். 13:24,36–43) இந்த தப்பறைகள் கிட்டத்தட்ட தெய்வீக வெளிப்பாட்டிலுள்ள ஒவ்வொரு சத்தியத்தையும் புரட்டி, திரித்துக் கூறின. இதன் பலனாக நான்காவது நூற்றாண்டு வருவதற்கு முன்னரே, ஆண்டவருடைய கோதுமை நிலம், ஒரு சிறிதளவு, குறைந்த உண்மையான கோதுமை இருக்க, அதில் மற்றவை பெரும்பாலும் களை நிலமாக ஆயிற்று. இந்த தப்பறையின் இருள் அதிகமதிகமாக சபையின் மேல் வந்து, பத்து நூற்றாண்டுகளுக்கு ''அக்கிரமத்தின் இரகசியம்'' இருந்தது; காரிருள் ஜனங்களை மூடியது; அந்த பத்து நூற்றாண்டுகளும், இன்று கிறிஸ்தவ உலகில் உள்ள

அதிகமான, கற்றுத்தேர்ந்த மனிதர்களால் ''இருண்ட காலங்கள்'' என்று முறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த காரிருளின் மத்தியில்தான் சீர்திருத்த இயக்கம் துளிர் விட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சீர்திருத்தவாதிகளின் வெளிச்சம் இருளின் மத்தியில் பிரகாசிக்கத் தொடங்கியது, ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். அந்த நாளிலிருந்து அது அதிகமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. எனினும், அந்த காரிருளிலே கற்ற அதே சீர்திருத்தவாதிகளே அதன் மூலம் ஏறக்குறைய தவறாக போதிக்கப்பட்டனர் என்பதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் அவர்கள் அந்த தப்பறைகளை உடனடியாக தங்களைவிட்டு அகற்றவில்லை. ஆகவே அவர்கள் அந்த காரிருளிலிருந்து முழுமையான, தெளிவான வெளிச்சமான தெய்வீக குணாதிசயத்திற்கும் திட்டத்திற்கும் உடனடியாக வந்திருப்பார்களானால், அது ஒரு அற்புதமேயன்றி வேறொன்றும் இல்லை என்று நாம் தீர்மானித்திருப்போம்.

கடந்த மூன்று நூற்றாண்டுகளில் சீர்திருத்தவாதிகளைப் பின்பற்றி வந்தவர்கள் மத்தியில் இருந்த கஷ்டம் என்னவென்றால் சீர்திருத்த காலத்தில் உருவாக்கப்பட்ட விசுவாச அறிக்கைகளை ஏற்றுக்கொள்வது சாலச்சிறந்தது என்று அதிலே மகிமைப்பட்டார்கள். மாத்திரமல்ல ஒளியை நோக்கி இன்னமும் முன்னேறிச்செல்வது கொள்கை விரோதமானது என்று கருதினார்கள். இதற்கு மாறாக, அவர்களும் நாங்களும் சீர்திருத்தவாதிகளை கனப்படுத்தி, அவர்களது விசுவாசத்தில் களிகூறுவதோடு, அவர்கள் சபையில் வெளிச்சமாயிருக்கவில்லை என்பதையும் அவர்கள் சபைக்கு வழிகாட்டியாகக் கொடுக்கப்படவில்லை என்பதையும் அதிகமாக சொல்லப்போனால் அவர்கள் உதவியாளர்களாக இருந்தார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். தேவனால் நியமிக்கப்பட்ட வழிகாட்டிகளில் முதலாவது நமது ஆண்டவர், இரண்டாவதாக ஏவப்பட்டு, வழிநடத்தப்பட்ட அவரது அப்போஸ்தலர்கள், மூன்றாவதாக நம்முடைய சீர்பொருந்துதலுக்காக பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்டு பேசி எழுதின தேவனுடைய பரிசுத்த மனிதர்கள். தேவன் சீர்திருத்தவாதிகளுக்கு ஒரு துளி அளவு வெளிச்சம் கொடுத்தபடியால் அவர்கள் தங்களைச்சுற்றி இருந்த அடர்ந்த இருளை அவர்கள் ஓரளவு பகுத்தறிய முடிந்தது. இந்த வெளிச்சத்தின் நிமித்தம் அவர்கள் தீவிர முயற்சி செய்து இருளிலிருந்து தப்பி நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முகத்தில்

பிரகாசிக்கிற தேவனை அறிகிற அறிவான வெளிச்சத்திற்குள்ளாக மறுபடியும் வந்தார்கள்; இந்த வெளிச்சமானது, அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும் அப்போஸ்தலர்களின் வார்த்தைகளின் மூலமாகவும் நம்முடைய கால்களுக்கு தீபமாகவும், பாதைக்கு வெளிச்சமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது; இது பூரண நாளுக்கு என்று, நீதிமான்களின் பாதையை அதிகதிகமாக பிரகாசிக்கப் பண்ணுகிறது. இப்போது யார் ஆண்டவரை பின்பற்றினாலும், வெளிச்சத்தை பின்பற்றினாலும் அவர் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது: வாய் மூலமாகவும், பிரசுர மூலமாகவும் வருகிற மனுஷருடைய உபகரணங்களையும் , அவர்களுடைய ஊழியங்களையும் ஒதுக்கிவிடாமல் இவைகளில், தேவனால் ஏவப்பட்டு வேதத்தில் எழுதப்பட்ட வேதத்தின் கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் உதவி வருகிறவைகளை மட்டுமே அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். ''வேதத்தின்படி அவர்கள் பேசவில்லை என்றால், அதற்கு காரணம் அவர்களுக்குள் வெளிச்சம் இல்லாததுதான்.''

முந்திய பாடங்களில் நம்முடைய ஆண்டவராகிய இயேசு, ''மனிதனாகிய கிறிஸ்து இயேசுவாக'' வருவதற்கு முன் ''தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக'' இருந்தார் என்று நாம் பார்த்தோம்; தேவனுடைய சிருஷ்டிப்புகளின் மத்தியில் உண்டான படிப்படியான முன்னேற்றம் அவருடைய பிரிய குமாரனால், குமாரன் மூலமாக செய்து முடிக்கப் பட்டவைகளைப் பார்த்தோம்.கேரூபீன்கள், சேராபீன்கள், பலதரப்பட்ட ஆவியின் ஜீவிகள், அவைகளைக் குறித்து சிறிதளவே நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் இப்போது பூமியின் சிருஷ்டிப்புகளைக் குறித்து பார்த்து முடித்திருக்கிறோம்; மாத்திரமல்ல தெய்வீக வெளிப்பாட்டின் வெளிச்சத்தின் மூலமாக ''உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் காலங்களில்''இவைகள் நிறைவு பெறும்போது எவ்வளவு ஆடம்பரமாக இருக்கும் என்றும் பார்த்திருக்கிறோம். நாம் இப்போது ஆராய்கிற, வேதம் நமக்கு அறிமுகப்படுத்துகிற ''புது சிருஷ்டி'' தூதகனங்களிலுமிருந்தும் மனிதர்களிலுமிருந்தும் முற்றிலும் வித்தியாசமானது, தனித்தன்மை யுடையது. பரலோக பிதா அவருடைய கிரியைகள் ஒவ்வொன்றிலும் பிரியப்பட்டிருந்தார், ஏனெனில் ''அவருடைய கிரியைகள் எல்லாம் பூரணமானது.'' சிருஷ்டிகளில் ஒவ்வொரு வர்க்கமும், ஒவ்வொரு வகையும் தன்னில்தானே பூரணமாயிருக்கிறது அல்லது முந்திய

அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி பெரிய யூபிலி அறிமுகப்படுத்தப்படும் காலத்தில் அப்படியாகும். இப்படியாக பல வகையான சிருஷ்டிப்புக்கள் சிருஷ்டிகரின் அதிருப்தியை காட்டுவதாகவும், மேலும் இதைக் காட்டிலும் நல்லதை அல்லது திருப்திகரமானதை செய்வதற்காகவும் என்று புரிந்துகொள்ளப்படக் கூடாது. ஆனால் இந்த விளக்கத்திலிருந்து தேவனின் அனந்த ஞானத்தை காண்கிறோம். பூக்களில், புற்களில், மரங்களில், மிருகங்களிடையே நாம் பார்க்கிற இயற்கையின் பலவகை இனங்கள் ஒவ்வொன்றும் அதனதன் பிரகாரம் பூரணமாக இருக்கின்றன என்பதை விளக்குகிறது. ரோஜாப் பூ மீதான அதிருப்தி, இளம் சிவப்பு நிறத்தை உண்டாக்கும்படி செய்யவில்லை, ஆனால் அவைகள் பல வகைகளில் உண்டாக்கப் பட்டிருக்கிற விதம், அழகு, மணம் ஆகியவை தெய்வீக மனதின் நீளம், ஆழம், அகலம், உயரம் ஆகியவற்றையும், பல வகைகளில் இசைவையும் காண முடிகிறது; அழகும் பூரணமும் வித்தியாசமான தினுசுகளில் உருவகங்களில் நிறங்களில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அப்படியாகத்தான் ஞானமுள்ள சிருஷ்டிகளோடு– பலவேறு நிலைகளில் உள்ள ஜீவிகளாகிய தேவபுத்திரரும் கூட இருக்கிறார்கள்.

தேவன் இன்னும் எத்தனை சிருஷ்டிகளை உண்டாக்கினபோதிலும் அவைகளுக்கிடையே பொறாமைக்கு இடமில்லை, ஏனெனில் ஒவ்வொன்றும் தன்னில்தானே பூரணமாயிருக்கிறபடியால் தான் இருக்கிற நிலையில் திருப்திகர மாயிருக்கும், அல்லது தான் வேறொரு சிருஷ்டியாக இருக்கவேண்டும் என்று நினைக்காது. உதாரணமாக மீனானது ஒரு பறவையாக இருப்பதைக்காட்டிலும் மீனாக இருப்பதிலேயே திருப்திகரமாயிருக்கும், இன்னும் சொல்லப்போனால் பறவை அதன் சுபாவத்திலேயே திருப்தியாயிருக்கிறது. ஆகவே மனுக்குலம் ஏதேன் தோட்டத்தின் நிலைமைக்கு பூரண மனிதனாக புதுப்பிக்கப்பட்ட பின்பு, அந்த நிலைமையிலேயே திருப்தியாவார்கள்; ஆகவே அவர்கள் எந்த தேவதூத வகுப்பாரின் நிலைமையையும் இச்சிக்கமாட்டார்கள்; மாத்திரமல்ல புது சிருஷ்டிக்கு கொடுக்கப்பட்ட, எல்லாவற்றிற்கும் மேலான சுபாவமான ''திவ்விய சுபாவத்தை'' (2பேது.1:4) இச்சிக்க மாட்டார்கள்; தூதர்களும் கேரூபீன்கள், சேராபீன்கள் மனிதனுடைய நிலைமை அல்லது சுபாவத்தை இச்சிக்கமாட்டார்கள்– தெய்வீக சுபாவத்தையும் இச்சிக்கமாட்டார்கள். எல்லாம் கடைசியில் தெய்வீக சுபாவமே எல்லாவற்றிற்கும் மேலானது

என்பதையும், அதனுடைய குணங்களும் நிலைமைகளும் மற்ற எல்லா சுபாவத்திற்கும் மேலானது என்பதையும் புரிந்து கொள்வார்கள்; இருந்த போதிலும் தெய்வீக ஒழுங்குக்கு கீழாக ஒவ்வொரு சுபாவத்தை உடைய ஜீவியும் தன் சொந்த நிலைமையிலும், சூழ்நிலையிலும், பூரணத்திலும், இசைவாக இருப்பதால், தான் இருக்கிற நிலைமையிலே திருப்தியோடு காணப்படும்.

திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும்படியாகவும்(2பேது. 1:4) அவருடைய ''மகிமை, கனம், அழியாமையில்''(ரோம.2:7) பங்குள்ளவர்களாகும்படியாகவும், யேகோவா தேவன் புதிய சிருஷ்டியை தீர்மானித்த போது, ஒருவராகிலும் இவ்வளவு பெரிய ஸ்தானத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டு அதன் பின்னர் சோதனைக்குட்படுத்துவதைவிட, அதற்கு மாறாக இந்த புதிய சிருஷ்டியின் அங்கத்தினர்களாக யாரெல்லாம் நியமிக்கப் படுகிறார்களோ, அவர்கள் முதலாவது சோதனைக் குட்படுத்தபட வேண்டும்; மாத்திரமல்ல, இவ்வளவு பெரிய ஸ்தானமாகிய புதிய சிருஷ்டியின் திவ்விய சுபாவத்துக்கு உயர்த்தப்படுவதற்கு முன்னர் அவர்கள் தங்கள் விசுவாசத்தை தங்கள் சிருஷ்டிகருக்கும், அவருடைய நீதியுள்ள அரசாட்சியின் கோட்பாடுகளுக்கும் நிரூபித்துக்காட்ட வேண்டும் என்று திட்டம் பண்ணினார். ஆதியிலே சிருஷ்டிப்பின்போது மனுக்குலம் இருந்த பரிபூரண நிலைமையான நித்திய ஜீவனுக்கு மனிதன் தகுதியாகும்படிக்கு எப்படி மனிதனுக்கு சோதனையும் பரீட்சையும் ஒழுங்கு பண்ணப்பட்டிருக்கிறது என்பதையும், அவனுடைய வீழ்ச்சி, அவனுடைய மீட்பு, தகுதியாக காணப்படுகிற அவனது சந்ததியினர் எப்படி இழந்ததைத் திரும்ப பெறுவார்கள் என்பதையும் நாம் இப்போது பார்த்தோம். தூதர்கள் பரிசுத்தத்திலும், அவர்களுடைய தன்மையில் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டு, தொடர்ந்து சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டார்கள் என்பதையும் கூட நாம் இப்போது பார்த்தோம்; இதே செயல்முறையை திவ்விய சுபாவமுள்ள புதிய சிருஷ்டிகளோடு சம்பந்தப்படுத்தும் போது (இந்த தன்மையில் பரிபூரணத்துக்கேதுவான அவர்களுடைய சிருஷ்டிப்பும் தொடர்ந்து வந்த அவர்களுடைய சோதனையும்) சரி வராதது ஏன்? திவ்விய சுபாவத்தின் முக்கியமான ஒரு குணம் சாவாமையாகும். மேலும் இந்த வார்த்தை மரணமற்ற நிலை என்று அர்த்தப்படுத்தும்போது, எந்த ஒன்றும் திவ்விய நிலையில் சாவாமையில், மரணமற்ற நிலையில் சிருஷ்டிக்கப்பட்டு, அதன் பின் சோதிக்கப்

படும்போது, பரீட்சிக்கப்படும் போது தேவனுக்கு முற்றிலும் உண்மையுள்ளவர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிற தகுதிக்கு வரத்தவறிவிட்டால், அவர்கள் சாவாமையுள்ள குற்றவாளிகளாக இருப்பார்கள்; அவர்கள் அழிக்கப்பட முடியாதவர்களாக, நித்தியமாக வாழ்க்கை முழுவதும் குற்றவாளிகளாக பாவிகளாக, தேவன் நோக்கினபடியே காலக்கட்டத்தில் பூமியின் அழகிய படைப்பின் மேல் அனேக கறைதிறைகளோடு காணப்படுவதை நாம் எளிதில் பார்க்க முடிகிறது. தேவனுடைய சிருஷ்டிப்புகள் எல்லாவற்றிலும் மிகவும் போற்றப்படத்தக்க வகுப்பினரை, அவர்கள் இன்றும் அநித்தியமுள்ள வர்களாக, மரணத்திற்கேதுவானவர்களாக, இன்னொரு சிருஷ்டிப்பின் அங்கத்தினர்களாக இருக்கும்போது, அவர்களை கடுமையாகவும், மிக முக்கியமாகவும் சோதிப்பதற்கு தேவன் தெரிந்தெடுத்துக்கொண்ட அவரது ஆழமான, ஞானமுள்ள திட்டத்தை நாம் பார்க்கிறோம்.

மாபெரும் சிருஷ்டிகரோடு நாம் நம்மை அவருடைய ஆத்ம நண்பர்களாக மனதில் எண்ணிக்கொண்டு இந்த புதிய சிருஷ்டிகளுக்கான தெய்வீக ஒழுங்கு முறையின் தத்துவத்தை யோசித்து பார்க்கும்போது, யேகோவா தேவன் இந்த புதிய சிருஷ்டியைக் குறித்து தனக்குள்ளாக பின்வருமாறு சிந்திப்பதை நாம் கற்பனை பண்ணி பார்க்கக்கூடும்: இந்த மகத்துவமான முறைமைக்கு அல்லது வகுப்புக்கு மறுரூபமாகும்படியான மேன்மையான சிலாக்கியத்தை எந்த வகுப்பைச்சேர்ந்த தேவபுத்திரருக்கு அருளுவேன்? மனிதன், தூதர்கள், சேராபீன்கள், கேரூபீன்கள், பிரதான தூதன் ஆகிய எல்லா வகுப்பினரும் என் சாயலிலேயே இருக்கிறார்கள்; என்னுடைய திட்டம் முற்றுப்பெறும் நிலையை வந்தடைந்து, பரீட்சை எல்லாம் முடிவுபெறும்போது, ஒவ்வொரு வகுப்பினரும் தன்னுடைய சொந்த ஸ்தானத்தில் பூரணராக இருந்து மிகுந்த சந்தோஷத்தில் இருப்பார்கள். ஆனால் அவர்களில் யாருக்கு திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாகும் சாலச்சிறந்த ஆசீர்வாதங்களையும், சந்தர்ப்பங் களையும் நான் கொடுப்பேன்? ஏற்கனவே உயர்ந்த சிருஷ்டியாகவும், எண்ணிக்கைக்கு அடங்காதவர்களில் முதன்மையானவராகவும், அவருக்கு அடுத்தபடியாக, வல்லமையுள்ள தேவனாகவும் இருக்கிறவரும், (அவர் மூலமாக எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்,) தன்னுடைய பிதாவும் சிருஷ்டிகருமானவருக்கு எல்லா வகையிலும் உண்மையையும் விசுவாசத்தையும் காட்டியவருமாகிய இயற்கையாகவே முதற்பேறானவர்தான், பிதாவின் மனதில் உடனடியாக வருவார். ஆகவே

முதலாவதாக அவருக்கே திவ்விய சுபாவத்தையும், அதன் மகிமையையும், கனத்தையும், சாவாமையையும் அடைகிற சந்தர்ப்பம் கொடுக்கப்படும். ''சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருப்பதும்,'' ''எல்லாவற்றிலும் முதல்வராயிருப்பதும்'' தேவனுக்கு பிரியமாயிற்று. (கொலோ.1:18,19)அவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருந்தார். அதில் அவர் உண்மையுள்ளவராயிருந்தபடியால் பிதா கொடுக்கவேண்டிய எல்லா மேலான கனத்திற்கும் உயர்ந்த ஸ்தானத்திற்கும் முன்னேறும் படியாக இயற்கையாகவே முதலிடத்தில் இருந்தார். இருப்பவனுக்கு கொடுக்கப்படும், இன்னும் அதிகமாக அவன் பெற்றுக் கொள்வான். உண்மையாயிருத்தல் அதற்குரிய வெகுமதியை பெற்றுக்கொள்ளும் என்றபோதிலும் உண்மையாயிருப்பவர் சோதனைகள், அனுபவங்கள், மேலும் மிக முக்கியமான ஒழுங்கு நியதிக்குள்ளாக கடந்து சென்றாக வேண்டும். ஒரு குமாரனாக இருந்தாலும், மிக அதிக விசுவாசமுள்ள குமாரனாக இருந்தாலும், மிக அதிக பட்சமுள்ள குமாரனாயிருந்தாலும் அவரது நம்பிக்கையும் விசுவாசமும் மிக முக்கியமாக சோதனைக்கு உட்படாவிட்டால், திவ்விய சுபாவத்தில் அவர் ஒரு பங்கை பெற்றுக்கொள்ளமுடியாது.

மனிதன் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னதாக தெய்வீக ஆலோசனையில் ஏற்கனவே புதிய சிருஷ்டியின் வரைபடமும், ஒரே பேறானவர் தன்னுடைய தகுதியை நிரூபிப்பதற்காக, சோதனைகள், நெறிமுறைகள், அவமானங்கள், மற்றும் தேவையான வேறு அனுபவங்களுக்குட்பட்டு, புதிய சிருஷ்டியின் தலையாகவும் முதல்வரானவராகவும் தெரிந்தெடுக்கப்படுவதும் தீர்மானிக்கப் பட்டிருந்தது. தன்னுடைய சிருஷ்டிப்பான மனுக்குலம் விழுந்துபோகும் என்பது முன்னதாகவே தேவனுக்கு தெரிந்திருந்தது. அவனுடைய தண்டனையானது மரணமாக இருக்க வேண்டும் என்பதையும் தீர்மானித்திருந்தார். தன்னுடைய ஒரே பேறானவர்மேல் சுமத்தும் பரீட்சையின்படி அவர் தன் சுயசித்தத்தினாலே மனுக்குலத்தின் மீட்பராவார். இது மாபெரும் தியாகமாக தோன்றுவதின் மூலம் அவர் பிதாவுக்கு தன்னுடைய விசுவாசத்தையும் அவரில் வைத்திருக்கிற நம்பிக்கையையும் வெளிப்படுத்துவார் என்பதை முன்னமே ஒழுங்குபடுத்தியிருந்தார். இவ்விதமாக தெய்வீக திட்டத்தில் ''உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே இவர் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக'' இருந்தார். இம்மட்டுமாக மனிதனின் மீட்பராக

பலவந்தப்படுத்தப்படாமல், இவ்விஷயத்தில் குமாரன் மேல் அநீதியைக் கைக் கொள்ளாமல், அவர் தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், வல்லமைகளுக்கும், பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக உயர்த்தப்படும்படியாகவும், அவருடைய திவ்ய சுபாவத்தில் பங்கு பெறும்படியாகவும், அவரோடுகூட சிங்காசனத்தில் உட்காரும்படி யாகவும் பிதாவின் ஆயத்தத்தை இந்நிலையிலிருந்து நாம் பார்க்கிறோம். (எபி.1:4; எபே.1:21)

*நம்முடைய ஆண்டவர் நம்முடைய மீட்பராகும்படியாக ''அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு'' (எபி.12:2) என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவதைப் பார்த்து இந்நிலையிலிருந்து நாம் ஆச்சரியப்படமுடியாது. இந்த சந்தோஷமானது மற்ற எல்லா சிருஷ்டிக்கும் மேலான புது சிருஷ்டியின் உன்னதமான இடத்தை எதிர்பார்த்து மாத்திரம் அல்ல, ஆனால் அதன் ஒரு பகுதியாக இருந்தது என்று நாம் நியாயமாக யூகிக்கலாம். இருந்த போதிலும், சோதனைக்குள்ளாக கடந்து செல்லும்போது நம்முடைய மீட்பர் பிதாவை நோக்கி ஏறெடுத்த ஜெபத்தை நாம் கவனிக்கும் போது, அவருடைய குணத்துக்கே உரித்தான பணிவுடன் அவர், அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட, எதிர்பார்க்கப்பட்ட, மாபெரும் கனத்தையும், மகிமையையும், அழியாமையையும் குறிப்பிடவில்லை; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா.1:3) என்றபடி ஏற்கனவே கனப்படுத்தப்பட்ட பிரதிநிதியாக இருந்தபடியால், தெய்வீக திட்டத்தின் மற்றைய பகுதிகளை நிறைவேற்றும் பிரதிநிதியாக பிதாவினால் தெரிந்தெடுக்கப்பட்டிருந்ததே கனத்துக்குரியது என்று எண்ணியதுபோல அருமையான எளிமையுடனும், தாழ்மையுடனும், தன்னுடைய முந்திய நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று வேண்டினார்.''பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்'' (யோவா.17:5) என்பதே அவருடைய எளிய வார்த்தைகளா யிருந்தன. ஆனால்,''அப்பொழுது மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப் படுத்துவேன்'' (யோவா.12:28) (*Vatican MS*) என்ற பிதாவின் பதில் அர்த்தம் நிறைந்ததாயிருந்தது.*

ஆனாலும் மேற்கொண்டு பிதாவானவர், புது சிருஷ்டியானது ஒரு தனி நபரை மாத்திரம் கொண்டுள்ளதாக இல்லாமல், அந்த நபர் ''சகோதரர்களை'' (எபி.2:17) உடையவராக இருக்க வேண்டும் என்று தனக்குள் யோசித்தார். யார் இந்த சகோதரர்களாக இருக்க வேண்டும்? எந்த வகுப்பாரிலிருந்து அவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்? கேரூபீன்களிலிருந்தா? சேராபீன்களிலிருந்தா? தேவதூதர்களிலிருந்தா? அல்லது மனிதரிலிருந்தா? எந்த வகுப்பிலிருந்தாலும், ஒரே பேறானவர் கடந்து சென்ற அதே சோதனைகளுக்கும் அவர்கள் உட்புகுத்தப்படல் வேண்டும்; ஏனென்றால் அவர்கள் அவருடைய மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கு பெறவேண்டும். அவர்மேல் வந்த சோதனை கீழ்ப்படிதல்– எல்லாவற்றிலும் மரணபரியந்தம் கீழ்ப்படிதல் (பிலி.2:8) ஆகும். ஆகவே புது சிருஷ்டியாக அவரோடு கூட திவ்விய சுபாவத்தில் பங்கு பெறுகிறவர்கள், அவரோடு, சோதனைகளிலும், துன்பங்களிலும், பரீட்சைகளிலும் பங்கு பெற்று மரணபரியந்தம் உண்மையுள்ளவர்கள் என்று நிரூபிக்க வேண்டும். இது தேவதூதர்களின் வகுப்பைச் சேர்ந்த யாருக்காவது சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், இப்போது நிறைவேறிக்கொண்டிருக்கிறதாக நாம் பார்க்கிறதைக் காட்டிலும் ஒரு வித்தியாசமான தெய்வீக திட்டத்தின் செயல் முறை என்று அர்த்தப்பட்டிருக்கும். பரிசுத்த தேவதூதர்கள் பாவம், மரணம் ஆகியவற்றின் தொடர்பின் மூலமாக அல்ல, உற்றுகவனிப்பதின் மூலம் தங்களுடைய அனுபவத்தையும், அறிவையும் பெற்றுக்கொண்டிருக் கிறார்கள் என்று நாம் பார்த்திருக்கிறோம். தேவதூதர்களில் சிலர் மரிக்க அனுமதிக்கும் அளவிற்கு ஒரு நிலைமை உண்டு என்று எண்ணும் போது, அது தேவதூதர்கள் மத்தியில் உண்மையான ஒரு பாவ நிலையையும், இப்படியான மரண நிலையைக் கொண்டு வருவதற்காக, ஒருவரையொருவர் உபத்திரவப்படுத்துவது போன்றவைகளையும் காட்டுகிறது; ஆனால் சில தூதர்கள், நம்முடைய ஆண்டவர் செய்த பிரகாரம், அவர்களுடைய உன்னத நிலையை ஒரு பக்கம் வைத்துவிட்டு, மரணத்தின் பாடுகளை அனுபவிக்கும்படி மனிதர்களாக ஆக வேண்டும். தேவன் இந்த திட்டத்தைக் கைக்கொள்ளவில்லை. ஆனால் அவரது நோக்கத்தில் பாவமும் அதன் தண்டனையாகிய மரணமும் மனுக்குலத்தில் விளக்கப்பட வேண்டும் என்று இருந்தபடியால் அவர் புது சிருஷ்டியில் எஞ்சியவர்களை மனுஷர் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்க தீர்மானித்தார். மனுஷர் மத்தியில் வழக்கத்திலிருக்கிற பாவம், மரணம் என்ற

மனுக்குலத்தோடு சம்பந்தப்பட்ட பரீட்சைகள் முதற்பேறானவருக்கு மாத்திரமல்ல, இதுபோல் புது சிருஷ்டியில் அவருடன் உடன் சுதந்திரராய் இருப்பவர்களும் இதையொத்த சந்தர்ப்பங்களையும், அனுபவங் களையும், பரீட்சைகளையும் பெற்றுக்கொள்வார்கள். இப்படியாக இயேசு என்று அழைக்கப்படுகிற முதற்பேறானவர், பின்னர் கிறிஸ்து, அபிஷேகம் பண்ணப்பட்டவர், புதிய சிருஷ்டியின் மற்ற அங்கத்தினர் களுக்கு ஒரு மாதிரியாகவும் முன்மாதிரியாகவும் ஆவார். அவர்களில் எல்லாரும் ''குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு'' (ரோம.8:29) அவருடைய குணாதிசயங்களுக்கு ஒத்ததாய் ஆவார்கள். எங்கும் காண்பதைப்போல இங்கும் தெய்வீக திட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஓர் ஒழுங்கைக் காண்கிறோம். பாவம், மரணம் ஆகியவற்றின் செயல்பாடு சிருஷ்டிப்பின் ஒரு பகுதியில் இருப்பது போதுமானது. அது மனிதனுக்கு பெரிய பாடமாகவும், பரீட்சையாகவும், தேவதூதர்களுக்கு ஒரு பெரிய உத்தேச பாடமாகவும் மட்டுமல்லாது, புது சிருஷ்டியின் ஒரு பங்குக்கு தகுதியுள்ளவர்கள் என்று எண்ணப்படுபவர்களுக்கு ஒரு முக்கிய பரீட்சையாகவும் நிரூபணமாகிறது.

புதிய ஏற்பாட்டின் எழுத்துக்கள்–இயேசு, மற்றும் அப்போஸ்தலர் களின் உபதேசங்கள்– இந்த ''புது சிருஷ்டி''வகுப்பினருக்காக அல்லது இந்த வகுப்பிற்குள் வருவதற்கு தேவைப்படும் விசுவாசப்படிகளையும் கீழ்ப்படிதலையும் சிந்தித்துக் கொண்டிருப்பவர்களுக்காக எழுதப் பட்டிருக்கிறது என்கிற இந்த உண்மை, அநேகரை வேதத்திற்கு மாறாக, தேவனுடைய நோக்கங்கள் மனுக்குலம் அனைத்திற்கும் ஒரே மாதிரியானது என்று யூகிக்கப் பண்ணியிருக்கிறது; இந்த யூகம் அவர்களை இந்த சுவிசேஷ யுகத்தின் அழைப்பு விசேஷமாக ஒரு ''உன்னத அழைப்பு'' அல்லது ''பரம அழைப்பு'' (பிலி.3:14; எபி.3:1) என்று குறிப்பிட்டிருப்பதை கவனிக்க தவறப் பண்ணியிருக்கிறது; முழு உலகத்தின் இரட்சிப்புக்காக தேவன் ஒரு திட்டத்தையும், இந்த சுவிசேஷயுக சபையின் விசேஷித்த இரட்சிப்புக்காக கொஞ்சம் வித்தியாசமான ஒரு திட்டத்தையும் வைத்திருந்தார், இன்னும் வைத்திருக்கிறார் என்பதையும் உணர்ந்து கொள்ள தவறியது; இது வேத வியாக்கியானம் பண்ணுகிறவர்கள் மத்தியில் மனக்குழப்பத்திற்கு வழி நடத்தியிருக்கிறது. மேலும் அவர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பினர், மற்றும் அவர்கள் பெற இருக்கிற ஆசீர்வாதங்களுக்கும், அதைக் காட்டிலும் அதிகமாயிருக்கிற தெரிந்தெடுக்கப்படாத வகுப்பினர்,

மற்றும் அவர்கள் ஏற்றகாலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பினர் மூலமாக பெற இருக்கிற ஆசீர்வாதத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்ள முடியாதிருக்கிறார்கள். தெரிந்தெடுத்தல் முற்றுப்பெறும்போது தேவனுடைய திட்டம் முற்றுப்பெறும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அது மனித சுபாவத்திற்கும், பொதுவான உலகத்திற்கென்று வரையறுக்கப்பட்ட இழந்து போன இரட்சிப்பை– இதைப் பெற்றுக்கொள்பவர்கள் எத்தனை பேரோ, அவர்கள் அனைவரும் தேவனுடைய நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக் கொள்வார்கள் – திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான ஆரம்பம் தான் என்று அவர்கள் நினைப்பதில்லை.

சபையானது ஒரு புதிய சுபாவமாகிய தெய்வீக சுபாவத்திற்கும், உலகமானது மறுபடியும் பழைய மாம்சீக பூரண நிலைக்கும் கொண்டுவரப்படுவதை குறித்து, வேதங்களைக் கற்றுக் கொடுக்கிற ஆசிரியர்கள், கொண்டுள்ள நிச்சயமற்ற எண்ணமும், இரண்டு இரட்சிப்புகளுக்கிடையே வித்தியாசத்தை புரிந்து கொள்ள தவறியதுமே, இந்த இரண்டு இரட்சிப்புகளைப்பற்றிய மனதில் அதிகமான குழப்பத்திற்கும், அதிகதிகமான கருத்துக்களுக்கும் வழி நடத்திற்று; ஆகவே இப்போது இரட்சிக்கப்பட்டவர்களைக் குறித்து ஒரு முறை ஒரு விதமாகவும், மறுமுறை வேறுவிதமாகவும் நினைக்கிறார்கள். சிலர் அவர்களை ஆவிக்குரிய ஜீவிகளாக நினைக்கிறார்கள், பேசுகிறார்கள்; இன்னமும் மனிதர்களைப்போல அந்த ஆவிக்குரிய ஜீவிகள் மகிமையிலே, கனத்திலே, சாவாமையில் உள்ளதுபோல் குழப்புகிறார்கள்; மேலும் ஆவிக்குரிய நிலையில் அவைகள் சதை, எலும்புகள் ஆகியவைகளை பெற்றிருப்பதைபோல கற்பனை செய்கிறார்கள். மற்றவர்கள் ‘‘ஆவிக்குரிய’’ என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல், பூமி சொர்க்கமாக புதுப்பிக்கப் படுவதை மையத்தில் வைத்து, ஆண்டவரும், பரிசுத்தவான்களும் அதில் அவர்கள் எண்ணுகிற பிரகாரம் ஆவிக்குரிய சரீரத்தில் வசிப்பதாகக் கற்பனை செய்கிறார்கள். இல்லையென்றால், ஆவிக்குரிய சரீரம், ஆவிக்குரிய நிலைமைக்குப் பொருத்தமாக இருக்கும் போது, மாம்சீக நிலைமைகள் அல்லது வஸ்துக்களால் மாத்திரமே தடயங்கள் உண்டாகும்; ஆகவே அதுபோலவே மாம்சீக அல்லது பூமிக்குரிய சரீரமானது பூமிக்குரிய நிலைமையோடு சரியாகப் பொருத்தமாக இருக்கும் போது அது எந்த அளவிற்காவது ஆவிக்குரிய பிரகாரமாக

மாற்றப்பட்டால், அது பயங்கரமானதாக தெய்வீக நோக்கத்திற்கு மாத்திரமல்ல மனித சுபாவத்திற்கும் பொருத்தமற்றதாக இருக்கும்.

புது சிருஷ்டியைப் புரிந்து கொள்வது மூலமாக மட்டுமே தெய்வீகத் திட்டத்தின் அழகையும் பொருத்தங்களையும் தெளிவாகக் காணமுடியும்; அதன் அங்கத்தினர்களாக இருக்கக்கூடியவர்கள், மாம்சீக தன்மையிலிருந்து, வித்தியாசமாக வேறுபட்டு இருக்கவேண்டும் என்று தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கென ஒரு ''பரம அழைப்பு'' அல்லது ''உன்னத அழைப்பு'' இருக்கிறது; மேலும் தங்கள் சொந்த அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்து வதோடு தாங்கள் தெரிந்துகொள்ளப்படுவதற்காக விட்டுவந்த அந்த மனுக்குலத்திற்குச் செய்யவேண்டிய இரண்டு விதமான வேலைகள் உண்டு.

1. அவர்களுடைய விசுவாசத்தினிமித்தமும் உலகத்தாரின் குருட்டாட்டத்தினிமித்தமும், உலகத்தாரின் கரங்களில் பாடுகளை அனுபவித்துக்கொண்டும், தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரை சேகரிக்கும் தேவனின் பிரதிநிதியாக இருந்து கொண்டும், ஒப்புரவாகுதலின் ஆசாரியத்துவத்தின் அங்கத்தினர்களாக இருந்து காலத்திற்குரிய செய்தியை உலகுக்கு வழங்குவது;

2. அவர்கள் தங்கள் ஆண்டவரும் தலைவருமானவரோடு சேர்ந்து ஒரு தெய்வீக, இராஜரீக, ஆவிக்குரிய ஆசாரியத்துவத்தை ஏற்படுத்துவார்கள். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தம் பண்ணவும், மனிதனின் அறிவுரைக்காகவும், இழந்து போனவைகளை திரும்பப் பெற்றுக்கொள்வதற்காகவும் தெய்வீகத் திட்டத்தின்படி மனிதர்களின் மத்தியில் ஒரு நீதியின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும், ஜாதிகளுக்குள் கீழ்ப்படிகிற ஒவ்வொரு அங்கத்தினரையும் திருத்தும்படியாகவும், உயர்த்தும்படியாகவும், உலகத்தாரின் நலன்களும் காரியங்களும் அவர்கள் கையில் ஒப்படைக்கப்படும்.

உலகத்தை ஆளுகை செய்யவும், ஆசீர்வதிக்கவும் தெய்வீக நோக்கத்திற்கு மிகப் பொருத்தமான வேறு எந்த வகுப்பினரும் இல்லை என்பதை உடனடியாகக் காண முடிகிறது. அவர்கள் முன்பு ''மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாக'' மனுக்குலத்தோடும், மனுக்குலம் பாவத்தினிமித்தமாகவும், இயற்கையான பலகீனங்களினாலும் சந்திக்கிற பலகீனங்கள்,

பூரணமின்மை, நெருக்குதல்கள், மற்றும் சோதனைகள் போன்ற இயல்பான தன்மைகளோடும் முழுவதுமாக அனுபவப்பட்டிருக் கிறார்கள். மேலும் இது அவர்களை மிதமான ஆளுனர்களாகவும், இரக்கமுள்ள ஆசாரியர்களாகவும் ஆயத்தம் பண்ணுகிறது; ஏனென்றால் அவர்கள் திவ்ய சுபாவத்தில் பரிபூரணம் பெறும்போது, அவர்களை உலகத்தின் நியாயத்தீர்ப்பின் நாளிலே (தொகுதி 1, அத்தி. 8 – நியாயத்தீர்ப்பின் நாள் பார்க்க) உலகத்தின் நீதிபதிகளாக தங்கள் தீர்மானங்கள் எல்லாவற்றிலும் முழுமையாக உண்மையுள்ளவர் களாகவும், அன்புள்ளவர்களாகவும் இருக்க தகுதியுள்ளவர்களாகவும் ஆக்குகிறது.

ஆனாலும், இந்த மாபெரும், முக்கியமான வேலையான உயர்த்துதல், ஆளுகை செய்தல், ஆசீர்வதித்தல், மேலும் மனுக்குலத்தின் உலகையும், விழுந்துபோன தேவதூதர்களையும் நியாயந்தீர்த்தல் ஆகிய இவையெல்லாம், ஒரு வேலையாக, திவ்ய சுபாவம் உள்ள புது சிருஷ்டிகளிடத்தில் விசேஷமாக ஒப்படைக்கப்படும். அவர்கள் இந்த வேலையை செய்யும்போது, பூலோகத்தில் உள்ள எவரும் அவர்களைப்போன்று இவ்வளவு நல்ல ஆயத்தத்துடன் இருக்கமுடியாது. (ஏனென்றால், அவர்கள் அதற்கென்று தெய்வீக வழிநடத்துதலின்படி நன்றாக பயிற்சிக்கப்பட்டு ஆயத்தம் பண்ணப்படுகிறார்கள்). இருந்த போதிலும், எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் செய்யவேண்டிய காரியமோ, வேலையோ இதுமாத்திரம் அல்ல. இதற்கு மாறாக, ஆயிரம் வருஷ அரசாட்சி இந்த புதிய சிருஷ்டிகளின், மகிமை, கனம் மற்றும் சாவாமையின் அப்பியாசத்தின் துவக்கத்தை மாத்திரம் குறிக்கும். அது நிறைவடையும் போது, இராஜ்யமானது தேவனும் பிதாவுமாய் இருப்பவருக்கும், பிதாவின் மகிமை பொருந்திய பிரதிநிதிகளாய் இருக்கிற மனுக்குலத்திற்கும், அரசாட்சி செய்ய பூமி கொடுக்கப் படும்போது, அவர்களுடைய மகிமை, கனம், மற்றும் சாவாமையையும் அப்பியாசப்படுத்தும்படி இன்னும் அதிக வரம்பு, புதிய சிருஷ்டிகளுக்கு முன்பாக உண்டாகும். ஏனெனில் பரமபிதா தன்னுடைய ஒரே பேறான குமாரனை அவருடைய திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவராக ஆக்கியது மாத்திரமல்ல, அவரோடு கூட சிங்காசனத்தில் பங்குள்ளவராகவும் ஆக்கினார் என்றும், பிதாவும் குமாரன் தன்னுடைய சிங்காசனத்தில் உட்காரும்படி செய்தார் என்றும் எழுதப்பட்டிருக்கவில்லையா? (வெளி.3:21) ஒரு விதத்தில், தன்னால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட

பூமியையும் அரசாட்சியையும் சிறந்த முறையில் பராமரிக்கும்படி, அவருடைய அந்த உத்தியோக நிலைமையை விட்டு வந்தாலும், இன்னொரு விதத்தில், பிதா, குமாரனுக்கு அவர் செய்யவேண்டும் என்று கொடுத்த வேலையை செய்துமுடித்து விட்ட பின்னர் எவ்விதத்திலும் மகிமை குறைந்தவராக இருப்பார் என்றோ, அல்லது நமக்காக பாவத்தின் தண்டனையை செலுத்திய பின்பு உன்னதத்திற்கு ஏறிச்சென்றபோது அவருக்கு அளிக்கப்பட்டதை விட எவ்விதத்திலும் கனம் குறைவான நிலைமையில் இருப்பார் என்றோ நிச்சயமாக அர்த்தப்படாது.

''எல்லாவற்றிற்கும் மேலாக சுதந்திரவாளியாக நியமிக்கப் பட்டிருக்கிறவரும்,'' தன்னுடைய ஒரே பேறானவருமாகிய அதிகப் பிரியமுள்ள குமாரனுக்கு முன்பாக, நம்முடைய சிருஷ்டிகர், எதிர்காலத்தில் எப்படிப்பட்ட பெரிய வேலைகளை வைத்திருக்கிறாரோ நமக்கு தெரியாது. ஆனால் நாமோ, மகிமை அடையும் போது அவரைப்போல் இருப்போம், மேலும் அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசிப்போம், அவருடைய மகிமையிலே பங்கடைவோம், ''அப்படியாக அவரோடு கூட நித்திய காலமாக இருப்போம்'' என்ற, நம்முடைய ஆண்டவரின் உதடுகளிலிருந்து வந்த வாக்குத்தத்தம் நமக்குரியது என்று அறிந்திருக்கிறோம். ஆகவே எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியாக, ஒரேபேறானவராக இருக்கிறவருடைய எதிர்காலக் கிரியைகள் எப்படிப்பட்டதாயிருந்தாலும் நாம் அவரோடு இருப்போம், அவருடைய கிரியையில் பங்கடைவோம், மேலும் அவருடைய மகிமையிலும், சுபாவத்திலும் பங்குபெறுவோம். தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையானது, இந்த அளவுக்கு நம்மை சுமந்து வந்திருக்கும்போது, இயற்கையை தெய்வீக வெளிச்சத்தில் உற்றுப் பார்ப்பது அவமரியாதை ஆகாது. நம்மை சுற்றி எல்லா திசைகளிலும் இருக்கிற பல்வேறு கிரகங்கள் அல்லது உலகங்களை புரிந்து கொள்ள தேவனுடைய வார்த்தையை தூரதிருஷ்டி கண்ணாடியாக உபயோகிக்கும்போது, அவைகள் வியர்த்தமாக உருவாக்கப்படவில்லை என்பது புலனாகிறது. மேலும் ஒரு காலக் கட்டத்தில், இவைகளில் சிருஷ்டிப்பின் கிரியைகள் இருக்கும்; காலம் வரும்போது, எல்லா வற்றிலும் சிரேஷ்டமாக இருந்தவர், தொடர்ந்து சிரேஷ்டமானவராக இருப்பார், எத்திசையிலும் உள்ள தெய்வீக சேனைகளுக்கு இன்னமும் முதன்மையானவராக இருப்பார். நம்முடைய உலகமான பூமியின் பாவ அனுபவங்கள், மற்ற கிரகங்களில் திரும்ப நடைபெறும் என்று நாம்

எதிர்பார்க்கத் தேவையில்லை; ஆனால் அதற்கு மாறாக, அளவுக்கதிக மான நிறைவான பாவமும், அதன் பயங்கரமான விளைவுகளும் ஆண்டவரால், மற்ற உலகங்களில் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட இருக்கிறவர்களுக்கு நிரந்தரமான ஒரு பாடமாக உபயோகிக்கப்பட முடியும், உபயோகிப்பார்; அவர்கள் அனுபவத்தின் மூலமாக அல்ல, ஆழ்ந்து நோக்குவதாலும், போதனையினாலும் கற்றுக்கொள்வார்கள்.

சாத்தானும் அவனுடைய எல்லா ரகசிய தூதர்களும், எல்லா துன்மார்க்கர்களும், நாசம் போக்கும் சக்தியும் அழிக்கப்பட்டு– மகிமையடைந்த அனுபவ ஞானமுள்ள சபை, மற்ற உலகங்களில் உள்ள பரிபூரண பிறவிகளுக்கு கற்றுக் கொடுக்கும்படியாக– ஒருவேளை பூமியிலிருந்து எடுக்கப்பட்டு, பாவத்தின் தொடர்பினால் பெற்ற அனுபவத்தாலும் அறிவாலும் நிறைந்த ஆசிரியர்களாக, ஆண்டவருடைய உயர்த்துதலினாலும், ஆசீர்வாதத்தாலும் சரியானது, தவறானதைக் குறித்தும், மேலும் அவர்களுடைய வெகுமதியைக் குறித்தும் எவ்வளவு ஞானம் உள்ளவர்களாவார்கள்! அவர்களுடைய ஆசிரியர்கள் மனுக்குலத்தின் மாபெரும் எதிராளியாகிய சாத்தானின் மகா கலகத்தைக் குறித்த விபரங்களையும், பாவத்திலும் துன்பத்திலும் மனுக்குலத்தின் பயங்கரமான வீழ்ச்சியையும், அதிலிருந்து பெரும் மாபெரும் மீட்பைக்குறித்தும், மீட்பருக்கும் அவருடைய உடன் சுதந்தரருக்குமான உன்னதமான வெகுமதியையும், மனிதன் இழந்த ஆசீர்வாதமான சிலாக்கியங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டதையும், மேலும் இவைகள் எல்லாம் தேவனுடைய முழுமையான சிருஷ்டிப்புக்கு நித்திய பாடங்களாகவும், உதாரணங்களாகவும் இருப்பதைக் குறித்தும் சொல்லத் திறன் பெற்றவர்களாக இருப்பார்கள். இந்த போதனைகள், பாவம் செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தவும், தெய்வீகப் பிரமாணமாகிய அன்புக்கு ஒத்த குணாதிசயத்தை அபிவிருத்தி பண்ணுவதற்குத் தேவையான எல்லாவற்றையும் கற்றுக்கொடுப்பதற்குச் சகலவித வலிமை நிறைந்ததாக இருக்க வேண்டும்.

ஏற்கனவே காட்டப்பட்டுள்ளபடி தற்போதைய காலத்தில் இந்தப் புதிய சிருஷ்டிப்புகளின் வேலைகள் இரண்டு விதமானதாக இருக்கிறது, பரிசுத்த ஆவியினால் பிறப்பது அவர்களை ஆசாரியர்களாக்குகிறது; ஆனால் அவர்கள் மனது மாத்திரம் மறுபடியும் பிறக்கிறது; அவர்களுடைய சரீரங்கள் பூமியிலுள்ளது, பூமிக்குரியது; ஆகவேதான் அப்போஸ்தலர் சொல்லுகிறார்: ‘‘இந்த மகத்துவமுள்ள வல்லமை

எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.'' (2 கொரி.4:7) புதிதாக பிறந்த மனது அல்லது சிந்தை, இப்போது இருப்பதெல்லாம் புதிய சுபாவத்திற்கு அடையாளமாக, முதலாம் உயிர்த்தெழுதல் வரைக்கும் இருக்கும்; அந்த புதிய சிந்தையானது குணாதிசயத்தில் அபிவிருத்தி பெற்றபோது, பூரணமான முழுமையான தெய்வீக சித்தத்தோடு முற்றுமாக இசைந்த ஒரு தகுதியான சரீரமாகிய, ஒரு மகிமையான, ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும். இதற்கிடையில் தெய்வீக வல்லமையான பரிசுத்த ஆவி இவ்வண்ணமாக நம்முடைய மனதில் கிரியை நடப்பித்து நம்மை புது சிருஷ்டிகளும் ஆசாரியர்களுமாக்கி தியாகத்தின் திசைக்கு நேராக வழி நடத்தி, நம்முடைய மாம்சீக நோக்கங்கள், ஆசைகள், விருப்பங்கள் போன்றவைகள், எவ்விதத்திலாவது, எங்கேயாவது, புது சிருஷ்டிகளுக்கென்று தேவன் வைத்திருக்கிற நிலைமைகளோடும் ஆசைகளோடும் முரண்பாடாகக் காணப்படுகிறதோ அவைகள்தான் பலியிடுவதற்குத் தகுதியான காரியங்கள் என்று நமக்கு சுட்டிக் காட்டுகிறது. இப்படியாக புது சிருஷ்டியின் வெற்றி அதனுடைய ஜென்ம சுபாவத்தை பலியிட்டதின் மூலம் கிடைத்தது. நம்முடைய ஜென்ம சுபாவங்கள் எல்லாம் அவர் தேவைகளின்படி இருந்திருந்தால், பலி செலுத்துவது அவசியம் இருந்திருக்காது என்ற நிலையில், இந்த வெற்றி, தேவனையும், அவருடைய வாக்குத்தத்தங்களின் மூலம், அவருடைய சித்தத்தின்படி நமக்குள் கிரியை நடப்பிக்கின்ற அவருடைய வல்லமையையும் மகிமைப்படுத்துகிறது. ஆனால் தற்போதைய வாழ்க்கையில் புது சிருஷ்டிகளின் விசுவாசம், பிரதிஷ்டை, பலி செலுத்துதல் ஆகியவை இஸ்ரயேலின் ஆரோனின் ஆசாரியத்துவத்திற்கும், அவர்களின் அதே மாதிரியான பலிகளுக்கும் முன்மாதிரியாக இருந்தன; ஆகவே அப்போஸ்தலர் விளக்கமாகச் சொல்கிறபடி இந்த புது சிருஷ்டிகளின் ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கின் மகிமையான ஆசாரியத்துவத்திற்கு அடையாளமாக அல்லது மாதிரியாக இருக்கிறது.

மெல்கிசேதேக்கு சணல் நூலினால் நெய்யப்பட்ட ஒரு வஸ்திரத்தை உடுத்தியவனாய் பலிகளை செலுத்தின ஓர் ஆசாரியனல்ல; அவன் ஓர் ஆசாரியனாகவும் அதே வேளையில் ஓர் இராஜாவாகவும் இருந்தான்– ''சிங்காசனத்தில் அமர்ந்த ஓர் ஆசாரியன்.''ஆகவே ஒரு

விதத்தில் அவனுடைய நிலை ஆரோனுடையதைவிட உயர்ந்ததா யிருந்தது; எப்படியென்றால் ஆரோன் ஆபிரகாமின் புத்திரனாயிருந்தான். ஆபிரகாம் பெரியவனாக இருந்த போதிலும் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் செலுத்தி, அவனுடைய கையில் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற்றான். அது அப்போஸ்தலர் விளக்கிச் சொல்லுகிறபடி உன்னதமான, இராஜரீகமான, மகிமையான, கனமான ஆசாரியத் துவத்தைக் காட்டிலும் பலி செலுத்தும் ஆசாரியத்துவம் ஒரு தாழ்ந்த நிலையை அடையாளப்படுத்துகிறது. அப்போது இந்த புது சிருஷ்டிகள் (கிறிஸ்து தலை, அவர்கள் அவருடைய சரீரத்தின் அங்கங்களாக எண்ணப்படுகிறார்கள்) ஆயிர வருட இராஜ்யத்தின் மகிமையான கிரியைக்கு மெல்கிசேதேக்கினால் முன்மாதிரியாக காட்டப்படுகிறார்கள். இவைகளோடு, வேலையின் முக்கிய பகுதியான பலி செலுத்துதல் எல்லாம் முற்றுப்பெறும் நிலையில் இருக்கும்; அரசாட்சி செய்தல், ஆளுதல், ஆசீர்வதித்தல், உதவி செய்தல் எல்லாம் ஆரம்பமாயிருக்கும்; மேலும் தேவனுடைய இந்த பிரதிநிதிகள் மூலமாக '' பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்'' என்ற திவ்ய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற முற்றிலும் தகுதியுள்ளவர்களா யிருப்பார்கள்; இவர்கள் மூலமாக''யாரெல்லாம் சித்தமுள்ளவர்களாய்'' இருக்கிறார்களோ அவர்களெல்லாரும் தேவனோடும் அவருடைய பிரமாணங்களோடும் முற்றிலும் இசைந்தவர்களாய் திரும்பி வரலாம்.(ஆதி.22:18; கலா.3 :16,29)

அவருடைய ஒரே பேறான குமாரனான இரட்சகருக்கும், தெரிந்தெடுக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, ''புது சிருஷ்டிகளாக'' ஆயத்தம் பண்ணப்பட்டு திவ்ய சுபாவத்தில் அவரோடு கூட வாசம் பண்ணும் சபைக்கும் இடையில் உள்ள நெருங்கிய உறவு பல்வேறு உவமைகள் மூலம் ஆண்டவரால் காட்டப்படுகிறது; அவர்களுக்கிடையே நிலவக்கூடிய நெருக்கத்தை, நெருங்கிய உறவை, ஒருமைப்பாட்டை தெளிவாகக் காண்பிக்கிறது. அவருக்கும் அவருடைய குமாரனுக்கும் அடுத்தபடியாக எல்லா சிருஷ்டிகளிலும் உன்னதமான நிலைக்கு அவர்களை சிருஷ்டிகர் அழைத்திருக்கிறார்; அந்த அளவிற்கு அவர்கள் மேல் அவர் வைத்திருந்த அளவற்ற அக்கறையையும் அன்பையும் பற்றி அவர்கள் யோசிக்கும்போதே, தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட தாழ்மையான மனதுடைய மனுக்குலம் விசுவாசத்தில் தடுமாறக் கூடும் என்று ஆண்டவர் உணர்ந்தபோதிலும், அவர் உண்மையுள்ளவர்

என்பதைக் குறித்தும், அவருடைய ''பரம அழைப்பு'' உண்மையானது என்பதைக் குறித்ததான நம்முடைய ஒவ்வொரு கேள்வியையும், சந்தேகத்தையும், பயத்தையும் அறவே இளைப்பாறப் பண்ணுவதுபோல, இந்த விஷயம் மறுபடியும் மறுபடியுமாக வித்தியாசமான வழிமுறைகளில் வழங்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். இவைகளில் சிலவற்றைக் குறித்து, நம்முடைய மனதைப் புதுப்பித்துக் கொள்ளலாம்; ஒன்றில் நம்முடைய ஆண்டவர் ஒரு பிரமிட் கோபுரத்தின் ''தலைக் கல்லாக'' காட்டப்பட்டிருக்கிறார். சுவிசேஷ யுகத்தில் தேவன் கட்டிக் கொண்டிருக்கிற பெரிய பிரமிட் கட்டிடத்தில் அவரோடு அங்கத்தினர் களாக இருக்கும்படியாக தெரிந்து கொள்ளப்பட்ட சபையானது ஜீவகற்களாக அவரண்டை இழுக்கப்பட்டு, அவருடைய குணாதிசயத்தோடு ஒத்துப்போகும்படி உருவாக்கப்பட்டு ஆயத்தம் பண்ணப்படுகிறது; வருகிற யுகத்தில் அது உலகத்தை ஆசீர்வதிக்கும்; அதன்மூலமாக நித்திய காலமாக அவர் மகிமைப்படுவார்.

இந்த பிரமிட் படமானது தேவாலயத்திற்கு மிகவும் ஒத்திருக்கிறது; சாலமோன் கட்டின ஆலயத்தைக் காட்டிலும் அதிகமான ஞானத்தோடு தேவன் கட்டிக் கொண்டிருக்கிற பெரிய ஆவிக்கேற்ற மாளிகைக்கு மாதிரியாக இருந்தது என்று நமக்கு அறிவிக்கப்படுகிறது. (1பேதுரு.2:5) மாதிரியில் காணப்பட்டதுபோல், ஒவ்வொரு உத்திரமும் ஒவ்வொரு கல்லும், ஆரம்பத்திலேயே அதன் இடத்திற்கு என்று குறிக்கப்பட்டது; அந்தந்த இடத்தில் பொருந்தும்படி உருவாக்கப்பட்டது; இது போல தான் புது சிருஷ்டியின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் பொருத்தப்பட்டு, அவனவனுடைய இடத்திற்கு ஆயத்தம் பண்ணப்படுவான். இது ''சுத்திகளின் சத்தம்,'' அதிர்ச்சி, கிளர்ச்சி அல்லது இரைச்சல் இல்லாமல், நிழலான ஆலயத்தை கட்ட அனுமதித்தபடியால், இந்த ஆலயத்தின் தலையாகிய ஆண்டவர் சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்தில் அவருடைய உயிர்த்தெழுதலில் மரித்தோரிலிருந்து பிறந்த முதற்பேறான வராக இருந்தது போல, சபையானது முழுமையாக புதிய சிருஷ்டியாக தெய்வீக கட்டிட கலைஞருக்கு கீழ், யுக இறுதியில் மரித்தோரிலிருந்து பிறக்கும். (1இரா.6:7)

நாம் நினைவுபடுத்துகிற இந்த உவமைகளில் இன்னொன்று பல அவயவங்களைக் கொண்ட மனித சரீரமாகும். அவருடைய சரீரமான சபைக்கு தலையாயிருக்கிற ஆண்டவரோடு, தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் கொண்டுள்ள நெருக்கத்தைக் குறித்ததான விளக்கத்தை

அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு மிக தெளிவாகவும், துல்லியமாகவும் சுட்டிக்காட்டுகிறார்.(ரோம.12 :4,5; 1கொரி.12:12) தலை சரீரத்தைக் கட்டுப்படுத்துகிறது, அதற்காக யோசிக்கிறது, அதற்காக திட்டமிடுகிறது, அதன் விஷயங்களை மேற்பார்வையிடுகிறது, நடத்துகிறது, அல்லது உபயோகப்படுத்துகிறது, ஒரு அவயவத்தின் உதவிக்காக இன்னொரு அவயவத்தைப் பயன்படுத்துகிறது. அதுபோலவே ஆண்டவரும் ''தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த'' தேடுபவர்களின் நலன்களை ஓரளவிற்கு ஆண்டவர் தன்னுடைய சபையில் மேற்பார்வையிட்டு, சரீரமான சபையில் வெவ்வேறு அங்கத்தினர்களை தன்னைப் பிரியப்படுத்தும்படி வைக்கிறார். அவர்கள் தங்கள் இருதயத்தில் சரியான நோக்கத்தோடு, பணிவோடு, உண்மையுள்ளவர்களாக இருக்கிற காலம் வரை ''அவர்களுக்கு எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடை பெறுகிறது'' என்ற அவருடைய உத்தரவாதம் உண்டு. ஏனென்றால் ''அவர்கள் தேவனிடத்தில் அன்பு கூறுகிறார்கள், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டு இருக்கிறார்கள்.''

கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவைக் காட்டுவதற்கான இன்னொரு உவமை இராணுவ அதிகாரிக்கும் அவனுடைய போர் வீரர்களுக்கும் இடையில் உள்ள உறவாகும்; இன்னொன்று மேய்ப்பனுக்கும் ஆடுகளுக்கும் இடையில் உள்ளதாகும். இந்த உவமைகள் எல்லாம் புது சிருஷ்டியின் தலையானவர் தன்னுடைய சகோதரர்களான சபையோடு வைத்திருக்கிற பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட உறவைக்குறித்து மதிப்புமிக்க உயர்ந்த எண்ணத்தைக் கொண்டு வருகிறது. எனினும், ஆண்டவர் நம்மேல் வைத்திருக்கிற அக்கறையையும், நமக்காக வைத்து இருக்கிற அன்பையும் குறித்ததான, நிறைவான, மற்றும் முழுமையான கருத்தை, மணவாளன்– மணவாட்டி என்ற உவமையைக் காட்டிலும், வேறு ஒன்றும் தருகிறதில்லை. அவருடைய கம்பீரமான குணாதிசயத்தையும், அவர் உண்மையுள்ளவரா யிருப்பதையும் புரிந்து கொள்ளும்படி யாருடைய கண்களெல்லாம் திறக்கப்பட்டுள்ளதோ அவர்களுக்கெல்லாம் ஒரு சிறப்பான மணவாளன் நிச்சயமாக ஒரேபேறானவர் மட்டும்தான்! நன்று, அவருடைய சரீரமான சபையின் மனோபாவப்படி தீர்க்கதரிசனமாக ''அவர் ஆயிரம் பதினாயிரங்களில் சிறந்தவர், முற்றிலும் சௌந்தர்யமானவர்'' என்று உரைக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் இந்த உவமையை உபயோகித்து

சபைக்கு எழுதும்போது ''நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்திருக்கிறேன்'' (2 கொரி. 11:2) என்று அறிவிக்கிறார். தற்போது ''கிறிஸ்தவ சபைகளின்'' வழக்கத்தினின்று வித்தியாசமாகக் காணப்படுகிற யூத திருமண வழக்கத்தை இங்கே அவர் குறிப்பிடுகிறார். இந்த காலத்தில், நிச்சயதார்த்தம் ஒரு தற்காலிக ஒப்பந்தமே, சம்பந்தப்பட்டவர்கள் யாராவது, அந்த ஒப்பந்தம் விவேகமானதொன்றல்ல அல்லது நன்மை அளிக்கக்கூடியது அல்ல என்று முடிவு எடுப்பார்கள் என்றால், அது மாறக்கூடியது; ஆனால் ஆண்டவரைக் குறித்த யூத கல்யாண ஒப்பந்தம் மணவாளனான கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டியான சபைக்கும் இடையில் மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளது. யூத வழக்கத்தின்படி நிச்சயதார்த்தம்தான் உண்மையான திருமணம். அது வழக்கமான எழுத்தில் ஓர் உறுதியான உடன்படிக்கையோடு சேர்ந்து வருகிறது. அதில் மணவாளன், மணவாட்டியின் பிரதிநிதிகள் சீதனம் போன்றவைகளை ஏகமனதாக ஒப்புக்கொள்கின்றனர். திருமண வைபவங்களையும் உண்மையான ஐக்கியத்தையும் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு தள்ளிப்போடுவது வழக்கமானதாக இருந்தாலும் அந்த ஒப்பந்தம் மாற்ற முடியாததாகிறது. அதுபோலவே, பரலோக மணவாளனாகிய ஆண்டவருக்கும், அவரோடு உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம் மாற்ற முடியாததாகிறது. அவருடைய பட்சத்திலோ அல்லது நமது பட்சத்திலோ அது ஒரு தளர்ந்த ஒப்பந்தம் அல்ல; ஆனால் இருதயம், அக்கறை, அன்பு, பக்தி ஆகியவையோடுகூடிய உறுதியான ஐக்கியமாகும். மணவாளனோடு நாம் பண்ணியிருக்கிற இந்த உடன்படிக்கையை முறிப்பது ஆபத்தான ஒரு காரியமாகும். அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார்: '' உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.'' (1 தெச. 5:24) எனவே காரியத்தின் முழு முயற்சியும் நம் மேலேயே உள்ளது.

இந்த யுக முடிவில் நமது ஆண்டவர் மணவாளனாக மணவாட்டியை ஏற்றுக்கொள்ள வருகிறார்; ஆனால் அவர் ''புத்தியுள்ள கன்னிகைகளை'' மட்டுமே ஏற்றுக்கொள்வார். உடன்படிக்கை செய்த பின்னர் நிர்விசாரமாய் ஜீவிக்கும்படி முட்டாள்தனமாய் இருந்தவர்கள், ஏற்றுக்கொள்ளப் படுவதற்குத் தகுதியானவர்களாக எண்ணப்பட மாட்டார்கள், திருமணத்தோடு சம்பந்தம் உள்ளவர்கள் என்றும்

அறியப்படமாட்டார்கள். உவமையில் கூறப்பட்ட பிரகாரம் அவர்களுக்கு எதிராக கதவு மூடப்படும். (மத்.25 :1–12) அவர்கள் விசுவாசத்தின் மூலமாக அனுபவித்திருக்கக் கூடிய சிலாக்கியங்களும் ஆசீர்வாதங்களும் அவர்களுக்குக் கிடைக்காது. அவர்களுடைய அவிசுவாசம் அவர்களை அதிகமான துன்ப காலத்திற்குள்ளாக கொண்டு வரக்கூடும். மேலும் இது அவர்களுக்கு இராஜ்யத்தில் ஒரு பங்கிலும் திவ்ய சுபாவத்திலும் இழப்பை உண்டு பண்ணக்கூடும் என்றாலும், இதனிமித்தம் நித்திய வேதனைக்கு தள்ளப்படுவார்கள் என்று அர்த்தமாகாது என்று எண்ணி களி கூறுகிறோம். அவருடைய வேதத்தின் வெளிச்சம் இப்போது அதிக தெளிவாக பிரகாசிப்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! நம்முடைய ''அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வது'' என்பது நம்மில் அந்த நிலையை அடைபவர்களுக்கு கிடைப்பது மாபெரும் கிருபையின் நித்திய ஐசுவரியம் என்று பொருள்படும். தங்களுடைய உடன்படிக்கையிலான உறவை அஜாக்கிரதையாய் எடுத்துக் கொண்டு, உலகத்தோடும் அதன் ஆவியோடும் தங்களைக் கறைப்படுத்திக் கொள்பவர்களுக்கு, மேலே சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களை இழந்து போவதே பெரிய தண்டனையாகும்.

''கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டியானவர்கள்'' பெரும்பாலும் சமுதாயத்தின் மேல்மட்டத்திலிருந்தல்ல கீழ்மட்டத்தி லிருந்தே தெரிந்து கொள்ளப்பட்டாலும், உலகம் அவரை அறியாதது போல நம்மையும் அறியாதிருக்கிறது. இருந்த போதிலும், வேதம் நமக்குச் சொல்லுகிறபடி, வெளிப்புறத் தோற்றத்தை அல்ல இருதயத்தைப் பார்க்கிற தேவன், இப்போது தேடப்பட்டு புது சிருஷ்டிக்கென்று அபிவிருத்திப் பண்ணப்படுகின்ற, இந்த வகுப்பைச் சேர்ந்த உண்மையுள்ளவர்களை அவர் மிகவும் பாராட்டுகிறார். அவர்களுக் கெல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி, அவர்களுடைய காரியங்களைக் குறித்த தெய்வீக மேற்பார்வையைக் குறித்து அவர் சொல்லுவது மாத்திரமல்ல, அவர்களுடைய காரியங்களைக் குறித்ததான மேற்பார்வை எப்படி செய்யப்படுகிறது என்பதைக் குறித்தும் கூட ஓர் அளவுக்கு சொல்லியிருக்கிறார். அதாவது தேவதூதர்களெல்லாம் ''இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தம் ஊழியஞ் செய்யும்படிக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்,'' என்றும் ''அவருடையவர்களைச் சுற்றிக் கர்த்தருடைய தூதனானவர்

பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்'' என்றும் அவருடைய சிறுமந்தையை பாதுகாக்கிற தேவதூதர்கள் எப்பொழுதும் தேவசமூகத்தைத் தரிசிக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்; உதாரணமாக சொல்வோமானால் பிதாவின் சித்தமில்லாமல் அவர்களுடைய தலையிலுள்ள ஒரு மயிரும் கீழே விழாது. தெய்வீக பாதுகாப்பைக் குறித்து இந்த அருமையான எல்லா உறுதிமொழிகளோடும் ஒத்து போகிற வண்ணமாக தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது: '' கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.'' ''என்னுடைய சம்பத்தை நான் சேர்க்கும் நாளில் அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்.'' (2 தீமோ.2:19; மல்.3:17)

''நீ மறுபடியும் பிறக்கவேண்டும்'' என்ற ஆண்டவருடைய கட்டளைக்கு ஏற்ப புது வாழ்வுக்கு அது விடுக்கும் அழைப்பினிமித்தமாக புது சிருஷ்டியைக் குறித்து ஆலோசிப்பது நம்முடைய விஷயத்திற்கு மிகவும் பொருத்தமானது. புது சிருஷ்டிக்கென ஒரு புது பிறப்பின் சிந்தையை நம் மனதில் பதிப்பதற்கு பூமியில் சிருஷ்டிகளாக மனித சுபாவத்தோடு கூடிய இயற்கையான பிறப்பு உபயோகப்படுத்தப் படுகிறது. உற்பவித்தல், வளரச்செய்தல், கடைசியாக பிறப்பு ஆகியவை இயற்கையான பிறப்புக்கு முந்தியதாக இருக்கின்றன. ஆகவே புது சிருஷ்டியின் ஒழுங்குமுறையிலும் அதுபோலவே, 1.தேவனுடைய வார்த்தையினாலும், ஆவியினாலும் நாம் பிறக்க வேண்டும். 2. நாம் பெற்ற சத்திய ஆவியினால் பலப்படுத்தப்பட்டு உயிர்ப்பிக்கப்பட வேண்டும். 3. மலட்டுத்தன்மை அல்லது கனியற்றவகளாயிராதபடி அபிவிருத்தி தொடருமானால், தேவனுடைய வார்த்தை அதிகமாக நம்மில் தங்கியிருக்குமானால், நிரம்பியிருக்குமென்றால், நாம் படிப்படியாக புது பிறப்பிற்கு, கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கத்தினர்களாக, முதலாவது உயிர்த்தெழுதலின் பங்குக்கு வந்தடைவோம். அந்த உயிர்த்தெழுதலைக் குறித்தும், இயற்கையான பூமிக்குரிய மனிதர்கள், ஆவிக்குரிய திவ்ய சுபாவத்தோடு கூடிய பரலோக வாசிகளாக முற்றிலுமாக மாறுவதைக் குறித்தும் போகப்போக அதிகமாகக் கூற வேண்டியிருக்கும். ஆனால் இங்கே விசேஷமாக உற்பவித்தலைக் குறித்துக் குறிப்பிடுகிறோம். தேவனுடைய வார்த்தை தேவனுடைய பிள்ளைகளாக பிறப்பதைக் குறித்துத் துல்லியமாக பின்வருமாறு அறிவிக்கிறது: ''அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல்

தேவனாலே பிறந்தவர்கள்'' (யோவா.1:13) அப்போஸ்தலனாகிய பவுல் தெரிந்துகொள்ளப் பட்ட வகுப்பைச் சேர்ந்த ''புது சிருஷ்டிகளைக்'' குறித்தும், அவர்களுடைய தலையாகிய கிறிஸ்து இயேசுவைக் குறித்தும், அவர்களுடைய உன்னத அழைப்பைக் குறித்தும், குறிப்பிட்டு எழுதும் போது ''ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுவதில்லை'' (எபி.5:4) என்று கூறுகிறார்.

வேதம் தொடர்ச்சியாக, இந்த தெரிந்து கொள்ளப்பட்ட ''புதுசிருஷ்டிகளுக்கும்,'' பொதுவான மனித குடும்பத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை காட்டுகிறது. ஆனால் இங்கே இரண்டு வியாக்கியானங்களை மாத்திரம் சுருக்கமாகக் கொடுக்கலாம்.

(1). உலகத்தின் மீட்பைக்குறித்து அப்போஸ்தலர் பேசும்போது, அவர் பாவநிவாரண பலியை ஒன்று சபைக்கும், மற்றது உலகத்திற்கும் என்று தெளிவாக இரண்டு பகுதிகளாகப் பிரித்து பின்வருமாறு கூறுகிறார். ''நம்முடைய பாவங்களை (சபையின் பாவங்களை) நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்'' (1 யோவா.2:2).

(2). இதே அப்போஸ்தலர் சபையின் தற்போதைய வாழ்க்கையில் உள்ள கஷ்டங்களுக்கும் சோதனைகளுக்கும், உலகத்தாரின் சோதனைகளுக்கும் இடையில் உள்ள பேதத்தையும், தெரிந்து கொள்ளப்பட்ட சபையின் நம்பிக்கைக்கும் உலகத்தின் நம்பிக்கைக்கும் இடையில் உள்ள பேதத்தையும் காட்டுகிறார். ''ஆவியின் முதற் பலன்களைப் பெற்ற நாமும் கூட, நம்முடைய சரீர மீட்பாகிய (விடுதலை) புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்.'' ஒரே சரீரமான சபைக்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார். அதன் மீட்பு அவருடைய இரண்டாம் வருகையில், முதலாம் உயிர்த்தெழுதலில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு உள்ளது என்று அவர் சொல்கிறார். (ரோம.8: 23) உலகத்தாரைப் போல நாம் வெளியரங்கமாக தவிப்பதில்லை, ஏனெனில் நாம் ஆண்டவரிடத்திலிருந்து அவருடைய ஆவியினால் பிறந்ததினால் இக்காலத்து ஏமாற்றங்கள், சோதனைகள், கஷ்டங்களுக்கு மருந்தையும் மகிமையான நம்பிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும், நம் ஆத்துமாக்களுக்கு ஒரு நங்கூரமாகப்

பெற்றுக்கொண்டு திரைக்குள்ளாக இருப்பதில் நாம் பிரசவிக்கிறோம். நம்பிக்கையற்ற மற்றவர்களைப் போல நம்முடைய பல விதமான கஷ்டங்களிலும் சோதனைகளிலும் நாம் துக்கிப்பது இல்லை. இதே விஷயத்தில் அப்போஸ்தலர் உலகத்தையும் அதன் நம்பிக்கையையும் பற்றிக் குறிப்பிடும்போது ''இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது.'' இந்த பிரசவ வேதனை காலத்துக்குரிய இரணங்கள், கடும் வலிகள், வேதனை ஆகியவைகளை அகற்றுவதற்கோ அல்லது தணிப்பதற்கோ குறைவான வழிகள் மாத்திரமே உண்டு; இப்படிப்பட்ட காலத்தின் போது நிறைவான பாவமீறுதலையும், அதனால் வரும் அதிக கேடுகளான மரித்துக் கொண்டிருத்தலையும் மரணத்தையும் குறித்த ஒரு பாடத்தை மாத்திரமே கற்றுக்கொள்கிறார்கள் என்கிறார். ஆனால் நம்மை உலகத்தின் நம்பிக்கைக்கு அப்பால் சுட்டிக்காட்டி, அவர்கள் ''தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்'' (ரோம. 8 :19,22)என்று அறிக்கையிடுகிறார். அவர்கள் தேவ புத்திரருக்குள் காணப்படலாம் என்ற நம்பிக்கையில் காத்துக் கொண்டிருக்கவில்லை; ஆனால் ஆயிர வருட அரசாட்சியின் மகிமையினாலும் வல்லமை யினாலும் நிரப்பப்பட்ட புது சிருஷ்டியின் அந்த புத்திரர் தெய்வீக வாக்குத்தத்தின்படி பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் படியாக இந்த பூமிக்குக் கொண்டு வர இருக்கிற ஆசீர்வாதங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

புது சிருஷ்டியின் அங்கத்துவம் பூமியிலுள்ள எந்த ஒரு ஸ்தாபனத்திலும் இருக்காது, ஆனால் அறிவுக்கு அப்பாற்பட்ட அவருடைய சரீரத்தில் அங்கத்தினர்களாக ஆண்டவரோடு ஐக்கியமாக இருப்பதாகும். அப்போஸ்தலர் கூறியவண்ணம் ''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவை களெல்லாம் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின'' (2கொரி. 5:17). கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினராக எண்ணப்படுவதற்கே, பழையவைகள் அல்லது பூமிக்குரிய காரியங்களாகிய ஆசைகள், நம்பிக்கைகள், பெருமைகள், ஆடம்பரங்கள், அறிவீனங்கள் ஆகியவைகள் ஓர் அளவுக்கு நம்முடைய மாம்சத்திற்கு வசீகரமாய் தோன்றுவதாக இருந்து நம்மை துன்பப்படுத்தினாலும், அவைகள் நம்முடைய விருப்பத்திலிருந்து நீங்குவது அவசியமாகிறது. புதிய மனதையே ''புது சிருஷ்டி'' என்று ஆண்டவர் ஏற்றுக் கொள்கிறார். அந்த

புதிய மனம் முன்னேற்றம் அடைந்து அபிவிருத்தியடைவதில் அவர் அக்கறை காட்டுகிறார், மாத்திரமல்ல வெகுமதியளிப்பதாகவும் வாக்குத்தத்தம் பண்ணுகிறார்.

கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதற்கு ஒரு பிரதிஷ்டை செய்வதைக் காட்டிலும் இன்னும் அதிகமானது தேவை என்று வேதம் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. பிரதிஷ்டை, கதவைத்திறந்து நமக்கு ஒரு நிலையைத் தருகிறது, ஓர் உறவைத் தருகிறது, திவ்ய வாக்குத்தத்தத்திற்கு ஏதுவாக நம்மை தாங்குகிறது, உற்சாகப்படுத்துகிறது. எனவே பல்வேறு ஆவியின் கனிகளை வளர்க்கவும், முடிவில் பரலோக மகிமையில் ஆண்டவரோடு உடன் சுதந்திரராகவும் ஆவதற்கும் வழி வகுக்கிறது. ஆனால், ஆண்டவர் திராட்சைச் செடியும் கொடிகளும் என்ற உவமையில், ''என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்'' (யோவா. 15:2) என்று சொல்லிய பிரகாரம், கிறிஸ்துவின் சரீரத்தில் இந்த நிலையைக் காத்துக்கொள்ளுவதற்கு கனிகள் உருவாக்கப்படுதலும், அன்புக்கும் பக்திக்கும் அடையாளங்களும் இப்பொழுது அவசியமாயிருக்கிறது. கடந்த சில வருடங்களாகக் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆண்டவரால் ஒரு புது சிருஷ்டியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால், கிருபையிலும், ஞானத்திலும் ஆவிக்குரிய கனிகளிலும் ஏறக்குறைய தொடர்ந்து வளர்ச்சி காணப்பட வேண்டும், இல்லையென்றால் அவரோடு நாம் கொண்டுள்ள உறவு பறிபோகும். மேலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள் வேறு ஒருவர் நம்முடைய இடத்தை எடுத்துக் கொள்வார்; ஆரம்பத்திலேயே நமக்கென்று நிர்ணயிக்கப்பட்டு, பிரித்து எடுத்து வைக்கப்பட்ட கிரீடம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற சிலாக்கியங்களை அதிகமாக வாஞ்சிக்கிற இன்னொருவருக்கு சென்று விடும். ஏனெனில் அவரை நேசிப்பவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள மகிமையான காரியங்களைப் பெற்றுக் கொள்ள அதிக வைராக்கியம் உள்ளதினிமித்தம், அபிஷேகம் பெற்றவர்களுக்குள்ளே ஓர் இடத்தைப் பெறுவதற்கு பூமியில் உள்ளவைகள் எல்லாவற்றையும் குப்பையும் தூசும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். கிறிஸ்துவுக்குள் உள்ள இந்த நிலை ஆவிக்குரிய கனிகளின் இப்படியான ஒரு வளர்ச்சியின் மூலம் விளக்கப்பட்டிருப்பது மன்றி, அப்போஸ்தலர் பவுல் சொல்லுவது

போல் ''இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.''(2பே.1:10,11) இருந்தபோதிலும் அப். பவுல் கூறியது போல்,''புது சிருஷ்டியான'' புதிதாக்கப்பட்ட மனதை உடையவன், தினந்தோறும் ஈடுபாடுகள், ஆசைகள் உள்ள பழைய மனிதனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு தேவனுடைய பரிபூரண சித்தத்திற்கு முழுவதுமாக ஒத்திருப்பான். ஏனெனில், புது சிருஷ்டியானது தலையாகிய கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்கள் சேர்ந்த புதிய மனுஷன் என்று பொருள்படும்படியாக சொல்லப்பட்டுள்ளது; அது தன்னை பக்திவிருத்தி அடையச்செய்து அல்லது கிறிஸ்துவுக்குள் ஒரு முழுமனிதன் என்று பொருள்படும்படியான அளவிற்கு பலப்படுத்தப்பட வேண்டும், ஒவ்வொரு அங்கமும் நம்முடைய சொந்த பலத்தினாலோ அல்லது மாம்சத்தினாலோ அல்ல, ஆனால் நம்முடைய கறை திறைகளை சரிக்கட்டும் நம்முடைய ஜீவனுள்ள தலையினாலும், அவருடைய நீதியினாலும் முழுமையாக்கப்படுதல் வேண்டும்.

மனுக்குலம் தன்னுடைய காரியங்களை ஐம்புலன்களான பார்த்தல், கேட்டல், தொடுதல், முகர்தல், ருசி பார்த்தல் போன்றவற்றை வைத்து தீர்மானிக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் புது சிருஷ்டியானது புதிதாக்கப்பட்ட மனதை மண்பாண்டத்தில் வைத்திருக்கும் காலம்வரை தாராளமாக உபயோகிக்கலாம். ஆனால் மனித அவயவங்களால் பார்க்கமுடியாத, உணரமுடியாத, ருசிபார்க்க முடியாத, செவியினால் கேட்கமுடியாத, முகர்ந்து பார்க்க முடியாத, ஆவிக்குரிய காரியங்களைக் கண்டுபிடிப்பதற்குப் புதிய சிருஷ்டிக்கு ஐம்புலன்கள் மாத்திரம் போதாது மற்ற புலன்களும் தேவைப்படுகிறது. இந்த புலன்களை கர்த்தர் பரிசுத்த ஆவி மூலமாக நமக்கு அளித்திருக்கிறார். இது பற்றி அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ''ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்; ....அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.'' ''தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, (வேறு எந்த புலனினாலோ,

வல்லமையினாலோ, புலப்பாடினாலோ அல்ல) நமக்கோ (புது சிருஷ்டிக்கு) தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப் படுத்தினார், அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.'' (1கொ.2:9,10,14)

புது சிருஷ்டிகளின் ஆவிக்குரிய புலனை ஆறாவது புலன் என்று அழைக்கலாம்; இல்லையென்றால் அவர்களுடைய மாம்சத்துக்குரிய புலன்களுக்கு ஒத்தாற் போல் மேலும் ஐந்து புலன்கள் உள்ளவர்களாக, ஒரு முழு வரிசையான ஆவிக்குரிய புலன்கள் உள்ளவர்களாகக் கருதப் படலாம். இயற்கையான கண்களினால் பார்க்க முடியாதவைகளுக்கு நேராக, அவர்களுடைய மனக்கண்கள் படிப்படியாக, மென் மேலும் விசாலமாகத் திறக்கின்றன. தெய்வீக வார்த்தையில் உள்ள ஒவ்வொரு நல்ல வாக்குத்தத்தமும்,வலிமை நிறைந்ததாயும் அர்த்தமுள்ளதாயும் ஆகும் வரை **கேள்வியினால்** *வரும் விசுவாசம் கிரமமாக அதிகரிக்கிறது. காலப்போக்கில் அவர்கள் ஆண்டவரோடும் காணக்கூடாத அவருடைய வல்லமைகளோடும் தொடர்பு உள்ளவர்களாயிருக்கிறார்கள், சிறிது சிறிதாக ஆண்டவர் மிகவும் கிருபையுள்ளவர் என்பதை* **ருசித்துப்** *பார்க்கிறார்கள், சிறிது காலம் சென்ற பின்னர் அவர்கள் ஆண்டவருக்கு சுகந்த வாசனையாயிருக்கிற தூபமான ஜெபங்களையும் பலிகளையும் உயர்வாக நினைக்கிறார்கள். ஆனால் இயற்கையான புலன்களை எப்படி அபிவிருத்தியடையச் செய்ய முடியுமோ அதே போன்று ஆவிக்குரியவை களையும் அபிவிருத்தி செய்ய முடியும். மேலும் ஆவிக்குரிய புலன்களை அபிவிருத்தியடையச் செய்யும்போது (அல்லது அபிவிருத்தி பண்ண முயற்சியாவது எடுப்பது)கிருபையில் நாம் வளர்ந்து வருவதற்கான அறிகுறிகளையும், புது சிருஷ்டியின் கருவின் நிலையிலிருந்து உயிர்த்தெழுதலின் பிறப்புக்கு அபிவிருத்தியடைந்து அழியாத் தன்மையுள்ள திவ்ய சுபாவத்தின் கனம், மகிமைக்கு நம்மைத் தகுதியாக்கிக் கொள்வதையும் காட்டுகிறது.*

எந்த நாமத்தின் மூலம் புது சிருஷ்டி அறியப்படக்கூடும்?

ஒருபுறம் பார்த்தால், இது ஒரு விசித்திரமான, ஒரு வினோதமான கேள்வி. சபையானது ஆண்டவருக்கு என்று நிர்ணயிக்கப்பட்டு மணவாட்டியாக நிச்சயிக்கப் பட்டிருப்பதை நாம் கவனிக்கும் போது

அதற்கு என்ன நாமம் உரித்தாகும் என்று கேட்பது விசித்திரமானது போல் தோன்றுகிறது. நிச்சயமாகவே மணவாட்டிக்கு மணவாளனின் நாமத்தைத் தவிர வேறு எந்த நாமமும் பொருத்தமாக இருக்காது; மேலும் வேறு எந்த நாமத்தையும் சொல்வது ''அவருடைய சரீரத்தின் அங்கங்களாக,'' ''மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாக'' இருக்கிற அவருடைய பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்கும் இடையில் நிலவுகின்ற உறவைப்பற்றி தவறான எண்ணத்துக்கு ஏதுவாகும். வேதாகமப் பெயரான ''எக்லிசியா''(Ecclesia) அதாவது சரீரம், கிறிஸ்துவின் சபை என்பது போதுமானதாக தோன்றுகிறது. வேறுபட்டம் வேண்டும் என்று விருப்பப்பட்டால் வேதம் இதை இப்படியாகத் தெரிவிக்கிறது: ''தேவனுடைய எக்லிசியா'' (Ecclesia)அல்லது தேவனுடைய சபை, கிறிஸ்துவின் எக்லிசியா(Ecclesia)அல்லது கிறிஸ்துவின் சபை. (ரோ.16:16; அப்.20:28)இந்த இரண்டு நாமங்களும் ஒரே அர்த்தம் உள்ளவை; எப்படியெனில் நம்முடைய ஆண்டவரும், பிதாவும் நம்மைப் பற்றி ஒரே நோக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். சபையானது, கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது, அவர் அதன் தலையாக இருக்கிறார். ஆகவே முழுசபையும், தலையும் சரீரமும் ஒரு கூட்டமாக அல்லது பிதாவினால் அபிஷேகம் பண்ணப்பட்டதாக இருக்கிறது. அதன் மூலமாக ஏற்கனவே அவருடைய வார்த்தையில் கூறப்பட்டுள்ளதும், எல்லாவற்றையும் மிஞ்சுகிறதும், மாபெரும் விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்களின்படி, பெரியதும், அற்புதமான மீட்பின் வேலையின் எல்லா விசேஷ அம்சங்களையும் செய்து முடிக்கப் பிரியமாயிருக்கிறார். அப்போஸ்தலர் மேலும் உண்மையாயிருக்கிறவர்களை ''ஜீவனுள்ள தேவனுடைய சபை'' என்று கூறி நாமத்தை விளக்குகிறார். இது சரியான விதத்தில் உண்மையான தேவனை அறிந்து கொள்ளாத அல்லது உண்மையான தேவனால் அவருடைய எக்லிசியா அல்லது சபையாக அறிந்து கொள்ளப்படாத மற்ற ஸ்தாபனங்கள் அல்லது மத ஒழுங்குகளோடு கிறிஸ்து தலையாயிருக்கிற, இந்த சபை, அல்லது சரீரம், அல்லது ஜனங்களை எதிர் மாறாக வைத்துப் பார்ப்பது போல சொல்கிறார்.

ஆண்டவராலும் அப்போஸ்தலராலும் நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற நாமங்களைத் தவிர மற்ற நாமங்கள் மேல் சார்ந்து கொள்கிற தன்மை சபையின் மிக ஆரம்ப காலத்திலிருந்தே காணப் படுகிறது. இன்றைக்குச் சிலர் ''நான் லுத்தரைச்(Luther) சேர்ந்தவன்,''

''நான் கேல்வினைச் (Calvin)சேர்ந்தவன்,'' ''நான் வெஸ்லியைச் (Wesley) சேர்ந்தவன்'' அல்லது ''நான் நோக்ஸ்ஸைச் (Knox) சேர்ந்தவன்'' என்றும் சொல்ல முற்பட்டாலும் இன்னமும் எல்லாரும் கிறிஸ்துவினுடையவர்கள் என்றும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆகவே இதே மாதிரியான நிலைமை புராதன சபையிலும் நிலவியது என்பதை அப். பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில் நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறார் என்று பார்க்கிறோம். (1கொரி. 3: 4–6) பிளவுபட்ட அல்லது மாறுபட்ட கருத்துக்களின் ஆவி கொரிந்து சபையில் உள்ள சகோதரர்கள் மத்தியிலும் வந்துவிட்டது. மேலும் கிறிஸ்துவின் நாமத்திலே அல்லது தேவனின் நாமத்திலே திருப்தியடையாமல், இவைகளோடு கூட சேர்க்கும்படியாக வேறு நாமங்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அதோடுகூட பவுலைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாகவும், பேதுருவைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாகவும், அப்பொல்லோவைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாகவும் இருந்தார்கள். அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு இந்த ஆவியை அறிந்திருக்கிறார். மேலும் அது பரிசுத்த ஆவியல்ல, சபையில் பிளவு உண்டு பண்ணவும் ஆண்டவருடைய ஊழியக்காரர்களில் ஒருவரை அல்லது மற்றொருவரை பின்பற்றவும் தூண்டுகிற மாம்சத்தின் ஆவி என்று சுட்டிக்காட்டுகிறார். அப்போஸ்தலருடைய வாதம் இன்றைக்கும் பொருத்தமாக உள்ளது. அவருடைய கேள்வியாகிய''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?'' அதாவது கிறிஸ்துவின் சரீரங்கள் அநேகம் உண்டா? என்பதாகும்; கிறிஸ்துவின் சபைகள் அநேகம் உண்டா அல்லது ஒன்றே ஒன்றுதானா என்பதாகும்.''ஒன்றே ஒன்றுதான் என்றால் அது ஏன் பிரிந்திருக்க வேண்டும்.'' ''அப்படி யென்றால் பவுல் யார்? அப்பொல்லோ யார்? பேதுரு யார்?'' அவர்கள் சபையின் தலைவரானவருக்கு ஊழியக்காரர்கள் மாத்திரமே. அவர்களை அவருடைய எக்லிசியாவான சரீரமான சபையை ஆசீர்வதிப்பதற்கு அவர் உபயோகித்தார். அவர்கள் விருப்பம் இல்லாதவர்களாக இருந்திருந்தால், அவர்கள் செய்த வேலையைச் செய்ய மற்றவர்களை தெரிந்து கொண்டிருப்பார். ஆகவே அப்போஸ்தலர்கள் மூலமாக வந்த ஆசீர்வாதத்திற்குரிய துதியும் கனமும், அவருடைய சரீரத்திற்கு தேவையான வைகளுக்கு வழி உண்டுபண்ணின சபையின்

தலையானவருக்குக் குறிப்பாக உரியதாகும். இது ஆண்டவர் அங்கீகரித்துக் கனப்படுத்துகிற எல்லாரையும் அங்கீகரிக்கக் கூடாது, சரியான முறையில் கனப்படுத்தக் கூடாது என்று பொருள் படுவதில்லை. ஆனால் வேதத்தின் பிரகாரம் அவர்களைச் சபையின் தலைவர்களாகவும், சபையை பல பகுதிகளாக, கட்சிகளாகப் பிரிக்கிறவர்களாகவும், வித்தியாசமான மனிதர்களைப் பின்பற்றுகிறவர்களாகவும் அங்கீகரிக்கக் கூடாது என்று பொருள் படும். அப்போஸ்தலர்களாவது அல்லது ஆண்டவருடைய ஊழியக்காரர்களில் எவராவது அவரால் உபயோகப் படுத்தப்பட்டிருப்பது சபையைப் பிளவு படுத்துவதற்காக அல்ல, ஆனால் அதன் அங்கங்களை உறுதியாகக் கூட்டிச் சேர்ப்பதற்கும், ஒரே விசுவாசத்தின் மூலம், ஒரே ஞானஸ்நானத்தின் மூலம், பலதரப்பட்ட பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகளை ஒரே தலையிடத்தில் ஒரே ஆண்டவரிடத்தில் இன்னமும் உறுதியாக இணைப்பதற்குமாகும்.

அப்போஸ்தலர் இன்றைக்கு நம்மோடு மாம்சத்தில் இருந்து, பல்வேறு சபைப் பிரிவுகளில் இன்று காணப்படுகிற பிரிவினைகளைப் பார்த்து, அதைப்பற்றிக்கூற எப்படிப்பட்ட வாக்கியங்களை உபயோகிப்பார் என்று நாம் நினைக்கக்கூடும்? நிச்சயமாகவே, அது அதிக அளவு மாம்ச சிந்தையையும், அதிக அளவிலான உலகத்தின் ஆவியையும் காட்டுகிறது என்று சொல்வார். ஆனால் இந்த முறைகளோடு சம்பந்தப் பட்டவர்கள் எல்லாருமே மாம்ச சிந்தை உள்ளவர்கள் என்றும், அறவே ஆண்டவருடைய ஆவி அற்றவர்கள் என்றும் பொருள்படாது.இருந்த போதிலும் நாம் எந்த அளவுக்கு ஆண்டவருடைய ஆவியை உடையவர்களாக இருக்கிறோமோ அந்த அளவிற்கு நாம் மாம்ச சிந்தையிலிருந்தும், அதன் நடத்துதலிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் விடுவிக்கப் படுகிறோம் என்பதைக் குறிக்கிறது. அதே அளவில் நம்மைச் சுற்றி வெவ்வேறு நாமங்களையுடைய பலவித சபைகளில் உள்ள பிரிவினைகளைக் குறித்துப் பரிதவிக்கிறோம். மேலும் எந்த அளவிற்கு ஆண்டவருடைய பரிசுத்த ஆவி நம்மில் அதிகமாக விருத்தி யடைந்து, நிரம்பி வழிகிறதோ அந்த அளவிற்கு ஆண்டவருடைய நாமத்தைத் தவிர வேறு எந்த ஒரு நாமும் நம்மை அதிக அளவில் அதிருப்தி அடையச் செய்யும். கடைசியாக பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலால் ‘‘பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ

சங்கமான'' ஒரே சபையின் அங்கத்துவத்தை அறிந்து கொள்ளும் இடத்திற்கு வருகிறோம். மாத்திரமல்ல, அவருடைய எக்லிசியா என்று அழைக்கப்படுகிற சபையில் ஆண்டவரின் சரீரத்திற்குள்ளாகவும், அவருடைய மரணத்திற்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெறுவதின்மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாக அவரோடும் மற்ற எல்லா அங்கங்களோடும் ஒரே ஆவியினாலே இணைக்கப்படுகிறோம்.

இந்த விஷயத்தைக் குறித்ததான கிறிஸ்தவ உலகின் முழு மனோபாவத்தையும் மாற்றுவது நமக்குரியதல்ல. அது எந்த மனிதனுக்கும் ஒரு மிகப்பெரிய வேலையாகும். கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கை செய்கிற எவனும் அக்கிரமத்தை விட்டும், அவன் தன்னுடைய விசுவாசத்திற்கு ஏற்றதல்லாத பழக்கவழக்கங்கள் எல்லாவற்றையும் விட்டு விலகுவதுடன், நாம் தனிப்பட்ட முறையில் மணவாளனுக்கு உண்மையாயிருப்பது நம்மைச் சார்ந்தது. இப்படிப்பட்டவர்கள் மணவாளனின் நாமத்தையன்றி வேறு எந்த நாமத்தினாலும் அறியப்பட விருப்பப்படமாட்டார்கள். மேலும், அவர்களிடத்தில் கேட்டால் அவருடைய நாமத்தில் மாத்திரம் சொந்தம் கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைவார்கள். நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யன்றி வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. இந்த சத்திய ஆவிக்குக் கீழ்ப்படிந்து, ஆண்டவருக்குள் நாம் சுதந்திரமாக இருக்கும்படியாக, நாம் எல்லா சபையாரின் நாமங்களிலிருந்தும் எல்லா சபை பிரிவு அமைப்புகளிலிருந்தும் பிரிக்கப்படுவோம். அப்படியெனில் ஆண்டவருடைய ஆவியை உடையவனாயிருந்து ஆனால் இன்னமும் சபைப்பிரிவு அமைப்புகளோடு தொடர்பு உள்ளவர்களை ஒதுக்க வேண்டும் என்று பொருள் படாது. அதற்குமாறாக,''என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்'' என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தையை அறிந்து கொள்வதிலிருந்து, அவருடைய ஜனங்களில் சிலர் சபைப் பிரிவு அமைப்புகளைக் குறித்தும், அவைகளின் பெயர்களைக் குறித்தும் தவறான எண்ணம் உடையவர்களாய் இன்னமும் பாபிலோனில் இருந்துகொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம்

நம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்கச்செய்து, அதன் பலாபலன்களை ஆண்டவரிடத்தில் விட்டுவிடவேண்டும்.

எந்த மனித நாமத்தையும் நாம் நிராகரிப்பது மாத்திரமல்ல, வகுப்புவாத அல்லது கட்சியின் நாமமாயிருக்கிறவைகளையும், அப்படி ஆகக்கூடியவைகளையும் நிராகரித்து, இப்படியாக, மற்ற எல்லாரிடமிருந்து ஆண்டவருடைய ஜனங்களில் சிலரைப் பிரிக்கிற நாமத்தையும் நிராகரிக்கிறோம். கிறிஸ்தவ சபை அல்லது தேவனுடைய சபை என்று விசேஷமாக பயன்படுத்துவதைத் தவிர்ப்போம். ஏனென்றால் இந்த நாமங்கள், ஆண்டவருடைய ஜனங்களுக்குள் உள்ள குறிப்பான விசுவாசங்களையும் ஒற்றுமைகளையும் அடையாளம் காண உபயோகப்படுத்தப்படுகிறது. அதற்குமாறாக சீஷர்கள்(மாணவர்கள்), தேவனுடைய சபை, கிறிஸ்துவின் சபை, ஜீவனுள்ள தேவனின் சபை, கொரிந்து சபை, அலகேனி சபை என்று பல்வேறு வேதாகமப் பெயர்களைப் பயன்படுத்துவோம். இந்த விஷயத்தில் அநேகர் தவறாகப் புரிந்து கொள்வது தவிர்க்க முடியாதது. மேலும் கிறிஸ்தவர்களின் மத்தியில் உள்ள பழக்க வழக்கங்களின்படி ஓர் அளவுக்கு நமக்கு நூதனமான பெயர்களைக் கொடுத்தாலும் குற்றமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக, அவர்கள் நம்மை ''இழந்ததைத் திரும்ப பெறுபவர்கள் (Restitutionists)'' அல்லது ''விடியற்கால கொள்கைக்காரர் (Dawnists)'' அல்லது ''ஜாமக்காரர் (Watch Tower People)'' முதலான பெயர்களைக் கொண்டு அழைக்கலாம். அந்தப் பெயர்களை நாம் நமக்காக உபயோகப்படுத்தும் அளவுக்கு அங்கீகரிப்பதற்கில்லை. இருந்த போதிலும், சாந்தம், பொறுமை, அன்பு, சமாதானம் ஆகியவைகளின் ஆவி இப்படிப்பட்ட பெயர்கள் கொடுக்கப்படுவதைக் குற்றமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதை சுட்டிக் காட்டுகிறது, ஆனால் அப்படிப்பட்ட பெயர்கள் தவறான, அல்லது குறைந்த பட்சமாக துஷ்டத்தன நோக்கோடு கொடுக்கப் படவில்லை என்று ஊகித்து, அதற்கு பதில், சண்டை போடும் முறையில் அல்ல, அன்பாக, சொல்ல வேண்டும். இதன் மூலம் சொல்லப் பட்டவைகளை நாங்கள் புரிந்து கொண்டோம், நாங்கள் எந்த வகுப்புவாத அல்லது கட்சியின் பெயர்களை ஏற்றுக் கொள்ளமாட்டோம், ஆனால் கிறிஸ்தவன் என்ற பெயரை அதன் அகலமான, விரிவான அர்த்தத்தோடு

*சார்ந்து நிற்கிறோம் என்று முடிந்தவரை சுருக்கமாக, சாதுவாக எடுத்துக் கூறவேண்டும். இப்படிச் சொல்லுவது, நமக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு தலைவர் கிடையாது என்பதைக் காட்டுகிறது, மேலும் அவர் உண்டாக்கின அமைப்பைத் தவிர வேறு எந்த அமைப்பையும் நாங்கள் ஏற்கவில்லை, பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களின் சபையான, ஜீவனுள்ள தேவனுடைய ஒரே சபையான, எக்லிசியா (*Ecclesia*) அல்லது கிறிஸ்துவின் சபையை மாத்திரம் ஏற்கிறோம் என்று காட்டுகிறது.*

அத்தியாயம் 3

புது சிருஷ்டியின் அழைப்பு

''அழைக்கப்பட்டவர்கள்'' மட்டுமே தகுதியானவர்கள் – இந்த ''பெரிய இரட்சிப்பு''க்கான அழைப்பு எப்பொழுது ஆரம்பித்தது – மனந்திரும்புதலுக்கான ஓர் அழைப்பு, திவ்விய சுபாவத்திற்கான ஓர் அழைப்பல்ல– யூதயுக அழைப்பு–சுவிசேஷ யுக அழைப்பு – ஞானிகள், வல்லவர்கள், கற்றுத்தேர்ந்தவர்கள் ஏன் அநேகரில்லை – உண்மையான தாழ்மையின் மேல் மேலான நிபந்தனை– அழைப்புக்கு குணாதிசயம் ஒரு நிபந்தனை– ஆயிர வருட யுகத்தில் உலகம் அழைக்கப்படாது, கட்டளையிடப்படும் – சுவிசேஷ யுக அழைப்பு காலவரையரைக் குட்பட்டது– புது சிருஷ்டி பிதாவினால் அழைக்கப்படுகிறது அல்லது இழுத்துக் கொள்ளப்படுகிறது – கிறிஸ்துவே நமது ஞானம்–கிறிஸ்துவே நமது நீதி–உண்மையான நீதிமானாக்கப்படுதலும், நீதிமானாக எண்ணப்படுதலும் வெவ்வேறானது – ''புதுசிருஷ்டிக்கு'' நீதிமானாக்கப்படுதல் அவசியமா? – பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகளின் நீதிமானாக்கப்படுதல் நம்முடையதைக் காட்டிலும் வித்தியாசமானது – ஆயிரம் வருட யுக நீதிமானாக்கப்படுதல் – கிறிஸ்து நமக்கு பரிசுத்தமானார் – ஆயிரம் வருட யுக பரிசுத்தமாக்கப்படுதல் – லேவியரின் மாதிரியான இரண்டு விதமான அர்ப்பணிப்புகள் – நிலபுலன்களில் சுதந்திரமில்லை – திரள் கூட்டம் – பரிசுத்தமாகுதலின் இரு பகுதிகள் – தேவனுடைய பங்கு – மனிதனுடைய பங்கு – அனுபவங்கள் இயற்கையான பண்புகளிலிருந்து மாறானது– பரிசுத்தமாகுதல் பூரணப்படுதலோ அல்லது உணர்ச்சிவசப் படுதலோ அல்ல – ''உன் நோய்களுக் கெல்லாம் அவரே பரிகாரி'' – கிருபையின் சிங்காசனத்தின் அவசியம்– எப்படி நீதிமானாக்கப்படுதல் பரிசுத்தமாகுதலோடு இணைகிறது – ''பரம அழைப்பு'' முற்றுப்பெற்றதிலிருந்து பிரதிஷ்டை – சபையின் மீட்பு அல்லது இரட்சிப்பு.

புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாகும் வாய்ப்பும், அதன் சாத்தியங்கள், சலுகைகள், ஆசீர்வாதங்கள்,மகிமைகள் ஆகியவற்றில் பங்கு பெறவும், பொதுவாக உலக மனுமக்களுக்கு கொடுக்கப்பட வில்லை. ஆனால் ''அழைக்கப்பட்டவர்கள்'' என்ற ஒரு வகுப்பாருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ளது. இது பிரத்தியேகமாக வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ''பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் தெரிந்து கொண்டேன் (அங்கீகரித்துக்கொண்டேன்)'' (ஆமோஸ் 3:2) என்று எழுதியிருக்கிறபடி, மாம்ச இஸ்ரயேலர் பூமியின் மற்ற ஜாதிகளிலிருந்தும் அல்லது ஜனங்களிலிருந்தும் அவருடைய விசேஷித்த ஜனமாக இருக்கும்படி தேவனால் அழைக்கப்பட்டனர். இருந்த போதிலும், இஸ்ரயேலருடைய அழைப்பு ''உன்னத அழைப்போ'' அல்லது ''பரலோக அழைப்போ'' அல்ல. ஆகவே அந்த ஜனங்களுக்கு உரிய வாக்குத்தத்தங்கள் ஒன்றிலும் நாம் பரலோக காரியங்களைக் குறித்து சொல்லப்பட்டதாக காண்கிறதில்லை. அவர்களுடைய அழைப்பு ஓர் ஆயத்த நிலைமைக்குரியது. அது ''முதலாவது கர்த்தர் மூலமாக அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்ட பெரிய இரட்சிப்பை'' (எபி. 2:3,4) பரம அழைப்பின் மூலம், பெற்று பலனடையும்படியாக அந்த தேசத்தில் மீந்தவர்களை ஆயத்தப்படுத்தியது. எனவே, உன்னத அழைப்பு அல்லது பரலோக அழைப்பின் விபரங்களை பழைய ஏற்பாட்டில் அல்ல, புதிய ஏற்பாட்டில் காண வேண்டும்.''தேவனுடைய ஆழமான காரியங்களை'' புரிந்து கொள்ள நமது மனக் கண்கள் திறக்கப்பட்டிருந்த போதிலும், மாம்ச இஸ்ரயேலருடன் தேவன் தொடர்புகொண்ட முறைகளிலும், தேவைகளை சந்தித்த விதத்திலும் ஒரு பரம அழைப்புக்கு அழைக்கப்பட்ட ஆவிக்குரிய வித்துக்கு பிரயோஜனமுள்ள ஒரே மாதிரியான பாடங்களை நாம் காண முடிகிறது; ஏனெனில், அப்போஸ்தலர் நமக்கு சுட்டிக் காட்டுகிறபடி, மாம்ச இஸ்ரயேலரும், அவர்களது பிரமாணங்களும், தேவனுடைய அணுகு முறைகளும், புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாகும்படி அழைக்கப் பட்டவர்களுக்குரிய நன்மையான காரியங்களுக்கு நிழலாகவும் அடையாளங்களாகவும் இருந்தன.

தெய்வீகத் திட்டம் எல்லாவற்றிலும் கிறிஸ்துவே முதன்மை யானவராக இருக்க வேண்டியிருந்தபடியால்,தேவ புத்திரராகிய இந்த புது சிருஷ்டிக்குத் தலைவராக, அவர்களது இரட்சிப்பின் அதிபதியாக, திருஷ்டாந்தமாக, முன்மாதிரியாக, அவரது அடிச்சுவடுகளில் அவர்கள்

நடக்கும்படியாக அவரே, முதன்மையானவராக, தலைமையானவராக, பிரதான ஆசாரியராக இருக்கவேண்டியது அவசியமாயிற்று. இந்த புது சிருஷ்டியில் ஏன் பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் ஒரு பங்கும் அல்லது பாகமும் பெறமுடியவில்லை என்பதற்கான மிகவும் திருப்திகரமான ஒரு காரணத்தை நாம் காண்கிறோம். யோவான் ஸ்நானனைக் குறித்து நமதாண்டவரின் வார்த்தைகளும் இதை அங்கீகரிக்கிறது: ''ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.'' (மத் 11:11) இவ்விதமாகவே, கடந்த யுகத்தின் அந்த(விசுவாசிகளின்) சகோதரர்களின் மேலான குணாதிசயங்களையும் விசுவாசத்தையும் போற்றிப் புகழ்ந்து பேசும்போது அப்போஸ்தலரும் பின்வருமாறு கூறுகிறார்: ''அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.'' (எபி 11:40)

மேலும், ஆதாமின் பாவத்தினால் வந்த ஆக்கினைக்குள்ளாக இன்னும் இருக்கும்போது ஒருவரும் அழைக்கப்பட முடியாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ''இந்த பரம அழைப்புக்கு'' அழைக்கப்படுவதற்கு முதலாவதாக ஆதாமின் தண்டனையிலிருந்து நீதிமானாக்கப்படுதல் அவசியமாகிறது. மேலும் இது மாம்ச இஸ்ரயேலருக்கும்கூட காளை, வெள்ளாட்டுக்கடா ஆகியவற்றின் இரத்தத்தின் மூலமாக கொடுக்கப்பட முடியவில்லை. ஏனென்றால் இவைகள் ஒருபோதும் பாவத்தை நீக்க முடியாது, இவைகள் மனுக்குலத்திற்கெதிரான நியாயத்தின் தேவைகளை உண்மையிலேயே சந்திக்கிற மேலான பலிகளின் மாதிரிகளாக மட்டுமே இருந்தன. நம்முடைய ஆண்டவராகிய இயேசு மீட்புக்கான கிரயத்தை செலுத்தி ''அவருடைய விலையேறப்பெற்ற சுய இரத்தத்தினால்'' நம்மை கிரயத்துக்கு கொள்ளும் வரைக்கும் அழைப்பு ஆரம்பிக்க சாத்தியமில்லை. மீட்பர் கிரயத்தைச் செலுத்தி, பரத்துக்கு ஏறி அவர்கள் சார்பில் அளிக்கும் வரை அப்போஸ்தலர் கூட புதுசிருஷ்டிக்கு தற்காலிக முறையிலேயே அழைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். அதற்கு பின்பு மாத்திரமே பெந்தெகொஸ்தே நாளில் பிதாவானவர் அந்த விசுவாசிகளை நேரடியாக அறிந்து, அவர்களை அவருடைய பரிசுத்த ஆவியினாலே ''புது சிருஷ்டிகளாகும்படி'' ஜநிப்பித்தார். ''நீதிமான்களையல்ல பாவிகளையே

மனந்திரும்புதற்கு அழைக்க வந்தேன்'' என்று ஆண்டவர் தனது ஊழியத்தின்போது சொன்னது உண்மைதான். (மத். 9:13) ஆனால் மனிதர்களை மனந்திரும்புதலுக்கென்று அழைப்பதற்கும், கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராக திவ்ய சுபாவத்திற்கு, உன்னத அழைப்புக்கு அழைக்கப்படுவதற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாவிகள் அதில் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. ஆகவே ''சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகளாயிருக்கிற'' நாம் எல்லோரும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் எல்லாவற்றிலுமிருந்து இலவசமாக நீதிமான்களாக்கப் படுவது அவசியமாகிறது.

இதோடு ஒத்துப்போகிற விதத்தில் ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்தில் முகவுரையாக பின்வருமாறு கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். (ரோம. 1:2) அந்த நிருபம் ''ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர் களுமாகிய அனைவருக்கும்'' அவர்கள் பரிசுத்தமாக இருக்கும் படியாகவும், திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்படியாகவும் எழுதப்பட்டிருக்கிறது. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் முகவுரை, ''கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும் பரிசுத்தவான் களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும்,....இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும்'' (1கொரி. 1:2) என்று கூறுகிறது. தனிப்பட்ட முறையிலான இந்த அழைப்பு அடுத்து வரும் வசனத்தில் (வச.9) இன்னும் அதிகமாக முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறது: ''தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமா யிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.'' இது ஒரு சம்பந்தத்தை, ஒன்றாயிருத்தலைக் குறிக்கிறது. ஆகவே அவரது உண்மையினிமித்தம் அவருக்கு வெகுமதியாக அளிக்கப்பட்ட மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் அவரோடு கூட உடன்சுதந்திரர்களாக, புது சிருஷ்டிகளாக மீட்பரோடு ஒன்றித்து இருக்கக்கூடிய சிலரை மனிதருக்குள்ளே கண்டுகொள்ளும்படியாக இந்த அழைப்பு வருகிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

''கிறிஸ்துவுடனே நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படியாகும்'' (ரோம.8:17) என்ற அப்போஸ்தலரின்

வார்த்தையின்படி ஒரு சில நிபந்தனைகளின்படியே கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்திரர்களாக்கப்படுவோம் என்பதை நமக்கு நினைவு படுத்துகிறது. கொரிந்தியர்களுக்கு எழுதிய இதே நிருபத்தில் (வச.24) இங்கே அவர் விவாதிக்கிற அழைப்பானது குறிப்பிட்ட காலத்திற்கு யூதர்களுக்கென்று வைக்கப்பட்டிருந்த அதே அழைப்பு அல்ல என்று காட்டுகிறார். மேலும் எல்லாரும் அழைக்கப்படவில்லை என்பதையும் அவருடைய வார்த்தைகள் எடுத்துக்காட்டுகின்றன. அவர் அழைக்கப் படாத யூதருக்கு இடறலாயும் அழைக்கப்படாத கிரேக்கருக்கு பைத்தியமாயும் இருக்கிறார். ''ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.'' நமது ஆண்டவர் தன்னுடைய மரணத்தின்மூலம் புது உடன்படிக்கையின் ''மத்தியஸ்தராகும் வரை'' சுவிஷேச யுகத்தின் இந்த அழைப்பை பிரகடனப்படுத்த முடியவில்லை என்பதை எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் (எபி. 9:14,15) அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார். ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் (நியாயப்பிரமாண உடன்படிக்கை) காலத்தில் நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக புது உடன் படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். (எபி. 9:15)

அழைக்கப்பட்டவர்கள்–வல்லவர்கள் அநேகரில்லை ஞானிகள் அல்லது கற்றுத்தேர்ந்தவர்கள் அநேகரில்லை

இந்த விசேஷமான அழைப்பு சிலருக்கு மாத்திரமே கொடுக்கப் படுமென்றால், விழுந்து போன மனிதருக்குள் பிரபுக்களுக்கும், மிகவும் நல்லொழுக்கம் உள்ளவர்களுக்கும், மிகவும் திறமையுள்ளவர்களுக்கும் மாத்திரமே கொடுக்கப்படும் என்று நாம் நினைப்பது இயற்கையே. ஆனால் அப்போஸ்தலர் இதற்கு எதிர்மாறாக பின்வருமாறு சொல்கிறார். ''எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து

கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் பலவீனமானவைகளை தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்.'' (1கொரி. 1:26–29) மாம்சமான எவனும் அளிக்கப்படப்போகும் ஆசீர்வாதங்களுக்கு தான் எவ்விதத்திலும் எந்த அளவிலும் தகுதியானவன் என்று தேவனுக்கு முன்பாக பெருமைபாராட்டாதபடிக்கு இப்படிச் செய்வது தேவனுடைய நோக்கமாயிருந்தது என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். அவருடைய சித்தத்தையும், மனவிருப்பத்தையும் நிறைவேற்ற அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள், நம்பிக்கைகள் மூலமாக அழைக்கப்பட்டவர்களுக்குள்ளே கிரியை நடப்பித்து, பலவந்தமாய் அல்ல, மாறுதலை உண்டு பண்ணுகிற சத்தியத்தின் வல்லமையின் மூலமாக, இழிவானவைகளிலிருந்து, அற்பமாய் எண்ணப்பட்டவை களிலிருந்து, குணாதிசயங்களை உயர்ந்ததாக, சுத்தமாக மாற்றுகிற தேவனின் வல்லமைக்கு, முழுவிஷயமும் தூதருக்கும் மனிதருக்கும் ஓர் உதாரணமாக இருக்கும்படியாக உள்ளது. இந்த திவ்ய ஒழுங்கு பிதாவின் மகிமைக்கு ஏதுவானதாக மாத்திரம் அல்லாமல் அவர் எவர்களை ஆசீர்வதிப்பாரோ அவர்களது தாழ்மைக்கும், நித்திய தன்மைக்கும் ஏதுவாக இருக்கிறது. இந்த அழைப்பும், அதன் மூலம் கிடைக்கும் இரட்சிப்பும் மனிதன் மூலமாகவோ அல்லது அவனது பலத்தினாலோ அல்ல என்றும், அது தேவனுடைய ஈவு என்றும், அது புதிய ஏற்பாட்டில், பல்வேறு அறிக்கைகள் மூலம் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டுள்ளது. அழைப்பு என்று வரும்போது அது ஏன் பிரபுக்களுக்கு வசீகரமானதாகக் காணப்படாமல், அறியாமையிலுள்ளவர்களுக்கு அதிக வசீகரமாக காணப்படுகிறது என்று பார்ப்பதும் கடினமாக இல்லை.

விழுந்துபோன சுபாவத்தில் பெருமை என்பது ஒரு முக்கியமான தொன்றாயிருக்கிறது, ஆகவே தொடர்ந்து அது கவனிக்கப்படவேண்டும். பெரும்பான்மையான, சராசரியானவர்களைக் காட்டிலும் குறைந்த பட்சம் விழுந்தவர்கள் மேலானவர்களாயிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இந்த நிலையை உணரவும், பிறரைக் காட்டிலும் ஒரு சிறப்புத்தன்மை யுடையவர்களாகவும் தங்களை எண்ணி பெருமைகொள்ளக் கூடியவர்களாயுமிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனைத்

தேடுபவர்களாகவும், அவருடைய ஆசீர்வாதங்கள், அனுக்கிரகங்கள் மேல் வாஞ்சையுள்ளவர்களாயும் இருந்தாலும் அவர்களைக் காட்டிலும் அதிகமாக விழுந்துபோன, கீழ்நிலை யிலுள்ளவர்களை விட அவர்கள் ஆண்டவரால் வித்தியாசமான முறையில் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. ''பரிபூரணம்'' என்பதுதான் தேவனுடைய நிலையாகும். மேலும் அந்த நிலையை எட்டாத ஒவ்வொன்றும் ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டிருக்கிறது என்று அவர் அறிக்கை செய்கிறார். மேலும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஒவ்வொருவரும் வீழ்ச்சியினால் அதிகமாக அல்லது அதைக்காட்டிலும் குறைவாக உபத்திரவத்தை அனுபவித்திருக்கிறவனும் அதே மீட்பரையும், பாவத்திற்கான பலியையும் பார்க்கும்படி சுட்டிக்காட்டப்படுகிறான். உயர்ந்த நிலையில் இருப்பவர்களைக்காட்டிலும் அற்பமாய் எண்ணப்படுபவர்களுக்கும் அதிகமாக விழுந்துபோன நிலையில் இருக்கும் மனித குடும்பத்துக்கும் ஏற்றுக்கொள்ளப்படுதலுக் குரிய இந்த நிபந்தனைகள் நிச்சயமாகவே கவனத்தைக் கவரக்கூடியதாக இருக்கும். பெலகீனமான, விழுந்து போன நிலையில் இருப்பவர்கள், தங்களுடைய குறைபாடுகளை நன்கு எண்ணிப்பார்த்து, அவர்களுக்கு ஒரு இரட்சகர் தேவைப்படுகிறார் என்பதை அதிகதிகமாக உணருகிறார்கள். ஆனால் அதே வேளையில் சிறிதளவு விழுந்து போன நிலையில் உள்ளவர்கள் ஒரு குறித்த அளவு சுயதிருப்தியோடு, நீதிமானாக்கப்படுதல் ஓர் இலவசமான வெகுமதி என்று ஏற்றுக் கொள்ளும்படிக்கு, இதன் அடிப்படையில் இதன் மூலம் மாத்திரமே இரக்கத்தைப் பெறவும், சகாயம் செய்யும் கிருபையை அடையவும், கிருபாசனத் தண்டையில் சேரவும், கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்பாகத் தாழ விழுந்து பணியவும் மனதில்லாதிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சுய புத்தியின்மேல் சாயவும், நல்ல திருப்தியான உணர்வைப் பெற்றுக் கொள்ளவும் மனதுள்ளவர்களாயிருக்கிறார்கள்; அது அவர்கள் இடுக்கமான வாசல் வழியாகவும் குறுகலான பாதை வழியாகவும் உள்ளே வரத் தடை பண்ணும்.

புது சிருஷ்டியின் அங்கங்களாகும்படிக்கு அவர் அழைக்கும் அழைப்புக்கு சம்பந்தப்பட்ட எல்லாரிடமும் தாழ்மையை தேவன் ஒரு நிபந்தனையாக வைப்பது தெளிவாகத் தெரியவருகிறது. ''ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' (1பேது. 5:6) என்று அப்போஸ்தலர் இதைச் சுட்டிக்காட்டுகிறார். அவர் எப்படி மரணபரியந்தம், அதாவது சிலுவை

மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினாரோ, அந்த அளவுக்கு தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார் என்று கிறிஸ்து இயேசுவின் முன்மாதிரியை அவர்களுக்கு பவுல் சுட்டிக்காட்டுகிறார். ''பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்'' (1பேது. 5:5) என்று கூறி பாடத்தை பேதுரு சுட்டிக்காட்டுகிறார். சகோதரரே நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்,மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, முக்கியமாக இந்த உலகத்தில் தரித்திரர்களை, விசுவாசத்தில் ஐசுவரியவான்களை அழைத்தார். தாழ்மையை ஒரு நிபந்தனையாக தேவன் வைப்பதோடு விசுவாசத்தையும் அவர் ஒரு நிபந்தனையாக வைக்கிறார்; அவரைப் பூரண, முழுமனதோடு விசுவாசிக்கக் கற்றுக்கொண்டு, அவருடைய கிருபை அவர்களுக்குப் போதுமானது என்றும், அவர் அழைத்த அழைப்பின் வெற்றியை அடைய அவர் அளிக்கும் பெலனே போதுமானது என்றும் ஏற்றுக்கொள்கிற புது சிருஷ்டிகளுக்கென்று அதை வைத்திருக்கிறார்.

இந்த அழைப்புக்கு குணாதிசயம் ஒரு நிபந்தனையாகும்

ஞானிகளையும், வல்லவர்களையும், பிரபுக்களையும் தேவன் அழைக்கவில்லை. ஆகையால் இதிலிருந்து அவருடைய ஜனங்கள் இழிவானவர்கள் அல்லது அறியாமை உள்ளவர்கள் என்றோ, பொல்லாதவர்கள், மோசம்போனவர்கள், தாழ்ந்தவர்கள் என்றோ நாம் புரிந்து கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, அவர் அழைக்கிறவர்களுக்கு முன்பாக எவ்வளவு உயர்ந்த நிலையை வைக்க முடியுமோ அதை வைக்கிறார். அவர்கள் பரிசுத்தத்திற்கும், தூய்மைக்கும், விசுவாசத்திற்கும், நீதிக்கும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். மாத்திரமல்ல, அவைகளை தங்கள் இருதயத்தில் வைத்து பெருமிதம் கொள்வதோடு, அவைகளை, தங்களை இருளின் அந்தகாரத்தினின்று, ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய நாமத்துக்கு மகிமையாக தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்தவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (2பேது. 1:3; 1பேது. 2:9) உலகம் அவர்களை மாம்சத்தின் மூலம் அறிந்திருக்கலாம்; மேலும் அவர்கள் மாம்சத்தின்படி மற்றவர்களைக்காட்டிலும், அதிக

உயர்ந்தவர்களாகவோ அல்லது நாகரீகம் உடையவர்களாகவோ இல்லாதிருக்கலாம்– பெரும்பாலும் அப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்படுவது மாம்சத்தின்படியல்ல, ஆனால் அவர்களுடைய ஆவியின்படியும், அவர்களுடைய மனதின்படியும், அவர்களுடைய நோக்கங்களின்படியும், அவர்களுடைய இருதயங்களின்படியும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். ஆகவே, இதனிமித்தம் அவர்கள் கிறிஸ்துவுக்குள் தேவனின் கிருபையையும், அவர்களின் பாவங்களுக்கான மன்னிப்பையும் பெற்று தங்களை ஆண்டவருக்கென்று அர்ப்பணிக்கும் வினாடியிலிருந்து, அவர்கள் ஆதாமின் பிள்ளைகளாயிருந்தபடியால் இயல்பாகவே அவர்களில் உள்ள கறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டதாக எண்ணப்படுகிறார்கள்; மேலும் அவர்களுடைய குறைகள் மறைக்கப்பட்டு, அவர்களுடைய மாம்சம் கிறிஸ்துவின் புண்ணியத்தின் வஸ்திரத்தால் மூடப்பட்டதாக எண்ணப்படுகிறார்கள். இந்த புது மனதும், புது சித்தமுமே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அழைக்கப்பட்ட புது சிருஷ்டியாகும். மேலும் இந்த புது மனதுடன் மாத்திரமே சம்பந்தங்கொள்ளப்படும்.

உண்மைதான், புதிய மனது வளர்ச்சியடையும் போது, அது உயர்ந்ததாக, கனமுள்ளதாக, மேலானதாக காண்பிக்கும்; மேலும் படிப்படியாக, அது அதிகதிகமாக மாம்சத்தின்மேல் கட்டுப்பாட்டை கொண்டு வரும்; இதனிமித்தமாக, உலகத்தார் ஆண்டவரை அறிந்துகொள்ளாதது போல புது சிருஷ்டிகளையும் அறிந்துகொள்ள மாட்டார்கள்; புது சிருஷ்டியின் நற்கிரியைகளையும், பரிசுத்த ஜீவியத்தையும், தெளிந்த புத்தியையும் கண்டு சில சமயங்களில் அவர்களுக்கு இழிவான நோக்கத்தை கற்பிப்பார்கள். புதிய மனது படிப்படியாக வளர்ந்து ஆண்டவருடைய மனதோடு அதிகதிகமாக இசைந்து வந்தாலும், அவர்களோடு இணைந்திருக்கிற அழிந்து போகிற சரீரத்தின்மேல் அவர்கள் முழுக்கட்டுப்பாட்டை ஒருபோதும் அடைய மாட்டார்கள். ஆனாலும் தேவனுக்கு உடையவைகளாகிய அவர்களுடைய சரீரத்தினாலும் அவர்களுடைய ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துவதே நிச்சயமாக அவர்களது நோக்கமாகவும், முயற்சியாகவும் இருக்கிறது. (1 கொரி. 6:20)

''புது சிருஷ்டியின்''குணாதிசயத்திற்கான சில குறிப்புகளையும் வரம்புகளையும் கவனிக்கலாம். ''விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை

போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்'' (1தீமோ. 6:12) என்று அப்போஸ்தலர் அழைக்கப்பட்டவர்களில் ஒருவருக்கு புத்தி சொல்வது எல்லாருக்கும் பொருத்தமானதா யிருக்கிறது. கிருபையின் உடன் படிக்கையின் பிரகாரம் மாம்சமானது கிறிஸ்துவின் நீதியினிமித்தம் வரும் புண்ணியத்தால் மூடப்பட்டிருந்தாலும் இந்த புது சிருஷ்டிகள், சத்துருவோடும், சுற்றி இருக்கிற பாவத்தோடும், அதன் பெலகீனத்தோடும் யுத்தம் செய்யாமல், வெற்றியையும், பெரிய வெகுமதியையும் பெற எதிர்பார்க்கக் கூடாது. ''தம்முடைய இராஜ்யத்திற்கும், மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டும்'' (1தெச. 2:11) என்று அப்போஸ்தலர் இந்த வகுப்பாருக்கு மறுபடியும் புத்தி சொல்கிறார். புது சிருஷ்டியானவன் தன்னுடைய அழைப்பையும், அதன் பலனாக இராஜ்யத்தில் கிடைக்கிற மகிமையையும் வெகுமதியையும் அறிந்து கொள்ளுவது மாத்திரமல்ல, அவன் தற்போதைய வாழ்வில் தேவனுடைய மற்றும் அவருடைய நீதியின், பிரதிநிதியாக இருக்கிறான் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அதற்கேற்றபடி அவன் நடக்கும்படி முயற்சி செய்ய வேண்டும்.'' உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' (1பேது. 1:15,16) என்பதை நாம் வாசிக்கிறோம். மறுபடியும் அதே நிருபத்தில் ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும்'' (1பேது. 2:9) என்றும் நாம் வாசிக்கிறோம்.

புது சிருஷ்டியாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், மாம்சமான இஸ்ரயேலர்களைப் போன்று குறிப்பிட்ட பிரமாணங்களுக்குக் கீழாக அடிமைப்படுத்தப்படவில்லை. ஆனால் தேவன் ஏற்றுக் கொள்ளாத காரியங்கள் என்று அறியப்பட்டவைகளைத் தானாகவே முன்வந்து தவிர்த்துவிடும் விஷயத்தில் மாத்திரமல்ல, ஆண்டவருக்கென்றும், சகோதரர்களுக்கென்றும், சத்தியமும், நீதியுமான ஊழியத்தில் தானாக முன்வந்து மனித உரிமைகளையும், நலன்களையும் தியாகம் பண்ணும் விதத்திலும் அவர்கள் ஆண்டவர்மேல் வைத்த அன்பு தானாக வெளிப்படும்படியாக அவர்கள் ''சுயாதீனப் பிரமாணத்துக்கு'' (யாக். 2:12)கீழாக இருந்தார்கள்.''தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல

பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்'' (1தெச. 4:7) என்று அப்போஸ்தலர் அறிக்கையிடுவது இதனோடு கூட ஒத்திருக்கிறது. மறுபடியுமாக அவர் ''நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாதிருங்கள்'' (கலா. 5:13) என்றும் சொல்கிறார். அந்த சுயாதீனத்தை பொல்லாப்பு செய்யக் கிடைத்த தருணமாக உபயோகப்படுத்த வேண்டாம். அதற்கு மாறாக, உங்கள் சுயாதீனத்தை சத்தியத்திற்காகவும், அதன் ஊழியத்திற்குமாக தற்போதைய உரிமைகளை தியாகம் செய்ய உபயோகப்படுத்துங்கள். இப்படியாக நீங்கள் ராஜரீக ஆசாரியத்துவத்தின் பலி செலுத்துகிற ஆசாரியர்களாக, காலப் போக்கில் திவ்விய ஆசீர்வாதங்களை உலகத்திற்கு அளிக்கிறவர்களாக, கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராக, தேவனுடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறவர்களாக இருப்பீர்கள்.

அநேக வேதபகுதிகள் புது சிருஷ்டிகளுக்கான அழைப்பு, மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்குமான அழைப்பு என்று சுட்டிக்காட்டுகின்றன. (பிலி. 3:14; 2பேது. 1:3) ஆனால் எல்லா இடங்களிலேயும் ஆண்டவர் இந்த மகிமைக்கான பாதை உபத்திரவம், பரிட்சைகள், பலிகள் நிறைந்த குறுகலான பாதை என்று குறிப்பிடுகிறார். ஆகவே அவருடைய ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்கள், அதனால் நிரப்பட்டவர்கள் மாத்திரமே, இறுதியில் ஜெயங்கொள்ளுகிறவர்களாக, அவர்கள் எதற்காக அழைக்கப்பட்டார்களோ அந்த மகிமைகளைப் பெற்றுக் கொள்வார்கள். ''என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்'' என்று வாக்குத்தத்தம் பண்ணியவரால் அழைக்கப்பட்டவர்களுக்கு அதற்கான வழி சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

நாம் பல்வேறு அழைப்புக்களுக்கு என்று நினைக்கக்கூடாது, ஆனால் அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறபடி ''நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்'' (எபே. 4:4) என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே இந்த தெரிந்துகொள்ளுதலுக்கு வாய்ப்பு உண்டு என்று எவரும் நினைப்பது தவறானதாகும். உண்மையிலேயே, உலகத்தைப் பொறுத்த வரையில், அடுத்த யுகத்தில் அழைப்பு இருக்காது. அந்த யுகத்தில் ஒரு விசேஷமான நிலைமைக்கு மற்றவர்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட, வித்தியாசமானவர்களிலிருந்து ஒரு விசேஷ வகுப்பாரை தேர்வு செய்யமாட்டார். ஆயிர வருட ஆட்சியின்போது உலகத்தை அழைப்பதற்கு பதிலாக, ஆண்டவர் அவர்களை நீதியின் ஒழுங்குகளுக்கும், பிரமாணங்களுக்கும்

கீழ்ப்படியுமாறு கட்டளையிடுவார். மேலும் ஒவ்வொரு சிருஷ்டியும் ஆயிர வருட அரசாங்கத்துக்கு கீழ்ப்படியுமாறு கட்டளையிடப்படுவார்கள் (வேண்டிக்கொள்ளப்படமாட்டார்கள்). இல்லாவிடில் அவன் தன்னுடைய கீழ்ப்படியாமைக்குத் தண்டனைகளைப்பெறுவான்; மேலும் ''அந்தத் தீர்க்கதரிசியின் சொல் கேளாதவனெவனோ, அவன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்'' என்றபடி கடைசியில் அழிக்கப்படுவான்; மறுபடியும் மீள்வேன் என்ற நம்பிக்கை இல்லாதபடி, அவன் இரண்டாம் மரணத்திற்குட்படுவான்.

நாம் முன்பு பார்த்திருக்கிறபடி, இந்த யுகத்தில் தெரிந்தெடுக்கப் பட்ட இரண்டாவது வகுப்பினராக திரளான கூட்டம் (வெளி. 7:9–14) இரட்சிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், இந்த சுவிசேஷ யுகத்திலும் இரண்டாவது அழைப்பு என்று ஒன்று கிடையாது.''சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்தவர்களும், ஒருவரும் எண்ணக் கூடாதவர்களான'' அவர்கள் தேவனை அவருடைய ஆலயத்தில், சிங்காசனத்தில் வீற்றிருக்கிற, ஆலயத்தின் அங்கங்களாக அல்லது ஜீவகற்களாக இருக்கும் மணவாட்டிக்கு முன்பாக நின்று, தாழப்பணிந்து ஆராதனை செய்வார்கள். ஆனால் இந்த இரண்டாவது திரளான கூட்டத்தாருக்கு, தனியான, துல்லியமான அழைப்பு கிடையாது. அவர்கள் மனப்பூர்வமாக உடனடியாக கீழ்ப்படிந்திருப்பார்கள் என்றால், அவர்கள் எளிதாக இன்னும் அதிக திருப்தியுடன் திவ்ய சுபாவத்தின் மகிமையை அடைந்திருக்கலாம். அவர்களுக்கு குருத்தோலைகள் கொடுக்கப்படுவதிலிருந்து முடிவில் வெற்றி பெற்றவர்களாக வந்தவர்கள் என்று தெரிகிறது. ஆனால் அவர்களுடைய வைராக்கியக் குறைவு அவர்களை ஜெயங்கொள்ளுகிற வகுப்பினராக ஏற்றுக்கொள்ளப்படுவதிலிருந்து தடை செய்தது. இது அவர்களை புது சிருஷ்டியின் பங்குதாரர்களாக, நித்திய உடன் சுதந்திரராக ஆவதையும் மகிமை அடைவதையும் தடுத்து நிறுத்திற்று. அது மாத்திரமல்ல, ஜெயங்கொள்கிறவர்களுக்கு தற்கால வாழ்க்கையில்கூட சொந்தமாயிருக்கிற, அவர்கள் அனுபவிக்கிற அதிக மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், திருப்தியையும் அற்றுப்போகப் பண்ணிற்று. நாம் முன்பு பார்த்திருக்கிறபடி, அவர்கள் பெறக்கூடிய இடம் தூதர்கள் இருப்பது போன்ற ஒரு நிலை அல்லது ஸ்தானமாக இருக்கக்கூடும்.

''இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்,'' ''இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள்

இருதயங்களை கடினப்படுத்தாதிருங்கள்'' (2கொரி. 6:2; எபி. 3:15) என்று அப்போஸ்தலர் கூறுவதைக் கேட்கும்போது காலம் குறைவானது என்று அழைப்பைப் பற்றிய மற்றொரு சிந்தனை வருகிறது. இந்த அனுக்கிரக நாள் அல்லது அனுக்கிரக வருஷம், அல்லது அனுக்கிரக காலம் அல்லது யுகம், நம்முடைய ஆண்டவர் இயேசுவோடும் அவருடைய பிரதிஷ்டையோடும் தொடங்கியது. அவர் அழைக்கப்பட்டார். அவர் கனத்தை தானே எடுத்துக்கொள்ளவில்லை, அது இன்றைக்கு வரை நீடித்திருக்கிறது– ''ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.'' (எபி. 5:4) மனுக்குலத்திலிருந்து திவ்ய சுபாவத்துக்கு மாறும்படியான உரிமையை பெற்ற மனிதன், ஆதாமின் குடும்ப அங்கத்தினராகவும், உடன் சுதந்திரராகவும் இருந்து, தன் ஸ்தானத்தை இழந்த நிலையில், கிறிஸ்துவோடு கூட, அவருடைய எல்லா ஐசுவரியங்களிலும், மகிமையிலும், கனத்திலும் உடன்சுதந்திரராய், அவருடைய அழைப்பை ஏற்று நிரந்தரமாய் வாரிசானவன் உண்மையிலே துணிச்சலானவன்தான்.

இந்த அழைப்பின் அல்லது இரட்சிப்பின் அல்லது அனுக்கிரக காலத்தின் ஆரம்பத்தைக் காட்டிலும் அதன் முடிவு அதிக நிச்சயமாகும். ஒரு புதிய சிருஷ்டியை அமைக்க ஒரு நிச்சயமான, குறிப்பிட்ட தொகையினர் தேவனால் நியமிக்கப்பட்டார்கள். அந்த தொகை முற்றுப்பெற்றவுடன் சுவிசேஷ யுகத்தின் வேலை நிறைவடையும். சரியான தொகையினர் அழைக்கப்பட்டவுடன் ''அழைப்பே'' நின்றுவிடும் என்பதையும் கூட நாம் கவனிக்கக் கூடும். ஏனெனில் தேவன் முன்கூட்டியே அழைக்கப்பட்டவர்களில் எத்தனை பேர் கீழ்ப்படிதலில் தவறுவார்கள் என்பதையும், எத்தனை பேர் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நிச்சயிப்பதில் தவறுவார்கள் என்பதையும், ஆகவே அந்த இடங்களில் மற்றவர்களால் நிரப்பப்பட வேண்டும் என்பதையும் அறிந்திருந்தாலும் அவர் முன் குறித்ததற்கு மேலாக ஒரு நபரைக் கூட அழைப்பது அவருக்கு ஏற்றதாயிருக்காது. அதிகப்படியான ஒரு அழைப்பைக் கொடுத்து அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட முடியாமல் போகும்போது அவருடைய சிருஷ்டிகளைப் பரியாசம் செய்வது போன்றது கூட சர்வவல்லவருக்கு ஏற்றதாக இருக்காது. இந்த குறிப்பிட்ட அளவு ராஜரீக ஆசாரியத்துவத்திற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற சிந்தையை வேதாகமம் எடுத்துக் காட்டுகிறது. மேலும் ஒவ்வொருவரும் ஆண்டவருடைய அழைப்பை

ஏற்று அதற்கு கீழாக அர்ப்பணிக்கும்போது கிரீடங்களில் ஒன்று அவனுக்கென்று தனியாக எடுத்து வைக்கப்படுகிறது. ஆகவே, ஒருவன் அழைப்பை ஏற்றுக் கொண்டு முன் வரும்போது, அவனுக்கு இன்னமும் கிரீடம் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்றும், வேறு ஒருவர் அவிசுவாசத்தை நிரூபித்து அவருடைய உரிமையை இழக்கும் வரை காத்திருக்க வேண்டும் என்றும் சொல்லும்படிக்கு ஆண்டவர் எவரையும் அழைப்பார் என்று எண்ணி விடுவது சரியல்ல. ‘‘ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு’’ என்கிற ஆண்டவருடைய புத்திமதி குறிப்பிட்ட தொகையிலான கிரீடங்களைக் குறிக்கிறது; மாத்திரமல்ல, இந்த யுகம் முற்றுப் பெறும்போது, தங்கள் உடன்படிக்கையின்படி உண்மையாய் ஜீவிக்காதவர்கள் நிராகரிக்கப்படும் ஒரு காலம் வரும் என்பதையும், அந்த காலத்தில் ஏனையோர் தங்கள் கிரீடங்களுக்குக் காத்துக்கொண்டிருப்பார்கள் என்பதையும் குறிக்கிறது. (வெளி. 3:11)

நாங்கள் அறிந்த வரை, புது சிருஷ்டியின் அங்கங்களாக நம்முடைய மீட்பரோடு உடன் சுதந்திரராக இருக்கும் படியான பொதுவான அழைப்பு 1881ம் வருடத்தில் நிறைவு பெற்றது. திரளானோர் (எல்லாவித கிறிஸ்தவ சபைப்பிரிவுகள் –ஏறக்குறைய இருபதாயிரம் அல்லது முப்பதாயிரம்) அந்த சமயத்தில் தங்களை முழுமையாக பிரதிஷ்டை செய்தவர்கள், தன்னைத்தானே ஜீவ பலியாக செலுத்தும் அவர்களுடைய உடன்படிக்கைக்கு உண்மையாய் இருக்கவில்லை என்று அஞ்சுகிறோம். இவர்கள் ஒருவர்பின் ஒருவராக அவர்களுடைய பரீட்சையின் முழு அளவையும் எட்டும் பொழுது உண்மையில்லாதவர்கள் என்று காணப்பட்டால், அழைக்கப்பட்டவர்களின் ஐக்கியத்திலிருந்து நிராகரிக்கப்படுகிறார்கள். இதற்கிடையில் அழைப்பிற்குள்ளாக இல்லாதவர்களாக இருந்த போதிலும், தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் கிறிஸ்துவோடும், அவருடைய உடன் சுதந்திரரோடும் உள்ள ஐக்கியத்தில் முழு உறவு முறைக்கு அனுமதிக்கப்படும் அளவுக்கு அவர்களும் கூட பரீட்சிக்கப்பட்டு தகுதியற்றவர்களாய் காணப்பட்டால் இதே விதமாக நிராகரிக்கப்பட்டு அவர்களுடைய இடங்கள் பிரதிஷ்டை செய்யும் மனோபாவத்தோடு காத்திருக்கிற மற்றவர்களால் நிரப்பப்படும். இப்படிப்பட்ட ஒழுங்கின்படி 1881ம் வருடத்திலிருந்து எந்தவித பொது அழைப்புக்கும் தேவை ஏற்படவில்லை என்று தெரிகிறது. 1881ம் வருடம் முற்றுப் பெற்ற பொதுவான அழைப்புக்குள் வராமலே, இப்போது

அனுமதிக்கப் பட்டவர்கள் தங்களுடைய சிலாக்கியங்களையும் வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்ளலாம். எப்படியென்றால் வெளியே செல்பவர்களின் இடங்களை அவர்கள் நிரப்பும்படியாக விண்ணப்பத்தின் மூலம் அனுமதிக்கப்படுகிறார்கள். புது சிருஷ்டியின் கடைசி அங்கத்தினர் தகுதியுள்ளவர் என்று காணப்படும் வரைக்கும், மற்றும் எல்லா கிரீடங்களும் நித்தியமாக பகிர்ந்தளிக்கப்படும் வரைக்கும் வெளியே செல்வதும் உள்ளே வருகிறதுமான வேலை தொடரும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பாகும்.

அப்போஸ்தலர் கூறுகிறார்: ''சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல் உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்கள் அல்லவே.'' (1தெச. 5:4) வேதத்தில் உள்ள எல்லா திருஷ்டாந்தங்களுக்கும் இசைவாக, இந்த சுவிஷேச யுக அறுப்பின் காலத்தில், யுகா யுகத்தைப்பற்றிய தேவ ஏற்பாடு, மனுஷ குமாரனின் பிரசன்னம், அறுப்பின் வேலை ஆகியவைகளைப் பற்றிய ஒரு சத்திய அறிவு ஆண்டவருடைய பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்கள் எல்லாருடைய கவனத்திற்கும் கொண்டு வரப்படும் என்றும் நாங்கள் நம்ப முற்படுகிறோம். முதலாம் வருகையின்போது, பூமிக்குரிய இஸ்ரயேலை பரீட்சிக்க ஆண்டவருடைய பிரசன்னமும் யூத யுகத்தின் அறுவடையும் உதவியது போன்று, ''தற்கால சத்தியம்'' இங்கு பிரதிஷ்டை செய்து கொண்டவர்கள் மத்தியில் சரியான இருதய நிலையை பரீட்சிக்க அல்லது நிரூபணம் செய்ய ஏற்றது என்று நம்புகிறோம். இந்த வேளையில் சத்தியத்தைக் குறித்த தெளிவான அறிவிற்குள் வருகிறவர்களும், விலையேறப்பெற்ற இரத்தத்தில் அவர்களுக்குள்ள விசுவாசத்தின் உண்மையான சாட்சியைக் கொடுப்பவர்களும், ஆண்டவருடைய ஊழியத்திற்கென்று அவர்களுடைய ஆழமான அர்ப்பணிப்பை செய்தவர்களும், தேவ ஏற்பாட்டைக் குறித்து தெளிவான ஆழ்ந்த அறிவு கொடுக்கப்பட்டவர்களும், 1881ம் வருடத்திலிருந்து அவர்கள் அர்ப்பணித்திருந்த போதிலும் கிறிஸ்து இயேசுவோடு உடன் சுதந்திரராக இருக்கும்படியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என்பதற்கு இந்த ஆதாரத்தை வைத்திருக்கிறார்கள் என்று எண்ணப்பட வேண்டும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பின் ஒரு பகுதியாகும். அழைப்பு முற்றுப் பெறுவதற்கு வெகு காலத்திற்கு முன்பாக அவர்களுடைய பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்குமென்றால், இவ்வளவு அதிகமான காலத்திற்குப் பின்னர் பிரதிஷ்டையை குறித்த சரியான ஒரு நிலைக்கு வந்து

கொண்டிருக்கிறார்கள் என்றும், ஆகவே தற்கால சத்தியம் அவர்களுக்கு ஓர் ஆசீர்வாதமாகவும் ஆண்டவரோடுகூடிய அவர்களுடைய ஆவியின் ஐக்கியத்தின் சாட்சியாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் நாம் புரிந்து கொள்ளலாம். 1881ல் அல்லது அதற்கு முன்னால் அர்ப்பணம் செய்து கொண்டவர்களுக்குள் அவர்கள் இல்லாதிருந்தால், இதற்கு முன்னால் அழைக்கப்பட்டு ஆனால் வைராக்கியத்தில் குறைவு பட்டு, அனலுமில்லாமல் குளிருமில்லாமல் இருந்ததினால் வாந்தி பண்ணப்பட்ட, யாரோ ஒருவரின் இடம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இப்பொழுது அவர்கள் அழைக்கப்பட்ட வகுப்பினரின் அமைப்பிற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளலாம். தன்னுடைய இடத்தை இழந்தவர்கள் தங்களது வைராக்கிய குறைவினால், துன்பம் வரும் வேளையில் தன்னுடைய பங்கை சரியான முறையில் பெற்றுக்கொள்ளவும், தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்றறிந்திருக்க வேண்டிய சிட்சிப்பு, மற்றும் ஒழுங்குகளின் கீழ் வரவும், இதன் மூலம் விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்கவும், மேலும் தானாக மனப்பூர்வமாக, மகிழ்ச்சியுடன் உபத்திரவத்தின் மூலமாக கிறிஸ்துவோடு சிங்காசனத்தின் ஓர் இடத்திற்கு வரவும் தவறினார்கள். ஆனால் மகா உபத்திரவத்தின் காலத்தின் வழியாக ''திரள் கூட்டத்தின்'' ஓர் இடத்திற்கு வரும்படியாயிற்று.

தேவன் எவ்வாறு அழைக்கிறார்

''நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்.... அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும், பரிசுத்தமுமானார்.'' (1கொரி. 1:30,31)

கிறிஸ்து நம்முடைய ஞானம்

இரட்சிப்பின் படிகளில் ஞானத்திற்கு முதலாவது இடம், முக்கியமான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ''ஞானமே முக்கியம், ஞானத்தை சம்பாதி; என்னத்தை சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்'' என்பதோடு ஞானியின் சாட்சியும் ஒத்துப்போகிறது. நாம் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் எவ்வளவு பெலவீனம் அல்லது பலவான்களாக இருந்தாலும் நாம் சரியான மார்க்கத்தை தெரிந்தெடுப்பதற்கு ஞானம்தான் மிக முக்கியமானதொன்றாகும். இது

மனிதர்கள் மத்தியில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. புத்திக்கூர்மை உள்ளவர்களும் இன்றும் அதிக அறிவையும் ஞானத்தையும் தேடுகிறார்கள். மிகவும் முட்டாள்தனமான மார்க்கத்தை தெரிந்து கொள்பவர்கள் கூட அந்த நேரத்திலே ஞானமில்லாத செயல் என்று தோன்றாதபோது அதைப் பின்பற்றுகிறார்கள். அப்படித்தான் தாயான ஏவாளோடும் இருந்தது; அவள் அறிவிற்கும் ஞானத்திற்கும் ஆசைப்பட்டாள்: உண்மையில் விலக்கப்பட்ட விருட்சமே ஞானத்திற்கு திறப்பு வாசல் போல் தோன்றியது; அவளுடைய சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியாமல் போகப் பண்ணிற்று; அப்படியானால் நம்மை ஞானத்தின் நலமான வழிகளில் மாத்திரமல்ல, அதனுடைய சமாதானத்தின் பாதைகளிலும் வழி நடத்த ஆலோசகர் எவ்வளவாய் தேவைப்படுகிறார்.

தாயான ஏவாளுக்கு, அவளுடைய பூரணத்திலும் ஒரு ஞானமுள்ள வழி காட்டி தேவைப்பட்டிருந்தால் அவளுடைய விழுந்துபோன, பூரணமற்ற பிள்ளைகளாயிருக்கிற நமக்கு எவ்வளவு அதிகமாக இப்படியான ஒரு வழி காட்டி தேவை. நம்முடைய பரலோகப்பிதா புது சிருஷ்டியின் அங்கங்களாகும்படி அழைக்கும்போது முன்கூட்டியே நம்முடைய தேவைகளை அறிந்திருந்தார். நம்முடைய சுய ஞானம் நமக்குப் போதுமானதாக இருக்காது என்றும், மேலும் எதிராளியினுடையதும், அவனால் ஏமாற்றப்பட்டு அவனைப் பின்பற்றுபவர்களின் ஞானம், வெளிச்சம் இருளைப் போல் தோற்றமளிக்கவும், இருள் வெளிச்சத்தைப்போல் தோற்றமளிக்கும்படியாக நமக்குத் தீமை உண்டாகும்படி செயல்படுத்தப்படும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆகவே நம்முடைய பாடம், கிறிஸ்துவே நம்முடைய ஞானமாக இருக்கவேண்டுமென்று காட்டுகிறது. நாம் தேவனிடத்தில் வருவதற்கு முன்னரும், பாவ நிவாரணம் என்ற நன்மையைப் பெறுவதற்கு முன்னரும், இல்லையெனில் அதன் மூலமாக புத்திரர்களென்ற உறவுமுறைக்கு வருவதற்கு முன்னரும், நமக்கு உதவி தேவை; வழிநடத்துதல், ஞானம் தேவை; நமக்கு என்று தேவன் அவருடைய குமாரனில் வைத்திருக்கிற நல்ல காரியங்களைப் புரிந்து கொள்ள நம்முடைய மனக்கண்கள் திறக்கப்படுவதும் நமக்கு தேவை.

பரத்திலிருந்து வருகிற ஞானத்தைக் கேட்கக்கூடிய காதுள்ளவனாய் இருப்பதற்கு ஓர் ஊக்கமான இருதய நிலை அவசியம். ஓர் அளவுக்குத் தாழ்மை அவசியம், இல்லையென்றால் நம்மைப்பற்றி நினைப்பதற்கு மேலாக நினைப்போம். திவ்ய கண்ணோட்டத்தில் காணப்படும்

நம்முடைய பெலவீனங்கள், கறைகள், தகுதியின்மை போன்றவற்றை அறிந்துகொள்ளத் தவறிவிடுவோம். நம்முடைய தாழ்மையான மனது காண்கின்ற குறைகளை ஒத்துக்கொள்ள, ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு குறிப்பிட்ட அளவு உண்மை அல்லது நேர்மை அந்த மனதில் இருக்க வேண்டும். இந்த கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கும்போது, நீதியையும் தேவனோடு இணக்கத்தை விரும்புகிறவர்களுக்கு இயேசு, இரட்சகராக தேவனால் ஏற்படுத்தப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது. பாவ நிவாரணம் நமக்காக செய்து முடிக்கப்பட்டது என்ற தத்துவத்தை, ஒருவர் முதன்முறையாக எப்படியாயினும் முற்றிலுமாக புரிந்து கொள்ளா விட்டாலும் அவர்கள், ''மற்றவர்களைப்போல் கோபாக்கினையின் பிள்ளைகளாக,''பாவிகளாக இருந்தார்கள் என்ற உண்மையையாவது உணர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் பலி நீதியான தொன்றாகும்; தேவனே அதைக்கொடுத்து நம்முடைய சார்பில் ஏற்றுக்கொண்டார். அவருடைய தழும்புகளால் நாம் குணமடையும்படியாக, அவருடைய கீழ்ப்படிதலினால் நாம் பிதாவினால் ஏற்றுக்கொள்ளும் படியாக, நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டது. அதை அவர் சுமந்தார், அவருடைய நீதியும், புண்ணியமும் ஒரு நீதியின் வஸ்திரத்திற்குரியது போல் எண்ணப்பட்டது. நாம் அறிவைக் கொண்டு செயல்படுவதற்கு முன்னர், அவருடைய புண்ணியத்தை முழு மனதோடு ஏற்றுக் கொள்வதின் மூலம், பிதாவின் சமூகத்தில் நீதிமானாக்கப்பட வேண்டும்; ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, படிப்படியாக விடுதலையாக்கப்பட்டு, மகிமைப்படும் முன்பாக, கிறிஸ்து நம்முடைய ஞானமாக்கப்பட்டார் என்பதை நாம் காண வேண்டும். நாம் அடுத்த படிக்குப் போகும்போது கிறிஸ்து நம்முடைய ஞானமாக இருப்பது முடிவடையாமல், அவர் நம்முடைய நீதியாகிறார். அப்படியல்ல, இன்னமும் அவர் நம்முடைய ஞானமாக, நம்முடைய ஞானமுள்ள ஆலோசகராக நமக்கு தேவைப்படுகிறார். அவருடைய வழி நடத்துதலின் கீழ் ஒரு முழுமையான அர்ப்பணிப்பை உண்டுபண்ணும் ஞானத்தை நாம் காண வேண்டும், பிதாவின் சித்தத்தை செய்யும் படியான பரிசுத்தமுள்ள வாழ்க்கையில் அந்த அர்ப்பணிப்பைத் தொடர்ந்து வரக்கூடிய ஞானத்தையும் நாம் காண வேண்டும். நாம் எடுக்கும் ஒவ்வொரு அடியிலும் ஞானமே முக்கியமான காரியமாகும்; அப்போஸ்தலர் கூறுகிறபடி ''பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும்,

இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாத மில்லாததாயும், மாயமற்றதுமாயிருக்கிறது.'' (யாக். 3:17) நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட அல்லது பரிசுத்தமாக்கப்பட்ட முழுவாழ்க்கையின் மூலம், பரலோக நகரத்திற்கு பிரயாணமாகச் செல்லும் ஒவ்வொரு படியிலும், பரத்திலிருந்து வருகிற ஞானம் நமக்குத் தேவை. உலக ஞானமானது, சுயநலம், சுயசித்தம், சுயமதிப்பு, சுயநீதி, சுய நிறைவு என்பவைகளைக் கொண்டு செயல்படுகிறது.மேலும் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறபடி இவைகள் கசப்பான பொறாமை, சண்டைகளுக்கு நேராக வழிநடத்துகிறது. ஏனென்றால் இந்த ஞானம் பரத்திலிருந்து வருவதற்கு பதிலாக ''பூமிக்குரியதாக இச்சைக்குரியதாக, பிசாசுக்குரியதாக'' இருக்கிறது. அதற்கு மாறாக, பரலோக ஞானம் அன்பின் குணாதிசயத்தோடு ஒத்துப்போகிறது. ''அது தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்.''

இந்த ஞானமே செயல்படும் விதத்திலும் கூட ஒழுங்கு இருக்கிறது. அப்போஸ்தலனாகிய யாக்கோபு மேலே சொன்ன எல்லா நிபந்தனை களையும் ஞானம் உள்ளடக்கியதாக இருந்தாலும், ஒவ்வொன்றிற்கும் அது கொடுக்கிற வரிசையில் வித்தியாசம் உண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானத்தின் ஆவி சமாதானமுள்ளதாயிருக்கிறது. அது சமாதானத்தை விரும்புகிறது, அதை மேம்படுத்த விரும்புகிறது, இருந்த போதிலும் அது சமாதானத்தை முதலில் போடாமல் பரிசுத்தத்தை முதலில் போடுகிறது. ''முதலாவது பரிசுத்தம், பின்பு சமாதானமாயிருத்தல்.'' பூலோக ஞானம் தான் ''எந்த விலைக் கொடுத்தாவது சமாதானம்''என்று கூறுகிறது. மேலும் மனசாட்சி அமைதியாக இருக்க வேண்டும், அதன் மூலம் சுயநல சமாதானம் உயர்த்தப்படலாம் என்று கட்டளையிடுகிறது. பரிசுத்தமான ஞானம் எளிமையானது, வஞ்சனையில்லாதது, கனமுள்ளது, வெளியரங்கமானது. அது வெளிச்சத்தை விரும்புகிறது. அது இருளுக்கு உரியதல்ல, அது பாவத்துக்குரியதல்ல, மறைக்கப்பட வேண்டிய எந்த காரியத்துக்கும் அது ஒத்துப் போகிறதுமில்லை; மறைவான கிரியைகள் வழக்கமாக அந்தகாரத்தின் கிரியைகள் என்று அறியப்பட்டிருக்கின்றன, மறைவான காரியங்கள் வழக்கம்போல் பொல்லாதவைகளாக இருக்கின்றன. நேர்மை, பரிசுத்தம் சம்பந்தப்பட்டவரை சமாதான முள்ளதாயிருக்கும்; அது சமாதானத்தையும், இணக்கத்தையும், ஒற்றுமையையும் வாஞ்சிக்கிறது. ஆனால் சமாதானம் முதலில்

இல்லாததால், மனத்தளவில் மாத்திரமே சமாதானமாகவும், நேர்மை, பரிசுத்தம், நன்மை ஆகியவைகளோடு முழுமையாக இசைந்திருக்கிறவை களாக இருக்க முடியும்.

இந்த பரலோக ஞானம் சாந்தமுள்ளது, அது தன்னுடைய திட்டங்களில் அல்லது முறைகளில் முரடானதுமில்லை, கடினமானது மில்லை. இருந்தபோதிலும், அதனுடைய சாந்த குணம் அதனுடைய பரிசுத்தத்தையும் சமாதானமாயிருத்தலையும் பின்பற்றுகிறது. அதை உடையவர்கள் முதலாவது சாந்தம், அதன் பின்பு தூய்மை, அதன் பின்பு சமாதானம் என்றில்லாதபடி, முதலாவது அல்லது முக்கியமாக தூய்மை, பின்பு சத்தியத்தோடு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் சமாதானத்தை வாஞ்சிக்கிறார்கள்; அதை உயர்த்தும்படியாக செய்கிறார்கள்; ஆகவே அவர்கள் நடத்தப்படுவதற்கு சாந்தமுள்ளவர் களாகவும், எளிமையானவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தூய்மையோடும், சமாதானத்தோடும், சாந்தத்தோடும் ஒத்துப்போகும்படி மாத்திரம்தான் நடத்தப்படமுடியும்: எந்த பொல்லாத வேலையிலும் அவர்களை எளிதாக உதவி செய்யும்படி நடத்த முடியாது, ஏனெனில் பரலோக ஞானத்தின் ஆவி இப்படியான ஒரு மார்க்கத்தை தடை பண்ணுகிறது.

பரலோக ஞானம் கிருபையும், நல்ல கனிகளும் நிறைந்து காணப்படுகிறது; அது கிருபையில் களிகூறுகிறது; அது திவ்விய குணாதிசயத்தில் ஒரு முக்கியமான பகுதியாக காணப்படுகிறது; அதைப் பின்பற்ற முயற்சி செய்யும்படி கூறுகிறது. பரத்திலிருந்து வருகிற ஞானத்தினால் பிரகாசிக்கப் பட்டிருக்கிற இருதயத்திலிருந்து, கிருபையும் ஆண்டவரின் பரிசுத்த ஆவியும், எல்லா நற்கனிகளும் நிச்சயமாக புறப்பட்டு வரும்; மேலும் முழுவதுமாக பக்குவ நிலையடைந்து, விருத்தியாகும். இந்தக் கிருபையானது, அறியாமையினாலும் எதேச்சையாகவும் பொல்லாப்பு செய்தவர்களை, அனுதாபத்தோடும், உதவியோடும் நோக்குகிற அதே வேளையில், வேண்டுமென்றே பொல்லாப்பு செய்கிறவர்களோடு அனுதாபமோ, தொடர்போ கொள்ள முடியாததாயிருக்கும். ஏனென்றால் ஞானத்தின் ஆவி கிருபைக்கல்ல, பரிசுத்தத்திற்கே முதலிடம் கொடுக்கிறது. ஆகவே இந்த ஞானத்தின் கிருபை எதேச்சையாக அல்லது அறியாமையினால் பொல்லாப்பு செய்கிறவர்களிடத்தில் மாத்திரமே முழுவதுமாக செயல்பட முடியும்.

இந்த பரலோக ஞானமானது ''பாரபட்சம் இல்லாதது'' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பாரபட்சம் என்பது அநீதியைக்குறிக்கும். மேலும் பரிசுத்தம், சமாதானம், சாந்தம், கிருபை, பரத்திலிருந்து வருகிற ஞானத்தின் நற்கனிகளும், மனிதர்களுடைய குணாதிசயத்துக்கு மதிப்பளிக்குமேயல்லாமல், மனிதர்களுக்கு பாரபட்சம் காட்ட இனியும் வழி நடத்தாது. ஜென்ம சுபாவமுள்ள மனிதனின் வெளித்தோற்றம், தோலின் நிறம் போன்றவை, ஆண்டவரின் ஆவியால்– பரத்திலிருந்து வருகிற ஞானத்தின் ஆவியால் புறக்கணிக்கப்படுகிறது; அது பாகுபாடற்றது; எந்த இடத்தில் காணப்பட்டாலும், வெளியரங்கமாக்கப் பட்டாலும் அது சமாதானமுள்ளதாக, சாந்தமுள்ளதாக, உண்மையுள்ளதாக இருக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறது.

மேலும் பரத்திலிருந்து வருகிற இந்த ஞானம் ''மாய்மாலமற்றதா யிருக்கிறது.'' அது ஆளுகை செய்கிற இடத்தில் மாய்மாலத்திற்கு தேவையில்லாமல், அவ்வளவு தூய்மையும், சமாதானமும், கிருபையு முள்ளதாக இருக்கிறது. ஆனால் அது பாவமான எல்லாவற்றோடும் ஒத்துப்போகாது இருக்கக்கூடும், அனுதாபமில்லாதிருக்கக்கூடும், ஐக்கியமில்லாதிருக்கக் கூடும், ஏனெனில் அது தூய்மையாய் இருக்கிற, அல்லது தூய்மைக்கு, சமாதானத்திற்கு, சாந்தத்திற்கு வழிவகுக்கிற எல்லாவற்றோடும் அனுதாபமுள்ளதாக இருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாய்மாலத்திற்கு இடமில்லை.

தேவன் அவருடைய குமாரன் மூலமாக கொடுத்திருக்கிற இந்த எல்லா காரியங்களையும் குறித்த பரலோக ஞானம், அவருடைய மீட்பின் வேலையின் செய்தியில் மாத்திரமல்ல, பிதாவுக்கு கீழ்ப்படிதலிலும், ஆவியின் இரக்கங்களை அவர் வெளிப்படுத்தியதிலும், இப்படியாக நமக்கு வசனத்தின் மூலமும், முன்மாதிரியின் மூலமும் கற்றுக் கொடுப்பதிலும் இருக்கிறது. மேலும் பரத்திலிருந்து வருகிற இந்த ஞானம், கிறிஸ்துவின் பிரதிநிதிகளான அப்போஸ்தலர்கள் மூலமாக, அவர்களுடைய உபதேசங்கள் மூலமாக வருகிறது; அதோடுகூட பரத்திலிருந்து இந்த ஞானத்தின் ஆவியைப் பெற்ற அனைவர் மூலமாகவும், பரலோகத்திலிருக்கிற அவர்களுடைய பிதா மகிமைப் படும்படியாக தங்களுடைய வெளிச்சம் அவ்வளவாக பிரகாசிக்கும்படி அனுதினமும் பிரயாசப்படுகிறவர்கள் மூலமாகவும் வருகிறது.

கிறிஸ்து நமது நீதி

நாம் ஓர் அளவுக்கு தேவனும், மனிதனும் ஒப்புரவாகுதலைப்பற்றி முன்னமே விவரித்துள்ளோம்; அதில் இயேசுவை ஏற்றுக்கொள்ளுகிற எல்லாரையும் நீதிமானாக்குகிற தற்காக ஓர் ஏற்பாட்டை செய்திருந்ததையும் விவரித்துள்ளோம். ஆனால் இங்கு நீதிமானாக்கப் படுதல் என்ற பொதுவான வார்த்தையின் அர்த்தத்தைப் பார்ப்போம். ஆண்டவருடைய ஜனங்களில் அநேகரால் இது சரியாகப்புரிந்து கொள்ளப்படவில்லை. நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தையில் முதலாவது வருகிற சிந்தனை என்னவென்றால் (1) நியாயம் அல்லது சரியான ஒரு நிலை (2) அந்த நிலையோடு உடன்பாடு கொள்ளமுடியாத ஒன்று–அதன் தேவைக்கேற்ப இல்லாதது (3) குறைவு பட்ட அந்த நபரை அல்லது விஷயத்தை சரியான அல்லது நீதியான நிலைக்கு கொண்டுவருவது. இதற்கு உதாரணமாக ஒரு ஜோடி தராசு அல்லது நிறுவையை வைத்துக்கொள்ளலாம். ஒரு பக்கத்தில் உள்ள எடைக்கல் நியாயத்தைக் குறிக்கும், இன்னொரு பக்கத்தில் ஏதோ ஒன்று மனித கீழ்ப்படிதலைக் குறிக்கும்படி சமமான எடையில் நியாயத்தை சமன் படுத்த வைக்கப்பட வேண்டும். இது ஏறக்குறைய எல்லாவற்றிலும் குறைவுபட்டுள்ளது. அந்தக்குறை ஈடுகட்டப்படுவதற்காக ஏதோ ஒன்று அதோடு கூட வைக்கப்படுகிறது. அதை நிறுப்பதற்காக அல்லது நியாயப்படுத்துவதற்காக இந்த உதாரணத்தை உபயோகிக்கும்போது நாம் குறிப்பாக ஆதாம் ஆதியிலே சிருஷ்டிக்கப்பட்டபோது, பூரணமாய் தேவனோடு ஒத்து போகிறவனாய் அவருக்கு கீழ்ப்படிகிறவனாய் சிருஷ்டிக்கப்பட்டான். இது அவனுடைய உரிமையான, சரியான, நீதியுள்ள நிலையாகும். அதில் அவன் தொடர்ந்து இருந்திருக்க வேண்டும். ஆனால் பாவத்தின் மூலம் அவன் தேவ தண்டனைக்குக் கீழாக வந்தான், தேவ எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு இல்லாது போனதால் உடனடியாக அவன் புறக்கணிக்கப் பட்டான். அதிலிருந்தே ‘‘அவனது சந்ததியார் பாவத்தில் பிறந்து பாவத்திலிருந்து உருவானவர்கள்,’’ அவர்களுடைய தகப்பனைக்காட்டிலும் இன்னமும் ஒரு தாழ்வான நிலையிலுள்ள வாழ்க்கைக்கு வந்துள்ளனர்; அவர்களுடைய தகப்பனைக்காட்டிலும் தேவ நீதியின் நிலையை விட்டு மிக தூரமாய் வந்தனர். ஆனால் முடிவில்லாத தேவ நீதியின் நிலைக்கு வரமுடியும் என்று வர எதிர்பார்த்து, ஆதாமின் சந்ததியார் புது நிறுவைக்கு, அல்லது முயற்சிக்கு சிருஷ்டிகரை கேட்பது

பயனற்றது. இப்படிப்பட்ட ஒரு முயற்சி முற்றிலுமாக பிரயோஜன மற்றதாயிருக்கும் என்று ஏற்று ஒத்துக் கொள்ளுகிறோம். ஏனெனில் பூரணமான மனிதன் கீழ்ப்படியாமையின் நிமித்தம் தன்னுடைய நிலையை இழந்து போனானெனில், விழுந்துபோன, இழிவான நாம் நீதியின் தேவைகளை சந்திக்க நம்பிக்கை உள்ளவர்களாக அல்லது நம்மை நாமே எடைப்பார்த்துக் கொள்ளுகிறவர்களாக, தேவனுக்கு முன்பாக நியாந்தீர்க்கிறவர்களாக இருக்க முடியாது. நாம் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம். ஆனால் நம்முடைய இனம் ஆதியிலே தகப்பன் ஆதாமுக்குள் பிரதிநிதித்துவப்படுத்துவது போல சிருஷ்டிக்கப்பட்டது.

அப்படி என்றால் நாம் பார்க்கும் போது, ஒரு இனமாக, நாம் எல்லோரும் கூட அநீதியுள்ளவர்களாக, நியாயமற்றவர்களாக, அபூரணர்களாக எந்த கிரியைகளின் மூலமும் எவரும் தேவநீதியின் தேவைகளை சந்திக்க முடியாதவர்களாக இருக்கிறோம்.''ஒருவனும் தன் சகோதரனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்கவும் கூடாதே'' (சங். 49:7) என்று வேதம் நிச்சயமாக சொல்வதைக் காண்கிறோம். ஒருவனும் மற்றவர்களுடைய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியாது. ஏனெனில் அவனிடத்திலேயே நன்மையையோ அல்லது கனத்தையோ அல்லது நற்குணங்களையோ, மற்றவர்களுக்கு கொடுப்பதற்கு மாத்திரமல்ல அவனுக்கே போதுமான அளவு கிடையாது. ஏனென்றால் ''எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாயிருக் கிறார்கள்.''ஆகவே ஏற்கனவே தேவன் அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்கள் தம்மிடத்தில் நன்மை பெற தகுதியற்றவர்கள் என்றும், அவர்கள் ஜீவிப்பதற்கு தகுதியில்லாதவர்களாக மரிப்பார்கள் என்றும் அவர் அறிக்கை செய்திருக்கும்போது, அவர் அநீதியானவர்களை, விழுந்துபோனவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களோடு தொடர்பு கொள்வாரா என்று நாம் கேட்கிறோம். இதைச் செய்வதற்கு அவருக்கு ஒரு வழியுண்டு என்று அவர் காட்டுகிறார்; அதன் மூலம் அவர் இன்னும் தன்னை நீதியுள்ளவராகவும், கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனை நீதிமானாக்குகிறவராகவும் காட்டுகிறார்; கிறிஸ்துவை புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நியமித்திருக்கிறார் என்பதையும், கிறிஸ்து தன்னுடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால்– பலியினால் இந்த உலகத்தை கிரயத்திற்கு கொண்டார் என்பதையும், ஏற்ற காலத்தில் ஆயிர வருட அரசாட்சியின் போது கிறிஸ்து தாமே தன்னுடைய

மாபெரும் வல்லமையை எடுத்துக்கொண்டு பூமியின் இராஜாவாக ஆட்சி செய்வார் என்பதையும், உலகின் அனைத்து குடும்பங்களையும் சத்தியத்தின் அறிவினால் ஆசீர்வதிப்பார் என்பதையும், தகப்பனாகிய ஆதாமுக்குள் இருந்த தேவ சாயலின் பழைய நிலைக்கு கொண்டு வரும்படியாக ஒரு சந்தர்ப்பத்தையும், வீழ்ச்சி மற்றும் மீட்பு பற்றிய அனுபவத்தோடு அவர்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதையும் காட்டுவார். மனுக்குலத்தை பூரணநிலைக்குக் கொண்டு வருகிற இந்த வேலையே நீதிமானாக்குதல் ஆகும்; அப்படியென்றால் உண்மையில் பூரணமாக்குதல், நம்முடைய நீதிமானாக்கப்படுதலிலிருந்து வித்தியாசமானது. அது சபைக்கு சுவிசேஷ யுகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற ''விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்'' ஆகும். உண்மையான நீதிமானாக்கப்படுதல் நம்முடைய ஆண்டவருடைய ஆயிர வருட அரசாட்சியின் ஆரம்பத்தில் துவங்கி, ''ஒவ்வொரு மனிதனும்'' தகப்பனாகிய ஆதாம் மூலம் இழந்துபோன எல்லாவற்றையும் திரும்ப பெற்றுக்கொள்ள முழு தருணத்தையும் அடையும் வரை உபயோகப்படகூடிய எல்லா அனுபவத்தோடும், படிப்படியாக முன்னேறுதல் ஆகும். உண்மையாக நீதிமானாக்கப்படுதலின் காலத்திற்காக–உண்மையாக சரியாக்கப் படுதலுக்காக– சரீரப்பிரகாரமாக, மனதின் பிரகாரமாக, குணத்தின் பிரகாரமாக, மனப்பூர்வமாக விரும்பி கீழ்ப்படிகின்ற மனுக்குலத்தை பூரணமற்ற நிலையிலிருந்து பூரணத்திற்கு கொண்டு வருகிற காலத்திற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்!

ஆனால் இப்பொழுது நாம் விசேஷமாக புது சிருஷ்டியை திவ்விய சுபாவத்திற்கும் மகிமைக்கும் அழியாமைக்கும் அழைத்த தேவன், இந்த சிறிய வகுப்பினரான மானிடர் நீதிமானாக்கப்படுதலுக்கு அவர் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார் என்பதை நாம் பார்த்துக்கொண்டு வருகிறோம். இவர்களுக்கும் உலகத்தினருக்கும் நீதிமானாக்கப்படுதல் தேவைப்படுகிறது. ஏனெனில் இவர்களும் ''சுபாவத்தினாலே மற்றவர்களைப் போல் கோபாக்கினையின் பிள்ளைகளாக'' இருக்கிறார்கள். உலகமானது பாவிகள் என்று மரண தண்டனைக்கு உட்படுத்தப் பட்டிருப்பதால், தேவன் அவர்களோடு தொடர்பு கொள்ள முடியாததுபோல, அதன்படியே அவர் புது சிருஷ்டிகள் என்று அழைக்கிறவர்களோடும் அவர் தொடர்பு கொள்ள முடியாது. உலகம் நீதிமானாக்கப்பட வேண்டும் என்றால்– பூரணத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றால்– தேவன் அவர்களோடு இசைந்தவராய்

இருக்கவேண்டும். இதற்குமுன் நீதிமானாக்கப்படாவிட்டால் அவர் சபையோடு எப்படி ஐக்கியம் வைத்துக்கொள்ள முடியும், எப்படி அவருடைய குமாரனோடு உடன் சுதந்திரராக இருக்கும்படி ஏற்றுக்கொள்ள முடியும்? நாம் புது சிருஷ்டிகளாவதற்கு நீதிமானாக்கப்படுதல் நிறைவேற்றப்பட வேண்டிய ஓர் இன்றியமையாத முதல் தேவை என்பது ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். ஆனால் நாம் எப்படி நீதிமானாக்கப்பட முடியும்? சரீரப்பிரகாரமாக, மனதின் பிரகாரமாக, குணாதிசயத்தின் பிரகாரமாக, உண்மையாக, முழுமையான பூரண நிலைக்கு திருப்பிக் கொண்டு வரப்படவேண்டுமா என்ற கேள்விக்கு நாங்கள், இல்லையென்று பதில் கூறுகிறோம். அப்படிப் பட்டதோர் உண்மையான நீதிமானாக்கப்படுதலை தேவன் நமக்கு தரவில்லை, ஆனால் வேறு விதமான ஒரு நீதிமானாக்கப்படுதலை நமக்கு தந்திருக்கிறார். அது ''விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்'' என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அது உண்மையான நீதிமானாக்கப்படுதல் அல்ல, இருந்த போதிலும் அது முக்கியமானதாகும். பாவமும் மரணமும் தொடர்ந்து அரசாட்சி செய்யும் இந்த காலத்தில் அவருடைய கிருபையின், இரக்கத்தின் செய்தியைக் கிறிஸ்துவின் மூலம் கேட்டவர்கள் எல்லோரும் பரத்திலிருந்து வருகிற ஞானத்தோடு இசைந்திருப்பவர்களாக இருந்து, தங்களுடைய தவறான நிலையை அறிக்கை செய்து, ஆண்டவருடைய தூதை நம்பி அவர்கள் தங்களை அவருக்கு ஒப்புக்கொடுப்பார்கள் என்றும், பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு, கூடுமான வரை தங்களுடைய தவறுகளை சரி செய்வார்கள் என்றும், இவர்கள் உண்மையான மானிட பூரணத்திற்கு திருப்புவதற்கு பதிலாக, கிறிஸ்துவின் புண்ணியத்தினால் இவர்களுடைய கறைகள் மூடப்பட்டதாக எண்ணுவார் என்பதையும் தேவன் ஏற்றுக்கொள்கிறார். அவர்களோடு அவர் தொடர்பு கொள்ளும் போது, விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கி, அவர்களை நீதிமான்கள் அல்லது நேர்மையானவர்கள் என்று எண்ணுவார்.

இந்த நீதிமான்கள் என்று எண்ணப்படுதல் அல்லது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல், விசுவாசம் தொடர்ச்சியாக இருக்கும்போதும், தேவனுடைய சித்தத்தை செய்யும்படியான முயற்சிகளால் தாங்கப்படும்வரைக்கும் நலமானதாக இருக்கிறது. (விசுவாசமும் கீழ்ப்படிதலும் நின்றுவிடும்போது, உடனடியாக நீதிமானாக்கப்படுதலும் நின்றுவிடுகிறது). ஆனால் பரிசுத்தமாக்கப் படுதலின் கிரியை வரும்போது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

நின்றுவிடுவதில்லை. புது சிருஷ்டிகளான நம்மோடு அது தொடர்ந்து வருகிறது. மேலும் ஆதாமின் ஆக்கினையிலிருந்து நம்மை மூடுவது மாத்திரமல்ல, பரம்பரையாக வருகிற மாம்ச பெலவீனத்தால் (வேண்டுமென்றல்ல) சிந்தை, வாக்கு, செய்கையினால் நம்முடையதா யிருக்கிற எல்லா பெலவீனங்களிலிருந்தும், பூரணமில்லாதவை களிலிருந்தும் நம்மை மூடுகிறது; இவ்விதமாக புது சிருஷ்டிகளாயிருக்கிற ஆண்டவருடைய ஜனங்களை புது சிருஷ்டியில் அங்கம் வகிக்க போட்டியிடுபவர்களாவதற்கு தேவைப்படும் பரீட்சைகள், சோதனை களுக்குள்ளாக கடந்து செல்லும் போதும், அவர்களுடைய யாத்திரையின் கடைசி பரியந்தமும் தொடர்ந்து மூடுகிறது. இதற்கிசைவாக அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார்: ''ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.'' இந்த புதிய சுபாவம் என்னும் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என்ற கருத்து ஒருபுறமிருக்க, இதனிமித்தம் நாம் விரும்பாத கறைகளும் தொடர்ச்சியாக வருகின்றன. நாம் நம்முடைய கல்யாண வஸ்திரத்தினால், கிறிஸ்துவின் நீதி என்னும் வஸ்திரத்தினால், நாம் நீதிமானாக்கப்பட்டோம் என்று எண்ணப்படுதலினால், விசுவாசத்தினால் வரும் நீதிமானாக்கப்படுதலினால் மூடப்படா மலிருந்தால், குறைந்த பட்சம் அவைகள் நாம் எந்த நிலையிலாவது நித்திய ஜீவன் என்ற வெகுமதிக்கு தகுதியற்றவர்கள் என்று நம்மை குற்றப்படுத்தும். நமக்கு இந்த நீதிமானாக்கப்படுதல் தேவை. நாம் மாம்சத்தில் இருக்கும் வரை, நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் வரை அது நம்முடைய வஸ்திரமாக தொடர்ந்து இருக்கும். ஆனால் நாம் ஜெயங்கொள்ளுபவர்களாக ஏற்றுக்கொள்ளப் படும் வேளையில் நம்முடைய சோதனைகள் முடிவடைகின்றன; மேலும் முதலாம் உயிர்த்தெழுதலில் நமக்கு ஒரு பங்கும் கொடுக்கப்படுகின்றது. அப்போது அது முற்றிலுமாக நின்றுவிடுகிறது. அப்போஸ்தலர் விளக்கமாக சொல்கிறபடி அது அழிவுள்ளதாய், கனவீனமுள்ளதாய், பெலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், ஆனால் அது அழிவில்லாததாய், மகிமையுள்ளதாய், பலமுள்ளதாய் உயிர்ப்பிக்கிற ஆவியாய் இருக்கிற, பிதாவின் தத்ரூபமான சாயலில் இருக்கிற நம்முடைய ஆண்டவரின் முழு சாயலில் எழுப்பப்படும். அந்த பூரணத்தை அடையும் போது நீதியுள்ளவனாக எண்ணப்படுவதற்கு, இனியும் தேவையிருக்காது;

ஏனென்றால் அப்போது நாம் உண்மையிலேயே நீதியுள்ளவர்களாக உண்மையிலேயே பூரணமுள்ளவர்களாக இருப்போம். உலகத்தில் உள்ளவைகளைக் காட்டிலும், புது சிருஷ்டியின் பூரணம் உயர்வான நிலையில் காணப்படுவது ஒரு பொருட்டல்ல, அதாவது அது வரையில் நீதிமானாக்கப்படுதலைப் பொருத்தவரை அது ஒரு பொருட்டல்ல. பூரணமான மானிட சுபாவத்தில் பழைய நிலைக்கு வரும்படியாக தேவனுடைய கிருபையை பெறுபவர்கள், அந்த கிரியை முடியும் போது, நீதியுள்ளவர்களாய் பூரணமுள்ளவர்களாய் இருப்பார்கள்; ஆனால் இந்த பூரணமோ,நீதியோ, ஆவிக்குரிய நிலையைக்காட்டிலும் கீழானதாகும். இப்போது திவ்விய சுபாவத்திற்கு அழைக்கப்பட்டவர்கள், முன்னதாக விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்கள், அவர்களுடைய அழைப்பையும் தேவ புத்திரர் என்பதற்காக பரீட்சையும் அனுமதிக்கும் படியாக, முதலாம் உயிர்த்தெழுதலில் பூரண ஜீவனையும் பூரணத்தையும் பெற்றுக் கொள்ளும் வரை, உண்மையிலே நீதிமானாக்கப்படவோ, பூரணப்படுத்தப்படவோ மாட்டார்கள். அதில் குறிப்பாக இப்போதுள்ள பூரணமில்லாமை எதுவுமிருக்காது. ஆனால் இப்போது அவர்களுக்கு கொடுத்தாக எண்ணப்பட்ட பூரணம் மாத்திரம் இருக்கும்.

நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்கு உண்டான காரணம் அல்லது நிலை

தேவனுடைய வசனம் அறிக்கையிடுகிறவைகளை ஒப்பிட்டுப் பார்க்கத் தவறிய காரணத்தினால் இந்த விஷயத்தைக் குறித்ததான குழப்பம் அநேகருடைய உள்ளங்களில் வந்திருக்கிறது. சிலர் உதாரணமாக நாம் ''விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம்'' (ரோம. 5:1;3:28; கலா. 3:24) என்ற அப்போஸ்தலரின் கூற்றை கருத்தில் கொண்டு, தேவனுடைய பார்வையில் விசுவாசம் அவ்வளவு முக்கியமானது, அது நம்முடைய அபூரணங்களை மூடுகிறது என்று எடுத்துக்கொள்ளு கிறார்கள். மற்றவர்கள் நாம் ''தேவனுடைய கிருபையினால் நீதிமான்களாக்கப் படுகிறோம்'' (ரோம. 3:24; தீத். 3:7) என்பதை கருத்தில் கொண்டு, அவர்களுக்குள் இருக்கக்கூடிய எந்தவிதமான நன்மையோ அல்லது விசுவாசத்தையோ அல்லது கிரியைகளையோ காணாதபடி, தன்னிச்சையாக அவருக்குச் சித்தமானபடி நீதிமானாக்குகிறார் என்று எடுத்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் மற்றவர்கள் அவருடைய

''இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம்'' (ரோம. 5:9; எபி.9:14; 1யோவா.1:7) என்ற வேதாகமத்தின் கருத்தை மனதில் வைத்து மனிதர்களின் விசுவாசம், கீழ்ப்படிதல் எப்படிப்பட்டதாக இருந்த போதிலும், கிறிஸ்துவின் மரணம் எல்லா மனிதருக்கும் நீதிமான்களாக்குதலை உண்டு பண்ணிற்று என்று எண்ணுகிறார்கள். மேலும் இன்னும் சிலர் '' கிறிஸ்து நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டுமிருக்கிறார்'' (ரோம. 4:25) என்ற வேதாகமத்தின் அறிக்கையை எடுத்துக்கொள்ளுகிறார்கள்; மேலும் இதனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாக நீதிமானாக்கப்படுதல் நமக்கு வருகிறதென்று கூறுகிறார்கள். இன்னும் சிலர்,''கிரியைகளினால் ஒரு மனிதன் நீதிமானாக்கப்படுகிறான்'' (யாக். 2:24) என்ற வேதாகமக்கூற்றை எடுத்துக்கொண்டு தேவனோடு நாம் நன்மதிப்பை பெறுவதும் பெறாததும், நாம் சொன்னதும் செய்ததுமான நம்முடைய கிரியைகளே தீர்மானிக்கின்றன என்று கூறுகிறார்கள்.

காரியத்தின் உண்மை என்ன வென்றால் சொல்லப்பட்ட கருத்துக்களெல்லாம் சத்தியம்தான்; ஒரு பெரிய கட்டிடத்தை முன் பக்கமிருந்தும், பின்பக்கமிருந்தும், பக்கங்களிலிருந்தும், பல்வேறு கோணங்களிலிருந்தும் பார்ப்பதுபோல, ஒரு பெரிய கேள்வியின் வித்தியாசமான பதில்களை இது காட்டுவதாய் இருக்கிறது. மேலே சொல்லப்பட்ட கருத்துக்களை சொல்வதன்மூலம், அப்போஸ்தலர்கள் வித்தியாசமான காலங்களில் அந்த விஷயத்தின் பல்வேறு அம்சங்களை எடுத்துரைத்துக்கொண்டு இருந்தார்கள். இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ''நீதிமானாக்கப்படுதல்'' என்ற பாடத்தின் முழு சத்தியத்தையும் அந்த தொகுப்பிலிருந்து பார்ப்பது நமது கடமையாகும்.

முதன்முதலாக, நாம் தேவனுடைய கிருபையினால் நீதிமானாக்கப்படுகிறோம். நம்மேல் அவர் விதித்திருக்கிற நியாயமான தண்டனையிலிருந்து மீண்டு வருவதற்கான எதையும் நம்முடைய சிருஷ்டிகர் செய்யவேண்டுமென்று அவர்மேல் எந்த கடமையும் கிடையாது. அவருடைய சொந்த புண்ணியம் அல்லது கிருபையினிமித்தம் நாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னரே நம்முடைய வீழ்ச்சியை முன்னறிந்து, அவர் நம்மேல் இரக்கம் வைத்து, பூமியை அஸ்திபாரப்படுத்துவதற்கு முன்னரே அவருடைய திட்டத்தில் நம்முடைய மீட்புக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியை வைத்திருந்தார். பிதாவுடன்

நாம் ஒப்புரவாகுதல் என்ற கேள்வியை நாம் தீர்மானம் செய்து கொள்வோம், அதை அவர் எப்படிக்கொண்டுவர பிரியப் பட்டாராயினும், அது அவருடைய கிருபையினிமித்தம் மாத்திரம் வருகிறது.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் நீதிமானாக்கப் படுகிறோம். அவருடைய மீட்பின் கிரியையின் மூலமாக, அவருடைய மரணத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம். அது எப்படியெனில்''இயேசு கிறிஸ்து தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்.'' அதன்படி ஆதாமுக்குரிய தண்டனையை செலுத்தும்படியாக அவர் நமக்காக வைத்திருந்த முன்னேற்பாட்டின் மூலம் சிருஷ்டிகர் நமக்காக வைத்திருந்த கிருபை வெளிப்பட்டது. மேலும் ஆதாம் மூலமாக முழு உலகமும் ஆக்கினைக்குள்ளாக வந்தபடியால், கடைசியாக செய்யப்பட வேண்டியது என்னவென்றால் முழு உலகத்தின் பாவத்தையும் அகற்றி விடுவதுதான். நாம் இந்த குறிப்பையும் நிச்சயப்படுத்திக்கொள்வோம். முதலாவது பார்த்தது போலவே தேவனுடைய கிருபையும் இந்த ஒரே வழியாகத்தான் செயல்படுகிறது; ஆகவே ''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்,'' அவன் தொடர்ந்து மரண தண்டனையின் கீழ் இருக்கிறான். (1யோவா. 5:12)

மூன்றாவதாக, கிறிஸ்து இயேசு நாம் நீதிமானாக்கப்படுவதற்காக மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார் என்பதும் சமமான உண்மைதான். ஏனெனில் அது தேவ திட்டத்தின் ஒரு பகுதியாகும்; எப்படியெனில் மேசியா ஜனங்களுடைய மீட்பராக இருக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல, மேலும் பிதாவோடு இசைந்த மனதுள்ளவர்களாய் திரும்பி வர வாஞ்சிக்கிறவர்கள் எல்லாரையும் ஆசீர்வதிக்கிறவராயும், இழந்ததைத் திரும்ப கொடுக்கிறவராயும் இருக்கிறார். ஆகவே நம்முடைய ஒப்புரவாகுதலுக்கு இயேசு கிறிஸ்துவின் மரணமும் முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. அவர் மரணத்திலேயே இருந்திருப்பாரேயானால் அவர் நம்முடைய ஆசீர்வாதத்திற்கும், இழந்ததை திரும்ப பெறுதலுக்கும் வழியாக ஒருபோதும் இருந்திருக்க முடியாது. ஆகவே பிதாவானவர் நம்முடைய மீட்பின் கிரயமாக கிறிஸ்துவின் மரணத்தை ஏற்படுத்தினபடியால் ஏற்ற காலத்தில் மனிதன் நீதிமானாக்கப்படுவதற்கு அதிகாரம் பெற்றவராக இருக்கும்படியாகவும், மானிடர் தேவனோடு இசைந்த மனதுள்ளவர்களாய் ஒரு சரியான அல்லது நீதியான நிலைக்குத்

திரும்பும்படி, மரித்தோரிலிருந்து அவரது உயிர்த்தெழுதலையும் உண்டாக்கினார்.

நான்காவதாக, நாம் (சபை) விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுகிறோம். இந்த யுகத்தில் ஆண்டவர் ஏற்படுத்தியிருப்பது ஓர் உண்மையான நீதிமானாக்கப்படுதல், அல்லது திரும்பப் பெற்றுக் கொள்ளுதல் என்று பொருள்படும்படியல்ல, ஆனால் சாதாரணமாக நீதிமானாக எண்ணப் படுதலுக்கும் திரும்ப பெற்றுக் கொண்டோம் என்று நினைத்துக்கொள்வதற்கும் மாத்திரமே. ஆனாலும் இது தங்களுடைய விசுவாசத்தை அப்பியாசப்படுத்துகிறவர்களுக்கு மட்டுமே பொருந்தும். நம்முடைய விசுவாசமோ, அல்லது நம்முடைய அவிசுவாசமோ, தேவன் தனக்குள்ளாக தீர்மானித்திருக்கிற தெய்வீக ஏற்பாடுகளோடு, அவர் செயல்படுத்திக்கொண்டிருப்பவைகளோடு, ஏற்றகாலத்தில் செய்து முடிக்கிறவைகளோடு எந்தவித பாதிப்பையும் உண்டாக்கமுடியாது. ஆனால் உலகம் உண்டாவதற்கு முன்னே நமக்கு கொடுக்கப்பட்ட இந்த நன்மைகளில் பங்குபெறுவது நம்முடைய விசுவாசத்தின்மேல் இருக்கிறது. ஆயிர வருட அரசாட்சியின் போது இரட்சிப்பின் தெய்வீக திட்டத்தின் நீளம், அகலம் எல்லோருக்கும் வெளிப்படுத்தப்படும்; உலகத்தில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் அவ்வேளையில் மனுக்குலத்தை மீட்டவர், சத்தியத்தின் ஓர் அறிவினால் எல்லோரையும் ஆசீர்வதிக்கும்படி அதிகாரம் பெற்றவர், எத்தனை பேர் வாஞ்சித்து தெய்வீக சலுகையை, தெய்வீக நிபந்தனையின்படி ஏற்றுக் கொள்கிறார்களோ அத்தனை பேரையும் உண்மையிலேயே நீதிமானாக்குவார், அதாவது பழைய பூரண நிலைக்குக் கொண்டு வருவார்.

உண்மைதான், உண்மையான நீதிமானாக்கப்படுதலுக்கு, திரும்ப கொடுத்தலின் செயல்பாட்டுக்கு விசுவாசம் மிக முக்கியமானது என்றுகூட கூறலாம். ஏனென்றால் ''விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்.'' திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களும், வெகுமதிகளும் விசுவாசத்தின் வழியின் பிரகாரம் கொடுக்கப்படும். ஆனால் அப்பொழுது திரும்பக் கொடுத்தலின் செயல்பாட்டிற்கு தேவைப்படுகிற விசுவாசம், இப்பொழுது ''பரிசுத்தவான்களாக,'' ''இயேசுவோடு உடன்–சுதந்திரர்களாக,'' ''புது சிருஷ்டிகளாக'' அழைக்கப் பட்டவர்களுக்குத் தேவைப்படுகிற விசுவாசத்தோடு மிகவும் வித்தியாசப்படுகிறது. தேவனுடைய இராஜ்யம்

கட்டுப்பாட்டில் இருக்கும் வேளையில், சாத்தான் கட்டப்பட்டிருக்கும் போது, பூமி ஆண்டவரை அறிகிற அறிவினால் நிரம்பி இருக்கும்போது, திவ்விய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதை எல்லாரும் காண்பார்கள். இப்படியாக விசுவாச கண்களுக்கு மாத்திரமே இப்போது தெரிகிறதைக் காட்டிலும் அதிகமானவைகளை உண்மையிலேயே பார்வை அல்லது அறிவு மூலம் அப்போது தெரிந்து கொள்வார்கள். இருந்தபோதிலும் அவர்கள் பூரணத்திற்குக் கடந்து செல்லும்படியாக விசுவாசம் அவர்களுக்குத் தேவைப்படும். மேலும், இதன்படி விடாமுயற்சியோடு விசுவாசத்தையும், கிரியைகளையும் கடைப்பிடிப்பவர்களால் மாத்திரமே ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் கிடைக்கக் கூடிய உண்மையான நீதிமானாக்கப்படுதலைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்தக் காலத்தைக் குறித்து, ''மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்'' என்றும், அதற்கு மாறாக சபையின் நியாத்தீர்ப்பைக் குறித்து, ''உங்கள் விசுவாசத்தின்படியே'' என்றும் எழுதப்பட்டிருக்கிறது. எனினும் நம்முடைய விசுவாசம் கூட நம்மால் முடிந்தவரை கிரியைகள் இல்லாதிருக்கக் கூடாதது போன்று, அவர்களுடைய கிரியைகளும் விசுவாசம் இல்லாமல் இருக்காது.

திரும்பக்கொடுத்தலினால் ஒப்புரவாக்கப்படுதல் நியாயப்பிரமாண உடன்படிக்கை யினிமித்தம் வராது, ஆனால் அது புது உடன்படிக்கையின் நிபந்தனைக்குட்பட்ட கிருபையினால் வருகிறது என்பதை தேவன் விசுவாசத்தினால் புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறார் என்ற அப்போஸ்தலரின் கூற்று (கலா. 3:8) இந்த சந்தர்ப்பத்தில் தெளிவாக்குகிறது. அது அதன் நன்மையைப் பெற்றுக்கொள்பவர்கள் எல்லோராலும் நம்பப்படல் வேண்டும், ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும், வாழ்க்கையில் நடை முறைப் படுத்தபடல் வேண்டும். இப்பொழுது நீதிமானாக்கப்படுதலுக்கும் எதிர் காலத்தில் நீதிமானாக்கப்படுதலுக்கும் இடையில் உள்ள ஒரு வித்தியாசம் என்னவென்றால், தற்காலத்தில் அர்ப்பணம் செய்துகொண்டவர்கள் முறையான விசுவாசத்தை அப்பியாசப் படுத்தும்போது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டார்கள் என்று எண்ணப்பட்டு உடனடியாக பிதாவோடு ஐக்கியம் கொள்ளும்படி செய்யப்படுகிறது. அதே வேளையில், அடுத்த யுகத்தில் அனுகூலமான நிலைமைகளில், கீழ்ப்படிதலின் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தும்போது அது நீதிமானாக்கப்பட்டார்கள் என்ற எண்ணத்தையேக் கூட கொண்டு வராது; மேலும் ஆயிர வருட

அரசாட்சியின் முடிவில் மாத்திரமே உண்மையான நீதிமானாக்கப் படுதலையும், தேவனோடு ஐக்கியத்தையும் உண்டுபண்ணும். இதற்கிடையில் உள்ள காலத்தில் உலகமானது மாபெரும் மத்தியஸ்தரின் கரங்களில் இருக்கும். அவருடைய கிரியை அப்போது அவர்களுக்குத் தெய்வீக சித்தத்தை உணர்த்தவும் அவர்களோடு தொடர்பு கொள்ளவும் அவர்களை உண்மையிலேயே நீதிமான்களாக்கும்வரை அப்படிக் கீழ்ப்படிகிறவர்களைத் திருத்தவும் பழைய நிலைக்குக் கொண்டு வரவும், அந்த நேரத்தில், தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும் போது, அவர்களை பிதாவின் சமூகத்தில் குற்றமற்றவர்களாக நிறுத்தவும் செய்யும். (1கொரி. 15:24)

இப்பொழுது ஆண்டவர் தன்னுடைய புது சிருஷ்டியை அமைக்கும்படி ஒரு விசேஷமான வகுப்பினரைத் தேடிக் கொண்டிருக்கிறார்; மேலும் கிறிஸ்துவுக்குள் தேவனைக்குறித்த ஓர் அறிவுக்குள் கொண்டு வரப்பட்டு அந்தத் திவ்விய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடிந்தவர்களைத் தவிர வேறு எவரும் அந்தப் பரம அழைப்புக்கு அழைக்கப்படவில்லை. அவர்கள் இவ்விதமாக முற்றிலுமாக தேவனுடைய மகத்துவமான திட்டத்தின் மூலம் வரும் காரியங்களை நம்பும்படியாகவும், அங்கு அவர்களுடைய விசுவாசம் தற்காலத்தில் அவர்களை ஊக்குவிக்கவும், கடந்து செல்லும் பாதையை உருவப்படுத்தவும், வர இருக்கும் வாழ்க்கையானது மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று உயர்வாக எண்ணவும் செய்யும். அந்த வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இப்போது இருக்கிற வாழ்க்கை குப்பையும் தூசியுமாகத் தோன்றும். எங்கும் வியாபித்திருக்கிற பொல்லாங்கு சிருஷ்டிகரின் ஞானத்தையும், அன்பையும், வல்லமையையும் எதிர்ப்பதுபோல் காணப்படும். இந்த இருண்ட வேளையில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தும்போது சபையானது ஆயிர வருட அரசாட்சியின்போது வசித்தது போலவும், மானிடரின் பூரணத்தின் பழைய நிலைக்குத் திரும்பிவருதலை அனுபவித்தது போலவும் எண்ணப்படுகிறது. இப்படி எண்ணப்படும் நிலையானது அவர்கள் படிப்படியாக திவ்விய ஏற்பாடுகளின்படி அடையப்போகிற மானிட பூரணத்திற்கு அவர்கள் பலியாக செலுத்தும்படியாகவும், இப்படியாக அவர்கள் தங்களுடைய சரீரங்களையும் (பூரணம் என்று எண்ணப்பட்டது), அவர்களுடைய எல்லா திரும்பிக் கொடுத்தலின் சிலாக்கியங்களையும், பூலோக நம்பிக்கைகள், நோக்கங்கள், அக்கறைகளையும் ஜீவபலியாக

செலுத்தி, இதற்குத் பதிலாக பரலோக நம்பிக்கைகளையும், கிறிஸ்துவோடு உடன் சுதந்திரர் என்பதையும், திவ்விய சுபாவத்தின் வாக்குத்தத்தங்களையும் பரிமாறிக்கொள்ளும்படிக்கும் கொடுக்கப் படுகிறது. இந்தப் பரிமாற்றத்திற்கு நம்முடைய நேர்மையும், உலகப்பிரகாரமாக பலன்களின் இழப்பும், மனிதர்கள் கொடுக்கும் கனத்தை இழப்பதும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐந்தாவதாக, இப்பொழுது விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் பட்ட இந்த வகுப்பார் மனப்பூர்வமான எதிர்மாறான கிரியைகளை நடப்பிப்பதின் மூலம் அதனுடைய விசுவாசத்தை மறுதலிக்கக்கூடாது. தேவன் அவர்களோடு விசுவாசத்தின் அடிப்படையில் தொடர்பு கொண்டிருக்கும் வேளையில் அவர்களுடைய மீறுதல்களை அவர்கள் மேல் சுமத்தாமல்– ஆனால் அவைகள் எல்லாம் அவர்களுடைய மீட்பரால் கல்வாரியில் சந்திக்கப்பட்டன என்று எண்ணி அவர்களுடைய ஆக்கினைகளை அவர்கள் மேல் சுமத்தாமல்– ஆனால் அவர்களுடைய ஆவி, அல்லது சித்தம், அல்லது நோக்கத்தின்படி அவர்களோடு தொடர்பு கொள்கிறார்; மாம்சத்தின்படி அல்லது அவர்களுடைய நடைமுறை செய்கையின்படி அவர்களோடு தொடர்பு கொள்ள வில்லை. இருந்த போதிலும் மாம்சமானது ''கூடுமானவரை நமக்குள் இருக்கிற'' புதிய மனதின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படல் வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பார் என்பதை சபை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அது அதற்குக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும், சாத்தியக்கூறுகளிலும் ஒத்துழைக்கும் என்று எதிர்பார்ப்பார். இதன்படி நம்முடைய கிரியைகள் நாம் நீதிமானாக்கப்பட்டதை உறுதிப் படுத்தும் வரையில், சாட்சியாக நம்முடைய பக்தியின் உண்மையான நிலையை நிரூபிக்கும் கோணத்தில் இருக்க வேண்டும். இருந்தபோதிலும், ஆண்டவர் நம்மை நியாயந்தீர்ப்பது நம்முடைய கிரியைகளின்படியல்ல, நம்முடைய விசுவாசத்தின் படியேயாகும். நம்முடைய கிரியைகளின்படி நியாயம் தீர்க்கப் பட்டோமானால் எல்லாரும் ''தேவமகிமையற்றவர்களாக'' காணப் படுவோம். ஆனால் நம்முடைய இருதயங்களின்படி, நம்முடைய நோக்கங்களின்படி நியாயம் தீர்க்கப்பட்டால் கிருபையின் உடன்படிக்கையின் நியமங்களின்படி திவ்விய தகுதிக்கேற்ப புது சிருஷ்டிகள் அனுமதிக்கப்பட முடியும். இதன் மூலம் கிறிஸ்துவின் பலியினால் வந்த புண்ணியங்கள் அவர்களுடைய அறியாமல் செய்த கறைகளை மூடுகின்றன. இப்படியான பூரணமற்ற தற்போதைய

சூழ்நிலையில் கூடுமானவரை நீதியின் கனிகளை கொடுக்க வேண்டுமென்று ஆண்டவர் எதிர்பார்ப்பதை ஒருவரும் நிச்சயமாக எதிர்க்க முடியாது. இதைக்காட்டிலும் அதிகமாக அவர் கேட்பதில்லை, இதைக்காட்டிலும் குறைவானதை அவர் ஏற்றுக்கொண்டு வெகுமதி அளிக்க வேண்டும் என்று எதிர் பார்க்கக் கூடாது.

கிருபையின் மூலமும், இரக்கத்தின் மூலமும், நம்முடைய விசுவாசத்தின் மூலமும், அவை சம்பத்தப்பட்ட கிரியைகளின் உறவுமுறையின் மூலமும் நீதிமானாக்கப்படுதல் எப்படி பொதுவாக செயல்படுகின்றன என்பதை விளக்குவதற்கு மின்சார வண்டியின் இயக்கத்தை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இரு மின்சார சக்தியின் மைய நிலை ஓர் அளவிற்கு நாம் நீதிமானாக்கப்படுவதற்கு ஆதாரமாயிருக்கிற தேவகிருபையை விளக்கும். மின்சக்தியை எடுத்து செல்கின்ற கம்பி நாம் நீதிமானாக்கப்படுவதற்கு பிதாவின் பிரதிநிதியாயிருக்கிற நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்துவை பரிபூரணமில்லாத நிலையில் குறிப்பதாக இருக்கும். கார்கள் விசுவாசிகளையும் தள்ளுவண்டிகள் விசுவாசத்தையும் குறிக்கின்றன. விசுவாசமானது அப்பியாசப்படுத்தப்பட வேண்டியிருப்பதுபோன்று சக்கரம் (தள்ளு வண்டிகள்) கம்பியின்மேல் அழுத்தப்பட்டிருக்க வேண்டும். (1) எல்லாம் மின்னோட்டத்தை நம்பியுள்ளன. (2) அடுத்தபடியாக முக்கியமானது மின் ஓட்டத்தை நமக்கு கொண்டு வருகின்ற கம்பியாகும். (3) நாம் நீதிமானாக்கப்படுவதற்கு வழியாயிருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துமேல் சாய்ந்து கொள்ளவும், அவரைத் தொடுவதற்கான விசுவாச சக்கரம் இல்லாவிட்டால் நமக்கு எவ்வித ஆசீர்வாதமும் வராது. (4) ஆண்டவரோடு உள்ள தொடர்பினால் வந்த ஆசீர்வாதம், வண்டியின் விளக்குகள் எரிவதற்கு மின்சக்தி உதவியதற்கு இணையாக இருக்கிறது. ஆனால் (5) வண்டியோட்டுபவனும் அவனுடைய நெம்புகோலும் மாம்ச சித்தத்தைக் குறிக்கிறது, இவ்வேளையில் (6) வண்டியோவென்றால், விசுவாசத்தின் மூலமும் நமக்கு வருகின்ற வல்லமையின் மூலம் கிடைக்கின்ற நம்முடைய செயல்களையும், திறன்களையும் குறிக்கிறது. நாம் சுழற்சியை உருவாக்கி கடைசியில் வண்டிகள் சேரும் இடத்திற்கு முன்னேறிச்செல்வதற்கு இந்த எல்லா சக்திகளும் ஒட்டு மொத்தமாய் தேவைப்படுகின்றது. இந்த விளக்கம் பிதாவின் வீட்டிலுள்ள அநேக வாசஸ்தலங்களில், அல்லது அநேக சுபாவ புத்திரரின் நிலைமைகளில் புது சிருஷ்டியாக நம்முடைய இடத்தைக் குறிப்பதாக இருக்கிறது.

நீதிமானாக்கப்படுதலும் பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகளும்

பின்னோக்கிப்பார்க்கும்போது, அப்போஸ்தலரின் கூற்றுகளிலிருந்து நாம் நீதிமானாக்கப்படுவதற்கு விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்படுவதற்கு முன்னால் மிகப் பழமையான காலத்தில், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது போன்றவர்களும், வேறு பல பரிசுத்தத் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள் என்று காண்கிறோம். அவர்கள் விலையேறப் பெற்ற இரத்தத்தில் விசுவாசம் வைத்திருக்க ஏதுவில்லாதிருந்தபடியால் அவர்களுக்குள்ளிருந்த எந்த விசுவாசம் அவர்களை நீதிமான்களாக்கிற்று? ''அவர்கள் தேவனை விசுவாசித்தார்கள் அது அவர்களுக்கு நீதியாக (நீதிமானாக) எண்ணப்பட்டது'' என்று எழுதியிருக்கிற பிரகாரமாயிற்று என்று நாங்கள் பதில் சொல்கிறோம். உண்மைதான், தேவன் அவருடைய திட்டத்தின் தத்துவத்தின்படி அதாவது இயேசுவினிடத்தில் விசுவாசம் வைக்கிறவனை அவர் நீதிமானாக்குகிறதை நமக்கு அவர் வெளிப்படுத்தியதுபோல அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. ஆகவே வெளிப்படுத்தப்படாதவைகளை விசுவாசிக்காததற்கு அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல. தேவன் வெளிப்படுத்தியதை அவர்கள் விசுவாசித்தார்கள், அந்த வெளிப்பாடு இப்போது நமக்கு கொடுக்கப்பட்ட எல்லாவற்றையும் உள்ளடக்கிய தாயிருந்தது. அதாவது ஒரு சிந்தூர மரம் தனக்குள் ஒரு வித்தை வைத்திருப்பதைப்போல மிக சுருக்கமான முறையில் அது கொடுக்கப்பட்டிருந்தது. ஏனோக்கு மேசியாவின் வருகையைக் குறித்தும், அதனால் வரும் ஆசீர்வாதங்களை குறித்தும் தீர்க்கதரிசனமாக சொன்னார். ஆபிரகாம் தன்னுடைய வித்து தேவனிடத்தில் அனுக்கிரகம் பெற்று அதன் மூலம் உலகத்தின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று எண்ணி தேவனை விசுவாசித்தார். இது மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறிக்கும், ஏனென்றால் பூலோகத்தின் சகல ஜாதிகளும் மரணத்திற்குள்ளாக ஏற்கெனவே சென்றுவிட்டன. தேவன் மரித்தோரை உயிரோடு எழுப்ப வல்லவர் என்று ஆபிரகாம் விசுவாசித்தார். இது இப்படியாக இருக்க அவர் சோதிக்கப்பட்டபோது, ஈசாக்கின் மூலம் வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட இருந்தாலும், தேவன் அவரை உயிரோடு எழுப்ப வல்லவர் என்று எண்ணி ஈசாக்கை இழக்கக்கூட சித்தமாயிருந்தார். தேவன்

உலகத்தில் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் சரியான முறைகளையும், மேசியாவுக்கு கீழ்ப்படிகிறவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களையும் நீதிமான்களாக்கி, நித்திய நீதியைக் கொண்டு வருவார் என்பதையும் அவரும் மற்றவர்களும் பகுத்து அறிந்திருந்தனர், நாம் இதை நிச்சயத்துடன் அறிய முடியாது. ஆபிரகாமோ ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் துல்லியமாக வரவிருக்கிற ஆயிரவருட அரசாட்சியைப் பற்றிய சிந்தனையையும், பாவங்களுக்கான பலியைப்பற்றிய சிந்தனையையும் பெற்றிருந்தார் என்பதற்கு ஆதாரமாக,''ஆபிரகாம் என் நாளைக் காண ஆசையாயிருந்தான், கண்டு களி கூர்ந்தான்'' (யோவா. 8:56) என்று, பாவங்களுக்காக பலியை நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது, நம்முடைய ஆண்டவர் கூறிய அவரது வார்த்தை நமக்கு இருக்கிறது.

சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் பலியினால் ஜீவனுக்கு ஏதுவாக நீதிமான்களாக்கப்படுவதற்கும், இதற்கு முன்னர் ஆபிரகாமும் மற்றவர்களும் தேவனோடு ஐக்கியம் கொண்டு நீதிமானாக்கப்பட்டதற்கும் இடையில் இருந்த வித்தியாசத்தை யாரும் துல்லியமாகக் காண்பதில்லை. இரண்டுக்குமே விசுவாசம் தேவையாக இருந்த போதிலும், இந்த இரண்டு ஆசீர்வாதங்களுக்கும் இடையில் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. எல்லாரும் மரண ஆக்கினைக்குள்ளாக இருந்தார்கள், எனவே யாரும் அதிலிருந்து விடுதலையானவர்களாக எண்ணப்பட முடியவில்லை. ''ஜீவனுக்குள் நீதிமானாக்கப்படுதல்,'' (ரோ. 5:18) பாவங்களுக்காக நம்முடைய இரட்சகரால் மாபெரும் பலி செலுத்தப்படும் வரை கிடையாது; அப்போஸ்தலர் சொல்லுகிறபடி, இந்த காரியத்தில் ''தேவன் நீதியுள்ளவராயிருக்கும்படிக்கு'' **முதலாவது**, பலி தேவையா யிருந்தது.(ரோ.3:26) ஆனால் நீதியானது, மீட்பின் திட்டம் செயல்படுவதை முன்னதாகவே கண்டு, தேவைப்படும் அளவிற்கு விசுவாசம் உள்ளவர்களுக்கு ஒரு திவ்விய அனுக்கிரகத்தின் அடையாளமாக இருக்கிறது என்பதை குறிக்க முன்னர் அது அறிவித்ததற்கு எதிர்ப்பு சொல்லமுடியவில்லை. இதன்படி இப்படி இருப்பவர்களை தேவனோடு ஐக்கியம் உள்ளதற்கு சாட்சியாயிருப்பவர்களை இந்த அளவுக்கு நீதிமானாக்குகிறது.

''ஜீவனை அளிக்கும் நீதி'' என்பது(ரோம.5:18) கிறிஸ்துவின் மூலமாக உள்ள திவ்விய திட்டமாக இருக்கிறது என்றும், காலக்கட்டத்தில் எல்லா மனுஷருக்கும் அந்த திட்டம் திறக்கப்படும் என்றும், மேலும் ''இந்த

ஜீவனை அளிக்கும் நீதிக்குத்தான்'' புது சிருஷ்டிகளாக அழைக்கப்படு கிறவர்கள் தங்களது விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவதன் மூலம், உலகத்தாரைக்காட்டிலும் முன்னதாக இப்பொழுது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணப்படுகிறார்கள் என்றும் அப்போஸ்தலர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு நீதிமானாக்கப்படுதல் என்பது புறம்பானவர்களாக, அந்நியராக, புறதேசத்தாராக, சத்துருக்களாக இல்லாமல், தேவனோடு நண்பர்களாக ஐக்கியம் கொள்வது மாத்திரம் அல்ல, இதற்கும் மேலாக அவர்களுக்கென்று, மீட்பரின் பலியினால் சம்பாதிக்கப்பட்ட இழந்து போன ஜீவனைப்பெற்றுக் கொள்ளும் உரிமைகளையும் அதே விசுவாசத்தினால் பற்றிக்கொள்வது சாத்தியமாகிறது என்பதையும், அதன்பின்னர் நம்முடைய பிரதான ஆசாரியராயிருக்கிற கிறிஸ்து இயேசுவோடு உதவி ஆசாரியராக இணைந்து இந்த பூமிக்குரிய உரிமைகளைப் பலியாக செலுத்தவும் அவர்கள் உணர்ந்து கொள்ளுகிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள், இன்னமும் துவக்கப்படாத, முழுமையாக அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிராத ஒரு திட்டத்தில், விசுவாசத்தின் மூலமாக தேவனோடு ஒருமித்தவர்களாய் வர முடிந்தபோதும், பாவ நிவாரணம் கிறிஸ்துவின் பலியினால் நிகழும்வரை, எந்த விதத்திலும் இதற்கு மேலாக திவ்விய நியாயம் சொல்வது சாத்தியமாகாது என்று தோன்றும். ''அவர்கள் (தாழ்மையுள்ள, விசுவாசமுள்ள பழைய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள்) நம்மையல்லாமல் (சுவிசேஷ யுக சபை, புது சிருஷ்டி) பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்'' (எபி. 11:40) என்ற அப்போஸ்தலரின் வாக்கியத்தோடு இது முழுமையாக ஒத்துப்போகிறது; யோவான் ஸ்நானகனைக் காட்டிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனும் எழும்பினதில்லையென்று அவனைக் குறித்து ஆண்டவர் கூறியதும் இதனோடு ஒத்துப் போகிறதாக இருக்கிறது. பாவ நிவாரண பலி உண்மையிலேயே முற்றுப் பெறுவதற்கு முன்னால் யோவான் மரித்ததால், பரலோக இராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன், புது சிருஷ்டியானவன், ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பைப் பெற்றவன், (பாவத்திற்கென்று பலி உண்மையிலேயே செலுத்தப்பட்ட பின்னர்) கிறிஸ்துவோடு பாடுகளை அனுபவிக்கவும் அவரோடு ஆளுகை

செய்யவும் அழைக்கப்பட்டவன், அவனைக் (யோவானை) காட்டிலும் பெரியவனாக இருப்பான். (மத். 11:11)

கிறிஸ்துவும், மகிமையான சபையும் ஆயிர வருட அரசாட்சின்போது உலகத்தை நீதிமானாக்குகிற (திரும்பக்கொடுக்கிற) வேலையைச் செய்வார்கள் என்றும், இப்பொழுது நமக்கிருக்கிறது போல அது விசுவாசத்தின்படியிலான நீதிமானாக்கப்படுதலாக(அல்லது அப்படியாக எண்ணப்படுதலாக)இருக்காது என்றும், ஆனால் கிரியைகளினால் நீதிமானாக்கப்படுதலாக இருக்கும். எப்படியெனில் அது விசுவாசத்தோடு கலந்ததாக இருந்தபோதிலும், கடைசியில் உள்ள பரீட்சை ''தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக'' இருக்கும் என்ற உண்மையை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். (வெளி. 20:12) இப்பொழுது புது சிருஷ்டி கண்டு அல்ல, விசுவாசத்தின்படி நடக்க வேண்டும்; மேலும் அவர்களுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டு, ''அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருக்க'' வேண்டும். மேலும் வெளிப்புற தோற்றத்தின்படி உண்மையாயிருக்காமல், நிகழக்கூடாதது என்று இயல்பான மனதிற்குத் தோன்றுகிறவைகளையும் நம்புகிறவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய பூரணமற்ற கிரியைகளினால் இந்த விசுவாசம் தாங்கப்படும் வேளையில், ஆண்டவருடைய பூரணமான கிரியைகளினாலும்கூட நமது சார்பில் தாங்கப்படுகிறது. இவ்வாறு பூரணமற்ற நிலைமையிலும்கூட நம்மால் இயன்றவரை ஆண்டவரைப் பிரியப்படுத்த முயற்சிக்கும்போது, அது ஆண்டவருக்கு உகந்ததாக இருக்கிறது. அதன்படி கிறிஸ்துவின் ஆவியில் பங்குள்ளவர்களாகிறோம், அதனால் நீதியினிமித்தம் துன்பப்படுவதில் களிகூறுகிறோம். இப்படிச் செய்வது, சாதகமான நிலைமை நமக்கு இருக்கும்போதுகூட கொள்கைக்கு, உடன்பட்டவர் களாகத்தான் இருப்போம் என்பதற்குச் சான்றாக இருக்கிறது. ஆண்டவரைப்பற்றிய அறிவு முழு பூமியையும் நிரப்பும்போது, ஆண்டவருக்கு உண்மையாய் இருக்கிறவர்களைச்சுற்றி இப்போது இருக்கிற இருளும் பனியும் அகன்று போகும். மேலும் மாபெரும் நீதியின் சூரியன் சத்தியத்தினால், தேவனைப்பற்றிய தீர்க்கமான அறிவினால், அவருடைய குணாதிசயங்களால், அவருடைய திட்டத்தினால் பூமியை வெள்ளம்போல் நிரப்புவார்; அப்போது அவரோடு இசைவாக இருக்க வேண்டும் என்று தேடுகிற யாவருக்கும் வருகின்ற படிப்படியான உயர்வில் தேவனுடைய அனுக்கிரகத்தையும், அன்பையும், கிறிஸ்துவின் மூலம்

வருகின்ற ஒப்புரவாகுதலுக்கான அறிகுறிகளை மனிதர்கள் காணும்போது, மனதில், சரீரத்தில், குணாதிசயத்தில் இழந்து போனவைகளைத் திரும்பக் கொடுக்கப்படுவது வெளிப்படையாய் தெரியும்; இப்போது தேவைப்படுகின்ற குருட்டாட்டமான விசுவாசத்தி லிருந்து அந்த வேளையில் அது குறிப்பிட்ட அளவுக்கு வேறுபடும். அப்போது அவர்கள் ''ஒரு கருப்புக் கண்ணாடி மூலமாக (மங்கலாக)'' பார்க்க மாட்டார்கள். தேவனை நேசிப்பவர்களுக்கென்று ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற மகிமையான காரியங்களைக் குறித்த சாட்சியங்களைக் காணும்படியாக அவர்களுடைய விசுவாசக் கண்கள் கஷ்டப்பட வேண்டியிருக்காது. ஏனெனில் அந்த மகிமையான காரியங்கள் ஏறத்தாழ மனிதர்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும். அப்பொழுது மனிதர்கள் தேவனை நம்பி அவரிடத்தில் விசுவாசம் வைக்கும்போது, இப்படியாக தங்கள் ஐம்புலன்களைக் குறித்ததான அடையாளங்களை நம்புகிறவர்களுக்கும், இப்போது நாம் காணாதிருக்கிற காரியங்களை விசுவாசிக்க வேண்டியிருக்கிற புது சிருஷ்டிகளுக்கும் இடையில், பரந்த வித்தியாசம் இருக்கும். இப்போது தேவன் அவருடைய ஜனங்களில் தேடுகிற விசுவாசம் அவருடைய பார்வையில் விலையேறப் பெற்றது; அது ஒரு சிறிய, விசேஷமான வகுப்பாரைக் குறிக்கிறது. ஆகவே அதன்மேல் ஒரு மேன்மை அல்லது வெகுமதியை வைத்திருக்கிறார். ஆயிரம் வருட அரசாட்சி முற்றிலுமாக வரப்பெற்றிருக்கும்போது, பொதுவான கருத்துக்களை சந்தேகிப்பது முடியாததாயிருக்கும். ஆகவே சந்தேகப்படாதவர்களுக்கு, ஒரு விசேஷமான வெகுமதியைக் கொடுப்பது நடைமுறையில் இருக்காது.

கர்த்தரை அறிகிற அறிவு முழு பூமியையும் நிரப்பியிருப்பதால், உன் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானைப் பார்த்துச் சொல்ல அவசியமிராது; மனிதன் மேல் ஒரு வித்தியாசமான பரீட்சை, விசுவாசத்தினாலல்ல, கிரியைகளினால், கீழ்ப்படிதலினால் உண்டாயிருக்கும்; ஏனெனில் ''அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவ னெவனோ, (கீழ்ப்படியாதவன் எவனோ) அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்.'' (அப். 3:23) திவ்விய திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிற தற்போதைய அந்தகார வேளையில், பாவம் பெருகி, சாத்தான் உலகத்தின் அதிபதியாக இருக்கும் போது, நம்முடைய ஆண்டவர், ''உங்கள் விசுவாசத்தின்படியே உங்களுக்கு ஆகக்கடவது'' (மத். 9:29)என்று கூறி விசுவாசத்தின்மேல் வெகுமதியை வைக்கிறார்.

மறுபடியும், ''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' (1யோவா. 5:4) என்று கூறுகிறார். ஆனால் உலகத்தின் விசாரணையைக் குறித்து, அல்லது நியாயத் தீர்ப்பைக்குறித்து, ஆயிர வருட அரசாட்சியில், அல்லது நியாயத்தீர்ப்பின் நாளில், விசுவாசத்தினால் தாங்கப்படுகிற கிரியைகளினால் எல்லோரும் நியாயம் விசாரிக்கப்படுகிறார்கள் என்று வாசிக்கிறோம். அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக ஆயிர வருட யுக முடிவில் அங்கீகரிக்கப்பட்டவர்களாக அல்லது நிராகரிக்கப்பட்டவர் களாக இருப்பார்கள். (வெளி. 20:12)

நாம் ஏற்கனவே பார்த்த பிரகாரம் நீதிமானாக்கப்படுதல் என்பது பாவியை, அவனது சிருஷ்டிகரோடு முழுமையான இணக்கத்திற்குக் கொண்டு வருவதாகும். கிறிஸ்துவுக்கு முன்பாக பாவி நீதிமானாக்கப் படவேண்டும் என்று எந்த இடத்திலும் நாம் வாசிக்கிறதில்லை, ஆனால் கிறிஸ்துவின் புண்ணியத்தினால் பிதாவுக்கு முன்பாக அவன் நீதிமானாக்கப்படவேண்டும். இது ஏன் இப்படி இருக்கிறது என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு, இந்த முழுப் பாடத்தையும் புரிந்து கொள்வது நமக்கு உதவியாக இருக்கலாம். ஏனெனில் சிருஷ்டிகர் தாமே அவருடைய சொந்தப் பிரமாணத்தின் பிரதிநிதியாக இருக்கிறார். மேலும் ஆதியிலே தகப்பனாகிய ஆதாமையும், அவனுடைய சந்ததியையும் அவர் அந்தப் பிரமாணத்திற்குள்ளாக வைத்து, அவருடைய அனுக்கிரகத்தையும், ஆசீர்வாதத்தையும், நித்திய ஜீவனையும் அனுபவிப்பது கீழ்ப்படிதலைப் பொறுத்தது என்றும், ஆனால் கீழ்ப்படியாமை இந்த எல்லா அனுக்கிரகங்களையும் பறித்துக் கொள்ளும் என்றும் அறிவித்தார். இந்த நிலைமையை ஒரு பக்கமாக ஒதுக்கி விட முடியாது. ஆகவே, மனுக்குலம் தேவனோடு ஐக்கியத்தையும், அவருடைய ஆசீர்வாதமாகிய நித்திய ஜீவனையும் பெறுவதற்கு முன், அவர்கள் எவ்விதத்திலாவது தங்களுடைய சிருஷ்டிகரோடு முழுமையாக இசைந்து போகிறவர்களாக வேண்டும்; அதனிமித்தம் திவ்விய பரிசோதனையின் முழுவெளிச்சத்திலும், கீழ்ப்படிதலின் முழு பரீட்சையிலும் நிற்கக்கூடிய அந்த பூரணத்திற்குத் திரும்ப வேண்டும்; இப்படியாக முழு உலகமும் சர்வ வல்லவருக்கு எட்டாத இடத்தில் இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அவர் தன்னுடைய நிகழ்கால மீட்பின் திட்டத்தையும், திரும்பக் கொடுத்தலையும், அல்லது நீதிமானாக்கப்படுதலையும், அல்லது விருப்பமுள்ளவர்களையும் கீழ்ப்படிகிறவர்களையும், இதற்கிடையில் அவர்களுடைய மத்தியஸ்தராக அல்லது இருவருக்கும் இடையில்

செல்பவராக இருக்கும் மீட்பரின் மூலமாக திருப்பிக்கொண்டு வரும்படியாக, அவருடைய பிரமாணங்கள் நீதிக்கு எட்டாத இடத்தில் இருக்கும்படி வேண்டுமென்றே ஒழுங்குபடுத்தியிருக்கிறார்.

மத்தியஸ்தர் பூரணராக இருந்தபோதிலும், கடைபிடிக்க வேண்டிய பிரமாணம் ஒன்றும் கிடையாது. ஆதாமையும் அவனுடைய சந்ததியினரையும் புரிந்து கொண்டு, அவர்களுடைய குறைவுகளுக்காக அவர் இரக்கமுள்ளவராக இருப்பதற்குத் தடையாயிருக்கக் கூடிய எந்த பிரமாணத்தையும் அவர் சொல்லவில்லை. அதற்கு மாறாக, அவர் உலகத்தின் அவல நிலையை உணர்ந்து, பாவத்திலும் குறைவிலும் அது இருக்கும்போது கிரயம் கொடுத்து வாங்கினார். அவர் காண்கிறபடி, மானிடர் ஒவ்வொருவரையும் ஆயிர வருட யுகத்தில், அவனவனது விசேஷித்த நிலமையின்படி, பலகீனரிடத்தில் இரக்கத்தையும் காண்பித்து, பலமுள்ளவர்களிடத்தில் அதிகமாக எதிர்பார்ப்பார். ''பிதாவானவர்..... நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்'' (யோவா. 5:22) என்றபடி அவர் காண்கிறவிதமாகத் தன்னையும் தன்னுடைய இராஜ்யத்தின் பிரமாணங்களையும் எல்லாவிதமான விசேஷ குணங்கள், கறைகள், பெலகீனங்கள் போன்றவைகளுக்கேற்ப தொடர்பு கொள்கிறார். ஆயிர வருட அரசாட்சியின் முடிவில், மனுக்குலம் தேவனுடைய பார்வையில் நீதியும் பிரியமுமுள்ளவர்களாக ஆவதற்கு முன்னர் காலக் கட்டத்தில் அடைய வேண்டிய திவ்விய பிரமாணத்தின் பூரணமான நிலைமையை குமாரன் விளக்குவார். ஆனால் அந்த நிலைமையை எட்ட வேண்டும் என்று அவர் வற்புறுத்த மாட்டார். மேலும் அந்த நிலையை அடையாதவர்களுக்குத் தற்செயலாகவோ அல்லது விருப்பமில்லாமலோ செய்யப்பட்ட மீறுதல்களை மூடுவதற்குத் தேவையான கிருபை வேண்டும் என்று எண்ணி அவர்களை மீறுபவர்கள் என்று எடுத்துக்கொள்ள மாட்டார். அதற்கு மாறாக, தேவனுடைய மாற்றமுடியாத பூரணமான பிரமாணத்தின் மீறுதல்களுக்கான இந்த எல்லா பரிகாரங்களும் அவர் அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னர் செய்து முடிக்கப்படும்.

கிறிஸ்து ஏற்கெனவே அவருடைய சொந்த பலியின் மூலம் கிரயத்தை கொடுத்து இருக்கிறார். அவர் ஏற்கெனவே கிருபையாக அந்தப் புண்ணியத்தை விசுவாச வீட்டாருக்கு கொடுத்திருக்கிறார்; மேலும் இந்த சுவிசேஷ யுகம் முடியும் தருவாயில் ''எல்லா மனுஷரின்''–மனுக்குலத்தின்,

முழு உலகத்தின் சார்பில் நிச்சயமாகவே முழு பாவ நிவாரண பலியை பிரயோகிப்பார். தேவன் ''நிவாரண நாளின்'' நிழலின் மூலமாக அது ஏற்றுக் கொள்ளப்படும் என்று காட்டியுள்ளார். மேலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதினால் கிறிஸ்துவும் அவருடைய சபையும் அவ்வேளையில் உலகத்தின் அரசாங்கத்தை, இராணுவ சட்டம் அல்லது எதேச்சதிகாரம் என்று சொல்லக்கூடிய விதத்தில் பொறுப்பெடுத்துக் கொள்ளும்; அப்பொழுது அவசர தன்மையினிமித்தம் சாதாரணப் பிரமாணங்களையும் நிலைமைகளையும் தள்ளி வைக்கிறது. ஆனால் பிரமாணங்களை பூரண அல்லது சரியான நிலையில் உள்ளவர்களுக்கு ஏற்றமாதிரியல்ல (யேகோவாவின் சாம்ராஜ்யத்தில் இருக்கிற பிரமாணங்களின்படி) பாவத்தின் விளைவினால் உலகத்தில் உண்டாக்கப்பட்டிருக்கிற கலகத்திற்கும் அராஜகத்திற்கும் ஏற்றபடி உபயோகப்படுத்தும். இராஜா இந்த அவசர காலத்தில் இராஜாவாக மாத்திரமல்லாது, நியாயாதிபதியாகவும் மகா பிரதான ஆசாரியராகவும் ஆட்சி செய்வார். நாம் இப்போது பார்த்திருக்கிறபடி உலகத்தை பரீட்சார்த்தமாக அல்ல விசுவாசத்தினால் தாங்கப்படுகிற கடைசி சோதனை அல்லது நிலையான கிரியைகளை வைத்து உண்மையாகவே நியாயந்தீர்க்கும்படியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உண்மையான நீதிமானாக்கப்படுதல் ஆயிர வருட அரசாட்சியின் ஆரம்பத்தில் அல்ல, அதன் முடிவில் அரசாட்சியின் பலனாக செயல் படுத்தப்படும்.

ஆபிரகாமின் உடன்படிக்கையில் வாக்குத்தத்தத்தின் வித்தாக இணைந்து பலி செலுத்துகிறவர்களாக, அதன்படியே இயேசுவோடு உடன்சுதந்திரராகும்படிக்கு தேவன் அவருடைய விசேஷ ஊழியத்திற்கு அழைக்கும்படி நியமித்திருக்கிற ஒரு சிலரை அனுமதிக்கும் ஒரு நோக்கத்துடன் இக்காலத்துக்குரிய விசுவாசத்தினால் நீதிமானாக்கப் படுதல் இருக்கிறது. இவர்களோடுகூட தேவனால் நேரிடையாக ஒப்பந்தம் செய்ய முடியவில்லை. சொல்லப்போனால் விசுவாசத்தினாலும் அவர்களது மீட்பரின் புண்ணியத்தினாலும் நீதிமானாக்கப்பட்ட பின்னரும் அவர்கள் தகுதியற்றவர்கள் போல் நடத்தப்படுகிறார்கள். மேலும் அவர்களுடைய நேசராகிய கிறிஸ்துவில் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப் படுகிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறார்கள். அவர்கள் பலி செலுத்தும்படியாக செய்து கொண்ட எல்லா ஒப்பந்தங்களும் அவரால் ஆமோதிக்கப்பட்டாலொழிய அது செல்லாததாகும்.

இந்த சுவிசேஷ யுகத்தின் முக்கிய நோக்கமே புது சிருஷ்டியின் அங்கங்கத்தினர் களாகும்படியாக ஒரு மந்தையை மனுக்குலத்திலிருந்து அழைப்பதாகும் என்பது தெளிவாகிறது. விசுவாசிகளை ஜீவனுக்கென விசுவாசத்தினால் நீதிமான்களாக்கும் ஒழுங்கு முறையானது, அவர்களுக்கு தேவனோடு உறவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் உள்ளது. அதன்மூலம் புது சிருஷ்டியின் அங்கத்தினர்களிடத்தில் தேவைப்படும் கடமை களுக்குள் அவர்கள் நுழைய முடியும். ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, அவர்கள் புது சிருஷ்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்குள்ள நிபந்தனை தங்களையே பலியாக ஒப்புக்கொடுப்பதின் மூலம்தான். மேலும் தேவன் பாவமுள்ள எதையும் பலியாக பெற்றுக்கொள்ள விருப்பம் இல்லாதவராயிருக்கிறபடியால், பாவத்திற்கும், ஆக்கினைக்கும் உள்ளான இனத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களாகிய நாம், முதலாவது உண்மையிலேயே எல்லா பாவத்திலிருந்தும் நீதிமானாக்கப்படும்வரை ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவர்களாயிருக்கிறோம். இதைத்தான் அப்போஸ்தலர் ''நாம் நம்முடைய சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பதே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' என்றுசொல்கிறார். (ரோம. 12:1)

இந்த கண்ணோட்டத்தில் தேவனிடத்தில் விசுவாச நிலைமைக்கும், ஒரு குறித்த அளவுக்கு நீதிமானாக்கப்படுதலுக்கும் வருபவர்களைப்பற்றி நாம் என்ன சொல்லுவோம்? ஆண்டவருடைய பாதையில் மேலும் முன்னேறிச்செல்வதற்கு தன்னைத்தானே பலியிடுதல், தன்னைத்தானே வெறுத்தல் போன்றவைகள் வேண்டும் என பார்க்கிறார்கள். இருந்த போதிலும், ஒரு முழு அர்ப்பணிப்புக்கான இடுக்கமான வாசல், நெருக்கமான பாதைக்குள் செல்ல மறுத்து நின்றுவிடுகிறார்கள். மரண பரியந்தம் இப்படியிருக்குமா? தேவன் அவர்களிடத்தில் கோபமா யிருக்கிறார் என்று சொல்லலாமா? இல்லை! ஒரு குறித்த அளவுக்கு நீதியின் பாதைகளில் முன்னேறியது தேவனுக்கு பிரியமாயிருந்தது என்று நாம் வைத்துக்கொள்ளலாம். அவர்கள் ஓர் ஆசீர்வாதத்தைப்பெறுகிறார்கள், இதைக்குறித்து அப்போஸ்தலரும் ''நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்'' என்று சொல்கிறார். இந்த சமாதானம் வருங்காலத்தில் விசுவாசியின் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படுதலைக் குறித்த திவ்விய திட்டத்தை ஓர் அளவுக்கு பகுத்தறிதலைக் காட்டுகிறது. (அப். 3:19) அது நீதியின் ஒழுங்கு

முறைகளோடு நன்கு இசைந்திருத்தலைக் காட்டுகிறது. எப்படியெனில் கிறிஸ்துவில் வைக்கிற விசுவாசம் எப்போதுமே சீர்திருத்தக்கூடியதாயிருக்கிறது. இந்த அளவுக்கு வருகிற எல்லாரோடும் சேர்ந்து களிகூறுகிறோம். இந்த மனுக்குலத்தின் பெரும்பான்மையினரை இந்த உலகத்தின் தேவனானவன் முழுவதும் குருடராக்கியிருக்கிறபடியினாலே, இக்காலத்தில் கிறிஸ்துவுக்குள் உள்ள தேவ கிருபையைப் பார்க்கவும், பாராட்டவும் முடியாதிருக்கிறார்கள். இவர்களைக்காட்டிலும் அவர்கள் இந்த அளவு அதிக அனுகூலம் உள்ளவர்கள் என்பதை அறிந்து சந்தோஷப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் முழுவதும் கீழ்ப்படிவதன் மூலம் கிறிஸ்துவின் புண்ணியத்தில் நிலைத்திருக்கும்படி வலியுறுத்துகிறோம்.

"தேவனின் கிருபையை விருதாவாய் பெறாதீர்கள்"

இப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து எவ்வளவாய் களி கூர்ந்தாலும், எவ்வளவு சமாதானமும், மகிழ்ச்சியும் இப்படிப்பட்டவர்களுக்கு வருவதாயிருந்தாலும், நீதியின் பாதையில் நடக்கும்படியாக தேடி, ஆனால் இடுக்கமான பலியின் பாதையை தவிர்ப்பவர்களுக்கு வஞ்சகம் இல்லாமல் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் : "தேவனுடைய கிருபையை விருதாவாய் பெறாதீர்கள்." (2 கொரி. 6:1) ஏனென்றால் நீதிமானாக்கப்படுதல் என்ற அவர்கள் பெற்ற தேவ கிருபை, புது சிருஷ்டிகளுக்கு கிடைக்க இருக்கிற சிலாக்கியங்களுக்கும் உன்னத அழைப்பின் ஆசீர்வாதங்களுக்கும், படிக்கல்லாக இருக்கும்படி உள்ளது. இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய கிருபையை விருதாவாய் பெற்றிருக்கிறார்கள்; ஏனெனில் அவர்கள் இந்த நல்ல தருணத்தை உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தருணம் இதற்கு முன்னால் யாருக்கும் கொடுக்கப் பட்டதில்லை; வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி, இப்படிப்பட்ட தருணம் மறுமுறை எவருக்கும் கொடுக்கப்படப்போவதில்லை. அவர்கள் தேவனுடைய கிருபையை விருதாவாய் பெறுகிறார்கள், ஏனென்றால் திரும்பக் கொடுத்தலின் சந்தர்ப்பங்கள் வருகிற யுகத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படுவது போல மீட்கப்பட்ட சந்ததியினர் எல்லாருக்கும் கொடுக்கப்படும். நீதிமானாக்கப்படுதலின் மூலம் தொடர்ந்து முன்னேறி அழைப்பைப் பெறவும், தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சரீரமான

சபையாயிருக்கிற, இராஜரீக ஆசாரியத்துவம் கொடுக்கப்பட இருக்கிற மகிமையான பந்தயப்பொருளைப் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்களுக்கு உலகத்தாரைக்காட்டிலும் முன்னதாகவே தேவனுடைய நற்பலன்கள் உணர்த்தப்பட்டது என்பதை இந்த யுகத்தில் தேவனுடைய கிருபை உள்ளடக்கியுள்ளது.

பேர் ''கிறிஸ்தவ உலகத்தைப்'' பார்க்கும்போது, உண்மையுள்ள பெரும்பாலான விசுவாசிகள் கூட நீதிமானாக்கப்படுதலின் ஆரம்ப நிலையைத் தாண்டி ஒரு போதும் சென்றதில்லை. அவர்கள் ''கர்த்தர் கிருபையுள்ளவர் என்பதை ருசித்துப் பார்த்திருக்கிறார்கள்,'' அது அவர்களுக்கு போதுமானதாக இருக்கிறது. இதற்குப் பதிலாக இந்த ''ருசியின் மூலம்,'' இன்னும் நீதியின் மேலும், சத்தியத்தின் மேலும், திவ்விய குணாதிசயத்தின் மேலும், திவ்விய திட்டத்தின் மேலும், கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் இன்னும் அதிகமாக வளரவும் அவர்கள் அதிகமான பசியும் தாகமும் உள்ளவர்களாய் அதிகமாய் உணர்வடைந்திருக்க வேண்டும். மேலும் அவர்களைப்பற்றிய தெய்வீக சித்தத்தை இன்னும் அதிகமாகப் புரிந்து கொள்ளும் நிலையை எட்டவும், பசியும் தாகமும் உள்ளவர்களாய் முழுமையாக உணர்வடைய வேண்டும், இதைக்குறித்து 'பரிசுத்தமாக்கப்படுதல்' என்ற தலைப்பின் கீழ் அடுத்தபடியாக பார்ப்போம்.

நம்மால் புரிந்து கொள்ள முடிந்தவரை, தற்காலிக நீதிமானாக்கப் படுதலில் உள்ள அனுகூலம், நிகழ்கால வாழ்க்கையை மட்டும் குறிப்பதுடன், மேற்கொண்டு தேவனுடைய கிருபை நிறைந்த குணாதிசயத்தையும் அவர்களோடு அவர் வருங்காலத்தில் தொடர்பு கொள்ளுதலைக் குறித்தும் அவர்கள் உணருகிற உதவியைக் குறித்தும் சொல்லுகிறது. இதனையொட்டியிருக்கும் அவர்களது அறிவும் மிக அற்பமாக கீழ்க்கண்டவாறு பாடுகிற அளவிற்கு இருக்கும்.

''அநேகமுறை அது ஆவல் நிறைந்த சிந்தையை உண்டு பண்ணுகிறது.
நான் அவருடையவனா அல்லது அப்படியில்லையா.''

உண்மை என்னவெனில் அவர்களுக்கு ஒரு மீட்பர் தேவை என்பதைக் காட்டும் வரையிலும் , மேலும் அவருக்கு கொடுக்கப் பட்டிருக்கிற இரட்சிப்பைப் பற்றி சிலவற்றைக் காட்டும் வரை கிறிஸ்து அவர்களுடைய ஞானமாய் இருந்த போதிலும் அவர்கள்

அர்ப்பணிப்பினாலும், பக்தியினாலும், அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவர் களாலன்றி, அவர் தொடர்ந்து அவர்களுடைய ஞானமாயிருக்கவும், அவர்களை ''தேவனுடைய ஆழமான காரியங்களுக்குள்'' வழி நடத்தவும் வேண்டும் என்பது திவ்விய திட்டம் அல்ல. அர்ப்பணம் செய்யாத விசுவாசி, தேவனுடைய வழிகளில் சிலவற்றையும், அவர் எதிர்பார்க்கிறவைகளைப் பார்த்தாலும், மேலும் உலகத்தில் அவன் சன்மார்க்கமான, நல்ல நேர்மையான வாழ்க்கையை நடத்த முயற்சித்துக் கொண்டிருந்தாலும், எவ்விதத்திலும் அவன் ஒரு புது சிருஷ்டியல்ல. அவன் இன்னமும் பூமியிலிருக்கிறான், பூமிக்குரியவன். அவன் தன்னுடைய மனுஷீக, பூமிக்குரிய உரிமைகளை (இயேசுவின் மூலம் பெறப்பட்டவைகள்) ஆண்டவர் தனது பலியினால் கதவைத் திறந்ததின் மூலம் உண்டான பரலோக காரியங்களுக்கு மாற்றி கொள்ளும்படியாக அவன் ஒருபோதும் முன்வரவில்லை. நிழலான லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை, மாத்திரமல்ல அங்கேயுள்ளவைகளைப் பார்க்கவும் அனுமதிக்கப்படவில்லை. அதுபோன்று, உண்மைப் பொருளில் அர்ப்பணிக்காத விசுவாசிகள் முதலில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து ராஜரீக ஆசாரியத்துவத்தில் அங்கத்தினராகாவிடில் அவர்கள் தேவனுடைய ஆழமான காரியங்களுக்குள் அனுமதிக்கப்படுவதும் இல்லை, அல்லது அவருடைய மேன்மையைப் பார்த்து பாராட்டவும் அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த வாழ்க்கையில் அவருடைய நன்மையை விருதாவாய் பெற்றதின் நிமித்தமாக, ஆயிர வருட யுகத்தில் ஆண்டவருடைய கரத்திலிருந்து விசேஷ கவனிப்பையும், நன்மையையும் எதிர்பார்ப்பது, முடிவு பெற்ற ஆசீர்வாதம் தவறாக பயன்படுத்தப்பட்டது அல்லது குறைவாக மதிப்பிப்பட்டது என்பதற்காக ஒரு விசேஷமான ஆசீர்வாதத்தை எதிர்பார்ப்பதற்கு ஒத்திருக்கிறது. சுவிசேஷ யுகத்தின்போது நன்மை பெற்றிராத ஒருவர் வருகிற யுகத்தில் முக்கியமான நன்மைகளைப் பெறுவார் என்றால் அது கடந்த காலத்தில் தேவன் கொண்ட தொடர்புகளைப் போலிருக்குமல்லவா? இது ''முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் இருப்பார்கள்'' என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு ஏற்ப இருக்கிறது அல்லவா? உண்மையில், புது சிருஷ்டி முற்றுப்பெற்று, ஆயிர வருட யுகம் வரும்போது, சுபாவ இஸ்ரயேலரிடத்திலிருந்து இந்த சுவிசேஷ யுக

ஆரம்பத்தில் நீக்கப்பட்ட விசேஷ கிருபைகள் மறுபடியும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் (ரோம. 11:25–32) என்பதை அப்போஸ்தலர் தெளிவாக சுட்டிக் காட்டுகிறார்.

இந்த சுவிசேஷ யுகத்திற்கு முன்னதாக, தேவனோடு ஐக்கியம் கொள்ளும்படியாக நீதிமானாக்கப்பட்டவர்கள், தாங்கள் நீதிமானாக்கப் பட்டதை காத்துக்கொண்டு, பூமிக்குரியவற்றில் தன்னைத்தான் வெறுத்து அதை பராமரித்துக்கொண்டதற்கு (எபி. 11:35) வெகுமதியாக பரலோக ராஜ்யத்தின் கீழாக ''பூமியெங்கும் பிரபுக்களாக்கப்படுவார்கள்.'' இந்த யுகத்தில் தங்களுடைய நீதிமானாக்கப்படுதலை சரியாக உபயோகிப்பவர் களும், காத்துக்கொள்பவர்களும் தங்களுடைய மாம்சத்தைக் கீழ்ப்படுத்துவதன் மூலம் அப்படிச்செய்ய வேண்டும். சிறு மந்தை அசாதாரணமான அளவுக்கு உண்மையாயிருந்து, சத்தியத்திற்கும், சகோதரருக்கும் சேவை செய்யும்படியாக தங்களுடைய ஜீவனையே கொடுப்பார்கள்; இதன் மூலம் தங்களுடைய இரட்சிப்பின் அதிபதியைப் போலவே இருப்பார்கள். இரண்டாவது வகுப்பினர், இன்னொரு இடத்தில் ''திரள் கூட்டம்'' என்று எண்ணப்படுபவர்கள் தங்களுடைய மாம்சத்தைக் கீழ்ப்படுத்துவதன் மூலம் வெகுமதியை அடைய வேண்டும், ஆனாலும் பலியின் ஜீவியத்தில் அதிகமான வைராக்கியம் காட்டாதபடியால், புது சிருஷ்டிக்கான பெரிய வெகுமதியையும், அந்த இராஜ்யத்தின் சிலாக்கியங்களையும் இழந்து விடுகிறார்கள். இந்த மூன்று வகுப்பினர் மாத்திரமே இந்த வாழ்க்கைக்குப் பின்னரும் இந்த யுகத்தில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலினால் வரும் தருணங்களினால் பயனடைவது போன்று தோன்றுகிறது.

இராஜ்யத்தின் செயல் முறைகள் முழு அறிவின் வெளிச்சத்தின் கீழ், மேலும் கிரியைகளின் முறைப்படி, பல்வேறு காரணங்களுக்காக முதலாவது மாம்ச இஸ்ராயேலுக்கு அதிக ஈர்ப்பை அளிக்கும்; அவர்களுடைய குருட்டாட்டம் அகற்றப்படும்போது ஆண்டவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருக்காக அதிக வைராக்கியம் கொண்டு, தீர்க்கத்தரிசனத்தில் சொல்லப்பட்டபடி, ''இவரே நம்முடைய தேவன், இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்'' (ஏசா. 25:9) என்பார்கள். இயற்கையாகவே இஸ்ராயேல் புது முறையின் கீழ் வந்து சேருவதற்கு முதலாவதாக இருக்கும். தேவனுக்கு ஸ்தோத்திரம்! இராஜ்யத்தின் சிலாக்கியங்களும் ஆசீர்வாதங்களும் ''உன்னை அநேக

ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினேன், பூமியிலுள்ள சகல வம்சங்களும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்'' என்று எழுதியிருக்கிறபடி ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களில் பங்குபெறும்படியாக, சகல ஜாதிகளும் ஆபிரகாமின் பிள்ளை களாகும்படி, உலகமெங்கும் துரிதமாக விரிவாக்கப்படும்.

கிறிஸ்து நமக்குப் பரிசுத்தமானார்

ஆண்டவராகிய இயேசு நம் சார்பில் செய்த பலியினால் தேவனுடைய ஞானம் அல்லது அறிவு நமக்கு வந்ததுபோலவும், அவருடைய பாவ நிவர்த்தியை ஏற்று நமக்குள்ள எல்லாவற்றையும் தேவனுக்கு அர்ப்பணித்தபோது அவருடைய புண்ணியத்தினால் நீதிமானாக்கப்படுதல் வந்ததுபோலவும் நம்முடைய பரிசுத்தமாக்கப் படுதலும் அவர் மூலமாக வந்தது. அவருடைய ஆவியினால் பிறப்பிக்கப்பட்டு, தேவனுடைய குடும்பமான புது சிருஷ்டிக்குள் தத்து எடுத்துக்கொள்ளப்படுமாறு, ஏற்றுக்கொள்ளப்படுமாறு, ஒருவனும் தன்னைத்தானே பரிசுத்தப்படுத்திக் கொள்ளமுடியாது. (யோவா. 1:13; எபி. 5:4) நாம் நீதிமானாக்கப்படுதலுக்கு கிறிஸ்துவின் புண்ணியம் தேவைப்பட்டது போலவே, அவருடைய சரீரத்தில் அங்கமாக– ராஜரீக ஆசாரியத்துவத்திற்கு அவர் ஏற்றுக் கொள்வதற்கும், நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள அவருடைய உதவி தொடர்ந்து தேவைப்படுகிறது. ''தலையைப் பற்றிக் கொள்ளாதிருக்கிற'' சிலரை அப்போஸ்தலர் கண்டிக்கிறார். (கொலோ. 2:19) இப்படியாகக் கிறிஸ்துவை பாவத்தினின்று மீட்பவராக மாத்திரமல்ல, ஆனால் தலையாக, பிரதிநிதியாக, வழிகாட்டியாக, போதனையாளராக, மேலும் சரீரத்தைப் பாதுகாப்பவராக (சபைக்கு)அதன் ஒவ்வொரு அங்கத்திற்கும் இன்றியமையாதவர் என்று பார்க்கிறோம். அவருடைய பராமரிப்பின் கீழ் தொடர்ந்து இருக்க வேண்டியதின் அவசியத்தை ஆண்டவர் சுட்டிக்காட்டி, மறுபடியும் சொல்கிறார்: ''என்னில் நிலைத்திருங்கள்.....கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்க மாட்டீர்கள்.'' (யோவா. 15:4) ''நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ, அது உங்களுக்குச்

செய்யப்படும்.'' (யோவா. 15:7) கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க வேண்டியதின் இதே அவசியத்தை அப்போஸ்தலர், ''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமே'' (எபி. 10:31)என்று சுட்டிக் காட்டுகிறார். ''நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே'' என்ற தீர்க்கத்தரிசனத்திலிருந்து தொடர்ந்து அவருடைய அர்த்தத்தை சுட்டிக்காட்டுகிறார். தேவனுடைய அன்பு அவருடைய நீதியைக் காட்டிலும் குறைவானதல்ல. அது எல்லா பாவத்தையும் சுட்டெரிக்கிறது. ''அநீதியெல்லாம் பாவந்தான்.'' ''அவர் பாவத்தை நோக்கிக்கொண்டிருக்க (அங்கீகரிக்க) மாட்டார்.'' ஆகவே அவர் பாவிகளை பாதுகாப்பதற்காக அல்ல, ஆனால் அவர்களை பாவத்திலிருந்தும் அதன் தண்டனையான அழிவிலிருந்தும் தப்புவிக்கும்படியாக முன் ஏற்பாடு செய்திருக்கிறார்.

பாவமும், பாவிகளும், பாவத்தினால் தொடர்ந்து வருகிற வேதனையும் துக்கமும் மரணமும் அற்றுப் போவதற்கான வேளை வருகிறது என்ற வேதாகமத்தின் பல அறிக்கைகளோடு இது இசைந்த வண்ணம் நமக்கு உறுதியளிக்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம்! நமக்கு விருப்பமில்லாத குறைபாடுகள் இருந்த காலத்தின்போது அவர் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு ஓர் அடைக்கலம் வைத்திருக்கிறார் என்பதையும், அவருடைய பூரண சாயலுக்கு நாம் வரும்படியாக நமக்கு பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும், ஒவ்வொரு பெலகீனத்திலிருந்தும் முழு விடுதலையை வைத்திருக்கிறார் என்பதையும், புது சிருஷ்டிக்கு திவ்விய சுபாவம் பூரணமடையவும், முழுமையடையவும், திரள் கூட்டத்திற்கு ஒரு விதத்தில் தூதர்களைப் போன்ற நிலையில் பூரணமடைவதற்கும் மகிமையான சபையின் ஊழியக்காரர்களாக துணை செய்பவர்களாக இருக்கும்படியாக –''அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகளாக''(சங்.45:14)– வைத்திருக்கிறார் என்பதையும் அறியும்போது தெய்வீக குணாதிசயத்தின் ஓர் அம்சமாக நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாக இருக்கிறார் என்பதில் நாம் களிகூறலாம். அடுத்தபடியாக பழைய ஏற்பாட்டுகால விசுவாசிகள் மனித சுபாவத்திலும், மாம்சத்தில் தேவனுடைய சாயல் உள்ளவர்களாகவும், பரலோக ராஜ்யத்தின் மகிமையடைந்த பிரதிநிதிகளாவும் பூலோகத்தில் உள்ள எல்லா குடும்பங்களுக்கும் திவ்விய ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிற வழிகளாகவும் பூரணப்படுத்தப் படுவார்கள். இறுதியாக ஆயிர வருட அரசாட்சியின் போது சோதனைகள்,

வாய்ப்புகள், விருப்பமுள்ளவர்களையும், கீழ்ப்படிதலுள்ளவர்களையும் பூரணத்திற்கு கொண்டு வந்திருக்கும். அவர்கள் தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படையாகக் காட்டியிருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களும் கூட மாம்சத்தில் தேவனுடைய சாயலான மனித பூரணத்தை அடைந்திருப்பார்கள். இவர்கள் அனைவர் மத்தியிலும் தேவனுடைய சித்தம் பரிபூரணமாக புரிந்து கொள்ளப்பட்டு இவர்களை கீழ்ப்படியச் செய்யும். ஆகவே இனி அவர்களுக்கு ஒருபோதும் பட்சிக்கிற அக்கினியாக அவர் இருக்கப்போவதில்லை. ஏனெனில் பிதாவின் அன்பினாலும், ஞானத்தினாலும், அவர்கள் மாபெரும் மத்தியஸ்தரின் பொறுப்பில் விடப்பட்டபோது, அவருடைய ஒழுங்கு முறையின் கீழ் அவர்களுடைய எல்லா அழுக்குகளும் அகற்றப்பட்டிருக்கும். ''அவர் (கிறிஸ்து) தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தி ஆவார்.''

பரிசுத்தமாக்கப்படுதல் பரிசுத்த ஊழியத்துக்கென தனியாகப் பிரிக்கப்படுதலை குறிக்கிறது. பாவிகள் பரிசுத்தமாக்கப்படுதலுக்கல்ல மனந்திருப்புதலுக்கு அழைக்கப் படுகிறார்கள். மனந்திரும்பிய பாவிகள் பிரதிஷ்டைக்கு நியமிக்கப்படவில்லை, ஆனால் நீதிமானாக்கப்படும் படியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்படியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். பரிசுத்தமாக்கப்படுதல் நீதிமானாக்கப்பட்ட வகுப்பினர் மேலும், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தேவனின் வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறவர்கள் மேலும் அவருடைய ஈடுபலியினால் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் மேலும் மாத்திரமே வலியுறுத்தப்படுகிறது. அப்படியென்றால் பரிசுத்தமாக்கப் படுதல் அல்லது பரிசுத்தம் எல்லா மனுக்குலத்திற்கும் ஏற்ற காரியம் அல்ல என்று பொருள்படுவதல்ல. அதன் அர்த்தம் என்னவெனில் ஒரு மனிதன் மனந்திருந்தாத நிலையில் இருக்கும் வரை, அவனை பரிசுத்தமான வாழ்க்கைக்கு அவன் தன்னை வேறுபடுத்த அழைப்பது பயனற்றது என்பதை தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார். முதலாவது அவன் தன் பாவநிலையை உணர்ந்து மனம் வருந்தவேண்டும். அப்படியென்றால் மனம் வருந்துபவன் பரிசுத்தமாக்கப்பட வேண்டியதில்லை, பரிசுத்தமான வாழ்க்கைக்கு பிரிக்கப்பட வேண்டியதில்லை என்று பொருள் படுவதில்லை. ஆனால் நீதிமானாக்கப்படுதல் இல்லாமல் ஒரு பரிசுத்தமாக்கப்படுதல் முற்றிலும் பிரயோஜனமற்றதாயிருக்கும். அவருடைய ஊழியத்திற்கென நம்மை அர்ப்பணிக்க அல்லது பரிசுத்தப்படுத்த சரியான ஒரு நிலைக்கு வருவதற்கு முன்னர்,

தேவனுடைய நியமத்தின்படி, முதலாவது நம்முடைய பாவத்திற்கென்று அவர் செய்திருக்கிறதில் உள்ள திவ்விய நன்மைகளைக் கற்றுக்கொண்டு, அவர் செய்திருக்கிற ஒழுங்குமுறை கிறிஸ்துவின் மூலம் வந்த ஒரு இலவச வெகுமதி என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். இதோடுகூட சுவிசேஷ யுகத்தின் இந்த எல்லா ஒழுங்குகளின் குறிக்கோளான மனந்திரும்புதலுக் கான அழைப்பு, நீதிமானாக்கப்படுதலுக்கான நற்செய்தி அறிவிப்பு, அவர்களை தேவனுக்கென்று பரிசுத்தப்படுத்தும்படியாக அல்லது அர்ப்பணிக்கும்படியாக எல்லா விசுவாசிகளுக்கும் வரும் அழைப்பு எல்லாம் தேவன் செய்து கொண்டிருக்கிற ஒரு பெரிய திட்டத்தின் ஆதாரங்கள் அல்லது பகுதிகளாகும். புது சிருஷ்டிகளாக, ''இராஜரீக ஆசாரியர்களாக'' இருக்கிற எல்லோரும் பலி செலுத்து கிறவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் முன்னதாகவே தீர்மானித்திருக்கிறார். மேலும் நம்முடைய பிரதான ஆசாரியர் ''தம்மைத்தாமே தேவனுக்கு ஒப்புக் கொடுத்தது'' போல அவர்கள் ஒவ்வொருவரும் தேவனுக்கு ஏதோ ஒன்றை ஒப்புக்கொடுக்கும்படியாக வைத்திருக்க வேண்டும். (எபி. 7:27; 9:14) அப்போஸ்தலர் புத்திமதியாக சொல்லுகிறார், ''அப்படியிருக்க சகோதரரே, (சகோதரர்கள்–ஏனெனில் நீதிமானாக்கப்பட்டு இவ்விதமாக தேவனோடு ஐக்கியம் கொள்ளும்படியாக கொண்டுவரப் பட்டவர்கள்) நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டு மென்று தேவனுடைய இரக்கங்களை (ஏற்கனவே அனுபவித்த பாவமன்னிப்பு) முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாகும்.'' (ரோம.12 :1) இதன்படியே ஆசாரியத்துவத்திற்கு கீழாக இருக்கிற எல்லாரும் தங்களை தேவனுக்கென்று ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்படியென்றால், நம்முடைய சரீரங்கள் உண்மையாகவே பரிசுத்தமாக இல்லாமல் இருக்கிறபடியால், தேவனுக்கு உகந்தவர்களாக, பரிசுத்தமானவர்களாக ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு முன்னர், அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்று எண்ணப்பட வேண்டும். தேவனுடைய பீடத்தில் வைப்பதற்கு பரிசுத்தமான, உகந்தது என்று சொல்லப்படுகிற எதையும் வைக்குமுன்னர் கிறிஸ்துவுக்குள் நாம் நீதிமானாக்கப்படல் வேண்டும். நாம் அவருடைய ''இராஜரீக ஆசாரியத்துவத்திற்குள்ளானவர்கள்'' என்று எண்ணப் படுவதற்கு முன்னர் நம்முடைய மகா பிரதான ஆசாரியரின் கரத்தில் ஏற்றுக்கொள்ளும்படி அது தேவனுடைய பீடத்தில் வைக்கப்பட்டு பலியிடப்பட வேண்டும்.

ஆயிர வருட அரசாட்சியின்போது மகா இராஜாவிற்கு தேவையானது பரிசுத்தமாக்கப்படுதலாகும். முழு உலகத்தாரும் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவும், அசுத்தங்களிலிருந்தும் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விலகியிருக்கவும், தேவனுடைய இராஜ்யத்திலும் அதன் பிரபுக்களிலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும்படி அழைக்கப்பட்டிருப்பார்கள். அப்படியெனில் சிலர் இருதயத்தில் பரிசுத்தமடையாமல் வெளிப்புற வாழ்க்கைக்குரிய ஒரு பரிசுத்தப்படுத்துதல் அல்லது பரிசுத்தத்திற்கு ஏற்றவராகலாம். இப்படிப்பட்டவர்கள் இழந்து போன எல்லாவற்றையும் பூரணமாக திரும்பப்பெறும் வரை மனதின் பிரகாரமாகவும் ஒழுக்கத்தின் பிரகாரமாகவும் சரீர பிரகாரமாகவும் முன்னேறிச் செல்லலாம். அப்படிச் செய்வதன் மூலம், இதற்கிடையில் அவர்கள் அந்த மகிமையான காலத்திற்குரிய ஆசீர்வாதங்களையும், வெகுமதிகளையும் அந்த காலத்தின் இறுதிவரை அனுபவிப்பார்கள். ஆனால் அந்த காலத்தில் அவர்களுடைய பரிசுத்தம் அவர்களுடைய இருதயத்தின் நோக்கங்களையும், சிந்தனைகளையும் தொடும்வரை வராவிட்டால், ஆயிர வருட யுகத்துக்குப் பின்னர் உள்ள நித்தியமான நிலைமைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக மாட்டார்கள்; சிந்தனையில், வார்த்தையில், செயலில் தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக ஒத்திராத யாதொன்றும் ஆயிர வருட யுகத்தில் உட்பிரவேசிக்கமுடியாது.

இப்படியாக பரிசுத்தமாக்கப்படுதலை ஒரு பொதுவான கருத்தாகவும், வருங்காலத்தில் உலகத்தில் செய்யப்படப்போகிற விதத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிற வேளையில், வேதாகமம் விசேஷமாக ''நம்முடைய சீர்திருத்தலுக்கென''– புது சிருஷ்டியின் சீர்திருத்தலுக்கென எழுதப் பட்டது என்ற உண்மையை நாம் பார்க்கத் தவறிவிடக் கூடாது. உலகம் பரிசுத்தமாக்கப்படுவதற்காக தேவையான போதனைகளுக்கான காலம் வந்திருக்கும்போது மாபெரும் ஆசிரியரான நீதியின் சூரியன் அப்பொழுது முழு பூமியையும் தேவனைப்பற்றிய அறிவினால் வெள்ளம்போல் நிரப்பிக் கொண்டிருப்பார். அதன் பிறகு குழப்பத்தை உண்டு பண்ணுகிற தத்துவங்களையும் கோட்பாடுகளையும் உடைய பாபேல் இருக்காது. ஏனெனில் அந்த நாளைக் குறித்து ஆண்டவர் வாக்குத்தத்தமாக ''அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு, அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக

(செய்தியாக) மாறப்பண்ணுவேன்.'' (செப். 3:9) அப்போஸ்தலர் ''கிறிஸ்து தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்'' என்று அறிவிக்கும்போது அது புது சிருஷ்டிகளுக்கு மாத்திரமென்று சொல்லுகிறார். ஆகவே புது சிருஷ்டியில் பங்கு பெறும்படியாக நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த வேண்டுமென்றால், நமக்கு போதனையாக எழுதப் பட்டிருக்கிற இவைகளுக்கு நாம் கவனமாக செவி கொடுப்போமாக.

ஆண்டவர் நிழலான இஸ்ரயேலருக்கு ''நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்துங்கள்,'' ''நான் உங்களைப் பரிசுத்தப்படுத்துவேன்'' (லேவி. 20:7,8; யாத். 31:13) என்று சொன்னவாறு ஆவிக்குரிய இஸ்ரயேலர் தன்னை அர்ப்பணித்து, தன்னுடைய சரீரத்தை ஒரு ஜீவ பலியாக கிறிஸ்துவின் பாவநிவாரணத்தினால் வந்த புண்ணியத்தின் மூலமாக தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும்படியாக நடத்துகிறார். இந்த ''தகுதியான காலத்தில்'' இப்படிச் செய்பவர்களை மாத்திரமே ஆண்டவர் ஏற்றுக்கொண்டு, பரிசுத்தம் என தனியாகப் பிரித்து, ஆட்டுக்குட்டி யானவரின் ஜீவ புத்தகத்தில் அவர்களுடைய பெயர்களை எழுதி (வெளி. 3:5) நமக்கு சொல்லப்பட்டிருக்கிறபடி ''புத்தியுள்ள ஆராதனையாக'' அவர்களுடைய எல்லாக் காரியங்களிலும் உண்மையுள்ளவர்கள் என்று அவர்கள் நிரூபித்தால் அவர்களுக்கு மகிமையின், கனத்தின், அழியாமையின் கிரீடத்தைப் பகிர்ந்து கொடுக்கிறார். (வெளி. 3:11)

நிழலான லேவியரின் அர்ப்பணிப்பு நீதியைப் பின்பற்றும்படியான ஓர் அளவிலான அர்ப்பணிப்பாக இருந்ததேயொழிய பலி செலுத்துவதற்கான ஓர் அர்ப்பணிப்பல்ல. இராஜரீக ஆசாரியத்துவத் திற்கான தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிற வர்களுக்கு உரித்தான இந்த பரிசுத்தமாக்கப்படுதலின் அடுத்தபடி, நிழலான பலி செலுத்துவதற்கென அர்ப்பணித்த ஆரோனும் அவனுடைய குமாரரும் செய்த அர்ப்பணிப்பை அடையாளப்படுத்துவதாக இருக்கிறது. நீதியையும் நீதிமானாக்கப் படுதலையும் குறிக்கின்ற வெண்பஞ்சு நூல் வஸ்திரத்தின் மூலமாகவும், அபிஷேகத் தைலத்தின் மூலமாகவும், எல்லா ஆசாரியர்களும் பங்கு பெற்று பலி செலுத்துவதினாலும் அது அடையாளப்படுத்தப்பட்டது. (எபி. 8:3)

லேவியரில் நிழலாக இரண்டுவிதமான அர்ப்பணிப்புகள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. (1) எல்லா லேவியரின் பொதுவான

அர்ப்பணிப்பு. (2) பலி செலுத்துபவர்கள் அல்லது ஆசாரியர்களான சில லேவியரின் விசேஷமான அர்ப்பணிப்பு. முதலில் சொல்லப்பட்டது பரிசுத்த ஜீவியத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் எல்லா விசுவாசிகளும் செய்கிற பொதுவான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. இப்படி செய்வது தேவனுடைய கிருபையல்ல, கிறிஸ்துவின் மூலம் தற்காலிக ஜீவனுக்கென்று நீதிமானாக்கப்படுதலையும், தேவனோடு சமாதானத்தையும் அவர்களுக்கு உண்டு பண்ணுகிறது. இதைத்தான் எல்லா உண்மையான விசுவாசிகளும் இந்த யுகத்தில் புரிந்து கொள்ளுகிறார்கள், அனுபவிக்கிறார்கள். ஆனால் அப்போஸ்தலர்கள் சொல்லுகிறபடி ''கற்பனையின் பொருள் என்னவெனில் சுத்தமான இருதயத்தில் பிறக்கும் அன்பாகும்.'' (1தீமோ. 1:5) நாம் செய்த முதலாவது அர்ப்பணிப்புக்கு நாம் கீழ்ப்படிவது, இந்த யுகத்தில் நாம் நீதிமானாக்கப்படுதலுக்குரியவைகளுக்குக் கீழ்ப்படிந்து, இறுதியில் பலி செலுத்தப்படவேண்டிய ஆசாரியனாகும்படி இரண்டாவது அர்ப்பணிப்புக்கு வழி நடத்துகிறது என்பதை தேவன் முன்கூட்டியே அறிகிறார் என்று சொல்லலாம்.

அது எப்படியாகும்? எப்படியெனில் தேவனுக்கு கீழ்ப்படிதலும், பரிசுத்தமான வாழ்க்கை நடத்துவதும், தேவன்மேலும், நம்முடன் உள்ள மனிதர்கள் மேலும் வைக்கும் ''சுத்தமான இருதயத்தில் பிறக்கும் அன்பை'' உள்ளடக்கியதாகும். தேவன்மேல் வைக்கும் அன்பு என்றால் ''நம்முடைய முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு பலத்தோடும் அன்பு கூறுவதாகும்.'' இப்படிப்பட்ட அன்பானது கட்டளைகளுக்காகக் காத்திருக்காது; ஆனால் ''ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?'' என்று ஊழியம் செய்யும்படி வினவவும். லேவியரில் நிழலாகக் காட்டப்பட்ட இந்த முதலாவது அர்ப்பணிப்பு உண்மையான ''கபடமற்ற உத்தம இஸ்ரயேலர்'' ஒவ்வொருவருக்கும் முதலாவது வருகையில் உரியதாயிருந்து. இப்படிப்பட்டவர்களுக்கு மரணம் வரை அர்ப்பணிக்கும்படியாக, அவர்களுடைய பூலோக நன்மைகளை பரலோகத்துக் குரியவைகளுக்காக பலியாக செலுத்தும்படியாக, மகிமை, கனம், அழியாமைக்குச் செல்கிற இடுக்கமான பாதையில் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியான இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களாகும்படியாக, ஆண்டவர் விசேஷமான சுவிசேஷ அழைப்பை விடுத்தார். இந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்தவர்கள் ஆசாரியர்களாக, நாம் அறிக்கை பண்ணுகிற நம்முடைய பிரதான ஆசாரியரின் சரீரத்தின் அங்கத்தினர்களாக ''தேவனுடைய பிள்ளைகளாக'' ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். (யோவா. 1:12)

சுவிசேஷ யுகம் முழுவதிலும் இதேவிதமான வழிமுறை ஏற்பாடு காணப்படுகிறது: (1) ஆவிக்குரிய லேவியராக கீழ்ப்படிதலுக்கும் நீதிக்கும் அர்ப்பணம் செய்வது; அதன் பின் நீதியென்றால் தேவன்மேல் உன்னதமான அன்பை வைப்பதும், அவருடைய சித்தம் என்ன என்று அறிந்துகொள்ள வாஞ்சிப்பதும், அதன்படி செய்வதும், அதன் பின் எல்லா சிருஷ்டிகளும் இப்பொழுது கோணலும் மாறுபாடும் உள்ளதாக இருக்கிறதையும், தேவனோடு இசைவாக இல்லை யென்பதையும், தேவனோடு இசைந்திருப்பவைகள் என்றால் நம்முடைய மற்றும் மற்றவர்களுடைய மாம்சத்தில் உள்ள அநீதிக்கு ஒத்து போகாதவைகள் என்பதையும் உணர்ந்து கொள்வது; அதன்பின் சுயத்தை பலியிடுவதனாலே யன்றி வேறு எந்த விதத்திலும் சாத்தியமாகாது என்பது போல வைத்திருக்கிற ஆண்டவரை நோக்கி பார்த்து, ஏன் அவர் நம்மை அழைத்து, நம்முடைய அர்ப்பணிப்பை ஏற்றுக் கொண்டார் என்று அறிய அழுகையின் சத்தம் போன்றவைகள் காணப்படுகின்றன. இந்த அழுகையின் சத்தத்திற்கு பதில் கூறும் வகையில் ''உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டீர்கள்'' (எபே. 4:4) என்று ஆண்டவர் போதிக்கிறார்; மேலும் அந்த அழைப்பு இராஜ்யத்தின் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் ஆண்டவரோடு உடன் சுதந்திரராவற்கு என்று போதிக்கிறார்; (லூக்.12:32; ரோம. 2:7) மேலும் வழியானது இடுக்கமானதும், கடினமானதுமாக இருக்கிறது என்றும், ஏனென்றால் அவர் இப்படியாக கனம் பண்ணுகிறவர்களுக்கு, இவ்விதமாக பரீட்சைக்குள்ளாக வெற்றிகரமாக கடந்து செல்வது இன்றியமையாதது என்றும் போதிக்கிறார். (மத். 7:14; ரோம. 8:17) அப்பொழுதுதானே நாம் அப்போஸ்தலர் மூலமாக தேவனுடைய அழைப்பாகிய, ''சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பதே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' என்பதைக் கேட்டோம், கேட்டு ஏற்றுக்கொண்டு, மரணத்திற்குள்ளாக நம்மை அர்ப்பணித்தபோது ''இராஜரீக ஆசாரியத்துவத்தின்'' ஆசாரியர்களாக, நாம் அறிக்கைப் பண்ணுகிற நம்முடைய மகா பிரதான ஆசாரியராயிருக்கிற கிறிஸ்து இயேசுவில் புது சிருஷ்டிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டோம்.

இப்படிப்பட்ட விசுவாசிகள் ''கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும்...பிறக்கும் அன்பே'' என்பதை உணர்ந்த பிறகு, தன்னைத்தான் வெறுக்கும்படியான பலிக்கான

அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுப்பதின் மூலம், அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டார்கள் என்று கருதப்படுகிற நிலையில் தேவனுடைய நோக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, இடுக்கமான பாதையினிமித்தம் கீழ்ப்படிதலுக்கும், நீதிக்கும் செய்த உடன்டிக்கையில் குறைவுபடுகிறார்கள். ஆகவே அதனிமித்தம் ''ஒரே நம்பிக்கைக்கு நாம் அழைக்கப்பட்டதை'' ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். இவர்கள் ''தேவனுடைய கிருபையை (ஜீவனுக்கு நீதிமான்களாக கருதப்பட்டதை) விருதாவாக பெற்றுக்கொள்ள வில்லையா?'' பழைய ஏற்பாட்டு விசுவாசிகளை நாம் திரும்பிப் பார்க்கும்போது, அவர்கள் ''விசுவாசத்தினாலே நற்சாட்சி'' பெறவும், ''தேவனைப் பிரியப்படுத்தவும்,'' இப்படியாக அவர்கள் ஐக்கியத்திற்கென நீதிமான்களாக்கப்பட்டதை (எபி. 11:5,32–39) காத்துக்கொள்ளவும் எவ்வளவு கிரயம் செலுத்த வேண்டியிருந்தது என்பதை கவனிக்கும் போது, நீதிக்கும் ஆண்டவருக்கும் இருதயத்தில் குறைந்த விசுவாசத்தை வைத்துக் கொண்டு இந்த யுகத்தில் ஜீவனுக்கென நீதிமானாகும்படி ஆவிக்குரிய லேவியருக்கு கொடுக்கப்பட்டதை காத்துக்கொள்ள முடியும் என்று நாம் எதிர்பார்க்கலாமா? அப்படிப்பட்ட தற்காலிகமாக நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகள் (ஆவிக்குரிய லேவியர்கள்) ஏற்கனவே அவர்கள் சீஷத்துவத்துக்கென செய்த அர்ப்பணிப்பின் ''கிரயத்தை கணக்கு பார்த்து,'' (லூக். 14:29,30) அதன் பின்னர் ஆண்டவரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உதவியை விசுவாசியாமல், மரண பரியந்தம் தங்களுடைய அர்ப்பணிப்பை முழுமைப்படுத்தி ''புத்தியுள்ள ஆராதனை'' செய்ய மறுப்பவர்கள் அல்லது தவறி விடுபவர்கள் தேவனுடைய கிருபையை விருவாதாவாய் பெற்றவர்கள் என்று நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். நிச்சயமாகவே அவர்கள் ஜீவனுக்கென நீதிமான்களாக்கப் பட்டவர்கள் என்றோ, தேவனோடு விசேஷமான ஐக்கியத்திற்கென நீதிமான்களாக்கப் பட்டார்கள் என்று நாம் நினைக்க முடியாது; இவ்விதமாக அவர்கள் ஆவிக்குரிய லேவியர்கள் என்ற நிலையிலிருந்து சரிவடைவதோடு இனியும் அப்படியாக எண்ணப்படமாட்டார்கள்.

தேவனுடைய கிருபையை உணர்ந்து கொள்பவர்கள், பூரண அர்ப்பணிப்பின் ''புத்தியுள்ள ஆராதனைக்கும்'' அதன் சிலாக்கியங் களுக்கும் மதிப்பளிக்கிற விசுவாச இருதயம் உள்ளவர்கள், தேவனுக்கும் நீதிக்கும் கீழ்ப்படிதலின் உடன்படிக்கையை மரணபரியந்தம்

மேற்கொள்ளுபவர்கள் ஆகிய இவர்கள் மத்தியில் இரண்டு விதமான வகுப்பினர் உண்டு:

(1) ஆண்டவருக்கும், சகோதரருக்கும், சத்தியத்துக்கும் ஊழியம் செய்யும்படியான வழிகளைத் தேடி தங்களுடைய ஜீவியத்தை மனப்பூர்வமாக மகிழ்ச்சியோடு முன் வந்து சமர்ப்பணம் செய்கிறவர்கள்; இவ்விதமாக உலகத்தின் சௌகரியங்கள், வசதிகள், நேரம், செல்வாக்கு, பொருளாதாரங்கள், மேலும் வாழ்க்கைக்குரிய எல்லாவற்றையும் தியாகம் செய்வது சந்தோஷமானது, கனம் பெற்றது என்று அந்த ஆவிக்குரிய லேவியர்கள் எண்ணுகிறார்கள். இந்த மகிழ்ச்சியான, மனதார பலி செலுத்துபவர்கள், சீக்கிரமாகவே மகிமைப்படுத்தப்படப் போகிற ஆவிக்குரிய லேவியர்கள், தங்களுடைய ஆண்டவரோடு இராஜரீகம் பண்ணுகிறவர்கள், தங்களுடைய பலிகள் செலுத்தப்பட்ட பின்னர், இனியும் ஆரோனும் அவனுடைய குமாரரும் ஜனங்களோடு பலி செலுத்துவதற்கு மாதிரியாகக் காட்டப்பட மாட்டார்கள். ஆனால் தன் சிங்காசனத்தில் ஆயிர வருட அரசாட்சியின் போது, நிஜமான நிவாரண நாளான இந்த சுவிசேஷ யுகத்தில் சம்பாதிக்கப்பட்ட ''விசேஷித்த பலியினால்'' வரும் ஆசீர்வாதங்களை உலகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கும் மெல்கிசேதேக்கினால் மாதிரியாகக் காட்டப்படுவார்கள்.

(2) இன்னொரு வகுப்பினரான விசுவாசிகள் தங்கள் இருதயத்தில் விசுவாசத்தோடும், மகிழ்ச்சியோடும் ஆண்டவருக்கும், அவருக்கு ''புத்தியுள்ள ஆராதனை'' செய்யும்படியாக தங்களுக்குள்ள எல்லாவற்றையும் அர்ப்பணிப்பதின் மூலம் ஆவிக்குரிய லேவியரில் இருக்கும்படியான அவர்களுடைய தகுதியை காட்டுகிறார்கள். ஏனெனில் அவர்கள் தேவனுடைய கிருபையை விருதாவாய் பெறவில்லை. ஆனால் பரிதாபம் அவர்கள் அழைப்பை ஏற்று, இப்படியாக ''ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டு,'' தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குரிய சிலாக்கியங் களுக்குள் வந்திருந்தாலும் அவர்கள் உடன்படிக்கை செய்து கொண்ட பிரகாரம் பலியை செலுத்த அவர்களை உந்தித்தள்ளும் அளவுக்கு அவர்களுடைய அன்பும் விசுவாசமும் இல்லை. இப்படிப்பட்டவர்கள், அவர்களுடைய அன்பும் விசுவாசமும் போதுமான அளவுக்கு அவ்வளவு தீவிரமாக இல்லாதபடியால் அவர்களுடைய பலிகளை பலிபீடத்தின் மேல் வைக்க, அல்லது காத்துக்கொள்ளத் தவறி விடுகிறார்கள். ஆகையால், அவர்கள் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் களிகூர்ந்த நமது

மகாபிரதான ஆசாரியரின் முழுமையான ''பிரதிகள்'' என்று எண்ணப்பட முடியாது. அவர்கள் ஜெயங்கொள்ளத் தவறிவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் ''இராஜரீக ஆசாரியத்துவத்தின்'' அங்கத்தினர்களாக அவர்களுடைய ஆண்டவரோடு பரலோக இராஜ்யத்தில் பங்கு பெறுகிற ''ஜெயங்கொள்ளுகிறவர்களோடு'' எண்ணப்பட முடியாது. இவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு முற்றுமாக கீழ்ப்படிவதிலும் அவர்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளப்படுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதிலும் தவறிவிடுகின்றனர்.

ஆனால் இவர்களைப்பற்றி என்ன? அந்த பந்தயப் பொருளுக்காக ஓடினாலும் அதில் வெற்றி பெறுவதற்குத் தேவைப்படுகின்ற வைராக்கியம், அன்பு என்ற பரீட்சையை அடையாததினால் இழந்து விட்டார்களா? இல்லை,தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர்களை ஆசாரியர்கள் மத்தியில் உள்ளவர்களாக இருப்பதற்குக் கடுமையான பரீட்சையில் அவர்களுடைய வைராக்கியமும் விசுவாசமும் குறைவுள்ளதாக இருந்தபோதிலும் மரணபரியந்தம் அவர்களை அர்ப்பணிக்கும்படியான அவர்களுடைய போதுமான விசுவாசமும், வைராக்கியமும், அவர்களுடைய இருதயத்தில் லேவியராக இருக்கும் உண்மையை நிரூபித்தது. இருந்தபோதிலும் அவர்களை முற்றிலுமாக அர்ப்பணித்தது போதாது. அவருடைய ஊழியத்தில் பலி செலுத்தும் அளவுக்கு விசுவாசம் இல்லாதிருந்தாலும், அவர்கள் ஆண்டவரை நேசிப்பதும், எக்காரணத்தைக்கொண்டும் மறுதலிக்கமாட்டார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இராஜ்யத்தில் லேவியருக்கு உள்ள பங்கில் இவர்கள் தகுதியுள்ளவர்கள் என்று எந்த பரீட்சை உறுதிப்படுத்தும்? மேலும் அது எப்படி செய்யப்படும்?

வெளி. 7:13–15ல் சொல்லப்பட்டிருக்கிறபடி உண்மையாகவே அர்ப்பணித்திருக்கிற ஆண்டவருடைய ''திரளான கூட்டமாகிய'' ஜனங்களைக்குறித்து ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ''இவர்கள் மிகுந்த உபவத்திரத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திறகு முன்பாக (உள்ளாக இல்லை) இருந்து, இரவும் பகலும் (தொடர்ச்சியாக) அவருடைய ஆலயத்திலே (சபையிலே)அவரைச் சேவிக்கிறவர்கள். சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவர் அவருடைய கூடாரத்தை

அவர்கள்மேல் விரிப்பார்'' (ஆவிக்குரிய நிலைமைகளிலும், அதன் ஊழியங்களிலும் தன்னையும் தன்னுடைய மகிமையான மணவாட்டியையும் அவர்களோடு சம்பந்தப்படுத்திக் கொள்வார்). ''புத்தியில்லாத கன்னிகைகள்'' ஆன இவர்கள் மணவாட்டியின் கூட்டத்தினராகும் தருணத்தை கை நழுவ விட்டுவிட்டார்கள்; ஆனாலும் அவர்கள் இருதயத்தின் நோக்கங்களில் சுத்தமுள்ள கன்னிகைகளாக இருக்கிறார்கள்; அவர்கள் பந்தயப் பொருளை இழந்து விடுகிறார்கள். ஆனால் பின்பு கடுமையான பரீட்சைகள் மூலம், மணவாளன் மணவாட்டியோடு ''அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகளாக'' பின்தொடர கலியாண விருந்தில் ஒரு பங்கை பெறுகிறார்கள்; அவர்கள் இராஜாவினிடத்தில் அழைத்துவரப் படுவார்கள். ''அவர்கள் மகிழ்ச்சியோடும், களிப்போடும் வந்து இராஜ அரண்மனைக்குள் பிரவேசிப்பார்கள்.'' (சங்.45:14,15) லேவியர்களாக அவர்கள் இராஜரீக ஆசாரியத்துவம் என்ற பந்தயப் பொருளை பெறத் தவறிவிட்டார்கள். ஆனாலும் அவர்கள் லேவியராக இருக்கிறார்கள். அவர்கள் அந்த ஆலயத்தில் ''தூண்களாக''அல்லது ''ஜீவனுள்ள கற்களாக''இருக்க முடியாவிட்டாலும், தேவனுக்கு அவருடைய மகிமையான ஆலயத்தில், சபையில் ஊழியம் செய்யலாம். (வெளி. 3:12; 19:6; சங். 45:14,15) கடைசிக் குறிப்பை அடுத்துவரும் வசனம் முந்திய காலத்தில் உள்ள லேவியர்களை நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறது. அவர்கள் மாம்சமான இஸ்ரயேலில் ''பிதாக்கள்'' என்று அழைக்கப் பட்டார்கள், அவர்கள் ''பூலோகமெங்கும் பிரபுக்களாக்கப்படுவார்கள்'' என்ற வெகுமதியைப் பெறுவார்கள் என்று உறுதியளிக்கிறது.

அதுபோன்று லேவியின் மூன்று குமாரர்கள் (கோகாத், கெர்சோம், மெராரி) நான்கு வகுப்பினரை குறிப்பதாக தோன்றுகிறது. (1) மோசே, ஆரோன், மற்றும் அம்ராமின் (கோகாத்தின் குமாரர்) எல்லா ஆசாரிய குடும்பத்தினருடைய கூடாரங்கள் வாசஸ்தலத்தின் முன்பக்கத்தில் (கிழக்கு பக்கம்) இருந்தன. இவர்கள் ஆசரிப்பு சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். அவர்களுடைய சகோதரரும் எல்லா லேவியரும்கூட அவர்களுடைய மரியாதைக்குரிய உதவியாளராக அல்லது வேலைக்காரராக இருந்தனர். (2) தெற்கு பக்கத்தில் கோகாத் குடும்பத்தினரும் அவர்களுடைய நெருங்கிய உறவினரும் கூடாரமிட்டிருந்தனர். அவர்கள் மிகவும் பரிசுத்தமான பொருட்களான பீடங்கள், குத்துவிளக்கு, மேஜை, பெட்டி போன்றவைகளுக்கு

பொறுப்பாக இருந்தனர். (3) ஊழியத்துக்கென்று, அடுத்தபடியாக உள்ள மெராரி குடும்பத்தின் லேவியர்கள் வாசஸ்தலத்தின் வடக்கு பக்கத்தில் கூடாரமிட்டிருந்தனர். அவர்கள் பொன்தகட்டால் மூடிய பலகைகள், தூண்கள், பாதங்கள் போன்றவைகளுக்கு இவர்கள் பொறுப்பா யிருந்தார்கள். (4) பின்புறத்தில் லேவியரில் கெர்சோம் குடும்பத்தினர் இருந்தனர். ஊழியங்களில் சாதாரணமான சுமந்து செல்வது போன்றவைகள், நூல்கள், வெளிப்புற மூடுதிரைகள், வாசல் போன்றவைகளுக்கு பொறுப்பாயிருந்தார்கள்.

இந்த விசேஷமான குடும்பங்கள், ஒப்புரவாகுதல் முடிவடையும் போது நான்கு வித நீதிமான்களாக்கப்பட்ட மனுக்குலத்தை சரியான விதத்தில் பிரதிபலிக்கலாம். அவையாவன: பரிசுத்தவான்கள் அல்லது இராஜரீக ஆசாரியர்கள், பழைய ஏற்பாட்டு விசுவாசிகள், ''திரள் கூட்டம்,'' உலகத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் ஆவர். நிழல்களைப் பொறுத்தவரை விசித்திரமாக தோன்றவில்லை. பெயர்கள் முக்கியமானவைகள் போல் தோன்றுகின்றன. (1) அம்ராமின் குடும்பத்தினர் ஆசாரியர்களாக இருக்கும்படி தெரிந்து கொள்ளப் பட்டார்கள். ''அம்ராம்'' என்ற பெயர் **மேன்மையான ஜனங்கள்** அல்லது **உயர்த்தப்பட்ட ஜனங்கள்** என்று பொருள்படும். சிறுமந்தைக்கு நிழலாயிருப்பதற்கு எவ்வளவு பொருத்தமான பெயர். அவர்களுடைய தலைவர் கிறிஸ்து இயேசு.''மிகவும் உயர்த்தப்பட்டவர்கள்'' ''மிகவும் மேலானவர்கள்'' என்ற வேதாகம அறிவிப்புகள் இந்த ஆசாரியர்களுக்கு உரியதாகும். (2) **கோகாத்** என்ற பெயர்கூட **சேர்ந்தவன்** அல்லது **தோழன்** என்று பொருள்படும். கோகாத் குடும்பத்திலிருந்து அம்ராமின் குமாரர்கள் புதிய ஆசாரிய வீட்டாராய் இருக்குபடியாக தெரிந்து கொள்ளப்பட்டார்கள். ஆகவே கோகாத் குடும்ப லேவியர்கள் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளை சரியாக பிரதிபலிக்கக் கூடும். அவர்களுடைய விசுவாசமும், கீழ்ப்படிதலும், தேவன் மேல் உள்ள பற்றும், நீதியின் நிமித்தமாக உபத்திரங்களை அனுபவிக்க ஆயத்தமா யிருத்தலும் முற்றுமாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. அவர்களோடு நாம் நெருங்கிய உறவுமுறை கொண்டவர்கள் போல் உணருகிறோம். உண்மையிலே அவர்கள் ஆண்டவருக்கும், நமக்கும் தோழர்களாக இருந்தார்கள். சில விஷயங்களில், மற்றவர்களைக் காட்டிலும் ஒவ்வொரு விதத்திலும் இயேசுவுக்கு அருகாமையில் வருகிறார்கள். (3) மெராரி என்றால் **கசப்பு** என்பதைக் குறிக்கும். ஆகவே லேவியின் மெராரி குடும்பத்தினர் இராஜரீக

ஆசாரியத்துவம் என்ற பந்தயப்பொருளை வெல்லத்தவறிய, ஆவியினால் பிறந்த திரள் கூட்டத்தை பிரதிபலிப்பவராவர். அவர்கள் அக்கினியில் மீட்கப் பட்டவர்கள் போன்று, மகா உபத்திரவத்தின் மூலமாய் கசப்பான அனுபவங் களுக்கிடையே கடந்து வந்து அவர்கள் கனத்திற்கும் ஊழியத்தின் நிலைக்கும் வந்தடைவார்கள். (4) **கெர்சோம்** *என்றால்* **அகதிகள்** *அல்லது* **காப்பாற்றப்பட்டவர்கள்** *என்பதைக் குறிக்கும். ஆகவே லேவியரான கெர்சோம் குடும்பத்தினர் பூலோகத்தில் இரட்சிக்கப் பட்ட மனுக்குலத்தை சரியான விதத்தில் பிரதிபலிப்பவர்களாக இருப்பது போன்றிருக்கும். அவர்கள் சாத்தானின் அடிமைத் தனத்தினின்றும் குருட்டாட்டத்தினின்றும் மீட்கப்பட்டு ஒத்தாசைப் பெற்று விடுதலையாக்கப்பட்ட அகதிகளாவர்.*

ஆகவே அதன் பின்பு, ஆவிக்குரிய லேவியர்கள் நீதிமான்களாக்கப் பட்டவர்கள் மத்தியில், முறைமையிலும் ஸ்தானத்திலும் இராஜரீக ஆசாரியர்கள் முதலாவது இருப்பார்கள். இவர்களுடைய பராமரிப்பில் ஒவ்வொரு நலனும் ஆயிர வருட இராஜ்யமும் ஒப்படைக்கப்படும். அவர்களது வலது பாரிசத்தில் அவர்களுக்கு நெருக்கமானவர்களாகிய பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் இருப்பார்கள், அவர்களை அவர்கள் ''பூலோகமெங்கும் பிரபுக்களாக்குவார்கள்.'' அடுத்தபடியாக அவர்களுடைய இடது பாரிசத்தில் பெருந்திரளான ஜனக்கூட்டத்தின் விசுவாசமுள்ள சகோதரர்கள் இருப்பார்கள். (பழைய ஏற்பட்டு விசுவாசிகள் ஆயிர வருட அரசாட்சியின் போது திரள் கூட்டத்திற்கு முன்னாக இல்லாமல் பின்தங்கி இருப்பார்கள், ஆனால் அது முற்றுப் பெறும் போது ஆவிக்குரிய சுபாவத்திற்கும் மேலான கனத்திற்கும் அழைக்கப்படுவார்கள் என்பதுபோல சில வேதாகம பகுதிகள் கற்பிக்கிறது என்று ஆசிரியர் பின்னர் சொல்லுகிறார்.) கடைசியாக இருப்பவர்கள் ஆயிர வருடத்தில் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்கப்பட்டவர்களாவார்கள். அவர்களுடைய விசுவாசம் பெரிய சோதனையின்போது முற்றிலுமாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கும், இதனோடு ஆயிர வருட யுகம் முடிவுறும். (வெளி. 20:7–9)

இந்த லேவிய வகுப்பினர் அனைவரும் சோதிக்கப்பட்டு இருதய விசுவாசத்தின் சோதனையில் வெற்றிகரமாக நிற்பவர்கள். இருந்த போதிலும், உலகத்திற்கு முன்பே விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் பட்டு, சுத்தமான இருதயத்தில் பிறக்கும் அன்பு என்ற கற்பனையை

நிறைவேற்ற மறுப்பவர்கள் அல்லது அசட்டை பண்ணுகிறவர்கள், இப்படியாக தேவனின் கிருபையை விருதாவாய்ப் பெறுகிற அவர்களுக்கு இதற்குமேல் வேறு சந்தர்ப்பம் கிடையாது என்று பொருள் படாது. பலியாக செலுத்தப்பட வேண்டிய ஆசாரிய ஊழியத்தில் பங்கு பெறுவதினால் உண்டாகும் ''கிரயத்தை அவர்கள் கணக்குப் பார்க்கும் போது,'' அவர்கள் வேண்டாம் என்று மறுக்கும்போது தேவனுக்குச் செய்யும் ''புத்தியுள்ள ஆராதனை'' என்று அவர்கள் நினைப்பதை நிச்சயமாகப் போற்ற முடியாது, வெகுமதி அளிக்க முடியாது. ஆனாலும் அவர்களுடைய ஞானமற்ற செயல் நியாயமான தண்டனைக்குரியது என்றும் ஆகாது. அப்படியில்லையென்றால் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் வருகின்ற அழைப்பானது கிருபையினால் உண்டானதல்ல, அவசியத்தினால் உண்டானது; அது ஓர் அழைப்பல்ல, ஆனால் கட்டளை; ஒரு பலியல்ல, ஆனால் ஒரு கடமை என்று ஆகிவிடும். தவறிழைத்தல் அல்லது அவர்களுடைய நீதிமானாக்கப்படுதலை பயனற்றதாக்குதல், இன்னும் அவர்களை மீட்கப்பட்ட உலகத்தின் ஒரு அங்கமாகவே வைத்திருக்கிறது; விசுவாசத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாக இருந்தது போலவே இன்னும் இருக்கிறார்கள்; ஆனாலும் அவர்களுடைய அறிவு அபிவிருத்தி அடையும் போது சரியானதைச் செய்யும்படியாக அவர்களுடைய பொறுப்பு அதிகரிக்கிறது. வேறுவிதமாக சொல்லவேண்டும் என்றால் இக்காலத்தில் நித்திய ஜீவனுக்கு அல்லது நித்திய மரணத்துக்கு வரும் சோதனையானது மரண பரியந்தம் ஆண்டவருக்கென்று மனப்பூர்வமாகத் தங்களை பூரணமாக அர்ப்பணிக்கிறவர்களுக்கு மாத்திரமே வருகிறது. மனுக்குலத்தின் மிஞ்சியோர் இன்னமும் நித்திய ஜீவனுக்கோ அல்லது மரணத்துக்கோ நியாயத்தீர்ப்பு அடையும்படியாக இல்லை; ஆயிர வருட இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு இல்லை; இருந்த போதிலும், இதற்கிடையில், உலகத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் அவனுக்குள் இருக்கும் வெளிச்சத்தின்படி உயர்த்துகிற அல்லது அழிக்கிற குணாதிசயத்தின்படி, இப்படியாக அவனுடைய ஆயிர வருட நிலைமைகளையும் நித்திய ஜீவனுக்கான சாத்தியக்கூறுகளையும் நன்மைக்கேதுவாக அல்லது தீமைக்கேதுவாக உண்டாக்குகிறான், இதன்படியாக அவன் ஒன்று கீழ்ப்படிகிறான் அல்லது அவனுடைய அறிவையும் மனசாட்சியையும் கவனிக்காமல் விட்டுவிடுகிறான்.

எனினும், முழு அர்ப்பணம் செய்துகொண்டவர்களோடு விஷயம் வித்தியாசமாயிருக்கிறது. அவர்களின் **மரணபரியந்தமான**

அர்ப்பணிப்பினால் அவர்கள் பூலோக வாழ்க்கையை முழுவதுமாக உதறித்தள்ளுகிறார்கள், மரணபரியந்தம் உண்மையாயிருந்ததால் அவர்களுக்குரிய ஆவிக்குரியவைகளுக்காக பூமிக்குரியவைகளை விட்டுவிடுகிறார்கள். ஆனால் இதற்கு மாறாக அல்ல. ஆகவே, இவர்களுக்கு உண்மையாயிருக்க தவறுவது என்பது நித்திய மரணத்தைக் குறிக்கும் –ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் உலகத்தாருக்கு இருப்பது போன்றே நிச்சயமாக இருக்கும்.

லேவியர்களில் யாருக்கும் கானான் தேசத்தில் எந்தவிதமான சுதந்திரமும் கிடையாது. இந்த விஷயம் முக்கியமானது; எப்படியெனில் அவர்கள் தங்களுக்கு உள்ள எல்லாவற்றையும் ஆண்டவருக்கென அர்ப்பணித்து இருதயத்தில் அவருடைய நீதியோடு முழுமையாக இணைந்திருக்கும் போது, இப்போது பாவத்தினால் உண்டான பூரணமற்ற நிலை அவர்களுடைய சுதந்திரமாயிருக்கவில்லை. கானான், சோதனை நிலையிலுள்ள முரண்பாடான நிலைமையை குறிக்கிறது; சத்துருக்களை மேற்கொள்ளுதல், தீமைகளை மேற்கொள்ளுதல் போன்றவைகளையும், விசேஷமாக ஆயிட வருடத்தின்போது உள்ள நிலைமையை காட்டியது. ஆனால் தேவன் ஆவிக்குரிய லேவியராக முற்றுமாக நீதிமான்களாக்குகிற அனைவருக்கும் இதைவிட மேலானதும் பாவமற்றதும் பூரணமுமான ஒரு சுதந்திரத்தை வைத்திருக்கிறார்; இந்த மேலான சுதந்திரத்துக்குள் முதலாவதாக பிரவேசிப்பவர்கள் ஆசாரியர்களாக இருப்பார்கள்; அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று திவ்விய சுபாவத்திற்குப் பூரணப்படுத்தப்படுவார்கள். ‘‘பழைய ஏற்பாட்டு விசுவாசிகள்’’ அடுத்தபடியாக வருவார்கள்; பூரணமான மனுக்குலத்தினராக உயிர்த்தெழுதலின் மூலம் பூரணமான சுதந்திரத்துக்குள் பிரவேசிப்பார்கள். (ஆசிரியரின் முந்திய குறிப்பை பக். 153 ல் பார்க்க) அடுத்தபடியாக ‘‘திரள் கூட்டம்’’ வருவார்கள்; அவர்கள் ஆவிக்குரிய நிலையில் பூரணப்படுத்தப் படுவார்கள். எல்லோருக்கும் கடைசியாக வருவது கெர்சோம் வகுப்பினர்; ஆயிர வருடத்தின்போது கற்றறிந்து உயர்த்தப்பட்டு பரிசோதிக்கப் பட்டவர்கள், அந்த படிப்படியான உயிர்த்தெழுதலின் மூலம் அல்லது ஆயிர வருட அரசாட்சியின்போது முழுமையாகப் பெற இருக்கிற, மரணத்திலிருந்து ஜீவனுக்கு உயர்த்தப்படுதலின் மூலம் அவர்களுடைய சுதந்திரத்தில் பிரவேசிப்பார்கள். மரணபரியந்தம் அர்ப்பணிப்பு செய்யும் விசுவாசிகள் மாத்திரம் பரிசுத்த ஆவியினால் ஜநிப்பிக்கப்படுகிறார்கள்; மேலும் மகா

பிரதான ஆசாரியரின் அங்கத்தினராக எண்ணப்படுகிறார்கள்; ஆகவேதான் ''நிழல்கள்'' விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டன; எப்படியெனில் பரிசுத்த ஆவிக்கு அடையாளமாயிருக்கும் பரிசுத்த அபிஷேக தைலத்தை பொதுவாக லேவியர்கள் பெற்றுக்கொள்ளவில்லை; ஆனால் பலி செலுத்திய ஆசாரியர்கள் மாத்திரம் பெற்றுக் கொண்டார்கள்; கிறிஸ்துவின் அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவி, இரத்தம் செலுத்தப்பட்டதினால் மாத்திரமே அவர்களுடையது என்பதை காட்டும் வகையில் இவர்கள் எல்லோரும் இரத்தத்தோடு கலந்த தைலம் தெளிக்கப்பெற்றார்கள்: (1) அவர்களை நீதிமான்களாக்கின, அவர்கள் சார்பாக செலுத்தப்பட்ட கிறிஸ்து இயேசுவின் பலி. (2) அவர்களுடைய வாழ்க்கையை – அவருடைய ஊழியத்துக்கென கொடுக்கும்படியான – கிறிஸ்துவோடு இணைந்து பலி செலுத்த எடுத்துக்கொண்ட அவர்களுடைய உறுதிமொழி. (யாத். 29:21)

பிரதான ஆசாரியனின் அபிஷேகம் இன்னொரு வித்தியாசமான காரியமாகும். அது தெரிந்தெடுக்கப்பட்ட சபையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் குறிப்பதாக உள்ளது. இந்த அபிஷேகம் ஆரம்பத்தில் பிரதான ஆசாரியனாக இருக்கும்படியாக இருந்த ஆரோன்மேல் மாத்திரம் வந்தது.''எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு'' (யாத். 28:41; 40:13,15) என்று சொன்னபடி பிரதான ஆசாரியனாக வந்த ஒவ்வொரு ஆரோனின் குமாரர்கள் மேலும் வந்தது. அவருடைய சரீரமான சபைக்கு தலையாயிருக்கிற நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஆனந்த தைலத்தால் (பரிசுத்த ஆவி), ''இராஜரீக ஆசாரியத்துவத்திற்கு'' கீழ்ப்பட்ட அவருடையவர்கள் அல்லது உடன் சுதந்திரருக்கு மேலாக(தலையாக) அபிஷேகம் பண்ணப்பட்டார். அது அவர் மேல் முற்றுமாக ஊற்றப் பட்டது; ''அவருடைய நிறைவினால் நாம் எல்லோரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்.'' அவருடைய பலியினிமித்தம் உண்டான புண்ணியத்தினால் நாம் மன்னிக்கப்பட்டோம்; நீதிமான்களாக்கப் பட்டோம்; அது ''சொல்லி முடியாத ஓர் ஈவாகும்.'' ஆம், இராஜ்யத்தில் அவருடைய உடன் சுதந்திரராக இருக்கும்படியாக அழைக்கப்படுவதும், இரத்தமும் தைலமும் தெளிக்கப்படுவதினால் நம்முடைய அர்ப்பணிப்பு முத்திரையிடப் படுவதும், நம்முடைய தலையாயிருக்கிறவருக்கு கீழாக அபிஷேகத்துக்குள்ளாக வருவதும் நம்ப முடியாதது போன்று இருக்கிறது.

தீர்க்கதரிசியான தாவீது அபிஷேகத்தைக் குறித்தும் அது நம்முடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு எப்படி அவரிடத்திலிருந்து நமக்கு

வழிந்தோடுகிறது என்பதைத் தத்ரூபமாக காட்டும்படி ஆண்டவரால் வழி நடத்தப்பட்டார். (சங்.133:1–3; 45:7; லூக். 4:18) சபையின் அங்கத்தினர்கள் ''சகோதரர்களாக'' இருந்தார்கள். அவர்களுடைய ஆவி''ஒருமித்து வாசம் பண்ண'' உந்துகிறது. தலையாயிருக்கிறவரோடு ஒன்றாக இருந்தவர்கள் எல்லோரும் அவருடைய சரீரமான சபையின் உடன் அங்கத்தினர்களோடு இரக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்படி இருக்கின்ற அளவிற்கு ஏற்ற விதத்தில் மாத்திரமே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுகிறார்கள்.(தொகுதி 5, அத்.9)இந்த பரிசுத்த அபிஷேக தைலம் பரிசுத்த ஆவியையும், அவருடைய இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கத்தினரான புது சிருஷ்டியாக தேவன் பரீட்சாத்தமாக ஏற்றுக் கொள்கிற எல்லோருக்கும் அது கொடுக்கிற தெளிவைக் குறிக்கிறது.

புது சிருஷ்டியின் அங்கத்தினராக ஆகக்கூடியவர்கள் என்று பரிசுத்த ஆவியினால் குறிக்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் ''நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல'' என்று ஆண்டவர் உறுதி கூறுகிறார். நீங்கள் போய் கனிகொடுக்கும் படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை (உலகத்தினின்று) தெரிந்து கொண்டேன். நீங்கள் உலகத்தானாயிருந்தால் உலகம், தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும் நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது. (யோவா. 15:16,19; 17:16) இந்த அர்ப்பணிப்பின் அடையாளங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உலகத்தாரால் புரிந்து கொள்ளப்பட்டாலும், நாம், அதினிமித்தமாக உலகத்தாரின் ஒப்புதலை அல்லது ஆதரவை அவைகள் கொண்டு வரும் என நாம் எதிர்பார்க்க கூடாது; ஆனால் அதற்கு பதிலாக உலகத்தார் புது சிருஷ்டிகளின் மேல் உள்ள பரிசுத்த ஆவியின் அடையாளங்களை பெலகீனத்தின் அல்லது சாதுவின் அடையாளங்களாக எடுத்துக் கொள்வார்கள். உலகமானது அதிக நீதியுள்ள வாழ்க்கையை அல்ல, ஆனால் அது எண்ணுகிறவிதமான, ஏற்றுக்கொள்கிற விதமான, சலசலப்புள்ள, துரிதமான வாழ்க்கையை பாராட்டி ஏற்றுக் கொள்கிறது. ஏன் உலகமானது அவரைப் பின்பற்றுகிறவர்களை ஏற்றுக்கொள்ளாது என்பதை நமது ஆண்டவர் நமக்கு விளக்கிக்கூறுகிறார்– ஏனென்றால் இருள் வெளிச்சத்தை வெறுக்கிறது. ஏனெனில் அவருடைய இராஜரீக ஆசாரியத்துவத்தின் சிந்தனை, வார்த்தை, செயல் போன்றவைகளைப் பற்றிய தரம், பொதுவாக மனுக்குலத்தின் தரத்தைவிட மேலானவைகளாக இருக்கும்.

ஆகவே அவர்களுடைய வழிகளை குற்றப்படுத்துகிறதாகக் காணப்படும். உலகமானது தன்னை அங்கீகரித்துக் கொள்வதற்குப் பதிலாக முகஸ்துதி செய்யப்படவேண்டும் என்று விரும்புகிறது; அதற்கு எதிர்மாறான பிரதிபலிப்பு வரும்போது எதிர்ப்பு தெரிவிக்காவிட்டாலும் ஒதுங்கி செல்ல முயல்கிறது. கிறிஸ்தவத்திற்கு வந்த இந்த உலகளாவிய எதிர்ப்பு இராஜரீக ஆசாரியத்துவத்தின் பரீட்சையின் ஒரு பகுதியாகும். மேலும் அவர்களுடைய அர்ப்பணிப்பு மிகவும் இருதய பூர்வமாக இல்லாவிட்டால், அவர்கள் இப்படியாக உலகத்தின் ஐக்கியத்தை இழந்து, அது தங்களை பாராட்ட வேண்டும் என்று எண்ணுவதினால் அவர்கள் தீர்மானம் செய்து கொண்டபடி உலக நலன்களை தியாகம் செய்வதில் முறையான ஆவியுடையவர்களாய் இல்லாததால் அதை செய்யத்தவறி விடுகிறார்கள், ஆசாரியர்களாக இருக்கவும் தவறிவிடுகிறார்கள்; இதனால் புது சிருஷ்டியாக இருக்கவும் தவறுகிறார்கள். இருந்த போதிலும் அவர்களுடைய நல்ல நோக்கங்களினால், அவர்கள் தியாகம் செய்யும்படி வைராக்கியம் இல்லாதிருந்த அவர்களுடைய மாம்சத்தை அழிக்கும் படியாக ஆண்டவர் அவர்களை அக்கினி பரீட்சையின் மூலம் கொண்டு வர முடியும். இப்படியாக சிங்காசனத்திற்கு முன்பாக ஊழியம் செய்யும்படியாக மகா உபத்திரவத்திற்குள்ளாக கடந்து வருகிற திரள் கூட்டத்திற்குரிய ஆசீர்வாதங்களிலும், வெகுமதிகளிலும் ஒரு பங்கை பெறுவதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணப்படலாம். இதில், சிறுமந்தையானது ஆண்டவரோடு அமரும்.

பரிசுத்தமாக்கப்படுதலுக்கு, மனிதனின் பங்காக முழுஅர்ப் பணிப்பும், தேவனின் பங்காக முற்றும் அங்கீகரிக்கப்படுதல் என்ற இரண்டு பங்குகள் மாத்திரமல்லாது, மேலும் அதோடுகூட முன்னேறிச்செல்லுதல் என்ற பங்கும் உண்டு. ஆண்டவருக்கென்ற நம்முடைய அர்ப்பணிப்பு அவரால் முதலில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உண்மையானதாகவும், முழுமையானதாகவும் இருக்க வேண்டும். அதோடுகூட ஞானமும் அனுபவமும் அர்ப்பணிப்பின்போது குறிப்பிடத்தக்கவிதத்தில் குறைவாகவே வருகிறது. ஆகவே நாம் ஞானத்தில் வளருவது போன்று பரிசுத்தமாக்கப்படுதலிலும் அனுதினமும் வளர வேண்டும். ஆரம்ப காலத்தில் நம்முடைய சுயம் புறம்பே தள்ளப்பட்டு இருதயங்கள் நிறைவாயிருந்தன. ஆனால் நம்முடைய இருதயங்களின் கொள்ளளவு சிறியதாயிருந்தது. ஆனால் அவைகள் வளர வளர பரிசுத்தமாக்கப்படுதலிலும் வளர வேண்டும்; ஒவ்வொறு

பகுதியையும் நிரப்ப வேண்டும். இவ்விதமாக அப்போஸ்தலர் புத்திமதியாக கூறுகிறார்: ''ஆவியினால் நிறைந்திருங்கள்.'' மறுபடியுமாக கூறுகிறார், ''தேவ அன்பு உங்களுடைய இருதயங்களில் ஊற்றப்பட்டு மேலும் மேலும் பெருகுவதாக.'' ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்'' (யோவா. 17:17) என்ற நம்முடைய மீட்பர் நமக்காக ஏறெடுத்த ஜெபத்தின் வார்த்தைகளில் நம்முடைய இருதயங்கள் வளர்ச்சியடைவதற்கு வழியுண்டாக்கப்பட்டிருக்கிறது என்று காணலாம்.

சத்தியம் அல்லது தேவனுடைய செய்தி அல்லது கிறிஸ்துவின் மூலம் வந்த தேவ ''ஞானம்'' நமக்கு தேவ அனுக்கிரகத்தை வெளிப்படுத்தத் துவங்கி, மேலும் படிப்படியாக நம்மை அர்ப்பணிப்பு வரை வழி நடத்தியது. இப்போது அதே சத்தியம் அல்லது கிறிஸ்துவின் மூலம் வந்த வார்த்தை நம்முடைய இருதயங்களை நிரப்பவும் வளர்ச்சியடையவும் வந்தது. நம்மை நிரப்பி பரிசுத்தப்படுத்துவதற்கான சத்தியத்தைக் கொடுக்க வேண்டியது தேவனுடையதாயிருக்க, பரிசுத்தப்படுத்தும் சத்தியத்தின்மேல் பசியாயிருக்கவும், தாகமா யிருக்கவும் உள்ள அந்த இருதய நிலையை வெளிக் காட்டுவது நம்முடையதாக இருக்கிறது. பரிசுத்தப்படுத்தும் அந்த சத்தியத்தை அனுதினமும் உட்கொள்ளும்போது, இவ்விதமாக ஆண்டவருக்குள் அவருடைய வல்லமையிலும் சத்துவத்திலும் வளர உதவி செய்கிறது. ஆண்டவருக்கென நாம் அர்ப்பணிப்பது மாத்திரம் போதாது, புது சிருஷ்டியின் அங்கமாகமாத்திரம் இருக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பமல்ல; அவர்களுடைய குணாதிசயத்தின் பல்வேறு பகுதிகளை அபிவிருத்தி பண்ணவும், அவைகளை வெளிக்கொணரவும், அவர்கள் பயிற்றுவிக்கப்படவும், நெறிமுறைப்படுத்தப்படவும், மேலும் பரீட்சிக்கப்படவும் வேண்டும்; எல்லா நிலைகளிலும் சோதிக்கப்பட்டு, கண்டறியப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும்விதமாக தேவன் மேல் கொண்டுள்ள பற்றுக்கு ஆதாரமாக ஒவ்வொறு பகுதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் இந்த புது சிருஷ்டிகள் அவர்களை அழைத்தவருக்கு உண்மையுள்ளவர்கள் என்று காணப்படல் வேண்டும், அதன்மூலம் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறவும் அவர்களுடைய ஆண்டவருடைய மகிமையான மகிழ்ச்சியில் உட்பிரவேசிப்பதற்குத் தகுதியுள்ளவர்கள் என்றும் எண்ணப்படல் வேண்டும்.

இந்த நீதிமானாக்கப்படுதல், தேவனோடு சமாதானமாகிய பெரும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தபடியால், அடுத்தபடியாக வாழ்க்கையின் ஒவ்வொரு நலன்களையும், காரியங்களையும், ஒவ்வொரு நம்பிக்கையையும் குறிக்கோள்களையும் அர்ப்பணித்து, உலக நம்பிக்கைகளையும் குறிக்கோள்களையும் ஆசீர்வாதங்களையும், புதுசிருஷ்டிக்கென வைக்கப்பட்டிருக்கிற பரலோக ஆசீர்வாதங்களுக்காக மாற்றிக்கொள்ளும் போது, நாம் அதிகமாக புது சிருஷ்டிக்கென தேவன் உண்டுபண்ணியிருக்கிற அருமையானதும், மேன்மையானதுமான வாக்குத்தத்தங்களை உணர்ந்து நமக்கென்று சுதந்தரித்துக் கொள்ளும் போது, அது ஒரு பெரிய விடுதலையையும் இருதயத்தில் இளைப்பாறு தலையும் கொண்டு வருகிறது.''அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோம.8:28) என்ற ஒரே வாக்கியத்தில் இந்த வாக்குத்தத்தங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. அதன்படி இது இரண்டாவது வாக்குத்தத்தமாக இருக்கிறது. இருந்தபோதிலும் மாம்சத்தின்படி அதை அறியமுடியாது. ஆனால் அது தேவனுக்குள் ஒரு முழு நம்பிக்கைக்குள் நம்முடைய இருதயங்களை ஆழ்ந்த இளைப்பாறுதலுக்குள் நடத்திச்செல்கிறது. வேதாகமத்திலுள்ள மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை இதய பூர்வமாக நமக்கு அளிக்கிறது.

சுபாவத்தில் காணப்படுகிற வித்தியாசங்களினிமித்தம் கண்டிப்பாக, இந்த முழு அர்ப்பணிப்போடு சம்பந்தப்பட்ட அலுவல்களில் வித்தியாசம் இருக்கும். சிலருக்கு, அவர்கள் ஆண்டவருக்கென முழுமையாக அர்ப்பணிக்கும் வேளையில், அவருடைய வரவிருக்கின்ற தெரிந்து கொள்ளப்பட்ட சபை அங்கத்தினர்கள் என்ற நிலையில், அவர்கள் மேல் உள்ள அவருடைய விசேஷமான பராமரிப்பை உணரும்போது அது அவர்களுக்கு ஒரு சாதாரண திருப்தியளிக்கக்கூடிய ஒரு சமாதானத்தை அல்லது இருதயத்துக்கு இளைப்பாறுதலை மட்டுமே அளிக்கிறது. ஆனால் அந்த வேளையில் அதிக உற்சாகமான சுபாவம் உள்ளவர்களுக்கு அது குதூகலமான மகிழ்ச்சியையும், துதியையும், சந்தோஷத்தையும், ஆரவாரத்தையும் அளிக்கிறது. இயற்கையாகவே சுபாவத்தில் உள்ள வித்தியாசங்களை நாம் ஞாபக்தில் வைத்து, பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மத்தியிலும் இப்படிப்பட்ட வித்தியாசங்கள் காணப்பட்டன என்பதை கருத்தில் கொண்டு, நம்முடைய

அனுபவங்களைக் காட்டிலும் வேறு விதமான அனுபவங்கள் உடையவர்கள்மேல் அனுதாபம்காட்ட வேண்டும். விசேஷமாக பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் பெந்தெகொஸ்தே நாள் உட்பட அவர்களுடைய அனுபவங்களைக் குறித்து மற்றவர்களைக் காட்டிலும் அதிக தீர்க்கமாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறவர்களாக இருந்தார்கள். உற்சாகமான, குதூகலமான சுபாவம் உள்ள சகோதரர்கள் அப்போஸ்தலர் கட்டளையிட்டபடி நிதானத்தைக் கற்க வேண்டும். மேலும் சுபாவத்தின்படி அதிகமாக உற்சாகமும், சுவாரஸ்யமும் இல்லாதவர் களாகவும் மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்த்து இருக்கும் சகோதரர்கள் நம்மை அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங் களைக் குறித்து அதிகதிகமாக உணரவும், அறிவிக்கவும் மேலான விடுதலையைத் தரும்படி ஜெபிக்க வேண்டும். ஆண்டவரால் அதிகமாக நேசிக்கப்பட்ட யோவான், யாக்கோபு ஆகிய இருவரும் அவர்களுடைய வைராக்கியத்தினாலும், எல்லாவற்றிலும் தீவிரமாயிருந்ததினிமித்தமும் ''இடிமுழக்க மக்கள்'' என்று அழைக்கப்பட்டனர். யாக்கோபுக்கும், யோவானுக்கும் கூட ஒரு நேரத்தில் ''நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்கள் என்பதை அறியீர்கள்'' என்ற எச்சரிப்பும், திருத்துதலும் தேவையாயிருந்தது. (லுக். 9:54,55) இன்னொரு பக்கம், அதிகமாக நேசிக்கப்பட்டவரும், வைராக்கியம் உள்ளவருமான அப்போஸ்தலரான பேதுரு மேசியாவை தயக்கமின்றி அறிக்கை யிட்டதினால் ஆசீர்வதிக்கப்பட்டார். ஆனால் இன்னொரு நேரத்தில் தவறான வைராக்கியம் உடையவராக இருந்தபடியால்''சத்துரு'' என்று கடிந்து கொள்ளப்பட்டார். இருந்தபோதிலும் இந்த மூன்று பேரின் ஆவலுள்ள, ஊக்கமான சுபாவம் ஆண்டவருக்குப் பிரியமானதாக இருந்தது என்று கூறலாம். எப்படியெனில் அவர்கள்தான் எப்போதும் ஆண்டவரோடு இருந்தார்கள்; மேலும் இந்த மூவர் மாத்திரமே மறுரூப மலைக்கு ஆண்டவரோடு சென்றவர்கள்; மேலும் யாவீருவின் மகள் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டபோது அவளைக் கிடத்தியிருந்த அறைக்கு ஆண்டவரோடு சென்றவர்கள்; மாத்திரமல்ல கெத்சமனே தோட்டத்தில் மற்றவர்களைக் காட்டிலும் சற்று கூடுதலாக அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவெனில், அப்படிப்பட்ட வைராக்கியம் ஆண்டவருக்குப் பிரியமானதாக இருக்கிறது; அவரோடு உள்ள நெருக்கத்தைக் காட்டுவதாக உள்ளது; ஆனாலும் அது எப்பொழுதும் அவருடைய

வார்த்தையாலும் ஆவியாலும் வழிநடத்தப் பட்டு தலையாயிருக்கிற அவரைக் கனப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது, சிலர் தவறாக புரிந்து கொண்டபடி மனுஷன் பூரணப்படுதலைக் குறிப்பதல்ல, அது நம்முடைய மூளையின் தரத்தையோ அல்லது அமைந்திருக்கிற விதத்தையோ மாற்றுவதல்ல, அல்லது நம்முடைய சரீரத்தில் உள்ள கறைகளை அற்புதமான முறையில் அகற்றிவிடுவதல்ல, அது நமது சித்தத்தை அல்லது விருப்பத்தை அர்ப்பணிப்பது ஆகும்; அது தேவனால் கிறிஸ்து மூலமாக பரிபூரணம் என்று ஏற்றுக்கொள்ளப்படுவதாகும்; அது சரீரத்தை ''மரணபரியந்தம்'' பலியிடுவதாகும். நாம் பார்த்திருக்கிறபடி அந்த சரீரமானது உண்மையில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டதினால் பரிபூரணப்படுத்தப் படுவதில்லை, ஆனால் நம்முடைய சித்தத்தின்படி, நம்முடைய இருதயத்தின்படி, நம்முடைய நோக்கத்தின்படி பரிபூரணமாக்கப்பட்டதாக எண்ணப்படுகிறது. அப்போஸ்தலர் அறிவுரை கூறுவது போன்று, நமது சரீரத்தின் ஒவ்வொரு பலத்தையும், ஒவ்வொரு திறமையையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தேவனுக்கு உகந்ததாக்க முயற்சிக்கவேண்டும். மேலும் நாம் சந்திக்கின்ற எல்லா மனிதர்கள் மேலும் அது அதே வழியில் வரும்படியாக நன்மையைக் காட்டுவதாக இருக்கவேண்டும். அப்படியென்றால் தற்போதைய வாழ்க்கையில் குறுகிய காலக்கட்டமான ஐந்து அல்லது பத்து அல்லது இருபது அல்லது ஐம்பது வருடங்களில் தன்னுடைய சொந்த பலகீனமுள்ள, பரிபூரணமற்ற சரீரத்தை (அல்லது எடுத்துக்காட்டாக மற்றவர்களுடைய பூரணமற்ற சரீரத்தைக்கூட) பரிபூரணப்படுத்த முடியும் என்று அர்த்தப்படுத்தப்படாது. இதற்கு மாறாக அப்போஸ்தலர் சபையைக் குறித்துச் சொல்லும் போது, ''மரணத்தில் அது அழிவுள்ளதாய், கனவீனமுள்ளதாய், பலவீனமுள்ளதாய், (பூரணமற்ற) ஜென்ம சரீரத்தில் விதைக்கப்படுகிறது,'' உயிர்த்தெழுதலின்போது நமக்கு பலமுள்ள, பரிபூரணமான, மகிமையான, அழியாமையுள்ள, கனத்துக்குரிய புதிய சரீரங்கள் கொடுக்கப்படும்போது மாத்திரமே நாம் தேடுகின்ற பரிபூரணத்தைப் பெற்றிடுவோம்; இதையேதான் ஆண்டவரும் வாக்குத்தத்தமாக, நாம் தற்போதைய பெலவீனமான, பரிபூரணமற்ற வாழ்க்கையிலும், அவருக்கென நம்முடைய இருதயம் உண்மையாக இருப்பதைக் காட்டும்போது காலக்கட்டத்தில் பரிபூரணம் நம்முடையதாகும் என்று சொல்கிறார்.

இருந்தபோதிலும் இருதயத்தில் ஆண்டவருக்கு உண்மையாக இருப்பது என்பது, நம்முடைய வாழ்க்கையின் எல்லா பகுதிகளையும், ஆம், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படுத்துவது என்று அர்த்தப்படும். (எபி. 4:12) இது நம்முடைய முதலாவது கடமை, தொடர்ந்து செய்ய வேண்டிய கடமை, நம்முடைய கடமையின் முடிவாக இருக்கும். ஏனெனில் ''நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது,'' '' நான் (கர்த்தர்) பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' என்று வேதம் கூறுகிறது; (1தெச. 4:3; 1பேது. 1:16) பூரணமான பரிசுத்தம் என்பதே நம்முடைய நோக்கமாக இருக்கவேண்டும். இதை நம்முடைய மனதும் முழுவதுமாக சந்தோஷமாக ஆதரிக்கும். ஆனாலும் நாம் விழுந்துபோன பெலகீன சுபாவங்களின் கீழும், உலக சூழலின் கீழும், சத்துருவின் கீழும் இருக்கும்வரை மெய்யாய் சரீரத்தின்படி நாம் பூரண பரிசுத்தத்தை ஒருபோதும் அடைய முடியாது. ஆனால் நாளுக்கு நாள் ''தேவனால் கற்பிக்கப்பட்டு,'' அவருடைய மகிமையான குணாதிசயத்தை முழுமையாக அறிந்து, அந்த அறிவைக் குறித்த வியப்பு அதிகதிகமாக நம்முடைய இருதயங்களை நிரப்பும்போது, புதிய மனமானது நம்முடைய மாம்சத்தின் பெலகீனங்களின்மீது அதிகதிகமாக கட்டுப்பாடும், பலமும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளும். இந்த பெலகீனங்கள் சபை அங்கத்திற்கு அங்கம் மாறுபடுகிறது.

கர்த்தருக்கு இருதயத்தின் உண்மையான பரிசுத்தம் என்பது அவருடைய ஊழியத்தில் ஊக்கமாக விழிப்பாக இருப்பதைக் குறிக்கும்; அது மற்றவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதைக் குறிக்கும்; அது ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் பலப்படுத்துவதைக் குறிக்கும்; நமக்கு சமயம் கிடைக்கும்போதெல்லாம் எல்லா மனிதருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மைசெய்வதைக் குறிக்கும்; இவ்விதமான நமது வாழ்க்கைகள் வெவ்வேறு வழிகளில் ஆண்டவருக்கு என்று அர்ப்பணிக்கப்பட்டவைகள்; நமக்கு வருகிறபடி நாளுக்கு நாள், தருணத்திற்கு தருணம் சகோதரருக்காக ஜீவனைக் கொடுப்பதைக் குறிக்கும்; (1யோவா. 3:16) நாம் கிருபையிலும் தேவனைப்பற்றிய அறிவிலும், தெய்வீக வார்த்தைக்கு கீழ்ப்படிதலிலும் முன்மாதிரியாக இருப்பதிலும் வளரும்போது, நாம் ஆண்டவர்மேல் வைத்திருக்கிற அன்பு, சகோதரர்கள்மேல் வைத்திருக்கிற அன்பு, நம்முடைய குடும்பங்கள்மேல் வைத்திருக்கிற அன்பு, இரக்கத்தினால் உலக மக்கள்மேல் வைத்திருக்கிற

அன்பு நம்முடைய இருதயங்களை அதிகதிகமாக நிரப்புவதைக் குறிக்கும். இருந்தபோதிலும், நாம் மற்றவர்களுக்காக செயல்படுத்துகின்ற நம்முடைய அப்பியாசங்கள் கர்த்தருடைய அருளால், நம்முடைய பரிசுத்தமாக்கப்படுதலுக்கு தேவன் அளிக்கிற வழிகளாக மாத்திரம் உள்ளன. ஒர் இரும்பு இன்னொரு இரும்பை கூர்மையாக்குவதை போல் நாம் மற்றவர்களுக்காக எடுக்கும் பிரயாசங்கள் நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகின்றன. கூடுதலாக, நம்மைப்போல் மற்றவர்களையும், விசேஷமாக விசுவாச வீட்டாரையும் நம்மைப்போன்று நேசிக்கும் அந்த உன்னத நிலைக்கு அதிகதிகமாக வரும்போது, இவற்றிற்கெல்லாம் மேலாக இருக்க வேண்டியது என்ன வென்றால், நம்முடைய சிருஷ்டிகர் மேலும், இரட்சகர் மேலும் வைக்கும் உன்னதமான அன்பே; மேலும் அவருக்குப் பிரியமானதை செய்வதே நமது விருப்பமாக இருக்க வேண்டும். ஆகவே நம்முடைய பரிசுத்தமாக்கப்படுதல் முக்கியமாக தேவனை நோக்கி இருக்க வேண்டும். மேலும் முதலாவது நம்முடைய இருதயங்களையும் சித்தங்களையும் உருக்குகிறதாக இருத்தல் வேண்டும். தேவன் மேல் இவ்வளவு பக்தி கொண்டிருப்பதின் விளைவாக சகோதரருக்கும் மற்றும் எல்லா மனிதரின் நலன்களுக்காக பிரயாசப்படுவதற்கான வழிவகைகளைக் காணச்செய்யும்.

சத்தியத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்படுதல்

மேற்கூறப்பட்டவைகளிலிருந்து, தேவன் வாஞ்சிக்கிற பரிசுத்தம்– புதுசிருஷ்டியில் ஒரு இடத்தை அடைவதற்கு இது அவசியம்– கிறிஸ்துவின் பள்ளியில் உள்ளவர்களுக்கேயன்றி வேறு எவராலும் முடியாதது, ஆனால் அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்பவர்கள் மாத்திரம் ‘‘சத்தியத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்படுவார்கள்’’ என்பது வெளியரங்க மாகிறது. தவறோ அல்லது அறியாமையோ பரிசுத்தமாக்காது. மேலும் எல்லா சத்தியமும் பரிசுத்தத்திற்கு ஏதுவானது என்று தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அதற்கு மாறாக, சத்தியத்தை நேசித்து தவறை வெறுப்பவர்களுக்கு பொதுவாக சத்தியம் பாராட்டப்படத்தக்கதாக இருந்தாலும், ‘‘உம்முடைய சத்தியம்’’ என்று அதற்கெனவே உள்ள தேவனுடைய வார்த்தையே பரிசுத்தமாக்குகிறது. இன்றைக்கு நாம் பார்க்கிற மானிட உலகம் முழுவதும் சத்தியத்திற்காக வெளிவேஷமாக ஓடிக்கொண்டும், ஒருவரை யொருவர் துரத்திக்கொண்டும் போட்டி போடுவதையும் பார்க்கிறோம். புவியியல் வல்லுநர்கள் இதில் ஒரு பங்கு

வகிக்கின்றனர், வானவியல் வல்லுனர்கள் ஒரு பக்கம், இரசாயன விஞ்ஞானிகள் இன்னொரு பக்கம், மருத்துவர்கள் இன்னொரு பக்கம், இராஜ தந்திரிகள் மற்றும் ஏனையோர் இன்னொரு பக்கமாக போட்டி போடுகிறார்கள். ஆனால் இப்படியாக பல்வேறு விதங்களில் சத்தியத்தைத் தேடுவது, பரிசுத்தத்திற்கு வழிநடத்துவதாக நாம் பார்க்க முடிவதில்லை. அதற்கு மாறாக, சொல்லிவைத்தாற்போல் மாற்றுத் திசையில் வழி நடத்துகின்றன. இதற்கு ஒத்தாற்போல் ''உலகமானது சுய ஞானத்தினால் தேவனை அறியாமலிருக்கிறது'' என்ற அப்போஸ்தலருடைய கூற்றும் அமைந்திருக்கிறது. (1கொரி. 1:21) உண்மை என்னவெனில் நம்முடைய தற்போதைய குறுகிய வாழ்நாளில், தற்போதைய விழுந்துபோன, துன்மார்க்கமான, பரிபூரணமற்ற நிலைமையில் ஒவ்வொரு பொருளைக் குறித்தும் முழு உண்மையையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நாம் எடுக்கக்கூடிய முயற்சிகளுக்கு நம்முடைய தகுதி மிகவும் சிறியதா யிருக்கிறது; ஆகவேதான் வெற்றிச்சிறந்த உலக மனிதர்கள் ஒவ்வொரு தனிப்பட்ட பொருளில் வல்லுநர்களாக இருக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறோம். வானவியலுக்குத் தன்னுடைய கவனத்தைச் செலுத்துகிற மனிதனுக்கு அவனுடைய ஆராய்ச்சியில் செய்ய வேண்டிய காரியங்களே அதிகம் இருக்கும், ஆகவே புவிஅமைப்பியல் அல்லது இரசாயனம், அல்லது தாவரவியல், அல்லது மருத்துவம், அல்லது எல்லாவற்றிற்கும் மேலான ''உம்முடைய சத்தியத்தை'' – யுகங்களின் தெயவீக திட்டத்தைக் குறித்துப் பார்ப்பதற்கு சிறிதளவு நேரம்தான் இருக்கும். இப்படியிருப் பதினால், அந்தக் காலத்தில் நன்றாகக் கற்றுத்தேர்ந்தவராயிருந்த அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு, உபதேசங்கள், விஞ்ஞானங்கள் என்று தவறாக அழைக்கப்பட்ட ''மனுஷ தர்க்கங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிரு''என்று புத்திமதி கூறுகிறார். விஞ்ஞானம் என்ற வார்த்தை சத்தியத்தைக் குறிக்கிறது, அப்போஸ்தலர் அவருடைய நாட்களில் இருந்த விஞ்ஞானிகளின் ஆர்வத்தை எதிர்க்க வில்லை, மேலும் அவர்கள் வேண்டுமென்றே தவறானதைக் கூறுகிறார்கள் என்றும் அர்த்தப் படுத்தவில்லை என்பதை நாம் நிச்சயமாக சொல்லலாம். ஆனால் அவருடைய வார்த்தைகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன; இதை விஞ்ஞானம் கூட முற்றிலுமாக ஊர்ஜிதப்படுத்துகிறது, எப்படியெனில் இந்த எல்லா விஞ்ஞானத்திலும் ஓர் அளவுக்கு உண்மை இருந்தாலும், விஞ்ஞானம் என்று அழைக்கப்பட்ட மனுஷீக தத்துவங்கள் எல்லாமே உண்மையல்ல – முற்றும் முழுவதும் சரியானதல்ல. அவைகள் கல்வித்

துறைகளில் அதிகம் கவனம் செலுத்திய மாணாக்கர்களின் வெறும் மிகவும் நேர்த்தியான ஊகங்களேயாகும். சரித்திரம் தெளிவாகக் காட்டுகிறபடி காலத்திற்கு காலம் இந்த மனுஷீக தத்துவங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்திருக்கின்றன. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த விஞ்ஞானிகள் அவர்கள் காலத்திற்கு முன்னதாக இருந்த விஞ்ஞானிகளின் கூற்றுக்கு மறுப்பு தெரிவித்தது போன்று, இவர்களின் கண்டுபிடிப்பும், விளக்கிச் சொல்ல கைக்கொண்ட முறைகளும் இன்றைக்குள்ள விஞ்ஞானிகளால் மறுக்கப்படுகின்றன.

அப்போஸ்தலராகிய பவுல் சிறந்த ஞானியாகவும், முற்றிலுமாக அர்ப்பணம் செய்து கொண்டவராக இருந்தது மாத்திரமல்ல, இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கத்தினராக இருந்து, அவரோடு இருந்தவர்களில் அநேகரைக் காட்டிலும் மிகவும் படித்தவராக இருந்து மாபெரும் பிரதான ஆசாரியரின் அடிச்சுவட்டில் நன்றாக ஓடுவதற்குத் தகுதியுள்ளவராக இருந்தார்; இதைக்காட்டிலும் யூதாசுக்கு பதிலாக, ''ஆட்டுக்குட்டி யானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலரில்'' ஒருவராக தெரிந்தெடுக்கப் பட்டவராக இருந்தார்; அவர் தெய்வீக வழிநடத்துதல் உள்ளவராக– விசேஷமாக அவருடைய உபதேசங்களைப் பொறுத்த வரையில் முழு சுவிசேஷ யுகத்திலுள்ள விசுவாச வீட்டாருக்கும் கற்றுக்கொடுப்பவராக இருக்கும்படி ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டிருந்தார். விசுவாசத்திற்கு இவ்வளவு நல்ல முன்மாதிரியானவரின் வார்த்தைகள், அவர் அர்ப்பணிப்பின் முன்மாதிரிக்குக் குறைவற்று இருந்ததோடு, நாம் அர்ப்பணித்து இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்பட்டு நாம் பிரவேசித்திருக்கிற ஓட்டத்தைக்குறித்துக் கற்றுக்கொள்ளும் போது இது நமக்கு மிகவும் உபயோகம் உள்ளதாக இருக்க வேண்டும். பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாக ஓடக்கடவோம் என்று அவர் புத்தி சொல்லுகிறார். (எபி. 12:1) எச்சரிக்கையாக, அவருடைய அனுபவங்களை நமக்கு முன்னதாக வைத்து ''ஒன்றை நான் செய்கிறேன்'' என்று சொல்கிறார். நான் ஆண்டவருக்காக செய்துகொண்ட முழு அர்ப்பணம் என்னுடைய திறமைகளை எல்லா திசைகளிலும் வியாபிக்க அனுமதிக்க வில்லை, மாத்திரமல்ல ஒவ்வொரு உண்மையையும் கற்றுக்கொள்ள அனுமதிக்கவில்லை. எனது இருதயத்துக்குள் வந்திருக்கிற தேவனின்

வெளிப்பாடான சத்தியம் மேலும் தொடர்ச்சியாக வந்த ஏற்கனவே பரிசுத்தமாக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்ட தாலந்துகள் தெளிவாக எனக்கு காட்டியுள்ளது என்னவெனில், பெரும் பந்தயப் பொருளை நான் வெல்லவேண்டும் என்றால் பூமியிலுள்ள பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்துவது போன்று நானும் எனது முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். ''ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து (ஒரு மாணவனாக நான் வைத்திருந்த அபிலாஷைகளையும், ரோமப் பிரஜையாக வைத்திருந்த முந்தைய நம்பிக்கைகளையும், அதிகமான கற்றுத் தேர்ந்த மனிதனாக இருப்பதையும், அவர்களின் வழியில் ஒடுகிறவர்கள் தக்க வைத்துக்கொள்ளும் நற்சான்றுகளையும், பல்வேறு விஞ்ஞானம்– சாஸ்திரம் கொடுக்கிற கவர்ச்சிகளையும் மறந்து) முன்னானவைகளை நாடி (எனது விசுவாசத்தின் கண்ணையும், நம்பிக்கையையும், அன்பையும், பக்தியையும் திவ்ய சுபாவத்தில் எனது ஆண்டவரோடு உடன்சுதந்திரராக இருக்கும்படியாக உள்ள உன்னத நிலையின் மேலும் உலகத்தின் ஆசீர்வாதத்திற்காக இந்த இராஜ்யத்தின் மாபெரும் வேலையின் மேலும் வைத்து) பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.'' (பிலி. 3:13,14)

உணர்ச்சிவசப்படுதல் – பரிசுத்தமாக்கப்படுதல் அல்ல

இந்த யுகத்திலுள்ள உண்மையான பலி செலுத்துபவர்கள் ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு ஆதாரம் அல்லது நிரூபணத்தைக்குறித்துக் கிறிஸ்தவ மக்களின் சிந்தனையில் அதிகமான குழப்பம் இருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பத்தில் சபைக்குக் கொடுக்கப்பட்டது போல இருக்கவேண்டும் என்று சிலர் தவறாக ஒரு வெளிப்புறத் தோற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். (தொகுதி 5, அத்தியாயம் 9 ஐ பார்க்க) வேறு சிலர் உள்ளான மகிழ்ச்சிகரமான உணர்வை எதிர்பார்க்கிறார்கள்; ஆனால் அப்படி நடக்காத பட்சத்தில், ஏமாற்றத்தையும் ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறித்த சந்தேகத்தையும் வாழ்க்கை முழுவதும் உண்டு பண்ணுகிறது. அவர்களுடைய எதிர்பார்ப்புப் பெரும்பாலும் இப்படியான பெருமிதத்தை (சந்தோஷத்தை) அடைந்த சகோதரர்கள் அளித்த சாட்சியங்களைச் சார்ந்து

எழுந்தவைகளாகும். ஆகவே, எல்லாரும் முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டியது என்னவெனில், இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளை நாம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வேதாகமம் எந்த ஒரு இடத்திலும் வாக்குக் கொடுக்கவில்லை என்பதே. நாம் எல்லோரும் ''ஒரே நம்பிக்கைக்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்,'' மேலும் கடந்தகால பாவங்கள் மன்னிக்கப்படுவதைக் குறித்த அதே வாக்குத்தத்தங்களும், பிதாவின் முகத்தின் புன்முறுவலும், அவர் அளிக்கிற பந்தயப்பொருளை நாம் அடையும்படியான ஓட்டத்தில் உதவியாகவும் அவருடைய அனுக்கிரகமும், ஒவ்வொரு தேவைக்கும் போதுமான கிருபையும், அழைப்பின் நிபந்தனைகளுக்கு உட்படும் சகலருக்கும் சொந்தமானதாகும். தேவனுடைய ஜனங்கள் தாங்கள் மனிதரிடமிருந்து அல்லது தேவனிடத்திலிருந்து உலப்பிரகாரமான அல்லது ஆவிக்குரிய ஏதாவது அல்லது ஒவ்வொரு வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அதிக வித்தியாசம் உண்டு. சிலர், மற்றவர்களைக் காட்டிலும் துரிதமாக உணர்ச்சிவசப்படுபவர்களாகவும் உள்ளனர். ஆகவே அதே அனுபவத்தை விபரமாகச் சொல்லும்விதத்திலும், வார்த்தைகளை உபயோகிப்பதிலும் அவர்கள் மிகவும் வெளிப்படையாக உள்ளனர். மேலும், ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளோடு தொடர்பு கொள்வதிலும் உள்ள வித்தியாசம் தெரிகிறது. சபையின் மாபெரும் தலையாயிருக்கிற நம்முடைய ஆண்டவர் இயேசு முப்பது வயதினிலே பிதாவின் சித்தத்தைச் செய்யும்படியாக தனக்குள்ள எல்லாவற்றையும் மரணபரியந்தம் அர்ப்பணம் செய்தார். மேலும் அளவில்லாமல் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்ட போது நமக்குத் தெரிந்த அளவுக்கு, எவ்விதமான குதூகல அனுபவங்களும் வழங்கப்படவில்லை. இருந்த போதிலும், சந்தேகத்திற் கிடமின்றி, அவருடைய வழி சரியானதும் முறையானதுமாகும் என்ற உணர்வோடும், பிதாவானவர் அதை அங்கீகரித்தார் என்ற உணர்வோடும் நிரப்பப்பட்டார். மேலும் எப்படிப்பட்ட அனுபவமாகக் காணப் பட்டாலும் அதற்குத் தெய்வீக ஆசீர்வாதம் உண்டு என்பதையும் அறிந்து இருந்தார். ஆனாலும்கூட நம்முடைய ஆண்டவர் மகிழ்ச்சியின் சிகரத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்குப் பதிலாக, ஆவியானவரால் வனாந்திரத்திற்கு வழி நடத்தப்பட்டார். ஆவியினால் பிறந்த புது சிருஷ்டியின் அனுபவங்களாக இருந்ததெல்லாம் கடுமையான பரீட்சை தான். அவரைத் தாக்கும்படியாக சத்துரு அனுமதிக்கப்பட்டான். சத்துரு அவரை பலியின் மரணத்தில் சம்பந்தப்படாத திட்டத்தைக்காட்டி,

பிதாவின் சித்தத்தைச் செய்யும்படியாக அவருக்கு இருந்த வாஞ்சையை அகற்றும்படி, அவர் செய்து முடிக்கும்படியாக வந்திருந்த வேலைக்குப் பதிலாக வேறுபல திட்டங்களையும் அனுபவங்களையும் எடுத்துரைத்து திசைத் திருப்ப முயற்சித்தான். ஆண்டவரைப் பின்பற்றி வருபவர்கள் சிலரின் அர்ப்பணிப்பின் வேளையின்போதும், அதற்குப் பின்னர் சிறிது காலத்திற்கும் இப்படியாகத்தான் இருக்கிறது என்று நம்புகிறோம். அவர்கள் சந்தேகங்களாலும் பயங்களாலும், தாக்கப்படுவதோடு நாம் உலகப்பிரகாரமான காரியங்களை விடுவதற்கு திவ்விய ஞானமும், அல்லது திவ்விய அன்பும் தேவைதானா என்ற கேள்விக்குறியையும் சத்துரு எழுப்புகிறான். இப்படிப்பட்ட காரியங்களில் நாம் ஒருவரை யொருவர் நியாயம் தீர்க்காதிருப்போமாக. ஆனால் ஒருவர் அளவற்ற உணர்ச்சியோடு மகிழ்கின்றார் என்றால், இவ்வண்ணமாகவே அர்ப்பணம் செய்தவர்கள் எல்லோரும் அவருடைய அனுபவத்தில் களிகூறக்கடவர்கள். ஆனால் இன்னொருவர் அர்ப்பணம் செய்து கொண்ட பின்னர், சோதனையில் அகப்பட்டு அதன் கடுமையில் சூழப்பட்டிருப்பாரென்றால், அவருடைய அனுபவங்கள் நம்முடைய தலையானவருடைய அனுபவங்களைப் போலவே இருக்கிறது என்ற உணர்வைப்பெறும்போது மற்றவர்கள் அவருக்காக அனுதாபப்பட்டு, அவரோடு கூட களிகூற வேண்டும்.

தேவ மனிதர்களான ஜான், சார்லஸ் வெஸ்லி போன்றவர்கள் நிச்சயமாகவே அர்ப்பணம் செய்து கொண்டவர்களாக இருந்தார்கள்; இருந்தபோதிலும், அர்ப்பணிப்பினால் வந்த விளைவுகளைப்பற்றிய அவர்களது மனநிலை, சிலருக்கு நன்மை செய்தது; ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தீமையையே விளைவித்தது, எப்படியெனில் அது எல்லாராலும் உணரமுடியாத, வேதாகமத்திற்கு அப்பாற்பட்ட ஓர் எதிர்ப்பார்ப்பை உண்டு பண்ணி, அதனால் வந்த அதைரியத்தால் இப்படிப்பட்டவர்களுக்கு தீமை விளைவித்தது. ஆண்டவருக்கென அர்ப்பணம் செய்யும் ஒவ்வொரு வேளையிலும் இதே அளவு எல்லையில்லா மகிழ்ச்சியென்று அர்த்தப்படுத்தி, அந்த எண்ணத்தோடு போதித்தது அவர்களுடைய சார்பில் இருந்த ஒரு பெரிய தவறாகும். ஒருவன் கிறிஸ்தவ பெற்றோருக்குப் பிறந்து, கிறிஸ்தவ குடும்பத்தில் புனிதமான சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு, தேவனுடைய வார்த்தையின் படியும், அவர்களுடைய பெற்றோர்களின் விசுவாசத்தின்படியும் வாழ்க்கையின் அம்சங்களில் பயிற்றுவிக்கப்படுகிறான்; இவன் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கும்போது எப்போதாவது

தேவனுடைய சித்தத்தை அறிந்து அதைச் செய்ய முற்பட்டு, பல வருடங்கள் யோசித்து, தனிப்பட்ட முறையில் தன்னை ஆண்டவருக்கென அர்ப்பணிக்க வேண்டும் என்று தீர்மானிக்கும்போது இவன் பெறுகிற மகிழ்ச்சி, அந்த வேளை வரை பரிசுத்தமான காரியங்களுக்கு ஒரு கெட்ட குமாரனாக, ஓர் அந்நியனாக, வினோதமானவனாக, சம்பந்தமில்லாத வனாக இருந்த ஒருவன் பெறக்கூடிய எல்லையில்லா மகிழ்ச்சிக்கு ஒப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

இந்த நபரில் ஏற்பட்ட மாற்றம் தீவிரமானதொன்றாகும். அது வாழ்க்கையின் எல்லா போராட்டங்களையும், சக்திகளையும், இதற்கு முன்பாக தேவனை விட்டு பாவத்திற்குள்ளும், தன்னலத்திற்குள்ளும் ஓடிக்கொண்டிருந்த அவைகளை தேவனுக்கு நேராக திருப்புவதாகும். ஆனால் முன்பு கூறப்பட்டவர், தேவ பக்தியுள்ள பெற்றோரால் சிறு குழந்தையாக இருந்தபோதிலிருந்தே தேவனுக்கு நேராகவும், அவருடைய நீதிக்கு நேராகவும், அவருடைய மனோபாவமும், பயபக்தியும் சரியான முறையில் அமையும்படி நடத்தப்பட்ட அவரால் இப்படி ஒரு திடீர் மாறுதலை அல்லது புரட்சியை உணரமுடியாதது மாத்திரமல்ல, இவ்விதமான ஒன்றையும் எதிர்பார்க்கவும் கூடாது. இப்படிப்பட்டவர்கள் விசுவாசமுள்ள பெற்றோரின் பிள்ளைகளாக, தங்கள் தனிப்பட்ட பொறுப்புகளின் காலம் வரும் வரை தேவனுடைய அனுக்கிரகத் திற்குள்ளாக இருந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் அந்த வேளையில் ஏற்றுக்கொள்ளப்படுவது என்பது தங்களுடைய கடந்த கால உண்மையான விசுவாசம் தேவனுக்கென்று முற்றிலுமாக உறுதிப் படுத்துவதும் தங்களுடைய தாலந்துகள் எல்லாவற்றையும், பெலன், நோக்கங்களையும், தேவனுக்கும், அவருடைய சத்தியத்திற்கும், அவருடைய ஜனங்களுக்கென்றும் செய்யும் ஓர் அர்ப்பணம் என்பதையும் உணர வேண்டும். இவர்கள் தங்களுடைய அர்ப்பணம் என்பது அவர்கள் செய்யக்கூடிய ''புத்தியுள்ள ஆராதனை'' மாத்திரமே என்பதை உணர வேண்டும். அவர்கள் ஏற்கனவே இப்படியாக நீதிமானாக்கப்பட்ட மனுஷீகத்தை தேவனுக்கென்று முற்றிலுமாகக் கொடுத்துவிட்டபடியால், அர்ப்பணம் செய்து கொண்டவர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு மாத்திரமே உரியதான, வேதாகமத்தின் பெரிதும், விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் முன்பு இருந்ததைக்காட்டிலும் இப்பொழுது அவர்களுக்கே உரியது என்று முழுமையாக

எடுத்துக்கொள்ளலாம் என்று தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்படல் வேண்டும். இதற்கும் மேலாக, அவர்களுக்கு திவ்விய திட்டத்தின் அல்லது அதன் ஆரம்பத்தை குறித்தாவது ஒரு தெளிவான அறிவு கொடுக்கப்படுமென்றால், இந்த யுகத்தின் உன்னத அழைப்போடு சம்பந்தப்பட்ட அவர்களுக்கு நேராக வருகின்ற திவ்விய அனுக்கிரகத்திற்கு ஓர் அடையாளம் என்று எடுத்துக்கொண்டு அதில் அவர்கள் களிகூற வேண்டும்.

''நாங்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்''என்ற அப்போஸ்தலரின் கூற்று இந்த சுவிசேஷ யுகத்தின் முழு சபைக்கும் உரித்தாகும். அவரை நாம் கண்டு பிடிக்கமுடியாத நேரத்திலும்கூட அவரை நம்ப கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக நம்முடைய விசுவாசத்தை விருத்தியடையச் செய்வது ஆண்டவருடைய வாஞ்சையாக இருக்கிறது. அற்புதங்களும் அடையாளங்களும் நம்முடைய உலகப் பிரகாரமான புலன்களுக்குக் கொடுக்கப்பட்டால் ஒரு குறிப்பட்ட அளவுக்கு, சரியான விதத்தில் நம் விசுவாசம் வளர்ச்சியடையாது. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு, மனுஷ பார்வைக்கு அல்லது தீர்ப்பிற்கு அநேக காரியங்கள் மங்கலாகத் தெரியும்படி விட்டு வைக்கிறார்; இப்படிச் செய்வதால் விசுவாசம் வளர்ச்சியடையும் என்று அவர் நினைக்கிறார். நாம் இதுவரை கண்டிராதவைகளைக் குறித்தும் நாம் விசுவாசத்தோடு மகிழ்ச்சியடையவும், இயற்கையான விதத்தில் புரிந்துகொள்ளவும், சத்தியத்தை அறிந்து கொள்ளவும், பகுத்து அறிவதின் மூலம் அவருடைய வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்கள் மூலமாக நம்முடைய மனக்கண்கள் தேவனுக்கு நேராகத் திறக்கப்படல் வேண்டும்.

அப்போஸ்தலர் விவரித்துச் சொல்லுகிறபடி, இப்படியாக நம்முடைய இந்த மனக்கண்கள் திறக்கப்படுவதுகூட படிப்படியாக நடக்கிற காரியமாகும்.தேவனுடைய சபையில் ஏற்கெனவே இருக்கிறவர் களை, அப்போஸ்தலர், பரிசுத்தவான்கள் அல்லது அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்று அழைத்து, எல்லா பரிசுத்தவான்களோடுங்கூட அவர்கள் அதிகதிகமாக தேவனுடைய அறிவின் அகலத்தையும், நீளத்தையும், ஆழத்தையும், உயரத்தையும், அன்பையும் புரிந்து கொள்ளும்படி (பரிசுத்தவான்களைத் தவிர வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது) அவர்களுடைய மனக்கண்கள் திறக்கப்படல் வேண்டும் என்று அவர்களுக்காக ஜெபம் பண்ணுகிறார். புது சிருஷ்டி அர்ப்பணம் செய்து

கொண்டவுடன் தொடர்ந்து வருகின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், அவனுடைய விசுவாசத்திற்கேயன்றி இயல்பான உலகப்பிரகாரமான புலன்களுக்குத் தெரிவதில்லை என்ற இந்த சிந்தனை, ஆசரிப்புக் கூடாரத்தின் படங்களில் விபரமாகச் சொல்லப்பட்டுள்ளது. முதலாவது ''பரிசுத்த ஸ்தலத்தின்'' வெளிப்புற திரை பரிசுத்த பொருட்கள் லேவியர்களுக்குத் தெரியாமல் (நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு நிழல்) மறைத்து வைப்பது ஆழமான சத்தியத்திற்கு மாதிரியாக இருக்கிறது. அவைகள் இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கத்தினர்களாக (மேன்மையான பலிகளின் ஆசரிப்புக் கூடார நிழல்கள் என்ற புஸ்தகத்தில் பக்.117 ஐ பார்க்க) பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பவர்களுக்கு மாத்திரமே தெரிய வரும்.

சிலருக்கு அவர்களுடைய சுபாவத்தினால் வருகிற எல்லையில்லா மகிழ்ச்சியை இதே காரணத்தினால் அவர்கள் இழந்துவிடுவதில்லை. ஆனால் அவர்களுக்குத் தொடர்ச்சியாக இருக்கக் கூடிய சந்தோஷத்தின் அனுபவமும் ஆசீர்வாதமும், அவர்கள் ஆண்டவருக்குள் நிலைத்திருப் பார்கள் என்றால், அவருடைய அடிச்சுவட்டில் நடக்க பிரயாசப் படுவார்கள் என்றால், அவைகள் உலகத்தின் மேகங்களாலும் கஷ்டங்களாலும் மங்கலாக்கமுடியாத விசுவாசத்தின் மகிழ்ச்சியாக இருக்கிறது. மேலும் அது தேவ சித்தமாக இருக்கிறபடியால், நம்முடைய ஆண்டவர் சிலுவையில் ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்று சத்தமிட்டுக் கூப்பிட்ட அந்த ஒரு வினாடியைத் தவிர, ஆவிக்குரிய விஷயத்தில் ஒன்றிலும் மறைவாகத் தெரியாது. ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட ஆதாமின் இடத்தை எடுத்துக் கொண்டு, பாவியான ஆதாமின் எல்லா அனுபவங்களையும் ருசிபார்க்க வேண்டியிருந்தபடியால், ஒரு வினாடியாயினும் இப்படிப்பட்ட அனுபவங்களுக்குள்ளாகக் கடந்து செல்வது நம்முடைய ஆண்டவருக்குத் தேவையாயிருந்தது. ஆட்டுக்குட்டியானவரைத் பின்பற்றி வருகிற விசுவாசிகளுக்குக் கூட இப்படியான இருண்ட கணப்பொழுது அனுமதிக்கப்படமாட்டாது என்று யாரால் கூற முடியும்? நிச்சயமாக இப்படியான அனுபவம் நீண்ட காலத்துக்கு அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் இப்படியான இருண்ட கணப்பொழுது அனுபவத்தில் ஆண்டவரை விசுவாசித்த ஆத்துமா, கரும்மேகங்கள் விலகி ஆண்டவருடைய பிரசன்னத்தின் வெளிச்சம் பிரகாசித்தவுடன் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அப்பியாசப்படுத்தினபடியால் அபரிமிதமாக ஆசீர்வாதத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்.

அளவிடக்கூடிய இருள் வருவதற்கான ஒரு வித்தியாசமான காரணத்தை கவிஞர் பின் வருமாறு கூறுகிறார்.

"ஓ! பூமியிலிருந்து வருகிற ஒரு மேகம் எழும்பாதிருப்பதாக
உம்மை உம்முடைய ஊழியக்காரரின் கண்களிலிருந்து
மறைக்கும்படியாக!"

முற்றும் அர்ப்பணம் செய்து கொண்ட தேவனுடைய பிள்ளைகளுக்கும் அவர்களுடைய பரலோகப் பிதாவுக்கும், அவர்களுடைய மூத்த சகோதரருக்கும் இடையில் வருகிற மேகங்கள் வழக்கமாக பூமியிலிருந்து வருபவையாகும். இப்படி வருவதற்குக் காரணம் நம்முடைய அன்பு பரத்துக்குரியவைகளில் வைக்கப்படுவதற்குப் பதிலாக பூமியிலுள்ளவைகளின் மேல் ஈர்க்கப்படுவதற்கு அனுமதிப்பதால்தான். வேறு காரணங்களும் உண்டு. அவைகளாவன: அர்ப்பணிப்பின் பிரமாணத்தை அலட்சியப் படுத்துவதின் விளைவாக, ஆண்டவருடைய ஊழியத்தில் நேரத்தை பயன்படுத்தாமல் அசிரத்தையாக இருப்பதும், நம்முடைய சகோதரர்களுக்கென நம்முடைய வாழ்க்கையைக் கொடுப்பதை அல்லது நமக்குத் தருணம் கிடைக்கும் போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்வதை, அலட்சியப்படுத்துவதுமே ஆகும். இப்படிப்பட்ட நேரங்களில் நம்முடைய கண்கள் ஆண்டவரை விட்டும் அவருடைய வழி நடத்துதலைவிட்டும் விலக்கப் படுகின்றன. ஆகவே மேகங்கள் துரிதமாக ஒன்று சேரத் தொடங்குகின்றன. அதிக நேரம் ஆவதற்கு முன்னதாகவே, அவரோடு உள்ள ஐக்கியம்,விசுவாசம், நம்பிக்கை, எதிர்பார்ப்பு என்னும் சூரிய வெளிச்சம் குறிப்பிட்ட அளவு மறைக்கப்படுகிறது. இந்த வேளை ஆத்துமா நோய்வாய்ப்படும், அமைதியிழக்கும் நேரமாகும். ஆண்டவர் கிருபையாக இப்படிப்பட்ட வருத்தத்தை அனுமதிக்கிறார். ஆனால் அவருடைய அனுக்கிரகத்திலிருந்து நம்மைத் துண்டிப்பதில்லை. நம்முடைய வழியைப் பிரகாசிக்கப் பண்ணி வாழ்க்கையின் பாரங்கள் எல்லாம் எளிதுபோன்று தோற்றமளிக்கச் செய்கின்ற அவருடைய பிரசன்னம் என்கிற சூரிய வெளிச்சம் இல்லாவிடில் நம்முடைய நிலைமை எவ்வளவு தனிமையாகவும் திருப்தியற்றதாகவும் இருக்கும் என்பதை நாம் உணரவேண்டும் என்பதற்காகவே அவருடைய முகத்தை நம்மை விட்டு மறைக்கிறார். கவிஞர் மறுபடியும் இப்படியாகக் கூறுகிறார்:

"அவருடைய முகத்தைத் தரிசிப்பதோடு திருப்தியுற்று,
என்னுடைய எல்லாவற்றையும் அவருடைய
சந்தோஷத்திற்கென விட்டேன்

காலங்களிலோ அல்லது இடத்திலோ வரும் மாற்றங்கள்
என்னுடைய மனதில் எந்த மாறுதலையும் உண்டு பண்ண
முடியாது;
அவருடைய அன்பின் உணர்வால் சந்தோஷமாயிருக்கும்போது
ஓர் அரண்மனை விளையாட்டுப்பொருள் போல் தோன்றும்;
சிறைச்சாலைகள் அரண்மனைகளாகும்
இயேசு இன்னும் அங்கே என்னோடு தரித்திருந்தால்.''

''உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறவர்''

''என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர்செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங் களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது.'' (சங் 103:2–5)

நாம் இப்பொழுது குறிப்பிட்ட நோய்களை புது சிருஷ்டிகளுக்கு வரும்படியாக ஆண்டவர் அனுமதித்தாலும் சரியான இருதய நிலையோடு வரும்போது அவர் அவர்களை குணமாக்க ஆயத்தமாக இருக்கிறார். இப்படியான ஆத்தும நோய்க்கு, புது சிருஷ்டியின் நலிந்த நிலைக்கு, பரலோகக் கிருபையின் சிங்காசனத்தை அணுக வேண்டும். அப்பொழுது தேவ அனுக்கிரகத்தினால் ஆவிக்குரிய ஜீவனும் பெலனும் ஆரோக்கியமும் திரும்பி வரலாம். அப்போஸ்தலருடைய புத்திமதி என்ன வெனில், ''நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் துணிவுடன், நம்பிக்கையோடு கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்'' (எபி. 4:16) என்பதாகும். எல்லா புது சிருஷ்டிகளுக்கும் இதே மாதிரியான அனுபவங்கள் உண்டு.இவைகளிலும் தகுந்த முறையில் அப்பியாசம் பெறுபவர்கள் ஆண்டவருக்குள் அவருடைய வல்லமையிலும் சத்துவத்திலும் அதிகதிகமாக வளருவார்கள். அவர்களுடைய தடைகள், பெலவீனங்கள் கூட, உதவிக்காக அவர்கள் கூப்பிடும் அவசியமும், விசுவாசத்தினால் ஆண்டவருடைய புயத்தைப் பிடித்துக் கொள்ளுவதுமே அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் உண்டாகும் வழிகளாகும்; இதன் மூலம் அவர்கள்

பரீட்சைகளிலிருந்தும், சோதனைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள்; அவர்களுடைய ஆவிக்குரிய சிலாக்கியங்களில் அலட்சியமாய் அல்லது அசிரத்தையாய், அல்லது அலைந்தவர்களான போது அவர்களுடைய இருதயங்களிருந்து ஆண்டவர் அவருடைய பிரகாசமான முகத்தைத் திரும்பப் பெறாதிருந்தால் அவர்கள் வளர வேண்டிய விதத்தில் வளர்ந்திருக்க முடியாது; ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்க முடியாது. கிருபையையும், உதவியையும் தேடுவது அவசியம் என்று உணரும் வேளையில், மீட்பரின் பாவ நிவாரண வேலையை மறுபடியும் நினைவு கூறுவது அவனுக்கு அவசியமாகிறது. எப்படியெனில் குமாரனின் புண்ணியத்தினால், கடந்த காலத்து பாவங்களுக்கு மாத்திரமேயன்றி ஆதாமின் பாவத்திற்கும், நாம் முதலாவது பிதாவினிடத்திற்கு வரும் வரை உள்ள நமது சொந்த கறைகளுக்கும் கிறிஸ்துவின் பலி போதுமானதாக இருந்தது; மாத்திரமல்ல, அவருடைய ஒரே பலியினால் எல்லாருக்குமாக வந்த அவருடைய நீதி மனப்பூர்வமாக, விருப்பத்தோடு செய்யப்படாத மனதுக்குரிய, ஒழுக்கத்துக்குரிய, சரீரப்பிரகாரமான நம்முடைய எல்லா கறைகளையும் மூடுகிறது என்ற உணர்வோடு மீட்பரின் நிவாரண கிரியைகளை மறுபடியும் நினைவுகூற வேண்டும். இவ்விதமாக புது சிருஷ்டி கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயத்துக்கு வாங்கப்பட்டான் என்று அவன் செல்லும் குறுகலான பாதையின் பயணத்தின்போது தொடர்ந்து ஞாபகப்படுத்தப்படுகிறான். அவனுடைய அனுபவங்கள், அவனுடைய தோல்விகளும்கூட ஆண்டவருக்கு அருகாமையில், தொடர்ந்து அவனை இழுக்கிறது. இது அவரது கடந்த கால மீட்பின் கிரியையினிமித்தமும் தற்கால உதவி செய்கிற, விடுவிக்கிற அவரின் கிரியையினிமித்தமும் வருகிற மதிப்புயர்வால் நடக்கிறது.

இருந்தபோதிலும், அநேக புது சிருஷ்டிகள், இப்படியான ஆத்தும வியாதிகளை அல்லது நோய்களை சந்திப்பது எப்படியென்று கற்றுக்கொள்ளவில்லை; ஆனால் ‘‘நான் மறுபடியும் தவறிவிட்டேன். என்னுடைய நல்நோக்கங்களை ஆண்டவருக்குச் சுட்டிக்காட்டி ஒரு வெற்றியை அடையும்வரை கிருபையின் சிங்காசனத்தை அடைய முடியாது’’என்று அவர்களுக்குள்ளே சொல்ல முயலுகிறார்கள். இப்படியாக அவர்கள் செய்யவேண்டிய முதல் காரியத்தைத் தள்ளி வைக்கிறார்கள். அவர்களுடைய முந்திய பெலவீனங்களால், அவர்களுடைய மனது தொந்தரவு படுத்தப்பட்டு, அவர்களுடைய சொந்த பலத்தினால் வெற்றியை அடையும்படி முயற்சிக்கும்போது,

அவர்களுடைய சொந்த மாம்சத்தோடும் அல்லது சத்துருவோடும் ''விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைத் போராட'' சரியான நிலையில் இல்லாதிருக்கிறார்கள்; அப்படியென்றால் தோல்வி நிச்சயமாக வரும், அதோடு கூட தொடர்ந்து படிப்படியாக ஆண்டவரைநோக்கிக் கூப்பிடுதலும் நின்று போகும்;மேலும் திவ்விய அனுக்கிரகம் என்ற சூரிய வெளிச்சத்திலிருந்து மறைக்கின்ற மேகங்களுக்கு பணிந்து போகும் நிலையும் வளரும்; இந்த மேகங்கள் அவர்களைப் பொருத்தவரையில் படிப்படியாகத் தவிர்க்க முடியாதது என்று மதிப்பிடத் தோன்றும்.

இதற்கு எதிர் மாறான வழி முறை பின்பற்றப்படல் வேண்டும். வார்த்தையினால் அல்லது செயலினால் அல்லது நடத்தையினால் நடந்த தவறு கண்டுபிடிக்கப்பட்டவுடன், அதனால் இன்னொருவருக்கு ஏற்பட்ட தீமையை முடிந்த அளவுக்குச் சரிசெய்யப்பட்டவுடன் விசுவாசத்தோடு, சந்தேகத்திற்கிடமின்றி கிருபையின் சிங்காசனத்தை அணுக வேண்டும். நமக்கு எதிராக அப்படியொரு சந்தர்ப்பம் வரவேண்டும், நம்மைக் கடுமையாக நியாயந்தீர்க்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார் என்று நாம் நினைக்கக் கூடாது; ஆனால் இன்னொரு பக்கம், நாம் பாவிகளாயிருக்கையில், நம்முடைய மீட்புக்காக வழிசெய்யும் அளவுக்கு அவருடைய நன்மையும் கிருபையும் இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நிச்சயமாகவே, அவர்களுடைய பிள்ளைகளான பின்னர், ஆவியினாலே பிறந்தபின்னர், அவரைத்தேடும்போது, மாம்சத்தின்படியல்லாமல் ஆவியின்படி அவருடைய வழிகளில் நடக்க நம்முடைய சிறப்பான முயற்சிகள் எப்படிப்பட்ட தடையாயிருந்தாலும், இப்படிப்பட்ட நேரங்களில் நாம் ''மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாக'' இருந்தபோதிருந்ததைக் காட்டிலும் இப்போது அவரது அன்பு இன்னும் ஏராளமாயிருக்க வேண்டும். ஒரு நல்ல பூலோகத் தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கு இரங்குவதுபோன்று தேவனும் தனக்குப் பயப்படுகிறவர்களுக்கு இரங்குகிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சிறந்த பூலோக நண்பர்களையும் அவர்களுடைய இரக்கம், அன்பு, மனதுருக்கம் ஆகியவற்றை மனதிற்கொண்டு, இதற்கு இணையாக ஒன்றை வைத்துப் பார்க்கும்போது, தேவனுடைய சிருஷ்டிகளில் மிகச்சிறந்தவர்கள் காட்டும் இரக்கம், அன்பு, மனதுருக்கத்தில் தேவன் அவர்களைக் காட்டிலும் அதிக அன்பும், உண்மையுமுள்ளவராக இருப்பதைக் காணலாம். இப்படியான விசுவாசத்தை, நம்பிக்கையை அவர் வரவேற்கிறார்; அதற்கு வெகுமதியும்

அளிக்கிறார். ஆரம்பத்தில் ஆண்டவரிடம் வரும்படியாக போதுமான அளவு விசுவாசம் பெற்றிருந்த அனைவரும் அவர்கள் விருப்பப்பட்டால், அவரிடத்தில் அனுதினமும் அவர்களுடைய சோதனைகளோடும், கஷ்டங்களோடும், குறைபாடுகளோடும் வருவதற்குப் போதுமான அளவு விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களிடையே மேகங்கள் வர அனுமதிப்பார்களெனில்,தேவனுடைய கிருபையின் சிங்காசனத் தண்டை சமாதானத்திற்காகவும், இழந்து போன உறவை பெற்றுக் கொள்வதற்கும் தேவனுடைய வார்த்தை அளிக்கின்ற அழைப்பை ஏற்க மறுத்தால் இறுதியில் ஆண்டவர் தெரிந்து கொண்டிருக்கிற விஷேச வகுப்பினருக்குள் ஓர் இடத்தைப் பெறுவதற்குத் தகுதியற்றவர் என்று எண்ணப்படுவர். அவரை நேசிக்கவும், அவரை நம்புகிறவர்களுமாகத் ''தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களா யிருக்கும்படி'' பிதாவானவர் விரும்புகிறார். ''விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்,'' ''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.'' (யோவா. 4:23; எபி. 11:6; 1யோவா. 5:4)

வழியிலே கஷ்டங்கள் உண்டுதான், இருந்தபோதிலும் ஆண்டவர் அவருடைய வார்த்தையின் மூலமாகவும் இந்த நோக்கத்திற்காகவே அவர் ''வைத்திருக்கிற'' சரீரமான சபையில் அவயவங்களாயிருக்கிற சகோதரர் மூலமாகத் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குகிறார். (1கொரி. 12:18) உதாரணமாக, நாம் குறிவைத்துச் செல்லும் பாதையில் பிழை எங்கே இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்கும், நம்மை நாமே நியாயப்படுத்திக்கொள்வதற்கும் நம்முடைய கரங்களில் எதையாவது கொண்டு வரும்வரை இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் படியாகக் கிருபையின் சிங்காசனத்தண்டை செல்வதைத் தள்ளிப்போடுவதைப் பார்ப்பதற்கும், அநேக நூற்றாண்டுகளாக தேவன் நமக்குக் கற்பித்துக்கொண்டிருக்கிற பெரிய பாடமான நாம் எல்லோரும் பூரணமற்றவர்கள், நாமாகவே எல்லாக் காரியங்களையும் செய்துவிட முடியாது என்பதை முற்றிலுமாக நாம் உணர்ந்து கொள்ளமுடியாது என்பதைக் காட்டுவதற்கும், இதினிமித்தமாக நம்மை உயர்த்தும் நோக்கத்திற்காக மீட்பர் வர வேண்டியது அவசியமாயிருந்தது என்பதைப் பார்ப்பதற்கும் ஓர் உதவியாக இருக்கிறது. தன்னை நியாயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று செயல்படுபவர் முடியாததொன்றை எத்தணிக்கிறார் என்பதை அவர் எவ்வளவு சீக்கிரம் கற்றுக் கொள்கிறாரோ அவ்வளவுக்கு அது நல்லது. நாம் ஆண்டவரோடு தொடர்பு

கொள்வதெல்லாம் அன்றன்றைய நாள் பிரகாரமாக இருக்க வேண்டும். அர்ப்பணித்துக் கொண்ட விசுவாசியின் இருதயம் மிகவும் இளகியதாயும், தொடர்ந்து ஆண்டவரோடு பேசுகிறதாக, ஐக்கியம் கொள்ளுகிறதாக இருக்கு மென்றால், எந்த விதமான பிரச்சனையாலும் அது எழுந்தவுடன் உடனடியாக கிருபையின் சிங்காசனத்திற்கு செல்லுவது ஓர் ஆசீர்வாதமாக இருப்பதைக் காண்பான். அவன் அந்த நாள் முடியும் வரைக்கூட அப்படியாக காத்திராது செயல்படுவான். ஆனால் கிருபையின் சிங்காசனம் நமக்கு எப்பொழுதும் திறந்திருக்கும் போது, ஒன்றையும் மறுநாளுக்கென்று வைக்கக் கூடாது, அலட்சியமாயிருப்போமென்றால் ஆண்டவருடைய வார்த்தை கற்றுக் கொடுப்பதற்கு மாறான நிலையைக் காட்டுவதாக அமையும்.

சிலர் கடந்து செல்கின்ற அனுபவம் எப்படியிருக்கிறதென்றால், கிருபையின் சிங்காசனத்தண்டை வந்த பின்னர் அவர்கள் தேடுகின்ற பாவமன்னிப்பு, பிதாவோடு ஒப்புரவாகுதல் என்ற ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளுவதில்லை. அவர்களுடைய பிரச்சினை கீழே சொல்லப்பட்டுள்ள மூன்றில் ஒன்றாக இருக்கலாம். (1) அவர்கள் விசுவாசத்தில் குறைவு பட்டிருக்கலாம். தற்காலத்தில் விசுவாசத்திற் கேற்ப ஆண்டவர் கிரியை நடப்பிக்கிறபடியால் விசுவாசம் இல்லாமல் ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது. ''உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது.'' (2) அவர்கள் செய்த பாவத்தை அறிக்கை செய்தாலும், அதை சீராக்கவில்லை; அவர்கள் இன்னொருவருக்கு செய்த தீமைக்கு பதிலாக பரிகாரம் செய்யவில்லை; அவர்களுடைய மீறுதல் ஆண்டவருக்கு எதிராக இருக்கும் பட்சத்தில், அவரிடம் அறிக்கையிட்டு அவருடைய மன்னிப்பைக் கேட்காமல் சமாதானத்திற்காக வேண்டுவது. (3) நாம் கண்டிருக்கிற இப்படியான அனேக முறைகளில், பிரச்சினை என்னவெனில் மன்றாடுகிறவர்கள், ஒருபோதும் சரியான அர்ப்பணிப்பை ஆண்டவருக்குச் செய்ததில்லை. அவர்கள் திவ்விய சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், அனுக்கிரகத்தின் வெளிச்சத்தையும், பொன் விளக்குத்தண்டின் வெளிச்சத்தின் அடையாளமாயிருக்கிற ஆசீர்வாதங்களையும், உண்மையிலேயே இவைகளுக்கு அப்பால் இருந்துகொண்டு, அர்ப்பணிப்புக்கு வெளியே இருந்துகொண்டு தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இராஜரீக ஆசாரியத்துவத்துக்கு வெளியே சாதாரண லேவியர்களாக இம்மட்டும் தற்காலத்துக்குரிய விசேஷ கிருபை அல்லது சிலாக்கியத்தை வீணாகப் பெறுபவர்களாக இருக்கிறார்கள்.

விசுவாசக்குறைச்சலுக்கு சரியான பரிகாரம் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதின் மூலம் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளுவது, அவருடைய கடந்தகால, தற்கால நன்மைகளை நினைப்பது, நாம் நினைப்பதற்கும் கேட்பதற்கும் மேலாகக் கிருபை நிறைந்தவர் என்பதை அறிந்து கொள்வது முதலியன. இரண்டாவது பிரச்சினைக்கு பரிகாரம் உடனடியாக, முழுமையான மன்னிப்பைக் கோருவது, கூடுமானவரை தவறைச் சரி செய்வது அல்லது நஷ்டத்துக்கு ஈடு செய்வது, அதன் பின்பு முழு விசுவாச நம்பிக்கையுடன் கிருபையின் சிங்காசனத்திற்கு திரும்புவது ஆகும். மூன்றாவதாக உள்ள பிரச்சினைக்குப் பரிகாரம் இந்த சுவிசேஷ யுகத்திற்குரிய விசேஷ சிலாக்கியங்களையும், ஒழுங்குகளையும் அனுபவிக்கிறவர்களிடமிருந்து தேவன் கேட்கின்ற முழு அர்ப்பணிப்பைச் செய்வதாகும்.

இன்னொரு வகுப்பினரான அர்ப்பணம் செய்தவர்களுக்கு, ஆனால் ஆவிக்குரிய விதத்தில் வியாதியஸ்தராக இருப்பவர்களுக்குக் கவனிப்பு தேவை. இவர்கள் தெளிவாக விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்டவர்கள், அவர்களுடைய அர்ப்பணிப்பில் உண்மையுள்ளவர்கள், அவர்களுடைய மாம்சத்தை அடக்கி ஆளுவதில் சிறிதளவு அல்லது முன்னேற்றத்தையே காணாதவர்கள் போன்று இருக்கிறார்கள். உண்மையிலேயே சில விஷயங்களில், தேவனுடைய நன்மையிலும் இரக்கத்திலும் அவர்களுக்குள்ள விசுவாசம், பயம் என்ற தடைகளை அகற்றி, அவர்கள் ஆரம்பத்தில் (ஆண்டவரைக் குறித்து குறைவான அறிவு உள்ள வேளையில்) இருந்ததைக் காட்டிலும் அதிகமாக மாம்ச பெலகீனத்தினால் சோதனைக்கு உட்படுத்தியது போன்று தோன்றுகிறது. இவர்களுடைய அனுபவங்கள் மிகவும் கடினமானதாகும், அவர்களுக்கு மாத்திரமல்ல அவர்கள் சந்திக்கின்ற முழு விசுவாச வீட்டாருக்கும் அப்படியாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கையில், தோல்விகள்,மனம் திரும்புதல்கள் ஆகியவைகள் தொடர்ச்சியாக இருப்பதுபோல் காணப்படும்; சில பணசம்பந்தமான முரண்பாடுகள், மற்றவைகள் ஒழுக்க, சமுதாயக் குறைபாடுகள் ஆகும்.

இப்படியான இந்த நிலைமைக்குப் பரிகாரம் என்ன?புது சிருஷ்டி என்னப்படுவது பூலோக காரியங்களில் சுயத்தை வெறுத்து, சுயத்தை பலியாக செலுத்தி மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்போம் என்று சாதாரணமாக உடன்படிக்கை செய்து கொண்டவர்களை மாத்திரம்

உடையதல்ல என்பதை நாம் அவர்களுக்குத் தெளிவாகக் கூறுகிறோம்; ஆனால் விசுவாசத்தினிமித்தம் இந்த உடன்படிக்கையை காக்க மனப்பூர்வமாக விரும்புகிறவர்களையும், இருதயங்களை அறிகிறவரால் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்று எண்ணப்படுபவார்களையும் உடையதாக இந்தப் புது சிருஷ்டி இருக்கிறது. பிரதிஷ்டை செய்து கொண்டவர்கள் எல்லாருக்கும் சரியான முறைமை கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். குமாரனால் விடுதலையாக்கப்பட வேண்டும்; திவ்விய அனுக்கிரகத்துக்கு உரித்தான எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள வாஞ்சையாயிருக்க வேண்டும்; அவர்களுடைய வார்த்தைகள், நடத்தை, சிந்தனைகள் ஆகியவற்றில், சில கட்டுப் பாடுகள், எல்லைகள், அடிமைத்தனம் ஆகியவைகளை உண்டுபண்ணி தன்னிச்சையாக அடிமையாக மாறவேண்டும்; ஆண்டவர் அவர்களுக்கு உதவியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட, அப்போஸ்தலருக்கு அவருடைய வார்த்தையின்படியான, ''என் கிருபை உனக்கு போதும், பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்'' என்பதை ஜெபத்தில் ஆண்டவரிடத்தில் வாஞ்சிக்க வேண்டும். அவர்கள் மீறுதலுக்கு உட்பட்டுவிட்டார்கள் என்று அவர்கள் காண்கிற ஒவ்வொரு நேரமும் அவர்கள் செய்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் செய்வது மாத்திரமல்லாமல், ஆண்டவரிடம் பாவ அறிக்கையும் செய்யவேண்டும்; எதிர்காலத்தில் இன்னும் கவனமாக இருக்க வாக்கு கொடுக்க வேண்டும்; அவர்களுடைய சமீபத்திய தோல்விகள் காட்டிய பலகீனங்களுக்கு இசைவாக அவர்களுடைய சொந்த சுதந்திரங்கள் மேல் உள்ள கட்டுப்பாட்டை இன்னும் அதிகரிக்க வேண்டும்.

இப்படியாக விழித்திருந்து ஜெபிப்பது, நம்முடைய வாழ்வின் செயல்கள் மற்றும் வார்த்தையின் மேல் காவல் வைப்பது, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சித்தத்தின்படி ''எல்லா எண்ணங்களையும் சிறைப் படுத்துவது,'' (2 கொரி. 10:5) ஆகிய இவைகள், அவர்களுடைய இருதயத்தின் நேர்மையை மதித்து தங்களுக்கும், சகோதரருக்கும் உறுதியளிக்கும் வரை நிலைத்திராது; மேலும் வாழ்க்கையில் ஜாக்கிரதையாக நடக்கும் போது, அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்பதை மாத்திரமல்ல, அவரிடமிருந்து கற்றறிந்தவர்கள், அவர்களுடைய பலவீனங்கள் மேல் வெற்றி பெறுவதற்கு அவருடைய உதவியைத் தேடி பயன்படுத்தினார்கள் என்பதையும் எல்லோரும் பகுத்து அறிந்து கொள்ளுவார்கள். இப்படிப்பட்ட சகோதரர்கள் அல்லது

சகோதரிகளுடைய நிலைமை அப்போஸ்தலர் கூறுகிறபடி ''முறையற்று நடக்கிறவர்கள்'' என்ற தலைப்பின் கீழ் வரும்; ஏனெனில் அவர்கள் ஆண்டவருடைய மற்றும் அப்போஸ்தலருடைய முன்மாதிரியைப் பின்பற்றவில்லை. மாம்சத்தில் பலவீனமாயிருந்து ஆண்டவருடைய காரியங்களுக்கு அவகீர்த்தியைக் கொண்டு வருகிறவர்கள், எப்படி சகோதரரால் நடத்தப்பட வேண்டும் என்பதைக் குறித்து ஆண்டவர் கூறுவது என்னவென்பதை இன்னொரு அத்தியாயத்தில் பார்ப்போம்.

இருந்தபோதிலும், இங்கே நாம் குறிப்பிடுவது என்னவென்றால், அவர்கள் தங்களுடைய தவறான வழியிலிருந்து மனந்திரும்பியதற்கு சாட்சி கொடுத்து, சரியான வழியில் இருதயம் செல்ல வாஞ்சித்து, ஆண்டவர்மேல் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் காட்டும் வரையிலும், அவர்கள் சகோதரர்களாக மதிக்கப்பட வேண்டும்– எனினும் அவர்களுடைய மாம்ச பலவீனங்களைக் கட்டுப் படுத்துவதில் அவர்களுடைய இருதயங்களில் கிருபையின் வல்லமையைக் குறித்து வெளிப்படையாக, காணக்கூடிய விதத்தில் காட்டும்வரை அவர்களோடு ஐக்கியம் கொள்வதைத் தடை பண்ண வேண்டியது அவசியமாகிறது. அவர்கள் நீதியின்மேல் கொண்டுள்ள வைராக்கியத்தில் அதிகம் ஊக்கம் உள்ளவர்களாக மாறாமலும், அவர்களுடைய மாம்சம் புதிதாக்கப்பட்ட மனதிற்கு உட்பட்டிருப்பதற்கு போதுமான அளவு சில சாட்சிகளை அளிக்காமலும் இருந்தால், அவர்கள் ஜெயங்கொள்ளுகிற வகுப்பினர் ஆவதற்கு ஒருபோதும் தகுதியுள்ளவர்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கும்படி உற்சாகப் படுத்தப்பட முடியாது; எனினும் ஆண்டவர் அவரை நேசிக்கிறவர்களுக்கும் தங்களுடைய இருதயங்களில் அவருடைய வழிகளை வாஞ்சிப்பவர்களுக்கும் மிகவும் கிருபையுள்ளவர் என்பதை நம்பும்படி, இன்னமும் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

ஆண்டவருடைய பிரதிஷ்டை செய்து கொண்ட ஜனங்களுக்குள் சிலர் நலிந்து, பஞ்ச நிலையில் இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் அவரோடு முழுமையான ஐக்கியம் கொள்ள ஊக்கமாக வாஞ்சிக்கிறார்கள், ஆனால் அதை எப்படி அடைய வேண்டும், பராமரிக்க வேண்டும் என்பதற்குத் தேவையான அறிவில் குறைவுபட்டிருக்கிறார்கள். அவர்கள் வேதாகமத்தை வைத்திருந்தது உண்மைதான்; ஆனால் அவர்களுடைய கவனம் அதிலிருந்து வேறு பக்கம் ஈர்க்கப் பட்டது; அவர்கள் தேவ சிந்தை அல்லது தேவ ஆவியின் பின்னால் ஓடாமல், மனிதர்களின் பாரம்பரியத்திற்கு பின்னால் ஓடவும், போதகர்கள்,

உபதேசியார் போன்றவர்களை அதிகமாக நோக்கவும் கற்றுக் கொண்டார்கள். ஆகவே அதன் நிமித்தமாக சரியான ஆவிக்குரிய போஷாக்கில் குறைவுபட்டார்கள். அதன் விளைவு என்னவென்றால் அவர்கள் பாரம்பரியத்தோடு அதிருப்தி அடைந்து உள்ளார்கள், இருந்தபோதிலும் தங்கள் முழு இருதயத்தோடும் தேவனோடு எப்படி கிட்டிச்சேர்வது என்று அறியாதிருக்கிறார்கள்; ஏனெனில் தேவனுடைய நன்மையையும் கிறிஸ்து இயேசுவின் கிருபையின் ஐசுவரியத்தையும் அறியாதிருக்கிறார்கள்; அதோடுகூட உலகத்திற்குப் படிப்படியாக வரஇருக்கிற இரட்சிப்பின் மேன்மையான திட்டத்தையோ, அல்லது புது சிருஷ்டியாகும்படி சபைக்கு வருகின்ற அழைப்பைக் குறித்தோ அறியாதிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பஞ்ச நிலைமைக்கு எல்லாவற்றிற்கும் முதலாவதாக ''திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால்'' தேவைப்படுகிறது, அதன்பின்பு திவ்விய வெளிப்பாடு என்ற ''பலமான ஆகாரம்'' தேவைப்படுகிறது. அவர்கள் பொதுவாக சபையில் காணப்படுகின்ற வெற்றிடத்தைக் கண்ட பின்னர் தங்களுடைய இருதய பசியில் திருப்திபடுத்தும்படியாக உலகப்பிரகாரமான களியாட்டங்கள் போன்றவைகளைத் தேட முயற்சிக்கிறார்கள்; எனினும் இந்த அருமையானவர்கள் நிந்திக்கப்படவோ ஒதுக்கப்படவோ கூடாது.ஆத்ம திருப்திக்காக பல்வேறு திசைகளில் வீணாக முயற்சி செய்து பார்த்துவிட்டு, அவைகள் ஆவிக்குரியவைகளுக்கு மாறாகக் காணப்படுவதை அறிந்து மறுபடியும் திரும்புகிற இந்த வகுப்பாரில் சிலரை நாம் பார்த்திருக்கிறோம்; ஆனால் ''தற்காலத்திற்குரிய சத்தியத்தை'' பெற்ற பின்னர் ஆச்சரியப்படுகிற விதத்தில் ஆவியின் கிருபைகளிலும் அறிவிலும் மலருவதையும் நாம் கண்டிருக்கிறோம். பலதரப்பட்ட சபைப்பிரிவுகளில் இப்படிப்பட்டோர் அதிகமாக இருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம். தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தைக் கண்டவர்களுக்கு, இருளின் அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்துக்கு வருவதற்கு ஓர் உதவிக்கரம் நீட்டுவதும், ஆவிக்குரிய விஷயத்தில் பட்டினி என்ற நிலையிலிருந்து அபரிமிதமான கிருபைக்குள்ளும், சத்தியத்துக்குள்ளும் கொண்டு வருவதும் அவர்களுக்கு கிடைத்த சிலாக்கியமாயிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்டவர்களை ஆசீர்வதிப்பதில் ஆண்டவரால் உபயோகப்படுத்தப்படுவதற்கு, தேவனுடைய வசனத்தின்படி பரத்திலிருந்து ஞானமும் கிருபையும் பெறுதல் வேண்டும், இவர்கள் அன்புடனும் உண்மையுடனும் தொடர்ந்து பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

பரீட்சார்த்தமான நீதிமானாக்கப்படுதல் பரிசுத்தமாக்கப்படுதலுக்கு முன்னதாக வருகிறது

பரீட்சார்த்தமான நீதிமானாக்கப்படுதலானது, கிறிஸ்து மனிதனின் மீட்பராக மரித்தார் என்றும், இதனிமித்தமாக தேவனோடு ஒப்புரவானதினிமித்தம் உண்டாகும் சில ஆசீர்வாதங்கள் மனுக்குலத்திற்காக சம்பாதிக்கப்பட்டன என்றும் மனதளவில் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கல்ல, ஆனால் அதைவிட மேலாக நீதிமானாக்கப்பட்ட ஒரு விசுவாசியாக ஆவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அர்ப்பணிப்பும் தேவை என்று காட்டுவதை நாம் முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். பாவமானது அதிகமாக குற்றம் நிறைந்ததாயிருக்கிறது (ரோ.7:13) என்ற உண்மையையும், அதிலிருந்து விடுபடுவதற்காக விருப்பமுற்று–அதன் ஆதிக்கத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் விடுபடுவதற்காக விருப்பமுற்று– நீதியாக, நீதியின் பிரமாணங்களை ஏற்றுக்கொண்டு, நீதியுள்ள சிருஷ்டிகரோடு இசைவாயிருப்பது என்ற உண்மையையும் உணர்ந்து கொள்வது என்பதை நீதிமானாக்கப்படுதல் உணர்த்துகிறது. மேலும் அந்த விசுவாசி, அவனுடைய வாழ்வின் எல்லா விஷயங்களிலும் நீதியின் பிரமாணங்களைப் பின்பற்றும்படியாக அவனுடைய மனதை, சித்தத்தை செலுத்தத் தீர்மானித்துவிட்டான் என்பதையும் குறிக்கிறது. இயேசுவின் மேல் வைத்திருக்கிற விசுவாசம், இப்படிப்பட்ட அர்ப்பணிப்போடு கூட வரும்போது, பரீட்சார்த்தமான நீதிமானாக்கப் படுதலைக் கொண்டு வருகிறது, ஆனால் அது பலியைக் குறிப்பதில்லை. தேவனுக்கு அவருடைய சிருஷ்டிகள் எல்லாம் நீதியை அங்கீகரிக்க வேண்டும், அக்கிரமத்தை வெறுக்கவேண்டும் என்ற உரிமையுடன் சொல்ல அதிகாரம் உண்டு; இல்லாவிட்டால் அவர்களை அவருடைய அந்நியர்கள்– அவருடைய சத்துருக்கள் என்று எண்ணவும் அதிகாரமுண்டு. ஆனால் அவருடைய ஊழியத்தினிமித்தமேயன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும் நம்முடைய ஜீவனைப் பலியாக செலுத்த வேண்டும் என்று தேவன் கேட்கவில்லை. ஆகவே பலி செலுத்துவது தன்னிச்சையான ஒரு செயல் என்று வேதம் கூறுகிறது. அப்போஸ்தலர், ‘‘சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை’’

(ரோம. 12:1)என்று அறிக்கையிடுகிறார். ''புத்தியுள்ள ஆராதனையாக'' சொல்லப்பட்டது. ஆனால் அது கட்டளையாக வற்புறுத்தப்படவில்லை.

சிலருக்கு பலி செலுத்தும்படியான அர்ப்பணிப்பு, ஆண்டவர் மேல் விசுவாசம் வைத்து, நீதியின்பாதையில் நடக்கவேண்டும் என்ற வாஞ்சையைப் பெற்றவுடனே தொடர்ந்து வரும். அது முன்னதாக அல்ல, பின்னதாக வர வேண்டும். ஏனென்றால் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி நாம் தேவனோடு எவ்வித தொடர்பும் கொள்வதற்கு முன்னரும் அவரோடு எவ்வித ஐக்கியம் கொண்ட வர்களாக இருந்தாலும், குறைந்தபட்சம் பரீட்சார்த்தமாக அவரால் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்டிருத்தல் வேண்டும். மற்றவர்களுக்கு முழுமையான அர்ப்பணிப்பு என்ற சிந்தை வருவதற்கு முன்னதாகவோ, அல்லது உலகப்பிரகாரமான நன்மைகளை ஆண்டவருக்கும் அவருடைய காரியத்திற்கும் பலியாக செலுத்த வேண்டும் என்ற எண்ணம் வருவதற்கு முன்னதாகவோ, இப்படியான நீதிமானாக்கப்பட்ட நிலை எட்டப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது. ஆனால், தற்போதைய நிலைமையின்படி, நீதிமானாக்கப்பட்ட பாதையில் தேவனோடு இசைந்தவர்களாய் நடக்க ஆரம்பிக்கிறவர்கள், உலகத்திலிருந்தோ, அல்லது சத்துருவினிடத்தி லிருந்தோ, அல்லது அவர்கள் இருக்கும் இடத்திலேயோ எதிர்ப்பை சந்திப்பதற்கு முன்னர் இந்த பாதையில் வெகு தூரம் செல்லமாட்டார்கள்.

நீதியின் பாதையானது படிப்படியாக மேலே ஏறக்கூடிய ஒன்றாகவும், மிகவும் செங்குத்தாகவும், கடினமானதாகவும் இருப்பதை அவர்கள் காண்கிறார்கள். இந்த நீதியின் பாதையில், தற்போதைய பாவ சூழ்நிலையைத் தொடர்ந்துசெல்வது என்பது முழுவதுமாக பூலோக நலன்கள், பூமிக்குரிய ஆசைகள், நட்பு போன்றவைகளை பலியாக செலுத்துகிறதாகும். இந்த இடத்தில் பாதைகளின் பிரிவு வருகிறது. ஒரு பாதையானது மேல் நோக்கி மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் செல்லுகிறது; இந்த பாதைக்குள் தாழ்மை, சுயத்தை வெறுத்தல், பலி செலுத்துதல் என்ற குறுகலான வாசல் வழியாகத்தான் செல்லமுடியும்; உள்ளே நுழைந்த பின், அது கரடு முரடான பாதையாகக் காணப்படும்; இருந்தபோதிலும், கண்ணுக்கு புலப்படாத பணிவிடை ஆவிகள் யாத்திரிகர்களுக்கு உதவி செய்கின்றன; இதில் தலைவரான கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்கள் அவர்களை உற்சாகப்படுத்தும்படியாக அங்கும் இங்குமாக பிரகாசிக்கின்றன; அவைகள் யாத்திரை முடியும் வரை

உதவியையும் போதுமான கிருபையையும் உறுதியளிக்கின்றன. பொறுமையாக இருக்கும்பட்சத்தில் எல்லாக்காரியங்களும் அவர்களுடைய உன்னத நன்மைக்குரியது என்றும், இறுதியில் புது சிருஷ்டியில் அங்கத்தினராவதற்கு ஏதுவாகும் என்றும், ஆயிர வருட அரசாட்சியின் மகிமையான கிரியையில் பங்கு பெறுவதற்கு ஏதுவாகும் என்றும் காண்பிக்கும். இந்த திறப்பின் வாசலில், பலிசெலுத்து வதற்குக்கூட முழு பிரதிஷ்டை என்று பொருள்படும். இதில் பரீட்சார்த்தமாக நீதிமான்களாக்கப்பட்ட அநேக விசுவாசிகள், வேத வசனத்திலிருந்து வருகிற அழைப்பின் குரலுக்கு செவி கொடுத்து, அது கொடுக்கின்ற நல்ல உத்திரவாதங்களால், யாத்திரையை மேற்கொள்ளும் படியாக தங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்திக்கொண்டு உள்ளே நுழைவதற்காகும் கிரயத்தைக் கணக்கிட்டு சிறிது நேரம் நிற்கிறார்கள்.

இந்தத் திறப்பின் வாசலுக்கு வெளியே அநேக சிறு பாதைகள் உண்டு. இவ்வளவு தூரம் இந்த சிறு பாதைகள் மூலம் வந்தவர்கள் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் செல்லும்படியாக எளிதான வழியைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லா வழிகளும் வீணானதாயிருக்கின்றன. இப்படியான நூற்றுக்கணக்கான சிறு பாதைகள் உண்டு. சில கொஞ்சம் செங்குத்தாக சுயத்தை வெறுப்பதைக் குறிக்கும் வகையில் செல்லுகின்றது. மற்றவைகள், விட்டுக்கொடுக்கும்படி, கீழ்நோக்கி அதிகதிகமாக உலகத்தின் ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் நோக்கி வருகிறது. இருப்பினும் இந்தச் சிறிய பாதைகள் ஒன்றிலும் உற்சாகப்படுத்துகின்ற வாக்குத்தத்தங்கள் காணப் படுவதில்லை. தொடர்ந்து வருகின்ற மகிமையில் கிறிஸ்து இயேசுவோடு நெருங்கிய உறவைப் பெறுவதற்காக, உலக ஆசைகளை உதறித்தள்ளி, அவர்களுடைய ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளும்படியாக ‘‘குறுகலான பாதைக்கு’’ வரும் பலி என்னும் தாழ்வான திறப்பின் வாசலுக்குள் பிரவேசிப்பவர்களுக்கு மாத்திரமே இந்த வாக்குத்தத்தங்கள் உரித்தானதாகும்.

ஆண்டவர்மேல் விசுவாசம் வைத்து அவருடைய பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொண்டு, பாவத்தை வெறுத்து நீதியைப் பின்பற்ற உறுதி யெடுக்கும் வினாடியிலிருந்து மகிழ்ச்சியும் சமாதானமும் வரும். நெருக்கமான பாதைக்குச் செல்லும் தாழ்வான திறப்பின் வாசலுக்கு வந்தடையும்போது இந்த மகிழ்ச்சியும் சமாதானமும் முழுமை பெறும்.

ஆனால் நீதியைப் பின்பற்றுதலானது சுயத்தை வெறுத்தல், பலி செலுத்துதல் என்பதோடு சம்பந்தப்படும்போது, இந்த பலி செலுத்தப்படாவிட்டால், தாழ்வான திறப்பின் வாசலுக்குள் பிரவேசிக்கா விட்டால் திவ்விய அனுக்கிரகத்தின் மகிழ்ச்சியும் சமாதானமும் மங்கிவிடும். ஆனால் அவைகள் முற்றிலுமாக திரும்பப் பெறப்படுவதில்லை. இருந்தபோதிலும், நீதிமானாக்கப்பட்ட விசுவாசி நீதியை நேசித்து அதற்கு ஊழியம் செய்யும்படியாக மற்ற பாதைகளைத்தேடி, இன்னமும் தெய்வீக அனுக்கிரகத்தைப் பெரிதாக எண்ணி, ஆனால் தனக்குள்ளாக வைத்துக்கொண்டு, அதற்குள் பிரவேசிக்க அலட்சியப்படுத்தி, மறுக்கின்ற அந்த வேளையின்போது திரும்பப் பெறப்படும். தங்களுடைய எல்லா பலமும் முற்றுமாக அர்ப்பணிக்கப்பட்டது, இனி தாங்கள் செய்யக்கூடியது''புத்தியுள்ள ஆராதனையைத்''தவிர வேறொன்றும் இல்லை என்று எக்காலத்திலும் உணர்ந்து, அது பாவ மன்னிப்பின்போது ஏற்கெனவே பெற்ற திவ்விய அனுக்கிரகங்களுக்குப் பதிலாகத்தான் என்று நியாயப்படுத்து கின்றவர்களுக்கு சம்பூர்ண மகிழ்ச்சியும் சமாதானமும் உரியதாகாது.

அநேகர் இதே சிந்தையோடு நீண்ட வருடங்களாகத் திரிகிறார்கள். அதே வேளையில் மற்றவர்கள் உலகத்தின் வழிகளில் திரிகிறார்கள். தியாகம் என்கிற தாழ்வான வாசலில் பிரவேசிக்காத எவரும் புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக முடியாது. தாழ்வான வாசலுக்கு வழி நடத்துவதற்காக ஆண்டவர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற விசேஷமான சலுகைகளிலிருந்து அவர்களை ஒரு குறிப்பிட்ட காலம் வரை தள்ளி வைப்பதில்லை. இருந்த போதிலும், அதற்குள் பிரவேசிக்கத் தவறிவிடுவது, அவர்கள் ''தேவனுடைய கிருபையை(பாவ மன்னிப்பும், இந்த வாசல் வரை வழி நடத்தப்பட்டதும்) விருதாவாகப் பெற்றோம்'' என்று உண்மையாகவே அறிக்கையிடுவதாகும். ஏனெனில் இந்த நிலைமைக்கு வந்த பின்னர், ''நம்முடைய அழைப்பின் ஒரே நம்பிக்கையை'' எடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள் அல்லது அவர்கள் இதைப் பெற்றுக்கொள்ள அசட்டையாயிருந்து விடுகிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு, ''எல்லாவிதமான விசேஷமான சிலாக்கியங்களையும் நான் உடனடியாக திரும்பப்பெற்றுக் கொள்கிறேன்; உலகத்திலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் நீ என்னுடைய அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்ள அதிக தகுதியானவன் அல்ல; ஆயிரம் வருட யுகத்தின்போது எல்லா மனுக்குலத்திற்கும் நான் கொடுக்க இருக்கின்ற

அதே சிலாக்கியங்களையும், தருணங்களையும் நீ பெறுவாய்; ஆனால் இதைவிட அதிக விசேஷமான சிலாக்கியங்கள், இரக்கங்கள், பராமரிப்பு, கரிசனை போன்றவைகளை இந்த வாழ்க்கையிலோ அல்லது வர இருக்கிற வாழ்க்கையில் முன்னுரிமையோ என்னிடத்திலிருந்து கிடைக்காது'' என்று ஆண்டவர் முறைப்படி கூறலாம். ஆனால் அவர் இதை உடனே செய்வதில்லை; அநேகரிடம் நீண்ட பொறுமையுள்ளவராக இருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையிலுள்ள பெரிதும் விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்கள், உதாரணமாக ''தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது'' என்று நம்மை உறுதிப்படுத்துகிறவைகள், தேவனுடைய அனுக்கிரகத்தைப் பெற்று, பலி என்ற தாழ்வான வாசலுக்கு வழி நடத்தப்பட்டவர் களுக்கும், மேலும் சந்தோஷமாக அதற்குள் பிரவேசித்தவர்களுக்கும் மாத்திரமே பொருந்தும். இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே தன்னைக்காட்டிலும் உன்னதமாக தேவனை நேசிக்கிறார்கள்.'' எல்லாம் அவர்களுடையது, அவர்கள் கிறிஸ்துவினுடையவர்கள், கிறிஸ்து தேவனுடையவர்.'' அவர்கள் கிறிஸ்துவின் பள்ளியில் பிரவேசித்திருக்கிறார்கள். இது அவர்களது இந்த வாழ்க்கையின் எல்லா போதனைகளையும், உற்சாகமான வார்த்தை களையும் ஒழுங்குமுறைகளையும் நீக்கி அவர்களை இராஜ்யத்திற்கென இறுதியில் ஆயத்தப்படுத்தும். இப்படியான பாடங்களும், போதனைகளும், ஆசீர்வாதங்களும் பள்ளியில் பிரவேசிக்க மறுப்பவர்களுக்கும், தங்களுடைய சித்தங்களை மாபெரும் போதகரின் சித்தத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்களுக்கும் உரியதல்ல.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், தேவனுடைய கிருபையை விருதாவாய்ப் பெற்றவர்களுக்கு ஆண்டவரை ஜெபத்தில் நெருங்கக்கூட சரியான காரணம் கிடையாது. ஏனெனில் ஏற்கெனவே பெற்ற ஆசீர்வாதங்களுக்குச் சரியான முறையில் பதில் செய்ய அசிரத்தையாக இருப்பவர் எவரும் ஆண்டவரின் விசேஷித்த பராமரிப்பையும் சிலாக்கியங்களையும் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? ஆண்டவரிடத்திலிருந்து ஞானத்திற்கும், பரீட்சார்த்தமான நீதிமானாக்கப்படுதலுக்கும் ஏற்கெனவே ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிற படியால், ஆண்டவர் அதிகமான இரக்கங்களைக் காட்ட கடமைப்பட்டுள்ளார் என்று அவன் காரணம் காட்டலாமா? மீட்கப்பட்ட மனுக்குலத்தின் மேல் வரும்படியாகக் கொடுக்கப்பட்ட பொதுவான

நன்மையைக்காட்டிலும் மேலாகவும், அதைக்காட்டிலும் அதிகப்படியான ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பதால், அவனுடைய பங்கைக்காட்டிலும் அதிகமாகப் பெற்றுக் கொண்டான் என்று நினைக்கக்கூடாதா? மேலும் தேவனோடு அவருடைய சித்தத்திற்கு இணைந்து அவன் செல்லத் தவறியதால், இதுவரை இவ்வளவு சிலாக்கியம் பெற்றிராதவருக்கு மேற்கொண்டு திவ்விய இரக்கங்களும், நன்மைகளும் அவனைவிட்டுக் கடந்து செல்லும் என்று அவன் எதிர்பார்க்க வேண்டும்; மேலும் அவன் இதே அளவுக்குத் தேவனுடைய கிருபையின் ஈவை அலட்சியம் பண்ணவில்லையா? ஆனால் ஆண்டவர் மிகவும் பரிதாபப்படுகிறவரும், இரக்கம் நிறைந்தவருமாய் இருக்கிறார்; ஆகவே யாரேனும் விசுவாச சுபாவத்தோடு ஆண்டவரில் நிலைத்திருக்கும் வரை, அவர் அவனை முற்றிலுமாக நிராகரிக்கமாட்டார் என்று எதிர்பார்க்கலாம்.

இப்படிப்பட்ட சுபாவ நிலைமையில் காணப்படுகிறவர்கள், முற்றிலும் ஆண்டவருக்குள் முழுமையாக இருந்து, அவருடைய நன்மைகளுக்கு உரிமை பாராட்ட விரும்புகிறவர்களுக்குப் பரிகாரம் எதுவாயிருக்கும்? நாம் சொல்லுவது என்னவெனில் அவர்கள் தங்களை முற்றிலுமாக ஆண்டவருக்கென அர்ப்பணிக்க வேண்டும்; அவர்கள் தங்களுடைய எதிர்ப்பார்ப்புகள், அவர்களுக்கு வரக்கூடிய நன்மைகள், அவர்களுடைய வசதிகள், அவர்களுடைய பூலோக ஆசைகள் என்பவைகளோடு சம்பந்தப்பட்ட அவர்களுடைய சித்தம் எல்லாவற்றையும் ஆண்டவரிடத்தில் அர்ப்பணிக்க வேண்டும்; இதற்குப் பதிலாக அவர்கள் இருக்கும் சட்டத்தின்படியும், எதிர்கால நடவடிக்கைக்கு உண்டான விதியின்படியும், அவருடைய வார்த்தையின் வழி நடத்துதலையும், ஆவியையும், தேவைகள் சந்திக்கப்படுதலையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இவைகள் அவர்களுக்காக கிரியை செய்து, வர இருக்கும் வாழ்க்கைக்கு சம்பந்தமான அதிக மகிமையான பலன்களை மாத்திரமல்லாது, தற்போதுள்ள வாழ்க்கையில் இன்னும் கூடுதலான இருதய ஆசீர்வாதங்களை அளிக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை அவர்கள் எப்படிச் செய்வார்கள்? இது மனப்பூர்வமாய், பயபக்தியோடும், ஜெபத்தோடும் செய்யப்பட வேண்டும் என்று நாம் பதில் கூறுகிறோம்; ஆண்டவரோடு நிச்சயமாக தொடர்பு உண்டாக்கப்படல் வேண்டும்; கூடுமானால் கேட்கக்கூடிய குரலில் செய்யப்பட வேண்டும்; இந்தப் பலியைச் செலுத்துவதற்குத் தேவையான

உதவிகளாகிய தெய்வீக கிருபை, இரக்கம் ஆசீர்வாதம் ஆகியவை மன்றாடி கேட்கப்படல் வேண்டும்.

யாரேனும் தேவனைப்பற்றிய உணர்வடையும்போது, அவருடைய சித்தத்திற்கு இன்னமும் இந்த முழுமையான அர்ப்பணிப்பைச் செய்ய முழு ஆயத்தம் இல்லாமல் இருப்பதுபோன்று உணர்வார்களானால் என்ன செய்யப்பட வேண்டும்? அவர்கள் அந்த விஷயத்தைக்குறித்து ஜெபத்தின் மூலம் ஆண்டவரிடத்தில் சொல்ல வேண்டும்; சத்தியத்தைக் குறித்துப் படிப்பதில் அவருடைய ஆசீர்வாதத்தைக் கேட்க வேண்டும்; அதன்மூலம் முதலாவதாக புத்தியுள்ள ஆராதனையைப் பற்றியும், இரண்டாவதாக வர இருக்கிற ஆசீர்வாதத்தின் நிச்சயத்தைக் குறித்தும், மூன்றாவதாக சுயத்தைப் பலியாக செலுத்திய வகுப்பினருக்குச் சொல்லப்பட்ட, உதவி, பலம் பற்றிய வாக்குத்தத்தங்களைச் காப்பதில் அவருடைய உண்மையைப் பற்றியும் அதிகதிகமாக புரிந்து கொள்ள வேண்டும்; உலகப்பிரகாரமான காரியங்களைச் சரியான முறையில் நிறுக்கவும், மதிப்பிடவும், உதவி செய்யப்படல் வேண்டும் என்றும், மேலும் தற்போதைய வாழ்க்கையில் சுயநலத்தோடு சம்பந்தப்பட்ட காரியங்களும், சுபாவ மனது ஆசைப்படுகின்ற அந்த காரியங்களும் எப்படி நிலையற்றதாக, அதிருப்தி அளிக்கின்றனவாக உள்ளன என்பதை உணரவும், தேவைப்பட்டால் அனுபவத்தில் கொண்டு வரவும் உதவி செய்யவேண்டும் என்று ஆண்டவரிடத்தில் கேட்க வேண்டும். இப்படியாக அவர்களால் ஓர் அர்ப்பணிப்பு செய்ய முடிவதோடு தங்களுடைய அன்பை கீழானவைகளில் அல்ல, மேலானவைகளில் வைக்கும்படியான சிலாக்கியத்தை உயர்வாக நினைக்கவும், கீழானவைகளை மேலானவை களுக்காகப் பலி செலுத்தவும் உதவி செய்யப்படல் வேண்டும் என்றும் கேட்க வேண்டும்.

இங்கே இன்னொரு முக்கியமான காரியம் எழுகிறது: ‘‘பரம அழைப்பு’’ முடிந்துவிட்டதால் இதன்படி பிரதிஷ்டை செய்து கொள்ளுபவர் புதுசிருஷ்டியின் பந்தயப்பொருளையும், அதன் மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் அடையும் ஒரு தருணத்தையும் பெறுவர் என்று முழு நிச்சயத்தோடு கூறமுடியாது. இது பிரதிஷ்டையைக் குறித்து என்ன வித்தியாசத்தை உண்டு பண்ணும்? அது எந்த வித்தியாசத்தையும் உண்டு பண்ணாது என்று நாம் பதில் சொல்லுகிறோம். எப்படியாயினும் ஆண்டவருடைய ஜனங்களுக்கு

அர்ப்பணிப்புதான் புத்தியுள்ள, சரியான பாதையாகும். ஆயிரம் வருட யுகத்தில் வாழ்ந்து ஆசீர்வாதங்களை அனுபவிப்பவர்களிடத்தில் முழு அர்ப்பணிப்பும் கேட்கப்படும். அதற்குக் குறைவானது எதுவும் கேட்கப்பட மாட்டாது. ஏற்கனவே பிரதிஷ்டை செய்தும், பந்தயப்பொருளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடாதவர்கள் சிலரின் இடத்தை எடுத்துக்கொள்ளும்படியாக, உன்னத அழைப்பின் சிலாக்கியங்களுக்காக இன்னமும் சிலர் அனுமதிக்கப்படுவார்கள் என்று ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.பெற்றுக்கொள்ளத்தக்க தாக ஓடாதவர்கள் ஓட்டத்தை விட்டு வெளியே வந்தவர்களாக எண்ணப்படுவார்கள். முதலாவதாக அவர்கள் அர்ப்பணிப்பு, பலி என்பவைகளின் இந்த தாழ்வான வாசலினுள் பிரவேசித்திருக்காவிடில், ஒருவரும் அப்படியான சிலாக்கியங்களுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம்.

தாழ்வான வாசலுக்குள் நுழைந்த எல்லோரையும் குறித்து ஒரு வேளை உண்மையாயிருக்கக் கூடியது என்னவெனில், தேவன் அவருடைய உண்மையான புது சிருஷ்டிகளுக்கென்று வைத்திருக்கிற பெரியதும் ஐசுவரியமுமான ஆசீர்வாதங்களை அவர்கள் தெளிவாகப் பார்க்கவும் இல்லை, முழுவதுமாகப் புரிந்து கொள்ளவும் இல்லை; முதலாவது, அவர்கள் புத்தியுள்ள ஆராதனையைத்தான் பார்த்தார்கள், அதன் பிறகு தேவனுடைய நன்மைகளையும், அவர்களுடைய உன்னத அழைப்பின் சிலாக்கியங்களின் நீளம், அகலம், உயரம், ஆழத்தைக்குறித்து அதிகமாகக் கற்றறிந்தார்கள். ஆகவே இப்போது பிரவேசிப்பவர்களைக் குறித்த காரியம் என்னவெனில்: முழு அர்ப்பணிப்போடு முதலாவதாக தங்கள் புத்தியுள்ள ஆராதனையைச் செய்யும் நிலையை அடையும் வரை அவர்களால் முற்றிலும் பரலோக ஆவிக்குரிய காரியங்களின் மதிப்பை உணர்ந்து கொள்ள முடியாது. பரலோக வகுப்பினர் தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர், ஆண்டவருடைய காரியத்திற்காகத் தங்களை அர்ப்பணித்து அவர்களை ஒரு முழு புத்தியுள்ள ஆராதனையாக்குகிறவர்கள் எவரும், ஆண்டவர் கொடுப்பதற்கென்று வேறு விதமான ஆசீர்வாதங்களை நிறைய வைத்திருக்கிறார் என்பதையும் அவருடைய ஆசீர்வாதங்கள் அனைத்தும் இப்படியாக அர்ப்பணிப்பவர்களுக்கும், தங்களை பலியாக செலுத்துபவர்களுக்கு உரியது என்றும் கண்டு கொள்வார்கள் என்பதையும் நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். ‘‘பரம அழைப்பிற்கு’’ முன்பாக இருந்த பழைய ஏற்பாட்டு விசுவாசிகள், பலி செலுத்தும்

மனதுள்ளவர்களாக இருந்தார்கள், ஆகவே அவர்கள் ஒருவேளை இவர்களோடு கணக்கிடப்படலாம்.

பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்த தவறான கண்ணோட்டங்கள்

திவ்விய திட்டத்தைக்குறித்தும், வேதாகமத்தில் அறிவுறுத்தப்பட்ட நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்தும் கிறிஸ்தவர்களிடையே நிலவுகின்ற பொதுவான குழப்பத்தைக் குறித்தும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஆண்டவருடைய ஜனங்களில் ஒரு சிறு தொகையினர் தங்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய வகையில் கொண்டுள்ள தவறான கருத்து என்னவெனில், அவர்களுடைய பக்தர்கள் வெளியிடும் அறிக்கையில் சில சமயங்களில் உண்மையான பரிசுத்தத்தையும், பூரணத்தையும் அவர்கள் பெற்றவர்கள் மற்றும், ''வருடக்கணக்காக அவர்கள் பாவம் செய்யாதவர்கள்'' என்பது போன்றவைளைக் குறிப்பிடுவதுமாகும். இவர்கள் நம்முடைய ஆண்டவருடைய நாட்களில் காணப்பட்ட பரிசேயருக்கு ஒப்பாக இருக்கிறார்கள். இந்தப் பரிசேயர்கள் தங்களையே நீதியுள்ளவர்கள் என்று நம்பினார்கள், மற்றவர்களை இகழ்ந்தார்கள். அவர்கள் சுயநீதி யுள்ளவர்கள் என்று நினைத்திருந்தபடியால், ஆண்டவர் தன்னுடைய மீட்பின் வேலையில் அவர்களுக்கென வைத்திருந்த சிலாக்கியங்களயும், இரக்கங்களையும் அவர்கள் அசட்டை பண்ணினார்கள்.

இருந்தபோதிலும்''பரிசுத்த ஜனம்,'' ''பாவமில்லாத ஜனம்'' என்று அழைக்கப்படுகிற இவர்கள், இந்தத் தப்பிதத்தால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஆண்டவர் மேல் உள்ள விசுவாசத்திலிருந்தும், அவருடைய மீட்பின் வேலையின் மேலுள்ள விசுவாசத்திலிருந்தும், அவருடைய பலியினால் உண்டான புண்ணியத்தின் மேல் உள்ள நம்பிக்கை போன்றவற்றி லிருந்தும், அவர்களுடைய மனம் விலகியிருக்கிறது. திவ்விய பிரமாணத்தைப் பிழையில்லாமல் கடைப்பிடிக்க அவர்களால் முடியுமென்றால், அவர்கள் ஏன் அவருடைய புண்ணியத்தின் மேல் அல்லது கிருபையின்மேல் சார்ந்திருக்க வேண்டும்? அவர்களுடைய இந்த நிலமைக்குக் காரணம் என்னவெனில், முதலாவது ஆண்டவர்மேல் பயபக்தியில்லாமல் இருப்பதும், இரண்டாவதாக அவர்கள் தங்களைப்பற்றி மிக உயர்வாக நினைப்பதும் ஆகும். ஆண்டவரின்மேல்

வைக்கும் முறையான பயபக்தி, அவருடைய பெருந்தன்மையையும், அவருடைய கெம்பீரத்தையும், அவருடைய பரிசுத்தத்தின் எல்லையையும், அவருடைய குணாதிசயத்தின் பூரணத்தையும் காணும்படி செய்யும்; தங்களைக்குறித்து சரியான விதத்தில் எண்ணும்போது, அவர்கள் வார்த்தையிலும், நடத்தையிலும், சிந்தனையிலும் திவ்விய நியமத்திற்கு மிகவும் குறைவுபட்டுள்ளார்கள் என்பதைத் துரிதமாக அவர்கள் (மற்றவர்களுக்கு உணர்த்துவது போன்று)நம்பும்படி செய்யும்.

இன்னொரு வகுப்பினரான ''பரிசுத்த ஜனம்'' என்று அழைக்கப் படுகிறவர்கள், பாவ மில்லாதவர்கள் என்று தங்களை இந்த விஷயத்தில் மிகவும் கண்டிப்பாகக் கூறிக்கொள்ள மாட்டார்கள்; ஆனால் தாங்கள் பூரணமற்றவர்கள் என்று ஒத்துக்கொண்டு, பாவத்தை தவிர்க்க முயல்கிறோம் என்று கூறி பரிசுத்தம், முழு அர்ப்பணிப்பு போன்றவை களுக்கு உரிமை பாராட்டுவார்கள். உண்மையாக அர்ப்பணிப்பு செய்து கொண்ட எல்லோரும், தங்களால் இயன்றவரை பாவத்தைத் தவிர்க்க முயல வேண்டும் என்ற சிந்தனையோடு நாங்கள் முற்றுமாக ஒத்துப் போகிறோம். நாங்கள் பரிகாசிக்கின்ற அவர்களின் தவறு என்னவெனில், பாவத்தைத் தவிர்ப்பதுதான் தங்களுடைய அர்ப்பணிப்பின் முழு குறிக்கோளும் நோக்கமும் என்று அவர்கள் எண்ணுவதுதான். அவர்கள் இந்த விஷயத்தை முற்றிலுமாகத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள். தேவனுடைய எந்த சிருஷ்டிக்கும் பாவம் செய்யும்படி ஒருபோதும் உரிமை இருந்தது கிடையாது. ஆகவே பாவம் செய்வதிலிருந்து விலகுவது, பாவம் செய்யும் அதிகாரம் அவனுக்கு இல்லாதபோது, அப்படி விலகுவது, எவ்விதத்திலும் ''பலி செலுத்துதல்'' என்று அழைக்கப்படவோ, எண்ணப்படவோ முடியாது. தேவனுடைய வார்த்தை எந்த ஓர் இடத்திலும் பாவங்களை பலி செலுத்தும்படி நம்மை அழைக்க வில்லை. பாவத்தைத் தவிர்க்கும்படியாக இப்படியாக அர்ப்பணிப்பை விட கூடுதலாகச் செல்லாத இந்த அருமையான நண்பர்கள், எல்லோரும் செல்லவேண்டிய தூரம் வரைதான் சென்றுள்ளார்கள். அவர்கள் தங்கள் சுயத்தைத் தியாகம் செய்வது என்ற தாழ்வான வாசலுக்குள் இன்னமும் பிரவேசிக்க வில்லை. அதன் பொருள் என்னவென்றால், முறையானவைகளை, சரியானவை களை, நியாயமானவைகளை விட்டுக்கொடுத்தல், ஆண்டவருக்கும், அவருடைய காரியத்திற்கும் சிறந்த முறையில் ஊழியம் செய்யும்படியாக தானாகவே ஒப்படைத்தல் என்பது ஆகும்.

கிறிஸ்து நமக்கு மீட்பராக்கப்பட்டார்

மீட்பின் வேலையாகிய ஈடுபலி அல்லது சரியான கிரயம் செலுத்தப்பட்டதினால் இரட்சிப்பு என்று பொருள்படும்படியாக மீட்பு என்ற வார்த்தை இங்கே உபயோகப்படுத்தப் படுகிறது. இந்த வார்த்தையில் அடங்கிய சிந்தனை சபையின் வெற்றியின் கடைசிமுனை வரை அதாவது, புது சிருஷ்டியின் முழு பிறப்புநிலை வரை நம்மைக் கொண்டு செல்லுகிறது. உண்மையுள்ளவர்கள் குறுகலான பாதையில் செல்லும்போது வழி முழுவதும், இடையிலும், அவ்வப்போது ஏற்பட்ட விடுதலைகளையும் குறிக்கும்படியாக நம்முடைய பாடத்தில் சொல்லப்படமுடியுமென்றால் அது நிலையான இரட்சிப்பில், மகிமையில், முதலாவது உயிர்த்தெழுதலில் உள்ள அழியாமையில் முடிவடைகிறது.

நம்முடைய ஆண்டவர் செலுத்திய பலி நமக்கு ''நித்திய மீட்பை'' பெற்றுத் தந்திருக்கிறது என்றும், பாவத்தின் அடிமைத்தனத்தினின்றும், அதனால் வரும் தண்டனையாகிய மரணத்திலிருந்தும் நித்திய விடுதலையை முற்றுமுடிய பெற்றுத் தந்திருக்கிறது என்றும் அப்போஸ்தலர் நமக்கு உறுதியாகக் கூறுகிறார். (எபி. 7:25; 9:12) உண்மைதான், இந்த மீட்பு முழு உலகத்திற்கும் உரியது. மேலும் திவ்விய எதிர்பார்ப்புகளுக்கு இசைந்து வருகிற அனைவருக்கும் நம்முடைய ஆண்டவர் இறுதியில் பாவத்திலிருந்தும், அதன் தண்டனையாகிய மரணத்திலிருந்தும் நித்திய மீட்பைப் பெற்றுத்தருவார். ஆனால் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி, இந்த நித்திய மீட்பு எல்லோரையும் சத்தியத்தை அறிகிற அறிவிற்குள் கொண்டு வருவதின் மூலமும், தேவனுடைய இராஜ்யத்தின் ஆதிக்கத்திற்குள் கொண்டு வருவதின் மூலமும், அடுத்த யுகத்தில் எல்லோருக்கும் உரியதாக ஆக்கப்படும். அது தற்காலத்தில் விசுவாச வீட்டாருக்கு மாத்திரம் உரியதாக இருக்கிறது; அவர்களுக்குள்ளும் கூட இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கத்தினர் களாக இருந்து, முழுமையாக சுயத்தைத் தியாகம் செய்து, பிரதான ஆசாரியரின் பாதபடியில் நடப்பவர்களுக்கு மாத்திரமே உரியதாகும். புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக இருக்கும்போது பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் அவர்களுடைய நித்திய மீட்பு, மகிமையினாலும், கனத்தினாலும் அழியாமையினாலும் முடிசூட்டப்பட்டதாக வரும்.

பாவமன்னிப்பாகிய மீட்பு என்று பொருள்படுகின்ற கிரேக்க பதம் Apolutrosis (விடுதலை, இரட்சிப்பு) உபயோகப்படுத்தப்பட்டுள்ள மற்ற சில வசனங்களையும் நாம் ஆராயலாம். நம்முடைய ஆண்டவர் முதலாம் உயிர்த்தெழுதல் மூலமாக அப்போது நமக்குக் கொண்டு வரப்பட இருக்கிற இரட்சிப்பை நமக்கு சுட்டிகாட்டி, காலத்துக்குரிய அடையாளங்களைப் பகுத்தறியக்கூடியவர்களாக, யுகத்தின் இறுதியில் வாழ்கிற சிலரிடத்தில் ''உங்கள் தலைகளை உயர்த்துங்கள், உங்கள் மீட்பு சமீபமாயிருக்கிறது'' (லூக். 21:28) என்று கூறுகிறார். அப்போஸ்தலர் புது சிருஷ்டியின் அதே வகுப்பினரைப் பார்த்துப் பேசும்போது ''நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்'' (எபே. 4:30) என்று உற்சாகப் படுத்துகிறார் (புத்திமதி கூறுகிறார்). இந்த வசனங்களிலும் கூட நம்முடைய ஆண்டவருடைய பலியினால் செய்து முடிக்கப்பட்ட மீட்பின் கிரியையைக்குறித்து நமக்குச் சொல்லப்படாமல், அதன் பலனாகிய முதலாம் உயிர்த்தெழுதலில் அவருடைய சரீரமான சபை பூரணப் படுதலைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. அதே நிருபத்தில் ''இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது'' (1:7) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இங்கு அவர் நம்முடைய ஆண்டவருடைய பலியினிமித்தம் உண்டான புண்ணியத்தின் மூலம் நாம் தற்போதைய காலத்தில் அனுபவிக்கிற ஆசீர்வாதங்களைக் கூறுகிறார் என்பது நமக்குப் புரிகிறது. அவருடைய பலி நம்முடைய கறைகளை மூடி நமக்காக மிகவும் அதிக நித்திய மகிமைக்கென தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும் செய்கையையும் நமக்குள் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நாம் சொல்லவிரும்புவது என்னவென்றால் தற்காலத்தில் கிறிஸ்துவே நமக்கு மீட்பரானார். அவர் கடைசியில் அவருடைய சாயலில் பூரணப்படுத்தி முழு வெற்றியைத் தருவது போன்று இப்போதுள்ள போராட்டங்களில் வெற்றியைத் தருகிறார்.

இந்த சிந்தனை மேலும் இதே அப்போஸ்தலரால் வெளிப்படுத்தப் படுகிறது. (ரோம. 3:24) நாம் இலவசமாய் தேவனுடைய கிருபையினால் கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறோம் என்கிறார். (நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் போது நாம் நீதிமான்களாக்கப்பட்டதைக் காத்துக்கொள்கிறோம் என்கிறார்.) நம்மைப் பொருத்தவரை நாம் அதில் முழுமையடைவோம், நாம் மீட்பின்

(விடுதலையின்) நாளன்று அவரைப்போல் ஆக்கப்படுவோம், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் காண்போம், அவருடைய மகிமையில் பங்கு பெறுவோம். அதே நிருபத்தில் (ரோம. 8:23) அப்போஸ்தலர் மறுபடியும், நம்முடைய மீட்பு அல்லது விடுதலை முற்றுப்பெறுவதையும், தேவனால் குறிக்கப்பட்டுள்ள காலம் வரும்வரை நாம் எப்படி காத்திருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். ''சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது..... தேவனுடைய புத்திரர் (மகிமையடைந்த புது சிருஷ்டி) வெளிப்படுவதற்கு காத்துக்கொண்டிருக்கிறது'' என்பதை நமக்குச் சுட்டிக்காட்டிவிட்டு, அவர் தொடர்ந்து, ''அவர்கள் மாத்திரமல்ல, ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமும்கூட (அழைக்கப்பட்டு புது சிருஷ்டியாக பிறப்பிக்கப்பட்டோம்) நம்முடைய சரீர மீட்பாகிய (விடுதலை) புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளேயே தவிக்கிறோம்.'' நம்முடைய சரீரம்–கிறிஸ்துவின் சரீரமான சபை, இதற்குக் கிறிஸ்து தலையாயிருக்கிறார், நாம் அதன் அங்கத்தினர்களாக ஆகக்கூடியவர்களாக இருக்கிறோம். நம்முடைய மீட்பின் வேலையின் முடிவாக இது இருக்கும். இந்த இடைக்காலத்தில் மீட்பின் மூலமாக அநேக ஆசீர்வாதங்களிலும், சிலாக்கியங்களிலும் நாம் பங்கடைந்தாலும் அந்தக்காலம் வரும் வரை நாம் நம்முடைய மீட்பை முழுமையாக அடைய மாட்டோம். (ரோம. 8:20,21)

நம்முடைய தற்போதைய நிலைமையைக்குறித்து, ஏற்கனவே நமக்கு மீட்பில் இருக்கிற பங்கைக்குறித்து நம்முடைய ஆண்டவர் கூறுகிறார்: ''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு.'' (யோவா. 6:47) அப்போஸ்தலரும் கூறுகிறார்: ''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்.'' (1யோவா. 5:12) இவைகள் இரட்சிப்பைக்குறித்து, திவ்விய திட்டத்தைப்பற்றிய சில உண்மைகள்தான் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது; ஆனால் பாவநிவாரண பலியில் ஒரு விசுவாசமாகவும், பாவத்திற்கு எதிரான நடவடிக்கை யோடு இசைந்துப்போகிறதும், இருதயத்தில் கீழ்ப்படிதலை வெளிப்படுத்துகிறதுமான ஒரு ஜீவனுள்ள விசுவாசமாகவும் புரிந்து கொள்ள வேண்டும். அதுபோன்றே, வேத வசனத்தின் முழு அர்த்தத்தின்படி, விசுவாசிகளுக்கு நித்திய ஜீவன் உண்டு என்றோ, காலக்கட்டத்தில் முதலாம் உயிர்த்தெழுதலில் ஒரு பங்கு அவர்களுடையதாகும் என்றோ பொருள்படிய புரிந்து கொள்ளக்கூடாது. இதற்கு மாறாக பிரதிஷ்டை செய்து கொண்ட விசுவாசிகள் புதிதான

ஜீவனுக்கென பிறப்பிக்கப்படுகிறார்கள், அவர்களுக்குள் புது ஜீவன் ஆரம்பிக்கிறது என்று புரிந்து கொள்ளவேண்டும். அவர்களுடைய விருப்பங்கள், முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்கள் இருக்கப்போகிற புது சிருஷ்டியின் ஆரம்பங்களாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்று புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் நம்பிக்கையினால்– விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டோம் என்று எண்ணப் பட்டோம், ஆனால் முற்றிலுமாக இரட்சிக்கப்படவில்லை என்ற அப்போஸ்தலரின் கூற்றுக்கு முழுவதும் இசைவாக இந்த அறிக்கைகள் இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே தேவன் நமக்குள் தொடங்கிய நற்கிரியைச் செய்து முடிக்கும்வரை பொறுமையோடு காத்திருக்கவேண்டும். இயேசு கிறிஸ்து வெளிப் படும்போது கொண்டு வரப்படுகிற கிருபைக்காகக் (இரட்சிப்புக்காக) காத்திருக்க வேண்டும். ''அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்கள் மகிமைப்படத்தக்கவராய் வருவார்.'' (2தெச.1:9; 1பேது.1:13)

நாம் இப்போது அனுபவிக்கிற மீட்பு (விடுதலை) கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய் இருக்கிறது. அந்த மீட்பு படிப்படியாக நமக்குள் முழுமையாக்கப்படும். நமது சார்பில் நம் ஆண்டவர் செலுத்திய பலியைக்காட்டும் விதத்தில் அது வேதாகமத்தில் எல்லா இடங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய தண்டனையின் கிரயமாக அவருடைய மரணம் உண்டானபோது அவருடைய உயிர்த்தெழுதல் அத்தியாவசமானது; ஏனெனில் ஒரு மரித்த இரட்சகர் மீட்கப்பட்டவர்கள் இழந்தவைகளைத் திருப்பிப் பெற உதவ முடியாது. மேலும் பலியோடு சம்பந்தப்பட்ட நம்முடைய ஆண்டவரின் அனுபவங்கள், அவருடைய இரத்தத்தினால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட, பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியை விடுவிக்கும்படியான பெரிய வேலைக்கு அவரை அதிகம் தகுதிப்படுத்துகிறது என்று நாம் நிச்சயப்படுத்தப்படுகிறோம். அப்போஸ்தலர் கூறும்போது, ''அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்'' என்கிறார். அவர் அவர்களை சோதனை களிலிருந்து தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; இல்லாவிடில் அவைகள் அவர்களை மேற்கொண்டு விடலாம்.''நம் திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத்

தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்கு தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்.'' நாம் தடுமாற அவர் அனுமதிக்கலாம், ஆனால் நாம் அவர்மேல் நம்பிக்கையாக இருக்கும்வரை அவர் நம்மைக் கீழே முற்றிலுமாகத் தள்ளப்படும்படி, இரண்டாம் மரணத்திற்குள் விழும்படி விடமாட்டார். (எபி. 2:18; 1கொரி. 10:13)

நம்மைத் தடுமாற அவர் அனுமதிப்பது, நமக்கு நம்முடைய பெலவீனங்களைக்குறித்து விலையேறப் பெற்ற பாடங்களைக் கற்றுக்கொடுப்பதற்கும், அவரை நம்முடைய மேய்ப்பராகவும், மீட்பராகவும் நோக்கிப்பார்க்கவும், நம்முடைய பெலவீனங்களை உணரவும், அதன்மூலம் ஆண்டவருடைய சத்துவத்தின் வல்லமையிலே பலப்படவும் செய்யும்படியாக, அவருடைய வழியாக சில வேளைகளில் இருக்கலாம். அவர் நம்முடைய பிரதான ஆசாரியராக நமக்கு முன்பாக இருக்கிறார். நம்முடைய சோதனையின் நேரத்தில் உதவி செய்ய வல்லவராயிருக்கும் அந்த வேளையில் நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் விசேஷமாக ''அறியாதவர்களுக்கும் நெறி தப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவராகவும்,'' மேலும் அவர் மூலமாய் பிதாவினிடத்தில் சேருகிறவர்களையும், ஜீவனுள்ள விசுவாசத்தோடு அவரில் நிலைத்திருப்பவர்களையும் – இது தன்னால் இயன்ற கீழ்ப்படிதலைக் குறிக்கிறது– இப்படிப்பட்டவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்று விசேஷமாக அவரைக்குறித்து சொல்லப் பட்டிருக்கிறது. இவ்விதமாக நம்முடைய மீட்பராய், மாத்திரமல்ல படிப்படியாக கல்லறையிலிருந்து உயிர்த்தெழுதலின் மூலம் விடுவிப்பவ ராகவும், நம்முடைய விசுவாசத்தை முடிக்கிறவராகவும் இருக்கிற அவரில் நாம் களிகூற வேண்டும். (எபி. 2:17,18; 4:15,16; 5:2; 7:25,26)

''ஓ! எங்கள் இரட்சிப்பின் தேவனே,
எல்லா பாவங்களிலிருந்தும் மீட்பவரே,
எங்களை ஓர் இடத்திற்கு அழைத்திருக்கிறீர்,
எங்களுடைய சொந்த புண்ணியத்தால் ஒரு போதும் வெல்லலாகாது,
ஓ! நாங்கள் உம்மைத் துதிக்கிறோம்,
நாங்கள் உள்ளே பிரவேசிக்க முயற்சி செய்யும்போது.

“எங்களுடைய இரட்சகரின் பாதபடியில்,
நாங்கள் அனுதினமும் நடக்க முயற்சிப்போம்;
அந்நிய உலகத்தின் எதிர்ப்பு
எங்களை எங்கள் கன்மலையை நோக்கித்தான் அனுப்பும்.
எப்படி கன்மலையின் தண்ணீர்
விடாய்த்துப்போன மந்தையை களைப்பாற செய்கிறது!

“நாங்கள் அவரோடு கூட செய்தியை சுமப்போம்
எங்களுடைய பரலோக பிதாவின் கிருபையைக் குறித்து;
எங்களை எப்படி அடிமைத்தளையிலிருந்து விடுவித்தார் என்று
காண்பிப்போம்
காணாமல்போன, பாழாய்போன எங்கள் மனுக்குலத்திற்கு
ஓ! எவ்வளவு இரக்கம்
அவருடைய மகிமையான முகத்தில் பிரகாசிக்கிறது!”

அத்தியாயம் 4

புது சிருஷ்டி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது

தெரிந்துகொள்ளப்படுதலைப்பற்றி பொதுவான கண்ணோட்டம்– சரியான சிந்தனை – தெரிந்துகொள்ளப்படாதவர்களுக்கு தீங்கு ஏதும் இல்லை – தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும், விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் – மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு – ''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாய் இருக்குமே''– திரள்கூட்டம் – அவர்களுடைய வஸ்திரங்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுக்கப் பட்டது – தெரிந்துகொள்ளப்பட்ட திராட்சை செடியும் அதன் கொடிகளும் – கடந்த காலத்தில் உள்ள பல்வேறுவிதமான தெரிந்துகொள்ளுதல் – இவைகளில் சாகாமைக்குரியது ஏதுமில்லை – ஏசாவும் யாக்கோபும் முன்னடையாளம்–''யாக்கோபு நான் உன்னை நேசித்தேன்'' – ''ஏசாவை நான் வெறுத்தேன் '' – பார்வோன் – இந்த காரணத்திற்காகவே உன்னை நிலை நிறுத்தினேன் – தேவன் ஒருபோதும் சித்தத்தை பலவந்தம் பண்ணுகிறவரல்ல – பார்வோனும் இதற்கு விதிவிலக்கல்ல – ''தேவன் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தினார்'' – இஸ்ரேல் தேசம் தெரிந்து கொள்ளப்பட்டது – ''இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? அது எவ்விதத்திலும் மிகுதியா யிருக்கிறது'' – தெரிந்து கொள்ளப்பட்ட ''புது சிருஷ்டி'' – கிருபையின் முக்கியத்துவம் – ''இராஜாவுக்கு சொந்தமானவர்கள்'' என்பதின் விளக்கம் – அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறிக்கப்பட்டவர்கள் – ''அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் '' – அழைக்கப்பட்டவர் களின் தகுதிகளும் குணாதிசயங்களும்–''தேவன் நம் பட்சத்தில் இருந்தால்''–அப்போஸ்தலரின் விவாதத்தின் சுருக்கம்–

நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் – ஓட்டப்பந்தயம்–நான் இலக்கை நோக்கி தொடர்கிறேன்–''நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதை அறிந்துகொள்ளுதல்.''

தெரிந்துகொள்ளப்படுதல் என்ற உபதேசம் பொதுவாக அநேகர் புரிந்து கொண்ட பிரகாரம் பாரபட்சத்தாலும் அநீதியாலும் நிறைந்த ஏற்றுக் கொள்ளத்தகாத தொன்றாகும். இப்படிப்பட்ட கருத்து ஏற்பட காரணம் இந்த விஷயத்தைக் குறித்து திவ்விய வார்த்தை கூறுவதைத் தவறாகப் புரிந்து கொண்டதேயாகும். வேதாகமம் கற்றுக்கொடுக்கிற தெரிந்துகொள்ளப்படுதலை நாங்கள் இப்போது வெளிப்படுத்த முயற்சி பண்ணுகிறோம். இது வேதாகமத்தில் உள்ள, எல்லாரும் எற்றுக்கொள்ள வேண்டிய உன்னத உபதேசங்களில் ஒன்றாகும்; அது கிருபையின் மேல் மாத்திரமல்ல, சமத்துவத்தின் மேலும் நீதியின் மேலும் முழுவதுமாக பட்சபாதம் இல்லாமல் கட்டப்பட்டுள்ளது. தெரிந்துகொள்ளப்படுதலைக் குறித்த ஒரு தவறான கருத்தை சுருக்கமாகக் கீழ்க்கண்டவாறு சொல்லலாம்: தேவன் மனுக்குலம் முழுவதையும் நித்திய வேதனையின் ஆக்கினைக்குட்படுத்திய பின்னர், ஒரு ''சிறுமந்தையை'' மாத்திரம் இரட்சிக்கத் தெரிந்து கொண்டார்; பின்பு திவ்விய முன்னறிவிப்பின்படி ஏனைய மிஞ்சியிருக்கும் பெரும்பான்மையோரைக் குறித்து அவர்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்னரே தீர்மானித்திருந்தபடி, அவர்கள் கீழ் நோக்கி, சொல்லி முடியாத பயங்கரத்திற்குள் செல்லும்படி அனுமதித்திருந்தார் என்பதாகும். வெஸ்ட் மினிஸ்ட்டர் என்பவரின் பாவஅறிக்கை (Westminister Confession)இந்த தவறான கருத்துக்கு நல்ல எடுத்துக் காட்டாக உள்ளது. அது விசேஷமாக அறிவிப்பது என்னவெனில் ''இந்த தெரிந்துகொள்ளப்பட்ட சிறுமந்தை'' அவர்கள் பட்சத்தில் உள்ள எந்த ஒரு நன்மையினால் உண்டான தகுதியினால் இரட்சிக்கப்பட்டார்கள் என்று எண்ணக்கூடாது, ஆனால் தேவனுடைய உன்னத சித்தத்தினால் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால் தெரிந்துகொள்ளப்படுதலைக் குறித்த சரியான சிந்தனை, வேதாகமம் ஆங்காங்கே அறிவிக்கிறது போல, நாங்கள் காட்டுவது, இதற்கு எதிர்மாறாக உள்ளது. உதாரணமாக நம்முடைய மனுக்குலத்தின் மேல் வந்த தண்டனை மரணமாகும் (நித்திய வேதனையான வாழ்வல்ல).

ஒரே மனிதனின் கீழ்ப்படியாமையினால் மரண தண்டனை எல்லோர் மேலும் வந்தது. தேவனுடைய கிருபை கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பில் வெளிப்பட்டது. ''அது நம்முடைய பாவங்களுக்கு கிருபாதார பலியாக (திருப்திகரமாக) இருந்தது. அது நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக இருந்தது.'' (1யோவா. 2: 2) தேவன், தன்னுடைய ஒரே பேரான குமாரன் மாத்திரமே தன்னுடைய ஜீவனைக் கிரயமாக செலுத்தி மனுக்குலத்தை மீட்கும் சிலாக்கியம் உள்ளவராக இருக்கவேண்டும் என்று அவரைத் தெரிந்து கொண்டார். மேலும் அதற்கு வெகுமதியாக அவரை திவ்விய (தொகுதி 5, அத்தி. 5) சுபாவத்திற்கு மிகவும் உன்னதமான நிலைக்கு உயர்த்தப்படல் வேண்டும் என்றும், இறுதியில் பூமியின் சகல வம்சங்களையும், மரண நித்திரையிலிருந்து எழுப்பி, சத்தியத்தை அறிகிற அறிவிற்குள்ளாகக் கொண்டு வந்து, வாஞ்சையுள்ளவர்களையும் கீழ்ப்படிதல் உள்ளவர்களையும் மனுகுலத்தில் வாழ்வின் பூரணத்திற்கு வர உதவி செய்து, ஏதேன் தோட்டத்தில் உள்ள நிலைமையைக் காட்டிலும், அதிகமான ஆசீர்வாதங்களுக்குள் வர வேண்டும் என அவரைத் தெரிந்து கொண்டார்.

தேவன் தன்னுடைய ஒரே பேரான குமாரனுடன், புது சிருஷ்டியின் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும், மனுக்குலமானது இழந்து போனவைகளைத் திரும்பக் கொடுக்கும் வேலையிலும் அவரோடு உடன் சுதந்திரராக இருக்கும்படியாக அதிகமான ''பரிசுத்தவான்களைத்'' தெரிந்து கொண்டார். இவ்வண்ணமாக, இந்த சுவிசேஷ யுகம் உலகத்தை ஆசீர்வதிப்பதற்கும், இழந்து போனவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதற்கும் உள்ள நோக்கத்திற்காக அல்ல, ஆனால் தேவனால் ''விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்'' என்பவர்களை நியமிக்கும்படி, உலகத்திலிருந்து ஒரு சிறுமந்தையை அழைக்கும் நோக்கத்திற்காகவும், அவர்கள் தங்களுடைய விசுவாசம், அன்பு, கீழ்ப்படிதலைக்குறித்து சோதனைக்குட்படுவதற்கும், பரீட்சிக்கப் படுவதற்கும், இதன்படி அவர்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி மாத்திரமே அப்படிச் செய்தார் (2 பேது. 1:10). ஆனால், இவ்விதமாக சிறுமந்தை அழைக்கப் படுவதும்,தெரிந்து கொள்ளப்படுதலும், தெரிந்துகொள்ளப்படாத வர்களுக்கு எந்தவிதமான கஷ்டத்தையோ, தீமையையோ உண்டு பண்ணுவதற்கல்ல. அவர்களும் அழைக்கப்படாததினால், ஒதுக்கப்

பட்டதினால் மேற்கொண்டு எவ்விதத்திலும் ஆக்கினைக்குட்படுத்தப் படுவதுமில்லை. இது போன்றே அரசாங்க ஆட்சியாளர்களுக்கென தேர்தல் நடத்தப்படும் போது இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தெரிந்தெடுக்கப்படாவிடிலும், அதனால் அவர்களுக்குத் தீமை விளைவிப்பதோ குற்றப்படுத்துவதோ கிடையாது. உலகப்பிரகாரமான தேர்தல் ஜனங்களைப் பொதுவாக ஞானமுள்ள சட்டங்களாலும், நல்ல நிர்வாகத்தாலும் ஆசீர்வதிக்கத் தகுதியான ஜனங்களைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு நடப்பது போன்று தேவன் ஒழுங்கு பண்ணியிருக்கிற ஆசீர்வாதம் தெரிந்து கொள்ளப்படாதவர்களுக்கு எவ்விதத் தீமையும் செய்வதில்லை, ஆனால் அவர்கள் எல்லோருக்குமே ஆசீர்வாதத்தை கொண்டு வரும்படியாக உள்ளது. எப்படியெனில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஆயிரம் வருடயுகத்தின் போது இராஜரீக நியாயாதிபதிகளும்,இராஜக்களும், ஆசாரியர்களுமாயிருப்பார்கள். அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் பூமியின் வம்சங்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

வேதாகமத்தில் ‘‘தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்,’’ ‘‘விசேஷமாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்’’ என்பதைக் குறித்து ஏராளமான குறிப்புகள் உள்ளன. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வார்த்தை யானது தேவனோடு ஒரு குறிப்பிட்ட அளவான உறவுக்குள் வருகிற அனைவருக்கும் பொருந்தும் என விளங்கிக் கொள்ளலாம். அதில் அவர்கள் மகிமையான சபையின் அங்கத்தினர்களாக அழியாமையில் நம்பிக்கை, அல்லது எதிர்கால நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறார்கள். இருந்தபோதிலும் அவர்களும் விழுந்து போவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு, அதன் மூலம் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பினராக இருப்பதும் நின்று விடும். வேறு வகையில் சொல்லப் போனால், புது சிருஷ்டியாகும்படி தேவனுடைய உன்னத அழைப்பை ஏற்றுக்கொண்டு, அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பினரைச் சேர்ந்த அனைவரும், அவர்களுடைய நாமங்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் பதிவு செய்யப்படும் போது, மேலும் ஒரு கிரீடம் அவர்களுக்கென பங்கிடப்படும் போது, தெரிந்து கொள்ளப்பட்டவர்களைச் சேர்ந்தவர்கள் என்று கணக்கிடப்படுகிறார்கள். ஆனால் உண்மையில்லாதிருக்கும் பட்சத்தில் அவர்களுடைய பெயர்கள் கிறுக்கிப்போடப்படவும், அவர்களுடைய கிரீடங்கள் மற்றவர்களுக்கு கொடுக்கப்படவும் ஏதுவாகும். (வெளி. 3:5,11) ஆகவே அப்போது அவர்கள் தெரிந்து

கொள்ளப்பட்ட சபையைச் சேர்ந்தவர்களாக, இருப்பது நின்றுவிடும். இதற்கு மாறாக ''விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்'' என்பவர்கள் இந்த சுவிசேஷ யுகத்தில் உண்மையுள்ளவர்கள் அடையும்படி தேவன் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை இறுதியில் பெற்றுக்கொள்ளுபவர்கள் என பொருள்படும். இவர்கள் மரண பரியந்தம் அங்கு உள்ள நிபந்தனைகளுக்கு உண்மையாய் இருப்பதினால் தங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்துகொள்பவர்கள் ஆவார்கள்.

தங்களுடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தத் தவறுகின்ற இரண்டு வகுப்பினரைக் குறித்து வேதாகமத்தில் இருப்பது நமது கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. இவற்றில் ஒரு வகுப்பினர் அதிகமானோராக இல்லாதிருந்த போதிலும், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவர்களுக்கென வைக்கப்பட்டிருக்கும் வெகுமதிகளை இழப்பது மாத்திரமல்ல, இரண்டாம் மரணத்தில் ஜீவனையே இழந்து விடுவார்கள் என்று நாம் நம்புவதற்குக் காரணம் உண்டு. சபை வகுப்பினரைக் குறித்து விவாதிக்கும் போது அப்போஸ்தலராகிய யோவான் சொல்கிறார்,'' மரணத்துகேதுவான ஒரு பாவமுண்டு. அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்.'' (1 யோ 5:16) மரணத்துக்கு ஏதுவான பாவம் செய்கிறவர்களுக்காக வேண்டுதல் செய்வதோ, நம்பிக்கை கொள்வதோ வீணாயிருக்கும். அந்த பாவம் தேவனுடைய பரிசுத்த ஆவிக்கு விரோதமாக செய்யப்படுகின்ற பாவம் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது; அது திட்டமிடப்படாமலோ அல்லது அறியாமையினாலோ வருகிறதல்ல; ஆனால் ஆரம்பத்திலே அதில் உறுதியாய் நிலைத்திருக்கும்போது, குறைந்த பட்சம் அது தவறு என்று தெளிவாக உணரப்பட்டது, ஆனால் சுயசித்தத்தின்படி நிலைத்திருப்பது காலாகாலத்தில் ஒரு பெரிய வஞ்சகமாய் ஆகிவிட்டது. அவர்கள் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்பட்டபடியால் துணிகரமானவர்களை தேவன் தவற்றுக்குள் விட்டுவிடுவார் (2 தெச. 2:10–12).

அப்போஸ்தலர்களாகிய பேதுருவும் யோவானும் இந்த வகுப்பினரை ஒரே மாதிரி குறிப்பிடுகிறார்கள். (யூதா 11–16; 2 பேது. 2:10–22) இவர்கள் யாவருக்கும் ஒரு நேரத்தில் சபையில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மத்தியில் இடம் இருந்தது. (அவர்களில் எவரும் உலகத்துக்குரியவர்கள் அல்ல. உலகமானது தற்போது

சோதனைக்குள்ளாக அல்லது நியாயத்தீர்ப்பின் கீழாக இல்லை, ஆனால் ஆயிரம் வருட அரசாட்சியில் நியாயத்தீர்ப்பின் கீழாக படிப்படியாக வரும்). இவர்கள் ஆவியின் பிரகாரம் ஆண்டவருடைய அடிச்சுவட்டில், பலியின் பாதையில் நடவாமல் ''தங்கள் இச்சை (ஆசை) களின்படி நடக்கிறவர்களாயிருக்கிறார்கள்; இவர்களுடைய வாய் இறுமாப்பானவை களைப் பேசும்; தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்.'' இவர்கள் தங்களுக்கு சுயலாபத்தைத் தேடுகிறபடியால் மனுஷரைப் பிரியப்படுத்துகிறார்கள்; மரண பரியந்தம் என்று அவர்கள் செய்து கொண்ட அர்ப்பணிப்பிலிருந்து வெகு தூரத்தில் இருக்கிறார்கள். (யூதா 16) பேதுரு இந்த வகுப்பினரைக் குறித்து சொல்லுவது இன்னும் அதிக தெளிவாக இருக்கிறது. அவர்களைக் குறித்து அவர் கூறும்போது அவர்கள் ''கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால்,'' அவர்களுடைய நிலைமை ''நாய் தான் கக்கினதைத்தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது போல இருக்கும்.'' பிலேயாம் நீதியின் வழிகளை விட்டுவிட்டு உலகப்பிரகாரமான ஆதாயத்தைத் தேடியதை அவர்களுக்கு ஒப்பனையாக கூறுகிறார். அவருடைய வார்த்தைகள் குறிப்பாக சொல்வதென்னவெனில் இப்படிப்பட்ட வகுப்பினர் முக்கியமாக இந்த யுகம் முடியும் வேளையில் அதிகபட்சமாக சபையின் போதகர்களுக்குள் காணப்படுவார்கள் என்பதாகும். அப்போது அவர்களுடைய பொல்லாத வழியின்படி, ஆண்டவர் கனப்படுத்தி வைத்திருக்கிற சரீரமான சபையின் மகத்துவங்களை தூஷிப்பார்கள். (2 பேது. 2:1,10)

எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில், விழுந்து போகிற அல்லது தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிராது நின்று விடுகின்ற இந்த வகுப்பினரைக் குறித்து இரண்டு விளக்க உரைகள் உண்டு. முதலாவதில் (எபி 6:4–9) அப்போஸ்தலர் சிலரை சுட்டிக் காட்டுவது போல உள்ளது. அவர்கள் பரம ஈவையும், இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பினரின் அங்கத்தினர்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரும் பாவத்தில் விழுகிறார்கள், அதுவும் தவிர்க்க முடியாத மாம்ச பெலகீனத்தினாலோ, அல்லது சத்துருவின் ஆசை காட்டுதலினாலோ அல்ல, ஆனால் மனப்பூர்வமாக, நன்றாகத் தெரிந்திருந்தும் நீதியை விட்டு

விலகி விழுகிறார்கள். அப்போஸ்தலர், அவர்களை மனந்திரும்புவதற்கேதுவாய் மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் என்று கூறுகிறார். மாபெரும் ஈடு பலியினிமித்தம் வந்த நன்மைகளில் அவர்கள் பங்கு பெற்ற பிறகு, தேவனின் அனுக்கிரகத்தை நிந்திக்கும்படி முடிவு செய்ததால், இவர்கள் மீட்பில் அவர்களுக்குள்ள பங்கை உபயோகப்படுத்தி விட்டார்கள், தவறான முறையில் உபயோகித்துவிட்டார்கள். மேலும் அவர்களுக்கு வேறொன்றும் அங்கு நிலைப்பதில்லை. இப்படியாக அவர்கள் இந்த நிலையை துணிகரமாய் எடுத்துக் கொண்டபடியால் தூய்மைக்காக மன்றாடுவது அவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்காது.

இன்னொரு அத்தியாயத்தில் (எபி.10:26,27,31) அப்போஸ்தலர் இன்னொரு வகுப்பினரைக் குறித்து தெளிவாக சொல்கிறார். இவ்வகுப்பினர் பாவமுள்ள, கனவீனமான வாழ்க்கைப் பாதையில் விழுவதற்குப் பதிலாக, தேவனோடு நீதியுள்ள உறவுமுறையைக் காத்துக் கொள்ள இன்றியமையாததாக இருக்கின்ற, அவர்களை நீதிமான் களாக்கிய விசுவாசத்திலிருந்து விழுந்து விடுகிறார்கள். இந்த இரண்டு வகுப்பினர்களிலும் நாம் பார்க்கக் கூடியது என்னவெனில் தவறு அதிகமாவதற்கான காரணம் துணிகரம் தான். ''சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு (கிறிஸ்துவுக்குள் தேவனால் நாம் அனுக்கிரகம் பெற்று ஞானம், நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் ஆகியவைகளைப் பெற்ற பின்னர்) நாம் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறவர்களாயிருந்தால் பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராது.'' நம் எல்லோருடைய சார்பிலும் கிறிஸ்து செலுத்திய பலி மூல பாவத்திற்கும், ஆதாமினால் வந்த பாவத்திற்கும் ஆதாமின் பிள்ளைகளுக்கு வம்ச முறையினால் வந்த பலவீனத்திற்கும் தான். நம்முடைய பட்சத்தில் துணிகரமாக செய்யப்பட்ட பாவத்திற்கு ஈடான கிரயத்தை நம்முடைய ஆண்டவர் செலுத்தவில்லை; ஆகவே நாம் துணிகரமாக பாவம் செய்வோமென்றால் முதலாவதாக கிடைத்த புண்ணியத்தில் மிஞ்சியுள்ள பகுதி ஏதும் இல்லை. நாம் துணிகரமாக செய்த பாவங்களுக்குரிய தண்டனையை செலுத்தியே ஆகவேண்டும். எவ்விதமான பெலகீனமோ, சோதனையோ இல்லாது பாவங்கள் முழு நோக்கத்துடன், துணிகரமாக செய்யப்பட்டிருந்தால், மேலும் நம்முடைய ஸ்தானத்தைக் குறித்து தெளிவாக அறிந்த பின்னர், ஆண்டவரோடு நாம் கொண்டுள்ள உறவைப் பற்றி தெளிவாக அறிந்த பின்னர் செய்யப்பட்டிருந்தால் அது மரணத்துக்குரிய, இரண்டாம் மரணத்துக்குரிய

பாவமாகும். அதன் பிறகு நம்பிக்கையோடு முன்னோக்கி பார்ப்பதற்கு ஒன்றும் இருக்காது; ஆனால் தேவனுடைய சத்துருக்கள் எல்லோரையும் பட்சித்துப் போடுகின்ற, பட்சிக்கிற கோபாக்கினை, தண்டனை, நியாயத்தீர்ப்பைக் குறித்த பயம் நிறைந்த பார்வைதான் இருக்கும். நல்ல அறிவாற்றலோடு, அவருக்கும், அவருடைய நீதிக்கும், நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் மீட்பின் மூலமாக நீதியைப் பெறுவதற்கான அவருடைய திட்டத்தை எதிர்க்கும் எல்லோரையும் அப்படியாக பட்சித்துப் போடும்.

எபி.10: 29 வது வசனத்தில், அப்போஸ்தலர் நம்முடைய மீட்பரான கிறிஸ்துவின் பாவநிவாரணக் கிரியையைப் பற்றியவைகளைப் புரிந்து கொண்டவர்களைக் குறித்துச் சொல்லுவது போன்று இருக்கிறது. அவர் மேற்கொண்டு கூறுகிறார்: அவர்கள் புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் (அல்லது சாதாரணமானது) என்றெண்ணி கிருபையின் ஆவியை நிந்தித்து, அவர்கள் மீட்பின் கிரியையை ஒன்று மில்லாததாக்குகிறார்கள் – நம்முடைய மீட்பரோடு அவருடைய பலியினாலும், வெகுமதியினாலும் இந்த மீட்பையும் ஐக்கியத்தையும் தந்த தேவனுடைய கிருபையை நிந்திக்கிறார்கள். மோசேயையும் அவர் மத்தியஸ்தம் செய்த நியாயப்பிரமாணத்தையும் நிந்தித்தவர்கள், அவர்கள் மேல் வந்த மரண தண்டனை நித்திய காலத்திற்கு என்று இல்லாதிருந்தும், இரக்கமில்லாமல் மரித்தார்கள். ஆனால் நிழலான மோசேயின் மெய்ப்பொருளை நிந்திக்கிறவர்கள், கிறிஸ்துவின் இரத்தத்தில் அவரோடு ஐக்கியம் கொள்ளும் சிலாக்கியத்தை நிந்திப்பவர்கள், அவர்களுக்கு நன்மையாய் இருக்கும்படியாக இந்த ஒழுங்கை உண்டு பண்ணிய தேவனை நிந்திக்கிறார்கள். இவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையை மீறினவர்கள் மேல் வந்த தண்டனையைக் காட்டிலும் ஒரு கடுமையான தண்டனைக்குத் தகுதியானவர்கள் என்று எண்ணப்படுவார்கள். அது அவ்வளவு கடுமையானதாக, ஒரு மரண தண்டனையாக, இரண்டாம் மரணமாக இருக்கும். இந்த தண்டனையிலிருந்து மீட்பு கிடையாது, உயிர்த்தெழுதல் கிடையாது, மீண்டு வருவதும் கிடையாது. இந்த விதமாக அப்போஸ்தலர் நம்மை எச்சரிப்பதில் ஆச்சரியம் கிடையாது, ஏனெனில் திவ்விய கிருபையின் உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவன் நியமித்திருக்கிற, நமக்காகப் பரிந்து பேசுகிற இயேசுவின் பாதுகாக்கும் பராமரிப்பிலிருந்து வெளியே விழுவது என்பது, வேறு எங்கும் விழுவது அல்ல, பாவத்திற்கு

இடம் தராத, சாக்குப்போக்குகளை ஏற்றுக் கொள்ளாத பிதாவின் கரங்களில் விழுவதாகும். பாவிகளுக்கு அபரிமிதமாக வைத்திருக்கிற இரக்கத்திற்கான ஒரே வழியானது நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மற்றும், அவருடைய மீட்பு ஆகும்.

திரள் கூட்டம்

ஏற்கனவே சொல்லப்பட்டபடி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற நிலையிலிருந்து இரண்டாம் மணரத்திற்குள்ளாக செல்பவர்களைத் தவிர, தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தத் தவறுகிற இன்னொரு வகுப்பினரைக் குறித்து நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இவர்கள் இரண்டாம் மரணத்திற்குள் செல்வதில்லை, ஏனெனில் அவர்கள் துணிகரமாக, அதிக தீய ஒழுக்கத்தில் பாவம் செய்யவோ அல்லது விலையேறப் பெற்ற இரத்தத்தில் உள்ள நன்மையை மறுதலிக்கவோ இல்லை.இந்த வகுப்பினரை நாம் ஏற்கனவே ''திரள் கூட்டம்'' என்று கூறியுள்ளோம். இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனால் ஆவிக்குரிய சுபாவத்தையும், பெரிய ஆசீர்வாதங்களையும் பெற்று விருந்தினர்களாக ஆட்டுக்குட்டியின் கல்யாண விருந்தில் பங்கு பெறுகிறார்கள். ஆனால் ஜெயங்கொள்ளுகிற விசுவாசிகளுக்கு, மகிழ்ச்சியோடும், மனப்பூர்வமாகவும் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருகின்ற, விசேஷமாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மாத்திரமே வருகின்ற வெகுமதியை இழந்து விடுவார்கள். (வெளி. 7) இந்த திரள் கூட்டம் ஆண்டவருக்கென்றும், சத்தியத்திற்கென்றும், சகோதரர்களுக்கென்றும் வைராக்கியம் உடையவர்களாக இல்லாதபடியால், தெரிந்துகொள்ளப்பட்டவர் களுக்குள் தங்களைத் தக்க வைத்துக்கொள்ளத் தவறிவிடுகிறார்கள். ஏனெனில், அவர்கள் ஓர் அளவு ''இந்த உலகத்தின் கவலைகளினால் நிறைந்திருக்கிறார்கள்.'' இருந்தபோதிலும், அவர்களுடைய இருதயங்கள் இரட்சகருக்கு உண்மையாயிருக்கிறபடியால், அவருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தில் அவர்களுடைய விசுவாசத்தை வைத்து, உறுதியாகப் பற்றிக்கொண்டு அதை மறுதலியாமல் இருக்கிறபடியால், மனப்பூர்வமாக செலுத்துகிற பலியின் படிகளின் வழியாக விசேஷமாக தெரிந்து

கொள்ளப்பட்டவர்களை நடத்திச்செல்கின்ற, நம்முடைய இரட்சிப்பின் அதிபதியும், நமக்காகப் பரிந்து பேசுகிறவருமாயிருக்கிற நம்முடைய ஆண்டவராயிருக்கிற இயேசுகிறிஸ்து இவர்களை ஓர் ஆவிக்குரிய ஆசீர்வாதத்துக்குள்ளாக, ஆவியின் ஜீவிகளைக்காட்டிலும் சற்று தாழ்வான பூரணத்துக்கு வழி நடத்துவார். ஏனெனில் அவர்கள் அவரில் நம்பிக்கை வைத்தார்கள். மேலும் அவருடைய நாமத்தையோ, அவருடைய கிரியையோ மறுதலிக்கவில்லை.

நம்முடைய ஆண்டவர் தெரிந்து கொள்ளப்பட்ட சபையை,புது சிருஷ்டியை திராட்சைச் செடியும் கொடிகளும் என்ற உவமையில் குறிப்பிட்டு, அவர் திராட்சைச் செடியென்றும் அவருடைய அடிச்சுவட்டில் நடப்பவர்களைக் கொடிகள் என்றும் குறிப்பிடுகிறார். கொடிகளா யிருப்பதினால் சோதனை, கஷ்டங்களிலிருந்து விதிவிலக்கு இல்லை என்று அவர் நமக்கு தைரிய மூட்டுகிறார். ஆனால் அதற்கு மாறாக பெரிய தோட்டக்காராயிருக்கிற பிதா, நமக்கு விசுவாச பரீட்சைகளும், பொறுமையின் பரீட்சைகளும், பக்தியின் பரீட்சைகளும் வரும்படி பார்த்துக் கொள்வார். நம்முடைய பற்றுதல்கள் உலகத்துக்குரிய காரியங்கள், நம்பிக்கைகள், எதிர்காலத்து ஆசைகள் என்பவைகளைக் குறைவாகப் பிடித்துக்கொள்ளும்படியாகவும், அதனிமித்தம் அதிகமான ஆவியின் கனிகளாகிய சாந்தம், பொறுமை, தயவு, நீடிய பொறுமை, சகோதர அன்பு, அன்பு ஆகியவை வரும்படியாகவும், இவைகள் நமக்குள்ளாக இருக்கவும், அதிகதிகமாகப் பெருகவும் பார்த்துக் கொள்வார். அதினிமித்தம் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்திற்கு புது சிருஷ்டியின் அங்கங்களாக உட்படும் பிரவேசம் நமக்குப் பரிபூரணமாக அளிக்கப்படும். *(2 பேது. 1:11)*

இருந்த போதிலும், அவர் நமக்கு முன்னெச்சரிக்கையாக உண்மையான திராட்சை செடியில், உண்மையான கொடிகளுக்குள் ஓர் இடத்தை அடைவது போதாது. திராட்சை செடியின் ஆவி நமக்குள் இருக்க வேண்டும்; கனிகள் கொடுக்க வேண்டும் என்ற ஆவல் நம்முடைய இருதயங்களில் இருக்க வேண்டும்; நாம் தகுதியற்றவர்கள் என்று தோட்டக்காரர் ஆக்கினைக்குட்படுத்துவதற்கு முன்பு, நாம் சரியானபடி கனி கொடுப்பதற்கான சாட்சியை நாம் காட்டுகிறோமா என்று அவர் அறிந்து கொள்வதற்கு அவர் குறித்த காலம் வரை கொடிகளாகத்

தங்கியிருக்க அனுமதிப்பார். அவர் புதிய கொடியில் முதிர்ந்த கொத்துக்களுக்காகவோ அல்லது பச்சையான திராட்சைக்காகவோ பார்க்கமாட்டார்; ஆனால் கனி கொடுப்பதற்கான சாத்தியம் உண்டா என்று பார்ப்பார். ஆகவே அவர் முதலாவது கனி தருவதற்கான மொட்டு வருவதற்கான அறிகுறி இருக்கிறதா என்றும், அதைத் தொடர்ந்து இவைகள் திராட்சையில் பூக்களாக மலருமா என்றும், அதன் பிறகு பச்சைக்கனிக்கும், இன்னும் அதற்கு பின்னர் அதி மதுரமான கனிகள் உள்ளதா என்றும் பார்ப்பார். ''என் பிதாவின் வலது கரம் நாட்டின'' (சங். 80:15) செடியின் கனிகள் விருத்தியடையப் பண்ணுவதற்கு தோட்டக்காரர், நீடிய பொறுமையுள்ளவராக இருக்கிறார். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அவர் கனியைக் காணாவிடில், வீணாக ''உறிஞ்சுகிறதென்று'' அவர் அந்த கொடியை, எடுத்துப்போட்டு விடுகிறார். ஏனெனில் அது செடியிலிருந்து சத்தையும், ஊட்டத்தையும் தன்னுடைய விருத்திக்காகத்தான் எடுக்கிறதே தவிர தேவைப்படுகிற கனியை விருத்தி செய்வதற்காக அல்ல. இப்படியாக நமது ஆண்டவர் தெளிவாகக் காட்டுகிறார். நாம் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் பரிசுத்தம் என்ற கனியைக் கொடுப்பதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் முடிவு அல்லது பரிசாகக் கிடைப்பது நித்திய ஜீவனாகும்.

கடந்த காலத்தில் உள்ள பல்வேறு தெரிந்துகொள்ளுதல்

வேதாகமத்தில் காணப்படுகிற வேறு சில தெரிந்துகொள்ளப் படுதல் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளை நாம் பார்க்கலாம். இப்படியாக புதிய சிருஷ்டிப்புக்கு என்று நம்முடைய கருத்தைக் கவருகிற முக்கியமான அந்தப் பகுதியை நாம் பார்ப்பதற்கு முன்னர், இந்த விஷயத்தைக் குறித்து நம்முடைய மனது அதிகமாக தெரிந்து கொள்ளட்டும். நம்முடைய ஆண்டவருடைய முதலாவது வருகைக்கு முன்னால் இருந்த தெரிந்து கொள்ளப் படுதலுக்கும் அவர் புது சிருஷ்டியின், தலை, அதிபதி, வழிகாட்டி போன்றவைகளாக இருக்கும்போது, அதன் தெரிந்துகொள்ளப் படுதலுக்கும் இடையில் உள்ளதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பின்னதாக உள்ளதைக்குறித்து, ''நீங்கள் எல்லாரும் ஒரே

நம்பிக்கைக்காக அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்'' என்று சொல்லப் பட்டுள்ளது. ஆனால் அதற்கு முந்தைய காலத்துத் தெரிந்து கொள்ளப்படுதல் அனைத்தும் வித்தியாசமான காரணங்களுக்காக தேவனுடைய வித்தியாசமான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இருந்தன. ஆபிரகாம் யேகோவாவுக்கு மாதிரியாக இருக்கும்படியாகவும், அவனுடைய மனைவி சாராள் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு மாதிரியாக இருக்கவும், அதன் வழியாக மேசியா வரும்படியாக தெரிந்து கொள்ளப்பட்டனர். வேலைக்காரியான ஆகார் நியாயப்பிரமாண உடன்படிக்கைகக்கு ஒரு மாதிரியாக இருக்கும்படியாகவும், அவளுடைய மகன் இஸ்மவேல் மாம்ச இஸ்ரயேலருக்கு மாதிரியாக இருக்கும்படி யாகவும் தெரிந்து கொள்ளப்பட்டனர். இஸ்மவேல் முதலாவது பிறப்பிக்கப்பட்டாலும், வாக்குத்தத்தின் மகனான ஈசாக்கு கிறிஸ்துவுக்கும், ரெபேக்காள், சபைக்கும்– ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டிக்கும், ஆபிரகாமின் வேலைக்காரன் எலியேசர் பரிசுத்த ஆவிக்கும் மாதிரியாக இருக்கும்படியாக தெரிந்து கொள்ளப்பட்டனர். எலியேசருடைய வேலை சபையை வரவேற்கவும், அதற்கு உதவி செய்யவும், இறுதியில் அவளையும் அவளுடைய தோழிகளான கன்னிகைகளையும் ஈசாக்கினிடத்தில் கொண்டு வருவதாக இருக்க வேண்டும்.

இந்த தெரிந்துகொள்ளப்படுதல் இந்த தனிப்பட்ட நபர்களை எவ்விதத்திலும் சம்பந்தப்படுத்தவோ அல்லது அவர்களுடைய நித்தியமான எதிர்காலத்திற்கு உரியதாகவும் கிடையாது. ஆனால் இந்த மாதிரிகள் ஆண்டவரால் உபயோகப்படுத்தப்பட்டதினிமித்தம், ஒரு வேளை தற்போதைய வாழ்க்கையில் ஈடு கொடுக்கும்படியான சில ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கலாம். தெய்வீக திட்டத்தின் நோக்கத்திற்குள் அவர்கள் வந்ததின் அளவின்படி அவர்கள் சௌகரியமும், மகிழ்ச்சியும் அடைய அனுமதிக்கப்பட்டனர். அப்போஸ்தலர் தெரிந்து கொள்ளப்படுதல் என்ற விஷயத்தைக்குறித்துக் கூறும்போது, புறஜாதிகளிடமிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட புது சிருஷ்டியை முற்றுப்பெறச் செய்யும்படியாக தேவன் அவர்களிடத்திற்கு திரும்பியதினால், மாம்ச இஸ்ரயேலருக்கு எந்த அநீதியும் செய்யப் படவில்லை என்று சுட்டிக்காட்ட முயற்சிக்கும்போது தேவனிடத்தில் வழங்கும்படியாக நன்மைகள் உண்டென்றும், அவைகளை யாருக்கு கொடுக்க வேண்டும் என்பது அவருடைய சொந்த விஷயம் என்று

சுட்டிக்காட்டுகிறார். தேவன் மாம்சீக அல்லது ஜென்ம சுபாவமான இஸ்ரயேலுக்கு ஒரு தேசம் என்ற வகையில் சில நன்மைகளையும் சிலாக்கியங்களையும், அவர்களுடைய முற்பிதாக்களில் சில தனிப்பட்ட நபர்களுக்கு சிலாக்கியங்களையும், நன்மைகளையும் அளித்தார் என்றும், அவர்களை ''மாதிரிகளாக'' (முன்னடையாளங்களாக) உபயோகித்தார் என்றும், அதினிமித்தம் அவர்களுக்குரிய ஆசீர்வாதம் அவர்களுக்குக் கிடைத்தது என்றும், ஆனால் ஆண்டவர் எப்படியாயினும் சிறப்பான ஆசீர்வாதங்களைத் தொடர்ந்து கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றோ, அவர்களை விட குறைவான தகுதியுள்ளவர்களைப் பாராமல் விட்டுவிடுவார் என்றோ செல்ல முடியாது என்றும் சுட்டிக் காட்டுகிறார். இதற்கு மாறாக, அவருடைய கிருபைகளை உபயோகப்படுத்தாத வர்களுக்கு அவைகளை நிறுத்திவிடுவதும், மற்றவர்களுக்கு அவைகளைக் கொடுப்பதும் ஆண்டவருக்கு முற்றிலும் சரியானதே. (ரோமர் 9,10,11 அதிகாரங்கள்.)

மேலும் அப்போஸ்தலர், மாம்சீக இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட அவருடைய நன்மைகள் என்ன விளைவுகளை உண்டு பண்ணும் என்பதைக் கர்த்தர் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்பதை நாம் பார்க்க வேண்டும் என்கிறார். எதையெனில் அவருடைய ஆசீர்வாதங்களை அவர்கள் அனுபவித்த பின்னர் (குறைந்த அளவு மீதியானவர்களைத் தவிர – ரோம். 9:27–32), புது சிருஷ்டியை அமைக்கும்படியாக, அவர் கொடுக்க இருந்த ஆசீர்வாதங்களில் பெரிதாயிருக்கிற ''பரம அழைப்பு என்ற வெகுமதியை'' பெற்றுக்கொள்ளும்படியாக தகுதியான முறையில் இருக்க மாட்டார்கள் என்பதையே. இதை விபரமாகக் காட்டும்படியாக ஈசாக்கின் இரண்டு புத்திரரைக் கவனத்தில் கொண்டு வந்து, நூற்றுக்கணக்கான வருஷங்களுக்குப் பின்னர் என்ன நிலைமை இருக்கும் என்பதை தேவன் அறிந்திருந்தார் என்பதை நமக்கு விளக்கிக்காட்டும்படியாக, தேவன் ரெபேக்காளின் இரண்டு புத்திரர்களான யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் இடையில் தன்னிச்சையான தெரிந்தெடுத்தலை உண்டு பண்ணினார் என்று காட்டுகிறார். ஆண்டவர் இந்த இரட்டையரை ''மாதிரிகளாக்கினார்.'' ஒருவன் அவருடைய உண்மையானவர்களான புது சிருஷ்டியைக் குறிக்கும்படியாகவும், இன்னொருவன் ஜென்மசுபாவ இஸ்ரயேலரை (இவர்கள் இந்த வாழ்க்கையின் காரியங்களை விரும்புகிறவர்கள், பரலோக ஆசீர்வாதங்களை ஒரு பானை கூழுக்காக, பூலோக நன்மை களுக்காக விற்றுப்போடுகிறவர்கள்) குறிக்கும்படியாகவும்

இருக்கிறார்கள். யாக்கோபு, ஏசாவின் விஷயத்தில், யாக்கோபுக்கு ஓர் அளவிற்கு கிரயம் செலுத்த வேண்டியதாயிருந்தாலும், அவன் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஒரு மாதிரியாக இருக்கும்படியாக தெரிந்தெடுக்கப்பட்டது நிச்சயமாகவே அவனுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருந்தது. ஆனால் பரலோக காரியங்களுக்குப் பதிலாக பூலோக காரியங்களை விரும்புகிற ஜென்ம சுபாவ மனதுள்ள வகுப்பினருக்கு ''மாதிரியாக'' ஏசா தெரிந்தெடுக்கப்பட்டதினால் அவனுக்கு எந்த விதத்திலும் தீமை விளைவிக்கவில்லை. அதனால் அவன் நித்திய சித்திரவதைக்குள் செல்லவேண்டும் என்றோ, அதன் விளைவாக தற்போதைய வாழ்க்கையில் பாடு அனுபவிக்க வேண்டும் என்றோ கிடையாது. இதற்கு மாறாக, அவன் உலகப்பிரகாரமாகவும் ஆசீர்வதிக்கப்பட்டான். ஜென்ம சுபாவ மனிதர்களுக்கு, இன்றைக்கு ஒரு விதமான ஆசீர்வாதங்கள் உண்டு. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட புது சிருஷ்டிகளுக்கு அவர்களுடைய ஆவிக்குரிய காரியங்களுக்கு நன்மை தராது என்று ஆண்டவர், இந்த ஆசீர்வாதங்களைக் கிருபையாய் கொடாமல் வைத்துக்கொள்கிறார். இதே போன்று, யாக்கோபுக்கு, அவனுடைய ஏமாற்றங்களில் , சில பூலோக நன்மைகளை கொடுக்காமல் வைத்துக் கொண்டார். இந்த வகுப்பினருக்கு மாதிரியாக இருக்கும்படியாக தற்போது புது சிருஷ்டிகள், சோதனைகள் ஏமாற்றங்கள் மத்தியில், ஜென்ம சுபாவமுள்ள மனிதன் அறியாத, சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பது போன்று, யாக்கோபும் ஏசா அனுபவியாத, மெச்சியிராத மகிழ்ச்சியையும், ஆசீர்வாதங்களையும் அனுபவித்தான்.

''யாக்கோபை சினேகித்து, ஏசாவை வெறுத்தேன்'' (ரோம. 9:13) என்ற அறிக்கை அநேகருக்கு ஒரு கடின வாக்காக இருக்கிறது. ஏனெனில் ஏசா மற்ற மனிதரைக் காட்டிலும் பொல்லாப்பானதை செய்தான் என்று சொல்லப்படவில்லை. நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலும் இருக்கையில், இது பிறப்பிலிருந்து வந்ததாயிருக்கிறது. மாம்சீக சிந்தையைப்பொருத்த வரை ''வெறுத்தேன்'' என்ற வார்த்தை தன்னோடு ஒரு பகையைக் கொண்டு வருகிறபடியால், அநீதியாக இருக்கும். உபா.21:15–17 ல் உள்ளபடி ''வெறுத்தேன்'' என்ற வார்த்தை ''அன்பின்மையைக்'' குறிக்கிறது என்பது தெளிவாகிறது. இதில் உள்ள சிந்தனை என்னவென்றால் யாக்கோபு தேவனிடத்தில் நன்மை பெற்றான், ஏசா குறைவாகப் பெற்றான் என்பதாகும். இவர்கள் இரண்டு பேரும்

அப்போஸ்தலர் காட்டுகிறபடி மாம்சீக இஸ்ரயேலுக்கும், ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கும் ''மாதிரிகள்'' ஆவார்கள். ஏசாவினால் அடையாளமாகக் காட்டப்பட்ட மாம்சீக இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய நன்மை, ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்டதைவிடக் குறைவாக இருந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேல் பின்னால் பிறந்த யாக்கோபினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சிந்தனையோடு எல்லாம் இசைவாகவும் ஒத்துப்போகிறதாகவும் இருக்கின்றன.

''இந்த காரணத்திற்காகவே உன்னை நிலை நிறுத்தினேன்''

மனுக்குலத்தின் விவகாரங்கள்மேல் கர்த்தர் எப்பொழுதும் இராஜரீக அதிகாரத்தை அப்பியாசப்படுத்தினார். அதற்கு அவருக்கு முழு உரிமை உண்டு என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டு, அப்போஸ்தலர் அதற்கு ஆதாரமாக, இஸ்ரேல் விடுதலை பெற்ற காலத்தின்போது எகிப்தின் இராஜாவாக இருந்த பார்வோனின் காரியத்தைக் காட்டுகிறார். மோசேயின் மூலம் வந்த தேவனின் வார்த்தையைக் குறிப்பிடுகிறார் (யாத்.9:16): ''என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும் என் நாமம் பூமியெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலை நிறுத்தினேன்.'' ''ஆதலால் எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக் கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்.'' (ரோம.9 : 17,18)

ஃபிரான்ஸ் நாட்டு அரசாங்கம் வெகு காலத்திற்கு முன்பு கோர்ட்டின் மூலம் மரண தண்டனை விதிக்கப் பெற்றிருந்த அநேக சிறைக் கைதிகளைத் தனியாகப் பிரித்தெடுத்து, மனுக்குலத்தை பயம் எப்படி பாதிக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கும்படி அவர்களை பரிசோதனைக்குட்படுத்தும்படி அவர்களை விஞ்ஞானிகளின் கரத்தில் ஒப்படைத்தது. அதில் ஒருவன் ஒரு சிறை அறையில் வைக்கப்பட்டான். அவனிடம் அப்பொழுது, முந்திய இரவில் ஒருவன் அந்த அறையில் பெரிய அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு இறந்து போனான், அநேகமாக இவனும் அதே நோயினால் பீடிக்கப்பட்டு அடுத்த நாள் காலை விடியுமுன் மரித்து விடுவான் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த சிறை அறையில் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு எந்த மனிதனும் இறந்ததில்லை. என்ற போதிலும், முன்னால் சொல்லப்பட்டது உண்மையாயிற்று. இன்னொரு

கைதியின் கண்கள் கட்டப்பட்டன; அவனுடைய புஜம் ஒரு தகர ஒட்டைக்குள் நுழைக்கப்பட்டது; புஜத்திலுள்ள ஒரு இரத்த குழாயில் உள்ள சிறு புண்ணிலிருந்து இரத்தம் வடியும் போது எவ்வளவு நேரத்தில் அது மரணத்தை விளைவிக்கும் என்பதைக் கண்டுபிடித்து விஞ்ஞானத்திற்கு உதவும் வகையில் அவன் இரத்தம் சொட்டி மரிக்கப்போகிறான் என்று அவனுக்குச் சொல்லப்பட்டது. அவனுக்கு ஒரு சிறு கீறல் மட்டும் ஏற்படுத்தப்பட்டது, அதினிமித்தம் அவன் சில சொட்டு இரத்தத்தை மாத்திரம் இழந்தான். ஆனால் அவனுடைய புஜத்திலிருந்து இரத்தம் போன்ற வெந்நீர் ஓடி விரல்களில் வழியாக ஓடி தெறித்து ஒரு பாத்திரத்தில் விழும்படியாகவும், அவன் அந்த சத்தத்தைக் கேட்கும்படியாகவும், ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது. அவன் ஒரு சில மணி நேரத்திற்குள்ளாகவே மரித்து விட்டான். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிற எந்த பிரஜையையும் இப்படி நடத்துவதை எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால் ஏற்கனவே சட்டபூர்வமாக ஜீவன் பறிக்கப்பட்ட மனிதர்களுக்கு இந்த விதமான முறைகளைக் கையாளும் போது யாரும் சாதாரணமாக குற்றம் சொல்ல மாட்டார்கள். இதே விதமாகத்தான் ஆண்டவர் மனுக்குலத்தோடு தொடர்பு கொள்வதும் இருக்கிறது. மனிதன் தேவனுக்கு தொடர்ந்து கீழ்ப்படிந்திருப் பானென்றால் அவன் மரண ஆக்கினையிலிருந்து விடுபட்டவனாக தொடர்ந்து இருந்திருப்பான். அப்படிப்பட்டவர்களுக்கு, இப்பொழுது அவனிடம் இல்லாத சில உரிமைகள் தேவ பிரமாணத்தின்படி இருந்திருக்கும். ஓர் இனமாக நாம் எல்லாரும் பாவம் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது. (ரோ 5:12) அவர் தெரிந்தெடுத்துக் கொண்டபடி ஆண்டவர் அவருடைய ஞானத்தையும் வல்லமையையும் பாவம் செய்தவர்களில் சிலர் மேல் ஒரு வகையிலும், இன்னொருவர் மேல் இன்னொரு வகையிலும் காட்ட பிரியமுள்ளவராயிருந்தார்; ஏத்தியர், அமலேக்கியர், கானானியர் ஆகியோரை இஸ்ரயேலர் அழிக்கும்படியாகக் கட்டளைப் பெற்ற விஷயத்திலும் இப்படியாகத்தான் இருந்தது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இஸ்ரயேலர், வரும் யுகத்தில் ஆண்டவருக்கு உண்மையாயிருப்பவர்களுக்கு அடையாளமாகவும், இஸ்ரயேலருடைய சத்துருக்கள், வரும் யுகத்தில் நீதிக்கு எதிரான சத்துருக்கள், மற்றும் துணிகரமான பாவம் செய்பவர்களுக்கு அடை யாளமாகவும் இருக்கிறார்கள். சோதோம், எரிகோ அழிக்கப்பட்டதிலும், வாதைகளினால் ஆயிரக்கணக்கான இஸ்ரயேலர்கள் அழிக்கப்பட்டதிலும்,

உடன்படிக்கை பெட்டியின் பரிசுத்தத்தையும், அதைக்குறித்த ஆண்டவருடைய கட்டளையையும் மீறி அதை நிலைப் படுத்தும் நோக்குடன் மாத்திரமே கரங்களை நீட்டிய ஊசா அடிக்கப்பட்ட விதத்திலும் இதே செயல்முறையே கைக்கொள்ளப்பட்டிருப்பது விளக்கப்பட்டிருப்பதை நாம் கவனித்திருக்கிறோம்.

பார்வோனையும், எகிப்தியருக்கு வந்த பல்வேறு கொள்ளை நோய்களையும்,மேலும் மனிதனின், மற்றும் மிருகங்களின் தலைச்சன்கள் சங்காரம் பண்ணப்பட்டதையும், கடைசியில் எகிப்தியரின் சேனைகள் சிவந்த சமுத்திரத்திலே மூழ்கடிக்கப்பட்டதையும் ஆண்டவர் உதாரணமாகக் காட்டியிருப்பது இவைகளோடு ஒத்திருக்கிறது. எகிப்தியர் மனுக்குலத்தின் ஒரு பகுதியினராக, மரண தண்டனைக்கு உரியவர்களாக இருந்தார்கள்; அவர்கள் தேவனுடைய பெருந்தன்மையையும் அவருடைய ஜனமாயிருந்த இஸ்ரயேலர்கள் விடுதலையானதில் காட்டப்பட்ட அவருடைய வல்லமையையும் அறிவிக்கும்படியாக, எகிப்தியர் எவ்வித அநீதியும் இல்லாது, சரியான முறையில் சந்திக்கப்பட வேண்டியதற்கு உதாரணமாயிருந்தது. பாவிகளில் சிலரான மோசே, ஆபிரகாம், இன்னும் மற்றவர்கள் மூலம், வருங்காலத்தில் தான் செய்து முடிக்க இருக்கிற நல்ல காரியங்களுக்கு மாதிரிகளாயிருக்கும்படிக்கு தேவன் இவர்களுக்கு அபரிமிதமான அனுக்கிரகங்களைக் காட்டினார்; ஆனலும் ஆபிரகாம், மோசே, பார்வோன், ஏனையோரை அவர்களுடைய மரண தண்டனையின் பங்கிலிருந்து விடுவிக்காமல், நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் மீட்பின் வேலையில் அது செய்து முடிக்கப்படும்படியாக விட்டு வைத்தார்.

அந்தஸ்தில் மிகவும் உயர்வான அதிகாரத்தை தேவன் தன்னுடைய குற்றம் சாட்டப்பட்ட சிருஷ்டிகளிடையே உபயோகித்தார் என்பதையும், ஒருவருக்கு ஒருவிதமான அனுபவம், இன்னொருவருக்கு இன்னொரு விதமான அனுபவம் என்று அவர் நியமித்ததையும், அப்போஸ்தலர் காட்டுகிறபடி, இவைகள் எல்லாம் இந்த சுவிசேஷ யுகத்தின்போது புது சிருஷ்டியின் மாபெரும் தெரிந்து கொள்ளப்படுதலுக்கு உரியதான ஆயத்த மற்றும் விளக்கமான பாடங்கள் என்பதைத் தெளிவாகப் பார்த்த பின்னர், எந்த ஒரு தெரிந்துகொள்ளப்படுதலும் எப்பொழுதாகிலும் தேவன் மனித சித்தத்தை பலவந்தப்படுத்தினார் அல்லது மீறினார் என்று காண முடியாது. எந்த வேளையிலும் மனித சித்தத்தை பலவந்தப்படுத்துவதென்பது திவ்ய

திட்டத்திற்கு மாறானது என்பது நம்மை திருப்திப்படுத்தும். ஆபிரகாம், ஈசாக்கு,யாக்கோபு, மோசே போன்றவர்களை மாதிரிகளாகவும், அடையாளங்களாகவும் தெரிந்துகொண்டது, தேவன் அவருடைய திட்டங்கள், வெளிப்பாடுகளோடு ஒத்துப் போகின்ற மனதுடைய மனிதர்களைத் தெரிந்துகொண்டார் என்றும், அவர்கள் வேறுவிதமான மனதுடையவர்களாய் இருந்திருந்தாலும் அவர்களைக் கட்டுப்படுத்த பலம் உபயோகப்படுத்தப் படவில்லை என்பதையும் தெளிவாக்குகிறது. அது போன்று இஸ்மவேல், ஏசா, கானானியர், சோதோமியர்கள், எகிப்தியர் போன்ற மனிதர்களைத் தெரிந்து கொண்டது எதிர் மாறான இடத்தையும், கருத்துகளையும் விளக்குவதற்காக ஆகும். மறுபடியும் ஆண்டவர் தங்கள் சுபாவத்தோடு ஒத்துப்போகின்ற மனிதர்களைத் தெரிந்து கொண்டார். நாம் அழுத்தமாகச் சொல்ல விரும்புவது என்னவெனில் தேவன், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே போன்றவர்களின் சித்தத்தை பலவந்தப்படுத்தாதது போல, பொல்லாப்பு செய்து, அவைகளினால் சில பொல்லாத கருத்துக்களை விளக்கப் பயன் படுத்தியவர்களின் சித்தத்தையும் பலவந்தப்படுத்தவில்லை என்பதாகும். ஆண்டவர் குறிப்பிட்ட வகுப்பினரின் சொந்த மன நிலைப்படியே செயல்பட்டார்.

இக்காரணத்திற்காகவே அவர் பார்வோனை நிலை நாட்டினார் என்று அறிவித்ததினாலே, தேவன் பார்வோனுக்குள் மோசமான குணாதிசயத்தை உண்டுபண்ணினார் என்றும், அவர் மோசமான குணாதிசயம் உள்ளவராக கட்டாயப்படுத்தி நிலை நாட்டினார் என்றும் நாம் தேவனைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. அந்த ஜனங்களின் வழக்கத்தின்படி, எகிப்தின் சிங்காசனத்திற்கு வரக்கூடிய பல்வேறு வாரிசுகளின் மத்தியில், இடைக்காலத்தில் சில அரச குடும்பத்தினர் மரணமடைவதின் மூலம், இந்தக் குறிப்பிட்ட பார்வோன் மிகவும் பிடிவாத குணமுள்ளவனாகவும், தேவனுக்கும், இஸ்ரயேலுக்கும் எதிராக யுத்தம் பண்ணுவதினால் வாதைகளை அனுபவிப்பதற்கு நன்று தகுதியுள்ளவனானபடியால், இவனே சிங்காசனத்திற்கு வரும்படியாக தேவன் வழிவகுத்தார். இந்த வாதைகள் இஸ்ரயேலுக்கு அவருடைய அனுக்கிரகத்திற்கும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கும் அவர் அளித்த வாக்குத்தத்தங்களுக்கும் உண்மையுள்ளவர் என்பதற்கு ஒரு முன் அடையாளமாக ஏற்படுத்தினார் என்பதோடு, எகிப்தின் மேல் வந்த இந்த வாதைகள் ஓரளவிற்கு, இந்த சுவிசேஷ யுகம் முடிவுறும் தறுவாயில் வர இருக்கின்ற முதல் மூன்று, மற்றும் ''கடைசி ஏழு வாதைகளுக்கு'' (வெளி 15:1) முன் அடையாளமாக, விளங்கும்படியாக உள்ளன.

பார்வோனைக் குறித்த இந்த விளக்கத்தில் உள்ள குறிப்பிட்ட அம்சமான, ''ஜனங்களைப் போகவிடாதபடி தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப் படுத்தினார்'' என்று காணப்படுகிற அறிக்கை அநேகருக்கு மனக்குழப்பத்தை உண்டு பண்ணுவதாக இருக்கிறது. இது, முதல் பார்வையில் தேவன் மனித சித்தத்தோடு குறுக்கிடுகிறவர் அல்ல என்று நாம் இப்பொழுது சொன்னதற்கு எதிர் மாறாக இருப்பது போல் தோன்றும். இருந்த போதிலும், தேவன் மேற்கொண்ட எந்த வழிமுறை பார்வோனை அதிக பிடிவாதமுள்ளவனாக மாற்றியது, தேவன் எப்படி பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தினார் என்பதை நாம் சிந்திக்கும் போது தேவனைப்பற்றி நினைத்த (மேலே சொல்லப்பட்ட) கருத்து தவறு என ஒத்துக் கொள்ளப்படமுடியும். தேவனிடத்தில் உள்ள நன்மையே பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தியது. இஸ்ரயேலைப் போக விடுவேன் என்பதைக் குறித்த பார்வோனின் உறுதிமொழியை ஏற்றுக் கொள்ளவும், வாதையிலிருந்து விடுபட மோசே ஏறெடுத்த அவனுடைய ஜெபத்தைத் தேவன் கேட்கும்படியாக இருந்த தேவனுடைய இரக்கமே பார்வோனைக் கடினப்படுத்தியது. இஸ்ரயேலர் செல்ல அனுமதிக்கப்படும் வரை தேவன் முதலாவது வாதையை அல்லது தண்டனையைத் தொடர்ந்திருப்பாரென்றால், அந்த ஒரு வாதையே விடுதலைக்குப் போதுமானதாக இருந்திருக்கும். ஆனால் தேவன் ஜனங்களையும் தேசத்தையும் முதல் வாதையிலிருந்து விடுவித்தபோது, பார்வோன் அது கடந்துபோய் விட்டது என்றும், இனி ஒருவேளை ஒன்றும் வராது என்றும் தீர்மானித்தான். ஆகவே தேவனுடைய இரக்கம் இன்னும் அதிமாக அவனை அவருடைய விரோதத்திற்கு வழிநடத்தியது. இதைக் குறித்ததான இந்த கருத்தோடு பார்வோனின் சித்தத்திற்கு இருந்த சுதந்திரம் முற்றிலுமாக தெளிவாகிறது, தேவனும் பொல்லாப்போடு தொடர்பு உள்ளவர் அல்ல என்பதும் தெளிவாகிறது. ''அவருடைய கிரியை களெல்லாம் பூரணமாயிருக்கிறது.'' தேவனிடத்தில் காணப்படும் நன்மையானது, மனிதர்களை மனந்திரும்புதலுக்கு வழி நடத்த வேண்டியிருந்தாலும், தற்போதுள்ள பூரணமில்லாத நிலைமைகளினால், அவர்கள் மேல் எதிர்மாறான செல்வாக்கை பிரயோகிக்கிறது.

இஸ்ராயேல் தேசம் தெரிந்து கொள்ளப்பட்டது

உலகத்தின் எல்லா தேசங்களிலும் இஸ்ரயேலை,தேவன் தன்னுடைய ஜனங்களாக இருக்கும்படியாகவும், ஆவிக்குரிய

இஸ்ரயேலுக்கு மாதிரியாக இருக்கும்படியாகவும் தெரிந்து கொண்டது, வேதத்தை நன்கு அறிந்த கிறிஸ்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். ''பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் தெரிந்து கொண்டேன்'' (ஆமோ. 3:2) என்ற தீர்க்கதரிசி ஆமோஸின் வார்த்தை இதற்கு ஒத்திருக்கிறது. இஸ்ரயேல் சிறையிருப்பிலிருந்து மீண்டு வரும்படி அனுமதிக்க இருந்த மேதிய இராஜாவாகிய கோரேசுக்கு ஏசாயா மூலம் (ஏசா. 45:4) தேவன் கூறுகிறதாவது: ''நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்து கொண்ட இஸ்ரயேலினிமித்தமும் நான் உன்னை பெயர் சொல்லி அழைத்தேன்.'' இந்த அறிக்கையில் கிறிஸ்துவுக்கு ஒரு நிழலான கருத்து கூறப்பட்டிருப்பதையும், ஆவிக்குரிய பேர் இஸ்ரயேலர் (பேர் கிறிஸ்தவர்கள்), இரகசியமாகிய மகாபாபிலோனிலிருந்து பெறுகிற விடுதலையையும் இந்த இடத்தில் நிழலான இஸ்ரயேல் ''தெரிந்துகொள்ளப்பட்டது'' என்று கூறப்படுவதற்கு முரண்பாடாக இல்லாதிருப்பதை நாம் காணக்கூடும். திவ்விய அனுக்கிரகம் மாம்சீக இஸ்ரயேலரிலிருந்து, ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குக் கடந்து செல்வது (ரோம. 9:11) சம்பந்தமான தனது தெளிவான, திருப்தியளிக்கும் வாதங்கள் மூலமாக அப்போஸ்தலர், தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கு மாதிரியாக உள்ள மாம்சீக இஸ்ரயேலருக்கு தேவனுடைய அனுக்கிரகம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்பட்டது என்று தெளிவாகக் காட்டுகிறார். ஏற்கெனவே, அவர்கள் விசேஷ அனுக்கிரகத்தின் இடத்திலிருந்து தள்ளப்படுவார்கள் என்றும், அந்த இடத்திற்கு யாக்கோபு அடையாளமாக்கப்பட்டபடி இன்னொரு ஆவிக்குரிய இஸ்ரயேலர் கொண்டு வரப்படுவார்கள் என்பதை ஆண்டவர் முன்கூட்டியே அறிந்து சொல்லியிருந்தபடி நடந்தது என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

எப்படி இஸ்ரயேல் தேவனுடைய அனுக்கிரகம் பெற்ற அல்லது தெரிந்து கொள்ளப்பட்ட தேசமாக ஒரு காலத்தில் இருந்தது என்றும், இதனிமித்தமாக எல்லா வகைகளிலும் உலகத்திலுள்ள எல்லா தேசங்களைக் காட்டிலும் அதிக அனுகூலம் உள்ளதாக இருந்ததென்றும், அவர்களுக்கே எல்லா வாக்குத்தத்தங்களும் உரியதாக இருந்ததென்றும், அவர்களே ஒலிவ மரத்தின் கிளைகள் என்றும், வாக்குத்தத்தம் என்னப்பட்ட வேரிலிருந்தும், அடிமரத்திலிருந்தும் அப்பாற்பட்டு நின்ற ஜென்ம சுபாவ கிளைகளிலிருந்து மட்டுமே தேவன் தன்னுடைய அனுக்கிரகத்தை விலக்கிக்கொண்டார் என்றும், இவைகள் ஆபிரகாம்,

ஈசாக்கு, யாக்கோபினால் நிழலாகக் காட்டப்பட்டன என்றும் அப்போஸ்தலர் காட்டுகிறார். அவர் குறிப்பிடுகிறார்: ''இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்துக்கொள்ளப் பட்டவர்களோ (தகுதியானவர்கள்–யோவா. 1:12,13) அதை அடைந்திருக்கிறார்கள், மற்றவர்களோ இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்.'' ஆரம்பத்தில் முழு தேசமும் தேவனுடைய சிறந்த அனுக்கிரகங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாகத் தெரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும், இந்த அனுக்கிரகங்களுக்கான காலம் வரும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலராக மாறுவதற்கு உண்மை யுள்ளவர்கள் மாத்திரம் தகுந்த இருதய நிலையோடு இருப்பார்கள். அந்த தேசத்தில் விசேஷமாக தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் அந்த யுக முடிவில் பணிவிடை வீட்டாரிலிருந்து குமாரனின் வீட்டிற்கு கடந்து செல்லும்படியாக உன்னதமான பகிர்ந்தளிக்கும் காலத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். (எபி.3:5,6; யோவா.1:12) நிழலான இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை களுக்கு, சுபாவத்தின்படி பரதேசிகளும் புறம்பானவர்களும் அந்நியருமாக இருந்த நாம் இப்போது தேவனுடைய கிருபையினால் ஆபிரகாமின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு இணையானதை நாமும் விருத்தியடையப் பண்ணி, ஆபிரகாமின் உண்மையான வித்தாக, கிறிஸ்துவின் மணவாட்டியாக எண்ணப்பட இருக்கிறோம். அப்படிச் செய்யும்போது தேவனுடைய மூல திட்டத்தில் அதற்கான வாக்குத்தத்தங்களினால் உள்ள தறிக்கப்பட்ட கிளைகளின் இடத்தை எடுத்துக்கொள்ளுகிறோம் என்றும், ஆனாலும் இந்த சுவிசேஷ யுகத்தில் தறிக்கப்பட்ட கிளைகள் சத்துருக்கள் போன்று நடத்தப்பட்டாலும் ''தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்பு கூறப்பட்டவர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே.'' (ரோம. 11:28,29)

எனவே, தெய்வீக திட்டத்தில் உள்ள பிரதானமான அனுக்கிரகத்தை ஒரு ஜாதியாக அவர்கள் நிராகரித்தாலும்– தெரிந்து கொள்ளப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலராக இருப்பதை அவர்கள் நிராகரித்தாலும், முதலாவதாகத் தெரிந்து கொள்ளப்பட்டபோது உள்ள சில அம்சங்கள் மாம்சீக இஸ்ரயேலரோடு இன்னும் நிலைத்திருக்கிறது என்று நமக்கு அறிவிக்கப்படுகிறது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் அவர்களுக்கும்

நிறைவேற்றப்பட உள்ளதால், ஆயிரம் வருட யுகத்தின் போது பூலோகமெங்கும் ஆவிக்குரிய இராஜ்யத்தில் அவர்கள் ''பிரபுக்கள்'' அல்லது பிரதிநிதிகளாவதால், இந்தக் கிரியை நிச்சயமாகவே தற்போது அந்நியராயும், இருளில் இருப்பவர்கள் போன்ற நிலையிலும் உள்ள அநேக மாம்சீக இஸ்ரயேலருக்கு பிரயோஜனமாக மாறும். இப்போது உலகத்தில் மிஞ்சியுள்ள அவர்களுடைய தலைவர்களோடு ஒத்துப்போவதை காட்டிலும், அவர்களுடைய கடந்தகால தலைவர்களோடு ஒருமனப்பட அவர்களால் முடியும், அவர்கள் அப்படியாக வருவார்கள். ஆகவே ஆயிர வருடத்தின் ஆரம்பத்தின்போது இஸ்ரயேல் ஒரு ஜாதியாக மறுபடியும் தேசங்களுக்குள் முக்கியமான இடத்தை வகிக்கும். ''எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப்போட்டார்.'' (ரோம.11:32)

தெரிந்துகொள்ளப்பட்ட புது சிருஷ்டி

இப்போது கடந்த காலத்தில் உள்ள தெரிந்துகொள்ளப்படுதலைப் பற்றிய ஓர் அளவு அறிவோடும், புது சிருஷ்டியைத் தெரிந்து கொள்வதற்கான தேவனின் மாபெரும் வேலைக்கு, அவைகளில் அநேகம் மாதிரிகளாகவும் அல்லது நிழல்களாகவும் இருந்தது என்பதை புரிந்து கொண்டு, நம்முடைய பாடத்தின் மிக முக்கியமான அம்சத்திற்கு நாம் இப்போது வருகிறோம். தெரிந்துகொள்ளப்படாதவர்களுக்கு இந்தத் தெரிந்துகொள்ளப்படுதல் எந்த தீமையையும் விளைவிக்காது என்பதையும், ஆனால் அதற்கு மாறாகத் தெரிந்து கொள்ளப்படாதவர்கள் ஏற்ற காலத்தில் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதையும் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இது சம்பந்தமாக மேலும் சொல்ல விரும்புவது என்னவெனில், அனுக்கிரகம் பெற்றவர்கள் கூட, குறைவாக அல்லது அனுக்கிரகமே பெற்றிராதவர்களுக்கு ஆசீர்வாதத்தின் வழிகளாக இருக்கும்படியாக ஏற்படுத்தப்படாவிட்டாலும் கூட மற்றவர்களுக்கு கொடுக்கப்படாத ஒரு விசேஷ அனுக்கிரகம் சிலருக்கு கொடுக்கப்படுவது நியாயத்திற்கோ அல்லது அன்பிற்கோ எதிரானதல்ல. விசேஷ அழைப்பினாலும் அல்லது நீதியினாலும் அல்லாமல், ஏதாவது ஒன்றைச் செய்வதே கிருபை அல்லது அனுக்கிரகம் என்ற வார்த்தைக்கு அர்த்தமாகும். சுவிசேஷ யுகத்தில் இந்தத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் விஷயமாக இந்த வார்த்தைகளான கிருபையும் அனுக்கிரகமும் வேதத்தில் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ''கிருபையினால் நீங்கள்

இரட்சிக்கப்பட்டீர்கள்,'' மேலும் இது போன்ற வேத வாக்கியங்கள் ஆதாமின் வம்ச வழியினரில் எவரையாவது மரணத்திலிருந்து விடுவிக்கவோ, அல்லது பாவ நிவாரணத்தின் மூலம் நித்திய ஜீவனுக்கு எந்த ஒரு தருணம் கொடுக்கவோ சர்வ வல்லவர் கடமைப்பட்டிருக்க வில்லை என்பதையும், அதற்கு மேலாக புது சிருஷ்டியின் அங்கத்தினராகும்படியாக அவருடைய சிருஷ்டிகளுக்கு வரும் பரம அழைப்பில் தேவனைப் பொறுத்த வகையில் எந்த விதமான கடமை என்று ஒன்று இருந்ததில்லை என்பதையும் குறிக்கின்றன. அவைகள் எல்லாம் திவ்விய அனுக்கிரகத்தால், கிருபையின் மேல் கிருபையாக, அனுக்கிரகத்தின்மேல் அனுக்கிரகமாக வருவதாகும். இதையெல்லாம் சரியானபடி மனதில் வைத்துக்கொள்ளத் தவறுகிறவர்கள் எவரும், இப்போது நடப்பவைகளைச் சரியானபடி புரிந்துகொள்ளமாட்டார்கள்.

அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்குச் சொல்லும்போது நாம் ஒரு வகுப்பினராக ''பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்து கொள்ளப்பட்டோம்'' என்று கூறுகிறார். அவர் இப்படிச்சொல்வதோடு நின்று விடாமல் தொடர்ந்து, ''ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப் படுதலுக்கும், தெரிந்துகொள்ளப்பட்டீர்கள்'' என்றும் கூறுகிறார். (1பேது. 1:2) இது, புது சிருஷ்டியை ஒரு வகுப்பினராக தேவன் முன்னறிந்திருந்தார் என்பதையும், கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அவர்களை விசுவாசத்தினால் நீதிமான்களாக்கும் அவருடைய நோக்கத்தை முன்னறிந்தார் என்பதையும், இந்த வகுப்பாரைப் போதுமான அளவிற்கு கொண்டு வருவதற்குக் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருப்பார்கள், சத்தியத்தின் மூலம் அவர்கள் பரிசுத்தமாக்கப்படுவார்கள் என்பதையும் தேவன் முன்னறிந்திருந்தார் என்பதையும் தெளிவாக்குகிறது. சபையின் தலைவராயிருக்கிற இயேசுவைத் தவிர தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பினருக்குள் தனிப்பட்ட நபருக்குத் திவ்விய முன்னறிவு இருந்தது என்று வேதம் எந்த இடத்திலும் அறிவுறுத்தவில்லை. இயேசு தம்மால் தெரிந்தெடுக்கப்பட்டவர் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார் என்று நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தெரிந்துகொள்ளப்படும் வகுப்பினரை ஏற்படுத்தத் தனி நபர்களை அடையாளம் கண்டு கொள்ளும் ஆண்டவருடைய திறமையை நாம் மட்டுப்படுத்துகிறோம் என்று புரிந்து கொள்ளக்கூடாது. ஆனால் இது சம்பந்தமாக அவருடைய வல்லமை எப்படிப்பட்டதாயிருந்தாலும், அந்த வல்லமையை செயல்படுத்தும்

படியாக தாமாகவே அவர் அறிவிக்கவில்லை என்பதை மாத்திரம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன், கிறிஸ்து உலகத்தின் இரட்சகராக இருக்க வேண்டும் என்றும், அவருடைய வெகுமதி, புது சிருஷ்டியின் முதல் அங்கத்தினராக, தலையாக, ஆண்டவராக, முதன்மையானவராக இருக்கும்படியாக உயர்த்தப்பட வேண்டும் என்றும் நியமனம் செய்தார்; அது மாத்திரமல்ல, இராஜ்யத்தில் உடன் சுதந்திரராக, புது சிருஷ்டியில் அவரோடு பங்கெடுக்கிறவர்களாக இருக்கும்படியாக மனிதர் மத்தியிலிருந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் நியமித்தார். தெரிந்துகொள்ளப் படுகிறவர்களின் குறிக்கப்பட்ட தொகை, வெளிப்படுத்தின விசேஷத்தில் பலமுறை அறிவிக்கப்பட்டபடி (வெளி. 7:4; 14:1)1,44,000 என்று நாம் நம்புவதற்கு எல்லா காரணங்களும் உண்டு. இவர்கள் ''மனிதரிலிருந்து மீட்கப்பட்டவர்கள்.''

இப்படிப்பட்டஒரு வகுப்பார் தெரிந்து கொள்ளப்படுதல் அல்லது உலகம் உண்டாவதற்கு முன்னதாகவே நியமிக்கப்படுதல் என்பது, பிரிட்டிஷ் இராணுவத்தில் ''இராஜாவுக்குச் சொந்தமானவர்கள்'' என்ற பட்டாளத்திற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான இராணுவ வீரர்கள் இருக்க வேண்டும் என்று முன்னதாகவே நியமனம் செய்வது போன்றும், இப்போது அதில் இருக்கும் இராணுவ வீரர்கள் பிறக்கும் முன்னரே, அவர்களுடைய தகுதிகளான எடை, உயரம்,விசேஷ திறமைகள் போன்றவை முன்னமே குறிக்கப்பட்டது போன்றும் ஆகும். அது போன்றே சிருஷ்டிகரின் இராஜரீக கட்டளை, தேவனுடைய புது சிருஷ்டிக்குள் இருக்க வேண்டியவர்களின் எண்ணிக்கையை நியமனம் செய்தது; ஆனால் அவர்களுடைய சரீர அளவுகளைக் குறிப்பிடாமல், அவர்களுடைய நெறிமுறைகளையும் இருதயத்தின் குணாதிசய அளவுகளையும் குறிப்பிட்டது. ''இராஜாவுக்குச் சொந்தமானவர்கள்'' என்ற பட்டாளத்துக்குரியவர்களின் பெயர்களை முன்னதாகவே நியமிக்க அவசியமில்லாமலிருந்தது போல, நம்முடைய சிருஷ்டிகருக்கும், அவர் குறிப்பிட்டுள்ள , வரம்புக்குள் உட்பட்டவர்களாக, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக அவரால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவர்களாக இருக்கின்ற நபர்களை அல்லது பெயர்களை முன்னதாக நியமிப்பது தேவையற்றதாகும்.

''எவர்களை முன் அறிந்தாரோ அவர்களை முன்குறித்திருக்கிறார்'' என்று வேத வசனத்திலிருந்து ஒரு பகுதி மட்டுமே பொதுவாக நினைவு

கூறப்பட்டுக் குறிப்பிடப்படுகிறது என்பது நமது கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. திவ்விய வார்த்தை என்ன நோக்கத்திற்காகக் கூறப்பட்டுள்ளது என்பதை தேவனுடைய ஜனங்கள், அறியாமல், அதை பிரித்துப் பார்த்து திருப்தியடைவதோடு நின்று விடக்கூடாது. அது எழுதப்பட்ட பிரகாரம் மிஞ்சியிருக்கிற பகுதியையும் சேர்த்து வாசிக்கும் போது, முழு விஷயமும் நம் மனதிற்கு முன்பதாகத் தெளிவாகிறது. ''தம்முடைய குமாரன் அனேக சகோதரர்களுக்குள்ளே முதற்பேறானவரா யிருக்கும் பொருட்டு தேவன் எவர்களை முன் அறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.'' (ரோம. 8:29)

இப்படியாக முன்குறிக்கப்படுதல் என்பது, கடந்த காலத்தில் ''தெரிந்துகொள்ளப்படுதல்'' என்ற உபதேசத்தை ஆணித்தரமாகப் பேசியவர்கள் பொதுவாக அறிந்து கொண்டதைக்காட்டிலும் உண்மையிலேயே வித்தியாசமானது. அவர்களுடைய எண்ணத்தின்படியும், போதனையின்படியும், ''நித்திய சித்திரவதையிலிருந்து தப்பும்படி யாகவும், மகிமையிலே நித்திய ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கும், அவர் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை முன்குறித்துமிருக்கிறார்'' என்பதாக அந்தப் பகுதி வாசிக்கப்பட வேண்டும். இந்த கருத்து, வேதத்தில் நியாயமாகவும், சரியாகவும் சொல்லப்பட்ட கருத்துக்கு எவ்வளவு மாறுபாடாக இருக்கிறது பாருங்கள்! தேவன் தம்முடைய ஒரே பேறானவர் மாத்திரமே இந்தப் புது சிருஷ்டியின் தலையாக இருக்க வேண்டும் என்று முன் குறித்தார். மேலும் அவருடைய குமாரனின் சாயலாக மாறுகிறவர்களைத்தவிர வேறுயாரும் புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாகக் கூடாது என்று நம்மில் எவரையும் அழைப்பதற்கு முன்னரே அவர் முன் குறித்தார். தெரிந்து கொள்ளப்படுதலைக் குறித்த வேத உபதேசம் எவ்வளவு அழகுள்ளதாக, எவ்வளவு நியாயமானதாக இருக்கிறது பாருங்கள்! இயேசுவைப்போல் குணாதிசயம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று ஒரு வரம்பை நியமிக்கிற இப்படியான ஒரு தெரிந்து கொள்ளுதலின் ஞானத்தை, நியாயத்தை, அல்லது அன்பை, தேவன் உண்டாக்கியிருக்கிற பெரிய வேலையை, பூலோகத்தின் எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதில் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராய் இருப்பதை யார் கேள்வி கேட்க முடியும்?

"அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள்"

–ரோமர் 8: 28, 29–

இந்த விஷயத்தைக் குறித்து நாம் பார்க்கும்போது, அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும் சரியான காரணங்களையும் கவனமாகப் பின்பற்றுகிறதைக் காட்டிலும் வேறெதையும் சிறப்பாக செய்யமுடியாது. இதற்கு முந்திய வசனங்களில் (22,23) புது சிருஷ்டியை அழைப்பதில் தேவனின் நோக்கம் என்ன என்று பார்க்கிறோம். அவர்கள் ஒரு பெரிய ஆசீர்வாதத்தைப் பெறவும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தை வழங்கவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எப்படியெனில் பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியானது தேவனுடைய புத்திரர் வெளிப் படுவதற்கு ஏகமாய் தவித்து வேதனைப்படுகிறது. புது சிருஷ்டிக்கென தேவன் அழைக்கிற வகுப்பினருக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறது என்று காட்டுவதற்கு அப்போஸ்தலர் முன் வருகிறார். நம்முடைய தற்போதைய ஏமாற்றங்கள், சோதனைகள், வெறுப்புகள், மற்றும் உலகம், மாம்சம், சத்துரு ஆகியோரிடத்திலிருந்து வரும் எதிர்ப்புகளுக்கு இதுதான் காரணமாயிருக்கிறது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த அனுபவங்கள் சமாதானத்துக்கேதுவான நீதியின் கனிகளை உருவாக்கவும், இதன்படி நாம் முறைப்படி வாஞ்சிக்கிறதும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறதின் நோக்கமுமாகிய "மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்கவும்" நமக்குள் கிரியை செய்கிறது. அழைக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது; இவர்கள் சம்பந்தமாக, ஆண்டவருடைய நன்மைகள் நம்மிடம் இருப்பதை அப்போஸ்தலர் காண்கிறார். நம்முடைய மூத்த சகோதரரோடு சம்பந்தமில்லாமல், அவருக்கு கீழாக அன்றி நம்முடைய அழைப்பை நினைக்கக்கூடாது. ஒருவரும் அவரை முந்திக் கொள்ள முடியாது, ஏனெனில் அவருடைய அடிச்சுவடுகளைக் கவனித்து, அதைப் பின்பற்றிச் செல்வதன் மூலமாக மாத்திரமே அவருடைய மகிமையில் பங்குள்ளவர்களாக மாற எதிர்பார்க்க முடியும். புது சிருஷ்டியில் பங்குள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றால், கிறிஸ்துவின் இந்த சகோதரர்கள் எல்லாம் அவருடைய மூத்த சகோதரரின் பிரதிகளாக இருக்க வேண்டும் என்ற தேவனின் முன் குறிப்பு, மனுக்குலத்தின் எந்த ஒரு அங்கத்தினரையும் பொறுத்த வரையில் நம்மை நம்பிக்கையற்றவர்களாக

ஆக்கும். ஆகவே நாம் அவருடைய குமாரன் மாம்சத்தில் இருப்பதைப் போன்று நல்ல பிரதிகளாக இல்லாததை அவரால் பொறுத்துக் கொள்ளமுடியும்; மேலும் நாம் இப்படிப்பட்ட பிரதிகளாக இருதயத்தில், எண்ணத்தில், சித்தத்தில் இருப்பதை அவரால் காண முடியுமென்றால், நம்மால் இயன்ற அளவிற்கு, இப்படியான மாம்சம் கட்டுப் படுத்தப்பட்டு, நம்முடைய மனம் அது உண்மையென சாட்சியிடுமென்றால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு அவருடைய மிகுந்த கிருபையினால் நாம் மனதார ஏற்படுத்தாத கறைகளை மூடி, அவருடைய முன் குறிப்பின்படி ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால், நாம் பரம்பரையாகப் பெற்றுக் கொள்ளுகின்ற, முழுவதுமாக கட்டுப்படுத்த முடியாத மாம்ச பெலகீனங்கள் எல்லாம் மீட்பர் செய்த பலியினால் உண்டான புண்ணியத்தால் மூடப்பட்டுள்ளன என்று நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் வைத்திருக்கிற முன் ஏற்பாட்டை வேறு ஒரு இடத்தில் அவர் மிகவும் தெளிவாகக் காட்டவில்லையா?

இப்படியாக முன் குறிக்கப்பட்ட, அழைக்கப்பட்ட வகுப்பினரைக் குறித்து அப்போஸ்தலர் விவரிக்கும் போது கூறுகிறதாவது: "எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார், எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." இந்தப் பகுதி யானது வழக்கமாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. ஏனென்றால், கிறிஸ்து நமக்கு எப்படி ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானர் என்று முந்தய அத்தியாயத்தில் பார்த்தபடி, இங்கே அப்போஸ்தலர் வழக்கம் போல கிறிஸ்தவ அனுபவங்களைக் கூறுகிறார் என்ற எண்ணத்தைப் பொதுவாக வாசகர்கள் பெறுகிறார்கள். ஆனால் இங்கே அப்போஸ்தலர் எதிர்மாறான கருத்தைக் கையாண்டு மறுமுனையில் ஆரம்பிக்கிறார். இங்கே அவர், சபையானது இறுதியில் தேவனால், கிறிஸ்து அதன் தலையாக, மகிமையில் விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்டதாக கருத்து தெரிவிக்கிறார்; சபையின்–புது சிருஷ்டியின் அபிவிருத்தியை அவர் திரும்பிப் பார்க்கிறார். தேவனுடைய கிருபையினால் அதற்கு அழைக்கப்பட்டவர்கள் (ஏற்றுக்கொள்ளப் பட்டவர்கள்) மாத்திரமேயன்றி வேறு எவரும் தேவனால் மகிமையால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்ற உன்னதமான ஸ்தானத்திற்கு வரமுடியாது என்று காட்டுகிறார். இவர்கள் இதற்கு முன்பாக நீதிமான்களாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும்; ஏனென்றால், இந்த பந்தயப்

பொருளுக்காக ஓட்டத்தில் ஓடும்படியாக, தேவன் விசுவாசிகளைத் தவிர வேறு எவரையும் அழைப்பதோ, வரும்படி வேண்டுதல் செய்வதோ கிடையாது; இந்த நீதிமான்களாக்கப்பட்டவர்கள் இதற்கு முன்னதாக கனப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் (பொதுவான மொழி பெயர்ப்பின்படி மகிமைப்படுத்தப்பட்டல்ல). அவரைக் குறித்தும், வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிற அவருடைய அன்புள்ள குமாரனைக்குறித்தும், அவர்களுக்கு அறிவு உண்டாக்கப்படுவதின் மூலம் கனப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

ஆனால் தற்காலத்தில் தேவனுடைய கிருபையைக் குறித்துக் கேட்பதே கனத்தைக் காட்டிலும் மேலான ஒன்று என்று அநேகர் அறிந்திருப்பதில்லை. ஆயினும் வரும் யுகத்தின் போது உலகத்தாருக்கு அளிக்கப்படப்போகின்ற இரட்சிப்பானது தேவனுடைய வெகுமதி யாயிருப்பது போன்று ஆண்டவருடைய கிருபையைக் குறித்த ஒரு அறிவை அடைவதும், இக்காலத்திலேயே, உலகத்தாரைக் காட்டிலும் முன்னதாகவே அவரோடு ஒப்புரவாக ஒரு தருணத்தை அடைவதும் ஒரு மேலான கனத்துக்குரியதாயிருக்கிறது. இப்படியாக கனப்படுத்தப்பட்ட பின்னர், விசுவாசத்தின் மூலம் நாம் நீதிமானாக்கப்படத் தேவையான அறிவைப் பெற்ற பின்னர், நாம் பார்த்திருக்கிறபடி அது அழைப்போடு ஒத்துப்போகின்ற நிலையில் பரிசுத்தத்திற்கு நாம் எடுக்கிற இரண்டாவது படியாகும். இது மறுபடியுமாக, உண்மையாயிருப்பதின் மூலம் நமக்குள்ளாக வெளிப்படப் போகின்ற மகிமைக்கு வழி நடத்தி, புது சிருஷ்டியில் விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட அங்கத்தினர்களாக இருக்கும்படியாகச் செய்கிறது.

"தேவன் நம் பட்சத்தில் இருந்தால்"

மேலும் இந்த தெரிந்துகொள்ளுதலைப் பற்றிய அப்போஸ்தலரின் கருத்தைத் தொடர்ந்து நாம் பார்க்கும் போது, அதை அவர் இன்னொரு விதத்தில் இப்படியாகக் கூறுகிறார்: சகோதரரே, தேவன் ஒரு பெரிய அற்புதமான திட்டத்தை வைத்திருப்பதையும், அவர் அதை செயல்படுத்துவதையும் நாம் பார்க்கவில்லையா? அவருடைய திட்டத்தில் ஒத்துழைப்பதற்காக ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைத் தெரிந்து கொள்ள அவர் தீர்மானித்த பின்பு, அவர் நம்மை நீதிமான்களாக்கி, அவருடைய "பரம அழைப்பினால்" அழைத்ததினிமித்தம், அவருடைய

வழிமுறைகளை நமக்கு வெளிப்படுத்தி அனுக்கிரகம் செய்தார் என்பதை நாம் பார்க்கவில்லையா? இதன் அர்த்தம் என்னவெனில் தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பினருக்குள் நாம் இருக்க வேண்டும் என அவர் வாஞ்சிக்கிறார்; ஆகவே நாம் அதில் ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான ஒவ்வொரு ஒழுங்கையும் அவர் செய்திருக்கிறார் என்பதாகும். ஆண்டவர் நம் பட்சத்தில் இருந்தாலும், சில சமயங்களில், நம்மை வஞ்சித்து, விழும்படி பண்ண வம்சாவழியாக வந்த நம்முடைய பெலகீனங்களும், பாவமும், சாத்தானும் நமக்கு எதிராக இருப்பதைப் போன்று உணர்கிறோமா? நாம் திரும்பவும் பார்ப்போம், சர்வ வல்லமையுள்ள தேவன் நம் பட்சத்தில் இருக்கும் போது, இந்த எதிப்புகள் ஒன்றும் நமக்கு பயத்தையோ நடுக்கத்தையோ உண்டுபண்ண வேண்டியதில்லை, ஏனென்றால் அவர் முற்றுமாக அவைகளுக்குள்ளாக நம்மைச் சுமந்து செல்லப் போதுமானவராக இருக்கிறார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நமக்கு மீட்பைத் தந்ததில் உள்ள அவருடைய அனுக்கிரகத்தைத் திரும்பிப் பார்ப்போம். பாவிகளாயிருந்த நமக்கு இவைகள் எல்லாவற்றையும் அவர் செய்வாரென்றால், நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கும்போது, இவைகளைக் காட்டிலும் மிகவும் அதிகமாகச் செய்வார் என்பதை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். இப்பொழுது, நாம் அவருடைய சத்தத்தைக் கேட்டிருக்கிறோம்; அவருடைய குமாரனில் நம்பிக்கை வைத்து அவரை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்; அவருடைய புண்ணியத்தினால் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம்; இப்பொழுது திவ்விய சுபாவத்திற்கென அழைப்பின் சத்தத்தைக் கேட்டு நமக்கு இருந்தவைகளை பலிபீடத்தில் வைத்து அர்ப்பணித்திருக்கிறோம். ஆகவே அவருடைய குமாரனுக்கு வெகுமதியாக அளிக்கப்பட்டு உள்ளதில் எவ்வளவு அதிகமாக நமக்கு செய்யக்கூடும் என்று இப்போது நாம் நினைத்தாலும், நிச்சயமாகவே தேவன் நமக்கு அனுக்கிரகம் காட்டி அதிகமாக செய்வார். மாம்சத்தைக் கட்டுப்படுத்த நாம் எடுக்கிற சிறப்பான முயற்சிகள் கூட எப்படிப்பட்ட பெலகீனமுள்ளதாக, பூரணமில்லாததாக இருந்தாலும், நாம் விசுவாசத்தோடு, அன்போடு, இருதயத்தில் கீழ்ப்படிதலோடு அவரில் நிலைத்திருந்தால், என்றும் மாறாத அவர் நம்மை இன்னும் நேசிக்கிறார், நம் பட்சத்தில் இருக்கிறார். மேலும் நம்முடைய உன்னதமான ஆவிக்குரிய நன்மைகள் வரும்படியாகவும், புது சிருஷ்டியில் இறுதியில் நமக்கு ஒரு இடம் கிடைக்கும்படியாக

அவருடைய வல்லமையை பிரயோகிப்பார் என்பதில் நாம் நிச்சயமாக நம்பலாம். அவருடைய குமாரனை ஈந்து, இப்படியாக புது சிருஷ்டிக்கான அழைப்பைப் பெறுவதற்கு ஒரு வழி திறக்கப்படுகிறதினால், நமக்கு வரக்கூடிய ஒவ்வொரு தேவையையும் சந்திப்பதற்கு தேவன் கிறிஸ்துவுக்குள் எல்லா முன் ஏற்பாடுகளையும் செய்து இருக்கிறார் என்பதை நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். அவருக்குள் அவர் எல்லாவற்றையும் இலவசமாக தந்திருக்கிறார்.

தேவனுக்குப் பதிலாக நியாயப்பிரமாணம் நம்மை குற்றப்படுத்தும் என்று யாராவது சொல்லுவார்களா? நாம் நன்று சிந்திப்போம், தேவன்தானே அவருடைய நியாயப்பிரமாணத்தின் கீழ் நம்மை ஆக்கினைக்குள்ளாக்கினார், இதே தேவன்தான் பெரிய நியாயாதிபதியாக இருந்து, இப்பொழுது நம்மை நீதிமானாக அறிவித்திருக்கிறார்; நியாயப்பிரமாணம் நம்மை நீதிமானாக்க முடியாதவைகளிலிருந்து, அவருடைய கிருபையால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இலவசமாய் நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறார். இந்த உண்மையான கருத்து இப்படி இருக்கும் போது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை, இப்படி அவரில் அனுக்கிரகம் பெற்றவர்களை யார் குற்றப் படுத்த முடியும்? வேண்டுமென்றே செய்யப்படாத நம்முடைய பெலகீனங்களை அல்லது குறைபாடுகளை யார் குற்றப்படுத்தமுடியும்? நாம் இப்படியாக பதில் சொல்லுவோம்: "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." (ரோ 8:34)

ஏதாவதொன்று இடையில் குறுக்கிட்டு, தேவனுடைய அன்பிலிருந்து அல்லது கிறிஸ்துவிலிருந்தும் அல்லது அவரது அன்பிலிருந்தும், இரக்கத்திலிருந்தும் நம்மைப் பிரித்து, புது சிருஷ்டியைப் பொறுத்தவரையில், நாம் தனித்தனியாக விடப்பட்டு, நம்முடைய விசுவாசத்தையும், எதிர் காலத்தையும் ஒன்றுமில்லாததாக்கிவிடக்கூடும் என்று இன்னும் சொல்லப்படுகிறதா? நாம் பதிலளிக்கிறோம்: கிறிஸ்து நம் மீது அதிக அன்பை வைத்திருக்கிறார், இல்லையென்றால் அவர் நம்மை மீட்டிருக்கமாட்டார். அவர் நம்மிடம் காட்டியதெல்லாம் அன்புதான், அந்த அன்பை விட்டு எதுவும் பிரிக்க அனுமதிக்கக்கூடாது. உபத்திரவங்கள்

வரும்போது, அவைகள் நம்மை ஆண்டவரிடத்தில் கிட்டிச்சேர மாத்திரம் அனுமதிக்க வேண்டும். ஏனெனில் அவர் மாத்திரமே நமக்கு ஒத்தாசை அளிக்க முடியும். துன்பமோ அல்லது உபவத்திரவமோ, அல்லது பஞ்சமோ அல்லது தரித்திரமோ, எந்த ஆபத்தோ நமக்கு வரும்போது, இதன் நிமித்தம் வரும் பயத்தினால் ஆண்டவர்மேல் நாம் வைத்திருக்கிற அன்பை விட்டுவிட வேண்டுமா, அவருடைய நாமத்தைத் துறந்துவிட வேண்டுமா, அவருடைய காரியங்களை உதறித்தள்ளிவிட்டு, இதற்கு மேலும் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றாமல், வாழ்க்கையில் வேறு ஒரு எளிதான வழியைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? இல்லை, இப்படிப்பட்ட அனுபவங்கள் மூலமாகத்தான் நாம் ஜெயங்கொள்ளுகிற வர்களாக மாற்றப்பட முடியும். மேற்கொள்ளுவதற்கு ஒன்றும் இல்லாவிடில், வாழ்க்கைப்பாதை பூராவும் மிருதுவாகவும், தடங்களில்லாமலும் இருந்தால் நாம் எப்படி வெற்றிச் சிறந்தவர்கள் என்று குறிப்பிடப்பட முடியும்? நாம் தேவனுடைய இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும் பெறுகிறவர்களாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம். இப்பொழுது நாம் எந்த அளவிற்கு அவருடைய அன்பிலும், நன்மைகளிலும் நிலைத்திருக்க தகுதியானவர்கள் என்பதைப் பார்ப்பதற்காக இப்போது அவர் நம்மை அவர் சோதிக்கிறார்; நாம் அவைகளில் நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார்; அதற்காக ஒவ்வொரு தேவையையும் சந்திக்கப்பட முன்னேற்பாடு செய்திருக்கிறார்; இருந்தபோதிலும் நம்முடைய சித்தங்களை அவர் பலவந்தபடுத்த மாட்டார். மரண பயமோ அல்லது வாழ்க்கையின் மேல் உள்ள பற்றுதலோ, கிறிஸ்துவுக்குள் வெளிப்பட்ட தேவனின் அன்பைப் பிரிக்க நாம் ஒன்றும் அனுமதிக்கக்கூடாது என்று நான் உந்தப்பட்டிருக்கிறேன். அப்படியாக எனக்கு நம்பிக்கை உண்டு. தேவனுடைய மற்ற சிருஷ்டிகளோ, தூதர்களோ, துரைத்தனங்களோ, அதிகாரங்களோ, இப்பொழுது உள்ளவைகளோ அல்லது சிருஷ்டிக்கப்பட இருக்கிறவைகளோ, ஒன்றும் தடுக்காது அல்லது தேவனுடைய அனுக்கிரகத்தை நம்மை விட்டு திருப்பாது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இவைகள் எல்லாவற்றிலும் நாம் ஜெயங்கொள்ளுகிற வர்களாக இருக்கிறோம்; திவ்விய ஸ்தானத்தில் நம்மை நேசித்த அவர் மூலமாக தேவனுடைய புத்திரராக இருக்கிறோம்.

நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குதல்

''ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாக, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.'' (2பேது. 1:10,11)

இந்தத் தெரிந்துகொள்ளுதலில் தேவனின் முக்கியமான சில படிகளை நாம் காண்கிறோம். அவையான: (1) இப்படியான ஒரு புது சிருஷ்டியை உண்டு பண்ணும்படி முன்குறித்தல். (2) சிலருக்குத் தேவைப்படும் குணாதிசயங்களை வளர்த்துக்கொள்ளும்படியான அழைப்பு. (3) அழைப்போடு ஒத்திருக்கும்படியான,திருப்திகரமான நிலைமைக்கு அழைக்கப்பட்டவர்கள் வரும்படியாக காரியங்களை ஒழுங்கு செய்தல்.

மறுபக்கத்தில், தெரிந்து கொள்ளப்படுகிறவர்களால் எடுக்கப்பட வேண்டிய முக்கியமான படிகள் உண்டு. அவையாவன: (1) அழைக்கப் பட்டவர்களுக்குத்தான் இந்த எல்லா ஆயத்தங்களும், ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதால் அழைக்கப்பட்டவர்கள், அழைப்பை ஏற்றுக்கொண்டு முழு அர்ப்பணிப்பைச் செய்ய வேண்டும். (2) அவர்கள் தங்கள் அழைப்பின் தன்மையோடு மனதார ஒன்றிப்போய், அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெரிதாக எண்ணி அதோடு வருகிற தகுதிகளுக்கும், வரம்புகளுக்கும் வைராக்கியத்தோடு ஒத்துழைக்க வேண்டும்.

இந்த வரம்புகளும் தகுதிகளும், சுருக்கமாகச் சொல்வதென்றால், தேவனுடைய பிரியமான குமாரனுடைய இருதயத்திற்கு ஒத்த சாயலாய் இருப்பதாகும் என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த சாயலை ஆராய்ந்து பார்க்கும்போது அப்போஸ்தலராகிய பேதுரு இங்கு குறிப்பிடுகிறபடி, நாம் பரிசுத்த ஆவியின் கனிகளை உடைவர்களாக இருக்கவேண்டும் என்று அர்த்தப்படும். தேவன் பரிசுத்தமுள்ளவரா யிருக்கிறார், ஆகவே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவருடைய ஆவியையும், நீதியின் மேல் அவருக்கு உள்ள அன்பின் சுபாவத்தையும் பெற்றவர்களாகவும், அக்கிரமத்தை எதிர்ப்பவர்களாயும் இருக்க

வேண்டும். அப்போஸ்தலர் இந்த வேத பகுதியிலிருந்து தேவனுடைய பரிசுத்த ஆவியின் கிரியையின் பல்வேறு படிகளைச் சுட்டிக்காட்டி, நாம் நம்முடைய ஓட்டத்தின் ஆரம்பத்திலேயே அவருடைய பரிபூரண சாயலை (முழுமையான அன்பு) பெறும்படியான நிலைக்கு வருவதில்லை என்று சுட்டிக் காட்டுகிறார். ஆனால் அதற்கு மாறாக அது ஓட்டம் முடிவு பெறுவதைக் காட்டும் குறியாக அல்லது அளவாக இருப்பதாக காட்டுகிறார். அன்பு என்று பொதுவாகக் கூறும்போது குணாதிசயத்தின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதாயிருக்கிறது, அவைகள் உண்மையில் அன்பின் பாகங்களாக உள்ளன. சாந்தம், தயவு, சகோதர அன்பு, தேவ பக்தி எல்லாம் அன்பின் பகுதிகளாகும்.

யாரோ ஒருவர் தேவனுடைய ஆவியின் கனிகள் பின்வருமாறு கூறப்படலாம் என்று கூறியிருக்கிறார், நாங்களும் மனதார ஏற்றுக் கொள்கிறோம்.

(1) சந்தோஷம் – அன்பில் அதிக சந்தோஷம்
(2) சமாதானம் – இளைப்பாறுதலில் அன்பு
(3) நீடிய பொறுமை – அன்பு நீடிப்பது
(4) தயவு – சமுதாயத்தில் அன்பு
(5) நற்குணம் – செயல்பாட்டில் அன்பு
(6) விசுவாசம் – வாழ்க்கை என்னும் யுத்தகளத்தில் அன்பு
(7) சாந்தம் – தன்னலமில்லாத அன்பு
(8) இச்சையடக்கம் – பயிற்சியில் அன்பு

நாம் ஓட்டப்பந்தயத்தில் ஓட ஆரம்பித்த போது, தேவன் அவருடைய கிருபையினால் நம்மை நீதிமான்களாக்கி, புது சிருஷ்டிகளுக்கென உள்ள உன்னத அழைப்பின் பந்தயப் பொருளைப் பெறுவதற்காக இந்தப் பந்தயத்தில் ஓடும்படியாக அழைத்தினால், நாம் அப்படியாக ஓட தீர்மானித்தோம். அப்பொழுது முதலாவதாக நாம் பாரமான, தடையாயிருக்கிற உலகப்பிரகாரமான ஆசைகள் எல்லாவற்றையும், நம்முடைய விருப்பங்களை ஆண்டவருக்கென அர்ப்பணிப்பதினால், ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த ஒன்றை மட்டும் செய்வோம் என்று தீர்மானித்தோம். அது என்னவெனில் தேவனுடைய கிருபையினால் அவர் நமக்கென வைத்திருகிற ஆசீர்வாதங்களை அடையும்படி நாடுவோம் என்பதாகும். அதே நேரத்தில்

நம்முடைய திறமைக்கு ஏற்ப நம்மை எளிதாக சூழ்ந்திருக்கிற பாவங்களையெல்லாம், அவைகள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும், ஓட்டத்தில் நம்முடைய பாவங்கள் மற்றவர்களுடையதைப் போல இருந்தாலும், இல்லாவிட்டாலும், அதை நீக்கிவிட்டு, அந்த பெரிய பந்தயப்பொருளை அடையும்படி உண்மையாக ஓடுவோம் என்று தீர்மானித்தோம்.

ஓட்டப்பந்தய மைதானத்திற்குள் செல்வது என்பது நம்முடைய பிரதிஷ்டைக்குச் சமமாக இருக்கிறது. அதுதான் ஆரம்பம். நாம் ஆண்டவருடைய அன்பின் ஆவியினால் ஆளுகை செய்யும்படியாக அவருக்கு அர்ப்பணம் செய்தோம். ஆனால் பிதாவானவர் ஏற்றுக் கொள்ளக்கூடிய இந்த குணாதிசயங்களில், நமது வீழ்ச்சியின் காரணத்தினால் பரிதாபமாகக் குறைவு பட்டிருந்தோம் என்பதை உணர்ந்தோம். இருந்தபோதிலும் விடாமுயற்சியுடன், நாம் அவரோடு ஐக்கியம் கொள்வதற்கு ஏற்ற நிலைமையை அடைய அவருடைய குமாரனைப் போல சாயல் உள்ளவர்களாக மாறும் நிலையை அடைய வேண்டும் என்பது நம்மைக் குறித்த அவருடைய சித்தமாயிருப்பதினால் விடாமுயற்சியுடன் ஓடுகிறோம். இந்த விஷயத்தில் நாம் ஆண்டவரை விட வித்தியாசப்படுகிறோம், ஏனெனில் அவர் பூரணராயிருக்கிறபடியால், அன்பை வளர்த்துக்கொள்ளும்படி ஒரு படியிலிருந்து இன்னொன்றுக்கு அவர் செல்ல வேண்டியிருந்ததில்லை.அவர் ஆரம்பத்திலிருந்து ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்; அவர் ஆரம்பத்திலிருந்தே குறிக்கோளில் இருந்தார். அவருக்குள்ள சோதனை என்னவெனில், தேவனிடத்தில் பூரண அன்பு, அவருடைய ஜனங்களிடத்தில், அவருடைய சத்துருக்களிடத்தில் பூரண அன்புள்ளவர் என்ற குறிக்கோளில் உண்மையுள்ளவராக இருப்பாரா என்பதுதான். இருந்தபோதிலும் அந்த குறிக்கோளை அடைய நாம் ஓடவேண்டும், முயற்சிக்க வேண்டும்.

நாம் ஓட்டப்பந்தயத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது பகுதியில், அன்பு ஒரு திவ்விய தேவை என்பதை அறிந்து கொள்ளுகிறோம். அதை கடமை என்ற கருத்தின்படி மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமென்றாலும், அதைப் பெறும்படியாக நாடுகிறோம். நம்முடைய தேவனிடத்தில் அன்பு செலுத்தக் கடமை உள்ளவர்கள் என்று உணர்கிறோம், ஏனெனில், அவர் நம்முடைய சிருஷ்டிகராக, நம்முடைய கீழ்ப்படிதலை, அன்பை, பக்தியை வற்புறுத்த

உரிமையுள்ளவராக இருக்கிறார். ஆண்டவராகிய இயேசுவினிடத்திலும் கடமை அன்பு உள்ளவர்களாக இருக்கிறோம். ஏனெனில் அவர் நம்மேல் அன்பு கூர்ந்தார், ஆகவே நியாயப்படி பதிலுக்கு நாம் அவரில் அன்பு கூறவேண்டும். நம்முடைய சக ஜனங்களோடும் அன்பு செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம், ஏனெனில் அதுவே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

ஒட்டப்பந்தயத்தின் இரண்டாவது பகுதி, நம்மை இன்னும் சற்று முன்னோக்கி அழைத்துச் செல்கிறது, குறிக்கோளுக்கு இன்னும் கொஞ்சம் நெருக்கமாக அழைத்துச் செல்கிறது. ஆகவே முதலாவதாக கடமைப் பிரகாரமான அன்பினால் செய்ய முயன்றவைகளை நாம் படிப்படியாக நன்மையான விதத்தில் நோக்கினோம், ஏதோ என்று அல்ல. அதன் பிறகு, சரியானது, செய்யவேண்டியது என்று தேவன் கட்டளையிடுகிறவைகள் எல்லாம் நல்லவைகள் என்றும், நமக்கு அதைக்குறித்ததான மேலான எண்ணங்கள் எல்லாம், நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கும் நீதி, அன்பு, ஞானம் என்பவைளோடு சம்பந்தப்பட்டவைகள் என்றும், அப்படி அந்த நேரத்திலிருந்து அவைகளை உயர்வாக எண்ணினோம் என்றும் பார்த்தோம். தேவன் நம்முடைய சிருஷ்டிகராக இருக்கிறார் என்பதற்காக, கடமைக்காக அவரை நேசிக்கத் தொடங்கவில்லை, ஆனால் அதற்கு மேலாக, விசேஷமாக நம்மேல் சுமத்தப்பட்டதான குணாதிசயத்தின் உன்னதமான பகுதிகள் அவரிடத்தில் இருப்பதைப் பார்த்தோம்; எல்லா கிருபைக்கும், நன்மைக்கும் அவரே அசலாக இருந்தார். இந்த இரண்டாவது பகுதியின் குறிக்கோளை அடைபவர்கள் எல்லாம், ஆண்டவர் முதலாவதாக நம்மை நேசித்தார் என்பதற்காக மாத்திரம் அல்ல, அதற்கு பதிலாக நாம் அவரை நேசிக்க வேண்டும் என்பது கடமை என்பதற்காகவும் அல்ல, ஆனால் இப்போது கம்பீரமான மகிமையான அவருடைய குணாதிசயத்தில் சிலவற்றை அதாவது நம்முடைய சிருஷ்டிகரின் நீதி, அன்பு, ஞானம், வல்லமை ஆகியவற்றின் ஆழம், அகலம், உயரம், நீளம் ஆகியவைகளைப் பார்க்கும் அளவிற்கு விரிவாக நம்முடைய மனக்கண்கள் திறக்கப்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறபடியால் அவரை நேசிக்க முடியும்.

ஒட்டப்பந்தயத்தின் மூன்றாவது குறிக்கோளை சகோதரருக்கான அன்பு என்று அழைக்கிறோம். ஆரம்பத்திலிருந்து பிதாவுக்கு காட்டின கடமை–அன்பை விட சகோதரருக்குக் காட்டின கடமை–அன்பு

குறைவானது என்று உணருகிறோம், ஏனெனில் சகோதரர் நமக்கு குறைவாக செய்திருக்கிறார்கள்; நாம் அவர்களை அறிந்து கொண்டதின் முக்கியமான காரணம் பிதாவின் சித்தம் அப்படியாக இருந்தது. ஆனால் நாம் நீதியின் ஒழுங்குகளைப் பார்த்து அதன் மூலம் பிதாவை உயர்வாக எண்ணியபோது,நம்முடைய வேண்டுமென்று செய்யப்படாத கறைகளிருந்தாலும், அப்பொழுதும் பிதா தாமே நம்மை நேசிக்கிறார் என்பதைப் பார்த்தபோது நம்முடைய இருதயங்கள் சகோதரர்கள் பக்கம் அதிகமாக விசாலமடையவும் ஆழமாகவும் தொடங்கின. மேலும், இயேசுவின் பாதபடியிலும்,அவருடைய திவ்விய சுபாவத்திற்கு ஏற்றபடி நடக்க இருதய வஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதற்கு அவர்களில் ஆதாரங்களை கண்ட பின்னர், அவர்களுடைய பூரணமற்ற தன்மையையும், கறைகளையும், தவறுகளையும் அதிகதிகமாக நாம் பாராமுகமாக இருக்க முடிந்தது. சகோதரருக்கான அன்பு நம்முடைய அனுபங்களில் அதிகமாக காணப்பட்டது. அந்தோ பரிதாபம்! நம்முடைய உன்னத அழைப்பை நோக்கி, ஓட்டப்பந்தயத்தில் மூன்றாவது குறிக்கோளினிடத்தில் ஆண்டவருடைய அருமையான ஜனங்களில் நிறைய பேர் வராமலிருக்கிறது தெரிகிறது. வேதம் அறிவுறுத்துகின்ற, சகோதர அன்பை, பொறுமையை, நீடிய பொறுமையை வளர்த்துக் கொள்ள அதிக அவசியம் இருக்கிறது. இவைகள், நம்முடைய பிதாவோடு, ஆண்டவரோடு அதிகமாக பரீட்சிக்கப்படுவதைக் காட்டிலும் சகோரதர்களோடு சம்பந்தப்பட்டவைகளில் அதிகமாக பரீட்சிக்கப் படுகின்றன. பிதாவையும், குமாரனையும் பூரணராக நாம் காண்கிறோம், அவர்களிடத்தில் பூரணமற்றவை கிடையாது. அவர்கள் நமக்குக் காட்டும் பெருந்தன்மையையும், அவர்களுக்கு நேராக உள்ள நம்முடைய குறைபாடுகளையும் நாம் அறியலாம். நம்முடைய சகோதரரிடத்தில், ஒருவரிடத்தில் இந்த பெலகீனத்தையும் மற்றவரிடத்தில் அந்த பெலகீனத்தையும் காணலாம்; இப்பொழுது வருகிற பொதுவான சோதனை, நாம் சகோதரரிடத்தில் இப்படிச் சொல்லுவதாகும்: ‘‘உன்னுடைய கண்ணிலிருந்து நான் ஒரு துரும்பை எடுக்கட்டும்;’’ இப்படி துரும்பு எடுப்பது, சகோரதர்களுக் கெதிராக குற்றம் கண்டுபிடிப்பது, தொந்தரவு கொடுப்பது போன்றவைகள், நாம் சரி செய்ய வேண்டிய பொறுமையின்மை, அன்பில்லாமை என்ற பெரிய உத்திரம் நம்மிடத்தில் இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. இந்த மூன்றாவது குறிக்கோளை நெருங்கிவரும் போது, நம்முடைய சொந்த கண்களிலிருந்து

உத்திரத்தை படிப்படியாக அகற்றுகிறோம். அப்பொழுது நம்முடைய கறைகளைப் பார்க்கிறோம், நமக்கு ஆண்டவர் காட்டுகின்ற கிருபையின் ஐசுவரியத்தை அதிக உயர்வாக மெச்சுகிறோம். இப்படியான ஒரு நிலை வரும்போது நம்முடைய இருதயங்களில் எல்லாரிடத்திலும் காண்பிக்கும் அதிகமான சாந்தத்தின், பொறுமையின், சாதுவான தன்மையின் ஆவியைப் பிறப்பிக்கும்; இது மறுபடியும், சகோதரரில் பெருந்திரளான பாவங்களையும், பூரணமற்றவைகளையும் மூட அல்லது பாராதிருக்க உதவி செய்யும்; அவர்கள் விலையேறப்பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைத்து,இதே பந்தயப் பொருளுக்காக இதே ஓட்டத்தை ஓடும் காலம்வரை இப்படி நம் உள்ளம் இருக்கும்.

நான்காவது, அதாவது நமது ஓட்டப்பந்தயத்தின் கடைசி குறிக்கோள் என்னவெனில், நாம் எல்லாரும் சீக்கிரமாக அடையும்படி நாடவேண்டிய பூரண அன்பு– தேவனிடத்தில், சகோதரரிடத்தில், எல்லாரிடத்திலும் காட்டும் பூரண அன்பு ஆகும். நம்முடைய குறிக்கோள் ஒன்றிலும் அப்படியே நில்லாது, நாம் பொறுமையாக விடா முயற்சியோடு, ஊக்கத்தோடு ஓடவேண்டும். ஒரு வகையில் ''நாம் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருக்க வேண்டும்.'' இன்னொரு வகையில், ''நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்ய வேண்டும்.'' (கலா.6 :10) இது நம்முடைய சத்துருக்களையும் நேசிக்கிற அன்பாகும். இந்த அன்பு நம்முடைய பிதாவின் மேலும், அவருடைய குணாதிசயத்தின் மேலும் நம்முடைய சகோதரர் மேலும் வைத்திருக்கிற அன்பைக் குறைக்கவோ அல்லது நீக்கவோ செய்யாது; ஆனால் இவைகளை அதிகரிக்கும். இது அதிகரிக்கும் போது இந்த அன்பில் இரக்கத்தையும், நன்மையையும், தேவ புத்திரர் வெளிப்படும்படி பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிக்கு நாம் காட்ட உதவி செய்யும். ''உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்,'' என்பது ஆண்டவரின் கட்டளை. நம்முடைய சத்துருக்களையும் நேசிக்கும் இப்படிப்பட்ட ஒரு அன்பின் நிலையை அடையும் வரை, ஆண்டவர் அவரைப் பின்பற்றுகிற நமக்குக் குறித்திருக்கிற நிலையை அடைந்து விட்டோம் என்று ஒரு வினாடிகூட நினைத்துவிடக் கூடாது. நாம் இந்த நிலையை அடையும் வரை நாம் தேவனுடைய பிரியமுள்ள குமாரனின் பிரதிகள் அல்ல.

புது சிருஷ்டியில் ஒரு இடத்திற்கு நாம் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணப்படுவதற்கு முன்னால் நாம் இந்த அன்பின் உச்ச இலக்கை அடைய வேண்டும். ஆண்டவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் மரணத்தை சந்திக்கும் தருணத்தில் இந்த உச்ச இலக்கை அடைவார்கள் என்று நாம் எதிர் பார்க்கக் கூடாது. நாம் நம்முடைய கிறிஸ்தவ அநுபவத்தில் அந்த இலக்கைக் கூடுமானவரை எவ்வளவு சீக்கிரம் அடையமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அடைய வேண்டும்; அதன் பிறகு ''சகலத்தையும் செய்து முடித்தவர்களாக நிற்கவும்'' என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை நினைவு கூற வேண்டும். (எபே 6:13) அந்த உச்ச நிலையை வந்தடைந்த பின்னர் அன்பைப்பற்றியதான பரீட்சைகள் நமக்கு தேவை. அந்த நிலையில் இருக்கும் போது அந்த பயிற்சிகள், அந்த உச்ச நிலையை அல்லது இலக்கை நம்முடைய வாழ்க்கையில் நிலை வரப்படுத்த முயற்சிப்பது நம்முடைய குணாதிசயத்தை அதிகமாக பலப்படுத்துவதாக இருக்கும். இதில் விசேஷமாக நம்முடைய அனுபவங்கள் ஆண்டவருடைய அனுபவங்களைப் போன்றிருக்கும். அந்த உச்ச இலக்கை அடைய அவர் ஓட வேண்டிய அவசியமில்லாதிருந்தது. ஆனால் அதை விட்டு திரும்பாதபடி, சூழ்ந்து இருக்கும் உலகத்தினாலும் சத்துருவினாலும் மேற்கொள்ளப்படாதபடி அந்த இலக்கில் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராட அவருக்கு அவசியமிருந்தது. ''இலக்கை நோக்கித் தொடருகிறேன்'' என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அது போலவே நம்மில் ஒவ்வொருவரும் அந்த இலக்கை அடைந்த பின்னர் அதை உறுதியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். மேலும் நமக்கு வரும்படியாக ஆண்டவர் அனுமதிக்கின்ற எல்லா சோதனைகளிலும், நம்முடைய பெலத்தின் மூலமாக அல்ல, ஆனால் நம்முடைய மீட்பரின் உதவியினால் வரும் பெலத்தின் மூலமாக மேற்கொள்ளுகிறவர்களாக அவரால் எண்ணப்படும் படியாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

பிதாவுக்குக் காட்டும் பூரண அன்பிலிருந்து நம்மை திருப்பும் படியாக, அவருக்கு உரித்ததான முழு மரியாதையையும், கீழ்ப்படிதலையும் குறைவாகக் காட்டும்படி நம்மை உந்துகின்ற சூழ்நிலைகள் நமக்கு எதிராக வரும். சகோதரர்களைக் குறித்த சோதனைகளும் நமக்கு வரும்; நாம் அவர்களுடைய பெருந்திரளான பாவங்களை மூடும்படியாக அன்பை அனுமதிக்கவில்லை; நாம் நேசித்து மெச்சக் கற்றுக்கொண்டவர்கள் மேலும், பலகீனங்களைக் கண்டு பரிதாபப்படும்படியாக நாம் கற்றுக்கொண்டவர்கள் மேலும் கோபப்படும்படியாக யோசனைகள்

வரும். நாம் நம்முடைய சத்துருக்களை நேசிக்கக் கற்றுக் கொண்ட பின்னர், சில சாதுர்யமான காரியங்கள் உண்டு என்றும் நாம் அவர்களுக்கு காட்டும் பெருந்தன்மைக்கு ஒரு வரம்பு இருக்க வேண்டும் என்ற சூழ்நிலைகள், நம்முடைய எதிரிகளைப் பொறுத்த வரையில் நமக்கு வரும். இந்த சோதனைகளில் நாம் உறுதியாக இருப்போமென்றால், இலக்கை நோக்கி, ஏற்கனவே நாம் அடைந்துள்ள நிலையைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சித்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, இயேசுவின் மூலம் நமக்கென உள்ள நித்திய ஜீவனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளும் போது, நாம் ஆசீர்வதிக்கப் பட்டவர்களாக இருப்போம்.

''நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்று அறிவது''

''பிரியமான சகோதரரே,... நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்று நாங்கள் அறிந்து..... எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் வந்தது.'' – (1தெச.1:3,5)

நாம் பரிசுத்த ஆவியினால் பிறத்தல், முத்திரையிடப்படுதல், உயிர்ப்பிக்கப்படுதல் ஆகியவைகள், நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதற்கான சாட்சிகளாக அல்லது அடையாளங்களாக இருக்கின்றன என்பதை வேறு இடத்தில் குறிப்பிட்டிருந்தோம் (தொகுதி 5, அத்தி. 9).நாம் இந்த இடத்தில் மறுபடியுமாக அதைத் திருப்பிச் சொல்லப் போவதில்லை. ஆனால் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவெனில், யாரெல்லாம் இந்த தெரிந்துகொள்ளுதலில் பங்கு பெறுகிறார்களோ, அதற்கான பல்வேறு ஆதாரங்கள் மூலமாக அவன் மாத்திரமல்ல, அவன் தொடர்பு கொண்டிருக்கின்ற ''சகோதரர்களும்'' சீக்கிரமாகவே அந்த உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். இந்த தெரிந்து கொள்ளுதலில் ஒரு வல்லமை மாத்திரமல்ல, ஒரு செய்தியும் உண்டு. இந்த தெரிந்துகொள்ளுதலின் செய்தி, அல்லது அழைப்பு, அல்லது வார்த்தை, தெரிந்துகொள்ளப்படுபவர்களுக்கு சுவிசேஷம் அல்லது நற்செய்தி மாத்திரமல்ல, ஆனால் இதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிகமானது. அது தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி அவரது விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறார்

என்பதாகும். அது தெரிந்துகொள்ளப்பட்ட வர்களுக்கு பரிசுத்த ஆவியையும், திட நம்பிக்கையையும் கொண்டு வருகிறது, அப்போது அவர்கள் தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்த எந்தக் கிரயத்தையும் செலுத்த ஆயத்தமாயிருக்கிறார்கள்.

புது சிருஷ்டிக்கென தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பினரைக் குறித்து அப்போஸ்தலர் கொலோசெயருக்கு (கொலோ. 3:12–14) எழுதும்போது பின் வருமாறு கூறுகிறார்: இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பழைய எண்ணங்களை விட்டு விட்டு, புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டு, தெரிந்துகொள்ளப்பட்டவர்களை, அவர்கள் எந்த சபையைச் சேர்ந்தவர்கள், எந்த தேசத்தை சேர்ந்தவர்கள் என்று பாராமல், கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார் என்று, அவர்கள் மாத்திரம் புது சிருஷ்டிக்கென தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் சொல்கிறார்: ''ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும் தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக் கொண்டு, ஒருவரை யொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவைகள் எல்லாவற்றின் மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.''

நம்முடைய ஆண்டவர் தெரிந்துகொள்ளப்பட்ட முழு சபையைக் குறித்து கூறும் போது, அவர்களுக்கு பல்வேறு சோதனைகளும், பரீட்சைகளும் வருமென தெரியப்படுத்துகிறார்; மேலும் சுவிசேஷ யுகம் முடிவுறும் சமயத்தில் இவைகள் அதிகரிக்கும் என்று மிக ஆணித்தரமாகக் கூறுவது போலும் இருக்கிறது; மேலும் ''தெரிந்துகொள்ளப் பட்டவர்களைத்'' தவிர மற்றனைவரையும் வஞ்சிக்கும் அளவுக்கு அவைகள் அனுமதிக்கப்படும் என்கிறார். –மத். 24 : 24 (தொகுதி 4, அத்தி. 12 ஐப் பார்க்க)

இதில் உற்சாகமளிக்கின்ற ஒரு காரியம் உண்டு: இந்தப் பொல்லாத நாட்களில், விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், சத்துருவின் பல்வேறு தந்திரங்களைப் பகுத்தறியும்படியாக மிகவும் நேர்த்தியான மன பலம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்றோ, அல்லது அவர்கள் தங்களுடைய பூமிக்குரிய பாத்திரங்களை அடக்கி ஆளுகிற அளவுக்கு பூரணத்தை அடைந்து விட்டதால் அவர்கள் பிழை செய்ய முடியாதவர்களா

யிருப்பார்கள் என்றோ அது குறிப்பாகக் கூறவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக, கிறிஸ்துவில் நிலைத்திருப்பவர்களுக்கு, தேவையான நேரத்தில் போதுமான அளவுக்கு கிருபையும், போதுமான அளவுக்கு ஞானமும், போதுமான அளவுக்கு உதவியும் வழங்கப்படும் என்று அர்த்தமாகும். சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கைக்கு அடைக்கலம் என்று ஓடி வந்த அனைவருக்கும் இது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது! நம்முடைய நங்கூரமானது திரைக்குள்ளாக, கிறிஸ்துவுக்குள் இருக்கின்றது என்பதை உணர எப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையை அது தருகிறது! இப்படியாக முன் குறிக்கப்படுதல் அப்போஸ்தலர் கூறியபடி பலப்படுத்துகிறது, ஆறுதல்படுத்துகிறது; அப்போஸ்தலர் கூறுகிறார், ''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,..... தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்..... காலங்கள் நிறை வேறும்போது விளங்கும் நியமத்தின்படி, பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும் என்று,..... கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன் குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்.'' (எபே. 1:4–12)

''அநேக உபத்திரவங்கள் மூலமாக நீங்கள் இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பீர்கள்''

புது சிருஷ்டியாகத் ''தெரிந்துகொள்ளப்பட'' அழைக்கப் பட்டவர்கள் நற்குணசாலிகளாவதற்குத் தேவையான முயற்சியையும் மேற்கொள்ளு தலையும் தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிறார். இயற்கையிலும் இதற்கு நல்ல உதாரணம் உண்டு.

''பூச்சிகளை சேகரிக்கும் ஒரு மனிதனைக் குறித்து சொல்லப் பட்டது. அவன் ஒரு இராஜ விட்டில் பூச்சியைச் சேகரிக்க விரும்பினான். அதிர்ஷ்டவசமாக

அவனுக்கு கூட்டோடு உள்ள பூச்சி ஒன்று கிடைத்தது. அதை அவன் தனது புத்தக அறையில் குளிர்காலம் முழுவதும் தொங்கவிட்டிருந்தான். வசந்த காலத்தில் விட்டில் பூச்சி வெளியே வர முயற்சிப்பதைக் கண்டான். துவாரம் மிகச் சிறியதாக இருந்தது, அந்த வலை கடினமாக இருந்ததால் விட்டில் பூச்சி மிகவும் கஷ்டப்படுவது போல் காணப்பட்டது. ஆகவே அவன் தனது கத்திரிக்கோலைக் கொண்டு அந்த துவாரத்தை விசாலமாக்கினான். நல்லதுதான், பெரிதாக இருந்த விட்டில் பூச்சி வெளியே வந்தது. ஆனால் அது ஒரு போதும் பறக்கவில்லை. பின்னர் அவனிடம் ஒருவர் இப்படிக் கூறினார்: விட்டில் பூச்சி தன்னுடைய உடலிலிருந்து திரவத்தை தன்னுடைய பெரிய இறக்கைக்குள் கட்டாயமான முறையில் செலுத்துவதற்கு கஷ்டப்பட வேண்டியது அவசியம் என்றார். அதை கஷ்டப்படுவதிலிருந்து காப்பாற்றியது தவறான முறையில் காட்டப்பட்ட அன்புக் கிரியையாகும். இதில் உள்ள கருத்து நன்கு புரிகிறது. இம்மைக்குரிய குணாதிசயத்திற்காக மனிதன் பிரயத்தனங்கள் எடுக்கிறான். பிரயத்தனங்கள் இல்லாமல் அவனால் அதை பெறமுடியாது. இதே போல ஆவிக்குரிய வளர்ச்சியும் முயற்சிக்கப்பட வேண்டும்.''

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முற்றுமாக தெரிந்தெடுக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்ட உடனே ''இலவசமான கிருபை'' பெரிய அளவில் செயல்படுத்தப்படும் என்ற உபதேசத்தை வேதம் தெளிவாகக் கற்றுக்கொடுக்கிறது என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். (தொகுதி 1, அத்தி.1) ஆயிர வருட அரசாட்சியின்போது ஆபிரகாமின் சந்ததியாகிய ''தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்,'' பூமியிலுள்ள சகல ஜாதிகளும் பரிபூரண குணத்தையும், திரும்பப் பெறுதலையும், நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ளும்படி அவர்களை ஆசீர்வதிப்பார்கள்.

களங்கமற்றது

யூதா 24

களங்கமற்ற அவருடைய மகிமையான பிரசன்னத்தில் !
முழு ஆத்துமா எனக்குள்ளாகப் பரவசமடைகிறது,
என்னுடைய முழு இருதயமும் பரலோகத்தை எட்டியது
அந்த வார்த்தையின் அதிசயத்தினால்.

சமர்ப்பிக்க முடியுமா என்னை களங்கமில்லாமல் ?
ஆண்டவரே, என்னுடைய சந்தேகத்தை மன்னியும், நான் கதறினேன்;
நீர் ஒருமுறை சந்தேகப்பட்ட அன்பருக்கு காட்டினீர்,
கரங்களையும், கால்களையும், கிழிக்கப்பட்ட விலாவையும்.

ஓ! எனக்காக ஒரு ஏணியை உண்டாக்குங்கள்,
வெளிச்சமாக, தங்க மயமான வட்டத்தின் மேல் வட்டமாக
இந்த எண்ணம் திசை காட்டும் என்ற என் நம்பிக்கை,
விசுவாசத்தின் உன்னதமான அனுகூலமான இடத்தை அடைகிறது!

இப்படியாக ஜெபிக்கிறேன், இதோ, என்னுடைய ஏணியே,
பூரணமான நாளுக்குள்ளாக வந்து,
ஒரு சின்ன கதையாக வளர்ந்தது
வழியில் ஒருவரால் விட்டுச் செல்லப்பட்டது.

ஒரு முறை ஒரு இராணி–இப்படியாக கதை சென்றது–
புதியதாக ஒன்றை தேடிய போது,
பார்த்தாள் ஒரு ஆலையில்–அங்கு வினோதமாக,
அவளுடைய பார்வையில் பட்டது கந்தைதான், வேறொன்றுமில்லை.

கந்தைகள் அதே சாக்கடையிலிருந்தவைகள்,
கந்தைகள் ஒவ்வொரு உருவத்திலும், தோற்றத்திலும்
நன்கு பராமரிக்கப்படாத பிள்ளைகள் பொறுக்குகின்ற,
கந்தைகள்தான், தோற்றமளித்தது, முடியிலிருந்து பாதணிகள் வரை.

இதன் பிறகு என்ன என்பது அவளுடைய ஆவலான கேள்வி,
நீ என்ன செய்ய முடியும் இவ்வளவு மோசமானதை வைத்து?
பூரணமான தூய்மையாக உருவாக்குவதுதான்,
சொன்னார் எஜமானன் ஒரு புன் முறுவலுடன்.

தூய்மையானதாகவா? கேட்டாள் இராணி பாதி சந்தேகத்துடன்;
ஆனால் இந்த சிவப்பான, கருஞ்சிவப்பான சாயங்கள்–
நிச்சயமாகவே தூய்மையாக்க முடியாதே
இவைகள் உங்கள் கண்களுக்கு நன்கு தோற்றமளிக்கிற அளவுக்கு.

ஆம், அவன் சொன்னான், இவைகள் நிறங்களாக இருந்தாலும்
அவைகளை அகற்றுவது கடினமானதாக இருந்த போதிலும்,
திறமை உண்டு அவைகளைச் செய்வதற்கு
பனிப்பொழிவு கீழே விழுபவைகளைப் போல.

என்னுடைய இருதயத்தில் வரும் மிக எளிமையான வார்த்தைகள்
பதைபதைக்கிறது உள்ளேயும் வெளியேயும்:
கருஞ்சிவப்பு–இரத்தாம்பர சிவப்பு–வெண்மையான பனிப்பொழிவு போல–
இந்த மனிதனால் முடியுமா–தேவனால் முடியாதா?

அதன் பின்னர் ஒரு நாளன்று
(இப்படியாக இஷ்டம் போல் கதை சென்றது)
இராணிக்கு வந்தது ஒரு பரிசு
ஆலை எஜமானிடத்திலிருந்து.

மிகவும் மென்மையாக மடிப்புக்குமேல் மடிப்பு
கிடந்தன தாள்கள் மிகவும் தூய்மையான வெண்மையாக;
ஒவ்வொரு தாளிலும் துலங்கியது எழுத்துக்கள்
அவளுடைய பெயர் பொன்னிற வெளிச்சத்தில்.

விலையேறப்பெற்ற பாடம், எழுதினார் எஜமானன்,
என்னுடைய ஆலை எனக்குத் தந்திருக்கிறது,
எப்படி நம்முடைய கிறிஸ்துவினால் சேர்க்க முடியும்
மோசமான இருதயங்களை, நிலத்திலிருந்தோ, சமுத்திரத்திலிருந்தோ;

ஏதோ ஒரு பரலோக வடிகட்டி,
இரத்தாம்பர சிகப்பிலிருந்து பனிவெண்மையைக் கொண்டு வருகிறது;
ஒவ்வொன்றிலும் அவருடைய பெயரை முத்திரையிட்டு
இராஜாவின் அரண்மனைக்கு.

******

ஓ! எவ்வளவு அற்புதமான தரிசனங்கள் என்னை மேற் கொண்டன!
பரலோகத்தின் வாசல்கள் விரிவாய் திறந்தது போன்று இருந்தன!
நானும் கூட தெளிவாக, களங்கமில்லாதபடி நின்றேன்
எனக்கன்பான என் மீட்பரின் பக்கத்தில்.

களங்கமற்ற அவருடைய மகிமையான பிரசன்னத்தில்!
களங்கமற்ற அந்தப் பிரகாசமான வெளிச்சத்தில்!
கிறிஸ்துவின் அன்பு, கம்பீரமானது, மென்மையானது
என்னுடைய இரத்தாம்பரச் சிவப்பை பனிவெண்மையாக்கிற்று!

அத்தியாயம் 5

புது சிருஷ்டியின் அமைப்பு

ஆவிக்குரிய ஆலயத்தின் ''ஜீவனுள்ள கற்கள்''–உண்மையான புது சிருஷ்டிக்கும் பெயரளவான புது சிருஷ்டிக்கும் இடையே உள்ள வித்தியாசம்– ''தேவ இரகசியமும்'' ''அக்கிரமத்தின் இரகசியமும்'' – அந்திக் கிறிஸ்துவின் மாபெரும் அமைப்பு–வேத வாக்கியங்கள் நம்பத்தகுந்தவை – உலகத்துக்கும் ஆலயம் செல்வோருக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள சுயாதீனம் – குழப்பத்தில் ஓர் ஒழுங்கு– ''குறித்தகாலத்தில்'' – ''யுகங்களின் முடிவு'' – பிதாவினால் நடப்பட்ட திராட்சை செடி – ''ஆட்டுக்குட்டி யானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்''–யூதாசின் இடத்துக்கு வந்த பவுல் – அப்போஸ்தலரின் எண்ணிக்கை பன்னிரெண்டுதான் – அப்போஸ்தல அதிகாரம் – அப்போஸ்தலரின் உறுதியான குணாதிசயங்கள் – அப்போஸ்தலர் பவுல், மற்ற அப்போஸ்தலரிலும் ஒன்றிலும் குறைவானவர் அல்ல – பன்னிருவரின் ஊக்கம்– அப்போஸ்தலர்கள் எழுதியவைகளின் மேல் தெய்வீக கண்காணிப்பு – ''இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்'' – சுவிசேஷங்களின் இசைவு – அதிகாரத்தின் திறவுகோல் – அப்போஸ்தலரின் தவறாமை – எதிர்ப்புகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன – ''கிறிஸ்து ஒருவரே உங்கள் குருவாயிருக்கிறார்'' – ''தேவனுடைய மந்தையே'' உண்மையான சபை – அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், ஊழியக்காரர்கள், போதகர்கள் – தேவனின் அமைப்பாகிய புது சிருஷ்டி முழுமையாக நிறைவடைந்தது – அதன் மேற்பார்வையாளரும் அவரே–ஆவியின் வரங்கள் அதன் தேவைக்குப் பிறகு நின்று போனது – ''பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தின்'' ஐக்கியம் – சக்திகளின் ஐக்கியம், கிறிஸ்தவனுக்கு எதிரானவர்கள் – பிஷப்புகள், மூப்பர்கள், உதவிக்காரர்கள் – ''தீர்க்கதரிசி'' என்ற வார்த்தையின்

விசேஷித்த பொருள் – மனத்தாழ்மை மூப்பருக்கு அத்தியாவசியமானது – மற்றத் தேவையான தகுதிகள்– உதவிக்காரர்கள், ஊழியக்காரர்கள், வேலையாட்கள் – சபையில் போதகர்கள் – அநேகர் போதிக்க சாமர்த்தியம் உள்ளவர்களா யிருக்க வேண்டும் – ''சகோதரரே, உங்களில் அநேகர் போதகர்களா காதிருப்பீர்களாக'' – ''ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை'' – ''போதிக்கிறவனும் போதிக்கப் படுகிறவனும்'' – சபையில் ஸ்திரீகளின் பங்கு – ஸ்திரீகள் உடன் வேலையாட்களாக – ''அவள் தலையை முக்காடிட்டுக் கொள்ளக்கடவள்.''

முதலாம் உயிர்த்தெழுதல் வரை புது சிருஷ்டியானது அதன் பூரணத்தையும் நிறைவு பெறுதலையும் அடையாததுபோன்று, அதன் அமைப்பும் அப்பொழுதுதான் முடிவு பெறும். ஆவிக்கேற்ற மாளிகை இதை விளக்குகிறது: இப்பொழுது ஜீவனுள்ள கற்களாக நாம் மகிமையான ஆலயத்தில் உள்ள இடங்களுக்கு வரும்படி அழைக்கப் பட்டுள்ளோம். மேலும் அப்போஸ்தலர் விளக்கமாகக் கூறுகிறபடி (1பேது. 2:5) நாம் பிதாவின் பிரதிநிதியான இயேசுவினிடத்தில் வருகிறோம், தேவனும் உலகமும் சந்திக்கிற இடமாகிய வருங்காலத்து மகிமையான ஆலயத்தில் நாம் இடம் பெறுவதற்காக உருவம் கொடுக்கிறார், செதுக்குகிறார், பொருத்துகிறார், மெருகூட்டுகிறார். சாலொமோனால் கட்டப்பட்ட முன்மாதிரியாயிருக்கிற ஆலயத்தில் ஒவ்வொரு கல்லும் வெட்டியெடுக்கப்படும் இடத்தில், ஆலயத்தில் அதன் இடத்தில் பொருத்தமாக இருக்கும்படி நன்கு வடிவமைக்கப்பட்டது. அப்படியாகத்தான் நம்மோடும் இருக்கிறது– எல்லாவிதத்திலும் பொருத்தமாயிருப்பதற்கான ஆயத்தமும் தற்கால வாழ்க்கையில் நடக்கிறது. மாதிரியில் உள்ளதுபோல எல்லா வடிவமைக்கப்பட்ட கல்லும் அதனதன் இடத்திற்கு சுத்தியின் சத்தமில்லாமல் வைக்கப்பட்டது. அதுபோல உண்மைப்பொருளில், ஆண்டவர் ஆயத்தம்பண்ணும்படி சந்தோஷமாக இப்போது சமர்ப்பிக்கின்ற ஜீவனுள்ள கற்கள் குழப்பமில்லாமல், மேற்கொண்டு ஆயத்தம்பண்ணவும், ஒழுங்கு பண்ணவும் தேவையின்றி, திரைக்கு அப்பால் அவரோடு இணைக்கப்படும்போது, அவர் மூலைக்கல்லாக, அவருக்குக் கீழாகவே முற்றுமாக அமைக்கப்படும்.

எனினும், ஜீவனுள்ள கற்கள் ஆயத்தம்பண்ணப்படும் காலத்தில் இந்த ஜீவனுள்ள கற்களிடையே ஒருமைப்பாடு அல்லது உறவுமுறை இருப்பதை வேதம் அறிவிக்கிறது. சொல்லப்போனால் அவைகள் ஒருபடி மேலே செல்கின்றன. மேலும் தற்காலிக அமைப்பு ஒன்று இருப்பதை அறிவிக்கிறது. ''மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரையொருவர் உறுதிப்படுத்தும்'' வேலையில் நம்முடைய முன்மாதிரியான நம்முடைய ஆண்டவர் இயேசுவோடு இசைவான குணாதிசயங்களை உருவாக்குதில் ஒருவருக்கொருவர் உதவி செய்து, பெரிய போதகரும் கட்டிட நிபுணருமான அவருடைய பங்குதாரராக இருக்க வரப்போகிற இராஜ்யத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் இது அனுமதிக்கிறது. தற்போதைய காலத்துக்குரிய திவ்விய ஒழுங்குகளை வெகு கவனமாக சோதித்துப் பார்க்க முயலும்போது, புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் எவ்வளவு சுயாதீனத்தை ஆண்டவர் கொடுத்திருக் கிறார் என்பதைக் காண்பது அநேகருக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆனால் சகோதரருக்காக தங்கள் ஜீவனைக் கொடுக்கும்படியாகவும், அவரோடு உடன் வேலையாட்களாக இருக்கும்படியாகவும், ஆண்டவர் மேல் உள்ள அன்பினாலும், நீதியின் குறிக்கோளுக்காகவும் உந்தப்பட்டு அவரை மனதார ஆராதிக்கிறவர்களை, மனதார பலியாக செலுத்துகிறவர்களை அவர் தேடிக்கொண்டிருக்கிறார் என்ற உண்மையை அறியும்போது, அதிக சுயாதீனத்தை அளிக்கும்படியான தேவனுடைய திட்டம் நல்ல திட்டம் என்பது தெளிவாகிறது. இந்தத் திட்டம் நிச்சயமாகவே இருதயத்தின் விசுவாசத்தை, நன்றாக வளர்ச்சியுற்ற குணாதிசயத்தைச் சோதித்து, ஒருவரோடு ஒருவர் அன்பின் பிரமாணத்தைப் பின்பற்றவும், தனக்கு ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்றிருப்பதை மற்றவருக்குச் செய்ய ஒவ்வொருவர் கொண்டுள்ள ஆர்வத்தையும் நிரூபித்துக் காட்டுகிறது.

இப்படியான ஒரு சுயாதீனம் அல்லது அதற்கு இணையான சுதந்திரம், தற்போதைய காலத்தில் ஆண்டவரின் நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது, எப்படியெனில் சிறுமந்தையைத் தெரிந்து கொண்டு, அவர்களைக் குணாதிசயத்தில் பூரணப்படுத்தி, எதிர்காலத்தின் இராஜரீக ஆசாரியத்துவத்தைக் கற்றுக்கொடுப்பதற்குப் பொருத்தமா யிருக்கிறது. ஆனால் உலகம் மனம் திரும்புவதற்கு, அவர் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்று பொதுவாக எண்ணப்படுகிறது; ஆனால் அதற்கு அது அப்பாற் பட்டதாயும் போதுமானதாக இல்லாததாகவும் இருக்கும். உலகத்தை வெல்லும்படியாகவும், எல்லாவற்றையும் அவருக்கென கீழ்ப்படுத்தும்படியாகவும் தற்போதைய யுகத்தில் தேவன் சபையை

நியமித்திருக்கிறார் என்ற யூகத்தின் அடிப்படையில் வந்த தவறான உபதேசத்தால், நன்றாக நியாயமாக சிந்திக்கக் கூடிய அநேக மனிதர்கள், ஆண்டவராலும் அப்போஸ்தலராலும் சபை எளிமையாக அமைக்கப் பட்டிருப்பதைக் குறித்து வியந்திருக்கிறார்கள். உலகத்தை மனம் மாற்றம் செய்வதற்கு இப்படியான ஓர் ஒழுங்கு போதாது என்று கண்ட மனிதர்கள் அமைப்பை விரிவாக்க எடுத்த பெரும் முயற்சிகளை, கிறிஸ்தவ சபை ஸ்தாபனங்களில் காண்கிறோம். இவைகளில் ஒன்று கற்பனை செய்து பார்க்கக்கூடிய அளவிற்கு, அதிகமாக, தந்திரமும், வல்லமையும் உள்ள அமைப்பாகக் காணப்படுவது போப்பாண்டவரின் அமைப்பாகும். மெதடிஸ்ட் எபிஸ்கோப்பல் (Methodist Episcopal) முறையானதாகவும் திறமையுள்ளதாகவும் ஒரு வித்தியாசமான வகுப்பினரைக் கட்டுப்படுத்து வதாயும் உள்ளது. ஆனால் சற்று உயர்வான ஸ்தானத்தில் உள்ளது. இந்த இரண்டு பெரிய முறைகளின் திறமையான அமைப்புகள்தான் ''கிறிஸ்தவ உலகில்'' அவர்களுக்கு வெற்றியையும் பலத்தையும் கொடுத்தன. நாம் மேற்கொண்டு பார்க்கும்போது இவைகளும் எல்லா மனித ''சபைகளும்'' அவர்களுடைய அமைப்புக்குள் உள்ளன என்றும், ஆண்டவர் ஏற்படுத்தின சபை முற்றிலும் வித்தியாசமானது என்றும் காணலாம். அவர்களுடைய வழிகள் அவருடைய வழிகளல்ல, அவர்களுடைய நினைவுகள் அவருடைய நினைவுகள் அல்ல, அதுபோல் பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே ஆண்டவருடைய வழிகளும், நினைவுகளும் மனிதனுடையவைகளைக் காட்டிலும் உயர்ந்திருக்கிறது. (ஏசா. 55:8,9) காலம் கடந்து போவதற்கு முன்னர், உண்மையான இருதயம் உள்ளவர்கள் கிறிஸ்துவின் எளிமையை விட்டுவிட்ட பெரிய தவறையும், அவர்கள் தங்களுடைய கிரியையைச் செயல்படுத்துவதில் தேவனைக்காட்டிலும் ஞானமுள்ளவர்களாக இருக்க முயற்சிப்பதையும் காண்பார்கள். இதனால் உண்டான விளைவுகள் அவருடைய ஞானத்தையும் மனிதருடைய முட்டாள் தனத்தையும் காட்டும்.

பெயரளவான புது சிருஷ்டியும் உண்மையான புது சிருஷ்டியும்

இஸ்ரயேலர் எல்லாரும் முன்மாதிரியாக இருக்கிற ஜனங்களைப் போல் பெயரளவில் இருந்தாலும், ''உண்மையான இஸ்ரயேலர்கள்'' அவர்களோடு ஒப்பிடப்படும்போது மிகக் குறைவாகவே இருந்தார்கள்.

ஆகவே உண்மைப்பொருளில் கூட பெயரளவுக்கு உள்ள ஒரு சபையையும் உண்மையான ஒரு சபையையும், பெயரளவுக்கு உள்ள ஒரு புது சிருஷ்டியும், ஓர் உண்மையான புது சிருஷ்டியும் இருப்பதைப்பார்த்து நாம் ஆச்சரியப்படக் கூடாது. கிறிஸ்தவம் ஓரளவுக்குப் பிரபலமான காலத்திலிருந்தே ''களைகள்,'' ''போலியான கோதுமை'' போன்றவை உண்மையான கோதுமையைப் போன்று கோதுமை– நிலத்தை நிரப்பியிருக்கிறது. இருதயத்தை அறிய முடியாத மனிதனுக்கு, பொய்யிலிருந்து உண்மையை கண்டுபிடிப்பது எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும், ஆண்டவர் கோதுமையை களைகளினின்று அறிகிறார், அவர் இருதயத்தை அறிகிறார், ''அவர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார்'' என்று நமக்கு நிச்சயப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவர், நாம் உண்மையிலேயே உண்மையான ஆடுகளையும் ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டிருக்கிற ஓநாய்களையும், உண்மையான கனிகொடுக்கும் திராட்சைச் செடியையும் உண்மையான செடியைப்போன்று தோற்றமளிக்கும் முட்களையும் நெறிஞ்சில்களையும் கண்டு பிடித்து, அதற்கிடையில் உள்ள வித்தியாசத்தை அறிய வேண்டும் என்று எதிர் பார்க்கிறார். ஆனால் பொதுவான கணிப்பைத் தாண்டி, வெளிப்புற குணாதிசயத்தைப் பொதுவாக ஆராய்ந்து பார்ப்பதற்கு மேலாக அவருடைய ஜனங்கள் சொல்வதை அவர் அனுமதிப்பதில்லை; அவர் ''காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்'' என்கிறார். திராட்சைச் செடியில் உண்மையான கொடிகள் என்று நீங்கள் அறியும் போது, பழுத்த கனிகளைக் கொடுக்கும்படி எவ்வளவு காலம் அவைகளுக்கு அளிக்கப்படல் வேண்டும் என்று தீர்மானிக்க முயற்சிக்க வேண்டாம். அதை நாம் தோட்டக்காரருக்கு விட்டுவிட வேண்டும். அவர் ஒவ்வொரு கொடியையும் சுத்தம் செய்து, இறுதியில் ''கனி கொடுக்காத'' ஒவ்வொரு கொடியையும் அல்லது அங்கத்தினரையும் நீக்கிப் போடுவார்; அவரே நடுதலையும் தண்ணீர் பாய்ச்சுதலையும் செய்தார் என்பதையும், உண்மையான செடியில் ஒவ்வொரு கொடியையும் அவரே முளைத் தெழுப்பப் பண்ணினார் என்பதையும் அறிந்து, கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த உண்மையான அர்ப்பணம் செய்து கொண்ட ஒவ்வொரு அங்கத்தினரையும் சீர்திருத்துவது, மற்றும் நீக்கிப்போடுவது போன்ற, கொடியை சுத்தம் செய்யும் வேலையைத் தோட்டக்காரருக்கே நாம் விட்டுவிட வேண்டும். செடியில் இருப்பதினால் உள்ள குணங்கள் ஓர்

அளவிற்கு ஒவ்வொரு கொடியிலும் அல்லது அங்கத்தினரிலும் உணரப்படல் வேண்டும்; மேலும் ஒவ்வொன்றும் அது வளரும்படியாக உற்சாகப்படுத்தப்படவும், உதவி செய்யப்படவும் வேண்டும்; இந்தக் கொடிகள் அனைத்திற்கும் இடையில் அன்பே சட்டமாக இருக்க வேண்டும்; திவ்விய வார்த்தை சொல்வதற்குமேல், அது அனுமதிக்காததை, எந்த ஒரு கொடியையும் கேலி செய்யவோ, கண்டிக்கவோ அல்லது சுத்தம் செய்யவோ இன்னொரு கொடிக்கு இம்மியளவுகூட உரிமை கிடையாது; இதற்கு மாறாக அன்பு இயல்பாகவே, மாபெரும் தோட்டக்காரர் அனுமதிக்கக் கூடிய அளவு இரக்கமாய், பட்சமாய், பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும் இருக்கத் தூண்டுகிறது. இவைகள் நாம் ஏற்கெனவே பார்த்தபடி விசாலமாயும், தாராளமாகவும் இருப்பதுடன், இவைகள் ஒவ்வொரு கொடியிலும் நற்குணங்களை விருத்தியடையச் செய்யும்படியாக அமைக்கப் பட்டுள்ளன.

திவ்விய திட்டத்தில் உள்ள எளிமையைப் பார்க்காததினால் அல்லது விட்டுவிட்டதினால், மனிஷீக ஸ்தாபனங்களில் இவைகள் பல்வேறு விதமாக வித்தியாசப்படுகின்றன. யாரெல்லாம் அங்கத்தினர்களாக அல்லது செடியின் கொடிகளாக ஏற்று கொள்ளப்பட முடியும், யாரெல்லாம் முழு ஐக்கியத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பதைக் குறித்ததான தன்னிச்சையான சட்டதிட்டங்களை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; வேதம் சொல்லாத பல நிர்ப்பந்தங்களையும், பல்வேறு சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; அவர்கள் வேதம் விதிக்காத அநேக கோட்பாடுகளையும் விசுவாச அறிக்கைகளையும் விதித்திருக்கிறார்கள்; வேதம் விதிக்காத பல்வேறு தண்டனைகளையும் இவைகளுக்கென ஏற்படுத்தியிருக்கிறார்கள்; மேலும் ஐக்கியம் கொள்ளாமல் தடுக்க, புறம்பாக்குதல் (excommunication) போன்றவைகளுக்கு விதிமுறைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிற உண்மையான சபைக்கு, உண்மையான திராட்சைச் செடியாகிய புது சிருஷ்டிக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கு மாறாக இருக்கிறது.

வேதாகமத்தில் கிறிஸ்துவின் சபையானது ‘‘தேவனின் இரகசியம்’’ என்று அழைக்கப்படுவது குறித்த உண்மையை ஏற்கெனவே கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஏனெனில் எதிர்பார்ப்புக்கு

மாறாக, சபையானது மேசியாவின் சரீரமாக இருந்து, அதன் அபிஷேகம் பண்ணப்பட்ட தலைவரான இயேசுவுக்குக் கீழ் உலகத்தை ஆளுகை செய்து, ஆசீர்வதிக்கும். கடந்த யுகங்களுக்கும், நியமங்களுக்கும் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த இரகசியம் அல்லது பரம இரகசியம் இப்பொழுது பரிசுத்த வான்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (எபே. 3:3–6) இந்த இரகசியமானது சீக்கிரத்தில் இந்த சுவிசேஷ யுகம் முற்றுப்பெறும்போது, புது சிருஷ்டி பூர்த்தியாகும்போது முடிந்துவிடும். பாபிலோனை ஒரு போலியான ஒழுங்கு முறை (தாயும் குமாரத்திகளும் –சிலர் அதிகமாக, சிலர் குறைவாக மோசமானவர்கள், சிலர் அதிகமாக, சிலர் குறைந்த பட்சம் போலியானவர்கள்) என வேதம் குறிப்பிடுவதை ஏற்கனவே நாம் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். அதுதான் ''அக்கிரமத்தின் இரகசியம்'' எனப்பட்டது. இந்த போலியான ஸ்தாபனங்களை ஏற்படுத்தியவர்கள் ஒரு நோக்கத்துடன் அல்லது வேண்டுமென்றே தேவனுடைய ஜனங்களை தவறாக வழி நடத்துவதற்கு ஏற்படுத்தினார்கள் என்று நாம அர்த்தப்படுத்தித் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. அதற்குப் பதிலாக, இந்த விஷயத்தில் சாத்தான் தான், தீமையை நன்மை என்றும், நன்மையை தீமை என்றும் கூறி, இருளை வெளிச்சமாகவும், வெளிச்சத்தை இருளாகவும் காட்டி ''முழு உலகத்தையும் வஞ்சித்தான்'' என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சாத்தான் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்கு ஒத்துழைப்பது போன்று பாசாங்கு செய்து ''இப்பொழுது கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிறான்.'' (ஏசா. 5:20; எபே. 2:2) கிறிஸ்துவின் வழியிலிருந்து திசைமாறப்பண்ண ஏதுவான கிறிஸ்தவர்கள் அனைவரோடும் அவன் ஒத்துழைப்பதில் மகிழ்ச்சியடைகிறான்; பூலோகத்திலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும்படியாக, தன்னையே தியாகம் செய்வது, தன்னைத்தான் வெறுப்பது போன்ற பிதாவின் வழிகளைக் காட்டிலும் மேலான வழிகள் உண்டு என்று ஆண்டவரை இணங்கச்செய்ய முயற்சித்தது போல, இந்த சுவிசேஷ யுகத்திலும் அவன் பிதாவினுடைய திட்டங்களுக்கும் வழிமுறைகளுக்கும், உண்மையாகப் பிரதிஷ்டை செய்துகொண்ட ஆண்டவருடைய சகோதரர்கள் அதிக கவனம் செலுத்தக் கூடாது என்ற அவனுடைய திட்டத்திற்கு அவர்கள் இசையும்படி முயற்சித்துக் கொண்டிருக்கிறான். வேதாகமம் சுட்டிக்காட்டுகிறவை களைக் காட்டிலும் வேறு வழிகளில் ஆண்டவருக்கு ஊழியம் செய்யமுடியும்

என்று நினைக்கும்படி அதிக ஞானம் படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்று அவன் விரும்புவான். மனுஷீக முறைகளின் மீதும், அவர்கள் செய்யும் வேலையின் மீதும், அவர்கள் ஆரம்பித்துள்ள ஸ்தாபனங்கள் மீதும், வைராக்கியமும், பெருமையும் கொள்ளும்படியான உணர்வுகளால் அவர்களை நிரப்புவான். ஆண்டவரிடம் சத்துருவுக்கு வெற்றி கிட்டவில்லை, ஏனெனில் எப்பொழுதுமே அவருடைய மாறாத பதில் ''எழுதியிருக்கிறதே'' என்பதாகும். ஆனால் அவரைப் பின்பற்றுகிறவர் களோடு அப்படியிருந்ததில்லை. ஆனால் ஏராளமானோர் எழுதப் பட்டிருக்கிறதை அலட்சியப்படுத்துகிறார்கள்; ஆண்டவரின் உதாரணத்தையும் வார்த்தைகளையும் அலட்சியப்படுத்துகிறார்கள்; அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும் உதாரணத்தையும் அலட்சியப்படுத்துகிறார்கள்; அவர் அனுமதிக்கிறார் என்று அவர்கள் நம்புகின்ற, அவருக்குத் துதிகளைப் பெருகப்பண்ணும் என்று விசுவாசிக்கிற ஒரு திட்டத்தை தேவனுக்கென்று செயல்படுத்துவதில் மும்முரமாயிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள், தேவன் ஆரம்பத்தில் திட்டமிட்டபடியே தேவனுடைய ராஜ்யம் வருவதையும், அவரது முறையின்படியே எல்லாம் நடந்தேறுகிறது என்பதையும் அவர்கள் காணும்போது, எவ்வளவு தவறாகப் புரிந்து கொண்டோம் என்று அவர்கள் உணர்வார்கள் அல்லவா! அதன் பின்னர், அவருக்குக் கற்றுக்கொடுக்க முயற்சிப்பதைக் காட்டிலும் தேவனால் கற்றுக்கொடுக்கப்படுவதற்காக எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையும், அவர் அங்கீகரிக்காத வேலையை அவருக்குச் செய்யாமல், அவருடைய வழியில் அவருடைய வேலையைச் செய்வது நல்லது என்றும் கண்டு கொள்வார்கள். இந்த மனுஷீக திட்டங்களில் உள்ள வெற்றி, ரோமன் கத்தோலிக்க சபை, மெதடிஸ்ட் சபைகளில் உள்ள அளவுக்கு மற்ற சபைகளிலும் காணப்படும்போது, இம்மாதிரியான முறைகள் ''மிகவும் மாய்மாலம்'' உள்ளதாக தோற்றமளிக்கின்றன.

இந்த சுவிசேஷ யுகத்தின்போது கோதுமை நிலத்தில் களைகள் வளருவதை ஆண்டவர் தடை பண்ணவோ, அதில் தலையிடவோ இல்லை. அதற்கு மாறாக அவைகள் இரண்டும் ''அறுவடை'' காலம் வரை ஒன்றாக வளரும்படியாக எதிர் நோக்கியிருக்க வேண்டும் என்று தன்னுடைய ஜனங்களுக்குப் போதித்தார். அந்த நேரத்தில் அவரே அங்கு இருந்து,

அவைகள் பிரிக்கப்படுவதை மேற்பார்வையிட்டு, கோதுமையை அவருடைய களஞ்சியத்தில் (மகிமையடைந்த நிலையில்) சேர்ந்து, உபத்திரவத்தின் காலத்திற்கென களைகள் மொத்தமாகக் கட்டப்படும்படியாகப் பார்ப்பார், இதோடு யுகமும் முடியும்._அப்போது அவைகளை மனிதர்களை அழிப்பதுபோன்று அழிக்காமல் அவைகளைக் ''களைகளாக'' அல்லது போலியான புது சிருஷ்டிகளாக அழிப்பார். உண்மையிலேயே களைகளில் அநேகர், மதிப்பிற்குரியவர்களாக, ஒழுக்கமுள்ளவர்களாக, உலகம் அழைக்கின்ற விதமாக ''நல்ல ஜனங்கள்'' என்றிருப்பார்கள். ஆகவே எல்லா புறஜாதியாரின் மதங்களிலும் கூட நல்லவர்கள் என்று சொல்லப்படக் கூடியவர்கள் உண்டு. ஆனாலும் களைகளைக் காட்டிலும் குறைவானவர்களாகவே இருப்பார்கள். இந்தக் களைகள் என்று அழைக்கப்படுகிறவர்கள் உண்மையான ''கோதுமையோடு'' கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினால் எல்லா விதத்திலும் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், அனுகூலம் பெற்றவர்களாகவும், கோதுமையில் உள்ள ஆண்டவரின் ஆவியை ஓரளவுக்குப் பகுத்தறிந்தவர் களாகவும் இருக்கிறார்கள்.

பவுல் அறிவிக்கின்ற அக்கிரமத்தின் இரகசியம் (''பாபிலோன்,'' குழப்பம், கிறிஸ்தவ மண்டலம்) அவருடைய நாட்களிலேயே ஆண்டவருடைய ஜனங்கள் மத்தியில் கிரியை செய்ய ஆரம்பித்திருந்தது; ஆனாலும் பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் மரணமடைந்த பின்னர் இருப்பது லேசாகக் காணப்பட்டது. அப்போஸ்தலர்கள் சபையோடு இருக்கும் போதே, சத்துருவானவன் சில கள்ளப் போதகர்கள் மூலமாக, விசுவாசிகளின் விசுவாசத்தை மட்டுப்படுத்தவும், விசுவாசிகளை சுவிசேஷத்தின் எளிமையான தன்மையிலிருந்தும் நம்பிக்கையிலிருந்தும், வாக்குத்தத்தங்களிலிருந்தும் திசை திருப்பும்படியாகவும் கேட்டுக் கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழையப்பண்ணுவதைக் கண்டு, அப்படிப்பட்ட கள்ள போதகர்களை அவர்களால் சுட்டிக்காட்ட முடிந்தது. (2பேது. 2:1) அக்கிரமத்தின் கிரியைகளை ஆரம்பித்தவர்கள் என்று சிலரைக்குறித்து அப்போஸ்தலர் பொதுவாகக் கூறுகிறார். ஆனால் தனிப்பட்ட முறையில் இமநேயும், பிலேத்தும் சத்தியத்தை விட்டு விலகி சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள் என்று கூறுகிறார். (2 தீமோ. 2:17) இவ்விதமான கள்ளபோதகர்களைக் குறித்தும், அவர்களுடைய தவறுகளைக் குறித்தும் எபேசு சபையில் உள்ள மூப்பர்கள் மூலமாக, அவருடைய மரணத்திற்குப் பின்னர் இப்படியானவர்கள்,

மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் என்று மறுபடியும் சபையை அவர் எச்சரித்தார். (அப். 20:29) கடைசியாகச் சொல்லப்பட்ட இது குறிப்பிடத்தக்கவிதமாய் நம்முடைய ஆண்டவர் உவமையில் முன்கூட்டியே சொன்னதிற்கு இசைவாக இருக்கிறது. (மத். 13:25,29) இந்தக் கள்ள போதகர்களும் இவர்களுடைய கள்ள உபதேசங்களுமே, ஆண்டவரும் அப்போஸ்தலரும் நாட்டின கோதுமைக்குள் களைகளை விதைத்த சத்துருவின் கையாட்கள் என்பதை ஆண்டவர் தெளிவாகக் காட்டுகிறார். அவர் சொல்கிறதாவது: ''மனுஷர் (விசேஷ ஊழியக்காரர், அப்போஸ்தலர்கள்) நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து களைகளை விதைத்தான்.''

அப்போஸ்தலர்கள் நித்திரை அடைந்து வெகு காலம் ஆவதற்கு முன்னரே, சத்துரு, விரோத உணர்வு வரும்வரை, போப்பு மார்க்கம் என்ற ஒரு பெரிய அந்தி கிறிஸ்துவின் முறைமை உருவாகும் வரை படிப்படியாக வழி நடத்தினான் என்று நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். அந்த அமைப்பு நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி (தொகுதி 2, அத்தி. 9) உடனடியாக உண்டாக்கப்படவில்லை. அது நான்காம் நூற்றாண்டு அளவில் ஆரம்பித்து தொடர்ந்து படிப்படியாக அதன் பலத்தைப் பெற்றுக்கொள்ளத் துவங்கியது. மாபெரும் அந்திக்கிறிஸ்து என்ற அமைப்பு அவ்வளவு வெற்றிகரமாக விருத்தியடைந்தபடியால் அந்த காலத்திலிருந்து ''சீர்திருத்தம்'' காலம் வரை எழுதப்பட்ட சரித்திரங்கள் எல்லாம், அந்தி கிறிஸ்து முறைமைக்கு உடன்படாத அல்லது எந்த ஒரு விதத்திலாவது அதை ஆதரிக்காத ஒவ்வொரு கிறிஸ்தவனையும், கிறிஸ்தவ வகுப்பாரையும், அவர்களது உரிமைகளையும் புறக்கணித்து, அவர்களைப் புராதன முறைகளைக் கடைபிப்பவர்கள், அல்லது விசுவாசமுள்ளவர்கள் என்று கணிக்காமல் ஒதுக்கி வைத்தன. மற்றவர்கள் இரகசியமாகவும், தடைகளோடும் ஜீவிக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களைக்குறித்து குறிப்பு இருக்குமென்றால், அவைகள் அழிக்கப்பட்டன. ஒரு வேளை, இன்று தற்கால சத்திய வெளிச்சத்தில் நடப்பவர்களைப்போன்று அந்த காலத்தில் விசுவாசிகள் எண்ணிக்கையிலும், செல்வாக்கு செலுத்துவதிலும் விகிதாச்சாரப்படி அவ்வளவு சொற்பமானவர்களாக இருந்தபடியால் அவர்கள் எதிர்க்க முயற்சி செய்கின்ற மாபெரும் வெற்றிகரமான முறைமையோடு ஒப்பிடுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று அவர்களை ஒருவரும் எண்ணியிருக்க மாட்டார்கள். மேலும் அந்த முறைமை இம்மைக்குரிய

ஆவிக்குரிய காரியங்களில் செல்வாக்குள்ள, பலமுள்ள இடத்திற்குத் துரிதமாக முன்னேறியது.

''சீர்திருத்த காலத்திலிருந்து'' (சத்தியத்தை அடையும்படியான) ஒவ்வொரு புது முயற்சியையும் இன்னொரு அந்திக் கிறிஸ்துவுக் குள்ளாகும்படி அமைப்பதில், சத்துருவானவன் மறுபடியும் தன்னுடைய தந்திரத்தைக் காட்டியுள்ளான்; ஆகவே இன்றைக்கு நம் மத்தியில் ''வேசிகளின் தாய்'' மட்டுமல்ல, அவளுடைய அனேக ''குமாரத்திகளும்'' உண்டு. இந்த உண்மைகளினிமித்தம், புதிய ஏற்பாட்டில் நாம் காண்பதைத் தவிர உண்மையான சபையின் சரித்திரத்தை தேடமாட்டோம்; இடையில் செருகப்பட்ட யோவான் 21: 25; 1யோவா.5:7 போன்ற சில வசனங்களை ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்து, புதிய ஏற்பாட்டில் உள்ள இவைகள் நமக்காக மிகவும் பரிசுத்தமாக, உண்மையுடன் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், சுருக்கமாக சில உண்மைகளைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்; இவைகள் வேதம் ஒப்பிடும் அளவிற்கு உண்மையுடன் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதை நிரூபிப்பது மாத்திரமல்ல, அதே நேரத்தில் ஆண்டவராலும், அப்போஸ்தலர் களினாலும் ஏற்பட்டதாகக் கூறப்படும் முறைகள், அவைகள் (அந்திக்கிறிஸ்து முறைமை) ஏற்படுத்தினவைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை என்பதையும் உறுதிப்பட கூறுகின்றன; இவைகளைப்பற்றி நமக்கு புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

(1) புராதன சபை, போப்பு சபை அல்லது இன்றைக்கு உள்ள மற்ற சபைகளைப் போன்று ஒழுங்குபடுத்தப்பட்டிருக்குமென்றால் அதைப் பற்றிய குறிப்புகள் இன்றைக்கு இருப்பதைக்காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருக்கும். நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர் களை ஏற்படுத்திய போது அது ஒரு வைபவமாக அமைத்தார் என்பதைப் பற்றிய சில குறிப்புகள் நமக்கு கிடைத்திருக்கும்; அவரே ஒரு போப்பைப் போன்று ஆடம்பரமாக எங்கேயோ ஒரு இடத்தில் அமர்ந்து, அப்போஸ்தலர்களை இரத்தாம்பர அலங்கார அங்கிகள் அணிந்தவர்களாக, கார்டினால்களைப் (cardinals) போல வரவேற்பது போன்ற காரியங்களை செய்து கொண்டு இருந்திருப்பார்; வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் உண்ணக்கூடாது என்பது போன்ற சட்டதிட்டங்கள் நமக்கு இருந்திருக்கும்; மேலும் ''பரிசுத்த ஜலத்தை'' (தீர்த்தம்) அப்போஸ்தலர்கள் அல்லது ஜனங்கள் மேல் தெளிப்பது

போன்றவைகளைக் குறித்தும், சிலுவை அடையாளம் போடுவதைக் குறித்தும் சட்ட திட்டங்கள் நமக்கு இருந்திருக்கும்; நம்முடைய ஆண்டவருடைய தாயாகிய மரியாள் மறக்கப்பட்டிருக்கமாட்டார்; அவருடைய தாய் அற்புதமாக அவதரித்தார் என்று சொல்லப்படும் கூற்றைக் குறித்தும் ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கும்; மேலும் அவருடைய தாய் ''தேவ மாதா'' என்று அறிவிப்பு வெளியாக்கப் பட்டிருக்கும்; மேலும் இயேசுவே அவருக்கு ஒரு விசேஷ மரியாதை செய்வது போன்று அர்த்தப் படுத்தப்பட்டிருக்கும்; அப்போஸ்தலர்களைக் கூட தாயார் மூலம் தன்னிடம் வரும்படியாக அவர் சொல்வதாக அர்த்தப்படுத்தப்பட்டிருக்கும்; ''பரிசுத்த மெழுகுவர்த்திகளைக்'' குறித்தும், அவைகளை எப்பொழுது, எங்கே, எப்படி உபயோகிக்கப்படல் வேண்டும் என்பதைக் குறித்தும் சில கட்டளைகள் கொடுக்கப் பட்டிருக்கும்; பரிசுத்தவான்களின் ஜெபத்தை மதிப்பதைக் குறித்த போதனைகள், ''திருப்பலி பூஜை''யைப் பற்றிய போதனைகள்,பேதுரு மற்ற சீஷர்களை சந்திப்பதும், அதனால் போப் என்று அவர் குறிப்பிடப்படுவதைக் குறித்தும், அவர் முன்பாக அவர்கள் எப்படி தாழ விழுந்து வணங்கினார்கள் என்பதைக் குறித்தும், அவர்களுக்காக அவர் எப்படி திருப்பலி பூஜை நடத்தினார் என்பதைக் குறித்தும், அப்பத்தில் மறுபடியும் கிறிஸ்துவை உண்டு பண்ணி, தனிப்பட்ட மீறுதலுக்காக அவரை இன்னொரு முறை பலியாகச் செலுத்தவும் அவருக்கு வல்லமை உண்டு என்பதைக் குறித்தும் சில போதனைகள் கொடுக்கப்பட்டிருக்கும்; மேலும் ஸ்தேவான் அடக்கம் பண்ணப்பட்டதைக் குறித்தும், ''பிரதிஷ்டை செய்யப்பட்ட கல்லறையில்'' ஸ்தேவான் அடக்கம் பண்ணும்படியாக, பேதுரு அல்லது மற்றவர்கள் எப்படி ஒரு கல்லறையை அவருக்கென ''பிரதிஷ்டை செய்திருப்பார்கள்'' என்பதைக் குறித்தும், அவருக்கென சில ஜெபங்களை சொன்ன சமயத்தில் ஒரு ''பரிசுத்த மெழுகு வர்த்தியை'' எப்படி அவரது கரத்தில் வைத்தார்கள் என்பதைக் குறித்தும் நமக்கு சொல்லப்பட்டிருக்கும்; பல்வேறு வகுப்பைச் சார்ந்த மத குருமார்களைக் குறித்தும், பாமர மக்கள் அவர்களுக்குச் சகோதரர்களே அல்ல, ஆனால் அவர்களுக்கு கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் குறித்தும் நமக்கு சட்டதிட்டங்கள் இருந்திருக்கும்; மத குருமார்களிடையே, உயர்ந்தவர், தாழ்ந்தவர், மதிப்பைப் பெற்றவர், நன்மதிப்பைப் பெற்றவர், மிக நன்மதிப்பைப் பெற்றவர், பிஷப், ஆர்ச் பிஷப், கார்டினால்கள், போப்புகள் என்று பிரிவுகளும் உண்டு என்றும் நமக்குக் கூறப்பட்டிருக்கும்; மேலும் எப்படி ஒருவரிடமிருந்து ஒருவர்

கனத்தைதேடி, ஒவ்வொருவரும் அவர்களுடைய நிலையை அடைய வேண்டும் என்பதைக் குறித்தும், யார் பெரியவராக இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும் குறிப்பாக சொல்லப் பட்டிருக்கும்.

மேலே சொல்லப்பட்டவைகள் அப்போஸ்தலர்களால் மறைமுக மாகக் கூடச் சொல்லப்படவில்லை என்பது, சபை பகுதியாகவோ, அல்லது முழுமையாகவோ இப்படிப்பட்ட பிரிவுகளைக் கொண்டிருந்தது என்று சொல்லிக்கொள்கிற ஒழுங்குகள், இப்படியான அதிகார வர்க்கங்கள், இப்படியான பதவிகள், அப்போஸ்தலர்களால் அல்லது அவர்களுடைய யோசனையின்படி ஏற்படுத்தப்பட்டது அல்லது அப்போஸ்தலர்களை நியமித்து, அவர்களுடைய வேலையை அங்கீகரித்த ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டது என்று கூறமுடியாதபடி நல்ல ஆதாரத்துடன் இருக்கிறது. (யோவா. 15 :16; அப். 1:2; வெளி. 21:14)

(2) மேலும் வேதாகமம், இந்த ஞானமான அமைப்பாளர்களால் உண்டுபண்ணப் படவில்லை என்றும் நிரூபிக்கிறது. அவர்கள் போலியான தொன்றை உண்டுபண்ணி யிருப்பார்கள் என்றால் நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளவேண்டும், எப்படியெனில் மேலே சொல்லப்பட்டவைகளுக் கேற்றவாறு, நாம் மேற்கோள் காட்டியபடி, அநேக குறிப்புகளை அதில் கொடுத்திருப்பார்கள்.

(3) இன்றைக்கு காணப்படுகின்ற ''தாய் மற்றும் எண்ணற்ற குமாரத்தி'' முறைகள் ஆண்டவரால், அப்போஸ்தலர்களால் ஏற்படுத்தப்படவில்லை என்பதற்கு அநேக அதிகாரப் பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றன. இவைகள் அவர்களுடைய எளிமையான போதனைகளின் தப்பறைகளினால் நிகழ்ந்தன. ஆகவே அவைகள் மனிதனால் ஏற்படுத்தப் பட்டவைகள்தான், திவ்விய வேலையைச் செய்வதில் தேவனைக் காட்டிலும் ஞானவான்களாக இருக்க முயற்சித்ததால் வந்தவைகளாகும். ஆகவே நாம் இந்த விஷயத்தைக் குறித்தும், மற்ற எல்லா விஷயங்களைக் குறித்தும் நமக்கு முன்பாக அது வைக்கின்ற மிகச் சிறிய குறிப்புகளுக்கும் கூட நாம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த காலம் வரையான கடந்த 6000 வருட உலக சரித்திரத்தின் போது, மனுக்குலமானது, பொதுவாக வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதில் தங்களால் முடிந்தவரை செய்து கொள்ளுமாறு

தேவன் அனுமதித்திருக்கிறார். இயற்கையாகவே மனிதன் தன்னுடைய சிருஷ்டிகரைக் கனப்படுத்தவும், ஆராதிக்கவும் மனதுடையவனாய் சிருஷ்டிக்கப்பட்டான். இப்படிப்பட்ட நிலைமை மனிதன் விழுந்து போனதினால் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. ''முற்றிலுமாக சீரழிதல்'' என்பது பொதுவாக மனுக்குலத்தைப் பொறுத்த அளவில் உண்மையல்ல. மனிதர்கள் தாங்கள் தெரிந்து கொள்ளுகிறபடி தங்களுடைய மற்ற குணாதிசயங்களை உபயோகப்படுத்தும்படி தேவன் அனுமதிக்கிற படியால், தங்கள் விருப்பப்படியே அவர்களுடைய ஒழுக்கமும், மதத்தைப்பற்றிய விசேஷ குணங்களை உபயோகப் படுத்தும்படி அனுமதித்திருக்கிறார். மாம்சீக இஸ்ராயேல், ஆவிக்குரிய இஸ்ராயேல் ஒரு பக்கமிருக்க, இவைகளிலிருந்து உலகத்திற்குச் சென்றிருக்கிற அவைகளுடைய ஈர்ப்புகளை நாம் பார்க்கும் போது, உலகமானது தனது சுய அபிவிருத்தி போன்றவற்றை தன்னால் முடிந்தவரை நலமானதைச் செய்யயட்டும் என்று தேவன் உலகத்தைத் தனியே விட்டுவிட்டார். மனிதன் அநேகமாக தன்னுடைய அறியாமையினாலும், குருட்டாட்டத்தினாலும், சாத்தான் மற்றும் விழுந்து போன தூதர்களின் தந்திரங்களுக்கு இரையாகி விட்டான். இவைகள் பல்வேறு விதமான மூடநம்பிக்கைகள், பொய்யான மதங்கள், மாயா ஜாலங்கள் போன்றவைகளின் மூலம் ஜனக்கூட்டத்தை சத்தியத்தைவிட்டு விலகும்படியாகச் செய்திருக்கிறான். அப்போஸ்தலர் இதைக் குறித்துச் சொல்லும்போது, இது இப்படியாயிருக்கிறது: ''ஏனெனில் மனிதர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரி யாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது,'' தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவர்களுக்கு இஷ்டமான வழியில் செல்லும்படியாக அனுமதித்தார், எதற்கெனில் அவர்களுடைய சொந்த சீரழிவைக்குறித்ததான பாடங்களைக் கற்றுக் கொள்ளவும், அதிகதிகமான பாவநிலையினால், அவர்கள் விழுகின்ற சீரழிவை வெளிப்படுத்தவும், அவர்களுடைய சிருஷ்டிகரின் ஆலோசனையைத் தவிர வேறு எந்த ஆலோசனைக்கும் செவிகொடுக்கிற ஞானமற்ற செயலை வெளிப்படுத்தவும் அப்படியாக அனுமதித்தார்.

நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி, ஆண்டவர் மனுக்குலத்தை இப்படியான பெலகீனமான, விழுந்துபோன நிலையில் விட்டுவிட நோக்கம் கொண்டவரல்ல. ஆனால் புது சிருஷ்டியின் மூலம், அவருடைய

குறித்த வேளையில், கர்த்தரை அறிகிற அறிவு, சத்தியத்தை அறியும்படியாக முழு தருணத்தோடும் மீட்பின் மூலமாக வந்த எல்லா ஆசீர்வாதங்களோடும் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் சென்று அடையும். ஆனால் இங்கு நாங்கள் விசேஷமாகச் சொல்ல விரும்புகிற குறிப்பு என்னவெனில், தேவன் இப்படியாக புறஜாதி தேசங்களை அவர்களே பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிட்டது போன்று, ''கிறிஸ்தவ மண்டலம்'' என்று அழைக்கப்படுவதையும் அதற்கென விட்டு விட்டார். சில திவ்விய வெளிப்பாட்டின் வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்ட மனிதர்களை அவர்கள் விருப்பப்படி உபயோகிக்கவும், மனித முறைமைகள் போன்றவைகளை ஒழுங்கு பண்ணவும், திவ்விய திட்டத்தில் அபிவிருத்தி பண்ணும்படி அவர்கள் முயற்சி பண்ணவும் அவர் மனிதர்களை அனுமதிக்கிறார். இவைகளிலெல்லாம், அவர் தலையிடுவதற்கு அதிகாரம் இல்லையென்றோ, கிறிஸ்துவை மையமாகக் கொண்டிராத சபை, மற்றும் மனுஷீக ஸ்தாபனங்கள் வைத்திருக்கும் பல்வேறுவிதமான முரண்பாடுள்ள, கிட்டத்தட்ட தீமை விளைவிக்கக் கூடிய முறைகளை ஆதரிக்கிறார் என்றோ பொருள்படாது. இந்த அனுபவங்கள் இன்னொரு பாடமாக அமையும். இது, அவர்கள் காலம் செல்லச் செல்ல, தேவன் மனிதனுடைய திட்டங்களையும், முறைகளையும் முற்றிலுமாகப் புறக்கணித்து விட்டு, அவருடைய காரியங்களை சில வேளைகளில், ஒரு சிலவற்றை மனிதர்கள் மூலமாகவும், சில வேளைகளில் முற்றிலும் மாறுபட்ட விதத்திலும் தேவன் தொடர்ந்து கிரியை நடப்பித்து திவ்விய திட்டதின் மூலம் வந்த உன்னதமான காரியங்களை அவர்கள் அறிந்து கொள்ளும்போது அனேகரை அது குற்றப்படுத்தும். யூத யுகம் முடியும் தருவாயில் அந்த ஜாதியினர் சிலரை ஆண்டவரையும் அவருடைய அப்போஸ்தலர்களையும் உபத்திரவப் படுத்தவும், சிலுவையில் அறையும்படியான அவருடைய திட்டத்தைச் செய்து முடிக்கவும் அனுமதித்தலைப் போன்று இருக்கும். அவர்களில் சிலர் ''உண்மையான இஸ்ரயேலராக'' இருந்தபடியால், படிப்படியாக அவருடைய மகிமையில் பங்குள்ளவர்களாகும்படி, உயர்த்தப்பட்டு, கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்குள்ளவர்களாக்கப் பட்டார்கள். ஆகவே இப்பொழுது, ஒருவேளை ஆவிக்குரிய ''உண்மையான இஸ்ரயேலர்கள்'' பவுலைப் போன்று சத்துருவின் கண்ணிகளிலிருந்து மீட்கப்படுவார்கள்.

இன்னொரு குறிப்பு கவனத்திற்குரியது: ஆண்டவர் அவருடைய இராஜ்யம் ஆரம்பிக்கப்படுவதற்கென ஒரு விசேஷ காலத்தை

வைத்திருக்கிறார். ஆகவே அந்த விசேஷ காலத்தில் அவரது தெரிந்து கொள்ளப்பட்ட புது சிருஷ்டி, அபிவிருத்தி செய்யப்பட்டு அவருடைய ஊழியத்திற்கென ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும். ஆகவேதான் விசேஷமான ஒளி இந்த காலத்தின் ஆரம்பத்திலும் இந்த காலம் முற்றுப்பெறும்போதும் பிரகாசிக்க வேண்டும் என்பது அவருடைய திட்டத்தின் ஒரு பகுதியாயிருந்தது தெரிகிறது. ''உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு'' என்று நம்மைப்பற்றிக் குறிப்பிடும்போது அப்போஸ்தலனாகிய பவுல் இதைக் தெரிவிக்கிறார். (1கொரி. 10:11) யூதயுகமும் சுவிசேஷ யுகமும் கலந்திருந்த காலத்தில் வழியும், சத்தியமும், ஜீவனும் முதலில் வெளிப்படுத்தப்பட்டன. ''இருண்ட யுகங்கள்'' இடையில் வந்தது. இப்போது சுவிசேஷ யுகமும் ஆயிரவருட யுகமும் கலந்திருக்கும்போது ''புதியவைகள் மேலும் பழையவைகள் மேலும்'' இதற்கு முன்பு என்றும் இருந்திராத அளவுக்கு வெளிச்சம் பிரகாசிக்கிறது. யுகத்தின் ஆரம்பத்தில் ஆண்டவரோடு ஒரு மனதாய் காணப் பட்டவர்களுக்கு விசேஷமான ஒளி வழங்கப்பட்டது என்றும் நாம் அறியும்போது, அப்படிப்பட்டவர்கள் இப்போது, யுகத்தின் முடிவில், அவர்கள் பரிசுத்தமாக்கப்படும் பொருட்டு தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெறுவார்கள். இடையில் வந்த நூற்றாண்டின்போது பரிசுத்தமாக்கப்படுதலுக்கு அதே அளவு வெளிச்சம் தேவைப்பட்டது என்று நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. இடையில் வந்த காலங்களில் சில ''இருண்ட யுகங்கள்'' என்று அழைக்கப்படுகின்றன. இந்த காலத்தில் சரித்திரம் அவர்களைக் (விசுவாசிகளை) கண்டு கொள்ளவில்லை, ஆகையால் ஆண்டவருக்கென சாட்சிகள் இல்லாமல் எப்போதும் விட்டுவிட்டார் என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்களில் சிலர் இந்த கிறிஸ்தவ முறைகளில் உள்ளவர்களாக இருந்த போதிலும், அவர்கள் கண்டு கொள்ளப்படாமல் போனதின் காரணம், அவர்கள் அதிகமாக பிரபல மாகாததும், கிறிஸ்தவ முறைகளுக்கு அனுதாபம் காட்டுகிறவர் களாக இல்லாமல் இருந்ததும், அந்த முறைகளோடு சம்பந்தம் இல்லாதவர்களாக இருந்ததுமே என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே ஆண்டவருடைய அழைப்பு இப்போது பொருத்தமாயிருக்கிறது. இது தெளிவாகக் காட்டுவது என்னவெனில் ஆண்டவரின் ஜனங்களில் அநேகர் பிரிவினைகளைக்குறித்து குழப்பமும், வனாந்திர நிலையில் உள்ளவர்களாக பாபிலோனில் இருக்க நாம் எதிர்பார்க்க வேண்டும்

என்பதே. ''மகா பாபிலோன் விழுந்தது, என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்.'' (வெளி. 18: 2,4)

சபையைக்குறித்தும், அதனுடைய ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கான சரித்திரத்தையும் இப்படியாக துரிதமாகக் கண்டு, மிகவும் குறிப்பாக நம்முடைய ஆண்டவரால் ஆதியில் ஏற்படுத்தப்பட்ட சபையைக் குறித்து ஓர் ஆய்வு செய்வோம். ஆண்டவருடைய ஒரே ஆவி உண்டு, அதை அவருடையவர்களாயிருக்கிறவர்கள் எல்லாரும் பெற்றுக்கொள்ள வேண்டும்; அப்படியே ஒரே தலையாகவும் சபையின் மையமாகவும் இருப்பவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. இருந்த போதிலும், நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது என்னவெனில், அவருடைய கிரியைகள் எல்லாவற்றிலும் பிதாவானவர் எல்லாவிதத்திலும் அங்கீகரிக்கப்பட்டார்; அவருடைய சொந்த வாக்கின்படி அவருடைய கிரியை பிதாவின் நாமத்தில் செய்யப்பட்டது, பிதாவின் அதிகாரத்தினால் செய்யப்பட்டது. ''என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேறோடே பிடுங்கப்படும்.'' (மத்.15:13) உண்மையான சபை, புது சிருஷ்டி பிதாவினால் நடப்பட்டதாகும். நம்முடைய ஆண்டவர் சொல்லுகிறார், நானே மெய்யான திராட்சை செடி, நீங்களெல்லாரும் கொடிகள், என்பிதா தோட்டக்காரர். அதன் பின்பு அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், ''பூமியில் ஒரு திராட்சை செடியுண்டு,'' அது பேர் சபை, பொய்யான சபை, அது பிதாவினால் நடப்படவில்லை, அவைகள் எல்லாம் பிடுங்கி எறியப்படும். உண்மையான திராட்சை செடியின் கனியானது அன்பாகும், அது பிதாவுக்கு அருமையானது. ஆனால் பூமியின் திராட்சை செடியின் கனியானது பல்வேறு கோணங்களில் காணப்படும் தன்னலமாகும். அவைகளெல்லாம் இறுதியில் தேவனுடைய கோபாக்கினை என்னும் பெரிய ஆலையில் போடப்படும், அத்துடன் இந்த யுகம் முடிவடையும். (யோவா. 15:1–6; வெளி.14:19)

நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலரும் சபையில் பிரிவினையை ஆதரிக்கவில்லை; மேலும் அபிப்பிராய பேதங்கள், கருத்திலும் பெயரிலும் காணப்பட்டவைகளை ஒதுக்கித் தள்ளினர் என்பதை ஒவ்வொரு வேத மாணவனுகு நிச்சயமாகவே கவனித் திருப்பார். ஒரே விசுவாசம், ஒரே கர்த்தர், ஒரே ஞானஸ்நானம் என்பது

போன்று அவர்களுக்கு சபையும் ஒன்றாகப் பிரிக்க முடியாததாக இருந்தது. இந்த நிலையிலிருந்து சபையானது, தேவசபை யென்றும், ஜீவனுள்ள தேவனுடைய சபைமுயன்றும், கிறிஸ்துவின் சபையென்றும், முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையென்றும் அழைக்கப் படுகிறது. அதிலுள்ள தனிப்பட்ட நபர்கள் ''சகோதரர்களென்றும்,'' ''சீஷர்களென்றும்,'' ''கிறிஸ்தவர்களென்றும்'' அழைக்கப்பட்டனர். இந்த பெயர்களெல்லாம் சபையைப் பொருத்த வரையில், சிறு கூட்டமாயிருந்தாலும், தனிப்பட்ட நபர்களாயிருந்தாலும், எருசலேமிலும் சரி, அந்தியோகியாவிலும் சரி, வேறு எங்கேயாகிலும் சரி சாதாரணமாக உபயோகிக்கப்படுகிறது. இப்படியாக பலவிதமான பெயர்களும், அவைகள் பொதுவாக உபயோகிக்கப்படுதலும், தெளிவாகக் காட்டுவதென்னவெனில், அவைகளில் ஒன்றுமே சரியான பெயர்கள் இல்லை என்பதாகும். சபை (எக்கிலீசியா, சரீரம், கூட்டம்), ஆண்டவரைப் பின்பற்றின சபையானது அவரால் ''தெரிந்தெடுக்கப்பட்டவர் களுடையது.'' அவர்கள் அவருடைய சிலுவையில் பங்கடையவும், இப்பொழுது தேவையான பாடங்களைக் கற்றுக்கொள்ளவும், படிப்படியாக அவருடைய மகிமையில் அவரோடு இணைந்திருக்கவும் வேண்டும் என்ற பெரிய உண்மையை விளக்குவதே நம்முடைய ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் தொடர்ந்து முன்பாக வைத்துக்கொண்டிருந்த முக்கியமான காரியமாகும்.

இந்த பழக்கம் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். ஆனால் இருண்ட யுகத்தின் போது மாற்றப்பட்டது. தப்பறைகள் அதிகரித்தபோது பிரிவினையின் ஆவி அதோடுகூட வந்தது. அதைத் தொடர்ந்து விசித்திரமான பெயர்களும் வந்தன – ரோம சபை, பேப்டிஸ்ட் சபை, லுத்தரன் சபை, இங்கிலாந்து சபை, பரிசுத்த கத்தோலிக்க சபை, வெஸ்லி சபை, கிறிஸ்தவ சபை, பிரஸ்பிட்டேரியன் சபை போன்றவைகளாகும். இவைகள் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறபடி (1 கொரி. 3 :3,4) மாம்சத்தின் அறிகுறிகளாகும். இவ்வளவு நாட்களாக உலகை மூடியிருந்த அந்தகார இருளிலிருந்து புது சிருஷ்டி வெளியே வரும்போது இந்த விஷயத்தைக் குறித்தும் அது தெளிவைப் பெற்றுக்கொள்கிறது; மேலும் தப்பறைகளையும், தப்பறைகள் போல காட்சியளிப்பவைகளையும் கவனித்து, சபைப் பிரிவுகளிலிருந்து வெளியே வருகிறது; அது மட்டுமல்ல, வேதத்திற்குப் புறம்பான பெயர்களால் அறியப்பட மறுப்பதுடன், வேதத்தின்படியான எந்த பெயரையும், அல்லது எல்லா பெயர்களையும், ஏற்றுக்கொள்ள வாஞ்சையாயிருக்கிறது.

இப்போது நம் ஆண்டவர் ஏற்படுத்திய ஒரே சபையின் அஸ்திபாரங்களைப் பார்ப்போம்:–

ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்

போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த அஸ்திபாரத்தின் மேல், நம்முடைய ஆண்டவர் பிதாவின் பிரதிநிதியாக தன்னுடைய சபையை வளர்க்க ஆர்ம்பித்தார். அப்படிச் செய்யும் போது அவர் பன்னிரண்டு அப்போஸ் தலர்களை அழைத்தார், தற்செயலாக அல்ல; ஆனால் அவருடைய திட்டத்தின்படியாக அழைத்தார்; இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் (பன்னிரண்டு தற்செயலாக அல்ல) திவ்விய திட்டத்தின்படி அழைக்கப்பட்டதுபோல, அப்போஸ்தலர்களை அழைத்தார். அந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு மேலாக அந்த ஸ்தானத்திற்கு அவர் யாரையும் தெரிந்து கொள்ள வில்லை என்பது மாத்திரமல்ல, அதற்கு மேல் யாருக்கும் அதிகாரமும் அளிக்கவில்லை. பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியேத்து அந்த ஸ்தானத்திற்கு அருகதையற்றவன் என்று நிரூபித்து அவனுடைய ஸ்தானத்திலிருந்து விழுந்தான், அப்போது அப்போஸ்தலர் பவுல் அந்த ஸ்தானத்திற்கு வந்தார்.

ஆண்டவர் எவ்வளவு பரிவோடு அப்போஸ்தலர்களைக் கவனித்தார் என்பதைக் காண்கிறோம்– பேதுரு மேல் அவர் கொண்டிருந்த பரிவு, அவனுடைய சோதனையில் அவனுக்காக அவர் ஜெபித்தது, பின்னர் அவருடைய ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மேய்க்கும்படியாக அவர் வேண்டுகோள் விடுத்தது, சந்தேகப்பட்ட தோமாவின் மேல் அவர் கொண்டிருந்த பரிவு, அவர் உயிர்த்தெழுந்த உண்மையை தோமாவுக்குப் பரிபூரணமாக விளக்கிக்காட்ட அவர் கொண்டிருந்த வாஞ்சை ஆகியவைகளைக் கவனிக்கிறோம். பன்னிருவரில் கேட்டின் மகனைத் தவிர யாரையும் அவர் இழக்கவில்லை. அவனுடைய விழுகை ஏற்கெனவே ஆண்டவருக்குத் தெரிந்திருந்தது; வேதத்தில் முன்கூட்டியே சொல்லப்பட்டிருந்தது. அப்போஸ்தலரின் நடபடிகளில் சொல்லப்பட்ட மத்தியாவின் தெரிந்தெடுக்கப்படுதலை வசனத்தின்படி ஆண்டவருடைய

தெரிவு என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. நிச்சயமாகவே அவன் நல்ல மனிதனாக இருந்தான், ஆனால் அதிகாரம் கொடுக்கப்படாமல் பதினொரு பேரால் தெரிந்துகொள்ளப்பட்டான். அவர்கள் எருசலேமில் காத்திரும்கும்படியாக, பெந்தகொஸ்தே நாளில் உன்னதத்திலிருந்து வரும் பெலனாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படியாகக் கட்டளைப் பெற்றிருந்தார்கள். இந்த வல்லமையினால் நிரப்பப்படுவதற்கு முன்னால், இந்த காத்திருப்பு நாட்களில் தானே அவர்கள் தவறுதலாக சீட்டுப்போட்டு யூதாஸின் இடத்தில் மத்தியாவைத் தெரிந்தெடுத்தார்கள். ஆண்டவர் அவரது ஒழுங்கு முறையில், இந்த திட்டமிடப்பட்டிராத தலையீட்டினிமித்தம் அவர்களைக் கடிந்து கொள்ளவில்லை. ஆனால் அப்படியே அவர்கள் தெரிந்து கொண்டதைப் புறக்கணித்தார். ஆனால் அவருடைய குறித்த காலத்தில் அப்போஸ்தலனாகிய பவுலைக் கொண்டு வந்து, ''நான் தெரிந்துகொண்ட பாத்திரம் என அறிவித்தார்;'' மேலும், அவன் விசேஷ ஊழியக்காரனாயிருக்கும்படி தன் தாயின் கர்ப்பத்தில் தெரிந்துகொள்ளப்பட்டான் என்ற அப்போஸ்தலரின் அறிவிப்பையும், மேற்கொண்டு மகா பிரதான அப்போஸ்தலரிலும் தான் ஒன்றிலும் குறைவுள்ளவன் அல்ல என்று அவர் கூறுவதையும் நாம் காண்கிறோம். (அப். 9:15; கலா. 1:15; 2கொரி. 11:5)

இதிலிருந்து நாம் காணக்கூடியது என்ன வெனில், போப்பு மார்க்கம், புராட்டஸ் டண்ட் எடிகோப்பல் சபை (Protestant Episcopal Church), கத்தோலிக்க–அப்போஸ்தல சபை (Catholic- Apostolic chruch), மொர்மோன் சபை (Mormons) ஆகியவைகளில் அப்போஸ்தலரின் எண்ணிக்கை பன்னிரண்டோடே நின்று விடவில்லை, அவர்கள் நாட்களிலிருந்து அவர்களைத் தொடர்ந்து மேலும் அதிகமானோர் உண்டு என்றும், அவர்கள் ஆதி அப்போஸ்தலர்களைப் போன்றே சரிசமமான அதிகாரத்துடன் பேசினார்கள், எழுதினார்கள் என்றும் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே. நாங்கள் இதை மறுக்கிறோம். இப்படியாகத் தெரிந்துகொள்ளப்படுதலுக்கு, சம்பந்தமாக, பரிசுத்தமான விஷயங்களில் பன்னிரண்டு என்ற எண்ணிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதைக் கருத்தில் கொண்டு, ஆண்டவர் எப்படி குறிப்பாக அந்த பன்னிரண்டு பேரைத் தெரிந்து கொண்டார் என்பதைக் கவனியுங்கள் என்று ஆதாரமாக எடுத்துரைக்கிறோம்; இதற்கு மையக் கருத்தாக வெளிப்படுத்தின விசேஷம் 21ம் அதிகாரத்தில் மகிமையடைந்த சபை அடையாள வரைப்படமாக காட்டப்பட்டிருப்பதை சுட்டிக்

காட்டுகிறோம்; அங்கே சபையானது ஆயிரம் வருட ஆட்சியின் அடையாளமான புதிய எருசலேம் எனவும், ஆண்டவரோடு இணைக்கப்பட்ட அவருடைய மணவாட்டி எனவும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. அந்த வரை படத்தில் நகரத்தின் மதிலுக்கு விலையேறப் பெற்ற பன்னிரண்டு அஸ்திபார கற்கள் இருந்தன என்றும், அவைகளின் மேல் ''ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலரின்'' பன்னிரண்டு நாமங்களும் (இதைக்காட்டிலும் கூடவோ, குறைவோ அல்ல) பதிந்திருந்தன என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் காட்டிலும் மேலும் அதிகமானோர் இருந்ததில்லை என்பதற்கு இதைக் காட்டிலும் மேலான எந்த ஆதாரம் நமக்கு வேண்டும். மேலும் இதற்கு மேலாக இருந்தவர்கள், அப்போஸ்தலர் பவுல் கூறுகிறபடி ''கள்ள அப்போஸ்தலர்களாயிருந்தார்கள்.'' (2கொரி. 11:13).

இதைக்காட்டிலும் அதிகமான அப்போஸ்தலர்களுக்கு எந்தத் தேவையும் இல்லை. ஏனெனில் அந்தப் பன்னிரண்டு பேரும் நம்மோடு இப்போதும் இருக்கிறார்கள். அவர்களுடைய ஊழியத்தின் நாட்களில் அவரோடு இருந்தவர்களுக்கு தெரிந்ததைக் காட்டிலும், அவர்களுடைய சாட்சியும், அவர்களுயை பிரயாசத்தின் பலன்களும் இன்றும் அதிகமான வசதியான முறையில் நமக்குத் தெரிகின்றது. அவர்கள் எழுதி வைத்த ஆண்டவரின் வார்த்தைகள், அற்புதங்கள், மற்றும் அவர்களது ஊழியங்களின் குறிப்புகளும் நம்மோடு இருக்கின்றன. கிறிஸ்தவ உபதேசங்களைக் குறித்து பல்வேறு தலைப்புகளில் சொல்லப்பட்ட அவர்களுடைய நிருபங்களில் உள்ள சொற்பொழிவுகள் இன்றைக்கும் திருப்திகரமான முறையில் நம்முடைய கரங்களில் உள்ளன. அப்போஸ்தலர் விளக்கமாகக் கூறுகிறபடி ''தேவனுடைய மனுஷன் தேறினவனாக இருக்க'' இவை ''போதுமானதாக'' இருக்கின்றன. இதைக்குறித்து மேலும் அப்போஸ்தலர் கூறும்போது, ''தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்கவில்லை'' என்கிறார். இதற்கு அதிகமாக என்ன வேண்டும்? (2 தீமோ. 3: 17; அப். 20:27)

நம்முடைய ஆண்டவர் நாற்பது நாட்கள் வனாந்திரத்தில் உபவாசம் இருந்த பின்னர் சத்துருவினால் சோதிக்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக சரியான வழியைத் தீர்மானித்து, வரவிருக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவரைப் பின்பற்றும்படி அழைப்பு

விடுக்கவும் ஆரம்பித்தார். இப்படி அவரைப் பின்பற்றினவர்கள் தான் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டனர். இப்படிப் பின்பற்றினவர் களிலிருந்துதான் இறுதியில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்தார். (லூக். 6: 13–16) அவர்கள் அனைவரும் வாழ்க்கையில் மிகவும் எளிமையான நிலைமையில் உள்ளவர்கள் ஆவர். அவர்களில் அநேகர் மீன்பிடிக்கிறவர் களாக இருந்தார்கள். அவர்களைக் குறித்து மறுப்பு சொல்ல முடியாத அளவுக்கு ''அவர்கள் படிப்பறியாதவர்கள்'' என்று அதிகாரிகளால் கணிக்கப்பட்டவர்கள். (அப். 4:13) தங்கள் அன்றாட வேலையை விட்டுவிடாமல் ஆண்டவருடைய கருத்தை ஆதரித்த, பொதுவாகப் பின்பற்றினவர்களிலிருந்து அல்லது ''சீஷர்களிலிருந்து'' இந்த பன்னிருவர்கள் அழைக்கப்பட்டார்கள். பன்னிருவரும் சுவிசேஷ ஊழியத்தில் பங்கு பெறும்படியாக அழைக்கப்பட்டார்கள். மேலும் அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. (மத். 4:17–22; மாற். 1:16–20; 3:13–19; லூக். 5:9–11) பின்னர் அமர்த்தப்பட்ட ''எழுபது பேர்'' ஒருபோதும் அப்போஸ் தலர்களாக அங்கீகரிக்கப்படவில்லை. பன்னிருவரைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் நம்முடைய ஆண்டவர் ஜெபத்திற்காக, நிச்சயமாக பிதாவிற்கு அவரது வேலையைக் குறித்தும் அவருடைய உடன் வேலையாட்களைப் பற்றியும் ஆலோசனை பெறுவதற்காக மலையின் மேல் ஏறி தனித்திருந்தார் என்று லூக்கா ஒரு குறிப்பிட்ட காரியத்தை நமக்குத் தெரியப்படுத்துகிறார். அவர் முழு இரவும் ஜெபத்திலே தனித்திருந்தார். பொழுது விடிந்தபோது அவருடைய சீஷர்களை அவர்களண்டை அழைத்தார். (சீஷர்கள் என்ற பதத்திற்கு கிரேக்க மொழியில் '' mathetes "என்ற பதம் ஆகும்– இதன் பொருள் ''கற்பவர்கள்'' அல்லது ''மாணாக்கர்'' ஆகும்.) அவர்களில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்று பெயரிட்டார். (கிரேக்க மொழியில் ''apostolos'' என்ற இந்த பதத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் என்று பொருள்) இப்படியாக பன்னிருவரும் பிரித்தெடுக்கப்பட்டவர்கள், சீஷர்களிலிருந்து வித்தியாசமானவர்கள் என்று குறிக்கப்பட்டார்கள். (லூக். 6:12,13,17)

இப்படியாக அப்போஸ்தலராக தெரிந்து கொள்ளப்படாத மற்ற சீஷர்களும் ஆண்டவருக்குப் பிரியமானவர்களாய் இருந்தார்கள். அவர்கள் பொதுவாக வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்ததி னிமித்தமாக, சந்தேகமில்லாமல், அவர் பன்னிருவரைத் தெரிந்து கொண்டதை

ஆதரித்தார்கள். எந்த அடிப்படையில் ஆண்டவர் தன்னுடைய தெரிந்து கொள்ளுதலை மேற்கொண்டார் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அவருடைய சொந்த ஜெபம், ''அவர்கள் உம்முடையவர்களா யிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர்'' என்றும், மறுபடியும், ''நீர் எனக்கு தந்தவர்களில் கேட்டின் மகனைத் (யூதாஸ்) தவிர வேறு யாரையும் நான் இழந்து போகவில்லை'' என்பதாயிருந்தது. எந்த நோக்கத்தில் அல்லது எந்த கோணத்தில் பன்னிருவரைப் பிதா தெரிந்தெடுத்தார் என்பது நமக்குரியதல்ல. சந்தேகத்திற்கு இடமில்லாதவாறு, அவர்களிடத்தில் இருந்த ஒரு தகுதி தாழ்மையாகும். நிச்சயமாகவே அவர்களுடைய எளிமையான தொழில், அவர்கள் வாழ்க்கையில் கொண்டிருந்த முன் அனுபவங்கள், அவர்களைத் தாழ்மையான மனிதர்களாக மாற்ற முயற்சித்தது; அது மாத்திரமின்றி இன்னும் அதிகமான வலிமையுள்ள குணாதிசயம், உறுதி, விடாமுயற்சி போன்றவைகளுக்கும் வழி நடத்தியது. இந்த அளவிற்கு வேறு எந்த தொழிலும் வழி நடத்தியிருக்காது. பெந்தெகொஸ்தே நாள் (சபை உருவான நாள்) வரை காத்திராமல் பன்னிருவர் அதற்கு முன்னமே தெரிந்து கொள்ளப்பட்டதற்கு காரணம் என்னவெனில், அதிகதிகமாக இந்த பன்னிருவரும் விசேஷமாக ஆண்டவரோடு இருக்கவும், அவருடைய கிரியைகளைக் காணவும் அவருடைய உபதேசத்தை கேட்கவும், இப்படியாக அவர்கள் ஏற்ற காலத்தில் நமக்கும், ஆண்டவருடைய எல்லா ஜனங்களுக்கும் தேவனுடைய அற்புதங்களை நேரில் கண்டவர்களாக, சாட்சியாக அறிவிக்கும்படிக்கும், இயேசுவின் மூலம் வெளிப்பட்ட ஜீவனுள்ள வார்த்தைகளை அறிவிக்கும்படியாகவுமே. (லூக். 24:44–48; அப். 10:39–42)

அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட நியமனம்

அப்போஸ்தலருக்கோ, அல்லது அவர்களைக் குறித்தோ, வேதத்தில் எந்த இடத்திலும் அவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள் மேல் அதிகாரம் செலுத்தவோ, தாங்கள் மற்ற விசுவாசிகளைக் காட்டிலும் வித்தியாசமானவர்கள் என்று கருதவோ, திவ்விய சட்டம் செயல் முறைகளிலிருந்து விலக்கப்பட்டவர்கள் என்றோ, அல்லது விசேஷமானவர்கள் என்றோ அல்லது அவர்களுடைய உரிமைகளைப் பொருத்த வரையில், அது நித்திய காலத்திற்கு பத்திரமாய் இருக்கும் என்றோ சிறிதளவு கூட சொல்லப்படவில்லை. ''நீங்கள் எல்லாரும்

சகோதரர்கள்,'' ''கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்'' என்பதை அவர்கள் தொடர்ந்து நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர்; அவர்களுடைய அழைப்பையும்,தெரிந்து கொள்ளுதலையும் அவர்கள் உறுதியாக்கிக் கொள்ளுவது அவசியம் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; மேலும் அவர்கள் அன்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாவிட்டால், சிறு குழந்தைகளைப் போன்று எளிமையானவர்களாகாவிட்டால், அவர்கள் ஒருபோதும் ''இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டார்கள்.'' அவர்களுக்கு அதிகாரப் பூர்வமான பட்டங்களோ, விசேஷமான ஆடைகளை அணிய வேண்டும் அல்லது விசித்திரமான முறையில் பழக வேண்டும் என்றோ போதிக்கப்படவில்லை; ஆனால் அவர்கள் இவைகள் எல்லாவற்றிலும் மந்தைக்கு உதாரணமாகக் காணப்பட வேண்டும் என்றுதான் போதிக்கப்பட்டார்கள். ஏனெனில் அவர்களுடைய நற்கிரியைகளைக் காண்பவர்கள் பிதாவை மகிமைப்படுத்த வேண்டும். மற்றவர்கள் இவர்களது அடிச்சுவட்டின்படி நடந்து, இப்படியாக ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். இறுதியில் திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக, அதே புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக அதே மகிமையை, கனத்தை, அழியாமையைப் பெற வேண்டும்.

அவர்கள் நியமிக்கப்பட்டது ஊழியம் செய்வதற்கென்றே; அவர்கள் ஒருவருக் கொருவர் ஊழியம் செய்யவும், ஆண்டவருக்கு ஊழியம் செய்யவும், சகோதரருக்கென தங்கள் ஜீவனைக் கொடுப்பதற்குமே அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த ஊழியம் விசேஷமாக சுவிசேஷத்தை பிரகடனப்படுத்துவது சம்பந்தமாகவே. அவர்களுடைய ஆண்டவர்மேல் ஏற்கெனவே வந்த முந்திய அபிஷேகத்தில், எல்லா புது சிருஷ்டிக்கும் உள்ளதான அதே அபிஷேகத்தில், எல்லா இராஜரீக ஆசாரியத்துவத்திற்கும் உள்ளதான அபிஷேகத்தில் அவர்கள் பங்குள்ளவர்களாக இருந்தார்கள். தீர்க்கதரிசி இதைப்பற்றி விபரமாகக் கூறுகையில், ''கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொருங்குண்டவர்களுக்குக் காயம் கட்டவும்...'' என்கிறார். (ஏசா. 61:1,2 ; லூக். 4:17–21; மத். 5–8; மாற்கு 3:14,15; லூக். 10:1–17)

பெந்தெகொஸ்தே வரை இந்த அபிஷேகம் அவர்கள்மேல் நேரடியாக வரா விட்டாலும், அவர் அவர்களை பிரசங்கிக்கும்படி அனுப்பிய போது, ஆண்டவர் ஓர் அளவிற்கு அவருடைய பரிசுத்த ஆவியின் வல்லமை போன்றவைகளை அவர்கள் மேல் அனுப்பி யிருந்தபடியால், அதை ஏற்கெனவே அவர்கள் ருசிபார்த்திருந்தார்கள். ஆனால் இதிலும்கூட, பின்னதாக மற்ற எழுபது பேரை, அவருடைய நாமத்தில் அற்புதங்களைச் செய்யும்படியாக வல்லமைப்படுத்தி அனுப்பிய போது, பெருமைக்கான விசேஷ தருணம் நீக்கப்பட்டது. ஆகவே சொல்லப்போனால், அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளின்போது பரிசுத்த ஆவியைப் பெரும்வரை அவர்களுடைய உண்மையான வேலை தொடங்கவில்லை. அங்கே அவர்கள் மேல் திவ்விய வல்லமையின் வெளிப்பாடு அவர்கள் மேல் அமர்ந்தது. பரிசுத்த ஆவியும் அதன் வரங்களும் மாத்திரமல்ல, ஆனாலும் , விசேஷமாக இந்த வரங்களை மற்றவர்கள் மேல் பொழியப்பண்ணும் அதிகாரமும் கொடுக்கப்பட்டது. அதிலிருந்து கடைசியில் குறிப்பிடப்பட்ட வல்லமையினால் சபையிலுள்ள மற்றவர்களிலிருந்து தனித்துக் காணப்பட்டார்கள். மற்ற விசுவாசிகள் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாக எண்ணப்பட்டு, அவருடைய ஆவியில் பங்குள்ளவர்களாக, அந்த ஆவியினால் புது ஜீவனுக்குள் பிறத்தல் என்பவைகளுக்குப் பங்குள்ளவர்களாக்கப் பட்டார்கள். ஆனால் இந்த அப்போஸ்தலர்கள் மூலமாக அளிக்கப் பட்டாலன்றி ஒருவரும் ஒரு வரத்தையோ அல்லது ஒரு விசேஷமான வெளிப்படையான அனுபவத்தையோ பெற்றுக்கொள்ளவில்லை. இந்த அற்புதங்களைச் செய்யும் வரங்களை, அந்நிய பாஷைகளைப் பேசுதல், அன்னிய பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் போன்றவைகள் ஒரு விதத்திலும் பரிசுத்த ஆவியின் கனிகளின் இடத்தை எடுத்துக் கொள்ளவோ, இடையூறு பண்ணவோ இல்லை என்பதை நாம் எப்படியாவது மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அவைகள் விசுவாசிகள் ஒவ்வொருவரும், கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்த போது திவ்விய போதனைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், வளர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அல்லது அபிவிருத்தி செய்யப்படவேண்டும். இந்த வரங்களை ஒரு மனிதன் பெற்றும்கூட அவன் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருக்கக்கூடுமென்று அப்போஸ்தலர் குறிப்பிட்டார்; இருந்தபோதிலும் சபை கட்டப்படுவதில் ஆண்டவருடைய விசேஷ

ஊழியக்காரர்களாக, அல்லது பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். (1கொரி. 12:7–10;13:1–3)

நம்முடைய ஆண்டவர் இந்த அப்போஸ்தலர்களை தேர்வு செய்யும் போதும், அவர்களுக்குப் போதித்தபோதும், யுகம் முடியும் வரைக்கும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு உள்ள ஆசீர்வாதத்தையும், போதனையையும் கருத்தில் வைத்திருந்தார். இது அவருடைய ஊழியம் முற்றுப்பெறும்போது அவர் ஏறெடுத்த ஜெபத்திலிருந்து விளங்குகிறது. அதில் அப்போஸ்தலர்களைக் குறித்து அவர் ''நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு (அப்போஸ்தலர்கள்) உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர் களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர். அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயின என்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை (உபதேசங்களை) அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு..... நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல் நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக் கிறார்களே.'' ''நான் இவர்களுக்காக (அப்போஸ்தலர்கள்) வேண்டிக் கொள்கிறது மல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் (முழு சுவிசேஷ சபை) வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், (நோக்கத்திலும் அன்பிலும்) பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன். (அதன் பின்பு, அப்போஸ்தலர்களும் புது சிருஷ்டி முழுவதும் தெரிந்து கொள்ளப்பட்டதின் நோக்கத்தை சுட்டிக்காட்டி, அவர் மேலும் கூறியதாவது) உலகம் (பாவிகளாயிருக்கையில் தேவனால் நேசிக்கப்பட்டு, விலையேறப்பட்ட இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள்) தான் மீட்கப்பட்டு இரட்சிக்கப்படத் தக்கதாக நீர் என்னை அனுப்பினதை அது விசுவாசிக்கட்டும்.'' (யோவா. 17:6–9,20,21)

அப்போஸ்தலர்கள், கல்வியறிவு இல்லாதவர்களாக இருந்த போதிலும் நல்ல குணாதிசயம் உள்ளவர்களாக இருந்தார்கள் என்று

தெரிகிறது. ஆண்டவரின் போதனையால் அவர்களிடத்தில் காணப்பட்ட உலக ஞானமும், கல்வியறிவும், ''தெளிந்த புத்தியுள்ள ஆவியினால்'' நிறைவு செய்யப்பட்டது. ஆகவே இந்த மனிதர்கள் எல்லாருமே ஆதி சபையினால் ஆண்டவருடைய வழிகளுக்கு வழிகாட்டிகள் என்றும், விசேஷமாக நியமிக்கப்பட்ட போதனையாளர்கள் என்றும், ''சபையின் தூண்கள்'' என்றும், ஆண்டவருக்கு அடுத்தபடியாக இவர்கள் தான் அதிகாரம் பெற்றவர்கள் என்றும் அறிந்துகொள்ளப் பட்டார்கள். இந்த நிலைக்கு ஆண்டவர் அவர்களைப் பல்வேறு வழிகளில் தயார் பண்ணினார்:

அவர்கள் அவரோடு தொடர்ந்து இருந்தபடியால், அவருடைய ஊழியங்களைக் குறித்ததான காரியங்கள், அவருடைய போதனைகள், அவருடைய அற்புதங்கள், அவருடைய ஜெபங்கள், அவருடைய இரக்கம், அவருடைய பரிசுத்தம், மரணபரியந்தம் தன்னையே தியாகம் செய்தது ஆகிய எல்லாவற்றிற்கும் சாட்சியாகவும், கடைசியாக அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாகவும் இருக்க முடிந்தது. இந்த சாட்சிகள் எல்லாம் ஆதி சபைக்கு மட்டுமல்ல, ஆண்டவரால் அப்பொழுது அழைக்கப்பட்டு புதுசிருஷ்டிக்கென்று அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டவர்கள் எல்லாருக்கும், அடைக்கலம் என்று ஓடினவர்களுக்கும், அவருடைய குணாதிசயத்தின் மையமாக அமைந்திருக்கும் மகிமையான நம்பிக்கைகளில் விசுவாசம் வைத்திருப்பவர்களுக்கும், அவருடைய தியாக மரணத்திலும், அவர் உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டதிலும், அவர் நிறைவேற்ற இருக்கிற தேவனுடைய திட்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கும், இப்படியாக அவர்கள் உறுதியான விசுவாசம் உடையவர்களாகவும் ஆறுதல் உள்ளவர்களாய் இருக்கும்படியாகவும் இந்தக் காரியங்கள் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் இப்படியான தனிப்பட்ட சொந்த சாட்சி தேவைப்பட்டது.

அவருடைய பிரசன்னத்தை எடுத்துரைக்கும்படியாகவும், யூத யுகத்தின் அறுவடைக்காகவும், ஆண்டவரால் பின்னர் மற்ற எழுபது சீஷர்கள் அனுப்பப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய வேலை அநேக விதங்களில் பன்னிருவருடைய வேலையைக் காட்டிலும் வித்தியாசமாக இருந்தது. சபையோடு கூட நாமும், அவர்களில் முழு நம்பிக்கை வைக்கும்படியாக, ஆண்டவர் ஒவ்வொரு வகையிலும்

அப்போஸ்தலர்களைத் தனியாகப் பிரிப்பது போன்று தோன்றியது. இவர்கள் மாத்திரமே அவருடைய இராப்போஜனத்திலும், அவருடைய மரணத்தை நினைவுகூறும்படி அவர் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையிலும் பங்குள்ளவர்களாயிருந்தார்கள். இவர்கள் மாத்திரமே அவருடனே கெத்சமனேயில் இருந்தார்கள். இவர்களுக்கு மாத்திரமே அவர் உயிர்த்தெழுந்த பிறகு விசேஷமாகக் காட்சியளித்தார். இவர்கள் மாத்திரமே பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் பேச்சாளர்களாக விசேஷமாக உபயோகப்படுத்தப்பட்டார்கள். பதினோரு பேருமே கலிலேயர்களாக இருந்தார்கள். அவர்கள் பேசுவதைக் கேட்டவர்கள் மூலம் ''இவர்கள் எல்லோரும் கலிலேயரல்லவா?'' என்று குறிப்பிடப்பட்டார்கள். (அப். 2:7; லூக். 24;48–51; மத். 28:16–19)

நம்முடைய ஆண்டவர் தன்னுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் ஏறத்தாழ ஐந்நூறு சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்தினாலும், அப்போஸ்தலர்களோடு விசேஷமாகத் தொடர்பு கொண்டதுடன் ''யூதருடைய தேசத்திலும், எருசலேமிலும் அவர் செய்தவைகளெல்லா வற்றிற்கும் சாட்சிகளாக இருக்கும்படியாக அவர்களை ஏற்படுத்தினார். யூதர்கள் அவரை மரத்திலே தூக்கிக் கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்..... ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார்'' என்று குறிப்புகள் காட்டுகின்றன. (அப். 10: 39–45; 13:31; 1கொரி. 15:3–8)

அப்போஸ்தலனாகிய பவுல் பதினோரு பேரைப்போன்று ஒரு நேரடி சாட்சியாக இல்லாதிருந்த போதிலும், ஆண்டவரது மகிமையான நொடிப் பொழுது தரிசனம் கொடுக்கப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலுக்கு ஒரு சாட்சியாக ஏற்படுத்தப்பட்டார். இதைக்குறித்து பவுல் கூறுகிறதாவது: ''எல்லாருக்கும் பின்பு அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்.'' (1 கொரி. 15:8,9) ஆண்டவருடைய இரண்டாம் வருகையில் மீந்திருக்கிற அவருடைய விசுவாசிகள் அனைவரும் மறுரூபமடைந்து அவரைப் போன்று ஆவார்கள், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் காண்பார்கள். இவ்விதமாக சபை பார்ப்பதற்கு முன்னால் அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவரை மகிமையில் காண்பதற்கு உண்மையிலேயே தகுதி பெற்றிருக்கவில்லை. ஆனால் அப்போஸ்தலர் ஒரு சாட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக அவருக்கு ஒரு

நொடிப்பொழுது தரிசனம் கிடைத்தது. மேலும் அவர்கள் எல்லாரைக் காட்டிலும் அதிகமான தரிசனங்களும் வெளிப்பாடுகளும் பவுலுக்குக் கொடுக்கப்பட்டன. அவர் இதற்கு முன்பாக ஆண்டவரோடு தனிப்பட்ட தொடர்பு இல்லாமல் இருந்ததற்குப் பரிகாரமாக ஒருவேளை இப்படிச் செய்யப் பட்டிருக்கலாம். அவருக்குக் கிடைத்த விசேஷ அனுபவங்கள் அவருடைய அனுகூலத்திற்கு என்று அல்ல, ஆனால் முக்கியமாக முழு சபையின் அனுகூலத்திற்காக என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். யூதாஸின் இடத்தை எடுத்துக்கொண்ட அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட வினோதமான அனுபவங்கள், தரிசனங்கள், வெளிப்பாடுகள் எல்லாம் நிச்சயமாகவே மற்ற அப்போஸ்தலருக்கு இருந்ததை விட அதிக உதவியாக இருந்தன.

அவருடைய அனுபவங்கள் ''தேவனுடைய ஆழமான காரியங்களை'' அறியவும், கிரகிக்கவும் அனுமதித்தது மாத்திரமல்ல, பேசப்படாததுமான (2 கொரி. 12:4) காரியங்களை அறியவும், கிரகிக்கவும் அனுமதித்தது. ஆனால் அப்போஸ்தலருடைய மனதிற்கு அவைகள் கொடுத்த பிரகாசம், அவருடைய எழுத்தின் மூலம் அவருடைய நாளிலிருந்து இன்றைய நாள் வரை சபைமேல் பிரதிபலித்துள்ளது.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அந்த தரிசனங்களும் வெளிப்பாடுகளும் கொடுக்கப்பட்டபடியால் அவரால் நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ளவும், புதிய யுகத்தை உணர்ந்துகொள்ளவும் முடிந்தது; மேலும் திவ்விய குணாதிசயத்தின் நீளம், அகலம், ஆழம், உயரத்தை அறியவும், தெளிவாகத் திட்டமிடவும் முடிந்தது. மேலும் அவராலேயே இவைகளைத் தெளிவாகக் கிரகிக்க முடிந்ததால், அவைகளை நிருபங்களில் போதனையாக யுகம் முழுவதும் விசுவாச வீட்டார் மேல் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்படியான விதத்தில் எடுத்துக்காட்ட முடிந்தது. உண்மையிலேயே இன்றும் கூட ஒன்று அல்லது மற்ற எல்லா அப்போஸ்தலருடைய சாட்சிகளையும் கூட இழந்து விட முடியும், ஆனால் அப். பவுலுடைய சாட்சியை இழக்க முடியாது. இருந்தபோதிலும், முழு சாட்சியம் இருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவைகளை முழுமையாக கிரகிக்க மகிழ்ச்சியாயிருக்கிறது; மாத்திரமல்ல பன்னிரண்டு அப்போஸ்தலரின் உயர்வான குணாதிசயங் களைக் கிரகிப்பதும் மகிழ்ச்சியைத் தருகிறது. அவருடைய அப்போஸ்தலத்துவத்தைக் குறிப்பிடுகிற சாட்சியைக் கவனியுங்கள். எல்லாவற்றிற்கும் முதன்மையாக ஆண்டவருடைய வார்த்தைகள்: ''அவன்

புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரயேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமா யிருக்கிறான்.'' (அப். 9:15) அப்போஸ்தலருடைய சொந்த வார்த்தை இப்படியாயிருக்கிறது: ''நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.'' (கலா. 1:11,12) மறுபடியும் அவர் கூறுகிறார்: ''விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனா யிருக்கும்படி பேதுருவை பலப்படுத்தினவர், புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனா யிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினார்.'' (கலா. 2:7) எந்த அப்போஸ்தலருக்கும் சமமான அந்தஸ்தில் இருப்பதற்கு அவருடைய தகுதிக்கு சாட்சியம் கூறுவது எவையென்றால், ஆண்டவர் மேலும் சகோதரர்கள்மேலும் அவர் கொண்டிருந்த வைராக்கியமும், சகோதரர்களுக்காகத் தன்னுடைய ஜீவனையே கொடுக்க ஆயத்தமான அவருடைய வாஞ்சையும், அவர்களுடைய ஆசீர்வாதத்திற்காக நேரத்தையும் சக்தியையும் செலவிடும் குணமுமேயாகும். ஆனால் சபையோடு உள்ள அவருடைய அப்போஸ்தல உறவுபற்றிச் சிலர் கேள்வி எழுப்பியபோது, இதை அவர் கபடமின்றி குறிப்பிட்டு, மேலும் அவருடைய வெளிப்பாடுகள், ஊழியங்கள் போன்றவைகளோடு சம்பந்தப்பட்ட ஆண்டவருடைய ஆசீர்வாதங்களையும் சுட்டிக்காட்டி, மற்றவர்களைக் காட்டிலும் அவர் ஒன்றிலும் குறைவுள்ளவன் அல்ல என்று நிரூபித்தார். (1கொரி. 9:1; 2கொரி. 11:5,23; 12:1–7,12; கலா. 2:8; 3:5)

யூதர்கள் மத்தியில் மாத்திரமே அப்போஸ்தலர்கள் ஒரு ஊழியம் செய்ய வேண்டும் என்பது ஆண்டவருடைய நோக்கமல்ல –குறிப்புகளில் காணப்படுவதற்கு எதிர்மாறாக உள்ளது. அவருடைய ஊழியமும் அவர்களுடைய தூதும் இறுதியில் எல்லா ஜனங்களுக்கும் உரியது என பதினோரு பேருக்கும் அவர் கட்டளையிட்டார். அவர்கள் வல்லமையினால் நிரப்பப்படும் வரை எருசலேமில் காத்திருக்க வேண்டியிருந்தாலும், அங்கே அவர்கள் சாட்சியைத் துவக்கும்படி அந்த இடத்தில் இருந்தார்கள். நம்முடைய ஆண்டவருடைய வார்த்தை, ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்பதாகும். (அப்.1:8) இந்த சாட்சியம் அப்போஸ்தலருடைய வாழ்நாளில் மாத்திரமல்ல, இன்றும் தொடர்கிறது. இன்றைக்கும் அவர்கள் நமக்குப் பிரசங்கித்துக்

கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் விசுவாசிகளுக்கு போதித்துக் கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் எச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள்; இன்னமும் கடிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மரணம் அவர்களுடைய ஊழியத்தை நிறுத்தவில்லை. இன்னும் அவர்கள் பேசுகிறார்கள், சாட்சிகளாயிருக்கிறார்கள், ஆண்டவருடைய விசுவாசிகளுக்கு அவருடைய வாயாக இருக்கிறார்கள்.

அப்போஸ்தலர்களுடைய ஊக்கம்

உண்மையான சாட்சிகளாகவும், சரித்திர ஆசிரியர்களாகவும் நாம் அப்போஸ் தலர்களில் நம்பிக்கை வைத்திருப்பது நல்லது. அவருடைய சாட்சிகளில் நேர்மை என்ற முத்திரை பதிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதில் அவர்கள் செல்வத்தையோ, மனிதர்களின் புகழ்ச்சியையோ நாடாமல் உயிர்த்தெழுந்து, மகிமையடைந்த ஆண்டவருக்காக, அவர்கள் தங்கள் உலகப்பிரகாரமான நலன்களைத் தியாகம் பண்ணும் படியான அவர்களுடைய வைராக்கியத்தைக் காண்கிறோம். இதைக்காட்டிலும் மேலான காரியங்கள் சொல்லப் படாவிட்டால் அவர்களுடைய சாட்சி பிரயோஜனமற்றதாகிவிடும். ஆனால் அவர்கள் ஆண்டவரால் ஏவப்பட்ட பிரதிநிதிகளாக உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்று வேதம் போதிப்பதை நாம் காண்கிறோம். மேலும் அவர்கள் சபையில் உண்டான பழக்கங்கள், உபதேசங்கள், சாட்சியைக் குறித்ததான காரியங்கள் போன்றவைகளுக்கு ஆண்டவரால் வழி நடத்தப்பட்டார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள் கேள்விப்பட்ட, கண்ட காரியங்களுக்காக மாத்திரம் சாட்சிகளாக இருக்கவில்லை, அதற்கு மேலாகப் பரிசுத்த ஆவியின் மூலம் அவர்கள் பெற்ற போதனைகளுக்கும் சாட்சிகளாயிருந்தார்கள். அதனிமித்தம் அவர்கள் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருந்தார்கள். '' எந்த மனுஷனும் எங்களை..... தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன் என்று எண்ணிக் கொள்ளக்கடவன்'' என்று பவுல் சொன்னார். (1கொரி. 4:1) ஆண்டவரும், பன்னிருவரைக் குறித்து ''நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்,'' என்றும் ''என் ஆடுகளை மேய்ப்பாயாக,'' ''என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக'' என்றும் சொல்லும்போது இதே சிந்தையை வெளிப்படுத்தினார். அப்போஸ்தலரும் முற்காலங்களில் மறைக்கப்பட்டிருந்த இரகசியம்

(கிறிஸ்துவைக் குறித்து புது சிருஷ்டிகளின் உன்னத அழைப்பிற்கான சுவிசேஷத்தின் ஆழமான சத்தியங்கள்) இப்போது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியினால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாட்டின் நோக்கம் இப்படியாகக் கூறப்பட்டுள்ளது: ''தேவனுக்குள்ளே ஆதி காலங்கள் முதல் மறைக்கப்பட்டிருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் (புது சிருஷ்டியில் பங்கு பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்) இன்னதென்று எல்லாருக்கும் வெளிப் படையாகக் காண்பிக்கிறதற்கு.'' (எபே. 3:3–11) இயேசு கிறிஸ்துவை மூலைக் கல்லாகவும், அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் அஸ்திபாரமாகவும் கொண்டு சபை எப்படிக் கட்டப்பட வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறும்போது அப்போஸ்தலர் சொல்கிறார்: ''இதனிமித்தம், (தேவனுடைய ஆலயமாகிய சபையைக் கட்டுவதற்கு) பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்ட வனாயிருக்கிறேன்.'' (எபே. 2:20,22; 3:1)

''எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவற்காக'' தேற்றரவாளன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டார். ''அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.'' (யோவா. 14:26; 16:13) சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இது முழு சபைக்கும் உரியதாகும்; ஆனால் விசேஷமாக அது அப்போஸ்தலருக்கு உரியதாக இருந்தது. உண்மையிலேயே, மிஞ்சியிருக்கிற சபைக்கு இப்பொழுதும் கூட அது அப்போஸ்தலர் மூலம் கிரியை செய்கிறது. இன்றைக்கும் அவர்களுடைய வார்த்தை நமக்குப் புதியதும், பழையதுமான காரியங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு வழிகளாக உள்ளன. இந்த வாக்குத்தத்தத்திற்கு இசைவாக அப்போஸ்தலருக்கான ஏவுதல் மூன்று விதமான குணாதிசயங்களைக் கொண்டது என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

1. *ஞாபகத்திலுள்ளவைகள் புத்துணர்வு பெற்றபடியால் ஆண்டவருடைய தனிப்பட்ட போதனைகளை மறுபடியும் நினைப்பூட்டி மறுபடியும் சொல்ல வைத்தது.*
2. *யுகங்களின் தெய்வீகத் திட்டத்தைக்குறித்து சத்தியங்களை கிரகித்துக் கொள்ளும்படியான ஒரு வழிநடத்துதல்.*
3. *வரவிருக்கிற காரியங்களைக் குறித்து விசேஷ வெளிப்பாடு. ஆண்டவர் இதைக்குறித்து ''இன்றும் அநேகங்காரியங்களை நான்*

உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்போது தாங்கமாட்டீர்கள்'' என்று கூறினார். (யோவா.16:12)

அப்போஸ்தலர்களுடைய ஞாபகத்தில் உள்ளவைகள் புத்துணர்வு பெற்றன என்பது நம்முடைய ஆண்டவர் சொன்ன அதே சொற்றொடர், அல்லது ஆண்டவருடைய வார்த்தைகள் அவைகள் சொல்லப்பட்ட வரிசையின்பிரகாரம் மறுபடியும் வந்தது என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்போஸ்தல எழுத்துக்களும் இப்படி மறுபடியும் சொல்லப்பட்டதற்கான ஆதாரத்தைக் கொடுக்கவில்லை. ஆண்டவருடைய வாக்குத்தத்தமே எப்படியாயினும், அவர்களுடைய அறிக்கைகளின் உண்மைக்கு உத்திரவாதம் அளிக்கிறது. நான்கு சுவிசேஷங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டவருடைய ஆரம்ப கால ஜீவியத்தைக் குறித்தும், ஊழியத்தைக் குறித்தும் உள்ள சரித்திரம் நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் ஒவ்வொன்றிலும் எழுதியவரின் தனித்தன்மை வெளிப்படுகிறது. ஒவ்வொருவரும் அவர்களுக்கே உரித்தான நடையில் அவர்களுக்கு மிக முக்கியமாகத் தோன்றுகிறவைகளைக் குறிப்பிடுகிறார்கள். மேலும் ஆண்டவருடைய மேற்பார்வையின் கீழ் இந்த பலவித குறிப்புகள் மொத்தமாக சபையின் விசுவாசத்தை உறுதிப்படுத்தத் தேவையான ஒரு முழுச் சரித்திரத்தையும், தீர்க்கதரிசிகளின் மேசியாவாக இயேசுவை அடையாளம் காட்டவும், அவரைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதலைக் காட்டும்படியான, அவரது வாழ்க்கை சரித்திரத்தையும் அவருடைய போதனைகளையும் அளிக்கின்றன. ஏவப்பட்டது வாய் மூலம் வந்திருந்தால் (ஒவ்வொரு வார்த்தை வார்த்தையாக சொல்லுதல்) சொல்லப் பட்டவைகளை மறுபடியும் சொற்றொடரில் பல மனிதர்கள் கூற வேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஒவ்வொரு தனி எழுத்தாளரும் அவர் தன்னுடைய தனிப்பட்ட தெரிவிக்கும் முறையில் உள்ள சுதந்திரத்தை உடையவராயிருந்து, குறிப்பிடும்படியான தகுதியும் மிக முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகளைத் தெரிந்து கொண்டவிதம் பாராட்டுக்குரியது. ஆண்டவர் தனது பரிசுத்த ஆவியின் மூலமாக அவ்வளவு மேற்பார்வையிட்டதால் முக்கியமானதொன்றும் விடப்படவில்லை, தேவையானவைகள் எல்லாம் தவறாமல் குறிக்கப்பட்டுள்ளன. ''தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக'' அவைகள் அருளப் பட்டுள்ளன. அப்போஸ்தலர் யோவானுடைய குறிப்புகள் மற்ற மூன்று

சுவிசேஷகர் களான மத்தேயு, மாற்கு, லூக்காவுக்கு அனுபந்தங்கள் போன்று இருப்பதைப் பார்ப்பது சுவாரசியமாக இருக்கிறது. அவர் முக்கியமாக மற்றவர்களால் விடப்பட்ட சூழ்நிலைகளையும் முக்கியம் பெற்ற சம்பவங்களையும் எடுத்துரைக்கிறார்.

ஆண்டவருடைய கூற்றுப்படி, அவர் பரிசுத்த ஆவியின் மூலம் அப்போஸ்தலர்களை வழி நடத்துவார் என்றும், அவர்கள் மூலமாக புதுச் சிருஷ்டியை ''எல்லா சத்தியத்திற் குள்ளும்'' வழி நடத்துவார் என்றும், வழிநடத்துதல் என்பது பொதுவானதென்றும், தனிப்பட்டவிதத்தில் எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவது என்றும் அர்த்தப்படும். இப்படியாக நடைபெறுவதை குறிப்புகளில் சொல்லப்பட்டதிலிருந்து காணலாம். பவுலைத்தவிர மற்ற அப்போஸ்தலர்கள் சதாரண கல்வியறிவில்லாத மனிதர்களாக இருந்தபோதிலும் அவர்கள் வேதத்தைப்பற்றிச் சொன்ன காரியங்கள் மிகவும் குறிப்பிடத் தக்கதாய் இருந்தது. அவர்களால் ''ஞானிகளை வெட்கப்படுத்த முடிந்தது.'' வேத வல்லுனர்களை அன்றும் இன்றும் வெட்கப்படுத்த முடிந்தது. தவறு எவ்வளவு திறமை யுள்ளதாயிருந்தாலும், அதனால் அவர்கள் பிரமாணத்திலிருந்து, தீர்க்கதரிசிகளிலிருந்து, ஆண்டவருடைய போதனைகளிலிருந்து எடுத்துச் சொல்லும்போது முன்னால் நிற்கமுடிய வில்லை. பிரமாணத்தில் வல்லுனர்களாயிருந்த யூதர்கள் இதைப்பற்றி குறிப்பிட் டுள்ளார்கள். நாம் வாசிக்கிறோம், ''அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள் என்றும் அறிந்து கொண்டார்கள்.'' அதாவது அவர்கள் அவருடைய உபதேசத்தைக் கற்று அவருடைய ஆவியை பிரதிபலித்தார்கள். (அப். 4:5,6,13)

ஆண்டவருடைய வார்த்தைகளையும், பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்டவைகளையும் ஆதாரமாகக் கொண்டுள்ள அப்போஸ்தல நிருபங்கள், இப்படியான நியாயமான வாக்குவாதங்களை உடையனவாக இருக்கின்றன. இந்த சுவிசேஷ யுகத்தில் ஆண்டவர் தன்னுடைய ஜனங்கள் மூலமாக நமக்கு முன்பாக வைத்திருக்கிற வாக்கைப் பின்பற்றுவதன் மூலம் அதே ஆவியில் பங்கு பெற்றவர்கள் எல்லாரும் உண்மையான தீர்மானங்களுக்குள் வழி நடத்தப்படுகிறார்கள். ஆகவே நம்முடைய விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் இருக்கிறது. (1கொரி. 2:4,5) இருந்தபோதிலும், இந்த போதனைகளிலும் அவர்கள் சரித்திரபிரகாரமாக

கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்தும் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லப்பட்டதற்கு நமக்கு ஆதாரம் கிடையாது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் செய்ததுபோல, இயந்திரம் செயல்படுவது போன்று பேசி, எழுதும்படி ஆண்டவரால் சொல்லப்பட்டவைகள் என்பதற்கும் நமக்கு ஆதாரம் கிடையாது. (2பேது. 1:21) இதைக்காட்டிலும் அப்போஸ்தலருடைய மனது பிரகாசிக்கப்பட்டதினால், அவர்களுக்குத் தெளிவான நோக்கம் கிடைத்ததினால் அவர்களால் திவ்விய நோக்கங்களைத் தெளிவாகக் காணவும் அவைகளை அறிந்து கொள்ளவும் உதவியாக இருந்தது. அதனால் அவைகளை தெளிவாக எடுத்துரைக்க முடிந்தது. இதன்படி, இக்காலத்திலிருந்து ஆண்டவருடைய ஜனங்கள் எல்லாரும், அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு கிருபையிலும், அறிவிலும், அன்பிலும், வளரும்படியாக உதவி செய்தது. அது மாத்திரமல்ல, ''சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறியவும்'' உதவிற்று. (எபே. 3:18,19)

இருந்தபோதிலும், அவர்களுடைய மற்ற போதனைகளும், அவர்களுடைய சரித்திரபிரகாரமான கூற்றுகளும், ஆண்டவரால் அவ்வளவாய் மேற்பார்வையிடப் பட்டதினால் தகுதியற்ற வார்த்தைகள் தவிர்க்கப்பட்டன, மேலும் அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை விசுவாச வீட்டாருக்கு ''ஏற்ற காலத்தில் ஆகாரமாயிருக்கும்படியாக'' அமையக்கூடிய விதத்தில் சத்தியம் முன்பாக வைக்கப்பட்டது என்ற நம்பிக்கை வைப்பதில் நாங்கள் முழுமையாக நியாயப்படுத்தப் பட்டுள்ளோம். அப்போஸ்தலர்கள் திவ்விய மேற்பார்வைக் குட்டிருப்பார்கள் என்பதை ஆண்டவருடைய வார்த்தை முன்கூட்டியே பின் வருமாறு சுட்டிக்காட்டுகிறது: ''பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.'' (மத்.18:18) இது ஆண்டவர் தன்னுடைய உரிமையை விட்டுவிடுவார் என்பதையோ, அப்போஸ்தலர்கள் சொல்லுவதற்கெல்லாம் கீழ்ப்படிவார் என்பதையோ குறிக்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்வோம். ஆனால், பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு, சபையில் அவர்கள் எடுக்கும் தீர்மானங்களில் எந்த காரியங்கள் கட்டாயமாக செய்யப்படவேண்டும், எந்த காரியங்கள் விருப்பத்தின்படி செய்யப்படலாம் என்பதைக்

குறித்ததான தீர்மானங்கள் சரியானவைகளாக இருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே மொத்தத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முடிவு எல்லாம் இறுதியாக ஆண்டவருடையதும் அப்போஸ்தலருடையதும் ஆகும் என்று சபையானது அறிந்துகொள்ளும்.

இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்

இதற்கு ஒத்துப்போகும் வகையில், நம்முடைய ஆண்டவர்தான் மேசியா என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சாட்சி அளித்த பிறகு, ''இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்த வில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப் படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், (petros- a stone, a rock) இந்த கல்லின்மேல் (petra- a mass of rock – நீ இப்போது வெளிப்படுத்தின மாபெரும் அடிப்படைச் சத்தியம் எனும் கல்) என் சபையைக் கட்டுவேன்.'' ஆண்டவர் தாமே கட்டுகிறவர், அவரே அஸ்திபாரம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ''போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.'' (1கொரி. 3:11) அவரே பெரிய கல்லாயிருக்கிறார், ஆகவே அவரைப்பற்றிய பேதுருவின் அறிக்கையே ஒரு கல் போன்ற திடமான அறிக்கையாக இருக்கிறது, திவ்விய திட்டத்தை முக்கியப்படுத்துகின்ற அஸ்திபாரக் கொள்கையை அறிவிப்பதாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த விஷயத்தை அவ்வளவாய் புரிந்து கொண்டபடியால், தான் புரிந்து கொண்டதை வெளிப்படுத்தினார். (1பேது. 2:5,6) பிரதிஷ்டை செய்து கொண்ட விசுவாசிகள் எல்லாரும் ''ஜீவனுள்ள கற்கள்'' என்றும், கிறிஸ்து இயேசுவுடன் ஐக்கியம் கொள்வதினால், அஸ்திபாரமாயிருக்கிற அவர் மேல் பரிசுத்த ஆலயமாகக் கட்டப்படும்படியாகத் திவ்வியத் திட்டத்தின்படி பெரிய கல்லான கிறிஸ்து இயேசுவண்டை வருகிறவர்களாயிருக்கிறார்கள் என்றும் பேதுரு அறிவித்தார். ஆகவே பேதுரு, தானே அஸ்திபாரக்கல் என்று பாவனை செய்யாமல், பெட்ராஸ் (petros) கல்லானது லித்தோஸ் (lithos) என்பதைக் காட்டிலும் பெரிய கல் என்பதைக் குறிப்பிட்டாலும் சபையிலுள்ள மற்ற எல்லா ''ஜீவ கற்களோடும்'' சரியான முறையில் தன்னைக் கணித்தார். மேலும் திவ்விய திட்டத்தின்படி எல்லா

அப்போஸ்தலர்களும் ''அஸ்திபாரக் கற்களாய்'' இருப்பதோடு, வரிசையில் அவர்களுடைய சகோதரர்களைக் காட்டிலும் முக்கியத்துவம் உள்ளவர்களாக இருப்பார்கள். (வெளி. 21:14)

அதிகாரத்தின் திறவுகோல்

இது சம்பந்தமாக ஆண்டவர் பேதுருவிடம் ''பரலோகத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்'' என்றார். அப்போஸ்தலருக்கு பொதுவாகக் கொடுக்கப்பட்ட அதே அதிகாரம் பேதுருவுக்கும் விசேஷமாகச் சொல்லப்பட்டது, அதோடுகூட திறவுகோல்கள் என்கிற உரிமை அல்லது சிலாக்கியம்– திறக்கும் வல்லமை அல்லது அதிகாரம் கொடுக்கப்பட்டது. எப்படி அப்போஸ்தலனாகிய பேதுரு, இராஜ்யத்தின் திறவுகோல்களை உபயோகித்தார் என்பதையும், அதன் மூலம் தேவனுடைய வேலையை, பெந்தெகொஸ்தே நாளில் முதலாவது யூதர்களுக்கும், பின்னர் கொர்நெலியு வீட்டில் புறஜாதியினருக்கும் ஆரம்பித்து வைத்தார் என்பதையும் நாம் நினைவில் வைத்திருக்கிறோம். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட போது, ''பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று'' முதலாவதாக ஆரம்பித்தார் என்று நாம் வாசிக்கிறோம். அவர் திறந்தார், மற்றவர்கள் பின்பற்றினார்கள். இவ்விதமாக யூதர்களுக்கு அழைப்பு திறந்துவிடப்பட்டது. கொர்நெலியுவின் விஷயத்தில், ஆண்டவர் பேதுருவினிடத்தில் தூதர்களை அனுப்பினார், மேலும் விசேஷமான விதத்தில் ஒரு தரிசனத்தின் மூலம் அவர்களுடைய அழைப்பை ஏற்குமாறு வழி நடத்தினார். இவ்விதமாக புறஜாதியினரும் கூட புது சிருஷ்டியின் உன்னத அழைப்புக்குள் வந்து அதன் சிலாக்கியத்தில் பங்கு பெறும்படியாக, விசேஷமாக புறஜாதியினருக்கு கிருபையின், விடுதலையின், சிலாக்கியத்தின் கதவைத் திறக்கும்படியாக பேதுருவைப் பயன்படுத்தினார். இந்த விஷயங்கள் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொள்வதில் ஆண்டவரின் நோக்கங்களோடு முற்றுமாக ஒத்து இருப்பதை நாம் காண்கிறோம். புதிய வேலைக்கான விசேஷமான பிரதிநிதிகளாக இந்த பன்னிரண்டு பேரும் நியமிக்கப்பட்டார்கள் என்பதை மேலும் தெளிவாக ஆண்டவருடைய ஜனங்கள் புரிந்துகொள்கிறார்கள்; மேலும் அவர்களுடைய வார்த்தைகள்

புது சிருஷ்டியைப் பற்றிய சத்தியத்துக்கு விசேஷமான வழிகளாக இருப்பதையும், அவர்களுடைய வார்த்தைகளை இன்னும் அதிகமாக ஏற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தப்படுத்தப்படுவார்கள் என்பதையும், மேலும் அவர்களுடைய போதனைகளுக்கு எதிரிடையாக வரும் மற்றவர்களுடைய போதனைகளை ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர் களாய் இருப்பார்கள் என்பதையும் புரிந்து கொள்ளுகிறார்கள். ''இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.'' (ஏசா. 8:20)

நம்முடைய ஆண்டவரின் வாக்குத்தத்தத்தின் கடைசி நோக்கம் இப்படியாகக் காணப்படுகிறது. ''அவர் (பிதாவின் பரிசுத்த ஆவி) வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.'' இது அப்போஸ்தலரின் ஒரு விசேஷமான ஊக்கத்தைக் காட்டுகிறது, மேலும் அவர்களுடைய போதனைகளின் வாயிலாக ஆண்டவருடைய ஜனங்களுக்கு, இந்த யுகத்தின் இறுதிவரை உள்ள ஆசீர்வாதத்தையும், அறிவுப் பிரகாசத்தையும் குறிப்பிடுகிறது. இவ்விதமாக அவர்கள் பரிசுத்த அப்போஸ்தலர்களாக மட்டுமின்றி, தீர்க்கதரிசிகளாகவும், சபைக்கு, வரவிருக்கிற காலத்தின் காரியங்களை முன் கூட்டியே அறிவிக்கிறவர் களாகவும் இருந்தார்கள். இந்த விதமாக எல்லா ஊழியங்களிலுமோ, அல்லது ஏதாவது ஒன்றிலோ அப்போஸ்தலர்கள் அனைவருமே இந்த அளவுக்கு உபயோகப்படுத்தப்பட்டார்கள் என்று நாம் நினைத்துவிடக் கூடாது. உண்மை என்னவெனில், சிலர் அப்போஸ்தலர்களாக ஊழிய சிலாக்கியங்களில் அதிகமாகக் கனப்படுத்தப்பட்டார்கள் என்பதோடு கூட இன்னும் அதிகமாக வரவிருக்கிற காரியங்களை காட்டுகிறவர்களாக கனப்படுத்தப் பட்டார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் வரவிருக்கிற பல்வேறு விஷயங்களைக் காட்டுகிறதாவது : சபையில் ஏற்படக்கூடிய பெரிய விசுவாச துரோகம், ''பாவ மனுஷன்'' வெளிப்படுதல், ஆண்டவருடைய இரண்டாம் வருகையைக் குறித்ததான இரகசியம், நாம் எல்லோரும் நித்திரை அடையாமல் ஆனாலும் எல்லோரும் மறுருபமாக்கப்படுதல், ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறை களுக்கும் மறைவாயிருந்த இரகசியமாகிய, புறஜாதிகளை உள்ளடக்கிய சபையானது, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களுக்கு உடன் சுதந்திரவாளிகளாக இருக்கப்போவது, ஆபிரகாமின் வித்து பூமியிலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதித்தல் போன்றவைகளாகும். மேலும் அவர், கடைசி நாட்களில் சபையில் கொடிய காலங்கள்

வருமென்றும், மனுஷர்கள் தேவப்பிரியராயிராமல் சுகபோக பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர் களாயும், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களாயும் இருப்பார்கள் என்றும், ''கொடிய ஓநாய்கள்'' (அழிக்கும் தன்மையுள்ள வார்த்தைகளைப் பேசுவார்கள்) ஆண்டவருடைய மந்தையைத் தப்பவிட மாட்டார்கள் என்றும் கூறுகிறார். உண்மையிலேயே அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியவைகளெல்லாம், அவருடைய நாளில் வரவிருக்கின்ற காரியங்களை முன் கூட்டியே அறிவிக்கும் சிலாக்கியத்தை பெற்றவராக, அவருக்குக் கொடுக்கப்பட்ட தரிசனங்களாலும், வெளிப்பாடுகளினாலும் நிறைந்து புத்திக் கூர்மையுள்ளவைகளாக காணப்படுகின்றன. அவருடைய நாளில் அது எதிர்காலத்தைக் குறித்ததாக, முற்றுமாக விளக்கமாக சொல்லக்கூடாததாக இருந்தது. ஆனால் இப்போழுதோ பழைய ஏற்பாட்டின் மாதிரிகள், தீர்க்கதரிசனங்கள் மூலமாக பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இவைகள் இப்பொழுது புரிந்து கொள்ளக் கூடியவைகளாக உள்ளன. ஏனெனில் அப்போஸ்தலர்களின் வார்த்தைகளின்படி, அவைகள் புரிந்து கொள்ளும்படியாக ''ஏற்ற காலம்'' இப்போது வந்துள்ளது.

அப்போஸ்தலர் பேதுருவும் கூட வருங்காரியங்களை முன் கூட்டியே அறிவிப்பவராக, சபையில் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள், அவர்கள் கேட்டுக்கேதுவான வேதபுரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிப்பார்கள் என்று சுட்டிக் காட்டுகிறார். நம்முடைய நாளை அவர் கண்டு தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். ''கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து.....அவர் (கிறிஸ்து) வருவார் என்று சொல்லுகின்ற வாக்குத்தத்தம் எங்கே?'' என்பது போன்றவைகளைக் கூறுவார்கள் என்கிறார். ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்'' என்பது போன்றவைகளை தீர்க்கதரிசனமாக உரைத்தார்.

அப்போஸ்தலனாகிய யாக்கோபும் இதே போன்று தீர்க்கதரிசனமாக உரைக்கிறார். ''ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்..... கடைசி நாட்களில் பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்'' என்பது போன்ற காரியங்களைக் கூறுகிறார்.

இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய யோவான் தான் எல்லா அப்போஸ்தலரைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கவராக வருங்காரியங்களை

முன்கூட்டியே அறிவிப்பவராக அல்லது தீர்க்கதரிசியாக இருந்தார். வெளிப்படுத்தின விசேஷத்தில் அவருடைய தரிசனங்கள் வரப்போகிற காரியங்களை மிகச் சிறப்பாக அறிவிக்கிறவைகளாக உள்ளன.

அப்போஸ்தலரின் உறுதி

மேற்கூறியவைகளிலிருந்து அப்போஸ்தலர்கள் எவ்வளவாக பரிசுத்தாவியின் மூலமாக ஆண்டவரால் வழிநடத்தப்பட்டார்கள் என்றும், அவர்கள் வெளியரங்கமாய் பேசினவைகளெல்லாம், சபை கண்டித்து உணர்த்தப்படும்படியாக திவ்விய ஏவுதலினால் வந்தவை என்றும், கடந்த காலங்களில் தீர்க்கதரிசிகள் கூறியவைகள் உண்மையில் (பிழையற்ற தன்மையில்) குறைவுபடவில்லை என்றும் நாம் நம்புவது நியாயமானதே என்று உணருகிறோம். ஆனால் அவர்களுடைய சாட்சியைப் பொறுத்தவரை உண்மையானவைகள் என்றும், அவர்கள் சபைக்குக் கூறியவைகள் எல்லாம் திவ்விய ஒப்புதலை பெற்றிருந்தவைகளாக இருந்தன என்றும் நாம் நிச்சயத்திருந்தாலும், அப்போஸ்தலர் தங்களுடைய போதனைகளில் பிழை செய்யவில்லை என்ற கருத்துக்குப் பொதுவாக எதிர்மாறாக புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வித்தியாசமான சூழ்நிலைகளை நாம் கவனமாக ஆராய்ந்து பார்ப்பது நல்லது. நாம் அவைகளைத் தனித்தனியாக ஆராய்ந்து பார்ப்போம்.

(1) நம்முடைய ஆண்டவரை அவருடைய சிலுவை மரணத்துக்கு முன்பாக மறுதலித்தது. இங்கே பேதுரு ஒரு பெரிய தவற்றைச் செய்தார் என்பதை மறுக்க முடியாது, இதைக் குறித்து உண்மையாகவே மனம் வருந்தினார். ஆனாலும் இந்த மறுதலிப்பு அவர் அப்போஸ்தலராக தெரிந்து கொள்ளப்பட்ட பின்னர் ஏற்பட்டது என்ற போதிலும், அவர் பெந்தேகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு முன்பதாக ஏற்பட்டதாகும். மொத்தத்தில் அவர் அப்போஸ்தலராக திவ்விய நியமனம் பெறுவதற்கு முன்பதாக ஏற்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மேலும், அப்போஸ்தலர்கள் பிழை செய்யாதவர் என்று நாம் கூறுவது, அவர்கள் வெளிப்படையாகக் கூறிய அவர்களுடைய போதனைகளுக்கும், அவர்கள் எழுதியவைகளுக்கும் உரித்தானதாகும், ஆனால் இவைகள் அவர்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் சின்னஞ் சிறிய காரியங்களைக் குறிப்பிடுவதாக இல்லை. ஏனெனில் இவைகள் சந்தேகத்துக்கிடமில்லாமல் மண்பாண்டங்களாக

இருந்தபோது ஏற்பட்ட கறைகள் மாத்திரமல்ல, ஆதாமின் பெரிய வீழ்ச்சியால் எல்லா பிள்ளைகளுமே பாதிக்கப்பட்டது போல அவர்களுக்கும் நடந்தது. ''இந்த பொக்கிஷத்தை மண்பாண்டத்தில் பெற்றிருக்கிறோம்'' என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகள், அவரையும் மற்ற அப்போஸ்தலர்களையும் குறிப்பது தெரிகிறது; மாத்திரமல்ல பரிசுத்த ஆவியைப் பெற்ற சபை அங்கத்தினர் அனைவரையும் குறிக்கிறது. நம்முடைய பங்கானது, நம்முடைய ஆண்டவரின் பெரிய மீட்பு வேலையில், புது சிருஷ்டியாயிருக்கிற நம்முடைய வாஞ்சைகளுக்கு எதிராயிருக்கிற மாம்சத்தின் கறைகளை மூடுகிறது.

ஆண்டவருக்கும், சபைக்கும் ஊழியம் செய்யும்படியான அப்போஸ்தல உத்தியோகம், மாம்சத்தின் பெலவீனங்களிலிருந்து தனித்து இருக்கிறது; அவர்கள் மனுஷீக பிரகாரம் பூரணமானவர்கள் என்பதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படாமல், அவர்கள் ஆமோதித்தபடியே, நம்மைப் போல ''பாடுள்ள மனுஷர்களாக'' இருந்தபடியால் அளிக்கப்பட்டது. (அப். 14:15) அவர்களுடைய உத்தியோகம் அவர்களை முன்னிலைக்குக் கொண்டு வரவில்லை, அவர்களுடைய அழிந்து போகிற சரீரங்களுக்கும் பூரணத்தைக் கொண்டு வரவில்லை; ஆனால், புதிய மனதையும், இவைகளை வழிநடத்தும்படியாக பரிசுத்த ஆவியையும் கொண்டு வந்தது. அது அவர்களுடைய சிந்தைகளையும், செயல்களையும் பூரணமாக்கவில்லை. ஆனால் அதற்கு மேலாக பன்னிருவரின் போதனைகள் ஆண்டவருடைய வார்த்தைகளை பிழையற்றவைகளாக இருக்கும்படியாக பார்த்துக்கொண்டது. போப்பாண்டவர்களுக்கும் இம்மாதிரியான பிழையற்ற தன்மை உண்டென்று உரிமை பாராட்டப்படுகிறது. போப்பாண்டவர் தனது பதவிக்கு அப்பால் அல்லது உத்தியோகப்பூர்வமாக பேசும்போது அது தேவனுக்கு மேற்பட்டது என்றும் அவர் பிழை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ''ஆட்டுக்குட்டி யானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்'' என்ற வேதபோதனையை மறுதலித்து ஒதுக்கிவிட்டு, போப்பும் அப்போஸ்தலர் என்று உரிமை பாராட்டி, தவறு செய்யாதவர் என்று சொல்லப்படுகிறது.

(2) ஒரு முறை பேதுருவும் மாயம் பண்ணினார், இருபக்கமும் பேசுவது என்ற குற்றம் புரிந்தார். (கலா. 2 :11–14) இது அப்போஸ்தலர்கள்

தங்கள் நடத்தையில் பிழையற்றவர்களாக இருக்கவில்லை என்பதற்கு ஓர் ஆதாரம் என்று சுட்டிக்காட்டப் படுகிறது. இதை அப்போஸ்தலர்களும் ஒத்துக்கொண்டார்கள் என்று நாம் நினைக்கிறோம். (அப். 14:15) ஆனாலும் மறுபடியும் சொல்லுகிறோம், அவர்கள் அப்போஸ்தலர்களாக பயன்படுவதற்கோ அல்லது அவர்களுடைய வேலையை தடை செய்யவோ இந்த மாம்ச பலவீனங்கள் அனுமதிக்கும்படியாக விடப்படவில்லை, அவர்கள் ''பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே சுவிசேஷத்தை'' பிரசங்கித்தார்கள். (1பேது. 1:12; கலா. 1:11,12) அதை அவர்கள் மனுஷீக ஞானத்தினால் பிரசங்கியாமல், தேவ ஞானத்தினால் பிரசங்கித்தார்கள். (1கொரி. 2: 5–16) பேதுருவின் இந்த பிழையை தேவன் அப்போஸ்தலராகிய பவுல் மூலம் உடனடியாக சரி செய்தார். பவுல் அன்புடன், ஆனால் உறுதியுடன், பேதுருவின் மேல் குற்றம் சுமத்தினதினால் முகமுமாய் எதிர்த்தார். பேதுருவும் இதை நல்மனதுடன் ஏற்றுக்கொண்டார். அவர் யூதருக்கு பட்சமாய் காணப்பட்ட அவருடைய பலகீனத்தை அவர் நல்ல முறையில் மேற்கொண்டார் என்று அவருடைய இரண்டு நிருபங்கள் மூலமாக வெகு தெளிவாகத் தெரிகிறது. எப்படியெனில் இந்த நிருபங்களில் இந்த விஷயத்தைக் குறித்து மனதளவில் எந்தத் தடுமாற்றமும் இல்லை யென்பதோடு, ஆண்டவரோடு ஒத்துப்போவதிலும், அறிக்கை செய்வதிலும் எந்தக் குறையும் தென்படவில்லை.

(3) அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய வருகை வெகு சீக்கிரத்தில், ஒருவேளை அவர்களுடைய ஜீவிய நாட்களிலேயே இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள் என்றும், இவ்விஷயத்தில் அவர்கள் உபதேச கோணத்தில் பார்க்கும்போது பிழை செய்தார்கள் என்றும், ஆகவே அவர்களுடைய உபதேசங்கள் நம்பப்படத்தக்கவைகள் அல்லவென்றும் கூறப்படுகிறது. ஆண்டவர் தனது இரண்டாம் வருகையைக் குறித்தும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்தும் நிச்சயமற்ற நிலையில் அவர்களை விட்டதை ஆண்டவர் அறிவித்தார் என்று நாம் பதில் கூறுகிறோம். பொதுவாக உலகம் இந்த விஷயத்தைக்குறித்து இருக்கிற வண்ணமாக, இருளில் இராமல் இது எப்போது நடக்கும் என்று அறியும்படியாக அவர்கள் கவனித்துப்பார்க்க வேண்டும் என்றுதான் ஆண்டவர் கூறினார். ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்னர் இந்த விஷயத்தைக் குறித்து அவர்கள் கேட்டபோது, ''பிதாவானவர் தம்முடைய

ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல'' என்ற பதில் வந்தது. ஆகவே, ஒரு காலம் வரும் வரை இது ஒரு திவ்விய இரகசியமாக இருக்கும் என்று ஆண்டவர் அறிவித்ததற்கு அப்போஸ்தலர்களைக் குற்றப்படுத்தலாமா? நிச்சயமாக இல்லை. இருந்தபோதிலும், ''வர விருக்கிற காரியங்களைக்'' குறித்து ஆவியின் வழிநடத்துதலின்படி அப்போஸ்தலர்கள் இரண்டாம் வருகையைக்குறித்து அறிவிப்பதில் மிகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதைக் காண்கிறோம். அவர்கள், அதைத் தங்களுடைய ஜீவிய காலத்திலேயே எதிர்பார்த்தார்கள் என்பதற்கு எதிர்மாறாக அவர்களுடைய வார்த்தைகள் இருந்தது என்று காண்கிறோம்.

உதாரணமாக, பேதுரு, தான் மரித்த பின்பு அவருடைய சாட்சியங்கள் சபையோடு கூட இருக்கும் என்ற எண்ணத்துடன் தன்னுடைய நிருபங்களை எழுதினார் என்று தெளிவாகக் கூறுகிறார். இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்வரை அவர் ஜீவிக்கும்படி எதிர்பார்க்க வில்லை என்பதற்கு இது ஒரு தெளிவான உதாணமாயிருக்கிறது. (2பேது. 1:15) அப்போஸ்தலராகிய பவுல், ''காலம் குறுகியதாயிருக்கிறது'' என்று அறிவிக்கும்போது எவ்வளவு குறுகியதாயிருக்கிறது என்று கூறுவதைப் போல பாவனை செய்யவில்லை. உண்மையாகவே ஏழாயிரம் வருட நாட்கள் என்ற ஒரு வார கணக்கில் பார்க்கும் போது– அதில் ஏழாவது பாகம் ராஜ்யத்தைக் கொண்டு வரும்– ஏற்கெனவே ஆறில் நான்கு பங்கான காத்திருப்பு காலம் கடந்துவிட்டது. இதே முறையில்தான் பூலோகக் காரியங்கள் சம்பந்தப்பட்டவைகளைப் பற்றிப் பேசினோம். வியாழக்கிழமையன்று வாரம் சீக்கிரமாக முடிந்து விடும் என்று கூறுகிறோம். பவுலும் கூட அவர் மரிக்கப்போவதைக் குறித்தும், அவருடைய ஜீவியத்தைப் பலி கொடுக்க ஆயத்தமாயிருப்பதைக் குறித்தும், அப்படிச் செய்ய அவர் விரும்புவதைக் குறித்தும் சொன்னார். ஆண்டவருடைய நாள் இரவிலே திருடனைப் போல் வரும் என்று பவுல் சுட்டிக் காட்டினார். இந்த விஷயத்தைக் குறித்த சில தவறான எண்ணங்களைச் சரிபடுத்தும்படியாக அவர் ''ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாக தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருப்பதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்'' என்று கூறினார். ''மேலும் எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச

துரோகம் முந்தி நேரிட்டு பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்தநாள் வராது'' என்பது போன்றவைகளைக் கூறினார். மேலும் ''நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே'' என்றும் சொன்னார்.

(4) ''இதோ நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் ஒரு பிரயோஜனமும் இராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (கலா. 5:2) என்று பவுல் சொன்னதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. அது தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணுவதற்கு வழி வகுத்தது. (அப். 16:3) ஆகவே, அவர் தவறாக போதிக்கவில்லையா, அவருடைய சொந்த சாட்சியை மறுப்பது போல் இல்லையா என்று நாம் கேட்கப்படுகிறோம். நாங்கள் அப்படியில்லை என்று பதில் கூறுகிறோம்; தீமோத்தேயு ஒரு யூதன், அவனுடைய தாயார் யூத பெண்ணாக இருந்தபடியாலும் (அப்.16:1) யூதர்கள் மத்தியில் விருத்தசேதனம் தேசிய அளவிலான சடங்காச்சாரமாக இருந்தபடியினாலும், இது மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முன்னரே ஆரம்பித்திருந்தபடியாலும், கிறிஸ்து தன் சிலுவையின் மேல் ஆணியடித்து நியாயப்பிரமாணத்திற்கு(உடன்படிக்கைக்கு) முற்றுப்புள்ளி வைத்த பின்னரும் அது வழக்கத்தில் இருந்தது. சீனாய் மலையில் இஸ்ரேல் தேசத்திற்கென நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு 430 வருடங்களுக்குக முன்னரே விருத்தசேதனம் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுக்கப்பட்டது. பேதுரு விருத்தசேதனம் உள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படியானார் (அதாவது– யூதர்களுக்கு) பவுல் விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கு (அதாவது புறஜாதியாருக்கு) அப்போஸ்தலனாக்கப்பட்டார். (கலா. 2:7,8)

கலா. 5:2 ல் உள்ள அவரது வாக்கு யூதர்களுக்கு அல்ல, அவர் புறஜாதியினருக்குக் கூறினார். ஏனெனில் அவர் விருத்தசேதனத்தைப் பற்றி நினைத்ததற்கு உண்டான ஒரே காரணமே, சில கள்ள போதகர்கள் அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கைக்கொள்ள வேண்டும், அதோடு கூட கிறிஸ்துவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் குழப்பி, அவர்கள் கிருபையின் உடன்படிக்கையை அலட்சியப்படுத்தும்படியாக வழி நடத்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்படுவது (இப்படி எந்த காரணத்தினாலும்)

கிருபையின் உடன்படிக்கையை மறுப்பதாகும், ஆகவே அது கிறிஸ்துவின் முழு கிரியையுமே மறுப்பதாகும் என்று அப்போஸ்தலர் இங்கே காட்டுகிறார். யூதர்கள் தங்கள் தேசிய முறைமைகளின்படியான விருத்தசேதனத்திற்கு மறுப்பு தெரிவிக்கக் காரணம் காணவில்லை. இது 1கொரி. 7:18,19 ல் உள்ள அவருடைய வார்த்தைகளிலிருந்தும், தீமோத்தேயுவோடு அவர் தொடர்புகொண்டதிலிருந்தும் தெரிகிறது. தீமோத்தேயுவோ அல்லது வேறு எந்த யூதனோ விருத்தசேதனம் பண்ணப்படுதல் அவசியம் என்றபடியல்ல, ஆனால் அது முறைமைக்கு மாறானதல்ல, மேலும் ஓர் அளவுக்கு யூதர்கள் மத்தியிலே அவர் செல்ல வேண்டியிருந்தபடியால், அது அவருக்கு நன்மையாயிருந்தது. யூதர்களின் நம்பிக்கையை அவர் பெற்றார். ஆனால் இதைத் தவறாகப் புரிந்து கொண்ட சிலர் முழுவதும் கிரேக்கனாயிருந்த தீத்துவையும் விருத்த சேதனத்திற்கு வழி நடத்தவேண்டும் என்றபோது பவுல் இந்த விஷயத்தில் முழு எதிர்ப்பைத் தெரிவித்தார் என்று காண்கிறோம். (கலா. 2:3–5)

(5) அப். 21:20–26 ல் சொல்லப்பட்ட பிரகாரமாக பவுல் செய்தது, சத்தியத்தைக் குறித்து அவர் போதித்ததற்கு மாறாகப் பிரதிபலிப்பது போல் எடுத்துக்கொள்ளப்படுகிறது; அது உபதேசங்களையும், முறைமை களையும் குறித்த விஷயங்களில் அவருடைய தவறு என சுட்டிக்காட்டு கிறது என்று எடுத்துக்கொள்ளப்படுகிறது; மாத்திரமல்ல, இந்த இடத்தில் இழைத்த தவறினால் பவுல் கைதியாக அதிகமாக உபத்திரவம் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டார் என்றும், கடைசியில் ரோமாபுரிக்கு அனுப்பப் பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளிலிருந்து இப்படியான கருத்தைக் கொள்ள முடியாது. குறிப்புகள் காட்டுகிறபடி இந்த அனுபவத்தின்போது பவுலுக்கு மற்ற அப்போஸ்தலர்களுடைய அனுதாபமும், ஆதரவும் இருந்தது. ஆனால் இதற்கும் மேலாக, ஆண்டவருடைய சலுகை தொடர்ந்து இருந்தது. அவர் மற்ற அப்போஸ்தலர்கள் சொன்னபடி நடந்தார். அவர் எருசலேமுக்குச் செல்வதற்கு முன்னால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது (அப். 21:10–14) என்னவெனில் கட்டுகளும், சிறைவாசமும் அவரை எதிர்நோக்கியிருப்பது என்பதாகும். அவர் தன்னுடைய ஊழியத்தி னிமித்தம் கீழ்ப்படிதலோடு முன்கூட்டியே சொல்லப்பட்ட துன்பங்களைத் தைரியமாக நோக்கினார். இந்த துன்பத்தின் நடுவிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று ''பவுலே திடன்கொள், நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்தது போல ரோமாபுரியிலும் சாட்சிக் கொடுக்க வேண்டும்''

என்றார். பின்னர் நாம், ஆண்டவர் மறுபடியும் பவுலுக்குச் சிலாக்கியமாக இப்படியாகக் கூறினார் என்று வாசிக்கிறோம். ''என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவர் என்னிடத்தில் வந்து நின்று பவுலே, பயப்படாதே நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகின்ற யாவரையும் தேவன் உனக்கு தயவு பண்ணினார்.'' (அப். 23: 11; 27:23,24)

இந்த விஷயங்களிலிருந்தும், பவுலின் ஒரே மாதிரியான துணிச்சலான நல் நடத்தையிலிருந்தும், ஊழியத்தையும் சாட்சியையும் பெரிதாக எண்ணியதிலிருந்தும், தேவன் ஆட்சேபிக்காமல் ஆதரித்தார் என்று பார்க்கும்போது நாம் இதை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். அப். 21:21–27 வசனத்தை நாம் தியானிக்கும்போது, பவுல் ஆண்டவரை ஏற்றுக் கொண்ட யூதர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் பண்ணக்கூடாது என்று அவர் போதியாமல் இருந்தது மாத்திரமல்ல, மோசேயின் நியாயப்பிரமாணத்தை மறுக்கவுமில்லை, ஆனால் அதற்கு மாறாக அவ்வளவு பலவந்தமாக உன்னதமான உண்மைகளை நிழலாட்டமாய் காட்டின மோசேயின் நியாயப்பிரமாணம் சுட்டிக்காட்டுவதை காட்டி அதைக் கனப்படுத்தினார் என்பதை நாம் காண்கிறோம். ஆகவே, மோசேக்கு மறுப்பு தெரிவிக்காமல், அதற்குப் பதிலாக நியாயப்பிரமாணம் நலமானதாயும் பரிசுத்தமுள்ளதுமா யிருக்கிறது என்று கூறி மோசேயைக் கனப்படுத்தினார். மேலும் அதனால் பாவத்தின் கொடிய தன்மையைக் குறித்ததான அறிவு அதிகரித்துள்ளது, நியாயப்பிரமாணம் அவ்வளவு உன்னதமானதாக இருந்தபடியால் பூரணமில்லாத எந்த மனிதனும் அதற்குக் கீழ்ப்படிய முடியாது என்று சுட்டிக்காட்டியதோடு கிறிஸ்து அதை கடைப்பிடித்ததால் அதனால் வரும் பலன்களைப் பெற்றார் என்றும், இப்பொழுது கிருபையின் உடன்படிக்கையின் கீழாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியாதவர்களுக்கு நித்திய வாழ்க்கையையும், ஆசீர்வாதங்களையும் இலவசமாகத் தருகின்றார் என்றும், ஆனால் விசுவாசத்தினால் அவருடைய பூரணமான கீழ்ப்படிதலையும், பலியையும் அவர்களுடைய பூரணமற்ற நிலையை மூடுவதாக ஏற்றுக்கொண்டவர்கள், நீதியின் பாதையில் அவரைப் பின்பற்றுகிறவர்கள் ஆனார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

யூத யுகத்தின் சடங்காச்சாரங்களாகிய, உபவாசங்கள், மாதப்பிறப்பு, ஓய்வு நாட்கள், பண்டிகைகளைக் கொண்டாடுவது

போன்றவைகள் சுவிசேஷ யுக ஆவிக்குரியகாரியங்களுக்கு நிழலாக இருந்தன. அப்போஸ்தலர் தெளிவாகக் காட்டுகிறது என்னவெனில் புது உடன்படிக்கையின் சுவிசேஷம் இவைகளை கட்டளையிடவோ, தடை செய்யவோ இல்லை. (ஆண்டவருடைய இராப்போஜனமும், முழுக்கு ஞானஸ்நானமும் மாத்திரமே நமக்கு அடையாளமாயிருக்கும்படி கட்டளையிடப்பட்டது, அவைகள் புதியவைகளாகும்). (கொலோ. 2:16,17; லூக். 22:19; மத். 28:19)

நாம் இப்பொழுது பார்க்கின்ற யூதர்களுடைய அடையாளமான சடங்காச்சாரங்களில் ஒன்றான ''சுத்திகரிப்பு'' என்பது பவுலாலும் நான்கு யூதர்களாலும் கடைபிடிக்கப்பட்டது. யூதர்களாக இருந்தபடியால், அவர்கள் தெரிந்துகொண்டால் அவர்களை கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு தங்களை அர்ப்பணம் செய்யும் உரிமை மாத்திரம் அல்லாது இந்த அடையாளமாய் இருக்கிற சுத்திகரிப்பையும் செய்ய அவர்களுக்கு உரிமை இருந்தது. இதைதான் அவர்கள் செய்தார்கள். பவுலோடு இருந்த மனிதர்கள் ஆண்டவருக்கும் ஜனங்களுக்கும் முன்பாக, தங்கள் தலைகளை சவரம் பண்ணிக்கொள்வதன் மூலம் அதிகமாக தாழ்த்தும்படி ஒரு பொருத்தனை செய்து கொண்டார்கள். இந்த அடையாளமான சடங்காச்சாரங்களுக்கு பணச்செலவு உண்டு, இதற்கான செலவு ஒரு வேளை தேவாலயத்தின் செலவுகளைச் சந்திக்கும்படியாக ஒவ்வொருவருக்கும் என ஏற்படுத்தப்பட்ட காணிக்கைப் பணமாகும்.

அப்போஸ்தலராகிய பவுல் ஒரு போதும் யூதர்கள் நியாயப் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள் என்று கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால், அதற்கு மாறாக அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அவன் ஜீவிக்கும் காலம்வரை அவன் மேல் அதற்கு ஆதிக்கம் உண்டு என்று கற்றுக்கொடுத்தார். இருந்தபோதிலும் ஒரு யூதன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரோடு மரிப்பானாகில், இப்படிப்பட்ட யூதன் மேல் உள்ள நியாயப் பிரமாண உடன்படிக்கையின் உரிமை முற்றுபெறும். மேலும் அவனை கிறிஸ்துவுக்குள் தேவனுடைய விடுதலையாக்கப்பட்ட மனிதனாக ஆக்கிற்று. (ரோம். 7:1–4) ஆனாலும் மனமாற்றம் அடைந்த புறஜாதியினருக்கு, அவர் அவர்கள் ஒருபோதும் யூத நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டவர்களாக இருந்ததில்லையாதலால், யூத நியாயப்பிரமாண சடங்காச்சாரங்களையும் பண்டிகைகளையும் கைக்கொள்ள முயற்சி செய்வார்கள் என்றால் அது அவர்கள், தங்களுடைய இரட்சிப்புக்கு அந்த அடையாளங்கள் மேல்

நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் கிறிஸ்துவின் பலியினால் வரும் புண்ணியத்தின் மேல் முழுமையாக சார்ந்திருக்கவில்லை என்று பொருள்படும் என்றும் அவர் கற்றுக்கொடுத்தார். இதற்கு அப்போஸ்தலர்கள் இசைவு தெரிவித்தார்கள். (அப். 21:25; 15:20, 23–29 ஐப் பார்க்கவும்)

நாங்கள் முடிவாகக் கூறுவது என்னவெனில் பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் தேவன் ஆச்சரியமாக உபயோகப்படுத்தினார். அவர்களை அவர் அவருடைய சத்தியத்திற்காக மிகவும் திறமையுள்ள ஊழியக்காரர்களாக்கி அவர்கள் எழுதிய விஷயங்களில் அவர்களை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழி நடத்தினார். ஆகவே, தேவனுடைய மனிதனை தேறியவனாக்கும் எந்த ஒரு காரியமும் விடப்படவில்லை. அவர்களுடைய ஆதிகால எழுத்துகளில் அப்போஸ்தலர்களேகூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு ஒரு கரிசனையும், ஞானமும் இருந்தன. நம்முடைய விசுவாசத்தின் நிச்சயமான இந்த அஸ்திபாரத்திற்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகிறவர்களல்ல

எந்த விதத்திலாவது அப்போஸ்தலர்கள் சபையில் பிரபுக்கள் என்று எண்ணப்பட முடியுமா? அல்லது இன்னொரு வகையில் சொல்லப் போனால், சபையின் ஆண்டவரும் தலையானவரும் சென்ற பின்னர் அவர்களில் யாராவது தலைமை இடத்தை எடுத்தார்களா? அல்லது, அவர்கள் ஆண்டவருடைய இடத்தை எடுக்கவும் ஆட்சி செய்யும் பொறுப்பை எடுக்கவும் எல்லாரும் ஒருமித்து இணைந்து தலைமையை உண்டாக்கினார்களா? இல்லையெனில் அவர்கள் யாராவது ரோமாபுரியின் போப்புக்கள் சொல்லிக் கொள்ளுகிறபடி அந்த இடத்துக்கு அவர்களாகவே வந்துவிட்டார்களா– பிரதி குருவாக அல்லது சரீரமான சபைக்கு கிறிஸ்துவுக்கு பதிலாக வந்தார்களா?

இந்த அனுமானங்கள் மத்தியில் (எபே. 4:4,5) ''ஒரே சரீரமும்,'' ''ஒரே கர்த்தரும் உண்டு'' என்ற பவுலின் தெளிவான அறிக்கை நமக்கு இருக்கிறது. ஆகவே அந்த சரீரத்தின் பலவேறு அங்கங்கள் மத்தியில், சில அங்கங்களின் முக்கியத்துவம் எப்படிப்பட்ட தாயிருந்தாலும் ஒரே

கர்த்தரும், தலைமையானவருமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதைத்தான் ஆண்டவரும், திரளான ஜனங்களின் மத்தியிலும் சீஷர்களுக்கும் தெளிவாக இப்படியாக போதித்தார்: ''வேதபாரகரும், பரிசேயரும் ரபி, ரபி என்று அழைக்கப்பட விரும்புகிறார்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்.'' (மத். 23:1, 2, 6–8) மறுபடியும் அவர் அப்போஸ்தலர்கள் மத்தியில் இவ்வாறு கூறுகிறார்: ''புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும் அவர்களில் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்து இருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷ குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.'' (மாற்கு 10: 42–45)

ஆதிகால சபை எப்போதாகிலும் அப்போஸ்தலர்களை பிரபுக்கள் என்று எண்ணினது என்பதற்கோ அல்லது அப்போஸ்தலர்கள் இப்படியான அதிகாரத்தை அல்லது கனத்தை எடுத்துக் கொண்டார்கள் என்பதற்கோ நமக்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. அவர்கள் நடந்து கொண்ட விதம் போப்புக்களும், எல்லா கிறிஸ்தவ சபை பிரிவினரும் கொண்டிருக்கும் பிரபுத்துவம் என்பதைக் குறித்தான எண்ணத்திற்கு மிகவும் மாறுபட்டதாயிருந்தது. போப்புக்கள் வருணிப்பது போல பேதுரு ஒருபோதும் தன்னை அப்போஸ்தலர்களில் ராஜா என்று கூறியது கிடையாது. அப்படி இல்லாவிடினும், அவரோ மற்றவர்களோ ஒருபோதும் ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டதில்லை, அல்லது இப்படியான மரியாதையை சபையிலிருந்து பெற்றதும் கிடையாது. அவர்கள் ஒருவருக்கொருவர் அழைத்தது, அல்லது குறிப்பிட்டது சாதாரணமாக பேதுரு, யோவான், பவுல் போன்றுதான்; இல்லையெனில் சகோதரர் பேதுரு, சகோதரர் யோவான் போன்றுதான்; மேலும் அதுபோன்று சபையில் உள்ள அனைவரும் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகள் என்றுதான் அழைக்கப்பட்டார்கள். (அப். 9:17;

21:20; ரோம. 16:23; 1 கொரி. 7:15; 8:11; 2கொரி. 8:11; 2கொரி. 8:18; 2தெச. 3: 6,15; பில. 7,16)

ஆதி சபையில் முன்னணியில் உள்ள இந்த தேவ ஊழியர்கள் குருமாருக்கான அங்கிகளையோ, அல்லது சிலுவையுடன் கூடிய ஜெபமாலையுடன் ஜனங்களுடைய கனத்தையும், மரியாதையையும் பெறுவதற்காகச் செல்லவில்லை; ஏனெனில் ஆண்டவர் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்திருந்தபடி, அவர்களில் முதன்மையானவர் யாரென்றால் அதிகமாக ஊழியம் செய்தவர்தான். இப்படியாக, உதாரணமாக, உபத்திரவம் சபையை தாக்கியபோது சபையினரை எருசலேமை விட்டு வெளியே விரட்டினபோது, பதினோரு பேரும் அங்கேயே தைரியமாக நிலைத்திருந்தார்கள், ஏனெனில் இப்படியாக கஷ்டமான காலத்தில் வேறு இடங்களில் இருந்தவர்கள் ஆதரவுக்காக, உதவிக்காக எருசலேமை நோக்கிப் பார்த்தார்கள். அவர்களும் ஓடியிருந்தால் முழுச் சபையும் திகைப்பு அடைந்திருப்பார்கள், பயத்தால் பீடிக்கப்பட்டிருப்பார்கள். யாக்கோபு ஏரோதின் பட்டயத்தால் மடிவதைப் பார்க்கிறோம். பேதுருவும், இந்த மாதிரியான ஆபத்து எதிர் நோக்கி இருக்கையில், சிறைச்சாலையில் தள்ளப்பட்டு இரண்டு சேவகர்களோடு சங்கிலியால் கட்டப்பட்டிருந்தார். (அப். 12:1–6) மேலும் பவுலும், சீலாவும் அவர்களுடைய ஊழியத்தில் அனேக தரம் அடிபட்டார்கள், அதன் பின் உட்காவலரையில் அடைக்கப்பட்டு, அவர்கள் கால்கள் தொழு மரத்தில் மாட்டி வைக்கப்பட்டன. பவுலும் அதிகமான உபத்திரவங்களை அனுபவித்தார். (அப். 16:23,24; 2கொரி. 11:23–33) அவர்கள் பிரபுக்களைப் போன்று காணப்பட்டார்களா அல்லது பிரபுக்களாக நடந்து கொண்டார்களா? நிச்சயமாக கிடையாது.

இந்த விஷயத்தில் பேதுரு மிகவும் தெளிவாக இருந்தார். மூப்பர்களுக்கு ஆலோசனையாக சொல்லும்போது, ''தேவனுடைய மந்தையை மேய்ப்பாயாக'' என்று சொன்னார். அவர் உங்களுடைய மந்தை என்று கூறவில்லை, இன்றைக்கு அநேக ஊழியக்காரர்கள் சொல்வது போன்று உங்களுடைய ஜனங்கள், உங்களுடைய சபை என்று கூறவில்லை, ஆனால் தேவனுடைய மந்தை என்றார்கள், சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகிறவர்கள் போன்று இல்லாது, தாழ்ச்சிக்கு, உண்மைக்கு, வைராக்கியத்திற்கு, தேவ பக்திக்கு மாதிரியாக இருந்தார்கள். (1பேது. 5:1–3) மேலும் பவுல் கூறுகிறார், ''தேவன் அப்போஸ்தலராகிய எங்களை

மரணத்திற்கு குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாகக் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர்..... நாங்கள் பலவீனர்.....பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், கட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலை செய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு சகிக்கிறோம்; தூஷிக்கப்பட்டு வேண்டிக்கொள்ளுகிறோம்; உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப்போலவுமானோம்.'' (1கொரி. 4:9–13) இவைகள் எல்லாவற்றிலும் இருமாப்பாய் ஆளுகிறவர்கள் போல் இருக்கிறார்களா? ஆண்டவருடைய சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகை செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற சில சகோதர்ர்களுக்கு பவுல் திட்டவட்டமாய் கூறுகிறார்: ''இப்பொழுது திருப்தியடைந்திருக்கிறீர்களே, இப்போது ஐசுவரியவான்களாயிருக்கிறீர்களே. எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே;'' இந்த விஷயத்தில் ''என்னைப் பின்பற்றுகிறவர் களாகுங்கள்.'' மறுபடியும், ''இப்படியாக எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும் (வேலைக்காரர்கள்), தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்'' என்றார். (1கொரி. 4:8, 16,1)

மறுபடியும் பவுல் தொடர்ந்து கூறுகிறார்: ''சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாக, தேவன் எங்களை உத்தமரென்று எண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவு மில்லை; தேவனே சாட்சி. நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்கு பாரமாயிருக்கக்கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை. உங்களிடத்தில் பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல பட்சமாய் நடந்து கொண்டோம்.'' (1தெச. 2:4–7) அப்போஸ்தலர்கள் கட்டளையோ, சாபமோ இடாமல் தாங்கள் கூறுவதை வேண்டுதல் மூலம் தெரிவிப்பதைப் பின் வறுமாறு பார்க்கிறோம்: ''தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்.''

''அன்றியும், என் உத்தம கூட்டாளியே, ...உன்னையும் வேண்டிக்கொள்கிறேன்.'' ''முதிர் வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல்.....புத்தி சொல்லு.'' (1கொரி. 4:13; பிலி. 4:3; 1தீமோ. 5:1)

ஆதி சபை சரியான விதத்தில், அப்போஸ்தலருடைய தெய்வ பக்திக்கு கனத்தை அளித்தது மாத்திரமல்ல, அவர்களுடைய உயர்வான வேத அறிவையும், ஞானத்தையும் கனப்படுத்தி, அவர்களுக்கென்று தேவன் விசேஷமாகத் தெரிந்துகொண்ட பிரதிநிதிகளாக இருந்தபடியால், அவர்களுடைய பாதத்தண்டையில் அமர்ந்து, வெறுமையாக கேள்வி கேட்காத மனதுடன் இல்லாமல், ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியும் மனதுடன் இருந்தார்கள். (1யோவா. 4:1; 1தெச. 5:21; ஏசா. 8:20) அப்போஸ்தலர்கள் அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதில் இந்த மனநிலையை கட்டளையிட்டு, அவர்களுடைய நம்பிக்கைக்கு ஒரு காரணம் இருப்பதைக் கண்டு, அதை ஊக்குவித்தார்கள். ஆனால் சபையானது மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு மனுஷ ஞானத்திற்குரிய (மனுஷீக தத்துவம், கோட்பாடுகள்) நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தும்படியாக அப்படியான நிலையை சந்திக்க ஆயத்தமாயிருந்தார்கள். (1கொரி. 2:4,5) அவர்கள் தங்களுக்கென ஒரு குருட்டாட்டமான, மூட நம்பிக்கையுடன் கூடிய மரியாதையை வளர்க்கவில்லை.

''பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளா யிருந்தார்கள்'' என்று நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள், அவர்கள் பிரசங்கித்த சுவிசேஷம், ஆதிகாலத்து தீர்க்கதரிசிகள் மறைமுகமாக அறிவித்த அதே சுவிசேஷம்தான் என்று அறிவிப்பதில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். ''தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே (கிறிஸ்துவின் சரீரமான சபைக்கு) இவைகளைத் தெரிவித்தார்கள் என்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்போது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது;''

(1பேது. 1:10–12) ஆண்டவராலேயே வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்ட ஜீவனும் அழியாமையும் உள்ள அதே சுவிசேஷமாயிருந்தது. அவர்களால் சபைக்கு கொடுக்கப்பட்ட அதிகமான விவரங்களும், விஸ்தாரமான குறிப்புகளும் விசேஷ வெளிப்பாடுகள் மூலமாகவோ அல்லது இயற்கையான முறையில் கிடைத்ததோ, ஆனால் எல்லாம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படியும், ஏவுதலின்படியும் கிடைத்தவை களாகும். ''இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்'' என்ற ஆண்டவரின் வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக அவைகள் அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் மூலமாக சபைக்கும் கொடுக்கப்பட்டதாகும்.

ஆகவே பெரோயா பட்டணத்தார் வேதங்களை ஆராய்ந்து அப்போஸ்தலருடைய சாட்சிகள் நியாயப்பிரமாணத்தோடும் தீர்க்கதரிசிகளோடும் ஒத்து இருந்ததா என்று பார்த்தார்கள், மேலும் ஆண்டவருடைய போதனைகளோடு ஒத்துப் பார்ப்பதும் நலமானதாக இருந்தது. நம்முடைய ஆண்டவரும், ''வேதத்தை ஆராய்ந்து பாருங்கள் .....என்னைக்குறித்து சாட்சி கொடுப்பவைகளும் அவைகளே'' என்று கூறி, அவருடைய சாட்சியை இவ்விதமாக நிரூபிக்கும்படியாக அழைப்பித்தார். முழு திவ்விய சாட்சியானது, அது நியாயப் பிரமாணத்தினாலோ, தீர்க்கதரிசிகளாலோ, ஆண்டவராலோ அல்லது அப்போஸ்தலர்களாலோ கொடுக்கப்பட்டதோ, எப்படியாயினும் அது இசைவாயிருக்க வேண்டும். அவர்களுடைய முழு சாட்சியும் அவர்களுடைய திவ்விய ஊக்குவித்தலுக்கு ஆதாரமாகும். ஆகவே பழைய, புதிய ஏற்பாடுகள் ''தேவ சுரமண்டலமாக'' (வெளி.15:2) அமைந்திருக்கின்றன என்று ஆண்டவர்தானே கூறுகிற அளவுக்கு அதே இணக்கம் நிலைத்திருப்பதைக் காண்கிறோம், தேவனுக்கு ஸ்தோத்திரம்! நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசிகளின் பல்வேறு சாட்சிகள் அந்த தேவ சுரமண்டலத்தின் நரம்புகளாக உள்ளன. அவைகள் நம் உள்ளத்தில் தங்கியுள்ள பரிசுத்த ஆவியினால் மீட்கப்படும்போது, திவ்விய சத்தியத்தை நாடுகின்ற வைராக்கியமான ஊழியக்காரர்களின் விரல்களினால் மொத்தமாக இசைக்கப்படும்போது, அந்த மிகவும் வசீகரமான தொனிகள் நம்முடைய அழிந்து போகிற காதுகளில் மிக அருமையாக தொனிக்கிறது. ஆசீர்வதிக்கப்பட்ட உன்னத சங்கீதமான ''மோசேயின் பாட்டுக்கும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டுக்கும்'' ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

இதை நாம் அவருடைய பரிசுத்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் சாட்சிகளின் மூலம் கற்றுக்கொள்ளுகிறோம். இவர்களுக்கு ஆண்டவராகிய இயேசுவே தலையாயிருக்கிறார்.

ஆனால் ஆண்டவர் மற்றும் அப்போஸ்தலர்களுடைய சாட்சி நியாயப்பிரமாணத்தோடும், தீர்க்கதரிசிகளோடும் இசைந்திருக்க வேண்டியிருந்தாலும், நாம் அவைகள் பழையதும் புதியதுமானவை களையும் சாட்சியாக அறிவிக்க எதிர்பார்க்க வேண்டும். (மத். 13:35; சங். 78:2; உபா. 18:15,18; தானி. 12:9) ஆகவே, அவைகள் ஆதிகாலத்து தீர்க்கதரிசனங்களில் மறைந்திருந்த உண்மைகளை விளக்கிக்கூறுவது மாத்திரமல்ல, சத்தியத்தின் புதிய வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்து கின்றன.

அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள்

பொதுவாக கிறிஸ்தவ உலகில் காணப்படுகின்ற எண்ணம் என்னவெனில், ஆண்டவர் உருவாக்கிய சபை அமைப்பை முழுமையாக்காமல் விட்டு விட்டார் என்பதாகும். மேலும் அவருடைய ஜனங்கள் இந்த அமைப்பு சம்பந்தமாக தன்னுடைய சொந்த ஞானத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார் என்றும் எண்ணுகிறார்கள். பலதரப்பட்ட மனதுடைய அநேக மனிதர்கள் அதிக அல்லது குறைவான கண்டிப்புடன் கூடிய அமைப்புகளை விரும்பி யிருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள், பலதரப்பட்ட முறைகளில், குறைந்த அல்லது கண்டிப்பான முறையில் தங்கள் சபையை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள். மேலும் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய சபை பிரிவோ அல்லது ஆளுகை செய்யும் விதமோதான் மேன்மையானது என்று கூறுகிறார்கள். இது தவறானது. உலகம் உண்டாவதற்கு முன்னரே, தன்னுடைய புது சிருஷ்டியை முன்னறிந்த தேவன், தன்னுடைய சொந்த ஜனங்கள் தன்னுடைய சொந்த வேலையைக் குறித்த அவருடைய சித்தத்தைப்பற்றிய தெளிவான நோக்கம் இல்லாதபடிக்கும், அவரவருடைய நலனுக்கென தகுதியான அமைப்பு இல்லாமல் விட்டுவிடும்படிக்கும் தேவன் கரிசனையற்றவராக இருந்திருப்பார் என்று நினைப்பது நியாயமானதல்ல. மனிதனுடைய மனது ஒருபுறம் அராஜகத்திற்கு நேராக இருக்கும் அல்லது

மறுபுறம் கடினமான அமைப்பு அல்லது அடிமைத்தனத்தை நோக்கியிருக்கும். திவ்விய ஒழுங்கானது இந்த இரண்டு உச்ச அளவையும் தவிர்த்து அடிமைத்தனத்திற்கு ஏதுவான எல்லாவற்றையும் தவிர்த்து வெளிப்படையாக சாதாரணமாகக் காணப்படும் ஓர் ஒழுங்கு முறையை புது சிருஷ்டிக்குக் குறிப்பிடுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்மையிலேயே வேதம் கட்டளையிடுகிறதாவது: ''ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்'' என்பதாகும். (கலா. 5:1)

இந்த திவ்விய ஒழுங்கை முன்னால் வைக்கும்போது, நாம் நம்மை முற்றிலுமாக திவ்விய முறைகளுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலருடைய நாட்களிலே ''விழுந்து போகுதல்'' முன்னால் சொன்னபடியே கிரியை செய்யத் துவங்கிவிட்டது என்பதையும், அப்போஸ்தலர்கள் மரித்த பின்னர் துரிதமாக இது முன்னேறி முதலாவது போப்பாண்டவரின் ஒழுங்கு முறையில் முடிவடைந்தது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வேதாகமத்தில் கூறப்பட்ட கருத்தில் கொள்ளும்போது, புதிய ஏற்பாட்டில் உள்ள குறிப்புகளோடு அதே மாதிரியாக நியாயப்பிரமாணத்தின் கீழாக இருந்த ஒழுங்குகளையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் அந்த மாதிரிகள் இந்த சுவிசேஷ யுகத்திலுள்ள காரியங்களுக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதாக மாத்திரமல்ல, வருகின்ற ஆயிர வருட அரசாட்சியின் ஒழுங்கு முறைகளையும் மாதிரியாகக் காட்டியது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, நாம் பார்த்திருக்கிறபடி மீட்பரின் நாளும் அதன் கிரியையும் இந்த சுவிசேஷ யுகத்திற்கு பிரதிநிதித்துவம் அளிப்பதாக இருந்தது. அந்த நாளிலே பிரதான ஆசாரியன் தன்னுடைய மகிமையான வஸ்திரங்களை உடுத்தவில்லை, ஆனால் சாதாரணமாக பரிசுத்த வஸ்திரங்களை அல்லது சணல்நார் வஸ்திரம் அணிந்திருந்தான். இந்த சுவிசேஷ யுகத்தில் ஆண்டவரோ அல்லது சபையோ ஒரு முக்கியமான இடத்தையோ அல்லது மனிதரின் பார்வையில் மகிமையான இடத்தையோ ஆக்கிரமிக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காக அப்படிச் செய்தார்கள்; அவர்கள் எடுத்துக்கொண்ட நிலையானது சாதாரணமானது, ஆனால் சணல்நார் வஸ்திரம் தூய்மையையும் நீதியையும் காட்டுவதாக இருக்கிறது; சபையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தலையாயிருக்கிற ஆண்டவரின்

நீதியைக் காட்டுவதாக உள்ளது. பாவ நிவாரண நாளுக்குப் பின்னரே பிரதான ஆசாரியன், தன்னுடைய மகிமையான வஸ்திரங்களை உடுத்தினான்; அது ஆயிர வருட அரசாட்சியின்போது கிறிஸ்துவின் அதிகாரத்தையும் வல்லமையையும் காட்டுகின்ற மகிமைகளுக்கும், கனத்திற்கும் அடையாளமாக இருந்தது. அந்த மகிமைகளில் சபையானது அதனுடைய ஆண்டவரோடுகூட இணைத்துக் காட்டப்பட்டுள்ளது; ஏனெனில் பிரதான ஆசாரியனின் தலை நம்முடைய கர்த்தருக்கும் ஆண்டவருக்கும் அடையாளமாக காட்டப் பட்டிருக்கிறபடியே, ஆசாரியனின் சரீரம் சபைக்கு அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது. மேலும் மகிமையான வஸ்திரங்கள், அதன்படியே மேன்மைப் படுத்தப்படும் காலம் வரும்போது, முழு இராஜரீக ஆசாரியத்துவத்தின் கம்பீரத்திற்கும் கனத்திற்கும் அடையாளமாக இருக்கும். போப்புக்கள் கிறிஸ்துவின் ஆட்சியானது அவர்களால் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளால் நிறைவேற்றப்படுகிறது என்று பொய்யாகக் கூறிக்கொள்வதுடன், போப்புக்கள் ஆண்டவரின் பிரதிநிதிகள் என்றும், மேலும் கார்டினல்கள் (cardinals), ஆர்ச் பிஷப்புக்கள் (arch bishops), பிஷப்புக்கள் (bishops) மகிமையிலும், வல்லமையிலும் சபையின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் என்றும் பொய்யாக கூறுகிறார்கள். இதனால் அவர்கள் சமுதாய, மத சம்பந்தமான கட்டுப்பாட்டை உலகத்தார்மேல் செலுத்தும்படியாக முயற்சித்து, அவர்கள் பதவியினிமித்தம் அணிகின்ற அலங்காரமான வஸ்திரங்களினால், தெரிந்தெடுக்கப்பட்ட புது சிருஷ்டிக்குரிய மகிமைகளையும், கம்பீரங்களையும் தங்களுக்கென எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையான இராஜரீக ஆசாரியர்கள் இன்னமும் பலியாகிய வெண்வஸ்திரங்களை அணிகிறார்கள்; மாத்திரமல்ல சபையின் உண்மையான ஆண்டவருக்குக் காத்திருக்கிறார்கள்; மேலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் கடைசி அங்கத்தினர் பலியில் தனது பங்கை நிறைவேற்றி முடிக்கும் வரை ‘‘மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும்’’ உயர்த்தப்படுவதற்காகக் காத்திருக்கிறார்கள்.

சபை துன்புறுத்தப்படுதல் மற்றும் பலியின் காலத்திற்கான சட்டதிட்டத்திற்கும் சபை அமைப்பைக் குறித்து உள்ள நம்முடைய வழி நடத்துதலுக்கும் நாம் குறிப்பாக புதிய ஏற்பாட்டைத்தான் பார்க்க வேண்டும். சட்ட திட்டங்கள் ஒரு கச்சிதமான முறையில்

அளிக்கப்படவில்லை என்பதால், அவை ஒரு முழுமையான முறைமை என்பதை கண்டுகொள்வதிலிருந்து நாம் பின்வாங்கிவிடக்கூடாது. பிரமாணங்களைப்பற்றிய நம்முடைய இயல்பான நெறிதவறிய எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக நாம் போராட வேண்டும்; அதோடு தேவனுடைய குமாரர்களாகிய சபைக்கு ''பூரணப் பிரமாணமாகிய சுயாதீன பிரமாணம்'' கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவர்கள் இனி ஒருபோதும் வேலைக்காரர்களல்ல, ஆனால் புத்திரராயிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்; அவர்கள் புத்திரருக்குரிய சுயாதீனத்தை உபயோகிக்க கற்றுக்கொள்ள வேண்டும்; அதன்படியாக குறிப்பாக பிரமாணத்திற்கும், அன்பின் நியமங்களுக்கு அவர்களுடைய முழுமையான கீழ்ப்படிதலைக் காட்ட வேண்டும்.

அப்போஸ்தலர் நமது மனங்களுக்கு முன்னால் ஒரு புது சிருஷ்டியின் படத்தை வைக்கிறார்; அது முழு விஷயத்தையும் விளக்குகிறது; அந்தப் படம் ஒரு மானிட உருவத்தைக் குறிக்கிறது. அதன் தலை ஆண்டவரையும், பல்வேறு சரீர அங்கங்கள் சபையையும் குறிக்கிறது. 1கொரி. 12 ஆம் அதிகாரத்தில் இந்த விஷயம் அருமையாக விளக்கப்படிருக்கிறது. ''சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அனேகம், ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அனேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப் பிரகாரமாகவே கிறிஸ்துவும் இருக்கிறார் (ஒரு சரீரம் அல்லது கூட்டம், அனேக அங்கங்களை உள்ளடக்கியது). எல்லோரும் (யூதரானாலும், புறஜாதியாரானாலும் அடிமையானாலும், சுயாதீனரானாலும்) ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்.'' அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகையில் ஒரு மானிட சரீரம் நன்றாக இருப்பது அதன் அங்கங்கள் எல்லாம் பொதுவாக ஒன்றோடொன்று ஒற்றுமையிலும், ஒரு மனதுடனும், கூட்டுறவுடனும் இருப்பதைப் பொறுத்தது என்று நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார், அதோடுகூட கிறிஸ்துவின் சரீரமான சபையோடும் அப்படியே இருக்கிறது என்கிறார். ஒரு அங்கம் வேதனையையோ, அல்லது தாழ்மையையோ அல்லது அவமானத்தையோ அனுபவித்தால் எல்லா அங்கங்களும் விரும்பியோ, விரும்பாமலோ பாதிக்கப்படுகின்றன. மேலும் ஓர் அங்கம் விசேஷமாக ஓர் அளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்டால், அல்லது ஆறுதல்படுத்தப்பட்டால், அல்லது புத்துணர்வு ஊட்டப்பட்டால், எல்லா அங்கங்களும் அந்த ஆசீர்வாதத்தில் பங்கு பெறுகின்றன. அவர் (23ம் வசனம்) நம்முடைய

இயற்கையான சரீரத்தின் பலகீனங்கள், கறைகள் போன்றவைகளை மூடவும் மறைக்கவும் முற்படுகிறோம் என்றும், மேலும் அவைகளிலிருந்து விடுதலை பெற உதவி செய்கிறோம் என்றும் கூறுகிறார்; அதே போன்று கிறிஸ்துவின் சரீரமான சபையும் இருக்க வேண்டும்–அதிகமாக கறைபட்ட அங்கங்கள் அதிகமான பராமரிப்பைப் பெற்று, இரக்கத்தினாலும் அன்பினாலும் மூடப்படல் வேண்டும் என்றும், ''சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படி,'' மிகவும் தாழ்மையுள்ள அங்கத்திற்கும் அதிக கனத்துக்குரிய அங்கத்திற்கும் ஒரே அளவில் கரிசனை காட்டப்பட வேண்டும் – என்றும் குறிப்பிடுகிறார். (வச. 24)

இதன்படியாக, ஆண்டவருடைய அமைப்பாகிய சபையானது உண்மையாகவே முழுமை உள்ளதாக இருக்கிறது; அது இயல்பில் இருக்கிறபடியே கிருபையிலும் இருக்கிறது; எங்கெல்லாம் அமைப்பானது முழுமையாக உள்ளதோ அங்கெல்லாம் சிம்புகளும் காயம் கட்டும் துணியும் குறைவாய் காணப்படும்; ஒரு மரமானது நுனியிலிருந்து வேர்வரை நன்றாக அமைந்து ஒன்றாக நிலைத்து இருக்கிறது; ஆனால் அதன் கிளைகள் வெளிப்படையான கட்டுகளினால் அல்லது கயிற்றினால் அல்லது திருகு ஆணியினால் அல்லது எழுத்தில் உள்ள சட்ட திட்டங்களினால் நிற்கவில்லை; அப்படியாகத்தான் கிறிஸ்துவின் சரீரமான சபையும் இருக்கிறது; ஆண்டவர் கொடுத்திருக்கிற பிரகாரம் சரியாகப் பொருத்தி ஒற்றுமைப்படுத்தி இணைக்கப்பட்டிருந்தால் எல்லா அவயவங்களையும் ஒன்றாக நிறுத்தும்படி கயிறுகளுக்கும், ஆப்புக்களுக்கும், திருகு ஆணிகளுக்கும் தேவையிருக்காது; அவைகளை ஒன்றாகக் கொண்டுவரும்படியாக அல்லது நிலைநிறுத்தும்படியாக சட்டதிட்டங்களுக்கோ, சமயக் கோட்பாடுகளுக்கோ அவசியம் இருக்காது; ஒரே ஆவி ஐக்கியத்தின் இணைப்பாக இருக்கிறது. உயிர் இருக்கும்வரை, ஒற்றுமை, சரீரத்தின் ஒரே தன்மையும் நிலைத்திருக்க வேண்டும். தேவனுடைய ஆவி நிறைந்திருப்பதைப் பொறுத்து இது ஒரு உறுதியான அல்லது பெலவீனமான ஐக்கியமாக இருக்கும்.

அப்போஸ்தலர் தொடர்ந்து, தேவனே ஏற்படுத்திய புது சிருஷ்டி என்ற அமைப்பின் காரியங்களுக்கு அவரே அதிகாரியாக இருக்கிறார் என்று சுட்டிக் காட்டுகிறார். அவருடைய வார்த்தைகளாவன: ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள்.

தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவிதமான பாஷைகளையும் ஏற்படுத்தினார்.'' அவருடைய வசனத்தின்படியும் ஆவியின்படியும் நடத்தப்படுபவர்கள், வழி நடத்துதலுக்காக அவரை நோக்கி பார்ப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மத்தியில்தான் இந்த காரியங்களுக்கு அதிகாரியாயிருப்பவர்களை வைத்திருக்கிறார் என்பது அவருடைய வாக்குத்தத்த மாயிருக்கிறது. தங்களையும், ஒருவருக்கொருவரையும் சபையில் மகிமை, கனம், நம்பிக்கை, ஊழியம் போன்ற ஸ்தானங்களுக்கு அமர்த்திக்கொள்ளும் அநேகருக்கு, இது ஒரு புதிய சிந்தனையாகக் காணப்படும்.

இது புரிந்து கொள்ளப்படுமென்றால் எவ்வளவு குறைவானவர்கள் பிரதான ஆசனங்களை நாட ஓடுவார்கள், மாத்திரமல்ல கனம் உள்ள பதவிகளுக்காக அரசியலில் காணப்படுகிறபடி செல்வாக்கைப் பயன்படுத்திப் பார்ப்பார்கள். உண்மையான சபையின் மேல் உள்ள திவ்விய பராமரிப்பை உணர்ந்து கொள்வது என்பது, முதலாவது சாதாரண பெயர் அளவில் உள்ள ஸ்தாபனங்களிலிருந்து உண்மையான சபையைக் கண்டு பிடிப்பதுதான். அதன் பிறகு உண்மையான சபையின் எல்லா ஒழுங்கு முறைகள், ஊழியங்கள், ஊழியக்காரர்களைக் குறித்த திவ்விய சித்தத்தைப் பணிவோடும் பயபக்தியோடும் தேடுவதாகும்.

அப்போஸ்தலர் கேட்கிறார்: ''எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா?'' அவர் கூற்றின்படி பொதுவாக இவ்விஷயம் இப்படியாகப்பட்டதல்ல என்று ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் அவர் இதில் ஏதாவது ஒரு பதவியை நிரப்புவதில் தெய்வீக நியமனத்தை நிரூபிக்கிற வகையிலும், மனிதனை பிரியப்படுத்துகிற மாதிரியாக இல்லாமல் சபையின் மாபெரும் மேற்பார்வையாளராக இருக்கிற அதன் தலைமையானவராகிய ஆண்டவரைப் பிரியப்படுத்துகிறதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் சபையில் காணப்படுகிற இந்த வித்தியாசங்கள் இயற்கையான சரீரத்தில் உள்ள அங்கங்களுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்திற்கு ஒத்திருக்கிறது என்றும், ஒவ்வொரு அங்கமும் அவசியமாயிருக்கிறபடியால் ஒன்றும் உதாசீனப்படுத்தப்படக் கூடாது என்ற கருத்துக்கு நமது கவனத்தை ஈர்க்கிறார். கண்ணானது

காலைப்பார்த்து எனக்கு வேண்டுவதில்லை என்றும், காதைப் பார்த்து எனக்கு வேண்டுவதில்லை என்றும், கையானது எனக்கு வேண்டுவதில்லை என்றும் கூற முடியாது. ''எல்லாம் ஒரே அவயவமாயிருந்தால் சரீரமெங்கே?'' ஏனென்றால், ''சரீரமும் ஒரே அவயவமாய் இராமல் அநேக அவயவங்களாக இருக்கிறது.'' (வச.19,14)

உண்மைதான், இப்பொழுது சபையிலே இதே மாதிரியான பல்வேறு அங்கங்கள் இல்லை. எப்படியெனில் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டியபடி ''அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.'' அப்படியாகத்தான் அற்புதங்களும் இருந்தன. ஆவியின் வரங்களைக் கொடுக்கும் வல்லமையை பெற்றிருந்த அப்போஸ்தலர்களும், அவர்களிடமிருந்து அந்த வரங்களைப் பெற்றவர்களும் மரித்தபோது, இந்த அற்புதங்களும், வரங்களும் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி சபையில் ஓய்ந்துவிட்டது. இருந்தபோதிலும், சபையில் ஒவ்வொரு மனிதனுக்கும், ஸ்திரீக்கும் ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும், கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ள உடன் அங்கத்தினர்களுக்கும் சேவை செய்யும் தருணம் அவனவன் இயற்கையான திறமைக்கு ஏற்ப அளிக்கப்படும். இந்த அற்புதங்கள் ஓய்ந்துபோனபோது, சத்தியத்தை அறிகிற கல்வியும், ஆண்டவரைப்பற்றிய அறிவும், ஆவியின் கிருபைகளும் அவைகளின் இடங்களைப் பிடித்துக்கொண்டன. சுகமாக்குதல், அந்நிய பாஷைகள், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், அற்புதங்கள் போன்ற சாதாரண வரங்கள் சபையில் இருந்த போதும் அப்போஸ்தலர் சகோதரரிடத்தில் ''முக்கியமான வரங்களை நாடுங்கள்'' என்று உற்சாகப்படுத்தினார்.

அப்போஸ்தல ஸ்தானத்தை அவர்கள் நியாயமாக நாடவோ எதிர்பார்க்கவோ முடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் பன்னிருவர் மாத்திரமே; ஆனால் அவர்கள் நாடவேண்டியது அல்லது வாஞ்சிக்க வேண்டியது தீர்க்கதரிசிகளாக (விளக்குகிறவர்களாக– வியாக்கியானம் பண்ணுகிறவர்களாக) இல்லையெனில் போதகர்களாக இருக்கும்படியாக மட்டுமே. அப்போஸ்தலர் மேலும் ''இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்'' என்று கூறுகிறார்; (வச. 31) தொடர்ந்து அவர், இந்த வரங்களில் மேலானது அல்லது சபையில் ஊழியம் செய்வதைக்காட்டிலும் மேலான கனமுள்ளது, அதிக அளவில் மேலான அன்பின் ஆவியை உடைமையாக்கிக் கொள்வதுதான் என்று காட்டுகிறார்;

அவர் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் சபையில் பரிபூரண அன்பை உடைய தாழ்மையுள்ள அங்கத்தினர், ஆண்டவருடைய பார்வையில், அன்பு என்னும் கிருபையில் குறைவுபட்டுள்ள எந்த ஒரு அப்போஸ்தலர் அல்லது தீர்க்கதரிசி, அல்லது போதகரைக்காட்டிலும் மேலான இடத்தை அடைந்து விட்டார் என்பதாகும்; அவர் கூறும்போது, வரங்கள் எப்படிப்பட்டவைகளாயிருந்தாலும் அன்பில் குறைவு பட்டால் ஆண்டவருடைய பார்வையில் முழு விஷயமும் முற்றிலும் திருப்தியற்றதாகவும் காணப்படும். ஒருவர் பூரண அன்பின் நிலைக்கு வராவிட்டால் அந்த நிலைக்குக் குறைந்த பட்சம் முயற்சி பண்ணியிருந்தாலொழிய ஆண்டவருடைய ஆமோதிப்பைப் பெற்று, சபையில் அப்போஸ்தலர், அல்லது தீர்க்கதரிசி அல்லது போதகர் என்ற நியமனத்தை வெகுகாலம் தக்கவைத்துக் கொள்ளமுடியாது என்பதை உண்மையாகவே நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். இல்லையெனில் அவர் நிச்சயமாக அந்தகாரத்திற்குள் மெல்ல மெல்ல செல்ல அனுமதிக்கப்படுவார், இல்லையெனில் ஒருவேளை சத்தியத்தை போதிப்பவராக இல்லாமல் தப்பறைகளைப் போதிப்பவராக, சாத்தானின் வேலைக்காரராக சகோதரரை சலிக்கும்படியாக அனுமதிக்கப்படுவார்.

எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் (எபே. 4:1–16) அப்போஸ்தலர் பவுல் இந்த பாடத்தை இப்படியாக வலியுறுத்துகிறார்; சபையின் ஒருமைப்பாடு, ஒரே சரீரம் அநேக அவயவங்களை உடையதைப் போல் இருக்கிறது; அது ஒரு தலையாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் அன்பு என்னும் ஒரே ஆவியினால் இணைக்கப்பட்டிருக்கிறது; இப்படிப்பட்ட அவயவங்கள் எல்லாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான் களாக நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாய் இருங்கள் என்று புத்திமதியாகக் கூறுகிறார். இந்த அதிகாரத்தில் சரீரத்தின் பல்வேறு அங்கங்கள் அதற்குரிய விசேஷமான வேலைகளுக்கென நியமிக்கப்பட்டிருக்கின்றன என்றும், அதன் குறிக்கோள் என்ன என்றும் பின்வருமாறு கூறுகிறார். ‘‘மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் (அவர்கள் மகிமையான ஊழியத்திற்கு, அல்லது ஆயிரம்

வருட இராஜ்யத்தில் ஊழியத்திற்கு ஆயத்தம் பண்ணும்படியாக) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனி..... அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகின்றவர் களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.'' (எபே 4:11–16.)

நமக்காக அப்போஸ்தலர் வரைகின்ற படத்தைக் கவனிக்கிறோம்; அது மானிட உருவத்தைக் குறித்ததாகும், உருவம் சிறியதாகவும் பூரண வளர்ச்சி பெறாததாகவும் இருக்கிறது. எல்லா அவயவங்களும் பூரண வளர்ச்சி பெற வேண்டும், முழு பலத்தையும், வல்லமையையும் பெற வேண்டும், ''பூரண புருஷராக'' வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது என்று அவர் அறிவிக்கிறார். இப்படியான படம் சரியான விதத்தில், முழுமையான நிலைமையில் சபை இருப்பதைக் காட்டுகிறது என்கிறார். அந்த உருவத்தை, காலாகாலமெல்லாம் கடந்து இந்த யுகத்திற்குக் கொண்டுவரும் போது, ஒரு அவயவத்திற்கு பிறகு இன்னொன்றாக முதலாவது உயிர்த்தெழுதலில் உன்னதமான அமைப்பான ஆயிரம் வருட காலை வேளையை எதிர்பார்த்து நித்திரை அடைந்ததையும், அந்த இடம் தொடர்ந்து நிரப்பப்பட்டதால் சபையானது ஒரு போதும் முழுமை இல்லாமல் இருந்ததில்லை என்பதையும், இருந்தாலும் சில சமயங்களில் ஒரு அவயவத்தில் அதிக பெலனும் இன்னொன்றில் அதிக பெலகீனமும் இருக்கக் கூடும் என்பதையும் காண்கிறோம். இருந்த போதிலும், எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு அவயவத்தின் முயற்சி தன்னால் இயன்றவரை சரீரத்தை பலப்படுத்துவதாக இருக்க வேண்டும்; மேலும், '' நாம் அனைவரும் .....விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகும் வரை'' அவயவங்களை பெலப்படுத்தவும், ஆவியின் கிருபைகளில் பூரணம் அடையும்படி செய்யவும் வேண்டும்.

விசுவாசத்தின் ஒருமைப்பாடு என்பது வாஞ்சிக்கப்படத்தக்கது. அதை முயற்சியினால் பெறவேண்டும். இருந்தபோதிலும் அது பொதுவாக

நோக்கப்படுகிற ஒருமைப்பாடு போன்றதல்ல. விசுவாசமானது, ''பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைப்'' போன்று, பரிசுத்தத்திலும் எளிமையிலும் இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு அங்கத்தினரும் சிறு விஷயங்களைக் குறித்து பல்வேறு கருத்துக்களை உடையவர்களாயிருக்க முழு சுயாதீனம் இருக்க வேண்டும். இதில் அவர்கள் மனுஷீக யூகங்கள், அல்லது தத்துவங்களின்படி கட்டளைகளைப் பெறக்கூடாது. வேதாகமத்தின்படியான ஒருமைப்பாடு என்பது சுவிசேஷத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து இருக்கிறது.

(1) நம்முடைய மீட்பு விலையேறப் பெற்ற இரத்தத்தின் மூலமாகவும், நாம் அதிலே காட்டுகிற விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலுமாக இருக்கிறது.

(2) நம்முடைய பரிசுத்தமாக்கப்படுதல், ஆண்டவருக்கென்று பிரித்தெடுத்தலும், சத்தியமும், அதனாலுண்டான ஊழியமும், சகோதரருக்கான ஊழியமும் உள்ளடங்கியதுமாயிருக்கிறது.

(3) மேற்கூறிய முக்கியமானவைகளைக் கொண்டுதான் ஒற்றுமை வேண்டப்படல் வேண்டும், இவையல்லாமல் வேதத்தின்படியான ஐக்கியம் இருக்க முடியாது. இருந்த போதிலும், திவ்விய திட்டத்தின் ஒவ்வொரு விசேஷ அம்சத்தையும், விபரத்தையும், பார்க்கும்படியாக வாஞ்சிக்கவும், மற்றவர்கள் பார்க்க உதவி செய்யும்படியாகவும், மற்ற விஷயங்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் முழு சுயாதீனம் அளிக்கப்படல் வேண்டும். இப்படியாக கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினரான ஒவ்வொருவரும் தன்னுடைய சுயாதீனத்தை தக்க வைத்துக் கொண்டு, இதன்படியாக தலைக்கும் அதன் எல்லா அங்கங்களுக்கும் முற்றுமாக விசுவாசமுள்ளவராக இருக்கிறபடியால், அவர்கள் தனக்கென உள்ள எல்லாவற்றையும் விட்டுவிடவும், தன் ஜீவனையே கொடுப்பதும் சந்தோஷமான காரியமாக இருக்கும்.

நாம் ஏற்கனவே அப்போஸ்தலர்களின் விசேஷ வேலையையும், அவர்கள் ஒரு அளவான எண்ணிக்கையிலேயே இருந்தார்கள் என்றும், இன்றைக்கும் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையின் மூலமாக அவரின்

வாயாக இருந்து அவருடைய ஜனங்களோடே பேசுகிறதனால், அவர்களுடைய ஊழியம் சபையில் இன்றும் நடக்கிறதைப் பார்க்கிறோம். இப்பொழுது நாம் பொது சபைக்குக் கொடுக்கப்பட்ட ஆண்டவருடைய வரங்கள் என்று அப்போஸ்தலர்கள் குறிப்பிடுகிற மற்ற சபை ஊழியங்களைக் குறித்து ஆராய்ந்து பார்க்கலாம்.

பொது சபையானது ஆசீர்வதிக்கப்படும்படியாகவும், தற்காலத்திலும், நித்தியகாலத்திற்குரிய நன்மைகளைப் பெறுவதற்காகவும் ஆண்டவர் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர் களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் தருகிறார். ஆண்டவரை தலையாகவும், போதகராகவும், அவருடைய சரீரமாகிய சபையின் வழிகாட்டியாகவும், எண்ணி ஆண்டவர் மேல் ஊக்கத்துடன் சார்ந்து இருப்பவர்கள், இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் அவருடைய வரங்களைக் கவனித்து எதிர்பார்த்து நோக்கியிருக்க வேண்டும். அவர்களுக்கு அவருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் இருக்குமென்றால், அந்த வரங்களை ஏற்கவும், உபயோகிக்கவும் முடியும். இந்த வரங்கள் சபையின் மேல் பலவந்தப்படுத்தப்படுவதில்லை, அவைகள் கொடுக்கப்படும் போது உதாசீனப்படுத்துபவர்கள், அதற்கேற்றபடி ஒரு இழப்பை அனுபவிப்பார்கள். ஆண்டவர் ஆரம்பத்திலேயே இவைகளைச் சபையில் வைத்து, இப்படியாக நமக்குப் பொருத்தமான ஒழுங்கு முறையைக் கொடுத்து, அதன்படியாக அவருடைய ஜனங்கள் நடந்து, அதற்கேற்றபடியான ஆசீர்வாதம் பெறுகிற காரியத்தை அவருடைய ஜனங்களிடத்திலேயே விட்டுவிட்டார்; அல்லது இந்த ஒழுங்கு முறையை ஒதுக்கிவிட்டு அதற்கேற்றபடியாகக் கஷ்டங்களையும், ஏமாற்றங்களையும் அனுபவிப்பதை அவர்களிடத்திலேயே விட்டுவிட்டார். ஆகவே, ஆண்டவரால் வழி நடத்தப்படவும், அவரால் போதிக்கப்படவும் வாஞ்சிக்கிறவர்களாகிய நாம், எப்படி ஆதியிலே அவர் பல்வேறு அங்கங்களை வைத்தார் என்பதையும், அக்காலத்திலிருந்து இந்த மாதிரியான வரங்களில் எவைகளை அவருடைய ஜனங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் கற்றுக் கொள்ளும்படியாக நாம் நாட வேண்டும்; இதன் மூலமாக நம் பட்சத்திலிருக்கும் இப்படியான குணாதிசயங்களை உடைய வரங்களை நாம் அறியலாம்; எதிர்காலத்திற்கென்று அதிக வைராக்கியத்துடன் அவைகளை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சரீரமான சபையில் அபிப்பிராய பேதங்கள், பிரிவுகள், பிரிவினைகள் இல்லாது இருப்பது ஆண்டவருக்கு விருப்பமானது என்று அப்போஸ்தலர் கூறுகிறார் . மனுஷீக முறைமைகளில் பிரிவினைகள் தவிர்க்க இயலாததாகும். ஆனால் போப்பரசின் வெற்றிகரமான காலத்தின் போது, பெயரளவுக்கு இருந்த ஒழுங்குமுறை வலிமை பெற்று, அதனோடு முற்றுமாய் ஒத்துப் போகாதவர்களை ஒடுக்குவதில் கடுமையான முறைகளைக் கையாண்டது. அது பலவந்தத்தினால் ஏற்பட்ட ஒற்றுமையாகும்; அது வெளிப்புறமான ஒற்றுமையே தவிர இருதயத்தின் ஒரு ஒற்றுமையல்ல. குமாரனால் விடுதலையாக்கப் பட்டவர்கள் ஒருபோதும் இதய பூர்வமாக இப்படிப்பட்ட சங்கமங்களில் பங்கேற்க முடியாது; இப்படிப்பட்டவைகளில் தனிமனிதனின் சுயாதீனம் முற்றிலுமாக அழிக்கப்படுகின்றது. புராட்டஸ்டன்ட் (protestants) சபைப் பிரிவுகளில் உள்ள கஷ்டம், அவர்கள் அதிகப்படியான சுதந்திரத்தினால் அனேக சிறு சிறு சபைகளாகப் பிரிந்துவிட்டன என்பதல்ல, அதற்கு மாறாக தாய் ஸ்தாபனம் ஒரு காலத்தில் சுயாதீன சிந்தனையை அடக்கவும் ஒடுக்கவும் உபயோகித்த அதிகாரத்தைத் தவிர, தாய் ஸ்தாபனத்தின் அதிகமான ஆவியை இன்னும் அவைகள் கொண்டுள்ளன. இப்பொழுது எங்கும் காணப்படுகின்ற அதிகபட்சமான பிரிவினைகளையும் பிளவுகளையும் கொண்டிராதபடி, கிறிஸ்துவின் சபைக்கு உண்மையான தேவை என்னவெனில், ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் எல்லா விதமான மனுஷீக கட்டுகள், கோட்பாடுகள், நம்பிக்கைகள் போன்றவை களிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக நிற்கும் அதிகமான சுயாதீனம்தான். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அடிமைத்தனத்தின் நுகத்திலிருந்து ஆண்டவர் உண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலை கொண்டு, (கலா. 5:1; யோவா. 8:32) ஆண்டவருடன் விசுவாசத்திலும், வசனத்திலும் இணைக்கப்பட்டு இருக்கும்போது, வேதாகமம் கற்பிக்கிற ஆதியிலுண்டான ஒற்றுமை, எல்லா உண்மையான ஆண்டவரின் பிள்ளைகளிடத்திலும், புது சிருஷ்டியின் எல்லா அங்கங்களிடத்திலும் வெகு துரிதமாகக் காணப்படும்; அவர்களும் இதே மாதிரியாக சுயாதீனமாயிருக்கிற ஒவ்வொரு அங்கத்திற்கு நேராக ஈர்க்கப்படுவார்கள், மாத்திரமல்ல உலக ஒழுங்குகள், மற்றும் சமுதாயத்தினால் கட்டப்பட்டுள்ள மனிதர்களைக் காட்டிலும், அதிக வலிமையுடன் ஒருவரோடு ஒருவராக அன்பின் கயிற்றினால் கட்டப்படுவார்கள். ‘‘கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது.’’ (எங்களை ஒன்றாக வைத்திருக்கிறது – youngs - யங்ஸ் என்பவரின் வேத அகராதி) 2 கொரி. 5:14.

ஆரோனின் குடும்பத்தினர் எல்லோருமே ஆசாரியத்துவத்திற்கு தகுதி உள்ளவர்களாய் இருந்தார்கள்; இருந்த போதிலும், இந்த ஊழியத்தில் சில வரம்புகள், தடைகள், தகுதியின்மைகள் இருந்தன; அதுபோலவே உண்மையான ''இராஜரீக ஆசாரியத்துவத்திலும்'' இருக்கிறது. எல்லோருமே ஆசாரியர்கள்தான், எல்லாருமே அபிஷேகம் பண்ணப்பட்ட சபையின் அங்கத்தினர்கள்தான்; மேலும், ''கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார், தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்'' என்று எழுதியிருக்கிறபடி, அபிஷேகமானது ஒவ்வொருவருக்கும் பிரசங்கிக்கவும், நற்செய்தியைக் கற்றுக்கொடுக்கவும் ஒரு முழுமையான அதிகாரத்தை குறிப்பிடுகிறது. இந்த வார்த்தைகள் விசேஷமாக கிறிஸ்துவின் தலை, புது சிருஷ்டி, இராஜரீக ஆசாரியத்துவத்திற்குப் பொருந்துமென்றாலும் அவைகள் எல்லா அங்கத்தினர்களுக்கும் பொருந்துகிறதாயிருக்கிறது. ஆகவே, பொதுவாக தேவனுடைய பரிசுத்தமாக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்படி ஒரு முழு அதிகாரம் அல்லது நியமனம் கொடுக்கப்பட்டிருக்கிறது, ''நம்மை அந்தகாரத்தினின்று, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாக'' கொடுக்கப்பட்டிருக்கிறது. (1பேது. 2:9)

ஆனால், நிழலான ஆசாரியர்கள் சில குறிப்பிட்ட கறைதிறையிலிருந்து விடுதலை பெற்றவர்களாயிருக்க வேண்டும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியிருக்க வேண்டும் என்றிருந்தபடியே, இராஜரீக ஆசாரியத்துவத்திலும் பொதுவான ஊழியத்திற்கென்று மற்றவர்கள் அடைந்திருக்கிற தகுதியில் குறைவுபடுகிறவர்கள் சிலர் இருக்கின்றனர். ''உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.'' (ரோம. 12:3,6) அப்படியே எல்லா அவயவங்களும், ஒவ்வொரு அவயவத்தின் இயற்கையான, ஆவிக்குரிய தகுதிகளையும், அடைந்திருக்கிற நிலைமையையும் கவனத்தில் கொண்டு, அதன்படியாக திவ்விய சித்தத்தை நிதானிக்க வேண்டும். நிழலில் வயது ஒரு காரணமாயிருந்தது; ஆனால், இது நிஜமான ஆசாரியர்களிடத்தில், அனுபவத்தையும் குணாதிசயத்தை அபிவிருத்தி

செய்வதையும் குறிக்கிறது. நிழலில் மாறுகண் என்கிற கறை, நிஜமான ஆசாரியத்துவத்தில் தீர்க்கமான மனதில்லாதிருப்பதையும், ஆவிக்குரிய விஷயங்களைக்குறித்துத் தெளிவான எண்ணம் இல்லாதிருப்பதையும் குறிக்கும். இது சபையின் பொது ஊழியத்திற்குப் பெரிதான ஒரு தடையாக இருக்கும். அதுபோலவே நிஜமான ஆசாரியத்துவத்திற்குத் தடையாயிருந்த பலவிதமான கறைதிறைகள், நிழலாயிருந்த ஆசாரியத்துவத்தின் மத்தியில் காணப்பட்ட பலவிதமான ஒழுக்கக் கேடுகள், சரீரப்பிரகாரமான மற்றும் உலகப்பிரகாரமான குறைபாடுகள் ஆகியவைகளைக் குறிக்கும்.

இருந்த போதிலும், நிழலில் குறைபாடுள்ள ஆசாரியர்கள் மற்றவர்களுக்குரிய எல்லா சலுகைகளையும்– சமூகத்து அப்பத்தைச் சாப்பிடுவது, பலி செலுத்துவது போன்றவைகளை அனுபவித்தார்கள்; அதுபோலவே நிஜத்தில் நமக்குள்ளேயும் இருக்கிற அப்படிப்பட்ட குறைபாடுகள், கிறிஸ்துவின் சரீரமான சபையின் ஒரு அங்கம், சபையின் பொது ஊழியக்காரனாயும், சத்தியத்தின் ஊழியக்காரனாயும் இராதபடி தடைபண்ணவும், அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியிலும், ஆண்டவருடைய ஆவிக்குரிய போஜனத்திலும், கிருபையின் சிங்காசனத்திலும், மற்றவர்களைப்போன்றே அவனுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு என்று அறியப்படாதபடி தடை பண்ணவும் அவசியமில்லை. பிரதான ஆசாரியனின் அலுவல்களை, ஒருவன் சரீரப்பிரகாரமாக குறைவுள்ளவனாயிருந்து, குறிப்பட்ட வயதை அடையாதவனாயிருந்தால், அவனால் நிறைவேற்ற முடியாது; அது போன்றே, ‘‘திருவசனத்திலும் உபதேசத்திலும்’’ சத்தியத்தின் ஊழியக்காரனாக ஊழியம் செய்பவர்கள், கற்றுக் குட்டிகளாக இருக்கக் கூடாது; ஆனால் சபையின் அங்கத்தினர்களாக (அங்கங்களாக) அவர்கள் இருக்கும் போது, அவர்களது குணாதிசயத்தில் உள்ள முதிர்ச்சி, அறிவு, மேலும் ஆவியின் கனிகள் அவர்களை இப்படியான ஊழியத்திற்கு தகுதிப்படுத்தும். இப்படிப்பட்டவர்கள் மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படவேண்டும்; ஆனால் மூப்பர்கள் வயதில் மூத்தவர்களாக இருக்கவேண்டும் என்பதில்லை, ஆனால் சத்தியத்தைப் பொறுத்தவரையில் முதிர்ச்சி பெற்றவர்களாக, மேலும் ஆலோசனை சொல்லக் கூடியவர்களாக, ஆண்டவருடைய திருவசனத்தின்படியாக சகோதரரை சீர் பொருந்தப்பண்ணுகிறவர்களாக இருக்கவேண்டும்.

மூப்பர் என்கின்ற வார்த்தையின் பொருளைப் புரிந்து கொள்ளும்போது, சத்தியத்தின் ஆவிக்குரிய ஊழியங்கள் செய்கின்ற அனைவரையும் வேதாகமம் மூப்பர்கள் என்று அழைப்பது சரியானதே என்றும், அப்படி இல்லாத பட்சத்தில் அவர்கள் ஒரு அப்போஸ்தலராக அல்லது தீர்க்கதரிசியாக, அல்லது சுவிசேஷகராக, அல்லது போதகராக, அல்லது மேய்ப்பராகப் பணியாற்றிக்கொண்டிருப்பார்கள் என்றும் உணருகிறோம். இந்த ஊழியங்களில் ஏதாவதொன்றை ஒருவர் செய்வதற்கு, அவர் சபையில் மூப்பர் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்விதமாக அப்போஸ்தலர்கள் தங்களை மூப்பர்கள் என்று அறிவித்தார்கள். (1 பேது. 5:1 ; 2 யோவா.1) மேலும் சபையின் ஊழியக்காரர்களைக் குறித்தும் (வேலையாட்கள்) அவர்கள் தெரிந்துகொள்ளப்படுதலைக் குறித்தும் நம்முடைய பொதுவான மொழி பெயர்ப்பு வேதாகமத்தில் அவர்கள் மூன்று விதமான பெயர்களால் குறிப்பிடப்படுகிறார்கள்.

கண்காணிகள், மூப்பர்கள், மேய்ப்பர்கள்

பல்வேறு சபை பிரிவுகளில் இந்த மூன்று சொற்களும் தவறாக உபயோகிக்கப்படுவதால் தவறான அர்த்தத்தைக் காட்டுகிறது; ஆகவே கண்காணி என்கிற வார்த்தை மேற்பார்வையாளர் என்றுதான் பொருள்படுகிறது என்று நாம் விளக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது; ஆகவே நியமிக்கப்பட்ட ஒவ்வொரு மூப்பரும் ஒரு சிறிதான அல்லது பெரிதான ஒரு வேலையை மேற்பார்வையிடுகிறவர் என்று அங்கீகரிக்கப்பட்டார். இவ்விதமாக உதாரணமாக ஒரு முறை அப்போஸ்தலர் எபேசு சபையின் மூப்பர்களால் சந்திக்கப்பட்ட போது, அவர் பிரிவின் அறிவுரையாக ''பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்'' என்று கூறினார். (அப். 20:28)

இருந்த போதிலும், ஆண்டவருடைய அனுக்கிரகத்தினால், இந்த மூப்பர்களில் சிலருக்கு சபையில் ஒரு விஸ்தாரமான செல்வாக்கு, அல்லது மேற்பார்வை கொடுக்கப்பட்டதினிமித்தம், அவர்களைப் பொதுவான மேற்பார்வையாளர்கள் என்று அழைப்பது பொருத்தமாயிருக்கும். எல்லா அப்போஸ்தலர்களும் இப்படியாக இருந்தார்கள். ஆசியாவிலும் (Asia Minor) தெற்கு ஐரோப்பாவிலும், பொதுவாக புறஜாதி தேசங்களில்

ஆரம்பிக்கப்பட்ட சபைகளில் பவுலுக்கு அதிக விஸ்தாரமான மேற்பார்வைக்கான வாய்ப்பு இருந்தது. ஆனால் இந்த பொதுவான மேற்பார்வை என்ற நிலைமை அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் என்றில்லை, ஆண்டவர் தன்னுடைய அனுக்கிரகத்தினால் இப்படியாக சபையில் ''இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும் தீர்க்கமான மனதை உடையவனுமாயிருந்து,'' ஆண்டவருக்கும் சகோதரருக்கும் ஊழியம் செய்ய வாஞ்சையுடைய அநேகரை எழுப்பினார். முக்கியமாக தீமோத்தேயு, அப்போஸ்தலர் பவுலுக்குக்கீழ், அவருடைய பிரதிநிதியாக அமர்த்தப்பட்டார்; அவர் ஆண்டவருடைய ஜனங்களுடைய பல்வேறு கூட்டங்களுக்கு அல்லது சபைகளுக்கு சிபாரிசு செய்யப்பட்டார். ஆண்டவர் அன்று இருந்தது போலவே இன்றும் அவருடைய விருப்பத்தின்படி, தொடர்ந்து இப்படிப்பட்ட மேற்பார்வையாளர்களை அனுப்பி, அவருடைய மந்தைக்கு ஆலோசனையும், அறிவுரையும் கூற வல்லவராக இருக்கிறார். ஆண்டவருடைய ஜனங்களும், இப்படியான மேற்பார்வையாளர்களால் அளிக்கப்படும் ஆலோசனையின் தராதரத்தை நிறுத்துப்பார்க்க முற்றிலும் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள். அது தேவ பக்தியுள்ள வாழ்க்கையினால், தாழ்மையான நடத்தையால், தியாகம் செய்யும் ஆவியால், கனத்தையும் இழிவான ஆதாயத்தையும் தேடும் முயற்சிகளும் தவிர்க்கப்பட்டு, சாட்சி பகருகிறதாயிருக்க வேண்டும். மேலும் போதனைகள் ஆழமான வேதபாடங்களின் சோதனைக்கு நிலைநிற்க வேண்டும். எப்படியெனில் அனுதினமும் வேதத்தை ஆராய்ந்து பார்த்து, அவர்களால் அளிக்கப்பட்ட போதனைகள் திருவசனத்தின்படி ஒத்துள்ளதா என்று பார்க்க வேண்டும். இது நாம் பார்த்தவண்ணமாக அப்போஸ்தலருடைய உபதேசங்கள் ஒத்துப்பார்க்கப்பட்டன, அவர்கள் விசேஷமாக அதிகமாகக் குற்றம் கண்டு பிடிக்காதவர்கள், குறை கூறாதவர்களாக, ஆனால் இப்படியாக ஜாக்கிரதையாக இருந்த சகோதரருக்கு அழைப்பு விடுத்து அவ்வாறு செய்து பார்க்குமாறு வேண்டினார்கள். (அப்.16: 11)

இருந்தபோதிலும், சபையின் சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொண்டது: போட்டி மனப்பான்மையும், பதவி ஆசையும், எளிமையான பயபக்தி மற்றும் தியாக மனப்பான்மையின் இடத்தை எடுத்துக்கொண்டன; உடனே நம்பிவிடும் தன்மையும், முகஸ்துதியும் வேதாகம ஆராய்ச்சியைக் காட்டிலும் முக்கியத்துவம் பெற்றன; இதனிமித்தமாக மேற்பார்வையிடுகிறவர்கள் படிப்படியாக சர்வாதிகாரம்

பெற்றார்கள்; படிப்படியாக அப்போஸ்தலர்கள் போன்றவர்களோடு சமநிலை வேண்டினார்கள்; கடைசியில் அவர்களிடையே ஒரு போட்டி வந்து, அவர்களில் சிலர் முதன்மை ஸ்தானத்தைப் பெற்று ஆர்ச் பிஷப் என்ற பட்டங்களின் மூலம் அறியப்பட்டார்கள். இப்படியிருக்க, இந்த ஆர்ச் பிஷப்புகளின் மத்தியிலும் எழுந்த போட்டியினால், அவர்களில் ஒருவர் போப் என்ற நிலைக்கு உயர்ந்த வழி வகுத்தது. அதே மனப்பான்மைதான் போப்பரசில் மாத்திரமல்ல, அதனுடைய உதாரணத்தினால் ஏமாற்றப்பட்டு, வழிநடத்தப்பட்டவர்கள் மத்தியிலும் வந்து புராதன காலத்தில் உள்ள ஒழுங்குமுறைகளின் எளிமையிலிருந்து வெகு தூரத்திற்கு கொண்டு சென்றுவிட்டது. இதன் விளைவாக, இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட ஒரு ஒழுங்குமுறை (சபை), புராதன காலத்தில் காணப்பட்டதுபோல, சபை பிரிவு பெயரில்லாமலும், கனமும் மகிமையும் இல்லாமலும், எண்ணிக்கையில் சிறு தொகையினர் பெரும்பான்மையோர் மீது அதிகாரம் செலுத்தாமலும், குருகுல வகுப்பார், சபையார் என பிரிவினை இல்லாமலும் இருக்கக்கூடிய ஒரு சபை, அப்படிப்பட்டது ஒரு சபையே கிடையாது என்று கருதப்படுவதை காண்கிறோம். இருந்தாலும் இப்படி தாழ்வாக எண்ணப்படுபவர்கள் மத்தியில் நம்முடைய நிலையை எடுத்துச்சென்று, புராதன சபையின் உதாரணத்தை கடைப்பிடிப்பதும், அதனால் காணப்பட்ட இதே மாதிரியான சுயாதீனங்களையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பதும் நமக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

சபையின் மூப்பர்கள், எல்லாருமே மேற்பார்வையிடுகிறவர்களும், பொறுப்பு வைப்பவர்களும், சீயோனின் நலன்களை கவனிப்பவர் களாகவும், சிலர் அதே இடத்திலும், சிலர் பொதுவான, ஆனால் பரந்த கருத்தின்படியாக அப்படி இருக்கிறார்கள். அப்படியே ஒவ்வொருவரும் தன்னுடைய தாலந்தின்படியும், திறமையின்படியும், மந்தைக்கு ஊழியம் செய்யலாம். ஒருவர் தனது தகுதியின்படி, தனது நிலை அனுமதிக்கிறபடி, நற்செய்தி போன்றவைகளை கேட்கக் கூடிய காதுள்ளவர்களை கண்டுகொண்டு ஒரு சுவிசேஷகனாக, ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு சத்தியத்தை பிரசங்கித்துச் செல்லலாம். இன்னொருவர் அவருக்கு சமுதாயத்தை பார்க்கிற விசேஷமான தகுதியிருப்பதால், தனிப்பட்ட முறையில், தனிநபர் என்ற முறையில் ஆண்டவருடைய ஜனங்களின் நலன்களைப் பார்க்கும்படியாக, அவர்களை அவர்களுடைய வீடுகளில் சந்திப்பது, அவர்களை உற்சாகப்படுத்துவது, அவர்களை திடப்

படுத்துவது, அவர்களை ஐக்கியத்தில் வைத்திருப்பது, ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரும் ஓநாய்களிலிருந்து அவர்களை பாதுகாப்பது போன்ற காரியங்களின் மூலம் பாஸ்டர் (மேய்ப்பர்) என்ற முறையில் மந்தைக்கு ஊழியம் செய்யலாம். ''தீர்க்கதரிசிகளுக்கும்'' ஊழியத்திற்கென அவர்களுக்கு விசேஷமான தகுதி இருக்கிறது.

''தீர்க்கதரிசி'' என்ற வார்த்தை, பழங்காலங்களில் உபயோகப் படுத்தப்பட்டது போல இன்றைக்கு பொதுவாக உபயோகப் படுத்தப்படுவதில்லை. ஆனால் அது வருங்கால காரியங்களை முன்கூட்டியே சொல்லக்கூடிய ஒருவரைக் குறிக்கிறது. இருந்தாலும் தீர்க்கதரிசி என்கின்ற வார்த்தையை சரியானபடி சொல்ல வேண்டுமென்றால் ஒரு சிறந்த பேச்சாளர் அல்லது நாவன்மையுள்ளவரைக் குறிக்கிறது. தரிசனங்களைக் காண்கின்றவரும் அல்லது வெளிப்பாட்டைப் பெறுகிறவரும்கூட ஒரு தீர்க்கதரிசியாக இருக்கலாம், அதை அறிவிக்கிறவரும் அப்படி கருதப்படலாம். இருந்தாலும் இரண்டுமே துல்லியமாக வித்தியாசமானவைகள். மோசேயையும் ஆரோனையும் எடுத்துக்கொண்டால் மோசேதான் உயர்ந்தவர். ஏனெனில் அவர் திவ்விய பிரதிநிதியாக இருந்தார், ஆனபடியால் தோவன் அவரிடத்தில் சொன்னார்: ''பார், உன்னை நான் பார்வோனுக்குத் தேவனாக்கினேன், உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான்'' –பேசுகிறவராக, வாயாக இருப்பான். (யாத். 7:1) ஒரு விதத்தில் அப்போஸ்தலர்களில் பலர் வரப்போகின்ற காரியங்களை முன்கூட்டியே காண்கிறவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்; வரப்போகிற காரியங்களைக் குறித்த ஒரு அறிவு அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தது; அவர்கள் அனேகரும் தீர்க்கதரிசிகளாகத்தான் இருந்தார்கள் என்று நாம் கூறுகிறோம்; அதாவது அவர்களில் பேதுருவும் பவுலும் சிறந்த பொதுப் பேச்சாளர்களாக அல்லது தீர்க்கதரிசிகளாக இருந்தனர். ஆனாலும் அனேக சிறந்த பொதுப் பேச்சாளர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் இருந்தனர் என பார்க்கிறோம், உதாரணமாக பர்ணபாவைச் சொல்லலாம். மேலும் ''யூதா, சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாக இருந்தபடியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்தி சொன்னார்கள்'' (அப். 15:32) என்று எழுதப்பட்டிருக்கிறது.

எந்த ஒரு நபரும் செய்யப்பட வேண்டிய வேலைக்கு தகுதியற்றவர் என்று தீர்மானிக்கப்படும்போது, அந்த நிலைமைக்கு அவர் விசேஷமான பொருத்தம் இல்லாதவராக இருக்கும்போது, அவர் ஆண்டவரின் நியமனம்

பெற்றவர் என்று கருதப்பட வேண்டும் என்பதற்கு வேதாகமத்தில் ஆதாரம் கிடையாது. ஆனால் அதற்குப் பதிலாக, ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய தாலந்தின்படி, திறமையின்படி மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்பது கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்திற்கு ஒரு கடமையாகும். ஒவ்வொருவரும் ஆண்டவர் தனக்கு அளித்துள்ள தாலந்துகளின் உண்மையான மதிப்பின் பிரகாரமாத்திரமேயன்றி, அதற்கு மேலாக ''தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்'' நிதானத்துடன் நினைக்கும்படி அடக்கமுடன், தாழ்மையுடன் இருக்க வேண்டும். சபையும் கூட அப்படியாக பெரியவர்களாக இருக்க எண்ணுபவர்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதற்கு மாறாக அவர்கள் மூப்பராக இருப்பதற்கோ, அல்லது எந்த ஒரு பகுதியிலாவது ஊழியம் செய்வதற்குத் தாழ்மை முக்கியமான தகுதிகளில் ஒன்று என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, இரண்டு சகோதரர்கள் ஒரே அளவு தாலந்துகளை உடையவர்கள்போல் காணப்பட்டால், அவர்களில் ஒருவர் முன்னேற வேண்டும் என்ற எதிர்நோக்குடனும், மற்றவர் தாழ்மையுடனும் எளிமையுடனும் இருக்கும்போது, ஞானமும் தெளிந்த புத்தியும் என்று அழைக்கப்படுகின்ற தேவ ஆவி, ஆண்டவருடைய ஜனங்களுக்கு, தாழ்மையுள்ள சகோதரனை அதிக முக்கியமான ஊழிய ஸ்தானத்தில் வைக்க ஆண்டவர் விரும்புவார் என்பதைக் கற்றுக்கொடுக்கும்.

ஆண்டவருடைய மந்தையில் வெள்ளாடுகளும், வெள்ளாடு போன்ற செம்மறியாடுகளும் முதன்மையான இடத்திற்கு ஆசைப்படுகின்றன; எஜமானனுடைய சத்தத்தை அறிந்து கொள்ளக்கூடிய, அவருடைய ஆவியை அறிந்திருக்கிற, அவருடைய சித்தத்தை செய்யும்படியாக வாஞ்சிக்கிற உண்மையான ஆட்டை விட, அப்படியாக காணப்படுகிற வெள்ளாடுகளையும் வெள்ளாடு போன்ற செம்மறியாடு களையும் முதன்மையான இடத்தை எடுத்துக்கொள்ளும்படி சுலபமாக அனுமதிப்பதும் சரியானது அல்ல என்று தோன்றுகிறது. எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருப்பது நல்லதுதான், ஆனால் சமாதானத்துக்கென்று ஆண்டவருடைய திருவசனத்தையும், ஆவியையும் உதாசீனப்படுத்துவது நிச்சயமாக தீமையையே விளைவிக்கும். எல்லோரும் செம்மறியாட்டைப்போன்று சாதுவான சுபாவம் உடையவர்களாயிருப்பது நல்லதுதான்; ஆனால் செம்மறியாட்டிற்குரிய குணாதிசயமும் தேவையான ஒன்று, அப்படியில்லா விட்டால் அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களாக

முடியாது; அவர்களுக்கு நல்ல குணாதிசயம் இருந்தால், அவர்கள் பிரதான மேய்ப்பனின் வார்த்தையை நினைவு கூறுவார்கள். அவருடைய திருவசனம் சொல்கிகிறது: ''என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது (அதற்கு கீழ்ப்படிகின்றன)..... அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது.'' ''அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்கு பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம்.'' (யோவா. 10:5,27) ஆகவே, ஒவ்வொரு சகோதரனையும் உள்ளூர் சபைக்கோ, அல்லது பொதுசபைக்கோ ஒரு மேற்பார்வையாளராக்குவதற்கு முன்பாக அந்த சகோதரனின் தூதையும், நடத்தையையும் கவனித்துப் பார்ப்பது ஒவ்வொரு ஆட்டினுடைய கடமையாகும். முதலாவது அவனுக்குச் சபையில் மூப்பராவதற்குத் தகுதி உள்ளதா என்றும், அவன் சுவிசேஷத்தின் அடிப்படை உபதேசத்தில் – பாவநிவாரணம், இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் உண்டான ஈடுபலி ஆகியவற்றில் – தேறினவனா என்றும், அவனுக்கு முழு அர்ப்பணிப்பு இருக்கிறதா என்றும், அவனுடைய தூது, அவனுடைய சகோதரர்கள் அவனுடைய ஊழியம் என்பவைகளைக் குறித்தும் தீர்க்கமாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள், ஆவியிலும் நன்னெறியிலும் பலவீனமுள்ள எல்லா ஆட்டுக்குட்டிகளின் மேலும் இரக்கமும் அனுதாபமும் உடையவர்களாய் இருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட குணமில்லாதவர்களை அவர்களுடைய தலைவர்களாக அல்லது மூப்பர்களாக தெரிந்து _கொள்வது திவ்விய ஒழுங்கு முறைக்கு ஊறு விளைவிப்பதாகும். சபையில் ஒரு முக்கிய இடத்திற்கும், அதிகாரத்திற்கும் முயற்சிக்கிற வெள்ளாடுகளுக்கும், ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டு வருகிற ஓநாய்களுக்கும் அவர்கள் இரக்கம் காட்டக்கூடாது.

தங்களுடைய இருதயங்களை நிச்சயமாக தேவனுடைய அன்புக்கு நேராக வழி நடத்தாமல், தந்திரமாக தவறான வழியில் கொண்டுசெல்லும் பொன் போன்ற நாக்குடைய (பேச்சுத்திறமையுடைய) ஒருவர் தலைவராக சபையில் இருப்பதைக் காட்டிலும், சபைக்கென ஒரு பொது ஊழியக்காரர் கூட இல்லாதிருப்பது சபைக்கு மிகவும் நல்லது என்று எண்ணப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்களைக் குறித்து, நம்முடைய ஆண்டவர் முன்கூட்டியே சபையை எச்சரித்திருந்தார். இதைத்தான் அப்போஸ்தலர் பின் வருமாறு கூறுகிறார். ''உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களை தங்களிடத்தில் (தந்திரமாக மற்றவர்களை தன் பக்கமாக) இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் (தவறான, தவறான வழிக்கு

நடத்துகிற உபதேசங்கள்) போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்.'' அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார், ''அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.'' (அப். 20:30; 2பேது. 2:2)

இன்று நாம் அதைக் காண்கிறோம். அநேகர் இராஜ்யத்தின் நற்செய்திகளைப் பிரசங்கிக்காமல் தங்களையே பிரசங்கிக்கிறார்கள். அவர்கள் சீடர்களை, ஆண்டவருடைய சரீரமான சபைக்கு ஈர்த்து ஆண்டவருடன் மாத்திரமே இணைக்காது, சீடர்களைத் தங்கள் பக்கமாகவும், தங்கள் சபைப் பிரிவுகளுக்கும் நேராக ஈர்க்கிறார்கள்; சபையின் எல்லா அங்கங்களும் நேரடியாக ஆண்டவரையே தங்கள் தலைவராக நோக்கும்படி செய்யாமல், அவர்களே சபைகளின் தலைவர்களாக இருக்க பிரயத்தனம் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாரிடமிருந்து நாம் விலக வேண்டும்; உண்மையான ஆடு அவர்களுடைய தவறான வழிக்கு எந்த ஆதரவும் கொடுக்கக் கூடாது. இப்படிப் பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். ''தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.'' (2தீமோ. 3:5) அவர்கள் நாட்கள், முறைகள், சடங்காச்சாரங்கள், சபை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் போன்றவைகளை கடுமையாகக் கைக்கொள்ளுவார்கள். இப்படிப் பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் அவர்கள் மனிதருக்குள் மேன்மையாக எண்ணப்பட்டாலும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானவர்கள் என்று கூறுகிறார். உண்மையான ஆடு உண்மையான மேய்ப்பனின் சத்தத்தை அறிந்து கொள்ளுவதில் ஜாக்கிரதையாயிருந்து அவரைப் பின்பற்றுவது மாத்திரமல்ல, தங்கள் சுயநலனையே தேடுபவர்களுக்கு, உதவி செய்யாமலும் உற்சாகப்படுத்தாமலும் இருக்க மாத்திரமல்ல, பின்பற்றாமலும் இருக்க நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சபையில் மூப்பராயிருக்கத் தகுதியுள்ளவர் என்கிற நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கிற ஒவ்வொருவரும், இதற்கு முன்பதாகவே, இப்படிப்பட்ட நம்பிக்கையை நிரூபிப்பதற்கு முன்பதாகவே சபைக்கு நன்று அறிமுகமாயிருக்க வேண்டும். ஆகவேதான் ''கற்றுக்குட்டியாக'' இருக்கக் கூடாது என்கிறார். ஒரு கற்றுக்குட்டி பெருமிதம் அடைந்து இதனால் ஆண்டவரை விட்டு வழி விலகவும், சரியான ஆவியின்றியும், இராஜ்யத்திற்குச் செல்லுகின்ற

குறுகலான பாதையை விட்டு வழி விலகி சபைக்கு ஊறு விளைவிப்பது மாத்திரமல்லாது, தனக்கும் ஊறு விளைவித்துக் கொள்வர்.

அப்போஸ்தலராகிய பவுல், யார்யாரெல்லாம் சபையின் மூப்பர்களாகச் சரியாகத் தெரிந்து கொள்ளப்படலாம் என்பதைக் குறித்து வெகு தெளிவான ஆலோசனையைக் கூறுகிறார். (1தீமோ. 3:2; 5:17; 1தெச. 5:12; யாக். 5:14) அவர் அவர்களுடைய குணாதிசயம் போன்றவைகள் எப்படிப்பட்டவைகளாக இருக்க வேண்டும் என்பதையும் விளக்கமாக கூறுகிறார். இந்த விஷயத்தைக் குறித்து, தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில், (1தீமோ. 3:1–7) சற்று வேறு விதமாக மறுபடியும் கூறுகிறார். இன்னொரு மேற்பார்வையாளராக இருந்த தீத்துவுக்கு அவர் எழுதும்போது சபைக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்து விபரமாகக் கூறுகிறார். (தீத். 1:5–11) அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த விஷயத்தைக்குறித்து எழுதும்போது, ‘‘உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும் .....நான் புத்தி சொல்லுகிறதென்னவெனில், உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனத்தோடும், சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்.’’ (1பேது. 5:1–3)

அவர்கள் அந்நியரை உபசரிக்கிறவர்களாகவும், குற்றம் சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும் தன் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தனது பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாய் இருக்க வேண்டும்; ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை அவனால் விசாரிக்க முடியாது. அவன் இரு நாக்குள்ளவனாய் இருக்கக் கூடாது; மாத்திரமல்ல, ஏமாற்றுகிறவனாயும், சண்டை போடுகிறவனாயும் வாக்குவாதம் பண்ணுகிறவனாயும் இருக்கக் கூடாது; சபைக்கு வெளியே இருக்கிறவர்களிடத்திலும் அவன் நன்மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும்; உலகம் பரிசுத்தவான்களை எப்பொழுதும் நேசிக்கும் அல்லது பாராட்டும் என்று அல்ல, ஆனால் குறைந்தபட்சம் உலகமானது அவர்களுடைய நேர்மையைக் குறித்தும், நீதிமானாய் இருப்பதைக்குறித்தும், ஒழுக்கத்தைக் குறித்தும், உண்மையைக் குறித்தும் இழிவானதொன்றையும்

சொல்ல இயலாமல் இருக்க வேண்டும். சபையில் இந்த எண்ணிக்கை அளவில்தான் மூப்பர்கள் இருக்க வேண்டும் என்று வரையறுக்கப் படவில்லை.

மேற்கூறிய தகுதிகளோடு கூட, ஒரு மூப்பன் போதிக்க சமர்த்துள்ளவனாய் இருக்க வேண்டும். அது எப்படியெனில் அவர் ஒரு ஆசிரியராக, விவரித்துச் சொல்பவராக, திவ்விய திட்டத்தை வியாக்கியானம் பண்ணத் திறமையுள்ளவராக இருந்து, இப்படியாக ஆண்டவருடைய மந்தைக்கு வசனத்திலும், உபதேசத்திலும் உதவி புரிகிறவராக இருக்க வேண்டும். மூப்பராயிருப்பதற்கு தாலந்தோ, அல்லது ''தீர்க்கதரிசி'' அல்லது சிறந்த பொது பேச்சாளர் என்கிற தகுதிகள் உள்ளவராக இருக்கவேண்டும் என்பதோ அவசியமில்லை. ஒரு மூப்பருக்குரிய தகுதிகளான கற்றுக்கொடுக்கும் திறமை, போதகத்திறமை, இன்னும் மற்ற தகுதிகளுடைய அனேகர் அதே சபையில் இருக்கலாம்; இருந்தபோதிலும், அவர்களில் எவருமே ஒரு பொதுப்பேச்சாளருக்குரிய திறமையோ அல்லது திவ்விய திட்டத்தை எடுத்துக்கூறக்கூடிய திறமையோ இல்லாதவர்களாக இருக்கலாம். தேவைப்படுகிற இப்படியான ஊழியக்காரரை எழுப்பும்படியாக ஆண்டவரை நம்ப வேண்டும்; ஒருவருமே கிடைக்காவிட்டால் உண்மையாகவே தேவை உள்ளதா என்கிற சந்தேகம் எழும்பலாம். இங்கே நாம் குறிப்பிட விரும்புகிறதென்ன வென்றால், நல்ல விருந்தியடைந்த சபைகள் சிலவற்றில், பொதுப்பேச்சாளருக்கு அதிகமான வாய்ப்பு இருப்பதில்லை. இதனிமித்தமாக இப்படிப்பட்ட இடங்களில் வேத பாடங்கள் கட்டாயம் வேண்டும் என்பதற்காக நடத்தப்படாமல் கடமைக்காக நடத்தப்படுகின்றன. வேதாகமம் தெளிவாகக் காட்டுகிறபடி ஆதி சபையில் கூட இது வழக்கமாக இருந்தது. மேலும் எல்லாரும் கூடி வந்தபோது சரீரமான சபையில் தாலந்துகள் பெற்றிருக்கிற பல்வேறு அங்கங்களுக்கு, அவர்களது தாலந்துகளை உபயோகிக்கும்படியாக, ஒருவர் பேசவும், மற்றவர் ஜெபிக்கவும், எல்லோருமே பாடாவிட்டாலும், அநேகர் பாடவும் ஒரு தருணம் அளிக்கப்பட்டது. அனுபவம் காட்டுகிறபடி, இந்தவிதமான ஒழுங்கை நன்கு பின்பற்றுகிற ஆண்டவருடைய ஜனம் அதிகமான அளவுக்கு ஆசீர்வாதத்தைப் பெறுவதுடன் மிக உறுதியான குணாதிசயங்களையும் அபிவிருத்தி பண்ணிக்கொள்ளுகிறார்கள். ஒரு தனி நபர் தன்னுடைய திறமையை நன்றாக உபயோகித்து, எப்படி நன்றாக பேசினாலும், அது எவ்வளவு

நல்லதாக இருந்தாலும், அது சாதாரணமாக காதினால் கேட்கப்பட்டு, இருதயத்தில் அவ்வளவாக பதியாததுபோல், நன்றாக நடத்தப்பட்ட வேதபாட வகுப்பிலும் நிச்சயமாக இருக்கக் கூடும்; ஆகையால் அதில் எல்லோருமே பங்கெடுக்கும்படி உற்சாகப்படுத்தப்படல் வேண்டும்.

மற்ற மூப்பர்கள் சமர்த்தனாயில்லாதபோது, அவர்கள் ஜெபத்திலும், சாட்சி கூறுகிற கூட்டங்களிலும், தங்களுடைய ஆரம்ப நிலையில் இருக்கலாம். ஆண்டவருடைய ஜனங்கள் கூடிவருகின்ற பல்வேறு கூட்டங்களில் இது ஒரு விசேஷ அம்சமாக இருக்க வேண்டும். புத்தி சொல்லுகின்ற தாலந்து தனக்கு இருக்கிறது என்று உணருகிற ஒருவர் அதை செயலற்றவிதத்தில் விட்டுவிடாதபடி உபயோகிக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் தனக்கு விசேஷமான ஒரு தாலந்து இல்லாதிருக்கும்போது அதை உபயோகிக்கும்படி முயற்சி செய்யவும் கூடாது. அப்போஸ்தலர் கூறுகிறார்: ''புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுவதிலும் தரித்திருக்கக் கடவன்.'' அவன் தன்னுடைய திறமையையும், சேவையையும் அதற்கென்று கொடுக்கட்டும். ''போதிக்கிறவன்(விளக்கிச் சொல்லும் திறமையுள்ளவன்– சத்தியத்தை எளிமையாகக் கூறக்கூடியவன்) போதிக்கிறதிலும் தரித்திருக்கக்கடவன்.''

பிஷப் அல்லது கண்காணி என்ற வார்த்தைக்கு அதிகமான அர்த்தம் உள்ளது போன்றே போதகர் என்ற வார்த்தைக்கும் உள்ளது. ஒரு மூப்பரைத் தவிர வேறு எவரும் போதகராக, அல்லது மேற்பார்வையாளராக அல்லது மேய்ப்பராக இருப்பதற்குத் தகுதியுள்ளவரல்ல. ஒரு போதகர் அல்லது மந்தையின் மேய்ப்பர்தான் மந்தையை மேற்பார்வையிடுகிறவர் ஆகும். இந்த இரண்டு வார்த்தைகளுமே ஒரே அர்த்தம் உடையதாக இருக்கின்றன. வேத வாக்கியத்தின்படி கர்த்தராகிய யேகோவாதான் நம்முடைய பெரிய போதகராக அல்லது மேய்ப்பராக இருக்கிறார். (சங். 23:1) நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய ஆத்துமாவுக்கும் எல்லா இடத்திலுள்ள மந்தைக்கும் மேய்ப்பராகவும் கண்காணியாகவும் இருக்கிறார். பொதுவான கண்காணிகளும், ''பிரயாண ஊழியக்காரர்களும்'' பொதுவான மந்தையின் நலனைப் பார்க்கிற மேய்ப்பர்களாக அல்லது போதகர்களாக இருக்கிறார்கள். மேலும், அந்தந்த இடத்தில் உள்ள ஒவ்வொரு மூப்பரும் ஒரு போதகராக, மேய்ப்பராக அல்லது கண்காணியாக அவரவரது தகுதிக்கேற்ப இருக்கிறார்கள். அப்படியென்றால் சபையில் உள்ள மூப்பர்கள்,

முதலாவது மூப்பராயிருப்பதற்குப் பொதுவான தகுதி உள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இரண்டாவதாக, இயற்கையாகவே அவர்களுக்கு இருக்கின்ற விசேஷ தகுதிகள், எப்படிப்பட்ட ஊழியத்தில் ஆண்டவருக்காக அவர்கள் பயன்படுத்தப்படலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். சிலர் சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியத்திலும், சிலர் ஏற்கெனவே சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட ஆடுகளின் மத்தியில் (ஏற்கெனவே அர்ப்பணம் செய்து கொண்டவர்கள் மத்தியில், ஏற்கெனவே மந்தையில் உள்ளவர்கள் மத்தியில்) மேய்ப்பனின் ஊழியத்திலும், சிலர் உள்ளூரிலும் , சிலர் வெளியூர் ஊழியத்திலும் ஈடுபடலாம்.

''நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராய் எண்ண வேண்டும்'' (1தீமோ. 5:17,18) என்று நாம் வாசிக்கிறோம். இந்த வசனத்தின் வலிமையைக் கருத்தில் கொண்டு, உலகப்பிரகாரமான சபை விசாரணை செய்யும் மூப்பர்கள் என்ற ஒரு வகுப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது சகோதரர் மத்தியில் சர்வாதிகார முறையில் இல்லாவிடினும் எல்லா மூப்பர்களுக்கும் ஒரு விசாரணை செய்யும் அதிகாரம் வேண்டும் என்று கோரியிருக்கிறது. இப்படியான ''விசாரணை'' செய்வது என்பது இந்த விஷயத்தைக் குறித்து வேதாகமத்தில் காணப்படுவதற்கு எல்லாம் எதிர்மாறாக உள்ளது. ஒரு பொதுவான மேற்பார்வையாளர் அல்லது மூப்பர் என்ற ஸ்தானத்தில் உள்ள தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் பின்வருமாறு கூறுகிறார். ''முதிர் வயதுள்ளவர்களைக் கடிந்து கொள்ளாமல் அவனை ஒரு சகோதரனைப்போல பாவித்து புத்தி சொல்லு.'' ''கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல் எல்லாரிடத்திலும் சாந்த குணமுள்ளவனாயிருக்க வேண்டும்.'' இங்கே அதிகார பூர்வ விசாரணையோ, அல்லது சர்வாதிகார தோரணையோ நிச்சயமாக அனுமதிக்கப்படவில்லை. மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படுகிறவர் களுக்கு முக்கியமான குணாதிசயங்களாக இருக்க வேண்டியவைகள் சாந்தம், நீடிய பொறுமை, சகோதர அன்பு, அன்பு ஆகியவைகளாகும். அந்த வார்த்தையின் பிரகாரம் மந்தைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆகவே அவர்கள் சர்வாதிகாரம் உடையவர்களாயிருந்தால், மந்தைக்கு உள்ள உதாரணம் அவர்கள் எல்லாரும் சர்வாதிகாரம் உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதுதான். ஆனால் அவர்கள் சாந்தம்,

நீடிய பொறுமை, பொறுமை, தயவு உள்ளவர்களாய், நேசிக்கிறவர்களாய் இருப்பார்களென்றால், எல்லோரும் பெற்றுக்கொள்ளுகின்ற உதாரணம் இப்படியாகத்தான் இருக்கும்.

உதவிக்காரர்கள், ஊழியக்காரர்கள், வேலையாட்கள்

கண்காணி என்கிற வார்த்தை மேற்பார்வையிடுகிறவர் என்றுதான் பொருள்படுகிறது; மேலும், அது ஒரு விதத்திலும் இருமாப்பாய் ஆளுகிறவர்களையோ அல்லது எஜமானனையோ குறிக்கவில்லை; ஆனாலும் படிப்படியாக மேற்கூறியபடி ஜனங்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது. அதுபோலவே உதவிக்காரர் என்ற வார்த்தையும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது; உதவிக்காரர் என்ற வார்த்தை சரியான அர்த்தத்தின்படி வேலையாள் அல்லது ஊழியக்காரரைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் தன்னையும் தீமோத்தேயுவையும் ''தேவ ஊழியக்காரர்'' என்கிறார். (2கொரி. 6:4) இங்கே சொல்லப்படுகிற ஊழியக்காரர்கள் என்கிற வார்த்தை diakonos என்கிற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது, அது வேலையாட்களைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் மறுபடியும் கூறுகிறதாவது: ''புது உடன்படிக்கையின் ஊழியக்காரராய் இருக்கும்படி, அவரே எங்களை தகுதியுள்ளவர் களாக்கினார்.'' (2கொரி. 3:5,6) இங்கே diakonos என்கிற கிரேக்கப் பதம் ஊழியக்காரர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது வேலையாட்களைக் குறிக்கிறது. உண்மையாகவே அப்போஸ்தலர் கூறும்போது, தானும் தீமோத்தேயுவும் தேவனுடைய ஊழியக்காரர்களாய் (வேலையாட்களாய்) இருந்தோம் என்றும், மேலும் புதிய உடன்படிக்கையின் – புதிய ஏற்பாட்டின் கண்காணிகளாக (வேலையாட்களாய்) இருந்தோம் என்றும் கூறுகிறார். அப்படியென்றால், நாம் பார்க்கும்போது, சபையின் உண்மையான மூப்பர்கள் எல்லோரும் இப்படியாக உதவிக்காரர்களாகவும், தேவனுக்கும், சபைக்கும், சத்தியத்துக்கும் ஊழியக்காரர்களாகவும் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்கள் மூப்பர்கள் என்று அங்கீகரிக்கப்படவே கூடாது.

நாங்கள் ஆதி சபையில் ஊழியத்தைக் குறித்து எந்த விதமான வேறுபாடும் இருந்ததில்லை என்கிற யோசனையைக் கொடுக்க

விரும்பவில்லை. ஆனால் இதற்கு மாறாகவே இருந்தது. இங்கே நாங்கள் சொல்லுகிற குறிப்பு என்னவெனில், சபையில் மூப்பர்களாக இருந்த அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் கூட உதவிக்காரர்களாய் அல்லது வேலையாட்களாய் இருந்தார்கள் என்பதாகும்; ''உங்களில் பெரியவனாய் இருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்'' என்று ஆண்டவர் கூறியபடியே இருந்தார்கள். (மத்.23:11) ஊழியக்காரரின் குணாதியசயமும், விசுவாசமும் புதுச் சிருஷ்டியின் சபையில் உள்ள எவருக்கும் கனத்தையும் மரியாதையையும் காட்டுகிற அளவுக்கு இருக்க வேண்டும். தாலந்துகள் போன்றவைகளால் தகுதியுள்ளவர்கள் என்று சொல்லக்கூடாத வேலையாட்கள் மூப்பர்கள் என்று அறியப்படும்படிக்கு, சபையில் இருந்தார்கள். அவர்கள் போதக சமர்த்தில், அல்லது அனுபவத்தில் குறைவுபட்டவர்களாய் இருந்தபடியால், சபையில் எந்த நியமனமும் பெறுவதோடுகூட, அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் (போதகர்கள்) அனேக சமயங்களில், சில பேரை அவர்களுடைய வேலையாட்களாக அல்லது உதவியாளர்களாகத் தெரிந்தெடுத்தார்கள். உதாரணமாக, பவுலும் பர்ணபாவும் ஒன்றாக இருந்தபோது அவர்கள் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானை சிறிது காலத்திற்கு அவர்களுடைய வேலையாளாக அல்லது உதவியாளராக வைத்திருந்தார்கள். மறுபடியும் பர்ணபாவும் பவுலும் பிரிந்தபோது பர்ணபா யோவானை கூட்டிச் சென்றார். பவுலும் சீலாவும் லூக்காவை தங்களுடைய உதவியாளராக கூட்டிச் சென்றார்கள். இந்த உதவியாளர்கள் தங்களை அப்போஸ்தலருக்கு சமமாகவோ அல்லது அவர்களைக் காட்டிலும் அதிக தாலந்துகளும் அனுபவமும் உள்ளவர்களுக்கு ஊழியத்தில் சமமாக இருப்பதாகவோ எண்ணவில்லை. ஆனால் அவர்களைத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணி, தேவனுக்கும் சத்தியத்திற்கும் ஊழியக்காரர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர் களுடைய வழிநடத்துதலுக்கு உட்பட்டு உதவியாளர்களாக அல்லது வேலையாட்களாக இருக்க கிடைத்த சிலாக்கியத்தில் களிகூர்ந்தார்கள். சபை தனது வேலையாட்கள் அல்லது உதவிக்காரரைத் தெரிந்து கொண்டது போல, அப்போஸ்தலர்களுக்கு இப்படி ஒரு ஊழியம் செய்வதற்கு அவர்கள் சபையினால் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அப்போஸ்தலர்கள் தங்களுக்கு வேண்டியவர்களைத் தாங்களே தெரிந்தெடுத்தார்கள். அது கட்டாயத்தினால் அல்ல, ஆனால் விருப்பத்தின்படியாகும். ஒரு வேளை

யோவானும் லூக்காவும் தங்களுக்கு இருந்த மற்ற எந்த வாய்ப்பைக் காட்டிலும், இப்படியாக ஆண்டவருக்கு நன்றாக ஊழியம் செய்ய முடியும் என்று நினைத்திருக்கக் கூடும் என்று நாம் யூகிக்கலாம். ஆகவே, அது அவர்களுடைய சுய விருப்பத்தின்படியே ஆயிற்று. மாத்திரமல்ல, எவ்விதமான கட்டாயம் இல்லாமல் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் தங்களுடைய தாலந்துகளை வேறு எந்த வழியிலாவது அதிக உண்மையுடன் உபயோகித்திருக்கலாம் என்று நம்பியிருந்தால், அதே உரிமையுடன் அந்த ஊழியம் வேண்டாம் என்று கூறியிருக்கலாம்.

இருந்த போதிலும், உதவிக்காரர் என்கிற இந்த வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சரீரமான சபைக்கு உதவியாளராகவும் பிரயோஜனமாகவுமிருந்த ஒரு சகோதர வகுப்பினருக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அதன்படியே அவர்கள் கனப்படுத்தப்பட்டார்கள்; ஆனால், அவர்கள் மூப்பர் பதவிக்கு மற்றவர்களைப் போன்று அவ்வளவாக தகுதி பெற்றிருக்கவில்லை. ஆனாலும், சபையில் ஒரு விசேஷமான ஊழியத்திற்கென்று அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டது அவர்களது நல்ல ஒரு குணாதிசயத்தையும், சத்தியத்தில் அவர்களது விசுவாசத்தையும், ஆண்டவருக்கும் அவரது மந்தைக்கும் ஊழியம் செய்யும்படியாக அவர்களுக்குள்ள வைராக்கியத்தையும் குறிப்பதாக இருந்தது. இப்படியாக ஆதிகால சபையில் உள்ள எளியவர்களுக்கு உணவு போன்றவை ஒழுங்கு செய்யப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் அந்த வேலையைச் செய்தார்கள்; ஆனால், பின்பு சிலர் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்ற முணுமுணுப்பு எழுந்தபோது, இந்த வேலைக்கென தகுதியான மனுஷரை உங்களுக்குள்ளேயே தெரிந்து கொள்ளுங்கள், எங்களுடைய நேரத்தையும், அறிவையும், தாலந்துகளையும் வேதவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திற்கென செலவழிப்போம் என்று அப்போஸ்தலர்கள் சொன்னபோது, அவர்கள் இந்த வேலையை விசுவாசிகளிடத்தில் ஒப்புவித்தார்கள். (அப்.6: 2–5)

ஏழு உதவிக்காரர்கள் தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்பது நினைவிருக்கலாம்; அந்த ஏழு பேரில் ஒருவராயிருந்தவர் மரணபரியந்தம் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறபடியாக கனத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது நபரான ஸ்தேவான் ஆகும், பின்னர் இவர் முதலாவது இரந்த சாட்சியானார். ஸ்தேவான் சபையினால் தெரிந்து கொள்ளப்பட்டார் என்பதினிமித்தம், அவர் தனக்கு கிடைத்த

எல்லா தருணங்களிலும் எப்படியாவது வேத வசனத்தை போதிப்பதிலேயே கவனமாயிருந்தார். இப்படியாக புராதன காலத்தில் சபையில் இருந்த முற்றிலுமான சுயாதீனத்தைக் காண்கிறோம். முழுச் சபையானது, சபையின் அங்கமாயிருந்த எவரிடத்திலாவது தாலந்துகள் காணப்பட்டால், அவரை ஊழியம் செய்யும்படியாக கேட்டுக் கொள்ளலாம். ஆனால், அவர் அதை ஏற்றுக்கொண்டபோது அந்த வேண்டுகோள் அவரை ஒரு விதத்திலும் கட்டுப்படுத்த வில்லை, மாத்திரமல்ல அவருக்குக் கிடைக்கிற வேறு எந்த சந்தர்ப்பத்திலும் அவருக்குப் பிடித்தமான வழியில் அவருடைய தாலந்துகளைப் பிரயோகிப்பதைத் தடைபண்ணவில்லை. உதவிக்காரராய் இருந்த ஸ்தேவான், பந்தி விசாரிப்பில் உண்மையுள்ளவராய், சபையின் பண சம்பந்தமான காரியங்கள் போன்றவைகளைக் கவனித்துக்கொண்டபோது, ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டு, வேத வசனத்தை வெளிப்படையாக பிரசங்கிக்கும்படியாக, அவருடைய வைராக்கியத்தையும், தாலந்துகளையும் உபயோகிக்கும்படி சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டார். அவருடைய ஊழியம், சகோதரர்கள் அவருடைய திறமையை புரிந்து கொள்ளுவதற்கு முன்னரே ஆண்டவர் அவரை சபையில் ஒரு மூப்பராகத் தெரிந்து கொண்டார் என்பதை வெளிப்படுத்தியது. அவர் இன்னும் அதிக காலம் ஜீவித்திருந்தால், காலாகாலத்தில் அவர் மூப்பராவதற்கு இருந்த தகுதிகளையும், வேத வசனத்தை அவர் விளக்கிச் சொல்லக்கூடிய திறமையுள்ளவர் என்பதையும் அறிந்து கொண்டிருப்பார்கள்.

நாங்கள் இங்கே வற்புறுத்திச்சொல்ல விரும்புவது என்னவெனில், ஒருவர் தன்னுடைய திறமைக்கேற்ப, ஒருவேளை ஒரு சுவிசேஷகராக புது சிருஷ்டியின் சபையினால் நேரடியாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அல்லது நியமிக்கப்படாதிருந்தாலும் தன்னுடைய தாலந்துகளை தன் விருப்பப்படி உபயோகிக்க ஒவ்வொருவருக்கும் முழு சுயாதீனம் இருந்தது என்பதேயாகும். (சபையினால் இந்த ஊழியத்திற்கென்று தெரிந்தெடுக்கப் பட்டிராவிடில் ஸ்தேவான் சபையில் போதிக்கத் தகுதியுள்ளவராக இருந்திருக்கமாட்டார்.) ஒரு தனி நபரின் மனசாட்சிக்கும், தாலந்துகளுக்கும் இருந்த முழுமையான சுதந்திரம், மேலும் தடை பண்ணும்படியாக எந்தவிதமான அதிகாரமோ அல்லது கட்டுப்பாடோ இல்லாதிருந்தது, ஆதிகால சபையில் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சமாயிருக்கிறது; இதை நாம் வார்த்தையிலும் செய்கையிலும்

பின்பற்றுவது மிகவும் நல்லது. சபைக்கு தகுதியுள்ள, திறமையுள்ள மூப்பர்கள் போதிப்பதற்கும், சுவிசேஷகர்கள் பிரசங்கிக்கவும் தேவைப்படுகிறார்கள். இவர்கள் தேவனுக்கும் சபைக்கும் ஊழியம் செய்பவர்கள், அவர்களுடைய ஊழியத்திற்கேற்ப அவர்கள் கனப்படுத்தப் படுகிறார்கள்; மூப்பர்களும், ஊழியக்காரர்களும் வார்த்தையிலும், போதனைகளிலும் ஊழியம் செய்வதினால், அவர்களுடைய ஊழியம் இன்னும் சற்று உயர்ந்ததாகக் கருதப்படுகிறது.

சபையில் போதகராயிருப்பவர்கள்

நாம் இப்போது பார்த்திருக்கிறபடி, போதக சமர்த்தனாயிருப்பது சபையில் மூப்பர்களாக அந்த நிலையில் அல்லது ஊழியத்தில் இருப்பதற்குத் தேவையான ஒரு தகுதியாகும். பரிசுத்த பவுலே, தன்னை ஒரு அப்போஸ்தலனாகவும், ஒரு மூப்பராகவும், வேலையாளாகவும், மாத்திரமல்ல ஒரு போதகராகவும் கூறிக்கொண்டதற்கு நாம் பல்வேறு பகுதிகளை வேதாகமத்திலிருந்து எடுத்துக்கூறலாம். பவுல் போதகராக பின் வருமாறு கூறினார்: ''நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசுகிறோம்.'' (1கொரி. 2:13) அவர் பாஷைகளையோ, கணிதத்தையோ, வான சாஸ்திரத்தையோ அல்லது எந்த விஞ்ஞானத்தையோ கற்றுக் கொடுக்கிற ஆசிரியராக இல்லாமல், ஆண்டவருடைய சுவிசேஷம், அல்லது நற்செய்திகள் குறிப்பிடுகிற ஒரு பெரிய விஞ்ஞானத்தைத் தவிர வேறொன்றையும் கற்றுக் கொடுக்கிறவராக இருந்ததில்லை. இப்பொழுது அப்போஸ்தலரின் மேற்கூறப்பட்ட வார்த்தையிலுள்ள முக்கியத்துவம் இதுதான். இதை ஆண்டவருடைய மக்கள் அனைவரும் உறுதியாக மனதில் வைத்துக்கொள்ளுவது மிகவும் நல்லது. போதிக்கிறவர்கள், பிரசங்கிக்கிறவர்கள் மாத்திரமல்ல, செவி சாய்க்கிறவர்களுமாக இருக்கிறவர்கள்; இவர்கள் மனுஷ ஞானத்தினால் அல்ல திவ்விய ஞானத்தினாலேயே போதிக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படியாக அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு புத்தி சொல்லும்போது, ''திருவசனத்தை பிரசங்கம் பண்ணு'' என்கிறார்; (2தீமோ. 4:2) ''இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித்துக் கொண்டிரு'' என்கிறார்; (1தீமோ. 4:11) ''இந்தப்படியே போதித்து புத்தி சொல்லு'' என்கிறார்; (1தீமோ. 6:2). இது மாத்திரமல்ல, மேலும், அப்போஸ்தலர் சபையும், மூப்பர்களும்கூட கள்ள உபதேசங்களையும் தத்துவங்களையும்

போதிக்கிறவர்களையும், ''ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கைகளை'' போதிக்கிறவர்களையும் சபையின் போதகர்கள் என்று அங்கீகரித்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் சிபாரிசு செய்கிறது என்னவெனில், ''ஒருவன் வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறவனானால்'' அவனை விட்டு விலகு, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினால், அவர்களால் உங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டதைத் தவிர வேறொரு சுவிசேஷம் உங்களுக்கு பிரசங்கிக்கப்பட்டால் அதை ஆதரிக்காதீர்கள் என்பதாகும். (1தீமோ. 6:3–5; கலா. 1:8)

ஆனாலும், தனிப்பட்ட முறையில் மற்றவர்களுக்கு திவ்விய திட்டத்தை எளிமையான முறையில் எடுத்துக்கூறக்கூடியவர்கள் சிலர் இருக்கலாம்; ஆனால் இவர்களுக்கு பேச்சுத்திறமை, பொதுபேச்சுத் திறமை, தீர்க்கதரிசன வரம் போன்றவை இல்லாதிருக்கலாம். ஆண்டவரைப்பற்றியும், அவருடைய காரியங்களைக் குறித்தும் தனிப்பட்ட விதத்தில் ஒரு வார்த்தையாவது கூறக்கூடிய இப்படிப்பட்டவர்களை அதைரியப்படுத்தக்கூடாது. ஆனால் அதற்கு மாறாக அவர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செவி சாய்க்க ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு ஊழியம் செய்யவும், நம்முடைய ஆண்டவரும் இராஜாவுமாயிருக்கிறவரின் துதிகளைச் சொல்லிவருமாறும் உற்சாகப்படுத்தப்படல் வேண்டும். மறுபடியும், நாம் ''உபதேசித்தலுக்கும், பிரசங்கித்தலுக்கும்'' இடையில் உள்ள வித்தியாசத்தைக் காண வேண்டும். (அப்.15:35) பிரசங்கிப்பது என்பது வெளிப்படையாய், பகிரங்கமாய் மற்றவர்கள் மத்தியில் செய்வது; போதிப்பது என்பது, முக்கியமாக ஒரு வேதபாட வகுப்பிலோ அல்லது தனிப்பட்ட சம்பாஷனையின் மூலமாகவோ தனிப்பட்டவிதத்தில் நல்ல முறையில் பொதுவாக செய்யக்கூடிய ஒன்றாகும். மேலும் நல்ல திறமையுள்ள பிரசங்கிமார்கள், பொதுப்பேச்சாளர்கள் அல்லது தீர்க்கதரிசிகளும்கூட சில சமயங்களில் தெரிந்துகொள்வது என்னவெனில், ஆழமான தேவகாரியங்களை சிறு கூட்டங்களுக்கு எடுத்துச்சொல்லி, அவைகள் அதிகமாக பகிரங்கமான விதத்தில் அல்லாமல் சாதாரணமாக பிரசங்கிக்கப்பட்டு, அதன் மூலம் அவர்களுடைய ஊழியம் தாங்கப்படும்போது அது நன்றாக விருத்தியடைகிறது என்பதாகும்.

சுவிசேஷகர்களுக்குக் கிடைக்கப்பெற்ற வரமானது, சத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படியாக மனிதருடைய மனதையும் இருதயங்களையும் எழுச்சியுறப் பண்ணுவதாகும்; இது ஆதிகால சபையில் இருந்தவர்களிடம் இருந்ததைக்காட்டிலும், தற்போது எல்லோரிடத்திலும் இருக்கக்கூடிய விசேஷமான வரமாகக் காணப்படவில்லை. மேலும் மாறிவிட்ட நிலமைகள், ஏறத்தாழ இந்த வேலையின் தன்மையையும் மாற்றிவிட்டது; ஜனங்கள் மத்தியில் பொதுவான கல்வியறிவு இருக்கிறதினிமித்தம், அச்சடிக்கப்பட்ட பிரசுரங்கள் மூலமாக அதிக அளவிற்கு சுவிசேஷ வேலையைச் செய்ய முடியும் என்பதைக் காண்கிறோம். இந்த காலத்தில் இப்படியாக துண்டு பிரதிகளை விநியோகிப்பதிலும், வேதபாட தொடர்களை கொடுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த சுவிசேஷகர்கள் கடந்த கால முறையின்படியல்ல, இந்த காலத்து முறைகளின்படி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த வேலைக்கு எதிரான வாக்குவாதமல்ல; அப்படியாகவே அவர்கள், கால்நடையாக அல்லது ஒட்டகங்கள் மூலமாக செய்யாமல் நீராவி அல்லது மின்சார சக்தியின் வண்டிகளில் பிரயாணம் செய்கிறார்கள் என்பதும் வாக்குவாதத் திற்குரியதல்ல. சுவிசேஷ ஊழியம் என்பது, சத்தியத்தை– யுகங்களுக்கான திவ்விய திட்டத்தை– தேவனுடைய திவ்விய வார்த்தையை – ''மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை'' எடுத்துக்கூறுவதாகும். எங்களுடைய கணிப்பின்படி இதைப்போன்று பெரிய பலன்களைத் தருகின்ற வேறு எந்த சுவிசேஷ வேலையும் இன்று கிடையாது. இந்த வேலையில் மற்ற விஷயத்தில் நாட்டம் செலுத்தாதபடி, இந்த வேலையையே செய்யும்படியாக தாலந்து பெற்ற, தகுதிகளைப் பெற்ற அநேகருண்டு. திராட்சைத் தோட்டத்திற்குள் இன்றும் செல்லாத அநேக அறுவடையாட்கள் உண்டு, இவர்களின் சார்பாக தொடர்ந்து நாங்கள், அறுப்புக்கு ஆண்டவர் அவர்களை அனுப்பும்படியாகவும், இந்த சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடும்போது அவர்களுக்குள்ளான சிலாக்கியங்களையும், சந்தர்ப்பங்களையும் அவர்கள் காணச்செய்தருளும் என்றும் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம்.

சமாரியாவிலுள்ள ஜனங்களுக்கு பிலிப்பு தன்னால் இயன்றதையெல்லாம் செய்து முடித்த பின்னர், பேதுருவும் யோவானும் அவர்களிடத்திற்கு அனுப்பட்டார்கள். (அப். 8:14) ஆகவே சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் நம்முடைய சுவிசேஷகர்கள், அதை கேட்கிறவர் களுடைய சுத்தமான மனங்களை எழுப்பிவிட்ட பின்னர், அவர்களை

ஆசிரியர்கள் போன்று, ஆண்டவருடைய வழிகளைப்பற்றி இன்னும் அறிந்து கொள்வதற்கு வேதத்தைக் கற்றுக் கொள்ளும்படி வேதபாடங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். ஆண்டவருடைய தூதர்களாக, பிரதிநிதிகளாக பேதுருவும், பவுலும், யாக்கோபும், யோவானும் விசுவாச வீட்டாருக்கு நிருபங்களை எழுதினார்கள்; அதனிமித்தமாக அவருடைய மந்தையை மேய்த்து ஆலோசனையைச் சொல்லி, உற்சாகப்படுத்தினார்கள். ஆகவே, இப்பொழுது சத்தியசுவிசேஷ புத்தகங்கள் தனிப்பட்ட முறையிலும், பரவலாகவும் நண்பர்களைச் சந்திக்கின்றது; அது அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், அவர்களுடைய குணாதிசயங்களை ஆண்டவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் ஏற்படுத்திய வழிப்பிரகாரம் பளிங்கு போன்று ஆக்குவதற்கும் தேடி வருகின்றது.

அனேகர் போதிக்க சாமர்த்தியம் உள்ளவர்களாயிருக்க வேண்டும்

அப்போஸ்தலர் சிலருக்கு பின்வருமாறு எழுதினார், ''காலத்தைப் பார்த்தால் (நீங்கள் சத்தியத்திற்குள் இருந்த காலம்) போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு (ஆண்டவருக்கென ஒரு வைராக்கியத்தில் குறைவுபட்டதாலும், உலகப்பிரகாரமான ஒரு ஆவிக்கு உட்பட்டதின் விளைவாகவும்) தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது.'' (எபி. 5:12) பொதுவான கருத்தின்படியாக, இது எதைக் குறிக்கிறது என்றால் குறைந்த பட்சம், முழு சபையும், முழு ஆசாரியத்துவமும், புது சிருஷ்டியின் அங்கங்கள் எல்லோரும் ''அவர்களிடத்தில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து அவர்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கும் படியாக'' அவர்களுடைய பிதாவின் வார்த்தையில் தேறினவர்களாக வேண்டும் என்பதையே. (1பேது. 3:15) இப்படியாக நாம் மறுபடியுமாக பார்ப்பது என்னவெனில், வேதாகமத்தை போதிப்பது என்பது ஒரு குருமார்களின் வகுப்பினரை மட்டும் சார்ந்ததல்ல, புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் இராஜரீக ஆசாரியத்துவத்தின் அங்கமாக, பிரசங்கிக்கும்படியாக ''அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள்.'' ஆகவே இதன்படி, ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய திறமைக்கேற்ப

உண்மையாகவும், தெளிவாகவும் செவிசாய்க்க விருப்பமுள்ளவர்கள் அனைவருக்கும் நற்செய்திகளை எடுத்துச்சொல்லும்படியாக அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இந்த இடத்தில் இன்னொரு அப்போஸ்தலர் ஒரு விசித்திரமான ஒரு காரியத்தைக் கூறுவதைக் காண்கிறோம்.

"சகோதரரே, உங்களில் அனேகர் போதகராகாதிருப்பீர்களாக"

–யாக். 3:1–

இது எதைக் குறிக்கிறது? அப்போஸ்தலர், "அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து" என்று கூறுகிறார். கிறிஸ்துவின் சரீரமான சபையில் மேன்மைக்கேதுவான ஒவ்வொரு படியெடுத்து வைத்து முன்வரும்போது , சோதனைகளும் பொறுப்புகளும் அதிகரிக்கின்றன. ஒருவரும் போதகராகக் கூடாது என்று புத்திமதியாக சொல்லவில்லை. ஆனால் போதிப்பதற்கான தாலந்து தனக்கு உண்டு என்று தனக்குள் நினைக்கிற ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது என்னவெனில், தேவனுடைய வாயாக இருக்க எவ்விதத்திலும் முயற்சி எடுத்துக்கொள்ளுவது ஒருபொறுப்புள்ள காரியம் என்கிறார். அந்த பொறுப்பு என்னவெனில் தேவனுடைய திவ்விய குணாதிசயத்தையும் திட்டத்தையும் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் எந்த ஒரு வார்த்தையும் உச்சரிக்கப்படாமல் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி ஜாக்கிரதையாக இருப்பதினால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாமலும், கேட்கிறவர்களுக்கு தீமை விளைவிக்காதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பரத்திலிருந்து வருகின்ற ஞானத்திற்கும், இந்த ஆலோசனைக்கும் கீழ்ப்படிய எல்லோரும் அறிந்து கொள்வார்களென்றால் அது சபைக்கு நல்லது. இப்பொழுது இருக்கிறதைக் காட்டிலும் அதிக குறைவான போதனை இருக்கக் கூடும். ஆனால் போதிக்கிறவர்கள் மற்றும் போதிக்கப்படுகிறவர்மேல் வருகின்ற காரியம் என்னவெனில் ஆண்டவருக்கும் அவருடைய சத்தியத்திற்கும் அதிகமான கனத்தை காண்பிக்கும்படியாக உணர்வு மாத்திரமல்ல, குழப்பம் உண்டு பண்ணக்கூடிய தவறுகளிலிருந்து இன்னும் அதிகமான விடுதலையையும் கொடுக்கிறது. இதற்கிசைவாக நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் குறிப்பிடுகிற வண்ணம் திவ்விய திட்டத்தோடு முற்றுமாக

ஒத்துப்போகாத வண்ணம் போதித்த சிலருக்கு இராஜ்யத்தில் ஒரு பங்கு உண்டு; ஆனால் இதன் விளைவாக, இராஜ்யத்தில் அவர்கள் சிறிய அந்தஸ்தையே பெறுவார்கள்; திவ்விய செய்தியைத்தவிர வேறு ஒன்றையும் போதிக்காமலிருக்க அதிக கவனம் எடுத்துக்கொண்டிருந்தால் இந்த நிலை வராது. அவருடைய திருவசனம் கூறுவது என்னவென்றால், ''ஆகையால், இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றை யாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகத்தில் எல்லாரிலும் சிறியவன் எண்ணப்படுவான்.'' (மத். 5:19)

''ஒருவனும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை''

''நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக் கிறது, ஒருவனும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத் திருப்பீர்களாக.''

''நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.'' –1 யோவா. 2: 27, 20

சபையானது கற்றுக் கொள்ளவும், கிருபையிலும் அறிவிலும் வளரவும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரையொருவர் பலப்படுத்தவும், மேலும் ஆண்டவர் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள் போன்றவர்களை எழும்பப்பண்ணுவார் என்று எதிர்பார்க்க வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிற வேத பகுதிகள் அனேகம் இருக்க, அப்போஸ்தலராகிய யாக்கோபின் இந்த அறிக்கை, சரியான விதத்தில் புரிந்து கொள்ளப்படும்வரை மிக விசித்திரமானது போலத் தோன்றுகிறது. இது ஒரு சிலருக்கு ஒரு தடைக்கல்லா யிருந்திருக்கிறது, ஆனாலும் ஆண்டவரோடு நல்ல இருதய நோக்கோடு இருந்தவர்களின் இருதயங்கள் இதனால் பாதிக்கப்படும்படி ஆண்டவர் அனுமதிக்கவில்லை என்பதை நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். இந்த வேத பகுதி குறிப்பிடுவது வார்த்தைக்கு வார்த்தை, கட்டளைக்கு கட்டளை எதிர்மாறாக இருப்பதுபோல் தோன்றுகிறது, இதைக்காட்டிலும் வாழ்க்கையின் அனுபவங்களும் கூடத் தாழ்மையான மனதுள்ள எந்த மனுஷனையும், இந்த பகுதி மொழிபெயர்க்கப்பட்ட விதத்தில் ஒன்று

தவறாக இருக்கிறது, அல்லது இந்தப் பகுதியிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய கருத்து தவறாக இருக்கிறது என்று மெய்ப்பித்துக்காட்ட போதுமானதாயிருக்கிறது. இது தீமை விளைவித்தது என்று சொல்பவர்கள் பொதுவாக தன்னைக்குறித்து அதிகமாக யோசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய தற்பெருமை, ஆண்டவர் தங்களை மற்ற எல்லா புது சிருஷ்டிகளைக் காட்டிலும், வித்தியாசமாக நடத்த வேண்டுமென்று யோசிக்கும்படி வழி நடத்துகிறது. ஆனாலும் இப்படிப்பட்டவர்கள், வேதாகமம் பொதுவாகப் போதிக்கின்ற சபையானது ஒரே சரீரமாயிருக்கிறது, அனேக அவயவங்கள் அதோடு இணைக்கப்பட்டுள்ளன; அதற்கு கிடைக்கப்பெறுகின்ற ஊட்டச்சத்தானது, அதன் அங்கங்கள் ஊட்டம் பெறும்படியாகவும், பலம் பெறும்படியாகவும், ஒவ்வொரு அங்கத்திற்கும் மற்ற அங்கங்கள் மூலமாக அல்லது ஒன்றாக இணைந்து எடுத்துச் செல்லப்படுகின்றது என்ற கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். இப்படியாக ஆண்டவர், சரீரமான சபையில் எந்த பிரிவினையும் இல்லாதிருக்கட்டும் என்கிற நோக்கோடு அவருடைய ஜனங்கள் ஒருவரையொருவர் சார்ந்து இருக்க வேண்டும் என்று எண்ணினார். இப்படியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சபை கூடி வருதலை விட்டுவிடாதிருங்கள் என்றும், ஒவ்வொரு இடத்திலும், ஒரு சிறு எண்ணிக்கையாகிலும், அவருடைய நாமத்தில் இரண்டு அல்லது மூன்று பேராக, சரீரமான சபை கூடுவதில் அவர் சந்தோஷமுள்ளவராக இருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலர்கள் மூலம் புத்திமதி கூறியுள்ளார்.

இந்த பகுதியை ஆராய்ந்து பார்க்கும்போது, அவருடைய நாட்களில் இருந்த ஒரு தவறை, சத்தியத்தின் பெயரில், கிறிஸ்தவத்தின் பெயரில், ஆண்டவருக்கு சீஷத்துவம் என்ற பெயரில் வெளியாக்கப்பட்ட எல்லாவற்றையும் ஒன்றுமில்லாததாக்கிக்கொண்டிருந்த பெரிய தவறை மறுத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த தவறான முறை உண்மையான சபைக்கோ அல்லது அதன் உபதேசத்திற்கோ எவ்விதத்திலும் பங்குள்ளதாக இருக்கக்கூடாது என்றும், ஆனால் அதற்கு மாறாக அந்திகிறிஸ்து அல்லது கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள், அவருடைய நாமத்தை உபயோகித்துக்கொண்டே, இப்படியாக தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். இப்படிப்பட்டவர்களைக் குறித்து அவர் கூறும்போது, ‘‘அவர்கள்

நம்முடையவர்களாயிராதபடியால் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், (ஒன்று அவர்கள் ஒருபோதும் உண்மையான கிறிஸ்தவர்களாக இருந்ததில்லை, இல்லையென்றால் இப்படிப்பட்டவர்களாக இல்லாமல் போய்விட்டார்கள்) அவர்கள் நம்முடையவர்களாக இருந்திருந்தால் நம்மோடு தரித்திருப்பார்கள் என்கிறார்.'' (1 யோவா. 2: 19) மேசியாவைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் எல்லாம் வெறும் உவமைகள்தான், மனுக்குலம் மூலமாக அவைகள் ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்களுடைய இந்த தவறை சுட்டிக்காட்ட, இது தேவ குமாரன் மாம்சமானார், அவருடைய ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியால் மேசியாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு நம்மை மீட்டார் என்று சுவிசேஷம் அறிவிப்பதை முற்றிலுமாக மறுப்பதாகும் என்று அறிவித்தார்.

அப்போஸ்தலருடைய எண்ணம் என்னவெனில், கிறிஸ்தவர் களானவர்களும், குறைந்த அளவிற்காவது திவ்விய திட்டத்தைப் புரிந்து கொண்டவர்களும், முதலாவது, அவர்கள் எல்லோரும் முன்பு பாவிகளாக இருந்தார்கள் என்பதையும், ஒரு இரட்சகர் அவர்களுக்குத் தேவைப்பட்டார் என்பதையும் கருத்தில் கொண்டு வர வேண்டும்; இரண்டாவதாக, அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசுவானவர், தன்னுடைய சொந்த ஜீவனையே பலியாக செலுத்தி அவர்களை மீட்டுக்கொண்டார் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் மேலும் கூறும்போது எந்த மனிதனும் இந்த அடிப்படைச் சத்தியத்தை கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை என்கிறார். மேலும், வேதாகமத்தின்படி கிறிஸ்து அவர்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதும், அவர்களை நீதிமான்களாக்கும்படி மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்பதும், நாம் நீதிமானாக்கப்படுதலும், அதன் விளைவாக பரிசுத்தமாக்கப்படுதலும் மகிமையின் நம்பிக்கையும், எல்லாமுமே அவர்கள் சார்பில் செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் பலியினாலும், அதற்கான கிரயத்தினாலும் வருகின்றது என்கிற, கிறிஸ்துவத்தின் இந்த அடிப்படை காரியங்ளையும் அறிந்து கொள்ளாமல் கிறிஸ்தவர்களாக இருக்கவே முடியாது என்கிறார். குமாரன் வெளிப்படுவதற்கு முன்பாக, குமாரன் மேல் விசுவாசம் வைக்காமல் பிதாவை நம்பவும் அவர் மேல் விசுவாசம் வைக்கவும் சாத்தியம் இருந்தாலும்கூட, ஆனால் இப்பொழுது குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையும் மறுதலிக்கிறான் என்றும், அதே வேளையில் ஒருவரும்

பிதாவையும், பிதாவே மையமாயிருக்கிற, அவரால் நிறைவேற்றப்படுகிற அவரது திட்டத்தையும் அறிக்கை செய்யாமல் குமாரனை அறிக்கை செய்ய முடியாது என்றும் கூறுகிறார்.

ஆகவே இன்றைக்கு அப்போஸ்தலர் என்னக் கூறினார் என்பதைச் சரியாகப் பார்க்க முடியும்; பரிசுத்த ஆவியினால் பிறந்த எவனும் முதலாவதாக ஆண்டவராகிய இயேசுவில் ஒரு விசுவாசியாக இருந்திருக்க வேண்டும்; அதாவது அவர் பிதாவின் ஒரே பேரான குமாரன் என்றும், அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்றும், அவர் பரிசுத்தராயிருந்தார் என்றும், குற்றமற்றவராக, பாவிகளிடத்தில் விலகினவராயிருந்தார் என்றும், நமக்காகத் தம்மையே ஈடு பலியாக கொடுத்தார் என்றும், அவருடைய பலி பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், மகிமையான இராஜாவாகவும் மீட்பராகவும் இருக்கும்படியாக அவருடைய உயிர்த்தெழுதல் உறுதிபண்ணிற்று என்றும் விசுவாசிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த விசுவாசம் இல்லாமல் ஒருவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க முடியாது, இப்படியாயிருக்க, அபிஷேகம் உடைய ஒருவருக்கு எந்த மனிதனும் இயேசு தேவ குமாரனாக இருந்தாரா இல்லையா என்ற அடிப்படைக் கேள்வியை மேற்கொண்டு விவாதிப்பதில் நேரத்தை வீணாக்கக்கூடாது; மாத்திரமல்ல, அவர் மீட்பராக இருந்தாரா இல்லையா என்பதையும், தேவனுடைய ஏற்றகாலத்தில், வேதாகமத்தின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நிறைவேற்று கின்ற அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவாக அவர் இருந்தாரா இல்லையா என்பதையும் விவாதிப்பதில் நேரத்தை வீணாக்கக்கூடாது. ''நீங்கள் அவரில் நிலைத்திருக்க வேண்டும் என்று அது கற்பித்தது போன்று'' நாம் பெற்றிருக்கின்ற அதே அபிஷேகம் நம்மில் நிலைத்திருந்தால், இந்த காரியங்களில் உள்ள சத்தியத்தை நமக்கு விளக்கும். திராட்சை செடியாகிய அவரில் நிலைத்திராதவர்களெல்லாம் வெட்டி எறியப்பட்ட கொடி போன்று இருக்கிறார்கள், நிச்சயமாக வாடிப்போவார்கள்; அவரில் நிலைத்திருக்கிறவர்க ளெல்லாம், நிச்சயமாகவே அவருடைய ஆவியில் நிலைத்திருப்பார்கள், அவரை அவர்கள் மறுதலிக்க முடியாது.

''நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.'' யூத யுகத்தில் பரிசுத்த ஆவி பரிசுத்த எண்ணைக்கு ஒப்பிடப்பட்டிருந்தது; அது பிரதான ஆசாரியனின் தலையின் மேல்

ஊற்றப்பட்டபோது சரீரம் முழுதும் வழிந்தோடியது. ஆகவே கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ளவர்களெல்லாம் அபிஷேகத்திற்குக் கீழாக இருக்கிறார்கள், ஆவியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருக்கிறார்கள்; மேலும் ஆண்டவருடைய ஆவி எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் அது ஊற்றப்படக் கூடியதாக, மெருதுவாக வழவழப்பாக்குகிறது. அது எல்லா மனிதரோடும் கூடியவரை சமாதானமாக இருக்கும் தன்மையுள்ளது, நேர்மை அனுமதிக்கும் வரம்பிற்கு உண்மையாயிருக்கும்; விரோதத்திற்கும், கோபத்திற்கும், பொறாமைக்கும், எரிச்சலுக்கும், சச்சரவுக்கும் எதிராக இருக்கும். அதன் ஆதிக்கத்திற்குக் கீழாக இருப்பவர்கள், ஆண்டவரால் போதிக்கப்பட சந்தோஷப்படுகிறவர்களாக இருப்பார்கள், மாத்திரமல்ல அவருடைய திட்டத்தோடும் வெளிப்பாடுகளோடும் வாக்குவாதம் பண்ணாமல் எளிதில் அவைகளோடு ஒத்துப்போவார்கள்; இதன் விளைவாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வழவழப்பானவையான, அபிஷேகம், மென்மை, சாமாதனம், மகிழ்ச்சி, பரிசுத்த மனம் ஆகியவற்றை அடைவார்கள்.

இந்த வார்த்தையின் பிரகாரம் ஆண்டவருடைய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள், அவர்களுடைய இருதயங்களில் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், ஒற்றுமையையும் கொண்டு வருவதோடு, ஆண்டவர் அவர்களை நடத்தியதால் இவைகளை அவர்கள் பெற்றார்கள் என்று அறிந்து, ஆண்டவராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து அவரை அபிஷேகம் பெற்றவராக ஏற்றுக் கொண்டபடியால் இவைகள் அவர்களுக்கு கிடைத்தன என்றும் அறிந்திருக்கிறார்கள். ஆகவே இந்த அபிஷேகம் அவர்களுக்கு ஒரு அடையாளமாக மாத்திரமல்லாது ஓர் அளவிற்கு, அவர்கள் கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக இருக்கிறார்கள் என்பதற்கு மற்றவர்களுக்கும் அடையாளமாக இருக்கிறது. இந்த சமாதானம், சந்தோஷம் இல்லாதவர்கள், தங்கள் இருதயங்களை விரோதங்கள், எரிச்சல், சண்டைசச்சரவுகள், பெருமை, வாக்குவாதம், தர்க்கம் ஆகியவைகளால் நிறையப்பண்ணியிருக்கிறவர்கள், நிச்சயமாகவே அபிஷேகத்தின் அடையாளத்திலும் ஆண்டவருடைய ஆவியோடு வருகின்ற வழவழப்பிலும், மெருது தன்மையிலும் குறைவுபட்டிருப்பார்கள். நாம் எல்லோரும் ஒன்றுபோலில்லை, உண்மைதான் சிலரில் இருப்பதைப்போன்று மற்றவர்களின் காரியங்கள் வெளிப்புறமாக

வழவழப்பான தன்மை அதிதுரிதமாக வெளிப்படுவதில்லை, ஆனால் கிறிஸ்தவ அனுபவத்தின் வெகு ஆரம்ப நிலையிலே, இந்த வழவழப்பு தன்மை இருதயத்தில் இருக்க வேண்டும். இது நாம் இயேசுவோடு இருந்திருக்கிறோம், அவரில் கற்றறிந்து அவருடைய ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்பதற்கு ஒர் அடையாளமாக இருக்கிறது; இதன்பின் கூடிய சீக்கிரத்திலே நம்முடைய அனுதின வாழ்க்கையிலே மற்றவர்கள் காணக்கூடியதாக இருக்க வேண்டும்.

அப்படியென்றால் நாம், போதகர்கள் இருக்க வேண்டியதின் அவசியத்தையும், அவர்கள் மூலமாக ஆண்டவருடைய மனதை அறிந்து கொள்ளுவதற்கும் ஆண்டவருடைய திருவசனம் பொதுவாக கூறுகிறபடி, வேதம் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்று காண்கிறோம். ஆண்டவர் போதகர்களைத்தான் சார்ந்து இருக்கிறார் என்று நாம் கூறவில்லை; மாத்திமல்ல அவரால் கட்டளை பிறப்பிக்க, பக்திவிருத்தி அடையப்பண்ண, புது சிருஷ்டியின் அங்கங்களை வேறு வழியில் அல்லது வேறு செயல் முறைப்படி உயர்த்த முடியாதென்றும் நாம் கூறவில்லை; ஆனால் போதிக்கவும் கிறிஸ்துவின் சரீரமான சபையை எழுப்பப் பண்ணவும், இது அவருடைய வழி, செயல் முறை என்று அவருடைய திருவசனம் கூறுகின்றது. இதன்படியாக சரீரமான சபையில் பிரிவினை கிடையாது, ஒவ்வொரு அங்கமும் மற்றவர்களுக்காக இரங்கவும், ஒவ்வொரு அங்கமும் மற்ற அங்கத்திற்கு உதவி செய்யவும், ஒத்துழைக்கவும் செய்கின்றது.

இந்த போதகர்கள் தவறு இழைக்காதவர்கள் என்று நாம் எண்ணக்கூடாது என்பதை ஏற்னெவே பார்த்திருக்கிறோம், ஆனால் அவர்களுடைய வார்த்தைகள் திவ்விய திட்ட அழைப்பிற்கு ஏற்ப இருக்கிறதா என்று எடைபோட்டு, அளந்து பார்க்க வேண்டும். அவைகள் ஆண்டவர், மற்றும் அப்போஸ்தலர், பரிசுத்த தீர்க்கதரிசிகள் ஆகியோரின் வார்த்தைகளின்படி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவர்கள் அந்த வார்த்தைகளை யுகத்தின் முடிவு வந்திருக்கிற நம்முடைய எச்சரிப்புக்கென பரிசுத்த ஆவியின் உந்துதலினால் பேசினார்கள், எழுதினார்கள். இப்பொழுது அப்போஸ்தலரின் வார்த்தைக்கு உங்கள் கவனத்தை சாய்க்க வேண்டும் என்று கேட்கிறோம். ‘‘திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்’’ (கலா. 6:6) என்று அவர் கூறினார்.

"உபதேசிக்கிறவனும் உபதேசிக்கப்படுகிறவனும்"

இந்த வேத பகுதி, மற்ற எல்லா பகுதிகளோடும் ஒத்திருப்பதோடு தேவன் தன்னுடைய ஜனங்கள் ஒருவருக்கு ஒருவர் உபதேசிக்க வேண்டும் என்பதாக வடிவமைத்துள்ளார் என்பதைக் காட்டுகிறது; மேலும் அவர் மந்தையில் உள்ள மிக எளிமையானவனும் தனக்குள்ளாகவே சிந்தனை செய்து இப்படியாக தன் சொந்த விசுவாசத்தையும், தன் சொந்த குணநலனையும் அபிவிருத்தி பண்ண வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அந்தோ பரிதாபம், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிறவர்கள் மத்தியில் இந்த முக்கியமான விஷயம் பொதுவாக கவனிக்கப்படுவதில்லை. வேதாகமம் உபதேசிக்கிறவனையும், மாணாக்கர்களையும் அங்கீகரிக் கின்றது. ஆனால் மாணாக்கர்கள் தாங்கள் விவாதிக்கின்ற பொருளைக் குறித்து தங்கள் கவனத்திற்கு வருகின்ற எந்த ஒரு அல்லது எல்லா காரியங்களையும் உபதேசிப்பவருக்கு தன்னிச்சையாக எடுத்துக்கூற சுயாதீனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆனாலும் தானே உபதேசியராக வேண்டும் என்ற வாஞ்சையோடு அல்ல, ஆனாலும் ஒரு புத்திசாலியான மாணவனாக, ஒரு மூத்த சகோதரனுக்கு எடுத்துச் சொல்லுவது போல் சொல்ல வேண்டும்; அவர்கள் இயந்திரம் போன்று இருக்கக் கூடாது; மாத்திரமல்ல எடுத்துக்கூறவும் பயந்திருக்கக் கூடாது; ஆனால் கேள்விகள் கேட்பதின் மூலம், வேதாகமம் தவறான முறையில் அப்பியாசப்படுத்தப்படுவது போன்ற உணர்வு தங்களுக்கு வரும்போது , கிறிஸ்துவின் சரீரமான சபையையும் அவருடைய உபதேசங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கான தங்கள் பங்கை செய்ய வேண்டும். இதன்படி அவர்கள், குற்றம் இருப்பின் கண்டு பிடிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் இப்படிச் செய்வதினால் அதைரியப்படாமல் உபதேசம் பண்ணுபவரின் வியாக்கியானங்களைக் குறித்து கேள்வி கேட்கக் கூடாது, உபதேசியாரை கேலி செய்யகூடாது என்று மற்றவர்கள் கூறினாலும், அதற்கு மாறாக அவர்கள் எடுத்துரைக்க வேண்டும், குற்றமிருந்தால் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும்.

இருந்தாலும், ஆண்டவர் எந்தவிதமான பெருமளவில் குற்றம்காணும் இயல்புள்ள ஆவியையோ, சண்டை போடுகிற அல்லது குற்றம் கண்டு பிடிக்கிற தன்மையையோ ஊக்குவிக்க விருப்பம் உள்ளவர்

என்று நினைத்துவிடக் கூடாது. இப்படிப்பட்ட ஒரு ஆவி பரிசுத்த ஆவிக்கு முற்றிலும் எதிர்மாறானது; அது மாத்திரமல்ல, அது மிகவும் அபாயகரமானதும் கூட. ஏனெனில் வாக்குவாதம் பண்ண வேண்டும் என்ற நோக்குடன் யாராவது ஒரு மிகைப்படுத்தப்பட்ட, அல்லது உத்தேசமான விஷயத்தை, அவரால் உண்மையானது என்று நம்ப முடியாத விஷயத்தை, அவருக்கு எதிராக இருப்பவரைக் குழம்பப்பண்ண வேண்டும் அல்லது ஒரு விவாதம் எழுப்ப வேண்டும் என்பது போன்ற ஒரு நோக்குடன் மாத்திரம் வருவாரானால் அவர் தனக்கு தீமை விளைவித்துக்கொள்வது மாத்திரமல்ல, இப்படிப்பட்ட ஒரு முறையால், அவர் மற்றவர்களுக்கும் தீங்கு உண்டு பண்ணுவார் என்று நிச்சயமாகவே நாம் நம்பலாம். சத்தியத்தில் நேர்மை அதில் முன்னேறுவதற்கு ஒரு முக்கியமான விஷயமாகும். ஆனால் விளையாட்டுக்கென அல்லது வேறு எந்த காரணத்திற்காகவாவது ஒருவர் சத்தியம் என்று எண்ணுவதை எதிர்ப்பதும், மேலும் ஒருவர் தவறு என்று எண்ணுவதை தற்காலிகமாகக் கூட ஆதரிப்பதும் நிச்சயமாகவே ஆண்டவருக்கு அருவருப்பாய் இருக்கும், மாத்திரமல்ல அதற்கான தண்டனையையும் கொண்டு வரும். ஐயோ! எத்தனை பேர் சத்தியம் என்று தாங்கள் அறிந்திருந்த ஒரு நிலைக்கு எதிராக ''எதைச் செய்யலாம்'' என்று முயற்சித்து, இப்படியான முறையைப் பின்பற்றினபடியால், சிக்குண்டிருக்கிறார்கள், முற்றிலுமாக அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், மேலும் குருட்டாட்டத்தில் சிக்குண்டிருக்கிறார்கள். ஆண்டவருக்கு அடுத்தபடியாக, முழு உலகத்திலும் சத்தியம் என்பது மிகவும் விலையேறப்பெற்ற தொன்றாகும்; அது அசட்டைபண்ணப்படக் கூடாது; அதோடு விளையாடக்கூடாது, அதோடு கூட யாரெல்லாம் இப்படிச் செய்கிறார்களோ அவர்கள் எல்லாரும் தங்களுக்கு தீமையைத்தான் வரவழைத்துக் கொள்வார்கள். (2தெச. 2:10,11 ஐப் பார்க்க)

''செய்தி கொடுத்தல்'' என்கிற வார்தை மிகவும் விசாலமான பொருள் உடையது என்பதைக் கூறுவது நல்லது. அது ஒருவரின் சிந்தனைகள், உள்ளுணர்வுகள் போன்றவைகளை மாத்திரம் உள்ளடக்கியதல்ல, ஆனால் உபதேசிக்கப்படுகிறவர், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுகிறவர், உபதேசம் பண்ணுகிறவர்களுக்குச் சாதகமாகச் எந்த ஒரு வழியிலாவது அதைத் தெரியப்படுத்த சந்தோஷமுள்ளவர்களாயிருக்க வேண்டும்; அவர்களுடைய தாலந்துகள், முயற்சிகள் ஆகியவைகளினிமித்தம் ஆண்டவருக்கும், சகோதரருக்கும்

சத்தியத்திற்கும் கனி கொடுப்பதின் மூலம் தெரியப்படுத்தலாம். புது சிருஷ்டியின் மிக அடிப்படையான பரிசுத்த ஒழுங்கு முறை இப்படியாக இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப நிலையிலேயே ஒவ்வொருவரும், ''வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்'' என்ற அவர்களது ஆண்டவரின் வார்த்தைகளின் அர்த்தத்தை கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே நல்ல உண்மையுள்ள இருதயங்களில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட அளவின்படி, பூலோக நன்மைகளிலிருந்து, சத்தியத்தின் ஊழியத்திற்கு கொடுப்பதற்கு கொடுக்கும் ஆவியுள்ளவர்கள் சந்தோஷமாகக் கொடுக்கிறார்கள். எப்படிக் கொடுக்க வேண்டும், கொடுப்பதற்கு வேண்டிய ஞானம் பற்றியவைகளை, பின்னர் இன்னொரு தலைப்பின் கீழ் பார்க்கலாம்.

சபையில் ஸ்திரீயின் பங்கு

இந்த பொருளைப் பொருத்தவரை திவ்விய திட்டத்தில் புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உள்ள பொதுவான உறவை ஆராய்ந்து பார்த்த பின்னர்தான் இதை நன்கு கவனிக்க முடியும்; ஆனால் ஒரு முக்கியமான கருத்தின்படி, இதைக் கூறுவதற்கு இது தகுதியான இடமாயிருக்கிறது. இதை ஆமோதிக்கிற மற்ற கருத்துகள், பின்னால் கூறப்பட்டுள்ளன, அவைகள் இப்பொழுது நாம் கூறுவதற்கு ஆதரவளிப்பதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

புது சிருஷ்டியாகிய அவரது சபையைத் தெரிந்தெடுப்பதில், ஆண் பெண் என்ற பாகுபாடு ஆண்டவரால் புறக்கணிக்கப்பட்டது என்பது மிக தெளிவாக புரிகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தலையாகக் கொண்டிருக்கிற ''ஒரே சரீரமான'' சபையின் அங்கங்களாகும்படி ஆண், பெண் இரு பாலாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே ''அவரோடு பாடுகளை சகித்தால் அவரோடு ஆளுகை செய்வோம்'' என்ற பொதுவான நிலையின்படி, ஆண், பெண் இருபாலாரும் ஒன்றுபோல முதலாம் உயிர்த்தெழுதலிலும் அதன் மகிமையிலும், கனத்திலும் அழியாமையிலும் ஒரு பங்கைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இரு பாலாருமே நம்முடைய ஆண்டவராலும் அப்போஸ்தலர்களாலும் மதிப்புக்குரிய விதத்தில், உற்சாகமான _வார்த்தைகளால் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, குணாதிசயத்திலும் சுவிசேஷ ஊழியத்திலும் ஸ்திரீயின் மேல் வைத்த

எல்லை வரம்பு, தடை எல்லாம் மாம்சத்தில் அவள் இருக்கும் இந்த காலத்திற்கு மட்டும் உரித்தாகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும் ஆண்களுக்குத்தான் முன்னுரிமை அளித்தார் என்று எண்ணாமல் எந்த ஒரு காரணத்திற்காக என்று நாம் பார்க்க வேண்டும். நாம் இரு பாலாருக்கும் இடையில் உள்ள பாகுபாடு ஒரு நிழலாக அல்லது உண்மையான முறையில் உள்ளதா என்பதைப் பார்க்க முயற்சி செய்வோம். ஏனெனில் மனுஷன் சபைக்குத் தலையாயிருக்கிற கிறிஸ்து இயேசுவுக்கு ஒப்பாகவும், அதே வேளையில் ஸ்திரீ, திவ்விய நியமனத்தின்படியான தலைக்குக் கீழாக இருக்கிற மணவாட்டிக்கு, சபைக்கு ஒப்பாகவும் கூறப்பட்டுள்ளது.

நம்முடைய ஆண்டவர் அவருடைய தாயாரிடத்திலும், மார்த்தாள், மரியாள் மற்றும் ''தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்துகொண்டு வந்த கனத்துக்குரிய மற்ற ஸ்திரீகளிடத்திலும்'' வைத்த அன்பு, வேத வசனங்களிலிருந்து விளங்குவது மாத்திரமின்றி, அவர்களிடத்தில் ''அன்பாயிருந்தார்'' என்கிற நேரடியான அறிக்கையிலிருந்தும் விளங்குகின்றது. (யோவா. 11:5) இருந்த போதிலும், அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும், பின்னர் எழுபது பேரையும் தெரிந்து கொண்டபோது அவர்களில் ஸ்திரீ யாரையும் சேர்க்கவில்லை. இது கவனக்குறைவால் நடந்தது என்று எடுத்துக்கொள்ள முடியாது; அது அப்படியாக கவனக்குறைவால் இல்லாததுபோன்று, கடந்த பதினாறு நூற்றாண்டுகள் வரை பொதுவான ஊழியங்களைப் பொறுத்தவரை லேவி கோத்திரத்தாரின் ஸ்திரீகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இல்லையென்றால் நம்முடைய ஆண்டவருடைய நண்பர்களின் குடும்பத்தின் ஸ்திரீகள் அவரால் உபயோகப்படுத்தும்படி போதிய கல்வி அறிவு பெற்றிருக்கவில்லை என்றும் எண்ண முடியாது; ஏனெனில், தெரிந்து கொள்ளப்பட்டவர் களைக் குறித்து வேதத்தில் ''அவர்கள் பேதமையுள்ளவர்களென்றும் படிப்பறியாதவர்களென்றும்'' எழுதப்பட்டுள்ளது. ஆகவே ''சகோதர, சகோதரிகள்'' மத்தியிலிருந்து ஆண்கள் மட்டுமே விசேஷமான பொதுவான ஊழியக்காரராயிருக்கும்படியாகவும், சுவிசேஷத்தின் தூதுவர்களாக இருக்கும்படியாகவும் திவ்விய திட்டத்தின்படி தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்று முடிவு செய்ய வேண்டும். இங்கே புரிந்து கொள்ளப்படவேண்டியது என்னவெனில், இந்த திவ்விய ஒழுங்கு

முறையானது சத்துருவின் மாபெரும் திட்டத்திற்கு மாறானது; சத்துரு எப்பொழுதுமே, இரு பாலாரையுமே தன்னுடைய கருவிகளாக உபயோகப்படுத்த ஆயத்தமாயிருந்தாலும், அவன் ஸ்திரீயானவள் தன்னுடைய மிகச் சிறந்த பிரதிநிதியாக இருப்பதைக் கண்டு கொண்டான்.

முதலாவது ஸ்திரீ சாத்தானுடைய முதலாவது பிரதிநிதியாக இருந்தாள்; முதலாவது மனிதனை தவறான வழியில் நடத்துவதில் வெற்றியுள்ளவளாக இருந்து, முழு உலகத்தையும் பாவத்திற்குள்ளும் மரணத்திற்குள்ளும் தள்ளினாள். கடந்தகாலத்தில் இருந்த சூனியக்காரிகள், தற்காலத்தில் ஆவியோடு தொடர்பு கொள்ளுகிறவர்கள், ''கிறிஸ்டியன் சயின்டிஸ்ட்'' (Christian Scientists)ஆகிய எல்லோரும் இதற்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். ஆண்கள் மூலமாக திவ்விய பிரச்சாரம் என்று குறிக்கப்பட்டுள்ளது போன்று சாத்தானின் பிரச்சாரம் ஸ்திரீகள் மூலமாக உள்ளது. மேலும் திவ்விய திட்டமானது, மனிதர்கள் இயற்கையான சுபாவத்தினால் மத ரீதியான காரியங்களில் ஸ்திரீகளை விசேஷமாக உயர்வாகக் கருதுவதற்கு – அந்த பாலாருக்கு உயர்ந்த அளவிலான பரிசுத்தம், ஆன்மீகம், தேவனோடு ஐக்கியம் உண்டென்று கருதுவதற்கு– மாறாக உள்ளது. இந்த உணர்வு கடந்த கால மற்றும் தற்காலத்தில் உள்ள குறிப்பேடுகளின் மூலம் விளங்குகிறது. இதற்கு ஆதாரமாக எகிப்திய தேவதை இஸிஸ் (Isis), அசீரிய தேவதை அஸ்ரோத் (Asroth), கிரேக்க தேவதை டயானா (Diana), ஜூனோ (Juno), வீனஸ்(Venus), பெல்லோனா (Bellona) ஆகியோரை குறிப்பிடலாம். மனிதனை ஆண்டவர் தன்னுடைய சபையில் சந்தேகத்திற்கிடமின்றி அவருடைய வாயாகவும், பிரதிதியாகவும் வைத்திருந்த போதிலும், மரியாள் வணக்கம் கிறிஸ்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கானவர்களை அநேக நூற்றாண்டுகளாக தன் ஆதிக்கத்தில் வைத்திருக்கிறது.

மேற்கூறியவைகள் ஒரு அடையாளமாக ஒரு பக்கம் இருந்தாலும், இருபாலாருக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் குறித்து வேறு காரியங்கள் உள்ளனவா என்று ஆண்டவருடைய வார்த்தை நமக்கு அறிவிக்கவில்லை; மேலும் இந்த விஷயத்தைக் குறித்து எங்கள் ஊகங்கள் சரியாக இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இருந்தாலும் உயர்வாக எண்ணப்படுகின்ற குணாதிசயம் உடைய ஸ்திரீயின் இருதயத்தின், உள்ளத்தின் தன்மைகள் அவளைப் பொதுவான ஆன்மீக ஊழியத்திற்கு தகுதியற்றவளாக்குகிறது. உதாரணமாக, அதிர்ஷ்டவசமாக,

இயற்கையாகவே ஸ்திரீயானவள் பிரியப்படுத்தவும், ஏற்றுக் கொள்ளப்படவும், புகழப்படவும் வாஞ்சையுள்ளவளாக இருக்கிறாள். இந்த குணாதிசயம் வீட்டிற்கு ஒரு அளவிட முடியாத ஆசீர்வாதமாக இருக்கின்றது; அது பலவிதமான வகைகளில் சுவையான உணவுகளை தயார் செய்வதற்கும், வயதான கன்னிகைகள் அல்லது வயதான பிரம்மச்சாரிகள் வசிக்கும் அறைகளைக் காட்டிலும் அழகுற காட்டுகிறபடி வீட்டிற்கு தேவையான அழகு பொருட்களை செய்யவும் உதவுகிறது. உண்மையான மனைவி தன்னுடைய குடும்பத்தை சந்தோஷமாக வைக்க முயற்சிக்கிறாள்; அதே வேளையில், அவளையும் அவளுடைய சமையலையும் பாராட்டுவதை விரும்பி வரவேற்கிறாள். இயற்கையாகவே அவள் விரும்புகின்ற, அவளுக்கே உரிய புகழாரங்களை ஒருபோதும் அவளுக்கு கொடுக்காமல் இருக்கக்கூடாது. இது அவளுடைய தேக ஆரோக்கியத்திற்கும் அவளுடைய முன்னேற்றத்திற்கும் மிகவும் இன்றியமையாதது.

ஸ்திரீயானவள் அவளுடைய நிலையிலிருந்து, மிக முக்கியமான ஒரு பரந்த நிலைமைக்கு உயர்த்தப்படும்போது, இது குறித்து கவிஞர் நன்றாக கூறுகிறார்: ‘‘தொட்டில் ஆட்டுகிற கைதான் உலகை ஆட்டுகிற கை’’ என்று; பொதுப்பணியில் அவள் ஆசிரியையாக, ஒரு பேராசிரியையாக அல்லது ஒரு எழுத்தாளராக வந்தால் அவள் ஆபத்தான ஒரு நிலைக்கு வருகிறாள், ஏனென்றால் பெண்மைக்கே உரித்தான சில குணாதிசயங்கள், (அவைகளில் ஒன்றை நாம் குறிப்பிட்டுள்ளோம்) அவளை ஒரு நல்ல ஸ்திரீயாக உருவாக்குகின்றவைகள் உண்மையான மனிதருக்கு கவர்ச்சியாக தோற்றமளிக்கும்போது, மனிதர்கள் இயற்கையான முறையில் இல்லாது, அவளுடைய ஸ்திரீக்கான தன்மைகளைக் கெடுக்கும்படியாக, அவளுடைய தன்மைகள் ‘‘ஆண்களைப்’’ போன்று இருக்கும்படியாக சதியாலோசனை செய்வார்கள். இயற்கையானது இருபாலாருக்கும் சரீர உருவகத்திலும், முடி அடுக்குகளில் மாத்திரமல்ல, இருதயத்திலும் தலையிலும் ஒரே மாதிரியான சுபாவங்களைக் கொடுத்திருக்கிறது; அவைகள் ஒன்றோடொன்று நன்றாக இணைந்து செயல்படும்படியாக இருக்கிறபடியால் , இயற்கையின் முறைகளை அலட்சியப்படுத்துவது அல்லது அதில் தலையிடுவது, ஒரு வேளை தற்காலிகமான நன்மையான மாற்றங்கள் இருப்பது போன்று தோன்றினாலும் இறுதியில் நிச்சயமாக தீமை விளைவிக்கும்.

பாராட்டுதலை விரும்பக்கூடிய இப்படிப்பட்ட குணாதிசயத்தை இயற்கையானது ஸ்திரீக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும்போது அவைகள் சரியான முறையில் உபயோகிக்கப்பட்டால், அது அவளுக்கும், அவளுடைய வீட்டிற்கும், அவளுடைய குடும்பத்திற்கும் எவ்வளவோ உதவியாயிருக்கிறது. ஆனால் பொது வாழ்க்கையில் உபயோகிக்கப் படுமானால், சபையின் அல்லது உலகத்தாரின் பாராட்டைப் பெறவேண்டும் என அவள் நினைப்பாளானால் அது அவளுக்கு ஒரு கண்ணியாக மாறுவது நிச்சயம். பிரகாசிக்க வேண்டும் என்கிற நோக்கம், மற்றவர்களைக் காட்டிலும் ஞானவான், திறமைசாலி என்று தோற்றமளிக்க வேண்டும் என்பவைகள் பொது ஜனத்திற்கு முன்பாக நிற்கிற எல்லாரையும் சூழ்ந்து கொள்ளும் ஒரு ஆபத்தாக இருக்கிறது; இது அனேக மனிதரை பெருமையடையப் பண்ணி, இதன் விளைவாக சத்துருவின் ஒரு கண்ணியில் விழப்பண்ணியிருக்கிறது. ஆனால் ஸ்திரீக்கே உள்ள பெண்மையின் குணாதிசயங்கள் அவளை இந்த அபத்தத்திற்குள்ளவளாக விசித்திரமாக ஆக்குகிறது; பிரகாசிக்க வேண்டும் என்ற முயற்சியில் அவள் தடுமாறுகிறது மாத்திரமல்ல, மற்றவர்களையும் தடுமாறப் பண்ணக்கூடும்; ஏனெனில் திசை மாறிப்போகிறவர்களுக்கு, நிச்சயமாகவே சத்துரு போலியான எண்ணையை ஊற்றுவான்; அவனுடைய பொய்யான வெளிச்சத்தினால் ஆண்டவருடைய வழியை விட்டு அநேகர் விலகக் கூடும். இதன்படியாக அப்போஸ்தலர் எச்சரிக்கையாக கூறுகிறதாவது : ''என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.'' (யாக்.3:1) இது சகோதரிகளுக்குச் சொல்லப்பட்டால் இன்னும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும். உண்மையாகவே அவர்களுக்கு ஆபத்து அவ்வளவு அதிகமாக இருப்பதினால், ஒருவரும் உபதேசிக்கிறவர்களாக ஏற்படுத்தப் படவில்லை. மேலும் அப்போஸ்தலர் எழுதுகிறார்: ''உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்.'' (1தீமோ. 2:11, 12)

ஆனாலும் இந்த உறுதியான, தெளிவான அறிக்கையால், பழைய கதையையே திரும்பத் திரும்ப சொல்லுவதினால், புதுச் சிருஷ்டியின் சகோதரிகள் ஒருபோதும் ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரமுடியாது என்று கூற முடியாது. இதே அப்போஸ்தலர் அவருடைய நாட்களில்

இருந்த கனம் பொருந்திய ஸ்திரீகள் ஊழியத்தில் உதவி செய்பவர்களாக இருந்தார்கள் என்று மிக மரியாதையுடன் குறிப்பிடுகிறார். உதாரணமாக, பிரிஸ்கில்லாவையும், அவளுடைய புருஷனையும் ''வேலையாட்களாக'' அல்லது ''உடன் வேலையாட்களாக'' இருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். (ரோம.16:3) இது அப்போஸ்தலர்களை தங்கள் வீட்டில் ஏற்று உபசரிக்கிறவர்களாக இருந்தார்கள் என்பதைக் காட்டிலும் அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கிறது. அதன் அர்த்தம் என்னவெனில் அவருடைய வேலையில் அவரோடு வேலை செய்தார்கள், கூடாரத்தொழிலில் மாத்திரமல்ல, ஆனால் விசேஷமாக அவருடைய முக்கியமான வேலையான சுவிசேஷ ஊழியத்தின் வேலையையும் செய்தார்கள். பின்னால் வருகிற வசனத்தில் (வச. 6) மரியாளின் ஊழியத்தை வித்தியாசமாக, '' எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாள்'' என்று கூறுகிறார். இதை பார்க்கும்போது அவள் ஒரு உடன் வேலையாள் இல்லையென்று காண்கிறோம். அவள் அப்போஸ்தலருக்குச் செய்த ஊழியத்தை அவர் பெற்றுக் கொண்டதாக அறிவிக்க விருப்பப்பட்டார். ஒருவேளை அது அவருடைய சொந்த வேலையான, துணி துவைப்பது, அல்லது தைப்பது என்றிருக்கலாம். இதற்கு மாறாக பிரிஸ்கில்லாவினுடைய வேலையை உர்பானுடைய (வச.9) வேலையைப்பற்றிச் சொன்ன அதே விதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆக்கில்லாவுடைய பெயர் பிரிஸ்கில்லாவாகிய அவனுடைய மனைவியின் பெயருக்கு அடுத்தபடியாக சொல்லப்பட்டிருக்கிறபடியால், நாம் முடிவாக எண்ணுகிறதென்னவெனில், இந்த இரண்டு உடன் வேலையாட்களில் மனைவி அதிக திறமைசாலியாயிருந்தாள் என்பதாகும். மற்ற இரண்டு சகோதரிகளான திரிபேனாள், திரிபோசாள் (வச.12) ஆகிய இருவரின் ஊழியத்தைக் குறித்து ''கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற'' வேலை என்று மரியாதையோடு குறிப்பிடப்படுகிறார்.

''கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற'' என்ற அப்போஸ்தலர்களின் வார்த்தையை சகோதரிகளுக்கு ஊழியம் சந்தர்ப்பமே வழங்கக் கூடாது என்று புரிந்து கொள்வது தெளிவாய்த் தெரிகிற தவறாகும். ஆராதிக்கவும், துதிக்கவும், ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி அடையப்பண்ணும்படியாக சபையில் கூடிவந்திருக்கும்போது (இரண்டு அல்லது மூன்று பேர் அல்லது அதிகமாக) சகோதரிகள், உபதேசிக்கிறவர்களாக இருக்க முயற்சி செய்யாமல் ஒரு தாழ்ந்த இடத்தை எடுக்க வேண்டும்; அப்படி யில்லாவிடில், அது மனுஷன் மேல் அதிகாரம் செலுத்துவதாகும்.

இயற்கையாகவும், கட்டளையின்படியாகவும், ஆண்டவர் ஊழியங்களைத் தலைமை தாங்கி நடத்துமாறு மனுஷன் மேல் பொறுப்பை வைத்திருக்கிறார்; இதை நாம் ஒத்துக்கொள்ள முடியுமோ இல்லையோ, ஆனால் சந்தேகத்துக்கிடமின்றி விவேகமான காரணங்களுக்காக அப்படிச் செய்திருக்கிறார்.

அப்போஸ்தலர் விதித்த கட்டுப்பாடுகள், 1 கொரிந்தியர் 14ல் அவர் வருணிக்கிற கூட்டங்களை பற்றி இருப்பது போல் தெரிகிறது; இந்தக் கூட்டங்களில் சகோதரிகளும் இருந்தார்கள்; அவர்கள் பாடல்களையும், கீர்த்தனைகளையும் சேர்ந்து பாடினார்கள்; யாரெல்லாம் ஜெபித்தார்களோ, அந்த ஜெபங்களில் பங்கு பெற்றார்கள்; நிச்சயமாகவே அந்தக் கூட்டத்தில் எல்லா ஆசீர்வாதங்களிலும் பங்கடைந்தார்கள்; அவர்கள் எல்லாரும் பயன் அடையும்படியாகக் கூட்டங்களில் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும் என்பதின் அவசியத்தை அவர்கள் மனதில் பதியவைக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். அவர் தூண்டுதலாக சொல்வதென்ன வெனில் ஒரு சமயத்தில் ஒருவருக்குமேல் பிரசங்கிக்கவோ, அல்லது தீர்க்கதரிசனம் சொல்லவோ கூடாது, மற்றவர்கள் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும்; மாத்திரமல்ல, ஒரே வேளையில் வெவ்வேறு காரியங்களில் மனதைச் செலுத்தாமலிருக்க ஒரு கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேருக்குமேல் பேசவோ, தீர்க்கதரிசனம் சொல்லவோ கூடாது என்றும் கூறினார். அதே மாதிரி அந்நிய பாஷையில் பேசுகிறவன் அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் அமைதியாயிருக்கக்கடவன் என்றார்.

இந்தக் கூட்டங்களில் ஸ்திரீகள் அறவே பேசக்கூடாது, கூட்டங்களுக்கு வெளியே அல்லது ''வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்.'' சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் தங்கள் சொந்த மனிதரிடத்தில் கேட்க வேண்டும், அவர்கள் தங்கள் கருத்தை அல்லது கேள்விகளை, அந்த சகோதரர்கள் (மனிதர்கள்) மூலமாக கேட்கலாம்; முடிந்தால், அந்தரங்கமாக நெருங்கிப் பழகியவர்களான தங்கள் புருஷர்கள் மூலமாக, அல்லது கூட்டம் முடிந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில் அவர்கள் பேசின அந்தச் சகோதரர்கள் மூலமாகக் கேட்கலாம். இந்தப் பகுதியில் வீடு என்பது குடும்பம் அல்லது பழக்கமான என்ற அர்த்தமுடையதாகும். இதன் கருத்து என்னவெனில் அவர்கள், தங்கள் கேள்விகளை அவர்களுக்கு அறிமுகமான புருஷரிடத்தில் அல்லது

பரிச்சயமானவர்கள் மூலமாகக் கேட்கலாம் என்பதாகும். அப்போஸ்தலர் தொடர்ந்து சொல்கிறதாவது : ''பேசும்படி அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது.'' 1 கொரி. 14 : 34–36

கொரிந்து சபையிலே, இருபாலாருக்கும் சபையில் உள்ள உரிமைகள் பாகுபாடுக்கு உட்பட்டதல்ல என்று கூறி ''ஸ்திரீகளின் உரிமைகள்'' என்ற கருத்தை ஆதரித்தார்கள். ஆனால் அப்போஸ்தலர் இந்தக் கருத்தை எதிர்ப்பது மாத்திரமல்ல, ஆனால் அதற்கும் மேலாக, ஆண்டவருடைய ஜனங்களில் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு முறையைத் துவங்கலாம் என்று எண்ணுவதில் அவர்களுக்கிருந்த துணிவைக் கண்டித்தார். அவருடைய வார்த்தைகளாவன: ''தேவனுடைய வசனம் (தூது) உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்திற்கு மாத்திரம் (வேறு இடத்திலிருந்து) வந்ததா? ஒருவன் தன்னை ஒரு தீர்க்கதரிசி என்றாவது ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள் என்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்,'' இவைகள் என்னுடைய சொந்த, அல்லது விசித்திரமான எண்ணங்கள் அல்ல. ஆகவே, நாம் இவ்விஷயத்தில் கொரிந்தியர்களைக் காட்டிலும், நம்முடைய சொந்த விருப்பங்களையும், கருத்துக்களையும் அப்பியாசப்படுத்த வேண்டும், ஆனால் அப்போஸ்தலருடைய அறிக்கைகளை ஆண்டவருடைய கட்டளையென எண்ணி தலை வணங்க வேண்டும். இந்த விஷயத்தில் அப்போஸ்தலரின் போதனையை யாரேனும் ஒத்துக்கொள்ளாவிட்டால், அவள் உறுதியாயிருந்து அவர் அப்போஸ்தலரே கிடையாது என்று முழுமையாக நிராகரிக்கட்டும்.

இந்த விஷயத்தில் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து ஆண்டவர் சபைக்கு கொடுத்த வரங்களைக் குறித்ததான அப்போஸ்தலருடைய வார்த்தையில் கவனத்தை செலுத்துவது நல்லது. அவர் சொல்லுகிறதாவது: ''பரிசுத்தவான்களை சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.'' (எபே. 4:12,13) கிரேக்க மொழியில் இந்த வார்த்தையின் உருபு, ஆண்பாலையும்,

பெண்பாலையும், இருபாலாரையும் சேராதவர்களையும் குறிக்கிறது. ஆண்டவர் பரிசுத்த ஆவியின் மூலம் எப்படி விசேஷமாக அவருடைய சபைக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் ஆண் பெண் பாகுபாட்டிற்கு ஒரு கோடிட்டார் என்பதைப் பார்ப்பதற்கு இந்த பகுதி அருமையானதாகும். மேற்கூறிய பகுதியை குறித்த உண்மைகள் எவை? எந்த ''பால்'' கிரேக்க மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது? நாம் பதில் சொல்லுகிறோம் இந்த உருபு '' tous'' (பன்மை - Accus, ஆண்பால்) அப்போஸ்தலர்களுக்கும், தீர்க்கதரிசி களுக்கும், சுவிசேஷகர்களுக்கும், மேய்ப்பர்களுக்கும் முன்பதாக வருகின்றது, ஆனால் போதகர்களுக்கு முன்பாக இந்த வார்த்தை வரவேயில்லை, இந்த இடத்தில் இந்த வார்த்தை ''உதவி செய்பவர்களை'' குறிக்கும்படி வருகிறது போன்றிருக்கிறது, இல்லாவிடில், ஆண் அப்போஸ்தலர்களை, ஆண் பேச்சாளர்களை, ஆண் சுவிசேஷகர்களை, ஆண்கள் எல்லாரையும் போதகர்கள் என்று குறிப்பிடுகின்ற முழுமையான அர்த்தத்துடன் வருகின்ற பதமாயிருக்கிறது.

ஒரு சகோதரி தன்னுடைய சொந்த கருத்தை வெளிப்படுத்தாமல், எந்த ஒரு விஷயத்தைக் குறித்தாவது, ஆண்டவருடைய அல்லது அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளை சபைக் கூட்டத்தினரின் கவனத்திற்குக் கொண்டு வருவதை, எப்படியாயினும் போதனை என்று எடுத்துக் கொள்ள முடியாது என்று இங்கு நாம் குறிப்பிடுகிறோம். இல்லாவிடில், மனிதனுக்குள்ள அதிகாரத்தைப் பறித்துக் கொள்வது போன்றும் எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு மாறாக, அவள் ஏற்கெனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, போதகர்களின் வார்த்தைகளைத் தான் கூறியிருப்பாள். அதே போன்று மற்றவர்களுக்கு எங்களால் பிரசுரிக்கப்பட்ட வேத விளக்க உரைகளிலிருந்து, அல்லது இந்தப் புஸ்தகத்திலிருந்து, வாசிப்பது, அல்லது மேற்கோள் காட்டுவது, அவளைப் பொறுத்த வரையில் அது போதனை செய்வதாகாது. ஆனால் அது குறிப்பிடப்பட்ட ஆக்கியோனுடைய போதனையாக இருக்கும். இங்கு, இப்படியாக, தன் மந்தையைப் பாதுகாப்பதற்காக ஆண்டவர் மேற்கொண்ட ஒழுங்குகளைக் காண்கிறோம். அதே சமயத்தில், ஆண்டவர் அவர்கள் தேவைகள் சந்திக்கப்படத்தக்கதாக அனேக வழிமுறைகளையும் உண்டு பண்ணி வைத்திருப்பதைக் காண்கிறோம்.

எல்லோருமே திவ்விய கட்டளைக்குக் கீழ்ப்படியலாம், ஆனாலும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளபடி, ஒரு ஸ்திரீ சபைக்கு அடையாளமாக இருக்கிறாள், ஒரு மனிதன் சபைக்குத் தலையாயிருக்கிற ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறான் என்பதை ஒருவன் அறிந்து கொள்ளாவிட்டால், நிச்சயமாகவே ஒருவனும் அதைப் புரிந்து கொள்ள முடியாது. (பார்க்க, எபே. 5:23; 1கொரி. 11:3) சபையானது ஆண்டவருக்கு போதிக்க முயற்சி செய்யாதது போல, சபைக்கு அடையாளமாயிருக்கிற ஸ்திரீயும் மனிதனுக்குமேல் போதகர் என்கிற பாத்திரத்தை எடுத்துக் கொள்ள கூடாது; ஏனெனில் அவன் ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறான். இந்த சிந்தை நம் மனதிற்கு முன்பாக இருக்க, வேதகாமம் செய்துள்ள இந்த ஏற்பாடுகளினிமித்தம் எந்த ஒரு சகோதரியும் அலட்சியப்படுத்தப் பட்டதாக எண்ண வேண்டிய அவசியம் இல்லை, எந்த ஒரு சகோதரனும் பெருமையினால் நிறையவும் தேவையில்லை. ஆண்டவர் மாத்திரமே போதகர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், சகோதரர்கள் தங்கள் சொந்த ஞானத்திலிருந்து கூறக்கூடாது. ஆனால் அவர்களுக்கு தலையாயிருக்கிறவர் அவர்களுக்குச் சத்தியம் என்று தெரியப்பண்ணி யிருக்கிறதை மற்றவர்களுக்கு அறிவிப்பதை மட்டும் செய்ய வேண்டும். இந்த வசனத்தை (1 தீமோ. 2:11,12) ஆண்டவருக்கும், சபைக்கும் நாம் பொருத்திப்பார்ப்போம். இதன்படியாக சபையானது எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். சபையானது உபதேசம் பண்ணவும் கிறிஸ்துவின் மேல் அதிகாரம் செலுத்தவும் நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; சபை அமைதலாயிருக்க வேண்டும்.

"அவள் தலையை முக்காடிட்டுக் கொள்ளக்கடவள்"

நமது பிரதான ஆசாரியனாகிய கிறிஸ்துவுக்கு மாதிரியாயிருந்த பிரதான ஆசாரியன் மாத்திரமே ஆசாரிய வஸ்திரம் தரித்திருந்த போது தலையை மூடாமல் சென்றார் என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். அவருக்குக் கீழாக (under-priests) இருந்த ஆசாரியர்கள் எல்லோரும், சபையான இராஜரீக ஆசாரியத்துவத்திற்கு அடையாளமாக இருந்தார்கள், அவர்கள் தலையை மூடுவதற்காக தலைப்பாகை (bonnets) அணிந்தார்கள். இப்படியான நிழல்– பொருள்

போதகம் நாம் இப்பொழுது தான் பார்த்திருக்கிறதற்கு முற்றிலுமாக ஒத்திருக்கிறது; எப்படியெனில் புது சிருஷ்டியின் சபைக் கூட்டங்களில், சகோதரர்கள் மெய்யான பிரதான ஆசாரியரான ஆண்டவரையும், அதே வேளையில் சகோதரிகள் சபை அல்லது இராஜரீக ஆசாரியத்தையும் அடையாளப்படுத்துகிறார்கள்; இவர்களைப் பற்றி அப்போஸ்தலர், அந்த பாடத்தைக் காட்டும் வண்ணம் –ஆண்டவருக்கு சபை கீழ்ப்பட்டிருப்பது போல –இவர்கள் ஒரு தலை முக்காட்டை அணிய வேண்டும் என்று கூறுகிறார். அப்போஸ்தலர் இதைப்பற்றி 1 கொரி. 11:3–7, 10–15 ல் விளக்கமாகக் கூறுகிறார்.

அப்போஸ்தலர், ஒரு ஸ்திரீயின் நீளமான மயிர் அவளுக்கு முக்காடாக இயற்கையினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதால், அவர் இதைக்காட்டிலும் வேறு ஒன்றும் சொல்லவில்லை என்று சிலர் யூகிக்கிறார்கள்; ஆனால் 6 வது வசனம் இதற்கு எதிர்மாறாக தெளிவாக காட்டுகிறது. அவர், ஸ்திரீயானவள் இயற்கை கொடுத்திருக்கிறபடி மயிரை நீளமாக வளர விடுவது மாத்திரமன்றி, மேற்கொண்டும் தலையின் மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்; அதோடு, 10 வது வசனத்தில் அவர் அது ஒரு அடையாளம், அல்லது மனிதனுக்கு கீழ்ப்பட்டு, அல்லது அவனது அதிகாரத்துக்குட்பட்டு இருப்பதற்கு அறிகுறியாக அங்கீகாரம் என்பதோடு, முழு சபையும் பிரமாணத்தின்படி கிறிஸ்துவுக்குக் கீழ் இருக்கிறது என்று அர்த்தப்படும்படி போதிக்கிறார். 4 ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளதை முதன் முறையாகப் பார்க்கும் போது, சபைக் கூட்டங்களில் ஸ்திரீகள் அமைதலோடு இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதற்கு முரணானது போன்றிருக்கிறது. நாம் நினைப்பது என்ன வெனில் பொதுவான சபை ஆராதனையில் ஸ்திரீகள் பகிரங்கமாக பங்கு பெறக் கூடாது, இருந்தாலும், வேத வசனம் போதிக்கப்படும் இடத்தில் தவிர, ஜெபத்திற்கும், சாட்சிக்கும் ஒழுங்கு பண்ணப்பட்ட பொதுவான கூட்டங்களில், சகோதரிகள் தங்கள் தலைகளை முக்காடிட்டுக்கொண்டு பங்கு பெறுவதில் எந்த விதமான ஆட்சேபமும் இருக்க முடியாது.

அடையாளமாக இருக்கும்படி சகோதரிகள் தங்கள் தலைகளை முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்றும், தொடர்ந்து செய்யப்படல்

வேண்டும் என்றும் இந்த விஷயத்தைக் குறித்து அப்போஸ்தலர் வலியுறுத்தினாலும், அது ஒரு திவ்விய கட்டளை என்று அவர் கூறவில்லை. அதற்கு மாறாக அவர் தொடர்ந்து ''ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ் செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கு அப்படிப்பட்ட வழக்கமில்லை'' என்று கூறுகிறார். அது ஒரு முக்கியமான விஷயம் என்று எண்ணப்படக் கூடாது; இருந்தாலும் ஆண்டவருடைய சித்தத்தைச் செய்ய நாடுகிறவர்கள் எல்லோரும், இதைக் குறித்தும், மற்றவைகளைக் குறித்தும், அது ஒரு ''அடையாளம்'' என்பது சரியானது தான் என்று புரிந்து கொள்ளுகின்ற வேளையிலிருந்து கவனமாயிருக்க வேண்டும். ''தூதர்களினிமித்தம்'' என்ற வார்த்தைகள் சபையின் மூப்பர்களைக் குறிக்கிறது, இந்த மூப்பர்கள் சபையின் தலையாகிய ஆண்டவரைக் குறிக்கிறார்கள். (வெளி. 2:1)

* * * * * * *

சுருக்கமாகக் கூறும் போது, சபையின் காரியங்களில் சகோதரிகளுக்கு உள்ள சுயாதீனத்தைக் குறித்து ஆவியினால் உந்தப்பட்டு எழுதப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குக் கூடுமான வரை மிகவும் தாராளமான முறையில் அர்த்தம் கொடுக்கப்படல் வேண்டும் என்று நாம் ஆலோசனை கூறுகிறோம். நாம் முடிவாக இவ்வாறு கூறுகிறோம்.

1. சபையின் வேலையாட்களாகிய மூப்பர்களையும், உதவிக் காரரையும் தெரிந்தெடுக்கிற விஷயத்தில் சகோதரரைப் போன்றே சகோதரிகளும் ஒரே சுயாதீனம் பெற்றிருக்கிறார்கள்.

2. சபையில் சகோதரிகள் மூப்பர்களாக அல்லது போதகர்களாக ஊழியம் செய்ய முடியாது, ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறார்: ''உபதேசம் பண்ணவும்..... ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை.'' (1தீமோ. 2:12) இதன்படி, சகோதரிகள் போதிப்பது, உபதேசம் பண்ணுவது போன்றவைகளில் அல்லாமல் ஜெபம், சாட்சி கூட்டங்கள், பெரோயா வேத பாடக் கூட்டங்கள் ஆகியவைகளில் பங்கு பெறுவதில் தடை பண்ணப்படல் வேண்டும் என்று புரிந்து கொள்ளக் கூடாது; ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறபடி, அவள் ஜெபம்

பண்ணும்போது அல்லது தீர்க்கதரிசனம் (பேசும் போது) சொல்லும்போது அவளுடைய தலையில் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும், இப்படிச் செய்வதன் மூலம் சகோதரர்கள் விசேஷமாக மாபெரும் போதகரான ஆண்டவருக்கு அடையாளமாக இருக்கிறார்கள் என்பதை அவள் ஏற்றுக் கொள்வதாகும். (1 கொரி. 11:5,7,10) இந்த மாதிரியாகப் பங்கு பெறுவது போதிப்பது என்று எடுத்துக் கொள்ளக் கூடாது, ஏனெனில் பங்கு பெறுகின்ற சகோதரர்களும் போதகர்கள் கிடையாது, எப்படியெனில் ''எல்லோரும் போதகர்களா?'' என்று அப்போஸ்தலர் கேட்கிறார். இல்லை, போதகர்களும், அல்லது மூப்பர்களும் விசேஷமாகத் தெரிந்து கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் எப்பொழுதுமே ஆண்களிலிருந்து தெரிந்து கொள்ளப்படுகிறார்கள். (எபே. 4:11; 2 தீமோ. 2:24; 1 கொரி. 12:28,29.)

அத்தியாயம் 6

புது சிருஷ்டியில் முறையும் ஒழுங்கும்

நியமனம் பண்ணுதலின் பொருள் – பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மட்டுமே பூரண அதிகாரம் பெற்றவர்கள் – ''மதகுருமார்களும்'' ''பொது ஜனங்களும்'' – மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் – ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துதல் – யார் மூப்பரை தேர்ந்தெடுக்கலாம், எப்படி–பெரும்பான்மையாயிருப்பது போதுமானதல்ல – பல்வேறுவிதமான ஊழியங்கள் – சம்பளம் பெறும் ஒரு ஊழியமா? – சபையில் ஒழுங்கு முறை–பிரசங்கிக்கும்படியாக அழைப்பு வந்தது என்று தவறாகப் புரிந்து கொள்வது – ஒழுங்கில்லாதவர்களை எச்சரியுங்கள் – எச்சரிக்க வேண்டும் என்பது பொதுவான கட்டளை அல்ல – வெளிப்படையாகக் கடிந்துகொள்ளுதல் அரிதானது – ''ஒருவருக்கும் தீமைக்கு தீமை செய்யாதிருக்கப் பாருங்கள்'' – அன்பு காட்ட ஏவப்படுதல்–நாம் சபையாக கூடிவருவது–நமது கூடுதல்களில் உள்ள விதங்களும் குணாதிசயங்களும் – உபதேசம் இன்னும் அவசியம்– கேள்விகளுக்கான தருணங்கள் – அனுகூலமான கூட்டங்களின் விளக்கம் – ''அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக் கடவன்'' – அடக்க ஆராதனைகள் – தசமபாகங்கள், காணிக்கைகள், தானதருமங்கள்.

இந்த விஷயத்தை நாம் கவனிக்கும் போது, சபையின் ஒருமைப்பாட்டை நம்முடைய மனங்களுக்கு முன்பாகத் தெளிவாக வைப்பது நல்லது. மேலும் உலகம் அனைத்தும் உள்ள முழு சபையும் ஒன்றாக இருந்தாலும், இன்னொரு கருத்தின் பிரகாரம், ஒவ்வொரு தனி கூடுதலில், அல்லது ஜனத்திரளில் உள்ள விசுவாசிகள் முழு சபைக்கும் ஒரு

அடையாளமாக இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு தனிச் சபையும், ஆண்டவரை அதன் தலையாகவும், அப்போஸ்தலர்களைப் பன்னிரண்டு பிரகாசமான நட்சத்திரங்களாகவும், போதகர்களாகவும் எண்ண வேண்டும். இவர்களை ஆண்டவர் விசேஷமாக, தன்னுடைய கரத்தில் வைத்து யுகம் முழுவதும், ஒவ்வொரு இடத்தில் உள்ள அவருடைய ஒவ்வொரு சபைக்கும் கற்பிக்கும்படி அவருடைய வாயாக உபயோகித்து, நடத்தினார் என்று எண்ண வேண்டும்.

ஒவ்வொரு கூட்டம் அல்லது சபை, அதில் இரண்டு அல்லது மூன்று பேர் இருந்தாலும் கூட, அதன் காரியங்கள் எல்லாவற்றிலும் ஆண்டவரின் சித்தத்தை அறிய நாடவேண்டும். எல்லா இடத்திலும் அன்பின் மீட்பரின் பலியிலும், தேவனுடைய வாக்குத்தத்தங்களிலும், '' ஒரே விலையேறப் பெற்ற விசுவாசம்'' உடைய எல்லா அன்பான சபைகளோடு ஒரு ஒருமைப்பாட்டை உணர வேண்டும். அவருடைய நலன்களைக் குறித்து கேள்விப்படுவது சந்தோஷமாயிருக்கிறது, மாத்திரமல்ல ஆண்டவர் தனது வேலையின் மேற்பார்வையாளராக, இன்றைக்கு, ஒவ்வொரு காலத்திலும் இருக்கிறதுபோல சபையின் மொத்த வேலைக்காக சில விசேஷ உபகரணங்களைப் பாவிக்கலாம் என்ற கருத்தை அறியவும், அதோடு கூட ஒவ்வொரு சிறிய சபையின் சில அங்கங்களையும் உபயோகிக்கலாம் என்பதும் சந்தோஷமாயிருக்கிறது. இப்படியாக ஆண்டவர் கண்நோக்கிப் பார்த்து, அவர் உபயோகப்படுத்துகின்ற ஊழியக்காரரின் குணாதிசயங் களை அறிந்து – தாழ்மையுள்ளவர்கள், வைராக்கியமானவர்கள், நற்சாட்சிப்பெற்றவர்கள், சத்தியத்தில் தெளிவாயிருக்கிறவர்கள், அபிஷேகமும், ஆவியும் பொழியப் பெற்றவர்களுமா யிருப்பார்கள்– அவர்கள் முழுசபையின் தேவைகளுக்கான இப்படிப்பட்ட பொதுவான ஆசீர்வாதத்தில் ஒரு பங்கையும், நம்முடைய ஆண்டவரின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ''ஏற்ற வேளையில் வரும் போஜனத்தையும்'' பெறுவதற்கு ஆயத்தமாயிருப்பார்கள். இந்த யுகத்தின் முடிவில் அவர் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணின விசேஷ ஆசீர்வாதங்களையும், அவர் தெரிந்துகொள்ளுகிறபடி சரியான வாய்க்கால்கள் மூலம் விசுவாச வீட்டாருக்குப் புதியதும் பழமையானதுமான காரியங்களை அளிப்பார் என்பதையும் அவர்கள் விசேஷமாக நினைவில் வைத்துக்கொள்வார்கள். (மத் 24: 45–47)

இந்த உபகரணங்களை, இந்த ஆசீர்வாதங்களுக்கான வாய்க்கால்களை ஆண்டவர்தாமே மேற்பார்வையிட்டு, வழி நடத்துவார். தலையோடு இணைக்கப்பட்ட சரீரமான சபையின் அங்கங்கள் எல்லாம் நம்பிக்கை உடையவர்களாக, அவருடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காகக் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும்; ஆனாலும், யாரிடமிருந்து உபதேசங்கள் வந்தாலும், அவைகளைச் சோதிக்கும்படி, ஆவிகளை சோதித்தறியுங்கள். சோதித்தறிவது சத்தியத்திற்கென தெய்வீகத்தால் நியமிக்கப்பட்ட வாய்க்கால்கள் என்று அறியப்பட்டவர் களிடம் நம்பிக்கை இல்லை என்று பொருள் படுவதாகாது. ஆனால் அது ஆண்டவருக்கும் சத்தியத்திற்கும் என உள்ள ஒரு உண்மை நிலைமையையும் குறிக்கிறது, ஏனெனில் சத்தியம் எல்லா மனுஷீக போதகர்களுக்கும், அவர்களால் சொல்லப்படுபவைகளுக்கும் மேலாக உயர்ந்திருக்கிறது. அவர்கள் ஒரு மனிதனின் சத்தத்திற்கு செவிசாய்க்கவில்லை, ஆனால் பிரதான மேய்ப்பனின் சத்தத்திற்கு செவிசாய்க்கிறார்கள் என்பதை அது குறிக்கிறது. அவருடைய வார்த்தைகளை விருந்துண்டு,

அவைகளை நேசிக்கிறார்கள், அவைகளை நன்கு அரைத்து சாப்பிட்டு ஜீரணிக்க விரும்புகிறார்கள் என்பதையும் அது குறிக்கிறது. அவர்கள் ஆண்டவருடைய வழி நடத்துதலுக்கும், போதனைக்கும் அதிக கவனம் செலுத்துவதால் சரீரமான சபையின் இப்படிப்பட்ட அங்கங்கள், ஆண்டவருடைய வல்லமையில் மற்றவர்களைக் காட்டிலும் துரிதமாக வளருவதோடு அவருடைய சத்துவத்திலும் பலப்படுகிறார்கள்.

சரீரமான சபையின் இந்த பொதுவான ஒற்றுமை, இந்த பொதுவான இரக்கம், அவருடைய இரண்டாவது வருகையில் அவருக்கென அவருடைய சம்பத்தைச் சேர்க்கும்படியாக, ஆண்டவர் கொடுத்துள்ள இந்த பொதுவான போதனை, பொதுவான வாய்க்கால் மூலம் வருகிறது. (மல்.3:17; மத். 24:31) எப்படியாயினும், சிறு கூட்டங்கள் அல்லது சபையில் ஏற்படுத்தப்பட்ட சரியான ஒழுங்கு இருக்கும் போது இது அதில் தலையிடவில்லை. எவ்வளவு சிறிய சபையாயிருந்தாலும் அதில் ஒழுங்கு இருக்க வேண்டும். இந்த ''ஒழுங்கு'' என்ற வார்த்தையினால், கடுமையாக இருப்பது அல்லது சம்பிரதாயம் என்று பொருள்பட நாம் கூறவில்லை. நன்றாகவும், மிகவும் திருப்திகரமாகவும் வேலை செய்கின்ற ஒழுங்கு முறையென்பது சத்தமில்லாமல் வேலை செய்வதாகும், அதன் பொருள்

என்னவெனில் அப்படி வேலை செய்யும் ஒழுங்குமுறை கண்ணில் படவே படாது. கூட்டமானது அவ்வளவு சிறியதாக, மூன்று அல்லது ஐந்து, அல்லது பத்தாக இருந்தாலும், அவர்களில் மூப்பர்களாக, வயதில் முதிர்ந்தவர்களாக, அல்லது சத்தியத்தில் மிகவும் தேறினவர்களாக, ஏற்கனவே நாம் ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளைப் பார்த்திருக்கிற பிரகாரம் மூப்பராவதற்கு கீழ் குறிக்கப்பட்ட பல்வேறு குணாதிசயங்கள் உள்ளவர்கள் யார் என்று காண்பதற்கு வேண்டிய வழி நடத்துதலுக்காக ஆண்டவரைத்தான் நோக்கிப் பார்க்க வேண்டும். அந்த குணாதிசயங்களாவன: சத்தியத்தில் தெளிவு உள்ளவராயிருக்க வேண்டும், போதக சமர்த்தனாயிருக்க வேண்டும், ஒழுக்கத்தைப் பொருத்தவரை குற்றமற்ற வாழ்க்கை உடையவராயிருக்க வேண்டும், தேவையில்லாத சண்டை சச்சரவு இல்லாமல், ஒழுங்கைக் காப்பாற்றுகிறவராக, இவைகள் எல்லாம் அவருடைய குடும்ப வாழ்க்கையில் ஒரு உதாரணமாக இருத்தல் வேண்டும்.

இப்படியாக, இந்த சிறு கூட்டம், ஆண்டவருடைய வார்த்தையையும் ஆவியையும் உடையவர்களாயிருந்து, அதன்படி நடக்கிறவர்களாக இருப்பார்களென்றால் ஊழியக்காரர்களைத் தெரிந்தெடுப்பதில் அவர்கள் ஒற்றுமையாயிருந்ததினால் வந்த பலன்களை வைத்து, அந்த விஷயத்தில் அது ஆண்டவருடைய மனவிருப்பத்தின்படி நடந்தது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், நிச்சயமாகவே அவர்கள் மத்தியில் உள்ளவர்களில் சிறந்தவர்களாக, மிகவும் தகுதி யுள்ளவர்களாக இருப்பார்கள். இருந்தபோதிலும் இப்படி தெரிவு செய்வது, சரியான கவனமும், ஜெபமுமில்லாமல் செய்யப்படாமலிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே முன் கூட்டியே இதைப்பற்றி அறிவிப்பது நல்லது, மேலும் புது சிருஷ்டியின் அங்கங்களாக இருப்பவர்கள் என்று கூறுபவர்கள் (ஆணும், பெண்ணும்), இந்த விஷயத்தில் ஒட்டுப்போடும் விஷயத்தில் ஆண்டவரின் மனதின் பிரகாரம் நடக்க முயற்சி செய்வார்கள் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். பாவத்திற்கு மனஸ்தாபப்படுகிறவர் என்ற நிலையைக் கடந்து வந்தவராக, அவர்களால் முடிந்த வரை இழந்துபோன எல்லாவற்றையும் சரி செய்தவர்களாக, தேவனோடு அவர்கள் ஒப்புரவாகுவதற்கு ஆண்டவராகிய இயேசுவின் பலியே அடிப்படையாயிருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளுபவர்களாக

அதன் பின் ஆண்டவருக்கென தங்களை முற்றும் அர்ப்பணித்தவர்களாக இருப்பார்கள்; இதன் விளைவாக ''வீட்டின் புத்திரராக'' எல்லா சிலாக்கியங்களையும் பெற்றவர்களாக, அபிஷேகம் பெற்றவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே சரீரமான சபையின் தலையாயிருக்கிறவரின் மனதையும் சித்தத்தையும் அறியவும் வெளிப்படுத்தவும் தகுதியுள்ளவர்களாயிருப்பார்கள்; இவர்கள் மாத்திரமே சபையை, கிறிஸ்துவின் சரீரத்தை அமைப்பவர்கள்; ஏனையோர், அர்ப்பணிப்பு என்ற படிக்கு வராதவர்கள், ஆனால் விலையேறப் பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை உள்ளவர்கள், விசுவாச வீட்டின் அங்கங்கள் என்று எண்ணப்படலாம், அவர்களுடைய முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட வேண்டும், அவர்களுடைய நலன்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துதல்

''அல்லாமலும், அந்தந்த சபைகளில் அவர்களுக்கு மூப்பர்கள் ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.'' அப். 14:23.

இந்த அறிக்கையும், எல்லா சபைகளிலும் உள்ள மூப்பர்கள் சம்பந்தமாக அடிக்கடி சொல்லப்பட்டவைகளும், சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் இது மாறாத வழக்கமாக இருந்தது என்று முடிவு செய்வது நியாயமாகத்தான் இருக்கிறது. ''மூப்பர்கள்'' என்ற மேற்கூறிய வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, மேய்ப்பர்களையும், போதகர்களையும், தீர்க்கதரிசிகளையும் (அல்லது பொதுவாக வியாக்கியானம் பண்ணுகிறவர்கள்) அந்த வார்த்தை குறிக்கின்றது; ஆகவே ''தெரிந்து கொள்ளுதல்'' என்கின்ற வார்த்தை எதைக் குறிக்கிறது என்பதை கற்பது முக்கியமானது. தற்போது இந்த வார்த்தை பொதுவாக நியமனம் செய்கின்ற ஒரு சடங்காச்சாரத்தை குறிக்கும்படியாக உபயோகப்படுத்தப் படுகிறது; ஆனால் இந்த வசனத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள ''kirotoneo'' என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் இதுவல்ல. அதன் அர்த்தம் ''கையை நீட்டுவதன் மூலம் தெரிவு செய்வது,'' வழக்கமாக ஓட்டு போடும் முறையாகும். பேராசிரியர் யங்ஸ் (Pro.Young`s Analtical Bible concordance) என்பவரது ''ஆராய்ந்து பார்க்கக்கூடிய வேதாகம ஒத்த

வாக்கிய புஸ்தகத்தில்'' இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. அது சபையினரால் சொல்லப்பட்டது என்று நினைக்க ஏதுவாயிருப்பதால், சபையினருடையது என்று எண்ணப்படக் கூடிய ''ஸ்டிராங் (Strong`s Exahautive concordance)'' என்பவருடைய பூரணமான ஒத்தவாக்கிய புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறதையும் முன்பாக வைக்கிறோம். பின்னர் குறிக்கப்பட்டுள்ள புத்தகம் அந்த வார்த்தையின் மூலக் கருத்தை இப்படியாக கூறுகிறது – கையைத் தொடுகிறவர் அல்லது வாக்கு போடுகிறவர் (கையை உயர்த்துவதன்மூலம்).

''நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்'' என்று நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர்களைக் குறித்துச் சொன்ன போது முற்றிலும் வித்தியாசமான கிரேக்கப் பதம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 15:16). அப்போஸ்தலர் தான் தெரிந்துக் கொள்ளப்பட்டதைக் குறித்துச் சொல்லும்போது ''tithemi'' என்கிற இதே கிரேக்க வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். ''நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் ..... நியமிக்கப்பட்டிருக்கிறேன்'' என்று அவர் கூறுகிறார். (1 தீமே 2:7) ஆனால் இந்த தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர் தெளிவாகக் கூறுகிறதாவது: ''மனுஷராலுமல்ல மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், பிதாவாகிய தேவனாலும்'' என்பதாகும். (கலா.1:1) சபையில் அபிஷேகம் பெற்ற எல்லா அவயவங்களும் தலையாயிருக்கிறவரோடு இணைக்கப்பட்டு, அவருடைய ஆவியில் பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள், ஆகவே இதே விதமாகத் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். ஆனால், உண்மையிலேயே பவுலைப்போன்று அப்போஸ்தல ஊழியத்திற்கல்ல, ஒவ்வொருவரும் தனக்குள்ள தாலந்துகள், வாய்ப்புகளின்படி சத்தியத்திற்கென ஊழியக்காரர்களாக (வேலையாட்களாக) இருக்கும்படியாக ஏற்படுத்தப்படுகிறார்கள். (ஏசா 61:1) பன்னிருவர் மாத்திரமே, அப்போஸ்தலர்களாக, அல்லது விசேஷ பிரதிநிதிகளாக முழு வல்லமை உள்ள ஊழியக்காரர்களாக ஏற்படுத்தப்பட்டார்கள்.

மேலே நாம் பார்த்த பிரகாரம், ''கைகளை நீட்டுவதன்'' மூலம் புது சிருஷ்டியின் சபை மக்கள் (சபை) மூப்பர்களை, ஏற்படுத்தும் போது, அல்லது அறிந்து கொள்ளும் போது, அதை நாம் திரும்பி கவனத்திற்குக் கொண்டு வரும்போது இது தான் வழக்கத்தில் இருந்த முறை என்று பார்க்கின்றோம். ஏனெனில் தீத்து எப்படி தன் உதவியாளர் ஆனார்

என்பதைக் கூறும் போது அப்போஸ்தலர் அதே கிரேக்க பதத்தைதான் உபயோகப் படுத்துகிறார். அவர் கூறுகிறார் : ''எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படி அவன் சபைகளால் தெரிந்து கொள்ளப்பட்டவனாயும் இருக்கிறான்.'' தடித்த எழுத்துகளில் உள்ள வார்த்தைகள் ''kirotoneo'' என்ற கிரேக்க பதத்திலிருந்து வருவதாகும். அது மேலே கூறப்பட்டபடி ''கைகளை நீட்டுவதன் மூலம் தெரிந்து கொள்ளப்படுவது'' என்று பொருள் படுகிறது. மேலும் அவனும் ''கூட'' (ஆங்கில வேதாகமத்தில் ''also'' என்று இருக்கிறது) என்கிற வார்த்தை இங்கே அப்போஸ்தலராகிய தானும் இதே முறையில் தெரிந்து கொள்ளப்பட்டார் என்று பொருள்படுகிறது. தீத்து அப்போஸ்தலனாக இருக்கும் படியாக தெரிந்துகொள்ளப்படவோ அல்லது ஏற்படுத்தப்படவோ இல்லை, ஆனால் ஒரு மிஷனரியாக (missionary) இந்த இடத்தில் சபைகளில் ஒரு பிரதிநிதியாகத் தெரிந்து கொள்ளப்பட்டார், மாத்திரமல்ல அவர்களுடைய செலவில் அனுப்பப்பட்டார் என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி தெரிகிறது.

இருந்த போதிலும், இதன் பின்னர், அப்போஸ்தலரின் சில பிரயாணங்கள் அந்தி யோகியா சபையினால் ஆதரவு இன்றி இருந்தன என்பது தெரிய வருகிறது. (2 தீமோ.1:15) ஆதிகாலத்து சபையின் சட்ட திட்டங்கள் எல்லோரையும் அவர்களுடைய சொந்த மனச்சாட்சியின்படி தங்களுடைய தாலந்துகளையும், உக்கிராணத்துவத்தையும் உபயோகிக்கும்படி விட்டுவிட்டன. சபைகள் (சபை ஜனங்கள்) அப்போஸ்தலருடைய சேவைகளை, அவர்களுடைய விசேஷமான பிரதிநிதிகள் என்றிருந்தாலும் கூட, ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரித்து விடலாம். அப்போஸ்தலர்கள் கூட இப்படிப்பட்ட ஒப்பந்தத்தை தன்னுடைய சொந்த மன சாட்சியை உபயோகிப்பதின் மூலம் ஒன்று ஏற்றுக் கொள்ளலாம் அல்லது புறக்கணித்து விடலாம்.

இதைக் காட்டிலும், மூப்பர்கள் போன்றவர்கள் ஏற்படுத்தப் பட்டார்கள் என்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதைத் தவிர்த்து வேறு இடத்தில் சொல்லப்படவில்லையா! எல்லா சபைப் பிரிவுகளிலும், மூப்பர்கள், பிரசங்கிகள் போன்றவர்களை அனுமதிப்பது, ஏற்படுத்துவது என்கின்ற விஷயங்களில் ''ordain'' என்கிற ஆங்கில பதம் பொதுவாக இப்பொழுது உபயோகிக்கப்படுவதால் பிரசங்கிப்பதற்கு ''அதிகாரம் கொடுப்பது'' அல்லது அனுமதியளிப்பது என்று பொருள்படியும்படியான

பதம் எதுவுமேயில்லையா! இந்தக் கேள்விகளை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

மூப்பர்களைப் பொறுத்த மட்டில் 'ஏற்படுத்துவது' என்கிற வார்த்தை வேறு ஒரு இடத்தில் மாத்திரம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது, அதுவும் கூட இன்னொரு கிரேக்கப் பதமான ''kathestemi புஎன்பதின் மொழி பெயர்ப்பே ஆகும். அது யங்ஸ் (Young`s) என்பவருடைய வேத வியாக்கியானத்தின் படி ''வைப்பது'' அல்லது கீழே கொடுப்பது என்று பொருள்படுகின்றது. ஸ்ட்ராங் (Strong)என்பவரின் வேத வியாக்கியானத்தின்படி ''இதை கீழே வைப்பது'' என்று பொருள் படும். தீத்து 1:5 ல் இந்த வார்த்தை வருகிறது: '' நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்கு கட்டளையிட்ட படியே பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னை விட்டு வந்தேனே.'' உதாரணமாக, ''நான் ஒழுங்குபண்ணினபடியே'' என்பது திருத்தப்பட்ட மொழி பெயர்ப்பில், ''நான் உன் வசமாக கொடுக்கப்பட்டபடியே'' என்றிருக்கிறது. இந்தப் பகுதியைப் பார்க்கும் போது இந்த மூப்பர்களை ஏற்படுத்தும்படியாக மூப்பர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடுவது போல் உள்ளது, அதுவும் சபையினரின் விருப்பங்களை கணக்கில் கொள்ளாதபடி என்று குறிப்பது போல் உள்ளது, இந்த கருத்தின் மேல்தான் எபிஸ்கோப்பல் (Episcopal) சபைமுறை அமைந்துள்ளது. கத்தோலிக்கர்கள், எபிஸ்கோப்பல் சபையினர், மேலும் மெதடிஸ்ட்– எபிஸ்கோப்பல் (Methodist-Epicopals) சபையினர் அனைவரும், அவர்களுடைய பிஷப்புகள், கைகளை முன் நீட்டாமல், சபை வாக்கெடுப்பில்லாது, சபையினருக்காக மூப்பர்களை, ஏற்படுத்த அல்லது நியமிக்க அல்லது கை வைக்கும்படியாக ஒரு அப்போஸ்தல அதிகாரம் உண்டு என்கிறார்கள்.

இந்த வாக்கியம் இந்த கருத்துக்கு மூல வாக்கியமாக உள்ளது. ஆனால் ''உன்னை விட்டு வந்தேனே'' என்ற கடைசி உட்பிரிவை நாம் பார்க்கும் போது, இது மிக பெலகீனமான ஆதாரமாக உள்ளதுடன், இந்த காரியத்தில் அப்போஸ்தலர்கள் தான் செய்ததற்கு வித்தியாசமாக தீத்து செய்யும்படியாக அவருக்கு அவர் நிச்சயமாக ''பொறுப்பையோ'' அல்லது ''கட்டளையையோ'' கொடுத்திருக்கமாட்டார் என்பதைத் தான் அது பிரதிபலிப்பதாய் இருக்கிறது. சரியான மொழிப்பெயர்ப்பில், அப்போஸ்தலர்கள் அந்த விஷயத்தில் எப்படி செயல்பட்டனர் என்பது

வெகு தெளிவாக இருக்கிறது. ''அந்தந்தச் சபைகளில் கரங்களை காட்டுவதன் மூலம் மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து, ஜெபம் பண்ணி,.... கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.'' (அப் 14:23)

அப்போஸ்தலருடைய ஆலோசனையையும், தீத்துவுடைய ஆலோசனையையும், தீத்துவை விசேஷமாக சத்தியத்திற்காக ஓர் உண்மையான ஊழியக்காரனாக ஒப்புவித்ததும், வாஞ்சிக்கப்படுவது மாத்திரமல்ல, சகோதரர்களால் விரும்பப்பட்டதுமாகும், மாத்திரமல்ல அதை பொதுவாக பின்பற்றினார்கள். ஆனாலும், அப்போஸ்தலரும், அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றின அனைவரும், ஆண்டவர் வைத்த இடத்திலே பொறுப்பை, சபையின்மேல் வைக்க விரும்பினார்கள். சபையின் கரிசனையானது ''அந்த ஆவிகள் (போதகங்களும் போதகர்களும்) தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்'' என்பதாகும். (1யோவா. 4:1) ''எவனொருவனும் வார்த்தையின்படி பேசாவிட்டால் அவர்களுக்குள் வெளிச்சம் இல்லை; '' ''இப்படிப்பட்டவர் களிடமிருந்து விலகுங்கள்.'' மேலும் அப்போஸ்தலர் இப்படிப் பட்டவர்களைத் தெரிந்து கொள்ள வேண்டாம், எவ்விதத்திலும் அவர்களை போதகர்கள், மூப்பர்கள் போன்றவர்களாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று ஆலோசனை கூறுகிறார்.

எப்படியாயினும், சொல்லப்பட்டபடியே, வாக்குகள் செலுத்தப் படுவதன் மூலமாகவோ அல்லது இல்லையோ சபையின் ஆதரவு தேவை. ஏனெனில் ஒருவேளை தீத்து சகோதரர்களுக்கு ஏற்றவராக இல்லாத மூப்பர்களை ஏற்படுத்தியிருந்தால், எவ்வளவு காலத்திற்கு சமாதானம் நிலைத்திருக்கும்? சபையினரின் உணர்வுகளுக்கு பாதிப்பு உண்டாகாதபடி எந்த அளவுக்கு இப்படியான ஒரு மூப்பர், மேய்ப்பனின் ஊழியத்தை அல்லது வேறு ஊழியத்தைச் செய்ய முடியும்? நடைமுறையில் யாராலும் முடியாது.

பரிசுத்தவான்களை ''குருவானவர்'' என்றும் ''பாமர மக்கள்'' என்றும் இரண்டு வகுப்பினராக பிரிவு படுத்துவதற்கு குருத்துவம் தான் காரணமேயொழிய, நம்முடைய ஆண்டவருடைய அல்லது அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் போதனைகள் அல்ல. குருத்துவம் என்ற ஆவியும் அந்திக்கிறிஸ்துவின் ஆவியும் இயன்ற அளவுக்கு ஆண்டவருடைய ஜனங்களை இறுமாப்பாய் ஆள விரும்புகிறது. அது எந்த சபையிலும் எவ்வளவு அதிக அறியாமை காணப்படுகின்றதோ அந்த

அளவுக்கு இறுமாப்பாய் ஆள விரும்புகிறது. ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் மூப்பர்களையல்ல, சபையையே கிறிஸ்துவின் சரீரமாக அங்கீகரிக்கிறார்கள். ஆண்டவருடைய, சபையினரின் உண்மையான ஊழியக்காரர்கள் என்று மூப்பர்களுக்கு ஏதாவது கௌரவமோ, அல்லது கனமோ வருமென்றால், அது அவர்களால் உண்டானதும் அல்ல. அவர்களைத் தெரிந்து கொள்ளுகின்ற சபை அறிந்திருக்க வேண்டும், தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திற் கேற்ப அவர்களுடைய கிறிஸ்தவ கிருபைகளையும் திறமைகளையும் அறிந்திருக்க வேண்டும். இல்லையெனில், இப்படிப்பட்ட ஒரு நிலையையும் அல்லது கனத்தையும் அளிக்க இயலாது. ஆகவே எந்த மூப்பருக்கும் தன்னைத்தான் நியமித்துக் கொள்ளும் அதிகாரம் கிடையாது. உண்மையாகவே, கிறிஸ்துவின் சரீரமான சபையைப் புறக்கணிக்கும் தன்மையையும், தன்னையும், தன்னுடைய யோசனையையும் எல்லோருடையதைக் காட்டிலும் மேலானது என்று எண்ணுவதும், இப்படிப்பட்ட ஒரு சகோதரர் மூப்பராக அறியப்படுவதற்கான தகுந்த நிலைமையில் காணப்படவில்லை என்பதற்கு முதல் தரமான ஆதாரமாக இருக்கிறது. தாழ்மையும், சபையானது ஆண்டவருடைய சரீரமாய் இருக்கிறது என்று அறியும் ஒருமைப்பாடும், இப்படிப்பட்ட ஒரு ஊழியத்திற்கு இன்றியமையாதது ஆகும்.

தான் ஏற்றுக் கொள்ளப்படுவதைக் குறித்து, எந்த கேள்வியும் எழும்பாது என்று நிச்சயமிருந்தாலும், எந்த ஒரு சகோதரனும், தேர்தல் நடத்தப்படாமல், சபையின் தலைவர், பிரதிநிதி போன்ற பொதுவான கடமைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது. வேதாகம முறையானது, எல்லா சபையிலும் மூப்பர்களை ஏற்படுத்துவது வாக்கு (vote) செலுத்தும் படியாக கரங்களை நீட்டுவதின் மூலமாகும். ஊழியம் செய்வதற்கு முன்னர் இப்படி ஒரு தேர்தல் வேண்டும் என்று வற்புறுத்துவது ஏனென்றால் வேதாகம முறையைப் பின்பற்றுவதுதான். அது மூப்பரைப் பலப்படுத்துகின்றது, மேலும் ஆண்டவருடைய நாமத்தினாலும் ஆவியினாலும் மூப்பர்களை ஏற்படுத்தும்போது அது தேவனுடைய விருப்பத்தையும் சித்தத்தையும் வெளிப்படுத்துகிற விதமாக, சபைக்கு உள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் அது நினைவூட்டுகிறது. மேலும் இந்த வேதாகம ஒழுங்குமுறை, சபையின் அங்கங்களை அவர்களின் வேலையாட்களாகவும், பிரதிநிதியாகவும் இருக்கின்ற மூப்பர்களின் எல்லா வார்த்தைகளிலும் செயல்களிலும் நாட்டம் கொள்ளச்

செய்கிறது. மூப்பர்கள் சபையினரை, தங்களால் சொந்தமாக்கிக் கொள்ளப்பட்டவர்கள் என்று அவர்களை ஆட்சி செய்கிறார்கள் என்ற பரவலான கருத்தை அது எதிர்க்கிறது, அது மாத்திரமல்ல மூப்பர்கள் சபையினரை ''நான் சேவை செய்யும்படியான ஆண்டவருடைய ஜனங்கள்'' என்று சொல்லாமல், அவர்களை ''என் ஜனங்கள்'' என்று நினைப்பதற்கும் பேசுவதற்கும் அது முற்றுப்புள்ளி வைக்கின்றது.

இவ்வளவு தெளிவாக வேதாகம முறைப்படி இருக்கின்ற விஷயங்கள் ஏன் பொதுவாக விளங்கப்பட்டு, முன்பதாக வைக்கப்படுவதில்லை? ஏனெனில் மனித சுபாவம், கனத்தையும், மெச்சிக்கொள்ளப்படுதலையும் விரும்புவதுடன் இவைகளுக்குச் சாதகமாக காணப்படுகிற தவறான நிலைமைக்குள் வேகமாக வந்து விடுகிறது, ஏனென்றால் பதினேழு நூற்றாண்டு காலமாக இவைகள் பிரபலமாக இருந்திருக்கின்றன; காரணமென்னவெனில், கிறிஸ்து விடுதலையாக்கக்கூடிய சுயாதீனங்களைக் காட்டிலும் ஜனங்கள் இவைகளை விரும்பி இந்த நிலைமைக்கு இடம் கொடுக்கிறார்கள். அதன் பின்னரும், பாபிலோனின் பழக்கங்கள் சரியாகத்தான் இருக்க வேண்டும் என்று நிச்சயத்திருப்பதால், இந்த விஷயத்தைக் குறித்து தேவனுடைய வார்த்தையை ஒரு போதும் படிக்காமலிருக்கிறார்கள்.

மூப்பராயிருக்க வேண்டிய காலம்

எவ்வளவு காலத்திற்கென்று ஒரு மூப்பர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து ஆவியின் உந்துதலின் படி எதுவும் சொல்லப்படவில்லை, ஆகவே இந்த விஷயத்தில் நாம் நியாயமானது என்று நினைப்பதை அப்பியாசப்படுத்த வேண்டும். அநேகர் மூப்பர்களாக இருக்கக்கூடிய கனத்தைப் பெற்றிருக்கலாம், இல்லை யென்றால் சகோதரர்களாக சபையிலே வளர்ந்திருக்கலாம், அவர்கள் உபயோகமுள்ளவர்களாக, மிகவும் பாராட்டுக்குரியவர்களாக இருக்கலாம், இருந்தாலும் சபையினால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களுக்குள், அதன் பிரதிநிதிகளாக, சுவிசேஷகர்களாக, போதகர்களாக, மேய்ப்பர்களாக இருக்க முடியாது. ''முதிர்வயதுள்ள ஸ்திரீகள்'' (சபையில் ஸ்திரீகளின் நிலமை, அதிகாரம் 5ல் பார்க்க) என அப்போஸ்தலர்களால் இப்படியாக பலமுறை மரியாதையுடன் குறிப்பிடப்பட்டுள்ளார்கள், ஆனால் ஒரு இடத்தில் கூட அவர்கள் பிரதிநிதியாக இருக்கும்படியான,

மூப்பர்களாக அல்லது போதகர்களாகச் சபையில் தெரிந்து கொள்ளப்பட்டார்கள் என்று கூறப்படவில்லை. சபைக்குத் தகுதியானவர்கள் என்று தெரிந்துகொள்ளப்பட்ட சிலர் குறிப்பிடப் பட்டிருந்த தகுதியை இழந்து விடலாம், அப்படி இல்லாவிட்டால் மற்றவர்கள் தேவ வழி நடத்துதலின்படி சபையின் வேலைகளைச் செய்வதற்காக இன்னமும் அதிகமாக திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப்படிப்பட்ட வேலைகளுக்கு ஒருவருடம், அல்லது பாதி, அல்லது கால் வருடம் போதுமானதாக இருக்கலாம். முன்பு சொல்லப்பட்ட காலம் திறமையுள்ளவர்கள் என்று எண்ணப்படுபவர் களுக்கும், பிந்திய காலம் அதிக திறமையில்லாதவர்கள் என்று கருதப்படுபவர்களுக்காக, சபையில் சட்டம், அல்லது புத்திமதி, அல்லது ஆலோசனை என்று கூட இல்லாவிடில் ஒவ்வொரு சபையும், ஒவ்வொரு விஷயத்திலும் ஆண்டவருடைய சித்தத்தின்படி செயல்படுவது நலமாயிருக்கும்.

மூப்பர்களின் எண்ணிக்கை

வேதாகமத்தில் மூப்பர்கள் இத்தனை பேர் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் சபையின் அளவைப் பொறுத்தும், திறமைசாலியானவர்கள், என்பது போன்று இருக்கும் தொகையினரைப் பொறுத்தும் இருக்கும். (யாரையும் ஒரு விசுவாசி, அல்லது முற்றுமாக அர்ப்பணம் செய்தவர் என்று யூகிக்கக்கூடாது. அவர் மூப்பராகத் தெரிந்து கொள்ளப்படுவதற்கு முன்னரே, அவருடைய விசுவாசத்தைக் குறித்து, தன்னுடைய வார்த்தையினாலும், செயலினாலும் தவற்றிற்கு இடமில்லாத வகையில் சாட்சி பகருகிறவராக இருக்க வேண்டும்.) எத்தனை பேர் மேற்சொல்லப்பட்ட தகுதிகள் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்களோ அவர்கள் மத்தியில் வேலைகளைப் பகிர்ந்து கொடுக்கும்படியாக இருப்பதை நாம் விரும்புகிறோம். அவர்களில் சிலரை எப்படியாயினும் சில வகையான ஊழிய அல்லது சுவிசேஷ பணியோ ஈர்த்துக் கொள்ளும், சிலரை பகுதி நேரத்திற்குக் கூட ஈர்த்துக் கொள்ளக் கூடும். ஒவ்வொரு சபையும், தன்னிடத்திலிருந்து பரவலான இடங்களில் வேலைகளைச் செய்யும்படியாகத் தொடர்ந்து செல்லக்கூடிய, போதகர்களை அனுப்பக்கூடிய ஒரு வேதாகம பல்கலைக்கழகமாக இருக்கும். மற்றவர்கள் மேல் பொறாமைப்படுகின்ற, மற்றவர்கள் ஊழியம்

செய்யாதபடி தடை செய்ய வேண்டும் என்கிற விருப்பமுள்ள மூப்பர்கள் தொடர்ந்து இருக்க தகுதியற்றவர் என்று கருதப்பட வேண்டும். இருந்தாலும் தன்னுடைய கர்வத்தை திருப்திபடுத்தும் வகையில், திறமையற்றவர், அல்லது கற்றுக்குட்டியாக இருக்கிற ஒருவரும் தெரிந்து கொள்ளப்படக் கூடாது. சபையானது, கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக இருக்கிறவர்கள், தலையாயிருக்கிறவர் எப்படி வாக்குப் பதிவு செய்ய விரும்புகிறாரோ, அப்படியே அவர்களும் செய்ய வேண்டும்.

அப்போஸ்தலர்களால், இந்தெந்த தகுதிகள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருக்கும் போது, ஊழியத்திற்கு ஒருவரும் தகுதியில்லை என்று காணப்படும் போது, ஒரு மூப்பரைத் தெரிவு செய்வதைக் குறித்து ஒருவேளை ஒரு எச்சரிப்பு கொடுப்பது நல்லது. மேலும் திறமையற்றவர்களைத் தெரிவு செய்வதைக் காட்டிலும் மூப்பர்கள் இல்லாமல் இருப்பதே நல்லது. இதற்கிடையில், ஊழியத்திற்கு தகுதியான ஒரு சகோதரர் காணப்படும் வரையில், வேதாகம் ஒரு பாட புத்தகமாக வைக்கப்பட்டு, நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், வேதாகம பாடங்களில் போதகராக உங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பராக சகோதரர் ரசல் இருப்பது போல், கூட்டங்கள் சாதாரண முறையில் நடை பெறட்டும்.

யார் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கலாம், எப்படி?

சபை மாத்திரமே (சரீரமானசபை –ஆண்களும், பெண்களும்), புது சிருஷ்டி யானவர்கள், தெரிந்தெடுக்கிறவர்களும், வாக்குப் பதிவு செய்பவர்களாயிருக்கிறார்கள். பொதுவாக ''விசுவாச வீட்டார்,'' அர்ப்பணம் செய்திராத விசுவாசிகள் இப்படிப்பட்ட தெரிந்து கொள்ளுதலோடு ஒரு தொடர்பும் இல்லாதவர்கள். ஏனென்றால் இது ஆண்டவரால் அவருடைய விருப்பத்தின்படி செய்யப்பட வேண்டியதாகும், அவருடைய ''சரீரத்தின்'' மூலம், அவருடைய ஆவியை உடையவர்கள் மூலம் செய்யப்பட வேண்டும். சபையில் அர்ப்பணம் செய்து கொண்டவர்கள் எல்லாம் வாக்குப் பதிவு செய்ய வேண்டும், இதற்காகக் கூடியிருக்கிற வேளையில் அவர்களில் யாராவது நியமிக்கப்படும்படியாக பெயர்களைக் கூறலாம். இதை வாக்கு பதிவு செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே, அதை பரிசீலனை செய்வதற்கு அவகாசம் இருக்கும்படியாகக் கூறலாம்.

சிலர் வாக்கு செலுத்துவது என்பது சீட்டு மூலம் இருக்கும் என்றால் எல்லோரும் அவர்களுடைய உண்மையான விருப்பப்படி செயல்பட ஏதுவாயிருக்கும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்த முறையில் எவ்விதமான அனுகூலம் இருந்தாலும், அது ஒரு பிரதிகூலம் மூலம் ஈடு செய்யப்பட்டுவிடுகிறது என்று நாம் கூறுகிறோம். எப்படி யெனில் அப்போஸ்தல முறையான ''கரங்களை நீட்டுதல்'' முறையில் வருகின்ற ஒழுங்கும், குணாதிசயத்தை வளர்ப்பதும் இல்லாமல் போய் விடுகின்றது. ஒவ்வொருவரும், கபடமற்றவராக, வெளிப்படையாகப் பேசுகிறவராக, இருக்க வேண்டும், ஆனாலும் அதே நேரத்தில் அன்புள்ளவராக, மென்மையான உள்ளம் கொண்டவராக இருக்க வேண்டும். வாக்குப்பதிவு செய்வது என்பது, தங்களால் ஆண்டவருடைய சித்தத்தை அறிய, கூடுமானவரை அவருடைய சரீரமான சபையின் அங்கங்களால், செய்யப்பட வேண்டியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒருவர் ஆண்டவருடைய மனதை அறிந்திருக்கிறேன் என்று நம்புகிறவர், அதைக் கூறுகிறவர் தவிர வேறு எவரும், தன்னுடைய கடமையைத் தள்ளிவிடவோ, ஒருவரை இன்னொருவரைக் காட்டிலும் மேலாக ஆதரிக்கும் உரிமை உள்ளவராக இல்லை.

பெரும்பான்மையாயிருப்பது போதுமானதல்ல

உலகக்காரியங்களில் ஒரு பெரும்பான்மையினரின் குரலே முடிவு எடுக்கிறது, ஆனால் ஆண்டவருடைய சபையில் அல்லது சரீரத்தில் அப்படி இருக்கவே கூடாது. இதற்கு மாறாக, கூடுமானவரை ஜூரி (Jury-rule) முறையில் ஏகோபித்தத் தீர்மானம் அல்லது முடிவு எடுக்கப்பட வேண்டும். ஒரு சகோதரன் அதிக பட்ச வாக்கு பெறாதிருக்கும் போது, ''அது ஆண்டவருடைய சித்தம்'' என்று ஏற்றுக் கொள்வதில் அசௌகரியமாக, சபையினர் உணருவதைக் காட்டிலும் அதிகமாக உணரலாம். வேறு ஒருவர் எல்லோருடைய ஆதரவையும், அல்லது கிட்டத்தட்ட எல்லோருடைய ஆதரவையும் பெற முடிந்தவராயிருப்பாராயின், அவரை ஒவ்வொரு வாரமும் வாக்குப் பதிவுக்குப் பின்னர் இன்னொரு வாக்குப் பதிவு மூலம் அவரை நாட வேண்டும், அவரைத் தேடிப்பிடிக்கும் வரை அப்படிச் செய்ய வேண்டும்; இல்லையென்றால் அந்த விஷயத்தையே விட்டுவிட வேண்டும், இல்லை என்றால் எல்லோரும், இன்னும் இரண்டு அல்லது மூன்று பேர், தங்கள் எல்லோருடைய யோசனையை நிறைவேற்றும்படி, ஒருவர் பின் ஒருவராக சேவை செய்யக் கூடியவர்களைத் தெரிந்து

கொள்ளட்டும். ஆனால் தாலந்துகள் சமமாகக் காணப்படும் பட்சத்தில் ஒருவரை யொருவர் கனத்தில் முந்திக்கொள்ளும்படியாகவும் வழி நடத்துதலுக்கான ஜெபமும், சத்தியத்தின் மேலும், ஆண்டவர் மேலும் ஊக்கமான அன்பு காணப்படும் என்றால், இந்த பொருளில் ஆண்டவருடைய சித்தம் இன்னதென்று எல்லோரும் அறிந்து கொள்வது பொதுவாக எளிதானதாகக் காணப்படும். ''ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமலிருங்கள்.'' ''சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.'' பிலி. 2:3; எபே. 4:3

உதவி செய்பவர்கள் என்று பொருள்பட அழைக்கப்படும் உதவிக்காரர்கள், ஸ்திரீகள் விஷயத்திலும் இதே முறை பின்பற்றப்படல் வேண்டும், அவர்களுடைய நல் நடத்தையும் ஒரு குணாதிசயமாக எண்ணப்பட வேண்டும். (பார்க்க, 1 தீமோ. 3:8–13) எந்த வேலைக்கும் இவைகள் தேவைப்படலாம். மூப்பராவதற்குத் தேவைப்படுகிறவைகளில் பெரும்பாலான வைகளோடு கூட போதக சாமர்த்தியமும், ஆவியின் கிருபைகளும் இருக்க வேண்டும்.

பல்வேறு விதமான ஊழியங்கள்

நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி, மூப்பர்கள் ஒன்றில் அல்லது குறிப்பாக வேறு ஒன்றில் விசேஷ தகுதி உள்ளவர்களாக இருக்கலாம். சிலர் புத்தி சொல்லுவதிலும், சிலர் தீர்க்கதரிசனம் உரைப்பவர்களாக அல்லது சிறந்த பேச்சாளராகவும், சிலர் சுவிசேஷகர் களாகவும், சிலர் அவிசுவாசிகளைக் கவரக்கூடியவர்களாகவும், சிலர் மந்தையின் பல்வேறு காரியங்களை, அந்த இடத்தில் அல்லது பொதுவான முறையில் கண்காணிக்கும் போதகர்களாகவும் காணப்படலாம். அப்போஸ்தலர் பவுல் எபேசு சபையின் மூப்பர்களுக்குக் கூறியவைகள் நமக்கு ஊழியத்தைக் குறித்து பொதுவான வாய்ப்பைத் தருவதுடன், ஒவ்வொரு தனிநபரும் ஒரு உக்கிராணக்காரனாக தன்னுடைய தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கிறது. ஒரு வேலையின் எந்தப் பகுதியிலும் சேவை செய்யக் கூடிய மூப்பரின் சேவையை ஏற்றுக் கொள்ளுகின்ற எல்லோராலும் கவனமாகவும், ஜெபத்தோடும் கவனிக்கப்பட வேண்டியதாக அவருடைய வார்த்தைகள் உள்ளன. ''ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே

சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக (வேறு இடத்தில் இந்த வார்த்தை பிஷப்புகள் என்று தவறாகக் கூறப்பட்டுள்ளது) வைத்த மந்தை (சபை) முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.'' (அப் 20:28) ஆம், உண்மைதான், மூப்பர்கள் முதலாவது தங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும், அவர்களுடைய நிலைக்குரிய சிறிய கனம் அவர்களை பெருமையுள்ளவர்களாக, மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்து கிறவர்களாக ஆக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும், இதனோடு கூட தலையான, பிரதான மேய்ப்பனுக்குரிய அதிகாரத்தையும், கனத்தையும் தங்களுக்கென்று எடுத்துக்கொள்ளாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும். எழுதியிருக்கிறபடி மந்தையை மேய்ப்பது அவருடைய காரியமாகும். ''மேய்ப்பனைப் போலத் தமது மந்தையை மேய்ப்பார்.'' (ஏசா. 40:11) ஆகவே, ஒருவர் மேய்ப்பனாகத் தெரிந்து கொள்ளப்படும் போது, அவர்தானே பிரதான மேய்ப்பனுக்கு அடையாளமாயிருக்கக் கூடும். மந்தையின் மகா பிரதான மேய்ப்பன் தன்னுடைய சொந்த ''போஜனத்தை ஏற்ற காலத்தில் அனுப்பவும்,'' ''புதிதும் பழமையானவைகளையும்'' அனுப்பும்படியான வாய்க்காலாக அல்லது கருவியாக அவர் இருக்கும்படியாக அவர் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளார்.

''என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறது என்ன வென்றால், நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து, அவைகளைத் துரத்திவிட்டீர்கள்; இதோ நான் உங்கள் பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக் கேற்ற தண்டனையை உங்கள் மேல் வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' ''அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவைகள் மேல் ஏற்படுத்துவேன், இனி அவைகள் பயப்படுவது மில்லை, கலங்குவது மில்லை...'' எரே. 23:1,2,4.

மூப்பராகிய சங்கத்தார் கரங்களை மேல் வைப்பது

(1) ''மூப்பராகிய சங்கத்தார் உன் மேல் கைகளை வைத்த போது தீர்க்க தரிசனத்தினால் (வருமுன் கூறுவது) உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் (கொடுக்கப்பட்டது) பற்றி அசதியாயிராதே.'' 1 தீமோ. 4:14

(2)''அவர்களை (சபையினால் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு உதவிக்காரர்கள்) அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்.'' அப். 6:6

(3) ''அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே..... பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரிந்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்.'' அப். 13:1–3.

(4) ''ஒருவர் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே: மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே...'' 1 தீமோ. 5:22

(5) ''அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் (பிரசங்கித்தார்கள்) சொன்னார்கள்.'' அப்.19:6

(6) ''அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.'' அப். 8:17–19

(7) ''நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.'' 2 தீமோ. 1:6

புது சிருஷ்டியின் சபையின் மேல் கரங்களை வைப்பதைப் பற்றிய ஆவியின் உந்துதலினால் கொடுக்கப்பட்ட மொத்த சாட்சிகளைக் காட்டுகிறோம். கடைசி மூன்று (5,6,7) குறிப்புகளின்படி, ஆரம்ப கால சபையில் வரங்களை அளிப்பது சாதாரணமான காரியமாயிருந்தது என்று காண்கிறோம். அப்போஸ்தலரின் கரங்கள் இப்படியாக அர்ப்பணம் செய்து கொண்ட எல்லா விசுவாசிகளின் மேல் வைக்கப்பட்டது. சிலருக்கு ஒன்று அல்லது அதற்கு மேலான வரங்கள், ''அந்நிய பாஷை,'' முதலான வரங்கள் கிடைத்தன. ''ஒவ்வொருவனுக்கும் அவனுடைய பிரயோஜனத்திற்கென ஓர் அளவு ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறது.'' (தொகுதி 5, அதிகாரம் 8 ஐப் பார்க்க) முதல் நான்கு வசனங்கள் (1, 2, 3, 4) பொதுப்படையான உபதேசம் என்று சேர்த்து கூற முடியும். அவையாவன: ஆதரிக்கும் படியானது அல்லது ஆமோதிக்கும்படியானது; ஆனால் உத்தரவு அல்லது அதிகாரம் கொடுப்பதற்கான ஒரு அடையாளமாக அல்ல.

(1) ஊழியத்தில், பவுலினால் தத்தெடுக்கப்பட்ட ''குமாரன்'' தீமோத்தேயு, ஏற்கெனவே ஞானஸ்நானம் பெற்றதோடு அவன் பவுலோடு எருசலேமுக்குச் சென்ற போது ஏற்கெனவே அப்போஸ்தலரின் கரங்களில் பரிசுத்த ஆவியின் வரத்தையும் பெற்றிருந்தான். (பார்க்க 7) அந்த இடத்தில் ''யாக்கோபும் மற்ற எல்லா மூப்பரும்,'' அப்போஸ்தல மூப்பரும், பவுலோடு தீமோத்தேயுவுக்கு இருந்த பக்தியையும், நெருக்கத்தையும் கண்டுணர்ந்து அதை ஆதரிக்கும் வண்ணம் தங்கள்

கரங்களை அவன்மேல் வைத்து ஒருமுகமாக ஆசீர்வதித்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்படியாக அவர்கள் செய்தது ஒரு வழக்கத்தின்படியாக அல்ல, மேலும் பவுலின் கூட்டாளிகள் எல்லோருக்கும் இப்படியாகச் செய்யவில்லை, ஆனால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதன் மூலம் ஆண்டவரிடம் இருந்து வந்த கட்டளையின்படி அல்லது ஒரு முன் அறிவிப்பின்படி அப்படி செய்யும்படி வழி நடத்தப்பட்டார்கள் என்பது இந்தக் குறிப்பு மூலம் தெரிய வருகிறது.

(2) இந்த உதவிக்காரர்கள், அப்போஸ்தலர்கள் தங்கள் கரங்களை அவர்கள் மேல் வைத்ததினிமித்தம் பிரசங்கிக்கும்படி அமர்த்தப்படவோ அல்லது அதிகாரம் கொடுக்கப்பட்டவோ இல்லை, ஏனெனில் அவர்கள் பிரசங்கிக்கும்படி தெரிந்து கொள்ளப்படவில்லை, ஆனால் பந்தி விசாரிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டார்கள். இருந்தபோதிலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருந்த படியால், அவர்களுடைய தாலந்தின்படியும், கிடைக்கின்ற தருணங்களில் பிரசங்கிக்கும்படி முழு அதிகாரம் பெற்றிருந்தனர். உதவிக்காரர்களில் ஒருவராயிருந்த ஸ்தேவான் யாரிடமிருந்தும் உத்திரவு அல்லது அனுமதி, அல்லது வேறு ''ஏற்படுத்தப்படுதல்'' இல்லாமல் வைராக்கியமாக பிரசங்கிப்பதையும், அதனிமித்தம் ஆண்டவருக்குப் பின்னர் தன்னுடைய இரத்தத்தால் தன்னுடைய சாட்சியை முத்திரையிட்ட முதலாவது நபராக இருந்தார் என்பதையும் நாம் காண்கிறோம். இப்படியாக கரங்களை வைப்பது என்பது அப்போஸ்தல அனுமதியையும், ஆசீர்வாதத்தையும் மாத்திரம் காட்டுகிறது.

(3) பவுல் மேலேயும் பர்னபா மேலேயும் கரங்களை வைத்தது பிரசங்கிப்பதற்கு அனுமதி பெற்றதாக ஆகாது, ஏனெனில் அவர்கள் ஏற்கனவே மூப்பர்கள் என்று அறியப்பட்டிருந்தார்கள், மேலும் அந்தியோகியா சபையில் ஒரு வருடத்திற்கு மேலாக ஏற்கனவே பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். *(அப் 9:20–29; 11:26 ஒத்துப்பார்க்க)* அவர்கள் மேல் கரங்கள் வைக்கப்பட்டது என்பது பவுலாலும் பர்னபாவாலும் செய்யப்படவிருந்த ஊழியத்தை ஆமோதிப்பதாக மாத்திரம் அர்த்தமுடையதாயிருந்தது. அவ்வேளையில் அந்தியோகியா சபையும் அவர்களுடைய ஊழியத்தில் இணைந்தது, ஒரு வேளை அவர்களுடைய செலவை சந்தித்திருக்கும்.

(4) இங்கே அப்போஸ்தலர், திராட்சத் தோட்டத்தில் வேலை செய்யும் உடன் வேலையாள் மீது தீமோத்தேயுவின் கரங்கள் வைக்கப்படுவது, தீமோத்தேயு அதை ஆமோதிப்பதாக ஏற்றுக் கொள்வதாக அர்த்தப்படும் என்று கூறுகிறார், ஆகவே அந்த மனிதன் எவ்விதத்திலாவது தகுதியற்றவனாகக் காணப்பட்டால் தீமோத்தேயு அந்த தவறில் பங்கு பெற்றாக வேண்டும். ஆகவே தன்னால் முடிந்தவரை, ஆண்டவருடைய ஆடுகளுக்கு, நடைமுறைப் பிரகாரமாக அல்லது உபதேசத்தின் மூலமாக தீங்கு விளைவிக்கக் கூடிய ஒரு நபரை அறிமுகப்படுத்தும்படி தன் செல்வாக்கு உபயோகிக்கப்படாதபடி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆபத்தை விளைவிக்கும் விதமாக துணிச்சலாக செயல்பட வேண்டியதில்லை. ஒரு சிபாரிசுக் கடிதத்தைத் கொடுப்பதிலும், அல்லது பகிரங்கமாக நல் வாழ்த்துக்களைக் கூறுவதிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த ஆலோசனை இன்றைக்கும் ஆண்டவருடைய ஜனங்கள் அனைவருக்கும், அவர்களுக்கு இருக்கும் செல்வாக்குக்கு ஏற்றவாறு பொருத்தமாயிருக்கிறது. தீமோத்தேயுவின் ஆமோதிப்பைப் பெற்றுதான் பிரசங்கம் பண்ணும் உரிமை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுகிற ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தகுதிக்கு ஏற்ப ஆண்டவரால் கொடுக்கப்படுகிறது.

சம்பளம் பெறும் ஊழியமா?

பணம் பெற்று ஊழியம் செய்வதென்கிற பழக்கம் இப்பொழுது பொதுவாகக் காணப்படுகின்றது. அது அனேகரால் தவிர்க்க முடியாத ஒன்று என்றும், விட்டு விட முடியாத ஒன்று என்றும் எண்ணப்படுகிறது. ஆரம்ப கால சபையில் வழக்கத்தில் இருந்ததில்லை. வேதத்தில் நாங்கள் பார்த்தவரை ஆண்டவரும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட பன்னிருவரும் ஒரு வேளை யாக்கோபு, யோவான், மத்தேயுவைத் தவிர தரித்திரராகவே இருந்தார்கள்; லேவியருக்கு தாங்களாகவே கொடுக்கும் பழக்க முடையவர்களாயிருந்த யூதர்கள், இந்த வழக்கத்தை தேவனுடைய காரியம் என்று அவர்களுக்குத் தென்பட்ட எல்லா மதக்காரியங்களுக்கும் இதே மாதிரியாகக் கொடுத்தார்கள். சீஷர்கள் யூதாஸ் (யோவா.12:6; 13:29) என்னும் பெயருடைய பொக்கிஷதாரரை வைத்திருந்தார்கள். மேலும் அவர்கள் எதிலும் குறைவுபட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் அதே

வேளையில் ஒரு போதும் காணிக்கை கேட்டதில்லை என்றும் தெரிகிறது. நம்முடைய ஆண்டவருடைய வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டிருப்பதில் ஒரு அணு அளவு கூட இதைப்பற்றி சொல்லப்படவில்லை. பிதா அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பார் என்று அவர்கள் எதிர்பார்த்தனர், சில கனத்துக்குரிய ஸ்திரீகள் தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்தார்கள். (மத். 27:55,56; லூக். 8:2,3)

நம்முடைய ஆண்டவரின் பிரசங்கங்களுக்கும், உவமைகளுக்கும் இடையே பணத்திற்காக வேண்டுகோள் ஆங்காங்கே கொடுக்கப் பட்டிருந்தால், பிரசங்கங்களும் உவமைகளும் பயனற்றதாய் போயிருக்கும். ஆண்டவரிடத்திலும், மற்றும் அவரது விசேஷமாகத் தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்களிடத்திலும், வெளிப்படையாகக் காணப்படுகிற சுயநலமற்ற தன்மையைப்போல் வேறொன்றும் நம்மைக் கவருவதில்லை. இதற்கு யூதாஸ் விதிவிலக்காக இருந்தான், அவனுடைய பேராசை அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. (யோவா. 12:5,6) பாபிலோனில் காணப்பட்ட பண ஆசையும், ஆடம்பரமும், பிச்சை கேட்கும் முறையும், இன்றைக்கு அதனுடைய பலமுள்ள செல்வாக்குக்கு எதிராகக் காணப்படுகிறது. முதல் வருகையில் இருந்தது போலவே, ஆண்டவருடைய விசுவாசிகள் மத்தியில் இப்படிப்பட்ட ஆவி இல்லாமல் இருப்பது, அவர்களுடைய போதகங்களை நன்கு பாராட்டாமல், அவைகளை ஜீவனுள்ள நிருபங்களாகப் படித்துக் கொண்டிருப்பவர் களைப் பற்றி நல்ல எண்ணத்தை உண்டு பண்ணுகிறது. மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் பணத்திற்கென ஒரு வேண்டுகோள் கூட இல்லாமல் அவருடைய அறுவடையின் வேலைக்கென, போதுமானதை தேவன் கொடுத்திருக்கிறார். நாங்களும் இது நிச்சயமாக வேறுவிதமாக இல்லை, ஆண்டவரின் மனதின்படி இருக்கிறது என்று நம்புகிறோம்.

இந்த உலகத்தின் ஆடம்பரங்களின் மேலும் செல்வத்தின்மேலும் ஆசை வைத்திருப்பவர்கள், அவைகளை வியாபாரத்திலோ அல்லது வருமானம் தரக்கூடிய வேலைகளிலோ தேடட்டும்; ஆண்டவர்மேலும், அவருடைய சத்தியத்தின்மேலும், அவர்களுடைய சகோதரர்கள்மேலும் வைக்கக்கூடிய அன்பின் நிமித்தமே தவிர, வேறு எந்த நோக்கமுள்ள எவரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் ஊழியக்காரர்களாகாதிருப்பார் களாக. அப்படிப்பட்ட ஒரு அன்பு முறுமுறுப்போடல்ல, ஆனால் மனப்பூர்வமாக வசதிகளையும், செல்வத்தையும், மனிதர்களால் வரும்

கனத்தையும் பலியாகச் செலுத்துவதிலும் மிகுந்த மகிழ்ச்சியடையும். ஐயோ பரிதாபம்! பெயரளவான கிறிஸ்தவம், மிகவும் அதிகமாகவும் உலகப்பிரகாரமாகவும் வளர்ந்து விட்டது; அவளுடைய ஊழியக்காரர்கள் கனத்துக்குரியவர், மிகவும் கனத்துக்குரியவர், மேலதிக கனத்துக்குரியவர், வேதாகமத்தில் பட்டம் பெற்றவர் (D.D.) என்ற பட்டப் பெயர்களால் கனப்படுத்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட கனத்தோடு, பட்டப் பெயர்களோடு சம்பளங்களும் வருகின்றன; அதுவும் ஊழியக்காரரின் தேவைக் கேற்ப அல்ல, ஆனால் அவரால் வியாபார ரீதியில் செல்வாக்குள்ள ஜனங்களையும் சபைக்கு பெரிய கூட்டங்களையும் ஈர்க்க கூடிய அவருடைய தகுதிக்கேற்ப அது கொடுக்கப்படுகிறது. இப்படிச் செய்வதினால் இயற்கையாகவே அதன் பலன்களும் வந்துள்ளன. ''அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள், அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்கு குறி சொல்லுகிறார்கள். ஆகிலும் அவர்கள் கர்த்தரைச் சார்ந்து கொண்டு கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள் மேல் வராது என்கிறார்கள்.'' ''அவனுடைய காவற்காரர் எல்லாரும் ஒன்றும் அறியாத குருடர்; அவர்களெல்லாரும் குலைக்க மாட்டாத ஊமையான நாய்கள்; தூக்கமயக்கமாய்ப் புலம்புகிறவர்கள், படுத்துக் கொள்ளுகிறவர்கள், நித்திரைப்பிரியர்; (சௌகாரியத்தை விரும்புகிறவர்கள்) திருப்தியடையா மலிருக்கும் பெருவயிற்று நாய்கள்; பகுத்தறிவில்லாத மேய்ப்பர்; அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் வழியையும் (நலன்களையும்), அவனவன் தன் தன் மூலையிலிருந்து (சபைப்பிரிவு) தன் தன் பொழிவையும் நோக்கிக் கொண்டிருக்கிறான்.'' ''அவர்கள் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்.'' ஏசா 56:10,11 ; மீகா 3:11 ; பிலி 3:2 ; 2 தீமோ. 4:3,4

பெருத்த சம்பளம், இல்லாவிட்டால் சம்பளமே கிடையாது என்ற இரண்டு கடைகோடி நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும் என்று சிலர் நினைக்கலாம். அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையான ''வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரமாயிருக்கிறான்'' என்பதையும் பார்க்கும்படி கூறலாம்; மேலும் அப்போஸ்தலரின் வார்த்தையான ''நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா'' என்பதையும் பார்க்கும்படி கூறுகிறார்கள். இருந்தாலும், வேதாகமத்திலிருந்து உறுதிபடக் கூறுகிற இவைகள்

பெருத்த சம்பளங்களைக் குறிப்பிடாமல், அடிப்படைத் தேவைகளைப் பற்றி மட்டும் கூறுகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ''போரடிக்கிற மாட்டை வாய் கட்டாதே'' என்கிற குறிப்பை மேற்கோள்காட்டி அப்போஸ்தலர் இதை விளக்குகிறார். மாடு அதனுடைய வயிற்றுக்காக மட்டும் இலவசமாக சாப்பிடலாம், இதைவிட அதிமாக ஒன்றும் அது வைத்துக்கொள்வ தில்லை. அப்போஸ்தலர் தன்னுடைய சொந்த ஊழியத்தில் வெற்றிக்கான மூலக் கருத்தை இப்படியாகச் சொல்லுகிறார்: ''நான் உங்களை வருத்தப்படுத்துவதில்லை, நான் உங்களுடையதையல்ல, உங்களையே தேடுகிறேன்..... நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூறப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும் விரும்புகிறேன்.'' 2 கொரி. 12:14,15

இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லும் போது அது வருமானத்திற்கு வழி நடத்தாது; அவருடைய பிரதான அப்போஸ்தல னாகிய பவுலின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றாலும், அப்படி நடக்காது. பவுல், ஆவிக்குரிய ஊழியத்திற்காக, பூலோக நன்மைகளைக் கேட்பது ஒருவிதத்திலும் அநியாயமாகாது என்பதைக் காட்டிய பின்னர், இந்த விஷயத்தில் தான் எடுத்துக் கொண்ட வழியைப் பின் வருமாறு கூறுகிறார்:

''ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும், என்னுடனே கூட, இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்.'' (அப் 20:30–35)

''கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தை (ஆவிக்குரிய நன்மைகளுக்குப் பதிலாக இம்மைக்குரிய நன்மைகளை நீங்கள் பெறும்படியாக) செலுத்தாமல் எல்லாப் பாடும் படுகிறோம்.'' (1 கொரி. 9:12) ''நான் உங்களோடிருந்து குறைவுபட்ட போதும், ஒருவரையும் நான் வருத்தப் படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள்.''(2 கொரி.11: 9)

இந்தக் காரியங்களில் நமக்கு இருக்கிற சுயாதீனங்கள் அப்போஸ்தலர்களுக்கும் இருந்தது. இந்த விஷயத்தில் நமக்கு இருக்கிற

நேர்மை, மற்ற எல்லா விஷயங்களில் இருப்பதைப் போன்றே அவர்களுடைய பாதபடிகளைப் பின்பற்றுமாறு நம்மை வழி நடத்த வேண்டும். ஆண்டவர், அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் கூட பிரயாணப்பட்டு அவர்களுடைய முழு நேரத்தையும் சத்தியத்தை அறிவிக்கின்ற ஊழியத்தில் செலவிட்டவர்கள் எல்லாரும், அவர்கள் தங்களுடைய செலவுகளைச் சந்திக்கும்படியாக, சகோதரர்கள் விருப்பத்துடன் கொடுத்த காணிக்கைகளை ஏற்றுக் கொண்டார்கள். ஏற்கனவே கூறப்பட்டபடி, பவுலும் பர்னபாவும் தங்களுடைய முதலாவது ஊழியப் பயணத்தைத் தொடங்க இருந்தபோது அந்தியோகியா சபையினர், அவர்கள் மேல் கரங்களை வைத்த போது, சபையினர் அவர்களுடைய செலவுகளுக்குப் பொறுப்பானவர்கள் என்று காட்டியதுபோல் தோன்றுகிறது, அதன்படியே அவர்களுடைய வேலையில் அவர்கள் பங்கு பெற்றார்கள்.

ஆனபோதிலும், வீடுகளில் கூடும் சபையில் ஊழியம் செய்த மூப்பர்கள் நேரடியாகவோ, வேறுவிதமாகவோ ஒரு சம்பளமோ அல்லது செலவுக்கான பணமோ பெற்றார்கள் என்பதற்கான ஒரு அறிவிப்பும் இல்லை. அங்குள்ள சபைக்கு, அவர்களுடைய சொந்த அங்கங்களையே– ஒரு சிலரோ, அனேகரோ, பெரியவர்களோ, சாதாரணமான வர்களோ– அவர்களுடைய சுய விருப்பத்தின் படி உபயோகப்படுத்துவது பொதுவாகக் காணப்பட்டதாகும் என்று நாம் நம்புகிறோம். இந்த வேதாகம முறைப்படியான செயல் ஆவிக்குரியவிதத்தில் ஆரோக்கியமாக இருக்கிறது. இந்த முறையானது பல்வேறு அங்கங்கள் தங்களுடைய ஆவிக்குரிய வரங்களை உபயோகப்படுத்தும்படி அவர்கள் வெளியே கொண்டு வர உதவுவதுடன், அதிகதிகமாக ஆண்டவரையே உண்மையான மேய்ப்பனாக நோக்கிப் பார்க்கும் படி வழி நடத்துகின்றது, ஆனால் கூலிக்கு உள்ளவர்கள் செய்யும் முறையின் படியல்ல. தகுதியுள்ள போதகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அந்தியோகியா சபையின் முன் மாதிரி பின்பற்றப்படட்டும்; சிலர் ஊழியக்காரர்களாக, பிரதிகளை விற்கிறவர்களாக, பிரயாண ஊழியர்களாக வேறு இடங்களுக்கு அனுப்பப்படட்டும்.

இருந்த போதிலும் எந்த சபையும், அது பயனுள்ளதாகக் காணப்படும் ஊழியம் மிக விசாலமானது என்று எண்ணுமானால், ஒரு சகோதரர் தன்னுடைய முழு நேரத்தையும் நல்ல முறையில் அதற்கும்

ஸ்தாபனத்திற்கும் ஊழியம் செய்யும்படியாகக் கொடுக்க முடியும், அதற்கென மன விருப்பத்துடன் அவருடைய செலவுக்கென போதுமான அளவு கொடுப்பார்களெனில், அதைத் தடை செய்யும் எந்த வேத வாக்கியத்தையும் நாம் அறியோம். ஆனால் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் மூப்பரும், தாங்குகின்ற சபையும், கொடுக்கப்பட்ட பணமானது, ஊழியக்காரர், மற்றும் அவரைச் சார்ந்திருக்கிறவர்களின் நியாயமான வாழ்க்கைச் செலவுக்கு அதிகம் ஆகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் மூப்பரும், சபையும், சபையிலுள்ள அங்கங்கள் அனைவரும், விசேஷமாக மூப்பர் நியமனத்திற்குத் தகுதி பெற்றவர்கள் உபயோகப்படும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லை யென்றால் பாபிலோனின் ஆவி, பேர் சபையின் ஆவி நிச்சயம் வளரும்.

சபையின் ஒழுங்கு முறை

–மத். 18:15–18–

சபையின் ஒழுங்கைக் காக்க வேண்டியது மூப்பர்களை மாத்திரமல்ல முழுச் சபையையும் சார்ந்ததாகும். ஒருவர் குற்றம் அல்லது பாவம் செய்தவர் என்று காணப்பட்டால், அவர் அந்தக் குற்றத்தை யாருக்குச் செய்தாரோ, அவர் மாத்திரமே அந்த குற்றத்தை அவருக்குச் சுட்டிக் காட்ட வேண்டும், அப்படி இல்லை யெனில் அந்த குற்றத்தை முதலாவது காண்கிறவர் அப்படிச் செய்ய வேண்டும். அதற்கு அவன் செவி கொடாமற் போனால், தொடர்ந்து அந்த குற்றத்தில் அல்லது பாவத்தில் நிலைத்து இருப்பானென்றால், அப்பொழுது திறந்த மனதுடைய இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் அதை விசாரிக்கவும், தர்க்கம் பண்ணுகிறவர்களுக்குப் புத்தி சொல்லவும் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். (எவரும் மூப்பர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, அவர்களுடைய வயதின் முதிர்ச்சியினால் வரும் நியாயம் எவ்விதமான வழியிலும் தேறினதாயும், அவர்கள் கூறுவது பலமுள்ளதாயும் இருந்தாலொழிய, அவர்களுடைய வயதின் மூப்பு இந்த விஷயத்தில் எவ்வித பலத்தையோ அதிகாரத்தையோ கூட்டாது). ஆலோசனைக் குழு இரண்டு சாரார்களுக்கிடையில், ஒரு சாரார் பக்கமாக மனப்பூர்வமாகத் தீர்மானிக்கு மென்றால், அந்த விஷயம் சீர்திருத்துதல், அல்லது இழந்ததைத் திருப்பிக்கொடுத்தல் மூலமாக முடிந்த வரை உடனடியாக செய்யப்படுமானால், மற்றவர் அதை ஏற்றுக் கொண்டு முடிவுக்குக்

கொண்டு வர வேண்டும். இரு சாராரில் ஒருவர் முந்தைய குற்றத்தில் இன்னும் நிலைத்திருந்தால், ஆரம்பத்தில் குற்றத்தைக் காட்டியவர், அல்லது ஆலோசனைக் குழுவை வர வேண்டும் என்று சொன்னவர்களில் ஒருவர், அல்லது எல்லோருமே கூட்டாக அப்பொழுது (சீக்கிரமாக அல்ல) அந்த விஷயத்தை சபைக்கு முன்னர் கொண்டு வருவது நல்லதாக இருக்கும். இதிலிருந்து, மூப்பர்கள் சபையினரின் மேல் நியாயதிபதிகளாக இருக்கவே கூடாது என்பது விளங்குகின்றது. விசாரிப்பதும், நியாயம் தீர்ப்பதும் அங்குள்ளவர்களை அல்லது சபையைச் சார்ந்ததாகும்.

இந்த இரண்டு ஆரம்பகட்ட (மேல் சொல்லப்பட்ட) நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர், மூப்பர்களுக்கு விவரங்கள் விளக்கப்பட்ட பின்னர், ஒரு முடிவை எடுக்கும்படியாக அதன் தலையாக இருக்கிறவரின் நாமத்தினாலும், அவருக்குரிய கனத்தோடும், அந்த விவரங்களை அவர்கள் விசாரிக்கும் படியாக, ஒரு வழக்கு மன்றமாக, சபையை அல்லது சபையின் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவது அவர்களுடைய கடமையாகும். மேலும் விசாரிக்க வேண்டிய விஷயமானது மிகத் தெளிவாக இருக்க வேண்டும், குற்றம் சாட்டப்பட்டவர் நன்கு நடத்தப்படல் வேண்டும், மேலும் எடுக்கப்படும் தீர்மானம் கிட்டத்தட்ட எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படதக்கதாய் இருக்க வேண்டும். இதன்படியாக சபையின் ஒற்றுமையும், சமாதானமும் காக்கப்படும். சபை குற்றம் எனச் சொல்லுவதற்கு முந்திய வினாடி வரை மனஸ்தாபப்படுவது சாத்தியமானது. குற்றம் இழைப்பவருக்குத் தண்டனை என்பது நோக்க மல்ல, ஆனால் இந்த முயற்சிகளின் முக்கியமான நோக்கம் என்னவெனில் குற்றம் செய்தவரை மனஸ்தாபப்பட வைப்பதும், சீர்திருத்துவதும் தான் முக்கியமானதாகும். தண்டனை அளிப்பது நம்முடையதல்ல அது ஆண்டவருடையது. ''பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' (ரோம. 12:19) இந்த முயற்சிகளின் போது, குற்றம் இழைத்தவர் எந்த நிலையிலாவது மனஸ்தாபப்படுவார் என்றால், ஆண்டவருடைய ஆவியுடையவர்கள் எல்லோருக்கும் களிகூறுதலுக்கும், நன்றி சொல்லுதலுக்கும் ஒரு காரணமாக இருக்கும், அப்படி யில்லாதவர்கள் அவருடைய சரீரமான சபையின் அங்கங்களல்ல. (ரோ 8:9)

உண்மையிலேயே குற்றம் செய்தவர் முழு சபையின் தீர்மானத்திற்குச் செவி கொடுக்க (கீழ்படிய) மறுத்தாலும், தண்டனை கொடுக்கப்படவோ

அல்லது கொடுக்க முயற்சிக்கப் படவோ கூடாது. அப்படியென்றால் அதன் பின்னர் என்ன? சபை அவரை அதன் ஐக்கியத்திலிருந்தும், சகோதரத்துவத்தை வெளிப்படுத்தும் எல்லா காரியங்களிலிருந்தும் அகற்ற வேண்டும். அதன் பின்னர் குற்றம் இழைத்தவர் ''ஒரு அஞ்ஞானியைப் போலவும், ஆயக்காரனைப் போலவும்'' நடத்தப்பட வேண்டும். (மத். 18:17)

இப்படியான முயற்சிகளில் குற்றம் செய்பவரின் தவறுகள் அல்லது குறைவுகள், அவரையும், சபையையும், சபைக்கு தலையாயிருக்கிற ஆண்டவரையும் அவதூறு பண்ணும்படி, பொதுப்படையாக்கக் கூடாது. இல்லையென்றாலும் அவர் தனித்துவிடப்பட்ட பின்னர், அவரைப்பற்றிக் கடினமான வார்த்தைகளைக் கூறக் கூடாது, இல்லாவிடினும், அஞ்ஞானியையும், ஆயக்காரனையும் பற்றிக் கடினமான வார்த்தைகளைக் கூறுவது போன்றும், தூஷிப்பது போன்றும் செய்யக் கூடாது. ''ஒருவனையும் தூஷியாமலும்,'' ''எல்லாருக்கும் நன்மை செய்யக் கடவோம்.'' (தீத்து 3:2 ; கலா. 6:10) ''எல்லா மனிதருக்கும்'' வேண்டியதைச் செய்யும் படியாக முற்றுமாக கீழ்ப்படிவதற்குத் தேவைப்படுவது அன்பு என்ற குணமாகும். அப்படியாயின் அந்த அன்பானது ஒரு ''சகோதரர்,'' கிறிஸ்துவின் சரீரமான சபையின் உடன் அங்கமாயிருக்கிறவர், பொய்யான அல்லது தன்னிச்சையான அறிவிப்பு களினால் தீமையை அனுபவிக்கக் கூடாது என்பது மாத்திரமன்றி, அதற்கும் மேலாக அவருடைய பெலவீனங்களும் அல்லது பாவங்களும் கவனமாக மூடப்படல் வேண்டும், எவைகளிலிருந்து என்றால், இரக்கமில்லாத உலகத்தாரிடமிருந்து மாத்திரமல்ல, விசுவாச மார்க்கத்தாரிடமிருந்தும் கூட, சபையினிடமிருந்தும் கூட, கடைசியாக சபைக்கு சொல்லப்பட வேண்டும் என்ற தவிர்க்க முடியாத நிலை வரும் வரை, ஜாக்கிரதையாக மூடப்பட வேண்டும். ஒவ்வொரு நிலைமையிலும், குற்றம் செய்தவர் சில தவறான எண்ணத்துடன் மனதில் சமாதானமற்று காணப்படும் போது, அன்பின் ஆவியானது ஒரு பாவியை தன்னுடைய தப்பிப் போன மார்க்கத்தினின்று திருப்பும்படி, இதன்படியாக (சாத்தியமானால்) ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரட்சிக்கும் படியாக ஞானமும், கிருபையும் கொடுக்கப்படும் படியாக ஜெபிக்கும் என்று எதிர்பார்க்கலாம். (யாக் 5:20)

ஓ! பரிசுத்த ஆவி, அன்பின் ஆவி சபையின் ஒவ்வொரு அங்கத்திலும் அவ்வளவு அதிகமாக தங்கியிருக்கட்டும், அவ்விதமான

நிலைமை காணப்படும் போது எவரைக் குறித்தாயினும், விசேஷமாக உடன் அங்கத்தைக் குறித்து ஒரு அவதூறான கதையைக் கேட்கும் போது வேதனையை உண்டு பண்ணும்! இது உடனடியாக பிரச்சனையின் பாதியை, அல்லது அதிகமாக நிவர்த்தி செய்யும். இல்லை யென்றாலும் ஆண்டவரால் விளக்கப்பட்ட மேற்கூறப்பட்ட முறைகளைப் பின்பற்றுவது அடிக்கடி வருகின்ற சபைப் பிரச்சனைகளுக்கு வழி நடத்துவதும் இல்லை. இதற்கு மாறாக அது விரோதங்கள் வருவதற்கான சாத்தியத்தை அகற்றுவதோடு, சபையின் தீர்ப்பானது ஆண்டவருடைய தீர்ப்பாயிருக்கிறது என்பதற்கான ஒரு மரியாதையைக் கற்றுத் தரும்; மேலும் சபையின் குரல் கேட்கப்பட்டு, அதற்கேற்றபடி கீழ்ப்படியப்படும். இதற்கும் மேலாக, ஒழுங்கும் அன்பும் இப்படியாகக் காணப்படும் போது, ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற வரை தன் தன் வேலையை மாத்திரம் கவனிக்க நாடுவர் என்றும், தன்னுடைய சகோதரரை கண்டிக்கவோ, திருத்தவோ முற்படமாட்டார் என்றும் நம்பலாம்; மேலும் விஷயத்தை ஆலோசனைக் குழுவிடமோ அல்லது சபையினிடமோ, அந்த விஷயம் தன்னைப் பற்றியதாகவோ அல்லது சபையைப் பற்றியதாகவோ அல்லது சத்தியத்தைக் குறித்தோ முக்கியமானதாக இல்லாதிருந்தால், கொண்டு வரமாட்டார் என்றும் நம்பலாம்.

கேள்விக்கிடமில்லாமல், சபையில் வரும் பிரச்சனைகளில் பெரும்பாலும் (சமுதாய, குடும்ப பிரச்சனைகளும் கூட) தவறு செய்ய வேண்டும் என்ற ஒரு ஆசையிலிருந்தல்ல, வேண்டுமென்று செய்யப்படாத ஒரு தவறிலிருந்தும் கூட அல்ல, ஆனால் தவறாகப் புரிந்து கொள்ளு வதிலிருந்து வருகிறது. நாவுதான் பொதுவாக பிரச்சனைகளை உண்டு பண்ணுவதாகும். அது தெளிந்த புத்தி என்கிற ஆவியின் ஒரு பகுதியாயிருக்கிறது, ஆகவே உதடுகளுக்குக் காவல் வைக்கவும், இருதயத்திலிருந்து புறப்படுகிற பொல்லாத சிந்தனைகள், உதடுகளின் மூலம் வெளியாக்கப்பட்டு தீவிர உணர்ச்சிகளைக் கொழுந்து விட்டு எரியச் செய்து, அனேக தடவைகளில் மற்றவர்களுக்குத் தீமையை வருவிக்கும் இருதயத்திற்கு காவல் வைக்கும்படியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி புது சிருஷ்டியான சபைக்கு அவர்களுடைய ஆண்டவரும் தலையுமாய் இருக்கிறவரிடத்திலிருந்து கண்டிப்பான கட்டளைகள் இருக்கின்றன. அவர்கள் குற்றம் செய்பவரிடத்தில் தனியாக, சொந்த விருப்பத்தின்படி முன்பு ஆலோசித்த பிரகாரம் இல்லாது அல்லது யாரோடும் இது பற்றி பேசாமல் செல்லும்

போது அவருடைய அன்பின் ஆவி அவர்களை நிரப்ப வேண்டும். அவர்கள் அப்படிச் செல்வது அவரை (அல்லது அவளை) அவருடைய நடத்தையைக் குறித்து வெட்கப்படும்படி செய்வதற்காக அல்ல, அல்லது கடின வார்த்தைகளைப் பேச வேண்டும் அல்லது தண்டிக்க வேண்டும் என்பதற்காக அல்ல, ஆனால் அவர் குற்றம் செய்வதை நிறுத்த கேட்கும்படியாகவும், முடிந்தால் ஏற்கெனவே விளைவிக்கப்பட்ட தீமைக்கு கைமாறு பெறும் படியாகவும் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு அந்த தவறைக் குறித்து, முதலாவதாகவோ அல்லது பின்னரோ அறிவிப்பது என்பது அன்பில்லாத, நேசிக்காத காரியமாகும். மேலும் நம்முடைய தலையாயிருக்கிறவரின் வார்த்தைக்கும் ஆவிக்கும் எதிர்மாறானதாகும். ஆலோசனை கேட்க வேண்டும் என்பதற்காகக் கூட விஷயம் சொல்லப்படக்கூடாது, நமக்கு ஆண்டவரின் ஆலோசனை உண்டு, அதை நாம் பின்பற்ற வேண்டும். பிரச்சினை விசித்திரமான தொன்றாகக் காணப்பட்டால், உண்மையான பிரச்சினையை அல்லது அதைச் செய்தவரையோ காண்பிக்காமல், உத்தேசமான முறையில், மூப்பர்களில் மிகவும் ஞான முள்ளவரிடத்தில் ஆலோசனை பெறப்படல் வேண்டும்.

பிரச்சனை பெரியதாக இல்லாவிட்டால், குற்றம் செய்தவர் செவிகொடுத்தாலும் சரி செவிகொடுக்க அல்லது விட்டுவிட மறுத்தாலும் குற்றம் செய்பவரிடத்தில் தனிப்பட்ட முறையில் கேட்பதோடு விட்டுவிட வேண்டும். இதற்கும் மேற்கொண்டு அடுத்த நடவடிக்கை தேவை என்றால், ஆலோசனைக் குழுவினரிடம் குற்றம் செய்தவர், குற்றம் சாட்டுகிறவர் இருவரும் வருவதற்கு முன்னர் பிரச்சனை குறித்து எந்த விளக்கமும் கொடுக்கப்படக் கூடாது. இவ்விதமாக ''அவதூறான பேச்சு'' தவிர்க்கப்படும்; ஆலோசனைக்குழு சகோதரர்கள் திறந்த மனதுடன் வருவார்கள்; இரு சாராருக்கும் ஞானமாக ஆலோசனை சொல்ல முடிந்தவர்களாக இருப்பார்கள். ஏனெனில் பிரச்சினை இருசாரார் மேலும் காணப்படலாம், அல்லது முற்றிலுமாக குற்றம் சாட்டுகிறவர் மேலாக இருக்கலாம். எல்லா சமயத்திலும், நல்ல நியாயமான ஆலோசனையைப் பார்த்து குற்றம் சாட்டப்பட்டவர் திருப்தியடைவதுடன், ஆலோசனை குழுவினருக்கும் அவருடைய முறை தவறானதாகத் தோன்றுமேயானால், ஆலோசனைக் குழுவினருக்கு உடன்பட சாத்தியமாகும். ஆனால் குழுவினால் குற்றம் செய்தவர் என்று ஒருவர் கணிக்கப்படும் போது, அவர் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளா விட்டாலும், முழு விஷயமும்

திட்டவட்டமாக இரகசியமாக இருக்க வேண்டும்; மேலும் போதுமான அளவிற்கு அது முக்கியமானது என்று காணப்பட்டால் சபைக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டு கடைசியில் தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும்; ஆனால் அதுவரை அந்த விஷயம் பற்றி எவரிடமும் சொல்லக் கூடாது. அதன் பின்னர் முதன் முறையாக அது பரிசுத்தவான்களுக்கு மாத்திரம் உரிய பொதுவான விஷயமாகும்; மேலும் அவர்கள் எவருடைய பெலகீனங்களையும் அல்லது பாவங்களையும் குறித்து தேவைக்கு அதிகமானதை சொல்லக் கூடாதென்று விரும்புவார்கள். (அதிகாரம் 9, உனது சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றமிழைத்தால்)

ஆலோசனைக் குழுவினரின் தீர்ப்புகளை செயல் முறைப்படுத்தும் போது, விஷயமானது ஒவ்வொரு தனி நபரிடத்திலும் தங்கியுள்ளது; ஆகவே ஒவ்வொருவரும் தனக்குள்ளாகவே கொடுக்கப்பட்ட தீர்மானத்திலுள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். சபை ஐக்கியத்திலிருந்து தள்ளி வைப்பது என்கிற தண்டனை நீதியின் பாதையில் திருத்துவதாக அமைக்கப்பட்டுள்ளது, அதையேதான் ஆண்டவரும் கூறுகிறார். அது சபைக்குப் பாதுகாவலாக இருக்கிறது, அன்பின் ஆவியின் பிரகாரம் நடவாமல் ஒழுங்கற்று நடப்பவர்களைப் பிரித்து வைக்க உதவுகிறது. அது நிரந்தரமாகப் பிரித்து வைப்பது என்பதல்ல, ஆனால் கண்டிக்கப்பட்டவர் தன்னுடைய தவறை உணர்ந்து அதை ஆமோதித்து அவரால் முடிந்தவரை பரிகாரம் செய்வதற்காக மாத்திரமே இருக்கும்.

மூப்பனாருக்கு விரோதமாக வரும் பிராதுகள்

"மூப்பனாருக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது." (1தீமோ. 5:19)

இந்த கூற்றில் அப்போஸ்தலர் இரண்டு கருத்துகளை ஏற்றுக் கொள்கிறார். (1) ஒரு மூப்பர் ஏற்கனவே சபை அங்கங்களால் நல்ல உயர்ந்த குணாதிசயம் கொண்டவர் என்றும், விசேஷமாக சத்தியத்தின் மேல் வாஞ்சையுள்ளவர் என்றும், ஆண்டவர்மேல் பயபக்தியுள்ளவர் என்றும் அறியப்பட்டிருக்கிறார். இப்படியானவர்கள், சபையில் அவர்கள் முக்கியமான இடத்தில் இருக்கிறார்கள் என்கிற காரணத்தினால், சத்துரு அவர்களை தாக்குதலுக்கு விசேஷமானவர்களாக எண்ணுவான். நம்முடைய ஆண்டவர் ஏற்கனவே கூறியபடி, சிலருக்கு பொறாமைப் படும்படியாக, விரோதம், எரிச்சல், சண்டை போடும்படியான பொருளாக

இருப்பார்கள்; ''உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப் படாதிருங்கள்.'' ''அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்த தென்று அறியுங்கள்.'' ''வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரையே அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?'' என்று ஆண்டவர் முன்னமே எச்சரிக்கை செய்தார். ஒரு சகோதரர் அதிக உண்மையுள்ளவராக, திறமையுள்ளவராக இருக்கும் போது, கிட்டத்தட்ட அவருடைய ஆண்டவரின் பிரதிபலிப்பாகக் காணப்படுவார் என்றால், மூப்பராக அவர் தெரிந்தெடுக்கப்பட்டது சரியானதாகும். மேலும் மிகவும் உண்மையுள்ள மூப்பராக அவர் இருக்கும் போது, நிச்சயமாகவே அவருக்கு சத்துருக்கள் இருப்பார்கள் என்று அறிந்து கொள்ளலாம். சத்துருவாக சாத்தானும் அவனுடைய தூதர்கள் மாத்திரமின்றி, சாத்தானால் வஞ்சிக்கப்பட்டுத் தவறாக நடத்தப்படுபவர்களும் இருப்பார்கள்.

இந்த காரணங்கள், எந்த ஒரு நபரும் சொல்லும் வார்த்தையை வைத்து மூப்பரை குற்றப்படுத்தாதபடி உறுதி செய்கின்றன; அப்படியில்லாவிடினும் அவருடைய வாழ்க்கை குற்றமற்றதாக இருக்கலாம். காதில் விழுந்த காரியம் அல்லது வதந்திகளைப் பொறுத்த வரையில், அவைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவே கூடாது; ஏனெனில் உண்மையாகவே நுகத்தை சுமக்கிற எவனும், ஆண்டவருடைய ஆட்சியை கவனத்தில் கொண்டுள்ளவனாய் இருக்கும் போது, வதந்திகளைப் பரப்ப மாட்டான், இல்லையெனில், ஆண்டவருடைய நடத்துதல்களை இப்படியாக உதாசினம் பண்ணுகிறவர்களின் வார்த்தையில் நம்பிக்கை வைக்கமாட்டான். முதலாவதாக, அவைகளுக்குச் செவி கொடுப்பதற்குக் குற்றம் சாட்டுபவர்கள் சாட்சிகளாக இருந்ததாக கூற வேண்டும். மேலும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் புகார் கூறினாலும் ஏற்கெனவே வரையறுக்கப் பட்டதைக் காட்டிலும் மேலதிகமாக விஷயத்தை விசாரிப்பதற்கு வேறு வழி இல்லை. மூப்பருக்கு எதிராகப் புகார் கூறும் எந்த ஒரு நபரும், தனிப்பட்ட ஆலோசனையும் பயன் அளிக்காத பட்சத்தில், அவரோடு இரண்டு அல்லது மூன்று சாட்சிகளை வைத்துக் கொள்வார்; அவர்கள் இவ்விதமாக பிடிவாதமான எதிர்ப்புக்கு சாட்சிகளாவார்கள். அதன் பின்னர், இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும் போது, தீமோத்தேயுவினால் அல்லது வேறு எவர் மூலமாகவாவது சபையினிடத்திற்கு கொண்டு வரப்படலாம்.

குற்றம் சாட்டுவதற்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருக்க வேண்டும் என்பது, எல்லா அங்கங்களையும் மதிப்பதற்கு தேவை யானதாகும். உண்மையிலேயே அப்போஸ்தலர், எந்த சகோதரருக்கும் மூப்பர் எல்லா உரிமையும், சிலாக்கியத்தையும் கொடுக்க வேண்டும் என்று நினைத்தாரோ என்று யோசிப்பதற்கு இடம் இருக்கிறது. ஒரு மூப்பர் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் நன் மதிப்பைப் பெற்றவராக இருப்பதினிமித்தம், ஒரு சிறிய குற்றச் சாட்டுக்கும், அவருடைய உயர்ந்த ஸ்தானத்தினிமித்தம் விசாரிக்கப்படல் வேண்டுமா என்று ஒருவேளை சிலர் நினைக்கலாம். ஆனால், அப்போஸ்தலருடைய வார்த்தையின்படி ஒரு மூப்பருக்குக் கிடைக்க வேண்டிய தருணம் மற்றவர்களுக்குக் கிடைப்பதைப் போலவே சரிசமமாக இருக்க வேண்டும்.

இந்த சாட்சிகள் என்ற விஷயம் ஒவ்வொரு புது சிருஷ்டியின் மனதிலும் ஆழமாக பதிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் தங்களுக்குத் தெரியும் என்று சொல்லுவதும், அவதூறாக அவர்கள் சொல்லுவதும் கேட்கப்படக் கூடாது; மேலும், ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது. ஆண்டவர் கூறியுள்ளபடியே இரண்டு அல்லது மூன்று பேர், யாராவது ஒருவருக்கு எதிராக புகார்களைக் கொண்டு வருவார்களானால், புறம் பேசாமல், அவதூறு பேசாமல், ஆனால் கட்டளையிட்டபடி சபைக்கு முன்பாகக் கொண்டு வரும் போது, அந்த வேளையில் அவைகளை நம்பக்கூட வேண்டியதில்லை; ஆனால், அந்த வேளைதான் சபை செவி கொடுப்பதற்கேற்றதாகும்; இரு சாராரும் வந்திருக்கும் போது அவர்கள் முன்னிலையில் கேட்க வேண்டும்; அதன் பின்னர் தேவபயத்துடன் கூடிய தீர்மானத்தையும், எச்சரிப்பையும் கொடுக்க வேண்டும், அதுவும் குற்றம் செய்தவரை வெளியில் உள்ள இருளுக்குள் தள்ளாமல், அவரை மறுபடியும் நீதிக்குள்ளாக வரும்படியாக, வார்த்தைகள் கவனமானவை களாக அவருக்கு உதவி செய்கிறவைகளாக இருக்க வேண்டும்.

பிரசங்கிக்கும்படியாக அழைப்பு வந்தது என்று தவறாகப் புரிந்து கொள்வது

அநேகர், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி ஆண்டவரிடத் திலிருந்து ஒரு அழைப்பு அவர்களுக்கு வந்தது என்று சொல்லுகிறார்கள்; ஒரு வேளை, உடனேயே ஏன் என்று தெரியவில்லை என்றும் சொல்லக்கூடும்; இல்லையென்றால் ஊழியத்திற்கு என்று அவர்களுக்கு

விசேஷமான தகுதிகள் கிடையாது என்பதை அவர்கள் அறிந்துள்ளார்கள் என்றும், இல்லையென்றால் அழைப்பை ஏற்றுக் கொள்ளாதபடி சூழ்நிலைகள் எப்போதும் தடுப்பது போல் உள்ளது என்றும் சொல்லுவார்கள். எந்த விதமான அழைப்பு என்று அவர்களைக் கேட்கும் போது, அது ஒரு கற்பனை அல்லது யூகம் என்று தெரிய வருகிறது. ஒருவர் தன்னுடைய அனுபவத்தில் ஏதாவது ஒரு வேளையில் (ஒரு வேளை கிறிஸ்தவன் ஆகுவதற்கு முன்னரே) தான் தேவனிடத்தில், பயபக்தியாயிருக்க வேண்டும் என்றும், ஊழியத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றும், தன்னுடைய சாதாரண சபை அனுபவத்திலிருந்து, தன்னுடைய குடும்பம் ஆராதனையில் கலந்து கொண்ட பேர் சபை போதகர் மூலமாகவும் அந்த எண்ணம் வந்திருக்கக் கூடும். இன்னொருவர், தன்னுடைய ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய சுபாவம் உறுத்தியதினால் அவருக்குள்ளாகவே அவர் சொல்லிக் கொண்டார்–நான் இரண்டாம் தர நிலையில் அல்லது மூன்றாம் தர நிலையில் இருந்தாலும், நான் எப்படி அங்கி அணியவும், ஒரு பிரசங்கிக்குரிய மதிப்பையும், பட்டங்களையும், சம்பளத்தையும் பெற விருப்பமுள்ளவனாக இருப்பேன் என்று தன்னை உயர்வாக எண்ணினாலும் கூட, ஒரு வேளை அவர் இப்படியாகவும் நினைத்திருக்கலாம்– தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள், ''படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும்'' அறியப்பட்டிருந்தபடியால், ஒரு வேளை, தனக்கும் குறைவான தாலந்தும், படிப்பும் இருந்தபடியால் தேவன் தன்னை விசேஷமாக மனதில் வைத்திருந்தார் என்று நினைத்திருக்கலாம். தேவன் தன்னுடைய காரியத்திற்கெனவும், பிரசங்கிக்கும் படியாகவும் தகுதியில்லாதவர்களின் ஆர்வத்திற்கு வழியை திறக்காமல் அநேகரை வைத்திருக்கிறார்.

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் ''பிரசங்கிக்கும்படியாக'' அழைக்கப்பட்டுள்ளனர்; ஆனால் அவனுடைய ஆர்வத்தினால், அல்லது கற்பனையினால் அல்ல, ஆனால் ''உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படியாக'' என்ற வசனத்தின்படி, தேவனுடைய கிருபையை விருதாவாய் பெறாதபடி எல்லாரும் அழைக்கப்பட்டுள்ளார்கள். (1 பேதுரு 2:9) ஆகவே இந்த அழைப்பு, சத்திய ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட அனைவருக்கும், ஆண், பெண், அடிமையானவர், சுயாதீனமுள்ளவர்,

பணக்காரர், ஏழை, கல்வி அறிவு உள்ளவர், இல்லாதவர், கறுப்பர், மானிறமுள்ளவர், சிவந்தவர், மஞ்சள் நிறத்தவர், வெள்ளையர் என்ற பாகுபாடின்றி வருகின்றது. ''நமது தேவனைத் துதிக்கும் புதுப் பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்,'' ''கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்வார்கள்'' என்பவைகளைத் தவிர வேறு எந்த அழைப்பு வேண்டும்?

ஆண்டவர் விசேஷமாகத் தெரிந்து கொண்டு, ஒரு விசேஷமான வேலைக்கு, பன்னிரண்டு அப்போஸ்தலர்களை விசேஷமாக அழைத்தது உண்மைதான். அவருடைய ஜனங்கள் அவருடைய வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்பார்களென்றால், அவருக்கு விருப்பமானபடி ''அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.'' ''அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக'' ஒன்றை ஒரு வேலைக்கும், மற்றொன்றை வேறு வேலைக்குமாக வைத்தார். (மத். 25:15) ஆனால், அவர் அநேகர் தங்களை போதகர்களாக ''ஏற்படுத்திக் கொள்வார்கள்'' என்பதைத் தெளிவாகக் கூறுகிறார். சபையானது தன்னிச்சையான ஆர்வமுள்ள சகோதரர்களைப் பாராமல், அவரையே தங்கள் தலையாகவும், தலைவராகவும் தொடர்ச்சியாக நோக்க வேண்டும்.இந்த கடமையைச் செய்யத் தவறுவது அவருடைய வார்த்தையை உதாசினப்படுத்துவது என்று அர்த்தப்படும். ஆகவே அன்பும், கீழ்ப்படிதலும் குறைவுபடும். மேலும் இது இப்படிப்பட்ட ஒரு சபைக்கு ஆவிக்குரிய விதத்தில் சேதம் விளைவிப்பதோடு தானாக போதகராக ஏற்படுத்திக் கொண்டவருக்கும் சேதத்தை விளைவிக்கும்.

இந்த விஷயத்தில் ஆண்டவருடைய கட்டளை தெளிவாக இருக்கிறது. ''தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.'' (லுக் 14:11) சபை ஆண்டவரைத் தேடவும், அவர்களது ஆண்டவருக்குக் கீழ்ப்படியவும் இந்த கட்டளையை, ஆவியின் இந்த சிந்தையைப் பின்பற்ற வேண்டும். வைராக்கியமும், உண்மையும், விடாமுயற்சியையும், நன்மை செய்யும்படியாக சிறிய விஷயங்களில் வெளிப்படுத்திக் காட்டுபவர்களை மாத்திரம் முன்பாக நிறுத்துவது ஆண்டவருடைய செயல்பாடாகும். ''கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அனேகத்திலும் உண்மையுள்ளவனா யிருக்கிறான்.'' (லூக் 16:10) ''கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்.'' (மத் 25:21,23) கனம் என்கிற ஏணியின் அடி மட்டத்தில் எப்பொழுதுமே அதிகமாக இடம்

உண்டு. யாரெல்லாம் இப்படியாக ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும், சகோதரர்களுக்கும் தாழ்மையான வழிகளில் ஊழியம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார்களோ, அவர்களெல்லாம் அதற்கேற்ற தருணத்திற்கு அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் பெருமையின் ஆவியுள்ளவர்கள், மனுஷர் பார்வையில் கனம் தரக்கூடிய ஊழியத்திற்காக இப்படியான ஊழியத்தை வெறுத்து, ஒதுக்கித் தள்ளுவார்கள். உண்மையாயிருக்கிறவர்கள் எப்படிப்பட்ட ஊழியத்திலும் மகிழ்ச்சியடைவார்கள், ஆண்டவரும் இப்படிப்பட்டவர்களுக்கு விசாலமான வழிகளுக்கு மேல் வழியைத் திறந்து கொடுப்பார். இவ்விதமாக அவருடைய சித்தத்தை பரத்திலிருந்து வருகிற ஞானம் மூலமாக வெளிக்காட்டி, விசேஷமாக, தலையாயிருக்கிறவரின் சித்தத்தை, கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்கள் தங்கள் கரங்களை நீட்டி தனது வாக்கைப் (vote) போடுவதில் புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் பின்பற்றுவதில் கவனமாக இருக்க வேண்டும்.

சுயநலமுள்ள ஒரு சகோதரர் எவ்வளவுதான் திறமையுள்ளவராக இருந்தாலும், ஒதுக்கிவிடப்பட வேண்டும், ஆனால் தாழ்மையுள்ள சகோதரர் மூப்பராக ஆவதற்கு தெரிந்து கொள்ளப்பட வேண்டும். எப்படியாயினும் உண்மையான காரணத்தை சொல்லாமல் சாதுவான முறையில் எச்சரிப்பது எல்லாருக்கும் நன்மை தரும். ஒரு திறமையுள்ள மூப்பர் எதேச்சாதிகாரமான ஆவிக்குரிய தன்மைகளைக் காட்டுவாரெனில், அல்லது தான் சபைக்கு மேலாக உள்ளவர், வித்தியாசமானவர் என்று நினைக்கத் தொடங்குவாரென்றால், சபைமூலமாக வராத தொன்றை போதிக்க திவ்விய உரிமை உண்டு என்று எண்ணுவாரென்றால், அவர் இப்படியான சாதுவான எச்சரிப்பை ஏற்று, சத்துருவின் கண்ணியிலிருந்து விடுபடும் வரை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஊழியத்தின் குறைவான மதிப்புள்ள பகுதிக்கு, அல்லது எல்லா விசேஷமான ஊழியங்களிலிருந்தும் நீக்கி வைப்பது, அன்பான காரியமாக மாத்திரமல்ல, கடமையாகவும் இருக்கும்.

மற்ற எல்லா குணாதிசயங்களைப் போலவே முன்னேற வேண்டும் என்ற ஆர்வம், சபையிலும், உலகிலும் இருக்க வேண்டியதுதான் என்பதை எல்லாரும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் புது சிருஷ்டியில், அது முக்கியமானவராக, பெரிய நபராக இருக்க வேண்டும் என்ற சுய இச்சையாக இருக்கக் கூடாது; ஆனால், ஆண்டவருக்கும் அவரது மிகவும்

தாழ்மையான நிலையில் உள்ள ஜனங்களுக்கும், ஊழியம் செய்யும்படியான அன்புள்ள ஆர்வமாக அது இருக்க வேண்டும். உயர வேண்டும் என்ற ஆர்வம் எப்படி சாத்தானை ஆண்டவருக்கு ஊழியம் செய்யும் சிலாக்கியத்திலிருந்தும், அவருடைய கிருபையிலிருந்தும் விழப்பண்ணியது என்று நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம்; அவனுடைய சிருஷ்டிகருக்கு எதிரியாக, அவருடைய நீதியான கட்டளைகள் எல்லாவற்றையும் எதிர்க்கிறவனாக கீழே விழுந்தான். ''நான் தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக ஏறுவேன், (நான் தேவ புத்திரருக்கு மேலாக ஏறுவேன்) நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்,'' (அவர்கள் மத்தியில் ஆட்சி செய்கிறவன், திவ்விய நியமனம் பெறாமல் திவ்விய அதிகாரத்தை அபகரிக்கிறவன், மேலும் திவ்விய கட்டளைகளுக்கு எதிர்மாறாக இருப்பவன்) என்று கூறிய அவனுடைய வழியைப் பின்பற்றுகிறவர்கள் நிச்சயமாகவே தேவனுடைய பட்சத்தில் இருக்க மாட்டார்கள், அதற்கேற்ற வகையில் ஆண்டவரிடத்திலிருந்து ஒதுக்கி வைக்கப் படுவார்கள். இப்படிப்பட்டவர்களுடைய ஆதிக்கம் சாத்தானுடையது போன்றே நிச்சயமாகவே தீமையை விளைவிக்கும். சாத்தான் ஆபத்தான போதகராக இருப்பது போலவே அவனுடைய தன்மையைக் கொண்டவர்கள், வெளிச்சத்திற்குப் பதிலாக அந்தகாரத்திற்குள் வழி நடத்துவார்கள். ஏனெனில், அவர்கள் வெளிச்சத்தைப் பெற்று, அதனை மற்றவர்களுக்கு அளிக்கக் கூடிய தூதர்களாக உபயோகப் படுத்தப்படும்படி, தகுதியான நிலையில் இல்லை.

ஆகவே, குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஊழியத்திற்கென வாசல் திறக்கப் படாமல் இருக்கும் போது, ஏதோ ஒரு பொதுவான நிலையில் ஏதாவது ஒரு சகோதரன் பிரசங்கிக்கும் படியாக தான் அழைக்கப்பட்டு இருப்பதாக நிச்சயமாக உணர்வாரென்றால்– சபையின் கிட்டத்தட்ட ஏகோபித்த வேண்டுகோள் இல்லாமல், தன்னை அதன் மேல் பலவந்தப்படுத்த பார்ப்பாரென்றால்– இல்லாவிடில் ஒருவன் ஒரு தலைவனாக, மூப்பனாகத் தெரிந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து அவனை வெவ்வேறு காலக் கட்டத்தில் பொதுவான வாக்கெடுப்பின் மூலம் அவனது ஊழியம் தேவை என தீர்மானிக்காதிருக்கும் போது, அவன் அந்தப் பதவியில் இருப்பது தனது உரிமை என்று நினைக்க முற்படுவானென்றால், அந்த விஷயத்தில் அவன் உண்மையான நிலையைப் புரிந்துகொள்ளவில்லை என்றும், சபையில் எந்த ஊழியத்திற்கும் தகுதியற்ற, தவறான, சுயத்தை விரும்புகின்ற

ஆவியுடையவர் என்று நாம் புரிந்து கொள்ளலாம். எப்படியிருந்தாலும், ஒரு தேர்தலை நடத்தச் சரியான வேளை வரும் முதல் தருணத்தில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணுவதே சரியான முறையாகும். ஏற்கெனவே அறிவித்தபடி வருடத்தின் கால் பகுதியில், அல்லது வருடத்தின் முதலாவதாக வருகிற ஞாயிற்றுக் கிழமையில், செய்வது சரியான வேளையாகும், ஞாபகத்திலும் எளிதில் வைத்துக் கொள்ளக் கூடியதாகும்.

"ஒழுங்கில்லாதவர்களை எச்சரியுங்கள்"

''மேலும் சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்ன வென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பல வீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்.'' (1 தெச. 5:14,15)

இந்த புத்திமதி மூப்பர்களுக்கு என்று தனியாக இல்லை, ஆனால் மூப்பர்களையும் உள்ளடக்கிய முழு சபைக்கும் உரியதாகும். தேவனுடைய புது சிருஷ்டியாகிய முழு சபையுமே கிறிஸ்து இயேசுவுக்கு புது சிருஷ்டிகளாக பூரண நிலையில் இருக்கிறது என்ற உண்மையை அது அறிந்திருந்தாலும், அவர்களெல்லாரும், தனித்தனி நபரும் அவர்களுடைய மாம்சத்தின்படி பூரணமற்ற நிலையில் இருக்கிறார்கள். அது மேலும் நம்முடைய மாம்சீக குறைபாடுகள் பல தரப்பட்ட விதங்களில் இருப்பதை நாம் காண்கிறோம் என்பதையும் காட்டுகிறது. ஆகவே பூலோக குடும்பங்களில் உள்ள பிள்ளைகளில் வித்தியாசமான குணங்கள் பெற்றோரிடமிருந்து வித்தியாசமான பராமரிப்பை எதிர்பார்த்திருப்பது போன்று, அதைக்காட்டிலும் அதிகமாக தேவனுடைய குடும்பத்தில் அதிக வித்தியாசமான குணங்கள் இருப்பதினால் ஒருவருக்கொருவர் விசேஷமாகக் கரிசனை காட்டுவது அவசியமாகிறது. மற்றவர்களுடைய குறைபாடுகளைக் கேலி செய்யும் நிலையிலிருந்து கண்ணோக்குவது, நமக்கே அதிக தீமை செய்வதாகும். மேலும் அது மற்றவர்களுடைய பெலகீனங்களை, குறைபாடுகளைப் பார்க்கும் படியாக, நம்முடைய இருதயங்களில் ஒரு குற்றம் கண்டு பிடிக்கும் குணத்தை வளர்க்கும்; அதற்கேற்றபடி, ஒரு வேளை நம்முடைய சொந்த குறைபாடுகளுக்கு நம்முடைய கண்களைக் குருடாக்கும். இப்படியாக கேலி செய்வது

அப்போஸ்தலர் கூறிய புத்திமதியின் நோக்கத்திற்கும், சிந்தைக்கும் புறம்பானது.

சத்திய ஆவியினால், பரிசுத்த ஆவியினால், தாழ்மையின் ஆவியினால், அன்பின் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுக்கு அவைகள் சொல்லப்பட்டுள்ளன. இப்படியாக, ஆவியின் கிருபைகளில் வளருபவர்கள், பயப்படுவார்கள், முக்கியமாக தங்களுடைய குறைபாடுகளையே கேலி செய்வார்கள். அதே நேரத்தில் அவர்கள் மற்றவர்கள் மேல் வைத்திருக்கிற அன்பினிமித்தம் அவர்களது குறைகளை அதிகதிமாக, கூடுமானவரை மனதில் வைக்காமலிருப்பார்கள். ஆனால் இந்த அன்பின் ஆவியானது, சகோதரரின் குற்றங்களையும், பெலகீனங்களையும் மன்னிக்கிற அதே வேளையில், எச்சரிக்கையுடன் இருப்பதோடு, சண்டைபோடாமல், விரோதம் காட்டாமல், வாக்குவாதம் பண்ணாமல், கடிந்து கொள்ளாமல், குற்றம் கண்டு பிடித்து இன்னொருவர் மேல் அவதூறு கூறாமல் ஆண்டவர் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். சாதுவாக, பொறுமையோடு, நீடிய பொறுமையோடு, பணிவோடு, ஒருவருடைய பெலகீனங்களுக்கு விட்டுக் கொடுக்க முயல்வதோடு, அதே வேளையில் ஒருவருக்கொருவர் அந்நிலையிலிருந்து வெளிவர உதவி செய்வதோடு, ஒவ்வொருவரும் தனக்குண்டான ஏதாவது பெலகீனத்தை நினைவில் கொண்டு வரவும் உதவும்.

ஒழுங்கீனமாய் நடப்பவர்களை, அவர்களுடைய தவறான வழியில் ஆதரிக்கவோ, ஆறுதல்படுத்தவோ, உற்சாகப்படுத்தவோ கூடாது. ஆனால், தேவன் ஒழுங்கில் தேவனாயிருக்கிறார் என்றும், அவருடைய சாயலிலும், சிலாக்கியத்திலும் நாம் வளரும் அளவுக்கு ஏற்றபடி ஒழுங்கு முறைகளை நாம் ஏற்று நடக்க வேண்டும் என்று அவர்களை பட்சாதாபத்திலும், அன்பிலும் எச்சரிக்க வேண்டும். திவ்விய ஒழுங்கு முறைக்கு கட்டுப்படாதது அராஜகத்திற்குத் தூரமானதல்ல என்று அவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும்; மேலும், கொடுங்கோல் ஆட்சியானது அராஜகத்தைவிட ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என்ற கருத்தை உலக ஜனங்கள் அறிந்திருப்பது போன்று, தெளிந்த புத்தியின் ஆவியையும் பரிசுத்த ஆவியையும் பெற்றிருக்கிற தேவ ஜனங்கள் இதே கருத்து, சபைக்கு உள்ளது என்பதை எவ்வளவு அதிகமாக உணர வேண்டும். அப்போஸ்தலர் ஆண்டவருடைய வேலையின் பொதுவான நலனை மனதில் கொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க

வேண்டும் என்று நமக்கு புத்திமதி கூறுகிறார். நாம் எல்லோரும் பூரணராயிருந்து, ஆண்டவருடைய சித்தத்தைப் பூரணமாக அறிந்திருப்போம் என்றால், நாம் எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் சிந்திப்போம்; அப்படியாயின், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் படியான விசேஷ தேவை இருக்காது. ஆனால் நாம் யோசிக்கிற விதம் வித்தியாசப்படுமானால், ஒவ்வொருவரும் மற்றவரின் கருத்தையும், அவர் கண்ணோக்குகிற விதத்தையும் நாம் கவனித்துப் பார்ப்பது அவசியமாகிறது. மேலும் பொதுவான சமாதானத்திற்காக ஏதாவது ஒன்றை விட்டுவிடவும், கிறிஸ்துவின் சரீரமான சபையில் சமாதானக் கட்டைக் காத்துக் கொள்வதற்கும், ஆவியின் ஒற்றுமையைக் காப்பதற்கும், இப்படிப்பட்ட செயல் கருத்துக்கு முரண்பாடாக இல்லாத பட்சத்தில், எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க நாட வேண்டும்.

ஒழுங்கற்று, அல்லது ஒழுங்கீனமாக நடப்பவர்கள், ஒரு வேளை அவர்களுடைய நிலைக்கு முழுவதும் பொறுப்பானவர்களாக இருக்கமாட்டார்கள். அநேகர் ஒழுங்கற்ற நிலையில் பிறந்திருப்பார்கள். ஆகவே அவர்கள் உடுத்தும் விதத்திலும் வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் அப்படியே இருப்பார்கள். ஆகவே அந்த நிலை அவர்களுடைய பெலகீனத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. அதனிமித்தம் அதை அன்போடு, இரக்கத்தோடு கண்ணோக்க வேண்டும். ஆனாலும் தேவனுடைய சபைக்குத் தீமை விளைவிக்கும் படியாக, அது பிரயோஜனமற்றதாகாதபடி, சத்தியத்தைப் படிப்பதிலும், அதற்கு ஊழியம் செய்வதிலும் தடையுண்டுபண்ண அது அனுமதிக்கப்படாமல் இருக்க கவனித்துக் கொள்ள வேண்டும். ஒழுங்கற்று நடக்கிறவர்களோடு தொடர்பு கொள்ளுவது பெலகீனமான செயல் என்ற அளவிற்கு அவருடைய ஜனங்கள் சாந்த குணமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமல்ல. ஒழுங்கு என்பது பரலோகத்தில் முதலாவது பிரமாணம் என்பதை அவர்களுக்கு அன்பாக, நேசமாக ஆனால் உறுதியாகக் காட்ட வேண்டும். எனவே பரலோக சிந்தை உள்ளவர்கள் அனைவர் மத்தியிலும் அது உயர்வாக மதிக்கப்படல் வேண்டும்; மேலும் தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்ட, திவ்விய கட்டளைகளுக்கு, அவன் இருக்கிற சபையினரால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு எதிர்மாறாக சபையின் ஒன்று அல்லது இரண்டு அல்லது அதற்கு மேலானவர்கள் தீமை செய்யும்படி அனுமதிப்பது சபைக்குப் பாவகரமான செயலாகும்.

புத்தி சொல்லுவது என்பது பொதுவான கட்டளை அல்ல

இப்படி சபைக்குப் பொதுவான முறையில் அப்போஸ்தலர் கூறியது, சபையில் உள்ள ஒவ்வொரு தனி நபரும் புத்தி சொல்ல வேண்டும் என்பதற்காக என்று எடுத்துக் கொள்வது பெரிய தவறாகும். ஞானமாக, உதவி செய்யக்கூடிய விதத்தில் புத்தி சொல்வது என்பது உண்மையிலேயே மிகவும் சாமர்த்தியமான காரியமாகும்; மேலும் குறிப்பாக ஒரு சிலரே இதற்கான தாலந்து உள்ளவர்களாக இருக்கிறார்கள். சபைகளில் மூப்பர்களாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், அவர்கள் அதிகமான அளவில் ஆவிக்குரிய வளர்ச்சி பெற்றவர்களாகவும், சபையின் பிரதிநிதிகளாக இருக்கும்படியாக இயற்கையான தகுதியுள்ளவர் களாகவும், சபைக் கூட்டங்கள் போன்றவற்றை நடத்தத் திறமையுள்ளவர் களாகவும், ஆனாலும் கூட்டங்களில் ஒழுங்கை நிலைநாட்டவும், ஒழுங்கீனமான முறையில் நடப்பவர்களை, ஞானத்துடன், அன்போடு, உறுதியோடு புத்தி சொல்லக் கூடியவர்களாகவும் இருப்பதினிமித்தமே சபையினர் தெரிந்து கொண்டுள்ளார்கள் என்பதும் தெரிகிறது. இந்த சிந்தை அப்போஸ்தலருடைய சிந்தையாயிருக்கிறது என்பதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வசனங்களிலிருந்து தெளிவாகிறது.

"அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்." – 1 தெச. 5:12,13

ஒரு சபையின் மூப்பர்களைத் தெரிவு செய்வதில் திவ்ய ஞானமானது சரியான முறையில் தேடப்பட்டு அப்பியாசப்படுத்தப் பட்டிருக்குமென்றால், இப்படியாகதத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், மிகவும் உயர்வாக எண்ணப்பட்டவர்கள் என்பதைக் காட்டியிருக்கும், கற்றுக் குட்டிகள் தெரிந்து கொள்ளப்படக் கூடாததால், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், பாராட்டுக்குரியவர்களாயிருந்து அவர்களுடைய கிரியைகளுக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். எப்படியெனில், சகோதரர்கள் அவர்களுக்குள்ளே ஒரு மேலான அளவு அன்பின்,

ஞானத்தின், சாந்தத்தின் பரிசுத்த ஆவியும், அதோடு கூட இந்த ஊழியத்திற்கென அவர்களிடத்தில் இயல்பாகவே வரங்களும் தகுதிகளும் இருந்தன என்பதைப் பகுத்து அறிந்து கொண்டார்கள். ''உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்'' என்று அப்போஸ்தலர் புத்திமதியாகக் கூறுவதின் பொருள் என்னவெனில், சபையின் பிரதிநிதிகளாயிருக்கும்படியாக இந்த மூப்பர்களைத் தெரிந்து கொண்ட பின்னர், சபை, அவர்கள் எந்த ஊழியத்திற்கென தெரிந்து கொள்ளப்பட்டார்களோ அதை நிறை வேற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பதுடன் ஒவ்வொருவரும் அவர்களுக்குக் கண்டித்து உணர்த்துவது, அல்லது புத்திமதி கூறுவது போன்றவைகளை ஒவ்வொருவரும் தன்மேல் விழுந்த கடமை என்று எடுக்க முயற்சிக்கமாட்டார்கள். நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி உண்மையாகவே ஆண்டவருடைய ஜனங்கள் ஒருவரை ஒருவர் தன்னிச்சையாக நியாயம் தீர்க்கக் கூடாது, சபைமாத்திரமே ஒருமனதாக கூட்டத்தின் ஐக்கியத்திலிருந்தும், சிலாக்கியங்களிலிருந்தும் ஒதுக்கி வைக்கலாம். இது நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, தனிப்பட்ட விதத்தில் பல்வேறு நடவடிக்கைகள் கைக்கொள்ளப்பட்ட பின்னர்தான் வர முடியும். சீர்திருத்தத்தைக் கொண்டு வரும்படியாக எடுக்கப்பட்ட முயற்சிகள் பிரயோஜனமற்றுப் போன பிறகு, குற்றம் செய்பவரின் தவறான வழிமுறை சபையின் பொது நலன்களை வெகுவாகப் பாதிக்கும் போது மாத்திரமே இவ்வாறு செய்ய முடியும். ஆனால் இந்த வசனத்தில் சபையினர் ''எண்ணிக்கொள்ளும்படி'' என்று புத்திமதியாகக் கூறுகிறார். அப்படியானால், அவர்கள் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிந்து கொண்டவர்களை கண்ணோக்க வேண்டும். மேலும் விஷயங்கள் மிகவும் மோசமாகி சபையை ஒரு நியாயஸ்தலமாக ஏற்று அதன்முன் இவைகளைக் கொண்டு வருவதற்கு முன்னர், அவைகள் சபையின் நலன்களைப் பாதுகாக்கவும், ஒழுங்கற்று நடப்பவர்களுக்குப் புத்தி சொல்லவும் எதிர்பார்க்கப்படல் வேண்டும்.

எல்லோருக்கும் முன்பாக கடிந்து கொள்ளுதல் அரிதானது

''மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி பாவம் செய்தவர்களை எல்லோருக்கும் முன்பாகக் கடிந்து கொள்'' (1 தீமோ. 5:20)என்று அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு யோசனை கூறுவது போல, சில சந்தர்ப்பங்களில் இந்த புத்திமதி கூறுதல் சபையினருக்கு முன்பதாக

வெளியரங்மாகச் செய்யப்பட வேண்டியிருக்கும். இப்படியாக எல்லோருக்கும் முன்பதாக என்று கூறும்போது மிகவும் கொடியதான பாவத்தைக் குறித்தது என்று பொருள்படுகிறது. மூப்பர்கள் ஏற்படுத்தியிருக்கிற ஒழுங்கு முறையிலிருந்து சற்று வித்தியாசமாகச் செயல்படும்போது, அன்பின் பிரமாணத்தின் கீழும், ஆண்டவருடைய கட்டளையின்படி (பொன்னான கற்பனை)''அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்.'' அப்படிச் செய்யும்போது, தனிப்பட்ட முறையில் அந்த நபரோடு ஒருவார்த்தை பேதுவது ஒருவேளை எல்லோருக்கும் முன்பாகக் கடிந்து கொள்ளுதலை விட அதிக பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என்பதையும் அறிந்திருப்பார்கள். எல்லாருக்கும் முன்பாக கடிந்து கொள்ளும் போது முற்றிலும் தேவையற்றதான ஒரு காயத்தையோ, அல்லது உணர்ச்சியை பாதிக்கக்கூடிய ஒன்றையோ ஏற்படுத்தும் என்ற நிலை இருந்தால், அப்படிச் செய்யாமல் அன்பினால் செய்தால் அந்த விஷயம் வேறு வழியில் சந்திக்கப்பட்டிருக்கலாம். ஒரு மூப்பர் கொடியதான ஒரு பாவத்தை வெளிப்படையாக எல்லோர் முன்பாகக் கடிந்து கொள்ள வேண்டியதிருந்தாலும், அது அன்புடன் கண்டிக்கப்பட்டவர், சீர்திருத்தப்பட்டு, நல்ல நிலைக்குத் திரும்பி வரும்படி உதவி செய்யத்தக்கவகையில் செய்யப்படவேண்டுமேயன்றி, அவருக்கு வெறுப்பு உண்டாக்க வேண்டும், ஒதுக்கி வைத்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யப்படக் கூடாது. அப்படியில்லா விட்டாலும் உண்மையிலேயே சபையினருக்கு உள்ள சிலாக்கியங் களிலிருந்து தடுத்து நிறுத்தும் அளவுக்கு கண்டிப்பது மூப்பரின் வசத்தில் கிடையாது. இப்படியாகக் கண்டிப்பது என்பது நாம் இப்பொழுது பார்த்திருக்கிறபடி சபையின் ஏகோபித்த தீர்மானத்தின் படிதான் வரமுடியும். அதுவும் பூரண விசாரணைக்குப்பின்னர், அதிலும் குற்றஞ் சாட்டப்பட்டவர், தன்னை தற்காத்துக்கொள்ள முழு தருணம் கொடுக்கப்படுவதுடன், அப்படி இல்லை யென்றால் தன்னுடைய வழிகளைச் சரி செய்து, மன்னிப்பைப் பெறுவதுடன் மாத்திரம் செய்யப்படல் வேண்டும். சபை ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப் பட்டுள்ளது; அது முற்றுமாக அவருடைய பிரதிநிதியாக உள்ளது. மேலும் மூப்பரானவர் சபையின் பிரதிநிதி மாத்திரம் தான், அதாவது மூப்பரென்பது ஆண்டவருடைய தெரிந்து கொள்ளுதலின் நல்ல முறையில் நியமனம் ஆகும். ஆகவே நியாயஸ்தலம் என்று கடைசி

பட்சத்தில் இப்படியான விஷயங்களைப் பார்க்க வேண்டியிருப்பின் அதில் இடம் பெறுவது மூப்பர்களல்ல சபைதான், ஆகவே மூப்பர் கைக் கொள்ளுகின்ற வழிமுறை, ஆண்டவருடைய சித்தத்தின்படி எடுக்கப் பட்ட பொதுவான தீர்மானத்தின்படி, சபையினால் மறுபரிசீலனை செய்யவோ அல்லது திருத்தவோ இடமளிக்கிறதாயிருக்கிறது.

காரியத்தின் இந்த அம்சத்தைக் கவனித்துப்பார்க்கும் போது, சபை எந்த அளவுக்கு நேரிடையாகவோ அல்லது அதன் மூப்பர்கள் மூலமாகவோ, ஒழுங்கீனமாக நடப்பவர்களைக் கடிந்து கொள்ளவோ, காலகட்டத்தில் அவர்களைச் சபையிலிருந்து தள்ளி வைக்கவோ முடியும் என்பதைப் பார்க்க ஒரு வினாடி நிற்க வேண்டும். நிரந்தரமாகத் தள்ளி வைப்பது என்பது சபையின் அதிகாரத்துக்கு உள்பட்டது அல்ல. தன்னோடு ஆராதிக்கிற ஒரு சகோதரனையோ அல்லது முழு சபையைத் துக்கப்படுத்திய ஒரு சகோதரன், திரும்பி வந்து ''என்னுடைய தவறான வழிக்கு வருந்துகிறேன், வருங்காலத்தில் என்னால் இயன்றவரை நன்கு நடப்பேன்'' அல்லது இதற்கு ஒத்தாப்போல் சொல்லும் போது, எல்லா மீறுதல்களையும் ஆண்டவர் மன்னிப்பார் என்று நாம் நம்புகிறவண்ணம், அவர் முழுமையாக இலவசமாக மன்னிக்கப்படல் வேண்டும். ஆண்டவரைத்தவிர, திராட்சைச் செடியிலிருந்து கொடியை வெட்டுவது போன்று, எந்த ஒரு தனி நபரையும் நித்தியகாலமாகத் தண்டித்து வைக்க அதிகாரம் கிடையாது. மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல் செய்வது பிரயோஜனமற்றது என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (1 யோ 5:16) இப்படியான மனப்பூர்வமாய் செய்யப்படுகின்ற பாவத்தின் தண்டனையானது இரண்டாம் மரணமாகும், அந்த பாவம் மிகவும் வெளிப்படையாக, துன்மார்க்கமானதாக ஆண்டவரோடு ஐக்கியம் கொண்டுள்ளவர்கள் உடனடியாக பகுத்தறியக் கூடியதாக இருக்கும். நாம் யாரையும் அவர்களுடைய இருதயங்களில் என்ன இருக்கிறது என்பதை வைத்து நியாயம் தீர்க்கக் கூடாது, ஏனெனில் நம்மால் அவர்களுடைய இருதயங்களில் உள்ளவற்றை அறிய முடியாது. ஆனால் அவர்கள் மனப்பூர்வமாய் மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்வார்களென்றால், உபதேசத்தின் மீறுதல்கள், பாவ நிவாரணத்திற்கென சிந்தப்பட்ட விலையேறப் பெற்ற இரத்தத்தை மறுதலிப்பது, இல்லாவிட்டால் அவர்களுடைய ஒழுக்கம் கெட்ட நடத்தைகளினால், மேலும் ''கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது'' என்பது போன்று, மாம்சத்தின்படியாய் நடக்கத்

திரும்பியிருப்பார்கள் என்றால், அவர்கள் உதடுகளின் மூலமாக நிச்சயமாக வெளிப்படைய தெரியவரும். எபி 6:4–8 ; 10:26–31 ல் இப்படிப் பட்டவர்களைக் குறித்து, அப்போஸ்தலர், அவர்களோடு எவ்விதமான தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்றும், அவர்களோடு உட்கார்ந்து சாப்பிட வேண்டா மென்றும், அவர்களை வீட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்றும், அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கிறார். (2 யோவா. 9–11) ஏனெனில் அவர்களோடு சேர்ந்திருப்பவர்கள், அல்லது அவர்களுக்கு வாழ்த்து சொல்லுகிறவர்கள், தேவனுக்குச் சத்துருக்கள் என்கிற இடத்தில் உள்ளவர்களாக எண்ணப் படுவார்கள், மாத்திரமல்ல, அவர்கள் துர்க்கிரியையில் பங்குள்ளவர்களாக அல்லது உபதேசத்தில், ஏதாவது ஒன்றில் பங்குள்ளவர்களாக எண்ணப்படுவார்கள்.

ஆனால் ''ஒழுங்கீனமாக நடப்பவர்களைக்'' குறித்துக் கட்டளைகள் மிகவும் வித்தியாசமாக உள்ளது. இப்படியாகத் தள்ளி வைக்கப்பட்ட ஒரு சகோதரர் அல்லது சகோதரி ஒரு சத்துருவைப்போல் நடத்தப்படக் கூடாது, மாத்திரமல்ல, அப்படியாக நினைக்கப்படவும் கூடாது, ஆனால் தவறு செய்கிற ஒரு சகோதரனைப் போல எண்ணப்பட வேண்டும். இதைக்குறித்து அப்போஸ்தலர் தன்னுடைய நிருபத்தில் மேலும் கூறுகிறதாவது: ''மேலும் இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால் (ஒருவன் ஒழுங்கீனமாய் நடந்து, சரியான முறைமைக்கேதுவான தெளிந்த புத்திக்கும், அன்பும், தயாளமுமாய் காணப்படுகின்ற சட்டத்திற்கும் செவிசாய்க்க விருப்ப மில்லாதிருந்தால்) அவனைக் குறித்துக் கொண்டு, அவன் வெட்கப் படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி புத்தி சொல்லுங்கள்.'' (2 தெச. 3:14,15) இப்படியான நிலை, அப்போஸ்தலர் தேவனுடைய வாயைப்போலிருந்து சொல்லிய ஒழுங்கு முறைகளுக்கு சகோதரரிடத்திலிருந்து வெளியரங்கமான ஒரு எதிர்ப்பு வரலாம். இப்படி வெளிப்படையாகச் சரியான கட்டளைகளுக்கு வருகின்ற எதிர்ப்பு, சபையார் அவ்வளவு அதிகமாக ஒழுங்கீனமாக இருக்கிறான், அவன் புத்திமதி பெற வேண்டியது அவசியம் என்று சபை தீர்மானிக்கும் என்றால், சபையால் அவன் கண்டிக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர் மூலமாக ஆண்டவர் தந்துள்ள தெளிந்த வசனத்திற்குக் கட்டுப்படாவிட்டால், அவன் அவ்வளவு தூரம் ஒழுங்கு முறைக்கு அப்பால் இருக்கிறான் என்று

எண்ணப்படுவதினால், அவன் இந்த நியாயமான கட்டளைகளுக்கு செவிசாய்க்கும் வரை சகோதரர்கள் ஐக்கியத்தில் பங்கு பெறாமல் இருப்பது நலம் என்று கருதப்பட வேண்டும். சகோதரர்கள் தெருவில் அவரைக் கடந்து செல்லும் போது பாராமுகமாய் இருக்கக் கூடாது. ஆனால் அவன் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். அவன் ஒதுக்கி வைக்கப்படுவது சபையின் உண்மையான விசுவாசிகளுக்குள்ள சிலாக்கியங்கள் மற்றும் சகோதர கூட்டங்கள் போன்றவைகளிலிருந்து மாத்திரமே. ''அவன் உனக்கு ஒரு அஞ்ஞானியைப் போலவும் பரிசேயனைப் போலவும் இருப்பானாக'' என்ற நம்முடைய ஆண்டவருடைய வார்த்தையிலும் விளங்குகிறது. நம்முடைய ஆண்டவர் ஒரு அஞ்ஞானிக்கு அல்லது பரிசேயனுக்குத் தீமை விளைவிக்க வேண்டும் அல்லது அன்பற்றமுறையில் நடத்த வேண்டும் என்று பொருள்படக் கூறவில்லை. ஆனால் இப்படிப்பட்டவர்களோடு சகோதரர்கள் என்ற முறையில் ஐக்கியம் கொள்ளக்கூடாது, அல்லது அவர்களுடைய நம்பிக்கையைப் பெறவிரும்பக் கூடாது என்பது மாத்திரமல்ல, புது சிருஷ்டிகளாக நாம் நம்முடைய நம்பிக்கையை அவர்களிடத்தில் காட்டவும் கூடாது என பொருள்படுகிறது. விசுவாச வீட்டார் பரஸ்பர அன்பினாலும், இரக்கத்தினாலும், ஒருமித்த கருத்தினாலும் உறுதியாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படியான சிலாக்கியங்களும் ஆசீர்வாதங்களும் தள்ளி வைக்கப்பட்டுள்ள சகோதரன் தன்னுடைய வழிகளைச் சீர்திருத்த வேண்டும், மறுபடியும் சபை கூட்டத்திற்கு வர வேண்டும் என்று உணருகிறவரையில் அவனுக்குக் கிடைக்காமல் அதன் நிமித்தம் அவன் உணர்வடைய வேண்டும். ஆண்டவருடைய சரீரமான சபையின் அங்கங்களாக இருப்பவர்கள் மத்தியில் ஒரு இதயப்பூர்வமான, மனப்பூர்வமான, உண்மையான சகோதரத்துவம் இருக்க வேண்டும் என்று ஒரு யோசனை உள்ளது.

''பலவீனரைத் தாங்குங்கள்''

நம்முடைய செய்தியின் பகுதியில் அப்போஸ்தலருடைய வார்த்தைகளைத் தொடர்ந்து ஆராயும்போது, சபை பலவீனரைத் தாங்க வேண்டும் என்று காண்கிறோம். அதாவது பரிசுத்த ஆவியைப் பெறுவதால், நம்முடைய பெலகீனங்களை முற்றுமாக மேற் கொள்ளும்படி நம்முடைய அழியக் கூடிய சரீரங்கள் மாறுவதில்லை என்பதை நாம் காண்கிறோம். சிலர் பலவீனமுள்ள சரீரங்களை

உடையவர்களாய் இருப்பதைப் போன்று சிலர் பலவீனமுள்ள மனதுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய பலவீனத்திற்கேற்ப இரக்கம் தேவைப்படுகிறது. பலவீனமுள்ள மனங்கள் அற்புத விதமாக குணப்படுத்துவதற்கில்லை; இல்லாவிட்டாலும் சிலருடைய மனங்கள் பலவீனமுள்ளதாயிருப் பதினால், அவர்களால் திவ்விய திட்டத்தின் ஆழம், அகலம், உயரம், நீளத்தை உணர்ந்து கொள்ள முடியாது இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சரீரமான சபைக்குரியவர்கள் அல்ல. அதற்கு மாறாக, ஆண்டவர் அவருடைய சபைக்கென, பலமுள்ள, ஆரோக்கியமுள்ள, நன்கு வளர்ச்சி பெற்ற சரீரமுள்ளவர்களைத் தேடாதது போன்று, மனதில் பலமும் ஆரோக்கியமுள்ளவர்களை, திவ்விய திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும், அதன் காரணத்தைக் காணவும், ஆராய்ந்து பார்க்கவும் முடிந்தவர்களை மாத்திரம் அவர் தேடவில்லை. இப்படியாக சரீரமான சபையில் தகுதியுள்ளவர்கள் இருப்பார்கள், ஆனால் மற்றவர்கள் பலவீன மனதுள்ளவர்கள், அவர்கள் அடிப்படையான, சராசரி அறிவைக்கூட எட்டுவதில்லை. இவர்களுக்கு எப்படிப்பட்ட ஆறுதலை நாம் கொடுக்க வேண்டும்? மூப்பர்கள் சத்தியத்தை அளிக்கும் போதும், சபையில் உள்ள அனைவரும் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள உறவின் மூலமும், இவர்களைத் தாங்க வேண்டும் என்று நாம் பதில் சொல்கிறோம். அப்படிச் செய்யும் போது அவர்களுடைய பலவீன நிலையைச் சுட்டிக் காட்டி மன்னிக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. மேலும் தேவனுடைய குடும்பத்தில் உள்ள அங்கங்களில் காணப்படுகின்ற அதே அளவு வல்லுனர்களாக, புரிந்து கொள்ளும் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும். இப்படி திறமையில் குறைவுபட்டவர்கள், சரீரமான சபையைச் சார்ந்தவர்கள் அல்ல என்று ஒருவரும் சொல்லக் கூடாது.

''தளர்ந்த இருதயமுள்ளவர்களைத் தாங்குங்கள்'' என்கிற திருத்தப்பட்ட மொழிப்பெயர்ப்பு வசனத்தை ஏற்றுக் கொள்வோம் என்றால் பாடமானது ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. இயற்கையாகவே சிலருக்கு தைரியமும், போராடும் குணமும் கிடையாது, மேலும் எப்பொழுதும் நல்ல சிந்தையோடும், எப்பொழுதுமே விசுவாசமுள்ள இருதயமுள்ளவர்களாய் சரீரமான சபையில் உள்ள மற்றவர்களைப் போன்று அதே அளவுக்கு வெளிப்படையாக ''கர்த்தரில் பலப்படவும்'' அல்லது ''விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடவும்'' முடியாது.

எனினும் ஆண்டவர் அவர்கள் தைரியமுள்ளவர்களாய், உண்மையுள்ளவர்களாக இருக்க விரும்பும் அவர்களுடைய சித்தத்தையும் அவர்களுடைய நோக்கத்தையும் பார்க்க வேண்டும், அப்படியாகவே, சகோதரர்களும் இருக்க வேண்டும் (அவர்களும் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்ற தரத்தை அடையவேண்டுமென்றால்).

ஆண்டவர் தன்னுடைய ஜனங்களை நியாயம் தீர்ப்பது என்பது அவர்களுடைய இருதயங்களின் பிரகாரம் என்பதை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் இவ்விதமான பலகீனமுள்ள மனதுள்ளவர்கள் அல்லது தளர்ந்த இருதயமுள்ளவர்கள் கிறிஸ்து இயேசுவின் மூலம் வந்த மீட்பின் திவ்விய திட்டத்தின் அடிப்படைக் காரியங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய விருப்பமும், போதுமான அளவு மனமும் இருந்திருக்கு மென்றால், அவர்கள் மீட்பர் மேல் வைத்த விசுவாசத்தினால் தேவனுடைய பார்வையில் வந்த அவர்களுடைய சொந்த நீதிமானக்கப்படுதலில் விருப்பமும், போதுமான அளவு மனதுள்ளவர்களாயிருந்திருப்பார்களென்றால், மேலும் இந்த அடிப்படையில் அவர்கள் ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையை நடத்தும் படி முயற்சி செய்து கொண்டிருப்பார்களென்றால், அவர்கள் ஆண்டவருடைய சரீரமான சபையின் அங்கங்கள் என்று முழுமையாக, ஏகோபித்தவண்ணம் அவர்கள் உணர்ந்து கொள்ள அனுமதிக்கும் விதத்தில் எல்லா வழிகளிலும் நடத்தப்படல் வேண்டும். மேலும் அறிந்து கொள்ளும் விதத்தில், திவ்விய திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒரு வேளை தெளிவாகப் பகுத்தறிய முடியாவிட்டாலும் அல்லது விளக்கிக் கூற முடியாவிட்டாலும், மற்றவர்களைப் போல் தைரியமாக அதற்காக வாதாட முடியாவிட்டாலும், அவர்கள் ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அது தடையானது என்று கருதக் கூடாது. அவர்கள் திவ்விய ஊழியத்தில் தியாக மனப்பான்மையோடு முன்னேறிச் செல்ல தைரியப்படுத்தப்படல் வேண்டும், அவர்கள் கரங்களுக்குக் கிட்டுகிறது எதுவோ அந்த ஊழியத்தை ஆண்டவருடைய நாமத்திற்கு மகிமையாகவும், அவருடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி செய்ய தைரியப்படுத்தப் படல் வேண்டும். அப்படிச் செய்யும் போது, ஏற்ற காலத்தில், அவருடன் நிலைத்திருந்து, அவருடைய ஆவியின் கனிகளில் வளர்ந்து, அவருடைய பலியின் வழிகளில் நடக்கிற அனைவரும் பரிபூரண திறமையுடன் புதிய சரீரங்களைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் ஆறுதல் அடைவார்கள். அந்த நிலையில் எல்லா அங்கங்களும் அவர்கள் இருக்கிற வண்ணமாக

அறிந்து கொள்ளமுடியும், இதற்கிடையில் நம்முடைய பெலகீனத்தில் அவருடைய பெலன் பரிபூரணமாய் விளங்கும் என்று ஆண்டவர் உறுதியளிக்கிறார்.

"பெலகீனமானவர்களைத் தாங்குங்கள்"

சபையில் சிலர் சரீரப்பிரகாரமாக மாத்திரமல்ல ஆவிக்குரிய பிரகாரமாயும் மற்றவர்களைக் காட்டிலும் பெலகீனமானவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. இதன் பொருள் என்னவெனில் மனுஷீக உறுப்புகள் இப்படியாக சீரழிந்து இருப்பதினால், புது சிருஷ்டிகளாக அவர்கள் சரீர வளர்ச்சியிலும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் அதிகக் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள் என்பதாகும். இப்படிப் பட்டவர்கள் சபையிலிருந்து ஒதுக்கி வைக்கப் படக் கூடாது, ஆனால் அதற்கு மாறாக ஆண்டவர் அவர்களை அவருடைய கிருபையை அறியும் அறிவுக்குத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணியிருந்தால், அவருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் கிரயம் கொடுத்து வாங்கியவர் மூலமாக ஜெயம் கொள்ளுகிறவர்களாக அவர்களைக் கொண்டு வருவதற்கு அவர் வல்லமை உள்ளவராயிருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வேதம் தருகின்ற வாக்குத்தத்தங்களினால் அவர்கள் தாங்கப்பட வேண்டும். நம்மில் நாம் பெலகீனமாயிருக்கும் போது, நாம் அவருடைய வல்லமையின் சத்துவத்தில் பலமுள்ளவர்களாக இருக்க முடியும். நம்முடைய கவலைகள் எல்லாவற்றையும் அவர் மேல் வைத்து, விசுவாசத்தினால் அவருடைய கிருபையில் சார்ந்து இருக்கும் போது நாம் பலமுள்ளவர்களாக இருக்க முடியும். அவர்களுடைய பலகீனம் மற்றும் சோதனையின் நேரத்தில் "என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்கிற வாக்குத்தத்தம் நிறைவேறுவதை அவர்கள் காண முடியும். முழுச் சபையினரும் இப்படி ஆறுதல் படுத்துவதிலும் தாங்குவதிலும் உதவி செய்ய முடியும். ஆனாலும் நிச்சயமாக மூப்பர்களுக்குகூட இவர்களைக் குறித்து ஒரு விஷேசமான பாரமும், பொறுப்பும் உண்டு, ஏனெனில், அவர்கள் சபையினால் தெரிந்து கொள்ளப்பட்ட பிரதிநிதிகளாக இருக்கிறார்கள், ஆகவே ஆண்டவருடைய பிரதிநிதியுமாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் சரீரத்தின் பல்வேறு அவயவங்களைக் குறித்துக் கூறிய பிறகு, போதகர்களையும், தீர்க்க தரிசிகளையும் குறித்து கூறுகிறார், அதன்

பின்னர் ''ஊழியங்களைக்'' குறித்துச் சொல்லுகிறார். (1 கொரி. 12:28) சபையின் ஒவ்வொரு அங்கமும் உதவியாக இருக்கும் ஒரு இடத்தில் இருக்க வேண்டும் என்பது ஆண்டவருடைய விருப்பமாயிருக்கும் என்று தெரிகிறது. சபையின் பிரதிநிதிகளாக தெரிந்து கொள்ளப்பட்ட மூப்பர்களுக்கு உதவி செய்வது மாத்திரமல்ல, ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதோடு கூட நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்வதோடு, விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்ய வேண்டும்.

''எல்லோரிடத்திலும் பொறுமையாயிருப்பது''

எல்லா சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவரிடத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது என்ற இந்த புத்திமதிக்குக் கீழ்ப்படியும் போது புது சிருஷ்டிகள் தாங்கள் ஒருவருக்கொருவர் சரியான மனப்பாங்கை அப்பியாசப் படுத்துவது மாத்திரமன்றி, அவர்கள் தங்களுக்குள்ளாக பரிசுத்த ஆவியின் மிக உன்னதமான கிருபையான பொறுமையையும் வளர்த்துக் கொள்ளுகிறார்கள். பொறுமையின் ஆவியின் ஒரு கிருபையாகும். அது நம்முடைய வாழ்க்கையில் எல்லா விஷயங்களிலும் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ளவர்களிடத்தில் அப்பியாசப் படுத்துவதற்கு தருணங்கள் ஏராளம் உண்டு. மேலும் முழு உலகமும் நம்முடைய பொறுமையை எதிர்பார்க்கிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப் படுவதைக் குறித்து வேதாகமம் நமக்கு வெளிப்படுத்தி யிருக்கிறதைக் குறித்ததான தெளிவான கருத்தை நாம் பெறும் போது மாத்திரமே இதைப் புரிந்து கொள்ளுகிறோம். அதில் வீழ்ச்சியின் கதையையும், அதினால் எப்படி எல்லோரும் தீமையைப் பெற்றோம் என்பதையும் காண்கிறோம். அதில் பாவிகள் மேல் தேவனுக்குள்ள பொறுமையையும், அவர்களுடைய மீட்பில் அவருடைய அற்புதமான அன்பையும், அவருடைய சபையை உளையான சேற்றிலிருந்தும், பாவம், மரணம் என்ற பயங்கர குழியிலிருந்தும் தூக்கி எடுக்கும்படியாக அவர் உண்டுபண்ணியிருக்கிற முன் ஏற்பாடுகளையும், மாத்திரமல்ல மனுக்குலம் முழுவதற்குமாக அவர் உண்டு பண்ணின மகிமையான முன் ஏற்பாடுகளையும் நாம் காண்கிறோம். அதில் கூட உலகத்தின் பெரிய பிரச்சனை என்னவெனில் அது நம்முடைய சத்துருவின் மாய்மாலத்திற்குக் கீழாக உள்ளது என்று காண்கிறோம். ''இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்''

அவர்களைக் குருடராக்கி, அவர்களை ஏமாற்றுகிறான். (2 கொரி.4:4)

நிச்சயமாகவே இந்த அறிவு நமக்கு பொறுமையைத் தர வேண்டும்! மேலும் உலகத்தாரோடு நமக்குப் பொறுமை இருந்தால், உலகத்தாராக இல்லாதவர்கள் மேல் அதைக்காட்டிலும் அதிகமாக பொறுமை இருக்க வேண்டும். அவர்கள் தேவனின் கிருபையினால் கிறிஸ்து இயேசுவின் பாவமன்னிப்பின் நிலைமைக்கு வந்து, அவருடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டு, இப்பொழுது அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வாஞ்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட உடன் சீடர்களோடு, ஆண்டவருடைய சரீரமான சபையில் அங்கங்களோடு எவ்வளவு அன்பும், நீடிய பொறுமையையும் உடையவர்களாக நாம் இருக்க வேண்டும். நிச்சயமாகவே இவர்கள் மேல் பொறுமையைக் காட்டிலும் வேறு ஒன்றையும் காட்ட முடியாது. அது மாத்திரமல்ல நம்முடைய கர்த்தரும் ஆண்டவருமாய் இருக்கிறவர் நிச்சயமாகவே அவர்களில் யார் மேலேயாவது பொறுமையின்மையைக் காட்டுவோம் என்றால் விசேஷமாக அதை ஆதரிக்கமாட்டார்; ஏதாவது ஒரு விதத்தில் அதைக்கண்டிப்பார். மேலும் மாம்சத்தோடும் சத்துருவோடும், உலகத்தோடும் தற்போதுள்ள துயரம், பெலகீனங்கள், போராட்டங் களிலும்கூட நமக்குப் பொறுமை இருப்பது அதிக அவசியமாயிருக்கிறது. இந்த உண்மைகளை நாம் உணர்ந்து கொள்ளுவது மற்றவர்கள் எல்லோரோடும் பொறுமையாயிருக்க உதவி செய்யும்.

“ஒருவரும் தீமைக்குத் தீமை செய்யாதிருக்கப் பாருங்கள்”

இது ஒரு தனிப்பட்டவரது யோசனையை விடக் கூடுதலானது. அது முழு சபைக்கென கொடுக்கப்பட்ட ஒரு உத்தரவு. மேலும் அது ஆண்டவருடைய ஒவ்வொரு சபை ஜனங்களுக்கும் உரியது. விசுவாச வீட்டாரில் சிலர், பழிவாங்க, எதிர்க்க, தீமைக்கு பதில் தீமை என்று உடன் சகோதரர்கள் அல்லது வெளியே உள்ளவர்கள் மேல் ஈடுபடும் போது, சபை இப்படி நடப்பதைப் பார்க்கும் போது கண்டும் காணாதது போல் இருக்கக் கூடாது. இதைக் கவனிக்க வேண்டியது சபையின் கடமையாகும். ‘‘ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்’’ என்பதின் அர்த்தம், முறையான ஆவி உங்கள் மத்தியில் சகோதரர்களுக்கு இடையே காணப்படவேண்டும் என்பதாகும். ஆகவே இப்படியான கட்டளை செயல்

படுத்தப்பட வேண்டிய ஒரு தருணம் இருக்கிறது என்பதை மூப்பர்கள் உணருவார்கள் என்றால், சகோதரர்களையோ அல்லது சகோதரிகளையோ, ஆண்டவருடைய வார்த்தையிலிருந்து அன்போடு உணர்த்துவது அவர்களுடைய கடமையாகும். அப்படியும் அவர்கள் கேட்காத பட்சத்தில் அந்த விஷயத்தை சபையாரின் கவனத்திற்கு கொண்டுக் வருவது மூப்பருடைய கடமையாகும். இங்கே தான் சபைக்குக் கட்டளையாக சொல்லப்பட்டிருக்கிறபடி அது இப்படியாக எவரேனும் தவறான வழியில் செல்வார்களென்றால் அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படியாக நாம் ஒருவரை யொருவர் காண்பதோடு, ஒவ்வொருவரையும் கனிவான சிரத்தையோடு, பின்மாறுதலுக்கேதுவான வழிகள் கைக்கொள்ளப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால், அதற்கு மாறாக எல்லோருக்கும் நலமானதை நாட வேண்டும். முன்னேற்றம் சரியான வழியில் வருகிறது என்றபோது அதில் களி கூற வேண்டும், மேலும் தனிப்பட்ட விதத்திலும் ஆண்டவருடைய ஜனக்கூட்டமாக நாம் இருக்கும் போது அப்படியான வைகளை உயர்வாக மதிக்க வேண்டும். அப்போஸ்தலர் கூறுவது போன்று, நாம் நித்திய காலமாகக் களி கூறலாம், அதுவும் நல்ல காரணத்தோடு, ஒருவருக்கு ஒருவர் இப்படியாக உதவி செய்வதன் மூலம் கிறிஸ்துவின் சரீரமான சபை அன்பிலே வளரவும், அதிகதிகமாக தலையாயிருக்கிறவரின் சாயலில் வளரவும், இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரராக இருக்க அதிகதிகத் தகுதியுள்ளவர் களாவதற்கு உதவி செய்கிறபடியால் நாம் நித்திய காலமாகக் களி கூறலாம்.

"அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போம்"

–எபி.10:24–

எவ்வளவு அன்பாக அழகான சிந்தனை இங்கே வெளிப்படுத்தப் பட்டுள்ளது! மற்றவர்கள், தங்களோடு இருக்கிறவர்கள் குற்றம் கண்டு பிடிக்க அல்லது அதைரியப் படுத்தும் படியாக இருக்கிறார்கள், அல்லது அவர்களுடைய பெலகீனங்களை தங்களுக்குச் சாதகமாக, சுய நலத்துடன் செயல்படுகிறார்கள் என்று நினைக்கும் போது, புது சிருஷ்டியானது அதற்கு மாறாக செயல்பட வேண்டும். ஒருவருடைய மனதைப்

புண்படுத்தக் கூடிய காரியங்களைச் சொல்லாமல், செய்யாமல் இருக்கும்படியாக, கோபத்தைக் கிளறிவிடாத படி, இன்னும் இது போன்ற தேவையற்ற காரியங்களைச் செய்வதைத் தவிர்க்கும் வண்ணமாக அவரவர்களுடைய குணாதிசயத்தை கவனமாகக் கவனிக்க வேண்டும், ஆனால் அவர்கள் மற்றவர்களை நேசிக்கும் படியாகவும், நல் நடத்தையுள்ளவர்களாக இருக்கும் படியாயும் அவர்கள் செயல்பட வேண்டும்.

ஏன் அப்படிச் செய்யக் கூடாது? முழு உலகத்தினுடையது மாத்திரம் அல்லாது, பொறாமை, சுயநலம், தவறான எண்ணத்துடன் நோக்குவது வார்த்தையிலும், செயலிலும் சிந்தனையிலும் பாவம் செய்யும்படியாக தூண்டுகின்ற பிசாசின், மாம்சத்தின் நிலையும் அப்படியாக இல்லையா? அப்படியென்றால் கிறிஸ்துவின் சரீரமான சபையின் புது சிருஷ்டிகள் இப்படியான செயல்களிலிருந்து தங்களையும், மற்றவர்களையும் காத்துக் கொள்வதோடு, இதற்கு எதிர்மாறான அன்புக் கேதுவாக, நற்கிரியைகளைச் செய்யும் படியாகத் தூண்டக் கூடாதா அல்லது செயல் படக்கூடாதா? இது நிச்சயமாகவே, தேவனுடைய வார்த்தையிலிருந்து வருகின்ற கண்டித்து உணர்த்துதலும், புத்திமதியும் நன்மை விளைவிக்கிறதாயும் நல்லதாயும் இருக்கிறது.

"நாம் சபையாகக் கூடிவருதல்"

"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக் கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்."(எபி.10:25)

"ஏனெனில் இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத் 18:20) என்ற ஆண்டவருடைய வார்த்தை, அவருடைய ஜனங்கள் கூடிவருதலைக் குறித்து, கட்டளையாக அப்போஸ்தலர் மூலமாக கூறியவைகளுக்கு முழுமையாக ஒத்ததாக இருக்கிறது. இப்படி சபை கூடிவருதலின் நோக்கம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. அவைகள் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய விஷயங்களில் முன்னேறு வதற்காக, ஆண்டவர் மேலும், ஒருவருக்கொருவர் காட்டும் அன்பிலும்

அதிகதிகமாக செயல்பட தூண்டுவதற்கு அல்லது உந்தப்படுவதற்கு ஏற்றதான, மேலும் நம்முடைய பிதாவை மகிமைப்படுத்தும்படியாக, அதிகமான நற்கிரியைகளைச் செய்யும்படியாகக் கிடைக்கின்ற தருணங்களாக உள்ளன. அப்படிச் செய்வது சகோதரர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும், நமக்கு தருணம் கிடைக்கும் போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்யும்படியாக அது உதவும். தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். (1 யோவா. 4:20) அதே மாதிரி, நான் ஆண்டவருடைய ஆசீர்வாதங்களையும், அவருடைய ஐக்கியத்தையும் அனுபவிக்கும்படியாக அவரோடு இருக்க விரும்புகிறேன் என்று சொல்லியும், சகோதரர்களைச் சந்திக்கும்படியான தருணங்களை ஒதுக்கி வைத்து விடுகிறவர்களும், அவர்களோடு இருப்பதையும் அவர்களுடைய ஐக்கியத்தையும் விரும்பாதவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம்.

ஒவ்வொரு மனிதனும் எப்படியாவது ஒரு சகவாசத்தைத் தேடுவது இயற்கையானது தான், மேலும் ''இனம் இனத்தைச் சேரும்'' என்ற பழ மொழியும் உண்மையானது என்று அவனுடைய அனுபவத்தின் மூலம் அறிந்திருப்பான். ஆகவே ஆவிக்குரிய மனதை உடையவர்களின் சகவாசம் விரும்பப்படாவிட்டால், அதற்காக வாஞ்சிக்கா விட்டால் அதைத் தேடாவிட்டால், அப்படியான சகவாசத்தை விரும்பும்படியான தருணங்களை நாம் அதிகரிக்காவிட்டால், இவைகள் நம்முடைய ஆவிக்குரிய நிலைமையைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமற்ற நிலைமைக்கு எடுத்துக் காட்டு என்று எண்ணலாம். சுபாவமுள்ள மனிதன் சுபாவமுள்ளவர்களின் சகவாசத்தையும் ஐக்கியத்தையும் நேசிக்கிறான், பிரியப்படுகிறான், ஆனாலும் கூட புது சிருஷ்டியின் அளவற்ற, விலையேறப்பெற்ற நம்பிக்கைகளோடு, ஒப்பிடும்போது அவர்களுடைய பொதுவான உலகப்பிரகாரமான நம்பிக்கைகளும், திட்டங்களும் ஒரு அளவுக்கு உட்பட்டதாக இருந்தாலும், தன்னுடைய சகவாசிகளோடு வியாபார சம்பந்தமான காரியங்களையும், தனக்கு இஷ்டாமானவை களையும் திட்டமிடுகிறான். பரிசுத்த ஆவியினால் நம்முடைய மனங்கள் புதிதாகிறதினாலே மறுரூபமாவதால், ஐக்கியத்திற்காக நாம் வாஞ்சிப்பது அழிந்து போவதில்லை, ஆனால் நாம் ஐக்கியத்திற்கென அற்புதமான இடத்தையும், ஆராய்ச்சி பண்ணவும், விவாதிக்கவும், அதை நாடி விரும்பவும், மாத்திரமல்ல பாவத்தின் சரித்திரத்தையும், புது

சிருஷ்டியானது பிரசவ வேதனைப்படுவதையும், கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், மீட்புக்கென தேவனுடைய திட்டத்தையும், நம்முடைய மீட்பு சமீபமாயிருக்கிறது என்பது போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கின்றவைகளையும், நம்முடைய உன்னத அழைப்பையும், ஆண்டவரோடு உடன் சுதந்திரராக இருப்பதையும் காண்பதற்கான வாய்க்கால்களாக மாற்றப்படுகிறோம். கற்றுக் கொள்வதற்கும், ஐக்கியத்திற்கும் தோழமைக்கும் ஏற்றபடி சிந்திப்பதற்கு எவ்வளவு அதிகமான இடம் அளிக்கிறது பாருங்கள்!

இந்த விஷயங்களைக் குறித்து மற்றவர்களோடு கலந்து ஆலோசிக்கும் சிலாக்கியத்தை விரும்பாத ஒருவரை சில விஷயங்களில் ஆவிக்குரிய விதத்தில் நோயுற்றவராக இருக்கிறார் என்று சொல்வதில் ஆச்சரியமில்லை! அவர் தன்னுடைய வியாதியைத் தன்னால் கண்டு கொள்ள முடிகிறதோ இல்லையோ அவர் அப்படியாகத்தான் எண்ணப்படுகிறார். ஒரு வேளை அவர் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கலாம், மேலும் ஒரு விதமான ஆவிக்குரிய பெருமையினால் பீடிக்கப்பட்டிருக்கலாம். இதன் விளைவாக அவர் தனக் குள்ளாகவே சொல்லிக் கொள்வது என்ன வெனில், நான் அவரைப் பின்பற்றுகிற மற்றவர்களோடு சேர்ந்து படிக்கும்படியாகக் கிறிஸ்துவின் பொதுவான பள்ளிக்குச் செல்ல அவசியம் இல்லை, நான் வீட்டிலிருந்தபடியே தனிப்பட்ட விதத்தில் ஆண்டவரிடத்திலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளுவேன், அவர் எனக்கு தனியாக அதிக ஆழமான, இன்னும் அதிக ஆவிக்குரிய பாடங்களை எனக்குக் கற்றுக் கொடுப்பார் என்பார். ஒரு சிலர் இப்படியான ஆவிக்குரிய தற்பெருமையினால் பீடிக்கப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது. அவர்கள் ஆண்டவருடைய மற்ற சகோதரரைக் காட்டிலும் மேலானவர்கள் என்று நினைப்பதுடன் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையின் பிரகாரம் அல்லாமல், தன்னுடைய வழக்கமான முறையிலிருந்தும், அவர்கள் தங்களைக் குறித்துச் சிந்திப்பதற்கு மேலாக அதிக உயர்வாக சுய விருப்பத்தின்படி நினைப்பதினால், அவர்களுக்கு ஒரு வினோதமான முறையில் ஊழியம் செய்வதற்காக தன்னுடைய வழக்கமான முறையிலிருந்தும், வார்த்தையிலிருந்தும் ஆண்டவர் விலகுவார் என்று எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட சகோதரர், இப்படிப்பட்ட ஒரு இருதய சிந்தையிலும், நடத்தையிலும் இருக்கும் வரை அவர்களுக்கு ஆண்டவருடைய ஆசீர்வாதத்திற்கான ஒரு தனிப்பட்ட வாக்குத்தத்தமும் கிடையாது

என்பதை நினைவு கூற வேண்டும். இதற்கு எதிர்மாறாக ''பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.'' ''நீங்களும் என் கற்பனைகளைக் கைக் கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்'' என்ற ஆண்டவருடைய வார்த்தையின்படி, அவருடைய கற்பனைகளுக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படிகிறவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார். சரியான இருதய நோக்கம் உள்ளவர்களுக்கு, நாம் அவருடைய நாமத்தில் கூடி வரும்படி நியமித்திருக்கிறார் என்பதே போதுமானது; மேலும் இரண்டு அல்லது மூன்று பேராக இருந்தாலும், அவருக்குக் கீழ்ப்படிகின்ற ஒரு சிலருக்கே அவர் விசேஷமான ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணி இருக்கிறார் என்பதும், சபையானது அவருடைய சரீரத்திற்கு அடையாளமாக உள்ளது என்றும், அது''சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்படுகிறது'' என்றும், அது தன்னை பக்தி விருத்தி அடையப் பண்ணி, ஆவியின் கிருபைகளிலும், கனிகளிலும் அங்கங்களாயிருக்கும்படி ஒருவரை யொருவர் எழுப்புதல் பண்ண வேண்டும் என்பதை அறிவதே போதுமானது. சில வேளைகளில் பிரச்சனை என்பது ஆவிக்குரிய தற்பெருமை அல்ல, ஆனால் ஓரளவுக்கு, தேவனுடைய வார்த்தையை உதாசீனம் பண்ணுவதினாலும், மனுஷீக எண்ணங்களின் மேல் சார்ந்து நிற்பதினாலேயாகும். ''எல்லோரும் கர்த்தரால் போதிக்கப் பட்டிருப்பார்கள்'' என்ற வசனத்தை எடுத்துக் கொண்டு, அது ஒருவரிடத்திலிருந்து ஒருவரை பிரித்துத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிற போதனை என்கிறார்கள். ஆனால், அப்போஸ்தலர் களுடைய பழக்கங்களும், அவர்களுடைய உபதேசங்களும், ஆண்டவருடைய ஜனங்களின் அனுபவங்களும், இப்படியாக நினைப்பதற்கு எதிர் மாறாக உள்ளது.

இருந்தாலும், இன்னொரு பக்கம், நாம் எண்ணிக்கைக்கும், ஆடம்பரத்திற்கும், புகழ்ச்சிக்கும் யாசிக்கக் கூடாது, ஆனால் ஆண்டவரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் ''உங்களில் இரண்டு அல்லது மூன்று பேருக்கு'' என்பதாகும், மேலும் அப்போஸ்தலர் மூலமாக வருகின்ற புத்திமதி ''சபை கூடிவருதலை விட்டு விடாதிருங்கள்'' என்பதாகும். ஒரு பிரிவினையின் ஆவியை ஆண்டவரும் அப்போஸ்தலரும் இங்கே கற்றுக் கொடுக்கவில்லை, சபை கூடிவரும் போது அது உலகப்பிரகாரமான கூடுதலாக, ஜனங்கள் ஒருவரையொருவர்

சந்திக்கும் போது, அப்படியாகக் காணப்படக் கூடாது, ஆனால் அது கிறிஸ்தவ கூடிவருதலாக, ஆண்டவருடைய கிருபையை அறிந்து கொண்டவர்கள் கூடி வருகிற இடமாக இருக்க வேண்டும் என்கிறார். உலகப்பிரகாரமானவர்கள் இந்தக் கூட்டத்திற்கு வர வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. ''நீங்கள் உலகத்தாரல்லாதது'' போன்று அவர்களும் உங்களுடையவர்களல்ல. அவர்கள் சங்கீதத்தினாலோ அல்லது வேறு அம்சங்களினாலோ கவரப்பட்டால், ஆண்டவரின் கட்டளையின் நோக்கம் நிறைவேறாது போகும், ஏனெனில் எங்கே உலகப்பிரகாரமான காரியங்கள் அதிகமாக ஈர்க்க வேண்டும் என்ற வாஞ்சை காணப்படுகிறதோ, அப்போது சபை கூடிவருதலின் முக்கிய நோக்கம் மறைந்து போகும். அந்த முக்கியமான நோக்கம்: ''உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுவதும்,'' ''ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாகும்படி செய்வதும்,'' ''மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்பதும்'' ஆகும். (யூதா: 20 ; 1 தெச. 5: 11 ; எபி 10 : 24)

தீய நோக்கம் உள்ளவர்கள் அவர்களுக்கு விருப்பமிருந்தால் ஒன்றாகக் கூடட்டும்; நல் நடத்தையுள்ளவர்கள் தங்களைப் போன்றவர் களோடு ஒன்றாகக் கூடட்டும்; ஆவியினால் மறுபிறப்பைப் பெற்றவர்கள் சபையாகக் கூடித் தங்களுடைய பக்தி விருத்திக்கு ஏதுவாக ஆண்டவர் தன்னுடைய வசனத்தில் காட்டியிருக்கிறபடி செய்யட்டும். ஆனால் அவர்கள் இதை உதாசீனப்படுத்தினால், அனுகூலமற்ற விளைவுகளின் குற்றச்சாட்டு சபையின் தலையாயிருக்கிறவர் மேலேயோ, அல்லது சரியான வழியை வற்புறுத்தித் தங்களுடைய சொந்த ஜீவியத்தில் அதை மாதிரியாக நடந்து காட்டிய அப்போஸ்தலர் மேலேயோ சுமத்தக் கூடாது.

வெளியாட்கள் சபைக் கூட்டங்களுக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படக் கூடாது என்பதை இது குறிக்க வில்லை. அவர்கள் உள்ளே வந்து''உங்களுடைய ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பார்களென்றால்,'' உங்களுடைய பரிசுத்த சம்பாஷனையினால் ஆசீர்வதிக்கப்பட்ட நற்கிரியைகளைச் செய்யும்படியாக, அன்பாயிருக்கும்படியான புத்திமதிகளுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட திவ்விய வார்த்தை போன்றவைகளுக்கு விருப்பம் காட்டி உள்ளே வர விரும்பினால் அவர்கள் தடை பண்ணப்படக் கூடாது. 1 கொரி. 14:24 ல் அப்போஸ்தலர் இதை

மிகத் தெளிவாக அறிவிக்கிறார். நாம் குறிப்பிட விரும்புகிற கருத்து என்ன வெனில் ''சபை கூடி வருதல்'' என்பது அவிசுவாசிகள் கூடி வருவது என்பதல்ல, அந்த இடத்தில் பாவிகளுடைய மனங்களை உடைக்கும் படியாக முயற்சிகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படுகின்றன. பாவி வருவதற்கு அனுமதி வழங்கப் பட வேண்டும், ஆனால் ஆண்டவருக்கென அர்ப்பணித்தவர்கள் மத்தியில் காணப்படும் கிரமத்தையும், அன்பையும் காணும்படி தனித்து விடப்படல் வேண்டும். இவ்விதமாக அவன் முழுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும், சபையில் காணப்படுகிற பரிசுத்தத்தின் ஆவியையும் தூய்மையையும் கண்டு அவனுடைய பாவத்தினிமித்தம் கண்டித்து உணர்த்தப்படுவான். மேலும் அவன் ஆண்டவருடைய ஜனங்கள் மத்தியில் காணப்படுகின்ற கிரமத்தையும், சத்தியத்திலுள்ள அழகையும் நோக்குவதின் மூலம் உபதேசத்தைக் குறித்த தன்னுடைய பிழைகளை உணர்ந்து கொள்ள வாய்ப்புண்டு. (1 கொரி. 14: 23–26 ஐ ஒப்பிட்டு பார்க்கவும்)

இது ஆண்டவருடைய ஜனங்களின் கூட்டங்களின் பொதுவான நோக்கத்தைப் பார்க்கும்படி செய்கிறது.

கூட்டங்களின் நோக்கம்

முதலாவதாக, மற்ற பகுதிகளில் கூறியது போன்று, இதைக் குறித்துக் சொல்வதென்ன வென்றால், ஆண்டவருடைய ஜனங்களுக்கு வார்ப்பு இரும்பு போன்று உறுதியான சட்டதிட்டங்கள் கிடையாது. அவர்கள் தங்களுடைய நாட்டின், நேரத்தின் மாறுபடுகின்ற நிலைமைக்கு ஏற்ப தங்களை அநுசரித்துக் கொள்ளும்படி சுயாதீனத்துடன் இருக்கிறார்கள்; தெளிந்த புத்தியின் ஆவியை அப்பியாசப் படுத்த சுயாதீனம் உடையவர்களாய் இருக்கிறார்கள்; பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தை நாடவும், அன்பின் பிரமாணத்தின் கீழாக ஆண்டவரின் குணாதிசயத்தின் சாயலை எந்த அளவிற்கு அவர்கள் பெற்று இருக்கிறார்களோ அதை வெளிப்படுத்தவும் சுயாதீனம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அந்த அன்பின் பிரமாணம், நிச்சயமாகவே ஆரம்ப காலச் சபையின் பழக்கங்களிலிருந்து, புதியவைகளை அல்லது மாற்றங்களைக் கொண்டு வருவது சம்பந்தமாக பணிவை வற்புறுத்தும். அது அடிப்படையான மாற்றங்கள் தேவை என்று அறிந்து கொள்ளும் சமயத்தில் தவிர மற்ற சமயங்களில் அப்படிச் செய்ய தயக்கம் காட்டும். அப்படியே

செய்யும் போதும் ஆதிகால சபையின் பழக்கம், புத்திமதி, கண்டிப்பு ஆகியவற்றின் கருத்துக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

ஆதிகால சபையில், அப்போஸ்தலர்கள் விசேஷமான போதகர்களாக இருந்தார்கள் என்ற உதாரணத்தைப் பார்க்கிறோம். மூப்பர்கள் மேய்ப்பர் வேலையை, சுவிசேஷ வேலையை, தீர்க்கதரிசனம் சொல்லுவதை அல்லது பொதுவான இடங்களில் பேசுவது போன்றவை களைச் செய்தார்கள் என்பது நமக்கு உதாரணமாக இருக்கிறது. குறிப்பாக 1 கொரி. 14 ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஒரு உதாரணத்திலிருந்து நாம் காண்பது என்ன வெனில் சபையில் உள்ள ஒவ்வொரு அங்கமும் ஆண்டவரை மகிமைப்படுத்தவும், சகோதரருக்கு ஊழியம் செய்யவும், தன்னை இதில் அப்பியாசப்படுத்திக் கொள்வதுடன், ஆண்டவரிலும் சத்தியத்திலும் பலமுள்ளவனாக வளரவும், மற்றவர்களுக்கு உதவி செய்யவும், அதன் நிமித்தம் மற்றவர்களால் உதவி செய்யப்படவும், ஒவ்வொருவரும் தனக்குள்ள தாலந்தையும், வரத்தையும் தூண்டி விடும்படி அப்போஸ்தலர்களால் உற்சாகப்படுத்தப்பட்டனர். அப்போஸ்தலருடைய நாளில் நடந்த ஒரு சாதாரண சபைக் கூட்டத்தைப் பற்றிய விஷயத்தை இந்த நாளில் முழுமையாக விவரமாகப் பார்க்க முடியாது. ஏனெனில் வெளியில் உள்ளவர்களை நம்பச் செய்யும்படி ஆதிச் சபையினர் மீது தற்காலிகமாகக் கொடுக்கப்பட்ட, வினோதமான ''ஆவியின் வரங்கள்'' நிமித்தமும், மேலும் இது தனிப்பட்டவரை உற்சாகப் படுத்தும்படி கொடுக்கப்பட்டது; இந்த வரங்கள் கொடுக்கப் பட்டிருக்காவிட்டால், எந்த நபரையும் பக்தி விருத்தி அடையப் பண்ணவோ, எவ்விதத்திலாவது பிரயோஜனப்படுத்த யிருக்கவோ முடியாது. இருந்த போதிலும், அப்போஸ்தலர்களால் ஆதரிக்கப்பட்ட இந்த ஆரம்ப காலத்திய பழக்கத்திலிருந்து சில அரிய, பிரயோஜனமுள்ள பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம், இவைகளை ஆண்டவருடைய ஜனங்களின் சிறு கூட்டங்கள் எல்லா இடத்திலும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம்.

இதில் முக்கியமான பாடம் என்னவென்றால், ''உங்களை மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதிப்படுத்திக் கொண்டு'' ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பது என்பதாகும். ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பல மூப்பர்கள் வழக்கமாக பிரசங்கிப்பது பழக்கமாக இருந்தது கிடையாது, இல்லாவிட்டாலும் எல்லா பக்தி விருத்திக்கும் ஏதுவான வைகளைப் போதிப்பது அல்லது எழுப்புதல் செய்யும்படியாக

முயற்சிப்பது போன்றவைகள் பழக்கத்தில் இருந்தது கிடையாது. ஒவ்வொரு அங்கமும் தன்னுடைய வேலையைச் செய்வதுதான் பழக்கமாயிருந்தது, மூப்பர்களுடைய வேலை முக்கியமானதாக இருந்தது, அது அவர்களுடைய திறமைக்கு, வரங்களுக்கு ஏற்றவாறு இருந்தது. இது மிகவும் உதவி செய்யக்கூடிய முறையென்றும், இதன்படி செவிசாய்த்தவர் களுக்கு மாத்திரமல்ல அதில் பங்கேற்றவர்களுக்கும் ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது என்பதைக் காணலாம். மிகவும் மோசமாக பேசக் கூடியவர், அல்லது கல்வி அறிவே இல்லாதவர் கூட, அவருடைய இருதயம் ஆண்டவர் மேல் அதிக அன்புள்ளதாயும், அவர்மேல் பக்தியுள்ளதாயும் இருந்தால், செவி கொடுக்கிற அனைவருக்கும் விலையேறப் பெற்றதாயிருக்கிற சிந்தனைகளைக் கொடுக்க முடியும் என்பதை யார் அறியாமல் இருக்க முடியும்! அப்போஸ்தலர் இங்கு விவரமாகக் கூறுகின்ற கூட்டங்களின் தரமானது சபையினால் நடத்தப்பட்ட பெருவாரியான கூட்டங்களுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இந்தக் குறிப்பு காட்டுகிறபடி அது எல்லோரும் கலந்து கொண்ட ஒரு கூட்டமாக இருந்தது; அதை இக்காலத்திற்கு ஏற்றவாறு சொல்ல வேண்டு மென்றால், ஒருவர் புத்திமதி கூறலாம், இன்னொருவர் வியாக்கியானம் கூறலாம், இன்னொருவர் ஒரு கீர்த்தனையைப் பாடச் சொல்லலாம், இன்னொருவர் தன்னுடைய மன நிலைக்கும், அனுபவங்களுக்கும் சரியானது என்று தோன்றுகின்ற ஒரு கவிதையை வாசிக்கலாம், இன்னொருவர் கலந்து உரையாடுகின்ற விஷயத்திற்குப் பொருத்தமான சில வேத பகுதிகளைக் குறிப்பிடலாம்; இப்படியாக ஆண்டவர் ஒவ்வொருவரையும், சபையின் எல்லா அங்கங்களையும் ஒவ்வொருவரும் பக்தி விருத்தியடையவும், ஒவ்வொருவரும் எழுப்பப்படவும், ஒருவருக்கொருவருடைய நலனுக்கேதுவாகப் பாடுபடவும் உபயோகிக்கலாம்.

ஆதிசபையில் ஒருபோதும் பிரசங்கம் இருந்ததில்லை என்பது எங்கள் கருத்தல்ல. அதற்கு மாறாக அப்போஸ்தலர்கள் செய்த இடமெல்லாம், அவர்கள் தேவனுடைய வார்த்தையை வியாக்கியானம் பண்ணக் கூடிய விசேஷ திறமை உள்ளவர்கள் என்றே கருதப் பட்டார்கள். அவர்கள் ஒரு வேளை சிறிது நேரத்திற்கு மட்டுமே இருந்தாலும், அவர்கள் இருந்த வேளையில் அவர்களே பொதுவான இடங்களில் பேசினார்கள், அதே நேரத்தில் எல்லோரும் கலந்து கொள்ளக் கூடிய பொதுவான, சமுதாயத்திற்குரிய கூட்டங்களும் நடை பெற்றன என்று நம்புகிறோம். அப்போஸ்தல உபதேசங்களைக் குறித்த வழக்கத்தின்படி, அப்போஸ்தலர்

அல்லாதவர்களும் இந்த வழக்கத்தைப் பின்பற்றினார்கள். உதாரணமாக பர்ணபா, தீமோத்தேயு, அப்பொல்லோ, தீத்து போன்றவர்களைக் கூறலாம். இமனேயும், பிலேத்தும், மற்றவர்களும் இதே சிலாக்கியங்களை பெற்றார்கள், ஆனால் அவர்கள் அவைகளைத் தவறான முறையில் பயன்படுத்தியதோடு, தீமைக்கேதுவான நாட்டமுடையவர்களா யிருந்தார்கள்.

எங்கே ஆண்டவர் உறுதியான பிரமாணத்தை ஏற்படுத்த வில்லையோ, அந்த இடத்தில் நாமோ அல்லது மற்றவர்களோ ஒரு பிரமாணத்தை ஏற்படுத்துவது முறையாகாது. இருந்தாலும், நாங்கள் சில யோசனைகளைக் கூறுகிறோம், சபையில் சில ஆவிக்குரிய தேவைகள் உண்டு, அவைகள் கவனிக்கப்பட வேண்டியது அவசியம்.

1) தீர்க்கதரிசனம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும், நல்நடத்தைக் குரிய விஷயங்களிலும் இன்னும் கிறிஸ்தவ கிருபைகளை வளர்க்க வேண்டிய விஷயங்களிலும் போதனை அவசியம்.

2) பல பாஷையை உபயோகிக்கும் விதத்தில் ஏறக்குறைய வித்தியாசமான முறைகள் இருப்பதால் ஓரளவுக்கு ஒளிவு மறைவற்ற மனது இருப்பதோடு, ஆவிக்குரிய விஷயங்களை அறிந்து கொள்ளக் கூடிய திறமை, யாரெல்லாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறார்கள், யாரெல்லாம் அறிவிலும், கிருபையிலும் முதிர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதை அறியக் கூடிய திறமை எல்லாருக்கும் ஒரே மாதிரியாக இல்லாதபடியால், அவனவன் கற்றுக் கொண்டவைகளைக் குறித்து அவனவனுடைய யோசனையை வெளிப்படுத்தும்படி உற்சாகப் படுத்தப்படல் வேண்டும், அதற்கான தருணம் கொடுப்பது நல்லது.

3) சபையினால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட சத்தியத்திலிருந்து வித்தியாசமான கருத்தை உடையவருக்கு அதைச் சொல்ல கூடிய நிறைய தருணங்கள் கொடுக்கப்படும்படி, வழக்கமாக, நடக்கின்ற கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட வேண்டும்.

4) ஆண்டவருடைய பிள்ளைகளின் கூட்டங்களில் பக்திக்குரிய ஆராதனை மாத்திரம் இருந்தால் போதாது, ஆனால் அனுபவப்பூர்வமாக நோக்கும் போது சகோதரர்கள், தான் ஆண்டவர் மேல் கொண்டுள்ள பக்தியை, சாட்சியின் மூலம், அல்லது ஜெபத்தின் மூலம் தன்னுடைய

வாயினால் அறிக்கை செய்யும் போது, அதற்குச் செவி கொடுக்கிற ஒவ்வொருவருக்கும் பிரயோஜனமாக உள்ளது.

உபதேசம் இன்னும் அவசியம்

முதலாவது ஆலோசனையைப் பற்றிய விளக்கம்: பொதுவாக உபதேசங்களைக் குறித்து அலட்சியமாகப் பேசுகிற ஒரு நேரத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அதுவும் கூட கிரியைகளுக்கும் நல் நடத்தைகளுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது உபதேசமும், விசுவாசமும் முக்கியத்துவம் உள்ளது அல்ல என்று நிறைய பேர் சொல்லுகிற காலம் இது. நாம் இதை ஒத்துக் கொள்ள முடியாது, ஏனெனில் இது திவ்விய வார்த்தைக்கு முற்றிலும் வேறுபட்டு இருக்கிறதைக் காண்கிறோம். தேவனுடைய வசனத்தில் விசுவாசம் முதல் இடத்திலும் கிரியைகள் இரண்டாவது இடத்திலும் வைக்கப்பட்டுள்ளன. அதைத்தான் ஆண்டவரும் ஏற்றுக் கொள்ளுகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம், நம்முடைய விசுவாசத்தின் படி அவர் பலன் அளிப்பார், இருந்தாலும் ஒரு நல்ல விசுவாசம் நம்முடைய பெலகீனமான மண்பாண்டம் அனுமதிக்கும் அளவுக்கு, நற்கிரியைகளைக் கொண்டு வரும் என அவர் எதிர்பார்ப்பது முறையானதே. வேதாகமத்தில் எல்லா இடங்களிலும் சொல்லப் பட்டிருக்கிறபடி விசுவாசத்தின் முறை இதுதான். ''விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.'' ''நம்முடைய விசுவாசம் உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.'' (எபி. 11:6 ; 1 யோவா. 5:4) தேவன் மேலும், அவருடைய வாக்குத்தத்தங்கள் மேலும் ஒருவன் விசுவாசம் வைக்காவிட்டால் அவன் சரியான விதத்தில் ஜெயங் கொள்ளுகிறவனாக இருக்க முடியாது. தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாசம் வைப்பதற்கு அவன் அவைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். விசுவாசத்தில் பலமுள்ளவனாக வளரும் திறமையும் சந்தர்ப்பமும், யுகத்திற்கென தேவன் வைத்திருக்கின்ற திவ்விய திட்டத்தையும் அதோடு சம்பந்தப்பட்ட மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்களையும் அவன் புரிந்து கொள்ளும் அளவிற்கும் ஏற்றவாறு இருக்கும். ஆகவே உபதேசம், போதனை மிக முக்கியமானதாக இருக்கிறது. அது தேவனுடைய ஜனங்கள் பெற்றிருக்கவும், அதை அனுபவிக்கவும் தேவனுக்கடுத்த காரியங்களில் உலகத்தின் அறிவுக்கு அப்பாலும் அறிவதற்கு மாத்திரமல்ல, ஆனால் விசேஷமாக இந்த அறிவானது எல்லா

நம்பிக்கைகளுக்கும், நோக்கங்களுக்கும், நடத்தையின் மீதும் அது காட்டக் கூடிய செல்வாக்குக்காக அது தேவையாயிருக்கிறது. ''அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும், அவர் சுத்தமுள்ளவாரயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் '' (1 யோவா. 3:3) என்ற வேத வாக்கியம் மேற் கூறியவைகளோடு முற்றுமாக ஒத்துப் போகிறது. தன்னை சுத்திகரிக்க முயற்சிக்கிறவன் அவனுடைய நடத்தையை சுத்திகரிக்க, ஜெயங்கொள்ள, வேதம் ஆரம்பிக்கிற மாதிரி இருதயத்தோடு ஆரம்பித்து முன்னேறிச் செல்ல வேண்டும், சுத்திகரிப்புக்கு ஊக்குவிக்கும் வாக்குத்தத்தங்களை உபயோகித்து முன்னேற வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால் கிறிஸ்துவின் உபதேசங்களை அறிந்து கொள்ளுவதாகும்.

இருந்தாலும் கிறிஸ்துவின் உபதேசங்களையும், மனுஷீக உபதேசங்களையும் மிகத் தெளிவாக அறிந்து வேறுபடுத்துவது அவசியம். கிறிஸ்துவின் உபதேசங்கள் என்பது, அவரும் அவரால் ஊக்குவிக்கப்பட்ட அப்போஸ்தலர்களும் புதிய ஏற்பாட்டில் நமக்கு முன்பாக வைத்திருப்பவைகளாகும். மனுஷீக உபதேசங்கள் மனிதனுடைய சமயக் கோட்பாடுகளில் காணப்படுகின்றன, அவைகளில் பெரும் பாலானவைகள், ஆண்டவருடைய உபதேசங்களுக்கு மாறாகவும், அபாயமான வகையில் வித்தியாசமாக இருப்பதோடு, ஒன்றுக்கொன்று மாறுபட்டதாயும் உள்ளன. ஆகவே நாம் உபதேசங்களை ஒருமுறை பெற்றுக் கொள்வது போதாது, ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறபடி, தேவ கிருபையென்னும் பொக்கிஷத்தை மிகவும் ஒழுகல் உள்ள சாதாரண மண்பாண்டங்களில் பெறுகின்றோம், ஆகவே நாம் பெறுவதை நிறுத்திவிட்டால், நமக்கு இல்லாமல் போகும். இதனால் ''வார்த்தைக்கு வார்த்தை கட்டளைக்குக் கட்டளை'' என்று நாம் உடையவர்களாயிருக்க வேண்டும்; மேலும் நாம் தொடர்ந்து, யுகத்திற்கான திவ்விய திட்டத்தை நாம் தேவ வழிமுறைகள் நமக்கு அளிக்கின்ற எவ்விதமான உதவிகள் அல்லது ஒத்தாசைகளைப் பயன்படுத்தி, நம்மால் இயன்றவரை அப்போஸ்தலருடைய கட்டளைகளை ''கேட்கிறதை மறக்கிறவனா யிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து,'' கீழ்ப்படிய முயற்சிப்பதோடு அந்த வார்த்தையின் படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும். (யாக் 1:22–25)

இரண்டாவது ஆலோசனை: இது முதலாவது ஆலோசனையைப் போன்று உடனடியாக முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. எல்லோரும் அல்ல ஆனால் அனேகர் நினைப்பது என்னவென்றால், சத்தியத்தை மிகவும் தெளிவாக மிகவும் சரளமாக, மிகவும் சரியான விதத்தில் சொல்லத் தகுதியுள்ளவர்கள் மாத்திரம் அதைச் சொல்ல வேண்டும், மற்றவர்கள் அமைதி காத்து, செவி சாய்த்து கற்றுக் கொள்ள வேண்டும். இப்படியாக கூறுவது அனேக விதங்களில் சரியாயிருக்கிறது. திவ்விய திட்டத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாதவர்கள், மேலும் போதிக்கத் தகுதியில்லாதவர்கள் யாராயினும் போதிக்கும் படியாக நியமிக்கப்படக் கூடாது, அல்லது அவர்களுடைய வார்த்தைகளைப் போதனை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்டவர்களை, மூப்பர்கள் விஷயத்தில் உள்ளது போன்று போதிக்கும்படி நியமிப்பதற்கும், ஒரு கூட்டம் ஒழுங்குபடுத்தி அதில் புது சிருஷ்டியின் எல்லா அங்கங்களும் சுருக்கமாக அவர்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும், கேள்விகள் கேட்பதற்கும் இடையில் ஒரு பெரிய வித்தியாசம் உள்ளது. ஆனால் அவர்களுடைய கேள்விகளோ, சந்தேகங்களோ, அல்லது அவர்களால் சொல்லப்பட்டவைகளோ, சபையினால் கூட்டத்தின் கருத்து என்று எடுத்துக் கொள்ளப் படக் கூடாது என்ற மனப்பான்மையுடன் செய்யப் பட வேண்டும். கேள்விகள் என்ற முறையில், இந்த கூட்டங்களில் ஒரு வேளை தவறான கருத்துக்கள் சொல்லப்படலாம், இந்த கருத்துக்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு, அல்லது அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல ஆனால் அவைகள் கேலி செய்யப்பட வேண்டும் என்ற நோக்குடன் சொல்லப்படலாம். ஆனால் தவறான கருத்தை ஆதரிக்கும் எந்த முயற்சியையும், மனச்சாட்சியை மீறி வராதபடி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இப்படியான முறை, சத்தியத்தில் முன்னேற்றம் அடைந்துள்ள ஒருவருடைய முன்னிலையில், அவருடைய விசுவாசத்திற்கு வேதாகம ரீதியாக ஒரு காரணத்தைக் காட்டக் கூடிய திறமை உள்ளதோடு, ஆண்டவருடைய வழியை இன்னும் பூரணமாகக் காட்டக்கூடியவர் முன்னிலையில் தான் செய்யப்பட வேண்டும். இப்படியான ஒரு வழியினால் என்ன பயன் வரக்கூடும் என்று கேட்கப்படுகிறதா? நாம் பதில் கூறுகிறோம். அனேக தடவைகளில் பயன் வந்ததைக் கண்டிருக்கிறோம்; அனேக தடவைகளில் கடினமாயும், சில வேளைகளில் விஷயங்களை

எளிதான முறையிலும், நேரிடையாகவும் சொல்லுவது முடியாததா யிருக்கிறது; மேலும் எல்லா மனங்களும், எவ்வளவுதான் உண்மை யுள்ளவைகளாக இருந்தாலும், ஒரு விஷயத்தை அதே விளக்கத்திலிருந்து ஒரே மாதிரியாகத் தெளிவுடன் கிரகித்துக் கொள்ளுவது முடியாததா யிருக்கிறது. ஆகவே கேள்விகளின் முக்கியத்துவமும், ஒரே உண்மையை பல்வேறு விதங்களில் சொல்லுவதும், நம்முடைய ஆண்டவருடைய உவமைகளில் விளக்கமாகக் கூறப்படும் போது வித்தியாசமான நிலமைகளின் வழியாக விஷயத்தை எடுத்துக் கூறுவதும், முழு விஷயத்தையும் குறித்த முழுமையான, எல்லோரும் ஒத்துக் கொள்ளக் கூடிய கருத்தைக் காட்டுகிறது. மேலும், ஒரு உண்மையை முட்டாள் தனமாக, ஏதோ ஒரு விதத்தில் தவறாகக் கூறும் போது, சில வேளைகளில், அதிகத் தெளிவான, அதிகம் உணர்த்தக்கூடிய வகையில் சொல்லப்பட்ட முறை செய்யத் தவறியதை, அது மனதிற்குள் புக வழி வகுத்து விடுகிறது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். பேசுகிறவரின் திறமையின்மை, சில விஷயங்களில் கேட்கிறவரின் கருத்தும், விவேகமும் இருப்பதைப் போன்ற தாழ்ந்து இருக்கும் போது அவ்வாறு நடக்கிறது. எப்படிப்பட்ட முறையிலாவது சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு, வாஞ்சையுள்ள இருதயங்களில் நிலைகொள்ளு மானால் நாம் மகிழ்ந்து களி கூறலாம், அப்போஸ்தலர் கூறுகிறபடி: ''சிலர் கிறிஸ்துவை வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது அறிவிக்கிறார்கள்.'' ஆனாலும் சொல்லப் பட்டவைகளுக்குப் பின்னால் தவறான நோக்கம் இருக்கும் போது நாம் மிகவும் துக்கப்பட வேண்டியதிருந்தாலும், மற்ற விஷயத்தில் நாம் கண்ட மாதிரி, சொல்லப்பட்டது சரியான முறையில் சொல்லப்படாவிட்டாலும் ஆண்டவரைப் பற்றிய சரியான அறிவுக்குள் எவராவது கொண்டு வரப்படும்போது மாத்திரமே நாம் களி கூறலாம். ஆண்டவரையும், அவருடைய சத்தியத்தையும், சகோதரரையும் நாம் நேசித்து ஊழியம் செய்ய விரும்புகிறோம், ஆகவே நாம் வாஞ்சிக்கிற பலன்களைக் கொண்டு வருகின்ற எதிலும் நாம் களிகூற வேண்டும். மேலும் இது உண்மையான விஷயம் என்று அறியும் போது அதற்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் நாம் ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். கருத்து இல்லாதவர்கள், திறமையற்றவர்கள் சபையில் போதிக்க ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இது குறிப்பிடவில்லை, அப்படியில்லாவிடினும் கருத்தற்ற முறையில் கூறப்பட்ட வைகள்தான் பொதுவாக மிகவும் வெற்றிகரமானதாக இருக்கும் என்றும் கற்பனை செய்யக் கூடாது. உண்மையான நிலை இதற்கு

எதிர்மாறாக உள்ளது. எப்படியாகிலும், சில வேளைகளில் சில மனங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் வாய்க்காலாக இருக்கிறது என்பதைக் காண்கிறபடியால் இதை முற்றிலும் ஒதுக்கி வைத்து விட முடியாது. ஆதி சபையில் இது பழக்கத்தில் இருந்தது.

நம்முடைய மூன்றாவது ஆலோசனை : நம்மிடத்தில் சத்தியமிருக்கிறது என்று திட்டவட்டமாக எவ்வளவுதான் நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும், கூட்டத்தின் தலைவரால் அல்லது முழு சபையினரால் தவறு என்று கருதப்பட்ட எல்லாவற்றையும் விலக்க வேண்டும், என்பதற்காகச் சொல்லப்பட்ட எதிர் மாறான கருத்துகளுக்கும், கேள்விகளுக்கும் கதவை அடைத்து பூட்டு போட்டுவிடுவது நிச்சயமாகவே நமக்கு ஞானமற்ற செயலாகும். முற்றிலுமாக விலக்க வேண்டும் என்பதற்கு ஒரு வரம்பு மாத்திரம் இருக்க வேண்டும். உதாரணமாக புது சிருஷ்டிகள் கூடிவருவது, மதசார்பற்ற, உலகப் பிரகாரமான சாஸ்திரங்களையோ, தத்துவங்களையோ ஆராய்வதற்காக அல்ல, ஆனால் திவ்விய வெளிப்பாட்டைப் படிப்பதற்காக மாத்திரமே என்று உணர்ந்து கொள்ள வேண்டும். சபையினர் திவ்விய வெளிப்பாட்டைப் படிக்கும்போது, முதலாவதாக கடைசியாக, எப்பொழுதுமே கிறிஸ்துவின் உபதேசங்களின் அடிப்படை கருத்துகளுக்கும் (இதை எந்த அவயவமும், மாற்றவோ, திருத்தவோ, அல்லது கேள்வி கேட்க அனுமதிக்கவோ கூடாது) தற்போதைய உபதேசங்களின் கலந்துரையாடலுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்; ஆழ்ந்த உபதேசத்தைக்குறித்த கலந்துரையாடல் எப்படியாயினும் அடிப்படைகக் கருத்துக்களோடு ஒத்ததாக காணப்பட வேண்டும். கலந்துரையாடுபவர்களுக்கு எப்பொழுதுமே சொல்லுவதற்கு தங்கு தடையின்றி வாய்ப்புக்கள் கொடுக்கப்படல் வேண்டும், அவர்கள் சொல்வதைக் கேட்பதற்கென கூட்டங்கள் இருக்க வேண்டும். ஆனாலும் அவர்கள் சொல்வதை திரும்பத் திரும்ப கேட்க வேண்டும் என்றோ, எல்லா கூட்டங்களிலும் ஏதோவிதமான பொழுது போக்கு வேளையினால் குழப்ப நிலையை உண்டு பண்ணவோ, கவனத்தை திசை திருப்பவோ அனுமதிக்கப்பட வேண்டும் என்றோ பொருள் படாது. அவருடைய பொழுது போக்கு வேலைக்கு, ஒரு தகுதியான நேரத்தில் சத்தியத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற சிலர் முன்னிலையில், செவி சாய்ப்பதற்கும், நல்ல கலந்துரையாடுவதற்கும் வேளை கொடுக்கலாம். அப்படி கலந்துரையாடல் செய்வது வேதத்திற்கு

முரண்பாடானது என்று சபையினர் கூறினால், இப்படிப்பட்ட விஷயத்தை எடுத்துச் சொன்னவரும் அது வேதத்திற்கு முரணானது என்று நிச்சயப்படுத்திக் கொள்ளாவிட்டால், அவர் குறைந்த பட்சம் ஒரு வருடமாவது அந்த விஷயத்தைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவதைத் தவிர்ப்பாராக; அதன் பின்னர் தவறான முறையில் இன்னெரு முறை அவர் சொல்வது கேட்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பாராயின், (அது கொடுக்கப்படுகிற தோ இல்லையோ) சபையினர் அவர் சொல்வதைக் கேட்கவோ பரிசீலிக்கவோ தகுதியுள்ளது, அல்லது தகுதியில்லாதது என்பதைக் குறித்துச் சிந்ததித்து முடிவு செய்ய வேண்டும்.

நாம் எதை வற்புறுத்துகிறோமென்றால், இப்படியாக, எண்ணத்தை வெளிப்படுத்த சில வழிகள் இல்லாவிட்டால், இரண்டு ஆபத்துகளை சந்திக்கக் கூடும். முதலாவதாக, கிறிஸ்துவ பேர் சபைகளில் இப்பொழுது காணப்படுகின்ற நிலைமையில் விழும் அபாயம். வழக்கமாக நடைபெறுகிற சபைக் கூட்டங்களில், சொல்ல விரும்புகிறவர்கள், அதைச் செய்ய முடியாதபடி, அவர்கள் கேட்கப்படாதபடி, ஒவ்வொரு வழியும் கவனமாக அடைக்கப்பட்டிருக்கிறபடியால், அவர்களால் எதுவும் சொல்ல முடியாது. மற்றொரு அபாயம் என்னவெனில், தனிப்பட்ட ஒருவர் தன்னுடைய கருத்து உண்மையானது என்ற கொள்கையுடன் இருக்கும் போது, அது எவ்வளவு தான் நியாயமற்றதாயும், தவறானதாக இருந்தாலும் கூட, அது ஏற்றமுறையில் கேட்கப்படாத பட்சத்தில், திருப்தியடைவே மாட்டார், ஆனால் அந்த விஷயத்தை தொடர்ந்து நிர்பந்தித்துக் கொண்டிருப்பார்; ஆனால் அதே சமயத்தில் ஏற்ற முறையில் அவரிடம் கேட்கப்பட்டிருந்தால், அவருடைய வாதத்தில் உள்ள தவறைக் குறித்து அவர் உணர்வடையாவிட்டாலும், ஏற்கனவே அவருடைய யோசனையை கேட்டு நிராகரித்தவர்கள் மேல் அந்த விஷயத்தை மறுபடியும் கொண்டுவருவது பலன் அளிக்காது என்று அவருக்கு உணர்வு வந்திருக்கும்.

எங்களுடைய நான்காவது ஆலோசனை: அறிவு பெருக்கம், பயபக்தியிலிருந்து குறைவுபட அதிக வாய்ப்பக்களிக்கக் கூடியதாக இருக்கிறது.இது விசித்திரமாகத் தோன்றினாலும் இது இப்படித்தான் இருக்க வேண்டும். நம்முடைய கிரகிக்கும் தன்மை மிகவும் குறைவாக இருக்கிறதைக் காண்கிறோம்; மேலும் மத சம்பந்தமான விஷயங்களுக்கு

நமக்கு நேரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது; நம்முடைய கவனம் வேகத்துடன் ஒரு பக்கமாக திருப்பப்படு மென்றால், மற்ற பக்கங்களில் கவனம் மிகவும் குறைந்துவிடும். ஒரு கிறிஸ்தவன் என்றால் எல்லாம் தலையாக இருந்து, இருதயம் இல்லாமலும், அல்லது எல்லாம் இருதயமாக இருந்து, தலை இல்லாமலும் இருக்கக் கூடாது. ''தெளிந்த புத்தியின் ஆவி,'' ஒரு பரிபூரண குணாதிசயத்தை உருவாக்குகிற எல்லா கனிகளையும், கிருபைகளையும் வளர்க்கும் படி வழி நடத்துகிறது. இவைகள் நம்முடைய நாட்களில் உள்ள மனப்பான்மை, எல்லா விஷயங்களிலும் எதிர் திசையில் உள்ளது– சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதாகும். ஒரு வேலையாள் இந்தப் பகுதியையும், இன்னொரு வேலையாள் மற்றப் பகுதியையும் செய்கிறார், ஆகவே முந்தைய நாட்களில் இருந்தது போல் இப்பொழுது கிடையாது; வெகு சில வேலையாட்களே ஒரு தொழிலை முழுமையாகப் புரிந்து கொள்ளுகிறார்கள். புது சிருஷ்டி இந்த மனப்பாங்கை எதிர்ப்பதுடன், ''அவனுடைய பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப் படுத்துங்கள்'' என்பதற்கேற்ப செயல்பட வேண்டும், இல்லாவிட்டால் கிருபையின் ஒரு பகுதியை வளர்க்கும் போது, தேவன் கொடுத்த இன்னொரு மனத்திறனை அல்லது சிலாக்கியத்தைத் சரியான முறையில் பயன்படுத்தாததால் அவன் ஆபத்திற்குள் விழுகிறான்.

எல்லா மனிதரிடத்திலும் பயபக்தியின் தரம், அதிகமாக அல்லது குறைவான அபிவிருத்தி நிலையில் காணப்படுகிறது. மனதின் இத்தகைய தராதரங்கள் பயபக்திக்குரியது, ஆவிக்குரியது என்று அழைக்கப்படுகின்றன; இவைகள் மனச்சாட்சி, நம்பிக்கை, குணம் போன்ற தன்மையைத் தங்களுக்கு உதவிக்கு வரவழைத்துக் கொள்ளுகின்றன. இவைகள் உதாசீனப்படுத்தப் பட்டால், சத்தியத்தின் மேல் உள்ள வாஞ்சையும் அன்பும் சீர்கெட்டுவிடும். இதன் விளைவாக ஆண்டவருடைய அன்பை அதிகமாக உணர்ந்து, அவரை அதிகமாகப் பிரியப்படுத்தி, கனப்படுத்தி, அவருக்கு ஊழியம் செய்வதற்கு அவருக்கு நேராக நம்முடைய இருதயங்கள் வழி நடத்தப்படுவதற்க்கு பதிலாக, கீழ் மட்டத்தில் உள்ள தன்மைகள், அதிகதிகமாக சச்சரவில் ஈடுபட்டு மேல் மட்டத்தில் உள்ள தன்மைகளின் இடத்திற்கு வருகிறது; நாம் பார்க்கக் கூடியது மனதத்துவங்களுக்கு நேராக அவைகள் இருப்பதாகும். இதற்குள் சண்டையும், அழிவும், பேராவலும், விவாதமும் வீண் பெருமையும் பிரவேசிக்கும். ஆகவே புது சிருஷ்டி பக்திக்குரிய ஆராதனைகள், ஜெபம்,

துதி போன்றவைகளை ஒவ்வொரு கூட்டத்தின் பகுதியாயிருக்கும் படி, இணைப்பது மாத்திரமல்லாது, மேலும் பக்திக்குரிய ஒரு விசேஷமான கூட்டத்தை வாரம் ஒரு முறை வைப்பது அவசியம் என்று நாம் நம்புகிறோம். இதோடு கிறிஸ்தவ அனுபவங்களைக் குறுத்துச் சாட்சி சொல்ல சந்தர்ப்பங்களும் கொடுக்கப்பட வேண்டும்; ஆனால் அந்த வேளையில் இருதயத்தின் நிலைமை எப்படி இருக்கிறது, மேலும் இதே மாதிரியாக கடந்த காலத்தில் நடந்த கூட்டத்திற்குப் பிறகு வந்த வாரத்தில் எப்படியிருந்தது என்று திட்டவட்டமாக கூறுதல் வேண்டும். இப்படியான அன்றைய நிலைமையில் உள்ள சாட்சிகள் கேட்பவர்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கிறதைப் பார்க்கிறோம்; சில வேளைகளில் கடந்த காலத்தில் ஏற்பட்ட நன்மையான அனுபவங்கள், அவர்களை உற்சாகப்படுத்துவதாக உள்ளன; சிலவேளைகளில் சோதனைகள், கஷ்டங்கள், மனக்கலக்கங்கள் போன்றவைகளைக் கூறுவதன் மூலம் அவர்களை ஆறுதல் படுத்தலாம், ஏனென்றால் இதன் மூலம் அவர்கள் சோதனையான அனுபவங்களில், சில வேளைகளில் தோல்விகளில் அவர்கள் தனித்து நிற்கவில்லை என்பதைப் புரிந்து கொள்கிறார்கள்.

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி, உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" (1 பே 4:12) என்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகளின் அர்த்தத்தை நாம் எல்லோரும் இவ்விதமாக இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்ளலாம். ஆண்டவருடைய ஜனங்களாயிருக்கிற அனைவருக்கும் சோதனைகளும் கஷ்டங்களும் உண்டென்பதை அவர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள். இவ்விதமாக ஒவ்வொருவரும் மற்றவரோடு பரிதாபப்பட கற்றுக் கொள்ளுகிறார்கள். மேலும் பரிதாபப்படுதல் என்ற பிணைப்பு வளரும் போது உதவி செய்யும் உணர்வு வளர்கிறது, அப்படியே அன்பின் ஆவியாகிய பரிசுத்த ஆவியும் வளருகிறது. இப்படி வாரத்தின் மத்தியில் நடைபெறுகின்ற கூட்டங்களுக்கான பொருள் (topic) முந்திய ஞாயிற்றுக் கிழமையில் கூடிவந்தபோது தீர்மானிக்கப்படுவது அனுகூலமாயிருக்கும்; மேலும் இந்த பொருள்(topic) சபையினரின் மனதில் இருப்பதால், வாழ்க்கையில் கடந்து போகின்ற அனுபவங்களை ஒவ்வொருவரும் கவனத்தில் வைத்துக் கொள்ளவும் அது ஊக்குவிக்கும்; விசேஷமாக அந்த வாரத்திற்குரிய பொருள் சம்பந்தமாக அது இருக்க வேண்டும். சந்தேகத்திற்கிடமில்லாமல் ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் வெவ்வேறு விதமான அனுபவங்கள் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள்

ஏராளம் உண்டு. ஆனால் பெரும்பாலானோர், யோசிப்பதில்லை, கவனிப்பதில்லை; இந்த மாதிரியான அருமையான பாடங்கள் கவனிக்கப்படாமல், அவர்களை விட்டு கடந்து செல்லுகின்றன, அதன் பின்னர் ஆண்டவர் அவருடைய அருளால் அனுதினமும் அவர்களோடு இடைபடுகிற காரியங்களுக்குக் கவனம் செலுத்துவதன் மூலம் கற்றுக் கொள்ளக் கூடிய நல்ல தருணத்தை விட்டுவிட்டு, அதன் பின்னர் வாழ்க்கையின் பெரிய, அதிகக் கசப்பான அனுபவங்களிலிருந்து, முக்கியமாகக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

உதாரணமாக, வாராந்திர ஆராதனைக்கான பொருள் (topic) ''எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் காத்துக் கொள்ளும்'' (பிலி 4:7) என்ற வசனத்திலுள்ள ''தேவ சமாதானம்'' என்று வைத்துக் கொள்வோம். சகோதரத்துவத்தில் உள்ள ஒவ்வொருவரும், தன்னைப் பொருத்த வரையில் இந்த வேதவாக்கியம் எந்த அளவிற்கு நிறைவேறிற்று என்று கவனித்துப் பார்க்க வேண்டும். மேலும், சமாதானம் நிலை கொள்ளாதபடி என்னென்ன காரியங்கள் தடை பண்ணுவது போலவும், குறுக்காக வந்தது போலவும் இருந்தது என்பதையும், அதோடு கூட அமைதியின்மையையும், அதிருப்தியையும் கொண்டு வந்தது என்பதையும் கவனிக்க வேண்டும். இந்த அனுபவங்களையும், அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களையும் குழுவில் அதிக திறமையுள்ளவர்களும், குறைவான திறமை உள்ளவர்களும் (ஆண்/பெண்) சொல்லும் போது, கடந்த வாரத்தின் முன் பகுதியில் அவர்கள் பெற்ற அவர்களுடைய அனுபவங்களை ஒவ்வொருவருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, பின் பகுதியின் போது அவர்களுடைய அனுபவங்களின் பாடங்களோடு மற்றவர்களுடைய அனுபவங்களும் சேர்க்கப்படும். இப்படிச் செய்வதன் மூலம் அவர்களுடைய பட்சாதாபத்தை அதிகரிப்பதுடன், சமாதானத்தில் உள்ள அழகோடு, இருதயத்தில் தேவ சமாதானம் தரும் ஆசீர்வாதத்தை அதிகதிகமாக பகிர்ந்து கொள்ளுபவருடன் சண்டை சச்சரவுகள் அதற்கு எதிர் மாறாக இருப்பதையும் காண உதவும். மேலும் நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அப்பால் காணப்படும் குழப்பம், அமளி அல்லது துயரம் நிறைந்த சூழ்நிலைகள் சுற்றிக் காணப்படும் போதுகூட இந்த சமாதானத் தோடு இருப்பது எப்படி சாத்தியமாகும் என்பதையும் காண உதவி செய்யும். இந்த கூட்டங்களில் பக்திக்குரிய அம்சங்கள் இருப்பது அவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். தன்னுடைய குறைகளை

அதிகமாக துல்லியமாக உணருகிறவன், ஆவியின் கிருபைகளில் வளரும்படியாக அதிக ஊக்கத்துடன் முயற்சிக்கிறவன், அவன் தான் ஆண்டவருடன் அதிக வாஞ்சையுள்ளவனாக இருப்பதுடன், அவருடைய பரிசுத்த ஆவியில் அதிகதிகமாகப் பங்கு பெறும்படியாக வாஞ்சிக்கிற வனாகவும் இருப்பான்.

இந்தக் கூட்டங்களில், மற்றவைகளில் உள்ளது போலவே, ஒழுங்கைக் கடைப்பிடிப்பதன் மூலம் அதிகமான பயனுண்டாகும் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனாலும் அது கூட்டத்தில் ஜீவனற்ற, சுயாதீனமற்ற நிலைமையை உண்டாக்கும் அளவுக்கு இருக்க வேண்டும் என்பதல்ல, ஆனால் அராஜகம் அல்லது ஒழுங்கீனம் இல்லாதபடி, ஞானத்தோடு, அன்போடு, சாதுவான கண்டிப்போடு, கூட்டத்தின் சுயாதீனத்தை நல்ல முறையில் பாதுகாக்கும் அளவிற்கு செய்யப்பட வேண்டும். உதாரணமாகக் கூட்டத்தின் நோக்கம் முன் கூட்டியே புரிந்து கொள்ளப்பட வேண்டும், மேலும் கூட்டத்தை ஏற்கெனவே ஒத்துக்கொண்ட குறிப்பிட்ட நோக்கத்தை அடையும்படி தலைவர், நியாயமான முறையில், அதிக கண்டிப்பில்லாத வகையில் நடத்த வேண்டியது அவருடைய கடமையாகும். இந்தக் கூட்டங்கள் பொதுவான கேள்விகள் கேட்கிறதற்கான கூட்டங்கள் அல்லது கலந்து உரையாடுவதற்கான கூட்டங்கள், அல்லது பிரசங்கிப்பதற்கானவை என்று எண்ணிவிடக்கூடாது; இவைகளுக்கென வேறு கூட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன; விருப்பமுள்ளவர்கள் அதில் தாராளமாகக் கலந்து கொள்ளலாம், ஆனால் இத்தகைய கூட்டங்களுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லை உண்டு. இப்படியாகக் கூட்டத்தை சரியான முறையில் நடத்த, ஒருவருக்கு ஒருவர் பதில் சொல்லுவது, விவாதிப்பது போன்றவைகளைத் தடை பண்ணும் வண்ணமாக, தலைவர் முழுக் கூட்டத்திற்கும் பொறுப்பானவராக இருப்பதால், அவர் மட்டுமே அதுவும் கூட தேவைப்பட்டால் பதில் சொல்லலாம் அல்லது குறை கூறலாம். மேலும் சில சாட்சிகள் அதிக நீளமுள்ளதாக இல்லாததாயும், அதினிமித்தம் மற்றவர்கள் களைப்படையச் செய்யாததாயும், மேலும் அதன் மூலம் மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும்; மேலும் கூட்டங்கள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதற்கு மேலாக அதிக நேரத்திற்கு நீடிக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் காரியங்கள் எல்லாம் தலைவர் மேல் விழுந்த பொறுப்பாயிருக்கிறபடியால், அவர் சபையில் ஒரு மூப்பராக

இருக்க வேண்டும் என்று விளங்குகிறது. அதிக அனுபவம் இல்லாத ஒரு கற்றுக்குட்டி மிகவும் நல்ல நோக்கம் இருந்தாலும் கூட, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் செயல்படுவதில் ஒன்று தாராளமாக அல்லது கண்டிப்பாக இருக்க முற்படுவார், அதிகமாக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையால், ஒன்று அவர் கூட்டத்தைக் கெடுத்து விடலாம் அல்லது ஞானமற்ற முறையில் சொல்லப்பட்ட ஒரு திருத்தத்தினால் அல்லது சரியான விதிகளை ஞானமற்ற முறையில் பயன்படுத்தி, நல்ல ஒரு சகோதரனையோ அல்லது சகோதரியையோ மனம் புண்படச் செய்யலாம். மேலும், இப்படியான ஒரு கூட்டத்தின் தலைவர் ஒரு மூப்பராக இருக்க வேண்டும், இல்லை யென்றால் சபையில் மூப்பர் என்ற ஸ்தானத்தில் இருக்கத் திறமை உள்ளவராக இருக்க வேண்டும், ஏனெனில் அவருக்கு வேத வசனத்தைப் பற்றி நல்ல அறிவு இருக்கும், கிருபையில் அனுபவமும், மேலும் சொல்லப்பட்ட சாட்சிகளுக்குப் பதில் அளிக்கும் வகையில், உற்சாகப்படுத்தும் வகையில் ஒரு வார்த்தை, அல்லது ஆலோசனை அல்லது உதவி செய்யும்படியான புத்திமதியைக் கொடுக்கக் கூடிய வகையில் கற்றுக் கொடுக்கக் கூடிய திறமையுள்ளவராக இருப்பார். ''ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!'' (நீதி. 15:23) மற்றச் சூழ்நிலைகளில் உள்ள ஒரு முழு சொற்பொழிவைக் காட்டிலும், ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை அநேக தடவைகளில் எவ்வளவு அதிகமான உதவியாயிருக்கும்.

மேலே கூறப்பட்டவைகளில், ஒரு கூட்டம் ஆர்வமுள்ளதாக இருக்கும்படியாகக் கொடுக்கப்பட வேண்டிய பல்வேறு காரியங்களை நாங்கள் குறிப்பிட்டிருந்தாலும், கடைசியில் சொல்லப்பட்டதை மாத்திரம் விளக்கமாகக் கூறியுள்ளோம், சொல்லப் போனால், எல்லாவற்றிலும் மிக முக்கியமாக இருப்பதாக எண்ணுகிறோம், அது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் உதவியாயிருக்கிற ஒரு கூட்டம். இப்பொழுது மற்ற கூட்டங்களைப் பொறுத்த வகையில் நல்ல ஒழுங்குகள் என்பது எவையாயிருக்கக் கூடும் என்று சற்று பார்க்கலாம். இது சூழ்நிலைக் கேற்றபடி, நிலைமையைப் பொறுத்து, சரீரமான சபையின் எண்ணிக்கையைப் பொறுத்து வித்தியாசப்படும். எண்ணிக்கை ஐம்பது என்று வைத்துக் கொள்வோம், அவர்களில் சிலர் அங்குள்ளோர் முன்னிலையில் பேசுவதில், சத்தியத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுவதில் விசேஷமாகத் திறமையுள்ளவர்களாக இருந்தால், விசேஷமாக நண்பர்கள், அயலகத்தார் இல்லையென்றால் மற்றவர்கள் அழைக்கப்படும்படியாக,

வாரத்தில் ஒரு முறை பிரசங்கங்கள் உள்ள ஆராதனை வைப்பது பொதுவாக அனுகூலமுள்ளதாய் இருக்கக் கூடும் என்று நாங்கள் யோசனை கூறுகிறோம். ஆனால் ஆண்டவருடைய முன்னேற்பாட்டில், சபையில் வேதாகம தலைப்பைக் குறித்துத் (topic) தலைப்புக் கேற்றபடி, புத்தியான, நல்ல சொற்பொழிவைக் கொடுக்கக் கூடிய விசேஷமாகத் தகுதி பெற்றவர்கள் சபையில் ஒருவரும் இல்லையென்றால், இப்படியான ஒரு கூட்டம் நடத்த முயற்சிக்கக் கூடாது என்று நாம் நம்புகிறோம். இல்லையென்றால், சபை மக்கள் முன்னிலையில் ஒரு வேதாகமச் செய்தி தலைப்புக்கேற்ற வகையில் பேசும்படியாக ஓரளவு திறமை படைத்தவர்கள் சிலர் மத்தியில் அந்த நேரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தலைப்புச் செய்தி ஒன்றாக இருக்க வேண்டும், சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பங்கெடுக்க வேண்டும். இல்லையென்றால் இப்படியாக மூப்பர்கள் இந்த ஞாயிற்றுக் கிழமையில் ஒருவர், அடுத்தவர் அடுத்த ஞாயிற்றுக் கிழமை என்று மாறி மாறி வரலாம், அல்லது இந்த ஞாயிற்றுக் கிழமையில் இன்னும் இரண்டு பேர் என்று மாறி மாறி வரலாம். திறமைக்கு ஏற்ப சகோதரர்கள் எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுப்பதின் மூலம், அவர்களை முன்பாக நிறுத்துவது முழு சபையின் நலன்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்கு உதவி செய்யும் என்று தோன்றுகிறது. எப்பொழுதுமே, தாழ்மையும் வார்த்தையில் தெளிவும் மிக முக்கியமானவைகள் என்பதை நிதானித்துப் பார்க்க வேண்டும், பிரமாதமாக அல்லது நாவன்மையுடன் பேசுவது அல்ல.

ஆனால் எங்களுடைய கருத்தின்படி மிகவும் முக்கியமான கூட்டம், மிகவும் உதவியளிக்கக் கூடியது, முதலாவது விளக்கப்பட்ட பக்திக்குரிய கூட்டத்திற்கு அடுத்தபடியாக, சபையில் உள்ள எல்லா விசுவாசிகளும், சில வேளைகளில் ஒரு அவைத் தலைவர் அல்லது தலைவர், சில வேளைகளில் மற்றும் ஒருவருக்குக் கீழாகப் பங்கு பெறுவதுதான். இந்தக் கூட்டங்களுக்கு ஒரு தலைப்போ (topic) அல்லது வேதாகமப் பகுதியோ விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ளலாம், தலைவர் அந்தப் பொருளைப்பற்றி முன்னதாகவே பார்த்து வைத்திருப்பதுடன், அதைக் கூட்டத்தை நடத்துகின்ற சகோதரர்களுக்கிடையில் பகிர்ந்து கொடுக்கும்படியான பொறுப்பைப் பெற்றிருக்க வேண்டும், முடிந்தால் அவர்களுக்குரிய பகுதியை ஒரு வாரத்திற்கு முன்னரே அவர்களுக்கு கொடுப்பதன் மூலம், அவர்கள் கூட்டத்திற்கு வரும்போது யோசனைகளைத் தெரிவிக்க ஆயத்தத்துடன் வர இயலும்,

ஒவ்வொருவரும் தனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பின், தன்னுடைய பகுதியை பற்றிய ஆயத்தத்துடன் வர அது உதவும். பங்கெடுப்பவர்களில் முக்கியமானவர்கள் செய்தியை ஆராய்ந்து பார்க்கும்போது (ஒரு வேளை இரண்டு பேர் இல்லாவிட்டால் ஒரு வேளை ஆறு பேர் அல்லது அதற்கும் மேலாக, சபையினரின் தொகைப்படி, செய்தியின் ஆழமான நிலைமைக்கேற்ப, அல்லது திறமையுள்ள நபர்களின் எண்ணிக்கைக் கேற்ப) வேதாகம பாடங்களும் (studies in scripture) மறுபதிப்பும் (reprints), பெரியன் வேதாகமம் (Berean Bibles)ஆகியவை மிகவும் உதவியாக இருப்பதைக் காண்பார்கள். அவர்கள் செய்தியைத் தங்களுடைய சொந்த வார்த்தையில் கொடுக்கலாம், அல்லது மேற்கூறிய புத்தகங்களிலிருந்து விசேஷமான தேவைப்படும் குறிப்புகளுக்கான சாராம்சத்தை எடுத்துக் கொண்டு செய்தி கொடுக்கலாம்.

கூட்டம் துதியுடனும், ஜெபத்துடனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போது, ஏற்ற வேளையில் செய்தித் தலைப்பு, அவைத் தலைவரால் அறிவிக்கப்படலாம். அதன் பின்னர் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட பேச்சாளர் செய்தியில் தன்னுடைய பகுதியை வழங்கிய பின்னர், அது முழு சபையும் தன்னுடைய அபிப்பிராயங்களையும், கேள்விகளையும் ஏற்கெனவே அந்தச் செய்தியின் முக்கிய பேச்சாளரால் சொல்லப்பட்டவைகளுக்கு இணக்கமாக அல்லது எதிராக வெளிப்படுத்த தருணம் அளிக்கப்பட வேண்டும். சபையினர் விவாதிக்க விருப்பமில்லாது காணப்பட்டால், அவர்களை அதில் ஈடுபடுத்த வேண்டியதிருந்தால் அவைத்தலைவர் சாமர்த்தியமான கேள்விகள் மூலம் இதைச் செய்ய வேண்டும். அவைத் தலைவர் மாத்திரமே பேச்சாளர்களுடன் பேசவேண்டும் அல்லது அவர்கள் சொன்னவைகளுக்குப் பதில் சொல்ல அல்லது இணக்கம் தெரிவிக்க முயல வேண்டும்; அவர் எந்தப் பேச்சாளரிடமும் அவருடைய நிலையைக் குறித்து அல்லது காரணங்களையும் குறித்து மேலதிகமான விளக்கங்களைக் கேட்கலாம். பேச்சாளர்கள் (செய்தியாளர்கள்) எப்பொழுதுமே அவர்களுடைய குறிப்புகளை அவைத்தலைவரிடம் சொல்ல வேண்டுமே தவிர, ஒருபோதும் ஒருவருக்கொருவர் பேசக்கூடாது. இதன்படியாக தனி நபர் சுதந்திரத்தை கட்டுப்படுத்தாமல், வாய்ச்சண்டை ஏற்படக்கூடிய நிலைமையைத் தவிர்க்கலாம். அவைத்தலைவர் விவாதத்தில் மேற்கூறிய விஷயங்களைத் தவிர வேறு எந்த பங்கும் எடுக்கக் கூடாது; ஆனால் அவர் கூட்டம் துதியுடனும், நன்றி செலுத்துதலுடனும் முற்றுப் பெறுவதற்கு

முன்னால் கடைசியில் சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டு, அவருடைய வியூகத்தின்படி முழு விஷயத்தையும் சுருக்கமாக எடுத்துக் கூற வேண்டும்.

ஒவ்வொரு குறிப்பையும் நன்றாகக் கவனித்த பின்னர், முழு விஷயமும் அலசி ஆராயப்படுவதால் எல்லோரும் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். அல்லது அதிக சிக்கலான விஷயங்களில், ஒவ்வொரு தலைப்பையும் நன்றாகப் பரிசீலித்த பின்னர் அவைத் தலைவர் தன்னுடைய கருத்தைக் கொடுக்க முடியும். தேவனுடைய வார்த்தையை ஆழமாகப் படிப்பதற்கு இப்படியான ஒரு கூட்டத்தைத் தவிர வேறு எந்த விதமான சிறந்த கூட்டத்தையும் நாங்கள் அறியோம். இது வழக்கமான முறையில் பெரும்பாலான ஆண்டவருடைய ஜனங்கள் கூடி வரும் போது பிரசங்கிப்பதைக் காட்டிலும் அனுகூலம் உள்ளதாக இருக்கிறது என்று நாங்கள் எண்ணுகிறோம்.

இப்படியான ஒரு கூட்டம், மேலே சொல்லப்பட்ட 1,2,3 என்ற ஆலோசனைகளின் எல்லா அம்சங்களையும் கொண்டதாக இருக்கிறது. முதலாவது ஆலோசனையைப் பொறுத்த வரையில், முக்கிய பங்கு வகிப்பவர்களுக்கு, அவர்களுக்கு இருக்கிற திறமையெல்லாம் வெளிப்படுத்த முழு சந்தர்ப்பமும் உள்ளது. இரண்டாவது ஆலோசனையைப் பொறுத்த வரையில், பல முக்கிய பேச்சாளர்கள் வித்தியாசமான தலைப்புகளின் மேல் பேசிய பின்னர், எல்லோரும் கேள்விகள் கேட்பதற்கும் யோசனைகள் சொல்வதற்கும் ஒரு தருணம் உண்டு. மூன்றாவது ஆலோசனைக்கு வரும் போது, அந்த ஆலோசனையும் இப்படியான ஒரு கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனெனில், ஒவ்வொரு வாரத்திற்குரிய தலைப்புகளும் கூடுமான வரை முழு சபையால் தீர்மானிக்கப் பட வேண்டும், தலைவரால் அல்ல, அதுவும் அவர்கள் விவாதிப்பதற்குக் குறைத்த பட்சம் ஒரு வாரத்திற்கு முன்னர் தீர்மானிக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட சபையில் கலந்து கொள்ளுகின்ற எவருக்கும், அவருடைய கேள்வியை அல்லது செய்தியைக் கொடுக்கும் சிலாக்கியம் வழங்கப் பட வேண்டும். அன்பும், இரக்கமும், உதவி செய்யும் தன்மையும் நிலவுவதோடு, எல்லோரும் சரியான தலைப்புகளுக்கு (செய்திகளுக்கு) பயபக்தியுடன் செவி சாய்க்க வேண்டும். ஒரு செய்தி சபையினரின் பொதுவான கருத்துகளுக்கு மாறுபட்டதாகத் தோன்றும் போது அதைப்

பற்றிய ஒரு விசேஷமான வேண்டுகோள் வரும்போது, சுவிசேஷத்தின் அடிப்படை கருத்துக்களுக்கு உட்பட்டு, அந்த விஷயம் விவாதிக்கப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிற நபர்களுக்குப் போதுமான நேரம் கொடுக்கப்பட வேண்டும்; அவர் அவ்வேளையில் முக்கிய பேச்சாளராக இருக்க வேண்டும். மேலும் விஷயத்தின் முக்கியத்துவம், சபையினர் அதில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்து அவருடைய நேரம் முப்பது நிமிடங்கள், அல்லது அதற்கு கூட அல்லது குறைய இருக்கும்படி நிர்ணயிக்கப்பட வேண்டும். அவர் அதைச் சொன்ன பின்னர், கேள்வியானது சபையிலுள்ள மற்றவர்கள் விவாதிப்பதற்கென விடப்படல் வேண்டும், அதன் பின்னர் கேள்வியை எழுப்பினவர் மற்றவர்கள் கொண்டு வரக் கூடிய ஆட்சேபங்களுக்குப் பதில் சொல்லும்படியாக சில நிமிடங்கள் கொடுக்கப்படல் வேண்டும்; ஆனாலும் அவைத் தலைவருக்கு கூட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் கடைசியான வார்த்தை சொல்லும் தருணம் இருக்க வேண்டும்.

வசனத்தைப் படிப்பதில் மிகவும் அனுகூலமாயிருந்த இன்னொரு விதமான கூட்டம் ‘‘பரோயா வேதாகம ஆராய்ச்சிக்குழு (Berean circle for Bible study)’’ என்பதாகும். இவைகள் சாதாரணமான முறையில் வாசிக்கின்ற குழுக்கள் அல்ல, ஆனால் திவ்விய திட்டத்தை எல்லா கூட்டங்களிலும், தனித்தனியாகப் பிரித்து முறைப்படி படிப்பதாகும். வேதாகமப் பாடங்கள் (Studies in Scripture)பல புத்தகங்கள் உள்ளடக்கியதாகும், அவைகள் விஷயங்களை (Subjects) சம்பந்தம் விடுபடாது, கிரமமான முறையில் கொடுக்கிறபடியால் இப்படிப்பட்ட புத்தகங்கள் (வேதாகமத்தோடு) வேத பாட வகுப்புகளுக்கு பாடப் புத்தகங்களாக இருக்கின்றன. ஆனால் இந்த பாடங்களின் மூலம் பயன் பெறுவதற்குத் தலைவரும், சபையினரும், வாசிப்பதற்கும், படிப்பதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகக் கண்டு கொள்ள வேண்டும். வாசிப்பதைப் பொறுத்த வரையில், அன்பான நண்பர்கள் வீட்டில் தாங்களாகவே வாசிப்பார்கள் என்றால் அது நல்லது, ஒரு வேளை மிகச் சிறந்ததாயிருக்கும். இந்தப் பாடங்களின் நோக்கம் என்ன வெனில் ஒவ்வொரு தலைப்பின் கீழ் உள்ள சில பகுதிகளை, ஒன்று அல்லது இரண்டு பாராக்களில் கொடுக்கப்பட்டிருப்பதை எடுத்து, அவர்களுக்குள்ளாகவே முழுமையாக விவாதித்து, அதற்கு ஒத்த வாக்கியங்கள் போன்றவைகளைப் பார்த்து விஷயத்தை நன்றாக அலசிப்பார்த்து, கூடுமானால், விவாதத்திற்குரிய குறிப்பிட்ட விஷயத்தைக்

குறித்ததான ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தை வெளிப்படுத்துமாறு கேட்டு அதன் பின்னர் அடுத்த தலைப்புக்குப் (topic) போக வேண்டும். சில பரோயா வேதாகம ஆராய்ச்சிக்குழு (Berean circle for Bible study), வேதாகமப் பாடங்களின் ஒரு புத்தகத்தைப் படிப்பதற்கு அதிக ஆர்வத்துடன் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் கூட எடுத்திருக்கிறார்கள்.

"அவனவன் தன் தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்"

ரோம. 14:5

சரியான நிலையில் உள்ள எல்லா உள்ளங்களும், கூடுமான வரை சத்தியத்தின் ஒவ்வொரு பகுதியையும் குறித்து ஒரு தீர்மானம் எடுப்பதில் மகிழ்ச்சியுறுகின்றன. "தன்னுடைய மனதிலே" சபையின் ஒவ்வொரு அங்கமும் தனக்கென்று ஊக்கமாக முயற்சிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இருந்தாலும், தனிப்பட்ட நபருக்கான இந்த நல்ல சட்டத்தை ஒரு சபைக்கு அல்லது ஒரு வேத பாட வகுப்பிற்கு என்று செயல்படுத்த முயற்சிப்பது பொதுவாக செய்யப்படுகின்ற ஒரு தவறாகும்; ஆண்டவருடைய வார்த்தையைக் குறித்த ஒரே தீர்மானத்தை அப்படியே எல்லாரும் தீர்மானிக்க வேண்டும் என்று திணிக்க முயற்சிப்பது தவறான கருத்தாகும். எல்லோரும் ஏகோபித்த மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புவது சரிதான், ஆனால் எல்லோரும் பூரணத்திலிருந்து விழுந்தவர்கள், சரீரப் பிரகாரமாக மாத்திரமல்ல, ஆனாலும் மனதின் பிரகாரமாகவும் என்று நாம் அறியும்போது அந்த விதமாகவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. மேலும் இந்த மாறுபாடு பல்வேறு திசைகளில் வரும் போது, அவைகள் எந்த ஒரு ஜனக்கூட்டத்திலும் பல தரப்பட்ட வித்தியாசமான தலை உருவங்கள் இருப்பதைப் போல் என்று காட்டப்பட்டுள்ளது. ஒருவருடைய கருத்தைத் தடுக்கவோ அல்லது அதற்கு உதவி செய்வதோ, நம்முடைய பல்வேறு பல விதமான கல்வியின் முக்கியமான அம்சங்களாய் இருக்கின்றன.

ஆனால் நாம் எல்லோரும் ஒரே விதமாக சிறக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறவில்லையா? மேலும் நாம் எல்லோரும் தேவனால்

போதிக்கப்பட்டிருப்போம் என்றும் தெளிந்த புத்தியின் ஆவி உள்ளவர்களாக இருப்போம் என்றும் அவர் கூற வில்லையா? மேலும் நாம் எல்லோரும் கிருபையிலும், அறிவிலும் வளர வேண்டும் என்றும் ஒருவரை ஒருவர் அதிகமான பரிசுத்த விசுவாசத்தில் எழுப்புதல் பண்ண வேண்டும் என்றும் அவர் கூற வில்லையா?

ஆம், இது எல்லாம் உண்மைதான்; ஆனால் அவைகள் எல்லாவற்றையும் ஒரே கூட்டத்தில் அடைந்துவிட வேண்டும் என்று சொல்லப்பட வில்லை. ஆண்டவருடைய ஜனங்கள், வித்தியாசமான வளர்ச்சி உடைவர்கள் மாத்திரமல்ல, கல்வியிலும் அல்லது அனுபவத்திலும் வித்தியாசம் உள்ளவர்கள், ஆனால், இதற்கும் மேலாக புது சிருஷ்டிகளாக வயதிலும் வித்தியாசமானவர்கள், சிலர் குழந்தைகளாக, இளைஞர்களாக, முதிர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே சிலர் புரிந்து கொள்வதற்கு மற்றவர்களை விட தாமதிக்கிறார்கள் என்றால் அது நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணாது, ஆகவே ''தேவனுடைய ஆழமான காரியங்களைக்'' குறித்து தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருப்பதில் தாமதமா யிருக்கிறார்கள். எல்லோரும் பாவிகளாயிருக்கிறார்கள், நம்முடைய தலைவராயிருக்கிற கிறிஸ்து இயேசு, கல்வாரியில் அவர் செய்து முடித்த பலியினால் எல்லோரும் மீட்கப்பட்டோம், நாம் எல்லோரும் இப்போது, போதிக்கப்பட்டு, இராஜ்யத்திற்கும் அதன் ஊழியத்திற்கும் தகுதி உள்ளவர்களாகும் படி கிறிஸ்துவின் பள்ளிக் கூடத்தில் இருக்கிறோம் என்றும், மேலும் தங்களை முழுமையான ஆண்டவருக்கென அர்ப்பணிக்காவிட்டால் ஒருவரும் அவருடைய பள்ளிக்கூடத்தில் பிரவேசிக்க முடியாது என்ற அடிப்படை உண்மைகளை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இவைகளை எல்லோரும் முற்றுமாக உணர வேண்டும், அப்படி இல்லாவிட்டால் அவர்களைப் புது சிருஷ்டியில் குழந்தையான சகோதரர்களாகக் கூட ஏற்றுக் கொள்ள முடியாது; ஆனால் நாம் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பொறுமையாயிருக்க வேண்டும், ஒவ்வொருவருடைய விசித்திரமான குணங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும், இவைகள் எல்லாவற்றிற்கும் பின்னாக அன்பு இருக்க வேண்டும்; மேலும் ஆவியின் ஒவ்வொரு கிருபையிலும் வளர்ந்து, அதிகதிகமாக அதன் பூரண தன்மையை அடைய வேண்டும்.

இது இப்படியாயிருக்க, அநேகர் பங்கு பெறுகின்ற கூட்டங்கள் உள்ள பதில்களும் குறிப்புகளும், அவைத்தலைவர் வசதியினிமித்தம்

பேச்சாளர் கூட்டத்தினரை நேரடியாகப் பார்த்துப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் வேளை தவிர, அங்கே குழுமியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் உரியதாக இருக்கும் (எந்த தனிப்பட்ட நபருக்கோ அல்லது எண்ணிக்கையின் படியானவர்களுக்கோ அல்ல); ஆகவே எல்லோருக்கும் பிரதிநிதியாக இருக்கும் அவைத் தலைவரைப் பார்த்துப் பேச வேண்டும். ஆகவே தன்னுடைய சொந்த கருத்தை வெளிப்படுத்திய பின்னர், ஒவ்வொருவரும் அமைதியாய் மற்றவர்களுடைய கருத்தைக் கேட்க வேண்டும், அதை விவாதிப்பதற்கோ, ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட அவருடைய நிலைமையை மறுபடியும் சொல்ல வேண்டும் என்று நினைக்கக் கூடாது. அவருடைய தருணத்தை உபயோகித்த பின்னர், ஒவ்வொருவரும் வழி நடத்தவும், போதிக்கப் படவும், சத்தியத்தைக் காட்டவும் ஆண்டவரை நம்ப வேண்டும்; மேலும் எல்லாப் பகுதிகளையும் (items) தான் காண்கின்ற வண்ணமாகவே மற்றவர்களும் காண வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது; முக்கியமானவைகளில் ஒற்றுமை, முக்கியமில்லாதவைகளில் இரக்கம் என்பதைப் பின் பற்றுவதே சரியான விதியாகும்.

இருந்த போதிலும், சத்தியத்தின் ஒவ்வொரு பகுதியும் முக்கியமானது; சத்தியத்தில் ஒரு சிறிய பகுதி தவறாக இருந்தாலும் அது தீமை விளைவிக்கும் என்பதை நாம் ஒத்துக் கொள்ளுகிறோம். மேலும் தேவனுடைய ஜனங்கள் ஜெபித்து, அறிவில் ஒற்றுமைக்காக ஊக்கமாக முயற்சிக்க வேண்டும், ஆனால் இதை பலவந்தமாக அடைய நாம் முயற்சிக்கக் கூடாது. சத்தியத்தின் முதலாவது அடிப்படைக் கருத்துக்களில் ஒற்றுமையின் ஆவி இருப்பது மிக முக்கியம்; இது காக்கப்படும் போது நம்முடைய ஆண்டவர் அவனவனுக்குத் தேவையான எல்லா சத்தியத்தையும் சுதந்தரித்துக்கொள்ளும்படி வழி நடத்துவார் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். இந்த விஷயத்தில் தான் ஆண்டவருடைய மந்தையின் தலைவர்களுக்கு, விசேஷமான ஞானமும், அன்பும், உறுதியான குணாதிசயமும், சத்தியத்தில் தெளிவும் தேவைப்படுகின்றது; ஆகவே ஒவ்வொரு கூட்டத்தின் முடிவிலும் வழி நடத்தியவர் சத்திய விஷயங்களைச் சுருக்கமாகக் கூற முடிந்தவராக இருந்து, எல்லோருடைய மனங்களையும் ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமையில் விடுவார். அடிப்படைக் கருத்துக்களை அதிகாரப் பூர்வமாகக் கூறுவது தவிர, மற்றபடி அவர் தன்னைத் தெளிவாக, உறுதியாக, அன்பாக எடுத்துக் கூறுபவராக வெளிப்படுத்துவார்.

அடக்க ஆராதனைகள்

அடக்கம் செய்கின்ற வேளைகளில், வந்திருக்கிற நண்பர்கள் மத்தியில் ஏறக் குறைய பயபக்தியான நிலை இருக்கும் போது, ஜில்லிட்ட அமைதியான சடலம், துக்கமான இருதயங்கள், கண்ணீர் சொறியும் கண்கள், கறுப்புத் துணி போன்றவைகள் எல்லாம் மரணம் என்பது மனுக்குலத்தின் நண்பனல்ல, ஆனால் எதிரி என்ற பொதுவான பாடத்தை அறிவுறுத்த உதவி செய்கின்றது. ஆகவே, இப்படியான வேளை, சத்தியத்தை சொல்லுவதற்கு அனுகூலமானதாக இருக்கிறது, ஆகவே அது பயன்படுத்தப் பட வேண்டும். இப்பொழுது சத்தியத்தில் ஆர்வம் காட்டும் அநேகர் அதைக் குறித்ததான கருத்தைத் தெளிவானபடி பெற்றுக் கொண்டது அடக்க ஆராதனையின் போதுதான். இதோடு கூட இப்படியான வேளையில் அதில் கலந்து செவி கொடுப்பவர்களில் அநேகர் வழக்கமாக நடக்கின்ற சத்தியத்தின் ஊழியங்களில் ஏதாவது ஒன்றில் கலந்து கொள்ளுவதற்கு அழைப்பை பெற்ற போது, நண்பர்களுடைய விருப்பத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு மிகவும் பயந்தவர்களாவும், தவறான அபிப்பிராயம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே சூழ்நிலை அனுமதிக்கிறபடி, இப்படியான சந்தர்ப்பங்கள் பிரயோஜனமளிக்கும் வகையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று நாம் யோசனை கூறுகிறோம். இறந்தவர் விசுவாசியாக இருக்கையில், அவருடைய குடும்பத்தினர் அதற்கு எதிராக இருக்கையில், அவர் இறக்கும் தறுவாயில் சத்தியத்தை அறிந்த ஒருவர் தன்னுடைய அடக்கத்தின் போது துக்கத்தோடு இருப்பவர்களுக்குப் பிரசங்கிக்கும்படியாக ஒரு வேண்டுகோளை விடுவிக்க வேண்டும். இறந்தது ஒரு குழந்தையாயிருந்து, பெற்றோர்கள் இருவருமே சத்தியத்திற் குள்ளாக இருந்தால், இந்த விஷயத்தைக் குறித்துக் கேள்வியே கிடையாது; ஆனால் பெற்றோர்களில் ஒருவர் சத்தியத்தின் மேல் அனுதாபம் உள்ளவராகவும் மற்றவர் எதிரிடையாக இருந்தால், அதைக் குறித்ததான பொறுப்பு தகப்பன் மேல் தங்கியிருக்கும், ஆனாலும் மனைவிக்கு புருஷனிடத்தில் அந்த விஷயத்தைக் குறித்ததான தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு பூரண உரிமை உண்டு, அவரும் அந்தக் கருத்துக்குத் தேவையான கவனத்தைக் கொடுக்க வேண்டும், இருந்தாலும் குடும்பத்தின் தலைவன் என்று தேவன் தந்த பொறுப்பைத் தவிர்க்கும்படியாக அது இருக்கக் கூடாது.

அநேக சிறு சபைகளில், எங்களிடமிருந்து, அல்லது எவரிடமிருந்தும் எந்த விதமான ஆலோசனை இல்லாமலே, மற்ற ஆர்வத்தை ஊட்டக் கூடிய, பயனுள்ள பிரசங்கத்தை, இப்படிப்பட்ட வேளைக்கு ஏற்றபடி செய்வதற்கு நன்கு தகுதி பெற்ற சகோதரர்கள் உண்டு. ஆனால் பெரும்பாலான சிறு சபைகளில், அர்ப்பணம் செய்து கொண்டவர்களுக்கு இடையே இப்படியான ஒரு பிரசங்கம் செய்வதற்கு உள்ள விசேஷமான தாலந்து இல்லை. ஆகவேதான் இந்தக் காரணத்திற்காக பயனுள்ள முறையில் இப்படியான ஆராதனைகளைச் செய்வதற்கு சில ஆலோசனைகளை நாம் வழங்குகிறோம். ஆராதனையை நடத்துகின்ற சகோதரர் இறந்தவரின் நெருங்கிய உறவினர்களில் ஒருவராக இல்லாதிருப்பது நல்லது, ஆனாலும் இப்படியானவரைத் தவிர வேறு யாரும் இல்லையென்றால், ஒரு மகனே அல்லது ஒரு புருஷனே அல்லது ஒரு தகப்பனே ஆராதனையை நடத்துவதில் தவறு இல்லை. வெளியிடத்தில் தாராளமாக பேசக் கூடாதவராகவும், பேசுகின்ற விஷயத்தை நன்கு அறியாதவராயிருந்தால், கீழே கொடுக்கப்பட்ட ஆலோசனைகளை அந்த சமயத்திற்கு ஏற்றபடி, அவர் உபயோகிக்கிறபடி, பொருத்தமாக அமைத்துக் கொள்வது அவருடைய திட்டமாயிருக்க வேண்டும். அவர் கூடியிருக்கிற நண்பர்கள் மத்தியில் வாசிக்கும்படியாக கையினால் எழுதப்பட்ட பிரதியை வைத்துக் கொள்ள வேண்டும். எழுதப்பட்டது, கையினால் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டு அச்சு (டைப்)செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்; வெளியரங்கமாக அதை அடக்க ஆராதனையில் வாசிப்பதற்கு முன்னால் சத்தமாக, பல முறை வாசிக்கப்படல் வேண்டும்; அதனிமித்தம் அது வாசிக்கப்படும் போது கூடுமானவரை அது இலகுவாகவும், தெளிவாகவும், எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இந்த சமயத்திற்கு ஏற்ப தகுதியுள்ள ஒரு சகோதரர் காணப்படாவிட்டால், நாம் மறுபடியும் சொல்லுகிறோம், இதை ஒரு சகோதரி வாசிப்பதில் எந்த முறைகேடும் கிடையாது, ஆனால் தலையை மூடுவதற்கு ஏதாவது அணிந்திருக்க வேண்டும்.

ஆண்டவருக்குள் மரித்த ஒரு சகோதரனுடைய அடக்க ஆராதனையை நடத்துவதற்கும், பிரசங்கம் செய்வதற்கும் என கீழ்க்கண்ட ஆலோசனைகளை நாங்கள் வழங்குகிறோம்.

1) மிதமான, மெதுவான இராகத்துடன், அவ்வேளைக்கு ஏற்ற ஒரு கீர்த்தனையைப் பாடுவதோடு ஆராதனையை ஆரம்பிக்க வேண்டும்.

2) குடும்ப அங்கத்தினரில் எவராவது மற்ற சபைப் பிரிவைச் சேர்ந்தவராக இருப்பின், மேலும் அவர்களுடைய சபையின் ஊழியருக்கு ஆராதனையில் ஏதாவது ஒரு பங்கு கொடுக்கப் பட வேண்டும் என்று வாஞ்சித்தால், அவர் உயிர்தெழுதலைக் குறித்து சில வேத வசனங்களை வாசிக்கவோ, அல்லது ஜெபம் செய்யவோ, அல்லது அவர் இரண்டையுமே சேர்த்துச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதற்கு இது ஏற்ற இடமாயிருக்கும். இப்படியான ஒரு வேண்டுகோள் வராவிட்டால், இதை (2) விட்டு விட்டு, பின்னர் (1)ல் இருந்து (3)க்கு கடந்து செல்ல வேண்டும்.

(3)அடக்கத்தின் போது செய்ய வேண்டிய பிரசங்கத்தைப் பற்றிய யோசனைக் குறிப்புகள்.

அன்பான நண்பர்களே, நம்முடைய நண்பரும், சகோதரனுமானவருக்கு மரியாதை செலுத்தும்படி நாம் இங்கு கூடி வந்திருக்கிறோம். அவருடைய சரீரமானது மண்ணுக்கு மண், சாம்பலுக்குச் சாம்பல் என கல்லறைக்கு ஒப்புக் கொடுக்கும்படியாக வந்திருக்கிறோம். உலகத்தில் மரணத்தைத் தவிர வேறு ஒன்றும் பொதுவானதாக இல்லாதிருக்கும் போது, அதோடு கூட வருகின்ற வியாதி, வேதனை, துக்கம் என்பவைகள் பொதுவாக இருந்தாலும், புத்தியுள்ளவர்களாகிய நாம், இப்படியாக நட்பு, வீடு, அன்பு, சகோதரத்துவம் என்பவைகளின் துக்கமான முறிவுக்கு நம்மை தயார்படுத்திக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் எவ்வளவு தான் ஆறுதல் கூறினாலும், இன்னும் அது வேதனையாய் இருக்கிறது, இருந்தாலும் கிறிஸ்தவர்களாகிய நாம், ''நம்பிக்கையற்ற மற்றவர்களைப் போல் துக்கிப்பதில்லை.'' ஆகவே இந்த இடத்தில், கிலேயாத்தின் தைலமாக சுவிசேஷத்தில் நம் முன்பாக வைக்கப்பட்டுள்ள, இந்த நல்ல நம்பிக்கையை ஆராய்ந்து பார்ப்பதைக் காட்டிலும் வேறு எது பொருத்தமாக இருக்கக் கூடும்? இந்த தைலத்தைப் போல் பூலோகத்தின் துக்கங்களைக் குணமாக்கக் கூடியது வேறு ஒன்றும் கிடையாது.

ஆகிலும், சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை, மரித்தோரின் ஒரு உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கை, இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் அதிக சந்தோஷ நிலையில் உள்ள ஒரு எதிர்கால வாழ்க்கையைக் குறித்த நம்பிக்கையைப் பார்ப்பதற்கு

முன்னர் நமக்கு முன்பாக ஒரு கேள்வி எழும்புவது தவறல்ல. நமக்கு ஏன் இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை இருக்க வேண்டும்? நமக்கு மரித்தோரிலிருந்து ஒரு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை கொடுக்கப் படுவதற்குப் பதிலாக நாம் ஏன் மரணத்திலிருந்து தப்புவிக்கப்படக் கூடாது? ஏன் தேவன் நம்மை கஷ்டங்கள் நிறைந்த சில நாட்கள் அல்லது வருடங்கள் ஜீவிக்க அனுமதிக்க வேண்டும்? நாம் வாடுகின்ற புல்லைப் போல் பின்னர் ஏன் அறுப்புண்டு போக வேண்டும்? மேலும் இருதயங்கள் ஏன் நொறுங்குண்டு போக வேண்டும்? நம்முடைய இனத்தின் பெரிய சத்துருவான இந்த மரணத்தினால் நம்முடைய வீடும் குடும்ப ஒழுங்கும் ஏன் அலங்கோலம் அடைய வேண்டும்? மரணமானது கடந்த ஆறாயிரம் வருடங்களில் (உத்தேசமாகக் கணக்கிடப்பட்டுள்ளது) நம்முடைய மனுக்குலத்தின் ஐம்பது ஆயிரம் லட்சங்களுக்கு மேலான மாம்சத்தின்படியான நம்முடைய சகோதரைக் கொன்றிருக்கிறது. அவர்கள் ஆதாமின் பிள்ளைகளா யிருந்திருக்கிறார்கள். சிந்திக்கக் கூடிய மனங்களுக்கு இதைக் காட்டிலும் ஆர்வமுள்ள கேள்வி இருக்க முடியாது.

நம்பிக்கையின்மை, சொல்லுவது என்ன வெனில் நாம் உயர்தர மிருகங்களாக இருப்பதினிமித்தம், பிறக்கிறோம், ஜீவிக்கிறோம், அதன் பின்னர் கொடூரமான மிருகம் மரிப்பது போன்று மரிக்கிறோம், நமக்கு என்று ஒரு எதிர்கால வாழ்வு கொடுக்கப்பட வில்லை என்பதாகும். ஆனால் இப்படியான ஒரு சிந்தனையில் நடு நடுங்கும் வேளையில் மேலும், நம்முடைய எவ்விதமான சொந்த அனுபவத்தினாலும் அதற்கு மாறானதை நிரூபிக்க முடியாது இருக்கும் போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாக, ''நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக சமாதானத்தைக்'' கூறும் நம்முடைய பிதாவின் வார்த்தையைக் கேட்டு இருக்கின்றோம். நம்முடைய அன்பின் மீட்பர் அவரைப் பின்பற்றுகின்ற விஷயங்களை மறுக்கிறதொன்றல்ல, இல்லாவிடினும், துக்கமில்லை, வேதனையில்லை, மரணமில்லை என்ற ஒரு அறிக்கையல்ல, ஆனால் இதற்கு மாறானது. ''நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்'' என்று அவர் கூறுகிறார். மறுபடியும் அவர், ''பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு எழுந்திருப்பார்கள்'' என்கிறார். ஆ! நம்பிக்கையின்மையின் சத்தத்திற்கு இந்த மறுப்பு நமக்கு இனிமையாயிருக்கிறது. அது நம்பிக்கையைக் கொண்டு வருகிறது. மேலும் பிதாவையும், குமாரனையும் கூட நாம் அறியும்படி கற்கும்போதும், நம்பிக்கைவைக்கும் போதும் விசுவாசத்திற்கு ஏற்ப நம்பிக்கை,

சமாதானத்தைத் கொண்டு வருகின்றது. அவருடைய வார்த்தைகளை நாம் கேட்டோம், அவர் பிதாவின் கிருபையின் திட்டங்களைச் செயல் படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆனால் ஆண்டவர் இவ்விதமாக ஒரு உயிர்த்தெழுதலைக் கூறுவாரெனில், அந்த உயிர்தெழுதலின் செய்தியானது சமாதானத்தையும், இளைப்பாறுதலையும், நம்பிக்கையையும் கொண்டுவருமென்றால், தேவன் ஏன் முதலாவது மனிதனை அழிவுக்கு உட்படுத்த வேண்டும், அதன் பின்னர் உயிர்த்தெழுதலின் மூலம் மனுக்குலத்திற்கு சங்கீதக்காரன் மூலமாக, ''மனுபுத்திரரே திரும்புங்கள்'' என்கிறார். (சங் 90:3) ஏன் அவர்களை ஜீவனோடு வைத்திருக்கக் கூடாது? ஏன் துக்கத்தையும் வேதனையையும், மரணத்தையும் தடுக்கக் கூடாது? வேதாகமம், வேதாகமம் மாத்திரமே, இந்த நிலைமைகளுக்கு விளக்கம் அளிக்கிறது என்று பதில் சொல்லுகிறோம், வேறு ஒன்றும் இந்த விஷயத்தின்மேல் எவ்விதமான தெளிவையும் தருவதில்லை. வேதத்தின் சாட்சியின்படி, தேவன் ஆரம்பத்தில் நம் இனத்தை அவருடைய சாயலில், அவருடைய ரூபத்தில் நேர்மையானவர்களாக, பூரணமுள்ளவர்களாகச் சிருஷ்டித்தார் என்றும் நம்முடைய ஆதி பெற்றோர் கீழ்ப்படியாமையினிமித்தம் அந்த உன்னத நிலையில் இருந்து கீழே விழுந்தார்கள் என்றும் சொல்லுகிறது என்று நாம் பதில் தருகிறோம். இதன் மூலம் பாவத்தின் சம்பளமான மரணத்துக் குட்பட்டது, மேலும் பாவத்திற்குரிய இந்த தண்டனை, தகப்பனாகிய ஆதாமுக்கு எதிராகக் கொடுக்கப்பட்டது. இது இயற்கையாகவே அவனுடைய முழு இனத்தையும் பாதிக்கிறது என்றும் நாம் பதில் கூறுகிறோம். மனுக்குலத்தின் சந்ததி பெருகப்பெருக பாவமும் பெருகிற்று, அதற்கேற்றவாறு வியாதியும், வேதனையும், மரணமும் துரிதப்படுத்தப்பட்டது.

தகப்பனாகிய ஆதாமின் பாவத்துக்குரிய சம்பளம், சாபம், தண்டனை என்பது நித்திய நரகவேதனை என்றும், ஆதி பாவத்தினால் நாமும் எல்லா மனுக்குலமும் வர்ணிக்க முடியாத அளவிலான தண்டனையை பரம்பரையாக பெற்றோம் என்றும், இயேசுவைப் பின்பற்றுவோர் மாத்திரம், அதாவது அர்ப்பணம் செய்து கொண்ட பரிசுத்தவான்கள் மாத்திரம் நித்திய நரக வேதனைக்கு தப்புவார்கள் என்றும் நாம் எல்லோரும் தவறாகக் கற்பிக்கப்பட்டுள்ளோம். ஆனால், அன்பான நண்பர்களே, தேவனுடைய வார்த்தையானது இப்படியான

காரணமில்லாத, நியாயமில்லாத, அன்பற்ற திட்டத்தை ஆதரிக்கிறதில்லை என்பதையும், வேதம் இதற்கு எதிர்மாறாக தெளிவாகக் கூறுகிறபடி பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், நித்திய ஜீவன் தேவன் அளிக்கும் ஈவு என்றும், ஆனால் தேவனுடைய பிரியமான குமாரனோடு உறுதியாக இணையாதவர்களைத் தவிர வேறு ஒருவரும் இந்த ஈவைப் பெற முடியாது என்பதையும் காண்கின்றோம். ஆகவே துன்மார்க்கர் நித்திய ஜீவனைப் பெறமாட்டார்கள் என்பதால் அவர்கள் நித்திய ஆக்கினையை அனுபவிப்பதும் இல்லை. வேதம் அறிவிக்கிறது மிக தெளிவாகவும், நியாயமானதாகவும் இருக்கிறது. ''கர்த்தர் துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.'' (சங் 145:20)

தகப்பனாகிய ஆதாம் சோதிக்கப்பட்ட போது, இது எவ்வளவு தெளிவாகக் கூறப்பட்டது என்பதைக் கவனியுங்கள்; காலத்தைக் குறித்தும், இடத்தைக் குறித்தும், எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய நீதியான கோபாக்கினையைக் குறித்ததான தண்டனையைப் பற்றி நம்முடைய பரலோகப் பிதா கூறுகின்றதை எங்கே பார்க்க வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். சொல்லப்பட்டது என்ன வென்றால் ஆண்டவர் நம்முடைய ஆதி பெற்றோருக்கென பரதீசில் ஜீவனைத் தரும் கனி மரங்கள் மூலமாக முன்னேற்பாடுகளைத் தாராளமாகப் பண்ணினார் என்பதும், ஆனால் அவர்கள் கீழ்ப்படிதலைச் சோதிக்கும் வண்ணமாகக் குறிப்பிட்ட ஒரு மரத்தின் கனியைச் சாப்பிடவோ, அல்லது ருசி பார்க்கவோ, அல்லது தொடவோ கூடாது என்று தடையுண்டாக்கினார்; இந்த கீழ்படியாமைதான், பரதீசிலிருந்தும், ஜீவ விருட்சங்களில் இருந்தும் (தோட்டத்தில்) அவர்களை வெளியேற்றியது; அதன் விளைவாக இப்பொழுதும் இருக்கின்ற மரணத்துக் கேதுவான நிலைமைகளைக் கொண்டு வந்தது; அதுவும், அதிக அளவில் கொண்டு வந்தது; எனெனில் சராசரியான மனித வாழ்வு தகப்பனாகிய ஆதாம் வாழ்ந்ததை விட மிகவும் குறுகியதாக உள்ளது என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம்; ஆதாம் 930 வருடங்கள் வாழ்ந்தான்.

ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தையானது ''இதைப் புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய்'' என்பதாகும். இந்த ''நாள்'' குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு விளக்கிக் கூறும் போது அது ஆண்டவருடைய ஒரு நாள் என்று கூறுகிறார். ''பிரியமானவர்களே கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு

நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்.'' இந்த ''நாளுக்குள்ளாகத் தான்'' ஆதாம் மரித்தான் என்றும், அவனுடைய தலைமுறையினர் ஒருவரும் ஒரு போதும் முழு ஆயிரம் வருட நாள் வாழ்ந்ததில்லை என்றும் கூறுகிறார். ஆதாம் மீறுதலுக்குட்பட்ட போது, தேவன் அவர்களைக் குற்றப்படுத்தி சொன்ன வார்த்தைகள், அவருடைய சிருஷ்டிகளை உபத்திரவப்படுத்த வேண்டும் என்ற சிந்தை அவருக்கு கிடையாது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. மேலும் சாபமானது தற்போதைய வாழ்வு அழிக்கப்படுவதைக் காட்டிலும், மேலதிகமாக சொல்லவில்லை என்பதையும் இதன் மூலமாக வந்த உபத்திரவங்கள் மரிக்கும் நிலைமையோடு சம்பந்தமானவைகள் என்பதையும் காட்டுகிறது. ஆதாமுக்கு தேவன் கொடுத்த சாபமானது ''நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்ட படியால் நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்'' என்பதாகும். (ஆதி. 2:17; 3:17; 2 பேது. 3:8.)

பயங்கரமான நித்திய நரக வேதனை, அது வழங்கப் பெறுவது, நம்முடைய ஆதி பெற்றோர் மேல் மாத்திரமே அல்ல, அவர்களுடைய எல்லா சந்ததியினர் மேலேயும், அவர்களுடைய பிள்ளைகள் மேலும் என்பது, வேதாகமத்திலிருந்து வந்த உபதேசம் அல்ல, ஆனால் ''இருண்ட யுகங்களிலிருந்து'' வந்தவைகள் என்பதை உணரும் போது அதிக மகிழ்ச்சியுறுவதற்கு ஒரு பெரிய காரணமாயிருக்கிறது. ஆண்டவருடைய வார்த்தையின்படி அப்படியாகக் கூறப்பட வில்லை. ஆதியாகமத்தில் சொல்லப்பட்டதோடு ஒத்ததாக பவுல், இதைப்பற்றி விளக்கமாகக் கூறுவதைப் பாருங்கள் (ரோம. 5:12). ''இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.'' மரணத்தைக் குறித்த இந்த திவ்விய விளக்கத்தைக் காட்டிலும் அதிகமாக வேறு எது நியாயமானதாக அல்லது சரியானதாக அல்லது விவேகமானதாக, அல்லது திருப்திகரமானதாக இருக்க முடியும்? அது பாவத்தினால் வரும் விளைவாகும், நம்முடைய தகப்பனாகிய ஆதாம், பரீட்சிக்கப்பட்ட போது, கீழ்ப்படியாமையினால் தன்னுடைய எல்லா உரிமைகளையும் சிலாக்கியங்களையும் இழந்து வியாதி, வேதனை, துக்கம், துன்பம், மரணம் என்ற சாபத்துக்குட்பட்டான்; மேலும் நாம் எந்த விதத்திலும்

பரீட்சிக்கப்படாமல் (பாவம் செய்யும் மன நிலையையும், பெலகீனங்களையும் பரம்பரையாகப் பெற்றுக்கொண்ட நம்மைப் பரீட்சிப்பது பிரயோஜனமற்றது). பாவத்திற்கெதிராக கொடுக்கப்பட்ட இதே திவ்விய தண்டனையில், மரணத்தில் நாம் பங்குள்ளவர்களாய் இருக்கிறோம்; மேலும் ஒரு இனமாக கீழ் நோக்கி பெலகீனத்திலும், வியாதியிலும், வேதனையிலும், துன்பத்திலும், பிரேத குழிக்குள்ளும் போய் கொண்டிருக்கிறோமா?

விளக்கமாகக் கூறப்பட்டது நம்முடைய நியாயத்தின்படி திருப்திகரமாக உள்ளது; ஒரு மணி நேரத்திற்கு முன்னர் பிறந்த பாலகனாயினும், அல்லது ஒரு வாரம், அல்லது ஒரு மாதமாயிருந்தாலும் ஒரு சில வருடங்கள் அதிகமாக வாழ்ந்து, சொந்த விருப்பத்தின்படி நீதியின் சட்டத்திற்கு மீறுதலாக ஜீவிக்கிறவர்களாக இருந்தாலும் சரி, வேதனையிலும், மரிக்கும் வழிகளில் பங்கு பெறுகின்றார்கள் என்ற கருத்துக்கு உண்மையாயிருக்கிறது. ''இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்,'' ''எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்கள் ஆனார்கள்.''

ஆனால், இப்பொழுது நம்பிக்கை எங்கே? இப்படிப்பட்ட மோசமான நிலைமைக்கு என்ன உதவி இருக்கக் கூடும்? உலகம் முழுவதிலும் உபத்திரவப்பட்டுக்கொண்டும், துக்கப் பட்டுக்கொண்டும், மரித்துக்கொண்டும் இருக்கிறவர்களுக்காக என்ன செய்யப்பட முடியும்? மேலும் ஏற்கெனவே மரணம் என்கின்ற சிறைக்குள் சென்று விட்ட ஐம்பதாயிரம் லட்சம் ஜனங்களுக்கு என்ன செய்யப்பட முடியும்? அவர்களுக்காக அவர்களாகவே ஒன்றுமே செய்ய முடியாது என்று நாம் பதில் கூறுகிறோம். மனுக்குலமானது ஆறாயிரம் வருடங்கள் தன்னை வியாதியிலிருந்தும், வேதனையிலிருந்தும், மரணத்தில் இருந்தும் தூக்கி எடுக்க மனுக்குலமானது செய்த முயற்சிகள் பிரயோஜனமற்றதும், எந்த விதமான நம்பிக்கைக்கும் ஆதாரம் கிடையாது என்பதையும் நிருபித்து விட்டது. நம்பிக்கைக்காக ஏங்குகிறவர்கள் நம்முடைய இரட்சிப்பின் கர்த்தாவாயிருக்கிற ஆண்டவரை நோக்கிப் பார்க்க வேண்டும். அவர் ஒரு இரட்சிப்பை அறிவித்திருக்கிறார், தேவன் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு இருக்கிற அவருடைய யுகங்களுக்கான மகிமையின் திட்டத்தை வெளிப்படுத்துவது வேதாகமம் ஆகும். முதல் படி மீட்பின் படியாகும், நமக் கெதிராக இருந்த தண்டனையான மரண தண்டனைக்குக் கிரயத்தை செலுத்துவது முதல் படியாகும். அது நம்முடைய ஆண்டவரால்

செலுத்தப்பட்டது; ''கிறிஸ்து நம்மை தேவனிடத்தில் கூட்டிச் சேர்க்கும்படியாக அக்கிரமக்காரருக்காக மரித்தார்.'' தீர்க்கதரிசி கூறியபடி, ''ஒருவனும் தன் சகோதரனுக்காக தேவனுக்கு மீட்கும் பொருளைக் கொடுக்க முடியாது.'' ஆக்கினைக் குள்ளாக்கப்பட்ட இனத்தில் உள்ள ஒருவனும் தன்னைத்தான் மீட்டுக்கொள்ள முடியாது. ஆகவே, நிச்சயமாக தீர்க்கதரிசி கூறியபடி தன் சகோதரனையும் மீட்டுக்கொள்ள முடியாது. ஆனால் மனிதன் தூரமாகச் சென்றது தேவனுக்கு கிடைத்த தருணமாயிற்று. அவர் இயேசுவை அனுப்பினார், அவர் தன்னுடைய களங்கமில்லாத ஜீவனை நமக்காகத் தந்தார், அவருடைய ஜீவியம் ''பரிசுத்தமாய், குற்றமற்றதாய், பாவிகளுக்கு விலகினதாய் இருந்தது,'' மரிக்கின்ற இனத்திற்கு விலகியிருந்தது. இந்த ஜீவனை அதற்கான கிரயமாக தேவன் ஏற்றுக் கொண்டு தகப்பனாகிய ஆதாமின் ஜீவனுக்குப் பதிலாகக் கணக்கில் வைத்துக் கொள்ளுகிறார்; இப்படியாக ஆதாமின் பிள்ளைகளாயிருக்கிற நமக்கு அது சாத்தியமாகிறது, ஏனென்றால் நம்முடைய சொந்த நடத்தையினால், ''ஒரு மனிதனின் கீழ்ப்படியாமை யினால்'' நாம் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டோம். ஆகவே தேவன் நீதிபரராயிருந்து ஒருவராகிய நம்முடைய ஆண்டவருடைய கீழ்ப்படிதலின் நிமித்தமும், அவருடைய ஈடுபலியினிமித்தமும் நம்மை விடுதலையாக்க முடியும். அவரைக் குறித்துத் ''தம்மை எல்லாரையும் மீட்கும் பொருளாக ஒப்புக்கொடுத்தார். இது காலங்களில் விளங்கி வருகிறது.'' (1 தீமோ. 2:6.)

அன்பான நண்பர்களே, இதைப் பார்க்கும் போது சபையை மட்டும் இயேசு மீட்கவில்லை, ஆனால் வேதம் தெளிவாக அறிக்கையிடுகிறபடி, ''நம்முடைய பாவங்களை (சபையினரின் பாவங்களை) நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்'' (1யோவா. 2:2) என்பதை நாம் கவனிப்போம். இங்கே ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்! இங்கே நல்ல நம்பிக்கைக்கு ஆதாரமிருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறபடி நம்பிக்கையற்ற மற்றவர்களைப் போல, அல்லது கொஞ்சம் நம்பிக்கையுள்ளவர்களைப் போல– ஏனெனில் இவர்களின் நம்பிக்கை, தேவனுடைய வார்த்தைகளில் ஆணித்தரமாக அறிவிக்கப்பட்டுள்ளவைகளின் மேல் இல்லாதிருக்கின்றது–நாம் துக்கப்படாமல் இருக்க உதவுகிறது.

ஆனால் ஒருவர் கூறுகிறார்: இயேசு மரித்து வெகு காலமாயிற்று; பாவமும், மரணமும் இன்னும் ஆளுகை செய்யவும் மனுக்குலத்தை விழுங்கவும் ஏன் அனுமதிக்கப் படுகிறது? நாங்கள் பதில் கூறுகிறோம்: தேவன் நான்காயிரம் வருடங்களாக, பலியை அனுப்புவதற்குத் தாமதித்தார், அதன் நிமித்தம் வர வேண்டிய, ஏற்கெனவே சம்பாதிக்கப் பட்ட ஆசீர்வாதத்தை அனுப்ப இன்னும் தாமதிக்கிறார், இந்த ஆசீர்வாதம் தேவனுடைய ''குறித்தகாலத்தில்'' கிடைக்கும். தாமதத்தின் காரணம் வேதாகமம் விளக்குகின்றபடி இரண்டு விதமாக உள்ளது.

முதலாவது, மனுக்குலமானது, முழு உலகத்தையும் சரியான முறையில் நிரப்பக்கூடிய விதத்தில், அல்லது ஜனப் பெருக்கத்தை உண்டு பண்ணும்படியாக போதுமான அளவு மக்கள் பிறப்பு உண்டாக அனுமதிக்கப்படவும், அதன் பின்னர் ஏதேன் தோட்டத்தின் பரிபூரண நிலைக்கும் தேவனால் பெரிய அளவில் மகத்துவமான முறையில் பழைய நிலையில் அமைக்கப்பட்ட தேவனுடைய பரதீசாக மாற்றப்படவும் ஆகும். இக்காலத்தின் போது இந்த மனுக்குலமானது பாவத்தைக் குறித்தும், மரணத்தைக் குறித்தும் ஒரு அளவு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதுடன், பாவம் பெருகியிருப்பதைக் குறித்தும், அது விரும்பத்தகாத ஒன்று என்பதைப் பற்றியும் முக்கியமான பாடத்தின் ஒரு பகுதியைக் கற்றுக் கொள்ள முடியும். ஆண்டவருடைய காலம் இன்னும் வெகு தொலைவில் இல்லை என்று நாம் விசுவாசிக்கிறபடியே, அவருடைய வேளை வந்தவுடன், அவர் தன்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி பூலோகத்தில் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அது சாத்தானைக் கட்டி இப்பொழுது பாவத்திற்கும் மரணத்திற்கும் ஏதுவாகக் கிரியை செய்கிற அவனுடைய வல்லமையையும், செல்வாக்கையும் தடுத்து நிறுத்துவார்; அப்பொழுது முழு உலகமும் அவரை அறிகின்ற அறிவால் நிறைந்திருக்கும். கிறிஸ்து இப்படியாக மனுக்குலத்தை ஆசீர்வதித்து, அதை உருவாக்கிய (ஆதாமில் காண்கிற)தேவனுடைய சாயலுக்கு, அந்த பரிபூரண நிலைக்கு நேராக படிப்படியாக உயர்த்துவார். இந்த ஆசீர்வாதத்தின் காலமானது ஆயிரம் வருட அரசாட்சி என்று அழைக்கப்படுகின்றது. ஆண்டவர் இதற்காகத்தான், ''உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படுவதாக'' என்றார். இந்த எல்லா ஆயிரம் வருஷ நாட்களின் ஆசீர்வாதமும், இழந்ததைப் பெறுதலுக்கும், இந்த பூமியில் அவருடைய நீதியை உறுதியாக

ஸ்தாபிப்பதற்கு மாத்திரமல்ல, மனுக்குலத்தில் யாரெல்லாம் கிறிஸ்துவுக்கு அவர்கள் கீழ்ப்படிவதன் மூலமாக நித்திய ஜீவனுக்குத் தகுதியானவர்கள் என்பதை சோதிப்பதற்கும் தேவைப்படுகிறது. முழு அறிவின் மத்தியிலும் பாவத்தை விரும்கிறவர்கள், இரண்டாம் மரணத்திற்குள்ளாக ஆக்கினைக்குட்படுத்தப்படுவார்கள். ''தேவனுடைய பிரசன்னத்திலிருந்தும், அவருடைய வல்லமையின் மகிமையிலிருந்தும் நித்திய அழிவு'' அவர்களுக்குண்டாகும். இந்த ஆயிரம் வருடமானது இப்பொழுது பூமியில் வசிக்கின்ற 1,600 லட்சம் ஜனங்களுக்கு மாத்திரம் உரியது அல்ல, ஏற்கெனவே மாபெரும் சிறைச்சலை வீடாகிய மரணம் என்கின்ற பாதாளத்திற்குள் சென்றிருக்கின்ற 50,000 லட்சம் ஜனங்களுக்கும் உரியதாகும். ''நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன்.'' (வெளி 1:18)என்று ஆண்டவர் கூறுகிறபடி அவர்களை அதிலிருந்து இராஜ்யத்தின் வாய்ப்புகளுக்காக அழைப்பார்.

இரண்டாவதாக, அருமையான நண்பர்களே, இந்த சுவிசேஷ யுகத்தின் போது மனுக்குலத்திலிருந்து அவர் மீட்டெடுத்த ஒரு''சிறு மந்தை,'' ''தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பினர்,'' சீடர்கள், அவருடைய பாதபடியைப் பின்பற்றுகிறவர்கள், பரிசுத்தவான்கள், பரிசுத்தமாயிருக்கிறவர்கள் என்பவர்களை அவர் கூட்டிச் சேர்க்கும்படியாக, நம்மை நம்முடைய ஆண்டவர் மீட்டெடுத்த காலத்திலிருந்து, உலகத்திற்கான பொதுவான ஆசீர்வாதத்தையும் வாய்ப்புகளையும் கொண்டு வராமல் தாமதித்துள்ளார். இவ்விதமாக அவர் ''ஒரு விசேஷமான ஜனங்களை,'' ''ஒரு இராஜரீக ஆசாரியத்துவத்தை,'' அந்த ஆயிர வருட இராஜ்யத்தில் அவரோடு இணைந்து இருக்கும்படியாகத் தேடிக்கொண்டு இருக்கிறார்; ஆனாலும் எவ்வளவுதான் பூரணராக, உன்னத மகிமையோடு காணப்பட்டாலும், மறுபடியும் பூமியின் பழைய நிலைமைக்குக் கொண்டு வரும்படியாக உலகத்தோடு பங்குள்ளவர்களாக அல்ல, எவ்வளவுதான் அருமையாக காணப்பட்டாலும் ஒரு ஏதேனிய தோட்டத்திற்காக அல்ல, ஆனால் அவர்கள் அவர்களுடைய ஆண்டவரைப் போன்று ஆவிக்குரியவர்களாக, திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக தூதர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், வல்லமைகளுக்கும் மேலாக இருக்கும்படியாக, மேலும் அவருடைய மகிமையில் பங்குள்ளவர்களாகும்படி ஓர் உன்னத நிலைக்கென அவர் தேடிக் கொண்டு இருக்கிறார். இது எவ்வளவு ஒரு ஆச்சரியமான நம்பிக்கையாகவும், அவருடைய அழைப்பைக் கேட்டு அவருடைய ஒரு சீடர் ஆகி, இயேசுவைப்

பின்பற்றுகின்ற ஒரு நபராய் ஆனவருக்கு, மாத்திரமல்ல அவர் நமக்கு ஒரு முன்மாதிரியை வைத்திருப்பது போன்று, அவருடைய பாதபடியைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறவர்களுக்கு, அதன்படியாக இருதயம் கொண்ட ஒவ்வொருவருக்கும் அது எவ்வளவு உற்சாகமளிக்கிறதாய் இருக்கிறது. சபைக்கு, முதலாவது உயிர்தெழுதலில் அளிக்கப்படுகின்ற மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெறுவது எவ்வளவு ஒரு ஆசீர்வாதமாக அது இருக்கும். மேலும் பிரசவ வேதனைப்படுகின்ற முழுச் சிருஷ்டிக்கும் திவ்விய அனுக்கிரகங்களை வழங்கும்படியாக ஆண்டவரோடு இணைந்து இருப்பது எவ்வளவு உன்னதமான சிலாக்கியமாக இருக்கும்! மேலும் யாரெல்லாம் வாஞ்சையாய் உள்ளார்களோ அவர்கள் எல்லோரையும் ஜீவத் தண்ணீரண்டை வந்து இலவசமாய்ப் பருக அழைப்பதும் எவ்வளவு உன்னதமான சிலாக்கியமாயிருக்கும்! ஆம், அப்பொழுது, இராஜ்யத்தில் ஆவியும் மணவாட்டியும் ''வா'' என்று அழைக்கிறார்கள். (ஏனெனில் அவ்வேளையில் ஒரு மணவாட்டி உண்டு, மேலும் இந்த சுவிசேஷ யுகத்தின் இறுதியில் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் நடைபெறும்.) ''விருப்பமுள்ளவர்கள் ஜீவத் தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக்கடவன்.'' (வெளி 22:17) கல்வாரியில் மீட்பின் பலி செலுத்தப்பட்டவுடன் தேவன் ஆசீர்வாதத்தை வழங்காமல் தாமதித்தார் என்பதற்கு இந்த இரண்டு காரணங்களும் நல்லவைகளாக இல்லையா! நாம் நிச்சயமாகவே இந்த தாமதத்தில் களி கூறலாம், மேலும் நாம் அழைக்கப்படும்படியாகவும், நம்முடைய தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்திக்கொள்ளவும் நமக்கு கிடைக்கின்ற வாய்ப்பினிமித்தம் நாம் களி கூறலாம்.

அன்பான நண்பர்களே, இது நம்முடைய சகோதரர் பெற்றிருந்த மகிமையான நம்பிக்கையைக் குறித்ததான ஒரு சுருக்கமான அறிக்கையாகும்; அவரை நினைவு கூர்ந்து, அந்த நினைவை கனப்படுத்துகிறோம். இந்த நம்பிக்கைகள் அவருடைய ஆத்துமாவிற்கு ஒரு நங்கூரத்தைப் போன்று இருந்தது. இது அவர் ஆண்டவர் பக்கத்தில் உறுதியுடன் நிற்கவும், ஆண்டவரை அறிக்கை செய்கிறவர்களோடு சமமாக நிற்கவும், அவரைப் பின்பற்றும்படியாக, அனுதினமும் சிலுவையை சுமப்பவர்களோடு சேர்ந்து நிற்கவும் உதவி செய்தது. உங்களில் அனேகர் அவரிடத்தில் காணப்பட்ட உயர்வான குணாதிசயங்களை நிச்சயமாகவே அறிந்திருப்பீர்கள். ஆனால் அவர் பூரணராய் இருந்தார் என்று எண்ணி

அந்த எண்ணத்தின் மீது எங்களுடைய நம்பிக்கைகளையும், களிகூறுதல்களையும் வைக்கவில்லை; ஆனால் கிறிஸ்து இயேசுவே அவர்களுடைய பரிபூரண மீட்பராயிருந்தார். மேலும் அவர்மேல் நம்பிக்கை வைக்கின்ற எவருமே வெட்கப்பட்டுப் போவதில்லை, மேலும், நாம் முடிவில் ஜெயம் கொள்ளுகிறவராக்கப்படுவோம் என்ற அறிவின் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். நிச்சயமாகவே நாம் எல்லோரும் பின்பற்றும்படியாக நல்ல குணாதிசயங்கள் சகோதரரிடத்தில் இருந்தன, ஆனால் நாங்கள் உலகப் பிரகாரமான முறையைக் கையாள வேண்டியதில்லை. தேவன் தன்னுடைய குமாரனையே ஒரு மகிமையான உதாரணமாகக் கொடுத்துள்ளார். நாம் ஒருவரையொருவர் நோக்கிப் பார்க்காமல், நல்ல முன் மாதிரியாயிருக்கிற இயேசுவை நோக்கிப் பார்ப்பது நல்லது. வீழ்ச்சியின் மூலம் வந்த சுபாவக் கறைகள் எல்லா மனிதரிடத்திலும் உண்டு, ஆனால் அவைகளை நாம் பாராமல், அவைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; மேலும் அவர்கள் ஆண்டவரைப் பின்பற்றுகிறவர்கள், அவருடைய நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டுள்ளார்கள் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; மேலும் அதன் பயனாக அவர்கள் ''நேசர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள்'' என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கடைசியாக, அன்பான நண்பர்களே, தற்போதைய வாழ்க்கையின் ஆயுள் காலம் குறுகியதாய் உள்ளது என்பதைக் குறித்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வோம். தேவன் உலகத்துக்கென பெரிய ஆசீர்வாதங்களை அளிக்கும்படியாக இருக்கும் வேளையில் அவருடைய கிருபைகளைக் குறித்தும், இயேசுவுக்குள்ளான இரட்சிப்பைக் குறித்தும் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கின்ற நமக்கு விசேஷமான சிலாக்கியங்களும், விசேஷமான வாய்ப்புகளும், ஆனால் அதே வேளையில் நம்முடைய அறிவுக்கு ஏற்ற விதமாக விசேஷமான பொறுப்புகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்போஸ்தலர் கூறுவது போன்று ''அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற வனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.'' நாம் ஆண்டவரோடு இருக்க வேண்டும் என்றும், அவருடைய மகிமையில் பங்கு கொள்ள வேண்டும் என்றும், எதிர் காலத்தில் அவருடைய கிருபையில் இணைந்து இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தால், அதன் அர்த்தமானது, நம்முடைய குணாதிசயம்

மறுரூபப்பட வேண்டும், நம்முடைய இருதயத்தின் நோக்கத்தில், நம்முடைய சித்தத்தில், கருத்தில் சுத்தமாயிருக்க வேண்டும், அதைவிட கூடுமானவரை வார்த்தையிலும், செய்கையிலும் கூட சுத்தமாக வேண்டும் என்பதை நாம் அறிவோம். இதைப் போன்றே பல்வேறு சூழ்நிலைகளில், வீழ்ச்சியினிமித்தமாக பரிபூரணமற்றதான இந்த சரீரங்களை புதிதாக்கப்பட்ட மனமும் கூட அடக்குவது சாத்தியமாகலாம். நாம் இயேசுவுக்குள்ளாகவும் நிலைத்து இருக்க மறந்து விடக்கூடாது. இதைச் செய்து முடிப்பதற்கு நல்ல தீர்மானங்களை எடுப்பது அதிக உதவியளிக்கும். ஆகவே இந்த மாதிரியான பயபக்தியான சூழ் நிலைகளில் நாம் புதிய தீர்மானங்களைச் செய்து கொள்வோம்; எப்படியெனில் பயபக்தியோடு கூட மனதில் மகிழ்ச்சிகரமான சிந்தனைகளோடு நம்மால் முடிந்தவரை இனிமேல், ஆண்டவருடைய பாதபடிக்கு மிக நெருக்கமாக நடக்க முயற்சிப்போம்; மேலும் நம்முடைய வாழ்க்கை மூலமாக அவருடைய சத்தியத்தின் வெளிச்சமும் கிருபையும் அதிகதிகமாகப் பிரகாசிக்க இடமளிப்போம். நாம், வசிக்கின்ற உலகமானது ஒவ்வொரு நாளும் நல்லபடியாகவும், சந்தோஷம் நிறைந்ததாகவும் இருக்கும்படியாக நாம் முயற்சிக்க வேண்டும்; மேலும் நம்மால் இயன்றவரை அவருடையதாயிருக்கின்ற நம்முடைய சரீரங்கள், ஆவிகள் மூலமாக தேவனை மகிமைப்படுத்துவோம். ஆமென்.

(4) பிரசங்கம், செய்தியாளர் அல்லது சத்தியத்தில் தேர்ச்சி பெற்றுள்ள சகோதரர் ஜெபிப்பதைத் தொடர்ந்து முடிவு பெறலாம். பிரசங்கம் முடிந்த பின்னர், வெளியிலிருந்து ஒரு ஊழியக்காரர் ஒருபோதும் ஜெபிப்பதற்கென அழைக்கப்படக் கூடாது. அவர் தேவனுக்கு அல்லது மனிதருக்காகவே ஜெபத்தை ஏறெடுப்பார் என்பது அதிக அளவிற்கு நிச்சயமாக இருக்கும்; மேலும் இந்த பிரசங்கத்தின் மூலமாக தங்கள் மனதில் ஜனங்கள் பெற்றுக் கொண்ட நன்மையானவை களை அழிக்க முயற்சி செய்வார். ஜெபம் செய்யும் போது, கிறிஸ்து இயேசுவுக்குள் உள்ள கிருபைக்காக தேவனுக்கு விசேஷமாக நன்றி செலுத்த வேண்டும்; மேலும் அவருடைய ஆசீர்வாதம் எல்லார் மேலும் குறிப்பாக குடும்பத்தில் இழப்பின் மூலம் துன்பப்படுகின்றவர்கள் மேல் விசேஷமாகத் தங்கியிருக்கும் படியும் ஜெபிக்க வேண்டும்.

(5) ஆராதனை, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ள ஒரு தகுதியான கீர்த்தனையின் ஒன்று அல்லது இரண்டு சரணங்களைப் பாடுவதோடு சரியான முறையில் முடிவுக்கு கொண்டு வரப்படலாம்.

(6) சவப்பெட்டி இறக்கப்பட்ட பின்னர், கல்லறை தோட்டத்தில் ஒரு சிலவார்த்தைகள் அடங்கிய ஜெபத்தையே ஆதரிக்கிறோம்.

வித்தியாசமான சூழ்நிலைக்கு ஏற்ப வித்தியாசமான பிரசங்கங்கள்

மேலே சொல்லப்பட்ட பிரசங்கம் ஒரு ''சகோதரிக்குக்'' கூட செய்யப்படலாம் தவறல்ல, அவ்வேளையில் சகோதரர் என்ற சொல்லுக்கு பதிலாக ''சகோதரி'' என்ற வார்த்தையைப் புகுத்துவதன் மூலமாக அப்படிச் செய்யலாம்; ஆனால் உலகப் பிரகாரமான ஒருவருக்கு அல்லது தன்னை முற்றிலுமாக ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்காத ஒருவருக்காகச் செய்யும் போது, பிரசங்கம் செய்ய தகுதி உள்ள எந்த ஒருவரும் உடனடியாக அறிந்து கொள்ளும்படியாக தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டியதாயிருக்கும்.

ஒரு குழந்தையாயிருந்தால், பெற்றோர்கள் விசுவாசிகளாய் அல்லது அவிசுவாசிகளாயிருந்தால், பிரசங்கம் அதற்கேற்றபடி மாற்றப்பட வேண்டியிருக்கும்; இறந்தவர் ''நம்முடைய அருமை நண்பன் தன்னுடைய இளமைப் பருவத்தில் மரணம் என்கின்ற பயங்கரமான அறுவடைக்காரரின் ஆயுதத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார்'' என்று கூறப்பட வேண்டும்; குழந்தையாயிருந்தால் வேதப்பகுதி (ஏரே 31:15–17) '' நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு, உன் கண்களைக் காத்துக் கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுன்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பி வருவார்கள்'' என்பதிலிருந்து எடுக்க வேண்டும். இப்படியான சமயத்தில், வயதில் முதிர்ச்சி பெறாத பிள்ளைகள் மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்ய முடியாதவர்கள் என்பதை எல்லாரும் ஒத்துக் கொள்ளக் கூடிய கருத்து என்பதைத் தெளிவாகக் கூறுவது நல்லது; மேலும் ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினிமித்தம் தான் பாவம் உலகத்தில் பிரவேசித்தது என்றும், முழு உலகத்தாரின் கீழ்படியாமையினால் அல்ல என்றும், இந்த பாவத்தின் விளைவாக அல்லது தண்டனையாக மரணம் வந்தது என்று கூற வேண்டும்.

தசம பாகங்கள், காணிக்கைகள் போன்றவைகள்

''இந்த மார்க்கத்தார்'' (அப் 22:4) என்று அழைக்கப்படுகின்ற ஜனங்களில் எவரும், நாம் அறிந்தவரை பொதுவான காணிக்கை சேகரிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று ஆதரித்துப் பேசியுள்ளோம்; ஆனால் இந்த முறையில், இது பாவமான காரியம் என்று நாங்கள் நம்புவதினால் அல்ல, இல்லையென்றாலும் இதைக் குற்றமாகக் காட்டும்படியாக வேதாகமத்தில் எதுவும் உள்ளது என்பதற்காக அல்ல, ஆனால் அந்த பணத்தைப் பற்றிய விஷயம் கிறிஸ்துவத்தின் எல்லாச் சபைப் பிரிவுகளினாலும் மிக முக்கியமாக்கப்பட்டுள்ள படியால் எங்களுடைய கருத்து என்ன வென்றால், அதை முற்றுமாக ஒதுக்குவது ஆண்டவருக்கு மகிமையைக் கொண்டு வரும் என்பதாகும். தங்கள் வாழ்க்கை பூராவும் பணத்தை இச்சித்தவர்கள், பிரசங்கம் செய்வது போதிப்பது போன்றவைகள் அதிகமாக வருமானத்துக்காகத்தான் செய்யப்படுகிறது என்று நம்பும் நிலைக்கு வேகமாக வந்து விடுகிறார்கள்; ஒரு வேளை வருமானம்தான் முக்கியமான நோக்கம் என்று இல்லாவிட்டாலும், குறைந்த பட்ச வருமானத்திற்காகச் செய்யலாம் என்று எண்ணுகிறார்கள்.

ஆண்டவருடைய மக்களில் பெரும்பான்மையினர் இவ்வுலகத்தின் தரித்திரராகத்தான் இருப்பார்கள் என்பது, வேதம் அறிவிப்பது மாத்திரமன்றி, நம்முடைய அனுபவமும் அதை உறுதி செய்கின்றது. அதாவது ஐசுவரியவான்கள் அநேகரில்லை, உயர்ந்தவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை, ஆனால் ''இந்த உலகத்தின் தரித்திரர் எனப்படுவர்கள் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக இருக்கிறார்கள்.'' இவர்களில் சிலர் இந்த சத்தியம் எடுத்துக் கூறப்படும் இடத்திற்கு வரும் வேளையில், உலகப்பிரகாரமான, பணம் பறிக்கும் ஆவி இல்லாமலிருப்பதைக் கண்டு ஒரு நிம்மதியை உணருகிறார்கள் என்று நாம் நிச்சயிக்கலாம்; சில வேளைகளில் இந்த அம்சம்தான் சத்தியத்தை அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. இந்த சத்தியத்தின் வெளிச்சத்திற்குக் கண்கள் திறக்கப்பட்டவர்கள், சத்தியத்திற்காக ஊழியம் செய்ய வேண்டும் என ஒரு வைராக்கியத்தாலும், பலத்தினாலும் பிடிக்கப்படுகிறார்கள்; மேலும் பிதா மற்றும் குமாரனின் மகிமைக்காக அவர்களுடைய வெளிச்சம் பிரகாசிக்க வேண்டும் என்று அவர்களுடைய வாஞ்சை அவ்வளவு பெரிதாக இருப்பதால், அனலற்ற அநேக கிறிஸ்தவர்கள் கேட்க

விரும்புவது என்னவெனில்: இதன் நோக்கம் என்ன? இதன் குறிக்கோள் என்ன? அது உனக்கு எப்படிச் சம்பளம் கொடுக்கும் அல்லது அதனால் உனக்கு என்ன அனுகூலம் கிடைக்கும், என்னை இதில் பிரியப்பட வைக்கும்படியாக செய்வதால், எனக்கு புத்தகங்கள் இரவலாகக் கொடுப்பதினால், இல்லையென்றால் நீ பார்க்கின்ற இந்த வேதாகம கருத்துக்களுக்கு என்னுடைய கவனத்தை ஈர்க்கும்படியாக உன்னுடைய நேரத்தைச் செலவிடுவதால் உனக்கு என்ன பயனுண்டு? என்பதாகும். கூட்டங்களுக்கு வந்து, வழக்கமான காணிக்கை எடுப்பது, பணத்தை இச்சிப்பது போன்றவை இல்லாதிருப்பதைக் கண்டு, இப்படியாக வினா எழுப்புவர்கள் தான், அது அன்பின் நிமித்தமாகச் செய்யப்படுகின்றது, ஆண்டவருக்கென்றும், அவருடைய சத்தியத்திற்கென்றும் அவருடைய மந்தைக்காகவும் செய்யப்படுகிறது என்பதைக் குறித்து அதிகமாக உணர்த்தப்படுகிறார்கள். மேலும் அவர்களை சத்தியத்திற்குள்ளாகக் கொண்டு வரும்படியாக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இவைகள் தான் ஊக்கத்தை அளித்திருக்கின்றன. சத்தியத்திற்கு எதிராக ஏதோ ஒரு விதத்தில் தப்பெண்ணம் கொண்டிருந்தாலும் கூட, உண்மையான தாழ்மைக்குச் சாட்சி கூறுகின்ற இவைகள், மேலும் தேவனைப் போன்று இரக்கமாய் தயாளமாய் இருக்கின்ற ஆவியும் காணப்படும் போது, அவர்களிடம் இருந்து தேவனுடைய ஆவி, அன்பின் ஆவி புறப்பட்டு வந்தது போன்று அவர்களை எடுத்துக் காட்டுகிறது.

இந்தக் கருத்தை வற்புறுத்துவதோடு, எல்லா இடங்களிலும் இருக்கின்ற தேவனுடைய மக்களுக்கு மனப்பூர்வமாக சிபாரிசு செய்கிற வேளையில், இன்னொருபக்கம், ஒருவன் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளும் போதும், அவருக்கென தன்னை அர்ப்பணிக்கும் வேளையிலும் அவன் எவ்வளவுதான், இழிவானவனாக, சுய நலக்காரனாக, கஞ்சனாக இருந்தாலும், அவனுடைய சுய நலத் தன்மையிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெற்றியைப் பெறாமல் ''பரலோகத்தில் நாமங்கள் எழுதப்பட்டிருக்கின்ற சபையோடு'' அதற்குத் தலையாய் இருக்கின்ற ஆண்டவரோடு இணைந்து இருக்க முடியாது. சுயநலமும், கஞ்சத்தனமும் நம்முடைய பரலோகப்பிதாவின் ஆவிக்கும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் ஆவிக்கும் பொருந்தாததாயிருக்கிறது என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம். ஆகவே, இறுதியில் அவர்கள், பிதாவினுடைய பிள்ளைகள் என்று அறியப்படுகின்ற அனைவருக்கும் இது பொருத்தமாயிருக்கலாகாது. இவர்கள் எல்லோரும் குடும்ப சாயலை

உடையவர்களாக இருக்க வேண்டும்; இதன் முக்கியமான குணாதிசயம் அன்பாக, இரக்கமாயிருக்கிறது. புது சிருஷ்டியாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறவரின் அழித்து போகக்கூடிய சரீரத்தில் இந்த கஞ்சத்தன ஆவி பரம்பரை தன்மையினாலோ அல்லது துரதிருஷ்டவசமான சூழ்நிலை யினாலும், கல்வியினாலும் முக்கியமாக வளர்ந்திருந்தால், கூடிய சீக்கிரத்தில் இது சம்பந்தமாக ஒரு யுத்தம் வருவதை அவன் காணலாம். அப்போஸ்தலர் கூறியபடி மாம்சம் ஆவிக்கு–புது சிருஷ்டிக்கு விரோதமாக இச்சிக்கிறது. ஜெயம் கொள்ளுகிறவர்கள் மத்தியில் இடம் பெற வேண்டுமென்றால், இறுதியில் புது சிருஷ்டியின் மனம் வெற்றி பெற வேண்டும். சுயநலமும், கஞ்சத்தனமும் மேற்கொள்ளப்பட வேண்டும்; இருதயத்திலும், செயலிலும் தேவ பக்கியும், தயாளமும், பெருந்தன்மையும் கவனமாக வளர்க்கப்படல் வேண்டும். இப்படிப் பட்டவர்கள், மரணம் வரை கூட மாம்சத்தோடு போராட வேண்டியதிருக்கும். ஆனால், மனதின் புதுச் சித்தத்தைக் குறித்து எந்த கேள்வியும் இருக்கக் கூடாது. அவர்களை நன்கு அறிந்தவர்கள், மாம்சத்தின் மேலும், சுய நல மனத்தின் மேலும் புது மனது வெற்றி பெற்றிருக்கிறதை அவர்களுடைய நடத்தையிலிருந்து நிச்சயமாக தெரிந்துகொள்வார்கள்.

ஆகவே சபைக் கூட்டங்களில் காணிக்கைகள், பண விஷயங்களைத் தவிர்க்க வேண்டும் என்பது பற்றிய நம்முடைய எண்ணம், கொடுப்பதை அதைரியப்படுத்த வேண்டும் என்பதல்ல. நாம் அவதானித்துள்ளபடி, ஆண்டவருக்கென்று அமோகமாக, இதய பூர்வமாக, உற்சாகமாக கொடுப்பவர்கள்தான் ஆவிக்குரிய விஷயங்களில் அவரால் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். ‘‘உற்சாகமாய் கொடுப்பவனை தேவன் நேசிக்கிறார்’’ என்ற கூற்றை குறைத்துக் கூறவில்லை. இந்த வாக்கியம் பொருளினால் செய்யப்படும் உதவியை மட்டும் குறிக்கிறது என்று நாங்கள் மட்டுப்படுத்தவில்லை, ஆனால் உற்சாகமாகக் கொடுக்கப்பட வேண்டியது, ஆண்டவருடைய ஜனங்கள் பலி பீடத்தில் செலுத்தும்படி சிலாக்கியம் பெற்ற எல்லா வெகுமதிகளையும், பலிகளையும் உள்ளடக்கியது என்று நாம் கூறுகிறோம். இதைத் தேவன் நம்முடைய மீட்பரின் புண்ணியத்தினால் பெற்றுக்கொள்ளப் பிரியப்படுகிறார் என்று சொல்லுகிறார். உண்மையாகவே கீழ்க்காணப்படுகின்ற கேள்விகள் எங்கேயும், எப்பொழுதும் கேட்கப்படுகின்றன: நான் தொழில் செய்வதின்மூலம், என் கைகளின் பிரயாசத்தினால் வரும் பலன்களைக் கொடுப்பது, என்னுடைய மூளையைச் செலவிடுவது, இப்படிப்பட்ட

காரியங்களால் சத்தியத்தைப் பரப்புவது நல்லதா? அல்லது என்னுடைய அதிகமான நேரத்தையும், என்னையும் சத்தியத்தின் நலனுக்காகவும், அதை என் நண்பர்கள் அயலகத்தார் மத்தியில் பிரகடனம் செய்வதற்காக நான் இன்னொரு வழியைப் பின்பற்றவேண்டி யிருக்கும் போது குறைவான திறமை, சேவை மனப்பாங்கு என்னிடத்தில் இருந்தாலும் அதோடு நான் திருப்தியடைந்து விடலாமா? நாங்கள் அளிக்கும் பதில், எல்லோரும் சொல்லுகிறபடி, தேவனுடைய பார்வையில் பணத்தைக் காட்டிலும், சத்தியத்திற்காக நாம் செலவிடும் நம்முடைய நேரமும், செல்வாக்கும் அதிக மேலானதாயிருக்கிறது என்பதே!

ஆகவே, ஒருவர் சத்தியத்தை எடுத்துக் கூற திறமையுள்ளவர் என்று காணப்படும் பட்சத்தில், மேலும் அவருக்குச் சரியான முறையில் பணம் சம்பாதிக்கும் திறமை இருக்கிறது என்று அறியப்பட்டால், நாம் ஆலோசனையாகக் கூறுவது என்னவெனில், அவன் தன்னால் இயன்றவரை தன்னுடைய நேரத்தையும், கவனத்தையும், பலத்தையும், சத்தியத்தை எடுத்துக் கூறும்படியாக அவருக்கு இருக்கின்ற திறமையை உபயோகப்படுத்தும்படியாக, அவர் தன்னுடைய பணம் சம்பாதிக்கும் திறமையை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாத்திரம் வைத்துக் கொள்வது நலமாயிருக்கும். புத்தகங்கள், துண்டுப்பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவது போன்று செய்யப்படும் சத்தியத்தின் ஊழியங்களுக்கும் ஓர் அளவுக்கு இது பொருந்தும்.

''வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பது ஆசீர்வாதமானது'' என்கிற உண்மையை திவ்விய சுபாவத்தில் நல்ல ஒரு முன்னேற்றத்தை அடைந்த தேவனுடைய ஜனங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். தேவன் கொடுப்பதில் மிகச்சிறந்தவர்– அவர் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருக்கிறார். முழு சிருஷ்டியும் அதினதன் பங்கில் தேவனுடைய கருணையினால் இருக்கிறது. ஜீவனையும், சந்தோஷங்களையும், அவரோடு நெருங்கி ஜீவிப்பதினால் வரும் ஆசீர்வாதங்களையும் தன்னுடைய ஒரே பேரான குமாரனையும் கொடுத்தார். தேவ புத்திரருக்கு அவர் எண்ணிலடங்காத ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். தகப்பனாகிய ஆதாமுக்குள், நம்முடைய இனத்திற்கு, ஜீவ ஆசீர்வாதத்தையும், உலகத்திற்கான அபரிமிதமான ஆசீர்வாதங்களையும், இப்படிப்பட்ட விழுந்து போன, இழிவான நிலையிலும் கொடுப்பது ஆச்சரியமானது. நாம் வாசனையை, வாசனையூட்டும் சக்தியை, அழகான வர்ணங்களை, இவைகளின் கலவைகள் ஆகியவைகளை நாம்

உணரும்படியாக அவர் நமக்கு ஐம்புலங்களைத் தந்தது மாத்திரமல்ல, இந்தச் சுவைகளை நாம் அனுபவிக்கும்படியாக இயற்கையை அற்புதவிதமாக, அபரிமிதமாகத் தந்துள்ளார். சாதாரண மனிதனுக்கு கனிகள், பூக்கள், முத்தான நட்சத்திரங்கள், ஆகாயம் ஆகியவை மூலம் தன்னுடைய வெகுமதிகளை வழங்குவதில் தாராளமாக இருந்திருக்கிறார்.

தேவனுடைய வசனத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, புது சிருஷ்டியின் ''சிறு மந்தைக்கு'' தேவன் அளிக்கும்படியாக வைத்திருக்கின்ற ஆசீர்வாதங்களை நாம் ஆராயும் போது, அவைகள் நாம் கேட்பதற்கும், நினைத்துப் பார்ப்பதற்கும் மேலாக அபரிமிதமாக இருக்கின்றது என்பதை ஒத்துக் கொள்ளுகிறோம். ''எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை காது கேட்கவுமில்லை அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.'' ஆகவே தயாளம் அல்லது கொடுப்பது, உதவி செய்வது, மற்றவர்களை ஆசீர்வதிப்பது ஆகியவைகள் தேவனைப் போன்று இருப்பதின் ஒரு பகுதி ஆகும். அப்படியென்றால் வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பது உயர்வானது என்று நாம் வாஞ்சிப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

ஆவிக்குரிய விஷயங்களை நாம் வாஞ்சிக்கிற அளவிற்கும், ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளும் அளவிற்கும், அவருடைய ஆவியில் பங்குள்ளவர்களாகும் அளவிற்கும், அன்பு, தயாளம், தானம், பெருந்தன்மை ஆகியவை நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டுள்ள அளவிற்கும் தக்கதாக எல்லா மனிதருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்வதில் நாம் களி கூறுவதைக் காண்கிறோம். பரலோகப் பிதாவுக்குள் இருக்கிற அன்பைப்போல், நமக்குள் இருக்கின்ற அன்பு, தன்னுடைய சொந்த விருப்பங்களையும், நலன்களையும் பார்க்கிறதில் மட்டும் இருந்து விடாமல், மற்றவர்கள் மேல் எப்படி பொழியப்படலாம் என்று தொடர்ந்து பார்ப்பதில் ஜாக்கிரதையா யிருக்கிறது, மாத்திரமல்ல, எப்படி மற்றவர்களுடைய வாழ்க்கையைப் பிரகாசமுள்ளதாக, சந்தோஷமானதாக மாற்றலாம், எப்படி அவர்களுடைய துக்கங்களிலே அவர்களை ஆறுதல்படுத்தலாம், எப்படி அவர்களுடைய தேவைகளில் உதவி செய்யலாம் என்பதைப் பார்ப்பதிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உண்மையிலேயே இந்த புதிய மனது நமக்குள்ளே எந்த அளவுக்கு ஊற்றப்பட்டு இருக்கிறதோ அந்த அளவுக்கு,

நம்முடைய மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகிறோம்; மேலும் மகிமையின் மேல் மகிமை அடைந்து, நமக்கென, எதிர்காலத்தில் தேவன் வைத்திருக்கின்ற பெரிய வேலைகளை –தேவனைப் போன்று செய்கின்ற வேலையாகிய பூமியின் எல்லாக் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கின்ற, அவரோடு ஒருமனப் படுபவர்கள் எல்லோருக்கும் பரலோக ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து அளிக்கும் அவருடைய பிரதிநிதியாக இருக்கிற வேலைகளை–உணருகிறோம். ஆகவே புது சிருஷ்டிகள் கிருபையில் வளருகின்ற அளவின்படி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தனிப்பட்ட மகிமைகளை உணர்ந்து இருக்கும் வேளையில், அவர்களுடைய ஆண்டவரோடு உடன் சுதந்திரராய் இருப்பதால் வரக்கூடிய சிலாக்கியங்களை விசேஷமாக அதிகமாக எண்ணுவதோடு, பிரசவ வேதனைப்படுகின்ற சிருஷ்டி, இழந்து போனதை திரும்பப் பெறும்படியாக ஊழியம் செய்வதையும், அதன் பெருத்த ஆசீர்வாதங்களையும், ஆதாமுக்குள் நாம் விழுந்த நிலையிலிருந்து அவர்களில் மனுக்குலத்தின் பூரணத்திற்கு, அவர்களில் அனேகரை எழுப்புவது குறித்தும் எண்ணுகிறார்கள்.

அன்பின் ஆவியானது, மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும், உதவி செய்ய வேண்டும் என்ற இந்த ஆசை, தற்காலத்தில் நம்முடைய இருதயங்களில் வளரும் போது, மற்றவர்களைக் குறித்த தயாள சிந்தைக்கு வழி நடத்துவது மாத்திரமல்ல, நடத்தையிலும், தயாளத்தை காட்டும்படி, மற்றவர்களுக்காக நம்முடைய நேரத்தையும் செல்வாக்கையும் பலியாக செலுத்தும்படியான விருப்பத்திற்கும் நேராக வழி நடத்துகிறது; அதன் படியாக நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பது போலவே அவர்களும் கூட தற்போதுள்ள சத்தியத்தின் வெளிச்சத்தினால் ஆசீர்வதிக்கும்படியாகச் செய்கிறது; இதே ஆவி, போதிக்கவோ, விளக்கிக் கூறவோ தாலந்து இல்லாதிருக்கும் போது, நம்முடைய நேரம் என்கிற தாலந்தையும், வாய்ப்பையும் பயன்படுத்தி துண்டுப்பிரதிகள் போன்றவற்றை விநியோகிக்கும்படியாக வழி நடத்துகிறது. இப்படிச் செய்யும் வேளையில், எவ்வளவுதான் சுருக்கமாக இருந்தாலும், காலத்துக்கேற்ற ஒரு சத்திய வார்த்தையைச் சொல்ல வேண்டும். நமக்குப் பணம் என்ற தாலந்து இருக்கு மென்றாலும், அதை சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்யும் ஆண்டவருடைய ஊழியத்தில் பயன்படுத்தும்படி அந்த ஆவி வழி நடத்துகிறது . காணிக்கைப் பெட்டியிலே இரண்டு காசைப் போட்ட ஏழை விதவையின் மனப்பாங்கை ஆண்டவர் அப்பொழுது ஆதரித்தது போல,

இன்றைக்கும் ஆதரிக்கிறார் என்று நாம் நம்புகிறோம். அவளுடைய தன்னலமற்ற செயல், இந்தச் சிறு காணிக்கையின் மூலம் வெளிப்பட்டது; ஆகவே ஆண்டவருடைய பார்வையிலும், பிதாவினுடைய பார்வையிலும், அவள் கொடுப்பதில் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறாள் என்று ஆண்டவருடைய அறிவிப்பு காட்டியது. அவருடைய இருதயத்தின்படி: ''இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் என்றார்.'' (லூக் 21:4) ஆகவே சொல்லப்போனால், நம்முடைய ஆண்டவர் செய்து வந்தபடியே, பொதுவான காரியத்திற்காக, அவளும் தன்னுடைய வழியில் செய்து கொண்டிருந்தாள். ஒரு ஜீவனத்தை கொடுத்தது மாத்திரமல்ல, தன்னுடைய ஜீவனையே, அநுதினமும், ஒவ்வொரு மணி நேரமும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் கொடுத்தார்; கடைசியில், கல்வாரியில் முற்றும் முடிய தன்னுடைய கிரியையை நிறைவேற்றினார்.

நம்முடைய ஆண்டவர் அந்த ஏழை விதவையைத் தன்னுடைய கடமைக்கு அதிகமாகச் செய்தாள் என்று எச்சரிக்கவில்லை என்று ஆச்சரியப்பட முற்படலாம்; அவளிடத்தில் இரண்டு காசு மாத்திரம் இருந்ததால், அவைகள் இரண்டையும் அவள் வைத்து இருந்திருக்கலாம், அல்லது அவளுடைய தேவைகளுக் கென்று ஒன்றையாவது வைத்திருந்திருக்கலாம் என்று நினைக்கத் தோன்றலாம். இந்த விதவையின் காணிக்கையைப் பார்த்து, அதைப் புகழ்ந்தவர்கள், அதைக்குறித்து ஒரு வார்த்தையாவது எச்சரிப்பாக சொல்லாமல் இருந்தது, நம்முடைய ஆண்டவரோ அல்லது அப்போஸ்தலர்களில் ஒருவரோ இல்லாமல் வேறு யாராவது இருந்திருந்தால், அவர் அந்த எச்சரிப்பின் வார்த்தையை சொல்லுவதற்குப் பூரண சுதந்திரத்தோடு இருந்திருப்பார். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது தனக்கானதை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற ரீதியில் எச்சரிக்கப்பட வேண்டும் என்பது ஒரு சிலருக்கே தேவைப்படும் என்று நாம் நம்புகிறோம். தங்களுடைய ஜீவனத்திற்கு என்று உள்ளவைகள் எல்லாவற்றையும் கொடுப்பது என்பதற்கு எதிராக ஒரு சிலருக்கே எச்சரிப்பு தேவை. அப்படி ஒரு சிலர் இருக்கலாம். ஏழை விதவையைப் போன்று ஒரு சிலர் இருக்கலாம் என்று நாம் நம்புகிறோம். ஆனால், அதிக பட்ச தாராளம் என்று நாம் எண்ணும் செயல்களுக்கு ஏற்ப ஆண்டவர் அவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில் ஈடு செய்வார். கேள்வி எழுப்பப்படும் பக்கமாக தவறு செய்தாலும் பரவாயில்லை (எல்லாவற்றையும் காணிக்கையாக அளிப்பது), ஆனால் அதைக்

காட்டிலும் அதற்கு எதிர்மாறாக தவறு செய்யாமல் இருப்பது நல்லது என்று நாம் நிச்சயித்திருக்கிறோம். ''வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு (இயற்கையானவைகளில் வரும் விருத்தியல்ல, நிச்சயமாகவே அது ஆவிக்குரிய விஷயங்களில் வரும் விருத்தியாகும்), அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் (அதிக ஜாக்கிரதை உள்ளவர்கள், அதிக எச்சரிப்புடன் இருக்கிறவர்கள், இருப்பவர்கள், அதிகமாக தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள்) வறுமையடைவாரும் உண்டு.'' (சில சமயங்களில் பண விஷயத்தில் தரித்திரம் அடையப்பண்ணுகிறது, ஆனால் எப்பொழுதுமே ஆவிக்குரிய தரித்திரத்திற்கு வழி நடத்துகிறது). நீதி. 11:24

ஆண்டவர் தாராள குணத்தைக் குறித்து அவருடைய ஜனத்தின் மேல் எந்த விதமான சட்டத்தையும் வைக்காமல், தங்களுக்குரிய எல்லாவற்றையும் அவருக்கென்று அர்ப்பணம் செய்துகொண்டவர் களிடத்தில் அந்த விஷயத்தை விட்டுவிட்டபடியால், அவர்களுடைய அர்ப்பணிப்பு, அவர்கள் நடந்து கொள்ளும் விதத்திலிருந்து, அதாவது அவர்களுடைய தியாகங்கள், சுயத்தை வெறுப்பது என்பவைகளிலிருந்து கணக்கிடப்படும் என்பது தெளிவாகிறது. அப்படியென்றால் நம்மில் ஒவ்வொருவருக்கும் முன்பாக, தனித்தனியாக வருகிற சரியான கேள்வி, ஆண்டவருக்கென்று எந்த அளவிற்கு நம்முடைய நேரத்தை, நம் செல்வாக்கை, நம் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்பதாகும். இப்படியான கேள்வி தன்னை முற்றுமாக அர்ப்பணித்த, புது சிருஷ்டியிடமிருந்து வருமென்றால் அதற்கு ஒரே பதில்தான் இருக்கமுடியும், அது என்னவெனில், அவர் தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் ஆண்டவருக்கென்று அர்ப்பணித்து விட்டபடியால், அவருக்குக் கொடுப்பதற்கென்று ஒன்றும் கிடையாது என்று பதில் சொல்லுகிறோம். அவர் தன்னிடமாக ஏதாவது ஒன்றை வைத்துக் கொண்டிருப்பாரென்றால், அப்பொழுது அவர் ஒரு முழுமையான அர்ப்பணிப்பைச் செய்யவில்லை, மேலும் அவர் ஆண்டவரால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை அவர் நிச்சயத்துக் கொள்ளலாம்.

ஆனால், நாம் எல்லாவற்றையும் ஆண்டவருக்கென்று கொடுத்து விட்டோம் என்று வைத்துக் கொண்டால், இந்த நன்மையைச் செய்யும்படியாக தேவனுடைய சித்தத்தை எப்படி நிர்ணயிப்போம்?

ஒவ்வொருவரும் தன்னைக் குறித்துச் சிந்திக்க வேண்டியது எப்படி யென்றால், அவரவர் தன்னுடைய சொந்த நேரம், செல்வாக்கு, பணம் போன்றவைகள் மேல் உக்கிராணக்காரனாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று எண்ண வேண்டும் என்று நாம் பதில் கூறுகிறோம். மேலும் ஒவ்வொருவரும் தன்னுடைய திறமைக்கு ஏற்ப இந்த தாலந்துகளை ஆண்டவருடைய மகிமைக்கென உபயோகப்படுத்த வேண்டும். கிருபையின் சிங்காசனத்திற்கு வரும்படியான சிலாக்கியம் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், இந்த தாலந்துகளை உபயோகப் படுத்துவதைக் குறித்து அவனுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் ஞானத்தைக் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்க வேண்டும் என்று பொருள் படும். பரத்திலிருந்து வருகிற இந்த ஞானத்தினால் வழி நடத்தப்பட்டு, அவனுக்கு இருக்கும் அன்பு, வைராக்கியம் என்பவைகள் சத்தியத்தை அறிகிற அறிவிலும், அதன் தன்மையை அடைவதிலும் நாளுக்கு நாள் வளரும்போது, அவனிடத்தில் இருக்கிற அவனுடைய நேரத்தில், செல்வாக்கில் அதிகதிமாக சத்தியத்தின் ஊழியத்திற்கென தான் கொடுப்பதை அவன் கண்டு கொள்ளுவான். மேலும், இதற்கும் அதிகமாக, தன்னுடைய காணிக்கைகளையும் ஜீவ பலியையும் அதிகமாகச் செலுத்தும் படியாக, தன்னுடைய தனிப்பட்ட, குடும்ப பொறுப்புகளை எப்படி குறைத்துக் கொள்ளலாம் என்று திட்டமிடுவான்.

தேவன் யூதர்களிடம் தசமபாகம் செலுத்தும் ஒரு முறையை உண்டு பண்ணினார் என்பது நன்கு அறிந்த விஷயம். இதன்படியாக எல்லா செல்வப்பெருக்கிலும் பத்தில் ஒரு பங்கு, தானியமானாலும் சரி, அல்லது காய்கறிகள், அல்லது மந்தைகள் அல்லது பறவை அல்லது மிருக கூட்டங்கள் அல்லது பணமானாலும் சரி, ஆண்டவருடையது என்று பரிசுத்தமான உபயோகத்திற்கு என்று பிரித்து வைக்கப்பட்டுள்ளது; இது பரிசுத்தமான காரியங்களுக்கு மாத்திரமே உபயோகப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது. ஆனால் இந்த ஒரு ஒழுங்கு ''ஊழிய வீட்டாருக்கு'' மாத்திரம் என இருந்தது. ஆனால் இதை ஆண்டவர் ''புத்திரரின் வீட்டாருக்கு'' வைக்கவில்லை. அவர் பணிவிடைக்காரனைக் காட்டிலும் புத்திரரிடமிருந்து குறைவாக எதிர்பார்க்கிறார் என்று இது அர்த்தப்படுகிறதா! நிச்சயமாக இல்லை. தகப்பனுடைய காரியத்தில், பணிவிடைக்காரனைக் காட்டிலும் அதிக வாஞ்சையில்லாத புத்திரன், புத்திரன் எனும் ஸ்தானத்திற்க்கு தகுதியில்லாதவனாயிருப்பான், மேலும்

அந்த ஸ்தானத்தை அவன் நிச்சயமாக இழந்து போவான்; மேலும் புத்திரனுக்குரிய உண்மையான குணத்தையுடைய இன்னொருவன் கண்டுபிடிக்கப்படுவான்; புத்திரரின் வீட்டைப் பொறுத்த வரை, பத்தில் ஒரு பங்கு மாத்திரமல்ல, எல்லாமே, பரிசுத்தமாக்கப்பட்டுள்ளது, பலியாகச் செலுத்தப்பட்டுள்ளது, எல்லாமுமே தருணம் கிடைக்கும் போதெல்லாம் ஆண்டவருக்கும் அவருடைய வேலைக்காகவும் செயல் படுத்தப்பட வேண்டும். இப்படியாக நம்முடைய ஜீவியத்தை, நமக்கு உண்டான எல்லாவற்றையும், சத்தியத்தின் ஊழியத்திற்கென கொடுப்பதில் தொடர்ந்து முன்னேற வேண்டும்.

பிலிப்பியருக்கு அப்போஸ்தலர் எழுதிய நிருபத்தில் (பிலி 4:17) அவர் அவர்களுடைய உபகாரம் பிரயோஜனமாயிருந்தது என்று மாத்திரமல்ல திருப்தியடையவும் செய்தது என்று கூறும்போது இந்த பாடத்தை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார். மேலும் அவர் ''உபகாரத்தை நான் நாடாமல் உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும் படியே நாடுகிறேன்'' என்றும் கூறுகிறார். அவர்கள் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்து இருக்கிறபடியால், அது நல்ல கிரியைகளின் கனியையும், தயாளத்தையும் கொண்டு வரும் என்று அவர் நிச்சயமாக அறிந்திருந்தார்; மேலும் எவ்வளவு அதிகமான அளவுக்கு தயாளம் காணப்பட்டதோ, அந்த அளவு அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியையும் அவரால் காண முடிந்தது; இதைத்தான் அவரும் உண்மையிலே வாஞ்சித்தார். இன்றைக்கும் இப்படித்தான் இருக்கிறது. பொன்னும், வெள்ளியும், ஆயிரம் குன்றுகள் மேல் உள்ள ஆடுமாடுகளும் அவருடையது என்று ஆண்டவர் சொல்லுகிறார். உண்மையிலேயே நம்முடைய முயற்சிகளும், பணமும் அவருக்குத் தேவையில்லை; ஆனால் அது நம்முடைய நன்மைக் கேதுவாக இருக்கும் என்பதால், நாம் வளருவதில் அது உதவி செய்யும் என்பதால், அவருடைய கிரியை இப்படியான ஒரு நிலையில் இருக்க அவர் அனுமதிக்கிறார்; அதன்படி உண்மையாகவே அவருக்குச் சொந்தமானவர்களுடைய எல்லா முயற்சிகளும், மேலும் அவரை மகிமைப்படுத்தும்படியாக அவர்கள் உபயோகிக்கக்கூடிய எல்லா வழி முறைகளும் அவருக்குத் தேவைப் படுகிறது.

இந்த ஒழுங்கு எவ்வளவு கிருபையுள்ளதாயிருக்கிறது! ஆண்டவருடைய அன்பான ஜனங்களுக்கு இந்த ஆசீர்வாதங்கள்

எப்படிப்பட்ட சிலாக்கியங்களை ஏற்கெனவே கொண்டு வந்துள்ளது! நம்முடைய தாலந்துகளை உபயோகிக்கும் படியான ஆசீர்வாதமான சிலாக்கியங்கள், எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும், ஆண்டவருடைய ஊழியத்தில் பயன்படும்படியாக நம்முடைய ஓட்டத்தின் இறுதி வரை தொடர்ந்து நம்மோடு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏழ்மையான விதவை, அவளுடைய இரண்டு காசுகளை உதாரணமாகப் பார்த்த பின்னர், இருதயத்திலுள்ள தங்கள் வாஞ்சையை ஆண்டவருக்குக் காட்ட முடியாதபடி ஒருவரும் கிடையாது என்று நாங்கள் கூறுகிறோம். நம்முடைய ஆண்டவருடைய மதிப்பீட்டின்படி, ஒரு இடத்தில் கூறப்பட்டபடி, கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும், அதிகமான சந்தர்ப்பங்களிலும் உண்மையுள்ளவனாக இருப்பான்; மேலும் இப்படிப்பட்டவர்களுக்கே ஆண்டவர் எதிர் காலத்தின் பெரிய சந்தர்ப்பங்களையும் மாத்திரமல்ல, தற்காலத்திலுள்ள அதிக பெரிதான சந்தர்ப்பங்களையும் கொடுக்க விருப்பமுள்ளவராயிருப்பார்.

எங்களுடைய ஆலோசனை என்னவெனில், பணத்தைப் பற்றிய காரியம் கூடுமானவரை (முற்றிலுமாக விடப்பட வேண்டும் என்று நாம் நம்புகிறோம்) சபையின் பொதுவான கூட்டங்களில் யோசனை பண்ணப்படக் கூடாது என்பதாகும். நாம் ஆலோசனையாகச் சொல்வது என்னவெனில், ஆண்டவருடைய ஆவி வளர்ப்பிக்கப்படல் வேண்டும், அது அதிகமாக நமக்குள் தங்கி இருக்கும்போது, ஒவ்வொருவரும் ஆவிக்குரிய கூட்டத்திற்காக தன்னுடைய பங்கைச் செய்ய ஆவலோடு இருப்பார்கள்; அது சபையின் அன்றாட செலவுகள் மாத்திரமல்ல, வாடகையாக ஒரு வேளை இருக்கலாம், அல்லது மற்ற செலவுகளாக இருக்கலாம், இவைகளைக் குறித்து ஆவலோடு இருப்பதோடு, தன்னுடைய ஆத்துமாவிற்கு ஆசீர்வாதமாயிருக்கிற வெளிச்சத்தை இன்னும் இருளில் அமர்ந்திருக்கிற மற்றவர்களுக்கும் பரவச் செய்ய ஆவலுள்ளவனாயிருப்பான். இதைப் போன்றே வெளியில் உள்ளவர்களிடத்தில் இருந்து பணம் கேட்கப்படக் கூடாது என்று நாங்கள் புத்தியாகக் கூறினாலும், வெளியில் உள்ளவர்களால் கொடுக்கப்பட்ட பணம் மறுக்கப் பட வேண்டும் என்பதற்கான காரணத்தை நாங்கள் காணவில்லை. அது அவர்களுடைய அநுதாபத்தைக் காட்டுவதாகக் கூட இருக்கலாம், அது இந்த வாழ்க்கையிலோ அல்லது வரக்கூடிய வாழ்க்கையிலோ, சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும்

தன் பலனை அடையாமற் போகான் என்று சொன்னவரிடத்தில் இருந்து ஏதாவது ஒரு நன்மதிப்பும், வெகுமதியும் கிடைக்காமல் போகாது. (மத். 10:42; மாற்கு 9:41)

****

''நம்முடைய நாளின் கடினமான சத்தங்களின் ஊடாகக் கூட
ஒரு பணிவான, இனிமையான முகவுரை தன் வழியைக் கண்டுகொள்ளுகிறது;
மேகம் போன்ற சந்தேகங்கள், பயம் என்னும் கோட்பாடுகளின் ஊடாக,''
ஒரு வெளிச்சம் அமைதியாகத், தெளிவாக வெளியே வருகிறது.

''பார்வையில்லாதவர்கள் இருளில் தட்டுத் தடுமாற வேண்டும்,
தானியத்திற்கு முன்னால் கதிர் இருப்பது போன்று;
நீ உணருகிறது போல் நான் உணர்ந்தேன்,
நீ இருக்கிற இடத்திலே நானும் இருந்தேன்.

என்னால் அறிய முடியும் என்றால்

''என்னால் மாத்திரம் நிச்சயமாக அறிந்து கொள்ள முடியும் என்றால்
என்னை இவ்வளவாகக் களைப்படையச் செய்கின்ற காரியங்கள்
என்னுடைய ஆண்டவரால் கவனிக்கப்பட்டது –
என்னை ஒரு கத்தியைப் போல் வெட்டுகின்ற வேதனைகள், சத்தம், களைப்பு, சண்டைகள்,
வாழ்க்கையின் எண்ணற்ற பிரச்சனைகள் – அது என்ன சமாதானத்தைத் தர முடியும்!

''நான் ஆச்சரியப்படுகிறேன் அவர் உண்மையிலேயே பங்கேற்கிறாரா,
இந்தச் சிறிய மனுக்குலத்தின் கவலைகள் எல்லாவற்றிலும்
இந்த பராக்கிரமமான இராஜாதி இராஜா!
அவர் எல்லையற்ற விண்வெளியில் வழி நடத்துபவராக இருப்பாரென்றால்
ஒவ்வொரு பிரகாசமான கிரகத்தையும் அதன் இடத்தில் வைத்து,
பரத்திலிருந்து இறங்கி வருகிற கிருபையைப் பெறமுடியும்
இந்தச் சிறிய காரியங்களைக் கவனித்து.

''இது எனக்குத் தெரிகிறது, இது நிச்சயமாயிருக்கு மெனில்
ஒவ்வொரு பிரச்சனையோடும் இப்படியான குதூகலம் வரும்
அதன் நிமித்தம் நான் வேதனையை விரும்புவேன்,
எனக்கு வருகின்ற எல்லாவற்றையும்
தெய்வத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட சிந்தனை என்று எண்ணுவேன்
மேலும் கிறிஸ்துவின் இனிமையான இரக்கத்தை உணருவேன்
நஷ்டமல்ல, ஆனால் ஐசுவரியமான நன்மை.

''என் ஆண்டவரே, என் இருதயம் இனி ஒரு போதும் சந்தேகிக்காது
என் மேல் நீர் இரக்கம் காட்டுகிறீர்
திவ்விய பட்சாதாபத்தால்.
எனக்காக உள்ள அன்பு ஒரு முறை சிலுவையில் அறையுண்டது
அது என்னை விட்டு விலகிப் போகிற அன்பல்ல,
ஆனால் எப்பொழுதும் பங்குபெறும் படியாகக் காத்திருக்கிறது
என்னுடைய சிறிய கவலைகளில் கூட.''

அத்தியாயம் 7

புது சிருஷ்டியின் பிரமாணம்

ஒரு பிரமாணம் கொடுக்கப்படுதல் அதைக் காத்துக்கொள்ளத் திறமை உள்ளது என்பதைக் குறிக்கிறது –ஆதியிலேயே எழுதப்பட்டபடியான திவ்விய பிரமாணம் –விழுந்து போன சந்ததியினருக்கு ஜீவனுக்குரிய பிரமாணம் கொடுக்கப்பட முடியாது – மீட்பு பிரமாணத்தின்படியல்ல, ஆனால் கிருபையின்படியாகும் – நியாயப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டு, கிறிஸ்துவின் ஒரே பலியினால் புது உடன்படிக்கை ஊர்ஜிதம் பண்ணப்பட்டது–சீனாய் மலைப் பிரமாணம் மாம்சீக இஸ்ரயேலருக்கு மாத்திரமே – புது உடன்படிக்கையின் பிரமாணம் – பரிசுத்தவான்களை அபிவிருத்தி செய்யும் பிரமாணம் – புது சிருஷ்டி தெய்வீக உறவிலும் உடன்படிக்கையிலும் வித்தியாசமானது, வேறுபட்டது – பரிபூரண பிரமாணத்தை மதிப்பதில் வளர்ச்சி பெறுதல்– இலக்கை நோக்கி ஓடுதலும் அங்கே நிலைத்து நிற்பதும்–பொன்னான கற்பனை– சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்.

எந்த ஒரு தகுதியுள்ள நபர் ஒரு பிரமாணத்தைக் கொடுக்கும்போது அதைப் பெறுபவர் சார்பில் அந்தப் பிரமாணத்தைக் காத்துக்கொள்ளும் திறமை உள்ளது என்பதைக் குறிக்கிறது, அல்லது அதற்கு உட்பட்டு செய்யப்படக்கூடிய குற்றங்களை மன்னிப்பதற்கு ஏதோ ஒழுங்கு முறை உள்ளது என்பதைக் குறிக்கிறது. ஒரு பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னரே அது மீறப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளது என்பதை அறிந்து, அந்தப் பிரமாணத்தோடு கூட தண்டனைகளையும் உடையதாய் இருக்கிறது. தகப்பனாகிய ஆதாம் விஷயத்தில் அவன் தேவனுடைய சாயலாகவும், ரூபத்தின் படியேயும் உண்டாக்கப்பட்டான் என்று நாம் அறிவிக்கப்பட்டுள்ளோம்,மேலும் அவன் திவ்விய திட்டத்திற்குக்

கீழ்ப்படியாத தினிமித்தம் அவன் மேல் ஒரு தண்டனை அல்லது சாபம் வந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளோம். பின்னோக்கிப் பார்க்கும்போது, ஒரு பிரமாணம் அவனுக்கு கொடுக்கப் பட்டிருக்க வேண்டும், மேலும் அது போதுமான அளவிற்குத் தெளிவாகவும் இருந்திருக்க வேண்டும், அப்படி இல்லாமலிருந்தால் அவன் அவனுடைய சிருஷ்டிகரால் சரியான விதத்தில் ஒரு மீறுதல் செய்தவனென்று ஆக்கினைக்குட்படுத்தப் பட்டிருக்க மாட்டான் என்று நாம் உணருகிறோம். ஏதேன் தோட்டத்தின் பாவம், திவ்விய கட்டளைக்குக் கீழ்ப்படியாததால் வந்தது என்று நமக்குத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. நீதியான மரண தண்டனை ஆதாம் மேல் வந்தது,அது அவன் மூலமாக இயற்கையாகவே அவனுடைய சந்ததியினருக்கும் தொடர்ந்து வந்தது, மேலும் அவன் பிரமாணத்திற்கு உட்படுத்தப்பட்டிருப்பதை உணர்ந்திருந்தான், இதை அவனறிந்திருந்தும் பாவம் செய்தான் என்றும் பொருள்படுகிறது; அப்படி இல்லையெனில் தவறு பிரமாணம் கொடுத்தவர் மேல் இருந்திருக்க வேண்டும். அந்தப் பிரமாணத்தை செயல் படுத்தாமல் வைக்க சாத்தியம் இல்லை என்பதையும், மத்தியஸ்தர் இல்லை என்பதையும் பார்க்கும் போது, ஆதாம் திவ்விய பிரமாணத்தைப் பெற்றுக்கொள்ளவும், அதற்குக் கீழ்ப்படியக்கூடிய நிலையிலும் இருந்தான் என்பதைக் காட்டுகிறது, ஆனால் மீறுதலின் விளைவாக முழுத் தண்டனையும் அவன் மேல் வந்தது.

சிருஷ்டிகர் தகப்பனாகிய ஆதாமுக்கும்,தாயாகிய ஏவாளுக்கும் கற்களின் மேல் எழுதப்பட்டதாக அல்லது வேறு வழியிலோ ஒரு தொகுப்பான பிரமாணங்களை அளித்தார் என்பதற்கான குறிப்புகள் நம் வசத்திலில்லை. இப்படித் தொகுக்கப்பட்ட பிரமாணங்கள் இன்றைக்கு பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால் ஒரு பரிபூரணமான பிரமாணத்தைப் பரிபூரணமான ஆதாம் பெற்றிருந்தான் என்பதையும், அதன்படியாக அவன் நியாயம் தீர்க்கப்பட்டான் என்பதையும், மேலும் தோல்வியினிமித்தம் ஆக்கினைக்குட்படுத்தப் பட்டான் என்பதையும் மனுக்குலத்தின் பெலவீனங்களினால் அநேகர் காண இயலாமல் இருக்கிறார்கள். பேப்பர், கற்பலகை போன்றவைகளில் வெளிப்படையாகப் பிரமாணங்கள், எழுதப்பட வேண்டும் என்று நினைப்பதும் தவறு. மேலும், நீதியின் வழிமுறைகளோடு ஒத்திருக்கக்கூடிய விதமாக இன்றும் மேலான விதத்தில் திவ்விய பிரமாணமானது எழுதப்படக் கூடியது மனிதனின் சிருஷ்டிப்பிலேயே இருக்குமென்று எண்ணாதிருப்பதும் தவறாகும்; நல்லது பொல்லாதது

என்பதை உணரக்கூடிய விதத்தில் பரிபூரணமான மனிதனில் எழுதப்பட்டது என்பதை உணராதிருப்பதும் தவறாகும். இந்த விதத்தில் தேவனுடைய பிரமாணம் அவருக்குள்ளாகவே எழுதப்பட்டிருக்கிறது என்பது மாத்திரமல்ல, எல்லா தேவதூதர்களின் சேனைகளின் மேலும் எழுதப்பட்டுள்ளது, இதன்படியே ஆதாம், ஏவாள் உண்டாக்கப்பட்ட அமைப்பிலே எழுதப்பட்டது. அவர்கள் பாவத்திற்குள் விழக்கூடியவர்களல்ல; அதற்குப் பதிலாக அவர்கள் நீதி செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்; அவர்கள் நீதியுள்ளவர்களாக, நீதியும் பரிபூரணமுமான நிலைமைக்குள் காணப்பட்டார்கள்; மேலும் அவர்களுடைய சிருஷ்டிகருக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைக் குறித்த மனசாட்சியுள்ளவர்களாயும், அவருடைய ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிய அவர்களுடைய பொறுப்புகளைக் குறித்தும் அறிந்திருந்தார்கள்; மேலும் அவர் என்ன கட்டளையிட்டார் என்பதைத் தெளிவற்றதாக அல்ல, திட்டவட்டமாக அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே அவர்கள், அவர்களுடைய மீறுதலில் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லாதிருந்தார்கள். தண்டனைகள் முதலானவைகளைப் பொருத்த வகையில், இரக்கமானது அவர்களது அனுபவ மின்மையைக் கூறி அவர்களுக்காக மன்னிப்புக் கோரலாம். பாவம் செய்தால் அதற்கான தண்டனைகள் என்ன என்பதை அவர்கள் அறியாமலிருந்திருக்கக் கூடும் என்ற எண்ணம் எழும் என்றாலும், அது அவர்கள் தவறான வழியையும் சரியான வழியையும் அறிந்திருந்தபடியால் எவ்விதமான மாற்றத்தையும் உண்டு பண்ணாது. கீழ்ப்படியாமையைத் தொடர்ந்து வரக்கூடிய அழிவுகளைக் குறித்து ஒரு உணர்வு ஒரு பக்கம் இருக்க, தேவனுக்குக் கீழ்ப்படிவது சரியானது என்றும், அவருக்குக் கீழ்ப்படியாதது தவறு என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ‘‘ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை’’ என்று அப்போஸ்தலர் கூறி, ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களை அவர் உறுதி செய்கிறார். மேலும் அவன் அறிந்திருந்தும் மனப்பூர்வமாக மீறினான் என்றும், இப்படியாக அவன் தன்மேல் சாபத்தை, பாவத்திற்குரிய தண்டனையை, சிருஷ்டிகர் ஏற்கனவே அறிவித்திருந்த தண்டனையாகிய மரணத்தை வருவித்துக் கொண்டான் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார்.

இன்றைக்கு நம்மைச் சுற்றிப் பார்க்கும்போது, உலகமானது பொதுவாகவே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, நம்முடைய ஆதிபெற்றோர்கள் சிருஷ்டிக்கப் பட்டிருந்த தேவசாயலை இழந்திருப்பதைக் காண்கிறோம். சரியானதையும், தவறானதையும்

தெரிந்துகொள்ளும் உள்ளுணர்வை அதிகமாக இழந்துவிட்டார்கள். மனித சுபாவத்தில், முன்பு தெளிவாகவும் துல்லியமாகவும் பதிக்கப்பட்டிருந்த திவ்விய பிரமாணம் கடந்த ஆறாயிர வருட ''பாவம், மரணம்''ஆகியவைகளின் ஆட்சியின்போது அதிகமான அளவிற்கு அகற்றப்பட்டு விட்டது. தேவன் மனுக்குலத்தின் சில குடும்பங்களோடு கொண்டுள்ள தனது தொடர்பு மூலமாக, அநேக இருதயங்களில், ஆதிப் பிரமாணத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு புதுப்பித்து இருக்கிறார், நீதியின் பல்வேறு அம்சங்களை ஆழமாகத் திரும்பவும் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். இருந்த போதிலும், அதிக நாகரீகம் அடைந்த, அதிகமாகக் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டவர்களிடையே கூட, சந்தேகத்திற்கு இடமின்றி, அநேகமான கேள்விகளுக்கு தான் சொல்லுவது சரியானதா அல்லது தவறானதா என்று தைரியமாக தீர்மானிக்க ஒருவராலும் இயலவில்லை. ஆகவே நாம் செல்ல வேண்டிய சில திவ்விய குறியளவுகளை நமக்கு முன்னதாக வைக்கவேண்டியதாய் இருக்கிறது, அதற்கேற்ப, நாம் சரியானதையும் தவறானதையும் மதிப்பீடு செய்யும் அந்தக் கணிப்பை திவ்விய குறியளவிற்கு இன்றும் அருகாமையில் கொண்டு வர முடியும். இருந்த போதிலும் தேவனை அறியாத புறஜாதியினர் மத்தியிலும் மனசாட்சி செயல்படுவதையும், சரியானது அல்லது தவறானது என்று குறிப்பிடுவதைக் குறித்து அநாகரீக கொள்கைகள் இருப்பதையும் நாம் அடிக்கடி காண்கிறோம். இவைகள் ஆதியில் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பிரமாணம், திரிக்கப்பட்டு வளைக்கப்பட்ட பின்னர் மிஞ்சியுள்ளவைகளாகும்; ஆரம்பத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பிரமாணத்திற்கு ஏற்றவகையில் அவன் ''தேவசாயலில்'' சிருஷ்டிக்கப் பட்டான். புறஜாதிகள் மத்தியில் காணப்பட்ட இந்த நிலைமையை அப்போஸ்தலர் ''அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறது'' என்று கூறுகிறார். மேலும் ''நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்'' என்றும் அவர் கூறுகின்றார். இது ஆதியிலே கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் மிஞ்சியவைகளாகும், அது ஒரு காலத்தில் மனுக் குலத்திற்குள்ளாக இயல்பாகவே இருந்தது என்பதற்கு சிறு சிறு ஆதாரங்களாகும். (ரோம. 2:15)

மனுஷருக்குள்ளே குற்றவாளிகளுக்கென, குற்றவாளிகள் அல்லாதவர்களுக்கென சட்டங்கள் உண்டு. (1) பிரஜா உரிமைக்கென சட்டங்கள் உண்டு. அது கீழ்ப் படிபவர்களுக்கு ஜீவன், சமாதானம்,

சுயாதீனம், சலுகைகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. அதே நேரத்தில் மீறுதல் செய்பவர்களுக்கு இவையெல்லம் சிறை வாசத்தின் போது பறிக்கப்படும் என்றும் எச்சரிக்கிறது. (2) மிதமான நடவடிக்கை கைக்கொள்ளப்படாத பட்சத்தில் குற்றவாளிகளைப் பொறுத்தவரையில் கடுமையான சட்டங்கள் இருக்கின்றன, ஆனால் எவ்வேளையிலும் அவர்களுக்கு சுயாதீனம் அளிக்கப்பட வாய்ப்பில்லை.

இப்படித்தான் திவ்விய பிரமாணத்திலும் காணப்படுகிறது. முதலாவதாக, ஆதாம் பரீட்சிக்கப்பட்ட ஆரம்ப காலத்து பிரமாணம் நம்மிடம் உண்டு. அவனுக்கு ஆரம்பத்திலேயே சலுகைகளும், ஆசீர்வாதங்களும்–ஜீவன், சமாதானம், சந்தோஷம், மேலும் தேவையான எல்லா காரியங்களும் கூடவே இருந்தன. இவைகளெல்லாம், அவன் தன்னுடைய சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படிந்து இருக்கும் வரை உண்டு என்று உறுதியளிக்கப் பட்டிருந்தது. மேலும் அதோடு கூட கீழ்ப்படியாமைக்கு ஒரு மரண தண்டனையும் சேர்க்கப்பட்டிருந்தது. அது ''நிச்சயமாக நீ சாகவே சாவாய்'' என்பதாகும். இந்த தண்டனை இயற்கையாகவே அவனுடைய சந்ததியினருக்கும் தொடர்ந்து வந்தது. ஆகவே ஆதாமின் மீறுதல் காலத்திலிருந்து, அவன் ஒரு தவறு இழைத்தவனாக, குற்றவாளியாக, இதற்கு முன்பாக அவன் அநுபவித்த வாழ்க்கையின் நம்பிக்கைகளை இழந்தான்; அவனுடைய ஏதேன் வீட்டை இழந்தான்; சிருஷ்டிகரோடு முன்பு அவன் கொண்டிருந்த ஐக்கியத்தை இழந்தான். பண்படுத்தப் படாத பூமி அவனுடைய பெரிய சிறைக் கூடமாயிற்று, அவனுடைய கல்லறை நிரந்தர சிறையாயிற்று. இதற்கு முன்பாக அவனை ஆண்டு வந்த பிரமாணம் இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்து விட்டது. எப்படியெனில், இனிமேல் அவனுக்கென எந்தவித நம்பிக்கையையோ, அல்லது வாழ்க்கையின் நன்மைகளையோ அது வைத்திருக்க வில்லை, ஆனால் ஏற்கெனவே அவனை மரணத்திற்குட்படுத்திற்று. இப்பொழுது அவன் ஜீவனுக்கான பிரமாணத்திற்குக் கீழாக இல்லை; அவனுடைய பிள்ளைகளில் எவரும் அந்த ஜீவனுக்கான பிரமாணத்திற்குக் கீழாக பிறக்கவில்லை; எந்த விதமான நம்பிக்கையையோ அல்லது நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்போ இல்லாமல் போயிற்று; அவர்கள் எல்லோருமே சிறைக் கைதிகள். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால் பாவமும், மரணமும், அவர்களைச் சிறைப்பிடித்தவர்களும், உபத்திரவப்படுத்துகிறவர்களும், சிறைக் காவலர்களும் ஆயின.

ஆனால் ஆதியிலுள்ள பிரமாணம், அவர்கள் மேல் செயல்படுத்தப்பட முடியாமல் போனாலும், அவர்கள் மேல் அதனுடைய பழி ஏற்கெனவே விழுந்து விட்ட போதிலும், அவர்கள் தாங்கள் இயற்கையான சில பிரமாணங்களுக்குக் கீழாக இருப்பதை உணர்ந்தார்கள். அவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் ஒரு பிரமாணம் செயல்படுவதை உணர்ந்தார்கள். இதன்படியாக ஒவ்வொரு முறையும் அவர்களுடைய மனசாட்சியை மீறும்போதும், அவர்கள் பாவம் என்று உணர்ந்த நிலைமைக்குள் ஆழமாகச் செல்லும்போதும் அது அவர்களுக்கு இழிவையும் மரணத்தையும் துரிதமாகக் கொண்டு வந்தது. மேலும் ஒன்றுமே அவர்களுக்கு எந்த விடுதலையையும் குறிப்பாகச் சொல்லாவிடினும், சரியானது என்று அவர்கள் உணர்ந்ததை எவ்வளவு கவனமாகப் பின்பற்ற நினைத்தார்களோ, அதே அளவுக்கு, அவர்களுடைய சிறைப்பட்டிருந்த நிலைமையில் அதிக அநுகூலம் இருப்பதை அவர்கள் கண்டார்கள்.

விழுந்துபோன நம் இனத்திற்கு ஜீவனுக்கான ஒரு பிரமாணத்தை தேவன் அளிக்கவேண்டும் என்பது சாத்தியமில்லாதிருந்தது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அவர்கள் நியாயமான முறையில் தண்டிக்கப்பட்டார்கள், மேலும் தண்டனை இருக்கும் காலம் வரை, அவர்களுக்கு எந்தப் பிரமாணமும் கொடுக்கப்பட முடியாது, ஏனெனில் அதைக் கைக்கொண்டால் அது அவர்களை மரணத்திலிருந்து விடுதலையாக்கும். மனுக்குலத்தின் குடும்பத்திற்கு இப்படியான எந்தவித ஜீவனுக்கான பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னால், முதலாவது கொடுக்கப்பட்ட பிரமாணத்தின்படியான தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்; அதன் சாபம், அல்லது ஆக்கினை அகற்றப்படல் வேண்டும். அதன் பின்னர் நிபந்தனையோடு கூடிய நித்திய ஜீவனைக் கொடுப்பதற்கான உறுதிகளும் உள்ளடங்கிய மற்ற ஒழுங்குகள் செய்யப்பட முடியும். ஆனால் முதல் மீறுதலுக்கு பிராயச்சித்தம் செய்யப்படும் வரை, அதற்கான தண்டனை ரத்துச்செய்யப்படும் வரை அவைகள் மேற்கொள்ளப்பட முடியாது. தகப்பனாகிய ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட ஒன்றுக்கு பதிலாக, தனக்கும் தன் சந்ததியினருக்கும் கொடுக்கப்பட்டதை இழந்ததற்குப் பதிலாக, மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனுக்கென இன்னொரு தருணத்தைக் கொடுக்கும்படியாக பாவ நிவாரணத்திற்கான தன்னுடைய நோக்கத்தைக்குறித்து அறிக்கைகளை தேவன் வழங்கினார். ஆனால் திவ்விய வாக்குத்தத்தங்கள் மிகவும்

பொதுவானதாக இருந்தன, அது நம்பிக்கைக்கு ஒரு அடிப்படையாக இருப்பதற்கு மாத்திரம் போதுமானதாக இருந்தது. ஆகவே மனுக்குல மானது, பாவம், மரணத்தின் சிறைக்கைதிகளாக இருக்கும்போது, திவ்விய வாக்குத்தத்தங்களின் உறுதியின்மேல் ''நம்பிக்கையுடைய சிறைகள்'' (சகரியா 9:12) என்று கூறப்பட்டுள்ளார்கள்.

தேவன் தீர்ப்பளிக்கும்போது ஸ்திரீயின் வித்து கடைசியில் சர்ப்பத்தின் தலையை நசுக்கும் (ஆதி.3:15) என்று கூறினார்; பாவநிவர்த்தி முதலானவைகளைக் குறித்த அறிவிப்புகளில் இது ஒன்றாகும்; கருகலான, மறைவான பொருளில் தீய சக்திகளின் வல்லமைகளை நீக்குவதை இப்படிக் கூறுகிறார்; வர வேண்டியதான ஒரு வெற்றியைக் குறித்து, ஆதாமின் சந்ததியினருக்கு வருவதைக்குறித்து கூறுகிறார். இந்த ஸ்திரீயின் வித்தானது, நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி கிறிஸ்துவில் நிறைவேறினது. சீரழிவு வந்த நான்காயிரம் வருடங்களுக்குப் பின்னர் ''ஸ்திரீயினிடத்தில் பிறந்த'' தன்னுடைய குமாரனை அனுப்பினார். இப்படியாக இயேசு ஆக்கினைக்குட்படுத்தப்பட்ட இனத்தில் ஒருவராக ''தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படியாக'' ஒவ்வொரு மனிதனுக்காகவும் தண்டனையை அனுபவிக்கும்படியாக, ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் சாபத்தை அல்லது மரணத்தை அப்புறப்படுத்தும்படியாக, அதன் விளைவாக இப்படியான ஒரு நீதியான நிலை, ஜீவியத்திற்கான பிரமாணம் கொடுக்கப் படுவதை அனுமதிக்கும்படியாகவும், அதைக் கைக்கொள்ளுவதினால் நித்திய ஜீவன் என்ற ஒரு வெகுமதியைக் கொண்டு வந்தார்.

ஆனால் தேவன் தன்னுடைய குமாரனை அனுப்பும் வேளை வருவதற்கு முன்னும், மரணம் என்ற சாபத்திலிருந்து மனுக்குலத்தை மீட்கும் பணியை அவர் மூலம் நிறைவேற்றுவதற்கு முன்னும், காலாகாலத்தில் இஸ்ரயேலர் என்று அறியப்பட்ட, ஆபிரகாமோடும் அவன் குடும்பத்தினரோடும் தேவன் ஒரு வினோதமான தொடர்பு கொண்டிருந்தார். முதலாவதாக ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும், ஓரளவு தெளிவுபடுத்தும் வகையில் தேவன் பூமியிலுள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் தனது எண்ணத்தை வாக்குத்தத்தமாகக் கொடுத்தார். மனுக்குலத்தை ஆக்கினைக்குட்படுத்திய பெரிய நியாயாதிபதியிடமிருந்து இப்படியான ஒரு தூது வருவது அதிகமான அர்த்தமுள்ளதாக இருந்தது. அது ஒன்று சாபத்தை அல்லது தண்டனையை

அகற்றுவதினால் நீதி மீறப்படுகிறதாகவோ, இல்லையெனில் பூலோகத்தின் பிரதான நீதி மன்றம், அது நீதியாய் இருக்கும்படியாக ஒரு திட்டத்தைக் கொண்டிருந்ததாக இருந்தது; இருந்தாலும் அவருடைய நீதியான ஒழுங்குகளோடு இசைந்து வந்ததின் மூலம் அதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று காண்பிக்கிற மனுக்குலத்தின் அங்கத்தினர்களுக்கு இரக்கம் காட்டும்படியாக அந்தத் திட்டம் இருந்தது. முற்பிதாக்கள் இந்த வாக்குத்தத்தங்களில் களி கூர்ந்தார்கள், மேலும் தங்களுக்கு மாத்திரமல்ல தங்களுடைய சந்ததியினருக்கும் பிரயோஜனமாயிருக்ககூடிய மரித்தோரின் உயிர்த் தெழுதலினால் வருகின்ற எதிர்கால வாழ்க்கையைக் குறித்து கிட்டத்தட்ட தெளிவாக உணர்ந்தார்கள்; மேலும் காலாகாலத்தில் மனுக்குலத்தின் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் ஒரு ஆசீர்வாதமாயிருக்கும் என்று அது அர்த்தப்படுகிறது.

ஆபிரகாமுக்குக்கொடுக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தத்தினிமித்தம் ஆண்டவர் தன்னுடைய பிள்ளைகளாகிய இஸ்ரயேலர்மேல் சீனாய் மலையில் ஒரு விசேஷமான பிரமாணத்தை வைத்தார். அந்தப் பிரமாணம் அவர்களோடு உள்ள ஒரு உடன்படிக்கைக்கு ஆதாரமாக இருந்தது. அவர்கள் பிரமாணத்தைக் கைக்கொள்ளுவார்கள் என்றால், அப்பொழுது எல்லா வாக்குத்தத்தங்களும் அவர்களுடையதாகும். அந்தப் பிரமாணம் அதன் விபரங்கள் எல்லாவற்றிலும், பூரணமாயும், நீதியாயும், நல்லதாயும் இருப்பதாக அறியப்பட்டது. ஆனால் இஸ்ரயேலர் விழுந்து போனவர்களாக, சீரழிந்தவர்களாக, பூரணமற்றவர்களாக இருந்தபடியால், முதலாவதாக மோசே என்ற மத்தியஸ்தர் நியமிக்கப்பட வேண்டியதாயிருந்தது, இரண்டாவதாக ஒவ்வொரு வருடமும், ஒரு முறை இந்தப் பிரமாணத்திற்கு எதிராக ஜனங்களுடைய மீறுதல்கள் மன்னிக்கப்பட அடையாளமாகச் செலுத்தப்பட ஒரு வழிமுறை கண்டு பிடிக்கப்படல் வேண்டும். இதன்படியாக அவர்கள் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும் படியாக தங்களுடைய முயற்சிகளில் தொடர அனுமதிக்கப்படல் வேண்டும். மோசே மத்தியஸ்தம் பண்ணும்படியாக ஏற்படுத்தப் பட்டதினிமித்தமும், பாவங்களுக்காக அடையாள ரீதியில் பலிகள் செலுத்தும் படியாக ஏற்படுத்தப்பட்டதினிமித்தமும், இந்த உடன்படிக்கையும், பிரமாணமும் கொடுக்கப்பட்ட ஜனங்கள் முழுமையான கீழ்ப்படிதலுக்கு இயலாமை உள்ளவர்களென்று காண்பிக்கப்பட்டது. இது ஏதேன் தோட்டத்தில் கொடுக்கப்பட்ட ஆதி

பிரமாணத்திற்கு மாறாக இருப்பதைக் காட்டுகிறது. அங்கே மத்தியஸ்தர் கொடுக்கப் படவில்லை, மேலும் மாம்சத்தின் பெலகீனத்திற்கென ஒழுங்கு முறை செய்யப்பட வில்லை. முதலாவது, ஆதாம் தன்னுடைய சிருஷ்டிகளுடைய சாயலிலும், ரூபத்திலும் பூரணமுடையவனா யிருந்தான்; மேலும் அவன் திவ்விய திட்டத்திற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படியத் தகுதியுள்ளவனாக இருந்தான் என்பதை இந்த குறிப்பு சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் சொல்லுகிறது. அது இடைக்காலத்தில் மனுக்குலமானது அதிகமாக விழுந்து விட்டது என்று கூறுகிறது; ஏனெனில் மோசேயினுடைய பிரமாணம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குகள், விழுந்துபோன, இழிவான நிலையிலுள்ள மனிதர்களுக்கு உதவும் வகையில் இருந்தன.

மேலும் நம்முடைய ஆண்டவரைத் தவிர வேறு எந்த யூதனும் பிரமாணத்தைக் கடைப்பிடித்ததில்லை என்ற அப்போஸ்தலருடைய உறுதிமொழி நமக்கு இருக்கிறது. ஆகவே இஸ்ரயேலரோடு செய்து கொண்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையினால் வரக்கூடிய வெகுமதியை இயேசு மட்டுமே பெற்றார் அல்லது பெற்றிருக்கக்கூடும். ‘‘எந்த மனுஷனும் நியாயப்பிரமாண கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை’’ என்பது அப்போஸ்தலருடைய வார்த்தைகள் ஆகும். ஆகவே அந்தப் பிரமாணம் இரண்டு விதமான காரியங்களைக் காட்டியது. (1) அது விழுந்து போன மனுக்குலத்தில் எவரும் திவ்விய பிரமாணத்தைக் காத்துக் கொள்ள முடியாது அல்லது தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவர்கள் அல்ல என்று காட்டியது. (2) பூரணமற்ற எவரும் காத்துக் கொள்ளமுடியாத பிரமாணத்தை அவர் காத்துக்கொண்டபடியால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு பரிபூரணமானவர் என்று அது அறிக்கை செய்தது. இப்படியாக பிரமாணத்தைக் காத்துக்கொண்டபடியால், ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் சுதந்திரவாளியாக இவர் ஒருவரே ஆனார். இவ்விதமாக அவர் ஆபிரகாமுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கும்படியாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட ஆபிரகாமின் வித்தானார். ஆசீர்வாதத்திற்கான வாக்குத்தத்தத்தின் வித்தைப் பொறுத்த வரையில், அந்த உடன்படிக்கை இப்படியாகக் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக முழுமைபெற்று நின்று விட்டது. இருந்த போதிலும், நாம் பின்னோக்கி வாக்குத்தத்தத்தை கவனமாகப் பார்க்கும்போது ஆதி.22:17ல் சொல்லப்பட்ட பிரகாரம் ‘‘உன் சந்ததி

வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் இருக்கும்'' என்பதற்கேற்ப அது இரண்டுவிதமான அதாவது ஆவிக்குரிய ஒரு வித்தையும், பூமிக்குரிய வித்தையும் உள்ளடக்கியதாக இருந்தது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு, உடன்படிக்கையை நிறைவேற்றியதால் பூமியின் சகல குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் முழு காரியத்தையும் தன் வசத்திலே வைத்திருக்கிறார். ஆனால் திவ்விய திட்டத்தின்படியாக அவர் கிரியை செய்கிறார், கிரியை நடப்பிப்பார், இருந்தாலும் காலம் செல்லும்போது, பூமிக்குரிய வித்தில் சிலவற்றை அதாவது மாம்சீக இஸ்ரயேலை, இந்த ஆசீர்வதிக்கிற வேலையில் அவருடைய பூமிக்குரிய கருவிகளாக அல்லது பிரதிநிதிகளாக உபயோகப்படுத்துவதில் பிரியப்படுவார். ஆகவே மாம்சீக இஸ்ரயேலைப்பொறுத்த வரை உடன்படிக்கை யானது முற்றுமாக ஒதுக்கி வைக்கப்படவில்லை, ஆனால் அப்போஸ்தலர் அறிவிக்கிறபடி ஆண்டவருடைய இரண்டாவது வருகையின் போது பரலோக இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மாம்சீக இஸ்ரயேலுக்கு ஓர் ஆசீர்வாதம் காத்திருக்கிறது. அப்போஸ்தலருடைய வார்த்தைகள் ''தேவனுடைய கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே'' என்று இருக்கிறது. ''தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர் பிதாக்களினிமித்தம் அன்பு கூறப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.'' ''உங்களுக்குக் (சபைக்கு) கிடைத்த இரக்கத்தினாலே அவர்களும் இரக்கம் பெறுவார்கள்.'' ''எல்லார் மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்.'' சொல்லப்படுவது என்னவெனில், மனுக்குலம் முழுவதையும் ஆசீர்வதிக்கும்படியாக வருகிற மீட்பர் சீயோனிலிருந்து வந்து முதலாவது அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும், இப்படியாக யாக்கோபு, அதாவது மாம்சீக இஸ்ரயேலர் காலம் செல்லும் போது பூமியை ஆசீர்வதிப்பதில் ஒத்துழைப்பார்கள் என்றும் சொல்லப் பட்டுள்ளது. (ரோம.11:26–32)

அப்படியெனில், நமது ஆண்டவருடைய முதலாம் வருகை வரை பூமியானது இயற்கையின் பொதுவான பிரமாணத்தைத் (மனுக்குலம் விழுந்து போன, சிறைப் பட்ட நிலையில் இருப்பதற்கான பிரமாணம்) தவிர வேறு பிரமாணம் இல்லாதிருந்தது. இந்த பிரமாணத்தின்படி நம்முடைய கஷ்டங்களை வேகமாகக் கடந்து போகப் பண்ணலாம்,

ஆனால் அதிலிருந்து தப்பமுடியாது. இந்த பிரமாணம், ஆதியில் கொடுக்கப்பட்ட தண்டனையின்படி மரணம் நிச்சயம் என்று அறிவிக்கிற வேளையில், அதிலிருந்து நாம் தப்பிக்க நம்பிக்கை இல்லாதிருக்கும்போது, எப்படியாயினும், நாம் ஓர் அளவுக்கு, ஒரு காலம் வரும்வரை அந்தத் தண்டனை செயல்படுத்தப்படுவதை தாமதமாக்கலாம், ஒரு மாதிரியாக எப்படியோ அதன் கொடுமையைக் குறைக்கவும் இயலும். இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட வேறொரு பிரமாணம் அல்லது உடன் படிக்கையைக் குறித்து மோசே அவ்வளவு உறுதியாகக் கூறுகிறதாவது, அது மற்ற ஜனங்களுக்கு அல்லது ஜாதியினருக்கு உரியது அல்ல என்றும், மேலும் தொடர்ந்து ''அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல் இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்'' (உபா.5:3) என்றும் கூறினார் என்று நாம் பார்த்திருக்கிறோம். இஸ்ரயேலரை அந்தப் பிரமாணம் நீதிமானாக்கவில்லை என்பதையும், அந்தப் பிரமாணத்தோடு இணைந்துள்ள உடன் படிக்கையின் ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டார்கள் என்பதையும், நம்முடைய ஆண்டவரும் மீட்பருமான மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவைத் தவிர அவர்கள் எல்லாரும் தவறினார்கள் என்பதையும் நாம் பார்த்தி ருக்கிறோம். இந்தக் காரியத்தை நாம் மேலும் ஆராய்ந்து பார்த்து இந்த பிரமாணம் இப்பொழுது எப்படிச் செயல்படுகிறது என்பதை உணர்ந்து கொள்வோம்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு சீனாய் மலையின் திவ்விய பிரமாணத்தைக் கடைப் பிடித்தார், அதாவது அவருடைய மரணத்தின் மூலம் நிறைவேற்றினார். சீனாய் மலையின் பிரமாணத்தின் சுருக்கமாவது: ''நீ, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முன் மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூறுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே.'' பரலோகப் பிதா, தனது நேசகுமாரன் தனது ஆவிக்குரிய நிலைமையின் மகிமையை விட்டுவிட்டு, பூரணமற்ற மனிதரிடையே பரிபூரண மனிதனாக வேண்டும் என்ற விதத்தில் காரியங்களை ஒழுங்குபண்ணியிருந்தார். கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலாக பிதாவின் சித்தத்தை, அவர் மனுக் குலத்தின் மீட்பராக வேண்டும் என்கிறதை ஏற்றுக்கொண்டார். இது பலவந்தமாக்கப்படவில்லை; அவர் விரும்பினால் அவரையே பிரியப்படுத்திக் கொள்ளும்படி அவருக்குப் பூரண சுயாதீனம் இருந்தது; ஆனால் அப்படிச் செய்யும்போது, தன்னைக்

காட்டிலும் இன்னும் அதிகமாக தேவனை உன்னதமாக நேசிக்க வேண்டும் என்ற நியமத்தின்படி அவர் பிரமாணத்தை நிறைவேற்றுகிறவராக இருந்திருக்க மாட்டார். மேலும் அவர்கள் திவ்விய திட்டத்தை நிறைவேற்றுவதில் களி கூறுவார்கள்; தங்களுடைய சுயசித்தத்தையே, ஆம், ஜீவனையே பலியாக செலுத்துவார்கள்.

''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்பு கூறுவாயாக'' என்கிற வார்த்தைகளில் இது குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது. தேவன் மேல் உள்ள இப்படிப்பட்ட அன்பு, ஜீவனையும், முழுஆத்துமாவையும், முழு பலத்தையும் திவ்விய திட்டத்திற்கென கொடுக்கத் தயங்காது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு மனித ரூபத்தில் வந்து, திவ்விய திட்டத்தை தெளிவாக உணர்ந்து, மனிதனுக்காக தன்னையே பலியாக மனப்பூர்வமாக ஒப்புக் கொடுத்தார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஆம், அவர் அதை மகிழ்ச்சியோடு செய்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ''என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன், உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்தில் இருக்கிறது'' (சங்.40:8) என்று நாம் வாசிக்கிறோம். மனிதருக்கான அன்புக்கு, அவரது பூமிக்குரிய பிறப்பால் ஏற்பட்ட இந்த உறவும் ஒரு காரணமாயிற்று; இருந்தபோதிலும், தன்னைப்போன்றே அவர்களையும் நேசித்த காரணத்தினால் அவர்கள் சார்பில் தன்னையே பலியாக செலுத்த வேண்டும் என்று பொருள்பட்டிருக்காது. இப்படியான ஒரு பலி தன்னைக்காட்டிலும் மனிதர்களை அதிகமாக நேசிப்பதாகும். அது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் பலி சம்பந்தப்பட்ட நியாயப்பிரமாணத்தின் முதல் பகுதிக்குக் கீழ்ப்படிவதாகும். இவைகளெல்லாம் நாம் காண்கிறபடி நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கடைப்பிடிப்பதற்குக் காரணமாயிருந்தது. எப்படியெனில் அவர் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உடன்பட்டவராகப் பிறந்தார், மேலும் அதன் நிபந்தனைகள் எல்லாவற்றிற்கும் அவர் கடமைப் பட்டிருந்தார். கீழ்ப்படியாமல், மரணபரியந்தம் கீழ்ப்படியாமல் ஆபிரகாமுக்குரிய வாக்குத்தத்தத்திற்குச் சுதந்திரவாளியாக ஆகியிருக்க முடியாது.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் வித்தாக இருக்கத் தகுதியுள்ளவர் என்று நிரூபித்துக்காட்டுவதோடு, அவரது மரணத்தின் மூலம் இன்னொரு காரியமும் நிறைவேற்றப் பட்டது; அது உலகத்தை

ஆசீர்வதிக்கும்படியாகத் திறமையும் தகுதியும் உள்ளவர் என்று நிரூபித்துக் காட்டியதாகும். மற்றொரு காரியம் ஆதாமையும் அவனது இனத்தையும் ஆதிகாலத்து மரண தண்டனையிலிருந்து மீட்பதாகும். திவ்விய ஒழுங்கின்படி ஒரே பலியினாலே இரண்டு காரியங்கள் ஒரே நேரத்தில் செய்யப்பட்டது. இருந்த போதிலும் இந்த இரண்டுக்கும் இடையில் இருக்கும் பேதத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய ஆண்டவர் மரணபரியந்தம் கீழ்ப்படிந்ததினாலே நியாயப்பிரமாண உடன்படிக்கையை நிறைவேற்றினது மாத்திரமல்ல, அதற்கும் மேலாக திவ்விய ஒழுங்கினாலே அதே மரணத்தினாலே அவர் ஒரு புது உடன்படிக்கைக்கு உத்திரவாதி யானார். நாம் பார்த்த வண்ணம் நியாயப்பிரமாண உடன்படிக்கை அவருடைய தனிப்பட்ட தகுதியை நிரூபித்துக் காட்டியது, ஆனால் புது உடன்படிக்கை மனுக்குலத்திற்குரியது. மரணதண்டனை மனுக்குலத்தின் மேல் இருந்தது,முதலாவதாக ஆதியில் கொடுக்கப்பட்ட தண்டனை சரிக்கட்டப்பட்டு ரத்து செய்யப்படாத பட்சத்தில் நிரந்தரமான ஆசீர்வாதம் மனுக்குலத்திற்கு வந்திருக்க முடியாது. அதுவரை ஒருவரும் மனுக்குலத்தை ஆசீர்வதிக்க முடியாது, அல்லது ஆசீர்வதிக்கும்படியான அதிகாரத்தைக் கொண்டிருக்க முடியாது; மேலும் மரணத்திலிருந்து ஜீவனுக்கு உயர்த்தவும் முடியாது. ஏனெனில் அந்த வேளை வரை திவ்விய தண்டனையான மரணம் அதற்கு எதிராக இருந்தது, மேலும் தன்னுடைய திவ்விய பிரமாணத்திற்கெதிராக தேவன் எந்த வழியிலும் குற்றத்தை நீக்க முடியாது. திவ்விய ஏற்பாடு எவ்வளவு அழகுள்ளதாக இருக்கிறது! ஒரே காரியத்தால், மனுக்குலத்தை விடுவிக்கவும் உயர்த்தவும் தேவையான தகுதியை மீட்பரிடம் சோதிக்கவும் மாத்திரமல்ல, தகப்பனாகிய ஆதாமுக்கு ஈடுபலியையும் செலுத்தியது. ஆதாமின் பாவத்திலும், மரணத்திலும் ஜென்ம சுபாவத்தினால் பங்கு பெற்றிருந்த அவனது பிள்ளைகளுக்குமாக இந்த ஈடு பலி அமைந்தது. இந்த காரியத்தைக்குறித்து நாம் முன்னமே விரிவாகப் பார்த்திருக்கிறோம். (தொகுதி 5, அதி. 14,15) ஆகவே இதைக் குறித்து இங்கு மேலும் விபரமாகப் பார்க்கப்போவதில்லை.

நாம் இங்கே திவ்விய பிரமாணத்தைக் குறித்து படித்துக் கொண்டிருக்கிறோம். சீனாய் மலையின் நியாயப்பிரமாணம் ஆபிரகாமின் வம்சா வழியினருக்கு மட்டுமே என்பதை நாம் பார்த்திருக்கிறோம். உலகத்தில் ஏனையோர் தேவனற்றவர்களும், நம்பிக்கையில்லாத வர்களும்,

ஊக்குவிப்பு இல்லாதவர்களும், வாக்குத்தத்திற்கு புறம்பானவர்களும் அந்நியரும், பரதேசிகளுமாய் இருந்தார்கள். (எபே. 2:12) அது சோதனையையும் வெகுமதியையும் கௌரவிப்பதால் சீனாய் மலை உடன்படிக்கை முடிவுக்கு வந்தது, புது உடன்படிக்கை உத்தரவாதியானது என்பதையும் பார்த்தோம். (எபி.7:22) மேலும், அது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வலிமை பெற்றது. இப்போது இந்த புது உடன்படிக்கை அமுலுக்கு வந்துவிட்டதா இல்லையா என்று நாம் கேட்கிறோம்; மேலும் அப்படியானால் சீனாய் மலையின் உடன்படிக்கையைத் தொடர்ந்து நியாயப்பிரமாணம் வந்தது போல இந்த புது உடன்படிக்கையை தொடர்ந்து புதுப் பிரமாணம் வந்திருக்கிறதா இல்லையா என்று கேட்கிறோம். உலகத்தைப் பொறுத்தவரையில், இந்தப் புது உடன்படிக்கை இன்னும் செயல்படத் தொடங்கவில்லை; இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்தான் முழுமையாக செயல்படத் தொடங்கும். இந்த புது உடன்படிக்கையினால், நாம் பார்த்திருக்கிறபடி, மாம்சீக இஸ்ரயேலர் மனுக்குலத்தில் முதலாவதாகப் பயன்பெறுவார்கள்.

புது உடன்படிக்கை, ஆதியில் உள்ள சாபம் சம்பந்தபட்ட வரை சமாதானத்தைக் கூறுவது மாத்திரமல்ல, அதோடுகூட அது மீட்பரால் முழுவதுமாக சரிக்கட்டப்பட்டது; மேலும் அது அவர் மூலமாகப் பிதாவினிடத்தில் வருகிறவர்கள் எல்லாரும், கீழ்ப்படியக் கூடிய சாத்தியக்கூறு மூலம் ஆதி ஆக்கினையிலிருந்து இழந்ததைத் திரும்பப் பெற ஏதுவுண்டு என்று அறிக்கையிடுவது மாத்திரமின்றி, நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழும் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டிருக்கும் மாம்சீக இஸ்ரயேலரிடம் இரக்கத்தை கூறும். கடந்த கால பாவங்களுக்கு மாத்திரம் மீட்பு வழங்கப்படவில்லை என்றும், ஆனாலும் மனுக்குலம் இன்னமும் உபத்திரவப்படுவதற்குக் காரணமான எல்லா பெலகீனங்களும் பரிபூரணமற்ற நிலையும் மன்னிக்கப்படும் என்றும், அது ஒவ்வொரு சிருஷ்டிக்கும் தெரியப்படுத்தும். மேலும் இதற்குப் பிறகு அவர்கள் இருக்கும் நிலையின்படியே நடத்தப்படுவார்கள், இப்போது இருக்கும் மனதளவான நெறி முறையான, நிலைமைகளில் இருந்தும் சரீர மரணத்திலிருந்தும் எழும்பி அதிகமாக வெளியே வரவும், மேலே மேலே எழும்பி மனிதனின் ஜென்ம சுபாவமான பரிபூரண நிலையை அடையவும் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பிரமாணங்களால் உதவி செய்யப் படுவார்கள். இப்படியான ஒரு நிலையில் அவர்கள் சர்வ வல்லவருக்கு முன்பாக பரீட்சைக்கு நிற்க முடிந்தவர்களாய் இருப்பார்கள், அதோடு கூட

அவருடைய இராஜ்யத்தின் பிரமாணங்களின் கீழ் குணாதிசயத்தையும், நித்திய ராஜ்யத்தின் தகுதியையும் வெளிப்படுத்த வல்லவர்களா யிருப்பார்கள். ஆகவே இந்தப் புது உடன்படிக்கை, முழு மனுக்குலத்திற்கும், ஆயிர வருட யுகத்தின்போது, தேவனால் கொடுக்கப்படுகின்ற எல்லா இரக்கத்தையும், தேவ அனுகூலத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும். மன்னிப்பு, ஆசீர்வாதம், இழந்ததைத் திரும்ப பெறுதல் என்கின்ற இந்த உடன்படிக்கை எல்லாருக்கும் உரியது. அவர்களுடைய கண்களும் காதுகளும் திறக்கப்படும்போது, கிறிஸ்து இயேசுவுக்குள் இந்த தேவ கிருபையைப் பெற்றுக் கொள்வார்கள்.

புது உடன்படிக்கையின் பிரமாணம்

அந்தப் புது உடன்படிக்கையோடு ஒரு பிரமாணமும் இணைக்கப் பட்டிருக்கும். அது தேவனுடைய மாறாத ஒரே பிரமாணமாயிருக்கும். ஆனால் அது வித்தியாசமான நேரங்களில் ஏறக்குறைய துல்லியமான அறிக்கைகளைக் கொண்டுள்ளதாயிருக்கிறது. அது பாவத்திற்கு திவ்விய எதிர்ப்பையும், நீதிக்கு திவ்விய அனுகூலத்தையும் ஆசீர்வாதத்தையும் அறிவிக்கிற பிரமாணமாயிருக்கும். இந்த முழுமையான நிலை ஆயிர வருட யுகத்தின்போது எப்பொழுதும் உலகத்திற்கு முன்பாக இருக்கும். மேலும் ஒவ்வொருவரும் தன்னால் இயன்றவரை தேவையான பரிபூரண நிலைக்கு வரும் படியாக எதிர்பார்க்கப்படுவார்கள். ஆனால் ஒவ்வொருவரும் கீழ்ப்படிய முயற்சிக்கும் போது, அவரவர்களுடைய பலகீனத்திற்கு ஏற்ப இரக்கம் காட்டப்படும்; ஆனால் இவ்விதமான பெலகீனமான நிலை, இழந்துபோனவைகளைத் திரும்பப் பெறும் அந்த ஆசீர்வாத நிலைகளின் கீழாக, அவன் படிப்படியான கீழ்ப்படிதலுக்கு நேராக முன்னேறும்போது, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கடைசியில் இல்லாமல் போகும். இப்படியாக அது எழுதப்பட்டுள்ளது, ''அந்த நாட்களுக்குப் பின்பு நான் இஸ்ராயேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; ..... அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' (எபி. 8:10–12; எரே. 31:33,34)

இங்கே கடந்த கால பாவங்களும், அக்கிரமங்களும் அகற்றப்படுதல் ஆயிரம் வருட யுகத்தின் படிப்படியான வேலையாகப் பார்க்கிறோம்.

இங்கேயும் கூட யாரெல்லாம் சித்தமாயிருக்கிறார்களோ, அந்த மனிதர்களுடைய இருதயங்களில் திவ்விய பிரமாணத்தை மறுபடியும் கொண்டு வருதல், மறுபடியும் எழுதுதல் என்பவைகள் படிப்படியாக நடப்பதைக் காண்கிறோம். மனிதரின் குணாதிசயங்களில் மறுபடியும் திவ்விய பிரமாணத்தை எழுதுவது என்பது,''தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித் தீரும்காலங்கள்'' என்று இன்னொரு வகையில் சொல்லுவதாகும். இது கிறிஸ்துவின் ஆளுகையின் மகா நாளின் போது நிறைவேற்றப்பட வேண்டியதாகும். தீர்க்கமாகச் சொல்லப்பட்ட அறிக்கையை நாம் மறந்து விடக்கூடாது. ''அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ (தன்னுடைய குணாதிசயத்தில் திவ்விய பிரமாணம் எழுதப்படுவதற்குத் தன்னை விட்டுக்கொடுக்காதவன்) அவன் ஜனத்திலிராதபடிக்கு அறுப்புண்டு போவான்.'' (அப்.3:23)

ஆனால் நாம் இப்பொழுது திரும்பி வருவோம். ஆயிர வருட யுகத்தில் புது உடன்படிக்கை செயல்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த காலத்தில், உலகத்தை மீட்டுக்கொண்டவர் மாபெரும் தீர்க்கதரிசியாக, மாபெரும் போதகராக, அவருடைய வல்லமையையும் அதிகாரத்தையும் செயல்படுத்துவார்; மேலும் இழந்ததை திரும்பக்கொடுத்தல் மூலம் உலகத்தை ஆசீர்வதிப்பார்; மேலும் திவ்விய குணாதிசயத்தை மனிதர்களின் இருதயத்தில் திரும்ப எழுதுவார். இப்பொழுது, நாம் இடைக்காலத்தில் உள்ளதைப்பற்றிக் கேட்கிறோம். அதாவது, நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நியாயப்பிரமாண உடன்படிக்கை நிறைவேறினதால் அது ரத்துசெய்யப்பட்ட காலத்திற்கும், ஆயிர வருட யுகத்தின் போது புது உடன்படிக்கையின் நிலைமைகள் ஸ்தாபிக்கப்படுவதற்கும் இடையில் உள்ளது. இந்த இடைக்காலத்தைப்பற்றி என்ன? இங்கே உடன்படிக்கை ஏதாவது கிரியை செய்கிறதா? அப்படியென்றால் அதோடு பிரமாணம் ஏதாவது இணைந்துள்ளதா? நாம் பதில் கூறுகிறோம். இந்த சுவிசேஷ யுகத்தின் இடைக் காலத்தில் ஆண்டவர் புது சிருஷ்டியின் அங்கங்களைத் தெரிவு செய்துகொண்டு இருக்கிறார். அதற்கு ஒரு பிரமாணம் உண்டு. இதை நாம் உணர்ந்து கொள்ள அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நினைவு கூற வேண்டும். ''வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி வருமளவும் நியாயப்பிரமாணம் அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு.....கட்டளையிடப்பட்டது.'' அப்படியானால் சீனாய்

மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, முந்திய ஒரு உடன்படிக்கையோடு கூடக் கொடுக்கப்பட்டது என்று நாம் பார்க்கிறோம். மேலும் நாம் பின்னாக திரும்பி பார்க்கும்போது, ஆபிரகாமின் உடன்படிக்கை தான் ஆரம்பத்திலே கொடுக்கப்பட்டது என்று காண்கிறோம். மேலும் நியாயப்பிரமாண உடன்படிக்கை கூடக் கொடுக்கப்படுவதற்கு முன்னால் அது 430 வருடம் நிலைத்திருந்தது. அப்போஸ்தலர் இதில் கவனத்தை ஈர்த்துச் சொல்லுகிறதாவது: ''தேவனால் முன் உறுதிப்பண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்று முப்பது வருடத்திற்குப் பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது.'' (கலா.3:19,17)

எனவே, நாம் காண்கிறதாவது: நியாயப்பிரமாண உடன்படிக்கை நம்முடைய ஆண்டவரால் நிறைவேற்றப்பட்டபொழுது, அது ஆதியிலே ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை, நியாயப்பிரமாண உடன்படிக்கை கூட்டப் படுவதற்கு முன்னர் இருந்த நிலையிலேயே விட்டு விட்டது. இந்த ஆபிரகாமின் உடன்படிக்கைக்குக் கீழ்தான் புது சிருஷ்டியானது உருவாக்கப்படுகிறது. அந்த ஆபிரகாமின் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கை சொல்லுகிறதாவது: ''உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.'' ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்துவே என்று அப்போஸ்தலர் விளக்குகிறார். மேலும் அவர் கூறகிறதாவது: ''நீங்கள் கிறிஸ்து வினுடையவர்களானால் (குறிப்பாக நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களானால்) ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்திரராயும் இருக்கிறீர்கள்.'' (கலா.3:16,29)

அப்படியானால் இப்பொழுது நமது நிலை நமக்கு தெரிகிறது, ஏனெனில் அப்போஸ்தலர் மறுபடியும் கூறுகிறார், ''சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம்.'' யூதர்கள் அப்பொழுது நியாயப் பிரமாணத்தின் கீழாக இருந்ததால், இதை முற்றிலும் வித்தியாசமான விதத்தில் கூறுகிறார். இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும், மாம்சீக இஸ்ரயேலருக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறார்; அவர் கூறும்போது மாம்சத்தின்படி யாக்கோபின் பிள்ளைகள் வாக்குத்தத்தத்தில் கூறப்பட்டுள்ள ஆபிரகாமின் பிள்ளைகள் அல்ல என்றும், ஆனால் விசுவாசத்தின் பிள்ளைகள்தான்

சந்ததியார் என்று எண்ணப்படுகிறார்கள் என்றும் கூறுகிறார். அவர், ஆபிரகாம் பரலோக தகப்பனுக்கு மாதிரியாக இருக்கிறார் என்றும், அவருடைய மனைவி சாராள் ஆதி உடன்படிக்கைக்கு மாதிரியாயிருக்கிறாள் என்றும், அதிலிருந்துதான் இறுதியில் அதிகமான ஆசீர்வாதம் புறப்பட உள்ளது என்றும் விளக்குகிறார். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம்வரை சாராள் மலடியாயிருந்து, வாக்குத்தத்தத்தின் சந்ததியை வெளிக்கொண்டு வரத் தவறியது போல, தேவனுடைய உடன்படிக்கையும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் மலட்டுத்தன்மை உடையதாயிருந்தது. மேலும் நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுதலில்தான் வாக்குத்தத்தத்தின் சந்ததியை வெளியே கொண்டுவரத் தொடங்கியது. அங்கே ஆபிரகாமின் சந்ததியின் தலையானவர் பிறந்தார்; மேலும் காலம் வரும்போது கிறிஸ்துவின் முழுச் சரீரமும்– ஆவிக்குரிய ஈசாக்கு– பிறப்பிக்கப்படும் (மரித்தோரிலிருந்து பிறத்தல்). சந்ததி வந்த பின்னர் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கை நிறைவேறும்–பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்.

இதன் மலட்டுத்தன்மையின் போதுதான், ஆதியிலே கொடுக்கப்பட்ட உடன்படிக்கையோடு, சீனாய் மலை உடன்படிக்கை அல்லது யூத உடன்படிக்கை அல்லது நியாயப்பிரமாண உடன்படிக்கை கூட்டப்பட்டது. இது பிள்ளைகளை, ஒரு மாம்சப் பிரகாரமான சந்ததியைப் பெற்றெடுத்தது, ஆனால் வாக்குத்தத்தத்தின்படியல்ல, இது ஆதியிலே கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற தகுதியானதல்ல. அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார், இந்த நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு சாராளின் வேலைக்காரியான ஆகார் நிழலாக இருக்கிறாள்; அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழாக இருந்த யூதர்களுக்கு நிழலாக அவளுடைய குமாரன் இஸ்மவேல் இருக்கிறான். மேலும் தேவன் சொன்ன பிரகாரமாக அடிமையானவளின் (ஆகார்) குமாரன், சுயாதீனமுள்ளவளின் (சாராள்) குமாரனோடு சுதந்தரவாளியாக இருக்கக் கூடாது. இது, நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழான யூதர்களுக்கு, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் சுதந்திரமில்லை, அது ஆவிக்குரிய சந்ததிக்கு செல்ல வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் இது விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது (4 ம் அதிகாரம்). அப்போஸ்தலருடைய வாதம், கிறிஸ்தவர்கள் ஆபிரகாமின் வாக்குத் தத்தத்தின்படி சுதந்தரவாளிகள் ஆவதற்கு முதலாவது யூதர்களாகி, அதன்பின்

மோசேயின் பிரமாணத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும் என்ற ஒரு பொய்யான போதகத்திற்கு எதிரானதாகும்.

இதற்கு எதிர்மாறாக, நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் எல்லாரும் அடிமைத்தனத்திற்குள்ளாக இருக்கிறார்கள் என்றும்,மேலும் ஆபிரகாமின் சந்ததியினர் ஈசாக்கு போன்று சுயாதீனமுள்ளவர்களாக இருக்க வேண்டும், ஆனால் அப்படியல்லாத இஸ்மவேலைப் போன்று அல்ல என்றும் பவுல் காட்டுகிறார். மேற்கொண்டு அவருடைய விவாதமானது, ஆதிப் பிரமாணத்திற்குக் கீழாக இல்லாத எந்த புறஜாதியானும், சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கைக்குக் கீழாகத் தன்னை வைத்தால், அதினிமித்தம் அவன் தன்னை ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியிலிருந்து பிரித்து, இஸ்மவேலுக்கு ஒப்பாக்கிக் கொள்ளுகிறான் என்பதாகும். அப்போஸ்தலருடைய வார்த்தைகளாவன: ''இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்கிற எந்த மனுஷனும் நியாயப் பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவர்களுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன். நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.'' எனவே பவுல் இதை எதிர்த்து, கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக நியாயப் பிரமாண உடன்படிக்கையின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையான யூதர்களையும், இதற்கு முன்பாக ஒருபோதும் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உட்பட்டிராத, ஆனால் இப்பொழுது கிறிஸ்துவையும் கிருபையின் உடன்படிக்கையையும் ஏற்றுக்கொண்ட புறஜாதியாரையும் நோக்கி, ''ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்'' என்கிறார். (கலா.5:1–4)

எனவே, ஆதியில் கொடுக்கப்பட்ட ஆபிரகாமின் உடன்படிக்கையின்படி, கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட ''புது சிருஷ்டிதான்'' ஆபிரகாமின் சந்ததி என்றும், அது மீட்பின் மூலமாகவும், இழந்ததைத் திரும்ப பெறுதல் மூலமாகவும், உலகத்தை ஆசீர்வதிக்கும்

என்றும் நாம் காண்கிறோம். மாதிரியாகக் காட்டப்பட்டபிரகாரமும், ஆண்டவராலும், அப்போஸ்தலராலும் உபயோகப்படுத்தப்பட்ட விதத்தின்படியாகவும், இந்த புதுசிருஷ்டியானது சில வேளைகளில் முழுமையான வளர்ச்சியுள்ள புருஷராக, – தலை கிறிஸ்து இயேசுவையும், சரீர அவயவங்கள் சபை அங்கங்களையும் குறிப்பிடுவதைக் காணும்போது, நாம் ஆச்சரியப்படுவதில்லை. (எபே. 4:13; கொலோ .1:18) இப்படியாக, ''சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல, வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்.'' –மெய்யான ஈசாக்கின் அங்கங்களாக இருக்கிறோம், இதன் தலையாக இயேசு இருக்கிறார்.நம்முடைய ஆண்டவர் தன்னை மணவாளனாகவும், அவருடைய உண்மையுள்ள சபை அவருக்கு நியமிக்கப்பட்ட கன்னியாகவும், அவள் மணவாட்டியாக ஆவதற்கு ஆயத்தப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் காட்டுகிறார். அப்போஸ்தலரும் இதே வண்ணமாக உதாரணப்படுத்தி கூறுகிறதாவது: ''நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு நியமித்திருக்கிறேன்.''(வெளி.21:2; 2கொ.11:2) இதே வண்ணமாக கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் கல்யாண உறவு உள்ளதுபோல காட்டப்பட்டுள்ளது. எப்படியெனில், ஆபிரகாம் ஈசாக்குக்கு பெண் பார்க்கும்படியாக தன்னுடைய வேலைக்காரனான எலியேசரை அனுப்பினான் (எலியேசர் பரிசுத்த ஆவிக்கு அடையாளம்); ரெபேக்காள் சந்தோஷமாகத் தூது வந்தவரை ஏற்றுக் கொண்டாள்; இறுதியில் ஈசாக்கினிடத்தில் வழிநடத்தப்பட்டு, அவனுடைய மனைவியானாள். நாமும் கூட அழிந்துபோகாத, தீட்டுப்படாத, வாடாத சுதந்திரத்தில் தேவனோடு சுதந்திரராயும், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு உடன் சுதந்திரராயும் இருக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்தக் காரியங்களில் எதை ஆராய்ந்தாலும் பாடம் ஒன்றுதான்–அதாவது கிறிஸ்து தலையாகவும் சரீரமாயும், மணவாளனாயும் மணவாட்டியாகவும்,ஒன்றிணைந்து ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு வாரிசாக இருக்கிறார்; மேலும் எல்லா நல்ல நன்மைகளும் வாக்குதத்தங்களும் அதில் அடங்கியுள்ளன.

சீனாய் மலையும், பூலோக எருசலேமும் மாம்சீக இஸ்ரயேலுக்கு அடையாளமாகவும் மாதிரியாகவும் இருந்தது என்றும், ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை அடையத் தவறிவிட்டது என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார்; மாம்சீக இஸ்ரயேலில் எஞ்சியவர்கள், ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்குத் தகுதியானவர்கள் என்று காணப்பட்டவர்கள், மாம்சீக

இஸ்ரயேலரிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, தேவனுடைய உண்மையான இஸ்ரயேலின் அங்கங்களாகவும், அவரை நேசிக்கிறவர்களுக்கென அவர் இன்னும் ஆயத்தமாக வைத்திருக்கும் பரலோக காரியங்களில், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடே உடன் சுதந்திரராகவும் ஆனார்கள். இப்போதும் புறஜாதியாரிடமிருந்து தேவன் அழைத்திருக்கின்ற அதே ஆவிக்குரிய நிலைமையில் உள்ளவர்களுக்கும், மாம்சமான இஸ்ரயேலரில் எஞ்சியவர்களுக்கும் சீனாய் மலையைக் காட்டிலும், எருசலேமைக் காட்டிலும் உயர்ந்த அடையாளமான ஆவிக்குரிய சீயோன் மலையும், பரலோக எருசலேமும் உள்ளது; இவைகளின் மகிமையைப் பற்றி அடையாள ரூபத்தில் நமக்கு வெளி. 21ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

புது சிருஷ்டி என்பது திவ்விய திட்டத்தில் உள்ளது; இதன் உடன்படிக்கைகள் வேறானதும், தனிப்பட்டதுமாகும்; பொதுவான உலகத்திலிருந்து மாத்திரமல்ல ஆனாலும் மாம்சீக இஸ்ரயேலரிடமிருந்தும் வேறானது என்ற கருத்துக்களைத் தெளிவாக்கியதோடு, புது சிருஷ்டி சீனாய் மலை அல்லது நியாயப்பிரமான உடன் படிக்கைக்கு கீழாக அல்ல, ஆனால் ஆதியிலே கொடுக்கப்பட்ட உடன்படிக்கைக்கு கீழாக இருக்கிறது என்பதை தெளிவுபடுத்தினோம். அப்படியானால் ஆபிரகாமின் உடன்படிக்கையோடு என்ன பிரமாணம் இணைந்துள்ளது? புது சிருஷ்டிக்கு மேல் உள்ள பிரமாணம் என்ன என்று நாம் கேட்கிறோம். அப்போஸ்தலர் இதற்கும் பதில் கூறுகிறதாவது: ''நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல, ஆனால் கிருபைக்குக் கீழானவர்கள்.'' என்ன! இது சாத்தியமா? கிறிஸ்து இயேசுவுக்குள் உள்ள புது சிருஷ்டி எந்த விதமான கட்டளை பிரமாணங்களுக்கும் கீழாக வைக்கப்பட வில்லையா? பத்து கற்பனைகள் புது சிருஷ்டிகள் மேல் கட்டுப்பாடு வைக்க வில்லையா? இதற்கு பதில் சொல்லும் போது நாங்கள் இன்னொரு கேள்வியைக் கேட்கிறோம். பத்துக் கற்பனைகள் ஆபிரகாம் மீதோ அல்லது ஈசாக்கு மீதோ கட்டுப்பாடு வைத்திருந்ததா? இல்லை, ஏனெனில் அவர்களுக்கு அது கொடுக்கப்பட வில்லை; ஆகவே, அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கீழாக இருக்கவில்லை. ஆகவே நாம் கூறுகிறோம் கட்டளைகள் எதுவும் புது சிருஷ்டிக்குக் கொடுக்கப்படவில்லை. மேலும் ''கிறிஸ்துவின் சரீரம்,'' ''கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகள்'' என்று அழைக்கப்படும் ஆவிக்குரிய சபையின் அங்கத்தினர்களாக தேவனோடு ஐக்கிய உறவுக்குள்ளாக வருகிறவர்கள்,ஆக்கினைத்

தீர்ப்பிலிருந்தும் நியாயப்பிரமாண உடன் படிக்கையிலிருந்தும் விடுதலைப் பெற்று இருக்கிறார்கள்.

இந்தப் புது சிருஷ்டி தேவனுடனும், மற்றும் அவரது பிரமாணங்களுடனும் கொண்டுள்ள தொடர்பு மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வேறானதும் தனிப்பட்டது மாகும். அவர்கள் விசுவாசத்தினால் தேவனோடு ஒரு புதிதானதும் நல்ல நிலையையும் உடையவர்களாக எண்ணப்படுகிறார்கள். அது நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி நீதிமானாக்கப்பட்ட நிலை அல்லது அப்படி எண்ணப்பட்ட நிலையாகும். இந்த நீதிமானாக்கப்பட்ட நிலை அவர்களுக்குக் கிறிஸ்துவின் பலியினால் உண்டான புண்ணியத்தினிமித்தம் கொடுக்கப்பட்டது; அது கடந்த காலத்தின் பரிபூரணமற்ற தன்மைகளை மூடுவது மாத்திரமன்றி, அவர்களோடே இருந்து ஒரு மூடுகிற, நீதிமானாக்குகிற, நீதியின் வஸ்திரமாக உள்ளது; இந்த புண்ணியத்தினால் மனப்பூர்வமாக செய்யப்படாத ஒவ்வொரு குறையையும்,வார்த்தையில், சிந்தனையில், அல்லது செயலில் உள்ள கறையையும் மூடிவிடுகிறது. புது சிருஷ்டிகளாக அவர்கள் எல்லோரும் வெண் வஸ்திரத்தினால் உடுத்திவிக்கப்படுவதாகக் கற்பனை செய்து பார்க்கப்படுகிறார்கள். அந்த வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதியும், அவர்கள் தலையாயிருக்கின்ற மீட்பரால் அளிக்கப்பட்ட நீதியுமாகும். இந்தப் புது சிருஷ்டிகள் அவர்களுடைய அன்பை வெளிக்காட்டும் போது அவர்களுடைய நிலைக்கும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள் என்ற உறவு முறைக்கும் ஏற்றுக்கொள்ளப் படுகிறார்கள். தேவனுடைய குமாரனின் மரணத்தில் வெளிப்படுத்தப் பட்ட தேவனின் இரக்கத்தையும், கிருபையையும் அவர்கள் அவ்வளவாய் உணர்ந்திருக்கிறார்கள்; அவர் மூலமாக அவர்கள் நீதிமானாக்கப் பட்டதையும், அதன்மூலம் அவர்களுக்கு எல்லா ஈவுகளையும் கொடுக்கிறவரை நேசிப்பதாலும், திவ்விய அழைப்புக்கு ஏற்ப தங்கள் சரீரங்களை ஜீவ பலியாய் ஒப்புக் கொடுப்பதில் அவர்களுக்குச் சந்தோஷம் உண்டு என்பதை வெளிப்படுத்துவதின் மூலமாய் அவர்களுடைய அர்ப்பணிப்பைத் தெரிவிக்கிறார்கள்.

பூலோகத்தின் ஆசைகளையும், எதிர்பார்ப்புகளையும், குறிக்கோள் களையும், எதிர்காலத் திட்டங்களையும் அர்ப்பணிப்பது, அல்லது பலியாக செலுத்துவது என்பது பயத்தினாலோ அல்லது வெகுமதி கிடைக்கும் என்று சுயநல ஆசையினாலோ வருவது அல்ல; ஆனால், சுத்தமான

அன்பினாலும், திவ்விய அன்பை உணர்ந்து கொள்வதாலும், தேவனுக்கு நேராகத் தன்னுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சையாலும், அவருடைய எல்லாவிதமான அற்புதமான திட்டங்களோடும் ஒத்துப் போவதாலும் வருவதாகும். இப்படியாக அன்பையும், வாஞ்சையையும் வெளிப்படுத்தும்போது, அது ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்படும் போது, அவருடைய ஆவி கொடுக்கப்படுகிறது; இப்படிப்பட்டவர்கள் தேவ புத்திரர் என்றும், பரிசுத்த ஆவியினால் பிறந்தவர்கள் என்றும் எண்ணப்படுகிறார்கள். ''பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போம் (ஆண்டவர் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற புதிய மறுரூபமாக்கப்பட்ட சரீரங்களை நாம் பெறும்போது, எப்படிப்பட்ட மாற்றத்தை நாம் அனுபவிப்போம்) என்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும் போது, அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (இந்தச் சிந்தனை நமக்கு திருப்தியாயிருக்கிறது)''–1யோவா. 3:2

பரலோகப் பிதா தன்னுடைய தேவபுத்திரரை(தேவதூதர்களை) சீனாய் மலையின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக்கியிருக்கிறாரா? அவர்களுக்கு வேறு தேவர்கள் இருக்கக் கூடாது என்று அவர்களை எச்சரிக்கிறாரா? அவர்கள் யாதொரு சொரூபத்தையும் உண்டாக்கக் கூடாது; அவர்களை நமஸ்கரிக்கவும் கூடாது; அவர்கள் இச்சியாமலும், திருடாமலும், பொய் சொல்லாமலும், கொலை செய்யாமலும் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறாரா? நாம் இல்லை என்று சொல்லுகிறோம். நிச்சயமாகவே அவர் தன்னுடைய தேவ தூதர்கள் மேல் இப்படியான ஒரு பிரமாணத்தை வைக்கவில்லை. அப்படியானால் ஏன் இப்படியான ஒரு பிரமாணம் புது சிருஷ்டிக்குக் கொடுக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும்? பரலோக தகப்பன் இந்தப் புது சிருஷ்டிப்புகளைத் (தேவ தூதர்) தன்னுடைய குமாரராக ஏற்றுக்கொள்ளவில்லையா? மேலும் அவர் தன்னுடைய ஆவியை அவர்களுக்குக் கொடுக்கவில்லையா? மேலும் தங்களுடைய சுபாவத்தின் படியான சுய நல நோக்கங்கள் அல்லது சித்தத்திற்குப் பதிலாக பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இப்படிப்பட்ட பிரமாணங்களைக் கொடுப்பது அவசியமாயிருக்குமா? பணிவிடைக்காரரை பிரமாணங்களுக்குக் கீழாகப் போடுவது சரியானதென்று நாம் பார்க்கக்கூடும், ஏனெனில் அவர்கள் முக்கியமாக

பொதுவான நலத்தில் நாட்டமுள்ளவர்கள் அல்ல, மேலும் தங்களுடைய எஜமானருடைய ஆவியையோ அல்லது நோக்கத்தையே முழுமையாகப் பெற்றிராமல் இருக்கலாம்; ஆனால் பரிபூரணமான ஒரு எஜமான், பரிபூரணமான குமாரர்கள் என்று வைத்துக் கொள்வோம், அவர்கள் அவருடைய ஆவியினால் நிரப்பப் பட்டிருக்கிறார்கள், அவருடைய சித்தத்தைச் செய்ய வாஞ்சை உள்ளவர்களாய் இருக்கிறார்கள், அவருடைய மகிமையான திட்டம் எல்லாவற்றிலும் அவரோடு சக வேலையாட்களாக இருக்க விரும்புகிறார்கள்,அப்படியிருக்கும் போது இப்படிப்பட்ட ஒரு தகப்பனுக்கு இப்படிப்பட்ட குமாரர்களை இப்படிப்பட்ட பிரமாணங்களுக்குக் கீழாக வைப்பது எப்படி அவசியமாகும்?

''மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தான்.'' அந்த வீட்டிலுள்ள பணிவிடைக் காரர்கள் அனைவரும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக இருந்தார்கள், ''வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாக கூட்டப்பட்டது.'' மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு, பிரமாணமானது நீதியானது என்பதைக் காட்டுவதற்காக மாத்திரம் அல்லாமல், மாம்சத்தில் தன்னுடைய பரிபூரணத்தை வெளிப்படுத்தும் படியாகவும், அவர் உலகத்தை மீட்கக்கூடும் என்பதற்காகவும் அவர் மரணத்தின் கீழாகத் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். மரித்தோரிலிருந்து அவர் எழும்பி ''மரித்தோரிலிருந்து முதற்பலனானபோது''அவர் புது சிருஷ்டியின் தலையாக அநேக சகோதரருக்குள் முதற் பலனானார். மாம்சத்தின்படி அவர் பிரமாணத்திற்குக் கீழாக இருந்தார், ஆனால் புது சிருஷ்டியாகிய உயிர்த்தெழுந்த ஆண்டவர் பிரமாணத்திற்குக் கீழாக இல்லை, மேலும் அவர்தாமே குமாரர்களின் புதிய வீட்டிற்குத் தலைவரானார்; ''கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்..... பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்.'' நாம் இன்னும் மாம்சத்தில் இருந்தாலும், புதிய சிருஷ்டிகளாகிய நாம் மாம்சத்திற்குரியவர்கள் அல்ல, மேலும் நாம் மாம்சத்திற்குரியவர்களாக எண்ணப்படுவதில்லை, உலகத்தில் உள்ள ஏனையோர் எண்ணப்படுவதுபோல், நாம் தேவனால் அப்படி எண்ணப்படுவதில்லை. ஆனால் புது சிருஷ்டிகளாக ஒரு கூடாரத்தில் அல்லது தற்காலிக வாசஸ்தலத்தில், சுவிகாரத்திற்காகக்

காத்திருந்துகொண்டு, சொல்லப் போனால் நம்முடைய முழு சரீரமும் விடுதலை அடையும்படி, ஏற்கெனவே மகிமை அடைந்த நம்முடைய தலையாக இருக்கிறவரோடு அவரைப் போல இருக்கும்படி, சொற்ப காலத்திற்குப் பரதேசிகளாக இருக்கிறோம். ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல் (தேவனால் அப்படி எண்ணப்படுகிறோம்) ஆவிக்குட்பட்டவர்களா யிருப்பீர்கள்.'' (ரோ.8:8,9)

இந்த திவ்விய நோக்கோடு இதைப் பார்க்காவிடில், யாரும் இந்த விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாது. பரிசுத்த ஆவியினால் பிறந்த இந்தப் புது சிருஷ்டிகள் எல்லாம், அவர்கள் ஒரு தேவனைத் தவிர வேறு தேவனை உடையவர்களாய் இருக்கும் படியாக நினைக்கவும் முடியாது; அவர்களால் சொரூபங்களை உண்டாக்கவோ அவைகளைத் தொழுது கொள்ளவோ நினைக்க முடியாது; அவர்களால் தேவனுடைய நாமத்தை தூஷிக்கும்படியாகவும் நினைக்க முடியாது; அவர்களால் மற்றவர்களிடமிருந்து திருடவும் நினைக்க முடியாது, கொடுக்கத்தான் விரும்புவார்கள், அவர்களால் மற்றவர்களுக்கெதிராக பொய் சாட்சி சொல்லவும் நினைக்க முடியாது; அதற்குப்பதிலாக அவர்களுக்குள் இருக்கின்ற அன்பு, கறைகளை மூடவும் மறைக்கவும் முயற்சிக்கும், அதுவும் சகோதரருக்குள் உள்ளவைகளை மாத்திரம் அல்ல, பொதுவாக உலகத்தாருடையதையும் கூட; அவர்களால் சக சிருஷ்டியைக் கொல்ல நினைக்கமுடியாது அதைக்காட்டிலும், அவர்கள் தங்களுடைய ஜீவனை மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள், அதுவும் பரிபூரணமாக, ஆம் அவர்களுடைய பரிசுத்த ஆவி அவர்களுடைய சகோதரருக்கென அவர்களுடைய ஜீவனையே கொடுக்கும்படியாக தூண்டும், அதே பரிசுத்த ஆவி நம்முடைய இரட்சிப்பின் தலையானவரை தன்னையே மீட்கும் பொருளாகக் கொடுக்கத் தூண்டியது போன்று. தேவன் புது சிருஷ்டிக்கென ஒரு பிரமாணத்தை குமாரர்களின் வீட்டாருக்கும், பணிவிடைக் காரர்களின் வீட்டாருக்கும் கொடுத்தது போன்று கொடுத்திருப்பாரென்றால், அது முற்றிலுமாகப் பொருத்தமற்றதாக, முழுவதுமாக தகுதியற்றதாக இருந்திருக்கும் என்று நாம் பார்க்கவில்லையா?இந்த ''குமாரர்களின் வீட்டின் அங்கத்தினர்கள்,'' பரிசுத்த ஆவியை இழந்து போகாமல்,புது சிருஷ்டியாக இருப்பது நின்று விடாமல் இப்படியான ஒரு பிரமாணத்திற்கு ஒத்துப் போகமுடியாது.

''கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் (மனம், சிந்தை) அவருடையவன் அல்ல.'' (ரோம. 8:9)

ஆனால் எப்படி இந்தப் புது சிருஷ்டிகள் ஒரு பிரமாணமோ, சில ஒழுங்குகளோ இல்லாமல் இருக்கமுடியும்? திவ்விய பிரமாணத்தின் உன்னத செய்தி அன்பு என்று நாம் பதில் கூறுகிறோம். தேவனுடைய கட்டளைகள் அவ்வளவு விரிவாக, ஆழமானதாக, கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாயும் உள்ளது, ஆகவே அவைகள் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டுமென்றால் அன்பினாலேயேயன்றி முடியாது. பிரமாணத்தின் ஒவ்வொரு பகுதியும் கண்டிப்புடன் நிறைவேற்றப் பட்டாலும், தேவனுக்கென்று பயபக்தியுடன் கூடிய அன்பின் உணர்வு இல்லா விட்டால், திவ்விய பிரமாணம் திருப்தி அடையாது. அதற்கு மாறாக, அன்புதான் பிரமாணத்தின் நிறைவு ஆகும்; மேலும் எங்கு அன்பு ஆட்சி செய்கின்றதோ, அங்கெல்லாம் திவ்விய ஒழுங்கின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு அம்சமும், சிருஷ்டியினால் முடிந்த அளவுக்கு, தேடிப்பிடிக்கப்பட்டு, மனப்பூர்வமாகக் கீழ்ப்படிதலினால் நிறைவேற்றப்படும்; அதுவும் பலவந்தத்தினால் அல்ல, ஆனால் மகிழ்ச்சியினாலும், அன்பினாலும் அப்படி ஆகும்.

இப்படியான தேவனுக்கான அன்பையும், அவருடைய நீதியையும் புது சிருஷ்டியானது அர்ப்பணிப்பின் போது பகிரங்கமாக ஏற்றுக்கொண்டது; மேலும் அன்பே அதன் பிரமாணமாயிற்று, அது மரணபரியந்தம் கூட அன்பினால் உறுதியாகக் கட்டப்பட்டுள்ளது. உடன்படிக்கையிலான உறவின்படி பிரமாணத்திற்கு எவ்விதத்திலும் கீழ்ப்படியாமல் இருப்பது ஒரு மீறுதலாகும். அறிவின்படி இயன்ற அளவுக்கு அந்த அன்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது என்பது சுய தியாகமும், உலகத்தின் ஆவியின்மேல் வெற்றியும், மாம்ச பெலகீனங்களின் மேல் வெற்றியும், சத்துருவின் மேல் வெற்றியும் ஆகும். மனப்பூர்வமாகச் செய்யப்படாத கறைகளை ஆண்டவருடைய கிருபை ஈடு செய்கிறது. மேலும் இப்படிப்பட்ட வெற்றி பெற்றவர்களை அவருடைய சொந்த நாமத்தினாலும் புண்ணியத்தினாலும் கொண்டு வருவதும் ஆகும். ஆகவே,இன்னொரு பக்கம் மனப்பூர்வமாக அதற்குக் கீழ்ப்படியாமல் இருப்பது, இந்த அன்பின் பிரமாணத்தை வேண்டுமென்றே, அடிக்கடி மீறுவது என்பது சுவிகாரத்தின் ஆவியை இழந்துபோதல் என்றும்,பரிசுத்த

ஆவியை அவித்துப் போடுதல் என்றும், புது சிருஷ்டி இறந்துவிட்டது அல்லது இல்லாமல் போய்விட்டது என்று பொருள்படும்.

நம்முடைய அபூரணங்களுக்கெல்லாம், கிருபை எப்படி ஈடு பண்ணுகிறது என்ற குறிப்பை அப்போஸ்தலர் எடுத்துக்கொண்டு, அவராகவே யூகித்த கேள்விக்கு வரக்கூடிய பதிலைக் கூறுகிறார்: ''கிருபை பெருகும்படிக்கு பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம்?'' (ரோம. 6:1,2) நாம் கிறிஸ்துவுக்குள்ளாக பாவ மன்னிப்பை பெற்றபோது, நாம் பாவம் செய்வதில் சோர்ந்து போனோம் என்றும், நம்முடைய சித்தங்களைப் பொருத்த வரையில் அவைகள் பாவத்திற்கு மரித்து விட்டன என்றும், நீதியுள்ள ஒரு புதிய வாழ்க்கையை தொடங்கியுள்ளோம் என்றும் அறிக்கையிட்டோம். நாம் தேவனுக்குள்ளும், நீதிக்குள்ளும் புத்துணர்வோடு, புது சிருஷ்டிகளாகக் காணப்படுவது என்பது நாம் பாவத்துக்கு மரித்ததைக் குறிக்கிறது. ஆகவே நாம் எப்பொழுதாவது, நம்முடைய சித்தங்கள், நம்முடைய இருதயங்கள், நம்முடைய அன்பு, பாவத்திற்கும் அநீதிக்கும் ஏதுவாக வரும் அளவுக்கு பாவத்திற்குள் உயிரடைவோம் என்றால், அது நிச்சயமாகவே நாம் புது சிருஷ்டிகளாக இருந்து, மரித்து விட்டோம் என்பதைக் குறிக்கும்; மேலும், சித்தத்தைப் பொருத்த வரையில், பழையவைகளெல்லாம் கழிந்து போயின எல்லாம் புதிதாயின என்றிருந்த இப்படிப் பட்ட நாம், கிறிஸ்து இயேசுவுக்குள், இனி ஒருபோதும் தேவனால் அவருடையவர்களாக அல்லது அவருடைய ஜனங்களாய், புது சிருஷ்டிகளாய் எண்ணப்பட மாட்டோம்.

தேவனுடைய நல் வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப்பெற்றும், அதன் பின்னர், மாம்சத்தினால் ஏற்படும் சாதாரண தடுமாற்றத்திற்கும், மனப்பூர்வமான கிரியைகளினால் கிருபையிலிருந்து விழுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கும்படி இங்கே சற்று நிற்பது நலமாயிருக்கும். இப்படிப்பட்ட வீழ்கையிலிருந்து திரும்ப மீட்கப்படுவது கூடாத காரியம்.(எபி.6:4–6; 10:26) இவைகளுக்கிடையில் உள்ள வித்தியாசத்தை நாம் தெளிவாகக் கண்டு கொள்ள வேண்டும், ஏனெனில் அவைகள் முற்றிலும் வித்தியாசமானவைகள். மாம்சத்தில் ஏற்படும் ஒரு தடுமாற்றம், நம்முடைய அழிவுக்குரிய சரீரங்கள், பரம்பரையாக வந்த பெலகீனங்கள் மூலம் ஒரு தவறினால் அல்லது சத்துருவின் சூழ்ச்சியினால்

மேற்கொள்ளப்பட்டன என்பதைக் குறிக்கிறது. ஆனால் சிந்தை, இருதயம் அதற்கு ஒத்துக்கொள்ளவே இல்லை, அல்லது மாம்சத்தோடு முற்றிலுமாக ஒத்துக்கொள்ளவில்லை. உண்மைதான், இப்படிப்பட்ட தடுமாற்றங்களுக் கெதிராக, வருந்த வேண்டும், போராட வேண்டும் என்பது போன்றவைகள் உண்மைதான்; ஆனால் சில வேளைகளில் தேவனுடைய கிருபையினால் நற்குணங்களில் வளர்வதற்கு ஒரு உதவியாக அமைகின்றது. இப்படியாக நாம் நம்மை நம்பாதிருக்க கற்றுக்கொள்ளுகிறோம்; நம்முடைய சொந்த பெலத்தைக்குறித்துப் பெருமை பாராட்டாதிருக்கக் கற்றுக் கொள்ளுகிறோம்; ஆனால் உலகத்தை மேற்கொள்ளுகிற ஜெயம் விசுவாசத்தின் மூலம் கிடைக்கப்பெறுகிறது என்பதை உணருகிறோம். ஆகவே புது சிருஷ்டி ஓர் அளவுக்குத் தன்னுடைய மாம்சம் தடுமாற்றம் அடைந்தது என்பதைத் துக்கத்துடன் காணும்போது, இவ்விதமாக காட்டப்பட்ட பெலகீனம் போன்றவைகளுக்கெதிராக பலப்பட வேண்டும், ஆண்டவருக்குள்ளும் அவருடைய சத்துவத்தின் வல்லமைக்குள்ளும் பலப்பட வேண்டும், அதே மாதிரியான சூழ்ச்சியினால் வருபவைகளுக்கு மறுபடியும் அடிக்கடி தடுமாறாமல் இருக்கும்படியாக பலப்பட வேண்டும்.

இவ்விதமாக, நாம் புது சிருஷ்டிகளாக மாம்சத்தில் நம்பிக்கை வைக்காமல் நமக்குத் தேவையிருக்கும் போதெல்லாம் உதவி வருகிற இடத்தை, அந்த கர்த்தரை நோக்கிப் பார்க்க படிப்படியாகக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் இன்னும் புது சிருஷ்டிகளாகத்தான் இருக்கிறோம் என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் பலியினால் வந்த புண்ணியத்தின் கீழ் இன்னமும் உள்ளோம் என்பதையும், ஆண்டவர் சொன்ன வண்ணமாக, ''பிதா தாமே உங்களை நேசிக்கிறார்'' என்பதின்படி நம்மையே பலியாகச் செலுத்தும்படி நம்முடைய அன்பின் உடன்படிக்கையை நிறைவேற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் தைரியமுள்ளவர்களாக இருக்க வேண்டும், மேலும் புது சிருஷ்டி பாவம் செய்வதில்லை என்பதையும், புது சிருஷ்டியின் மேல் குற்றம் சாட்டப்படவில்லை என்பதையும், ஆகவே பாவத்திற்கு எதிராக முயற்சி செய்யும் காலம் வரை ஒருவரும் தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களின் மேல் குற்றம் சாட்ட இயலாது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், ''தேவன் தெரிந்து

கொண்டவர்கள் மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான் களாக்குகிறவர்..... கிறிஸ்துவே மரித்தவர்.'' (ரோம.8:33,34)

பரிபூரணப் பிரமாணத்தைக் கிரகித்துக்கொள்வதில் வளர்ச்சி

நம்முடைய ஆண்டவரோடு நாம் கொண்டுள்ள உடன்படிக்கைக்கு அன்பின் பிரமாணம் அடிப்படையாக இருந்தபோது, அதன் கீழாக நாம் புது சிருஷ்டிகளானோம். இருந்தாலும் முதலாவது, நாம் அந்தப் பிரமாணத்தை முற்றுமாக விளங்கிக்கொள்ள வில்லை. நாம் கிறிஸ்துவின் பள்ளியில் இருந்து, அன்பின் முழுமையை, அதன் உண்மையான அர்த்தத்தை, அதன் பூரணத்தில், கிருபையில் வளருவது, மேலும் அறிவில் வளருவது என்பவைகளைக் கற்றுக்கொண்டு, நம்முடைய விசுவாசத்தோடு அன்பின் தன்மைகளான சாந்தம், பொறுமை, சகோதர அன்பு போன்றவைகளையும் சேர்த்துக் கொள்கிறோம். அன்பின் வழி முறைகளில் நாம் சோதிக்கப்படுகிறோம், நாம் தேர்ச்சி பெறும் பரீட்சையும் இந்தக் குறிப்பின் (அன்பின்) மீதுதான் இருக்கும். பரிபூரண அன்பை, சுய தியாக அன்பை எட்டுபவர்கள் மாத்திரமே புது சிருஷ்டியில் அங்கமாக இருக்க, கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக இருக்கத் தகுதியானவர்கள் என்று எண்ணப்படுவார்கள்.

இலக்கை நோக்கி ஓடுதலும், அங்கே நிலைத்து நிற்பதும்

அப்போஸ்தலர் இன்னொரு விளக்கத்தில், நம்முடைய தற்போதைய அனுபவங்களை ஒரு ஓட்டப்பந்தய மைதானத்திற்கு ஒப்பிடுகிறார்.மேலும் நாம் பாரமான யாவற்றையும், நம்மைச் சூழ்ந்திருக்கின்ற எல்லா பாவத்தையும், எல்லா மாம்சீக பெலகீனத்தையும், உலகப் பிரகாரமான எல்லா ஆசைகளையும் ஒதுக்கிவைத்து விட்டு, சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தைப் பொறுமையுடன் ஓடக்கடவோம், பந்தயப் பொருளை அடையும்படி இலக்கை நோக்கி ஓடக்கடவோம், அவைகள் எல்லாவற்றையும் செய்து முடித்து இலக்கில் உண்மையோடு, முழுமையாக கிறிஸ்துவுக்குள் நிலைநிற்க வேண்டும். (பிலி.3:13,14; எபி.12:1; எபே.6:13). இது நமக்கு

முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது கால்–பங்குகளைக் கொண்ட ஒரு ஓட்டப்பந்தய மைதானத்தை நினைவுபடுத்துகிறது. ஓடுகின்ற வழியில் உள்ள சோதனைகள், துன்பங்கள், எதிர்ப்புகளையும், மேலும் நாம் இந்த ஓட்டத்தில் ஓடத் தொடங்குவதையும், பரிபூரண அன்பு என்னும் இலக்கை அடையும்படி ஓடத் தொடங்குவதையும், அந்த இலக்கை நாம் அடையாவிட்டால் தேவனுடைய பிரியமான குமாரனின் பிரதியாக நாம் இருக்கமாட்டோம் என்ற சிந்தனையையும் இது தருகிறது. மேலும் அப்படியானால், பரவலாக நோக்கும் போது தேவனைப் பிரியப்படுத்த இயலாது என்ற ஒரு சிந்தனையை இது தருகின்றது. தேவனைப் பிரியப்படுத்த இயலாது என்றால், இராஜ்யத்தில் இயேசுவோடு உடன் சுதந்திரராக இருக்க முடியாது. ஆரம்ப வாசலிலிருந்து முடிவு வரை முழு ஓட்டப்பந்தய மைதானமும் அன்பைக்குறிக்கிறது. நாம் வாசலுக்குள் நுழையும் போது நம்முடைய பாவங்களை மன்னித்த கிறிஸ்துவுக்குள் நமக்கு கிடைத்த அவருடைய புண்ணியத்திற்காக தேவனுக்கு நன்றியுடன் கூடிய அன்போடு நுழைகிறோம். இந்தக் கடமை அன்புதான், ஆரம்பத்தில் நம்முடைய சரீரங்களை ஜீவ பலிகளாக ஒப்புக்கொடுக்க நம்மை வழிநடத்துகின்றது. தேவன் நமக்கு இவ்வளவு செய்து இருப்பாரென்றால், நம்முடைய மதிப்பு மரியாதையை அவருக்குக் காண்பிக்க வேண்டும் என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்ளுகிறோம். கிறிஸ்து நமக்காகத் தன்னுடைய ஜீவனையே கொடுத்தார், நாமும் நம்முடைய வாழ்க்கையை சகோதரருக்காக அர்ப்பணிக்க வேண்டும்.

இப்படியாக இருக்கவேண்டிய கடமை அன்பானது முற்றிலும் சரியானது, நியாயமானது, உண்மையானது, ஆனால் அது போதாது. அடுத்து, இன்னும் உன்னதமான அன்பிற்கு வழி நடத்த வேண்டும்,மேலும் ஓட்டத்தில் முதலாவது கால்–பங்கு ஓடியிருக்கும் வேளையில், இன்னமும் கடமை அன்பு நம்மிடத்தில் இருக்கிறது, ஆனால் அதைக் காட்டிலும் மேன்மை பாராட்டக் கூடிய அன்பை அடைந்திருக்கின்றோம். திவ்விய அன்பை நாம் மேன்மை பாராட்டக் கற்றுக்கொள்வது நல்லது; தேவனுடைய அன்பு ஒருவிதத்திலும் சுயநலம் என்ற வார்த்தையின்படி இருந்ததில்லை; ஆனால் அவருடைய கம்பீரமான, உயர்ந்த குணாதிசயத்தின் கிரியை ஆகும். திவ்விய நீதி, திவ்விய ஞானம், திவ்விய வல்லமை, திவ்விய அன்பு ஆகியவற்றைக் குறித்துச் சில காரியங்களை உணருகின்றோம்; மேலும் நம்முடைய சிருஷ்டிகரின் இந்தக் குணாதிசயங்களை நோக்கிப்பார்க்கும்போது, நாம் அவைகளை

நேசிக்கிறோம், அதன் பின்னர் நாம் நீதியைக் கடைப்பிடிக்கின்றோம், நம்முடைய கடமையாக இருப்பதினால் மாத்திரமல்ல, நாம் நீதியை நேசிப்பதால் அப்படிச் செய்கிறோம்.

ஓட்டப்பந்தய மைதானத்துக்குள் தொடர்ந்து முன்னேறும் போது இரண்டாவது கால்–பங்கு இலக்கை வந்தடைகிறோம், இதற்குள் நாம் நீதியை நேசிக்கக் கற்றுக் கொண்டிருப்பது மாத்திரமல்லாமல், அதே விகிதத்தில் பாவத்தை வெறுக்க கற்றுக் கொள்கிறோம்.மேலும் உலகத்தை மூழ்கடித்திருக்கின்ற பெரிய அலை போன்றதும், (அதன் சம்பளமாகிய) மரணத்தைக் கொண்டு வந்ததுமான பாவத்தைத் திருப்பிவிடுகிற திவ்விய திட்டத்தைக் குறித்த ஒரு இரக்கம் நம்முடைய இருதயங்களில் வருவதையும் காண்கிறோம். இந்த இரண்டாவது கால்–பங்கு இலக்கானது நமக்குள் ஒரு ஆர்வத்தைப் பிறப்பிக்கின்றது; ஒரு ''எழுப்புதலையும்,'' நீதிக்கான ஒரு செயலையும், பாவத்திற்கெதிரான செயலையும் பிறப்பிக்கின்றது.

நம்முடைய அன்பு வளர்ந்து கொண்டு வருகிறது, நாம் மூன்றாவது கால்–பங்கு இலக்கை நோக்கி முன்னேறுகின்றோம். நாம் அந்த இலக்கை அடையும்போது, நம்முடைய கடமை அன்பு, அதோடு கூட நீதியின் நியமங்களின் மேல் அன்பு, திவ்விய குணாதிசயத்திற்கு நேராக மாத்திரம் விரிவடையவில்லை, அதோடு கூட மனுக்குலத்திற்குத் தீங்கு விளைவிக்கின்ற எல்லாப் பொல்லாத காரியங்களின் மேல் வெறுப்பும், திவ்விய குணாதிசயத்தையும், திட்டத்தையும் மீறுகிற காரியங்களின் மேல் வெறுப்பும் விரிவடைந்தது. ஆனால் இந்த குறி அளவில் இருக்கும்போது நாம் மற்றவர்களுக்கு விசாலமான முறையில் இரக்கம் காட்டும் ஒரு நிலையை அடைந்துள்ளோம், தேவனுடைய உணர்வில் பங்கு பெறுவதற்கு ஆரம்பிக்கிறோம், பாவத்திற்கு எதிராக மாத்திரமல்ல, நீதியின், பரிசுத்தத்தின் வழியில் நடக்க விரும்புகிறவர்களுக்காக அன்பையும் இரக்கத்தையும் உணரத்தொடங்குகிறோம். இந்த வேளையில் சகோதரர்களை இதற்கு முன்பு இல்லாத எப்படியோ ஒரு வித்தியாசமான வெளிச்சத்தில் அறிந்து கொள்ள நம்மால் முடிகிறது. இப்பொழுது நம்மால் சகோதரரைப் புது சிருஷ்டிகளாய்ப் பார்க்க முடியும், மேலும் அவர்களுக்கும் (புது சிருஷ்டி) அவர்களுடைய பரிபூரணமற்ற தன்மைகள் நமக்குத் தெளிவாக தெரிகின்ற அவர்களது அழிவுள்ள சரீரத்திற்கும் இடையில் வித்தியாசப்படுத்த முடியும். நாம் சகோதரர்களைப் புது சிருஷ்டிகளாக நேசிக்கக் கற்றுக்கொள்ளுகிறோம், மாத்திரமல்ல,

அவர்களுடைய மாம்சத்தினால் ஏற்படும் பல்வேறு பெலகீனங்கள், தவறாகப் புரிந்துகொள்ளுதல் போன்றவைகளில் அவர்களுக்காகப் பரிதாபம் காட்டவும் கற்றுக்கொள்ளுகிறோம். நம்முடைய அன்பு அவர்களுக்காக அவ்வளவு அதிகமாய் கூடுகிறபடியால் நம்முடைய ஜீவனையே அவர்களுக்கென்று, தினமும், ஒவ்வொரு மணி நேரத்தையும் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். அவர்களுக்கு உதவி செய்வதில், சேவை செய்வதில் நம்முடைய உலக நலன்களை அல்லது சந்தோஷத்தை அல்லது வசதிகளைத் தியாகம் செய்வதிலும், நம்முடைய நேரம், நம்முடைய செல்வாக்கு, அல்லது எதுவென்றாலும் அவர்களுக்கென தியாகமாகத் செலுத்துவதில் சந்தோஷமடைகிறோம்.

ஆனாலும் இன்னும் நாம் இந்த வழியில் ''இலக்கை'' நோக்கி முன்னேறுகிறோம். ஏனெனில் இதைக்காட்டிலும், நாம் அடைய வேண்டிய ஓர் உன்னதமான அன்பு உண்டு. அதாவது நான்காவதும், கடைசி கால்–பங்கு இலக்காகிய ''பந்தயப் பொருளுக்கான இலக்கை'' அடைய வேண்டும். இந்த அன்பு எப்படிப் பட்டது? சகோதரருக்கென தன்னையே தியாகம் செய்கின்ற அன்பைக்காட்டிலும் அது எப்படிப் பெரிதாக இருக்க முடியும். அது தேவனிடத்தில் முழு பயபக்தியுடனும் நீதியின் வழிகளிலும், அன்பிலும் பயபக்தியுடனும் கூடிய அன்பைக் காட்டிலும் அது எப்படி பெரிதாக இருக்க முடியும்? நாம் பதில் சொல்லுகிறோம், ஆண்டவர் நியமித்திருக்கிற அன்புதான் பெரியதென்று, அவர் நம்முடைய சத்துருக்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று அவர் சொல்லும்போது, அதுதான் பெரிய அன்பாயிருக்கிறது. நாம் கெட்ட கிரியைகளினால் சத்துருக்களாய், அந்நியராய், பரதேசிகளாய் இருந்த போதுதான், ''தேவன் இவ்வளவாய் இவ்வுலகத்தில் அன்பு கூர்ந்தார்,'' நாம் பாவிகளாய் இருக்கும்போதுதான், நமக்காகத் தன்னுடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார். பரிபூரண அன்பின் நிலை இதுதான்; இதைக் காட்டிலும் குறைந்த அளவில் நாம் நின்று விடக்கூடாது. யாரெல்லாம் மகிமையில், புது சிருஷ்டியின் அங்கமாக ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்களோ, அவர்களெல்லாரும் சத்துருவையும் நேசிக்கக்கூடிய அன்பின் நிலையை எட்ட வேண்டும்.

புது சிருஷ்டி தன்னுடைய சகோதரரை நேசிப்பது போலத் தன்னுடைய சத்தருக்களை நேசிக்க வேண்டும் என்றல்ல, ஏனெனில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள முறை இதுவல்ல; தேவன்

தன்னுடைய புத்திரரை, நண்பர்களை நேசிப்பது போன்று தன்னுடைய சத்துருக்களை நேசிப்பதில்லை; மேலும் தன்னுடைய சீஷர்களை நேசிப்பது போன்று இயேசு தன்னுடைய சத்துருக்களை நேசிக்கவில்லை. ஆனால் அவர்களுக்கென ஆயத்தத்துடன் இருந்து, நீதியின்படி அவர்களுக்கு எதையெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்யும்படியாக தேவன் சத்துருக்களை நேசித்தார்; இயேசு தன்னுடைய சத்துருக்களை நேசித்தார், அதனிமித்தம் அவர் இதய பூர்வமாக அவர்களுக்கு நன்மை செய்யும்படியாக இருந்தார்; அவர்களுடைய எதிர்ப்புக்குப் பதிலாக அவரிடத்தில் அவர்களுக்கெதிராக விரோதமோ, குரோதமோ இருந்ததில்லை. ஆனால் ஏற்ற சமயத்தில் அவர்கள் மேல் தன்னுடைய ஆயிரம் வருட யுகத்தின் ஆசீர்வாதங்களை ஊற்ற ஆயத்தமாக இருக்கிறார். அதன் மூலம் சத்தியத்தை அறிகிற அறிவிற்குள்ளாய் அவர்கள் எல்லோரும் வரும்படியாக அப்படிச்செய்வார்; மேலும் அவரைக் குத்தினவர்களும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்; அப்பொழுது அவர்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஏற்ற காலத்தில் ஊற்றுவார். (சக.12:10) ''உங்கள் சத்துருக்களை சினேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர் களுக்காக நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்''(மத்.5:44) என்று நம்முடைய ஆண்டவர் கூறுவது போல், நாம் சத்துருவினிடத்தில் அன்பு கொள்ள வேண்டும். எவ்விதமான கசப்பு உணர்வோ, பகையோ, அல்லது வெறுப்பு உணர்ச்சியோ நம்முடைய இருதயங்களில் வாசம் பண்ண அனுமதிக்கக் கூடாது. இருதயம் அன்பினால் அவ்வளவாய் நிறைந்திருக்க வேண்டும். ஒரு சத்துரு கூட நம்முடைய இருதயங்களில் ஒரு பொல்லாங்கான அல்லது குரோதமான எண்ணங்களைக் கிளராத அளவுக்கு அன்பினால் நிறைந்திருக்க வேண்டும்.

ஆ, குரோதத்தை, அல்லது வெறுப்பை, அல்லது சண்டையை உண்டாக்கக்கூடிய காரியம் ஒன்றையும் சத்துருவினிடத்தில் பார்க்கமுடியாத அளவுக்கு, இப்படி ஒரு குணாதிசயத்தை அடைவதற்கு எப்படியான நீடிய பொறுமையும் சகோதர அன்பும் குறிப்பிடப்பட்டுள்ளது! இந்த இலக்கை நோக்கித்தான் புது சிருஷ்டிகளாக நாம் ஓட வேண்டும். இந்த அன்பின் ஆவியைக் குறித்து நாம் வெளிப்படையாக மெச்சியுள்ளோம். நாம் அதற்கான அறிக்கை

செய்துள்ளோம்; அதன் கொள்கைகளுக்கு ஏற்ப நாம் நம்முடைய ஜீவியங்களை அர்ப்பணம் செய்துள்ளோம். இப்பொழுது நாம் அறிக்கை செய்தவைகள் எந்த அளவுக்கு உண்மையுள்ளவைகளாக இருந்தன என்பதைக் கண்டறியும்படியாக சோதிக்கப்படுகின்றோம். கர்த்தர், இந்த ஓட்டத்தை நாம் ஓடும்படிக்கும், நம்முடைய குணாதிசயத்தை அபிவிருத்திச் செய்யவும் அதிக கிருபையுடன் நேரத்தை தருகின்றார். ''நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்.'' இருந்த போதிலும் புது சிருஷ்டியின் அங்கங்களாக தேவனுடைய பிரியமான குமாரனோடு உடன் சுதந்திரராக இருப்போமென்றால்,நாம் இந்த ஒழுங்கு முறைகளோடு ஒத்து நடப்பது மிக முக்கியம்.

நம்முடைய இரட்சிப்பின் தளபதியாகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இந்த ஓட்டத்தை ஓட அவசியமில்லாதிருந்தது; இந்த அன்பின் பல்வேறு அம்சங்களை அபிவிருத்தி செய்ய அவருக்கு அவசியமில்லாதிருந்தது; ஏனெனில் பூரணமாயிருப்பதற்கான தகுதிகளை அவர் ஆரம்பத்திலேயே பரிபூரணமாகப் பெற்றிருந்தார். அவருடைய பரீட்சை என்னவெனில் இந்த கொள்கைகளுக்கும், குணாதிசயங்களுக்கும் ஏற்ப அவர் உறுதியாக நிற்பாரா, எல்லாவற்றிற்கும் மேலாக தேவனையும், நீதியையும் தொடர்ந்து நேசிப்பாரா, தன்னுடைய ஜீவனையே அவர்களுக்காகக் கொடுக்கும் அளவுக்குத் தொடர்ந்து சகோதரரை நேசிப்பாரா? தன்னுடைய சத்துருக்களுக்கு நன்மை செய்வதில் களிகூறும் அளவுக்கு அவர்களைத் தொடர்ந்து நேசிப்பாரா? பரிபூரண அன்பிற்கான தகுதியில் அவர் தொடர்ந்து உறுதியாக நிற்பாரா என்பதாகும். அவர் தன்னுடைய ஜீவனை தன்னுடைய நண்பர்களுக்காக மாத்திரமல்ல, தன்னை சிலுவையிலறைந்த சத்துருக்களுக்காகவும் ஈந்தார் என்பதில், அன்பின் எல்லா அம்சங்களிலும், அதன் மேல் உள்ள தனது வாஞ்சையை எப்படி அவர் வெளிப்படுத்தினார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதே அனுபவம் நம்முடையதாகவும் இருக்க வேண்டும். நம்முடைய மாம்சத்தில் நம்முடைய இருதயங்களின் உணர்வை எப்பொழுதுமே முழுமையாக வெளிப்படுத்த முடியா விட்டாலும், நம்முடைய இருதயங்களில் பரிபூரண அன்பின் நிலையை நாம் எட்டியாக வேண்டும்.

சிலர் ஓட்டத்தை வெகு வேகமாக ஓடலாம்; அவர்கள் இந்த மூன்று கால்–பங்கு இலக்குகளையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்து, பரிபூரண அன்பு என்கிற நிலையைத் துரிதமாக அடையலாம். மற்றவர்கள்,

மனதில் சிறிதளவு வைராக்கியத்தோடு, அல்லது நம்முடைய விசுவாசத்தைத் துவக்குகிறவரை சாதாரணமாக உற்றுப்பார்த்து, ஓட்டத்தில் மெதுவாக முன்னேறுகிறார்கள். அவர்கள் பல வருடங்களாக கடமைக்கான அன்புடன் தங்களைத் திருப்திப் பண்ணிக்கொள்கிறார்கள், அல்லது ஒரு வேளை திவ்விய குணாதிசயத்தின் அன்புக்கும், நீதியின் முறைகளுக்கும் சற்று முன்னேறுகிறார்கள். குறிப்பிடத்தக்க விதத்தில் சிலர்தான், சகோதரருக்கான அன்பை அடையும்படி இதைவிட சற்று மேலாகச் சென்றிருக்கிறார்கள்; அது அவர்களைத் தங்களுடைய சுயத்தை வெறுப்பதில் களிகூறச்செய்யும்; இதன்மூலம் அவர்கள் விசுவாச வீட்டாருக்கு ஊழியம் செய்ய முடியும். இதை விட இன்னும் சிலரே தங்களுடைய சத்துருக்களுக்காக அன்பு என்ற பரிபூரண அன்பின் நிலைக்குச் சென்றிருப்பார்கள். இந்த நிலை அவர்களை வார்த்தையினாலாவது அல்லது செயலினாலாவது தீமை விளைவிக்காது தடுப்பது மாத்திரமல்ல, அதற்கும் மேலாக அவர்களுடைய ஆசீர்வாதத்தில் களிகூறும். இலக்கை நாம் அடையும்படி நம்மோடு ஆண்டவர் அபரிமிதமாகப் பொறுமையுடன் இருந்திருப்பாரென்றால், நாம் அவருடைய இரக்கத்தில் களிகூற வேண்டும். மேலும் ''பந்தயப்பொருளின் இலக்கை'' அடைவதற்கு இன்னும் அதிக வைராக்கியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்; அப்படிச் செய்யும்போது காலம் குறுகியதாய் உள்ளது என்பதையும், மேலும் இந்தப் பரிபூரண அன்பு என்ற குணாதிசயத்துக்குக் குறைவாக எதுவும் பிதாவினால் புது சிருஷ்டியில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நம்முடைய ஆண்டவர் பரிபூரண அன்பு என்ற ''இலக்கில்'' சோதிக்கப்பட்டது போல, நாம் எல்லோரும் அதை அடைந்த பின்னர் சோதிக்கப்படுவோம். ஆகவே வாழ்வின் கடைசி மூச்சின் போது அந்த இலக்கை அடையலாம் என்று எதிர்பார்க்கக் கூடாது, ஆனால் கூடுமானவரை துரிதமாகச் செயல்பட வேண்டும். நாம் இந்த இலக்கை அடையும் வேகத்தை வைத்து நம்முடைய வைராக்கியத்தின் அளவும், அன்பின் அளவும் தேவனுக்கும் சகோதரர்களுக்கும் சுட்டிக்காட்டப்படும்.

அப்போஸ்தலருடைய வார்த்தையான ''சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும்'' (எபே.6:13) என்பது பரிபூரண அன்பு என்ற இலக்கை அடைந்த பின்னர் நமக்கு அதிகமாக சோதனைகள் உண்டு. அவையாவன: விசுவாசத்தை சோதிக்கின்றவைகள், பொறுமையை சோதிக்கின்றவைகள், மேலும் அன்பின் பல்வேறு அம்சங்களில்

வரக்கூடிய சோதனைகளாகும். நம்மைச் சரியான வழியில் முன்னேறும்படி உதவி செய்வதற்கு உலகமானது கிருபைக்கு ஒரு நல்ல நண்பனல்ல. சாத்தான் இன்னமும் நம்முடைய சத்துருவாயிருக்கிறான்; நாம் அடைந்துள்ள நிலைமையிலிருந்து நம்மை பின்னடையும்படியாகப் பலவந்தப்படுத்த அதிகமான எதிர்ப்புகளைக் கிளறிவிட முடிந்தவனாயிருப்பான். இதுவே நம்முடைய சோதனையாகும். நாம் அடைகின்ற நிலையில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். நம்முடைய உலக வாழ்க்கையைத் துச்சமாக உதறிவிடும் வரை, நமக்குச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்யவும், தேவனுடைய ஊழியத்தில் சகோதரருக்கென நம்முடைய ஜீவனையே கொடுக்கும் வரை நாம் ''இலக்கை நோக்கித் தொடர வேண்டும்.'' ''நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர்,'' இந்த வழியில் நாம் செல்லும்போது தேவையான ஒவ்வொரு உதவியையும், ஆபத்தில் பாதுகாப்பையும் அவர் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். அவருடைய கிருபை நமக்குப் போதுமானது. (1தெச.5:24; 2கொரி. 12:9)

இந்த அன்பின் பிரமாணம், நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி, தேவ புத்திரரின் (தேவதூதர்) பிரமாணமாயும் இருக்கிறது, அவர்கள் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிவதும், அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துப்போவதும், எல்லாம் அந்தப் பிரமாணத்தைச் சார்ந்ததாய் இருக்கிறது. ஆயிரம் வருட யுகத்தில் பிரமாணங்களும், சட்டங்களும், ஒழுங்கு முறைகளும், நிர்ப்பந்தங்களும் அந்த யுகத்தின் ஆசீர்வாதமான ஒழுங்குகளுக்குள் மனுமக்களைக் கொண்டு வரும்படி, மானிட உலகின்மேல் வைக்கப்படும். இருந்தபோதிலும், ஆயிரம் வருட யுகத்தின் இறுதியில் நித்திய ஜீவனுக்குத் தகுதியானவர்கள் என்று எண்ணப்படுகிறவர்கள், பிரமாணங்களுக்கும், தேவையானவைகளுக்கும் கீழ்ப்படிதல் என்பவைகளுக்கு அப்பாலும் உள்ள நிலையை அடைந்திருப்பார்கள் என்பதையும், திவ்விய குணாதிசயத்தின் ஒரு பகுதியான, தேவனால் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட பிரமாணமான, கீழ்ப்படிதல், அன்பின் பிரமாணம் என்பவைகளைத் தங்கள் இருதயங்களில் எழுதியிருப்பார்கள் என்பதையும் நாம் நிச்சயமாக நம்பலாம் . இளைப்பாறுதலுக்குள் வந்துள்ள இந்த மானிட தேவ பிள்ளைகள், அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு, இந்த அன்பின் ஆவியையும் உடையவர்களாக இருப்பார்கள், அது இல்லாமல் அவர்கள் தேவனுக்குப் பிரியமானவர்களாக இருப்பது இயலாத காரியம். ஏனெனில் அவர் தன்னை ஆவியோடும் உண்மையோடும் தொழுது

கொள்பவர்களைத் தேடுகிறார். இப்படியாக பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் ஒரு பிரமாணம் இருக்க வேண்டும் என்றும், அதற்கு கீழ்ப்படிதல் இருக்க வேண்டும் என்றும், ஆனாலும் கீழ்ப்படிதலுக்குரிய திவ்விய நியமம், நம்முடைய உலகப்பிரகாரமானதும், பூரணமற்ற கருத்துகளுக்கும் உள்ள நியமங்களைக் காட்டிலும் மகா உன்னதமாய் இருக்கிறது என்றும், எப்படியெனில் அன்பு என்கிற ஒரே வார்த்தை, வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும், அவருடைய எல்லா புத்திரர்களும் கடந்து செல்லவேண்டியிருக்கிற தேவனுடைய முழு பிரமாணத்தையும் அறிவிக்கிறது என்பதையும் நாம் காண்கிறோம். நம்முடைய தேவனுடைய திட்டமும், குணாதிசயமும் எவ்வளவு ஆச்சரியமானதாயும் மகிமையுள்ளதாயும் உள்ளது! அன்பு என்பதே அவருடைய பிரமாணத்தின் நிறைவாய் உள்ளது, நாமும் இதைக்காட்டிலும் மேலான பிரமாணத்தைக் கற்பனை செய்துபார்க்க முடியாது.

இதுவரைக்கும் இந்தப் பொருளை பொதுவாகத்தான் பார்த்துள்ளோம். புது சிருஷ்டியானது மாம்சத்திலே இன்னமும் குடியிருக்கும்போது, அதன் பெலகீனங்கள், எதிர்பார்ப்புகள் போன்றவைகளை அதிகமான அல்லது குறைந்த பட்சத்தில் சந்திக்கும்போது, மற்றவர்களோடு நடந்து கொள்வதிலும், உலகத்தோடு நடப்பதிலும், தேவன் தன்னைப் பின்பற்றி வருகிற அனைவருக்கும் கொடுத்த புதிய கட்டளையான அன்பின் பிரமாணத்தின் மூலம் தங்களை எப்படி ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதை இப்போது நாம் பார்க்க விரும்புகிறோம். இது மிகவும் மேன்மையாக சொல்லப்பட்டு இருக்கிறது.

பொன்னான கற்பனை

பொன் என்பது நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி தெய்வீகத்துக்கு அடையாளமாக இருக்கிறது. ஆகவே பொன்னான கற்பனை என்பது திவ்விய கற்பனையாகும். இது உண்மையில் அன்பின் கற்பனை என்பதைவிட நீதியின் கற்பனை என்பதே சரியானதாகும். இப்பொழுது ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் உணர்ந்து கொள்ளக்கூடியதான இந்த நீதியின் பிரமாணத்திற்கு அருகில் வரக்கூடிய வழியானது, ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்குத் தெரிகின்ற மிக உன்னதமான முறை எதுவென்றால், ‘‘உன் அயலான் உனக்கு எதைச் செய்யக் கூடாது என்று நீ நினைப்பாயோ, அதை உன் அயலானுக்கு நீ செய்யாதிருப்பாயாக.’’ அதிக

பட்சமாக இது எதிர்மறையான நன்மையானதாக இருக்கிறது. பொன்னான கற்பனையானது, தற்போதைய நிலையில் புது சிருஷ்டியைத் தவிர வேறு எவரும் உணர முடியாததாக அல்லது புரிந்து கொள்ளமுடியாததாக, திட்டமானதாக உள்ளது. அதாவது ''மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.'' இது உடன்பாடான நன்மையானது, ஆனால் நியாயமானது மட்டுமே. புது சிருஷ்டியின் அங்கங்கள் சில வேளைகளில் இந்த நீதியின் பிரமாணமான பொன்னான கற்பனையின் ஒவ்வொரு அம்சத்தோடும் இணங்கிப்போக தவறுவார்களெனில், அவர்கள் புது வழியில் குழந்தைகளாக இல்லாவிட்டால், அது அவர்களுக்கு விசனமும் பெரிய ஏமாற்றத்திற்குரியதாகும். இந்தக் கற்பனை எவ்விதத்தினாலாவது மீறப்படும்போது வேதனையையும் மன வருத்தத்தையும் கொண்டு வருமானால், அது அந்த மீறுதல் மனப்பூர்வமானதல்ல, இருதயத்திலிருந்து வந்ததல்ல, புது சிருஷ்டியின் அடிப்படைக் கருத்து மீறப்படவில்லை என்பதற்கு திட்டவட்டமான அடையாளமாகும். அது கூடிய வரை ஆவியின் விருப்பத்திற்கு அல்லது நோக்கத்திற்கு மாறாக மாம்ச பலகீனத்தால் அல்லது தடுமாற்றத்தால் ஏற்பட்டதாகும். இருந்த போதிலும் புதிய மனமானது எந்த அளவுக்கு தேவனை நோக்கி ஜீவனுள்ளதாகவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்ற வைராக்கியம் உள்ளதாகவும் காணப்படுகிறதோ, அதே அளவுக்கு அது வாசம் செய்கிற ''மண்பாண்டத்தைப்'' பாதுகாப்பதில் துரிதமாகவும், ஜாக்கிரதையாகவும் சுறுசுறுப்போடும் இருக்கும்.மாம்ச பெலகீனங்களுக்கு எதிராக நல்ல போராட்டத்தைப் போராடும்படியாக அது தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளும். ஒரு தவறு வார்த்தையினாலோ, செயலினாலோ செய்யப்பட்டிருந்தால், நல் நோக்கத்துடன் மறுபடியும் பழைய நிலைக்கு வருவதற்கு வாய்ப்பு, முடிந்தால், துரிதமாகக் கொடுக்கப்படும். இப்படியாக ''மண்பாண்டம்'' அது எதிர்பார்க்கப் படுவதையும், வெட்கப்படுத்தப்பட்டதையும் கண்டு, புதிய மனதிற்கு எதிர்ப்புக் காட்டுவதில் குறைவாகச் செயல்படலாம்.

புது சிருஷ்டியின் இந்த திவ்விய பிரமாணம் தேவனோடு உள்ள அவனது உறவைப் பாதிக்கிறது. ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும், உன் முழுச் சிந்தையோடும் அன்பு கூறுவாயாக'' என்பதின் அர்த்தத்தை அவன் புரிந்து கொள்கிறான். இங்கே அவன் தேவனோடு முற்றுமாக ஒத்துப்போவதையன்றி, சுயத்திற்கு இடம் காணவில்லை. இது

சகோதரரோடு உள்ள உறவைப்பாதிக்கிறது, எப்படியெனில் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன், தான்(விசுவாசக் கண்களினால் தவிர) காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான். (1யோவா. 4: 20,21) அவர்களோடு தான் பழகும் விதத்தை அவன் கவனமாகக் கவனிக்கக் கற்றுக்கொள்ளும்போது, அதாவது அவர்கள் தனக்கென்று செயல்படவும், தன்னோடு நடந்து கொள்ளவும் தான் விரும்புகிற மாதிரி, தானும் அவர்களுக்கென்று செயல்படவும், அவர்களோடு நடந்துகொள்ளும்விதத்தைக் கற்றுக்கொள்ளும்பொழுது, அது வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணுவதைக் காண்கிறான். மேலும் அவனும், மற்றவர்களும், ஜீவிக்கவும், சிந்திக்கவும், நடக்கவும், பேசவும் ஏற்கெனவே பழக்கப்பட்டுள்ளபடியான கற்பனையாகவோ அல்லது பிரமாணமாகவோ இது இல்லவே இல்லை என்பதையும் அவன் கவனிக்கக் கற்றுக் கொள்கிறான்.

தன்னோடு சகோதரர்கள் அன்பாக நடக்க வேண்டும், மேலும் அமைதியாகப் பேச வேண்டும் என்று விருப்பப்படுவது போன்று, அவனும் அவர்களோடு அன்பாக நடக்க வேண்டும், அமைதியாகப் பேச வேண்டும் என்பதைக் காண்கிறான்; தன்னுடைய குறைகளில், பெலகீனங்களில் அவர்கள் பொறுமையாக இருக்க வேண்டும், இந்த மனித குறைபாடுகள்மேல் இரக்கம் என்ற திரையை விரிக்க வேண்டும் என்று அவன் விரும்புவது போன்று, அவர்களுக்கும் அவன் அது போன்றே செய்ய வேண்டும் என்பதையும் காண்கிறான்; சகோதரர்கள், தன்னைக்குறித்து பொல்லாப்பு எதுவும், அது உண்மையாக இருந்தால் கூட, பேசக் கூடாது என்று தான் விரும்புவது போன்று, அவர்களோடு அவன் பாசமுள்ளவனாக இருக்க வேண்டும் என்றும், ''ஒருவனையும் தூஷியாதே,'' ''யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார் களுக்கும் நன்மை செய்யக்கடவோம்'' என்பதையும் அவன் காண்கிறான்; தன்னால் நியாயமாகச் செய்யக் கூடியதற்கு மேல் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று மற்றவர்கள் எதிர்பார்க்கக் கூடாது என்று அவன் விரும்புவது போன்று, மற்றவர்களும் தங்களால் நியாயமாக செய்யக்கூடியதற்கு மேல் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கக் கூடாது என்பதையும் காண்கிறான். உலகம், மற்றும் அதன் காரியங்களைப் பொறுத்தமட்டிலும் கூட இதே கருத்து செயல்படும். இப்படியாக வாழ்க்கையின் முழு வழியும் படிப்படியாக மாற்றப்படுகிறது. மேலும் அப்போஸ்தலர் கூறுகிறபடி, ''நாம் தேவனுடைய மகிமையைக் காண்போம்'' என்கிற அளவுக்கு இந்த மாறுதல் வருகின்றது. இந்த

மகிமையைக் காண்பது என்ற திவ்விய குணாதிசயத்தின் மேன்மையானது, பரிபூரண நீதி என்ற பொன்னான கற்பனையால் அதோடு கூட பெரிதான அன்பினால் ஆளுகை செய்வதை உணர்ந்து, அதைச் செயல்படுத்தும் அளவின்படி வருகின்றது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (2கொரி. 3:18)

பரிசுத்த ஆவியினால் பிறந்த நம்முடைய புதிய சிந்தைகள், புதிய சித்தங்கள் வளர்ச்சியுறும்போது அந்த வளர்ச்சி இருதயத்தின் தன்மையை ''மகிமையிலிருந்து மகிமைக்கு'' படிப்படியாக மாற்றுகிறது. இப்படியாக நாம் நம்முடைய இருதயங்களிலும் சிந்தைகளிலும், நோக்கங்களிலும் (இயன்றவரை வெளித் தோற்றத்திலும்)மாற்றப்பட்டு நாம் திவ்விய வாக்குத்தத்தத்தின்படி, பெலகீனத்திலும், அழிவிலும், விதைக்கப் பட்டதானது வல்லமையிலும் மகிமையிலும் உயிரோடு எழுப்பப் படும்போது – ஒரு புது சிருஷ்டியாக, தேவனுடைய கிறிஸ்துவாக மாபெரும், இறுதி உயிர்த்தெழுதலின் மாற்றத்திற்குத் தகுதியுள்ளவர் களாகிறோம். பலவிதமான நல்லதும், உதவியானதுமான புத்திமதிகளும், கண்டிப்புகளும், யோசனைகளும் அப்போஸ்தலர்களால் கொடுக்கப் பட்டுள்ளன; அவைகள் பல்வேறு சகோதரர்களால் மறுபடியும் சொல்லப்பட்டு, ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன; அவைகள் கடிந்து கொள்ளுதல், சீர்திருத்தல் முதலானவைகளுக்குப் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கின்றன. எதற்குக் கீழாக புது சிருஷ்டி வைக்கப்பட்டுள்ளதோ, அந்த முழு கற்பனையும் பொன்னான கற்பனையாக, அன்பின் பிரமாணமாக இருக்கிறது. இது சரியானபடி அறியப்பட்டால், இப்பொழுது புது சிருஷ்டியினால் செய்யப்படும் அநேக காரியங்கள், இனிமேல் செய்யப்படமாட்டாது, மேலும் இப்போது அவர்களால் அசட்டை பண்ணப்பட்ட அநேக காரியங்கள், வைராக்கியத்துடனும், கவனத்துடனும் இனி செய்யப்படும்.

பரிபூரண சுயாதீனப் பிரமாணம்

புதுசிருஷ்டியானது சரியான கட்டுப்பாடுகள், சட்டங்கள் இல்லாமல் ஆண்டவரால் அதிக சுயாதீனமாக விடப்பட்டிருக்கிறது என்று யாராவது நினைக்க முற்படுவார்களானால், அன்பு என்று ஒரே வார்த்தையில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட, இந்த தேவப்பிரமாணத்தின், நீளம், அகலம், பொதுவான விசாலத்தையும் காணும்போது, நிச்சயமாகவே அவர்கள் ஒரு மனமாற்றத்தைக் காண்பார்கள். அப்போஸ்தலர் அதை

''சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணம்''(யாக்.1:25) என்று அழைக்கிறார். ஆனால் தேவன் அவருடைய ஆவியினால் பிறந்த புது சிருஷ்டிக்கு மாத்திரமே இந்தப் பிரமாணத்தை உரியதாக ஆக்குகிறார். மற்றவர்கள் ஒன்று, அவர்கள் இன்னமும் மோசேயினுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாய், பணிவிடைக்காரர்களாய், ''கிறிஸ்து விடுதலையாக்குகின்ற சுயாதீனத்திற்குத்'' தகுதியில்லாத வர்களாய், குமாரர்களென்னப்படாதவர்களாய் இருக்கிறார்கள், இல்லையெனில் அவர்கள் ஆதியில் கொடுக்கப்பட்ட பிரமாணத்தின்படி மரண ஆக்கினைக்குட்பட்டிருக்கிறார்கள். ஆக்கினைக்குட்படுத்தப் பட்ட பாவிகள் இன்னும் புறம்பானவர்களாய், அந்நியராய், நம்பிக்கை இல்லாதவர்களாய், தேவனற்றவர்களாய் நடத்தப்படுகிறார்கள். அவர்கள், பொதுவான முறையில், முடிவாக உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வருகின்ற தேவனின் கிருபையைக்குறித்து அறியாதவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் இது வெகு சிலருக்கே தற்காலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பெரும் திரளான ஜனக்கூட்டம் திவ்விய அன்பின், மீட்பின் செய்தியை கேட்கக் கூடாதபடிக்கு சத்துரு தடைபண்ணி இருக்கிறான். அவன் (சாத்தான்) தப்பறையான உபதேசத்தினால், மனுக்குலத்தின் பெரும்பாலோரின் மனதைக் குருடாக்கி, அவர்களது செவிகளை அடைத்துப்போடுகிறான். (2 கொரி. 4:4; 1தீமோ. 4:1)

சுயாதீனம் என்பது பொல்லாதவர்களுக்கல்ல. அது அவர்களை சிறைப் படுத்துவதை சமுதாயம் காண்கிறது. ஆகவே பரிபூரணப் சுயாதீனப்பிரமாணம் என்பது பொல்லாத வர்களுக்கானது அல்ல, ஆனால் அது நல்லவர்களுக்கு, பரிபூரணமானவர்களுக்கு உரியது ஆகும். ஆயிரம் வருட யுகத்தில் உலகமானது ஒரு அன்பின் பிரமாணத்திற்குள் விடப்படமாட்டாது, ஆனால் கீழ்ப்படிகிற ஒரு பிரமாணத்திற்கு உட்பட்டு, நீதியாகவும் கிருபையுடனும் ஆட்சி செய்யப்படும். இராஜ்யத்தின் முடிவு வரும்வரை (மனப்பூர்வமாய் தீங்குசெய்கிறவர்கள் இரண்டாம் மரணத்தில் வேரற்றுப் போகும் வரை) மனுக்குலம் திவ்விய திட்டத்திற்கு முற்றிலுமாக ஒத்துப்போனவர்கள், பரிபூரணமானவர்கள் என்று நிரூபிக்கப்படும் வரை, சுயாதீனப் பிரமாணமாகிய அன்பின் கீழாக, அதன் பொன்னான கற்பனைக்குக் கீழாக வைக்கப்படமாட்டார்கள். அவர்கள் மைனர்களாக இருக்கும்வரை அவர்கள் பணிவிடைக்காரர்களைப்போல எண்ணப் படுவார்கள். (எபி.13:17) புது சிருஷ்டியானது இப்போது சுயாதீனப் பிரமாணத்திற்குக் கீழாக இருக்கிறது, அது அவ்விதமாகவே நடத்தப்படுகிறது, ஏனென்றால், ''பழையவைகளெல்லாம் ஒழிந்து

போயின, எல்லாம் புதிதாயின.'' இப்போது அவர்கள் பாவத்தை வெறுக்கிறார்கள்; நீதியை நேசிக்கிறார்கள்; இப்போது அவர்கள் அவர்களுடைய சுயாதீனத்தை, மாம்சத்தை திருப்திப்படுத்துவதற்குக் கிடைத்த தருணமாக உபயோகிக்கவில்லை; ஆனால் அதை அழிப்பதற்கும், பாவத்தில் சந்தோஷப்படாமல், பாவத்தை அப்புறப்படுத்தவும், உலகத்தை அதிலிருந்தும் அதன் சம்பளமாகிய மரணத்திலிருந்தும் விடுவிக்கவும் ஆண்டவரோடு இணைந்து செயல்படும்படியாக தங்களுடைய பூமிக்குரிய வாஞ்சைகளைப் பலியாகச் செலுத்த ஒரு தருணமாக உபயோகிக் கிறார்கள்; தேவ ஆவியாகிய, இந்தப் புதிய ஆவிக்குள் மறுபடியும் பிறந்து, மேலும் கிறிஸ்துவின் பள்ளியில் மாணாக்கர்களாகச் சேர்ந்து, அவரைக் குறித்து கற்றறிந்து அவருடைய பாதபடியில் நடக்கிற இவர்கள், இவர்கள் மாத்திரமே, சுயாதீனப் பிரமாணத்திற்குக் கீழாக வைக்கப்படமுடியும். அவர்கள் தங்கள் புத்திர சுவிகாரத்தின் ஆவியை இழந்து போவார்கள் என்றால், அவர்கள் புத்திரராய் இருப்பது நின்று போய்விடுகிறது, இந்த சுயாதீனப் பிரமாணத்திற்குக் கீழாக இருப்பதிலும் நின்று விடுகிறார்கள்.

கிறிஸ்து விடுதலையாக்குகிற இந்த சுயாதீனத்தை இப்போது உபயோகிக்கக் கற்றுக்கொள்பவர்கள், இந்தப் பரிபூரண அன்பின் பிரமாணத்தின் கீழாக அர்ப்பணிப்பின் மூலமாக வருகிறவர்கள், இதற்குக் கீழாக இருக்கும் போது தங்களுடைய ஜீவனையே சகோதரருக்காகவும், சத்தியத்திற்காகவும், நீதிக்காவும் அளிக்கிறவர்கள், இப்படிப்பட்ட உண்மையுள்ளவர்கள், உலகத்தை ஆசீர்வதிக்கிற பெரிய வேலையில், தேவனுடைய பிரியமான குமாரனோடு, அவருடைய பிரதிநிதிகளாகவும், உடன் சுதந்திரராயும் இருக்கத் தகுயுள்ளவர்கள் என்று எண்ணப் படுவார்கள். அவர்களுடைய வேலைக்கு இந்தத் தகுதி எவ்வளவாய்த் தேவைப்படுகிறது! போதகர்களாகவும், உதவிக்காரர் களாகவும், நியாயம் தீர்க்கிறவர்களாகவும், உலகத்தை ஆளுகிறவர் களாகவும் இருக்கிறவர் களுக்கு இந்தத் தகுதி மிகவும் அவசியம் என்பது தெளிவாகிறது. இப்படியாக ஆயிரம் வருட யுகத்தின் போது பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்கு இது மிகவும் தேவைப் படுகின்றது. அதாவது இரக்கமும் உண்மையுமுள்ள இராஜரீக ஆசாரியராக இருக்கும்படி, இவர்கள் அதிகமாக வளர்ச்சியடைய வேண்டும், மேலும் அன்புக்குரிய தகுதியில் சோதிக்கப்பட வேண்டும்.

அத்தியாயம் 8

புது சிருஷ்டியின் ஓய்வு நாள் அல்லது இளைப்பாறுதல்

சிலுவையிலிருந்து தெய்வீக விவகாரங்களின் காலத்தின் மாறுதல்கள் – அப்போஸ்தலர்கள் யூத ஜெப ஆலயங்களில் ஓய்வு நாளில் பிரசங்கித்தது யூத ஓய்வுநாளை அல்லது முறைமையை அங்கீகாரம் செய்து புது சிருஷ்டியின் மேல் திணிக்க அல்ல–ஒருவர் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் கட்டிடம் அவாது செய்தியை பாதிப்பதில்லை–அந்த நாளும் கூட பாதிப்பதில்லை– வாரத்தின் முதலாவது நாள் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளாக ஆரம்பம்– இந்த ஆசரிப்பு கான்ஸ்டன்டைன் காலத்திற்கு வெகு முன்னரே ஆரம்பமானது – உயிர்த்த ஆண்டவரின் தரிசனங்கள் பெரும்பாலும் வாரத்தின் முதல் நாளிலேயே நிகழ்ந்தன – முதல் நாளை ஓய்வு நாளாக பொதுவாக ஆசரித்தது ஒரு நன்றியறிதலான காரியம்–எனினும் அது தேவ ஏற்பாடல்ல–பிரான்சு தேசமும் ஏழு என்கிற எண்ணும்– இஸ்ரயேலரின் ஓய்வு நாள் நிழலானது– புது சிருஷ்டியின் ஓய்வு நாள் எப்பொழுது ஆரம்பித்து எப்படி தொடருகிறது.

நாம் கடந்த அத்தியாயத்திலே படித்தவைகள் எல்லாம், மிகவும் விசாலமாயிருக்கிற அன்பு என்ற பிரமாணத்தைத் தவிர்த்து கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிற அனைவருக்கும் வேறு பிரமாணம் கிடையாது என்பதை திட்டவட்டமாக நிரூபித்து விட்டன. புது சிருஷ்டி அதாவது ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் எவ்விதத்திலும் நியாயப்பிரமாண உடன் படிக்கைக்குக் கீழாக இல்லை என்பதை நாம் தெளிவாகவும் துல்லியமாகவும் பார்த்தோம். ஆபிரகாமின் உடன்படிக்கைக்குக் கீழாக புது சிருஷ்டியானது பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது;

மீறுதலின் நிமித்தம் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது 430 வருடத்திற்குப் பின்னர் கூட்டிக் கொடுக்கப்பட்டது. உண்மைதான், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, வேதபாரகர்கள், பரிசேயர்கள் ஆகியோரின் முறையற்ற எண்ணங்களின்படி இல்லாவிட்டாலும், அவர் மாம்சத்திலே இருந்த நாட்களில் வாரத்தின் ஏழாவது நாளை மோசேயின் பிரமாணத்தின்படி தவறாமல் கடைபிடித்தார். இதற்கான காரணம் என்னவெனில் மாம்ச பிரகாரமாக அவர் யூதனாகவும், மோசேயின் நியாயப் பிரமாணத்தின் கீழ் பிறந்தவராகவும் இருந்தார். ஆகவே அதை எல்லா வழிகளிலும் நிறைவேற்ற கடமைப்பட்டிருந்தார். அப்போஸ்தலர் கூறுகிறபடி, அவர் அதை ''சிலுவையின்மேல் ஆணி அடித்தார்.'' எனவே, இவ்விதமாக பிதாவின் மூலமாக தன்னிடத்தில் வருகின்ற எல்லா யூதர்களுக்காகவும் தனக்காகவும், அதை முற்றிலும் முடிவுக்குக் கொண்டு வந்தார். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத எல்லா யூதர்களும் இன்னமும் அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஒவ்வொரு அம்சத்திற்கும், ஒழுங்குக்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்போஸ்தலர் விளக்குவது போல, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் என்பதை ஏற்றுக் கொண்டு, அவரை விசுவாசிப்பதின் மூலம்தான் அவர்கள் அதிலிருந்து விடுவிக்கப்பட முடியும். (ரோம.10:4)

புறஜாதியினரைப் பொறுத்த வரையில், அவர்கள் ஒரு போதும் மோசேயினுடைய பிரமாணத்திற்கு கீழாக இருந்ததில்லை, ஆகவே அவர்கள் அதிலிருந்து விடுவிக்கப்பட அவசியமில்லை என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம்; மேலும் புது சிருஷ்டியானது நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து – அவருடைய ஞானஸ்நானத்தின் போது மறுபடியும் பிறந்தவர், மேலும் அவருடைய உயிர்த்தெழுதலில் ஆவியினால் பிறந்தவர் – ஆபிரகாமின் நிஜமான சந்ததியாகக் காணப்பட்டார் என்பதையும், மேலும் ஆபிகாமுக்குக் கொடுக்கப்பட்ட எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் சுதந்தரவாளியாக இருந்தார் என்பதையும் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். மேலும் விசுவாசத்தினால் அவரண்டையில் வருகின்ற யூதர்களும், புறஜாதியினரும், பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறக்கும் போது அதே மாதிரியாக புது சிருஷ்டிகள் என்றும், ஆபிரகாமின் உடன்படிக்கையில் கிறிஸ்துவோடே உடன் சுதந்திரர் என்றும் எண்ணப்படுகிறார்கள்; இவர்களில் எவரும் கூட்டிக் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தின் கீழாக அதாவது

நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக்குக் கீழாக இருப்பவர்களல்ல. ஆகவே மனுஷனான கிறிஸ்து இயேசு நியாயப்பிரமாணத்தின் கீழாக இருந்தாலும், நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியாகிய ஏழாவது நாளை ஆசரிக்கும்படியான நிலைமைக்குட்பட்டு இருந்தாலும், நியாயப் பிரமாணத்திற்கான இப்படிப்பட்ட கடமைகள் எல்லாம், அவரைப் பொறுத்த வரையிலும், அவரைப் பின்பற்றி வருபவர்களைப் பொறுத்தவரையிலும் அவர் மரித்தவுடன் அது நின்று போயிற்று. இப்படியாக, அவரை ஏற்றுக் கொண்ட யூதர்கள் எல்லாருக்கும் நியாயப்பிரமாணத்தின் முடிவை நீதியாக நியாயமாக செய்து முடித்தார். இவர்கள் எல்லாரும் அவர் மூலமாக அவரோடு நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மரித்து, ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு உயிரோடு எழுந்தார்கள்.

இருந்தாலும், நியாயப்பிரமாண யுகத்திலிருந்து சுவிசேஷ யுகத்திற்கு அதாவது கிருபையின் யுகத்திற்கு, மாறியதின் அர்த்தத்தை முற்றிலுமாக கிரகித்துக் கொள்ள அப்போஸ்தலர்களுக்குக் கூட கிறிது காலம் தேவைப்பட்டது என்பதை நாம் காணும் போது ஆச்சரியப் படுவதற்கில்லை. அதைப் போன்றே, யூதருக்கும் புற ஜாதியினருக்கும் பகையாக இருந்த நடுச்சுவர் கிறிஸ்துவின் மரணத்தினால் உடைக்கப்பட்டது என்பதை உணர அவர்களுக்கு அதிகமான வருஷங்கள் தேவைப்பட்டது என்பதையும் நாம் காண்கிறோம். மேலும், இனிமேலும் புறஜாதியினர், யூதர்களைவிட அசுத்தமானவர்கள் என்று எண்ணப்படக் கூடாது, ஏனெனில் இயேசு கிறிஸ்து தேவ கிருபையால் ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார் என்றும், இனிமேல் யூதராயிருந்தாலும், புறஜாதியாராயிருந்தாலும், யாரெல்லாம் பிதாவண்டை வருவார்களோ அவர்களெல்லாரும் அவர் மூலமாக அவருக்குள் (பிரியமானவருக்குள்) ஏற்றுக்கொள்ளப்படக் கூடும் என்றும் பார்த்தோம். பெந்தெகொஸ்தே நாளில் யூதர்கள் மேல் ஆவி பொழியப்பட்டதைப் போன்று புறஜாதியினர் மேலும் பொழியப்பட்ட தேவனுடைய கிருபையைக் குறித்தும், பரிசுத்த ஆவியின் வரங்களைக் குறித்தும், அந்நிய பாஷைகள் போன்றவைகளைக் குறித்தும் அப்போஸ்தலர்கள் ஒன்றாகக் கூடி பேசினார்கள், அதில் பேதுருவும் பவுலும் சாட்சி கொடுத்தார்கள்; இதன் பிறகு பல வருடங்களுக்குப் பின்னரும் கூட, பேதுரு இன்னும் தயக்கம் காட்டுவதையும், புறஜாதியினரில் மனந்திரும்பினவர்களை இன்னும் அசுத்தமானவர்கள் என்று எண்ணி அவர்களை விட்டு விலகும்

அளவுக்கு யூத விசுவாசிகளின் தவறான எண்ணங்களை ஏற்றுக் கொள்வதையும் நாம் காண்கிறோம். இதனிமித்தம் அவர் அப்போஸ்தலர் பவுலால் கடிந்து கொள்ளப்பட்டார். அப்போஸ்தலராகிய பவுல் மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் புதிய யுகத்தின் முழு சூழ்நிலையை அதிக தெளிவான எண்ணத்தோடு கிரகித்துக்கொண்டார் எனத் தெரிகிறது. ஒரு அப்போஸ்தலருக்கு தன்னுடைய ஜாதி வேற்றுமையை மேற்கொள்ளுவதற்கு இப்படியான ஒரு கடிந்து கொள்ளுதல் தேவைப்பட்டால், விசுவாசிகளின் கூட்டத்தாரில் எண்ணிலடங்காதவர்கள் (கிட்டத்தட்ட எல்லா யூதர்களும்) சிலுவையின் காலத்திலிருந்து முழுமையான மாற்றம் பெற்ற தெய்வீக விவகாரங்கள் குறித்து அநேக வருஷங்கள் குழம்பியிருந்தார்கள் என்று நாம் உடனடியாக யூகித்துக்கொள்ளலாம்.

பலஸ்தீனாவிலுள்ள யூதர்களுடைய வழக்கமாக மாத்திரம் அல்ல, உலகம் முழுவதிலும் சிதறியிருந்த யூதர்களின் வழக்கமானது ஒரு ஓய்வு நாள் ஆசரிப்பையும் உள்ளடக்கியதாக இருந்தது. அது ஆரம்பத்தில் ஒரு ஓய்வு நாளாக அல்லது வேலையிலிருந்து ஓய்ந்திருப்பது என்பதை விட வேறு எந்த விதத்திலும் அது ஏற்படுத்தப்படாவிட்டாலும், சரியான விதத்தில் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசிகளுடைய வாக்குகளையும் வாசிக்கும் ஒரு நாளாகவும், புத்தி சொல்லும் ஒரு நாளாகவும் உபயோகப்படுத்தப்பட்டது. அந்த நாளில் வியாபாரம் பலஸ்தீனா முழுவதும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆகவே யூதர்களில் மனம்திரும்பி கிறிஸ்தவத்தில் வருகிறவர்கள் கிறிஸ்துவிலிருந்து அவர்களுடைய நிறைவு ஆரம்பித்த நிலையிலிருந்து நியாயப் பிரமாணத்தையும் தீர்க்கதரிசிகளுடைய வாக்குகளையும் வாசிக்கவும் ஒன்றாக கூடிவருவது இயல்பானதாகும். மாத்திரமல்ல, உறுதியாக நிலைத்திருக்கும்படி ஒருவருக்கொருவர் புத்தி சொல்வதற்கும் கூடி வந்தார்கள். அதற்கும் மேலாக, அந்த நாள் ஆண்டவருடைய பெரிதான நாள், ஆயிர வருட நாள் நெருங்கி வருவதையும், ''உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும் காலங்கள்'' வருவதையும் கண்டார்கள். ஆகவே அவர்கள் இவர்களிடம் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு அவர்களுடைய வழக்கமான நாளாகிய ஏழாம் நாள் கூட்டம் நல்ல தருணமாக இருப்பதைக் கண்டார்கள். வாரத்தின் முதல் நாளன்றோ, அல்லது அதைவிட ஏழாவது நாளன்றோ, அல்லது வாரத்தின்

எந்த நாளிலாவது சுவிசேஷ செய்தியைப் பிரசங்கிப்பதற்கு திவ்விய வெளிப்பாடு ஏதும் இருந்ததில்லை என்பதை நாம் நிச்சயமாகவே அறிந்து கொள்ளலாம்; ஆரம்ப காலத்திய சுவிசேஷகர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம், மேலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் யாரெல்லாம் கேட்பதற்கு செவி உள்ளவர்களாக இருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் இடைவிடாது பிரசங்கித்தார்கள்.

கிறிஸ்து நியாயப்பிரமாண உடன்படிக்கையை அவருடைய சிலுவையின் மேல் ஆணியடித்து, அதை முடிவு பெறச்செய்தார் என்று அப்போஸ்தலர்கள் அறிவித்தார்கள். வாரத்தில் ஏழாவது நாளிலோ அல்லது வேறு எந்த நாளிலோ விசேஷமாகக் கடைபிடிக்க வேண்டிய எந்த விதமான பிரமாணத்தை அல்லது கடைமையைக் குறித்தோ ஒரு வார்த்தை கூட ஆதிசபைக்கு அப்போஸ்தலர் கூறவில்லை என்பதை இருக்கிற தகவல்களின்படி அறிந்து கௌள்ளுகிறோம். அதற்கு மாறாக, சபையானது ஆதி பிரமாணத்திற்குக் கீழ் ஒரு புது சிருஷ்டி என்ற சிந்தனையை கண்டிப்புடன் பின்பற்றினார்கள்; மேலும் இதன்படி வீட்டின் குமாரர்களான புது சிருஷ்டி நியாயப்பிரமாணத்திற்கு கீழாக அல்ல, ஆனால் கிருபையின் பிரமாணத்திற்கு கீழாக இருக்கிறார்கள். புது சிருஷ்டியின் சுயாதீனத்தைக் குறித்து ஆவியினால் உந்தப்பட்ட போதகர்கள் அநேக வார்த்தைகளில் தெளிவாக குறிப்பிட்டதாவது: ‘‘ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாளையும் குறித்தாவது, ஒருவனும் உங்களை குற்றப்படுத்தாதிருப்பானாக!’’ (கொலோ. 2:16,17)

போஜனத்தையும், உபவாசங்களையும், நேரத்தையும், நாளையும், காலங்களையும் குறித்த எல்லாவிதமான கட்டளைகளும், நிழலாக இருந்த இஸ்ரயேலருக்கு தேவன் ஏற்படுத்திய பொதுவான நிழலான ஒரு முறை என்பதை சபை அறிய வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள்; ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு பிற்காலத்தில் உரித்தாகின்ற நன்மையான காரியங்களுக்கு நிழலாக இருந்தது என்பதை அவர்கள் அறியவேண்டும் என்று நினைத்தார்கள். யூதர்களுக்கு இவைகள் நிஜமானவைகளாக, தேவ கட்டளை மூலம் அவைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டவர் களாயிருந்தனர். புது சிருஷ்டிக்கு வெறும் நிழலாக, மகத்தான நிறைவேறுதலை சுட்டிக்காட்டும் பாடங்களாக மாத்திரமே உள்ளன; இதைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை

பரப்புவதற்காக அப்போஸ்தலர்கள் ஓய்வு நாளையும் யூத ஜெப ஆலயங்களையும் உபயோகிக்க விருப்பமுடையவர்களாயிருந்தார்கள் என்ற கருத்து, யூத முறைமையும், யூத நியாயப்பிரமாணமும் புது சிருஷ்டியின் மேல் ஒரு சட்டமாக அல்லது கட்டுப்பாடாக இருந்தது என்பதை ஆதரிப்பதாக இருக்கவில்லை. இன்றைக்கு நமக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுமெனில், நாம் யூத தேவாலயத்தில் வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்துவை பிரசங்கிப்பது மாத்திரமல்ல, ஏழாவது நாளாகிய யூதர்களின் ஓய்வு நாளிலும் மகிழ்ச்சியுடன் பிரசங்கிப்போம். ஆம், ஒரு புறஜாதியாரின் கோயிலில் புறஜாதியாரின் பரிசுத்த நாளன்று கிறிஸ்துவை பிரசங்கிப்பதில் மிகவும் மகிழ்ச்சியுடைவர்களாயிருப்போம். ஆனால் அப்படிச் செய்வதினால் புறஜாதியாரின் உபதேசங்களையோ அல்லது புறஜாதியாரின் பரிசுத்த நாளையோ நாம் ஆதரிக்கிறோம் என்று அர்த்தமல்ல.

வாரத்தின் முதல் நாளைப்பொறுத்தவகையில், பொதுவாக கிறிஸ்தவர்களின் மத்தியில் அது ஒரு ஓய்வு நாளாக அனுசரிக்கப் படுகின்றது; ரோமன் கத்தோலிக்க சபையின் உத்திரவுப்படி இந்த நாள் ஒரு கிறிஸ்தவ ஓய்வு நாளாக ஏற்படுத்தப்பட்டது என்று கூறுவது தவறாகும். அப்போஸ்தலர்கள் நித்திரையடைந்து இரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், கான்ஸ்டன்டைன் காலத்தின்போது சம்பிரதாயங்கள் சபைக்குள் ஒரு ஆச்சரியமான அளவுக்கு நுழைந்தன. கள்ளப்போதகர்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களை படிப்படியாக குருக்களின் நன்மதிப்புக்குள்ளாக கொண்டு வர முயற்சித்தர்கள்; மேலும் குருக்களின் உலகப்பிரகாரமான நோக்கமும், மூட நம்பிக்கைகளும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின; இந்த காலத்தில் பேர் கிறிஸ்தவர்கள் மத்தியில், அவர்கள் வாரத்தின் முதல் நாளை மத சம்பந்தமான காரியங்கள் போன்றவைகளுக்காக அனுசரிக்க வேண்டும் என்றும், நாட்டுப்புறங்களில் தானியங்களை சேகரிப்பது அத்தியாவசமான வேலை என்று கருதப்பட்டதால், இதற்கேயன்றி வேறு எந்தவிதமான சரீரப்பிரகாரமான உழைப்பும் இருக்கக்கூடாது என்றும் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது உண்மைதான். இந்தவிதமாக, கிறிஸ்தவர்களின் வாரத்தின் முதலாவது நாள் யூதர்களின் ஏழாவது நாளை ரத்துசெய்து விட்டது என்று அடிமைப்படுத்துகிறதும், அறிவிப்பும் வந்ததுமான இந்த சிறிய ஆரம்பம், ஏழாவது நாளைக் குறித்து யூதர்களுக்கு கொடுத்த தேவனின் ஒவ்வொரு கட்டளையும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கும் வாரத்தின்

முதலாவது நாளுக்கும் உரித்தாகும் என்று படிப்படியாக அதிகமானோரை எண்ண வைத்தது.

ஆனால் வாரத்தின் முதல் நாளை சரியான முறையில் அனுசரிப்பது என்பது கான்ஸ்டன்டைன் காலத்திற்கு முன்னரே இருந்தது. அது ஒரு அடிமைத்தனமாக அல்ல, ஆனால் சுயாதீனமாக, ஒரு சிலாக்கியமாக இருந்தது. நம்முடைய ஆண்டவர் மரித்தோரிலிருந்து வாரத்தின் முதல் நாளன்று உயிர்த்தெழுந்தார் என்கிற இந்த ஓர் உண்மையே அவரை பின்பற்றுகிறவர்களின் நம்பிக்கைக்கு புத்துயிர் ஊட்டுவதைக் காட்டும் வண்ணமாக, அவர்கள் மத்தியில் கொண்டாட வேண்டிய நாளாகி யிருக்கும். ஆனால் இதோடுகூட, அவர் உயிர்த்தெழுந்த நாளன்று அவர்களுடைய சீஷர்களை அவர் சந்தித்து வேதவாக்கியங்களை விளக்கிக்காட்டினபோது, அவர்களில் சிலர்,பின்னர் ஆசீர்வாதங்களை நினைவு கூர்ந்து, ''வேத வாக்கியங்களை நமக்கு விளக்கிக்காட்டினபோது நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா?'' என்கிற உண்மையும் காரணமாக இருந்தது. (லூக்.24: 32) வாரத்தின் அதே முதல் நாளன்று, எம்மாவு என்னும் கிராமத்துக்கு செல்லும் வழியில் அவர்கள் அவரை சந்தித்தார்கள், அதே நாளன்றுதான் கல்லறைக்கு அருகாமையில் இரண்டு மரியாள்களுக்கும் அவர் காட்சியளித்தார்; மகதலேனா மரியாளுக்கு தோட்டக்காரனாகவும் காட்சியளித்தார்; அப்போஸ்தலர்கள் பொதுவாக கூடியிருந்த நேரத்தில் தன்னை அவர் வெளிப்படுத்தினார்; அவர்கள் இன்னும் ஒரு வார காலத்திற்கு, உயிர்த்த ஆண்டவரின் தரிசனத்திற்கு காத்திருக்க வேண்டியிருந்தது; ஆனால் வாரத்தின் முதல் நாளன்று மறுபடியும் பதினோறு பேருக்கும் தோன்றும் வரை ஒரு தரிசனமும் கிடைக்கவில்லை; நாம் அறிந்தவரை நம்முடைய ஆண்டவர் சகோதரர்களுக்கு காட்சியளித்ததெல்லாம் வாரத்தின் முதல் நாளாகும். ஆகவே ஆண்டவரோ, அல்லது நம்முடைய அப்போஸ்தலர் களில் எவராவது கட்டளையிடாமலேயே வாரத்தின் முதல் நாளன்று ஆதிகாலத்து சபை, ஆண்டவரின் உயிர்த்தெழுதல் அளித்த மகிழ்ச்சியை கொண்டாடும் வண்ணமாகவும், வேத வசனங்களை அவர்களுக்கு விளங்கப்பண்ணி அவர்களுடைய இருதயங்களை அன்றைய தினத்தில் எப்படியாக கொழுந்து விட்டு எரியப்பண்ணினார் என்பதை நினைவு கூறும்படியாகவும் கூடி வந்தார்கள் என்பது ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நாளில் அவர்கள் ஒன்றாகக் கூடி அப்பம் பிட்குதலிலும் தரித்திருந்தார்கள்; அது பஸ்கா பண்டிகையோ அல்லது ஆண்டவருடைய

இராப்போஜனம் போன்றதோ அல்ல; ஆனால் அவர் அப்பத்தை எடுத்து அவர்களுக்கு பிட்டுக்கொடுத்ததையும், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவர்கள் அவரை அறிந்ததையும், மறுபடியும் மேலறையில் அவர்களோடு அப்பம் பிட்கும்போது எப்படி அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் என்பதையும், இராப்போஜனம் போன்று அல்லாது மாற்றமடைந் திருந்தாலும் உண்மையிலேயே அவர் அவர்களுடைய உயிர்த்தெழுந்த ஆண்டவர்தான் என்பதற்கு திருப்தியளிக்ககூடிய வகையில் நிரூபணங்களைக் கொடுத்ததை நினைவு கூறும்படியாக அது இருந்தது. (லூக்.24 :30,35, 41-43) இந்த அப்பம் பிட்குதல் நாம் வாசிக்கிற வண்ணமாக, மகிழ்ச்சியோடும் சந்தோஷத்தோடும் செய்யப்பட்டது; அவருடைய மரணத்தை நினைவு கூறும்படியாக அல்ல, ஆனால் அவருடைய உயித்தெழுதலை நினைவு கூறும்படியாகச் செய்யப்பட்டது; அது அவருடைய பிட்கப்பட்ட சரீரத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் குறிக்கவில்லை, ஆனால் அவர்களுக்கு அவர் பிட்டுக்கொடுத்த உயிர் மீட்சியூட்டும் சத்தியத்தைக் குறிக்கக் கூடியதாக இருந்தது. அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலினால் அவர்களுக்கு உறுதியாக்கப் பட்டுள்ள எதிர்காலத்திற்குரிய மகிழ்ச்சிகரமான நம்பிக்கையினால் அவர்களுடைய இருதயங்கள் நிரம்பின. (''அப்பம் பிட்குதல்'' என்பதைக் குறித்து சொல்லும்போது, ''பாத்திரம்'' என்பது குறித்து ஒருபோதும் சொல்லப்படவில்லை) வாரத்தின் முதலாவது நாளன்று கூடி வருவது மகிழ்ச்சியான நேரங்களாக இருந்தது. இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டபடியால் புதிய முறைகள் அறிமுகப்படுத்தப் பட்டன. எனவே இது களிகூறும் நாளாகும்.

யூத உபதேங்களுக்கு நெருக்கமாக இருந்தநிலையைவிட்டு சபையானது படிப்படியாக விடுதலை பெற்றதுடன் இன்னும் குறிப்பாக எருசலேம் அழிக்கப்பட்டு, பொதுவாக யூத முறைமைகள் சீர்குலைந்த போது, ஏழாவது நாள் ஓய்வுநாள் என்பதின் ஆதிக்கம் குறைந்தது. மேலும் நம்முடைய ஆண்டவர் மகிமையிலும் கனத்திலும் அழியாமையிலும் உயித்தெழுந்த காலத்திலிருந்து புது சிருஷ்டி ஆவிக்குரிய ஓய்விற்கும், இளைப்பாறுதலுக்கும், வாரத்தின் முதலாவது நாளுக்கும் கிட்டத்தட்ட நெருக்கமாயினர்.

பொதுவாக புற சமயத்தாரைப் பொறுத்த வரையில், தேவன் அவர்களுக்கு விசேஷமான பிரமாணங்களையோ அல்லது கட்டளை களையோ கொடுக்கவில்லை; அவர்களுடைய ஜென்ம சுபாவத்தில்

ஆதியில் கொடுக்கப்பட்டப் பிரமாணத்தில் எஞ்சியிருப்பவை எழுதப்பட்டிருக்கின்றன, அதுவும் அது அதிகமாக மங்கி பாவத்தினாலும் மரணத்தினாலும் உருக்குலைந்து போயிருக்கிறது. இதோடு கூட இன்னும் ஒரே ஒரு கட்டளை மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளது, அதாவது மனந்திரும்பு என்பதாகும். ஏனெனில் ஜீவனுக்கென ஒரு புதிய தருணம் கொடுக்கப் பட்டுள்ளது (இது இப்பொழுது, அல்லது ஆயிரம் வருடத்தின் போது கிடைக்கக் கூடியது); மேலும் ஒவ்வொரு மனப்பூர்வமான செயலும், சிந்தனையும், ஒவ்வொரு விஷயத்தின் முடிவிலும் ஒரு நோக்கத்தை கொண்டதாக இருக்கும். கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்களுக்கு மனந்திரும்பு என்ற செய்திக்கு மேலாக ஒன்றும் கொடுக்கப்படுவதில்லை. மனந்திரும்பியவர்களோடு மாத்திரமே தேவன் மேற்கொண்டு பேசுகிறார், ஏனெனில், அவர்களுக்கு அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும்படியாக இருதயங்களும், கேட்பதற்கு செவிகளும் உள்ளன.

இன்றைக்கு நம்முடைய காலத்தில் இருக்கின்ற லட்சக்கணக்கான பேர்கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தேவனுடைய கிருபையின் உண்மையான குணாதிசயத்தை புரிந்துகொள்ளத் தவறியதோடு, புது சிருஷ்டியின் தற்கால அழைப்பையும், புது சிருஷ்டியின் பிரமாணத்தை புரிந்து கொள்ளுவதிலும் பொதுவாக தவறிவிட்டதுடன், அதன் சுயாதீனங்களையும், அடையாளங்கள் போன்றவற்றையும் தவறாக அர்த்தப்படுத்தி இருக்கிறார்கள். கிறிஸ்தவ சபை முன்னேற்றம் பெற்று, ஞானஸ்நானம், ஆண்டவருடைய இராப்போஜனம் போன்றவைகளைக் குறித்து மாத்திரமல்ல, ஓய்வு நாளைக் குறித்தும் புது சிருஷ்டியுடன் உள்ள திவ்விய பிரமாணம், உடன்படிக்கை முதலியவைகளைக் குறித்தும் தவறான கருத்துக்களை உலகத்தாருக்குப் போதித்துக் கொண்டு இருக்கிறது. தற்காலத்தில் பேர் கிறிஸ்தவ உலகமானது இந்த விஷயங்களைக் குறித்ததான சத்தியத்தை புரிந்து கொள்ளவோ, கிரகித்துக்கொள்ளவோ வேண்டும் என்பது ஆண்டவருடைய நோக்கமாக இருந்ததில்லை என்று தெரிகிறது. அப்போஸ்தலர் கூறியுள்ளபடி, ‘‘எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய (ஜென்ம சுபாமுள்ள மனுஷன்) இருதயத்தில் தோன்றவுமில்லை.’’ மாத்திரமல்ல,‘‘சிறு மந்தையைக்’’ குறித்த அவருடைய சித்தத்தையும் அவர்கள் புரிந்து கொள்ளவும் இல்லை. ‘‘நமக்கோ தேவன் அவைகளை (இந்த விஷயங்களை) தமது ஆவியினாலே

வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும்(நம்மை குறித்ததான அவருடைய நன்மையானதும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதுமான பரிபூரண சித்தத்தை இன்றும், என்றுமாக) ஆராய்ந்திருக்கிறார்.'' பேர் கிறிஸ்தவ உலகினர் உன்னத அழைப்பின் தன்மையை கிரகித்துக்கொள்ளாமல், அதாவது தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குரிய பரிபூரண சுயாதீனப்பிரமாணத்தை கிரகித்துக்கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம், ஆண்டவருடைய ஆவியில் குறைவுள்ளவர்களாய் இருப்பதுதான்; இப்படிப்பட்ட அவர்களுக்கு ஒழுங்குகள், சடங்காச்சாரங்கள், உபவாச நாட்கள், தவம் செய்தல், பலவிதமான கட்டுப்பாடுகள், புனித நாட்கள், ஓய்வு நாட்கள் ஆகியவைகள் கைவிலங்குகளும், சங்கிலிகளுமாகிவிட்டன, என்பது எங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. இது மாத்திரமல்ல, ஆண்டவருடைய உண்மையான ஜனங்களான ''தெரிந்து கொள்ளப் பட்டவர்கள்,'' ''சிறு மந்தையினரில்'' சிலர் காலாகாலத்தில், இந்த அடிமைத்தனத்துக்கு உள்ளாகி, ஒரு பெரிய அளவுக்கு தேவனுடைய புத்திரர்களான உண்மையான சுயாதீனத்தை இழக்கும் அளவிற்கு ஆகிவிட்டார்கள் என்பதும் ஆச்சரியத்தை அளிக்கவில்லை.

வாரத்தின் முதல் நாளை கடைப்பிடிப்பதற்கு எதிராக நாங்கள் ஒரு வாக்குவாதத்தையும் உண்டு பண்ணவில்லை. இதற்கு மாறாக, தெய்வீக செயலால் இந்த நாளானது பொதுவாக நாகரீகமடைந்த உலகத்தாரால் கடைப்பிடிக்கப்படுவது குறித்து நாங்கள் களி கூறுகிறோம். இப்படி பொதுவான நாளாக அனுசரிக்கப்படுவதால் ஆண்டவருக்கென அர்ப்பணித்துக் கொண்ட சிலருக்கு சில விசேஷமான அனுகூலங்களும் சலுகைகளும் கிடைக்கின்றன. இந்த நாள் பொதுவான நாளாக குறைவானவர்களால் அனுசரிக்கப்படும் பட்சத்தில், இந்த அனுகூலங்களும், சிலாக்கியங்களும் கிடைக்கப்பெறாது. எங்குமுள்ள புது சிருஷ்டியானது நிச்சயமாகவே, அதுவும் அதிக அளவில், ஏழு நாட்களில் ஒன்றை விசேஷமாக ஆராதனை, ஆவிக்குரிய ஐக்கியம் முதலானவை களுக்காக ஒதுக்கி வைக்க கிடைத்த தருணத்திற்காக மகிழ்ச்சி அடையலாம். பொதுவான நாளின் உபயோகத்திலிருந்து இந்த நாள் விடப்படுமென்றால் அப்படியான நிலை ஆண்டவருடைய விசுவாசிகள் எல்லாருக்கும் ஒரு பெரிய இழப்பாக இருக்கும். வேறு காரணத்திற்காக இல்லாவிடினும், இந்த காரணத்திற்காக ஆண்டவருடையவர்கள் எல்லாரும், இந்த நாளை பயபக்தியுடனும், அமைதியுடனும், ஆவிக்குரிய

காரியங்களுக்கு சந்தோஷமாக உபயோகப்படுத்துவது அவசியமாக இருக்கிறது. ஆனால் இதற்கு மேலாக பொதுவாக ஜனங்கள் மத்தியில், அவர்களுடைய வார்த்தையால் அல்லது செயலினால் இந்த நாள் அனுசரிக்கப்படுவது குறைவுபடாமல் பார்த்துக்கொள்ளுவதுடன், அந்த நாள் அனுசரிக்கும்படியாக அவர்கள் தங்களுடைய ஆதரவை தெரியப்படுத்த வேண்டும்.

ஆனால் சிலர், யூத உடன்படிக்கையிலான ஏழாவது நாள் எல்லா மனிதருக்கும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என்று எண்ணி தங்களையே ஏமாற்றிக்கொண்டு இருப்பது போன்று, மற்றவர்களும் வாரத்தின் முதல் நாளை ஒரு அடிமைத்தனத்திற்கு கீழாகக் கொண்டு வந்துள்ளார்கள்; எப்படியெனில் யூதர்கள் கிருபையின் கீழாக இல்லாமல், ''வீட்டின் பணிவிடைக்காரராக'' ஏழாவது நாளுக்கு தெய்வீக நியமத்தின்படியாக, அவர்களுடைய நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டு இருப்பதற்கு இசைய, இந்த நாளும் வெளிப்படையான பரிசுத்தத்தால் சேர்க்கப்பட்டுவிட்டது, என்று எண்ணி தங்களை ஏமாற்றிக்கொள்கிறார்கள். ஆனால் மதவாதிகளாக இல்லாதவர்கள், தங்களை அர்ப்பணம் செய்து கொள்ளாதவர்கள், இப்படிப்பட்ட காரியங்களை அனுசரிக்காத அனேகர், தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று கூறிக்கொண்டு, வாரத்தின் முதல் நாளை ஆராதிப்பதற்கும், துதிப்பதற்கும் பயன்படுத்தாமல் எவ்வழியிலாவது குறைவுபட்டு, அதற்கு மாறாக அந்த நாளை உலகப்பிரகாரமான வேலைக்கு உபயோகிக்கும்பட்சத்தில் அவர்கள் மேல் வைத்திருக்கும் மதிப்பைக் குறைத்துக்கொள்கிறார்கள். ஆகவே இந்த காரணங்களுக்காக சுயாதீனராக்கும்படி கிறிஸ்து வைத்திருக்கிற சுயாதீனத்தை பகுத்தறியக்கூடிய அனைவரும், மற்றவர்களுக்கு இடறல் வரும்படி சுயாதீனத்தை தவறாக பயன்படுத்தாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு பதிலாக, தேவனுக்குள் ஒருவருக்கொருவர் கிருபையிலும், அறிவிலும், ஆவியின் எல்லா கனிகளிலும் வளருவதற்கு ஏற்ற தருணமாக பயன்படுத்த வேண்டும். ஆகையால் நாம் புத்திமதியாக சொல்லுவது என்னவெனில், தேவனுக்கு என்று அர்ப்பணம் செய்து கொண்ட தேவனுடைய ஜனங்களும், அவர்களுடைய செல்வாக்கு காணப்படுகிற இடங்களில் உள்ள குடும்பத்தினரும், சிறு குழந்தைகளும் மாத்திரமின்றி வயது வந்தவர்களும்கூட ஞாயிற்றுக்கிழமையை கூடுமானவரை உண்மையுடன் அனுசரிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆராதனைக்குரிய, ஸ்தோத்திரத்திற்குரிய நாளின் முக்கியத்துவத்தைக்

குறித்து அனைவருக்கும் எடுத்துக்கூறுவது மட்டுமின்றி, சபைக்காகவும், உலகத்துக்காகவும், சரீர உழைப்பிலிருந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியதின் அவசியமான ஒரு நாள் இது என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

யூத பிரமாணத்திலிருந்து முற்றிலும் விடுபட்டிருந்த போதிலும், அதன் அம்சங்கள் ஆண்டவரிடமிருந்து வந்தபடியால் இஸ்ரயேலின் முறைமைகளில் உள்ள வெளிப்படையான முக்கியத்துவத்தோடு கூட, நடைமுறையிலான நன்மையும் அதோடு இணைந்திருக்க எல்லா வாய்ப்பும் இருந்தது என்பதை உணர வேண்டும். உதாரணமாக, சில மிருகங்களின் இறைச்சியை புசிப்பது சுத்தமானது, தகுதியானது என்று சொல்லப் பட்டதின் வெளிப்படையான முக்கியத்துவத்தையும், மற்றவைகள் உண்பதற்கு தகுதியற்றவைகள் என்று கூறப்படுவதின் முக்கியத் துவத்தையும் உணர்ந்திருந்த போதிலும், எப்படி இவைகளில் சில அசுத்தமானவை, சுகாதாரமற்றவை என்று நாம் புரிந்து கொள்ளாவிடினும், இது இப்படியாகத்தான் இருக்கிறது என்று புரிந்து கொள்வதற்கு காரணமிருக்கிறது. உதாரணத்திற்கு பன்றி, முயல்கள் முதலியன, நாம் யூதர்களாக இல்லாததினால் இதை புசிப்பதினால் எந்தவித சட்டத்தையும் மீறவில்லை, இருந்தபோதிலும் அதைக்குறித்து நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்கவேண்டும். மேலும் எந்த அளவுக்கு அவைகள் சுகாதாரமற்றவைகள் என்பதையும் கவனிக்க வேண்டும், ஏனெனில் நம்முடைய அறிவுக்கு எட்டும்வகையில், எல்லாவித சுகாதார நியமங்களையும் நாம் கடைபிடிக்க கடமைப்பட்டுள்ளோம்.

இதேபோன்று, இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்ட ஏழு நாட்களில், ஒரு நாள் ஓய்வு. அந்த ஓய்வில், வெளிப்படையான போதனையை மாத்திரமின்றி, தற்போதைய மனுக்குலத்தின் நிலமைக்கு உகந்த தேவையான அம்சம் இருப்பதையும் நாம் காணலாம். பொதுவாகவே, திவ்விய வார்த்தையை முற்றுமாக ஏற்காதவர்கள் கூட, ஒவ்வொரு ஏழு நாட்களிலும் ஒரு ஓய்வு நாள் இருப்பது மனுக்குலத்திற்கு மாத்திரமல்ல சுமை சுமக்கிற மிருகங்களுக்கும் பிரயோஜனமாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். மேலும் தொடர்ந்து வேலை செய்வதிலிருந்து ஓய்வு என்னும் இந்த ஒழுங்கு அவசியமானதாகும் என்றும், இது ஜீவனற்றவைகளுக்கும் பொருந்தும் என்றும் சிலர் கூறுகிறார்கள். உதாரணத்திற்கு ரயில் வண்டிகள் போன்றவைகளையும் கூறலாம். London

Express *என்ற பத்திரிக்கையிலிருந்து கீழ்க்கண்டதை உதாரணமாகக் கொள்ளலாம்:*

"களைப்படைந்த இரும்பு அச்சு அல்லது சோர்வடைந்த இரும்பு இரயில் போல எனக் கேட்கும்போது சிலருக்கு விசித்திரமாகத் தோன்றலாம். ஆனால் இப்படிப்பட்ட பேச்சு, இரயில் மற்றும் இயந்திர கூடங்களில் கேட்கப்படும்போது இது சரியானது என்று எண்ணப்படுகிறது. ஜீவனற்ற உலோகம் களைப்படையுமா? ஒருவேளை அது உங்கள் எண்ணமாக இருக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால் இயந்திர வல்லுனர்கள், வேலை அதை களைப்புறச் செய்கிறது, உங்களுக்கு தேவைப்படுவது போன்று அதற்கும் தேவைப்படுகிறது என்கின்றனர். 'அந்த அச்சு உடைவதற்கு எது காரணமாக இருந்தது?' என்று போக்குவரத்தைக் கட்டுப்படுத்துகிறவர் கேட்கிறார். அதை பரிசோதிப்பவர் 'உலோகம் களைப்படைந்து விட்டது' என்று பதில் கூறுகிறார். இப்படியான பதில் அடிக்கடி கூறப்படுகிறது. அநேகத் தடவைகளில் அது உண்மையாக இருக்கிறது. சில வேளைகளில் ஓர் அச்சு உடைந்து விடுகிறது அல்லது ஒரு சக்கரம் விரிவடைகிறது, சில வேளைகளில் வழக்கமான அழுத்தமான நிலை இல்லாதபோது அப்படி நடக்கிறது; அந்த வேளையில், எவ்வளவு திறமையான சோதனையும், எந்த குறையையும் அல்லது பெலகீனத்தையும் காட்டுவதில்லை. இப்பொழுது, பொறியாளர்கள் உலோகம் களைப்படைந்து விட்டது என்று பதிலளிக்கிறார்கள். இரும்புக் கம்பிகள் மாத்திரமின்றி தசை நார்களும் கூட களைப்படையக் கூடும். மேலும் சரியான ஓய்வு இல்லாமல் உழைக்கும் உலோகம் கூட வேலை செய்யாமல் நின்று விடக்கூடும். இதன் விளைவாக பெரிய ஆபத்தையும் உண்டு பண்ணக்கூடும். அப்படித்தான் பொறியாளர்கள் கூறுகிறார்கள்; ஓய்வு இல்லாமல் உழைக்கும் உலோகத்தின் மிகத்துல்லியமான பொருட்கள் கூட ஒன்றோடொன்று இணையும்போது அது பெலகீனம் அடையும், அது மேலும் உடையும் தருவாய்க்கு வரும்போது ஆபத்து நிகழ்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்."

பிரான்ஸ் தேசத்தில் பொதுவுடமை கொள்கை காலத்திலும், தேவனைப்பற்றிய நம்பிக்கை இல்லாதிருந்த காலத்திலும், வேதாகமத்தின் ஓய்வு நாளான, ஏழு நாட்களில் ஒரு நாள் ஓய்வு நாள் என்பதை ஒழித்து விட்டு, பத்து நாட்களில் ஒரு நாள் என்ற வழக்கம் கொண்டு வர முயற்சிக்கப்பட்டது. ஆனால் அது சாத்திமில்லாதது என்று கண்டு கொள்ளப்பட்டது. பிரான்ஸ் தேசம் எவ்வளவுதான் பத்து நாட்கள் என்ற முறையை நிலைவரப்படுத்த முயற்சித்தாலும், வெகு சீக்கிரத்தில் இயற்கை தனக்கென ஒரு வழியை வைத்திருக்கிறது என்பதை கண்டு கொண்டார்கள், மேலும் எப்படியோ விளக்கிச்சொல்ல முடியாத ஒரு வழியில் ஏழு (7) என்ற எண்ணை இயற்கை ஆமோதிக்கிறது என்பதைக்

கண்டு கொண்டார்கள். உதாரணமாக, ஒரு காய்ச்சல் முற்றும்போது அது பொதுவாக ஏழாவது நாளாக அல்லது பதிநான்காம் நாளாக, இருபத்தோராவது நாளாக அல்லது இருபத்து எட்டாவது நாளாக ஆகியும், முப்பத்து ஐந்தாவது நாளை எட்டும்போதும் அதற்கு சற்று முன்னரோ அல்லது பின்னரோ மரணம் நிகழ்வதுண்டு. அவர்களால் அதை மாற்ற முடியவில்லை, பத்தாவது நாள், இருபதாவது நாள், முப்பதாவது நாள் என்று பத்து நாள் முறைப்படி மாற்றவும் முடியவில்லை.

ஆகவே இதுவரை பார்த்தபடி, கிறிஸ்தவ ஞாயிற்றுக்கிழமையை விட்டுவிடும்படி வற்புறுத்தாமல், அது சாதாரண மனிதனுக்கு பியோஜனமானதாகவும், புது சிருஷ்டிக்கு ஆவிக்குரிய பிரயோஜன முள்ளதாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். யூத பிரமாணத்தின்படி, நேரடியாக வராமல், மாற்று வழியாக வந்த இந்த பெரிய ஆசீர்வாதத்தை ஒதுக்கி வைக்கும் அல்லது தகர்க்கக்கூடிய வகையில் ஒன்றையும் செய்து விடக்கூடாது என்று நாம் வற்புறுத்து கிறோம். உண்மையிலேயே, எல்லாரும் தாங்களாகவே முன்வந்து இந்த நாளை ஆண்டவருக்கு பக்தி காட்ட வேண்டிய நாள் என்று உணர்ந்து கொள்வார்கள் என்றால் நாம் மகிழ்ச்சியடைவோம். ஆனால் பெரும்பான்மையோர் அதைப் புரிந்து கொள்ள முடியாததால் இந்த விஷயத்தில் ஓர் ஆபத்தற்ற ஏமாற்றத்துடன் ஒய்வு எடுத்துக்கொள்ளும் படியும் அனுமதிக்க முடியாது, ஏனெனில் அவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொண்டிருந்தாலும் அது அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும்.

புது சிருஷ்டிக்கு இந்த நாள் சரியான முறையில் உபயோகப் படுத்துவதுப்பற்றி விசேஷமான யோசனை தேவையில்லை, ஏனெனில் அவர்களுடைய வாழ்க்கை முழுமையாக பிரதிஷ்டை பண்ணப்பட்டு ஆண்டவருக்கெனவும் அவரது ஊழியத்திற்கெனவும் அர்ப்பணிக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின் பிரகாரம் நடந்து, இப்படிப்பட்ட விசேஷமான, அனுகூலமான சந்தர்ப்பத்தை அவருக்கு சொந்தமான தங்களுடைய சரீரத்திலும், ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்த உபயோகப்படுத்தும்படி நாடுவார்கள். துதித்தல், நன்றி செலுத்துதல், தியானித்தல், வார்த்தையை பகிர்ந்து கொள்ளுதல் முதலானவைகள், தெய்வீக வார்த்தையின்படியும், திட்டத்தின்படியும் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். ஆண்டவருடைய நாள் அல்லது ஞாயிற்றுக்கிழமை மத ஆராதனைக்கு மட்டுமே உபயோகப்படுத்தப்படல்

வேண்டும் என்றும் நாம் வற்புறுத்துவதில்லை; தேவன் அப்படி கட்டளையிடவும் இல்லை, மேலும் எவருக்கும் அந்த உரிமை கிடையாது. இருந்தபோதிலும், நம்முடைய அனுதாபங்கள், அன்பு எங்கே காணப்படுகிறதோ, அந்த இடத்தில் நாம் இருக்க சந்தோஷப்படுவோம். ஆகவே புது சிருஷ்டியானது, ஆண்டவரோடும், சகோதரரோடும், ஐக்கியத்திலும், ஒற்றுமையிலும் இருப்பதே, அதனுடைய முதன்மையான சந்தோஷமும் இன்பமுமானது என்று நாம் நிச்சயமாகக் கூறலாம். இதன் விளைவாக அவர்கள் ஒன்றாக சேர்ந்து இருப்பதை(சபை கூடி வருதலை) மறப்பது கடினம். அப்படியாகத்தான் வேதாகமம் புத்திமதியாகக் கூறுகிறது, ஆனால் கட்டளையாகக் கூறவில்லை.(எபி.10:25)

கட்டளையிடப்படாமல் நாமாக தன்னிச்சையாக ஆண்டவருக்கென நாம் செய்யும் காரியம், நாம் அவர்மேல் கொண்டுள்ள அன்பையும் விசுவாசத்தையும் அடையாளமாகக் காட்டுகிறது. மேலும் நிச்சயமாக அவர் அதற்கு தகுந்தாற்போல் அதை மெச்சிக்கொள்வார். புது சிருஷ்டிகளில் அனேகருக்கு குழந்தைகளும், பராமரிக்க வேண்டியவர் களும் உண்டு. அவர்களுக்கு இந்த நாளின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அதன் பிரயோஜனங்கள் பற்றியும் அவர்கள் அனுபவிக்க வேண்டிய சரியான சுயாதீனம் பற்றியும் சொல்ல வேண்டும். பரிசுத்தமான ஓய்வு நாள் என்ற பெயரில் கிறிஸ்தவ வீட்டிற்குள் பிரவேசித்துள்ள கொடுங்கோல் மாதிரியான அடிமைத்தனத்தை தேவனுடைய வசனம் ஒன்றும் ஆதரிப்பதில்லை. இப்படிப்பட்ட பிரமாணத்தின்படி சிரித்தாலும் அது ஒரு பாவமாகும், தன்னுடைய சொந்த குழந்தையை முத்தமிடுவதும் பாவமாகும், அமைதியாக நடந்து செல்வதும், மரங்களுக்குக் கீழ் உட்கார்ந்திருப்பதும், இயற்கையை அனுபவிப்பதும், இயற்கையிலிருந்து இயற்கையின் தேவனை நோக்கிப் பார்ப்பதும் குற்றமான ஒரு காரியமாகும். இந்த மாதிரியான தவறான நோக்கத்திலிருந்து விலகுவது நல்லது. ஆனால், அதே வேளையில் அனேகர் செய்கிற மாதிரி, கோமாளித்தனமான நடத்தையை அனுமதிப்பது, விளையாட்டுகள் விளையாடுவது, உலகப்பிரகாரமான சங்கீதத்தைக் கேட்பது, அல்லது வேறொரு நாளில் செய்யப்படக்கூடிய வேலையை அன்று செய்வது போன்று தேவையற்ற எல்லைக்குச் சென்றுவிடக் கூடாது. புது சிருஷ்டியின் பிள்ளைகள், எல்லா விதத்திலும், தேவன் அவர்களுடைய பெற்றோர்களுக்கு பரிசுத்த ஆவியின் மூலமும் சத்திய வசனத்தின் மூலமும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறபடி ஒரு தெளிந்த புத்தியுள்ளவர்களாய்

காணப்படல் வேண்டும். வாரத்தின் முதல் நாளை ஒரு ஓய்வு நாளாக சரியான விதத்தில், பரிசுத்தமாக ஆசரிப்பதும், உள்ளத்திலும் ஒழுக்க நெறிகளிலும் முன்னேற்றம் அடைவதும், ஆண்டவருடைய குடும்பத்திலும் தன்னுடைய குடும்பத்திலும் பொதுவாக உறவாடுவதுமாக இருக்கும்போது புது சிருஷ்டி நிச்சயமாகவே சுற்றியுள்ளவர்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வரமுடியும்.

ஞாயிற்றுக்கிழமையை அனுசரிப்பதில் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு முக்கிமான விஷயம் என்னவெனில், அநேக பிரதேசங்களில் ஞாயிற்றுக்கிழமையைக் குறித்து சட்டங்கள், ஒழுங்கு முறைகள் உண்டு. ஆண்டவருடைய ஜனங்கள் தங்களுடைய மனசாட்சியை குற்றப்படுத்தாத வகையில், சட்டத்தை கடைப்பிடிப்பதில் மற்றவர்களைக் காட்டிலும் குறைவாக அல்ல அதிகமாக இருக்க வேண்டும். ஆகவே சட்டம், வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று ஓய்வு நாள் இருக்க வேண்டும் என்று கட்டளையிடுமானால், அந்த ஒழுங்கு முறை ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு ஒரு ஆசீர்வாதம் என்று எண்ண வேண்டும். ஆனால் அது திவ்விய ஒழுங்கினால் அல்ல, உலகத்தால் கொண்டுவரப்படுவது, ஆகவே உலகம் எதிர்பார்க்கிற அளவுக்கு, அவர்கள் நியமிக்கிற அளவுக்கு மேலாக கடைப்பிடிக்க வேண்டும் என்று நினைக்க அவசியமில்லை.

இஸ்ரயேலின் நிழலான ஓய்வு நாள்

சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட யூத பிரமாணத்தின்படி ஓய்வு நாளை நிறைவேற்ற வேண்டும் என்று இஸ்ராயேல் தேசத்திற்குத்தான் கொடுக்கப்பட்டது மற்றவர்களுக்கு அல்ல, அதனிமித்தம் அதைக் கடைப்பிடிக்க வேண்டியது யூதர்களேயன்றி மற்றவர்களல்ல. அது முதன் முறையாக கடைப்பிடிக்கப்பட்டதுபற்றி வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டுள்ள யூத பிரமாணம் பஸ்கா நியமிக்கப்பட்டபின்னரே. இஸ்ரயேலர் எகிப்தை விட்டு வெளியேறி வனாந்திரத்திற்கு வந்த பின்னர், பத்து கற்பனைகள் கொடுக்கப்பட்ட சீனாய் மலைக்கு வருவதற்கு முன்னர் மன்னாவை சேகரிப்பது சம்பந்தமாக ஒரு ஓய்வு நாளை அனுசரிப்பதில் அவர்களுடைய முதல் பாடத்தைக் கற்றுக் கொண்டார்கள். ஓய்வு நாளை ஆசரிப்பதைக் குறித்து ஆதாமுக்கோ அல்லது ஈசாக்குக்கோ அல்லது யாக்கோபுக்கோ ஒன்றுமே கூறப்படவில்லை; நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ அது குறிப்பிடப்படவில்லை. இதற்கு முன்பு ‘‘ஓய்வு

நாள்'' என்ற வார்த்தை சொல்லப்பட்டிருப்பதெல்லாம், சிருஷ்டிப்பைப் பற்றிய இடத்தில்தான். இங்கு தேவன் ஏழாவது நாளில் ஓய்ந்திருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இது நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி 24 மணி நேரங்கொண்ட நாளல்ல, ஆனால் அது ஒரு ஏழாயிரம் வருடங்கள் கொண்ட நாளாகும்.

இஸ்ராயேலுக்கு ஏழாவது நாளை ஒரு ஓய்வு நாள் கட்டளையாகக் கொடுத்தபோது, தேவன் தன்னுடைய ஓய்வோடு கூட அவர்களும் 24 மணி நேர காலத்தை விஸ்தாரமான முறையில் ஆசரிக்க தெரிந்து கொண்டார்கள். இந்த வாராந்திர ஓய்விலிருந்து இஸ்ரேல் எந்த விதமான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டாலும், புது சிருஷ்டிக்கு அதில் இதைக்காட்டிலும் கூடுதலான பாடம் இருந்தது என்று அறிந்தது கொள்ள உதவுகிறது. ஏனெனில், அந்த ஜனங்களில், அவர்களுடைய நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் நிழலான பாடங்கள் இருப்பதை காண்கிறோம்.

நியாயப்பிரமாணத்தின் கீழாக, ஏழாவது நாள், ஏழாவது மாதம், ஏழாவது வருடம் ஆகியவை முக்கியமானதாக இருந்தன. ஏழாவது நாள் சரீர உழைப்பிலிருந்து விடுபடுவது, சரீரத்திற்கு ஒரு ஓய்வு காலமாக இருந்தது; ஏழாவது மாதத்தில் பாவத்திலிருந்து நிவாரணம் என்று அவர்கள் பாவத்திலிருந்து ஓய்வு பெறும்படியாக ஏற்படுத்தப்பட்டது; ஏழாவது வருடத்தில் அடிமைத்தனத்திலிருந்து, கட்டாய வேலையிலிருந்து விடுதலை வந்தது. மேலும் நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி ஏழாவது வருடத்தை அதே எண்ணை வைத்து பெருக்கும்போது (7×7= 49) அது யூபிலி வருடத்திற்கு வழி நடத்தியது. இந்த யூபிலி வருடத்தில் எல்லா அடமானங்களும், மற்றவர்களின் நிலத்தின்மேல் உள்ள அதிகாரங்களும், மற்றவர்களுடைய நிலங்களுக்கும், நபர்களுக்கும் எதிரான தீர்ப்புகளும் ரத்து செய்யப்பட்டன. மேலும் ஒவ்வொரு குடும்பமும் முன்பு செய்த தவறுகள், பொல்லப்புகள் போன்றவைகளில் உண்டான பாரத்திலிருநது விடுவிக்கப்பட்டு தங்கள் இடத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட்டது. இஸ்ரயேலின் யூபிலி வருடம் ஆயிர வருட இராஜ்யத்திற்கும், ''தேவன் தனது பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலமாக பேசியிருக்கிற இளைப்பாறுதலின் காலங்களுக்கும்'' நிழலானது என்பதையும், நிழலானதைக் காட்டிலும் நிஜமானது மிகவும் விஸ்தாரமாகவும், பொதுவாக மனுக்குலத்திற்கு உரியதாக இருக்கிறது என்பதையும் நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம்.

நாம் இப்பொழுது குறிப்பாக நிழலான ஏழாவது நாளை கவனிப்போம். ஏழாவது வருடத்தைப்போன்று (7×7= 49) அது ஒரு ஜம்பதாவது அல்லது யூபிலி நாளுக்கு வழி நடத்துகிறது. இது ஏழாவது நாளைப்பற்றிய அதே சிந்தனையை – ஓய்வைக்குறித்த சிந்தனையை –தருகிறது, ஆனால் அதை வற்புறுத்துகிறது.

புது சிருஷ்டியான ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு எப்படிப்பட்டதான ஆசீர்வாதத்திற்கு இந்த மாம்சீக இஸ்ரயேலின் ஏழாவது நாள் அல்லது ஓய்வு நாள் அல்லது இளைப்பாறுதல் நிழலாக இருந்தது? அப்போஸ்தலர் இந்த கேள்விக்கு பின்வருமாறு பதிலளிக்கிறார்: (எபி.4:1–11) ''ஆனபடியினாலே அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற் கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கக் கடவோம்..... விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்...ஆகையால், சிலர் அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற காரியமாயிருக்கிறபடியினாலும், சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள் கீழ்ப்படியாமையினாலே அதில் பிரவேசியாமல் போனபடியினாலும்.....ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருவதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன். தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால் அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு நாம் அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.'' இங்கே அப்போஸ்தலர் நமக்கு இரண்டு பாடங்களை கற்றுத் தருகிறார்.

(1)இளைப்பாறுதலில் பிரவேசிப்பது நமக்கு கிடைத்த சிலாக்கியமாக இருக்கிறது. சொல்லப்போனால், ஆண்டவரை உண்மையிலேயே ஏற்றுக்கொண்டு, அவரில் சரியான முறையில் நம்பிக்கை வைத்து இளைப்பாறிக்கொண்டிருக்கிறவர்கள், இவ்வண்ண மாக நிழலாட்டமான ஓய்வை அல்லது இளைப்பாறுதலை (தற்காலத்தில் இது விசுவாசத்தின் இளைப்பாறுதலாய் இருக்கிறது) அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(2)தற்போதைய இளைப்பாறுதலை காத்துக்கொள்வதற்கும் நித்திய ஓய்வுக்குள் பிரவேசிப்பதை உறுதி செய்வதற்கும், அதாவது பலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கும் ''தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருவதாயிருக்கிறது'' என்பதாலும் ஆண்டவருடைய கிருபையில் தொடர்ந்து இருப்பதற்கு, நாம் அவரில் நிலைத்து இருப்பது அவசியமாக இருக்கிறது. அப்படியெனில், நாம் அவருக்கு தொடர்ந்து கீழ்ப்படிய வேண்டும், அவரில் விசுவாசம் வைக்க வேண்டும் என்பதை அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார்.

புது சிருஷ்டியின் அங்கங்களுக்கு, அவர்கள் எப்பொழுது, எப்படி விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள் என்றும், புத்திக்கு எட்டாத தேவ சமாதானம் எப்பொழுது, எப்படி அவர்களுடைய இருதயத்தை ஆளுகை செய்யத் தொடங்கிற்று என்றும், அவர் மேல் வைத்திருக்கிற முழு நம்பிக்கை எப்பொழுது, எப்படி பயத்தையும் அதிருப்தியையும் விரட்டத்தொடங்கியது என்பதையும் சுட்டிக்காட்ட அவசியமில்லை. ஆண்டவராகிய இயேசுவை, பலி செலுத்தப்பட்ட பிரதான ஆசாரியராக முழுமையாக ஏற்றுக்கொண்டபோது அது ஆரம்பமாயிற்று. அவர் தன்னை பலியாக செலுத்தினபடியால், மேசியாவான மீட்பரால் இலவசமாகக் கொடுக்கப்பட்ட நன்மையால் நம்முடைய பாவங்கள் மூடப்பட்டன. அவரை புது சிருஷ்டியின் தலையாக, ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திற்கு சுதந்திரவாளியாக, அந்த ஆசீர்வாதத்தின் இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரராய் இருக்கும்படி நாம் தேவனால் அழைக்கப்பட்டதை உணர்ந்துகொள்ளும்போது அது அதிகரித்தது. நாம் நம்முடைய ''எல்லாவற்றையும்'' அவருக்கென்று ஒப்புக்கொடுத்த போது, இராஜ்யத்திற்கு செல்லும் குறுகலான பாதை வழியாக செல்ல அவருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வழிநடத்துதலை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டபோது, பரிபூரண இளைப்பாறுதல் அல்லது ஓய்வு நாளின் சந்தோஷம் வந்தது. அங்கே நம்மை நீதிமான்களாக்கும் எல்லா முயற்சியிலிருந்தும், நம்முடைய சொந்த கிரியையிலிருந்தும் இளைப்பாறினோம்; நாம் பூரணமற்றவர்கள் என்றும், திவ்விய கிருபைக்கு பாத்திரர் அல்ல என்றும், நம்மை நாமே தகுதியுள்ளவர்களாக்க முடியாதவர்கள் என்றும் அறிக்கையிட்டோம்; அங்கே நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுக்குள் இருக்கிற பாவ மீட்பில் நமக்கு காண்பிக்கப்பட்ட திவ்விய இரக்கத்தையும், ''ஏற்ற சமயத்தில் கிடைக்கும் கிருபையையும்'' நன்றியுடன் ஏற்றுக்கொண்டோம்;

மேலும் ''மரணபரியந்தம்'' அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறவர்களாகவும் இயேசுவின் சீஷர்களாகவும் இருக்க உறுதி எடுத்துக் கொண்டோம்.

தேவன் தன்னுடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல நாமும் இளைப்பாறுதலில் பிரவேசித்தோம் என்று அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறார். தேவன் மனிதனை தம்முடைய சாயலில் உண்டாக்கினபோது தமது சிருஷ்டிப்பின் வேலையிலிருந்து அவர் ஓய்திருந்தார் என்று நாம் எற்கனவே பார்த்திருக்கிறோம். அதன் பிறகு பாவமும் மரணமும் அவருடைய அழகான சிருஷ்டிப்பைக் கெடுக்கும்படியாக அனுமதித்திருக்கிறார். இருந்தபோதிலும், அந்த கிரியை தொடர்ந்து முன்னேறாதபடி தம்முடைய வல்லமையான புயத்தை இன்னமும் உயர்த்தவில்லை; மாத்திரமல்ல, பெரிய வஞ்சகனான சாத்தானை கட்டும்படியாகவோ அல்லது தடுத்து நிறுத்தும்படியாகவோ தம்முடைய வல்லமையான புயத்தை உயர்த்தவில்லை. தேவன், முழு காரியத்தையும் மேசியா நிறைவேற்றும்படியாக, அவரிடம் விட்டுவிட்டு, ஓய்ந்து இருக்கிறார், காத்து இருக்கிறார். கிறிஸ்து தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர், இந்த முழு காரியத்தையும் செய்து முடிக்க அதிகாரம் பெற்றவர். (அவருடைய சரீரத்தின் அங்கங்களாயிருக்கிற புது சிருஷ்டிகளுக்காக) அது நமக்காக மாத்திரமல்ல, அவர் மூலமாய் திவ்விய இரக்கத்தை ஏற்றுக்கொள்பவர்கள் யாராயிருந்தாலும், அவர்களுக்காக, மனுக்குலத்தின் உலகிற்காக, ஆசீர்வதிக்கின்ற, இளைப்பாறுதலுக்கான ஒரு வேலை, என்று நாம் பகுத்தறியும்போது தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் விசுவாசத்தினால் பிரவேசிக்கிறோம்.

புது சிருஷ்டியின் தனிப்பட்ட அங்கத்தினர்களாக எங்கே நம்முடைய இளைப்பாறுதல் தொடங்கியது என்று தெளிவாகப் பார்க்கிறோம். ஆனால் புது சிருஷ்டி என்று எல்லோருக்குமாக சேர்த்து இந்த இளைப்பாறுதலின் ஆரம்பத்தைக் காண நாம் பின்னோக்கிப் பார்ப்பது பிரயோஜனமாக இருக்கும். அப்போஸ்தலர்கள், ஆண்டவர் மாம்சத்தில் தங்களோடு இருந்தபோது ஓர் அளவுக்கு இளைப்பாறுதலையும் நம்பிக்கையையும் அனுபவித்தார்கள் என்று நாம் பார்க்கிறோம், ஆனால் அது முழு இளைப்பாறுதல் அல்ல என்றும் பார்க்கிறோம். மணவாளன் அவர்கள் மத்தியில் இருந்தபடியால் அவர்கள் களிகூர்ந்தார்கள், ஆனாலும் அவருடைய அன்பு மற்றும் ஊழியத்தின் நீளத்தையும் அகலத்தையும் விளங்கிக்கொள்ளவில்லை. ஆண்டவர்

மரித்தபோது, அவர்களுடைய இளைப்பாறுதலும் மகிழ்ச்சியும், சமாதானமும் சிதறி விட்டது. அவர்களே அதற்கான காரணத்தை இப்படியாகச் சொல்லுகிறார்கள்: ''அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர்(விடுதலை செய்பவர்) என்று நாங்கள் நம்பியிருந்தோம்.'' ஆனால் அவர்கள் ஏமாற்றம் அடைந்து இருந்தார்கள். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபோது, அவர்களுக்கு தரிசனம் கொடுத்து அவருடைய உயிர்த்தெழுதலை நிரூபித்துக்காட்டிய போது, அவர்களுடைய சந்தேகங்களும், பயங்களும் விலகி நம்பிக்கைக்கு வழி வகுத்தது; ஆனாலும் அவர்களுடைய மகிழ்ச்சியும், சமாதானமும் முழுவதுமாக திரும்பி வரவில்லை. அவர்கள் கலக்கத்தில் இருந்தார்கள். ஆனாலும் அவர் அவர்களை உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரை எருசலேமில் காத்திருங்கள் என்று சொன்னபோது, அதற்கு கீழ்ப்படிந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்ப்போடு காத்திருந்தனர், ஆனால் எவ்வளவு காலத்திற்கு? அவர்கள் ஏழு × ஏழு நாட்கள் = 49 நாட்கள், அதற்கு மறுநாள் அதாவது 50வது நாள், யூபிலி ஓய்வு நாள்–பெந்தெகொஸ்தே நாள் வரை காத்திருந்தனர், அன்று தான் தேவன் அவர்களை தன்னுடைய கிருபையுள்ள வாக்குத்தத்தத்தினால் நிரப்பினார். மேலும் புது சிருஷ்டியின் உன்னதமான ஓய்வு நாளான அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படியான சிலாக்கியத்தை இயேசுவை ஏற்றுக்கொண்டவர் களுக்கு அருளினார் என்று நாம் பதில் கூறுகிறோம். ''இயேசு கிறிஸ்துவின் மூலம் சமாதானம் '' என்ற பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தை பெறுவதின் மூலம் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். அது, இயேசு பாவிகளுக்காக மரித்திருந்தும், பரத்திற்கு ஏறி அவர்களுடைய பார்வைக்கு காணப்படா விட்டாலும், அவர் யேகோவாவினால் ஏற்றுக்கொள்ளப் பட்டார்; அவருடைய பலி, பாவத்திற்கு பரிகாரமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது, எதற்கெனில் அவர் செய்து முடித்திருந்த கிரியையின் புண்ணியத்தில் இளைப்பாறும்படியாக, அவருக்குள் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது என்பதை விசுவாசிக்கும்படியாக, அவர்களுடைய சொந்த பாவங்கள் மன்னிக்கப்பட்டன. அவர்கள் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர் என்பதை உறுதிப்படுத்தும்படியாக அவர் கிரியையை செய்து முடித்தார்; இயேசுவுக்குள் மையமாக உள்ள மகா பெரிதும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களும் நிறைவேறும் என்றும் அவர்களுக்கு இது உறுதிப்படுத்தியது; அவர்கள் செய்ய வேண்டியவைகளில் உண்மையாக

இருந்து , கிறிஸ்துவுக்குள், தெய்வீக சித்தத்துக்கு கீழ்ப்படிந்து நிலைத்து இருப்பார்களென்றால், ''அவர்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வார்கள் என்றால்,'' அவர்களுடைய இருதயங்களை கிருபையானது நல்வழிப்படுத்தி இருக்கும் என்றால், அவரோடு மகிமையான பங்கை பெறுவார்கள் என்றும் உறுதிப்படுத்தியது.

ஆகவே பரிசுத்த ஆவியைப் பெற்ற அனைத்து புது சிருஷ்டிகளும் நிழலான இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து இருக்கிறார்கள். மேலும் ஏழாவது நாளன்று சரீர பிரகாரமான இளைப்பாறுதலை ஆசரிக்காமல் தேவகுமாரனில், இருதயத்திலும், மனதிலும், விசுவாசத்திலும் நித்திய இளைப்பாறுதலை ஆசரிக்கிறார்கள். இருந்தாலும் விசுவாசத்தில் இளைப்பாறுதல் முடிவானதல்ல, முழுமையான நிஜமான இளைப்பாறுதலும் அல்ல. தேவனுடைய ஜனங்களுக்காக வைக்கப்பட்டிருக்கிற மகிமையான இளைப்பாறுதல், தங்களுடைய ஓட்டத்தை சந்தோஷத்துடன் ஓடி முடிக்கிறவர்களுக்கு இறுதியில் வரக்கூடியதாக இருக்கிறது. இதற்கிடையில் விசுவாசத்தின் இளைப்பாறுதல் தொடர வேண்டும், ஏனெனில் அது நம்முடைய ஊக்கமான, அல்லது நம்பிக்கையுள்ள வரப்போகிற இளைப்பாறுதலுக்கு முன்னானதாகும். அதைக் காத்துக்கொள்ளுவதற்கு தேவையானது நம்மால் இயன்றவரை சிந்தையிலும், வார்த்தையிலும், செய்கையிலும் கீழ்ப்படிதலுடன் இருப்பது மாத்திரமல்ல, ஆண்டவருடைய கிருபையில் விசுவாசம் வைத்திருப்பதாகும். இதன்படியாக அவருடைய அடிச்சுவட்டில் நடக்கும்படியாக அவருடைய வல்லமையிலும் சத்துவத்திலும் பெலமுள்ளவர்களாக இருக்க முடியும்; நம்முடைய இளைப்பாறுதலும், விசுவாசமும், ''நம்மை வெற்றிச்சிறக்க பண்ண'' அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார், போதுமானவராய் இருக்கிறார் என்பதிலும், மேலும் நிழலான மாபெரும் யூபிலியில் ஒரு பங்கை தருவார் என்பதிலும் இருக்க வேண்டும்.

அத்தியாயம் 9

புது சிருஷ்டியின் நியாயத்தீர்ப்பு

யேகோவா தேவன் பூலோகத்தின் பெரிய நியாயாதிபதி – ஆசீர்வாதங்கள், நன்மைகள் முதலானவைகள் எல்லாம் யேகோவாவிடமிருந்து அவர் குமாரன் மூலமாக வருகிறது– புது சிருஷ்டி கிறிஸ்துவோடு கூட உடன் சுதந்திரரும் அவரோடு கூட இருப்பவர்களுமானவர்கள் –''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது'' – மனுக்குலத்திற்கு ஆக்கினைத் தீர்ப்பு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது – ஆயிரவருட யுகத்தில் கிருபையுடனும் உதவியுடனும் கூடிய நியாயத்தீர்ப்பு – முடிவான தீர்ப்பு இரக்கமற்ற, நீதியுள்ள தீர்ப்பாக இருக்கும் – சுவிசேஷ யுகத்தின் போது, புது சிருஷ்டியின் நியாயத்தீர்ப்பு–பூரண அன்பின் பிரமாணத்தால் புது சிருஷ்டி நியாயந்தீர்க்கப்படுதல்– சரீரத்தின் மேலாக மகிமையான தலையின் மேற்பார்வை–''நீ எதைக்கொண்டு நியாயந்தீர்க்கிறாயோ அதே தீர்ப்பினால் நீயும் தீர்க்கப்படுவாய்''– நம்மை நாமே சரியானபடி நியாயந்தீர்க்க வேண்டும்– ''என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே''– சபை சில காரியங்களை தீர்க்க வேண்டும் –''உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றம் செய்தால்''– ஏழெழுபது தடவை மன்னிக்க வேண்டும் – சபைக்கு எதிரான குற்றங்கள்–நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும்.

மனுக்குலத்தின் முற்பிதாவான ஆதாம் பரீட்சையில் தவறியபோது முழு மனுக்குலமும் நித்திய வாழ்வுக்கு தகுதியற்றது என்று மகா உன்னதமான நியாயாதிபதியால் நியாயம் தீர்க்கப்பட்டது என்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். ''இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் (தண்டனை அல்லது நியாயத்தீர்ப்பு) உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும்

பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.''(ரோம. 5:12) ஆதாமின் மீறுதலும் மரணத்திற்கேதுவான தண்டனையும் அவனுடைய பிள்ளைகள் எல்லார் மேலும் வந்தது. அவனுடைய வீழ்ச்சி, அவனுடைய கறை, அவனுடைய பாவம் இயற்கையாகவே வேகமாக அதிகரித்து, அவனுடைய சந்ததியினர் மேலும் வந்தது. இந்த தண்டனை எல்லா வழியிலும் நியாயமானதொன்று என்றும், பூலோகத்தின் உன்னதமான நியாயாதிபதி மனிதன் நித்திய வாழ்வுக்கு தகுதியற்றவன் என்று நியாயமான முறையில் தீர்மானித்தது மாற்ற முடியாதது என்றும், தான் அளித்த தீர்ப்பை திரும்பப் பெற முடியாதென்றும், தவறானதை சரியென்று அறிக்கையிட முடியா தென்றும், நித்திய வாழ்வுக்கு தகுதியற்றவர்களை தகுதியுள்ளவர்கள் என்று அறிக்கையிட முடியாதென்றும் நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். ஆனால், அவர் நம்மேல் மனதுருக்கம் உள்ளவர் என்றும், இந்த உலகம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னரே அவர் உண்டாக்கின கிருபையின் திட்டத்தின்படி, அவர் யோசனை பண்ணி, இன்னொரு பரீட்சையைக் கொடுக்கும்படி, அல்லது அதன் அங்கத்தினர்கள் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பும், முழு மனுக்குலமும் மீட்பு பெறும்படியாக வழியை உண்டு பண்ணினார்; இந்த திட்டத்தின்படியாக, மீட்பு பணியின் மூலமாக ஒப்புரவாகுதலை உண்டு பண்ணவும், அவருடைய நேச குமாரன் நம் மனுக்குலத்தை உயர்த்தவும், ஆசீர்வதிக்கவும் மத்தியஸ்தராக இருக்கும்படியாக அவரை அனுப்பினார். நியாயம் தீர்க்கும்படியாக, கீழ்ப்படிபவர்களை உயர்த்தும்படியாக உள்ள காலம் ஆயிர வருட யுகம் என்றும், இது பூலோகத்தின் நியாயத்தீர்ப்பின் நாள் அல்லது பரீட்சையின் நாளாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது என்றும், மாத்திரமல்ல, எல்லோரும் கர்த்தரை அறிகிற அறிவிற்குள் வருவதற்காகவும், அவரோடு ஒப்புரவாகுதற்கு ஒரு தருணத்தை கொடுப்பதற்காகவும், ஆனாலும் இதற்கும் மேலாக நித்திய வாழ்க்கைக்கு அவர்கள் தகுதியுள்ளவர்கள் என்பதை அவர்களுடைய விசுவாசத்தின் மூலமாகவும், கீழ்ப்படிதலின் மூலமாகவும் நிரூபிக்கும்படியாகவும் இந்தகாலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். இதைக்குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ''மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயத்தீர்ப்பார்.''(அப் 17:31)

சந்தேகத்திற்கு இடமில்லாமல் யேகோவா தேவனே சர்வ நியாயாதிபதியாக இருக்கிறார், அவருடைய பிரமாணம் உயர்வானது, இதன்படியாகவே நித்திய வாழ்வைக் குறித்து எல்லா தீர்மானங்களும் எடுக்கப்படும். இதன்படி அப்போஸ்தலர் ''யாவருக்கும் நியாதிபதியாகிய தேவன்'' என்று குறிப்பிட்டு, இது பிதாவை குறிக்கிறது என்றும், அதே வாக்கியத்தில் இயேசுவை மத்தியஸ்தர் என்றும் சுட்டிக் காட்டுகிறார். (எபி 12:23,24) மறுபடியும் அவர் ''கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயம் தீர்ப்பார்'' என்றும் ''பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்'' என்றும் கூறுகிறார்.(ரோம. 12:19; எபி. 10:30) பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட இந்த வாக்கியங்களில் (சங். 50:4 ; உபா. 32: 35,36) கர்த்தர் என்பது யேகோவா தேவனை குறிக்கிறது. மறுபடியும் அப்போஸ்தலர், ''தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய (''உலகம்'') அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்பு கொடுப்பார்'' என்று கூறுகிறார்.(ரோம.2:16, 3:6) யேகோவாதான் ஆதியில் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தவரும், நியாயாதிபதியுமாவார், மேலும் தன்னுடைய சிருஷ்டிகளைப் பொறுத்த மட்டும் அவர்களோடு இதே நிலைமையையும் உறவையும் நிலைத்திருக்கப் பண்ணுவார். அவருடைய மகிமையை வேறொரு வனுக்கும் கொடுக்க மாட்டார். (ஏசா 42:8) இதே போன்று அவருடைய ஜனங்களுக்கு அவரே மேய்ப்பராயிருக்கிறார் என்பதையும் நமக்கு வேதாகமத்தில் சுட்டிக் காட்டுகிறார்.''கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; நான் தாழ்ச்சி அடையேன்.'' (சங் 23:1) மறுபடியும் அவர் தம்மை தம்முடைய ஜனங்களின் மீட்பர் என்று கூறுகிறார்.''நான் உன் இரட்சகரும் மீட்பருமாய் இருக்கிறதை மாம்சமான யாவரும் அறிந்து கொள்வார்கள்.'' (ஏசா 49:26) இரட்சிப்பின் முழு திட்டத்திலும் அதன் எல்லா அம்சங்களிலும் யேகோவா தானே மையமாக இருக்கிறார்; இதைத் தவிர வேறு எந்தக் கருத்தும் தவறானது.

இருந்தபோதிலும், பிதாவுக்கு குமாரன் மூலமாக எல்லாவற்றையும் சிருஷ்டிப்பது பிரியமாக இருந்தது போல, (யோவா. 1:1) அவருடைய கனத்திற்கு உரிய உபகரணமாக நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை உயர்த்துவதும் அவருக்கு பிரியமாயிற்று. இதிலிருந்து நாம், எல்லா ஆசீர்வாதமும், எல்லா அதிகாரமும், எல்லா நன்மைகளும், பிதாவினிடத்திலிருந்து குமாரன் மூலமாக புறப்பட்டு வருகிறது என்றும், புது சிருஷ்டியானது குமாரனோடு இணைந்து, அவரோடு தேவனுடைய

கிருபையின் ஊழியக்காரர்களாகவும் உடன் சுதந்திராகவும் ஆக்கப்பட்டு உள்ளார்கள் என்றும் பார்க்கின்றோம்.

மொத்தத்தில் பார்க்கும் போது பரலோக பிதா, ''தன்னுடைய கிரியையிலிருந்து ஓய்ந்து இருக்கிறார்,'' மேலும் ''பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்து இருக்கிறார்'' (யோவா. 5:22) என்று நம்முடைய மீட்பர் சொல்லும்படியாக தன்னுடைய குமாரனை கனத்திற்குரிய பிரதிநிதியாக உபயோகப்படுத்தும்படியாக தன்னுடைய கிரியையிலிருந்து ஓய்ந்திருந்தார். நம்முடைய ஆண்டவர், கல்வாரியில் செய்து முடிக்கும்படியாக பிதாவானவர் அவருக்கு கொடுத்த வேலையை செய்து முடிக்கும் முன்னரே இப்படிக் கூறினார், ஆனால் அந்த வேலை செய்து முடிக்கப்பட்டாயிற்று என்ற கருத்தில் கூறினார்; ஏனெனில் நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, பிதாவானவர் தனக்கு நியமித்துள்ளதை செய்து முடிக்க, அவருடைய பரீட்சைக்கான தகுதி மரணபரியந்தம் உள்ள அவருடைய கீழ்ப்படிதலின்படி தீர்மானிக்கப்படுவதாக இருந்தது. இதன்படியாகத்தான் ஒரு உண்மையுள்ள இரக்கமுள்ள பிரதான ஆசாரியராக இருப்பதற்கு தான் தகுதியுள்ளவர் என்பதைக் காட்டினது மாத்திரமல்லாமல், மனுக்குலத்திற்கு தன்னுடைய சொந்த இரத்தத்தின் மூலமாக ஒரு புது உடன்படிக்கைக்கு உத்தரவாதியானார்; மேலும் ஒரு புதிய வழியைத் திறந்து, மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களைப் பெற்றுக் கொண்டார். இதன் மூலம் மரணம் என்ற பெரிய சிறைச்சாலையில் உள்ள சிறைப்பட்டவர்களைப் பார்த்து, ''வெளியே வாருங்கள்'' என்று சொல்லக் கூடிய அதிகாரத்தையும், அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிபவர்களை வெளியே கொண்டு வரவும் ஆசீர்வதிக்கவும் உரிய அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார். உண்மையாகவே, நம்முடைய ஆண்டவர் உயிர்த்தெழுந்த வினாடியிலிருந்து பிதாவானவர் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் எல்லாவற்றையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார், அதன் பின்னரே நம்முடைய ஆண்டவர், ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது'' என்று அறிக்கையிட்டார். (மத் 28:18) இந்த அதிகாரத்தை அவர் முதன் முறையாக தன்னுடைய பிரதிநிதிகளாக தன்னுடைய அப்போஸ்தலர்களை, மணவாட்டி வகுப்பாரும், புது சிருஷ்டியுமாகிய தன்னுடைய அங்கங்களை கூட்டிச் சேர்க்கும் வேலையை தொடங்கும்படியாக நியமித்தபோது உபயோகித்தார்.

மனுக்குலத்தைப் பொறுத்த வரையில் பிதாவானவரின் நியாயத்தீர்ப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டாயிற்று, அது எல்லாரையும் குற்றப்படுத்திற்று; ''எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்.''ஆகவே அவருடைய நியாயத்தீர்ப்பு, முழுமையான நீதியின்படி ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட மனுக்குலத்திற்கு எந்த விதமான நன்மையையும் கொண்டு வர முடியாது. '' நீதிமான் ஒருவனாகிலும் இல்லை.'' பரிபூரணம் என்ற நிலைக்கு குறைவானது எதையும் திவ்விய ஒழுங்கு ஏற்றுக் கொள்ளுவதில்லை. ஆகவே, நம்முடைய ஆண்டவர் மத்தியஸ்தராக இருக்க வேண்டும், பிதாவானவருக்கும் நமக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்பவராக இருக்க வேண்டும், விழுந்துபோன மனுக்குலத்தின் பிரதிநிதியாக நீதியை ஏற்றுக் கொள்ளும்படி செய்பவராகவும், பிதாவனவரின் நீதி மனுக்குலத்தின் பிரதிநிதியாக அவரை நோக்கிப் பார்க்கும்படியாகவும், மனுக்குலத்திற்கு பொறுப்புள்ளவராகவும் இருக்க வேண்டும் என்பது திவ்ய ஒழுங்கு முறையாகும். இயேசு செய்ய வேண்டிய வேலையை செய்து முடிக்கும் வரை, அதாவது ஒவ்வொரு சிருஷ்டியையும் மறுபடியும் தேவனுடன் இணக்கமாக கொண்டு வரும்வரை, தன்னுடைய சிருஷ்டிகரையும், அவருடைய நீதியுள்ள பிரமாணங்களை அறிகின்ற அறிவுக்குள்ளாக கொண்டுவரும்வரை, அப்பொழுது முழு ஒப்புரவாகுதலோடு இருக்கவும், அதன் பின்னர் அதன்படியாக நடக்கவும் வாஞ்சிக்கும் வரை தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான இந்த மத்தியஸ்தர் ஸ்தானத்தை வகிப்பார். இதைக் காட்டிலும், அவருடைய எல்லா தீர்ப்புகளும் அவரது முடிவுகளை நிறைவேற்றுவதாக இருக்கும். எப்படியெனில், அவர் கீழ்ப்படிகிறவர் களுக்கு நன்மை செய்வது மாத்திரமல்லாது, ''பூமியைக் கெடுத்தவர்களை அழிப்பார்;''மனப்பூர்வமாக பாவம் செய்கிறவர்களை அழிப்பார்; அவருடைய கட்டளைகளுக்கும், அவருடைய போதனை களுக்கும், அவருடைய சத்தத்திற்கும் செவி கொடுக்காதவர்களையும் ஜனங்கள் மத்தியிலிருந்து அழித்து, எல்லா பாவங்களையும் எல்லா கீழ்ப்படியாமையையும் கீழ்ப்படுத்தி, கடைசி சத்துருவாகிய மரணத்தையும் பரிகரிப்பார். (1 கொரி. 15:25–28; வெளி. 11:18; 2 தெச. 2:8; எபி 2:14.)

இந்த நியாயத்தீர்ப்பு ஆயிரம் வருட காலத்தின் போது மத்தியஸ்தர் என்ற முறையில் பங்கு பெறுவதாக இருக்கும்; இந்த வேலையின் போது மனுக்குலத்தின் பூரணமற்ற நிலை இரக்கத்துடன் கவனிக்கப்படுவதோடு தண்டனையும், நன்மையும் சரியான முறையில் செய்யப்படும்; மேலும்

யேகோவாவின் பிரதிநிதி என்ற முறையில், ஆயிரம் வருட காலத்தின் இறுதியில், தகுதியுள்ளவர்களுக்கு நித்திய நன்மையான நித்திய ஜீவனையும், தகுதியற்றவர்களுக்கு நித்திய அழிவையும் கொடுப்பதாக இருக்கும். இந்த கடைசித் நியாயத்தீர்ப்பு நீதியின்படி, ஆனால் இரக்கமின்றி வழங்கப்படும். ஏனெனில் அவருடைய ஆயிரம் வருட அரசாட்சியின் போது, கிருபையும், உதவியும் மனுக்குலத்தின் ஒவ்வொரு நபருக்கும், அவர்களுடைய மீட்பரால் வழங்கப்படுமாகையால், இரக்கம் காட்டுவதின் நோக்கமும், அதன் உபயோகமும் சரியான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதால், தகுதிக்கேற்றபடி வழங்கப்படும் கடைசி நியாயத்தீர்ப்பின் போது இரக்கம் காட்டப்படமாட்டது. கிறிஸ்துவின் சரீரமான சபையும், ஆசீர்வாதங்களின் பலவித அம்சங்களாகிய நியாயத்தீர்ப்பு, ஆளுகை, திருத்துதல், ஆயிரம் வருடத்தின் இரக்கம், உதவி செய்தல் போன்றவைகளிலும் அவரோடு இணைந்து செயல்படும். மேலும் ஒரு வேளை இறுதியில் கொடுக்கப்படுகின்ற தண்டனைகள், நன்மைகள் ஆகியவைகளை அறிவிப்பதிலும், வழங்குவதிலும் கூட அவரோடு இணைந்து செயல்படலாம்.

ஆயிரம் வருட இராஜ்யத்திற்கு முன்பதாக, சுவிஷேச யுகத்தின் போது குறிப்பாக புது சிருஷ்டி சோதிக்கப்படுவதை அல்லது நியாயம் தீர்க்கப்படுவதை பார்ப்பதற்கு முன்னர், நம்முடைய மனதில் ஆழமாக பதித்துக்கொள்ள வேண்டியது என்னவென்றால், இந்த வழி முறைகள், நியாயம் தீர்க்கப்படுதல் போன்றவைகள் எல்லாம் பிதாவானவரிடத்திலிருந்து வருவதாயிருந்தாலும், அது குமாரன் மூலமாகவும், சபை மூலமாகவும் வருகிறது என்பதேயாகும். மேலும் மரித்தோரின் உயிர்தெழுதலைக் குறித்து நாம் வாசிக்கும் போது, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து தேவன் தன்னுடைய வல்லமையினால் உயிரோடு எழுப்பினார் என்பது போன்று நம்மையும் எழுப்புவார் என்று அறிந்து கொள்ளுகிறோம். அந்த அறிக்கை ''கடைசி நாளில் அவனை எழுப்புவேன்,'''நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்,'' ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்''என்று சொன்ன நம்முடைய ஆண்டவரின் வார்த்தையோடு ஒத்து இருப்பதைக் காண்கிறோம். (1கொரி. 6:14; யோவா. 6:39; 14:3; 11:25)

புது சிருஷ்டியின் பரீட்சை அல்லது நியாயத்தீர்ப்பு என்பது ஆயிரம் வருட அரசாட்சி முழுமையாக அமுல் படுத்தப்படுவதற்கு முன்னரே,

சுவிசேஷ யுகத்தில் நடை பெற வேண்டும். ஏனெனில், ஆயிரம் வருட யுகத்தின் வேலையை புது சிருஷ்டிதான், தலையும் சரீரமுமாக சேர்ந்து செய்ய வேண்டும். இதற்கிசைவாக ஆண்டவர் கூறுகிறதாவது: நாம் விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் அவருடைய சரீரத்தின் அங்கங்களாக (உலகத்தாருக்கு முன்னதாகவே) ''ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக் கிறோம்.''(யோ 5:24) அப்படியானால் அர்ப்பணம் செய்துகொண்ட ஒவ்வொருவனுக்கும், இந்த வேளை, இந்த வாழ்க்கை அவனுடைய நியாயத்தீர்ப்பின் நாளாக, அவனுடைய பரீட்சையின் நாளாக, அவனுடைய சோதனையின் நாளாக, அவனுடைய அழைப்பும் பிரதிஷ்டையும் நித்திய வாழ்க்கைக்கு தகுதியுள்ளதாக இருந்திருக்கிறதா என்பதை தீர்மானிக்கும் நாளாக இருக்கும். ''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது''(1 பேது. 4:17) என்கின்ற அப்போஸ்தலருடைய வார்த்தை இதற்கு ஒத்து இருக்கிறது. ஆண்டவர் ஏற்றுக்கொள்ளும்படியான பரிபூரண குணாதிசயம் அவர்களுக்குள் வரும்படியாக, பாவத்தை ஒதுக்கி விட்டு தெய்வீக சித்தத்தை அறியவும், அதன்படி நடக்கவும், அதற்கான உள்ளத்தைப் பெற ஒரு சோதனை காலத்திற்குள்ளாக அவர்கள் கடந்து செல்ல வேண்டும் என்பதை புதுசிருஷ்டி யோசித்துப் பார்க்கும்போது, அப்போஸ்தலர் குறிப்பாக சொல்லுகிறபடி, இது நித்திய வாழ்க்கையைக் குறித்ததான திவ்விய தேவைகள் அல்லது நிலைமைகளைக் குறித்து ஒரு உயர்வான எண்ணத்தைக் கொடுக்கிறது.

புது சிருஷ்டியின் நியாயாதிபதி யார்? எந்த பிரமாணத்தின்படி அல்லது எந்த அளவுகோலின்படி அது நியாயம் தீர்க்கப்படுகிறது?

பரலோக பிதாவானவரின் பரிபூரண அன்பு என்கின்ற பிரமாணத்தின்படி நாம் நியாயம் தீர்க்கப்படுகிறோம் என்று நாம் பதில் கூறுகிறோம். நாம் அவரால் நீதிமானாக்கப்பட்டோம் (தேவன்தாமே நீதிமானாக்குகிறவர்); மேலும், நம்முடைய அர்ப்பணிப்பின் உறுதிமொழி அவரிடத்தில் ஏறெடுக்கப்பட்டது; மேலும் முழு புது சிருஷ்டியும், தலையும் மற்றும் அங்கங்களும், பிதாவானவருக்கே கீழ்ப்படிய வேண்டியவர்கள்; ஏனெனில் ''தேவன், எல்லாருக்கும் நியாயாதிபதியாக

இருக்கிறார்.''ஆனால் பிதாவானவர் நம்மோடு தொடர்புகொள்ளுகின்ற முறைகளை இது மாற்றவோ அல்லது தடை பண்ணுவதோ கிடையாது. நம்மோடு அவர் தொடர்புகொள்ளும்போது, அவருடைய பரலோக கிருபையின் சிங்காசனத்தை நெருங்க நம்மை அனுமதிக்கும்போது– அவர் அப்படிச் செய்வதின் நோக்கம், நம்முடைய தலையாயும் ஆண்டவராயும் இருக்கின்ற நம்முடைய நேசரில் நாம் ஏற்றுக் கொள்ளும்படியாக அவர் செய்திருப்பதினால்தான்– ஆண்டவருடைய நீதியின் வஸ்திரத்திற்கு கீழாகத்தான் நாம் பிதாவை அண்டிச் சேர முடியும், அவருடைய நன்மையைப் பெற முடியும். இருந்த போதிலும், பிதாவின் பிரதிநிதியாக இருக்கின்ற குமாரனில் எல்லா வல்லமையும் அதிகாரமும் வைக்கப்பட்டு உள்ளது. பிதாவோடு கூட நேரிடையாக தொடர்புகொண்டாலும், உலகப் பிரகாரமான ஒரு நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞர் தன்னுடைய வாதிக்காக ஆஜராவது போன்று, நம்முடைய பரலோக தகப்பனும், நமக்காக பரிந்து பேசுகிறவர் மூலம் தான் நமக்கு பிரசன்னம் தருகின்றார். ஆயிரம் வருட அரசாட்சியின் போது பரிந்து பேசுகிற ஒருவர் மூலமாக, உலகம் பிதாவானவர் கூட நேரிடையாகவோ அல்லது நெருங்கிக் செல்லவோ முடியாது, ஆனால் அதற்கு மாறாக ஆயிரம் வருட அரசாட்சி முடியும் வரை, பரிபூரணம் அடைந்தவர்கள் பிதாவானவரிடம் ஒப்படைக்கப்படும் வரை உலகமானது நேரிடையாக கிறிஸ்துவோடுகூட தொடர்பு கொள்ளும்.

புது சிருஷ்டிகள் எல்லோரும் பிதாவினால் மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள்; அவர்கள் அவருடைய பிள்ளைகள், கிறிஸ்துவின் பிள்ளைகள் அல்ல; மேலும் பிதாவானவர் தான் ஏற்றுக் கொள்ளுகின்ற ஒவ்வொரு மகனையும் சிட்சிக்கிறார். அது மாத்திரமல்ல, பிதாவின் கிருபையின் சிங்காசனத்தை நோக்கி ஜெபிக்கும்படி திட்டவட்டமாக கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றோம், இதற்கான வழி நம்முடைய மீட்பராகிய இயேசுவால் திறக்கப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் ''என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்''என்ற நம்முடைய மீட்பரின் வார்த்தை முற்றிலும் உண்மையுள்ளதாக இருக்கிறது. சபையோடு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உள்ள உறவு, தலை சரீரத்தோடு உள்ளது போன்றதாக இருக்கிறது. தலையானது சரீரத்தின் தேவைகள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு செயல்படுகின்றது, சரீரத்தின் கஷ்டங்களை நிவர்த்தி செய்கிறது, பொதுவான நலனையும், சௌகரியத்தையும் கொண்டு வருவதுடன், மேலும் சரீரத்தின் அங்கங்களை தன்னுடைய ஊழியக்காரராக அல்லது வேலையாளாக

அதிகதிகமாக பாவித்து பலத்தையும் ஆதரவையும் அளிக்கிறது. இருந்தாலும், இந்த வேலையின் எல்லா அம்சங்களும் பிதாவின் நாமத்தினாலும், அவருடைய வழிநடத்துதலின் படியாயும் செய்யப் படுகிறபடியால், அது பிதாவினுடையதும் குமாரனுடையதும் என்று சரியான முறையில் எண்ணப்படுகின்றது. (1 கொரி. 8:6)

''அன்றியும் நீங்கள் பிதாவை நோக்கி கூப்பிடும்போது பட்சபாதமில்லாமல் நியாயம் தீர்க்கிறவர்'' என்பது போன்றவைகள் இதோடு ஒத்து இருப்பதை வாசிக்கின்றோம். மறுபடியும், ''என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்.'' (1 பேது. 1:17; யோவா. 15:1,2) எப்படியாயினும், நம்முடைய தலையானவரின் பரிந்து பேசுதல் முற்றுமாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இந்த சுத்தம் செய்தல், ஒழுங்குபடுத்துதல் போன்றவைகள், நமக்குள்ளாக, நமக்காக பிதாவின் பிரதிநிதியாக இருப்பவரான ஆண்டவர் மூலம் வெளிப்படுவதை அப்போஸ்தலரின் கூற்றின் மூலம் அறியலாம்: ''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமே.'' இப்படியாக நாம் நேரிடையாக ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் இல்லை, அது மாத்திரமல்ல, மாற்றமுடியாத அவருடைய பிரமாணங்களின் கீழாகவும் இல்லை என்பதை போதிக்கிறது. நாம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக அவருடைய புண்ணியத்தால் மூடப்பட்டு, அவருடைய இரத்தத்தினால் நமக்காக செயல்படுத்தப்பட்டிருக்கின்ற ஆபிரகாமின் உடன்படிக்கையின் கிருபையின் சிலாக்கியங்களால், நம்முடைய தலையாயும், ஆண்டவருமாயிருக்கிற அவர் மூலமாக நடத்தப்படுகிறோம்.

சரீரத்தின் மேல் மகிமையான தலையின் மேற்பார்வை

இந்த விஷயத்தைக் குறித்து மிக தெளிவான அறிக்கையை அவர் கொடுத்திராவிட்டாலும், சரீரமான, மணவாட்டியான சபையின் மேல் உள்ள நம்முடைய மகிமையான தலையின் அன்பையும், கரிசனையையும் நம்மால் சந்தேகிக்க முடியாது. இருந்தபோதிலும், தனக்கு உண்மையுள்ள வர்களுக்கு அவர் அளித்த கடைசி தூதில், இராஜரீக ஆசாரியர்கள் உட்பட, நிழலாட்டமான லேவியர்களைக் கூட, உட்கார்ந்து புடமிட்டு

சுத்திகரிக்கிறவர் அவர் தான் என்று தெளிவாக காட்டுகிறார். ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் வந்த அவருடைய குரலுக்கு செவி கொடுங்கள். அவைகள் ஒரு சபையின் ஏழு காலங்களின் அனுபவமாக இருக்கிறது:

''ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ...இல்லாவிட்டால், நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்.'' ''ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.'' ''ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன் பேரில் எனக்கு குறை உண்டு..... நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடு யுத்தம் பண்ணுவேன்.'' ''ஜெயம் கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுப்பேன்.'' ''ஆகிலும் உன் பேரில் எனக்கு குறை உண்டு, நீ யேசபேல் என்கிற ஸ்திரியானவளுக்கு.... இடம் கொடுக்கிறாய். அவள் மனம் திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்.....நான் அவளை..... மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி.....அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்; அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும், இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லா சபைகளும் அறிந்து கொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்..... ஜெயங்கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன்.'' ''உன் கிரியைகள் தேனுக்கு முன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை..... ஜெயங் கொள்ளுகிறவனெவனோ .....ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிபோடாமல்.....'' ''தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக் கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது.'' ''இதோ, அவர்களை சாத்தானின் கூட்டத்தாராக்குவேன், ... இதோ அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன். என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்ட படியால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னை காப்பேன்.'' '' ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்.'' ''இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன்.'' ''நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் ....என்னிடத்தில் வாங்கிக்

கொள்ளவும்..... ஆலோசனை சொல்லுகிறேன்.....நான் நேசிக்கிறவர் களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.''(வெளி. அதி. 2, 3)

நம்முடைய ஆண்டவர் கூறிய பணம், தாலந்துகள் பற்றிய உவமையை மனதில் கொண்டு வருகிறோம். இவைகள் இரண்டிலும் அவர் திரும்பி வரும்போது உண்மையுள்ளவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்பதைக் காட்டுகிறார். ''சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனையும் அளிப்பார், மற்றவர்களுக்கு கோபாக்கினையின் நாளில் கோபாக்கினையை அளிப்பார்;'' மற்றவர்களுக்கு கோபாக்கினையின் நாளிலே தண்டனையை அளிப்பார். பிரபுவானவர் திரும்பி வந்து இராஜ்யத்தைப் பெற்று கொண்டபின்னர், தன்னுடைய ஊழியக்காரர்களுக்கு அவர்களுடைய உண்மைக்கு ஏற்றபடி இந்த வெகுமதிகளை அளிப்பதை உவமைகள் தெளிவாக அறிவிக்கின்றது; மேலும் தகுந்த காலத்தில் அவனுடைய சத்துருக்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பதையும் அறிவிக்கிறது. இருந்தாலும் அப்போஸ்தலர், வெகுமதி அளிப்பதும், தண்டனை அளிப்பதும் பிதாவுக்குரியது என்கிறார். இந்த விஷயத்தின் சாராம்சம் நம்முடைய ஆண்டவருடைய வார்த்தையில் காணப்படுகின்றது. ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' – எல்லா விஷயங்களிலும் நாங்கள் ஒற்றுமையாக செயல்படுகிறோம்.

''நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கா திருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப் படுவீர்கள்.''

–மத்.7:1,2 –

சபையின் திறமையான நியாயாதிபதிகளாக இருப்பவர்கள் பிதாவும், குமாரனுமாகும். குமாரன், பிதாவின் பிரதிநிதியாக இருக்கிறார், நியாயந்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. (யோவா.5: 22,27) புது சிருஷ்டிகள் இரண்டு காரணங்கள் நிமித்தமாக ஒருவரையொருவர் நியாயந்தீர்க்க தகுதியற்றவர்களாய் இருக்கிறார்கள்.

(1) அவர்களில் ஒரு சிலரே, எல்லாரையும் ஆளுகிற திவ்விய அன்பின் பிரமாணத்தை முழுமையாக அறிந்து கொள்ளவும், ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். (2)நாம் அறிந்திருக்கிறபடி அவர்களில் ஒரு சிலரே தங்களுடைய இருதயங்களை குற்றமின்றி நிர்ணயிக்க முடிந்தவர்களாய் இருக்கிறார்கள்; அனேகர் தங்களை மிகக் கடுமையாக அல்லது மிக இலகுவாக நியாயந்தீர்க்கிறார்கள். ஆகவே, இன்னொருவருடைய நோக்கங்கள் திருப்தியற்ற நிலமையில் இருக்கக்கூடும் என்பதால், அவருடைய இருதயத்தை நியாயந்தீர்க்க பண்புடன் மறுத்துவிடவேண்டும். நியாயந் தீர்ப்பதில் நம்முடைய திறமையற்ற நிலையை அறிந்த ஆண்டவர், முதலாம் உயிர்த்தெழுதலில் நாம் பங்கு பெற்ற பின்பு, இராஜ்யத்தில் நம்முடைய எதிர்கால வேலைகளில் ஒன்றாக இது இருக்கும் என்று உறுதி அளித்தாலும், இப்பொழுது அவரைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் எல்லா தனிப்பட்ட நியாத்தீர்ப்புகளையும் அவர் தடை பண்ணுகிறார். மேலும் தொடர்ந்து ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கும் பட்சத்தில், அவர்கள் மற்றவர்களுக்கு காட்டுகின்ற அளவிற்கு மேலாக இனியும் இரக்கமும், தயாளமும் கிடைக்காது என்று எச்சரிக்கிறார். (மத். 7:2; லூக். 6:38) நமக்கு கொடுக்கப்பட்ட மாதிரி ஜெபமான''எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை (மீறுதல்களை) எங்களுக்கு மன்னியும்''என்பதிலும் இதே சிந்தை வலியுறுத்தப்பட்டுள்ளது. (மத்.6:12)

நாம் மற்றவர்களோடு இப்படி நடந்து கொண்டால், ஆண்டவர் நம்மோடு நியாயமற்ற முறையில், இரக்கமில்லாது நடந்து கொள்வார் என்று பொருள்படுகின்ற ஒரு எதேச்சதிகரமான கட்டளை அல்ல இது. ஆனால் அதற்கு மாறாக சரியான முறை இதில் இருக்கிறது. சுபாவத்தின்படி''நாம் கோபாக்கினையின் பிள்ளைகளாக,'' ''அழிவுக்கு எத்தனமான பாத்திரங்களாக'' இருக்கிறோம். மேலும், தேவன் நம்மை கிருபையாய் ஆசீர்வதித்து, நம்முடைய பாவங்களிலிருந்தும், பெலகினங்களிலிருந்தும் நம்மை விலக்கி, நம்முடைய மீட்பர் மூலமாக பரிபூரணப்படுத்த இருந்தாலும், அவருடைய அன்பின் பிரமாணத்தை நாம் ஏற்றுக் கொண்டு நம்முடைய இருதயத்தில் அதோடுகூட ஒத்துப் போகும்போது மாத்திரமே இதை அவர் செய்வார். அவருடைய குடும்பத்தில் மனந்திரும்பாதவர்களையும், ''கோபாக்கினையின் பிள்ளைகளையும்'' ஏற்றுக் கொள்வதாக இல்லை. பிதாவின் வாசஸ்தலங்களில் (யோவா.14:2) ஏதாவது ஒன்றில் இடம் பெறுவதற்கும்

தகுதி பெறுவதற்கும், எல்லாரும் கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருப்பதிலிருந்து அன்பின் பிள்ளைகளாக மாறவேண்டும்; ஆண்டவருடைய ஆவியால், அன்பின் ஆவியால் மகிமையின் மேல் மகிமை அடைந்து மாற்றப்படவேண்டும். ஆகவே அன்பின் ஆவியை வளர்க்க யாரெல்லாம் மறுக்கிறார்களோ, ஆனால் இதற்கு மாறாக தன்னோடு உள்ள மற்ற விசுவாசிகளை அன்பற்ற நிலையில் நியாயந்தீர்க்க தீர்மானிக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் அறிவிலும், கிருபையிலும் வளரவில்லை என்பதை அது நிரூபிக்கிறது; இருதயத்தில் ஆண்டவரின் சாயலுக்கேற்ப மகிமையின் மேல் மகிமையடையவில்லை, அவர் ஆண்டவரின் ஒரு உண்மையான விசுவாசியல்ல என்பதையும் நிரூபிக்கிறது. ஆகவே ஆண்டவர் சொல்லுகிறபடி சரியான முறையில் அவர் பின்பற்றுகிற அளவை விட மேலதிகமாக இரக்கம் காட்டப்படக் கூடாது. ஆண்டவரின் சாயலை அவர் பெற்றிருக்கும் அளவானது (அன்பில்) அவர் தன்னுடைய சகவிசுவாசிகளுக்கு அவர் காட்டுகின்ற இரக்கம், பெருந்தன்மையான சிந்தை, வார்த்தை, செய்கை ஆகியவை மூலம் வெளிப்படுத்தப்படும்.

ஓ! ''புது சிருஷ்டி'' யாகிய ஆவியினால் பிறந்தவர்கள் அனைவரும், இந்த நியாயம் தீர்க்கிற (குற்றப்படுத்துகிற) ஆவி, பரிதாபமான நிலையில் மிகவும் சாதாரணமாக (உண்மையிலேயே, ஆண்டவருடைய ஜனங்களை ''சூழ்ந்து இருக்கும் பாவமாக'' இருக்கிறது) காணப்படுகிறது என்பதை உணர வேண்டும். இது அவர்களுடைய அன்பின் ஆவியிலும், கிறிஸ்துவின் ஆவியிலும் குறைவுபட்டுள்ளதைக் காட்டுகிறது என்பதையும், இவைகள் ஒருவரிடத்தில் முற்றிலுமாக இல்லாதிருக்கும் போது அவர்கள் ''அவருடையவர்கள் அல்ல'' என்பதையும் உணர வேண்டும். (ரோ 8:9) இந்த உண்மையை நாம் எவ்வளவு சீக்கிரமாக புரிந்து கொள்ளுகின்றோமோ அவ்வளவு வேகத்தில் ''மகிமையின் மேல் மகிமை'' என்ற மாறுதலைப் பெறுவோம். நாம் புது சிருஷ்டியின் அங்கங்கள் என்று திட்டவட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இது மிகவும் அவசியம்.

ஆனால், ஆண்டவருடைய ஜனங்களில் வெகுசிலரே இதை, அதாவது எந்த அளவுக்கு அவர்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்கிறார்கள், எவ்வளவு கடுமையாக மற்றவர்களை நியாயந்தீர்க்கிறார்கள், அதே கடுமையான நியாயத்தீர்ப்பு அவர்களிடத்தில் ஆண்டவர் மேற்கொள்வாரானால், நிச்சயமாகவே அவர்களை இராஜ்யத்திற்குள்

செல்ல தடை செய்யும் என்பதை உணருகின்றனர். ஆண்டவருடைய தயாளமான வாக்குத்தத்தின் படியாக, மற்றவர்களை நாம் இலகுவாக நியாயந்தீர்ப்பது போன்று நாமும் நியாயம் தீர்க்கப்படுவோம் என்று பயந்திருக்கலாம். இந்த நோக்கம் அதிகதிமான இரக்கத்திற்கும், அதிகதிமான தயாளத்திற்கும் வழி நடத்தும், மேலும் ''பொல்லாங்கு நினையாதே''என்ற உயர்ந்த நிலைக்கும் எடுத்து செல்லப்படக் கூடும். ஆனால் அப்படி அல்ல! நம்முடைய விழுந்துபோன சுபாவம் எல்லாம் எதிர்வழியில் உறுதியாக இருக்கிறது. இந்த தயாள எண்ணத்தை நம்முடைய ஆண்டவர் அறிவித்து, அதாவது அவர் நம்மை இரக்கத்துடன் நியாயந்தீர்ப்பது போன்று நாம் மற்றவர்களையும் நியாயந்தீர்க்க வேண்டும் என்கின்ற எண்ணத்தை வெளிப்படுத்தி பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டாலும், மிக குறைவானவர்கள் மாத்திரமே இந்த வாக்குத்தத்தின்படி இரக்கத்தை எதிர்பார்க்க முடியும். நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்க முற்படும் குணத்தை நாம் ஆராய்ந்து பார்ப்பது நமக்கு நன்மை தரும். நாம் அதை ஜெபத்துடன் செய்வோமாக.

விழுந்து போன அல்லது மாம்ச சிந்தை சுயநலம் உள்ளதாக இருக்கிறது. நாம் எவ்வளவு சுயம்நலம் உள்ளவர்களாக இருக்கிறோமோ அதே அளவுக்கு மற்றவர்களுக்கு எதிரிடையாக அது உள்ளது. ஒன்று ஆதரிக்கும்படியாக உள்ளது, இல்லையெனில் சுயநலத்திற்கு இடம் அளித்துவிட்டு, மற்றவர்களை ஆதரிக்காமல் குற்றப்படுத்தும்படியாக உள்ளது. இது நம்மை அறியாமலே நமக்குள்ளாக வளர்ந்துள்ள பழக்கமாக உள்ளது, நாம் நம்மை அறியாமலே கண் சிமிட்டுவது அல்லது மூச்சு விடுவது போன்று உள்ளது. கல்வியறிவு வளரும் போது இந்த பழக்கம் அதிகமாக உள்ளது. மனம் மேலான நோக்கங்களையும், குறிக்கோள் களையும் உணர்வதுடன், உடனடியாக மற்றவர்களையும் இதே போன்று அளவிட முற்படுகிறது, அப்படி செய்யும்போது எல்லாரிலும் ஏதாவது பிழையைக் காண்கிறது. அது மற்றவர்களுடைய பிழைகளையும் பெலகீனங்களையும் மனத்தளவில் திரும்ப திரும்ப கொண்டுவருவதில் சந்தோஷப்படுகிறது, ஆனால் அதே நேரத்தில் தன்னுடைய பிழைகளை அதே வழியில், அல்லது வேறு முறையில் காணாது விட்டு விடுகிறது. சில வேளைகளில் தன்னுடைய பிழையை மறைப்பதற்கு, அல்லது அதே முறைப்படி தன்னுடைய குணாதிசயம் மிக உயர்வானது என்ற எண்ணத்தை உண்டு பண்ணும்படியாக, மற்றவருடைய பெலகீனங்களை மாய் மாலத்துடன் கேலி செய்கிறது. விழுந்துபோன பழைய சுபாவம்

இப்படியாக கேவலமான முறையில் காணப்படுகிறது. புதிய மனம், அன்பு எனும் பரிசுத்த ஆவியினால், ஆண்டவருடைய ஆவியினால் பிறந்திருப்பது, ஆரம்பத்திலிருந்தே சுயநலத்துடன் உள்ள பழைய மனதோடு போராட்டத்தில் உள்ளது. அது ஆண்டவருடைய வார்த்தையின் வழி நடத்துதலின்படி, அன்பு எனும் பிரமாணத்தின்படியும் முக்கிய கட்டளையின்படியும் இருப்பதோடு, நாம் அதிகதிகமாக கிருபையிலும் அறிவிலும் வளரும்போது, ஆரம்பத்திலிருந்தே சுயத்துடன் போராடுகிறது. ஆரம்பத்தில் புது சிருஷ்டிகள் ''கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய்'' இருந்து இந்த புதிய பிரமாணத்தை மேலோட்டமாக விளங்கிக் கொள்ளுகிறார்கள்; ஆனால், வளர்ச்சியடையாமல், அன்பின் பிரமாணம் வாஞ்சிக்கப்பட்டு, விருத்திபெறாவிடின் மகா பெரிய வெகுமதியை அடைய முடியாது.

அன்பின் பிரமாணம் கூறுகிறது: சகோதரர்களுடைய அல்லது மற்றவர்களுடைய பெலவீனங்களும், குறைகளும் உலகத்தார் முன்பாக கூறப்படுவது வெட்கத்துக்குரியது. அவைகளை முற்றுமாக மறைக்கும்படியாக அவர்களுடைய பிழைகள் மீது இரக்கம் என்கிற போர்வையை விரிக்க தாமதமாகிவிட்டாலும் கூட, குற்றம் சாட்டப்படுபவர்கள் சார்பில் ஒரு வார்த்தை கூட பேசும்படியாக அன்பும், இரக்கமும் உடனடியாக எழாவிட்டால் வெட்கத்துக்குரியது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பாவியை ஆக்கினைக்குள்ளாக குற்றப்படுத்தும்படி நம்முடைய பிரபுவான, அன்புள்ள ஆண்டவர் கேட்டுக்கொள்ளப்பட்ட போது, அவர் சொன்னதாவது: ''உங்களில் பாவமில்லாதவன் முதலாவது கல்லெறியக்கடவன்.''தன்னில் பெலம் இல்லாத மனுஷன், ஆண்டவர் கேட்காமலேயே அவர், தவறு செய்பவர்கள் மேல் பழிவாங்க வேண்டும், அவர்களை வெளிச்சத்தில் கொண்டு வர வேண்டும் என்பது போன்று, நீதி வழங்கும் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் போது ஓர் அளவுக்கு முக்கியத்துவம் கொடாமல் விட்டு விடலாம். ஆனால், நம்முடைய ஆண்டவர், பாவம் அறியாதவர், அவருடைய இருதயம் அவ்வளவு அன்பினால் நிறைந்திருந்தபடியால் எளிமையாக எடுத்துக் கூறி மன்னித்தார், அவர் தண்டிக்கவோ, எல்லோரிடம் தெரியும்படி செய்யவோ, அதட்டவோ இல்லை என்பதை நாம் காண்கிறோம். ஆகவே ஆவியினால் பிறந்தவர்கள் எல்லோரும் அப்படியாகத்தான் இருப்பார்கள். எவ்வளவுக்கு அதிகமாய் அவருடைய சாயலில் வளருகிறார்களோ, அதன்படியாக பழிவாங்குதலுக்காக ஜெபிப்பதிலும் முந்திக் கொள்ளமாட்டார்கள், அவர்கள் தங்கள் நாக்கின்

மூலமாகவோ, மற்றபடியோ தண்டனை வழங்குவதற்கு மகா பெரும் நியாயாதிபதியால் கட்டளையிடப்பட்டால் ஒழிய, மற்றபடி முந்திக் கொள்ளமாட்டார்கள். இதற்கு மாறாக, அவர் நமக்கு போதனையாக கூறுகிறதாவது: ''காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்;'' மேலும் நம்மிடம், ''பழிவாங்குதல் எனக்குரியது'' என்று அறிக்கையிடுகிறார்.

தவறு செய்பவர்களுக்கு ''அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளதாய் இருக்கிறது'' என்று அப்போஸ்தலர் அன்பின் ஆவியைக் குறித்து விளக்கமாக கூறியிருக்கிறார். மற்றவர்களின் வெற்றியின் மேல் ''அன்புக்கு பொறாமையில்லை'' அவர்களுடைய கனத்தை குறைவாய் மதிப்பிடவோ, அதை அவர்களிடமிருந்து எடுக்கவோ முயற்சிக்காது. ''அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.'' ஆகவே மற்றவர்கள் மேல் உள்ள புகழ்ச்சியைத் இழிவுபடுத்தாது, அப்படிச் செய்வதன் மூலம் தனக்கு புகழ்ச்சியை தேட முற்படாது. அது ''அயோக்கியமானதைச் செய்யாது.'' அன்பிற்கு தேவையற்ற, முறையற்ற வழிகளைத் தவிர்த்து விடுகிறது. அன்பு ''தற்பொழிவை நாடாது,'' மற்றவர்களுடைய புகழ்ச்சியையோ அல்லது செல்வத்தையோ, அல்லது புகழையோ நாடாது, அதற்குப் பதிலாக அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதைப் பார்ப்பதில் மகிழ்ச்சி யடைகிறது, அந்த ஆசீர்வாதங்களைக் கூட்டத்தான் முயற்சிக்குமே ஒழிய குறைக்காது. ''அன்பு சினமடையாது,'' பழிவாங்கும்படி கூட செயல்படாது, முழு மனுக்குலத்தின் வீழ்ச்சியின் மூலம் வந்த கஷ்டங்களை மனதில் நினைத்து, கோபமாய் இருப்பதற்கு பதிலாக இரக்கப்படும். ''அன்பு தீங்கு நினையாது;'' அது தீங்கு நினையாதிருப்பது மாத்திரமன்றி, தீங்கு செய்ய எண்ணாது, சந்தேகம் எழும்பும் பட்சத்தில், சந்தேகத்திற்கு இடம் கொடாமல், அப்படியே விட்டு விடுவதுடன், சந்தேகத்துடன் ஊகிப்பதையும் தவிர்த்துவிடும். (1 தீமோ. 6:4 ஐ ஒத்து பார்க்கவும்) அன்பு ''அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்,'' ஆகவே கனிவான வார்த்தைகளைச் கூறவோ, அல்லது நலமானவைகளை செய்யவோ சந்தோஷப்படும். அது கனவீனமான வார்த்தைகளை சொல்லுவதிலோ அல்லது கனவீனமான காரியங்களை வெளிப்படுத்திவதிலோ பிரியப்படாது. அன்பு ''எல்லாவற்றையும் தாங்கும்,'' அது இரக்கம் என்கிற போர்வையினால் மூடும், ஏனெனில் யாரும், எதுவும் பரீட்சைக்கு நிற்கும் அளவிற்கு பரிபூரணரல்ல. அன்பு எதிர்பார்ப்புடன் இருப்பதால் எப்பொழுதும்

இரக்கம் (தயாளம்) என்னும் போர்வையோடு ஆயத்தமாய் இருக்கிறது. அன்பு ''சகலத்தையும் நம்பும்,'' ஆகவே நல்ல எண்ணத்துடன் கேள்வி கேட்கலாம், அவைகளை நம்பும். அன்பு ''சகலத்தையும் விசுவாசிக்கும்.'' கூடுமானவரை இழிவானவை களைக் குறித்த எண்ணங்களை ஒதுக்கி விடும். அன்பு ''சகலத்தையும் சகிக்கும்;'' உண்மையாகவே மனந்திரும்பு கிறவர்களை ஏற்றுக்கொள்வதில் ''கெடு'' நியமிக்க இயலாது. ''அன்பு ஒருக்காலும் ஒழியாது.'' மற்ற கிருபைகளும், வரங்களும், அவைகளின் நோக்கங்கள் நிறைவேறிய பின்னர் மறைந்து போகலாம்; அன்பு அவ்வளவு அடிப்படையானது, அதை நாம் அடைந்து விட்டோமெனில் அது எப்பொழுதும் நம்முடையதாக, நித்திய காலம் வரை நம்மோடு நிலைத்திருக்கும். அன்பே பிரதானமானது. (1 கொரி. 13:4–13.)

அன்பற்ற வார்த்தைகளைக் கூறுவதே பொன்னான பிரமாணமாகிய அன்பின் பிரமாண ஒழுங்கை மீறுவதாக இருக்குமென்றால், உண்மையான காரியத்தை அறியாமல் இருக்கும் போது, மற்றவர்களைக் குறித்து அவதூறான காரியங்களையும், மோசமான, அன்பற்ற, குற்றப்படுத்தும் காரியங்களையும் பேசும் பழக்கம், உலகப்பிரகாரமானவர்கள், பெயர் கிறிஸ்தவர்கள் மத்தியில் மாத்திரம் அல்லாது, உண்மையான கிறிஸ்தவர்கள் மத்தியிலும் காணப்படுவதைக் குறித்து என்ன சொல்ல முடியும். அது எவ்வளவு வெட்ககரமான காரியம். ''ஒருவனையும் தூஷியாதே'' என்கிற ஆண்டவரின் அறிவுரையை மீறுவது எவ்வளவு வெட்ககரமான காரியமாயிருக்கும். அன்பின் பிரமாணத்தில் குழந்தைகளும், அன்பின் பிரமாணத்தில் வளர்ச்சி அடையாதவர்களும் மாத்திரம் தான் தவறாக புரிந்து கொள்ள முடியும். அவர்கள் மாத்திரமே இரண்டு மூன்று பேரின் சந்தேகத்திடமில்லாத சாட்சியான வார்த்தைகள் இல்லாமல் தனது ஒரு அயலகத்தானைக் குறித்தோ அல்லது சகோதரனைக் குறித்தோ, ஒரு பொல்லாங்கை நம்பவோ, அதுவும் மிகவும் பயத்துடன் நம்பவோ முடியும், சந்தேகத்தை ஆதாரமாக வைத்தோ, அல்லது மற்றவர்கள் சொல்வதை வைத்தோ அவதூறாக பேச முடியும்.

நம்மை நாமே நியாயந்தீர்க்க வேண்டும்

''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயம் தீர்க்கப்படோம்'' (ஆண்டவரால் தண்டிக்கப்பட மாட்டோம், சீர்திருத்தப்பட மாட்டோம்). 1 கொரி. 11:31

மற்றவர்களைக் குறித்து, அவர்களுடைய காரியங்களைக் குறித்து ''வீண் பேச்சு'' பேச எத்தனிப்பதை பொன்னான பிரமாணம் நிச்சயமாக நியாயந்தீர்க்கும். அவதூறு கூறித்திரிகின்ற எந்த மனிதன்தான் அவதூறு கூறப்படுவதை விரும்புவான்? யார்தான் வீண் பேச்சு பேசுவான்? யார்தான் தன்னுடைய விஷயங்கள், பெலவீனங்கள், பொதுவாகவோ அல்லது இரகசியமாகவோ பேசப்படுவதை விரும்புவான்? ''உலகத்தாருக்கு'' வீண் பேச்சு பேசுவதும், அவதூறு பேசுவதும் தவிர, பேசுவதற்கு வேறொன்றும் கிடையாது. ஆனால், புது சிருஷ்டி, தேவதூதர்கள் பாடிய ''உன்னதத்தி லிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக''என்ற பாடலின் கருத்தடங்கிய தேவனுடைய அன்பையும் திட்டத்தையும் அவர்கள் பெறும் வரை ஊமையாக இருப்பது நலமாக இருக்கும். அப்பொழுது ''அவர்களுடைய வாயின் வார்த்தை களும் இருதயத்தின் தியானங்களும்''ஆண்டவருக்கு பிரியமானதா யிருப்பது மாத்திரமன்றி அவர்கள் சந்திக்கின்ற ஜனங்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும்.

அப்போஸ்தலர் நாவைக் குறித்து பேசும் போது, நம்முடைய சரீரங்களில் சிறிய அவயவமாயிருக்கிற இதற்கு அதிக வலிமை உண்டு என்கிறார். அது அழியாத அன்பான வார்த்தைகளையும் பரப்பலாம், அதன் மூலம் ஜீவிக்கிறவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருக்கலாம், அவர்கள் மூலமாக இன்றும் பிறக்காதவர்களையும் ஆசீர்வதிக்கலாம்; இல்லையெனில், ''சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.'' அது விஷம் நிறைந்த சிந்தனை விதைகளைப் பரப்பி சிலரின் வாழ்க்கையை கசப்பாக்கி விடலாம், மேலும் மற்றவர்களுடைய வாழ்க்கையை நோயுற்றது போலாக்கி, அவர்களுடைய வாழ்க்கையை நசுக்கியும் விடலாம். அப்போஸ்தலர் கூறுகின்றார்: ''அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்;..... மனுஷரை அதினலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?'' (யாக்கோபு 3:8–11.)

''இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகிறது.'' ஆகவே நாம் மற்றவர்களைப் பற்றி வீண் பேச்சு பேசும் போதோ, அல்லது மற்றவர்களுடைய அலுவல்களில் மும்முரமாய் இருக்கும் போதோ, அது நம்முடைய இருதயங்களில் பெரும் பகுதி, தேவனுடைய அன்பினாலும், கிருபையினாலும் நிரப்பப்படாமல் வெறுமையாக இருப்பதைக்

நிரூபித்துக் காட்டுகின்றது. இந்த சிந்தனை உடனடியாக நம்மை கிருபையின் சிங்காசனத்திற்கும், தேவவசனத்திற்கும் நேராக, ஆவியினால் நிரப்பப்படுவதற்காக வழி நடத்த வேண்டும், ஏனெனில் அதின் மேல் தாகமுள்ளவர்களுக்கும் பசியுள்ளவர்களுக்கும், ஆவியை அருளிச் செய்வேன் என்று ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். மற்றவர்களைக் குறித்து பொல்லாங்கு பேசப்படுவதை கேட்கும்போதோ அல்லது அதைக் கேட்பதில் மகிழ்ச்சி அடையும்போதோ, நம்முடைய இருதயத்தின் நிலைமை இன்னும் மோசமாயிருப்பதைக் காட்டுகிறது; இப்படியான ஒரு நிலை காணப்படும் என்றால் அது, வீணான வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும், மற்றவர்களுடைய அலுவல்களில் தலையிடுவதைக் காட்டிலும் மிக மோசமாக இருக்கும். அப்படியென்றால், இருதயமானது கசப்பினாலும், பொறாமையினாலும், சண்டையினாலும், விரோதங்களினாலும், பகைகளினாலும் நிறைந்துள்ளது. இந்த குணாதிசயங்களை அப்போஸ்தலர், ''மாம்சத்தினாலும், பிசாசினாலும் உண்டான கிரியைகள்'' என்கிறார். (கலா. 5:19–21) இந்த விஷயத்தில் புது சிருஷ்டியை முற்றிலுமாக ஆச்சரியப்படவும் விழிப்புணர்வு பண்ணவும் செய்வோமா? ஏனெனில், இந்த மாம்சத்தின் கிரியைகள் நம்மிடத்தில் காணப்படுமென்றால், நாம் நிச்சயமாக விழுவது மாத்திரமன்றி, இப்படிப்பட்டவர்களுக்கு நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் நித்திய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி கிடைக்காது.

இராஜ்யத்திற்கு தகுதி பெறுவது என்பது இதற்கு மிக எதிர்மாறான வழியில் நடத்துகின்றது. அப்போஸ்தலர் பேதுரு கூறுகின்றபடி, ''உங்கள் விசுவாசத்தோடே பொறுமையையும்,.... சகோதர சினேகத்தையும்,... அன்பையும் கூட்டி வழங்குங்கள்; .....இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை..... நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.'' (2 பேதுரு 1:5–11) அப்போஸ்தலனாகிய யாக்கோபு இந்த விஷயத்தைக் குறித்து மிக தெளிவாகக் கூறுகிறார்: ''உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால் நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக் கடுத்தமாயிருக்கிறது.'' (யாக்

3:14,15) எவனிடம் இப்படிப்பட்ட ஒரு அவதூறு பேசும் ஆவியும், கசப்பான ஆவியும் காணப்படுகிறதோ, அவன் கிறிஸ்துவின் ஆவியான, பரிசுத்த ஆவியான, அன்பின் ஆவிக்கு நேர் எதிரானதை உடையவனாய் இருக்கிறான். அவன் தனக்குள்ளாகவோ அல்லது மற்றவர்களிடத்திலோ பொய் சொல்லாதிருப்பானாக. அவன் தன்னுடைய வெட்கத்தில் பெருமை பாராட்டாமல் இருப்பானாக. அவன் இப்படியாக அபிஷேக ஆவிக்குப் பதிலாக சாத்தானின் ஆவியாயிருக்கிற இருளை வெளிச்சம் என்று காண்பியாதிருப்பானாக.

தொடர்ந்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது: குழப்பமும், சமாதானமற்ற நிலையும், எல்லா நேரங்களிலும் ஆண்டவரின் ஜனங்களை துன்பப்படுத்துவதின் இரகசியம், இருதயம் அசுத்தமாயிருப்பதும், முழுமையாக அர்ப்பணிக்கப்படாமல் இருப்பதும்தான்: ''வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே சகல துர்ச்செய்கைகளுமுண்டு.'' (யாக் 3:16) பழைய விழுந்து போன சுபாவத்திற்குரிய இந்த களைகள் வளர அனுமதிக்கப்பட்டால், அவைகள் தீங்கு விளைவிப்பது மாத்திரமல்ல, இந்த களைகள் அதிகமாக வளர்ந்து ஆவியின் இன்பமான, அழகான பூக்களையும் கிருபைகளையும் கொன்றுவிடும்.

நம்மை நிதானமாக சரியாக நியாயந் தீர்ப்பது

அப்போஸ்தலராகிய பவுல் புது சிருஷ்டியாக சரியான முறையில் வளருவதையும், நாம் நம்மை சரியான முறையில் நியாயந்தீர்ப்பது அல்லது குறைகூறுவது பற்றி குறிப்பிடுக்கையில், ''இப்படிப்பட்ட வாக்குதத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாக்குதலைத் தேவ பயத்தோடு பூரணப்படுத்தக் கடவோம்''என்கிறார். (2 கொ 7:1) '' ஒரு மனிதன் தன்னை சோதித்தறியக்கடவன்''– தன்னுடைய விழுந்துபோன மாம்ச சுபாவத்தின் பெலகீனங்களையும், அசுத்தங்களையும் அறிந்து, பழைய மனிதனின் கிரியைகளை ''களைந்து''தன்னை சுத்திக்கரிக்க முயற்சி செய்வானாக; இப்படியாக புதுப்பிக்கப்பட்டு, நமக்கு முன்மாதிரி யாகவும், நம்முடைய இரட்சகரும் ஆண்டவருமாய் இருக்கிற தேவ குமாரனின் சாயலுக்கொப்பாக மகிமையின் மேல் மகிமை அடைவானாக. அப்போஸ்தலராகிய பவுல் நம்மால் இயன்றவரை நம்முடைய மாம்சத்தை

சுத்திகரிப்பது மாத்திரமல்லாது, நம்முடைய ஆவி, சிந்தை– புதிய சிந்தை, புதிய மனது, பரிசுத்த தீர்மானமானது, அல்லது சித்தமானது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும், மேலும் கிறிஸ்துவினால் அறிவுறுத்தியபடி, விளக்கமாக கூறப்பட்டபடி எல்லா சிந்தனைகளும் தேவனுடைய சித்தத்திற்குள்ளாக சிறை படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

மாம்சத்தை சுத்திகரிக்க முயற்சி செய்து விட்டு, நாக்குக்கு கடிவாளம் போட முயற்சித்து விட்டு, இருதயத்தை கவனியாது விட்டால் நம்முடைய முயற்சி எல்லாம் வீணானதாகும். ஏனெனில் இருதயத்தில், மனதில், ஆவியில், சிந்தனைகள் தோன்றுவதோடு, அவைகள் மாம்சத்தில் வார்த்தைகள் மூலமாகவும் செய்கைகள் மூலமாகவும் வெளிப்படுகின்றன. இராஜ்யத்தில் ஒரு பங்கை பெறுவதற்கு தேவையான இந்த சுத்தகரிப்பு ஜெபத்தினாலும், பொறுமையினாலும் மாத்திரமே செய்து முடிக்க முடியும்.''பூரணமாகுதலை தேவ பயத்துடன் செய்யக்கடவோம்.''மாம்சம் பூரணமாக சுத்திகரிக்கப்படுதலை நாமே செய்யலாம் என்றும் நம்ப வேண்டியதில்லை. ஆண்டவர் வற்புறுத்துவது சித்தம், இருதயம், ஆவி பரிபூரணமாக சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பது தான். (நம்மால் செய்ய முடிகின்ற மாம்சத்தையும் நாவையும் முற்றுமாக சுத்திகரிப்பதைக் குறிக்கிறது.) இருதயத்தை சுத்தமுள்ளதாய், அவருக்கும், அவருடைய அன்பின் பிரமாணத்திற்கும் உண்மையுள்ளதாய் அவர் பார்க்கும் போது, ஏற்றவேளையில் அதற்கு ஏற்றவாறு புது சரீரத்தைக் கொடுப்பார். ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.''(மத். 5:8)

''கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும்.... நேராய் நடத்துவாராக'' (2 தெ 3:5) என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைகள் இங்கே எவ்வளவு பொருத்தமாய் உள்ளது. சாந்தமுள்ள, இரக்கமுள்ள, பொறுமையுள்ள நீடிய பொறுமையுள்ள அன்பானது, தனக்கு உண்டானதைக் காட்டிலும் அதிகமாக விரும்பாத அன்பு, பெருமையடையாத அன்பு, மேலும் பொறாமை கொள்ளாத அன்பு, பொல்லாங்கு நினைக்காததும், பேசாததுமான அன்பு தேவ அன்பாயிருக்கிறது; அது பொன்னான பிரமாணத்தின் பிரகாரம் நம்புகிறதாயும், இரக்கமுள்ளதாயும், நிதானித்துப் பார்க்கிறதாயும் உள்ளது. புது சிருஷ்டியாக நாம் ஒரு புதிய வழியில்

மாம்சத்தின் பிரகாரமாய் அல்ல ஆவியின் பிரகாரமாக நடந்து கொண்டு இருக்கிறோம், ஆகவே நம்முடைய இருதயங்கள் இந்த அன்பிற்குள்ளாக நடத்தப்பட வேண்டும். ஆண்டவர் அவருடைய பல்வேறு ''அங்கங்களை''அவருடைய வாயாக உபயோகித்தாலும், அவர் மாத்திரமே நம்மை சரியான முறையில் நடத்துகின்ற வழிகாட்டியாக இருக்கிறார். ''வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே (கடந்த காலத்திலிருந்து) சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.''(ஏசா. 30:21)

''நானும் என்னைக்குறித்து தீர்ப்புச் சொல்லுகிறதில்லை – என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே''

புது சிருஷ்டிகளில் ஒரு சிலர், குறிப்பாக வெகு சிலரே தங்களை கடுமையாக நியாயம் தீர்ப்பது போன்று உள்ளது. அவர்கள் தங்களுடைய ஒவ்வொரு தவறையும், பெலகீனங்களை சரியான முறையில் கண்டித்து, கறையற்றவர்களாக இருக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்கள்; ஆனால் நம்முடைய ஆண்டவர் நம்முடைய நோக்கத்தை, சித்தத்தை, வாஞ்சையை, முயற்சியை மாம்சத்தின்படி நியாயந்தீர்க்காமல், ஆவியின்படி நியாயந்தீர்க்கிறார், நம்மை அறிகிறார் என்பதை உணர மறந்து விடுகிறார்கள். அவர்கள் ''நான் மற்ற மனுஷரைப் போல இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்''என்கிற பரிசேயருடைய வார்த்தைகளுக்கு அதிக கவனம் செலுத்துகிறார்கள், அதே வேளையில், ஆண்டவர் நம்மை ஏற்றுக் கொள்ளுகிற சூழ்நிலைகளை, எல்லா பாவத்திலிருந்தும் சுத்திகரிக்கின்ற ஆண்டவரின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் குணாதிசயத்தையும் குறித்ததான ஆண்டவரின் வார்த்தைகளுக்கு வெகு குறைவான கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் இந்த விஷயத்தைக் குறித்து ஆராயும் போது, அவர்கள் பூரணராய் இருந்திருந்தால், இல்லையென்றால் பூரணராக செயல்பட முடியும் என்று சிந்திக்கும் பட்சத்தில் அவர்களுக்கென ஒரு இரட்சகரோ, பரிந்து பேசுகிறவரோ இருக்க வேண்டியதில்லை என்பதை மறந்து விடுகிறார்கள். நீங்கள் மாம்சத்தின் கிரியைகளினால் அல்ல, ''கிருபையினால் இரட்சிக்கப் பட்டீர்கள்''என்பதை மறந்து விடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய வார்த்தையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ''ஆயினும் உங்களாலேயாவது மனுஷருடைய நியாய நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே; ஆனதால் கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப் படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.'' (1 கொரி. 4:3–5)

நம்முடைய நம்பிக்கை நம்முடைய ஆண்டவர் மேல் உள்ளது, நம்முடைய பெலகீனமான விழுந்து போன மாம்சத்தின் மேல் அல்ல. அன்பின் ஆவியின்படி பூரணமாக, அதற்கேற்ற வகையில் நம்மால் நடக்க இயலாமல் இருந்தாலும், அதன்படி நடக்கும் படியாக, அப்படி நடக்க விரும்புகிறவர்களுக்கு, அவர் மேல் நம்பிக்கை வைத்தவர்களுக்கு கிடைக்கின்ற தேவனின் இரக்கத்தையும், கிருபையையும் குறித்து நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே நாம் மாம்சத்தில் பூரணராய் இருக்கும்படியாக அல்லாமல், ஆவியிலும் நோக்கத்திலும் பூரணராய் இருக்கும்படி நம்புகிறோம். மேலும் நம்முடைய விசுவாசமும், வைராக்கியமும் (நம்முடைய மீட்பரின் புண்ணியத்தின் வாயிலாக) நம்முடைய உண்மையான கறைகளுக்கு ஈடாக எண்ணப்படும்; இவைகளுக்கு எதிராக நாம் தினமும் முயற்சிக்கிறோம், அவைகளை வெறுக்கிறோம். இந்த விஷயத்தை குறித்து நாம் பார்க்கும் போது – சுபாவத்தின்படி மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்த நம்மை தேவன் நேசிக்கிறாரா என்று நாம் கேட்கிறோம்? அவர் நம் பட்சத்தில் இருக்கிறாரா? நம்முடைய ஒவ்வொரு நல்ல நோக்கத்திலும், முயற்சியிலும் அவர் உதவி செய்ய விரும்புகிறாரா? ஒரு வேளை அது பாதியளவுக்கு வெற்றியாக இருந்தால் அல்லது முழு தோல்வியாயிருந்தாலும் அப்படியே செய்வாரா? ஆம். ஆண்டவர் பதில் கூறுகிறார்: ''பிதாவானவர் தாமே உன்னை நேசிக்கிறார்.''மேலும், அப்போஸ்தலர் கூறும் போது நாம் பாவிகளாக இருக்கையில் நம்மில் இவ்வளவாய் அன்பு கூர்ந்து நம்முடைய மீட்புக்கென தன்னுடைய ஒரே பேரான குமாரனை தந்து அருளியிருக்கும்

போது ‘‘மற்றவைகள் (சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப் பட்டிருக்கின்ற ஒட்டத்தின் பந்தயப் பொருளை நாம் அடைய தேவையாய் இருப்பது) எல்லாவற்றையும் நமக்கு இலவசமாய் அருளாதிருப்பது எப்படி?’’நாம் பாவிகளாக இருக்கையில் நம்மில் அவர் அன்பு கூர்ந்திருப்பாரெனில், இப்பொழுது நம்மை அவருடைய குடும்பத்திற்குள் சுவிகாரம் எடுத்துக்கொண்டிருக்கும் போது, அவருடைய சித்தத்தை செய்யும்படியான ஒரு வாஞ்சையை நம்முடைய இருதயத்தில் காணும் போது, இப்பொழுது இன்னும் அதிக பட்சத்துடன் நம்மில் அன்பு கூறுகிறார். ஆகவே நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசானத் தண்டையிலே சேரக்கடவோம்.(எபி. 4:16)

இருந்தாலும், இந்தக் கேள்வியின் மறுபக்கத்திற்கு ஒரு எச்சரிக்கை அவசியமாக இருக்கின்றது. தாழ்மையும், நம்பிக்கையற்ற நிலையும், பயமும், தேவனுடைய கிருபையின் மேல் விசுவாசம் இல்லாத தன்மையும், எதேச்சதிகாரமான தன்னம்பிக்கைக்கும் தவறுகளை பாராதிருக்கிற குருட்டுத்தனத்திற்கும், மற்ற மனுஷரைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறேன் என்கிற பரிசேய ஸ்தோத்திரத்திற்கும் வழி வகுத்திருக்கிறது என்பதற்கான சான்றுகளை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். ஐயோ! இது ஒரு மோசமான நிலை, மேலும் நம்பிக்கைக்கு இடமில்லாத நிலையோ என்று பயப்படவும் செய்கிறோம். விசுவாசம் தேவைதான், ஆனால் அது தேவன் மேல் இருக்க வேண்டும், சுயத்தின்மேல் அல்ல. இப்படிப்பட்ட திசை மாறுதல் என்கின்ற நிலை பொதுவாக அன்பின் பிரமாணமாகிய பொன்னான கற்பனையை (golden rule) சரிவர கவனிக்காமல் விடும்போது ஏற்படுகிறது. ஆண்டவர் மேலுள்ள அன்பு மாறுபடும் போது– அவருடைய கிருபையின் திட்டத்தின் மேல் உள்ள அன்பு, புது சிருஷ்டியின் சகோதரர் மேல் உள்ள அன்பு, மனுக்குலத்தின் மேல் உள்ள இரக்கத்தின்படியான அன்பு மாறுபடும் போது, சுயநல அன்பு, சுய முக்கியத்துவம், சுயமகிமை ஆகியவை ஏற்படுகிறது. ஆண்டவரிடத்தி லிருந்தும், அவருடைய ஆவியினின்றும், அவருடைய இராஜ்யத்தினின்றும் தூரமாக்குகின்ற இந்த திசைதிருப்புதலைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். தலைவர்கள் விசேஷமாக இந்த ‘பொறிக்குள்’ விழக்கூடியவர்கள் என்றாலும், மற்றவர்களும் இந்த அபாயத்திற்கு முன்பாக இருக்கிறார்கள். சிலர் போதகர்களுக்குள்ள ஒவ்வொரு தகுதியிலும் குறைவுபட்டு, வருத்தத்திற்குரிய வகையில்

''மாம்ச சிந்தையினால் வீணாய் இறுமாப்பு கொண்டிருக் கிறார்கள்.''அப்படிப்பட்டவன் ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றி நோய் கொண்டவனுமாயிருக்கிறான். அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும் பொல்லாத சம்சயங்களும் உண்டாகிறது..... இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு. ''போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்.'' (1 தீமோ. 6:4–6 ; 1 யோவா. 3:9,10 ஐயும் பார்க்கவும்.)

சபை சில விஷயங்களை தீர்ப்பு செய்ய வேண்டும்

தனிப்பட்ட முறையில் நாம் நியாயம் தீர்க்கக் கூடாது, அல்லது குற்றப்படுத்தக் கூடாது என்றாலும், அவருடைய சரீரமான சபையின் அங்கமாயிருக்கிற ஒவ்வொரு புது சிருஷ்டியும், தன்னைக் குறித்த ஆண்டவரின் தீர்ப்பின் வேளையைக் குறித்து காத்திருக்க வேண்டும் என்றாலும், சில சந்தர்ப்பங்களில் சபையானது தீர்ப்பு அளிக்க கடமைப்பட்டுள்ளது. உதாரணமாக, அப்போஸ்தலர், ஒருவன் விபசாரத்தில் ஈடுபட்டிருப்பது அவன் மூலம் வெளியரங்கமாய் தெரிந்த போது, அவனுடைய ஒழுக்கக் கேடு முழு சபைக்கும் தெரிந்திருக்கிறது என்கிறார். இப்படியான மிக சுதந்திரமாக செயல்பட்டு, அதை பகிரங்கமாக அறிக்கையிடுகிற ஒருவனுடன் சபை ஐக்கியம் கொள்ளக் கூடாது என்கிறார். உடனடியாக தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை உபயோகித்து அவனை சபையை விட்டு வெளியேற்றி, அதன் மூலம் விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து தனிமைப்படுத்தி, சிட்சைக்கும், அவனுடைய மாம்சத்தின் அழிவுக்கும் சாத்தானுக்கு பாவனையாக ஒப்புக் கொடுத்து, அதன்படியாக அவனுடைய ஆவி, புதிய சிந்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே, அதாவது இந்த யுகமுடிவிலே இரட்சிக்கப் படும்படி வழிவகுக்கிறார். (1 கொரி. 5:5)

அனனியா, சப்பிராள் (அப்.5:1–11) என்பவர்களை பேதுரு போன்ற ஒரு அப்போஸ்தலனால் மாத்திரமே விசாரிக்க முடியும் என்பது போன்று, ஆண்டவரால் மாத்திரமே அல்லது அவருடைய அப்போஸ்தலர்களில் ஒருவரால் (விஷேசமான 12 பேர், அவர்களில் பவுல் கடைசியாக யூதாசின் இடத்தில் தெரிந்துக்கொள்ளப்பட்டார்) மாத்திரமே அதிகாரத்துடன், உரிமையுடன் சொல்லப்பட்ட விஷயத்தில் நடந்திருக்கமுடியும். அப்போஸ்தலராகிய பவுல் தன்னுடைய நிலைமையை இன்னும்

விரிவுபடுத்திக்கூறும் போது ''விபசாரக்காரரோடு கலந்து இருக்கக் கூடாது என்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்'' என்கிறார். தொடர்ந்து ''ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலத்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்குமே'' என்கிறார். அர்ப்பணிப்பு செய்யாதவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வது ஒரு புறம் இருந்தாலும், அவர்களை புது சிருஷ்டியின் உடன் அங்கங்களாக ஏற்றுக் கொள்வது முற்றிலும் வித்தியாசமான விஷயம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஒழுக்கத்துக்குரிய நெறிகளை தளர்த்துவது என்பது குற்றம் இழைப்பவருக்கு அன்பு காட்டுவது போன்று இருக்காது, அதற்குப் பதிலாக அவன் தன்னுடைய அசுத்த நிலைமை, அவனை ஆண்டவருடைய ஜனங்களிலிருந்து முற்றிலுமாக பிரிந்து விட்டது என்பதை அவன் கண்டால் அது அவனுக்கு இன்னும் அதிகமாக உதவியாக அமையும். அவன் உண்மையிலேயே ஆவியினால் பிறந்தவனாயிருப்பானாகில், அவன் வெகு துரிதமாகவும், ஆர்வத்துடனும் தன்னுடைய உண்மையான நிலையை அறிந்து கொள்வதுடன், பாடத்தை கற்று மனந்திரும்புவான். சபை அறியாமலேயே அன்பை அப்படியாக குற்றமிழைத்தவனுக்கு காட்டியபடியால், அதன் மூலம் சபை மத்தியில், ஒரு பொதுவான சோர்வு வரும்படியாகவும், கொரிந்து சபையில் காணப்படுகிற நிலைமைகளை மற்ற சபையில் உள்ளவர்கள் அறிய வரும்போது அந்த விசுவாசிகள் மத்தியில் அந்த நிலைமை தொற்றிக்கொள்ளக்கூடியதாகவும், வரும்படி வாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரு ஆபத்து வந்தது.

இப்படிப்பட்ட விஷயங்களில் விசுவாசிகளின் கடமை என்ன என்பது பற்றி அப்போஸ்தலர் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறார். அவருடைய வார்த்தைகளின் சாராம்சத்தை நாங்கள் கீழே தருகின்றோம். நான் உங்களுக்கு எழுதியதென்ன வென்றால், சகோதரன் எனப்பட்ட ஒருவன் விபச்சாரகாரனாயாவது, பொருளாசைக்காரானாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனா யாவது, கொள்ளைக் காரனாயாவது இருந்தால், அவனோடு கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனோடு கூடப் புசிக்கவும் கூடாது. உண்மையிலே, புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? ஆனால் ஒரு சபையானது, சகோதரர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்

பட்டவர்களை தீர்ப்பு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தேவனே தீர்ப்பு செய்வார்; நீங்கள் பொல்லாத நபர்களை உங்கள் மத்தியிலிருந்து அகற்றுவது உங்களுடைய கடமையாகும்.(1 கொரி. 5 அதி)

அப்போஸ்தலர் இந்த விஷயத்தைக் குறித்து, மேலும் கூறும்போது சகோதரர்கள் மத்தியில் பிரச்சனைகள் எழும்போது, அந்த தவறை பொறுமையாக தாங்கிக் கொள்ள முடிந்தால் நல்லது, அப்படி இல்லாத பட்சத்தில் வேறு வழியில்லாவிட்டால் அதை சபைக்கு, அதை நீதிமன்றமாக எண்ணி எடுத்துச் செல்லலாம். ஆனால் உலகப்பிரகாரமான நீதிமன்றங்களுக்குச் செல்லும் எண்ணம் இருப்பதை கண்டிக்கிறார். அப்போஸ்தலர் மேலும், உலகத்தைத் தீர்ப்புச் செய்யும்படி, தேவன் சபையை எதிர்கால நியாயாதிபதியாக தெரிவுசெய்து கொண்டிருப்பாரெனில், சபையின் அங்கத்தினர்களில் அற்பமாய் எண்ணப்பட்டவர்கள் கூட உலகத்தாரைக் காட்டிலும், இப்பொழுது கூட தங்கள் தீர்மானங்களில் உண்மையாயும், நியாயமாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்கள் கூட இந்த விஷயத்தில் நம்பக்கூடியவர்களாக இருக்க வேண்டும். உங்கள் மத்தியில் நீங்கள் எடுக்கும் தீர்மானங்களை, விவாதம் பண்ணக் கூடியவர்கள் கூட ஏற்றுக்கொள்ளக் கூடியஅளவிற்கும், எல்லாரும் முழு மனதுடன் நம்பக்கூடிய அளவிற்கும் செய்யத் திறமை பெற்ற ஞானமும், நேர்மையும் உள்ளவர்கள் ஒருவரும் இல்லையா?

''நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை?'' தீர்மானிக்கப்பட்டது அநீதி என்று நீங்கள் எண்ணுவீர்களானால் ஏன் அநியாயத்தை சகித்துக் கொள்ளுவது இல்லை? நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுவதை விட ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறது இல்லை? அப்படியிருக்கலாகாது என்கிறார் அப்போஸ்தலர். கிறிஸ்துவின் சரீரமான சபையில் சமாதானமும் ஒற்றுமையும் இருப்பதற்காக அநியாயத்தை சகித்துக் கொள்ள விருப்பமற்றவர்களாய் உங்களில் சிலர் இருப்பதை மாத்திரமல்ல, அதற்கு மேலாக மோசமானதாகிய, தங்களுடைய சகோதரர்களுக்கே அநியாயம் செய்யவும், குற்றம் செய்யவும் வாஞ்சையுள்ளவர்களாய் சிலர் இருப்பதையும் காண்கிறேன். இராஜ்யத்தை சுதந்தரிக்கும்படியாக நீங்கள் தேவனுடைய சபையாக இல்லையா? ''அநியாயக்காரர் தேவனுடைய

இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப் படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாகக்கப் பட்டீர்கள்'' (1 கொரி. 6:1–11.)

பரலோக இராஜ்யத்தை சுதந்தரிக்க தடை செய்கிற, இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றங்களே, சபையில் ஐக்கியம் கொள்ளக்கூடாதபடி தடை செய்கிற காரியங்களுக்கு ஒரு வழி முறையாக இருக்க வேண்டும். இவைகள் எல்லாவற்றையும் குறித்து, ''அந்த பொல்லாங்கனை உங்களை விட்டுத் தள்ளிப் போடுங்கள்'' என்கிற வார்த்தை சரியான பொருளுள்ளதாயிருக்கிறது. இந்தக் குற்றங்களில் யாதொன்றைச் செய்பவர் எவராயிருந்தாலும் அவர் நீக்கப்பட வேண்டும்.

''உன் சகோதரன் உனக்கு எதிராக குற்றம் செய்தால்?''

''நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களை நியாயந்தீர்க்காதிருங்கள்'' என்கிற நம்முடைய ஆண்டவரின் கட்டளைக்கு இது முரண்பாடாக இல்லையா? முதலில் நாம் பொல்லாங்கு செய்கின்றவனை தனிப்பட்ட விதத்தில் நியாயம் தீர்க்காதிருந்துவிட்டு, அதன் பின்பு அவனது பொல்லாப்பைப் பற்றி பேசி அல்லது வீண் பேச்சு பேசி, அதன்படி அவனுடைய காரியங்கள் முழுவதும் சபைக்கு தெரியவரும்போது, அதன்பிறகு பொல்லாப்பு செய்தவனை விலக்கி வைக்கலாமா?

அப்படி இல்லவே இல்லை. திவ்விய கட்டளையை, ஒழுங்கை சரியாகப் புரிந்து கொள்ளும் போது அதில் முரண்பாடு இல்லவே இல்லை. உதாரணமாக A என்பவருக்கும் B என்பவருக்கும் இடையில் ஒரு கருத்து வேற்றுமை இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளுவோம். B தனக்கு ஒரு தவறு செய்து விட்டார் என்று A எண்ணுகிறார்; அப்படியிருக்கும் போது,

அவர் B ஐ குற்றப்படுத்துகிற மாதிரி தீர்ப்பு செய்யக் கூடாது. அவர் ''நமக்கு இடையில் கருத்து வேறுபாடு உள்ளது, நான் செய்தது சரியானதுதான்''என்று மாத்திரம் சொல்ல வேண்டும். அதே வேளையில் B ம் தான் சரியான நிலையில் தான் இருக்கிறேன், நான் தவறு இழைக்கவில்லை என்ற உறுதியுடன் இருக்கலாம். இதன் காரணமாக A , B உடன் ஐக்கியம் கொள்ளுவதை விட்டு விடாதிருக்க வேண்டும், அப்படி ஐக்கியத்தை விட்டு விடுவது, அவனை நியாயந்தீர்ப்பது அல்லது குற்றப்படுத்துவது ஆகும். அவன் தனக்குள் சொல்லிக் கொள்ளலாம்: ''விஷயம் மிகச்சாதாரணமானது, இது சகோதரருக்கிடையில் இருக்கிறபடியினால் நான் அதை விட்டு விடுவேன், ஏனெனில் B ஆண்டவருக்குள் இருக்கிற ஒரு சகோதரனாக இருக்கிறான், ஆனபடியால் வேண்டுமென்று அவன் எனக்கு தவறு செய்யமாட்டான், தவறு என்னுடையதாக இருக்கக் கூடும் அவனுடையதல்ல.''

இருந்தாலும், இந்த கருத்தை அவனால் எடுக்க முடியாவிட்டாலும் கூட அவன் தீர்ப்பு கூறக் கூடாது, தான் சரியென்றும் B தவறு என்றும் தீர்மானிக்கக்கூடாது; அதற்கு பதிலாக A , B யினிடத்தில் சென்று விஷயமானது தனக்கு எப்படி தோன்றுகிறது என்று விளக்கமாகக் கூறி முடிந்தால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சகோதரத்துவத்துடன் ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும். ஆனால் அவர்கள் ஒத்து வராவிட்டால், சபையில் உள்ள ஞானமான, C அல்லது D, இரண்டு அல்லது மூன்று சகோதரர்களிடத்தில் சென்று (அவர்களிடம் A யும் B யும் நம்பிக்கை வைக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்) இந்த விஷயத்தில் அவனோடு B ஐப் பார்க்கும்படி அழைக்க வேண்டும், அதுவும் B ஐ குற்றப்படுத்துவதற்காக அல்ல, ஏனெனில் A கூட அவனை (B) நியாயம் தீர்த்திருக்க மாட்டான் அல்லது அவனை குற்றப்படுத்தியிருக்க மாட்டான், ஆனால் அப்படி செய்வதின் நோக்கம், Aம் Bம் இருக்கும் போது அந்த விஷயத்தைக் கேட்டு இருவருக்கும் ஆலோசனை சொல்லுவதற்காகவே. இது எல்லோருக்கும் திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கும்– விசேஷமாக எல்லோரும் அன்பின் ஆவியை உடையவர்களாகவும், அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கங்களாகவும் இருந்து ஒருவருக்கொருவர் நன்மை செய்ய வேண்டும் என்ற வாஞ்சையுடன் காணப்படும் போது அப்படியிருக்கும். இன்னமும் அவர்கள் மத்தியில் சமாதானம் ஏற்படுத்தப்பட முடியாமல் இருந்தால், அப்பொழுது கூட தீர்ப்பு சொல்லுவது இருக்கக் கூடாது, குற்றப்படுத்துவது கூடாது,

எப்படியெனில் இரண்டு அல்லது மூன்று சகோதரர்கள் ''தீர்ப்பு''சொல்ல முடியாது, சபை மாத்திரமே ''தீர்ப்பு''சொல்ல முடியும்.

ஆனால் C, D யினிடத்தில் A சென்ற போது அவர்கள் தங்களுடைய கருத்தை A க்கு எதிராகவும் Bக்கு சாதகமாகவும் தெரிவித்தார்களானால் அந்த விஷயம் அங்கேயே முடிவு பெறும். இப்படிப்பட்ட ஒரு சூழ் நிலையில் A இந்த விஷயத்தை சபைக்கு எடுத்துக் செல்ல முடியாது. அப்படி செய்தால் அவன் தானே தீர்மானம் எடுத்துக் கொண்டவனாயும், இந்த விஷயத்தை இன்னமும் தொடர வேண்டும் என்று எண்ணுவானால் அவன் மூர்க்க குணமுள்ளவனாய் இருக்க வேண்டும். அவனுக்கு ஆண்டவருடைய போதனைகள் இதற்கு மேலதிகமான சிலாக்கியங்களை கட்டளையிடவில்லை; (மத் 18:15) இன்னமும் அவன் திருப்தி அடையாவிட்டால், இன்னும் இரண்டு அல்லது மூன்று திறமையுள்ள, எந்தப் பக்கமும் சாயாது நடு நிலை வகிக்கும் மனதுடைய சகோதரர்களான E,F,G ஆகியவர்களை B யினிடத்தில், அழைத்துக் சென்று இன்னொருமுறை விஷயத்தைக் கூறி அவர்களுடைய கருத்தைப் பெறுவது எந்த விதிக்கும் புறம்பானது என்று நாங்கள் நினைக்கவில்லை.

ஆனால் A , C ஐயும் D ஐயும் B யினிடத்தில் கொண்டு சென்று, அவர்கள் எல்லோருமே A சொல்லுகிற மாதிரி B அவருக்கு தவறு இழைத்து விட்டார் என்று ஏகோபித்த வண்ணமாக ஒத்துக் கொண்டாலும், B தன்னுடைய நிலையை விட்டுக் கொடுக்க மறுத்தாலோ, அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் மறுத்தாலோ அல்லது தவற்றை சரி செய்யாமல் விட்டு விட்டாலோ, A , C யுடனும் D உடனும் இணைந்து சபையின் ஒரு கூட்டத்தைக் கூட்ட சிலாக்கியம் பெறுவார். A ம் Bம் முழு விஷயத்தையும் சபையில் சொல்ல வேண்டும், அதே வேளையில் B இன்னமும் சபையில் இருக்கவும், சபையின் ஆலோசனையையும், அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளுபவராகவும் அதோடு கூட மனசாட்சி உள்ளவராகவும் இருப்பது அவசியம். சபை அந்த விஷயத்தை கேட்கும் போது, சபையானது நீதிமான்களாக்கப்பட்டவர்கள், அர்ப்பணம் செய்து கொண்டவர்கள் மாத்திரம் இருக்கிற சபையாக இருத்தல் வேண்டும், மேலும் தீர்ப்பு அளிக்கும்படி அவர்களுடைய தலைவரும் ஆண்டவராயிருக்கிற ஆண்டவரின் நாமத்தில் அவருடைய நியாயத்தை வழங்க இருக்கிறார்கள். இது சபையில் பாகுபாடு உண்டாவதற்கான ஒரு விஷயமாக இல்லாது, சபையின் ஒற்றுமையையும் சமாதான கட்டையும் காத்துக் கொள்ளுவதற்காக ஆகும். A ம் B ம் வாக்கு பதிவு செய்யக்

கூடாது. மேலும், இந்த விஷயத்தில் ஆண்டவருடைய தீர்ப்பை மாத்திரம் வழங்க வேண்டும் என்கிற விருப்பமில்லாத எவரும் வாக்கு பதிவு செய்யக் கூடாது. எடுக்கப்படுகிற தீர்மானம் ஒருமனப்பட்ட அனைவரின் தீர்மானமாக இருக்க வேண்டும், அப்படி இல்லையெனில் நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்க வேண்டும், அதிகமான உணர்ச்சிவசப்படுதல் கட்டுப்படுத்தப்பட வேண்டியதாக இருந்தாலும் கூட, தீர்மானம் ஏகோபித்ததாக இருக்க வேண்டும். ''நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு'' (கலா. 6:1) என்பதின்படியாக நியாயம் எப்பொழுதும் இரக்கத்துடன் கலந்து இருக்க வேண்டும்.

சபையின் தீர்மானம் இறுதியானது என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். இப்படி ஒழுக்கத்தைக் குறித்ததான ஒரு விஷயத்தில் (மனசாட்சியைப் பற்றியதல்ல) யாராவது ஒருவர் அதன்படி கீழ்ப்படியாவிட்டால் அல்லது அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் சபைக்கு எதிர்த்து நிற்பதை விடும் வரை மற்றவர்களுக்கு ''அவன் அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பான்.'' அவன் கீழ்ப்படியும் பட்சத்தில், மன்னிக்கப்பட்டு முன்பு இருந்த மாதிரியே ஐக்கியத்திற்குள்ளாக சேர்த்துக் கொள்ளப்படுவான்; இதன் நோக்கம் என்னவெனில், சகோதரனை முற்றிலுமாக ஒதுக்கிவைத்து விட வேண்டும் என்பதல்ல, ஆனால் அவனுடைய தவறான வழி ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று காட்டுவதான் மூலம் அவன் திருந்துவதற்காக உதவி செய்வதுதான். இப்படியான ஒருவனை அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் நடத்துவது, அவன் ஒதுக்கி வைக்கப்பட்ட பின்னரும் அவனைப்பற்றி அவதூறாக பேசுவதற்கோ அல்லது அவமரியாதை செய்வதற்கோ அல்ல. ஆண்டவருடைய ஜனங்கள் எந்த வேளையிலும் அவதூறு பேசுகிறவர் களாகவோ அல்லது முதுகுக்குப்பின் பேசுகிறவர்ககளாகவோ இருக்கவே கூடாது. ''பிறனைப் பற்றி பொல்லாப்பு பேசாதே'' என்பது இதற்கு மிக பொருத்தமாய் இருக்கிறது. நாம் பொல்லாங்கும் பேசக் கூடாது, அல்லது அஞ்ஞானிகளையும் பாவிகளையும் கடுப்பாக பார்க்கக் கூடாது, மேலும் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளாமலும் இருக்கக் கூடாது. ஆனால் பரிசுத்த ஆவியினாலும், அதன் அன்பினாலும், சமாதானத்திலும் நிறைந்து இருக்கின்ற புது சிருஷ்டியின் சகோதருக்கு உரித்தான மரியாதையும், விசேஷமான ஐக்கியத்தையும் அவர்களுக்கு கொடாதிருக்க வேண்டும்.

B சபைக்கு செவி கொடாமலும் A க்கு தவறு செய்வதிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளாமலும் இருந்து, அதன் பின்னர் அவன் மனம் திரும்பி சபையின் ஐக்கியத்திற்குள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில், அவன் எப்பொழுதாவது மூப்பரின் கடமைகளை செய்யும்படி நியமிக்கப்படுவானெனில், அவனுக்கெதிராக அவனுடைய கீழ்ப்படியாமை நினைவிற்கு கொண்டுவரப் பட வேண்டும். அவன் முற்றுமாக மனச்சாட்சியுடன் இருந்தாலும், அவனுடைய சுயநலன்கள் என்று வரும் போது அவனுடைய உரிமைகளுக்காக ஒரு வகையில் மூர்க்கமாக அவருடைய வழி முறைகள் இருந்தன என்று நிரூபிக்கு மாதலால், அவர் ஊழியத்திற்கென தெரிந்து கொள்ளப்படுவதற்கு முன்னர் ஒரு நல்ல மாற்றம் இருப்பதை வெளிப்படையாக காட்ட வேண்டும். அவன் பின்னர் சபையின் தீர்மானத்திற்கு பின்னர் செவிசாய்த்து, கீழ்ப்படிந்து, A யுடன் ஒப்புரவாகினாலும், மூன்று சகோதரர்களின் ஆலோசனைக்கு செவிசாய்க்காமல், தவறை சரி செய்யும்படி சபைக்கு கொண்டு வரும் அளவுக்கு காரணமாயிருந்தது, திருப்தியற்ற நிலையை காட்டுவதாகும்.

ஏழெழுபது முறை மன்னிக்க வேண்டும்

ஒரு வேளை, A முதலாவதாக, தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை விவாதிக்கும்படிக்கு B யினிடத்தில் சென்றால், கூடிப் பேசியதினிமித்தம் B தன்னுடைய குற்றத்தை ஒப்புக் கொண்டு, தன்னால் இயன்றவரை தன் குற்றத்தை சரி செய்ய முயற்சி செய்கிறான்; அல்லது ஒருவேளை A , C யுடனும் D யுடனும் இரண்டாவது முறையாக சென்ற போது அவன் மனந்திரும்பும் பட்சத்தில் A, அவனை எப்படி பாவிக்க வேண்டும்? அவனை மன்னிக்க வேண்டும், அதுவும் மிகவும் மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும். அவன் எந்தவிதமான ஒரு தண்டனையையும் கொடாமல் ''பழிவாங்குதல் எனக்குரியது நானே பதிற் செய்வேன்''என்ற ஆண்டவருடைய வார்த்தையை ஞாபகத்திற்கு கொண்டு வர வேண்டும். ஆனால் எத்தனை முறைதான் இப்படி செய்யலாம்? அவன் மனம் திரும்பினால் எத்தனை முறை மன்னிக்கப்பட வேண்டும்? அவனுடைய பெலகீனத்தை எவ்வளவு காலத்திற்கு பொறுத்துக்கொள்ள வேண்டும்? ''ஏழுமுறையா''என்று பேதுரு கேட்டார். நம்முடைய ஆண்டவருடைய பதிலும் சரியாக வருகிறது. ''ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரம் மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்.''நம்முடைய பரமபிதா அவருடைய திவ்விய பிரமாணத்துக்கு எதிராக நாம் செய்யும் குற்றங்களை மன்னிப்பது போல, மற்றவர்களுடைய குற்றங்களை நாம் மன்னிக்க

வேண்டும். நம்முடைய சகோதரனை அவனுடைய பெலகீனத்தினிமித்தம் குற்றப்படுத்த முற்பட்டால் நாம் நம்முடைய சொந்த பலகீனங்களைக் குறித்து யோசித்து பார்க்கவேண்டும். மேலும், ''இரக்கஞ் செய்யாத வனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்''என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். (யாக்.2:13) (அத்தி. 6ல் ''சபையில் ஒழுங்கு''–பார்க்கவும்.)

சபைக்கு எதிரான குற்றங்கள்

தனிப்பட்ட நபருக்கு எதிராக உள்ள குற்றங்களை விசாரிப்பதில் பின்பற்றவேண்டிய சரியான முறையை நாம் பார்த்தோம். ஆனால் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ள விபசாரம், மற்றும் மற்ற பாவ காரியங்களின் குற்றம் சபையில் உள்ள எந்த குறிப்பிட்ட அங்கத்தினருக்கும் எதிராக இல்லாமல், முழு சபைக்கும் எதிராக– நாம் எல்லோரும் வைத்திருக்கிற ஒழுங்கு முறைகளுக்கு எதிராக இருக்கலாம். அப்பொழுது நாம் கைக்கொள்ள வேண்டிய வரை முறை என்ன?

செய்யப்பட்ட பாவம் பொது சொத்துக்குரியதாக இல்லாவிடில், தனி நபரின் குற்றத்தைப் போலவே அது இருக்கும். ஆனால் அந்த விஷயம் எல்லாருக்கும் தெரிந்து இருந்தால், தனிப்பட்டமுறையில் சென்று சந்திப்பதை விட்டு, குறிப்பிட்ட நபர் நியாயம் தீர்க்கப்படும்படி சபைக்கு கொண்டு வரவேண்டியது மூப்பர்களின் கடமையாகும். ஏனெனில், அது எல்லோருக்கும் தெரிய வந்துள்ளபடியால், தனிப்பட்ட விதத்தில் தீர்த்து வைப்பதற்கு சாத்தியப்படாது. அதே போன்று, அவதூறு மூப்பர்களுக்கோ, அல்லது அவர்களில் யாருக்கேனும் எதிராக இருக்குமானால், விசாரிக்கப்பட வேண்டியது சபையினாலாகும், தனிப்பட்ட முறையில் அல்ல. ஏனெனில் அவதூறாக பேசினவர்கள், உண்மை தங்கள் பக்கம் இருக்கிறது என்று நிச்சயமாக எண்ணினால், ஆனால் அதே வேளையில் ஆண்டவருடைய கட்டளையை கவனிக்காமல் இருந்தால் (''அவன் தனித்திருக்கும் போது செல்,'' அதன் பிறகு, ''இரண்டு அல்லது மூன்று சாட்சிகளோடு செல்''), கேவலமான, நற்பெயரை பாதிக்கக் கூடிய கட்டுக்கதைகளை பரப்பி இருந்தால், தனிப்பட்ட முறையில் தீர்வு காணமுடியாது என்ற நிலைக்கு கொண்டு வந்துவிட்டபடியால், அது சபையால் விசாரிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

இப்படிப்பட்ட விஷயங்களில், அவதூறுக்குள்ளான மூப்பர், சபையின் பிரதிநிதிகளாகிய மூப்பர்களின் குழுவை கூட்டுவதும்,

பொய்க்குற்றச்சாட்டை மறுப்பதும், அவதூறு பேசினவர்கள் சபைக்கு முன்பாக, அவதூற்றையும், பொய்யான சாட்சிகளையும் பதில் சொல்லுமாறு கேட்கப்படுவது சரியானதே; ஏனெனில் குற்றப்படுத்தப் பட்டவர்கள் சபைக்கு எதிராக குற்றம் இழைத்திருக்கிறார்கள்; (1) அது சபையின் தலையாய் இருக்கிறவரால் நியமிக்கப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கு எதிரானது, நல் நடத்தைக்கும் ஒழுக்கத்திற்கும் எதிரானது. (2) அவதூறு சபையினால் தெரிந்து கொள்ளப்பட்ட மூப்பருக்கு எதிரானது என்று வரும் போது, அது முழு சபைக்கும் எதிரானதாகும். அவதூறு பேசினவர்கள், குற்றப்படுத்தப்பட்டு, கண்டிக்கப்பட்டு அவர்களுடைய குற்றத்தை ஒத்துக் கொள்ள கேட்கப்பட வேண்டும். ஆனால் இதற்கு பின்னர், தவறு செய்துள்ளார் என்று கூறப்படும் மூப்பருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு, அவர்கள் முதலிலேயே செய்திருக்க வேண்டிய பிரகாரம் செய்ய உரிமை உண்டு.

நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்

– 2 கொரி. 5:10

இதில் ''நாம்'' என்ற வார்த்தை, சந்தேகத்திற்கு இடமில்லாமல் சபையை – புது சிருஷ்டியைக் குறிப்பிடுகின்றது. இருந்தபோதிலும், இதை மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும் போது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள் என்று மத் 25:31–46 ல் கூறப்பட்டதோடு கூட சேர்த்து குழம்பி விடக்கூடாது. மனுஷகுமாரன் ''தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் போது,'' அவருக்கு உண்மையுள்ள சபையாகிய மணவாட்டி, அவருடைய மகிமையிலும், சிங்காசனத்திலும் பங்கு பெறுவதோடு கூட, ''கல்லறையில் உள்ள அனைவரும்'' உட்பட சகல ஜனங்களும் ஆயிரம் வருட நியாயத்தீர்ப்படையும் போது, அதிலும் பங்கு பெறுவார்கள்.

சபை நியாயத்தீர்ப்பளிப்பது குறித்து நம்முடைய ஆண்டவரால், மத். 25:14–30லும், லூக். 19:12–26லும் குறிப்பாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது. அது இந்த யுகத்தின் இறுதியில் ராஜா உலகத்தாரோடு தொடர்பு கொள்வதற்கு முன்பாக, அவருடைய இரண்டாம் வருகையின்போது அவருடைய முதல் வேலையாக இருக்கும். முதலாவது தன்னுடைய ஊழியக்காரர்களை அழைத்து, அவர்களிடத்தில் கொடுக்கப்பட்ட பல்வேறு உக்கிராணத்துவம், தாலந்துகள், நன்மைகள்,

தருணங்கள் ஆகியவற்றை உபயோகப் படுத்துவதில் கவனமாக இருந்திருக்கிறார்களா, தியாகமனப்பான்மையோடு உபயோகித்திருக் கிறார்களா, அதில் உண்மையும் உத்தமுமாய் இருந்திருக்கிறார்களா என்று பார்ப்பார். அவர்கள் எல்லாரும் விசாரிக்கப்பட்டு, உண்மையாய் இருந்தவர்கள் வெகுமதியைப் பெறுவதுடன், இரண்டு அல்லது ஐந்து அல்லது பத்து பட்டணங்கள் மேல் அதிகாரம் பெறுவார்கள், இன்னொரு விதத்தில் சொல்ல வேண்டுமெனில் ''ஆண்டவருடைய சந்தோஷத்தைப்''பெறுவார்கள். எல்லோரும் மகிமையும் கனமும் உள்ளவர்களாய் இருந்த போதிலும், வெகுமதியானது மகிமையையும் கனத்தையும் பொறுத்த வரையில் ஒரே மாதிரியாயிருக்காது. நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது போன்று, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகின்ற அனைவரும் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கு பெறுவது விசேஷித்ததாய் இருக்கிறது.

உண்மை, அன்பு, வைராக்கியம் ஆகியவைகள்தான் பரீட்சிக்கப் படுகின்றவை களாகும். தாலந்துகளை பெற்றிருந்தும் அவற்றை பூமியில் புதைத்து வைப்பவர்களும், அல்லது வியாபாரத்தில் அல்லது களியாட்டங்களில் புதைத்து வைப்பவர்களும் அல்லது அசதியாய் இருப்பவர்களும், இப்படியாக அன்பிலும், நன்றியிலும் குறைவு பட்டிருப்பவர்கள், இதன் விளைவாக இராஜ்யத்திற்கு தகுதியற்றவர்களாய் ஆவதுடன், ''ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள்'' பிரவேசிக்க மாட்டார்கள், அது மாத்திரமல்ல அவரோடு ஆளுகை செய்யவும் உலகத்தை ஆசீர்வதிக்கவும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

''கர்த்தர் அறிந்திருக்கிறார்''

– 2 பேது. 2:9 –

''நான் பயப்படாமல் நம்பிக்கையாய் இருப்பேன். ஏசா. 12:2''

''அடிவானத்தின் குறுக்காக புயல்–மேகங்கள் உருண்டோடுகின்றன,
சத்தத்திற்கு மேல் சத்தமாக இடி முழுக்கங்கள் கேட்கின்றன:
மின்னல் மின்னுவது தெளிவாகவும், கம்பீரமாகவும் உள்ளது;
இருந்தாலும் இந்த இதயத்தில் பயம் ஒரு போதும் எழுந்ததில்லை,
அது எழுதப்படவில்லையா எல்லா இடத்திலும் காட்டப்படவில்லையா,
'கர்த்தர் தம்முடையவர்களை இரட்சிக்க அறிந்திருக்கிறார்!'

“ வாளின் பளபளப்பு தூரத்தில் காண்கிறோம்,
காயப்பட்டவர்களின் இறக்கிறவர்களின் முனகல்கள் நாம் கேட்கிறோம்;
யுத்தங்களும் இரத்தம் சிந்துதலும் பெருகிக்கொண்டு போகிறது;
ஆனால் இவைகளில் ஒன்றும் ஒரு பயத்தை உண்டு பண்ணமுடியாது;
அது எழுதப்படவில்லையா, எல்லா இடங்களிலும்
காட்டப்படவில்லையா,
‘ கர்த்தர் தம்முடையவர்களை இரட்சிக்க அறிந்திருக்கிறார்!’

“ நாம் எதிர்க்கிற சத்துரு தேர்ச்சியிலும் தந்திரத்திலும்,
அவன் விரித்திருக்கிற வலை உண்மையிலேயே அதிகம்;
சாத்தானுடைய தந்திரங்கள் நாம் அறியாததல்லவே,
இருந்தாலும் அவனுடைய சோதனைகளைக் குறித்து நாம்
பயப்படோம்;
அது எழுதப்படவில்லையா, எல்லா இடத்திலும் காட்டப்படவில்லையா,
‘கர்த்தர் தம்முடையவர்களை இரட்சிக்க அறிந்திருக்கிறார்!’

“ கர்த்தர் அறிந்திருக்கிறார் – அனேக முறைகளில் நாம் திகைத்தாலும்,
நம்முடைய உள்ளக்கருத்தில் ஒரு பாதையும் தெளிவாக இல்லை;
ஆனால் நாம் அவருடைய அளவற்ற ஞானத்தினால்
நடத்தப்படுகிறபடியால்
அவர் பேசிய வார்த்தை எல்லா பயத்தையும் நீக்குகிறது;
அது எழுதப்படவில்லையா, எல்லா இடத்திலும் காட்டப்படவில்லையா,
‘கர்த்தர் தம்முடையவர்களை இரட்சிக்க அறிந்திருக்கிறார்!’

“ கர்த்தர் அறிந்திருக்கிறார் என்பது நம்முடைய பெலவீனத்தில்,
பெலனாகும்,
புயல் மேகங்கள் தோன்றினாலும், சூரியப்பிரகாசம் வாக்குத்தத்தம்
பண்ணப்பட்டுள்ளது;
ஒவ்வொரு யுத்தத்தின் மத்தியிலும் ஒரு அமைதியான காப்புறுதி,
ஒவ்வொரு சோதனையிலிருந்தும், பயத்தினின்றும் தப்பித்துக்
கொள்ள வழி;
அது எழுதப்படவில்லையா எல்லா இடத்திலும் காட்டப்படவில்லையா,
‘கர்த்தர் தம்முடையவர்களை இரட்சிக்க அறிந்திருக்கிறார்!’

அத்தியாயம் 10

புது சிருஷ்டியின் ஞானஸ்நானம்

இரண்டாம் நூற்றாண்டில் உள்ள ஞானஸ்நானம் – ஞான ஸ்நானத்தின் ஆதரவாளர்கள்–ரோம சபையின் ஞானஸ்நான சடங்காச்சாரங்கள் – குழந்தை ஞானஸ்நானம், ஏன் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது – ஞானஸ்நானத்தைக் குறித்து வேத வாக்கியங்களின் சாட்சி –''சீஷர்கள்'' சபையின் கருத்து – ''பேப்டிஸ்ட்'' சபையின் கருத்து – உண்மையான கருத்து – கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் – ''எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்''– அக்கினி ஞானஸ்நானம் – தண்ணீரால் செய்யப்படும் அடையாள ஞானஸ்நானம் – அடையாள ஞானஸ்நானம் அவசியமா? – சரியான அடையாளம் – யார் அதைக் கொடுக்கலாம் – உபயோகப்படுத்தப்படவேண்டிய வார்த்தைகள் – அடையாளத்தை திரும்பத் திரும்ப உபயோகிப்பது – ''மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்''

ஞானஸ்நானத்தை கொடுக்கும் முறையிலும், அதனுடைய முக்கியத்துவத்தைக் குறித்தும் குழப்பமும், பல விதமான கருத்துக்களும் இருந்தாலும், புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தை கற்றுக் கொடுக்கிறது என்பதை புரிந்து கொள்வதில் கிறிஸ்தவ மக்கள் ஒன்றுபட்டு இருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் மறைமுகமாக குறிப்பிட்டிருந்த விசுவாச துரோகம் என்பது, இரண்டாம் நூற்றாண்டு அளவில் பரவி, அந்த காலங்களில் பேர் சபையில், அறியாமையினால் ஞானஸ்நானத்தைக் குறித்து மூட நம்பிக்கைகள் முக்கிய இடத்தைப் பெற்று விட்டன. தண்ணீர் ஞானஸ்நானம் பெறும்போது, பழைய

பாவங்கள் நீக்கப்பட்டு அந்த நபரை தேவனோடு உறவு முறைக்கு கொண்டு வருவதாக இருந்தது மாத்திரமல்ல, அதன் மூலம் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர் என்ற முறையில் சில கிருபைகளை அல்லது நன்மைகளைக் கொண்டு வருவதாகவும் இருந்தது, இப்படியில்லாத பட்சத்தில் அவைகள் கிடைக்காது என்றும் இருந்தது. ஆகவே, அந்த ஆரம்ப நாளில் விசுவாசிகள் தங்களுக்கென ஞானஸ்நானத்தை நாடினது மாத்திரமல்ல, தங்கள் குழந்தைகளுக்கும் வேண்டும் என்றார்கள். ஆனால் குழந்தைகளால் விசுவாசிக்கவோ, தாங்களாகவே உடன்படிக்கையின் வாக்குத்தத்திற்குள் பிரவேசிக்கவோ இயலாததால், பெற்றோர்களைத் தவிர மற்றவர்களும் கூட, இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு முன்வருபவர்களாக, ''ஆவிக்குரிய பெற்றோர்களாரும்படி'' ஒரு ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டது. பிள்ளைகள் ஆண்டவரை விசுவாசிக்க வேண்டும், அவருடைய வழியில் நடக்க வேண்டும் என்று பயபக்தியுடன் வாக்கு பண்ணினதோடு, அவர்களுடைய பக்தி வளர்ச்சியில் முன்னேற்றம் அடையும் பொறுப்பையும் தாங்களே கவனித்துக் கொள்வோம் என்றார்கள். இவர்கள் ஞானதகப்பன் என்றும் ஞானதாய் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

அக்காலத்திய போதகர்களும், போதிப்பவர்களும், பாரம்பரியங்களிலும், சின்னங்களை விரிவுபடுத்தும் காரியங்களிலும், அவைகளின் அர்த்தத்தை கூறுவதிலும் மிக துரிதமாக வளர்ச்சி பெற்றார்கள். மூன்றாவது நூற்றாண்டில் ஆலயங்களுக்கு வெளியில் ஞானஸ்நான காரியங்களுக்காக விசேஷமாக ஞானஸ்நானத் தொட்டிகள் கட்டப்பட்டன. அவைகள் ஒரு தனி அறையை ஒட்டி வெளிப்புறத்திற்கு வரும்படியாக வசதியுள்ள இன்னொரு முற்றமும் கட்டப்பட்டன. இந்த முற்றம் பொது மக்களுக்குரிய இடம், இதில் அவர்கள் முன்னிலையில் ஞானஸ்நானத்திற்கான உறுதிமொழிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன, அதன் பின்னர், அந்த நபர் ஞானஸ்நான தொட்டியில் தனியான முறையில் ஞானஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டார். ஞானஸ்நானத்தை நடத்துகிற ஊழியக்காரர், ஞானஸ்நானம் பெற வந்தவரிடத்திருந்து பிசாசுகளை விரட்டுவதற்காக, பிதா, குமாரன், பரிசுத்த ஆவிக்கு அடையாளமாக அவருடைய முகத்தில் மூன்று முறை ஊதினார். ஞானஸ்நானத்திற்கு என்று வைக்கப்பட்டிருத்த தண்ணீர் பரிசுத்தமானது என்ற அர்த்தத்தில் ஒரு விரிவான ஒழுங்கு முறையின்படி புனிதப்படுத்தப்பட்டது. அந்த ஒழுங்கு முறையில் ஒரு பகுதி,

தண்ணீரிலிருந்து அசுத்த ஆவிகளை விரட்டுவதற்கான முறைகளை கையாளுவதாகும். பழைய மனுஷனை களைந்து எறிவதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெறுவரின் உடைகள் எல்லாம் அகற்றப்பட்டன; அதன் பின்னர் மூன்று முறை, ஒரு முறை பிதாவின் நாமத்திலும், ஒரு முறை குமாரனின் நாமத்திலும், ஒரு முறை பரிசுத்த ஆவியின் நாமத்தினாலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இந்த ஞானஸ்நானம் ஆலயத்திற்கு வெளியே கொடுக்கப்பட்டது, அவன் இன்னமும் ஆலயத்தின் ஒரு அங்கத்தினன் அல்ல; மேலும், இப்படியான ஒரு ஒழுங்கின்படியில்லாமல் அவன் அங்கத்தினன் ஆக முடியாது என்பதைக் காட்டுவதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. ஞானஸ்நான ஆராதனை முடிந்த பின்னர், வருகின்ற ஞாயிற்றுக்கிழமை வரை, அங்கத்துவத்திற்காக வெள்ளை ஆடைகள் அணிய வேண்டும். பிற்காலத்தில் ஞானஸ்நானம் ஆலயத்திற்கு வெளியே தனித்து வைப்பது நின்று விட்டது, ஞானஸ்நான தண்ணீர் தொட்டிகள் ஆலயத்திற்குள் கட்டப்பட்டன.

ரோமன், கிரேக்க கத்தோலிக்கர்கள், நம்முடைய காலத்திற்கு உகந்த சில மாற்றங்களை செய்துவிட்டு, மூன்றாம் நூற்றாண்டு காலத்திய விரிவான சடாங்காச்சாரங்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, இன்னுமும் பின்பற்றி வருகிறார்கள். ரோம சபையின் ஞானஸ்நான சடங்காச்சாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன, ஆனாலும் அவைகள் எல்லாம் உலகளவில் பின்பற்றப்படவில்லை.

1) குழந்தை, சபை இல்லாமல் வைக்கப்பட்டிருப்பதின் நோக்கம், உண்மையிலேயே அது பரலோகத்திலிருந்து வெளியே வைக்கப் பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக. சபை பரலோகத்திற்கு அடையாளமாக உள்ளது.

2) குருவானவர் குழந்தையின் முகத்தில் மூன்று முறை ஊதுகிறார், இப்படிச் செய்வது தேவனுடைய ஆவியால் மாத்திரமே பிசாசை விரட்ட முடியும் என்பதை குறிப்பதற்காக ஆகும்.

3) சிலுவையின் அடையாளம் குழந்தையின் நெற்றியிலும், மார்பிலும் போடப்படுகின்றது.

4) உப்பை, அசுத்த ஆவிகள் விரட்டுவதற்கான சடங்காச்சாரத்திற்கு பின்னர் பாலகனின் வாயில் போட்டு, அதனால் ஞானம் அவனை சீரழிவிலிருந்து பாதுகாக்கும் என்பதை குருவானவர் காட்டுகிறார்.

5) குழந்தையிலுள்ள அசுத்த ஆவிகள் விரட்டப்பட்டது.

6) ‘‘எப்பாத்தா’’ என்ற வார்த்தையை உச்சரித்த வண்ணம், குருவானவர் அவனுடைய வாயையும் காதுகளையும் எச்சிலினால் தொடுகிறார்.

7) குழந்தை ஆடை இல்லாமல் இருக்கிறது, பழைய மனுஷனை களைந்து விட்டதற்கு அடையாளமாக.

8) குழந்தையை முன்பாக கொண்டு வருபவர்கள், சபைக்கு அடையாளமாக இருக்கிறார்கள்.

9) பிசாசையும் அவன் கிரியைகளையும் வெளியே அப்புறப்படுத்துவது செய்யப்பட்டது.

10) அவன் எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறான்.

11) விசுவாச அறிக்கை செய்யப்படுகிறது.

12) அவன் ஞானஸ்நானம் பெறுவானா என்ற கேள்வி கேட்கப்படுகின்றது.

13) ஏதாவது ஒரு பரிசுத்தவானின் நாமம் அவனுக்கு கொடுக்கப்படுகிறது, அவர் அவனுக்கு முன் மாதிரியாகவும், பாதுகாவலராயும் இருப்பார்.

14) அவர் மூன்று முறை தண்ணீருக்குள் போடப்படுகிறான் அல்லது தண்ணீர் அவனுடைய தலையின் மேல் ஊற்றப்படுகிறது.

15) அவன் சமாதானத்திற்கான முத்தத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான்.

16) அவன் தலையின் மேல் அபிஷேகம் பண்ணப்படுகிறான், ஞானஸ்நானத்தின் மூலம் அவன் ஒரு ராஜாவும் ஒரு ஆசாரியனாவும் ஆகிறான் என்பதைக் காட்டுவதற்காக.

17) அவன் வெளிச்சத்தின் பிள்ளையாகிவிட்டான் என்பதைக் குறிப்பதற்காக, எரிகிற ஒரு மெழுகுவர்த்தியை அவன் பெற்றுக் கொள்ளுகிறான்.

18) அவன் வெள்ளைத் துணியில் சுற்றப்படுகிறான், அவனுடைய ஞானஸ்நான தூய்மையைக் காட்டுவதற்காக. (Elliott’s Delineation of Romanism, Vol.I, page 240; Roman Catholic Catechism, page 252)

இன்றைக்கு உள்ள பல்வேறு புராட்டஸ்டான்ட் சபைகளின் அமைப்புகளில் 1200 வருடங்களுக்கு மேலாக, அதற்கு முன்னான ஞானஸ்நானத்தைக் குறித்த தவறான முறைகள் நடை பெற்று வந்தன. நிச்சயமாகவே, இந்த காரியங்குறித்து ஓரளவுக்கு தெளிவாக வெளிச்சத்தில் கண்ட ஆண்டவருடைய சில ஜனங்கள் இருந்தார்கள், ஆனால் அப்படிப்பட்டவர்கள் மிகச் சிலராகவே இருந்தார்கள் நாம் சொல்லலாம், ஆனால் சரித்திரத்தின் வாயிலாக அவர்களைக் குறித்தோ அல்லது அவர்களுடைய வேறுபட்ட கருத்தைக் குறித்தோ எந்த விதமான குறிப்பும் நமக்கு கிடைக்க வில்லை. 15வது, 16வது நூற்றாண்டுகளில் உள்ள புராட்டஸ்டான்ட் மக்கள், இந்த மாதிரியாக பாரம்பரியங்களை கொண்டிருந்து, அவைகளில் பங்கு பெற்றார்கள்; அவர்கள் கொண்டிருந்த வலிமையான சடாங்காச்சாரங்களை விட்டு அதிகமாக வெளிவந்திருந்த போதிலும், ஓரளவுக்கு அவர்கள் அதன் செல்வாக்குக்கு கட்டுப் பட்டவர்களாகவும், அதே பொதுவான கருத்துக்களை உடையவர் களாகவும் இருந்து, பழக்கவழங்களைப் பின்பற்றி வந்தது ஆச்சரிய மானதல்ல. இன்றைக்கும் கூட புத்திசாலிகளாயிருக்கிற மக்களுக்கு, மூட நம்பிக்கையினாலே உண்டான பயம் தங்களுடைய குழந்தைகளைக் குறித்து உள்ளது. தங்களுடைய குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னர், பாலகராக இருக்கும் போது, அவர்கள் பாவ மன்னிப்பைப் பெறாமல், சபையில் அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பாக மரிக்க நேர்ந்தால் அவர்களுடைய நித்தியம் எப்படிப்பட்டதாக இருக்குமோ என்று பயப்படுகிறார்கள். எல்லா சபை பிரிவுகளிலும் சிலாக்கியம், அதிகாரம், அங்கீகாரம் ஆகிய எல்லாவற்றையும் குருவானவர்கள் கைகளிலே வைத்துக் கொள்ள எல்லா விதமான முயற்சிகளும், மூட நம்பிக்கையினால் உண்டான பழக்க வழக்கங் களின்படி மேற் கொள்ளப்பட்டிருப்பதை நாம் காணமுடிந்தாலும், ஒரு பாலகன் ஜீவிக்க இனியும் சாத்தியமில்லை, மரணம் ஏற்படக்கூடும் என்ற ஒரு நிலையில், உடனடியாக ஒரு குருவானவரை அழைத்துவர முடியாத சந்தர்ப்பத்தில், யாரேனும் ஞானஸ்நான ஆராதனையை நடத்தலாம் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்படி ஒரு சிந்தனை வருவதற்கு காரணம் குழந்தையின் நித்திய வாழ்வைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதுதான். சாதாரண மக்களின் இப்படியான சிலாக்கியம், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ரோம, கிரேக்க கத்தோலிக்கர் ஆலயங்களில் கூட ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.6ம்

எட்வர்டு மன்னனின் ஆட்சியின் போது, ஆங்கிலேய சபையில் (Church of England) வழிகாட்டியாக உள்ள விதி முறைகளின்படி, இந்த விஷயம் இப்படியாக கூறப்பட்டிருந்தது: ''முக்கிய காரணமும், தேவையும் இல்லாதிருக்கும் பட்சத்தில் ஜனங்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு வீட்டில் ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது என்று போதகர்களும் உதவிக்காரர்களும் அவர்களை அடிக்கடி எச்சரிக்க வேண்டும்; அப்படி ஒரு முக்கியமான சந்தர்ப்பம் ஏற்படும்போது அதை அவர்கள் கொடுக்கலாம்.''

ஞானஸ்நானத்தைக் குறித்து கீழ்க்கண்ட விளக்கத்தை அங்கீகரிக்கப்பட்ட கத்தோலிக்க ஞான உபதேச புத்தகத்திலிருந்து (பக். 248) குறிப்படுகிறேன்:– ''முதலாவதாகவும் மிக முக்கியமானதாகவும் செய்யப்பட வேண்டிய புனித சமயசடங்கு ஞானஸ்நானம் ஆகும்;'' ''ஏனெனில் ஞானஸ்நானத்திற்கு முன்பாக எவ்விதமான புனித சமயசடங்கும் பெறலாகாது;'' ''ஏனெனில் ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவரும் இரட்சிக்கப்படவும் முடியாது.'' ஞானஸ்நானத்தில் ஆதியில் உண்டான பாவமும், ஞானஸ்நானத்திற்கு முன்பாக செய்யப்பட்ட எல்லா பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன. தற்காலிக மற்றும் நித்திய தண்டனையும் ஞானஸ்நானத்தின் மூலம் இரத்தாகிறது.'' ''ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவது மாத்திரமல்ல, நாம் ஆவிக்குரிய ஒரு விதத்தில் மறுரூபமடைகிறோம், பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக்கப்படுகிறோம், பரலோகத்திற்கு சுதந்தரவாளிகளாகிறோம்.''

இந்த விஷயத்தைக் குறித்து லுத்தரன் சபையும் கிட்டத்தட்ட இதே கருத்தை உடையதாக இருக்கிறது.

ஆங்கிலேய திருச்சபை, சற்று வித்தியாசமான சடங்காச்சாரத்தை கொண்டிருந்தாலும், குழந்தை ஞானஸ்நானத்தைக் குறித்து இதே முக்கியத்தை அளிக்கின்றது. பொதுவான ஜெபம் (Book of Common Prayer) என்ற புஸ்தகத்திலிருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :–

''பாவத்தை திவ்விய முறையில் கழுவும்படியாக இந்த தண்ணீரை பரிசுத்தப்படுத்தும்; இப்பொழுது ஞானஸ்நானம் பெறப்போகின்ற இந்த குழந்தை உம்முடைய கிருபையின் பரிபூரணத்தைப் பெற்று, உம்முடைய

உண்மையாயிருக்கிற, தெரிந்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கையில் எப்பொழுதும் நிலைத்திருக்கட்டும்.''

''கிறிஸ்துவின் மந்தைக்குள்ளாக இந்தக் குழந்தையை ஏற்றுக்கொள்ளுகிறோம்; சிலுவை அடையாளத்தினால் அவனை அடையாளமிடுகிறோம்.''

''எனக்கன்பான சகோதரரே, நீங்கள் பார்க்கிறபடி, இந்தக் குழந்தை மறுபடியும் பிறந்து கிறிஸ்துவின் சபைக்குள் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நன்மைகளுக்காக சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.''

''மிகவும் கிருபையுள்ள பிதாவே, இந்த பாலகனை உம்முடைய பரிசுத்த ஆவியால் மறுபடியும் பிறக்கச் செய்ததற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.''

பிரஸ்பெட்டெரியன் (Presbyterian) சபையின் கருத்து இதை விட சற்று கடுமையாக இருக்கிறது. வெஸ்ட் மின்ஸ்டர் கன்ஃபெஷன் (Westminster Confession, Art 28) இப்படியாகக் கூறுகிறது.

''ஞானஸ்நானம் என்பது ஒரு புனித சமய சடங்கு ..... கிருபையின் உடன்படிக்கை, பாவ மன்னிப்பு, அவன் கிறிஸ்துவுக்குள் இணைக்கப் படுதல், மறுபிறப்பு முதலியவைகளுக்கு ஒரு அடையாளமாகவும் முத்திரையாகவும் உள்ளது.'' குழந்தையின் பெற்றோர்களில் இரண்டு பேரும் அல்லது ஒருவராவது கிறிஸ்தவர்களாக இருந்தால் மாத்திரமே இது உரித்தாகும் என்றும் மற்ற குழந்தைகளுக்கு அல்ல என்றும் அறிக்கையிடுகிறது. அது தொடர்ந்து கூறுகிறதாவது: ''இந்த ஒழுங்குமுறையை குறைகூறுவதோ அல்லது ஒதுக்கி வைத்துவிடுவதோ ஒரு பெரிய பாவமாக இருந்தாலும், அது இல்லாமல் ஒரு நபரும் மறுபடியும் பிறக்கவோ அல்லது இரட்சிக்கப்படவோ முடியாது அல்லது ஞானஸ்நானம் பெறுபவர்கள் எல்லோரும் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் மறு பிறப்படைந்திருக்கிறார்கள் என்று கூறக்கூடிய அளவுக்கு கிருபையும் இரட்சிப்பும் அப்படிப் பிரிக்க முடியாதபடி அதற்குள்ளாக இணைக்கப்படவில்லை.''

ஞானஸ்நானத்திற்கு குறைவான முக்கியத்துவத்தைக் கொடுத்து விட்டு, பிரஸ்பெட்டேரியன் சபையினரின் சட்டங்கள், அவர்களுடைய ஊழியக்காரர்களைத் தவிர வேறு எவரையும் இந்த ஊழியத்தை செய்ய அனுமதிப்பதில்லை; மேலும், அதன் ஊழியக்காரர்கள் ஞானஸ்நானத்தைக் குறித்தும் அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் வேளையில், ஒரு சிலரே கடைசியாக சொல்லப்பட்ட விதியை அறிகிறபடியால் சபையின் பாலகர்கள் ஞானஸ்நானம் பெறாமல் மரிப்பதினால் வரும்

விளைவுகளைக் குறித்து பிரஸ்பெட்டேரியன் சபையினரும் மற்றவர்களும் பயப்படுகிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள மெதடிஸ்ட் (Methodist), புராட்டஸ்டான்ட் எப்பிஸ்கோப்பல் சபையினர் (Protestant Episcopal Church), மற்றும் அநேக நவீன ஸ்தாபனங்களும் கடைசியாக சொல்லப்பட்ட குழந்தை ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து சற்று மிதமான இந்த கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

இந்த கருத்தை விளக்கும்படியாக ஒரு மருத்துவரைக் குறித்து இப்படியாக ஒரு கதை சொல்லப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட மருத்துவர் இரவு வேளையின் பிற்பகுதியில் மரிக்கும் நிலைமையில் உள்ள ஒரு பாலகனை பார்க்கும்படி அழைக்கப்பட்டார். அதே வேளையில் ஒரு குருவானவருக்கும் செய்தி அனுப்பினார்கள். மருத்துவர் குருவானவர் வந்து சேருவதற்கு ஒரு வினாடிக்கு முன்பதாக வந்தார். மருத்துவரால் இனி ஒன்றும் செய்ய முடியாது என்பது தெளிவானபோது அவர் ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றார். அதே நேரத்தில் குருவானவர் வேகமாக ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து, அந்த தண்ணீரின் சில துளிகளை குழந்தையின் முகத்தில் தெளித்து, '' நான் உனக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்'' என்றார். ஒன்று அல்லது இரண்டு வினாடிகள் கழித்து அந்தக் குழந்தை மரித்தது. மருத்துவரும் குருவானவரும், இருவருமாக வீட்டை விட்டு வெளியேறின போது, மருத்துவர் குருவானவரிடம், ''நீங்கள் சரியான வேளைக்கு வந்து வீட்டீர்கள்; இரண்டு நிமிடம் கழித்து வந்திருந்தால் அதிக தாமதாமாயிருக்கும். நீங்கள் எப்படிப்பட்ட பாதரட்சைகளை அணிகிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா'' என்று கேட்டார். குருவானவர் ''கயிறு இல்லாத பாதரட்சை (Congress gaiters)'' என்று பதில் சொன்னார். ''கயிறு (lace) வைத்து கட்டுகிற பாதரட்சை அணிந்திருப்பீர்கள் என்றால் நேரத்திற்கு வந்து சேர்ந்திருக்க மாட்டீர்கள், அப்படியென்றால் அந்த குழந்தைக்கு அது எவ்வளவு பெரிய பாதகத்தை உண்டு பண்ணியிருக்கும்'' என்றார் மருத்துவர்.

விஷயம் தெரிந்த கிறிஸ்துவ மக்களில் அனேகர், ஞானஸ்நானம் பெறாத ஒரு குழந்தையை தேவன் நித்திய காலமாக உபத்திரவப் படுத்தும்படியாக பிசாசினிடத்தில் ஒப்புக்கொடுப்பார் அல்லது அதற்கு குந்தகம் விளைவிக்கும்படியாக ஏதேனும் செய்வார் என்ற இப்படியான,

பொய்யான, அறியாமையால் வரும் யோசனையை மறுப்பது உண்மைதான். ஆனாலும் இப்படியான சடங்காச்சாரம் இல்லாமல் அவர்கள் குழந்தைகளின் ஒன்று எவ்விதத்திலாவது மரிக்க நேர்ந்தால், இதே ஜனங்களில் அனேகர் அதிகமான சிரத்தையைக் காட்டுகிறார்கள். மேலும் இன்னும் அதிகமாக கல்வி அறிவு இல்லாதவர்களில் அனேகர், இந்த சடங்காச்சாரங்களில் அதிக நம்பிக்கை உடையவர்களாகவும், அது செய்யப்படாவிட்டால், அதனால் விளைவுகள் உண்டாகுமோ என்கிற சித்திரவதை பயத்துடன் இருக்கிறார்கள். இந்த தவறான நம்பிக்கைகள், ''இருண்ட யுகங்கள்'' என்ற காலத்தின் நூற்றாண்டிலிருந்து இருந்து வந்திருக்கின்றது.

இந்த தவறான கருத்துக்கள், ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம், அதனால் வரும் விளைவுகள் போன்றவை இரண்டாவது நூற்றாண்டி லிருந்தே வளரத் தொடங்கிவிட்டன என்பதற்கான ஆதாரத்தை ''Hagenbach'' என்பவரின் '' History of Doctrines'' என்ற புத்தகத்தில் 72 ம் பக்கத்தில் காணலாம். இதற்குப் பின்னர், கான்ஸ்டன்டைன் காலத்தில் தெற்றுல்லியன் (Tertullian) என்பவரின் ஆதரவில், ஞானஸ்நானத்தில், பின் செய்யும் பாவங்களைத் தவிர, முன்பு செய்த பாவங்களிலிருந்து சுந்திகரிக்க ஒரு மந்திர சக்தி உள்ளது என்று கருத்து வந்தது; மேலும் இப்படிப்பட்ட ஒரு கருத்தினால் ஞானஸ்நானம் கூடுமானவரை மரண நேரம்வரை ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் பரவியது. இதற்கும் பின்னர், ''கடைசியான அபிஷேகம்'' மரணத்தின் வாசலில் நிற்பவர்களுக்கு ஆறுதலாக அமைந்தது, ஆகவே அந்த நிலையில் உள்ளவர்களை ஆலயத்திற்கு துரிதமாக எடுத்துச் செல்வதற்கான முயற்சி மேற் கொள்ளப்பட்டது. ''சபைக்கு வெளியே இரட்சிப்பு இல்லை'' என்ற கருத்தை கொண்டு வந்தவர் ''பரி. அகஸ்டின்'' தான். அதற்கு பின்னர், இதன் விளைவாக பாலகர்கள் ஆலயத்தில் அங்கத்தினர்கள் ஆக்கப்படாவிட்டால் இரட்சிப்பைப் பெற தவறிவிடுவார்கள் என்ற போதனை வந்தது. அந்த கருத்து வந்த நாளிலிருந்து பாலகர்களின் பொதுவான ஞானஸ்நானம் என்ற கருத்து வந்துவிட்டது. கிறிஸ்துவத்தின் முக்கியமான நோக்கம் ஆரம்பத்திலிருந்து அதன் செல்வாக்கையும், எண்ணிக்கையும் பெருக்கிக் கொள்ளுவதுதான். இப்படியாக நம்முடைய சிருஷ்டிகரின் குணாதிசயமும், அவருடைய செயல்படும் தன்மையும் மாசுபடுத்தப்பட்டது, அவருடைய வசனத்தின் சாட்சி வெறுமையாக்கப் பட்டது, மேலும் கோதுமை மணியான உண்மையான கிறிஸ்துவம்,

சத்துருவினால் விதைக்கப்பட்ட இந்த ''பதரினால்'' செழுமையாகி கறைபட்டுவிட்டது.

குழந்தை ஞானஸ்நானம் சிலரால் நிராகரிக்கப்பட்டது

ஞானஸ்நானமானது விசுவாசிகள் மேல் சுமத்தப்படுகிறது என்று நினைப்பவர்கள் மத்தியிலும், ஒரு நபர் மற்றவருக்காக விசுவாசிக்க முடியாது என்று நினைப்பவர்கள் மத்தியிலும் குழந்தை ஞானஸ்நானம் என்பது வேதாகாமத்தின்படியானது அல்ல என்று நிராகரிக்கப்படுகிறது. மேலும் நமது ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் கட்டளையிட்ட ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் முழ்குவதைத்தவிர வேறொன்றும் அல்ல என பொதுவான கருத்தை இதே ஜனங்களும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஞானஸ்நானத்தை குறிக்கும் கிரேக்க பதமான ''பேப்டைசோ'' (baptizo) என்ற வார்த்தை மூழ்கு, அல்லது மூடு, அல்லது குதித்து மூழ்கு அல்லது முழுமையாக ஈரமாக்கு என்ற அர்த்தமுடையது என்ற உண்மையையும், கிரேக்க மொழியில், தெளிக்க அல்லது ஊற்ற, அல்லது பொழிய முற்றிலும் வித்தியாசமான வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன என்ற உண்மையையும் அவர்கள் நமது கவனத்திற்கு கொண்டு வருகின்றார்கள். இந்த விசுவாசிகள், பொதுவாக தண்ணீரில் மூழ்கும் போது ஒரு முறை பின் பக்கமாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் மூழ்கினார்கள். ஆனாலும் சிலர் முன் பக்கமாக மூன்று முறை, ஒரு முறை பிதாவின் நாமத்திலும், ஒரு முறை குமாரனின் நாமத்திலும், ஒரு முறை பரிசுத்த ஆவியின் நாமத்திலும் மூழ்கினார்கள். இதற்கு, அவர்கள் கூறுவது என்னவெனில் கிறிஸ்து மரிக்கும் போது முன் பக்கமாக தலையைச் சாய்த்தார், ஆகவே அவரைப் பின்பற்றுபவர்களாய் அவருடைய மரணத்தின் சாயலில் முகம் முன் பக்கமாக இருக்கும்படியாக மூழ்க வேண்டும் என்று விளக்குகிறார்கள். ஆனால் கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்ட போது முகம் கீழ் நோக்கி இருக்கும்படியாக வைக்கப்படவில்லை, மேலும் பிதாவும் பரிசுத்த ஆவியும் மரிக்க வில்லை, அடக்கம் பண்ணப்படவும் இல்லை. ஆகவே இப்படியாக அர்த்தப்படுத்திக் கூறுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கது அல்ல. மேலும் பிதா,குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் என்ற வார்த்தைகளின் சரியான பொருள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்

அதிகாரத்தின்படியாக என்று இருக்க வேண்டும்; ஏனெனில், பிதா,குமாரன், பரிசுத்த ஆவி விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதை ஆமோதிக்கிறார்கள் என்பது இந்த கிறிஸ்தவ நண்பர்களுக்கு புலனாகவில்லை.

பின்புறமாக ஒரு முறை மூழ்குவதை பழக்கத்தில் வைத்திருப்பவர்களுக்குள் இரண்டு பெரிய சபை பிரிவுகள் உண்டு. அவையாவன: ''பேப்டிஸ்ட் சபை,'' ''சீஷர்கள் சபை '' என்பன ஆகும். ஆனாலும் கூட ஆராதனையை, வெகு வித்தியாசமான உணர்வுகளோடும், வித்தியாசமான உட்கருத்துடனும் நடத்துகிறார்கள். ''சீஷர்கள் சபை'' அல்லது கிறிஸ்துவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் (சில வேளைகளில் அவர்களுடைய அனுமதியின்றியே ''Campbellites'' என்றும் அழைக்கப்படுகிறார்கள்), ஞானஸ்நானமானது (தண்ணீரில் மூழ்குவது) பாவமன்னிப்புக்குரியது, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் இன்னும் அவர்களுடைய பாவங்களிலேயே, ''ஆக்கினையின் பிள்ளைகளாக'' இருக்கிறார்கள் என்று எண்ணுகிறார்கள். இந்த விஷயத்தை குறித்த இந்தக் கருத்து, குழந்தைகளைத் தவிர (குழந்தைகளுடைய ஆதி பாவத்தை அவர்கள் பாராமல் இருப்பது போன்று தோன்றுகிறது) மனுக்குலத்தின் அனைத்து மக்களையும் பிரித்து வைத்து விடுகிறது. Congregationalists, Methodists, Presbyterians, United Presbyterians, Lutherans, Epicopalians, Roman Cathalics, Greek Cathalics முதலான கிட்டத்தட்ட எல்லா சபைகளில் உள்ள உண்மையான கிறிஸ்துவர்களையும் கூட பிரித்து வைத்து விடுகின்றது. இப்படியாக இவர்கள் அனைவரும் பாவிகளாகவும், தேவனுக்கு முன்பாக அநீதிமான்களாகவும் குறிக்கப்படுவார்கள்; இதன் விளைவாக, இதன் அர்த்தம் எப்படிப்பட்ட விதத்தில் புரிந்து கொள்ளப்பட்டாலும் சரி, அவர்கள் ''தேவனின் கோபாக்கினைக்கு'' உட்படுத்தப்படுவார்கள். இதன்படி, ''சீஷர்கள் சபை'' உட்பட அனைவரும், நித்திய வேதனை என பொருள்படுகிறது என்று உணர்ந்து கொள்ளுவார்கள்.

உலகத்தாரைப் பொறுத்த மட்டுமல்ல, பெருந்திரளான கிறிஸ்தவர்களைப் பொறுத்த வரையிலும் கூட, இந்த ஒரு நிலையை எடுத்துக் கொள்ளுவது கடினமானது. சொல்லப்பட்ட காரியத்தின் யதார்த்தம் நம்முடைய ''சீஷர்கள் சபை'' நண்பர்களுக்கு விளங்கியிருந்தாலும், மற்ற அனைவரும் அதை யோசித்துப் பார்க்கும்படியாக

அவர்கள் ஒரு அறிக்கை விடும்படியாக இந்த கேள்வியை வலியுறுத்துவார்கள் என்றால் நாம் ஆச்சரியப்படப் போவதில்லை. இது ஞானஸ்நானத்தைப் பற்றிய ஒரு சரியான கருத்து என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியாது; எங்களுக்கு அது முறையானதும் அல்ல, வேதாகமத்தின்படியானதும் அல்ல. நம்முடைய இனத்தின் நித்திய நன்மை, இப்படியான ஏற்பாட்டிற்கு கீழ்ப்படிவதினாலோ, அல்லது அதை அறிந்து வைத்துக்கொள்வதைப் பொறுத்தோ இருக்கும் என்று நம்முடைய ஆண்டவர் சித்தங்கொண்டிருப்பார் என்பதை நாம் நம்பமுடியாது. இருந்த போதிலும், நம்முடைய ''சீஷர்கள் சபை'' நண்பர்கள் சில வேத பகுதிகளினிமித்தம் தங்களை பலமான நிலையில் வைத்துள்ளார்கள் என்பதையும் மறுத்து விடக்கூடாது. அந்த வேதப்பகுதிகளாவன: யோவான் யூதர்களுக்கு மனம் திரும்புதலைக் குறித்தும், பாவ மன்னிப்பைக் குறித்தும் பிரசங்கிப்பது; மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தெ நாளன்று யூதர்களுக்குப் பிரசங்கித்தது என்பவனவாகும். (மத். 3:6 ; யோவா. 4:1,2 ; அப். 2: 38,41) இந்த வேதப் பகுதிகள் ஏன், எப்படி யூதர்களுக்கு மாத்திரமே உரியவைகளாக இருந்தது, ஒரு போதும் புறஜாதியினருக்கு உரியதாக இல்லை என்பதை நாம் ஏற்ற வேளையில் காணலாம். மேலும் எபேசு சபையில் உள்ள சில புறஜாதியினர், பாவ மன்னிப்புக்கென்றும், மனந்திரும்புதலுக்கென்றும் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றோம் என்று அறிக்கையிட்ட போது, அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திலே அவர்களை ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படியான கட்டளையைப் பிறப்பித்தைக் குறித்தும் ஏற்ற வேளையில் காண்போம். (அப். 19: 3–5)

நம்முடைய ''பேப்டிஸ்ட் சபை'' நண்பர்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதுதான் ஒரே ஞானஸ்நானம் என்று வலியுறுத்துவதில் அதிக முயற்சி எடுத்தாலும், அது செய்யக்கூடிய காரியத்தைக் குறித்து முற்றுலும் வித்தியாசமான அறிக்கையை வெளியிட்டார்கள். அது பாவ மன்னிப்புக்குரியது என்பதை மறுத்து, மீட்பரான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பதினால் மாத்திரமே பெற்றுக் கொள்ளக் கூடும் என்கிறார்கள். இருந்தாலும், ஆலயத்தில் நுழைவதற்கான வாசலாக ஞானஸ்நானம் உள்ளது என்றும், மூழ்கினவர்கள் தான் உண்மையிலேயே ஆலயத்திற்குள்

நுழைகிறார்கள் என்றும், ஆலயத்திற்கே உரித்ததான சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் இப்பொழுது மாத்திரமல்ல, வருகிற வாழ்க்கையிலும் பெற்றுக் கொள்ளும்படியாக மற்றவர்கள் எதிர் பார்க்க கூடாது என்றும் சொல்லுகிறார்கள். பொதுவாக, ''பேப்டிஸ்ட் சபை'' இராப்போஜன பந்திக்கு தண்ணீரில் மூழ்காத எவரையும் வரவேற்க மறுக்கிறார்கள். அவர்கள் கூறும் போது, இராப்போஜன பந்தியானது உலகத்தாருக்கானதல்ல, ஆலயத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரமே; மேலும் தண்ணீர் ஞானஸ்நானம் என்ற வாசல் வழியாகப் பிரவேசித்தவர்கள் மாத்திரமே ஆலயத்தில் இருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். சமீப வருடங்களில், இந்த விதிமுறையை தளர்த்தியுள்ள சில பேப்டிஸ்ட் சபைகள், அவர்களுக்குள்ள கருத்தை மீறி செய்திருக்கிறார்கள். J.T.Lloyd என்பவர் சமீபத்தில் எழுதிய ''Religious Herald'' என்ற கட்டுரையிலிருந்து இந்த விஷயத்தைக் குறித்து எழுதப்பட்டதைக் கீழேக் கொடுக்கிறோம்:

''கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது, ஒரு விசுவாசி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் தண்ணீர் மூழ்கி பெறுவதாகும்– மற்றவை எதுவும் ஞானஸ்நானம் இல்லை. இருக்கின்றவைகளில் பேப்டிஸ்ட் சபைகள் மட்டுமே கிறிஸ்தவ சபைகளாகும். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்களுக்கு, ஆண்டவருடைய பந்தியில் எந்த வித உரிமையும் கிடையாது. ஆண்டவருடைய பந்தியில் யாரெல்லாம் அபாத்திரமாய் போஜன பானம் பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்களோ அவர்கள் தங்களுக்கு ஆக்கினை தீர்ப்பு வரும்படியாக பண்ணுகிறார்கள்.''

பேப்டிஸ்ட் சபையின் கருத்து சரியானதென்றால், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள், தண்ணீரில் மூழ்காத மற்ற அனைத்து சபைகளில் உள்ள கிறிஸ்தவர்கள், திருவசனத்தின் பிரகாரம் கிறிஸ்துவின் சபைக்கு தாங்கள் உரியவர்கள் என்று எண்ணி தங்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்று பொருள்படுவதாகும். ஏனெனில் நம்முடைய பேப்டிஸ்ட் நண்பர்கள் கூறுவதாவது : மூழ்குவது ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் வாசலாகும். எவரெல்லாம் மூழ்காமல் உள்ளார்களோ, அவர்கள் _ஆலயத்திற்குள் இல்லை, மாத்திரமல்ல கிறிஸ்துவின் சரீரமான கிறிஸ்துவின் சபைக்கும் உரியவர்கள் அல்ல. நம்முடைய பேப்டிஸ்ட் நண்பர்கள், அதிலும் விஷேசமாக நல்ல உயர்ந்த மனம் உள்ளவர்களும், அறிவில் முதிர்ச்சி பெற்றவர்களும், அவர்களுடைய நம்பிக்கையின் எதார்த்தமான முடிவை பொது ஜனங்கள் இடையே வலியுறுத்தி சொல்ல தயங்குவதைக் குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. அவர்களுடைய

கருத்து எதிர்மாறாக இருந்தாலும் கூட, கிறிஸ்தவர்கள் என்று அவர்கள் மதிக்க வேண்டியவர்கள், அவர்கள் மேல் கோபத்தையும் கடுகடுப்பையும் கொண்டு வரக் கூடுமானதால் பேப்டிஸ்ட் நண்பர்களால் அப்படி செய்ய முடியாது. ஆனால் இந்த பேப்டிஸ்ட் நண்பர்களின் கருத்து உண்மையாயிருந்தால் இது எப்படிப்பட்ட பொருளுடையதாக இருக்கும்? கிறிஸ்தவத்தில் உள்ள எல்லா பல்வேறு சபை பிரிவுகளின் நம்பிக்கையின் பிரகாரம் மூழ்கினவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள், மிஞ்சியுள்ள எல்லா சபைப்பிரிவின் மக்களும், மற்றும் சபைப் பிரிவுகளுக்கு அப்பாற்பட்ட உலகத்தார் அனைவரும் ஆக்கினைக்கு உட்படுத்தப் படுவார்கள் என்று பொருள்படும் என்று நாங்கள் பதில் கூறுகின்றோம். எப்படியெனில், எல்லா சபை பிரிவினரின் விசுவாசமும், திருச்சபை மாத்திரம் தான் இரட்சிக்கப்படும், மற்றவர்கள் அனைவரின் எதிர்காலம் மரணத்தில் நிச்சயிக்கப்பட்டபடி, அழிவை நோக்கி, அல்லது நித்திய வேதனையை நோக்கி, அல்லது மற்ற பயங்கரமான எதிர்காலத்தை நோக்கி துரிதமாக செல்கிறார்கள் என்று இருக்கிறதில்லையா?

மேற்சொல்லப்பட்ட மாம்சீக பூரணமற்ற கருத்துக்களில் இருந்து நாம் வேறுபடுகிறோம், அவைகளில் உள்ள கருத்துக்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் இருப்பது வெளியரங்கமாய் இருக்கிறது. அவர்களுடைய தவறுகள் ஒவ்வொரு கற்றறிந்த, பாரபட்சமற்ற மனதிற்கும் உடனடியாக பாதிப்பை ஏற்படுத்துகிறது. சீஷர்கள் சபைப் பிரிவோ அல்லது பேப்டிஸ்ட் சபைப் பிரிவோ அல்லது இரு சபைப்பிரிவுகளும் ஜீவனுள்ள தேவ சபை என்று அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது என்றும், அவர்களுடைய சபையில் மூழ்கினவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்றும், மற்ற சபை பிரிவுகளில் உள்ள, மூழ்காதவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்றும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் மனுஷ குமாரன், சுவிசேஷம் என்னும் நல்ல விதையை நிலத்தில் விதைத்த போது, கோதுமை எல்லாம் பேப்டிஸ்ட் சபையின் வேலிக்குள் கொண்டு வரப்பட்டது என்பதையும் மற்ற களைகள் அனைத்தும் வெளியே இருந்தன என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அது மாத்திரமல்ல, எல்லா கோதுமையும் தண்ணீரில் மூழ்கினவர்கள் மத்தியில் காணப்படும், இவைகளில் களைகளும் உள்ளடக்கமாய் இருக்கிறது என்றும், அதன்படியாக மற்ற சபைப் பிரிவுகள் ஆண்டவருடைய கோதுமையும் களைகளும் என்கின்ற உவமையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன

என்றும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. (மத்.13) இந்த மாறுபாடான கருத்துக்கள் எல்லாம் தவறானவைகள் என்றும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படாதவைகள் என்றும் கூறுகிறோம். எல்லா சபை பிரிவுகளும், உட்பிரிவுகளும் திவ்விய ஏற்பாட்டிற்கு முரணானவை என்று நாம் கூறுகிறோம். ஒரே தலை, ஒரே சரீரம், ஒரே விசுவாசம் என்பதுதான் திவ்விய ஏற்பாடாகும். ஆண்டவருடைய சபையாயிருக்கிற புது சிருஷ்டி அனேக அவயவங்களை கொண்டது என்று நாம் கூறவில்லை, ஆனால் அது ஒரு ''சிறு மந்தையாக'' இருக்கிறது என்று கூறுகிறோம்.

நம்முடைய பேப்டிஸ்ட் சபை நண்பர்களையும், சீஷர்கள் சபை நண்பர்களையும் நம்முடைய பிரஸ்பெடேரியன், மெதடிஸ்ட், லுத்தரன், எபிஸ்கோபல், ரோம கத்தோலிக்க நண்பர்களையும், பொதுவான கிறிஸ்துவத்திற்குள் ஒரு பகுதியாக சேர்த்துக் கொள்ள வேண்டும், இன்னொரு விதத்தில் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ''பாபிலோன்'' என எடுத்துக் கொள்ள வேண்டும். மனுஷ குமாரனும் அவருடைய உண்மையான விசுவாசிகளும் நல்ல விதையை விதைத்தார்கள்; அது கிறிஸ்தவ உலகம் பூராவும் நல்ல கனிகளைக் கொண்டு வந்துள்ளது; அதை இந்த சுவிசேஷ யுகத்தின் கோதுமை நிலம் என்று வைத்துக் கொள்ளலாம். சத்துரு களைகளை அழிக செழிப்பாக வளரும்படி விதைத்திருப்பதால், கோதுமையானது மிகவும் அதிகமாக நெருக்கப்பட்டிருக்கிறது; மேலும் சில விஷயங்களைப் பொறுத்த வரையில் நிலமானது, சரியான விதத்தில் சொல்ல வேண்டும் என்றால் ஒரு கோதுமை நிலம் என்பதைவிட களைநிலம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இப்பொழுது, ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தின்படி இந்த சுவிஷேச யுகத்தின் அறுவடை வந்திருக்கிறபடியால், அவருடைய களஞ்சியத்தில் சேர்க்கும்படியாக, அவர் அவருடைய அறுவடை ஆட்களை அனுப்புகிறார். ஆகவே, இந்த உண்மையான கோதுமை மணிகள் அனைத்தையும் பேப்டிஸ்ட், சீஷர்கள் சபைப் பிரிவுகளில் மாத்திரமே அவர் காணாமல், அவைகளை பிரஸ்பெடேரியன், மெதடிஸ்ட், லுத்தரன், எபிஸ்கோபல், ரோம கத்தோலிக்க இன்னும் மற்றவர்கள் மத்தியிலும் காண்கிறார் என்பது தெளிவாகிறது. இதற்கு இசைவாக, பாபிலோனில் உள்ள எல்லா தேவ ஜனங்களுக்கும் தூது அனுப்பட்டுள்ளது. ''மகா பாபிலோன் விழுந்தது. (திவ்விய தண்டனை பாபிலோனின் மேல் செலுத்தப்பட்டது, அவர்கள் ஆண்டவரால் நிராகரிக்கப்பட்டார்கள்)..... என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய

பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்.'' (வெளி. 18: 2,4)

இது உண்மையாயிருக்க, ஞானஸ்நானம் என்றால் என்ன, அது கொண்டு வருகின்ற சிலாக்கியங்கள், ஆசீர்வாதங்களைக் குறித்து பேப்டிஸ்ட், சீஷர்கள் சபை இன்னும் ஏனையோரும் வெகு மோசமான தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. எல்லா விதமான மாம்சீக பாரம்பரியங்களுக்கும், கருத்துக்களுக்கும் அப்பாற்பட்டு, நாம் பயபக்தியுடனும், ஜெபத்துடனும் உண்மையிலேயே திவ்விய முறையாயிருக்கிற ஆண்டவருடைய வசனத்துக்கு, அப்போஸ்தலர்களின் மூலமாக போகும்படியாக, ஞானஸ்நானம் என்ற பொருளை பற்றிய இப்போதுள்ள எல்லா கருத்துக்களிலும் ஒரு மிகப்பெரிய தவறு இருக்கிறது என்பது எல்லோருக்கும் விளங்கும்படியாக, தற்போதய காலம் வரை உள்ள முழு சூழ்நிலையையும் சுருக்கமாக ஆராய்ந்துள்ளோம். நாம் கிறிஸ்துவ உலகில் பல்வேறு விதமான கருத்துகளில் காணப்படுகின்ற குழப்பத்தைக் மிக தெளிவாக கண்ட பின்னரே, இந்த விஷயத்தைக் குறித்ததான திவ்விய செய்தியின் எளிமையை உணர முற்றுமாக ஆயத்தமாக இருக்கிறோம்.

ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகம சாட்சி

பாத்திரங்களைக் சுத்திகரித்தல், தீட்டானவர்கள் மேல் ஜலம் தெளிப்பது, சுத்திகரிப்பது போன்றவைகளைக் குறித்து பலவிதமான முறைகள் யூத சடங்காச்சாரங்களில் இருக்கின்றன, ஆனால் யூத யுகத்தின் இறுதியில் யோவான் பிரசங்கித்த ஞானஸ்நானத்தைக் குறித்து ஒன்றும் கிடையாது. யோவானுடைய ஞானஸ்நானம் யூதர்களுக்கு மாத்திரமே உரியது, அவர்கள் ஏற்கனவே பாவநிவாராண நாளன்று செலுத்தப்பட்ட காணிக்கைகளால் சுத்திகரிக்கப்பட்டதற்கு மாதிரியாக இருந்ததாக எண்ணப்பட்டிருந்தனர். இவர்களுக்கு யோவானுடைய ஞானஸ்நானம் ஏற்கனவே அறிந்து கொள்ளப்பட்டிருந்த பாவத்திலிருந்து மனம் திரும்புதலைக் குறித்தது, அதோடு கூட நியாயப்பிரமாண உடன்படிக்கையை மீறுதல், அவைகளில் இருந்து சுத்திகரிக்கப்பட்டதற்கு மாதிரியாகவும் இருந்ததை குறித்தது; மேலும் இருதயத்தில் அல்லது எண்ணத்தில் நீதிமானாக்கப்பட்ட ஒரு நிலைக்கு திரும்புவதையும்

குறித்தது. இவ்வண்ணமாக பாவத்திலிருந்து மனம் திரும்பிய யூதர்கள், அடையாளமாக சுத்திகரிக்கப்பட்டவர்கள் அல்லது கழுவப்பட்டவர்கள், இதற்கு முன்பாக அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக அவர்கள் இருந்த நிலைக்கு பழையபடி தேவனோடு ஒப்புரவான நிலைக்கு கொண்டு வரப்பட்டதாக எண்ணப்பட்டார்கள். யோவானின் பிரசங்கம், அவன் கொடுத்த ஞானஸ்நானத்தின் நோக்கமானது தேவனுடைய இராஜ்யத்திற்கென ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்கும், மேசியாவை வெளிப்படுத்துவதற்கும் ஆக இருந்தது. யோவானுடைய பிரசங்கம், மேசியாவின் வருகை மிக சமீபம் என்றும், ஜனங்கள் சரியான ஒரு ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்றால் ஜனங்களுடைய இருதய நிலையானது ஆயத்த நிலையில் இருக்க வேண்டும் என்றும் பொருள் கொண்டிருந்தது. நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக இருந்த ஒவ்வொரு யூதனும், மோசேயின் வீட்டின் ஒரு அங்கத்தினனாக எண்ணப்பட்டான்.‘‘ எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும், ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.’’ (1 கொரி. 10:2) ‘‘மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்’’ (எபி 3:5) என்று எழுதியிருக்கிறபடி மோசேயினுடைய வீடு பணிவிடை செய்பவர்களின் வீடாய் இருந்தது. திவ்விய ஒழுங்கின்படியாக நிழலான இஸ்ரேல் அல்லது மோசேக்குக் கீழாக பணிவிடைக்காரரின் வீட்டில் ஒரு அங்கத்தினராக யாரெல்லாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்களோ, நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இருந்த மோசேக்கு கீழாகவும், நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உண்மையாகவும் யாரெல்லாம் இருந்தார்களோ, அவர்கள் எல்லாரும் நிஜமான மோசேயை, மேசியாவான கிறிஸ்து வெளிப்பட்ட போது, வரவேற்கும்படி இப்படிப்பட்ட ஆயத்த நிலையில் உள்ள இருதயத்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றது, நிழலான மோசேக்குப் பதிலாக கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுவது, அவர்கள் அவருடைய சரீரத்தின் அங்கங்களாக கிறிஸ்துவுக்குள் இருப்பார்கள், அவர் அவர்களுடைய தலையாய் இருப்பார், அவரோடு கொண்ட உறவின் மூலமாய் புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாய் இருப்பார்கள், இந்த புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக முழுமையாக மகிமையடைந்த கிறிஸ்து– தலையும், சரீரமும் சேர்ந்த கிறிஸ்து– மத்தியஸ்தராய் இருப்பார் என்பதைக் குறிக்கிறது.

ஆகவே, யோவான் தன்னுடைய விசுவாசிகளுக்கு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை, மோசே போன்றவர்களோடு ஒருமனப்படுகிற ஒரு நிலைக்கு மறுபடியும் கொண்டுவரும்படியாக மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தை மாத்திரம் கொடுத்தார். இப்படிப்பட்ட நிலையில் ஒலிவ மரத்தின் கிளைகளாக (ரோம. 11:16–21) அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒட்டப்பட தேவையிருக்காது, ஏனெனில் அவர்களுக்கு கிறிஸ்து மேசேயின் இடத்தை எடுத்துக் கொள்ளுவார், மோசே அந்த வேளையில் கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருந்தார். இப்படியாக,இது ''யோவானின் ஞானஸ்நானம்'' என்றும், மனந்திரும்புதலுக்கும், பாவ மன்னிப்புக்கும், பாவங்கள் கழுவப்படுவதற்கும் என்றும் அழைக்கப்பட்டது. இது யூதர்களைத் தவிர வேறு எவருக்கும் உரியது அல்ல. ஏனெனில் புறஜாதியார் மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை; எந்த விதத்திலும் நிழலாயிருந்த பணிவிடைக்காரர்களின் வீட்டில் இருந்த தில்லை; ஆகவே, பாவத்திலிருந்து மனந்திரும்புதலின் மூலம் இதற்கு முன்பு அவர்கள் இருந்திராத ஒரு நிலைக்கு திரும்பி வர இயலாது. அப்போஸ்தலர் விவரிக்கிற மாதிரி, அவர்கள் காட்டொலிவமர கிளைகளாக, ''கோபாக்கினையின் பிள்ளைகளாக,'' இஸ்ரயேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாக, அந்நியரும், பரதேசிகளும், தேவனற்றவர்களுமாக இருந்தார்கள். எந்த அளவிலான மனந்திரும்புதலும், சீர் பொருந்துதலும் அந்நியரும் பரதேசியுமாய் இருக்கிற இவர்களை அடையாளமாய் இருக்கிற பணிவிடைக்காரரின் வீட்டில் அங்கத்தினர்களாக்காது. பணிவிடைக்காரரின் வீட்டின் அங்கத்தினராயிருப்பவர்களுக்கு மாத்திரமே நிஜமான புத்திரரின் வீட்டிற்கு கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தின் ஊடாக கடந்து செல்லும் சிலாக்கியம் உண்டு. மற்றவர்கள் ஒலிவமரத்தின் (கிறிஸ்து) கிளைகளாக மாறுபவர்கள், வேர் ஆபிரகாமின் வாக்குத்தத்தம். அவர்கள் பணிவிடைக்காரரின் வீடான சுய ஒலிவ மரத்திற்குள், சுபாவ கிளைகள் முறிக்கப்படுவதினால் ஏற்பட்ட காலியிடத்தில் ஒட்டப்படுவதாய் இருக்கிறார்கள். சுபாவ கிளைகள் முறிக்கப்படுவற்கான காரணம், அவர்களுடைய இருதயங்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளக் கூடிய சரியான நிலையில் இல்லாதிருந்ததே, ஆகவே அவர்கள் அவருடைய குமாரரின் வீட்டின் அங்கத்தினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. ''அவர் தமக்குச் சொந்தமானதிலே (இஸ்ரேல் ஜனங்கள்) வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ (ஜனங்களோ) அவரை ஏற்றுக்

கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவார்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அவர்களுக்கு அதிகாரம் (சிலாக்கியம்) கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்.'' இவர்கள் இப்படியாக ஆவிக்குரிய பிரகாரம் புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக ஆனார்கள்.

நிழலான இஸ்ரேல் எகிப்தை உதறித்தள்ளினது (எகிப்து உலகத்திற்கு நிழல்) மோசேயினால் வழி நடத்தப்படுவதற்காக. சிவந்த சமுத்திரத்திற்கு அவர்கள் வந்த போது, அது அவர்களுக்குண்டான பெரிய சோதனை அல்லது பரீட்சையாக இருந்த வேளையில், மோசேயின் மூலமாக தேவன் குறுக்கிட்டு இருக்காவிட்டால் அது அவர்களுக்கு அழிவை உண்டாக்கியிருக்கும்; அவ்வேளையில், மோசேக்குள் சமுத்திரத்தினாலும் மேகத்தினாலும், அவர்கள் எல்லாரும் அடையாளமாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். இரண்டு பக்கத்திலும் சமுத்திரமும், மேகம் அவர்களுக்கு மேலாகவும் இருந்தது, அது அவர்கள் அவனுடைய வீடாக அல்லது குடும்பமாக, அவர்களுடைய தலையாக அவன் இருக்கத் தக்கதாய் ஆனது. அவர்கள் சமுத்திரத்தை விட்டு, அவனுக்கு பயபக்தி உள்ளவர்களாய், அவனை பின்பற்றவும், கீழ்ப்படியவும் உறுதி செய்து வெளியே வந்தார்கள். சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராய் அவனை இன்னும் உறுதியாய் ஏற்றுக் கொண்டார்கள். ''உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார். அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்கு செவி கொடுப்பீர்களாக'' என்று சொன்ன அவன் மேல் அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் கட்டப்பட்டிருந்தன. (உபா. 18:15,18; அப். 3:22) இப்படியாக அர்ப்பணித்துக் கொண்டு, மரணம் ஏற்படினும்கூட மோசேயோடு இருக்க தீர்மானித்துக் கொண்ட ஒவ்வொரு இஸ்ரயேலனுக்கும், அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் அவன் மேல் நங்கூரமிடப்பட்டிருக்கும் போது, அவனுக்காக, அவன் யாருக்கு நிழலாயிருந்தானோ அந்த கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு ஒரு சிறிய மாற்றமாகும்; நியாயப்பிரமாணத்தின்படி மோசேக்கு அவர்கள் கொடுத்த உறுதி மொழிகள், இப்பொழுது அவர்கள் சேவிக்க வேண்டும் என்று இருக்கிற புது உடன்படிக்கைக்கு உத்திரவாதியாக இருக்கிற

கிறிஸ்துவுக்கு, திவ்விய ஒழுங்கின்படி மாற்றப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ளுவதும் ஒரு சிறிய மாற்றமாகும். (2 கொரி. 3:6)

புறஜாதியாரோடு இந்த விஷயம் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுவது, யூதர்கள் மோசேயோடு உடன்படிக்கை செய்யப்பட்டதையும், அதன்பின் கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டதையும் சரியான முறையில் அடையாளப் படுத்துகிறது. ஆகவே, யூதரல்லாதவர்களும், நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராதவர்களும், மோசேக்கு கீழாக இல்லாதவர்களும், அதனால் மோசேயிலிருந்து கிறிஸ்துவுக்கு மாற்றப்படாதவர்களுமாகிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் உரியது என வேதாகமம் அதன் அர்த்தத்தை மிக விஸ்தாரமாகவும், ஆழமாகவும் போதிப்பது நம்மை ஆச்சரியப்படுத்தாது. நல்ல ஒலிவமரத்தில் காட்டொலிவ மரத்தின் கிளைகள் ஒட்டப்படுவது பற்றி பவுல் கூறியிருப்பது போல, ஞானஸ்நானம் என்பது மிக முக்கியமான மாற்றத்தைக் குறிக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள் (ரோம. 11 அதி.) அது ஒரு முழு மனமாற்றத்தை குறித்தது.

கிறிஸ்துவினுடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம்

''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

''மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தி னாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கப் பண்ணப்பட்டோம்.

''ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானதால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருப்போம்.'' (ரோம. 6:3–5)

அப்போஸ்தலனாகிய பவுல், ரோமாபுரியிலுள்ள விசுவாசிகளில் அநேகருக்கு அவர்களில் எல்லோரும் என்று சொல்ல முடியாவிட்டாலும், அவர்களுக்குள் ''கோபாக்கினையின் பிள்ளைகளாக'' இருந்த புறஜாதி யினருக்கு மிகவும் தெளிவாக உண்மையான ஞானஸ்நானத்தைக் குறித்து

எழுதுகின்ற காரியத்தை சுபாவத்தின்படி புறஜாதியினராகிய நாம் ஏற்றுக் கொள்ளுவதைத் தவிர, மேலானதைச் செய்ய முடியாது.

இந்த இடத்தில் மூன்று வசனங்களின்மூலம் அப்போஸ்தலர், நமக்கு பொருந்துகிற பிரகாரம் ஞானஸ்நானம் என்ற பொருளைக் குறித்து மிகவும் விரிவாக சொல்லுகிறார். இந்த வசனங்கள் பொதுவாக ஞானஸ்நானத்தைக் குறித்து எல்லாவிதமான போதனைகளையும் நிரூபிப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன, ஆனால் விசேஷமாக நம்முடைய சகோதரர்களினால் ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் மூழ்குவது என்பதை குறிக்கிறது என்பதை உணர்ந்து கொண்டபடியினால் இந்த வசனங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இருந்தாலும், தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து அப்போஸ்தலர் ஒரு வார்த்தைக் கூறவில்லை என்பதை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானம் என்பது ஒரு அடையாளமே, அல்லது உண்மையான ஞானஸ்நானத்தின் ஒரு வரைபடமாக இருக்கிறது; அப்போஸ்தலர் இந்த வசனங்களின் மூலம், வெவ்வேறு நிலைமைகளிலிருந்து, உண்மையான, அத்தியாவசியமான ஞானஸ்நானத்தை விளக்கிக் கூறுகிறார்; இது இல்லாமல் ஒருவரும் கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினராக எண்ணப்பட முடியாது என்றும், இந்த ஞானஸ்நானத்தைப் பெறுபவர்கள் எல்லாம், எந்தப் பெயராய், இடமாய், எந்த நிறத்தை, எந்த பால் இனத்தைச் சேர்ந்தவராய் இருந்தாலும் பரவாயில்லை, அவர்கள் சபையின் அங்கத்தினர்களாக, புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக எண்ணப்படுவார்கள் என்று கூறுகிறார்.

ஏற்கனவே கிறிஸ்துவின் அங்கங்களாக இருப்பவர்களிடத்தில் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ''நாமனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா?'' இங்கே நாம் கொஞ்சம் கவனிக்க வேண்டும்; நாமனைவரும் தண்ணீர் தெளிக்கப்பட்டோம் என்றோ அல்லது நாமனைவரும் தண்ணீரில் மூழ்கினோம் என்றோ சொல்லவில்லை, ஆனால், ''நாமனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் (மூழ்கினோம்) பெற்றோம்'' என்று கூறுகிறார். இயேசு கிறிஸ்துவுக்குள் மூழ்குவது என்றால் என்ன? நிச்சயமாகவே 1 கொரி. 12:27ல் அவர் விளக்கிச் சொல்லுகின்ற அதே சிந்தனையை சொல்லுகின்றார். ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.'' நாம் எப்படி கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக செல்லுகிறோம்? அப்போஸ்தலர் நாம் அதற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுள்ளோம் என்று பதில் சொல்லுகிறார்; ஆகவே,

நம்முடைய ஆண்டவரின் அவயவங்களாக எண்ணப்படுகிறோம், அவர் நம்முடைய தலையாயிருக்க அவருக்கு கீழாக அங்கங்களாக இருக்கிறோம், ''அவருடைய சரீரமான சபையில்'' அங்கங்களாக இருக்கிறோம் என்கிறார்.

ஆனால், குறிப்பாக எந்த வழிமுறைப்படி நாம் கிறிஸ்து இயேசுவின் அங்கங்களாக ஆனோம் என்று ஆராய்வோம். அப்போஸ்தலர் தன்னுடைய அடுத்த அறிக்கையில் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்: ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம்.'' தண்ணீருக்குள் ஞானஸ்நானம் பெற்றதினால் அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம் என்று ஒரு வார்த்தையும் இல்லை. இல்லை, இல்லை! நாம் தண்ணீருக்குள் ஆயிரம் முறை ஞானஸ்நானம் பெற்றாலும், அது நம்மை கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக அங்கங்கங்களாக ஆக்க முடியாது எவ்வளவு தெளிவாகிறது! ஆனால் அப்போஸ்தலருடைய அறிக்கையை ஏற்றுக்கொண்டு, நாம் கிறிஸ்துவோடே கொண்டுள்ள ஐக்கியம், அவருடைய சபையில் அங்கத்துவம், அப்படிப்பட்ட அங்கங்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருத்தல் ஆகியவை நாம் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற காலத்திலிருந்து உள்ளது என்பதை அறிந்து கொள்ளுகிறோம். ஆனால், நாம் எப்பொழுது எவ்விதமாக அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்? ஆண்டவரின் மரணத்திற்குள்ளாக இந்த ஞானஸ்நானம், நம்மை அடக்கி ஆட்கொள்கிற அனுபவம் வரும்போது, அல்லது நம்மை, அல்லது மாம்சத்தை அடக்கம் செய்யும்போது, புது சிருஷ்டிகளாக அவருடைய சரீரத்தின் அங்கங்கங்களாக சேர்க்கப்படும் போது ஏற்பட்டது என்று நாம் சொல்லுகிறோம். இப்படியாக நமக்குரிய எல்லாவற்றையும் அவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவரை மரணபரியந்தம் பின்பற்றவும், அவருக்கு கீழ்ப்படியவும் தீர்மானித்த அந்த தருணத்தில்தான் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்.

சித்தம் என்பது ஒரு முழு நபரையும், அவருக்குள்ள உடமைகள் எல்லாவற்றையும் குறிக்கிறது. சித்தம், சரீரத்தையும், கைகளையும், கால்களையும், கண்களையும், வாயையும், மூளையையும் கட்டுப்படுத்து கிறது; அது மாத்திரமல்ல, சட்டை பைகளையும், வங்கி கணக்குகளையும், சொத்து உடைமைகளையும் கூட கட்டுப்படுத்துகிறது; அது நம்முடைய

நேரம், தாலந்து, அந்தஸ்து ஆகியவைகளையும் கூட தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. நம்மிடத்தில் விலை மதிப்புள்ள எந்த ஒரு பொருளும், நம்முடைய சித்தத்தின் சரியான கட்டுப்பாட்டுக்குள் வராமல் இருந்ததில்லை. ஆகவே, நம்முடைய சித்தங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது, அல்லது சில சமயங்களில் வேதாகம் எடுத்துக் காட்டுவது போன்று அது நம்முடைய ''இருதயங்களாக'' இருக்கிறது; அவைகளை நாம் ஒப்புக்கொடுக்கும் போது, நமக்குரிய எல்லாவற்றையும் அவருக்குக் கொடுக்கின்றோம். இப்படியாக நம்முடைய மாம்சீக சித்தத்தை கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அடக்கம் செய்வதுதான், நம்முடைய மாம்சீக மரணத்தைக் குறிக்கிறது. ''நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.'' (கொலோ. 3:3.) இந்த மரணம்தான், இந்த அடக்கம்தான், அவருடைய மரணத்திற்குள்ளான நம்முடைய ஞானஸ்நானமாகும். இதற்குப் பின்பு திவ்விய நோக்கத்தின்படி, நம்மை நாம் மனுஷீகம் உள்ளவர்கள் என்றோ, பூமிக்குரியவர்கள் என்றோ, பூமிக்குரிய எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் உள்ள மனுக்குலத்தினர் என்றோ எண்ணாமல் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகள் என்று எண்ண வேண்டும்.

கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக நம்முடைய சித்தங்கள் இப்படியாக அடக்கமாகும் அல்லது மூழ்கும் அந்த தருணத்திலேயே நாம் ஒரு புது சுபாவத்திற்குள்ளாக வருவதோடு, ஒரு புது வாழ்க்கையையும் பெற்றுக் கொள்ளுகிறோம். பிதாவின் சித்தத்தை செய்யும் படியாக, நம்முடைய ஆண்டவர் தன்னுடைய மனுஷீக சுபாவத்தை மரணத்திற்குள்ளாக அர்ப்பணித்துக் கொண்டார்; இருந்தாலும், அவர் மரணத்திலேயே விடப்படாமல், ஒரு புதிய சுபாவத்திற்குள்ளாக, மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார். ஆகவே நாமும் இப்படியான அர்ப்பணிப்பில் அவரோடு மரிக்கிறோம், அவருடைய அர்ப்பணிப்பில் பங்கு பெறும்போது, ஒரு மரண நிலையில் விடப்படாமல், விசுவாசத்தினால் ஆண்டவரோடு நாம் கொண்டுள்ள உறவை உணர்ந்து உடனடியாகவே புது சிருஷ்டிகளாக எழும்பலாம். இப்படியாக அப்போஸ்தலர் கூறுகிறார்: ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்.'' (ரோம. 8:9) உலகத்தாருக்கு இது ஒரு ''மறைக்கப்பட்ட இரகசியம்.'' பிதாவின் பார்வையில், நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருப்பதை அவர்கள் புரிந்து

கொள்ளுவதில்லை, ஆனால் இன்னும் தங்கள் பாவத்திலேயே இருக்கிற மற்ற மனிதர்களைப் போல் நாமும் இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள்; அதே போன்று, நாம் புது சிருஷ்டிகளாக அவரோடு ஒரு பங்கை பெறுவதற்காக, நம்முடைய சித்தத்தை பலியிடவோ அல்லது அர்ப்பணம் செய்யவோ, அதன் மூலம் நம்முடைய மாம்சீகம் மரிப்பதற்கும் காரணம் என்ன இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்வதோ இல்லை. அதோடு கூட, அவர்கள் நம்முடைய அர்ப்பணிப்பையும், அது ஏற்றுக்கொள்ளப் படுவதையும் காண்பதில்லை; இல்லையென்றால், புதிய ஜீவன், புதிய நம்பிக்கைகள், புதிய எதிர்பார்ப்புகள், கிறிஸ்துவின மூலமாக தேவனோடு புதிய உறவு ஆகிய இவைகளுக்கு அடையாளமாக மறுபடியும் பாவனையாக உயிர்த்தெழுப்பப்படுவதையும் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்கள் நம்முடைய வாழ்க்கையில் சில கனிகளைப் பார்க்கக் கூடும், ஆனால் இப்பொழுது உள்ள சூழ்நிலையின்படி, அந்தக் கனிகள் நல்லதாக அல்லது ஞானமுள்ளதாக, அல்லது லாபமுள்ளதாக அவர்களுக்கு தோன்றும் என்று நாம் நம்ப முடியாது என்று உண்மையிலேயே நாம் நம்புகிறோம். ''உலகம் அவரை அறியாதபடி யினாலே நம்மையும் (புது சிருஷ்டிகளாக) அறியவில்லை.'' (1 யோவா. 3:1)

இவைகள் எல்லாவற்றிலும் விசுவாசிகள் செய்வதெல்லாம், இயேசுவின் பாதபடியை பின்பற்றுவதாகும் – தங்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவின் பாதபடியை பின்பற்றுவதாகும். அவர் பரிசுத்தமுள்ளவராய், குற்றமற்றவராய் கறைதிரையற்றவராய், பாவிகளிடமிருந்து விலகினவராய் இருந்தபடியால் பாவங்களுக்காக எந்த பலியும் செலுத்தப்படுவதற்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது, எனெனில் அவர் பாவம் அறியாதவராக இருந்தார். ஆனால் நியாயப்பிரமாணத்தின்படி (30 வருடம்) முழு மனுஷ பருவத்தை அடைந்த உடனேயே, பிதாவின் சித்தத்தை மாத்திரம் செய்யும்படியாக, தன்னிலே ஒரு முழு அர்ப்பணிப்பை செய்யும்படிக்கு துரிதமாக செயல் பட்டார்; அதாவது தன்னுடைய உலகப்பிரகாரமான விருப்பங்கள், எதிர்பார்ப்புகள், நோக்கங்கள், வாஞ்சைகள் எல்லாவற்றையும் முழுவதுமாக பலியாக ஈந்தார். அவர் யோர்தான் நதியண்டை யோவானிடத்தில் வந்த போது, அவருடைய இருதயத்தின் சிந்தனை தீர்க்கத்தரிசனமாக இப்படியாக முன் உரைக்கப்பட்டது: ''அப்பொழுது நான், இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து

எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதை செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்.'' (சங. 40:7,8 ; எபி. 10:7) இப்படியாக, நம்முடைய ஆண்டவர், பிதாவின் சித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்து, மரணபரியந்தம் பிதாவின் சித்தத்திற்குள்ளாக, தன்னுடைய உலகப் பிரகாரமான வாழ்க்கையும் சுபாவமும், ஏற்கனவே மூழ்கிவிட்டது அல்லது அடக்கம் செய்யப்பட்டுவிட்டது என்பதற்கு அவருடைய வெளிப்படையான ஞானஸ்நானம் அடையாளமாக இருக்கிறது என்பதை உணந்தார். அவரது நீரில் மூழ்குதல், அல்லது ஏற்கனவே அவருடைய சித்தத்தை அடக்கம் செய்தலாகிய ஞானஸ்நானம் ஒரு வகையிலான அடையாளமாக இருந்தது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, அவருடைய ஞானஸ்நானம், யோவானுக்கு அல்ல, ஆனால் அவருக்கு மிகுந்த அர்த்தம் உள்ளதாக இருந்தது. யோவான், ''பாவம் அறியாதவர்'' ஞானஸ்நானம் பெறுவதைக் குறித்து மிகவும் வியப்படைந்தார்; யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பாவத்திலிருந்து மனம் திரும்புவதற்காக, நியாயப்பிரமாண உடன் படிக்கையை மீறுவர்களுக்காக மாத்திரமே கொடுக்கப்பட்டது.

வேறு எவரும் அன்றி, எல்லா நீதியையும் நிறைவேற்றுவது தமக்கு தகுதியாயிருக்கிறது என்பதை நம்முடைய ஆண்டவர் முற்றிலுமாக புரிந்து கொண்டார். வேறு யாருமில்லை, நம்முடைய ஆண்டவர்தாமே, அவர் ஒரு பாவியாயில்லாதிருந்தும் இப்படிப்பட்ட ஒரு முழுகுதல் (பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கு அடையாளமாய்) அவருக்கு தேவையில்லை என்று அவர் அறிந்திருந்தபோதும், வர இருக்கின்ற சரீரத்தின் தலையாக இருந்தபடியால் அவரைப் பின்பற்றுகிற அனைவருக்கும்– மாம்சீக இஸ்ரேலிலிருந்து ''சரீரமான'' சபையின் அங்கங்களாக இருப்பவர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் அன்னியரும் பரதேசிகளும், தேவனற்றவர்களுமான புறஜாதியாருக்கும் ஒரு சரியான, அர்த்தம் நிறைந்த பாடமாக இருக்கும்படியாக அப்படி செய்வது அவருக்கு அவசியமாக இருந்தது. அவரைப் பின்பற்றி வருகின்ற நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படியாக, அவருக்கென இருந்த எல்லாவற்றையும், அவருடைய சித்தத்தையும் மரண பரியந்தம் முழுவதுமாக அர்ப்பணம் செய்து அடையாளப்படுத்துவது அவருக்கு அவசியமாயிருந்தது.

யோவான் கொடுத்த தண்ணீர் ஞானஸ்நானம்தான் உண்மையான முழுக்கு ஞானஸ்நானம் என்ற காரணத்தினால் ஆண்டவர் பெறாமல், அதற்கு அடையாளமாக அல்லது விளக்கமாக இருக்கும்படியாக பெற்றுக் கொண்டார் என்பதை எளிதில் விளக்கிக் கூறமுடியும். இதற்கு ஆதாரமாக கடைசி இராப்போஜனத்தின்போது அவர் கூறிய அவருடைய வார்த்தையை கவனிக்க வேண்டும். ''ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.'' (லூக் 12:50) இங்கே நம்முடைய ஆண்டவர் காண்பிப்பது, அவருடைய தண்ணீர் ஞானஸ்நானத்தை அல்ல, ஆனால் மனிதனின் மீட்பு கிரயமான, அல்லது பாவ நிவாரண காணிக்கையான, திவ்விய ஒழுங்கு முறைக்கு இசைவானதாகிய மரண ஞானஸ்நானத்தை, மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தை ஆகும்.

அவர் முப்பது வயதான போது, கிடைக்கப் பெற்ற முதலாவது தருணத்திலே, இந்த மரண ஞானஸ்நானத்திற்கு தன்னை அர்ப்பணித்து, அவருடைய ஊழியத்தின் மூன்றரை வருடங்களில், – அனுதினமும் செத்து, தன்னுடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி – அவருடைய வாழ்க்கையை, அவருடைய சக்தியை, அவருடைய பெலத்தை பயன்படுத்தி பிதாவின் ஊழியத்திற்கும், தன்னை பின்பற்றி வருபவர்களின் ஊழியத்திற்கும், இன்னும் விரிவாக சொல்லப்போனால் தன்னுடைய சத்துருக்களுக்கான ஊழியத்திற்கும், அந்த அர்ப்பணிப்பினால் செய்யப்பட வேண்டியவைகளை கவனமாக செய்து முடித்தார். இறுதியில் இந்த மரண ஞானஸ்நானம் அருகில் வந்ததை அவர் உணர்ந்து, அது முற்றுமாக முடிவு பெறுவதை உணர்ந்து, பாரங்களையும், சோதனை களையும், கஷ்டங்களையும் உணர்ந்து, ஒவ்வொரு வினாடியும் மனப்பாரம் அதிகரித்து, அதிகரித்து வருவதை உணர்ந்து, '' ஜனங்களில் ஒருவரும் அவரோடு இருந்ததில்லை'' என்கிற வாக்கின்படி அவருக்காக பரிதபிக்கக் கூடியவர் ஒருவரும் இல்லாதிருக்கும் போது, அவர் இருந்த சூழ்நிலையையும், நிலைமையையும் புரிந்து கொள்ள ஒருவரும் இல்லாததை உணர்ந்து, அவருடைய துக்கத்தில் பங்கேற்கும் வகையில், அனுதாபத்தையோ, தைரியத்தையோ, தேறுதலையோ தரக்கூடியவர்கள் ஒருவரும் இல்லை என்பதை உணர்ந்து, சோதனையின் முடிவுக்காக ஏங்கிய வண்ணம், ''அது முடியுமளவும் (மரண ஞானஸ்நானம்) எவ்வளவோ (கஷ்டத்தில்) நெருக்கப்படுகிறேன்'' (லூக். 12:50) என்று

கூறினார். பின்னர், கொஞ்ச காலத்துக்குள்ளே ''எல்லாம் முடிந்தது'' என்று கூறி மரித்த போது, அவருடைய ஞானஸ்நானம் நிறைவுற்றது.

ஆண்டவரும் அவருடைய சபையும் மாத்திரமல்ல, முழு உலகமும் மரித்துக்கொண்டு இருக்கிறது; ஆனால் கிறிஸ்துவின் மரணத்தில் அவருடைய சரீரமான சபை பங்கெடுப்பது போன்று உலகம் பங்கெடுப்பதில்லை. அங்கே பெரிய வித்தியாசமுண்டு. பிதாவாகிய ஆதாம் அவனுடைய தண்டனை அல்லது சாபத்திற்கு கீழாக மரித்திருக்கும் போது அவனோடு கூட முழு உலகமும் மரித்திருக்கிறது. ஆனால் நம்முடைய ஆண்டவர் உலகத்தாரல்ல, அவர் ஆதாமுக்குள் மரித்தவர்களில் ஒருவராக இல்லை. அவருடைய வாழ்க்கை பரிசுத்தமானதும் எல்லா பாவிகளிலுமிருந்து விலகினதுமாய் இருந்தது என்பதை மாத்திரமல்ல, அவருடைய தாயார் உலகத்தவராய் இருந்தும்கூட, அவர் ஆக்கினைக்குட்பட்டிருக்கவில்லை என்பதையும் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். அப்படியெனில் அவர் ஏன் மரித்தார்? அவர் ''நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்'' –அவருடைய மரணம் ஈடுபலியாக இருந்தது என்று வேதாகம் கூறுகிறது. அவருடைய சரீரமான சபையும் கூட அப்படியாகதான் இருக்கிறது; அது அவருடைய மரணத்திற்கேதுவான ஞானஸ்நானத்தின் மூலம் அவருக்குள் ஞானஸ்நானம் பெற்று இருக்கிறது; அவருடைய ஈடுபலி மரணத்தில் அவரோடு கூட பங்கு பெறுகிறது. சுபாவத்தின்படி ஆதாமின் பிள்ளைகளாகவும், ''மற்றவர்களைப் போன்று கோபக்கினையின் பிள்ளைகளாகவும்'' இருந்தார்கள். முதலாவது அவர்கள் நம்முடைய ஆண்டவர் இயேசுவின் மேலும், அவருடைய மீட்பின் கிரியையின் மேலும் வைத்த விசுவாசத்தினாலும் ஆதாமிய மரணத்தினின்று ஜீவனுக்கேதுவாக, நீதிமான்களாக்கப்பட்டுள்ளார்கள். இப்படி மரணத்திற்கேதுவான ஆதாமிய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து ஜீவனுக்கேதுவாக நீதிமான்களாக்கப் பட்டதின் முழு நோக்கமே, அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதின் மூலம் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, அவருடைய மரணத்தில் அவரோடு இணைந்து ஈடு பலி செலுத்துபவர்களாக இருக்கிற இந்த சிலாக்கியத்தை பெறுவதற்காகத்தான். ஆகா! ஆதாமுக்குள் மரிப்பதற்கும், கிறிஸ்துவுக்குள்ளாக மரிப்பதற்கும் இடையில் எவ்வளவு பெரிதாக ஒரு வித்தியாசம்!

இந்த ஈடுபலியில், மரணத்துக்கேதுவான ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு கூட இப்பொழுது உள்ள நம்முடைய உறவில் உள்ள இரகசியமும், இதனால் வளருகின்ற உறவும், வரவிருக்கின்ற மகிமையில் அவரோடு உள்ள ஐக்கியமும் உலகத்தாருக்கு புரியாததாக உள்ளது. இருந்த போதிலும், இது ஆண்டவருக்கு உண்மையாய் இருப்பவர்களால் பாராட்டப்பட வேண்டியதாகவும், வேதாகமத்தில் அடிக்கடி ஆணித்தரமாக அறிக்கையிடப்பட்டதாகவும் இருக்கிறது. ''அவரோடு கூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்.'' ''ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தேமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.'' ''நாம் பிள்ளைகளானால், சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் (அவருடைய சரீரத்தின் அங்கங்களாக மரணத்துக் கேதுவான ஞானஸ்நானத்தை நாம் பெற்றால்)அப்படியாகும்.'' 2 தீமோ. 2:12; ரோம. 6:8; 8:17.

நாம் பார்த்துக் கொண்டிருக்கிற நான்காவது வசனத்தில், அப்போஸ்தலர் இன்னொரு கோணத்திலிருந்து இதே கருத்தை மறுபடியும் கூறுகிறார். ''அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினால் நாம் கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.'' மறுபடியும் தண்ணீர் ஞானஸ்நானத்தை குறித்து சொல்லப்பட வில்லை, ஆனால் மரணத்திற்கேதுவான ஞானஸ்நானத்தைக் குறித்து, மரணபரியந்தம் என்று நாம் செய்துகொண்ட அர்ப்பணிப்பைக் குறித்து திட்டவட்டமாய் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து அப்போஸ்தலர் விளக்கமாக கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெற்றதின் காரணம் என்ன என்று பின்வருமாறு கூறுகிறார். ''பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளவேண்டும்'' என்கிறார். நம்முடைய ஆண்டவரின் இராஜ்யத்தில் அவருடைய மகிமையில் நாம் பங்கடைவோம் என்கிறார்; இந்த இடத்தில் அப்போஸ்தலர் முதலாம் உயிர்தெழுதலில் நம்முடைய பங்கைக் குறித்து மறைமுகமாக குறிப்பிடுகிறார். முக்கியமாக தற்போதைய வாழ்க்கையைக் குறித்து அவர் குறிப்பிடுகிறார். அவரோடு மரிக்கவும், சத்தியத்தின் ஊழியத்தில் அவரோடு கூட பலி செலுத்துகிறவர்களாய் இருக்கும்படியாக தங்களுடைய வாழ்க்கையை ஆண்டவருக்கென முழுமையாய் அர்ப்பணம் செய்கின்றவர்கள்

எல்லோருமே இந்த உலகத்தில் ஜீவிக்கும் போதே தங்களை சுற்றி இருப்பவர்களிடத்தில் இருந்து வித்தியாசமானவர்களாக, வேறுபட்டவர்களாக எண்ணிக்கொள்ளவேண்டும். மற்றவர்களை ஆழமாக ஆட்கொண்டிருக்கின்ற பூலோகக் காரியங்களிலிருந்து, மரிக்கும்படியாக அவர்கள் உடன்படிக்கை செய்கிறபடியால், அவைகளை புது சிருஷ்டிக்கு ஊழியம்செய்பவைகளாக மாத்திரமே உபயோகப்படுத்தலாம். புது சிருஷ்டிகள் மீட்பரினால் பரலோக காரியங்களுக்கும் நன்மைகளுக்கும் பங்கு உள்ளவர்களாகிறார்கள், நம்மை சுற்றியுள்ள உலகம் அவைகளை பார்க்கவும் புரிந்து கொள்ளவும் முடியாது. இதோடு ஒத்திருக்கும்படியாக நம்முடைய வாழ்க்கை உலகத்தில் புதியதாய், தெளிவானதாய், நம்மைச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து வேறுபட்டதாய் இருக்க வேண்டும், எனெனில் பரலோக சிந்தையிலான புது ஆவியினாலும், புது நம்பிக்கைகளினாலும், புது குறிக்கோள் களினாலும் நாம் உயிரூட்டப்பட்டுள்ளோம்.

ஐந்தாவது வசனத்திற்கு வரும் போது, தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து இன்னமும் சின்ன குறிப்பைக் கூட அப்போஸ்தலர் கூறவில்லை, இருந்தாலும் சிலர் அவருடைய வார்த்தைகளைக் குறித்து முதலாவது வேறு விதமாய் சிந்திக்கலாம். ‘‘ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருப்போம்.’’ அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால் என்பது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்று அர்த்தப்படுத்திக் கொள்வோம் என்றால், உலகத்தில் உள்ள எந்த போதகரும் ஒத்துக்கொள்ள விரும்பாத அளவுக்கு தண்ணீர் ஞானஸ்நானத்தின் மேல் அதிகமாக கவனம் செலுத்துவதாகும். கிறிஸ்தவர்களாயிருக்கிற நாம் எதை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்? ஆண்டவருடைய உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்தெழுதலில் நாம் பங்கடைவோம் என்பதை இல்லையா? இதைத்தான் அப்போஸ்தலர் தனது மனதில் உள்ள பெரிய உன்னதமான கருத்தும், நம்பிக்கையும் என்று பின் வருமாறு கூறினார். ‘‘இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற் கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியாக வேண்டும்.’’ (பிலி. 3:10,11) ரோம. 6:5 ல்

சொல்லப்பட்டதை, தண்ணீரில் முழுகுவதனால் வரும் நிச்சயமான பலன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பங்கடைதல் என்று புரிந்து கொள்ளுவது, இந்த பகுதியை மற்ற பகுதிகளிலிருந்து முரண்பாடுள்ளதாய் ஆக்கு வதோடு நியாயமானதை அபத்தமாக்குவதாகும். ஏன் ஒரு இணைக்கப் படுதல் அல்லது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் முதலாம் உயிர்த்தெழுதலில் ஒரு பங்கை ஏற்படுத்த வேண்டும்? இணைக்கப் பட்டுள்ள, அடக்கம் பண்ணப்பட்டுள்ள அல்லது தண்ணீரில் முழுக்கப் பட்டுள்ள ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலான முதலாம் உயிர்த்தெழுதலில் ஒரு போதும் பங்கடைய மாட்டார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம், மரணத்தில் இணைக்கப் படுதல், கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் இணைக்கப்படுதல் என்பவை களை பார்க்கும்படியாக, இதற்கு முன்னதாக உள்ள இரண்டு வசனங் களோடு இசைந்து இந்த வசனத்தை நாம் புரிந்து கொள்ளும் போது, எல்லாம் தெளிவாகவும், நியாயமானதாகவும் இருக்கிறது. அவருடைய குமாரனோடு உடன் சுதந்தரராய் இருக்கும்படியாகவும், அவரோடுகூட உபத்திரவத்தை அனுபவிக்கவும், அவரோடு மரிக்கவும், அவரோடு ஜீவிக்கவும் அவரோடு அரசாட்சி செய்யவும், ஆண்டவரால் அழைக்கப் பட்டிருக்கும்போது, இந்த அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நாம் அவரோடு இணைக்கப்பட்டிருந்தால் அல்லது அவருடைய மரணத்தில் அடக்கம்பண்ணப்பட்டிருந்தால்– அதாவது தேவனுடைய உண்மையான போர் வீரர்களாய், சத்தியத்தின் ஊழியக்காரராய் இருந்தால் எவ்வளவு நிச்சயமாய் உணருவோம். காலகாலத்தில் இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின முழுவெகுமதியான, முதலாம் உயிர்த்தெழுதலில், மகிமைக்கும், கனத்திற்கு அழியாமைக்கும் ஒரு பங்கைப் பெறுவோம்.

நம்முடைய ஆண்டவருக்கு மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம், உண்மையான ஞானஸ்நானமாக இருந்தது போன்று, சபைக்கும் உண்மையான ஞானஸ்நானமாக இருக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானம், மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திற்கு ஒரு அடையாளமாக, அல்லது ஒரு விளக்கமாக மாத்திரமே ஆண்டவருக்கு இருந்தது போன்று நமக்கும் இருக்கிறது. அவருடைய சீடர்களில் இரண்டு பேரான யாக்கோபும் யோவானும் ஆண்டவரிடம் முடிவில் அவருடைய இராஜ்யத்தில் ஒருவன்

அவரது வலது பாரிசத்திலும், ஒருவன் அவரது இடது பாரிசத்திலும் உட்காரும்படி வாக்களிக்க வேண்டும் என்று கேட்ட போது, அவர்களுக்கு ஆண்டவர் கூறிய வார்த்தைகளின்படி இது திட்டவட்டமாக காட்டப்பட்டுள்ளது. ''நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை.....நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?'' என்று நம்முடைய ஆண்டவர் பதில் கூறினார். அவர்கள் அவருடைய அவமானத்தில் மட்டுமல்லாது, மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திலும் பங்கு பெற அவர்களுடைய விருப்பத்தை அறிக்கை செய்த போது, ஆண்டவர் அதை ஆமோதிக்கும் வண்ணமாக பதில் கூறுகிறார்: ''நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.'' (மாற்கு 10:35–39) அவரால் அழைக்கப் பட்டவர்களில் தங்களுடைய இருதயத்தில் இப்படிப்பட்ட அனுபவங்களுக்காக வாஞ்சிக்கிறவர்களுக்கு ஆண்டவர் இந்த சிலாக்கியத்தையும், அவருடைய உதவியையும் அருளுவார். இப்படிப்பட்டவர்கள் உண்மையிலேயே கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஸ்நானம் பெறுவார்கள், மேலும் இதன் பலனாக அவரோடு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதோடு அதோடு கூட வருகின்ற இராஜ்யத்தின் மகிமையிலும் ஒரு பங்கை பெறுவார்கள். இந்த இடத்தில் நம்முடைய ஆண்டவர் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது. எப்படியெனில் இந்த இரண்டு சீடர்களும் அவருடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலேயே அவரோடு இருந்து, அவருடைய பிரதிநிதிகளாக யோவான் கொடுத்த ஞானஸ்நானமான ''பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற'' ஞானஸ்நானத்தை திரளான ஜனங்களுக்கு தண்ணீரில் கொடுத்து வந்தார்கள். (யோவா. 3:22,23; 4:1,2; மாற்கு 1:4) அவருடைய ஸ்நானத்தில் பங்குபெற அவர்களிடத்தில் வாஞ்சையிருக்கிறதா என்று ஆண்டவர் கேட்டதை அப்போஸ்தலர்கள் தவறாக புரிந்துகொள்ளவில்லை. தண்ணீரில் மறுபடியும் ஸ்நானம் பெற வேண்டும் என்று அவர் விரும்பினார் என்ற எண்ணம் அவர்களிடத்தில் இல்லை. அவர்கள், தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திலும் பிதாவின் சித்தத்திலும் இருக்கும்படியான ஸ்நானம் என்று அவர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள். அதன்படி அவருடைய ஈடுபலியில் – அனுதினமும் மரிப்பது, சகோதரர்களுக்கென தங்களுடைய ஜீவனைக் கொடுப்பது, அதுவும் இறுதிவரை, உண்மையான மரண பரியந்தம் அவர்கள் பங்கு பெற்றார்கள்.

"ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்"

1 கொரி. 12:12,13

''அவருடைய மரணத்திற்குள்ளாக'' என்று நம்முடைய ஆண்டவரோடு மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதைக்குறித்து கூறும்போது, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவது என்று பொருள்படும்படியாக கூறினார் என்று ஒருவரும் அப்போஸ்தலரை தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. மரணமும், பரிசுத்த ஆவியும் மிகவும் தெளிவாக வித்தியாசமானது, மேலும் இரண்டு ஞானஸ்நானங்களும் தெளிவாக வித்தியாசமானதாக உள்ளது. மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் என்பது ஒரு தனிப்பட்ட விஷயமாகும். இதில், கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கங்களாகும் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அவனுடைய சித்தத்தை அர்ப்பணிக்கவும் பலியாக செலுத்தவும் வேண்டும். இதன் பிறகு, அவனுடைய பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆண்டவர் தன்னுடைய ஆவியின் மூலம், மரணபரியந்தம் அவனுடைய வாழ்க்கையை சத்தியத்திற்கும், சகோதருக்கு ஊழியம் செய்வதிலும் பயன்படுத்த உதவி செய்கிறார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது முழு சபைக்கான ஒரே ஞானஸ்நானம் ஆகும். அது பெந்தெகொஸ்தே நாளில் மேலறையில் நடந்தது, மறுபடியும் அதற்கு தேவை ஏற்படவில்லை, ஏனெனில் அன்றிலிருந்து இன்றுவரை சபையோடு அது தங்கியிருப்பது நின்றுவிடவில்லை. கொர்நேலியுவின் விஷயத்தில் வெளிப்படையாக காணப்பட மறுபடியும் கொடுக்கப் பட்டதற்கான காரணம், அது யூதர்களுக்கானாலும் புறஜாதியாருக் கானாலும் எந்த விதமான வித்தியாசத்தையோ அல்லது வேற்றுமையோ ஆண்டவர் காட்டுவதில்லை என்பதை பேதுருவுக்கும், எல்லா யூத விசுவாசிகளுக்கும், கொர்நேலியுவுக்கும் எல்லா புறஜாதி விசுவாசி களுக்கும் ஒரு சாட்சியாக இருக்கும்படியாகவே ஆகும். பெந்தெகொஸ்தே ஸ்நானம் மேலறையை பரிசுத்த ஆவியினால் நிரப்பியதன் மூலம் நிறைவேற்றப்பட்டது என்று நமக்கு சொல்லப்பட்டது, அதன்படியாக அங்கே கூடியிருந்த 120 சகோதரர் அனைவரும் பரிசுத்த ஆவிக்குள் ஸ்நானம் பெற்றார்கள், மற்றவர்களைக் காட்டிலும், அப்போஸ்தலர்கள் திவ்விய சிலாக்கியத்தைப் பெற்றதற்கு

அடையாளமாக தங்கள் தலைகள் மேல் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டது.

பரிசுத்த ஆவியினால் பெற்ற இந்த அபிஷேகம், பரிசுத்த அபிஷேக தைலத்தால் இஸ்ரயேலின் பிரதான ஆசாரியர்களும் இராஜாக்களும் அபிஷேகம் பண்ணப்பட்டதற்கு ஒத்திருந்தது. தைலம் தலையின் மேல் ஊற்றப்பட்டு சரீரத்தில் வழிந்தோடியது. தலையின் மேல் ஊற்றப்பட்ட இது 30வது வயதில் தன்னை அர்ப்பணித்த வேளையில் பரிசுத்த ஆவி அவருக்கு பிதாவினால் ''அளவில்லாமல்'' கொடுத்ததற்கு நிழலாட்டமாய் உள்ளது. (யோவா. 3:34) பெந்தெகொஸ்தே பூரணமாய் வந்த பிறகு, நம்முடைய மகிமையான தலையானவர் பிதாவின் சமூகத்தில் தோன்றி தன்னுடைய ஜனங்களுக்காக பாவ நிவாரணத்தை செலுத்தியபோது அவருடைய சபையை ஸ்நானம் பண்ணும்படியாக பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை ஊற்ற அவர் அனுமதிக்கப்பட்டார், இப்படியாக செய்வதினால் அவர்கள் ஆண்டவராலும், பிதாவினாலும், அவருடைய சரீரமான சபையின் அங்கங்களாக, புது சிருஷ்டியின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள் என்பதை குறிப்பிடும்படியாயிற்று. அவருடைய சரீரமான சபை அப்பொழுதிலிருந்து வளர்ச்சியுறுகிறது, பரிசுத்த ஆவியும் அதற்குள்ளும் அதன் மேலும் தொடர்ந்து வந்திருக்கிறது; மேலும் ஒவ்வொரு புது அங்கமும் அவருடைய சரீரமான சபையில் சேர்க்கப்படும்போது, ஒவ்வொருவரும், சரீரமான சபைக்கு சொந்தமானதாக அதற்குள்ளாக பரவுகின்ற ஆவியின் ஒரே ஞானஸ்நானத்தில் ஒரு பங்கை பெறுபவராகிறார்.

நாம் பார்த்துக்கொண்டிருக்கிற பகுதி, ஆவியின் இந்த பெந்தெகொஸ்தே ஞானஸ்நானத்தையும், மரணத்திற்குள்ளாக தனிப்பட்ட நம்முடைய ஞானஸ்நானத்தையும் இணைத்து, இரண்டிற்கும் இடையில் உள்ள உறவைக் காட்டுகின்றது. நீதிமான்களாக்கப் பட்ட மனிதர்களாகத்தான் நாம் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகின்றோம்; புது சிருஷ்டியின் அங்கங்களாகத்தான், நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப் படுகிறோம்; கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக சேர்த்துக்கொள்ளப் படுகிறோம். நம்முடைய பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம்முடைய தலையாகிய நம்முடைய ஆண்டவரோடு ''அவரோடு மரித்தோம்'' என்று எண்ணப்படுவதற்கு முன்பாக, நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, நம்முடைய மீட்பரில் நாம்

வைக்கின்ற விசுவாசத்தின் மூலம், முதலாவதாக நாம் ஆதாமிய பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் வெளியே வரும்படி நீதிமான்களாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே அதன்பிரகாரம் நாம் முதலாவதாக நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நம்மை அர்ப்பணித்து அல்லது பலியாக செலுத்தி, மரிக்கும் நிலை தொடங்குவதற்கு முன்னர் நாம் புது சிருஷ்டியின் அங்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இப்படிச் செய்வது ஆண்டவருடைய கிருபையால் நம்முடைய மரணத்திற்குள்ளாக முழு ஞானஸ்நானத்திற்கும், ஆண்டவரின் மரணத்தின் சாயலின் ஞானஸ்நானத்திற்கும் வழிவகுக்கும். இதன் விளைவாக அவருடைய ''முதலாம் உயிர்த்தெழுதலில்'' ஒரு பங்கை உறுதி செய்யும். இது நாம் ஏற்கனவே பார்த்ததற்கு இசைவாய் இருக்கிறது. அதாவது நாம் நீதிமான்களாக்கப்பட்டது, கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கங்களாக, புது சிருஷ்டிகளாக்குவதில்லை. ஆனால் அப்போஸ்தலர் கூறுகிறபடி அவரோடு கூட நாம் பெறுகிற மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கங்களாக, புது சிருஷ்டிகளாக்குகிறது. ''எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அனேகம்..... அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார்..... எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப் பட்டோம்.'' 1 கொரி. 12:12,13.

இந்த சுவிசேஷ யுகம் ''கர்த்தருடைய அனுக்கிரக வருஷமாகும்.'' இந்த காலத்தில் விசுவாசிகளின் பலிகளையும், அவர்கள் மரணபரியந்தம் செய்து கொண்ட முழு அர்ப்பணிப்பையும் ஏற்றுக் கொள்ள விருப்பமுள்ளவராய் இருந்திருக்கிறார். யுகத்தின் அழைப்புக்கு, இப்படியாக பதிலளித்தவர்கள் உடனடியாகவே ஒரு இடத்திற்கு, பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையில் ஒரு அங்கத்துவத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். ஆனால் இந்த ஏற்றுக் கொள்ளப்படுதல் என்பது விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவதில்லை. அர்ப்பணம் செய்து கொண்ட அனைவரும் அனுதினமும் மரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது, எப்படியெனில் முழு அர்ப்பணிப்பின் முழு நோக்கமும் அனுதினமும் கடைபிடிக்கப்பட வேண்டும், அதாவது அவர்கள் ''எல்லாம் முடிந்தது'' என்று இறுதியாக சொல்லக் கூடிய வேளைவரும் வரை கடைபிடிக்கப்பட வேண்டும். பலி செலுத்துவதில்

நிலைத்திருத்தாலும், நன்மை செய்வதில் நிலைத்திருத்தாலும், பொறுமையுடனும் உண்மையுடனும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது அர்ப்பணிப்பின் எதிர்பார்ப்பாகும். முடிவு என்பது, நம்முடைய ஆண்டவரும், தலையுமாயிருக்கிறவருக்கு மரணமாக இருந்தது போல, நமக்கும் உலகப்பிரகாரமான மரணமாக இருக்கிறது. ''நீங்கள் தேவர்கள் (ஏலோகிம், வல்லமையுடையவர்கள்) என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப் போல விழுந்து போவீர்கள்'' –லோகப்பிரபுவான ஆதாமைப் போல அல்ல, குற்றவாளிகளாக அல்ல; ஆனால் பிரபுவான இயேசுவைப் போன்று –அவருடைய மரணத்தில் பங்கேற்பவர்களாக. (சங் 82:6,7) இந்த உண்மை நிலையும், அனுதினமும் மரித்தலும் நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்ள தேவையாயிருக்கிறது. இப்படியாக ஆண்டவரின் அடிச்சுவடுகளில் நடப்பவர்களுக்கே, அவர் புது சிருஷ்டியின் அங்கங்களாக ''தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்'' என்ற நிலைக்கு வருபவர்களுக்கென ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதை, உண்மையாக ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு, மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். ''நீ மரணபரியந்தமும் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' (வெளி 2:10) என்பது நம்முடைய ஆண்டவரின் வார்த்தை களாகும். அப்படியெனில் சபையின் ஆண்டவரும் தலையுமாயிருக் கிறவருக்கு உள்ளது போல சபைக்கும் உள்ளது என்று காண்கிறோம். அதாவது, அர்ப்பணிப்பு ஆவியின் முதல் கனிகளைக் கொண்டு வருகிறது என்றும், அனுதினமும் உண்மையாயிருப்பது ஆவியினாலுண்டான ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது என்றும், அதிகதிகமாக மகிழ்ச்சியையும், கனிகளையும் கொண்டு வருகிறது என்றும் காண் கிறோம். முழு உரிமையை, அதாவது முதலாம் உயிர்த்தெழுலிலும், அதன் மகிமையிலும் கனத்திலும் ஒரு பங்கைப் பெறுவதற்கு உண்மையான மரணத்தில் உடன்படிக்கையை தவறாது முடிப்பது மிக அவசியமானது என்பதையும் நாம் காண்கிறோம். எபே. 1:12–14 ; ரோம. 8:16,17.

அக்கினி ஞானஸ்நானம்

''அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்'' என யோவான் ஸ்நானகன் இயேசுவைக்

குறித்து யூதர்களிடத்தில் அறிக்கையிட்டதை நாம் ஏற்கனவே(தொகுதி 5, அதி. 9) ஆழமாகப் பார்த்துள்ளோம் (மத் 3:11). இப்படியாக உண்மையான இஸ்ரயேலர்மேல் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தையும், அந்த தேசத்தில் எஞ்சியுள்ளவர்கள்மேல் தேவனுடைய கோபத்தின் அக்கினியான ''கோபாக்கினை பூரணமாய்'' (1 தெச. 2:16) வந்ததையும் சுட்டிக் காட்டுவதை நாம் ஏற்கனவே ஆழமாகப் பார்த்துள்ளோம். அக்கினி ஞானஸ்நானம் என்பது ஒரு ஆசீர்வாதமும் அல்ல, கிறிஸ்துவ மக்கள் சில வேளைகளில் அதற்காக ஜெபிப்பது அறிவுடையதும் அல்ல. யூத யுகத்தின் இறுதியில் அந்த ஜாதியினரில் இருந்த ''பதர்கள்'' மேல் அக்கினி ஞானஸ்நானம் வந்தது போன்று, கிறிஸ்தவ உலகில், இந்த யுகத்தின் இறுதியில் களைகளைப் போன்று இருப்பவர்கள் மேல் இப்படியான ஒரு அக்கினி வரும் என நம்முடைய ஆண்டவர் சுட்டிக் காட்டுகிறார். அதாவது, ஒரு அக்கினி ஞானஸ்நானம், பயங்கரமான ஆபத்து– ''யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிருந்த ஆபத்து காலம் வரும்.'' தானி. 12:1.

அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானம்

கிறிஸ்தவ மக்கள் மத்தியில் நடைமுறையிலுள்ள பல்வேறு தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்தும், உலகம் முழுவதும் அவர்கள் மத்தியில் அதுதான் உண்மையான ஞானஸ்நானம் என்று தவறாக கிட்டத்தட்ட அனைவராலும் புரிந்து கொள்ளுப்படுவதில் கவனத்தை செலுத்துமாறு ஏற்கனவே கேட்டுள்ளோம். இருதயத்தை தொட முடியாத இந்த தண்ணீர் ஞானஸ்நானத்தை சார்ந்து இருக்கும்படியாக செய்யப்பட்ட சோதனைகள் எவ்வளவு பொய்யானதும் முரண்பாடு உள்ளதாயும் இருக்கிறது என்பதைக் காட்டியுள்ளோம். அவைகள் ஏறத்தாழ அடையாளமாகத் தோன்றவில்லை, ஏனென்றால் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக உண்மையான ஞானஸ்நானத்தை, அவர்கள் தெளிவாக பகுத்தறியவில்லை. கிறிஸ்துவின் சரீரமான சபையைப் பெறுத்த வரையில், உண்மையான ஞானஸ்நானத்தை சோதித்து அறிவது எவ்வளவு எளிதானதாகவும், ஆனால் எவ்வளவு சரியானதாகவும் ஆகிறது. இந்த சபையினரின் பெயர்கள், பூமிக்குரிய பதிவை சார்ந்திராமல் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த உண்மையான ஞானஸ்நானம் உண்மையிலேயே உண்மையான சபைக்குள் நுழைவதற்கு வாசலாக உள்ளது. ஏனெனில் முதலாவதாக அவன் தன்னுடைய சித்தத்தில், இருதயத்தில், கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான

ஞானஸ்நானத்தை அனுபவித்திராவிட்டால், ஒருவரும் கிறிஸ்துவின் சரீரமான சபையில் ஒரு அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளப்பட முடியாது; மேலும் இப்படியான வழியில் அவருடைய சபையில் அங்கத்தினனாக சேர்த்துக் கொள்ளப்படுவது என்பது ''கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவது''ஆகும். (கொலோ. 1:24) ஆம்! இப்படியான அர்ப்பணிப்பை செய்கிற விசுவாசிகள், ஆண்டவரோடு அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிற விசுவாசிகள் எல்லோரும் உண்மையான கோதுமையாக இருக்க வேண்டும், இவர்களில் எவரும் களை இல்லை. தண்ணீர் என்கிற கதவு வழியாக ''பேப்டிஸ்ட் சபைக்குள்'' கோதுமையும், களையும் அனுமதிக்கப்படலாம்; ஆனால் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் என்ற கதவு, கோதுமை வகுப்பாரை மாத்திரம் அனுமதிக்கும், ஏனெனில் வேறு எவரும் இப்படியான நிபந்தனைக்குள்ளாக வருவதற்கு முயற்சி செய்ய மாட்டார்கள்; ஆனாலும், சில களைகள் ஒரு வகையில் கோதுமை போல போலியாக காணப்படலாம்.

இந்த கோணத்திலிருந்து நாம் பார்க்கும் போது, பிரஸ்பெடேரியன், மெதடிஸ்ட், லுத்தரன், எபிஸ்கோபல், ரோம கத்தோலிக்கர் போன்றவர்கள் மத்தியிலும், மேலும் பேப்டிஸ்ட், சீஷர்கள் சபை மத்தியிலும்கூட, இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக, அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்– உண்மையான சபையின் அங்கத்தினர்கள் காணப்படலாம். இன்னொரு பக்கம், நிச்சயமாகவே எல்லா சபைப் பிரிவுகளில் உள்ள பெரும்பான்மையோர் (பேப்டிஸ்ட், சீஷர்கள் சபை உட்பட) உண்மையான சபையான கிறிஸ்துவின் சரீரமான சபையில் பங்கோ அல்லது பாத்யமோ இல்லாதிருக்கிறார்கள். எனெனில் அவர்கள் அவருடைய மரணத்திற்குள்ளான உண்மையான ஞானஸ்நானத்தின் மூலம், உண்மையான வாசல் மூலம் உண்மையான சபைக்குள்ளாக வராதிருக்கிறார்கள். இந்த விகிதாச்சாரம் மிகக்குறைவாக, விவாதத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

இப்படியாக, அப்போஸ்தலர் செய்கிற வண்ணம், உண்மையான ஞானஸ்நானத்தின் மேல் எல்லா பாரத்தையும் வைத்து விட்டு, நாம் அதன் அடையாளத்திற்கு திரும்புகிறோம்; அதாவது தண்ணீர் ஞானஸ்நானத்திற்கும் திரும்பி முதலாவதாக நாம் கேட்பது, உண்மையான

ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு அடையாளம் என்பது சரியானதா அல்லது அவசியமானதா? அப்படியென்றால், இரண்டாவதாக நாம் கேட்பது எது சரியான அடையாளம்?

அடையாளமான ஞானஸ்நானம் அவசியமானதா?

ஆண்டவருடைய சாட்சியும், அப்போஸ்தலர்களுடைய சாட்சியும் அடையாளமான, தண்ணீர் ஞானஸ்நானம் சரியானதே என்று காட்டுகிறது. எப்படியெனில், அவர்கள் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றது மாத்திரமல்ல, அவர்கள் மற்றவர்களுக்கும், யூதர்களுக்கு மாத்திரமல்ல, மனம் திரும்பிய புறஜாதியினருக்கும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் கற்பித்தார்கள் என்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் ஞானஸ்நானம், யோவான் யூதர்களுக்கு கொடுத்த ஞானஸ்நானத்திலிருந்து வித்தியாசமானது மாத்திரமல்ல, தனிதன்மை வாய்ந்தது என்றும், அது மனதிரும்புதலுக்கேற்ற பாவமன்னிப்புக்குரியது அல்ல என்றும் முன்பே பார்த்திருக்கிறோம். மேலும் யோவான் விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றும், நம்முடைய ஆண்டவரும், இப்படியாக தன்னுடைய மரணத்தைக் குறித்து ஒரு அடையாளத்தை ஏற்படுத்தியபோது, அந்த நாட்களில் யோவானும் மற்றவர்களும் புரிந்து கொண்டிருக்க முடியாததை விளக்க முற்படவில்லை, ஏனெனில் நம்முடைய பாவங்களுக்காக இயேசு இன்னும் பலியை செலுத்தவதை நிறைவேற்றாது இருந்தபடியால், பரிசுத்த ஆவி இன்னும் கொடுக்கப்படாதிருந்தது, மேலும் நம்முடைய சார்பில் பலியைச் செலுத்தும்படி அவர் இன்னும் மகிமை அடையாதிருந்தார். நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர்களுக்கும் அவர் மூலமாக நமக்கும் கொடுத்த கட்டளையை மத். 28:19,20 ல் காண்கிறோம். ''ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே (அதிகாரத்தினாலே) ஞானஸ்நானம் கொடுங்கள்.'' இந்த கட்டளை இந்த முழு சுவிஷேச யுகத்திற்கும் உரியது, இதன்படியாகத்தான், இன்றைக்கு சத்தியத்தை சொல்லுகிற எல்லா ஊழியக்காரரும் பிரயாசப்படுகிறார்கள். ஆண்டவர் இந்த இடத்தில் ஆவியின் பெந்தெகொஸ்தே ஞானஸ்நானத்தைக் குறிப்பிடவில்லை, ஏனெனில் இப்படியாக எவருக்கும் ஞானஸ்நானம் கொடுப்பது அப்போஸ்தலர்களின் அதிகாரத்தில் இல்லாதிருந்தது. ஆண்டவரிடமே, அவரிடம் மாத்திரமே இந்த அதிகாரம் இருந்தது, அவர்

அதை தன்னிடம் வைத்துக் கொண்டார். ஆனாலும், மக்கள், அவருடைய புதிய சுபாவத்திலும், வரும் மகிமையிலும் பங்குள்ளவர்களாவார் களானால், கிறிஸ்துவுக்குள் தேவ கிருபையைக் குறித்து – அவர்களுடைய நீதிமான்களாக்கப்படுதல், அவர்களுடைய பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது அர்ப்பணிப்பு, அல்லது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் ஆகியவை குறித்து அவர்களுக்கு கற்றுக்கொடுக்குமாறு அப்போஸ்தலர் களுக்கும், ஆண்டவருடைய வசனத்தைப் போதிக்கிற உண்மையான போதகர்களுக்கும் இது அருளப்பட்டது. ஞானஸ்நானமானது அடையாளத்தை அல்லது தண்ணீரில் மூழ்குதலை உள்ளடக்கியதாய் இருந்தது. இது வெளிப்புற அடையாளமாக இருக்க வேண்டியதிருந்தது, இதன் மூலம் விசுவாசியின் இருதயத்தின் உள்ளான அர்ப்பணிப்பு, தன்கூட இருப்பவர்களுக்கும் தெரிய வரும்; நம்முடைய ஆண்டவரும் முதலாவது தன்னுடைய இருதய அர்ப்பணிப்பை பிதாவுடன் செய்து, பின்னர் அதை தண்ணீரில் அடையாளப்படுத்தினார்.

ஆவியினால் உந்தப்பட்ட அப்போஸ்தலர்கள் தங்களுடைய பணியையும் நம்முடைய பணியையும் நன்றாகப் புரிந்து கொண்டார்கள் என்பது அவர்களுடைய போதனைகளிலிருந்து விளங்குகிறது. முதலாவதாக, அவர்கள் மக்களுக்கு மீட்பில் தேவனுடைய கிருபையைக் குறித்து போதித்து, வாழ்க்கையில் நீதிமானாக்கப்படுவதை விசுவாசிக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். அடுத்தபடியாக, இருதயத்தின் முழு அர்ப்பணிப்பின் அவசியத்தை அவர்களுக்கு வற்புறுத்தி பின்வருமாறு கூறினார்கள் ''அப்படியிருக்க, சகோதரரே, (இனிமேலும் அவர்கள் பாவிகளல்ல, ஆனால் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள், 'ஆகவே விசுவாச வீட்டாராக' அல்லது 'சகோதரர்களாக' இருக்கும்படி நியமிக்கப் பட்டவர்கள்) உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் (நீதிமான்களாக்கப் பட்டவர்களாக) தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை (நீங்கள் நீதிமான்களாக ஆக்கப்பட்ட போது இதில், ஒரு பங்கை ஏற்கனவே பெற்றுக் கொண்டீர்கள்) முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.'' இதுவே அர்ப்பணம் செய்யவும் அல்லது பலியாக செலுத்தவும் அல்லது அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறவும் உண்டான அழைப்பாகும். இந்த வார்த்தையை சந்தோஷத்துடன், சரியான இருதய

நிலையோடு, விருப்பத்தோடு கேட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதுமின்றி, இதற்கு வெளியரங்கமான சாட்சியாக இருக்கும்படியாக, அடையாளமாக தண்ணீரிலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

எல்லா அப்போஸ்தலர்களுக்கும் ஞானஸ்நானம், யூதர்களோடு மாத்திரமல்ல புறஜாதியினரோடும் பழக்கமாக இருந்தது என்பதை பின்வரும் சாட்சிகள் மூலமாக கவனியுங்கள். சமாரியாவிலுள்ள ஜனங்களைக் குறித்து நாம் வாசிக்கும் போது,'' பிலிப்பு பிரசங்கித்ததைக் அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும், ஸ்திரிகளும் (குழந்தைகள் அல்ல) ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' (அப். 8:12) பிலிப்புவின் பிரசங்கத்தினால் மனம் மாற்றமடைந்த எத்தியோப்பிய மந்திரிகூட தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டான். (அப் 8:35–38) பேதுரு கொர்நேலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் பிரசங்கித்தபோது ''வசனத்தைக் கேட்டவர்கள் (ஏற்றுக் கொண்டவர்கள்) யாவர் மேலும் (குழந்தைகள் கிடையாது) பரிசுத்த ஆவி இறங்கியது..... அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் படி கட்டளையிட்டான்.'' (அப். 10:44–48) மறுபடியும் நாம் வாசிக்கிறோம், ''கொரிந்தியரில் அநேகரும் சுவிஷேசத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' (அப். 18:8) நாம் மறுபடியும் வாசிக்கிறோம், ''அப்பொழுது தியத்தீரா ஊராரும், இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' (அப். 16:14,15) பிலிப்பிய சிறைச்சாலைக்காரன் விசுவாசித்தபோது, அவனும் அவனுடையவர்கள் அனைவரும் பவுல், சீலா மூலம் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்.16:33) மறுபடியும் நாம் வாசிக்கிறோம், ''ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு.'' (1கொரி.1:16)

உண்மைதான், அப்போஸ்தலர் இந்த கடைசி வசனத்தில் எவ்வளவு குறைந்த எண்ணிக்கையில் ஞானஸ்நானம் கொடுத்தார் என்று குறிப்பிடுகிறார், ஆனால் இது நிச்சயமாகவே, மாம்சத்தில் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த முள்ளினிமித்தம் – சரியாக இல்லாத கண் பார்வையினாலாகும்; மேலும், அவர் ஞானஸ்நானம் கொடுத்த குறைவான

எண்ணிக்கையுள்ளவர்கள் அவருடைய கரங்களிலிருந்து இந்த ஊழியத்தைப் பெற்றுக் கொண்டார்கள், ஒரு வேளை இதற்கு தகுதியுள்ள வேறு எவரும் அந்த இடத்தில் இருந்திருக்க மாட்டார்கள். வெகு சிலருக்கே ஞானஸ்நானம் கொடுத்தற்கு அவர் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்; ஆனால் உண்மையான ஞானஸ்நானத்தை குறித்தோ அல்லது அதன் அடையாளங்கள் சரியானவை என்பதைக் குறித்தோ தனது மனதை மாற்றிக்கொண்டார் என்று அர்த்தமாகாது. ஆனால் சபையில் ஒரு பிரிவினையின் ஆவி சிலரை ''நான் பவுலைச் சேர்ந்தவன்'' என்றும், மற்றவர்கள் ''நான் அப்போஸ்லோவைச் சேர்ந்தவன்'' என்றும், ''நான் பேதுருவைச் சேர்ந்தவன்'' என்று சொல்ல வைத்ததினால், ஒரு வாக்குவாதம் எழும்பிய காரணத்தினால், அப்போஸ்தலர் வெகு சிலருக்கே தானாக ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று சொல்வதில் சந்தோஷப்பட்டார். ஏனெனில், அவர் கிறிஸ்துவுக்கென்று சீஷர்களை உருவாக்காமல், கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்காமல், தனக்கென்றே சீஷர்களை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார் என்றும், தன்னுடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறார் என்றும் யாரும் சொல்ல முடியாதபடி அவர் வெகு சிலருக்கே ஞானஸ்நானம் கொடுத்தார்.

ஆகவே, ஆண்டவரின் போதனைகள் மற்றும் பழக்கங்கள் குறித்தும், அப்போஸ்தலரின் போதனைகள் மற்றும் பழக்கங்கள் குறித்தும் வேதாகமம் தெளிவாக கூறும்போது, வேதாகமத்தில் அடையாளமான அல்லது தண்ணீர் ஞானஸ்நானம் போதிக்கப்படவில்லை என்று மிக தைரியமுள்ள மனிதன் ஒருவன் தான் கூற முடியும்; இல்லையெனில், அது யூதர்களுக்கு மாத்திரமே பொருந்தும் என போதிக்கப்பட்டது என்றோ அல்லது அறிமுகப்படுத்துவதற்கென செய்யப்பட்ட ஒரு கிரியை என்றோ சொல்லுவான். அதற்கு மாறாக, அது வித்தியாசமான முறையிலும், சடங்காச்சாராய்களினாலும், கூடக்குறைய அதன் அர்த்தத்தை குறித்த தவறான நோக்குடனும், அடையாளத்தை குழப்பி உண்மையான ஞானஸ்நானத்தின் தாத்பரியத்தை விட்டுவிட்டாலும், யூகத்தின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரை இது போதிக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வருகிறது. திவ்விய முறைமையின்படி தண்ணீர் ஞானஸ்நானம் ஏற்படுத்தப்பட்டது என்று கிறிஸ்துவ மக்கள் மதிப்பது நல்ல காரணத்தினால் தான். இன்னும் யாராவது இந்த கேள்வியை எதிர்க்க விரும்பினால் அவர்களோடு எங்களுக்கு வாக்கு வாதம் கிடையாது,

ஆனால் இப்படிப்பட்டவர் உண்மையுள்ளவராயிருந்து, தன்னுடைய சித்தத்தை ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்பு கொடுக்கிற உண்மையான ஞானஸ்நானத்தை தன்னுடைய இருதயத்தில் செய்து இருப்பாரானால், சுயத்திற்கு மரித்து தேவனிடத்தில் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜீவன் உள்ளவராக இருப்பாரானால், இந்த விஷயத்தை தேவன் ஏற்ற காலத்தில் அவருக்கும் வெளிப்படுத்துவார் என்று நம்புகிறோம். பிலி. 3:15.

இதற்கிடையில் உண்மையான ஞானஸ்நானத்தை கண்டு பிடித்து அதில் பங்கு பெற்றவர்களோடு நாம் சந்தோஷப்படுவோம். மேலும், அடையாளத்தைக் கண்டு பிடித்து உண்மைக்கு குருடராய் இருப்பதைக் காட்டிலும், அடையாளத்திற்கு குருடராய் இருந்து, உண்மையான ஞானஸ்நானத்தை கண்டு அதில் மகிழ்ச்சி அடைவது மிகவும் மேலானது என்ற உண்மையினிமித்தம் அவர்களை நாம் பாராட்டுகிறோம். இப்படி இருக்கிறபடியால் நாம் அடையாளமான ஞானஸ்நானத்தை எவ்வளவுதான் ஆதரித்தாலும் கிறிஸ்தவ ஐக்கியத்தை அதன் மேல் சார்ந்து இருக்கும்படியாக வைக்க முடியாது, ஆனால் கிறிஸ்துவோடு கூடிய மரணத்திற்குள்ளாக உண்மையான ஞானஸ்நானத்தின் மேல் சார்ந்து இருக்கும்படியாக விரும்புவோம். ஆகவே, ஆண்டவரை தங்களுடைய மீட்பராக அறிக்கை செய்து, அவருக்கென்று தங்களுடைய இருதயத்தையும், வாழ்க்கையையும் அர்ப்பணித்த அனைவரையும், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக, தங்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதப் பெற்றிருப்பவர்கள், அவர்கள் பிறப்பின்படி யூதர்களோ அல்லது புறஜாதியினரோ, அடிமையோ அல்லது சுயாதீனரோ ஆணோ அல்லது பெண்ணோ தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றவரோ அல்லது தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறாதவரோ, அவர்களை சபையின் அங்கங்களாக, கிறிஸ்து இயேசுவுக்குள் சகோதரராக ஏற்றுக் கொள்ளுகிறோம்.

இன்னொரு பக்கம் பார்க்கும்போது, அறிவின் ஒவ்வொரு பகுதியும், கூடுதலான சிலாக்கியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவதோடு கூட அதிகமான பொறுப்பையும் கொண்டு வருகின்றது என்பதை மறந்து விடக்கூடாது. ஆகவே தண்ணீர் அடையாளத்தின் அழகையும், அதிகாரத்தையும் காண வருகின்ற எவரும், அதே வேளையில் அவனுடைய ஆண்டவரது மரணத்திற்குள்ளான உண்மையான

ஞானஸ்நானமான, அவனுடைய சித்தத்தை மரணத்திற்குள்ளாக்கும் இன்னொரு சோதனைக்கும் வருகிறான். இப்படிப்பட்ட சூழ் நிலைகளின் கீழ் அடையாளத்திற்கு கீழ்படியத் தவறுவது, பலியில் பின்வாங்குவது என்று அர்த்தமுடையதாகும் என்பது உடனடியாக விளங்கும்; மேலும், அழைப்பையையும் தெரிந்துக்கொள்ளுதலையும் நிச்சயப்படுத்துவதில் தவறிவிட்டதும் உடனடியாக விளங்கும்.

ஞானஸ்நானத்தின் சரியான அடையாளம்

அடையாளமாக ஞானஸ்நானம் கொடுப்பது என்பது அப்போஸ்தலர் முறைப்படி தெளித்தல், ஊற்றுதல், முழுகுதல் என்பதற்கிடையே எது உண்மையானது என்பதைக் கண்டறியும்படி, ஒரு விவாதத்தை உண்டுபண்ண முயற்சிக்க மாட்டோம். இருந்த போதிலும், அவரோடு கூட தன் சுயத்திற்கும், உலகத்திற்கும் மரிக்கும்படியாக தன்னுடைய சித்தத்தை கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அர்ப்பணிக்கும் படியான அல்லது ஞானஸ்நானம் பெறுவதற்கு அனுமதிக்கும்படியான மனநிலையிலும், இருதயத்திலும் எந்த குழந்தையும் இருக்க முடியாது என்று நாங்கள் எடுத்துக் கூற விரும்புகிறோம். மேலும், உண்மையான ஞானஸ்நானத்திற்கு முன்பாக, அடையாளமான ஞானஸ்நானம் எவ்விதமான நியாயத்துடனும் கொடுக்கப்பட முடியாது என்று நாம் தொடர்ந்து வற்புறுத்திக் கூறுகிகிறோம்; ஏனெனில், அடையாளமான ஞானஸ்நானமானது, நம்முடைய இருதயங்களுக்கும் சித்தங்களுக்கும், ஆண்டவருக்கும் இடையில் இரகசியமாக ஏற்பட்டதற்கு வெளிப்படையான காரியமாக அல்லது அறிவிப்பாக மாத்திரமாகவே இருக்கிறது.

இவைகள் உண்மையுள்ளதாக இருக்கும்போது, பெரும்பாலான கிறிஸ்துவ மக்கள், நன்றாக அறிந்து, அவர்களுடைய அர்ப்பணிப்பின் உறுதிமொழியை எடுக்க முடிந்த பின்னரே அடையாளமான அல்லது தண்ணீர் ஞானஸ்நானத்தை ஒரு போதும் பெற்ற தில்லை என்பது தெரிய வருகிறது. அர்ப்பணிப்பிற்கு முன்னர் வயது வந்தவர்களை தண்ணீரில் மூழ்க வைப்பது சாதாரணமான குளியலை விட வித்தியாசமானதாக இருக்காது, அர்ப்பணம் பண்ணாத பாலகர் மேல் தண்ணீர் தெளிப்பதைக் போல, வெறும் ஒரு அடையாளமான ஞானஸ்நானம் கொடுப்பதைப் போன்றே இருக்கும். ஆகவே, எல்லாவற்றிக்கும் மேலாக, எது

உண்மையான தண்ணீர் ஞானஸ்நானம், எது உண்மையான அடையாளம், எது நம்முடைய ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டது என்று ஊக்கமாக விசாரித்து அறிவதும், அதற்கு உடனடியாக கீழ்ப்படிவதும் அவசியமாகிறது. மேலும், சுயத்திற்கும், உலகத்திற்கும் உண்மையிலேயே மரிக்கும்படி அர்ப்பணம் செய்துகொண்ட ஒவ்வொரு இருதயமும், இதிலும், மற்ற எல்லா விஷயங்களிலும் இருப்பது போன்று தேவனுடைய சித்தத்தை அறியவும், அதன்படி செய்யவும் ஜாக்கிரதையாக இருக்கும். ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர் களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்'' என்ற வசனத்தில் இப்படியான ஜாக்கிரதை அறிவிக்கப்பட்டுள்ளது. (ரோ 6:11)

ஞானஸ்நானம் கொடுக்கும் முறையைப் பற்றிய குழப்பம் அவ்வளவு அதிகமாக இருந்து, மேலும், ஆதி கால சபையின் ஒழுங்கு முறையைப் பற்றிய சாட்சி அவ்வளவு குழப்பமுடன் இருந்து, அப்போஸ்தலர் முறைமையின்படியான ஞானஸ்நானம் என்பது, தெளிப்பதினால் அல்லது ஊற்றுவதினால், அல்லது முழுகுவதினால் இருந்தது என்பதை தீர்மானிப்பதறகு நம்மை வழி நடத்தக் கூடியது ஒன்றுமே இல்லாதிருக்குமானால், தற்சமயம் உண்மையான ஞானஸ்நானம் எதைக் கொண்டு ஏற்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாக பார்க்கிற இடத்தில் இருக்கிறோம்; மேலும் அதன் அடையாளங்களை அல்லது அர்த்தத்தை எது காட்டும் என்பதை தெளிவாக நாம் பார்க்கக் கூடியவர்களாக இருக்கிறோம். வழக்கத்தில் காணப்பட்ட எல்லா முறைகளையும் கூர்ந்து ஆராய்ந்த பின்னர், ஒன்றே ஒன்றுதான் கிறிஸ்துவோடு மரிப்பதையும், அடக்கம் செய்யப்படுவதையும் காட்டுவது போல் இருக்கிறது. ஒருவரின் மேல் ஒரு வாளி தண்ணீர் ஊற்றப்படுவதினால், அல்லது நெற்றியின் மேல் சில அல்லது பல துளிகள் தண்ணீர் தெளிக்கப்படுவதினால், கிறிஸ்துவுடன், சுயத்திற்கும், உலகத்திற்கும் மரித்திருப்பதற்கான எந்த விதமான அடையாளத்தையும் காண இயலவில்லை. இவைகள் எவற்றிலாவது மரண சாயலுக்கு அடையாளமாக ஏதாவது இருக்குமெனில் அதை எங்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆனால் மூழ்குதலைக் குறித்து பார்க்கும் போது ஒரே நொடிப் பார்வையில் _மரணத்திற்குள்ளாக உண்மையான ஞானஸ்நானத்தை குறிக்கின்ற ஒரு அற்புதமான, நன்றாக தெரிகின்ற, ஒரு அருமையான, ஒரு பொருத்தமான விளக்கத்தைக் காண முடிகிறது.

கிரேக்க பதமான ''பேப்டைசோ,'' மூழ்கி இருப்பது, மூடுவது, அடக்கம் செய்வது, மூழ்கடித்தல் என்று பொருள்படுவதாக இருப்பது மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் நாமத்தில் தண்ணீருக்குள் பின் புறமாக ஒரு முறை மூழ்குவதோடு சம்பந்தப்பட்ட எல்லா ஒழுங்கு முறையும், ஒரு அடக்கத்தை எல்லாவிதத்திலும், தெளிவாக அர்த்தப்படுத்துவதாக இருக்கிறது. இந்த அடையாளத்தில் ஞானஸ்நானம் கொடுப்பவர் நம்முடைய ஆண்டவரைக் குறிப்பதாக இருக்கிறது. ஞானஸ்நானம் கொடுப்பவரிடத்தில் ஒரு நபர் செல்வது போன்றே நாம் நம்முடைய இருதயங்களில் ஞானஸ்நானத்திற்காக ஆண்டவரிடத்தில் செல்லுகிறோம். நாம் சுயத்திற்கும், உலகத்திற்கும் நாமாகவே மரிக்க இயலாது என்று அறிக்கையிட்டு, ஆண்டவரிடம், உடன்படிக்கைக்கான உயிலை ஏற்றுக்கொள்ளும்படி கூறி, எங்களுடைய சித்தங்கள் விட்டுக்கொடுக்கப்படுகின்றன என்றும் சொல்லி, அவருடைய மரணத்திற்குள்ளாக நம்மை அடக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டு, நம்முடைய அர்ப்பணிப்பின் உடன்படிக்கையை சிறந்த முறையில் நிறைவேற்ற உதவிசெய்யும்படியான அனுபவங்கள், ஒழுங்குகள், ஒத்தாசைகள், சிட்சைகள் ஆகியவைகளை அவர் ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டு, நாம் நம்மை ஆண்டவருடைய கரங்களில் ஒப்புக் கொடுக்கிறோம். ஞானஸ்நானம் பெறுபவர் தன்னுடைய சித்தத்தை விட்டுக்கொடுக்கும் போது, ஞானஸ்நானம் கொடுப்பவர் அவனை மெதுவாக தண்ணீருக்குள் விடுகிறார், இப்படியாக அவன் தன் பின்பக்கமாக தண்ணீரில் உதவியற்ற நிலையில் இருக்கும்போது, மரணத்தில் நமக்கு நாமே உதவி செய்யும்படியான திறமை இல்லாதிருப்பதின் முழு விளக்கத்தை அவன் அளிக்கிறான்; மேலும் ஞானஸ்நானம் கொடுப்பவர் அவனை தன் கால்களில் நிற்கும்படி தூக்கிவிடும்போது, நம்முடைய ஆண்டவர், ஏற்ற காலத்தில் தன்னுடைய வல்லமையினால் நம்மை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்ப வாக்குத்தத்தம் பண்ணியதின் விளக்கத்தைக் காண்கிறோம். நம்மோடு கருத்து வேறுபாடு உள்ளவர்களை நாங்கள் கட்டாயப்படுத்த விரும்பவில்லை; ஆனால் இந்த அடையாளம் மிகப்பொருத்தமாக இருப்பதிலிருந்து இதனை உண்டாக்கியவர் ஆண்டவர்தான் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அவரைக் காட்டிலும் வேறு யார்தான் இந்த முழு விஷயத்தைக் குறித்து ஒரு அர்த்தத்தை அல்லது அடையாளத்தை உண்டு பண்ணியிருக்க முடியும்?

உண்மையான ஞானஸ்நானத்தை ஏற்கனவே நடத்தியவர் யாராக இருந்தாலும் – அவரோடு மரிக்கவும், அவரோடு அடக்கம் பண்ணப்படவும் தன்னை கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுத்தவர் யாராக இருந்தாலும், அவன் இந்த அடையாளமான அர்த்தத்தில் உள்ள அழகைக் காண்கிறான், தானும் அதை நிறைவேற்ற வேண்டும் என்று முழுமனதோடு விருப்பமுடையவனாய் இருப்பான் என்று நாம் விசுவாசிக்கிறோம். ''என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்'' என்று நிச்சயமாக அவனுடைய இருதயம் கூறும்.

இந்த அடையாளத்திற்கு கீழ்ப்படிவதினால் என்ன சிலாக்கியங்கள் கிடைக்கும்? நம்முடைய அர்ப்பணிப்பின் உறுதிமொழியின் ஏதாவது ஒரு பகுதியை மட்டும் நிறைவேற்றுவதினால் சிலாக்கியம் வந்து விடாது, ஆனால் முதலிலிருந்து கடைசிவரை உள்ள எல்லா விஷயங்களையும் நிறைவேற்றும்படியாக நாம் முயற்சிக்கும் போதும், அதாவது நாம் நம்முடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்ததில் உள்ள எல்லா விஷயங்களும் உள்ளடக்கம் கொண்டதாக இருக்கும் போதும், மேலும் அவருடைய அடிச்சுவட்டில் நடக்கும்படியாக ஒரு முழு முயற்சி செய்யும் போது, சிலாக்கியங்கள் எல்லாம் நம்முடையதாகும் என்று நாம் பதில் சொல்லுகிறோம். ஆனால் முழு சிலாக்கியமும், நம்முடைய யாத்திரையின் இறுதியில், முதலாம் உயிர்த்தெழுதலின்போது, அதன் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் கிடைக்கப் பெறுவதுடன், இப்பொழுதும் கூட சிலாக்கியத்தின் ஒரு அளவு அனுபவிக்கப்படும்படியாக உள்ளது. மன திருப்தி, இருதயத்தின் சமாதானம், நம்முடைய ஆண்டவர் போன்று ''எல்லா நீதியையும் நிறைவேற்ற'' நாம் முயற்சி செய்கிறோம் என்கிற விஷயம் அவருக்கு சொந்தமானவர்கள் வாழ்க்கையில் தொடர்ச்சியாக, தடையின்றி, பெலத்துடன் பாய்கின்ற ஒரு நதியைப் போன்று இருக்கிற தேவ சமாதானத்திற்கு வழிவகுக்கிறது, இந்த சமாதானம் நம்முடைய இருதயங்களில் எல்லா புத்திக்கும் மேலாக ஆளுகை செய்கிறது.

அப்போஸ்தலருடைய சாட்சியானது: ''ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு.'' (எபே. 4:4–6) எனவே ஒரே ஒரு சரியான ஞானஸ்நானம் இருப்பது போன்று அதற்கு ஒரே ஒரு சரியான அடையாளம் தான் இருக்க முடியும். பொதுவாக கிறிஸ்தவ ஜனங்கள் தண்ணீரில் முழுகுவது என்பது

வேதாகமம் சொல்வதற்கு மிகவும் இசைவாக உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இப்படி ஒத்துக்கொள்ளுவதற்கு அடையாளமாக, ஒரு வேளை உண்மையாகவே கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, குழப்பம் அடைந்ததின் நிமித்தமாக அதன் தண்ணீர் அடையாளத்தை சரியாக புரிந்து கொள்ள அறியாதிருந்து, இறுதியில் அது தேவையற்றது என்று முடிவு செய்தவர்களின் குறிப்புகளைக் கீழே கொடுத்துள்ளோம். அதைக் கவனியுங்கள்.

குறிப்பான சில சாட்சியங்கள்

பிரஸ்பெடேரியன் என்கிற சபையைச் சேர்ந்த ஜான் கேல்வின் என்பவர் கூறுகிறார்: ''பேப்டைசோ என்ற வார்த்தையே மூழ்குதலைத்தான் குறிக்கிறது. ஆதிகாலத்து சபையின் பழக்கம் முழுகுவதாகத்தான் இருந்தது என்பது நிச்சயம்.'' – Institutes, Bk. IV, Chap. xv, 19

பிரஸ்பெடேரியன் சபையைச் சார்ந்த Dr. மேக்னைட் என்பவர் கூறுவது: ''ஞானஸ்நானத்தில், ஞானஸ்நானம் பெறுகின்ற நபர் தண்ணீருக்கு கீழாக அடக்கம் பண்ணப்படுகிறார்.'' '' கிறிஸ்து ஞானஸ்நானம் பெற தன்னை ஒப்புக் கொடுத்தார்; அதாவது, தண்ணீருக்கு கீழாக அடக்கம் பண்ணப்படும்படியாக.''

பிரஸ்பெடேரியன் சபையைச் சார்ந்த Dr. பிலிப் ஸ்கேஃப் என்பவர் கூறுவது: ''சந்தேகத்திற்கிடமில்லாமல் ஆரம்ப காலத்தில் இருந்த உண்மையான முறை மூழ்குதல்தான், தண்ணீர் தெளிப்பதல்ல. கிரேக்கப்பதங்களான பேப்டைசோ, பேப்டிஸ்மா, பேப்டிஸ்மோஸ் என்பவைகளின் அர்த்தங்களே இவைகளைக் காட்டுகிறது.'' History of Apostolic Church, page 568.

பின் வந்த பிரசுரங்களில் (1885) இந்த ''ஒப்பிட்டுப்பார்த்தலைக்'' குறித்து அவர் மேற்கொண்டு எழுதியதாவது: ''கத்தோலிக்கர்கள், புராட்டஸ்டான்ட், மேலும் ஆங்கில, ஜெர்மன் நாட்டு சிறந்த வேத பண்டிதர்கள் ஒத்துக் கொண்டபடி, அவர்கள் அனைவரும் தண்ணீர் தெளிப்பதைக் காட்டிலும் முழுகுவதையே அதிகமாக ஆதரித்தார்கள்.'' –Teachings of the Twelve Apostles, page 55,56.

லுத்தரன் சபையைச் சேர்ந்த மார்டீன் லூத்தர்: ''ஞானஸ்நானம் (Baptism) என்பது ஒரு கிரேக்க வார்த்தை, அதை ''முழுகுதல்'' என்று மொழி பெயர்க்கலாம். ஞானஸ்நானம் பெற இருப்பவர்கள் அனைவரும்

தண்ணீரில் முழுக வேண்டும் என்று சொல்லுவேன்.'' –Luther's Works, Vol. I, p.336.

மெதடிஸ்ட் சபையைச் சார்ந்த ஜான் வெஸ்லி: '' ஞானஸ்நானத்தில் அவரோடு அடக்கம் செய்யப்படுதல் – ஆதிகாலத்து பழக்கமான முழுகுதலை மறைமுகமாக குறிப்பிடுகிறார்.''

எபிஸ்கோபல் சபையைச் சோர்ந்த வால் (Wall) என்பவர் : ''நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகர் ஞானஸ்நானம் பெற்றக் கொண்டதும், ஆதிகாலத்து கிறிஸ்தவர்களும், வழக்கமாக, சாதாரண முறையில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதும் நிச்சயமாக முழுகுதல் மூலமாகத்தான் என்று எல்லா விதமான நிச்சயத்தோடும் கூறலாம்.''–Hist. Infant Baptism, Vol. I, p.571, Oxford, 1862.

எபிஸ்கோபல் சபையைச் சோர்ந்த டீன் ஸ்டேன்லி என்பவர்: ''முதல் 13 நூற்றாண்டு வரை கிட்டத்தட்ட முழு உலக வழக்கமும் ஞானஸ்நானம் கொடுப்பது என்பது, நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறபடி ''பேப்டைஸ்'' என்ற வார்த்தையின் அர்த்தப்படிதான் – ஞானஸ்நானம் பெற்றவர்கள் தண்ணீருக்குள் மூழ்கினார்கள், அமிழ்ந்தார்கள், நீருக்குள் சென்றார்கள்.'' Christian Institutions, p.17

ரோமன் கத்தோலிக்க சபையைச் சார்ந்த பிரன்னர் என்பவர் : ''பதிமூன்று நூற்றாண்டுகளாக ஞானஸ்நானம் பொதுவாகவும், வழக்கமாகவும் ஒரு நபர் தண்ணீருக்குள் முழுக்கப்படுவதின் மூலமாக செய்யப்பட்டு வந்தது.'' – Historical Exhibition of the Adminisration of Baptism, p. 306

''முழு நபரும் தண்ணீருக்குள் முழுக்கப்பட்டார்.'' – Kitto's Encyclopedia

''ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அமிழ்த்துதல், அல்லது முழுக்குதல்.'' –Encyclopedia Americana

''ஞானஸ்நானம் ஆதியில் முழுக்குதல் மூலம் கொடுக்கப்பட்டது.'' – Brande's Encyclopedia

''ஞானஸ்நானம் என்றால் முழுக்குதல் ஆகும்.'' – Smith's Bible Dictionary

''பேப்டைசோ என்பது தண்ணீருக்குள் அமிழ்த்துதல், அல்லது தண்ணீருக்கு அடியில் வைத்திருத்தல்.'' – Liddell and Scott's Greek Lexicon

''முழுக்குவது அல்லது அமிழ்த்துவது.'' – Robinson's Greek Lexicon

''முழுக்குவது, தண்ணீருக்கு அடியில் வைத்திருப்பது அல்லது அமிழ்த்துவது.'' – Greenfield's Lexicon

யார் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கலாம்

பிரதிஷ்டை செய்து கொண்ட அனைவரும் – கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் ''இராஜரீக ஆசாரியர்கள்'' ஆகவும், ஆண்டவரின் அபிஷேகம் பெற்ற சரீரத்தின் அங்கங்களாகவும் இருக்கிறார்கள்; ஆகவே, இவர்கள் மத். 28:19 ன்படி ஜனங்களுக்குப் போதிக்கவும், இதன் விளைவாக அவர்களை ஞானஸ்நானத்திற்கோ, அல்லது ஆண்டவரின் மரணத்திற்குள்ளாக அவர்களுடைய சித்தங்களை அடக்கம் செய்யும்படி வழி நடத்துபவர்களாகவோ நியமிக்கப் பட்டவர்களாகவும் அதோடுகூட, அதே வேளையில் இந்த பிரதிஷ்டைக்கு அடையாளமாக உள்ள தண்ணீர் ஞானஸ்நானத்தை கொடுக்கும்படியாகவும் நியமிக்கப்பட்டும் உள்ளார்கள். மேலும் இந்த அடையாள ஊழியத்திற்கென இப்படி பிரதிஷ்டை செய்து கொண்டவர் கிடைக்காவிட்டால், இதை ஒரு பிரதிஷ்டை செய்து கொள்ளாத ஒரு விசுவாசியோ, அல்லது உலகப் பிரகாரமான அவிசுவாசியான ஒருவர் இதை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வலிமையான காரணத்தை நம்மால் பார்க்க இயலாமல் இருக்கிறது; எனென்றால் உண்மையான ஒப்பந்தம் என்பது ஆண்டவருக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகிற மனிதருக்கும் இடையிலானது, மேலும் தண்ணீர் ஞானஸ்நானம் என்பது உண்மையான ஒன்றல்ல, ஆனால் ஒரு விளக்கமாகத்தான் இருக்கிறது, ஆகவே அதை கொடுப்பவர் ஆண்டவர் அல்ல, ஒரு மனிதன் தான், அவன் நல்லவனோ அல்லது கெட்டவனோ, முழுக்கு ஞானஸ்நானம் பெறுபவரின் வசதிக்காக, அதை நிகழ்த்துபவராக ஒரு பிரதிநிதியாகத் தான் இருப்பார். இருந்தபோதிலும், சபைக்காரியங்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய பொதுவான தகுதியும் முறையும் உள்ளது, அதை இதிலும் கடைப்பிடிப்பது நல்லது; இது இப்படிப்பட்ட ஊழியங்களுக்கு மிகவும் சரியான நபர்களாக இருக்கிறவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்கள் தான் என்பதை வெளியரங்கமாக்கும்.

ஞானஸ்நானத்தின்போது பயன்படுத்தும் வார்த்தைகள்

வேதாகமத்தில் இப்படியான ஊழியத்திற்கென (ஞானஸ்நானத் திற்கென) பயன்படுத்த வேண்டிய குறிப்பான வார்த்தைகள் நமக்கு ஏதும் சொல்லப்படவில்லை; மேலும் வார்த்தைகள் இரண்டாவது முக்கியத்துவத்தைத்தான் பெறுகிறது என்பதை எல்லாரும் புரிந்துகொள்ள இயலும்; ஏனெனில் வார்த்தைகளே இல்லாவிட்டாலும் கூட ஞானஸ்நானம் அதன் தகுதியை இழந்துவிடாது; ஏனெனில் முன்னரே கூறியபடி, உண்மையான ஒப்பந்தம், ஞானஸ்நானம் பெற்றவருக்கும் ஆண்டவருக்கும் இடையிலானது; தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவது என்பது அதை பகிரங்கமாக அறிவிப்பதாகும்; ஆகவே ஞானஸ்நானம் கொடுப்பவர் எதை நம்புகிறார் அல்லது நம்பாமல் இருக்கிறார், எதை சொல்லுகிறார் அல்லது சொல்லாமல் விட்டுவிடுகிறார் என்பது முக்கியமல்ல, ஆனால் இப்படி அடையாளமாக இருக்கும்படியாக ஞானஸ்நானம் பெற்றவரின் இருதயத்தின் சிந்தனையும், நோக்கமும் என்ன என்பது தான் முக்கியம். இருந்தபோதிலும் மத் 28:19 ல் நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் மேலும், ரோமர் 6:3ல் அப்போஸ்தலருடைய வார்த்தைகள் மேலும் நம்முடைய தீர்ப்பை வைத்து, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எளிமையான பலமான வார்த்தைகளை உபயோகிக்கும்படி கூறுகிறோம். உதாரணத்தை கீழே கொடுத்துள்ளோம்.

''சகோதரர் ஜான் (இல்லையெனில் வேறு ஏதாவது கிறிஸ்தவ பெயர்) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால், இந்த அதிகாரத்தின் மூலம் உனக்கு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்.''

அடையாளத்தை திரும்பவும் செய்தல்.

ஞானஸ்நானத்தின் உண்மையான அர்த்தம் நம்முடைய பார்வையை விட்டு அகன்று வெகு காலமாகிவிட்டதால், ஏற்கனவே தண்ணீரில் முழுகினவர்களிடமிருந்து தாங்கள் எடுத்துக்கொண்ட ஞானஸ்நானத்தின் தகுதியைக் குறித்து அனேக கேள்விகள் வருகின்றன, அந்த அடையாளத்தை மறுபடியும் செய்வதா, வேண்டாமா என்றும் சந்தேகம் வருகிறது. இதற்கு எங்களுடைய பதில் என்னவெனில் அடையாளமானது

மறுபடியும் செய்யப்பட வேண்டியதில்லை என்பதாகும்; ஏனெனில், அது மரணபரியந்தம் முழு பிரதிஷ்டையினால் காக்கப்படாவிட்டால், ஒரு குளியல் அல்லது தண்ணீரில் முழ்கி எழும்புவது என்பதைத் தவிர வேறு அர்த்தமோ அல்லது உயர்வோ கிடையாது, எனவே ஒவ்வொருவரும் இந்த சாட்சியத்திற்கு தான் கீழ்ப்படிந்திருக்கிறேனா, இல்லையா என்பதை தானாக தீர்மானிக்க வேண்டும். மரணபரியந்தம் பிரதிஷ்டையை தொடர்ந்து தண்ணீர் ஞானஸ்நானம், இருக்குமானால், அதைக் குறித்து அறிவு குறைவானதாக இருந்தாலும், அதை மறுபடியும் செய்யத் தேவையில்லை.

மரித்தவர்களுக்கு ஞானஸ்நானம்

''மேலும் மரித்தோர் உயிர்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுபவர்கள் என்ன செய்வார்கள்?'' –1 கொரி. 15:29

மேலே சொல்லப்பட்ட அப்போஸ்தலருடைய வார்த்தையின் அர்த்தத்தை தவறாக புரிந்து கொண்டபடியால், ''இருண்ட காலங்களின்'' போது ஒருவருக்காக இன்னொருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு வழி வகுத்தது. கிறிஸ்துவ மக்கள், தங்களின் நண்பர்கள் ஞானஸ்நானம் பெறாமல் மரித்த போது அவர்களின் சார்பாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். உண்மையான ஞானஸ்நானம் எதனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை சரியாக நோக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு ஒழுங்கு முறையில் உள்ள முரண்பாடு உடனடியாக தெரிகிறது. ஒரு மனிதன் தனது சுபாவத்தையோ அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையையோ இன்னொருவருக்கு மாற்ற முடியாதது போன்று, ஒரு மனிதனும் இன்னொரு மனிதனுக்காக மறுபடியும் தன்னை பிதிஷ்டை செய்து கொள்ள முடியாது. அப்போஸ்தலருடைய வார்த்தைகளை இப்படி தவறாக புரிந்து கொண்டது, அப்போஸ்தலர்களின் மரணத்திற்கு பிறகு எப்படி ஒரு விசுவாசத் துரோகம் நேரிட்டது என்பதையும், அப்பொழுது புகுத்தப்பட்ட பழக்கவழக்கங்களும் அனேக கருத்துக்களும் எவ்வளவு காட்டுத்தனமானவும் காரணமில்லாமலும் இருந்தன என்பதையும் அறியத் தவறுகிற அநேகரின் மனதில் குழப்பத்தை உண்டு பண்ணியது.

அப்போஸ்தலரின் செய்தி மரித்தோரின் உயிர்தெழுதலைப் பற்றியதாக இருந்தது. இங்கே அவர் அந்த போதனையை ஆதரித்து

விளக்கமாக கூறுகிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து சபையின் விசுவாசம் கொரிந்துவில் தாக்குதலுக்குள்ளானது தெரிய வருகிறது. அப்போஸ்தலரின் விவாதத்தின் ஒரு பகுதியாக, நாம் பார்த்துக் கொண்டிருக்கிற வசனத்தின்படி, சபையினர் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்பதையும், நாம் முன்பு பார்த்த வண்ணம், அவர்கள் பெற்ற ஞானஸ்நானம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்பதையும் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார். இப்பொழுதுள்ள புதிய நிலைமையில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், அவர்களுடைய ஞானஸ்நானம் காட்டுகிறபடி அவர்களுடைய மரணபரியந்தம் என்று செய்யப்பட்ட அர்ப்பணிப்பின் தகுதி நிலையும் அதில் உள்ள ஞானமும் எங்கே என்று வினவுகிறார். அவர்கள் தங்களை அங்கங்களாக அர்ப்பணித்துள்ளார்கள் – ஒருவர் மற்றவரோடு மரிக்கவும், ஒருவருக்கொருவர் கிறிஸ்துவின் ஐக்கியத்தில் இருக்கவும், இதன்படியாக அவரோடு மரிக்கவும், மேலும் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகவும், மரித்தநிலையில் உள்ள உலகத்தார் சார்பில் செலுத்தப்பட்ட மாபெரும் பாவ நிவாரண பலியின் அங்கங்களாகவும், அவர்கள் தங்களை அர்பணித்துள்ளார்கள்; ஏனெனில் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

அப்போஸ்தலருடைய விவாதம் என்னவென்றால் முழு கிறிஸ்துவ நிலையும் ஒன்றாக நிற்க வேண்டும் அல்லது ஒன்றாக விழ வேண்டும். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் கெட்டிருப்பார்கள், மாத்திரமல்ல உலகத்தில் உள்ள மற்றவர்களும் அழிந்து போவார்கள். இப்படி சபைக்கு எதிர்கால நம்பிக்கை கிடையாது என்றால் நாம் ஏன் நம்முடைய வாழ்க்கையை மரண பரியந்தம் அர்ப்பணம் செய்ய வேண்டும்? நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுள்ளோம், மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றுள்ளோம், எதற்காகவெனில் ஆபிரகாமின் வித்தாகவும் உலகத்திற்கு ஜீவன் கொடுக்கும்படியாகவும் கொஞ்சம் கொஞ்சமாக அவரோடு இணைந்திருக்கும்படியாக அப்படி செய்துள்ளோம்.

அத்தியாயம் 11

புது சிருஷ்டியின் பஸ்கா

எகிப்தின் அடிமைத்தனமும் அதிலிருந்து விடுதலையும், நிழலும் பொருளும்–''முதற் பேறானவர்களின் சபை'' – ''நாம் அநேகராயிருந்தும் ஒரே அப்பமாக இருக்கிறோம்''– நினைவு கூறுதல் இன்னும் பொருத்தமானது – யார் இதை ஆசரிக்கலாம் – யார் இதை நடத்தலாம் – ஆராதனை முறைமை – ஈஸ்டர் பஸ்கா – மெக்ளின்டோக் (McClintock), ஸ்ட்ராங் (Strong) என்பவர்களின் வேத அகராதியிலிருந்து சில கருத்துக்கள்.

''நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லா அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.'' 1 கொரி.5:7,8.

நிழலான இஸ்ரயேலின் அனுபவங்களுக்குள் குறிப்பிடத் தக்கதாக இருந்தது பஸ்காவாகும். பஸ்கா பண்டிகையானது, ஒவ்வொரு வருடமும் முதலாவது மாதத்தில் பதினைந்தாம் நாளன்று தொடங்கி ஏழு நாட்களுக்கு கொண்டாடப்பட்டது. அது எகிப்தின் அடிமைத்தனத் திலிருந்து இஸ்ரேல் ஜனங்கள் மீட்கப்பட்டதை பொதுவான முறையில் கொண்டாடியது; ஆனால் குறிப்பாக, சங்காரம் கடந்து போகுதல் அல்லது ஜீவனை தப்புவித்தல் – எகிப்தியர் மேல் வந்த மரணம் என்ற வாதையிலிருந்து இஸ்ரயேலரின் முதற் பேறானாவர்களை தப்புவிக்கும்படியாக கொண்டாடப்பட்டது. கடைசியாக வந்த இந்த வாதை இஸ்ரயேலர்களை அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படியாக பலவந்தம் பண்ணிற்று. இஸ்ரயேலின் முதற்பேறானவர்களை கடந்து சென்றது, முழு இஸ்ரயேலும்

விடுவிக்கப்படுவதற்கும், எகிப்தின் அடிமைத்தனத்தினின்று சுதந்திரத்திற்கு பாதுகாப்பாக சிவந்த சமுத்திரத்திற்குள்ளாக கடந்து செல்வதற்கும் முன்னோடியாக அமைந்தது. அவர்களுடைய தேசம் பிறந்ததற்கு மிகவும் நெருங்கியுள்ள இவ்வளவு முக்கியமான ஒரு சம்பவம் சரியான விதத்தில் நினைவு கூறப்படுவதை நாம் காண்கிறோம்; ஆகவே இன்றைக்கும் இது யூதர்களால் கொண்டாடப்படுகிறது. புது சிருஷ்டியின் அங்கங்கள், நிழலான ஜனங்களான மாம்சீக இஸ்ரயேல் மேலும், முழு மனுக்குலத்தின் மேலும், அவர்களுடைய பரம பிதா செய்யும் எல்லா காரியங்களிலும் ஒழுங்கு முறைகளிலும் அவர்கள் ஆர்வம் காட்டுவது போல், அந்த சம்பவங்களிலும் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால் புது சிருஷ்டி எகிப்தில் நடந்த காரியங்களில் இன்னும் அதிகமான ஆர்வம் வைத்திருக்கிறார்கள்; ஏனெனில் மாம்சீக இஸ்ரயேலுக்கு நடந்த காரியங்கள் எல்லாம், புது சிருஷ்டியாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு முன்மாதிரியாகவும் இன்னும் அதிகமான காரியங்களில் திவ்விய திட்டத்தில் நிழலாகவும் இருக்கும்படியாக திட்டமிடப்பட்டிருந்த தென்கிற இரகசியத்தை அவர்களுக்கு கர்த்தர் வெளிப்படுத்தினார்.

இந்த ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றி அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறதாவது : ''ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; ..... அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவை களானதால் அவைகளை அறியவுமாட்டான். நமக்கோ (புது சிருஷ்டிக்கு) தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்.'' (1 கொரி. 2:14,10) நமக்கு சில தடயங்களைக் கொடுக்கும்படியாக, தேவன் அப்போஸ்தலர்களை தன்னுடைய வார்த்தைகளை சொல்லுபவர்களாக உபயோகப்படுத்தினார்; இதன்மூலமாக அவருடைய ஆவியின் வழிநடத்துதலின்கீழ் தேவனுடைய ஆழமான விஷயங்களை நாம் அறிந்து கொள்ளலாம். இந்த தடயங்களில் ஒன்றை இந்த அதிகாரத்தின் தலைப்பில் இருப்பதைக் காணலாம். அப்போஸ்தலர் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து, மாம்சீக இஸ்ராயேல் தேவனுடைய எல்லா ஜனங்களுக்கும் நிழலாக இருந்தது, அதாவது ஆயிரம் வருட யுக இறுதிவரையிலும், அவருடைய ஜனங்களாக மாறுகின்றவர்களை நிழலாக காட்டியது; எகிப்தியர்கள் தேவனுடைய ஜனங்களுக்கு எதிராளிகளையும், அவர்களுடைய ராஜா பார்வோன் பொல்லாப்புகளின் பிரபுவும், அந்தகார லோகாதிபதியுமாகிய சாத்தானையும் நிழலாக காட்டியது; பார்வோனின்

வேலைக்காரரும் குதிரை வீரர்களும், விழுந்து போன தூதர்களையும், சாத்தானோடு தங்களை சேர்த்துக் கொண்டுள்ள அல்லது சாத்தானோடு சேர்ந்து கொண்டு ஆண்டவருக்கும் அவருடைய ஜனமான புதிய சிருஷ்டிக்கும் பொதுவாக விசுவாச வீட்டாருக்கும் எதிராளியாக இருக்கிற மனிதர்களையும் நிழலாக காட்டுவதை நாம் தெளிவாகக் காண்கிறோம். இஸ்ரேல் ஜனங்கள் விடுதலைக்காக பெருமூச்சு விட்டு, தங்களுடைய எஜமானர்கள் கரத்தில் துன்பம் அனுவித்தார்கள்; அவர்கள் பெலகீனர்களாகவும், தங்களை தாங்களே விடுவித்துக் கொள்ள இயலாதவர்களாகவும் இருந்தார்கள்; ஆனாலும் தேவன் அவர்களுக்காக மோசேயை அவர்களை விடுவிக்கிற இரட்சகராக அனுப்பாதிருந்தால் அவர்கள் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஒரு போதும் விடுவித்திருக்க முடியாது. அது போன்றே, கடந்த காலத்திலும் தற்காலத்திலும் மனுக்குலமானது ''இந்த உலகத்தின் அதிபதியின்'' கீழ் அவனுடைய சேனைகளாகிய பாவத்திலும் மரணத்திலும், பெருமூச்சு விடுவதையும், கர்ப்ப வேதனை அனுபவிப்பதையும் காண்கிறோம். இந்த கோடிக்கணக்கான ஜனங்கள் தங்களுடைய சொந்த பெலகீனத்தி லிருந்தும், பாவத்திலிருந்தும், அதன் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலையாகும்படியாகவும், இவைகளின் தண்டனையாகிய வேதனையிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிக்கப்படும்படியாகவும் வாஞ்சிக்கிறார்கள். தெய்வீக உதவியில்லாமல் மனுக்குலமானது சக்தியற்றது. ஒரு சிலர் மிகவும் பாடுபட்டு ஏதோ ஒன்றை சாதித்து விடுகிறார்கள், ஆனால் ஒருவரும் இலவசமாய் பெறுவதில்லை. ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய ஒரே நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது. அவர் மெய்யான மோசேயின் மூலம் ஏற்ற காலத்தில் தன்னுடைய ஜனங்களை விடுவிப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்; இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிற சிவந்த சமுத்திரத்தின் வழியாக கொண்டு வருவார்; பார்வோனும் அவனுடைய சேனைகளும் உண்மையான சிவந்த சமுத்திரத்தில் அழிக்கப்பட்டது நிழலாக இருந்தது போல சாத்தானும் அவனோடு சேர்ந்து இருக்கிறவர்களும் அல்லது அவனுக்கு இரக்கம் காட்டுகிற வர்களும், அவனுடைய பொல்லாத வழியில் செல்லுகிறவர்களும் இந்த இரண்டாம் மரணத்தில் நித்தியமாக அழிக்கப்படுவார்கள் என்பதற்கு இது நிழலாக உள்ளது. ஆனால் தேவனுடைய பிள்ளைகள் ''இரண்டாம் மரணத்தினால் சேதமடைவதில்லை.''

மேலே சொல்லப்பட்டது ஒரு பொதுவான விளக்கம். ஆனால் அதற்குள் அதன் ஒரு பகுதியாக ஒரு குறிப்பிட்ட விளக்கம் இருந்தது; அது பொதுவான மனுக்குலத்தைக் குறிப்பிடவில்லை; அவர்கள் பாவம், மரணம் என்னும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவதைக் குறிப்பிடவில்லை; ஆனால் அவர்கள் மத்தியில் உள்ள ஒரு விசேஷமான வகுப்பினரான முதற்பேறானவர்களைக் குறிப்பிட்டது. அவர்கள் நிழலாயிருக்கிற உண்மைப் பொருளாகிய புது சிருஷ்டியைக் குறிக்கிறார்கள்; ''பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபை'' என்று ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகளை நம் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். நிழலில், முதற்பேறானவர்கள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறார்கள் – அவர்கள் தான் சுதந்தரவாளிகள்; அவர்கள் தங்களுடைய சகோதரர்களுக்கு முன்னதாகவே ஒரு விசேஷமான பரீட்சைக்கு அல்லது சோதனைக்கு உட்படுத்தப்பட்டதிலும் ஒரு விசேஷமான இடம்தான் அவர்களுக்கு இருந்தது; எகிப்தை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே அவர்கள் மரணத்திற்கு பாத்திரமுள்ளவர்களாக இருந்தார்கள். மேலும் யாத்திரையின் போது (Exodus) இந்த முதற்பேறானவர்கள் அதில் ஒரு விசேஷமான இடத்தைப் பெற்றிருந்தார்கள். பொதுவான மீட்பில் அவர்கள் ஒரு விசேஷமான வேலையை செய்ய வேண்டியதிருந்தது; அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட வகுப்பினராக லேவி கோத்திரத்தை குறிப்பிடும்படியாக இருந்தார்கள்; தேசத்தில் அவர்களுக்கு இருந்த சுதந்திரத்தை முற்றுமாக துறந்து, அவர்களுடைய சகோதரர்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டார்கள். ஒரு திவ்விய ஒழுங்கின்படி அவர்களுடைய சகோதரர்களுக்கு போதகர்களாக இருக்கும்படியாகவும் பிரித்தெடுக்கப்பட்டார்கள்.

இந்த கோத்திரம் அல்லது லேவி வீட்டார் என்பது விசுவாச வீட்டாருக்கு தெளிவான அடையாளமாக இருக்கிறது. இது அடுத்தபடியாக ஆயத்தமாக்கப்படுகிற இராஜரீக ஆசாரியத்துவத்திற்கு அடையாளமாக காட்டப்படுகிறது; இது சகோதரர்களுக்காக பூலோக காரியங்களில் உள்ள சுதந்திரத்தை விட்டுக் கொடுக்கிறது; மேலும் இதுதான் உண்மையிலேயே மெல்ல மெல்ல இராஜரீக ஆசாரியத்துவத்தை ஏற்படுத்தும். இதன் பிரதான ஆசாரியராக ஆண்டவர் இருப்பார்; இது ஆயிரம் வருட யுகத்தின்போது உலகத்திற்கு போதித்து, அதை ஆட்சி செய்து, ஆசீர்வதிக்கும். எகிப்தில் உள்ள இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மரணத்திற்கு பாத்திரமாக இருந்தார்கள், ஆனால் மரணம்

அவர்களை கடந்து சென்றது, அதிலிருந்து தப்பினார்கள், உலகத்தில் உள்ள சுதந்திரத்தை இழந்து ஆசாரியத்துவத்தை பெற்றுக்கொண்டார்கள்; ஆகவே தற்காலத்திய முதற்பேறானவர்களின் மெய்யான சபை இரண்டாம் மரணத்திற்கு பாத்திரமாக உள்ளது. எஞ்சியுள்ள மனுக்குலத்திற்கு முன்னதாகவே, நித்திய வாழ்வுக்கு அல்லது நித்திய மரணத்திற்கான அவர்களுடைய பரீட்சையை அல்லது சோதனையை அடைந்து மரணத்திலிருந்து, மீட்பரின் இரத்தம் மற்றும் மரணத்தின் புண்ணியத்தால் ஜீவனுக்குள் கடந்து செல்கிறார்கள்.

அவர்களுடைய ஆண்டவரின் கிருபையில் பங்குள்ளவர்களாகி, அவர்களுடைய பூலோக சுதந்திரத்தை, பூலோகத்திலுள்ள பங்கை, பூலோக வாழ்க்கையை விட்டுக் கொடுத்து அல்லது பலியாக செலுத்தி, பரலோகத்தையும் அதன் பரிபூரண ஜீவனையும் அடைகிறார்கள். இப்படியாக புது சிருஷ்டியான, முதற்பேறானவர்களின் சபை எல்லா மனிதரைப் போன்று செத்து, பூலோகக் காரியங்களில் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக இழப்பது போலவும், துறப்பது போலவும் காணப்பட்டாலும், ஜென்ம சுபாவமுள்ள மனிதன் இதை புரிந்துகொள்ளா விட்டாலும், இவர்கள் மேல் மரணம் கடந்துசென்றது அல்லது மரணத்திலிருந்து மீட்கப்பட்டார்கள்; மேலும், இராஜரீக ஆசாரியர்களாக தங்ளுடைய பிரதான ஆசாரியரான இயேசுவோடு கூட மகிமையிலும் கனத்திலும், அழியாமையிலும் பங்குள்ளவர்களாவார்கள். இவர்களின் இந்த கடந்துபோகுதல் சுவிசேஷக யுகத்தில் இரவு நேரத்தில் நடைபெறுகிறது, ஆயிரம் வருட காலை விடிவதற்கு முன்னால் அதன் நீதியில் சூரியன் உதயமாவதற்கு முன்னால் நடை பெறுகிறது. இவர்கள் ஆண்டவரின் சேனைகளின் தலைவர்களாயிருந்து, பாவம்,சாத்தான் என்றும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார்கள். இது எப்படி அப்போஸ்தலருடைய கூற்றோடு ஒத்திருக்கிறது என்பதை கவனியுங்கள். (ரோ 8:22,19) ''சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது''– ''தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறது.'' முதலாம் உயிர்தெழுதலில் மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் முதற்பேறானவர்களின் சபை முழுமையாக கடந்து போவதற்கு காத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், இப்பொழுது, இந்த 'நிழலின்' இன்னொரு அம்சம் முக்கியமானது. நிழலான முதற்பேறானவர்களை சங்காரம் கடந்து

போவதற்கும், நிழலான ஆண்டவருடைய எல்லா ஜனங்களும் வர இருக்கிற மீட்பை பெறுவதற்கும், பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப் படுவதும், அதன் இரத்தம் வீட்டின் நிலைக்கால்கள் மேலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்படுதலும், அந்த இராத்திரியிலேயே அதன் மாம்சத்தை கசப்பான கீரையோடும், புளிப்பில்லா அப்பத்தோடும் புசித்தலும் அவசியமாயிருந்தது. இப்படியாக இஸ்ரயேலில் உள்ள ஒவ்வொரு வீடும் விசுவாச வீட்டாருக்கு அடையாளமாக இருந்தது; ஒவ்வொரு ஆட்டுக்குட்டியும் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்கிற ஆட்டுக் குட்டியானவருக்கு அடையாளமாக இருந்தது; மேலும், ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள முதற்பேறானது, தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்துவுக்கு–புது சிருஷ்டிக்கு அடையாளமாக இருந்தது; கசப்பான கீரைகள் தற்காலத்து சோதனைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் அடையாளமாய் இருந்தது, அது ஆட்டுக்குட்டியானவருக்கும், புளிப்பில்லா அப்பத்திற்கும் விசுவாச மார்க்கத்தார் அதிக வாஞ்சையுள்ளவர்களாக இருக்கவும் உதவுகிறது. மேலும் ஒவ்வொரு வீட்டாரும் தடியை கையில் வைத்துக்கொண்டு சாப்பிடவேண்டும், மேலும் அரைகளில் கச்சையை கட்டிக்கொண்டு யாத்திரைக்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பது, இந்த சுவிசேஷ யுகத்தின் இரவு நேரத்தில் ஆட்டுக்குட்டியில் பங்குபெறுகிற முதற்பேறானவர்களும் விசுவாச மார்க்கத்தாரும் இந்த உலகத்தில் அன்னியரும், பரதேசிகளுமாய் இருப்பார்கள் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. இவர்கள் பாவம், மரணம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தை உணர்ந்து, ஆண்டவரால் பாவத்திலிருந்தும், அழிவிலிருந்தும் விடுதலைக்குள்ளாகவும், தேவ புத்திரரின் சுயாதீனத்திற்குள்ளாக வழி நடத்தப்படவும் வாஞ்சையுள்ளவர் களாக இருப்பார்கள்.

நம்முடைய ஆண்டவரின் ஞாபகார்த்தம்

முதலாம் மாதம் 14 ம் தேதி –யூதர்கள் கொண்டாடுகின்ற ஏழு நாள் பஸ்கா பண்டிகையின் முந்தின தினத்தில் –இந்த நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கு இசைவாக இருக்கும்படியாக, மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டியும் ‘‘உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியுமான’’ நம்முடைய ஆண்டவர் மரித்தார். அவர் முப்பது வயதானபோது மரணத்திற்குள்ளான அவரது ஞானஸ்நானத்தில் தொடங்கப்பட்ட அவரது பலியை, வேறு எந்த

நேரத்திலும் மரணத்தில் முடிக்க நம்முடைய ஆண்டவருக்கு சாத்தியம் இல்லாதிருந்தது. ஆகவேதான் யூதர்கள் அனேகந்தரம் அவரை கொல்ல முயற்சித்தாலும், ஒருவரும் அவர் மேல் கைபோடவில்லை; ஏனெனில், ''அவருடைய வேளை இன்னமும் வரவில்லை.'' (யோவா.7: 8,30)

யூதர்கள் முதலாம் மாதம் பத்தாம் தேதியில் பலிக்கான ஆட்டுக்குட்டியை தெரிந்து கொள்ளும்படியாகவும், தங்களுடைய வீடுகளில் அந்த நாளில் அதைப் பெற்றுக் கொள்ளும்படியாகவும் கட்டளையிடப்பட்டபடியே, ஆண்டவரும் அதற்கேற்றவாறே அந்த நாளில் அவர்களிடம் தன்னை ஒப்புக்கொடுத்தார்; பஸ்கா பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக, அவர் கழுதைக்குட்டியின் மேல் ஏறினவராய் பட்டணத்திற்குள் வந்தார், அப்பொழுது திரளான ஜனங்கள் ''தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா, கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்'' என்றார்கள். ''அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ (ஒரு ஜாதியாக) அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை (தனிப்பட்ட முறையில்) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.'' ஒரு தேசமாக, அதன் பிரதிநிதிகளாக இருக்கிற ஆட்சியாளர்கள் மூலம் அவரை ஏற்றுக்கொள்ளுவதற்கு பதிலாக அவரை நிராகரித்தார்கள், அதன் மூலம் அவர்கள் தங்கள் சத்துருவின் பக்கம் இருப்பதை அவ்வேளையில் காண்பித்தார்கள். இருந்த போதிலும், தேவனுடைய கிருபையில் புது உடன்படிக்கையின் இரத்தம் யாக்கோபின் குடும்பத்தினருக்கு வல்லமை உள்ளதாக இருப்பதோடுகூட, தேவனோடு ஒருமனப்பட்டவர்களாய் இருக்க விரும்புகிற எல்லோர் மேலும் வல்லமை உள்ளதாய் இருக்கிறது. அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் புண்ணியத்தில் பங்குள்ளவர்களாய் இருந்தார்கள், இருந்தாலும் மெய்யான ஆட்டுக்குட்டியானவரில் புசிக்க மறுத்து விட்டார்கள். அவர்கள் ஒரு ஜாதியினராக, முதற்பேறானவர்களாக இராஜரீக ஆசாரியர்களாக, பரிசுத்த ஜாதியாக, மேசியாவின் விசேஷ ஜனங்களாக ஆகும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள்; அவர்கள் கடந்து போகின்ற தருணத்தையும், பரிபூரணமான மகிமையும், கனமும், அழியாமையும் உள்ள வாழ்வுக்குரிய புது சிருஷ்டியின் அங்கங்களாகும் தகுதியையும் இழந்து விட்டார்கள். ஆனாலும் வேதத்தில் இன்னொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக்கொள்ள மகிமையான வேறு ஒரு தருணம் அவர்களுக்கு உண்டு

என்றும், அதை ஏற்றுக்கொள்ளவும், அவருடைய மாம்சத்தில், பலியில் புசிக்கவும் அவர்களுக்கு ஒரு மகிமையான தருணம் உண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்; இதன்படி பாவம், மரணம் என்னும் அடிமைத்தனத்திலிருந்து முதற்பேறானவர்களின் உண்மையான சபையும் ஆவிக்குரிய இஸ்ரயேலருமாகிய, ஆண்டவருடைய உண்மையான சகோதரர்களுக்கு கீழாகவும், ஆண்டவருடைய தலைமைக்கு கீழாகவும் இருந்து தப்புவார்கள் என்று வேதத்தில் வேறு பகுதியில் சொல்லப்பட்டுள்ளது என்று கேள்விப்படுவதில் நாம் சந்தோஷம் அடைகிறோம். (ரோம.11:11–26).

நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தில் இறுதி கட்டத்தில், முதலாம் மாதம் 14 ம் தேதியன்று, ‘‘அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே,’’ அவர் இறந்த அதே நாளிலே நிஜமான ஆட்டுக்குட்டியாக, யூதர்களின் நிழலான பஸ்காவை தன்னுடைய சீடர்களோடு கொண்டாடினார். அவருடைய பன்னிரண்டு சீடர்களோடு போஜனம் பண்ணி, நிழலாயிருந்த ஆட்டுக்குட்டி அவருக்கே அடையாளமாக இருந்தது; உலகத்தின் பாவங்களுக்காக தன்னுடைய சொந்த பலியாக இருந்தது; அது ‘‘உண்மையான மாம்சமாக’’ இருந்தது; இதன் பெலத்தினால் மாத்திரமே ஜீவனும், தேவபுத்திரரின் விடுதலையும் ஆசீர்வாதங்களும் கிடைக்கப் பெறுகின்றன. நம்முடைய ஆண்டவரின் மரணத்திற்கு முந்திய இராத்திரியில், இந்த போஜனத்தை அவர் புசித்திருந்தாலும் அதே நாளன்றே அது எப்படி சாத்தியமானது என்றால், யூதர்களின் வழக்கப்படி ஒரு நாளானது நடுராத்திரியில் அல்ல சாயங்காலத்தில் ஆரம்பமானது. ஆண்டவர் இஸ்ரயேலின் எல்லா காரியங்களையும் அவர்கள் செய்ய வேண்டியிருந்த மாதிரிகளின் படியாகவே ஆண்டவர் ஒழுங்கு பண்ணினார் என்பது தெரிகிறது.

‘‘நியாயப்பிரமாணத்திற்கு கீழாக’’ பிறந்த யூதர்களாக இருந்தபடியால் நம்முடைய ஆண்டவருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இந்த மாதிரியை, அதற்குரிய நேரத்தில் கொண்டாடுவது கடமையாயிருந்து. ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் புசிப்பதன் மூலம், ஒரு வேளை வழக்கத்தின் பிரகாரம் திராட்சை இரசத்தோடும் இப்படியாக யூத இராப்போஜனம் கடைபிடிக்கப்பட்ட பின்னர், ஆண்டவர், மாதிரியாயிருக்கிற யூத இராப்போஜனத்தில் எஞ்சியருந்த புளிப்பில்லா

அப்பத்திலும், திராட்சை இரசத்திலும் பங்கு பெற்று, தன்னுடைய முழு சபைக்கென, அதற்கு பிரதிநிதிகளாக இருந்த (யோவா.17: 20) அவருடைய சீஷர்கள் மத்தியில் ஒரு புதிய காரியத்தை உண்டு பண்ணினார். அது அவர்களோடு ஆவிக்குரிய இஸ்ரயேலாக, முதல் பேறானவரின் சபையாக, புது சிருஷ்டிகளாக, யூத பஸ்கா போஜனத்தின் இடத்தை எடுத்து அதற்கும் மேலாக இருக்க வேண்டும் என்று ஒரு புதிய காரியத்தை ஏற்படுத்தினார். நம்முடைய ஆண்டவர் இன்னொரு, அதற்கும் மேலான, வித்தியாசமான மாதிரியான ஒரு பஸ்காவை ஏற்படுத்தவில்லை. அதற்கு மாறாக, மாதிரியாக இருந்தது இப்பொழுதுதான் அதன் நிறைவை தொடங்க இருந்தது, ஆகவே அதன் நிறைவை ஏற்றுக்கொண்ட வர்களுக்கு, இனியும் அது பொருத்தமாக இருக்காது. நம்முடைய ஆண்டவர் நிஜமான ஆட்டுக்குட்டியாக, அடிக்கப்பட இருந்தார். இந்த அதிகாரத்தின் தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் சொல்லுகிறபடி ''பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறார்.''

கிறிஸ்துவை பஸ்கா ஆட்டுக்குட்டியாக ஏற்றுக்கொள்ளுகின்றவர் களும், இப்படியாக நிழலின் இடத்தை நிஜமானது எடுத்துக் கொள்வதை ஏற்றுக்கொள்ளுகின்றவர்களும், நிழலான விடுதலையைக் கொண்டாடும்படி நிழலான ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்து அதை உண்பதற்காக உரிமையும் ஆயத்தமும் செய்வது கூடாத காரியமாகும். உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியென இயேசுவைப் பின்பற்றுகின்ற எல்லா உண்மையான விசுவாசிகளும் இனி செய்யக் கூடிய தகுதியான காரியம் அவர்களுடைய இருதயங்களின் நிலைக்கால்களில் அவருடைய இரத்தத்தைத் தெளிப்பதாகும்: ''துர் மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்'' (தற்போதைய ஆக்கினையிலிருந்து – அவருடைய இரத்தத்தினால், அவர்களுடைய பாவங்கள் கிருபையாய் மன்னிக்கப்பட்டது என்பதை உணர்ந்து, அவருடைய இரத்தத்தினால் அவர்கள் பாவ மன்னிப்பைப் பெற்றுள்ளார்கள் என்பதை உணர்ந்து). இவர்கள் இனிமேல் மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் புண்ணியத்தை, எல்லோருக்கும் தன்னை ஈடுபலியாக கொடுத்தவரில் புசிக்க வேண்டும் அல்லது அவர்களுடைய மீட்பரின் புண்ணியத்தை தங்களுடையதாக்கிக் கொள்ளவேண்டும். விசுவாசத்தினால் அந்த புண்ணியங்களில் பங்கு பெற வேண்டும், மேலும் தங்களுடைய பாவங்கள் ஆண்டவர் மேல் சுமத்தப்பட்டன, அவர் அவர்களுக்காக மரித்தார், ஆகவே அவருடைய

புண்ணியங்களும் நீதியும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அவர்கள் உணரவேண்டும்.

அப்படியானால், நம்முடைய ஆண்டவருடைய இராப்போஜனம், பஸ்கா போஜனத்தின் இடத்தை எடுத்துக் கொண்டதானால், இருந்தாலும் அது ஒரு உயர்ந்த மாதிரியானதாக அல்ல –நிஜமானது தொடங்கிவிட்ட நிலையில் அது எப்படிப் பட்டதாக இருக்கிறது? அது நிஜத்திற்கு ஒரு ஞாபகார்த்தமானது– நிஜமான பஸ்கா நிறைவேறுதலின் ஆரம்பம் என அவரைப் பின்பற்றுபவர்களுக்கான ஒரு ஞாபகமூட்டுகிற காரியம் என்று நாம் பதில் கூறுகிறோம்.

இப்படியாக நம்முடைய ஆட்டுக்குட்டியானவரை ஏற்றுக் கொள்ளுவது, அவர் நமக்காக மரித்ததை ஞாபகப்படுத்திக் கொள்வது என்பது தேவனுடைய ஜனங்கள் மீட்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தை எதிர்ப்பார்திருப்பது என்று பொருள்படும்; ஆகவே, அவைகளை புத்திசாலித்தனமாக ஏற்றுக்கொண்டு, ஞாபகப்படுத்திக் கொள்ளுவது, அவர்கள் உலகத்தில் இருக்கும்போது, அவர்கள் உலகத்தாராய் இருக்கமாட்டார்கள் என்று பொருள்படுகிறது. ஆனால் அவர்கள் அன்னியரும் பரதேசிகளுமாய் இருந்து, இப்போது பாவமும் மரணமும் ஆட்சி செய்கின்ற காலத்தின் அடிமைத்தனத்திலிருந்து கறை, திறை மற்றும் துக்கங்களிருந்தும் விடுதலையாகும்படியாக, இன்னும் அதிகம் விரும்பப்படுகிற நிலைமைகளை தேடுபவர்களாக இருப்பார்கள். இவர்கள் உண்மையான புளிப்பில்லா அப்பத்தில் பங்கு பெறுபவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஆண்டவரின் சத்துவத்திலும் வல்லமையிலும் பலப்படும்படியாக, அதின் பரிசுத்தத்திலும் மாம்சீக கோட்பாடுகளின் படியான பொல்லாப்பு (புளிப்பு) கறை திறை, அபிலாஷைகள், சுயநலம் போன்றவைகள் இல்லாமல் அதைப் பெறும்படியாக நாடுவார்கள். ஆண்டவர் தாமே நிந்திக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டார் என்பதினால், அவர்களும் இதே விதமான உபசரிப்பை எதிர்பார்க்க வேண்டும்; ஏனெனில், உலகம் அவரை அறியாதது போன்று அவர்களையும் அறிய மாட்டார்கள் என்றும், வேலைக்காரன் எஜமானுக்கு மேலானவன் அல்ல என்றும் ஆண்டவர் கூறிய வார்த்தையின்படி, அவர்கள் உபத்திரவம் என்னும் கசப்பான கீரையோடு பங்கு கொள்ளுகிறார்கள். ஆம், யாரெல்லாம் அவருக்கு உண்மையாய் இருக்கும் பட்சத்தில் உலகத்தில் துன்பம் அனுபவியாமல் இருக்கிறார்களோ

அவர்களெல்லாரும் அவருக்கு பிடித்தமானவர்களாய் இருக்கமாட்டார்கள் என்பது அவருடைய சாட்சியாகும். அவருடைய வார்த்தைகளாவன: ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.'' ''என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்கள்.... சந்தோஷப்பட்டு களிகூருங்கள்: பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.'' (மத்.5:11,12; 2தீமோ.3:12).

நம்முடைய ஆண்டவர் அவருடைய நினைவு கூறுதலான இராப்போஜனத்தை ஏற்படுத்தினபோது, கடைசி இராப்போஜனம் என்று அழைக்கப்படுகிறது; அது மேலே கூறியபடி ஒரு புதிய அடையாளமாக இருந்தது; அது பழைய பஸ்காவின் மாதிரிக்கு நிஜமானதாகக் காட்டப்பட்டிருந்தது; ஆனாலும் அது ஒரு நினைவு கூறுதலாக அல்லது நிஜமானதற்கு ஒரு ஞாபகார்த்தகமாகத்தான் இருந்தது, ஆனாலும் அதன் ஒரு பகுதியாக இல்லை. நாம் வாசிக்கிறபடி, அவர் ''அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது (இது நிஜமான ஆட்டுக்குட்டியான எனக்கு அடையாளமாக இருக்கிறது, இது என் மாம்சத்திற்கு அடையாளமாக இருக்கிறது) என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.'' நம்முடைய ஆண்டவரின் நோக்கம் இதன்படி நிஜமான முதற்பேறானவர்களுக்கும், விசுவாச மார்க்கத்தாருக்கும் தன்னைப் பின்பற்றி வருபவர்களுக்கும், அவர்களின் மனதில் தான்தான் நிஜமான ஆட்டுக்குட்டி என்பதை பதிய வைக்க வேண்டும் என்பதுதான் என்று தெரியவருகிறது. ''என்னை நினைவு கூறும்படி இதை செய்யுங்கள்'' என்று சொல்லுவது, முந்தியதைப் பின்பற்றிய அவருடையவர்கள், அது இப்பொழுது நிறைவேற்றப்பட்டு தேவையற்றதாகிவிட்டதால், இதை பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சொன்னார் என்று பொருள்படும். ''போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது.''– உடன்படிக்கையின் இரத்தம், புதிய உடன்படிக்கைக்கு முத்திரை இடுகிற இரத்தம். ''நீங்கள் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.'' அதை அதற்கான நேரம், இடம் போன்றவைகளை பார்க்காமல் செய்ய வேண்டும் என்று பொருள்படும்

என்று நாம் புரிந்து கொள்ள கூடாது, ஆனால், இந்த பாத்திரமும், புளிப்பில்லா அப்பமும் பஸ்காவை கொண்டாடும்படியாக உபயோகப் படுத்தப்பட்டது என்று அல்ல, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாதிரியை அல்ல நிஜமானதைக் கொண்டாடுவதாக எண்ணப்பட வேண்டும். ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட நேரத்தை தவிர வேறு எந்த நேரத்திலும் பஸ்காவை கொண்டாடுவது, நியாயமானதாக சரியானதாக, அல்லது மாதிரியானதாக இல்லாதிருப்பது போன்று நிஜமானதை அதன் நினைவு கூறும் சமயத்தில் அன்றி வேறு சமயத்தில் கொண்டாடுவது ஏற்றதாக இருக்காது.(1கொரி.11:23–25)

''ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்'' (1கொரி.11:26) என்று அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறார். அப்போதிலிருந்து வருடந் தோறும் இராப்போஜனத்தை கொண்டாடுவது என்பது ஆண்டவரை பின்பற்றி வருபவர்கள் எல்லாருக்கும் ஒரு புதிய அர்த்தத்தை உடையதாக இருக்க வேண்டும் என்பதை சீஷர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள் என்பதை இது காட்டுகிறது. அதாவது பிட்கப்பட்ட அப்பம் ஆண்டவருடைய சரீரத்தையும், பாத்திரம் அவருடைய இரத்தத்தையும் குறிக்கிறது என்பதாகும். இந்த புதிய ஏற்பாடு அவரைப் பின்பற்றி வருபவர்கள் மேல் ஒரு சட்டமாக சுமத்தப்படவில்லை என்றாலும், மேலும் அதை சரியானபடி கடைபிடிக்க தவறும் பட்சத்தில் தண்டனை எதுவும் குறிப்பிடப்படாவிட்டாலும், ஆண்டவர், அவரை விசுவாசிக்கிற வர்களும், நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டி என்று தன்னை ஏற்றுக்கொள்ளுகிற அனைவரும் இப்படியாக அவர் உண்டு பண்ணின நினைவு கூறுதலை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார். இன்றைக்கும் அது அப்படியே இருக்கிறது. ஈடுபலியில் உள்ள விசுவாசம் அதன் விளக்கத்தை''அவர் வரும் வரைக்கும்'' என்ற இந்த எளிமையான நினைவுகூறுதலில் இன்னும் காண்கிறது; ''அவர் வரும் வரைக்கும்'' என்பது நம்முடைய ஆண்டவரின் வருகை வரை அல்லது பிரசன்னம் வரை என்பதையல்ல, அறுவடை அல்லது இந்த யுகத்தின் இறுதி வரை என்பதையல்ல, நம்முடைய ஆண்டவர் கூறியபடி, ''தேவனுடைய இராஜ்யத்திலே நவமானதாய் இதை பானம்பண்ணும் நாள்வரைக்கும்'' என்பதைக் குறிக்கும்; இதற்கேற்ப இதில் இன்னும் நிறைவான அளவுக்கு பங்குபெறும்படியாக, அவருடைய

வருகையில் அவருடையவர்கள், ''திரைக்கு'' அப்பால் ஒவ்வொருவராக கூட்டிச் சேர்க்கப்படும் வரை அவரது ஈடு பலியில் உள்ள விசுவாசம் அதன் விளக்கத்தை இந்த நினைவு கூறுதலில் தொடர்ந்து காணும்.

''நாம் அநேகராயிருந்தும் ஒரே அப்பமாயிருக்கிறோம்''

''நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.'' (1 கொரி.10:16,17)

அப்போஸ்தலர், பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி நம்முடைய ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட இந்த நினைவு கூறுதலைப் பற்றி மேலும் ஒரு சிந்தனையை நமக்கு முன்பாக வைக்கிறார்; முக்கியமாக அப்பம், நமக்காக பலியாக செலுத்தப்பட்ட நம்முடைய ஆண்டவருடைய பிட்கப்பட்ட சரீரத்திற்கு அடையாளமாக உள்ளது என்பதை அவர் வலியுறுத்துகிறார்; மேலும் பாத்திரம் அவருடைய இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்றும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார். அந்த இரத்தம் நம்முடைய மன்னிப்பை உறுதிப்படுத்துகிறது. ஆனால் இப்பொழுது அதற்கும் மேலும், நாம் சபையின் அங்கங்களாகவும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகவும், புது சிருஷ்டியாகிய முதற்பேறானவர்களாகவும் இருந்து, நம்முடைய ஆண்டவரின் மரணத்திலும், அவருடைய பலியிலும் பங்கு பெறுகிறவர்களாகிறோம்; மேலும் அவர் இன்னொரு இடத்தில் கூறியபடி, ''கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக .....நிறைவேற்றுகிறேன்'' (கொலோ. 1:24) என்பது நம்முடைய உடன்படிக்கையின் ஒரு பங்காக இருக்கிறது. ''அவருடைய மரணத்திற்குள்ளாக நாம் ஞானஸ்தானம் பண்ணப்பட்டு இருக்கிறோம்'' என்ற வசனத்தில் உள்ள அதே அர்த்தம்தான் இங்கும் இருக்கிறது. இப்படியாக நம்முடைய ஆண்டவரின் மாம்சம் இந்த உலகத்திற்காக பிட்கப்படுகிற அப்பமாக இருந்தபோது, இந்த சுவிசேஷ யுகத்தின் விசுவாசிகளும், உண்மையானவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர் களும், புது சிருஷ்டியும், கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களு

மானவர்கள் அந்த ஒரு அப்பத்தின் பகுதிகளாக எண்ணப்படுகிறார்கள். ஆகவே அந்த அப்பம் ஆண்டவர் நமக்காக செய்த பலி என்று உணர்ந்த பின்னர், அப்பம் பிட்கப்படுவது, முழு சபைக்கென பிட்கப்படுவது அல்லது பலியாக செலுத்தப்படுவது என உணரவேண்டும்; மேலும் அவரோடு மரிக்கும்படியாக அர்ப்பணம் செய்து கொண்ட அனைவரும், அவரோடு பிட்கப்படவும் அவருடைய பாடுகளில் பங்குள்ளவர்களாகும் படியாகவும் அந்த அப்பம் பிட்கப்பட்டது என்பதையும் உணர வேண்டும்.

''கம்யூனியன்'' (Communion) என்ற வார்த்தையில், பொதுவான ஐக்கியம் (Common-union), பொதுவான பங்குபெறுதல் (common-participation) என்ற அதே அர்த்தம் தான் வெளிப்படுகிறது. ஆகவே, இந்த நினைவு கூறுதலை ஒவ்வொரு வருடமும் _ஆசரிக்கும்போது, நம்முடைய நம்பிக்கைகள் அனைத்தும், நம்முடைய மீட்பர் நம்முடைய பாவங்களுக்காக செலுத்திய பலியில் அஸ்திபாரம் இடப்பட்டிருக்கிறது என்பதை உணருவது மாத்திரமல்ல, ''கிறிஸ்துடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூட பிழைத்தும் இருப்போம்,'' ''அவருடனேகூட பாடுபட்டால், அவருடனேகூட ஆளுகையும் செய்வோம்'' என்பதற்கேற்ப நம்முடைய அர்ப்பணிப்பை உயிர்ப்பிக்கவும், புதுப்பிக்கவும் செய்கிறோம். இந்த தெய்வீக ஆசரிப்பின் பொருள் எவ்வளவு உயர்வானதாகவும் புரியும்படியாகவும் இருக்கிறது பாருங்கள்! உண்மைக்கு பதிலாக நாம் அடையாளத்தைப் போடவில்லை, நம்முடைய ஆண்டவரின் நோக்கமும் நிச்சயமாக இப்படியாக இருந்திருக்காது, நம்முடைய சார்பிலும் அப்படி இருந்திருக்காது. உண்மையான ஐக்கியம் என்பது, ஆண்டவருடன் இருதயபூர்வமாக ஐக்கியம் கொள்வதும், நம்முடைய இருதயம் அவர் மேல் வாஞ்சையாயிருப்பதும், சரீரமான சபையில் உள்ள உடன் அங்கங்களோடு இதயப் பூர்வமாக ஐக்கியமாயிருப்பதும், பலி செலுத்துவது என நாம் செய்து கொண்ட _உடன்படிக்கையை இதயப் பூர்வமாக உணர்வதுமாகும். இதில் நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நம்முடைய ஆண்டவரோடு தினமும் பிட்கப்பட்டவர்களாக, அவருடைய புண்ணியத்தை அனுதினமும் புசிப்பவர்களாக, அவருடைய வல்லமையிலும் சத்துவத்திலும் பலப்படுவார்களாக ஒவ்வொரு நாளும், வருடம் முழுவதும் இருப்போம். இந்த நினைவு கூறுதலை ஆசரிப்பதினால் எப்படியான ஒரு ஆசீர்வாதம் நமக்கு வருகிறது! மேன்மேலும் அறிவிலும், கிருபையிலும் வளர்வதற்குரிய ஒரு வாஞ்சை

எவ்வளவாய் இருதயத்தில் பற்றி எரிகிறது! நாம் அழைக்கப்பட்டிருக்கிற ஊழியத்தில் உள்ள சிலாக்கியங்களில் தற்காலத்திற்குரியவைகளில் மாத்திரமல்லாமல் வருங்காலத்திற்குரியவைகளிலும் பங்கு பெறவும் ஒரு வாஞ்சை எவ்வளவாய் இருதயத்தில் பற்றி எரிகிறது!

நாம் தேவனுக்கு துதி செலுத்துகிற பாத்திரத்தைக்குறித்தும் அப்போஸ்தலர் கூறுகிறதை நாம் பார்க்க முடிகிறது. ''இது கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?'' (பொதுவான ஐக்கியம், பொதுவான பங்கேற்பு) உண்மையாகவே பிரதிஷ்டை செய்து கொண்ட ''சிறுமந்தை'' இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் மாம்சத்தில் உண்மையான கிறிஸ்துவாக இருந்திருக் கிறார்கள். ஓ, எப்படிப்பட்ட ஒரு சிந்தனை! மேலும் மாம்சத்தில் ''அவருடைய சரீரத்தின் அங்கங்கள்'' என ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப் பட்டு, அங்கீகரிக்கப்பட்டவர்களின் பாடுகள், சோதனைகள், அவமானம், மரணம் ஆகியவை அனைத்தும் அவருடைய பலியின் பகுதிகளாக எண்ணப்படுகின்றன, ஏனெனில் அவர்கள் நம்முடைய தலையும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற ஆண்டவருக்குக் கீழாக உள்ளவர்களாகவும், அவரோடு சம்பந்தம் உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். _சூழ்நிலையை புரிந்து கொண்டு, இந்த சபையின் அங்கம்வகிக்கும்படியான தேவனுடைய அழைப்பையும், அதனால் ஏற்படுகிற மரணத்திற்கேதுவான பலியில் இப்பொழுது பங்குகொள்வதையும், வருங்காலத்தில் மகிமையான கிரியையில் பங்குகொள்வதையும் பாராட்டுகிறவர்கள், கிறிஸ்துவின் நாமத்திற்கென நிந்தைகளை அனுபவிக்க தகுதியானவர் என்று எண்ணப்படுவதிலும், அவருடைய மாம்சம் மற்றும் எலும்புகளின் அங்கங்களாக இருந்து சத்தியத்தின் ஊழியத்திற்கென தன்னுடைய ஜீவனையே கொடுப்பதில் களிக்கூறாமல் இருக்கமுடியுமா? ''உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.'' (1யோவா.3:1) இவர்கள் உலகப்பிரகாரமான நல்ல ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் இழக்க நேரிடினும், மீட்பரின் எதிர்கால மகிமையில் கிறிஸ்துவின் சரீரமாக இருந்து, ஒரு பங்கை பெறுவதற்கு தகுதியானவர்கள் என்று எண்ணப்படும் பட்சத்தில், இந்த இழப்புகள் ஒன்றுமில்லை.

அவர்கள் கிருபையிலும், அறிவிலும், வைராக்கியத்திலும் வளரும்போது அவர்கள் ஒவ்வொருவரும் எந்த விஷயத்தையும் அப்போஸ்தலரின் மனப்பாங்கிலேயே பார்க்க முடிகிறது. பூலோக

நன்மைகளையும், சிலாக்கியங்களையும் குறித்து அப்போஸ்தலர் கூறுவதாவது: ''எல்லாவற்றையும் குப்பையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.'' ''ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.''(பிலி.3:11; ரோம.8:18)

இன்னொரு கருத்து என்னவெனில், ஆண்டவரின் இந்த ஒரே சரீரத்தில் அங்கங்களாக இருக்கிறவர்களுக்கிடையில் பரஸ்பர அன்பும், இரக்கமும், ஆர்வமும் மேலோங்க வேண்டும் என்பதாகும். ஆண்டவருடைய ஆவி அதிகதிகமாக நம் இருதயங்களை ஆளும்படி வரும்போது, நமக்கு சமயம் கிடைக்கும்போதெல்லாம் எல்லாருக்கும், விசேஷமாக விசுவாச மார்க்கத்தாருக்கு நன்மை செய்வதில் அது நம்மை களிக்கூறும்படி செய்யும். நம்முடைய இரக்கங்கள் வளர்ச்சியுற்று உலகத்திலுள்ள மனுக்குலம் முழுவதுக்கும் செல்லும் போது, அவர்கள் விசேஷமாக ஆண்டவரில் வளரவேண்டும், மாத்திரமல்ல அவருடைய ஆவி உள்ளவர்கள் என்று அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், அவருடைய அடிச்சுவட்டில் நடக்க நாடுபவர்களுக்கு நேராக வளரவேண்டும். நாம் ஆண்டவர் மேல் வைத்திருக்கிற அன்பின் அளவு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக நம்மோடு உள்ள சகோதரரிடத்தில் நாம் காட்டும் அன்பைப் பொறுத்து இருக்கும் என அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார். மற்றவர்களுக்காக நாம் எல்லாவற்றையும் சகிக்கிற, தாங்கிக் கொள்கிற அளவுக்கு நம்முடைய அன்பு இருக்குமென்றால், நம்முடைய தலையாக இருக்கிறவர் மூலமாக நம்மோடு மிக நெருக்கமாக ஐக்கியம் கொண்டிருக்கிற அதே சரீரத்தின் இந்த உடன் அங்கங்களைப் பொறுத்த வரையில் இது எவ்வளவு பெரிய உண்மையாக காணப்படும்! நாம் மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள் வந்து விட்டோம் என்பதற்கு முக்கியமான அடையாளங்களில் ஒன்று நம்முடைய சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறோம் என்பதுதான் என்று அப்போஸ்தலர் யோவான் கூறுவது வியப்பிற்குரியதல்ல. (1யோவா.3:14) கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நாம் நிறைவேற்றுவதைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் பேசும்பொழுது, ''சரீரமான சபைக்காக நிறைவேற்றுகிறேன்'' என்று கூறுவதை நாம் நினைவு கூறுகிறோம். (கொலோ.1:24)

''நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளா யிருக்கிறோம்'' (1யோவா.3:16) என்ற வசனத்திலும் இதே கருத்துதான்

மறுபடியும் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட சகோதரத்துவம் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது பாருங்கள்! அவர்களுக்காக ஜீவனையே கொடுக்கக் கூடிய ஒரு சகோதர அன்பை வேறு எங்குதான் நாம் காணமுடியும்? ''ஆண்டவரின் வெள்ளாடுகள்'' என்று குறிப்பிடப் பட்டிருக்கிற சபையின் பலியை பாவநிவாரண நாளின் பலிகளின் ஒரு பகுதியாக ஈடுபடுத்துவதில் ஆண்டவர் எப்படி சந்தோஷப்படுவார் என்று நாம் இப்பொழுது கூறவில்லை. நம்மைப் பொறுத்தவரையில், ஜீவனைக் கொடுக்கும் பலியானது, சகோதரர்களுக்கு செய்கிற ஊழியத்தில் முக்கியமாக செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலருடன் இணைந்து நாமும் கவனத்தில் கொள்ளுகிறோம். உலகத்திற்காக செய்கிற ஊழியம் முக்கியமாக வர இருக்கின்ற யுகமான ஆயிரம் வருட யுகத்திற்கு உரியதாகும். தற்போதுள்ள சூழ்நிலையில் நம்முடைய நேரம், தாலந்துகள், செல்வாக்குகள், வசதிகள் எல்லாம் ஏறத்தாழ மற்றவர்களிடத்தில் (மனைவி, அல்லது பிள்ளைகள், அல்லது வயதான பெற்றோர் அல்லது நம்மை சார்ந்து வாழ்பவர்கள்) அடகு வைக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் நாமாகவே, மனுஷருடைய பார்வையில் நேர்மானவைகள், தேவையானவைகள், நல்லவைகளாக காணப்படுகிற தேவையான காரியங்களை செய்ய நாம் கடைமைப்பட்டு இருக்கிறோம். இப்படியிருக்க, பலிக்கென குறைந்த அளவே நம் பட்சத்தில் மிஞ்சியிருப்பதைக் காண்கிறோம், சகோதரருக்கென கொடுப்பதற்கு குறைந்த அளவே நம்மிடத்தில் மிஞ்சியிருப்பதைக் காண்கிறோம். இந்த குறைவானதையும் உலகமும், மாம்சமும், பிசாசும் நம்மிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளவும், நாம் அர்ப்பணித்திருக்கிற பலியிலிருந்து திசை திருப்பவும் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த பொல்லாத காலத்தில், ஆண்டவர் சபையைத் தேர்ந்தெடுப்பது, இந்த சூழ்நிலையில் ஒருவர் மேல் மற்றவர் வைத்திருக்கிற அன்பு, ஆண்டவர் மேல் வைத்திருக்கிற அன்பு, விசுவாசம் ஆகியவையின் அளவைப் பொறுத்துதான் இருக்கும். நம்முடைய அன்பு குளிராயிருந்தால், உலகம், மாமிசம், சத்துரு நம்மிடத்தில் அதிகமாக உரிமை கொண்டாடுவார்கள்; நம்முடைய நேரத்தை, நம்முடைய செல்வாக்கை, நம்முடைய பணத்தை, சத்துரு கவர முயற்சிப்பான். இன்னொரு பக்கம், ஆண்டவர் மேல் உள்ள அன்பு, அனலாயும், வலிமையுள்ளதாயும் இருக்கும் அளவின்படியே இவைகளை அவருக்கு

அர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைவோம்; சகோதரருக்கென செய்கின்ற ஊழியத்தில் நமக்கு சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம், நம்மிடத்தில் தேவைக்கு மேலாக உள்ள சத்துவத்தையும், செல்வாக்கையும் வசதியையும் அவருக்கென கொடுப்போம்; இதற்கும் மேலாக வீட்டின், குடும்பத்தின், முக்கியமாக தனது சொந்த பொருளாதார தேவைகளைக் கூடுமான வரை கட்டுப்படுத்தி, ஆண்டவருடைய பலிபீடத்தில் செலுத்தும்படியாக, அதிகமாக கொடுக்க, ஆண்டவரின் மேல் வைத்திருக்கிற இந்த பக்தியின் ஆவி நம்மை உந்தித்தள்ளும். நம்முடைய ஆண்டவர் மூன்றரை வருடங்களாக அவருடைய சரீரத்தைப் பிட்கக் கொடுத்தார், மூன்றரை வருடங்களாக அவருடைய இரத்தத்தை, ஜீவனைக் கொடுத்தார், ஆனாலும் இந்த பலிகள் கல்வாரியில் தான் முற்றுப் பெற்றன; இப்படியேதான் நமக்கும் இருக்கிறது. உலகப்பிரகாரமான அல்லது ஆவிக்குரிய விஷயங்களில், சகோதரருக்கென நம்முடைய ஜீவனைக் கொடுப்பது சிறு ஊழியங்களில் உள்ளது, ஆனாலும், ஆவிக்குரிய விஷயங்களில் அது பெரிய காரியமாகும். ஆகிலும் உலகப்பிரகாரமான தேவையுடன் உள்ள ஒரு சகோதரனுக்கு இரக்கம் காட்டாவிட்டால், அது ஆண்டவருடைய ஆவி அவனுடைய இருதயத்தில் சரியான அளவுக்கு ஆட்சி செய்யவில்லை என்று பொருள்படும்.

நினைவுகூறுதல் இன்னும் பொருத்தமானது

நம்முடைய அன்பின் ஆண்டவரின் நினைவுகூறுதல் ஆரம்பத்தில் நாம் பார்த்துள்ளபடி ஒரு குறிப்பிட்ட நாளில், யூத கணக்கின்படி முதல் மாதத்தின் பதினான்காம் தேதி கொண்டாடப்பட்டது.

(எபிரேய புதுவருடம், வசந்தகாலத்தில் சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்த பின்னர் (Spring Equinox) வரும் முதல் அம்மாவாசை (Newmoon) அன்று தொடங்குகிறது. 14வது நாள் எளிதில் கணக்கிடப்படுகிறது, ஆனால் பண்டிகை வாரத்தோடு குழம்பிவிடக் கூடாது. இந்த பண்டிகை வாரம் (யூத கொண்டாட்டம்) 15 ம் தேதி தொடங்கி, தொடர்ந்து ஒரு வாரத்திற்கு நீடித்தது. புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் வாரம், களிப்போடு யூதர்களால் கொண்டாடப் பட்டது – ஒரு கிறிஸ்தவனின் முழு எதிர்காலத்திற்கும் ஒத்து இருக்கிறது– விசேஷமாக நினைவு கூறுதலான இராப்போஜனத்தை அடுத்த முறை கொண்டாடும் வரை உள்ள முழு வருஷத்திற்கும் அடையாளமாக உள்ளது. யூதருக்கு ஆட்டுக்குட்டி பலிபிடப்படுவது முடிவுக்கு அடையாளமாகும். அது வார பண்டிகைக்கு துவக்கமாக இருந்தது, யூதருடைய விசேஷ கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது.

நம்முடைய நினைவு கூறுதல், ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதோடு– முதலாம் மாதம் நிசான் மாதத்தின் 14 ம் தேதியோடு – தொடர்புடையதாக இருக்கிறது. மேலும் நாளின் மணிக்கணக்கை கணக்கிடுவதில் மாற்றம் ஏற்பட்ட போது நிசான் மாதத்தின் 14வது நாளின் இரவு இப்பொழுது 13வது நாளின் சாயங்காலத்திற்கு இணையாக இருக்கும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.)

பழைய வழக்கத்தின்படியாக கணக்கிடப்பட்ட அதே நாள் இன்றும் பொருத்தமாக உள்ளது. மேலும் ''பூர்வ பாதைகளைப்பற்றி'' கேட்பவர்களுக்கும், அதில் நடக்கும்படி வாஞ்சையாயிருப்பவர்களுக்கும் அது பிடித்தமானதாக இருக்கும். நம்முடைய ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட, ஆண்டவரின் மரணம் முதலானவைகளை வருடம் தோறும் நினைவு கூறுதல் என்பதும், ஆதி சபையினரால் கடைபிடிக்கப்பட்டதும், சமீப காலத்தில் தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்குள் வருகிறவர்கள் மத்தியில் புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளது.

ஆண்டவரின் அடையாளமான இராப்போஜனத்தின் உண்மையான அர்த்தம் வரவர மறக்கப்பட்ட போது, அதை வருடந்தோறும் கடைப்பிடிப்பதில் உள்ள நோக்கமும் கவனிக்கப்படாமல் போனதில் ஆச்சரியமில்லை. இந்த இராப்போஜனத்தின் சரித்திரத்தை நாம் புரிந்துகொள்ள வரும்போது, இது மிகவும் தெளிவாக புரிகிறது. அது பின்வருமாறு உள்ளது:

அப்போஸ்தலர்களும், அவர்களுக்குப் பின்வந்தவர்களும் நித்திரை அடைந்தப் பின்னர் – ஏறக்குறைய மூன்றாம் நூற்றாண்டில்–சபையில் ரோமன் கத்தோலிக்க கொள்கை அதிக செல்வாக்குபெறத் தொடங்கியது. அதன் பொய்யான உபதேசங்களில் ஒன்று எதுவென்றால், கிறிஸ்துவின் மரணம் கடந்த கால குற்றங்களை நீக்கியிருக்கும் போது ஞானஸ்நானத்திற்குப் பின்னர், கிறிஸ்துவோடு தனிப்பட்டவிதத்தில் உறவுக்குள்ளாக வந்த விசுவாசியின் மீறுதல்களை ஈடுகட்ட இயலாதிருந்தது, இப்படியான பாவங்களுக்கு ஒரு புதிய பலி செலுத்துதல் அவசியமாக இருந்தது என்பதாகும். இந்த தப்பறையின் அடிப்படையில் திருப்பலி (Mass) என்ற உபதேசம் கொண்டுவரப்பட்டது. இந்த திருப்பலி (Mass) என்பது நாம் ஏற்கனவே விரிவாகப் பார்த்தப்படி, தனிப்பட்ட நபரின் குறிப்பிட்ட பாவங்களுக்காக செலுத்தப்படுகின்ற புதியதான கிறிஸ்துவின் பலியாகும். மேலும் திருப்பலியை நடத்துகிற குருவானவருக்கு, அப்பத்தையும் திராட்ச இரசத்தையும் கிறிஸ்துவின்

உண்மையான சரீரமாகவும், உண்மையான இரத்தமாகவும் மாற்றும் வல்லமை இருந்தது என்றும், மேலும் அதன் பின்னர் மெல்லிய அப்பத்தை பிட்பதின் மூலம், யாருக்கென திருப்பலி நடத்தப்படுகின்றதோ அந்த நபரின் பாவங்களுக்காக ஆண்டவரை புதியதாக பிட்கவோ பலி செலுத்தவோ கூடும் என்ற எண்ணத்தில் புதியதாக கிறிஸ்துவை பலியாகச் செலுத்துவது சரியானதாக தோன்றும்படி செய்யப்படுகிறது. திவ்விய நோக்கின்படி இந்த உபதேசமும் பழக்கமும் ஆண்டவருடைய பார்வையில் ஒரு அருவருப்பான காரியம் என்று நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். அது ''பாழாக்கும் அருவருப்பாகும்.'' (தானி.11:31; 12:11)

இந்த தவறான உபதேசம் பாழாக்குதலை உண்டு பண்ணிற்று. அதைத் தொடர்ந்து பலத்தரப்பட்ட தப்பறைகளான, பெரிய விசுவாச துரோகமாகிய ரோம ஒழுங்கு முறைகள் சபையில் இடம் பிடித்தது, அது எல்லா அந்திக் கிறிஸ்துக்களிலும் பிரதானமானதாகும். கிறிஸ்தவ உலகத்தை கட்டுப்படுத்தி, முன்னிலையிலிருந்த இந்த தப்பறைகள் பல நூற்றாண்டுகளை கடந்து வந்தன. இந்த நிலை பதினாறாவது நூற்றாண்டு வரை நீடித்தது. அப்பொழுது பெரிய சீர்திருத்த இயக்கம் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணி எதிர்த்தது; இதற்கேற்ப, இருண்ட காலத்தில் அந்திகிறிஸ்துவின் தவறான உபதேசங்கள், தவறான பழக்கங்களுக்கு கீழாக மறையுண்டிருந்த சத்தியங்களை கண்டு பிடிக்கத் துவங்கினார்கள். தேவனுடைய வார்த்தையின் முழு சாட்சியைக் குறித்த மேலதிகமான வெளிச்சம் சீர்திருத்தவாதிகளுக்கு கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் பலியைக் குறித்த தெளிவான கருத்து அந்த வெளிச்சத்தில் தெரிந்தது. அதனால் போப்பாண்டவரின் கருத்தும் திருப்பலியும் உண்மையிலேயே ''பாழாக்கும் அருவருப்பு'' என்று கண்டு கொள்ளத் தொடங்கி, பல தரப்பட்ட கோணங்களில் அதை ஏற்க அவர்கள் மறுத்து விட்டார்கள். 1552ம் வருடம் ஆங்கிலேய திருச்சபை அதன் ஜெப புஸ்தகத்தை மறுபரிசிலனை செய்து திருப்பலி (Mass) என்ற வார்த்தையை நீக்கியது.

திருப்பலி என்ற வழக்கம், வருடந்தோறும் கொண்டாடும் ஆண்டவரின் நினைவு கூறுதலான இராப்போஜனத்தின் இடத்தை பிடித்துக் கொண்டது. ஏனெனில், பாவத்திலிருந்து அடிக்கடி ஜனங்களை கழுவும் நோக்கத்தோடுதான் திருப்பலி செய்யப்படுகிறதாக அடிக்கடி சொல்லப்பட்டது. சீர்திருத்தவாதிகள் இதில் உள்ள தப்பறையைப் பார்த்தபோது, முதலில் ஏற்படுத்தப்பட்டதில் உள்ள எளிய நிலைக்கு வர முயற்சித்தார்கள்; அதன்படி ரோம சபையின் திருப்பலி, ஆண்டவருடைய

நினைவு கூறுதலான இராப்போஜனத்தின் தவறான ஆசரிப்பு என்று சொல்லி அதை ஒதுக்கி விட்டார்கள். இருந்த போதிலும், நிழலான பஸ்காவிற்கும் மெய்ப்பொருளான நம்முடைய ஆண்டவரின் மரணத்திற்கும் இடையில் உள்ள சம்பந்தத்தையும், இராப்போஜனம் என்பது ஆண்டவருடைய மரணத்தின் ஒரு நினைவு கூறுதலாக இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ளவில்லை; அது வருடாவருடம் கடைப்பிடிக்கப்படுவதின் தாத்பரியத்தையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே இதை புராட்டஸ்டன்ட் (Protestants) பிரிவைச் சேர்ந்தவர்கள் மத்தியில் சிலர் மாதம் ஒரு முறையும், மற்றவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், சிலர் நான்கு மாதங்களுக்கு ஒரு முறையும், ஒவ்வொரு சபைப் பிரிவினரும் தங்களுடைய சொந்த தீர்மானத்தின்படி கொண்டாடுகிறார்கள் என்று நாம் பார்க்கிறோம்– சீஷர்கள் சபையினர் ("Disciples") வாரம் ஒரு முறை கொண்டாடுகிறார்கள். ஞானஸ்நானத்தைக் குறித்து வேதாகமம் கூறுவதை அவர்கள் தவறாக புரிந்துகொண்டது போல இதையும் தவறாக புரிந்து கொண்டு இப்படிக் கொண்டாடுகிறார்கள். ஆரம்ப காலத்தில் வாரத்தின் முதல் நாளன்று சபை கூடிவந்தார்கள் என்றும் அப்படியான கூடுதலின் போது ''அப்பம் பிட்குதல்''இருந்தது என்றும் அப்போஸ்தல நடபடிகளில் கூறப்பட்டதை யொட்டி இராப்போஜனத்தை வாரம் ஒரு முறை கொண்டாடுகிறார்கள். (அப்.2: 42,46; 20:7)

இந்த வாராந்திர கொண்டாட்டங்கள் ஆண்டவருடைய மரணத்தை நினைவு கூறுவதல்ல என்று நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். ஆனால் அதற்கு மாறாக, அவைகள் அன்பின் விருந்துகளாக அவருடைய உயிர்தெழுதலையும், அவர் பரமேறுவதற்கு முன்னான நாற்பது நாட்களில் அனேக முதல் – நாட்களில் அவரோடு அப்பம் பிட்ட நாட்களை சந்தோஷத்துடன் கொண்டாடுவதாக இருந்தது. இந்த அப்பம் பிட்குதலை நினைவு கூறுவதினால் அதில் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள்; ஒருவேளை இது வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளன்றும் கூடிவரும்படியாக வழி நடத்தியிருக்கக் கூடும்; இதுவும் ஒரு சமுதாயமாக கூடி உணவு அருந்துவதற்கு, ஒரு அப்பம் பிட்குதலுக்கு வழிநடத்தியதில் தவறில்லைதான். நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி இவைகள் சம்பந்தப்பட்டவைகளில் பாத்திரம் குறித்து ஒரு போதும் சொல்லப்படவில்லை, ஆனால் ஆண்டவருடைய நினைவு கூறுதலின் இராப்போஜனம் குறித்து சொல்லப்படும் ஒவ்வொரு வேளையிலும்,

அப்பத்தைப் போலவே அதுவும் ஒரு முழு முக்கியமான இடத்தை பெறுகிறது.

யார் இதை ஆசரிக்கலாம்

முதலாவதாக, இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தம் பாவங்களுக்கு பலியாக சிந்தப்பட்டது என்பதை விசுவாசிக்காத எவரும் இதில் பங்கு பெறக்கூடாது என்று நாங்கள் பதில் கூறுகிறோம். பழிவாங்குதலுக்காக ஆபேலின் இரத்தம் பேசினதைப் போன்று இல்லாமல், ஒருவன் விசுவாசத்தினால் தனது பூலோகக் கூடாரத்தின் நிலையின் மேற்சட்டத்திலும், வாசலின் நிலைகால்கள் இரண்டிலும், நமக்காக சமாதானத்தை பேசுகின்ற இரத்தத்தை தெளிக்காத எவரும் இதில் பங்கு பெறக்கூடாது. (எபி.12:24) தன்னுடைய இருதயத்தில் உண்மையான விருந்தை வைத்திராதவனும், கிறிஸ்துவை தனக்கு ஜீவன் கொடுக்கிறவர் என்று ஏற்றுக் கொள்ளாத எவனும் இந்த அடையாள விருந்தில் பங்கு பெறக்கூடாது. மேலும் ஒரே சரீரத்திலும், ஒரே அப்பத்திலும் அங்கமாக இல்லாதவனும், அதே பாத்திரத்தில், தன்னுடைய ஜீவனும், இரத்தமும் ஆண்டவரோடு கூட பலியாக செலுத்தப்பட்டது என்று எண்ணாத எவனும் இதில் பங்கு பெறக்கூடாது. இங்கே விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் இடையில் மாத்திரமல்ல, பிரதிஷ்டை செய்து கொண்டவர்களுக்கும் பிரதிஷ்டை செய்து கொள்ளாதவர்களுக்கும் இடையில் இங்கே தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு கோடு வரையப்பட்டுள்ளது. இருந்தாலும் ஒவ்வொரு தனி மனிதனும் இந்த கோட்டை தானே, தனக்கென வரைந்து கொள்ளவேண்டும், எப்படியெனில் அவனுடைய வேலைகள் நல்லதாக இருக்கும் பட்சத்திலும், அவைகள் அவனுடைய வெளிப்படையான நடத்தையின் மூலம் ஓரளவு அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அவனே தனக்கென அந்த கோட்டை வரைந்து கொள்ளலாம். ஒருவன் இன்னொரு மனிதனை நியாயம் தீர்ப்பதாக இருக்கக் கூடாது, சபை கூட தீர்ப்பு கூறக்கூடாது. ஆனாலும், ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, சபைக்கு முன்பாக அந்த விஷயம் நல்ல உறுதியான விஷயமாக, கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு ஏற்ப இருக்குமானால் நியாயத்தீர்ப்பு கூறலாம். அப்படி இல்லாவிடில் மூப்பர்கள் அல்லது சபையின் பிரதிநிதிகள், கூடிவருகிறவர்கள் முன்பாக இந்த ஒழுங்கையும் நிபந்தனைகளையும் வைக்க வேண்டும்.

1. இரத்தத்தில் விசுவாசம்;

2. மரணபரியந்தம் ஆண்டவருக்காகவும் அவருடைய ஊழியத்திற்காகவும் பிரதிஷ்டை செய்து கொண்டிருத்தல்.

அதன் பிறகு இப்படிப்பட்ட மனதுடையவர்கள், பிரதிஷ்டை செய்து கொண்டவர்கள் அனைவரையும் ஆண்டவருடைய மரணத்தையும் தங்களுடைய மரணத்தையும் கொண்டாடும்படியாக அழைக்க வேண்டும். சபை பாகுபாடு பற்றிய எண்ணத்திற்கே இடமில்லாத வகையில் இதுவும் இதோடு சம்பந்தப்பட்ட எல்லா அழைப்புகளும், மிக தெளிவாக புரியும்படி இருக்கவேண்டும். விலையேறப் பெற்ற இரத்தத்தின் மூலமாக மீட்பு, மரண பரியந்தம் முழுமையான அர்ப்பணிப்பு, அந்த நீதியின்மேல் கட்டப்படுதல் ஆகிய அடிப்படைச் சத்தியங்களோடு முழு மனதோடு இசைந்திருப்பார்களானால், அவர்கள் எல்லோரும் மற்ற போதனைகளில் அவர்களுடைய விசுவாசம் வேறுபட்டதாக இருந்த போதிலும் இதில் பங்கு பெறும்படியாக வரவேற்கப்படவேண்டும்.

இந்த இடத்தில் இதைக்குறித்து அப்போஸ்தலர் கூறுவதை கவனிப்பது மிக பொருத்தமாயிருக்கும் :-

''இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ளவனா யிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணுக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.'' 1 கொரி.11: 27–29.

அப்போஸ்தலருடைய எச்சரிக்கை இங்கு இந்த நினைவு கூறுதலை அக்கரையின்றி கொண்டாடுவதற்கு எதிராக இருப்பது போன்று தோன்றுகிறது, ஏனெனில் அது ஒரு விருந்து போல ஆகிவிடும் என்று எச்சரித்து, அதற்கு நபர்களை ஏனோதானோ என்று அழைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். அது அப்படிப்பட்ட ஒரு விருந்தல்ல; அது பயபக்தியுடன் செய்யப்படக்கூடிய ஒரு நினைவுகூறுதல். அது ஆண்டவருடைய ''சரீரத்தின்'' அங்கங்களாக இருக்கிறவர்களுக்கு மாத்திரம் உரியது. மேலும் இதை பகுத்தறியாதவனும், அப்பம் ஆண்டவராகிய இயேசுவின் மாம்சத்திற்கு அடையாளமாக இருக்கிறது

என்பதையும், மேலும் பாத்திரம் அவருடைய இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்பதையும் பகுத்தறியாதவனும் இதில் பங்கு பெறுவான் என்றால் அவன் குற்றமுள்ளவனாயிருப்பான் – பொதுவான மொழிபெயர்ப்பில் உள்ளபடி நித்திய ஆக்கினைக்குள்ளாக அல்ல, ஆனால் ஆண்டவருடைய பார்வையில் குற்றமுள்ளவனாக இருப்பது போன்று தனது சொந்த மனசாட்சியிலும் குற்றமுள்ளவனாக இருப்பான். இந்த பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பாக ஒவ்வொருவனும், நம்முடைய ஆண்டவரின் பிட்கப்பட்ட சரீரமும் சிந்தப்பட்ட இரத்தமும் தனக்காக அவரால் ஈடு பலியாக செலுத்தப் பட்டது என்பதை அவன் விசுவாசிக்கிறானா அல்லது இல்லையா என்று தனக்குள்ளாக தீர்மானித்துக் கொள்ளவேண்டும்; இரண்டவதாக, அந்த ''ஒரே சரீரத்தில்'' அங்கமாக எண்ணப்படுவதற்காக தனக்குண்டான எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துள்ளானா இல்லையா என்பதை ஒவ்வொருவனும் தனக்குள்ளாக தீர்மானிக்கவேண்டும்.

யாரெல்லாம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள், யார் சரியான விதத்தில் ஆண்டவருடைய பந்திக்கு வரமுடியும் என்பதை கவனித்து விட்டு, நாம் சபையின் ஒவ்வொரு உண்மையான விசுவாசிக்கும் அதில் பங்கு பெற உரிமை உண்டு, ஆனாலும் ஆண்டவரின் விதிமுறைகளின்படி (மத்.18:15–17) முழு சபையும் ஒரு பொதுவான செயலின் மூலம் அந்த உரிமையை தடைசெய்திராத பட்சத்தில் அவர்களும் பங்கு பெற உரிமை உண்டு எனக் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் கொண்டாடலாம்; இப்படியானவர்கள் எல்லாரும் கொண்டாடுவதற்கு நிச்சயமாகவே வாஞ்சிப்பார்கள்; ஆண்டவர் மரிக்கும்போது கொடுத்த எச்சரிக்கையான ''நீங்கள் வாங்கி புசியுங்கள், நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்'' என்ற வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய நிச்சயமாகவே விரும்புவார்கள். நாம் மனுஷகுமாரனின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தில் பானம் பண்ணாவிட்டால், நமக்குள் ஜீவன் இல்லை என்பதை அவர்கள் உணருவார்கள். மேலும் ஆண்டவருடைய பலியிலும், ஜீவனிலும் உள்ள புண்ணியத்தில் அவர்கள் பங்கு பெறுவார்கள் என்பதை அவர்கள் உண்மையிலேயே இருதயத்திலும் மனதிலும் வைத்திருப்பார்களெனில், அதை நினைவு கூறுவதை ஒரு சிலாக்கியமாகவும், சந்தோஷகரமானதாகவும் உணர்வதுடன், ஒருவருக்கொருவரும், ஆண்டவரிடத்திலும் மன்னிப்பு கேட்பதும் ஒரு சிலாக்கியமானது, சந்தோஷமானது என்பதை அறிந்து கொள்வார்கள்.

யார் இதை நடத்தலாம்

திருப்பலியின் தவறான உபதேசமும், சபையில் இதை கொடுக்கும்படியாகவும், இப்படிப்பட்ட ஆராதனைகளை நடத்தும்படி யாகவும் குருவானவர்கள் என்ற ஒரு வகுப்பினர் ஏற்படுத்தப்பட்டதும், பொது ஜனங்களின் மனதில் ஒரு பெரிய ஆழமான எண்ணத்தை உண்டு பண்ணினபடியால், புராட்டஸ்டன்ட் (Protestants) இன்றைக்கும் கூட பொதுவான ஆசீர்வாதம் கூறவும், இப்படியான நினைவு கூறுதலின் ஆராதனையை நடத்தவும், நியமனம் பெற்ற குருவானர் இருப்பது மிக அவசியமானதென்றும், வேறு எந்த முறையும் அருவருப்பானது என்றும் கருதுகிறார்கள். இந்த நினைவு கூறுதலில் பங்கு பெறும் சிலாக்கியம் உள்ள அனைவரும் இராஜரீக ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை பண்ணப்பட்ட அங்கங்கள், ஒவ்வொருவனும் அவனவனுடைய தாலந்துகளுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப ஆண்டவருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்படி, அவரால் முற்றுமாக நியமிக்கப்பட்டவர்கள் என்பதையும், அவருக்கும் அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இருப்பவர்களுக்கும், அவருடைய நாமத்தினால் மற்றவர்களுக்கும் அவர்களால் இயன்றவரை எந்த ஊழியம் செய்யவோ அல்லது சேவை செய்யவோ முற்றுமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் கொண்டுவரும்போது இந்த கருத்து எவ்வளவு தவறானது என்பது உடனடியாக உணர்ந்துகொள்ளப்படுகிறது. ''நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்'' என்பது ஆண்டவரின் வார்த்தை, அவரோடு நாம் ஐக்கியம் கொள்ளும் போதும், அவருடைய மீட்பின் வேலையை கொண்டாடும் போதும், நம்முடைய பொதுவான ஐக்கியத்தை அவரோடும், அவருடைய சரீரத்தின் அங்கங்களாயிருக்கிற ஒவ்வொரு வரோடும் கூட கடைபிடிக்கும்போது இதை மறந்து விடக்கூடாது.

இருந்தாலும், நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, ஆண்டவருடைய ஜனங்களின் ஒவ்வொரு சிறு கூட்டத்திலும், ஒவ்வொரு சின்ன சபையிலும் அல்லது கிறிஸ்துவின் சரீரமான சபையிலும் ஒழுங்கு இருக்க வேண்டும், அந்த ஒழுங்கின் ஒரு பகுதியாக ''ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் இருக்க வேண்டும்.'' சபையின் அங்கமாயிருக்கிற ஒவ்வொரு புது சிருஷ்டியும், நினைவு கூறுதலான இராப்போஜன சம்பந்தப்பட்டதில் எந்த பங்கும் பெற அனுமதிக்கும்படி, ஆண்டவரால் நியமனம் பெற்றிருந்தபோதும், சபையானது, மூப்பர்களை

ஏற்படுத்துவதின் மூலம் இப்படிப்பட்ட விஷயங்களைப் பொறுத்த வரை முழு சபைக்கும் மூப்பர்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, இந்த ஊழியத்திற்கென அவர்கள் ஏற்கெனவே சபையினால் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதால், இந்த நினைவு கூறுதலை ஒழுங்கு செய்வதும், அதைக் நடத்துவதும் ஒரு ஊழியமாக அவர்களை சார்ந்ததாயிருக்கும்.

''இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்பது ஆண்டவருடைய கூற்று. எங்கெல்லாம் சாத்தியம் உள்ளதோ, அங்கெல்லாம் இந்த நினைவு கூறுதல் சபையின் சக அங்கங்களோடு கொண்டாடப்பட வேண்டும் என்பதையே இது விளக்குகிறது . இதில் உள்ள ஆசீர்வாதம் ஒருவரையொருவர் ஐக்கியத்தில் ஈர்க்கும்படியாகவும், இந்த வருடாந்திர கூட்டத்தின் போது மாத்திரமல்ல, சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுதெல்லாம் கூடி வர ஈர்க்கும்படியாக உள்ளது. இரண்டு அல்லது மூன்று பேர் கூடும்போதுகூட இந்த வாக்குத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளமுடியும், ஒரு பெரிய கூட்டத்தோடு கூடுவதற்கு முடியாததாக அல்லது வசதியற்றதாக இருக்கும் போது, அவர்கள் ஒரு முழு சபையாக கொண்டாடும்படியாக சிலாக்கியம் பெற்று இருக்கிறார்கள்; அப்பொழுது ஒரு தனிமனிதனும் சூழ்நிலைகளின் நிமித்தம் மற்றவர்களோடு கூடி வர வாய்ப்பு இல்லாதவனாக இருக்கும் போது, அவனுடைய விசுவாசம் போதிய பலத்துடன் ஆண்டவரிடத்தில், வாக்குத்தத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி வெளிப்பட வேண்டும் என்று யோசனையாக கூறுகிறோம் – அதாவது ஆண்டவரும், அந்த நபருமாக சேர்ந்து இருவராகிறார்கள். பாவத்திற்காக செலுத்தப்பட்ட இந்த பெரிய பலியை, வருடந்தோறும் கொண்டாட முடியாதபடி– அதில் பங்கு பெற முடியாதபடி தனித்துவிடப்படும் நிலைமை தடையாக இருக்க அனுமதிக்கக் கூடாது என்று நாம் யோசனையாக கூறுகிறோம். மேலும் தன்னந்தனியாக வாழ்கிற அந்த நபர் அப்பத்தையும் –(புளிப்பில்லா அப்பம் கிடைக்கு மென்றால் அதை வைத்துக் கொள்ளலாம்–அது Soda Biscuit அல்லது Water cracker ஆக இருக்கலாம்) அதோடு திராட்சை இரசத்தையும் (raisin juice or grape juice or wine)ஏற்பாடு செய்ய வேண்டும். ஆவியில் ஐக்கியப்பட்டு ஆண்டவரோடும், இப்பொழுது சந்தர்ப்ப சூழ்நிலையால் தன்னந்தனியாக இருந்தாலும், சரீரமான சபையின் மற்ற அங்கங்களோடு அவன் கொண்டாடவேண்டும் என்று யோசனையாக கூறுகிறோம். (எங்களுக்கு

தெரிந்தவரை, ஆண்டவர் இந்த நினைவு கூறுதலை ஏற்படுத்திய போது அதிக காலம் பதப்படுத்தப்பட்ட (fermented) திராட்சைப் பழரசத்தை உபயோகப்படுத்தினார். இருந்தபோதிலும் அவர் திட்டவட்டமாக ஒயின் என்று குறிப்பிடாமல் ''திராட்சப்பழரசம்'' என்று குறிப்பிட்டார். மேலும் நம்முடைய நாட்களில் மதுபானம் அருந்தும் பழக்கம் அதிக கெடுதலை விளைவிக்கும் பழக்கமாகிவிட்டதால், அதிக காலம் ஊறவைக்கப்படாத திராட்சை இரசத்தை அல்லது உலர்ந்த திராட்சையை உபயோகிப்பதில் ஆண்டவருடைய அனுமதியைப் பெற்றிருக்கிறோம் என்று நாம் நம்புகிறோம். வசதிப்பட்டால், நீண்டகாலம் பதப்படுத்தப்பட்ட (fermented) திராட்சரசத் துளிகள் சேர்க்கப்படலாம்; பதப்படுத்தப்பட்ட திராட்சை இரசத்தை உபயோகித்தால்தான் ஆண்டவருக்கு கீழ்ப்படிதலாகும் என்று நினைப்பவர்களின் மனசாட்சியை திருப்திபடுத்துவதற்காக, இப்படி செய்வதால் மாம்சத்தில் பெலகீனமாயிருக்கிற, ஆண்டவரின் சகோதரர் எவருக்கும் எந்த ஆபத்தும் கிடையாது.)

ஆராதனை முறைமை

ஆண்டவர் ஆராதனைக்கென ஒரு சட்டத்தையோ அல்லது ஒழுங்கையோ வைக்காதபடியினால், அப்படி ஒரு சட்டத்தை ஏற்படுத்துவது நமக்குரியதல்ல. இருந்தாலும், இந்த நினைவுகூறுதலை ஒழுங்காக கொண்டாடுவதற்கு என்று சாதாரணமானது (Moderate), தகுதியானது என்று எங்களுக்கு தோன்றுகிற ஒரு முறைமையை கூறலாம் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் இப்படிச் செய்வது ஒரு சட்டத்தையோ அல்லது திட்டத்தையோ உண்டாக்க வேண்டும் என்ற நோக்குடன் அல்ல, ஆனால் இந்த விஷயத்தில், மிகவும் விரிவாக நடத்தப்படுகிற ஆராதனைக்குப் பழக்கப்பட்ட சிலர், அல்லது இப்படியானவைகளுக்கு பழக்கப்பட்டிராத சிலருக்கு ஒரு சாதாரணமான வகையில் உதவி செய்யும் நோக்கத்துடன் இதை யோசனையாக கூறுகிறோம். அப்படியானால் நாங்கள் கூறுகிறவைகள் திருத்தம் செய்யப்படவேண்டுமென்றால், அப்படி செய்யலாம் என்ற கருத்தில் கூறுகிறோம்.

அது பின்வருமாறு :

1) இராப்போஜனத்திற்கு ஏற்ற வகையில் பயபக்தியை உண்டு பண்ணக் கூடிய, அதற்கு பொருத்தமான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கீர்த்தனைகளை (Hymns) பாடி ஆராதனையை ஆரம்பிக்கலாம்.

2) கூடியிருக்கிறவர்களுக்காகவும், விசேஷமாக பங்கு பெறுபவர்களுக்காகவும், உலகத்தில் உள்ள, நமக்கு தெரிந்த, தெரியாத ஒரே சரீரத்தின் அனைத்து சக அங்கங்களுக்காகவும், விசேஷமாக இந்த வருடாந்திர நினைவு கூறுதலில் பங்கு பெறுபவர்களுக்காகவும் திவ்விய ஆசீர்வாதத்திற்காக ஜெபம் செய்வது.

3) நடத்துகிற மூப்பர் வேதாகமத்திலிருந்து, ஆதியில் ஏற்படுத்தப்பட்ட நினைவு கூறுதலைப் பற்றிய ஒரு பகுதியை வாசிக்கலாம்.

4) அவர் அல்லது வேறொரு மூப்பர் அந்த விஷயத்தின் நிழல் பொருள் குறித்து பேசலாம்; அவருக்கு விருப்பமானால், முழு விஷயத்தையும் குறித்து சில வசனங்களை வாசித்து பிரசங்கம் பண்ணலாம்.

5) நம்முடைய ஆண்டவர் அப்பத்தை பிட்கும் முன் ஆசீர்வதித்தார் என்ற விஷயத்தில் கவனத்தை ஈர்ப்பதற்கு, தலைவராயிருக்கிறவர் தகுதியாய் இருக்கிற ஒரு சகோதரரை அப்பத்தின் மேல் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க சொல்லலாம்; வேறு ஒருவரும் இல்லாவிட்டால் அவரே அதற்கு தகுதி உள்ளவராக இருக்கிறபடியால், அப்பத்தின் மேலும், அதில் பங்கு பெறுபவர்கள் மேலும் திவ்விய ஆசீர்வாதம் வரும்படியாகவும், அதற்குரிய ஆசீர்வாதத்தை, அல்லது அதற்குரிய ஆழமான அர்த்தத்தை புரிந்துகொள்ளும்படியாக, அவர்களின் பிரகாசமான மன கண்கள் திறக்கப்படும்படியாகவும், மேலும் ஆண்டவருடைய மாம்சத்திற்கு அடையாளமானதை உபயோகிப்பதிலும், அவரோடு பிட்கப்படுவதிலும் தங்களுடைய சொந்த அர்ப்பணிப்பை புதுப்பித்துக் கொள்ளுவதிலும், அதில் பங்கு பெறுகிற அனைவரும் ஆண்டவரோடு ஆசீர்வாதமான ஐக்கியம் கொள்ளும்படியாகவும் திவ்விய ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வேண்டும்.

6) ‘‘நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது ’’ என்ற ஆண்டவருடைய வார்த்தையை உபயோகித்து புளிப்பில்லா அப்பத்தின் ஒரு பகுதி அப்பொழுது பிட்கலாம். அப்பம் உள்ள தட்டை சகோதரர்களில் ஒருவராவது அல்லது நடத்துபவர்தானே பறிமாற எடுத்துச் செல்லலாம்; அல்லது ஜனங்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தால் புளிப்பில்லா அப்பம் கொண்ட பல

தட்டுகள் ஒரே வேளையில், இரண்டு, நான்கு, ஆறு அல்லது எந்த எண்ணிக்கையையிலும் பிரதிஷ்டை செய்துகொண்ட சகோதரர்கள் எடுத்துச் சென்று பறிமாறலாம்.

7) அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் பறிமாறும்போது அமைதிகாக்கப்பட வேண்டும்; அப்பத்தின் அர்த்தத்தைக் குறித்து சுருக்கமான குறிப்புகள் மட்டும்– நாம் எப்படியாக ஆண்டவரின் பந்தியில் அவரை புசிக்கவும், பருகவும் செய்கிறோம் என்பதை கூறலாம்; ஆனாலும், பந்தியில் பங்கு பெறுபவர்களின் கவனம் கலைக்கப்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்; பொதுவாக இந்த விஷயம் குறித்து, கொண்டாடுவதில் உள்ள அர்த்தத்தை குறித்து, பிரசங்கியாளரோ அல்லது தலைவரோ பறிமாறுதலுக்கு முன்பு கூறுவது நலமாயிருக்கும்.

8) நம்முடைய ஆண்டவர், ''பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி''அதை சீஷர்களுக்கு கொடுத்தார் என்று நாம் வாசிக்கிறது போல, பிறகு அந்த பாத்திரம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். ஒரு சகோதரர் இந்த ஸ்தோத்திரம் பண்ணும் ஜெபத்தை செய்யுமாறு கேட்கப்படவேண்டும்; மேலும், அதில் பங்கு பெறுபவர்கள் ஆசீர்வதிக்கப்படும்படியாகவும் ஜெபிக்க கேட்டுக் கொள்ளப்படவேண்டும். அப்பத்தைப் போன்று இதுவும் அமைதியாக பறிமாறப்பட வேண்டும்.

9) இறுதிவரை ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் செய்த வண்ணம், அதற்கு முடிவாக ஒரு ஸ்தோத்திரப்பாட்டு பாடப்பட வேண்டும், ஆராதனை இப்படியாக முடிவுற்று, அதன் பின்னர் கூட்டம் கலைந்து செல்லவேண்டும் என்று நாம் யோசனை கூறுகிறோம். இந்த வேளையின் போது வழக்கமாக செய்யப்படும் வாழ்த்துக்கள் கூறுதல், ஆரோக்கியத்தைப் பற்றிய விசாரிப்புகள் முதலானவைகள் நிறுத்தப்படவேண்டும்; மேலும், இராப்போஜனப் பந்தியைக் குறித்த சிந்தனையையும் ஆவிக்குரிய ஐக்கியத்தையும் கெடுக்கக் கூடிய எதையும் கூடுமானவரை செய்யாமல் அவனவன் தன்தன் வீட்டிற்கு செல்ல வேண்டும்; மேலும், கூடுமானவரை ஒவ்வொருவரும் அந்த ஐக்கியத்தை அந்த இராத்திரியில் மாத்திரமல்ல, மறுநாளிலும் காத்துக் கொள்ளவேண்டும், எப்படியெனில் ஆண்டவருடைய கெத்சமனே அனுபவங்களை நினைவு கூறுகையில் அவருடையவர்கள் ஒவ்வொருவரும் இந்த கெத்சமனே அனுபவங்களுக்குள் கடந்து செல்லக்கூடும், அவ்வேளையில் உடன் இருக்கும் சீஷர்களுக்கும் உதவியும்

அனுதாபமும் தேவைப்படக்கூடும் என்பதை மனதில் கொண்டு அவ்வாறாக செய்ய வேண்டும் என்று யோசனையாக கூறுகிறோம்.

ஆண்டவரைக் குறித்து இப்படியாக எழுதப்பட்டு உள்ளது: ''அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்.''– அவருடைய சொந்த சோதனையின் காலத்தில் அவரோடு அனுதாபப்படக்கூடியவர்கள் ஒருவரும் கிடையாது. நம்மை பொறுத்தவரை இது வித்தியாசமாக இருக்கிறது. இதேபோல் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, இதேபோல் ஒரே அப்பத்தின் அங்கங்களாக பிட்கப்படும்படியாக உறுதிமொழி எடுத்துக் கொண்டு, மேலும் அதே பரிசுத்த ஆவியினால் ஏற்றுக்_கொள்ளப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரமான சபையின் சக அங்கங்கள் நமக்கு உண்டு; நாம் இதை நினைவு கூறும்போது, சபையில் மிகச் சிறியவர்களுக்கு எதைச் செய்தாலும் அது தலையாயிருக்கிறவருக்கே செய்யப்படுகிறது என்பதையும், அது அவரால் பாராட்டப்படுகிறது என்பதையும் நினைவில் வைத்து, சபையில் நம்முடன் இருக்கிற அங்கங்களுக்கு அதிக உதவியாய் இருக்க நாடுவோமாக. பேதுருவின் உதாரணத்தை அதே வேளையில் நினைவு கூறுவது பொருத்தமாயிருக்கும்–ஆண்டவருடைய துடிதுடிப்புள்ள ஊழியக்காரனாக இருந்தாலும், சோதிக்கப்பட்ட வேளையில் அவருடைய பெலகீனத்தையும் ஆண்டவருடைய உதவியும், ஜெபமும் அவருக்கு தேவைப்பட்டதையும் நினைவுபடுத்திக்கொள்ளுவது சரியானதாக இருக்கும்.''நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்.'' இதை நினைவு கூறுவது நமக்கு பிரத்தியோகமான உதவியாக இருக்கலாம், ஏனெனில் அப்போஸ்தலர் பேதுருவுக்கு இது அப்பொழுது உதவியாக இருந்தது. ''ஒவ்வொரு தேவையான வேளையிலும் கிருபை கிடைக்கும்படியாக'' ஆண்டவரை அதிகமாக நோக்கிப் பார்க்க அது நமக்கு உதவி செய்யும்.

அதே வேளையில் நாம் யூதாசையும், அவனுடைய வீழ்ச்சி சுயநலத்தினாலும், முன்னேற வேண்டும் என்ற ஆவலினாலும், பொருளாசையினாலும் வந்தது என்பதை நினைவு கூறுவது நல்லது. இந்த சுயநலம் என்ற கதவின் வழியாக எப்படி சாத்தான் அதிகதிகமாக அவனுக்குள் நுழைந்தான் என்பதை நாம் நினைவு கூறும் போது, இதேபோன்று சத்துருவின் வலைக்குள் நாமும் விழுந்து விடாதபடி ஜாக்கிரதையாக இருக்க அது நமக்கு உதவி செய்யும். அப்படியில்லை யென்றால் ஏதாவது ஒரு காரியத்தியத்திற்காக நம்மை கிரயம் செலுத்தி

வாங்கிய ஆண்டவரை மறுதலியாமல் இருக்கும்படி யாகவும், எப்பொழுதாவது, வாயின் வார்த்தையின் மூலம் ஆண்டவரை, அல்லது அவருடைய சகோதரரை அல்லது சத்தியத்தை மறுதலியாமல் இருக்கவும் அதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அடுத்த நாளிலும் நம்முடைய அன்பான மீட்பரின் அனுபவங்களை நம்முடைய ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுவோம், இதன்படி, அவரோடு ஆழ்ந்த அனுதாபம் கொள்ளும்படியாக மாத்திரமல்ல, மேலும் அவரைப் பின்பற்றுவபர்களாக இருக்கிற நம் மேல் வரும்படியாக அனுமதிக்கப் படக்கூடிய அக்கினி போன்ற சோதனைகளையும் வினோதமானது என்று நினையாமல் இருக்கும்படியாகவும், இறுதிவரை நாம் அவரை பின்பற்றும்படியாகவும், எக்காலத்திலும் அவர் மரிக்கும் போது சொன்ன வார்த்தைகளான ''எல்லாம் முடிந்தது'' என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுவது நல்லது. மேலும் நமது சார்பாக அவர் செலுத்திய பாவத்திற்கான காணிக்கை முடிவு பெறுகிறது என்பதையும், அதன்மூலம் அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம் என்பதையும், அவர் நமக்காக பரிந்துபேசும்படியாகவும், நமக்கு சகாயம் தேவைப்படும் ஒவ்வொரு வேளையிலும் உதவி செய்யும்படியாகவும் அவர் என்றென்றும் ஜீவிக்கிறார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஈஸ்டர்–பஸ்கா

''ஈஸ்டர்'' ("Easter") என்கிற வார்த்தை வேதாகமத்தில் ஒரு முறை வருகிறது. (அப்.12:4) அங்கே அது தவறாக மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அது பஸ்கா பண்டிகை என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஈஸ்டர் என்கிற பெயர் புறஜாதியாரிடமிருந்து பெறப்பட்டது. அது ஜெர்மானியர்களின் பின்னணியிலிருந்து வந்ததாகும். அது Estera என்ற கிழக்கத்திய தேவதை, அல்லது ஜெர்மனியர்களின் தேவதையை குறிப்பிடுகிறது. இந்த தேவதைக்கான திருவிழா, பஸ்கா பண்டிகையின் காலமான வசந்த காலத்தில் (Spring) கொண்டாடப்பட்டது. இந்தப் பெயரை ஏற்றுக் கொள்ளுவது, நம்முடைய ஆண்டவரின் மரணத்தையும், உயிர்தெழுதலையும், பரமேறுதலையும் கொண்டாடுகிற காலத்திற்கு இந்தப் பெயரைக் கொடுப்பது, அதுவும் பெந்தேகொஸ்தே நாளிலிருந்து அந்த பெயரைக் கொடுப்பது ஆகியவையெல்லாம் கிறிஸ்தவ நிறுவனங்கள் புறஜாதியாரின் முறைமைகளை சபைக்குள் புகுத்தும் ஒரு

முயற்சி என தெரிய வருகிறது. அனேக விட்டுக்கொடுக்கப்பட்ட காரியங்களைப் போன்று, இதுவும் மூன்றாம் நூற்றாண்டின் ஒரு காலப்பகுதியில் இருந்து வருகிறது. ஈஸ்டர் என்ற புறஜாதி தேவதையின் பெயரானது, நம்முடைய மனங்களில் குறிப்பாக எந்தவித மாற்றத்தையும் உண்டு பண்ண வேண்டியதில்லை, ஏனெனில் கிழக்கத்திய தேவதையை கொண்டாட நாம் இனி இதை உபயோகிக்கப் போவதில்லை. Protestant மக்களிடையே ஈஸ்டர் என்ற பெயரானது பழைய காலத்தைப் போலவும், கத்தோலிக்கர்களால் இன்னும் உபயோகப்படுத்தப்படுவது போலவும், ஒரு காலத்திற்கு உரியதாக அல்லாமல் ஒரு நாளைக் குறிப்பதற்காக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஒரு நாள் ஈஸ்டர் ஞாயிறு (Easter sunday) என்று அழைக்கப்படுகிறது. ஆண்டவரின் உயிர்தெழுதலைக் கொண்டாடுகிற எந்த நாளும் அவருடைய ஜனங்களுக்கு விலையேப் பெற்ற நாளாக இருக்கும். ஆனால் இந்த விஷயத்தை சரியாக உணர்ந்துகொள்ளுகிறவர்களுக்கு, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஈஸ்டர் ஞாயிறாக (Easter sunday) இருக்கும், ஏனெனில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நம்முடைய ஆண்டவர் மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்ததை நினைவு கூறும் நாளாகும்.

இங்கே இந்த விஷயத்தை அறிமுகப்படுத்துவதில் உள்ள நம்முடைய நோக்கம் முக்கியமாக ஈஸ்டர் என்கிற இந்த வார்த்தைக்கு பரவலாக கத்தோலிக்கர்கள் கொண்டுள்ள கருத்துக்கு கவனத்தை ஈர்ப்பதற்காகும். இதில் பெரிய வெள்ளியும், ஈஸ்டர் ஞாயிறும் உள்ளடங்கும், இவைகள் பஸ்கா பண்டிகை நாட்களுக்கு மாற்று வார்த்தைபோன்றே அர்த்தம் உள்ளது என்று நினைத்து உபயோகிக்கப்படுகிறது. திருப்பலி அறிமுகப்படுத்தப்பட்டதும், அடிக்கடி கடைபிடிக்கப்பட்டதும், நம்முடைய ஆண்டவரின் மரணத்தை வருடாவருடம் கொண்டாடுவதை அர்த்தமற்றது ஆக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது அப்படியல்ல. ஆதிகால சபையின் பழக்கமானது பெரிய முக்கியமான மையக்கருத்தைக் கொண்டாடுவதாக இருந்தது, சபை நீடித்திருப்பதற்கு உதவியாக அந்த மையக்கருத்து நீடித்து வந்தது; ஆனால் இராப்போஜனத்தைக் கொண்டாடுவதும், அதை ஏற்ற காலத்தில் கொண்டாடுவதும் நின்றுவிட்டது; திருப்பலிகள் அதிமாக செலுத்தப்பட்டதின் நிமித்தம் அது அந்த இடத்தை பிடித்துக் கொண்டது, இப்படியாக இந்த ஒரு முக்கியமான நினைவு கூறுதல் அதன் அர்த்தத்தை இழந்துவிட்டது.

நாம் ஏற்கனவே விளக்கமாக கூறியுள்ளபடி, பல நூற்றாண்டு காலமாக யூத காலண்டர் முறைப்படி நம்முடைய ஆண்டவர் சிலுவையிலறையப்பட்ட தேதியை கணக்கிடுவது பழக்கமாக இருந்தது. ஆனால் காலாகாலத்தில் கூடுமானவரை யூத நிறுவனத்தின் முறைகளை மாற்ற வேண்டும் என்ற வாஞ்சையோடு, நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின் மரண நாளை கணக்கிடும் முறையில் ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. நிசேயா (Nice) என்ற இடத்தில் கூடிய கிறிஸ்தவ சங்கம்(Ecumenical Council), வசந்த காலத்தில் மத்திய ரேகையை சூரியன் கடந்த பின்னர் (spring equinox) வருகிற முதலாவது பவுர்ணமியைத் தொடர்ந்து வருகிற வெள்ளிக் கிழமையன்று, இனிமேல் பஸ்கா பண்டிகை (Easter) கொண்டாடப்பட வேண்டும் என்று கட்டளையிட்டது. இது உலகம் பூராவும் ஆண்டவருடைய மரணத்தை கொண்டாடுவது, ''பெரிய வெள்ளி'' (''Good Friday'') என்று அழைக்கப்படுகின்ற வெள்ளிக் கிழமை என்று தீர்மானித்தது மல்லாமல், யூத பஸ்கா பண்டிகையின் நாள், இந்த பெரிய வெள்ளியோடு மிக குறைந்த பட்சத்தில் மட்டுமே இசைவாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுதும், இப்பொழுதும் கூட, யூதர்கள், சூரியன் வசந்த காலத்தில் மத்திய ரேகையை கடக்கும் வரை காத்திருந்து, அதன் பிறகு வருகிற முதலாவது அமாவாசையன்று தங்கள் மாதத்தை துவக்குகிறார்கள், அதிலிருந்து 14வது நாளன்று அதாவது பவுர்ணமியன்று பஸ்காவை ஆசரிக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். கணக்கிடும் முறை இப்படி மாற்றப்பட்டதால், இந்த மாற்றத்தின்மூலம் இரண்டு விதமான கணக்கீடுகளுக்கிடையில் கிட்டத்தட்ட ஒரு மாத வித்தியாசம்கூட எப்பொழுதாவது ஏற்படுகிறது.

இதில் எது உயர்ந்த முறை என்று சொல்லுவது நம்முடையதல்ல, ஆனாலும் ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் கடைபிடித்ததை கைக் கொள்ள வேண்டும் என்பதே நம்முடைய விருப்பமாகும். கணக்கிடுவதில் தவறு இழைத்து விட்டாலும், தவறான ஒரு நாளில் கொண்டாடினாலும் நாம் ஒரு குற்றத்தை இழைத்து விட்டோம் என்ற மனவருத்தத்துடன் அல்ல, திவ்விய ஏற்பாட்டின்படி உள்ள அதை நம்மால் இயன்ற வரை, அந்த முறையை கடைப்பிடிக்க முயற்சித்தோம் என்ற மனதிருப்தியுடன் கடைப்பிடிக்க விரும்புகிறோம். தேதியை தற்கால காலண்டர்படி நிர்ணயிப்பது இன்னும் நல்லதாக இருக்கலாம் என்று ஒருவர் சொல்லக் கூடும். அது ஏப்ரல் 15வது நாள், அல்லது ஏப்ரல் முதலாவது நாளாக அல்லது வேறு நாளாக, இன்னும் மற்ற கணக்கீடுகள் போன்றவைகள்

தேவையற்றதாகிவிடலாம். ஆண்டவர் ஏற்படுத்தியபடி அவர் யூத காலண்டரை ஒழுங்கு படுத்தியதற்கு ஒரு காரணம் வைத்திருந்தார், இந்த விஷயத்தில் அவர் ஏற்படுத்தியதை அறிந்து அதை தொடர விரும்புகிறோம்.

ஒரு குறிப்பிட்ட விதத்தில் தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்திற்கு அடையாளமாக சூரியனைக் காண்கிறோம். சந்திரன் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும், மேலும், அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக இருந்த ஜனங்களுக்கும் அடையாளமாக இருக்கிறது. ஆகவே பவுர்ணமி தினத்தன்று, சரியாக அந்த நாளிலே ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதில் இப்படியாக ஒரு விஷேசமான முறையில் அது சரியானதாக இருந்தது; மேலும், வேளையைப் பற்றிய தேவனின் அனாதி தீர்மானத்தின்படி அது அமைந்திருந்தது; ஆகவே அவர்களால் அந்த வேளைக்கு முன்பாக அவரை பிடிக்க விரும்பியும் முடியாதிருந்தது, ஏனெனில் ''அவருடைய வேளை இன்னும் வராதிருந்தது'' (யோவா.7:30; 8:20) பவுர்ணமியன்று அவர் சிலுவையில் அறையப்பட்டதும், உடனடியாக சந்திரன் மறையத் தொடங்கினதும், இஸ்ரயேல் ஒரு ஜாதியாக தன்மேல் ஒரு திவ்விய நிராகரிப்பை வரவழைத்துக் கொண்டது அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அது புறம்பாக்கப்பட்டது என்ற ஒரு பாடத்தை சுட்டிக் காட்டுகிறது; இது சந்திரன் மறைந்து போனதற்கு ஒரு அடையாளமாக இருப்பதுடன், அவர்கள் ஜாதியாக தாழ்த்தப்பட்டதற்கும் அடையாளமாக இருக்கிறது.

இதைக்குறித்து நன்மதிப்பு பெற்ற ஒருவரது, சில முக்கிய பகுதிகளை கீழே தருகிறோம். மேற்கூறியவைகளுக்கு இது ஆதாரமாக உள்ளது.

மெக்ளின்டோக், ஸ்ட்ராங் ஆகியோரின் என்சைக்ளோபிடியாவிலிருந்து
(From Mc Clintok and strong's Encyclopedia)

''ஈஸ்டர் அதாவது பஸ்கா (Easter, ie, Passover-Easter) :–இந்த வார்த்தை ஜெர்மானியர்களின் பின்னணியிலிருந்து வருகிறது; அது அவர்களின் தேவதையைக் குறிக்கிறது; இன்னொரு விதத்தில் பார்க்கும்போது கிழக்கத்திய தேவதையைக் குறிக்கிறது; அதன் பெயர்

(Estera) என்பதாகும். இந்த தேவதையை கனப்படுத்தும் வகையில் வருடந்தோறும் பஸ்கா பண்டிகை கொண்டாடப்படும் கிட்டத்தட்ட அதே காலத்தில் (spring) பலிகள் செலுத்தப்பட்டு வந்தன. அந்தப் பெயரையொட்டி பஸ்கா பண்டிகையின்போது நடைபெற்ற கிறிஸ்தவ உயிர்த்தெழுதலின் பண்டிகைக்கு பெயர் வழங்கத் தொடங்கிற்று. இதைத்தான் ஈஸ்டர் நாள் என்றும் ஈஸ்டர் ஞாயிறு (Easter-day, Easter Sunday) என்றும் தவறாக கூறுகிறோம், எப்படியெனில் இது ஆதிகாலத்து ஜெர்மானியர்களின் தேவதைக்கு அப்போது வைக்கப்பட்டிருந்த பண்டிகையைத்தான் குறிப்பிடுகிறது. ஆகவே ஈஸ்டர் என்ற பதத்திற்கு தற்கால ஜெர்மானிய வார்த்தையான Ostern உபயோகப் படுத்தப்படுகிறது, இது அதே தேவதையான எஸ்டெரா(Estera)அல்லது ஆஸ்டெராவைக் (Ostera) குறிப்பிடுகிறது. அங்கீகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பில் இந்த வார்த்தை வருகிறது,– ''பஸ்கா (Easter) பண்டிகைக்குப் பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டு வரலாமென்று எண்ணி'' (அப்.12:4)– மொழிபெயர்ப்பாளர் களிடையே மொழிபெயர்ப்பில் ஒற்றுமைப்பாடு குறைவுபட்டிருந்ததற்கு இது ஒரு உதாரணமாக இருப்பதை முக்கியமாக காணமுடிகிறது. கடைசியாக செய்யப்பட்ட மொழி பெயர்ப்பில் எல்லா பகுதிகளும் பஸ்கா (Passover) என்று மாற்றப்பட்டது, ஆனால் இது.....

''ஆசியா மைனரில் உள்ள எல்லா சபைகளும் நிசான் மாதத்தின் 14ம் நாளன்று ஆண்டவரின் மரணத்தைக் கொண்டாடின. ஆதிகாலத்து சபைகளனைத்தின் கருத்தின்படி இந்த நாளில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் ஏற்பட்டது. மேற்கத்திய நாடுகள் (Rome) அது நடந்த நாளன்று, அதாவது அந்த வாரத்தின் வெள்ளிக்கிழமையன்று சிலுவை மரணம் வருடந்தோறும் கொண்டாடப்பட வேண்டும் என்ற கருத்தை உடையதாக இருந்தன. மேற்கத்திய நாட்டு சபைகள், கிறிஸ்துவின் மரண நாளை ஒரு துக்க நாளாக கருதியது, உயிர்த்தெழுந்த நாள் வரை உபவாசத்தை தொடர்ந்தது. இன்னொரு பக்கம், Asia Minor ல் உள்ள சபைகள், கிறிஸ்துவின் மரணமானது மனுக்குலத்தின் மீட்புக்காக மாத்திரமே என்று எண்ணின; ஆகவே, கிறிஸ்து மரித்த அந்த வேளையில் அதாவது மத்தியான வேளை மூன்று மணியளவில் உபவாசத்தை முடித்துக்கொண்டு, உடனே ஆண்டவருடைய இராப்போஜனத்தைக் கொண்டாடினார்கள். இந்த இரு குழுவினருமே (Orthodox Eastern and Western Churches) பாஷா (Pascha - Passover) என்ற பெயரை ஏற்றுக் கொண்டார்கள்; இதன் மூலம் சில வேளைகளில் இந்த வாரத்தின் விசேஷித்த ஆசரிப்பு நாட்களை

புரிந்துகொண்டார்கள், சில வேளைகளில் பஸ்கா (Passover) *நினைவு கூறப்படுகிற முழு வாரத்தையும் புரிந்துகொண்டார்கள்.*

"ஏறக்குறைய கி.பி. 196 ல் ரோமாபுரியின் பிஷப் விக்டர், சபையின் முக்கிய பிஷப்மார்களுக்கு ஒரு சுற்றறிக்கையை விடுவித்து, அவர்களுடைய மாகாணங்களில் குருமார்களின் குழுக்களைக் கூட்டவும், மேற்கத்திய வழக்கத்தை (வெள்ளிக் கிழமையிலும், ஞாயிற்றுக்கிழமை யிலும் ஆசரிப்பது – சரியான நாளான நிசான் மாதத்தின் 14வது, 16வது நாளை விட்டுவிட்டு) அறிமுகப்படுத்தும்படி கேட்டுக் கொண்டார். அப்போது முதல் தடவையாக ஆதிசபையில் பெரிய தகராறு எழுந்தது; சிலர் அவருடைய வேண்டுகோளுக்கு இசைந்தார்கள், ஆனால் எபேசுவின் பிஷப் பாலிக்ரேட்ஸ் (Polycrates) *கூட்டிய குழுக்கள் திட்டவட்டமாக மறுத்து பிஷப் பாலிக்ரேட்ஸின் நிருபத்தை அங்கீகரித்தன. அவர்கள் ஆசிய நாட்டுப் பழக்கத்திற்கு சாதகமாக இருந்து, விக்டரைப் பற்றி அப்போஸ்தலர்களான பிலிப்புவின், யோவானின் அதிகாரத்திற்கும், பாலிக்கார்ப் (*Polycrap *) க்கும், அவனுக்கு முன்பாக எபேசுவில் பிஷப்பாக இருந்த அவனுடைய ஏழு உறவினர்களுக்கும் தெரியப் படுத்தினார்கள்.....*

*"இது வரைக்குமாக, ஆசியா மற்றும் மேற்கத்திய (*Roman) *சபைகளுக்கு இடையே இருந்த பிரச்சனை இரண்டு குறிப்புகள் சம்பந்தப்பட்டதாக மாத்திரம் இருந்தன. அவையாவன:*

1) கிறிஸ்துவின் மரணம் நிகழ்ந்த வாரத்தின் நாள் நினைவு கூறப்பட வேண்டுமா அல்லது மாதத்தின் நாள் நினைவு கூறப்பட வேண்டுமா என்பது.

2) உபவாசம் நிறுத்தப்படவேண்டுமா என்பது.

இப்பொழுது நிசான் மாதத்தின் 14ம் தேதி வந்த அதன் சரியான நேரம் எது என்பதை குறித்து மூன்றாவது பிரச்சினை வந்தது. அனேக சபையின் தலைவர்களின் கருத்து, எருசலேம் அழிவுக்கு முன் உள்ள காலம் வரை யூதர்களின் ஆரம்ப கணக்கீடுதான் சரியானது என்பதாகும், நிசான் மாதத்தின் 14 ம் நாள் வசந்த காலத்தில் சூரியன் மத்திய ரேகையை கடந்த பின்னரே வரும், ஆனால் பின்னால் வந்த யூதர்கள் தவறாக கணக்கிட்டதின் விளைவாகத்தான் நிசான் மாதத்தின் 14 ம் நாள் எப்போதாவது சூரியன் மத்திய ரேகையைக் கடப்பதற்கு முன்பு வந்தது. இது சபையில் உள்ள இரண்டு குழுவினருக்கும் மத்தியில் ஈஸ்டர் என்பது எப்போதும் சூரியன்

பூமத்திய ரேகையை கடந்த பின்னர் நிசான் மாதத்தின் 14வது நாளன்று இருக்க வேண்டும் என்று வாதித்து, நிர்ணயம் பண்ணினார்கள்.

''யூதர்கள் வருடம் சந்திர வருடமாக (Lunar year) இருந்தபடியாலும், நிசான் மாதத்தின் 14வது நாள் எப்போதும் பவுர்ணமியாக இருந்தபடியாலும், மேலே உள்ள வானசாஸ்திரத்தின் படியான கருத்தை ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள், நிசான் மாதத்தின் 14வது நாள், சூரியன் பூமத்திய ரேகையை (Eqinox) கடக்கிறதற்கு முன்னால் எப்பொழுதெல்லாம் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் யூத பஸ்கா பண்டிகைக்கு ஒரு மாதம் கழித்து கிறிஸ்துவின் மரணத்தை கொண்டாடுவார்கள். இனியும் கிறிஸ்தவர்கள் யூத காலண்டரை சார்ந்து இருக்க முடியாது என்றபோது, ஈஸ்டரின் நேரத்தைக் குறித்து தாங்கள் தங்களுடைய சொந்த கணக்கீட்டை செய்ய வேண்டியதிருந்தது. ஒரு பக்கம், ஏற்கனவே முன் குறிக்கப்பட்ட காரணத்தினாலும், இன்னொரு பக்கம், சூரியன் பூமத்திய ரேகையை கடந்த தேதி சிலரால் மார்ச் 18 என்றும், சிலரால் 19 என்றும், சிலரால் 21 என்றும் நிர்ணயிக்கப் பட்டதினாலும், இந்த கணக்கீடுகள் அனேகமுறை வித்தியாசப்பட்டது. 314ல் கூடிய ஆர்லெஸ் கவுன்சில் (Council of Arles) தேதி எல்லோருக்கும் ஒரேமாதிரியாக இருக்கும்படியாக முயற்சி செய்தது, ஆனால் அதன் கட்டளைகள் (decrees) அதிகமான பலனைக் கொடுத்த மாதிரி தெரியவில்லை. ஆகவே இந்த விஷயம் மறுபடியும் நிசேயா (Nice) என்ற இடத்தில் கூடிய கிறிஸ்தவ சங்கம்(Ecumenical Council), இதை விவாதித்து சபைகள் அனைத்திலும், சூரியன் பூமத்திய ரேகையைக் (Eqinox) கடந்த பின்னர் நிசான் மாதத்தின் 14வது தேதிக்குப் பின் வரும் வெள்ளிக்கிழமையன்று ஈஸ்டர் கொண்டாடப்பட வேண்டும் என்று நிர்ணயித்தது. அதோடு கூட, அலெக்ஸாண்டிரியாவில் உள்ள சபை வான சாஸ்திரத்தில் சிறந்திருந்தபடியால், ரோம சபைக்கு வருடந்தோறும் காலண்டர்படி எந்த தேதியில் ஈஸ்டர் கொண்டாடப்பட வேண்டும் என்பதை சொல்ல வேண்டும் என்றும் ரோம சபை உலகத்திலுள்ள எல்லா சபைகளுக்கும் அறிவிக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் நிசேயா (Nice) என்ற இடத்தில் கூடிய கிறிஸ்தவ சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட சட்டங்கள் கூட எல்லா வேறுபாடுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கவில்லை; ஆகவே Dionysius Exiguus என்பவர் கணக்கீடுமூலம், பழைய சபைக்குள் எல்லாருக்கும் ஒரே மாதிரியான பழக்கத்தை கடைபிடிக்கப்படும் வரை இது நிறுத்திவைக்கப்பட்டது. பிரிட்டன் போன்ற சில நாடுகள் பழங்காலத்து பழக்கத்தை ஒரு பெரிய

எதிர்ப்பு இல்லாமல் விட்டுவிடவில்லை. Charlemagne என்பவரின் காலத்தில் எல்லாருக்கும் ஒருமித்த கருத்து (யூதர்களின் கணக்குப்படி பவுர்ணமி நாளை ஏற்காமல், வெள்ளிக்கிழமையை கடைபிடிப்பது) ஏற்படுத்தப்பட்டுவிட்டது போல் தோன்றுகிறது; அதன் பிறகு, சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்த பின்னர் வருகின்ற பவுர்ணமி தினமான நிசான் மாதத்தின் 14ம் தேதி கொண்டாடப்படுவதைப் பற்றி எந்த தடயமும் காணப்படவில்லை.

''போப் கிரகரி (Pope Gregory X11) என்பவர் காலண்டரை சீர்திருத்திய போது, Dionysius என்பவரின் காலத்தில் உள்ள காலண்டரை தக்க வைத்துக் கொண்டார்; ஆனால், ஈஸ்டர் பவுர்ணமியை மிக சரியான விதத்தில் கணித்தார்; மேலும் வான சாஸ்திர நேரத்திலிருந்து வருங்காலத்தில் எந்த மாற்றமும் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு கவனமாக வழிவகைகளை வகுத்தார். இந்த துல்லியமான கணிப்பினால், கிறிஸ்தவர்களின் ஈஸ்டர் சில வேளைகளில் நிசேயா கிறிஸ்தவ சங்கத்தின் சட்டங்களுக்கு மாறாக யூதர்களின் பஸ்கா பண்டிகை காலத்தில் வரத்தான் செய்கிறது.''

அதே வல்லுனர் பஸ்கா பண்டிகை என்ற வார்த்தையைக் குறித்து சொல்லுகிறதாவது:–

பஸ்கா பண்டிகை: ''அது வருடாந்திர பிரத்தியேகமான பண்டிகை; இது முக்கியமான ஸ்தானத்தில், எபிரேய சபையின் இரண்டாவது முக்கிய நியமமான விருத்தசேதனத்திற்கு தொடர்புடையதாக இருந்தது. (யாத்.12:44) யோசுவா கில்காலில் திவ்விய உடன்படிக்கையைப் பரிசீலிக்கும் போது, ஜனங்களின் விருத்தசேதனம் முடிந்தவுடன் பஸ்கா பண்டிகையை கொண்டாடினதைக் காணலாம். ஆனால் இந்த இரண்டு சடங்காச்சாரங்கள் இருந்த விதம், இரண்டுக்கும் இடையில் உள்ள உறவின் நிலை, இந்த நிழல்களின் உண்மைப் பொருள்கள் நிறைவேற்றப் படும்வரை, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் புனித ஆசரிப்பாக ஆண்டவருடைய இராப்போஜனம் அந்த இடத்தை எடுத்துக்கொள்ளும் வரை, முற்றுமாக விருத்தி செய்யப்படவில்லை.''

அத்தியாயம் 12

புது சிருஷ்டியின் விவாகம் மற்றும் சிலாக்கியங்களும், கடமைகளும்

புது சிருஷ்டியின் பல்வேறு கடமைகள் – ''நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்''– தராதரமற்ற இணைப்பு கூறப்படவில்லை–தெய்வீக ஒழுங்கில் புருஷனும் ஸ்திரீயும் – மனிதன் தலையாக இருப்பது எதேச்சாதிகாரம் அல்ல–புது சிருஷ்டியின் விவாகம்–விவாக இணைப்பின் பல்வேறு நிலைமைகளில் புது சிருஷ்டிக்கான அறிவுரைகள்–கைவிடப்பட்ட நிலைமை ஏற்படும்போது– மனசாட்சியே கடைசியான பரீட்சை– அன்னகர்கள், கன்னிகைகள், பிரம்மச்சாரிகள்– ''ஆண்டவருக்குட் பட்டவர்கள்''–பெற்றோர்களின் பொறுப்பு.

''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்க னென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.'' கலா. 3:27,28.

புது சிருஷ்டி முதலாவதாக ஒரு புதிதாய் பிறந்த சித்தம் கொண்டதாக மாத்திரமே இருக்கிறது, அது ஆண்டவருக்கென உடன்படிக்கை செய்து கொண்ட கடமைகளில் உண்மையாயிருக்கு மென்றால், உயிர்த்தெழுதலில் அதற்கு ஒரு புதிய, பூரணமான சரீரத்தை பெறக்கூடிய வாக்குத்தத்தம் உண்டு. அதன் அன்பின் பிரமாணம் அதற்குள்ள எல்லாவற்றையும் முதலாவதாக தேவனுக்கென வைக்கிறது. மேலும், அது எல்லா காரியங்களிலும் அதிக இருதயபூர்வமான கீழ்ப்படிதலை அர்த்தப்படுத்துகிறது. அதன் இரண்டாவது கடமை

என்னவென்றால், புது சிருஷ்டியில் தனக்குள்ள சகோதரர்கள் அனைவருக்கும் நன்மை செய்வதாகும். மூன்றாவது கடமை என்னவென்றால், முதல் இரண்டு கடமைகளும் அனுமதிக்கும் விதத்தில், அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் _போதெல்லாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்வதாகும். புது சிருஷ்டியாகிய புது சித்தமானது, அதை செயல்படுத்தும்படியாகவும் பயிற்சிக்கவும் அதற்கென சரியான சரீரம் இல்லாவிட்டாலும், அதற்கென ஒரு சரீரம் இல்லாமலில்லை; மாம்சீக சித்தத்திற்கும், ஜென்ம சுபாவமுள்ள மனதிற்கும் வாரிசாகிய ஜென்ம சரீரம், அதன் ஆஸ்திகளின் ஒரு பகுதியாயுள்ள சிலாக்கியங்களையும், கடமைகளையும் அனுபவிக்கிறது. அந்த சரீரத்தில் தான் புதுசிருஷ்டி தற்காலிமாக இருக்க வேண்டும், அதன் மூலமாக மாத்திரமே அது மனதின் விஷயங்களை வெளிப்படுத்தமுடியும்.

எல்லா விதத்திலும் மனித சரீரம் பரிபூரணமானதாக இருந்தாலும், புது சித்தம் அதை உபயோகிக்கிற விஷயத்தில் கஷ்டங்களை அனுபவிக்கும்; ஏனெனில், அந்த சரீரம் பூமிக்குரியதாக, பூமியின் தன்மை உடையதாக இருக்கிறது; அதன் நோக்கங்களும், வாஞ்சைகளும் எவ்வளவுதான் சுத்தமானதாகவும், கனத்துக்குரியதாகவும் இருந்தாலும், அது பூமிக்குரிய காரியங்களில் பழக்கப்பட்டுள்ளது; அதன் நோக்கங்களும் வாஞ்சைகளும் பூமிக்குரியது; அதே வேளையில் புது சித்தத்தின் நோக்கங்களும், வாஞ்சைகளும் திவ்விய தூது அறிவிக்கிற பெரிதும், விலையேறப்பெற்றதும், பரலோகத்திலிருந்து கொடுக்கப்படுவதுமான வாக்குத்தத்தங்களாக இருக்கின்றன. இந்த காரியம் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோடும் இதே மாதிரியாகத்தான் இருந்தது. அவருடைய சரீரம், ''பரிசுத்தமானதும், குற்றமற்றதும், கறையற்றதும், பாவிகளுக்கு விலகினதுமாகவும்'' இருந்தது. இருந்தாலும், அவர் தன்னுடைய உடன்படிக்கையின்படி, புது சுபாவம் செழிப்பாக வளர வேண்டிய நிலைக்கு வரவும், உயிர்த்தெழுதலில் புதிய சரீரத்திற்கு ஆயத்தமாக இருக்கவும் வேண்டுமானால், மாம்சத்தை சிலுவையில் அறைய வேண்டும், தன்னுடைய புதிய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கவும் கீழ்ப்படியவும் பண்ண வேண்டும். அதன் இயற்கையான விருப்பங்களும், வாஞ்சைகளும், ருசிகளும், பிதாவின் சித்தத்திற்கும், ஏற்பாடுகளுக்கும், அதிசயமான வழிநடத்துதலுக்கும் இடையூறாக வரும் வேளை களிலெல்லாம், அவைகள் பலியிடப்பட வேண்டும்; புது சிருஷ்டி முற்றிலுமாக சுவீகாரமாக எடுத்துக்கொள்ளப்படுவதற்காகவும், தெவ்வீக

மகிமையடைவதற்காகவும், மாம்சம் மரணபரியந்தம் பலியிடப்படுவதும் இதில் அடங்கியிருக்கிறது.

புது சிருஷ்டியின் அங்கங்கள், இராஜரீக ஆசாரியர்கள் பரிபூரணமற்ற சரீரம் உடையவர்களாக இருப்பதினால், அவர்களுடைய பலி தேவனுக்கு ஏற்றதாக இருக்காது; ஏனெனில், அவைகள் கறைபட்டதாக, பாவமுள்ளதாக, பூரணமற்றதாக இருக்கின்றன; எல்லாவற்றிக்கும் முதலாவதாக, ஆண்டவருடைய பலியினால் அவர்கள் நீதிமானக்கப்பட வேண்டும். அவருடைய பாவநிவாரணத்தின் புண்ணியத்தினால் அவர்களுடைய அழிவுக்குரிய சரீரங்கள், பாவத்திலிருந்தும், பூரணமற்ற நிலையிலிருந்தும் மூடப் படுகின்றன. ஆகையால், இனியும் அவைகள் கறைபட்டதல்ல, அவைகள் பரிசுத்தமுள்ளவைகளாக எண்ணப்பட்டு பலிகளாக ஏற்றுக்கொள்ளப் படும்படியாக செய்யப்படுகின்றன. இந்த நீதிமானாக்கப்படுதலை குறித்து அப்போஸ்தலர் கூறுவதாவது: ''அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யதக்க புத்தியுள்ள ஆராதனை.'' (ரோம. 12:1)

நீதிமான்களாக எண்ணப்பட்ட நமது சரீரம் பலியாக செலுத்தப்பட்டபோது, தேவனுடைய புத்திரராக ஆவியினால் –மாம்சீக நிலையில் அல்ல, ஆவிக்குரிய நிலையில் குமாரர்களாக ஜெனிப்பிக்கப் பட்டோம். அப்போதுதான் அர்ப்பணிக்கப்பட்ட சித்தம் புது சிருஷ்டியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் வாழ்க்கை ஆரம்பமாயிற்று; அந்த வாழ்க்கை, எந்த அளவுக்கு தேவனுக்கும், அழிவுக்குரிய சரீரத்தையும் அதன் நலன்களையும் பலியாக செலுத்தும்படியாக செய்துகொண்ட உடன்படிக்கைக்கும் விசுவாசமாக உள்ளதோ அந்த அளவுக்கு வளமடையும். இப்படியாக, அழிவுக்குரிய சரீரம் பலியிடப்பட்டு, கிறிஸ்துவுடனேகூட மரித்ததாக எண்ணப் படுகையில், அது புதிய சித்தத்தினால் (புது சிருஷ்டி) உயிர்ப்பிக்கப் படுவதோடு, அதனால் ஆளுகை செய்யப்பட்டு, அதன் எஞ்சியுள்ள வாழ்க்கை ஒரு உயிர்தெழுதலின் வாழ்க்கை என்று அடையாளப்படுத்தி கூறப்படுகிறது. புது சிருஷ்டியாகிய புதிய சித்தம் இந்த அழிவுக்குரிய சரீரத்திற்குள்ளும், அதன் மூலமாகவும் செயல்படுவது, கிறிஸ்துவுடன் எழுந்ததாகவும்,

மேலானவைகளைத் தேடவும் ஜீவிப்பதாக அடையாளப்படுத்தி கூறப்படுகிறது. (கொலோ: 3:1)

அப்போஸ்தலர் இந்த புதிய வாழ்வை, அல்லது உயிர்த்தெழுதல் என அடையாளப்படுத்தி சொல்லப்படுகிறதைக் குறித்துச் சொல்லுகிறதாவது: ''அன்றியும், இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர், உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்பிப்பார்.'' (ரோம. 8:11) ஆகவே, இப்படியாக, புதிய சித்தம் நம்முடைய அழிவுக்குரிய சரீரங்களைக் கட்டுப்படுத்துகிறது; தற்போதைய வாழ்க்கையில் நமது சரீரம், உயிர்த்தெழுதலுக்கு முன்பு கிடைக்கப் பெறாத ஆவிக்குரிய சரீரத்திற்கு சிறந்ததாகவும், மாற்றாகவும் மாத்திரம் இருக்கிறது; அதாவது, புது சிருஷ்டிக்கு, காத்துக்கொண்டிருக்கிற ஆவிக்குரிய சரீரங்களுக்கு பதிலாக, அழிவுக்குரிய சரீரங்கள் தற்காலிகமான மாற்று சரீரங்களாக மாத்திரம் இருக்கின்றன என்று கருதுவது பொருத்தமாயிருக்கும்.

ஆனால் ''எண்ணப்படுதல்'' என்கிற விஷயங்களெல்லாம் ஆவிக்குரியவைகளாகும். இவைகள் அனைத்தும் ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்களால் மாத்திரமே மதிப்பிட முடியும், புரிந்து கொள்ளப்படும். அவர்கள் இப்படியாக விஷயங்களை திவ்விய நோக்குடன் பார்க்கும்படி பலம் பெறுகிறார்கள். உலகத்தின் பார்வையில் இவைகளெல்லாம் உண்மையல்லாதவைகளும், நிஜமல்லாதவைகளும், ''முட்டாள்தன மானவைகளுமாக'' காணப்படுகின்றன. அவர்கள் குறிக்கோளில், அபிலாசையில், நடத்தையில் ஒரு வித்தியாசத்தைக் காண்கிறார்கள், ஆனால் அதை எப்படி புரிந்துகொள்வது என்பதை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் அதை ஒரு போலியான ஆசை, அல்லது பைத்தியக்கார ஆசை, அல்லது ''பிறரைக் காட்டிலும் பரிசுத்தன்'' என்ற எண்ணமுடையவன் அல்லது மாய்மாலம் உள்ளவன் என்று எண்ண முற்படுகிறார்கள். வெளிப்புற பார்வையில் புது சிருஷ்டியைப்போலவும், இருதயத்திலோ வித்தியாசமாகவும் காணப்படுகிற பலவிதமான போலிகள் – வெளிப்புறத்தில் கோதுமைப்போல காணப்படுகிற களைகள், இருப்பதையும் மறுக்க முடியாது. புது சிருஷ்டி உலகத்தால் புரிந்து கொள்ளப்படாததைக் குறித்து ஆச்சரியப்படவோ, ஏமாற்றமடையவோ கூடாது. ஆனால், உலகம் ஆண்டவரை அறிந்துகொள்ளாதது போன்று நம்மையும் அறிந்துகொள்ளவில்லை என்கிற திவ்விய வார்த்தையை

நினைவு கூற வேண்டும். இயேசுவின் அடிச்சுவற்றைப் பின்பற்றுகிறதற்கு, நாம் நேசிக்கிறவர்களால் தரக்குறைவாக எண்ணப்பட வேண்டும் என்பது நாம் தேவனிடத்தில் உண்மையாய் இருப்பதை சோதிக்கும்படியான ஒரு பரீட்சையாகும். அவர்களுடைய நன்மதிப்பை விரும்புவது தவறானது அல்ல. உலகத்தின் சினேகமும், அதன் நன்மதிப்பும் தேவனுக்கு விரோதமான பகை என்பதும், அர்ப்பணம் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு துரோகம் செய்வது என்ற கருத்தும் புதிய சிருஷ்டிக்கு இந்த விஷயத்தில் முற்று புள்ளியை வைக்கும்.

''என்னுடைய ஆண்டவருக்கு நான் உண்மையாக இருக்க வேண்டும், அவர் தன்னுடைய இரத்தத்தால் என்னை விலை கொடுத்து வாங்கினார்.''

நம்முடைய தற்போதைய ஆராய்ச்சி, இந்த புது சிருஷ்டிகளின் சரியான முறையான நடத்தையைப் பற்றியதாகும். இந்த புதிய சித்தம் இவர்களின் அர்ப்பணிக்கப்பட்ட சரீரங்களின் ஊடாகவும், அவர்களுக்குள்ளும் செயல்படுகிறது; அவர்களுக்கு மற்றவர்களைப் பொறுத்தவரையில் அவர்களோடு சில உறவு முறைகளும் சில பொறுப்புகளும் மாம்சத்தின்படியாக இருக்கும். புது சிருஷ்டி அவனுடைய அழிந்து போகின்ற மாம்சத்தின்படியான, மாம்சத்தின்மேல் முறையாக விழுந்த எல்லா விதமான கடமைகளையும் நீதியான எல்லா காரியங்களிலும் – நேர்மையிலும் கடமையிலும், பொறுப்புகளிலும் – மதிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும். ஆகவே, தற்போதுள்ள நிலைமையில், புது சிருஷ்டி அது விரும்புகிற மாதிரி எல்லா விஷயங்ளிலும் செய்ய முடியாது, ஆனால் சில விஷயங்களில் மாம்சீக கடமைகளுக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும்; ஏனெனில், ''எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்'' என்பது திவ்விய கட்டளையாகும். மேலும், வேதம் கூறுகிறதாவது: ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனா யிருப்பான்.'' (ரோம. 12:17 ; 1 தீமோ. 5:8)

இந்த விஷயங்களினிமித்தம், புது சித்தத்திற்கு ஒரு கடினமான வேலை இருக்கிறது என்பதை உடனடியாக காணலாம்.

1. மாம்சீக பலியை நிறைவேற்றுவதின் மூலம் தேவனைப் பிரியப்படுத்துவது.

2. மாம்சீக உறவில் எப்படிப்பட்ட ஆசைகளும், தேவைகளும் உண்டு என்பதையும், எந்த அளவிற்கு அவைகளுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதையும் தெளிவாக பகுத்தறிதல்.

3. மரணபரியந்தம் செய்துள்ள உடன்படிக்கையை மீறாமலும், அதை பயனற்றதாக ஆக்காமலும் இருக்கும்படியாக எந்த அளவிற்கு இந்த ஆசைகளும் தேவைகளும் சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதை பகுத்தறிதல்.

''மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள், ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்''– காலாகாலத்தில் உயிர்த்தெழுதலில் பரிபூரணத்தை அடைவோம். இங்கே இன்னொரு பிரச்சனை தோன்றுகிறது. மாம்சம் தானாகவே அழிவதில்லை; அது புது சிருஷ்டியினால், புது சித்தத்தினால், புது மனதினால் மரணத்துக்குட் படுத்தப்பட வேண்டும். ஆகவே, தேவனுடைய சித்தத்தின்படி சில விஷயங்கள் அனுமதிக்கப்படலாம் என்பதை மாம்சீகம் கண்டு அது இந்த விஷயங்களில் அனுகூலம் பெற முயற்சிக்கும்; அதன்படி ''தேவையான விஷயங்களைத் தவிர'' இன்னும் அதிகமான சிலாக்கியங்களுக்கு முற்படுவது மாத்திரமல்லாது, அதே நேரத்தில் தேவையற்றதாயிருக்கிற சுதந்திரத்திற்கும், உரிமைகளுக்கும் கூட முற்படும், இது உடன்படிக்கையினால் உண்டான பலிக்கு இடையூறு உண்டாக்கும்.

நம்முடைய அழிவுக்குரிய சரீரங்களின் இந்த முயற்சிகள், சில வேளைகளில் பாவத்தை பொருட்படுத்தாததும், சில வேளைகளில் பலியை தடுக்கவும் செய்வதினால், புது சிருஷ்டிக்கு அதிகமான வேளைகளில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறது, சில வேளைகளில் தற்காலிகமாக தடுமாற்றத்தையும் உண்டு பண்ணுகிறது. இப்படியாக படிப்படியாக தனது மாம்சத்தின் ஏமாற்றுகிற தன்மையையும், அதன் பெலகீனங்களையும் குறித்து அதிகமாக கற்றுக்கொள்ளும் வரையிலும், படிப்படியாக அது கிருபையிலும், பரத்திலிருந்து வருகிற ஞானத்திலும் வளரும் வரையிலும், மேலும், தனது சரீரத்தை ஒடுக்கி புதிய மனத்திற்கு கீழ்ப்படுத்த கற்றுக்கொள்ளும் வரையிலும் இந்த பிரச்சனை வருகிறது. (1கொரி. 9:27) மனிதனின் இருதயமும், மாம்சீக சித்தமும் பலியிடப்பட்டிருந்தாலும், ஆனால் உண்மையாக அது கட்டுப்படுத்தப் படவில்லை; ஆனால், அது ''எல்லாவற்றிற்கும் மேலாக கேடுள்ளதாயும்,'' சில நேரங்களில் ''திருக்குள்ளதாயும்'' இருக்கிறது என்ற ஆண்டவரின்

கூற்றை புது சிருஷ்டி கசப்பான அனுபவத்தினால் கற்றுக்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது; மேலும், இது புது சிருஷ்டியின் சித்தம் ஆளுகையில் இருப்பதை அகற்றும்படியாகவும், புது சிருஷ்டியை அழிக்கும்படியாகவும், அதற்கு வசதியாக இருக்கும்படி பழைய சிருஷ்டியை உயிர்ப்பிக்கவும், ஆவியின்படி நடவாமல் மாம்சத்தின்படி நடக்கச்செய்யும்படி மிகவும் பிரயத்தனப்படுகிறது.

தராதரமற்ற இணைப்பு கூறப்படவில்லை

அப்போஸ்தலர் மூலமாக, ஆண்டவர் தெளிவாக கற்றுக்கொடுக்கிற காரியங்களாவன: ஆண்டவருடைய கிருபையும், சிலாக்கியங்களும் எல்லா புது சிருஷ்டிகளுக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. அது அவர்களுடைய வைராக்கியத்தைப் பொறுத்தும், அவர்கள் அவர்மேல் வைத்திருக்கிற அன்பைப் பொறுத்தும், அவருடைய காரியங்களின் மேல் வைக்கும் அன்பைப் பொருத்தும் இருக்கிறது. அழிவுக்குரிய சரீரத்தின் நிறம், பால், இனம் முதலானவை அவர் தன்னுடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பதிலும், அவர்களை மதிப்பீடு செய்வதிலும், இறுதியில் வெகுமதிகளை அளிப்பதிலும் எந்தவிதமான பாகுபாட்டையும் காட்டாது. இந்த விஷயத்தில் பிதாவின் சித்தத்தை அறிந்து, புது சிருஷ்டிகள் அனைத்தும், அதே கருத்தை கொண்டிருக்க வேண்டும்; புதுசிருஷ்டிகள் அனைவருமே கிறிஸ்துவுக்குள் ''சகோதரர்'' என்று மதிக்க வேண்டும்; எல்லாரிடமும் மிகவும் அன்பாய் இருப்பதோடு, எல்லாருக்கும் சேவை செய்ய நாட வேண்டும்; ஆண்டவர் தன்னுடைய காரியங்களுக்காக மிக அதிக அளவு வைராக்கியத்தைக் காட்டியவர்களை, சலுகைகாட்டி கனப்படுத்தினார் என்று அவர்தானே காட்டியபடி அல்லாது மற்றபடி சகோதரர்களிடையே பாகுபாடு காட்டக் கூடாது. இந்த நிறம், பால், இனம் என்பவைகளை ஒதுக்கிவிட்டு பாகுபாடு பார்க்காமல் இருப்பது புது சிருஷ்டிகளாகிய நமக்குரியது; மேலும், நம்முடைய அழிவுக்குரிய சரீரங்களையும், அவர்கள் உலகத்தோடு கொண்டுள்ள உறவையும், ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள உறவையும் ஓரளவுக்கு மாத்திரமே பாதிக்கிறது. ஆகவே, இருபாலாருக்கும் இடையில் உள்ள உறவும், நடத்தையும் உரிய முறையில் புது சிருஷ்டிகளால் காக்கப்பட வேண்டும்.

இவர்கள், உண்மையிலேயே, உலகத்தாரைக் காட்டிலும் அதிக அளவு ஞானமும், முன்யோசனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஏனெனில், அவர்கள் தெளிந்த புத்தியின் ஆவியில் ஜெனிப்பிக்கப் பட்டிருக்கிறார்கள். அதன்படி, ஒரு புது சிருஷ்டியாக இருப்பதினால், மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்க முற்படுகிறபடியால், அவர்களுடைய மாம்ச பெலகீனங்களைப் பொறுத்தவரையில், இருபாலாருக்கும் இடையில் உள்ள சில சரியான நடத்தை, கற்பு, அமைதியாயிருத்தல் போன்றவைகளில் சில எல்லைகளை வரையிறுப்பதைக் குறித்து, உலகத்தாரைக் காட்டிலும் இன்னும் அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாக இருப்பது அவர்களுக்கு நல்லது. புது சிருஷ்டி எந்த அளவுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையை வாஞ்சிக்கிறதோ, புது சிருஷ்டியின் நலனுக்கு எதிராக பாலிய இச்சைகள் யுத்தம் செய்கின்றன என்று உணரும் அளவுக்கு, அதே விகிதாசாரத்தின்படி அவர்களுடைய பாதங்களுக்கு செம்மையான பாதைகளை உண்டு பண்ணவும், அவர்களுக்கும், இச்சைகளுக்கும் இடையில் எத்தனை தடைகளை, உறுதியாக உண்டுபண்ண முடியுமோ அந்த அளவுக்கு புது சிருஷ்டி உலகத்தாரைக் காட்டிலும் அதிகமாக செய்ய முயற்சிக்க வேண்டும்.

இந்த விவாதம் ஜாதி வேறுபாடுகள் பார்ப்பதற்கும் பொருந்தும். மாம்சத்தில் உள்ள உறவுக்கும், ஐக்கியத்திற்கும், ஆவியின் உறவிற்கும் ஐக்கியத்திற்கும் இடையில் பெரிய வித்தியாசம் உண்டு. புது சிருஷ்டியின் நலன்கள் மாம்சத்தில் தனியாக பிரிக்கப்பட்டு இருப்பதால் பொதுவாக பாதுகாக்கப்படுகின்றன என்று நாம் நம்புகிறோம் . ஏனெனில், ஒரு ஜாதியினரின் குறிக்கோள்கள், விருப்பங்கள், வாஞ்சைகள், நிலைமைகள் போன்றவை இன்னொரு ஜாதியினரின் குறிக்கோள்கள் போன்றவை களோடு ஏறக்குறைய முரண்பட்டே இருக்கின்றன. ஆகவே, மனுக்குலத்தின் பல்வேறு ஜாதியினர், அவர்கள் புதுசிருஷ்டிகள் என்றிருக்கும்போது, அவர்களின் ஆவிக்குரிய நலன்களின் தனித்தன்மையின் அளவின்மூலம் நன்கு பாதுகாக்கப்படலாம். புது சிருஷ்டிகளுக்கும் மாம்சத்தில் உள்ளவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசங்கள் இதன் அடிப்படையில் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டால் எந்தவித பிரச்சினையும் இருக்காது. கிறிஸ்து இயேசுவுக்குள் ஆண்களும் பெண்களும் ஒரே சகோதரத்துவத்தில் உள்ளபடியால் அவர்கள் ஒன்றாக சேர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பதற்கு, இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் அப்போஸ்தலரின் வார்த்தைகள் ஆதரவு அளிக்கவில்லை; அதேபோல, இந்த இரண்டு பாலாருக்கும் இடையில் எந்த விதமான அசிரத்தையையும் அது

குறிப்பிடுகிறது என்றும் ஒருவரும் புரிந்துகொள்ளக் கூடாது. ஆனாலும், ஆவிக்குரிய மேன்மையிலும், உறவிலும், ஒருவருக் கொருவரும் மற்றும், எல்லோருக்கும் செய்ய வேண்டிய ஆவிக்குரிய, உலகத்துக்குரிய, கடமைகளை குறித்தும் நமக்கு ஒரு நிர்ணய அளவை அது ஏற்படுத்துகிறது.

திவ்விய ஒழுங்கில் புருஷனும் ஸ்திரீயும்

''ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறன் என்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறார் என்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்'' (1கொரி. 11:3) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இது வேதாகமத்தின் ஒரே மாதிரியான போதனையாகும். அப்போஸ்தலர் கூறுகிறபடி புருஷன் முதலாவதாகவும், அதன்பிறகு ஸ்திரீ அவனிலிருந்து பிரித்து சிருஷ்டிக்கப்பட்டதால் புருஷன் தலைவனாக இருக்க வேண்டும் என்பது திவ்விய நோக்கம் ஆகும். இந்த விஷயத்தைதான் அப்போஸ்தலர் விவாதித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய வார்த்தைகளாவன: ''புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறன். ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலேலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காக (கூட்டாளியாயிருக்கும்படி) சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காக (கூட்டாளியா யிருக்கும்படி) சிருஷ்டிக்கப்பட்டவள். ஆகையால் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்.'' (1கொரி. 11: 7–12)

இது புருஷர்களுக்கும், மனைவிகளுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தினிமித்தம் காணப்படுகிற உறவைப்பற்றிய ஒரு விவாதம் அல்ல, ஆனால் அதைக்காட்டிலும் திவ்விய சிருஷ்டிப்பின்படியும், நோக்கத்தின்படியும், இருபாலாருக்கும் இடையிலுள்ள உறவைப்பற்றிய விரிவான ஒன்று என்று அறியப்படும். இந்த இடத்தில் அப்போஸ்தலரின் கூற்றிலோ அல்லது வேறு இடத்தில் வேதத்திலோ, புருஷன் எஜமானன் என்றும், ஸ்திரீ அடிமை என்றும் சொல்லப்படவில்லை. ஆனால், சில வேளைகளில் இப்படிப்பட்ட தவறான கருத்து வரவேற்கப்படுகிறது. ஆனால் ''கிறிஸ்துவின் சிந்தை'' உடையவர்கள் ஒருபோதும் இந்த கருத்துடையவர்களாக இருக்கமாட்டார்கள் என்று நாம் நம்புகிறோம்.

திவ்விய ஒழுங்கு முறையில் தற்காலத்தில் குடும்பம் என்பது ஒரு குழு ஆகும். மேலும் வயது வந்த எந்த மனுஷனும் ஒரு குடும்பத்தை ஏற்படுத்தும் சிலாக்கியம் பெற்றுள்ளான், அந்த குடும்பத்திற்கு அவன் பொறுப்புள்ள தலைவனாகவும், தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும்.

புருஷன் தலையாயிருப்பது எதேச்சாதிகாரம் அல்ல

கிறிஸ்து சபைக்கும், புருஷனுக்கும் தலையாயயிருக்கிறார் என்றும், மேலும் பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்கு தலையாயிருக்கிறார் என்றும் அப்போஸ்தலர் கூறுவதிலிருந்து, தலையாயிருப்பது எதேச்சாதிகாரத்தைக் குறிப்பிடுவதாக இல்லை என்பது விளங்குகிறது. சபைக்கு குமாரனின் உறவிலும், குமாரனுக்கு, பிதாவின் உறவிலும் எந்தவிதமான எதேச்சாதிகாரத்தையும் நாம் காணவில்லை. தலையாயிருப்பது எப்படியாயினும் ஒரு பொறுப்பை, ஒரு பாரத்தை, ஒரு கரிசனையை, ஒரு தேவையை குறிப்பதாக உள்ளது. இப்படியாக பரலோக தகப்பன் குமாரனுக்கென ஒரு நிலமையை வைத்திருந்தார், ஒரு மகிமையான நிலமையாக அது இருந்தது. திவ்விய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு குமாரன் பாடுகளையும், பலியையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதா யிருந்தது. உண்மைதான், இருந்தாலும் பிதாவானவர் மகா அற்புதமான திட்டத்தை நிறைவேற்றுவதில், தேவையான அளவிற்கு மேல் அதிக கடுமையுள்ளதாக, அதிக முக்கியத்துவம் உள்ளதாக உண்டாகவில்லை. இதில் குமாரன் இப்பொழுது எல்லா அதிகாரத்திற்கும், துரைத்தனங் களுக்கு மேலாகவும், எல்லா நமத்துக்கும் மேலாகவும் உயர்த்தப்பட்டு கனத்துக்குரியவராக இருக்கிறார்; பிதாவினுடைய திட்டத்திற்கு தன்னை பலியாக செலுத்தவும், கீழ்ப்படியவும் அவருக்கு கிடைத்த சிலாக்கியத்தை அவர் ஆனந்தமாக ஏற்றார்; மேலும், அவர் பிரவேசித்துள்ள மகிமையிலும், வரவிருக்கிற மகிமையிலும் கூட களிப்புறுகிறார். சபையின் தலைமை நிலையிலுள்ள ஆண்டவராகிய கிறிஸ்துவின் மேலும் அப்படியாக இருக்கிறது. அவருடைய தலைமை எதேச்சாதிகாரத்தை குறிப்பிடாமல், புது சிருஷ்டியின் அங்கங்கள் அனைவரின் மேல் காண்பிக்கும் பலவித அர்த்தங்களைக் கொண்ட அன்பையும், கரிசனையையும், உதவிபுரிதலையும் குறிப்பதாக இருக்கிறது. இதேபோன்று, புருஷன் மனைவியின்மேலும், பிள்ளைகள் மேலும் தலையாயிருப்பது ஒரு பொறுப்பு, ஒரு விசேஷ கரிசனை, தேவைகளை நிறைவேற்றுவது,

முன்னறிதல், ஒழுங்கு செய்வது, பாதுகாப்பது, வழிகாட்டுவது, முன்மாதிரியாயிருப்பது போன்றவைகளைக் குறிக்கிறது. எல்லா தகப்பன்மார்களும் தங்களுடைய கடமைகளையும், பொறுப்புகளையும், இயற்கையான சிலாக்கியங்களையும் திவ்விய ஒழுங்குமுறைக்குக் கீழ்ப்பட்டு சரியாக காண்பார்களாக. இவைகளைப் பார்த்து அவைகளை உபயோகிப்பார்களாக, அவைகளை அவமதிக்காமல் இருப்பார்களாக.

தாயாகிய ஏவாள்மேலும், மறைமுகமாக அவளுடைய குமாரத்திகள் அனைவர் மேலும், சாபத்தின் அல்லது தண்டனையின் ஒரு பகுதியாக வந்ததை ஆதியாகமத்தில் பின் வருமாறு வாசிக்கிறோம்: ''உன் ஆசை உன் புருஷனைப்பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுக்கொள்ளுவான்;'' இந்த சட்டம் உலகம் பூராவும் எப்படி அமல்படுத்தப்பட்டுள்ளது என்பதை பின்னால் பார்க்கும்போது, அநேக தடவைகளில் அது எதேச்சாதிகார ஆட்சியாய் இருந்திருக்கிறது என்பதை காண்கிறோம்; மனபலமும், விழுந்து போன மனிதனின் ஜென்மசுபாவமும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஆதரவாக இல்லாமல், தீமை விளைவிக்கும்படியாக அநேக முறை பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எல்லா உயர்ந்த மனிதர்களும் பெண்களும், இப்படியான நிலைமையை தடுத்து நிறுத்த வேண்டும்; இப்படிப்பட்ட அதிகார துஷ்பிரயோகம், சிருஷ்டிகரின் பார்வையில் துர்ச்செய்கையாயும், அவலட்ஷணமாயும் காணப்படுகிறது என்று கருதுகிறோம்.

சில புருஷர்களும், சில தகப்பன்மார்களும் தங்களது சரீர மற்றும், மனபலத்தை தவறாக பயன்படுத்தியது, அவர்களுடைய சந்தோஷமற்ற நிலைமையையே உருவாக்கியுள்ளது; மேலும், மனுக்குலத்தின் பொதுவான இழிவான நிலைமைக்கே வழிவகுத்திருக்கிறது; ஏனெனில், ஜென்ம சுபாவத்தின்படி, ஸ்திரீயானவள் இயற்கையாகவே நீதியுள்ள ஒரு தலைமையை நோக்கிப் பார்க்கவும், நாடவும், அவனுக்கு கீழ்ப்படியவும் விருப்பமுற்றாலும் (உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்), தலைமையின் துஷ்பிரயோகமும், ஒருவருக்கொருவர் ஏற்படுத்திய தவறான முன்மாதிரிகளும், முன்னிருந்த, இப்போதிருக்கிற ஸ்திரீயானவளின் அடிப்படையான பண்புகளை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு குறையப்பண்ணியது. அவள் தன்னை காரணமற்ற சுயநலக்காரர்களின் வற்புறுத்தல்களிலிருந்தும், எதேச்சாதிகாரத் திலிருந்தும் காத்துக்கொள்ள வேண்டியிருந்ததின் பொதுவான பலன்கள் முழு மனுக்குலத்திற்கும் ஒழுக்கக்கேடாயிருக்கிறது. அதனிமித்தம்,

இயற்கையான முறைகளும், வேதாகம முறைகளும் பொதுவாக அறியப்பட்டிருந்தாலும், புருஷர்களோ, ஸ்திரீகளோ, தற்போதைய ஒழுங்கற்ற, குலைக்கப்பட்டுள்ள சமுதாய காரியங்களுக்கு ஏற்ப நடந்துகொள்ள அறியாதிருக்கிறார்கள்.

தங்களுடைய சுயநலத்திற்காக துஷ்பிரயோகம்செய்வதற்கு, தாங்கள் தகுதியற்றவர்களாக இருந்தாலும், விழுந்துபோன மனிதர்கள் ஒரு தகுதியைப் பெறவும், தலைமையைப் பெறவும் வெகுவாக முயற்சிப்பதைப் பார்க்கிறோம்; இதே நேரத்தில் தன் குடும்பத்தைப் பாதுகாக்கிறவராக, தன்னுடைய சரியான அதிகாரத்தையும், பொறுப்பையும் உணரவும், அதை மதிக்கவும் தவறுகிறதையும் காண்கிறோம். ஸ்திரீகளும் சீரழிந்து, சுயநலம் உள்ளவர்களாகவும், தவறான, முறையற்ற ஒரு தலைமைக்கு எதிராக முரட்டாட்டம் பண்ணும்படியாக இருப்பதை மாத்திரமல்ல, எல்லா காரியங்களிலும், அதைக்குறித்து விவாதிக்கவும், தர்க்கம் பண்ணவும் முயற்சிப்பதைக் காண்கிறோம்; குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுபவர் என்று தன்னைப்பற்றி கூறாவிட்டாலும், குடும்பத் தலைவரின் அதிகாரத்தை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாவோ அபகரித்துக் கொள்ளவும், குடும்பத்தையும் பணத்தையும் தங்கள் பொறுப்பில் வைத்துக்கொள்ளவும் முயற்சிப்பதையும் காண்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் மேலோங்கும் பொழுதெல்லாம், அவைகள் தேவனுடைய நோக்கத்திற்கும் ஒழுங்கிற்கும் எதிரிடையாக இருந்து, அதே சமயத்தில் அது எவ்வளவுதான் ஞானமுள்ளதாகவும் தேவையானதாக காணப்பட்டாலும், காலாகாலத்தில் அது அதிக கசப்பான கனியைத் தருகிறது. ஆனாலும், திவ்விய ஒழுங்குமுறைகளைக் கைக்கொள்ளுவதின் மூலம்தான் சமாதானத்தைத் தரும் நீதியின் கனிகளை எதிர்ப்பார்க்க முடியும். இப்பொழுதுள்ள சூழ்நிலைகளில் இப்படிப்பட்ட துன்பங்கள் தவிர்க்கமுடியாத ஒன்று என்றும், சுயநலமுள்ள மனிதர்கள் திவ்விய முறைமைகளையும் நோக்கத்தையும் மீறி நடப்பார்கள் என்றும், சுயநலமுள்ள ஸ்திரீகளும் அதேமாதிரி நடப்பார்கள் என்றும் வாக்குவாதம் செய்யலாம். இதன் விளைவாக, பரிபூரண மனிதனுக்கென்று வைக்கப்பட்டுள்ள சமாதானமும், ஒழுங்கும், ஆசீர்வாதமும் அவனுடைய விழுந்துபோன பிள்ளைகளால் ஒருபோதும் உணர்ந்துகொள்ள முடியாது என்றும், திவ்விய திட்டத்தை மதிக்காமல், ஆதாமின் வீழ்ச்சியினால் வந்ததான தற்போதைய குடும்ப துன்பங்களுக்கு தென்படக்கூடிய ஒரே நிவாரணம் இழந்து

போனவைகளை மீட்டுக்கொள்வதுதான். இதற்கு நாம் ஏற்றுக்கொண்டு ஆண்டவருடைய ஜெபத்தில் மனதார இணைகிறோம். ''உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.''

நாம் இப்பொழுது மனுக்குலத்தின் மத்தியில் காணப்படுகின்ற ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கை நிலைநாட்ட முடியுமா என்று யோசிக்கவில்லை, ஆனால் புது சிருஷ்டிக்கு வீடு, குடும்பம் என்பதைப் பொறுத்தவரை வாழ்க்கையில் தகுதியான ஒழுங்குமுறையும், வழியும் பற்றியும் புருஷன், மனைவி, பெற்றோர்கள், பிள்ளைகள் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்து யோசித்துக்கொண்டு இருக்கிறோம். கிறிஸ்தவன் என்ற பதம் அதன் ஆதி அர்த்தத்தையும் அதிகமாக இழந்து, தற்போது அது ஒரு யூதர் அல்லது ஒரு புறஜாதியானைக் குறிக்கும்படியாக பொதுவாக உபயோகிக்கப்படுவதால், கிறிஸ்தவன், கிறிஸ்தவள் ஆகியவர்களின் கடமைகளும் நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் சரியான முறையில் பார்க்க இயலாது இருக்கிறோம். சரியானபடி சொல்லவேண்டுமென்றால் கிறிஸ்தவன் என்ற வார்த்தை ஒரு விசுவாசியையும், நசரேயனாகிய இயேசுவைப் பின்பற்றுகிற ஒருவரையும் குறிப்பதென்றால் அது புது சிருஷ்டியைத்தான் குறிக்க வேண்டும். ஏற்பட்டுள்ள மாற்றம் அவ்வளவு பரவலாக, மிக சாதாரணமாகக் காணப்படுவதால் உண்மையாகவே அர்ப்பணம் செய்து கொண்ட விசுவாசிகளை புது சிருஷ்டியென்று வித்தியாசப்படுத்துவதில் கவனமாயிருக்கிறோம்.

மனுக்குலத்தின் திருமண உறவு என்பது, திவ்விய முறையின்படி கிறிஸ்துவுக்கும் சபைக்கும், மணவாட்டியான அவருடைய சரீரமான சபையைக் குறிக்கும் ஒரு அடையாளமாகவும், விளக்கமாகவும் இருக்கும்படியாக உள்ளது என்று அப்போஸ்தலர் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

''மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்கு தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருஷர்களே, உங்கள்

மனைவிகளில் அன்பு கூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூற வேண்டும்; தன் மனைவியில் அன்பு கூறுகிறவன் தன்னில்தான் அன்பு கூறுகிறான். தன் சொந்த மாம்சத்தை பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையை போஷித்து காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தை போஷித்துக் காப்பாற்றகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கு உரியவர்களாயுமிருக்கிறோம். இதனிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூறுவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புக் கூறக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.'' (எபே. 5:22–33)

நமக்கு முன்பாக நாம் காண்கிற திருமண உறவுகள் பொதுவாக அவ்வளவு பரிபூரணமற்றதாயும், அவ்வளவு திருப்தியற்றதாயுமிருக்கிறது என்ற கருத்து, இஸ்ரயேலர்களின் அநேக பலிகள் பரிபூரணமற்றதாயும், திருப்தியற்றதாயும் இருந்ததைப்போல, திருமணமும் ஒரு நிழலாக ஏற்படுத்தப்பட்டது என்ற கருத்தை மாற்றிவிடாது; ஆனால், அவர்களுடைய பலிகள் உண்மையான பலியின் மாதிரியாக அமைந்திருந்தது. புது சிருஷ்டி நிழலான பூலோக திருமணத்தையும் அதன் பொதுவான கடமைகளையும், பொறுப்புகளையும் இன்றும் அதிகமாக மதிக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் அது கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையிலுள்ள மெய்யான திருமண உறவைக் குறிக்கிறது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இப்படியாக பார்க்கும்போது, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது மனைவிக்கு செய்யவேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும், சபைக்கென மிகவும் உன்னதமான வகையில் முன்மாதிரியாக தன்னையே பலியாக ஈந்த ஆண்டவர் தனது சபைக்காகவும், தற்போதைய, வருங்கால,

தற்காலிகமான, ஆவிக்குரிய நலன்களுக்காகவும் அவர் எடுக்கும் அக்கரையில் காண்கிறான். அதேபோன்று மனைவியும், சபை ஆண்டவருக்கென கொண்டுள்ள கடமைகளையும், பொறுப்புகளையும் உணர்ந்து பார்க்கும்போது அவளுடைய புருஷனுக்கு அவளுடைய துணையாக உள்ள உறவில் ஒரு மனைவியின் உன்னதமான நோக்கத்தை அவள் காண்கிறாள். ஆனால் கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களைத் தவிர மற்றவர்களால், இந்த விசேஷித்த உறவுகளையும், அவைகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதையும் தெளிவாகப் பார்க்க இயலும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே திருமண உறவுக்குள் நுழைகின்ற அனைவரும், தங்களால் இயன்றவரை திவ்விய நோக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிற அதே வேளையில், ஆவியினால் மறுபடியும் பிறந்துள்ள புது சிருஷ்டியைத் தவிர வேறு ஒருவரும் இதோடு சம்பந்தப்பட்ட எல்லா கருத்துக்களையும், நோக்கங்களையும் ஏற்கவும், அப்படியே அவைகளை உணர்ந்து கொள்ளவும், நடைமுறைப்படுத்தவும் முடியாது என்பதைக் காண்கிறோம். ஏனெனில், இவர்களுக்கு மாத்திரம்தான் கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது.

மனுக்குலத்தின் தனி நபர்கள் எல்லோரும் ஒரே அளவுக்கு வீழ்ந்துவிடவில்லை என்றும், சில சமயங்களில், மனைவி தன்னுடைய புருஷனைக் காட்டிலும் திறமையான மனதும் இருதயமும் உடையவளாகக் காணப்படுகிறாள் என்றும் எடுத்துக்கூறப்படலாம். இப்படியான சூழ்நிலைகளில், நல்ல திறமையுடனும், தீர்க்கமுடனும், சாமார்த்தியத் துடனும் காணப்படும் ஒரு மனைவி, ஒரு குடும்பத்திற்கு தலையானவள் என்றும், புருஷன் அவளுக்கு துணையானவன் என்றும் எண்ணப்படக் கூடாதா என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. அப்படி இருக்கலாகாது என்று நாம் பதில் கூறுகிறோம். இப்படிப்பட்ட ஒரு திருமணத்தில் ஒரு திவ்விய ஒழுங்கு புறக்கணிக்கப்பட்டது. ஏனெனில், எந்த ஒரு ஸ்திரீயும் தன்னைவிட பண்பிலும், திறமைகளிலும் குறைந்திருக்கிறவனும், தனக்கு அவன் தலையாயிருக்கிறான் என்று சரியான முறையில் சொல்ல முடியாத ஒரு மனிதனை திருமணம் செய்துகொள்ளக் கூடாது. எந்த மனிதனும் தன்னைவிட உயர்வாக உள்ள எந்த ஒரு ஸ்திரீயையும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. அதே போன்று கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிற எவனும், ஒரு ஸ்திரீ எவ்வளவு மேலான கனமுள்ளவளாயிருந்தாலும், அவள் இன்னும் பூமியில், பூமிக்குரியவளாக இருக்கும்போது அவளோடு பிணைக்கப்படக் கூடாது. புது சிருஷ்டி

ஆண்டவருக்குள் இருக்கிறவளைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது புத்திமதியாகும், அது புறக்கணிக்கப்படக்கூடாது. அதைப் புறக்கணித்ததினால் அது ஆண்டவருடைய ஜனங்களில் அனேகர் மேல் அதிகமான துன்பங்களை கொண்டு வந்திருக்கிறது.

புதுசிருஷ்டிகளின் திருமணம்

இருந்தபோதிலும், திருமண ஒப்பந்தத்திற்குள் நுழைந்த பின்னர், வருந்துவது காலம் கடந்ததாயிருக்கும். இப்பொழுது, அவளுக்கு அல்லது அவனுக்கு இயன்றவரை திருமண உடன்படிக்கையை, தேவவசனத்தின் பிரகாரம், அதன் நோக்கத்தின் பிரகாரம் துல்லியமாக நிறைவேற்றுவதைத் தவிர தேவனின் பிள்ளைக்கு வேறு வழியில்லை. இரண்டு பேருமே புதுசிருஷ்டிகளாக இருக்கும் பட்சத்தில், இருவரும் இணைந்தது சரியான ஒன்றாக இருந்தால், வீட்டைக் குறித்த சரியான ஒழுங்குகளையும், முறைகளையும்பற்றி தீர்மானிப்பதற்கு இரண்டு பக்கத்தில் உள்ளவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்காது; எனினும், இருவரின் இயற்கையான மனப்பக்குவமும், விருப்பங்களும் கவனமாக கவனிக்கப்பட வேண்டும். உண்மையான கிறிஸ்தவ புருஷன் கிறிஸ்துவின் சிந்தை உடையவனாக இருக்கிறபடியால், தன்னுடைய மனைவியை நேசிப்பான், அவளை அன்போடு பாதுகாக்கவும், அவள் மேல் அக்கரைச் செலுத்தவும் அவன் உடன்படிக்கைச் செய்துகொண்டதை நினைவு கூறுவான்; மேலும் அவளுடைய சரீரத் தேவைகளை பூர்த்திசெய்வது மாத்திரமன்று, அவளுடைய இருதய வாஞ்சைகளையும், உணர்வுகளையும் பாதுகாக்க உடன்படிக்கைச் செய்துகொண்டதையும் நினைவு கூறுவான்; இப்படிப்பட்ட ஒரு புருஷன் உணவு, உடை, உறைவிடம் ஆகிய தேவைகளை அளித்ததின் மூலம் தன்னுடைய கடமைகளை செய்து விட்டான் என்று உணரமாட்டான்; ஆனால், அவளுடைய மனம், பண்பு, ஆவிக்குரிய நலன்களையும் கவனிப்பதற்கு தனக்கு கடமை உண்டு என்பதை உணருவான்; மேலும், அவளுடைய நேரம் முழுவதும் வீட்டின் காரியங்களையும், தேவைகளையும் கவனிப்பதில் இருந்துவிடாமல் பார்த்துக்கொள்வான்; தன்னால் இயன்றவரை அவளுடைய மனதும் இருதயமும் வளர்ச்சி பெற முயற்சிப்பதுடன், தன்னுடைய தலைமையை, குடும்பத்தில் அதன் காரியங்களை ஒழுங்குபடுத்த உபயோகிப்பதினால், அவளுக்கு ஆவிக்குரிய ஐக்கியம் கொள்ளவும், சத்தியத்தை படிப்பதற்கும் அவகாசம் பெறவும் முயற்சி செய்வான். இப்படியிருக்கிற ஒரு புருஷன்,

மானிட குடும்பத்தில் உள்ள மற்றவர்களைப் போலவே, தனக்குள்ளும், தன்னுடைய அழிவுக்குரிய சரீரத்தில் அதிகபட்சமோ, குறைந்தபட்சமோ சுயநலம் பாதித்து இருக்கிறது என்பதை மறக்கமாட்டான். மேலும், அவன் ஒரு புது சிருஷ்டியாக இருப்பதினால், இப்படிப்பட்ட ஒரு மனநிலை, மற்றவர்களுக்கு மாத்திரமல்ல, விசேஷமாக தன்னுடைய மாம்சத்தில் மாம்சமும், எலும்பில் எலும்புமாயிருக்கிற தன்னுடைய மனைவிக்கும், குழந்தைகளுக்கும் கஷ்டத்தையோ, தீங்கையோ விளைவிக்காதபடி கவனமாக பார்த்துக்கொள்ளுவான்.

எனவே, குடும்பத்தில் தலைமை ஸ்தானம், அதற்கு கீழாக இருப்பவர்களுக்கு வழிநடத்துதல், ஆலோசனைக் கூறுதல் போன்ற நலன்களை வழங்குவதிலும், அவர்களின் தேவைகளை நிறைவேற்று வதிலும் உபயோகப்படுத்தப்படும்போது, அது எதேச்சாதிகாரம் என்பதிலிருந்து வெகு தூரத்தில் இருக்கிறது. இப்படியாக இருக்கும் புருஷனில் உள்ள அன்பு, தன்னுடைய மனைவியின் விருப்பு வெறுப்புகளையும், அவளுடைய சரியான யோசனையையும் உதறித் தள்ளாது. ஆதாம் ஒரு பூரண மனிதனுக்குரிய எல்லா பண்புகளையும் உடையவனாக இருந்தான் என்பதையும், ஏவாளின் பிரிவு, இந்த பண்புகளில் சில பிரிந்துவிட்டது என்பதைக் குறிக்கிறது என்பதையும் அவன் அறிவான்; மேலும், திவ்விய ஏற்பாட்டின்படி மனபலம், சரீரபலம் அவனுக்குள் இருந்தது என்பதையும், அது புருஷனை குடும்பத்தின் தலைவனாக்குகிறது என்பதை அவன் அறிந்திருந்தாலும், ஸ்திரீக்கு சில விசேஷ குணங்கள் உண்டு என்பதையும் அவன் அறிவான்; அன்பின் ஆவியைச் சேர்ந்த தாழ்மை என்ற குணம் பெண்களுக்கு சிருஷ்டிகர் அருளிச்செய்திருக்கிற விசேஷித்த பண்பு ஆகும்; மேலும், இயற்கையாகவே பெண்களுக்கு இருக்கும் மற்ற பண்புகளினால் தலையாகிய தன்னுடைய இருதய பண்புகள் நிரப்பப்படவேண்டும் என்பதை அவன் அறிவான். ஆகவே, அவனுக்கு இருக்கும் ‘‘தெளிந்த புத்தியின்’’ அளவின்படி அவனுடைய மனைவியின் உதவியையும், அவளுடைய ஒத்துழைப்பையும், அவளுடைய கருத்துக்களையும், அவளுடைய அனுதாபத்தையும், அவளுடைய அன்பையும் விரும்புவான், அதை உயர்வாக எண்ணுவான்.

மனைவியின் யோசனையை பெறுவது என்பது எல்லா விஷயங்களிலும் அவளுடைய கருத்துக்கு கீழ்ப்படிவது என்று

அர்த்தமாகாது; புருஷன் தன்னுடைய மனைவியின் உணர்வுகளுக்கு சரியான, நியாயமான அனுதாபத்துடன் அர்த்தம் கொடுக்கும்படியாக அவைகளை தீர்மானிப்பது, நிதானிப்பது அவனது கடமையாகும். தலைமைப் பொறுப்பு புருஷன் மேலேயே உள்ளது, அதை அவன் தவிர்க்கக் கூடாது. அது திவ்விய ஏற்பாடாகும், அவனுடைய உக்கிராணத்துவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது, காலாகாலத்தில் அதற்கு கணக்கு கொடுக்கும்படியாக அவன் அழைக்கப்படுவான்.

அதேபோன்று, புதுசிருஷ்டியாக இருக்கிற மனைவி, ஆண்டவருக்குள்ளாக திருமணம் செய்து கொண்டிருப்பவள், சரியானபடி யோசனையை உபயோகப்படுத்தியவள், நல்ல துணையாக இருக்கிற படியால், தன்னுடைய மாம்சீக கடமைகளையும், பொறுப்புகளையும், சிலாக்கியங்களையும் உணர்வதில் சிறிதளவு கஷ்டம் மாத்திரம் உள்ளவளாக இருப்பாள். ''மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியா யிருக்கக்கடவள்'' என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மனைவி புருஷனுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் குறைவு பட்டு இருக்கிறாள் என்று மற்றவர்கள் குற்றம் கூறும் வரை அவள் காத்திருக்கக் கூடாது; மாத்திரமல்ல, திருமண உடன்படிக்கையின்படியும், ஒரு மனைவியுடைய கடமைகளைப் பற்றி வேதாகமம் விளக்கமாக கூறியிருப்பதின்படியும் அவள் தன்னை தனக்குள்ள மரியாதையுடன் அவள் நடத்தவில்லை என்று புருஷன் சுட்டிக் காட்டும் நேரம் வரை அவள் காத்திருக்கக் கூடாது. இதற்கு மாறாக, ஒரு மனைவியும் கடமைகளும், பொறுப்புகளும் என்ன என்பதைக் காண தன்னச் சுற்றி பார்க்கும் போது, அவன் தன் புருஷனுக்கு பயபக்தியாய் இருப்பதை பார்க்கக் கடவள். இதற்கு குறைவானது எதுவும் வேதாகமத்தின்படியான திருமண உறுதிமொழியின் அர்த்தமாகாது – உலகத்தின்படியாகவும் மனுஷீக கருத்துகளின்படியாகவும் அது எப்படிப்பட்ட அர்த்தமுடையதாக இருந்தாலும் சரியானது அல்ல என்பதைப் பார்க்கக்கடவள். புருஷனுக்கு பயபக்தியாய் இருப்பது என்பது, அதிக அர்த்தமுடையதாக இருக்கிறது; அது வாழ்வின் எல்லா காரியங்களுக்குள்ளும் வருகிறது. மேலும், குடும்பத்தையும் அதன் நலன்களையும் பற்றிய ஒவ்வொரு செய்கையையும், வார்த்தையையும், சிந்தனையையும் தொடுவதுடன் அதை ஆக்க பூர்வமாக்குகிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு இதே விஷயத்திற்கு நம்முடைய கவனத்தை ஈர்த்து, கிட்டத்தட்ட இதே அர்த்தத்தில் இப்படியாகக்

கூறுகிறார்: "அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் .....சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்."(1பேது. 3:1–6) தன்னுடைய மனைவியை கனம் பண்ணுகிறவன் தன்னை கனம் பண்ணுகிறான், அதேபோன்று புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கிறவள் தன்னை கனம் பண்ணுகிறாள். ஆனால் புருஷனிடத்தில் பயபக்தியாயிருப்பது, அவனை வீட்டின் ஆண்டவனாக, அல்லது எஜமானனாக அல்லது தலைவனாக எண்ணி பயபக்தியாயிருப்பது அடிமைத்தனமாகாது. ஏனெனில், சபை ஆண்டவரிடத்தில் ஒரு அடிமையின் ஸ்தானத்தில் இல்லை; ஒரு அடிமைத்தன பயத்தைக் காட்டவில்லை; ஆனால், ஓர் அன்பின், ஓர் அர்ப்பணிப்பின் பயபக்தியைக் காட்டுகிறது –இது உதாரணமாக இருக்கிறது.

இப்படி புருஷனிடத்தில் பயபக்தியாயிருப்பது, மனைவி தன்னுடைய யோசனையை பயன்படுத்தி, அதன்படியாக தனது சோதனைகள் அல்லது கஷ்டங்கள் அல்லது பாரங்கள் போன்றவற்றை புருஷனுடைய கவனத்திற்குக் கொண்டு வரக்கூடாது என்று குறிப்பிடாமல், அவளுடைய கருத்துக்களை, அவளுடைய நம்பிக்கைகளை, வாஞ்சைகளை வெளிப்படுத்துவது ஒரு அதிகார தோரணையில் இல்லாமல், விட்டுக்கொடுக்கும் பாவனையில் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இப்படிச்செய்வதால் தன்னுடைய புருஷனுடைய தலைமையை ஏற்றுக்கொள்ளுகிறதாயும், இருவருக்கும் பொதுவான நலன்களைப்பற்றிய தன்னுடைய சிந்தனைகளைத் தெரியப்படுத்திய பின்னர், அவனுடைய தீர்மானங்களோடு திருப்தியடையவும் சந்தோஷமாயிருக்கவும் நாடவேண்டும். புருஷன் தன்னிடத்தில் ஒப்படைக்கும் வீட்டுக் காரியங்களை நிர்வகிப்பதில் அவ்வளவு ஞானமும் கவனிப்பும் உள்ளவளாக இருக்கவேண்டும். அதன்மூலம் அவன் நம்பிக்கையை அதிகமாகப் பெறவும், சிறிய அல்லது பெரிய வீடாக இருந்தாலும், அவனுடைய துணையாக நின்று துணைவி செய்யவேண்டிய முக்கியமான கடமைகளை வீட்டில் நிறைவேற்ற

முடியும். அவள் ஒரு உதவியாளராக இருக்கிறாள் என்ற சிந்தனையும், தன்னுடைய புருஷனின் நன்மதிப்புக்காண வாஞ்சையும், சபை தனது ஆண்டவருக்கு காட்ட வேண்டிய உண்மையைக் குறித்தும், அவருடைய நன்மதிப்பை பெரும்படியான வாஞ்சையைக் குறித்தும் அப்போஸ்தலர் கூறும் யோசனையோடு மிகவும் ஒத்திருப்பதைக் காணலாம். ஆனால், சபையில் இருப்பதைப் போன்றே, தலையாயிருக்கிற ஆண்டவரைப் பாராமல் சபையின் வேலைகள், அதன் நலன்களைப் பொறுத்த வகையில் எந்த அளவிலாவது ஆண்டவரை ஒதுக்கிவைப்பது, ஒரு பெரிய குற்றமாயிருப்பது போன்றே, மனைவியும் தன்னுடைய உடன்படிக்கையை மீறுகிறவண்ணமாக பூலோக காரியங்களை நடத்த முயற்சிப்பாளென்றால், எந்த அளவிலாவது, அவள் குடும்பத்தின் தலைவர் என்கிற உறுதிமொழியை மீறி அவரை ஒதுக்கி வைப்பதும் ஒரு பெரிய குற்றமாக இருக்கும்.

இரு புது சிருஷ்டிகளும் நன்றாக இணைந்திராத பட்சத்தில், மனைவி உயர்வானவளாக இருப்பது தெளிவாகக் காணப்படும்போது, குடும்ப காரியங்களில் அனுசரித்துப்போவது மிக கஷ்டமான காரியமாக இருக்கும். வீட்டின் காரியங்களை நடத்துவதிலும், பணம் செலவழிப் பதிலும், பிள்ளைகளை பயிற்றுவதில் மேலான அறிவுள்ளவளாக இருந்தாலும், அவள் வீட்டின் தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்ளவோ, அவள் தன்னுடைய புருஷனை தன்னுடைய பிள்ளைகளில் ஒருவனாக பாவிக்கவோ அல்லது அவளுடைய வேலைக்காரனைப் போன்று அதிகாரம் செலுத்தவோ அவளுக்கு உரிமை கிடையாது. திவ்விய ஏற்பாட்டை இப்படி மீறுவதினால் பண விஷயத்திலோ, அல்லது உலகப்பிரகாரமான காரியங்களிலோ இல்லாவிட்டாலும், மனிதனுக்கு மாத்திரமல்ல, ஸ்திரீக்கும் ஆவிக்குரிய காரியங்களில் அதிக தீமைகளை விளைவிக்கும்.

இப்படிப்பட்ட சூழ்நிலைக்குக் கீழாக உள்ள மனிதன், தனக்கிருந்த சிறிய மனிதப்பிராயத்தை படிப்படியாக இழந்துவிடுவான்; படிப்படியாக எல்லாவற்றையும் மனைவியின் கரங்களுக்குள் போட்டுவிட்டு, அவளுடைய கருவியாகவும், அவளுடைய அடிமையாகவும், ஜீவனத்திற்கு உரியவைகளை வழங்குகிறவனாகவும், அவளுடைய உத்திரவுகளை செயல்படுத்துகிறவனாகவும் ஆகிவிடுவான். இப்படிப்பட்ட நிலைமை புது சிருஷ்டியான ஒருவனுக்கு நன்மை தருவதாக இருக்காது. இப்படியாக

அவனது மாம்சம் தாழ்மைப்படுத்தப்படும்போது, நிச்சயமாகவே அது அவனுக்கு சாதகமாக இருக்காது. மேலும், அவனது ஆவியை அனலற்றதாக்குவதுடன், கிருபையிலும், அறிவிலும், சத்தியத்தின் ஊழியத்திலும் அவனுடைய வளர்ச்சியை தடை பண்ணும். எந்த அளவுக்கு தவறான வழி பின்பற்றப்படுகிறதோ, அதன்படியாக அதிகமாகவோ, குறைவாகவோ, மனைவியின் மேலும் அதன் பாதிப்பு தீமை விளைவிப்பதாக இருக்கும். விஷயம் மனைவியின்மேல் உச்ச அளவில் இருந்தால், அவளுடைய புருஷன் படிப்படியாக அவளை நம்பியிருக்கும் படியான நிலமைக்கு வரும்போது, அல்லது அவள் படிப்படியாக அவனது கரத்தைவிட்டு புருஷனுக்குரிய பொறுப்புகளை எடுக்கும்போது, தாய் என்ற முறையில் தன்னுடைய பொறுப்புகளோடு கூட ஒரு புருஷனின் பொறுப்புகளின் பாரம் அவள்மேல் வருவதை அவள் உணரும்போது, அவளே புருஷனாகவும், மனைவியாகவும், தகப்பனாகவும் தாயாகவும் இருக்கும்படியான அவளது முயற்சியில், அவள் ஏறத்தாழ ''ஒரு வியாபாரம் செய்யும் ஸ்திரீயாக'' மூர்க்கமுள்ளவளாகவும், சுயஉணர்வு கொண்டவளாகவும் ஆவது நிச்சயம். அவளிடம் காணப்படுகிற வலிமையான குணாதிசயத்தைக் கண்டு, அவளுடைய நண்பர்கள் அவளை மெச்சிக்கொள்ளலாம், அவள் செய்கிற காரியங்கள் தவிர்க்க முடியாதவைகள் என்றும் எண்ணலாம், அவர்கள் அவளை உற்சாகப்படுத்தவும், உறுதியான உள்ளம் படைத்த ஸ்திரீக்கு அவள் நல்ல உதாரணமாக இருக்கிறாள் என்றும் கூட அவர்கள் அவளைப் போற்றலாம்; ஆனால், அவள் ஒரு நல்ல பெண்மணிக்கான, நல்ல மனைவிக்கான முறைமைகளில் வளர்ச்சியுற்றிருக்கும்போது அவளை நேசிப்பது போன்று, இப்பொழுது அவர்களில் ஒருவரும் நேசிக்கமாட்டார்கள். மேலும், இப்படியான ஒரு வழியில் நடப்பதால் வளர்ப்பிக்கப்பட்ட மாம்சீக தன்மைகள், அவைகள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியான அவள் மேல் அது சாதகமற்ற முறையில் பிரதிபலிக்கும்; மேலும், அவள் எதிர்பாராத வகையில் ஆவிக்குரிய விஷயங்களில் மந்தமாவதுடன், ஆனால் சபைக்கடுத்த காரியங்களில் அதிகமான சுயஉணர்வுள்ளவளாக இருப்பாள்.

இரு புது சிருஷ்டிகள் திருமணத்தில் தவறாக இணைந்திருக்கும் இப்படியான விஷயத்தில் எடுக்கப்படவேண்டிய சரியான வழி என்னவென்றால் புருஷன் தனக்குள்ளாகவே சொல்ல வேண்டியது: நான் திவ்விய ஏற்பாட்டிற்கு மாறாக ஒரு மனைவியை தேர்ந்தெடுத்தேன்;

இப்படியாக வீட்டில் சந்தோஷம் இருக்காதபடி பெரிய ஆபத்துக்குள் வந்து விட்டேன்; எனக்கு இப்போது இருக்கிற ஒரே வழி, என்னால் இயன்றவரை ஒரு உண்மையான புருஷனுக்குரிய நிலையை அடைய முயற்சிப்பதுதான். அதாவது என்னால் இயன்றவரை, ஆண்டவரின் உதாரணத்தின்படி அமைத்துக் கொள்வதுதான்; நான் என்னுடைய ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும், செயலைக் குறித்தும் நான் இன்னும் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; இந்த வீட்டின் தலைவனுக்கான கடமைகளை அதிகமாக கூடுமானவரை செய்துமுடிக்கத்தக்கதாக, பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தை நான் அதிகமாக ஊக்கத்துடன் தேடும்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; ஏனெனில், இயற்கையாகவே இந்த கடமைகளை செய்துமுடிக்க தகுதியற்றவனாக இருப்பதை உணருகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் உள்ள மனைவி தனக்குள்ளாகவே இப்படியாக சொல்ல வேண்டும்: நான் ஆண்டவருடைய திவ்விய ஒழுங்கைக் கடைப்பிடிக்காமல் தவறான இணைப்புக்குள் வந்தபடியால், என்னால் புருஷனுக்கு பயபக்தியாய் இருக்க முடியாமல் இருக்கிறேன்; ஆனால், இயற்கையாகவே நான் பெற்றிருக்கும் திறமையில் நான் அவரைக் காட்டிலும் உயர்ந்தவள் என்பதை என் உள்ளுணர்வுக்குள் காண்கிறேன்; இந்த விஷயத்தில் சிறப்பானதை நான் செய்யவேண்டும்; எனது பங்கை நான் உண்மையுடன் செய்யவேண்டும்; நான் எனது புருஷன் எந்த அளவுக்கு குறைவுபட்டிருக்கக் காண்கிறேனோ அந்த அளவுக்கு நிதானத்தை உபயோகிக்க நாடுவேன்; மேலும், அவரை எப்படி உயர்த்த முடியும், அவருக்கு எப்படி உதவி செய்ய முடியும், அவரை எப்படி நல்ல கணவனாக மாற்றமுடியும் என்பதை அறியும்படிக்கு பரத்திலிருந்து வருகிற ஞானத்திற்காக நான் ஜெபிப்பேன்; மேலும், அவருடைய திறமையை கூடுமானவரை அதிகரிக்கும்படியாக ஜெபிப்பேன்; இதன்படி அவருக்கு என் அன்பையும், பயபக்தியையும் நான் அதிகரிக்க முடியும்; என்னுடைய திருமண உடன்படிக்கையின்படி என்னுடைய கடமை இதைத்தவிர வேறு ஒன்றுமில்லை. அது ஆண்டவருக்கு செய்யப்படுவது போன்று உண்மையுடன் செய்யப்படும். அவருடைய பெலகீனங்கள், தீர்மானம் எடுப்பதில் அவர் குறைவு பட்டிருப்பதைப் பொருத்தவரையில் வெளியாட்களிடமிருந்து நான் அதை மறைப்பது மட்டுமல்லாமல், என்னால் இயன்றவரை என்னிலிருந்தும் மறைத்துக்கொள்ளுவேன். அவைகளை என்னுடைய புருஷனுக்கு அறிவிக்கும்போது என்னுடைய உயர்வான திறமைகளைப்பற்றி பேசுவதையோ, குறிப்பிடுவதையோ

தவிர்க்க முயற்சிப்பேன். ஏற்ற காலத்தில் அவருடைய சொந்த பிழைகளே, நான் எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை அவருக்கு காட்டும் என எதிர்பார்ப்பேன். ஆனாலும் அவைகளை அவர்மேல் திணிக்கமாட்டேன் அல்லது வற்புறுத்தமாட்டேன். ஆனால் அவருக்கு ஏற்ற அன்பான முறையில் சாதரணமாக எடுத்துக்கூறுவேன். என்னுடைய எதிர்பார்ப்பு எப்படி இருக்குமென்றால், வெகு சீக்கிரத்திலேயே என்னுடைய யோசனையை நாடுவார், அதற்கு அவருடைய வாழ்வின் எல்லா காரியங்களிலும் அதிக முக்கியத்துவம் கொடுப்பார் என்பதே. இப்படியாக கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் உள்ள திவ்விய உறவின் முன்மாதிரியின்படி ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடமும் நாங்களும் அந்த உறவிற்கு இசைவாய் வளர முடியும். தாழ்மையை வளர்ப்பதிலும் திவ்விய ஏற்பாட்டிற்கு கீழ்ப்படிவதிலும் நல்ல மனைவி என்பதினால் நான் ஆசீர்வதிக்கப்படுவேன். நான் எனது புருஷனுக்கு அவரை உயர்த்தும்படியான முயற்சிகளில் அவர் ஆசீர்வதிக்கப்படுவார். இதன்படியாக, தவறாக இணைந்தபோது மிகவும் நலனற்றதாக தோற்றமளித்தது, இப்போது முதன்முறையாக ஆண்டவருடைய கிருபையால், அவருடைய அறிவுரைகளைப் பின்பற்றுவதால், அப்போஸ்தலர் கூறியிருக்கிறபடி திவ்விய நிலைமைக்கு அருகாமையில் இருவரையும் கொண்டு வரும்.

மேலே சொல்லப்பட்டதிலிருந்து இன்னும் வித்தியாசமான சம்பவமும் நடக்க சாத்தியமுண்டு. அதாவது, மாம்சத்தின்படி நன்றாக இணைந்த இரு புது சிருஷ்டிகள், பல வருடங்கள் ஐக்கியமாயும், உதவியாயும் இருந்து, மிக நன்றாக வாழ்ந்து, பிறகு தவறான திருமண ஜோடியாகிவிடுகின்றனர். இப்படி நல்ல முறையில் ஆரம்பிக்கப்பட்ட வாழ்க்கை, இப்படியான ஒரு முடிவுக்கு வருவதற்கு காரணம், அதில் ஒருவர் அல்லது இருவருமே, முழுமையாக இல்லாவிடினும் ஒரு பெரிய அளவிற்கு அன்பின் பரிசுத்த ஆவியை இழந்துவிட்டதேயாகும்; மேலும், புருஷர்கள் மனைவிகளுக்கும், மனைவிகள் புருஷர்களுக்கும் செய்யவேண்டிய கடமைகள் என்று கூறுகின்ற முழு திவ்விய நியதிகளையும், அப்போஸ்தலரது கட்டளைகளையும் தவறவிட்டு விட்டதேயாகும். தவறு புருஷனிடம் இருந்தால், அவன் மனைவியை போஷித்து காப்பாற்றாவிட்டால், அதற்கும் மாறாக இருதயத்திலோ அன்பிலோ, அல்லது உண்மையிலேயே அவளை கைவிட்டு விட்டால், அவன் ஆண்டவரைவிட்டும், அவருடைய ஆவியின் வழிநடத்து

தலிலிருந்தும், ''முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளினாலும் நிறைந்ததாயிருக்கிற பரத்திலிருந்து வருகின்ற ஞானத்திலிருந்து'' வெகுவாக அகன்று விட்டான் என்பதைக் குறிக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், சீர்பொருந்துதல் ஏற்படும்வரை இப்படிப்பட்டவனை ''ஜெயங்கொள்ளுகிறவன்'' என்று ஆண்டவர் ஏற்றுக்கொள்ளுவார் என்று நாம் எண்ணமுடியாது.

இல்லையென்றால், பிரச்சனை மனைவியோடு இருக்கலாம். அவன் தலைக்கனம் உள்ளவளாக, மூர்க்கமுள்ளவளாக, தன்னைப் பற்றியே சிந்திப்பவகளாக ஆகி, படிப்படியாக புருஷன் மேல் பயபக்தியாய் இருக்க தவறிவிடலாம்; அவள் அவனைப் பற்றி தவறாக கூறவும், அவனை கைவிட்டு விடவும், அவனுக்கெதிராக எல்லா பொய்யான காரியங்களையும் கூறலாம். காரியங்கள் இப்படி காணப்படுகையில், அவைகள் ஒரு தவறான இருதயநிலையையும், அது தேவவசனம் கற்றுக் கொடுத்ததிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதையும் காட்டும்; நிச்சயமாகவே, அது ஆவிக்குரிய சீரழிவை– எவ்வளவுதான் வெளிப்புற தேவ பக்தியைக் கடைபிடித்தாலும்– காட்டுவதாயிருக்கும். இப்படிப்பட்ட ஒருத்தி, பரலோக மணவாளன் தன்னை அங்கீகரிப்பார் என்ற ஒரு நம்பிக்கையோடு அவர் முன்பாக நிற்க, நிச்சயமாகவே தகுதியற்ற ஒரு மோசமான _நிலைமையில் இருப்பாள். பூலோக மணவாளனுக்காக எடுக்கப்படுகிற இப்படியான ஒரு முறை, நிச்சயமாகவே சபை தன்னுடைய ஆண்டவருக்கு செய்ய வேண்டிய கடமைகளில் மிகவும் குறைவுபட்டதை குறிப்பதாக இருக்கும். அவள் காண்கிற பூலோக புருஷனுக்கு உண்மையில்லாதவளாக இருந்தால், அது நிச்சயமாகவே, காணாத பரலோக மணவாளனுக்கு உண்மையில்லாதவளாக இருப்பதைக் குறிக்கும்.

ஒருவர் புது சிருஷ்டியாயும், மற்றவர் புது சிருஷ்டியாயில்லா திருக்கும்போது, அவர்கள் இருவருக்கும் இடையில் உள்ள புருஷன் மனைவி என்ற பூலோக உறவு சிலருக்கு பெரிய குழப்பமான காரியமாயிருக்கிறது, மேலும் அனேகர் இப்படியான நிலைமையில் இருக்கின்றனர். மாம்சத்தின்படியாக இருவருமே நன்றாக இணைந்த வாழ்க்கை நடத்தும் போது உள்ள பிரச்சனையே போதுமானதாயிருக்கும். ஆனால் இருவரும் சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும்

நல்ல திருமண ஜோடிகளாக இல்லாவிட்டால் பிரச்சனைகள் பெருகுகின்றன. புது சிருஷ்டியான புருஷனும், மனைவி உலகப் பிரகாரமான ஆவி உடையவளாக இருக்கும் போது, அவனுடைய உண்மையான மதமும், அவனுக்கு இருக்கிற தெளிந்த புத்தியும், எல்லா விஷயங்களிலும் படிப்படியாக தெரிய வருவதும், எல்லா விஷயங்களிலும் அது நிதானத்தை கற்றுக் கொடுப்பதும், அவனுடைய உலகப்பிரகாரமான மனைவிக்கு இயற்கையிலேயே ஒரு நல்ல குணாதிசயமும், நேசிக்கிற சுபாவமும் இருக்குமென்றால், அவளுடைய நன் மதிப்பில் அவனை படிப்படியாக உயர்த்தும். அவளுக்கு அவன் அளிக்கும் நியாயமான கவனிப்பு, அவளுடைய சுயாதீன மனச்சாட்சியோடு அவன் வைத்திருக்கும் ஐக்கியம், கொள்கையின் மேல் வைத்திருக்கும் அவனடைய பயபக்தி இவையெல்லாம் ஒன்றாக சேர்ந்து அவர்களை சந்தோஷமான ஜோடியாக்கும். ஆனால், அவனுடைய மனைவியில், எல்லா ஐக்கியங்களைக் காட்டிலும் அவன் அதிகமாக, உயர்வாக மெச்சிக்கொள்ளக் கூடிய ஒரு புது சிருஷ்டியின் ஆவிக்குரிய ஐக்கியத்தை அவன் காணமுடியாது. ஆனால் இப்படி நல்ல குணமுள்ள ஸ்திரியின் சார்பில் ஏறெடுக்கப்படும் அவனுடைய ஜெபங்கள், அவனுடைய முன்மாதிரியான ஜீவியம், அவன் சத்தியத்தை கவனமாக அவளுக்கு எடுத்துக் கூறுதல் ஆகியவை இப்படிப்பட்ட ஒரு மனைவியை ஆண்டவருக்குள் வெற்றிகரமாக கொண்டுவர முடியும்; மாத்திரமல்ல, அவளை ஒரு ஆவிக்குரிய, இயற்கையான நல்ல ஒரு துணையாக மாற்றும். இதன்படி, அவனுடைய திருமண கடமைகளில் காணப்பட்ட அவனது பொறுமையும், உண்மையும், அவனுக்கு பெரிய பரிசை திரும்பக் கொண்டுவரலாம்; அதே வேளையில், அவள் கொள்கைகளில் உண்மையாய் இருப்பதும் அதே சமமான விதத்தில், அவளுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வரலாம்.

மனைவி புது சிருஷ்டியின் ஒரு அங்கமாகவும், புருஷன் உலகத்தின் ஆவியை உடையவனாகவும் இருந்தால், அவர்கள் இருவரும் நன்கு இணைந்து வாழ்ந்தால், பிரச்சினை இதே போன்று மிக சுலபமாக தீர்க்கப்படக் கூடியதாகும். நல்ல குணமுள்ள புருஷன், உலகப்பிரகாரமாக வாழ்ந்தாலும், அவனுடைய மனைவியின் மனசாட்சி, நிதானத்துடன் செயல்படுவதை உணருவான். ஒரு புருஷன் என்கிற முறையில், அவளுக்கு அவன் விரும்புகிற, மனத்திற்குரிய சன்மார்க்கத்திற்குரிய, ஆவிக்குரிய தருணங்களைக் கொடுக்கும்படி, ஒரு மனைவி என்கிற முறையில் அவள்

விருப்பப்படுகிற எல்லாவற்றையும் கொடுப்பான், ஒன்றைத்தவிர, அது அவளுடைய புருஷனோடு ஆவிக்குரிய ஐக்கியமாகும். நாம் பார்த்துக் கொண்டிருக்கிறபடி இப்படியான நல்ல குணமுள்ள புருஷனுக்கு, வாழ்க்கையின் எல்லா கடமைகளிலும் அவனுடைய மனைவி அவனுக்கும் ஆண்டவருக்கும் உண்மையாக இருப்பது, காலாகாலத்தில் புருஷனும் தன்னை ஆண்டவருக்கென அர்ப்பணம் செய்யும்படியான ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். அவளுடைய புருஷன் எவ்வளவுதான் நல்ல குணமுடையவனாக இருந்தாலும், மனைவிக்கு உலகப்பிரகாரமான அல்லது மதசம்பந்தப்பட்ட நல்ல வாஞ்சைகள், ஆர்வங்கள் இருந்தாலும் கூட அவைகளை அவன் மெச்சிக்கொள்ளமாட்டான். இப்படியான விஷயத்தில் எல்லா விஷயங்களிலும் நிதானமாயிருக்க வேண்டும் என்று ஆண்டவர் தன்னுடைய ஜனங்களுக்கு கொடுத்த யோசனையை கவனிக்க வேண்டும். அவள் தன்னுடைய புருஷனின் தாராள மனப்பான்மையை எண்ணிப்பார்க்க வேண்டும். மனசாட்சியை அல்லது கொள்கை சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும் விட்டுக்கொடுக்காமல் இருக்கிற வேளையில்தான், ஆண்டவரால் ஒரு மனைவியின் கடமைகளில் ஒன்று என்று அறியப்பட்டுள்ளதான, அவளுடைய நட்பு அல்லது ஐக்கியத்தின் ஒரு அளவை அவனுக்குக் கொடுக்க வேண்டும்; இப்படிச்செய்வது அவள் சபையின் சில கூட்டங்களில் பங்குபெறுவதை வீணாக தடை செய்யாதிருக்கும்; ஆனால், இப்படிச் செய்யும்போது –அவளுடைய புருஷனை பிரியப்படுத்த வாஞ்சையாயிருக்கும்போது, அவளுடைய மனசாட்சியை மீறாமலும், அதனால் அவளுடைய பரலோக மணவாளனாகிய ஆண்டவருக்குரிய பொறுப்புகளையும், கீழ்ப்படிதலையும் அது தடைசெய்யாதபடி அவள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; சபை கூடிவருதலை நாம் விட்டுவிடாதிருக்க வேண்டும் என்ற கட்டளையை அவள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் இங்கே வற்புறுத்துவதெல்லாம், அவளுடைய புருஷனுக்கென்று நிதானத்தையும், கவனம், போன்றவற்றையும் அவள் கையாளவேண்டும் என்பதுதான், அதன்மூலம் அவனோடு ஒரு குறிப்பிட்ட அளவு நேரம் செலவிடும்படியாக அவளுடைய நேரத்தை பிரிக்கவும், உபயோகிக்கவும் முடியும்.

இரண்டு பேரும் சமமில்லாத நிலையில் பிணைக்கப் பட்டிருக்கும்போது, ஒருவர் அவிசுவாசி, மற்றவர் புது சிருஷ்டியாக இருக்கும்போது, அதற்கும் மேலாக அவர்கள் இருவரும்

மாம்சத்தின்படியாக தவறான திருமண ஜோடியாக இருக்கிறார்கள். அதன்படி மனைவி அறிவில் உயர்ந்தவளாகவும், புருஷன் குறைவுபட்டவனாகவும் இருக்கும் பட்சத்தில் இந்த வாழ்க்கை மிகவும் சிக்கல் உள்ளதாக இருக்கிறது, ஆகவே விசுவாசி அதிக ஞானமும், கிருபையும் உள்ளவராக இருப்பது அவசியம். இப்படியான சூழ்நிலைகளில் உள்ளவர்களுக்கு அப்போஸ்தலர் விசேஷமாக கண்டிப்புடன் கூறுவதாவது: "அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்கு சம்மதமாயிருந்தால், அவள் அவனை தள்ளிவிடாதிருக்கக்கடவள் ..... ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில் சகோதரனாவது, சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல, சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித்தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித்தெரியும்? " (1கொரி. 7:13–16)

விசுவாசியின் கடமையைக் குறித்து தெளிவாக்கப்பட்ட ஒரு விஷயம் என்னவெனில், அவன் கடமையைச் செய்வதுடன், வீட்டின் சமாதானத்தையும், பொது நலன்களையும் பாதுகாத்துக்கொள்ளும் படியாக, எல்லா கனத்துடனும், சரியான விதத்தில் அவனுடைய கடமையைச் செய்ய நாடவேண்டும். பிரிந்து போவதற்கு உண்மையாகவே காரணம் இருப்பின், விசுவாசி அந்த காரணம் தன்னில் காணப்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். அவனுக்குள் இருக்கும் கிறிஸ்துவின் ஆவி அவனை ஒவ்வொரு நாளும், அதிக சாதுவாக, அதிக தாழ்மையுள்ளவனாக, அதிக சமாதானமுள்ளவனாக, அதிக முன்யோசனை உள்ளவனாக, அதிக ஞானமுள்ளவனாக, அதிக பொறுமையுள்ளவனாக, அதிக நீடிய பொறுமையுள்ளவனாக, அதிகமாக நேசிக்கிறவனாக, மாற்றுவதாக இருக்கும். _இருந்தாலும், இது எல்லா விஷயங்களிலும் சூழ்நிலையை மாற்றுவதாக இருக்காது. சில வேளைகளில் அவிசுவாசி மிகவும் அற்ப குணமுள்ளவனாகவும், முற்றிலும் கடுகடுப்புள்ள வனாகவும் இருப்பான்; மேலும், தேவன் பார்வோனோடு தொடர்புகொண்ட விதம் அவனுடைய இருதயத்தை கடினபடுத்தினது; அதுபோல, சில வேளைகளில் அவருடைய பிள்ளைகளில் உள்ள தேவஆவி, ஆவிக்குரிய எல்லா கிருபைகளிலும், கனிகளிலும்,

அவர்களுடைய முழு திறமையின்படி, வெளிச்சம் கொடுக்கும்போது, இருள் வெளிச்சத்தின்மேல் வைத்திருக்கிற வெறுப்பைப் போன்று எதிர்ப்பை சந்திக்கும். இதைக்குறித்து ஆண்டவர், ''பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப் படாதபடிக்கு ஒளியினிடத்திற்கு வராதிருக்கிறான்'' (யோவா.3:19,20) என்று கூறுகிறார். இப்படிப்பட்ட விஷயங்களில் பிரிந்துபோவது ஏற்படலாம், அப்போஸ்தலர் கூறியுள்ளதுபோன்று, அது உலகத்தில் உள்ள நீதிமன்றம் விவாகரத்து வழங்கினாலும், வழங்காவிட்டாலும் பிரிந்து போகும் நிலை ஏற்படலாம். எப்படியிருந்தாலும் நம்முடைய ஆண்டவர் குறிப்பிட்டுள்ளபடி தன்னுடைய மனைவி விபச்சாரத்தினிமித்தம் தள்ளிவிடப்பட்டு, அதினிமித்தம் அவளுக்கு விவாகரத்து வழங்கப்பட்டிருக்காவிட்டால், புதுசிருஷ்டி மறுபடியும் திருமணம் செய்துகொள்வதற்கு சுதந்திரம் கிடையாது. (மத்.19:9)

மேலே சொல்லப்பட்ட பகுதியில் அப்போஸ்தலர் கூறுகிறார்: ''ஆகிலும் அவிசுவாசி பிரிந்து போனால் போகட்டும்.'' ஆனால் ஒருவர் பிரிந்துபோவது ஒரு புருஷனுக்கோ அல்லது மனைவிக்கோ மறுபடியும் இன்னொருவரை திருமணம் செய்து கொள்வதற்கு சுதந்திரம் கொடுக்கிறது என்பதாக புரிந்து கொள்ளப்படக்கூடாது. இது தேவ அனுக்கிரகத்தால் வாழ்க்கையின் ஒரு சூழ்நிலையில் பிரிந்துபோவது அனுமதிக்கப்படுகிறது என்று விசுவாசி கருத வேண்டும். இதை தேவன் அவனுடைய நலனுக்காக அதிகமாக விட்டுக்கொடுக்கிறார், இதை இருக்கிறபடியே ஏற்றுக்கொண்டு, இதே மாதிரி ஆண்டவருடைய ஊழியத்தில் பயன்படுத்தபடும்படியான தருணங்களும் எதிர்பார்க்கப்பட வேண்டும். விசுவாசி பிரிந்து போகிறவராக இருக்க மாட்டார் என்று அப்போஸ்தலர் ஆணித்தரமாகக் கூறினாலும், மனிதர்களுக்கு என்று உள்ள நீதி மன்றங்கள், ''அனுகூலமான பிரிவு'' என்று ஒன்று இருக்கிறது என்று தீர்மானிப்பதில், ஞானமாக புரிந்து கொண்டுள்ளார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். எப்படியெனில், அவன் தன்னுடைய வாழ்க்கைத் துணையை, உண்மையிலேயே புறக்கணித்துச்செல்லாமல், பிரிந்து இருக்கலாம். அவிசுவாசியான மனைவி வீட்டில் உள்ள சுமுகமான நிலைமையை அழித்துப்போடும் படியாகவும், வீட்டை ஒரு உண்மையான உத்தரிக்கிற ஸ்தலமாக ஆக்கும்படியாகவும், புருஷனுடைய மத புஸ்தகங்களை அழிக்கும்படியாகவும், அதன்மூலம் அவனால் வாசிக்கவோ அல்லது படிக்கவோ அல்லது யோசிக்கவோ முடியாதபடி

முயற்சித்து, பிள்ளைகள் மத்தியில் வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தி, பிள்ளைகள் அதனால் அவர்களுடைய தகப்பனுடைய வார்த்தையை துச்சமாக மதிக்கவும், அவனை அவமதிக்கவும் யோசனையாக அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவும் செய்யலாம்; இப்படிப்பட்ட சம்பவங்கள் உண்மையாகவே நடந்திருக்கிறது.

இப்படிப்பட்ட ஸ்திரீ உண்மையாகவே தன்னுடைய புருஷனை விட்டு பிரியாதிருக்கலாம், ஆனால் ஒரு அற்பத்தனமான எண்ணத்துடன் அவனை தன்னுடைய அடிமையாக உபயோகப்படுத்த பிரியப்படலாம். அவனுடைய உழைப்பின் மூலம் வாழ்க்கையின் சுகத்தை அவள் அனுபவிக்கும்படியாக அவள் அப்படிச் செய்யலாம். மனுஷர்களுக்குள்ள சட்டங்கள் இப்படியாக செயல்படுவதை பிரிதலுக்கு உரியது என வகையறுத்துள்ளன; அதாவது திருமண உடன்படிக்கையையும், கடமைகளையும், வாழ்க்கையின் சரியான நியாயமான கடமைகளையும் விட்டு விலகுதல் என்று அவைகள் வகையறுத்துள்ளன. இப்படிப்பட்டவர் துணையாக இருப்பதற்கு பதிலாக தீமை விளைவிக்கிறவராகிறார். இப்படிப்பட்ட ஒரு விஷயத்தில், ஒரு புருஷன் தன்னைத்தானே விலக்கிக் கொண்டு, தாயின் தவறான வழியினால் கெட்டுப்போகாத குழந்தைகளை தன்னோடு அழைத்துச்சென்று தனியாக குடும்பம் ஏற்படுத்துவதிலும் முழு நியாயம் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இப்படிப்பட்ட ஒரு மனைவிக்கு அவன் செய்ய வேண்டிய கடமைகள் அவளுடைய இப்படிப்பட்ட வழிகளினால் ஏற்கனவே முறிந்து விட்டன. அவள்தான் திருமண ஒப்பந்தத்தை முறித்துவிட்டு பிரிந்துவிட்டாள். அவளுக்கு உதவி செய்வதை அவன் நிறுத்தும்போது, அவளுடைய வழிகள் தான் அந்த நிலையை உருவாக்கியதை அவன் உணருகிறான். ஆனாலும், அவள் எந்த நேரத்திலாவது மனஸ்தாபப்பட்டால், அவன் அவளுடைய குற்றங்களை எல்லாம் மன்னிக்கும் அளவிற்கு அவன் பெரிய மனதுள்ளவனாய் இருக்கவேண்டும்; மேலும், மறுபடியும் சரியான முறையில் ஒரு குடும்பத்தை அமைக்கும்படி அவளை மன்னிக்க தாராள மனதுள்ளவனாய் இருக்க வேண்டும். இந்த யோசனையில் எதுவும், பொறுமையற்ற ஒரு நிலையை உண்டாக்குவதற்கோ, அல்லது குற்றம் கண்டுபிடிக்க உடனே முயற்சிக்கவோ, அல்லது தவறிழைக்கப்பட்டதாக எண்ணுவதற்கோ உபயோகப்படுத்தக்கூடாது. சகிக்கக்கூடிய எல்லா காரியங்களையும் சகிக்க வேண்டும் என்று அன்பு வற்புறுத்துகிறது. தீமைக்கு பதில் தீமை வார்த்தையினாலோ அல்லது செய்கையினாலோ செய்யப்பட்டிருந்தால்

தவறுகள் ஈடு செய்யப்பட்டுவிட்டன என்று எண்ணி மன்னிக்கப்பட வேண்டும்.

மற்ற சமயங்களில் பிரிந்து செல்லுதல் அவிசுவாசியான புருஷனால் உண்டானதாக இருக்கலாம். அவனுடைய மோசமான பொல்லாத குணம், அவனுடைய மனைவியின் சரீர சுகத்தையும், சந்தோஷத்தையும், குறித்து கவலைப்படாதவனாக, விசேஷமாக அவளுடைய மதசம்பந்தமான கருத்துக்களை எதிர்ப்பவனாக மாற்றலாம். நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளபடி, விசுவாசி எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ளும் படியாக, அதன் மூலம் பயன் அடையும்படியாக இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அன்பின் ஆவியாகிய கிருபையை பெற்றுக்கொள்ளும்படி முயற்சிக்க வேண்டும்; ஆண்டவருடைய ஆவியை அதன் எல்லா கிருபைகளிலும் வளர்த்துக்கொள்ளுவதன் மூலம் இது செய்யப்பட வேண்டும். ஆனால் எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு, இந்த எல்லைக்கு அப்பால் செல்வது தகுதியாகாது. இந்த குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால், அநீதியான துணையின் மேல் உள்ள செல்வாக்கு உதவி செய்வதற்கு பதில் தீமை செய்வதாக இருக்கும். ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட விஷயத்தில் எந்த அளவுக்கு தாழ்ந்து போக முடியும் என்பதை தானே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய ஆவியினாலும், வசனத்தினாலும் முற்றிலுமாக பயிற்றுவிக்கப்பட்ட, அவனுடைய சொந்த மனசாட்சிதான் தீர்மானிக்க வேண்டும். கிருபையில் ஓர் அளவுக்கு வளர்ந்துவிட்ட பின்னர், சோதனைகள் அதிக கடுமையானதாக இருக்கலாம். தாங்க முடியாத அளவுக்கு துன்பமும் தீமையும் வந்தாயிற்று என்று நினைக்கும்போது, அதை தீர்மானிக்கும்படி, நீடிய பொறுமையுடன் கூடிய சகிப்புத்தன்மையும், அதிமான தெளிந்த புத்தியின் ஆவியும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள, பரத்திலிருந்து வருகிற ஞானத்தை நாம் ஊக்கமாக கேட்டுப்பெற வேண்டும். (யாக்.1:5)

புருஷனுடைய கடமைகளைக் குறித்தோ அல்லது ஒரு மனைவிக்கு இருக்கக்கூடிய சரியான சுதந்திரத்தைக் குறித்தோ அறிந்திராத அற்பமான மூர்க்கத்தனம் நிறைந்த கணவன்மார்கள் உள்ளனர். அவர்களுக்கு மனைவியைக் குறித்த எண்ணமெல்லாம், அவள் தன்னால் அமர்த்தக்கூடிய ஒரு வேலைக்காரியைவிட சிறந்த அற்பமான அடிமை அல்லது ஒரு விபச்சாரிக்கு பதிலாக கிடைத்த இளக்காரமான பெண் என்பதுதான்.

இப்படி ஒரு புருஷனிடமிருந்து கிடைக்கும் மோசமான நடத்தை, அவனால் கைவிடப்பட்டதைக் குறிக்கும். தேவனுடைய பிரமாணம் குறித்து அப்போஸ்தலரால் சொல்லப்பட்டதை சரியானபடி புரிந்து கொள்வோமானால், இப்படிப்பட்ட மனிதனுக்கு கணவன் என்று பெயர் கொடுக்கப்பட்டது தவறு என்று நாம் நம்புகிறோம், மனிதர்களின் சட்டம் குறிப்பிடுவதற்கு முற்றிலுமாக ஒத்திருக்கிறது என்று நாம் நம்புகிறோம். ஏனெனில் அவன் தன் மனைவியோடு முழு புத்தியோடும், உண்மையான நோக்கத்துடனும் ஒரு திருமண உடன்படிக்கையைச் செய்து இருப்பானாகில், அவன் அதை முற்றுமாக முறித்து விட்டான், இப்படியாக அவளை நடத்தியதால் அவன் அதை உறுதியும் செய்துவிட்டான். இப்படியான சூழ்நிலைகளில் காணப்படும் ஒரு மனைவி, தான் கைவிடப்பட்டவள் என்று எண்ணுவதற்கும், தன்னால் இயன்றவரை தனக்கு நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொள்ளுவதற்கு சுதந்திரம் உண்டு. ஆனால் இதனிமித்தம் மனித சட்டத்தின்படியாக அல்லது திவ்விய பிரமாணத்தின்படி மறுமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப் படவில்லை. இப்படியான ஒரு நிலைமையில், அவளுடைய நிலைமையை மாற்றுமாறு அல்லது முடிந்தால் அதிலிருந்து தப்பும்படியான ஒரு வழியை உண்டுபண்ணும்படி ஆண்டவரிடம் கேட்க வேண்டும். அவள் தன்னுடைய குழந்தைகளின் வயதை கணக்கில் எடுப்பதோடு, தனக்காகவும், குழந்தைகளுக்காகவும் எந்த மாதிரி ஒழுங்குகளைச் செய்யலாம் என்று சிந்திப்பதோடு, இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்பு சூழ்நிலைகளை நன்கு கவனத்துடனும், ஜெபத்துடனும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவள் இருக்கும் நிலைமையை தாங்கிக்கொள்ள முடியுமென்றால், அவள் நீடிய பொறுமையையும், சாந்தத்தையும், அன்பையும் காட்டுவதின் மூலம் அப்போஸ்தலர் கூறுகிறபடி அவள் அங்கேயே தரித்திருக்கக்கடவள், அதன் மூலம் தனது கணவனது இருதயத்தை தன் பக்கமாக திருப்பலாம், கூடுமானால் அவனை ஆண்டவருக்கென ஆதாயப்படுத்திக்கொள்ளலாம்.

எங்களுக்கு வந்த அனேக கடிதங்களிலிருந்து நாங்கள், ஆண்டவருடைய மிகவும் உண்மையான பிள்ளைகள் திருமணத்தினால் தொல்லைகள் எனும் காளவாயில் வசித்து வருகிறார்கள் என்பதை அறிந்து, இந்த விஷயத்தைக் குறித்து விரிவாக பார்த்துள்ளோம். புது சிருஷ்டியின் அழைப்பின் பிரகாரம், இப்போதுள்ள பூலோக வாழ்க்கை சுமூகமான, குதூகலம் நிறைந்த, சந்தோஷம் நிறைந்ததாக இருக்கும் என்று

எதிர்பார்க்கக்கூடாது. நம்முடைய ஆண்டவரும் இதைக்குறித்து, ''ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே'' என்று கூறியிருக்கிறார். (மத்.10:36) சத்தியத்திற்காக அதிகமான துன்பங்களை அனுபவிக்கும்படி அழைக்கப்படுவதைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்படக்கூடாது. இது அவர்கள் ஆண்டவருக்கும், அவருடைய வசனத்திற்கும் உண்மையாக இருப்பதையும், மேலும், அவர்களுக்குள் ஆவியின் கிருபைகள் வளரும்படி அவர்கள் கடந்து செல்வது நல்லது என்று அவர் அவர்களுக்கு அனுமதிக்கின்ற அக்கினி போன்ற சோதனைகளை சகிக்க ஆர்வமாயிருப்பதை அது காட்டுகிறது. அது மாத்திரமல்ல, அவர்களை இராஜ்யத்திற்கு தகுதிப்படுத்தும்படியாக, அவர்களுக்கு வரும் அக்கினி போன்ற சோதனைகளை அவர்களாகவே தெரிந்துகொள்ளக்கூடாது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வது அவசியம். ஆனால், அவைகள் எல்லாவற்றையும் ஆண்டவரின் கரங்களில் விட்டுவிட வேண்டும். இருந்தபோதிலும், இப்படியாக உபத்திரவபடுகிறவர்கள் அனைவருக்கும், அவர்கள் போதிய அளவு உபத்திரவத்தை அனுபவித்து, தேர்ச்சி பெற்ற பின்னர், அவர்கள் திவ்விய விடுதலைக்காகவும், அவர்களால் தாங்க முடியாத அளவுக்கு இருக்கிறவைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழியை அவர்கள் நோக்கிப்பார்க்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுவது நம்முடைய கடமையாகும். இது நம்முடைய ஆண்டவரின் எச்சரிப்புக்கும், உதாரணத்திற்கும் இசைந்திருப்பதைக் காட்டுகிறது. அவர் கூறுகிறதாவது: ''ஒரு பட்டணத்தில் உங்களை துன்பப்படுத்தினால், மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்.'' (மத்.10:23; 2:13; 4:12; 12:15)

மனசாட்சியே, இறுதியான பரீட்சை

இந்த விஷயங்களைக்குறித்து நாங்கள் கூறுகையில், மனசாட்சி என்ற வார்த்தையை உபயோகிக்கும்போது, நாங்கள் என்ன கூற விரும்புகிறோம் என்பதைச் சொல்வது நலமாயிருக்கிறோம். எது உரிமை, எது கடமை என்பதைக்குறித்த உணர்வை நாங்கள் கூறுகிறோம். பரிபூரண மனிதன் தன்னுடைய உள்ளுணர்வினால் எது உரிமை, எது கடமை என்பதை உணர்வதற்கு மனசாட்சி ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும். ஆனால் அது கடந்த ஆயிர வருட வீழ்ச்சிக்குப் பின்னர், நம்முடைய மனுமக்களின் மனசாட்சி தவறான கருத்துக்களால் உண்மைநிலை தவறிய ஒரு நிலைக்கு வந்திருக்கிறது. கிறிஸ்தவனின் மனசாட்சிக்கு

அடிப்படையாக இருப்பது தேவன் மேல் வைக்கும் விசுவாசமும், அவருடைய சித்தமுமே சரியானது என்று ஏற்றுக்கொள்வதும், திவ்விய சித்தத்திற்கு முழுவதுமாக, இதய பூர்வமாக கீழ்ப்படிவதே நம்முடைய கடமையாயிருக்கிறது என்று ஏற்றுக்கொள்வதும் ஆகும். ஆகவே, மனசாட்சிக்கு தேவையாயிருப்பது, தேவ வசனம் அளிக்கிற இப்படியான பாடமேயாகும்; இந்த காரணத்திற்காக வளர்ச்சியுற்ற புது சிருஷ்டி தெளிந்த புத்தியின் ஆவியைப் பெற்று, கிருபையிலும், அறிவிலும், அன்பின் ஆவியிலும் வளரும் அளவுக்கு, எது சரி, எது தவறு என்று அளவிடும் திறமைக்கேற்ப அவனுடைய உணர்வு இருக்க வேண்டும் என்பதுதான். மனசாட்சிக்கு கீழ்ப்படிவது என்பது ஆண்டவர் தன்னை என்ன செய்ய விரும்புகிறார் என்பதற்கு அவன் கீழ்ப்படிவதுதான். இந்த விஷயத்தில் அவன் உடனடியாக ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடாது. ஆனால் திவ்விய வார்த்தையின் சாட்சியை கவனமாகப் பார்த்து அதன்படி தீர்மானிக்க வேண்டும். பயத்தையும் அடிமைத்தனத்தின் உணர்வையும், தங்களுடைய மனசாட்சியை ஆக்கிரமிக்க அனுமதித்து, அது ஒரு உண்மையான கண்காணிப்பு என்று நினைத்து அதைத் தவறான வழியில் அனுமதிக்கும் ஜனங்களும் உண்டு. ஆண்டவருடைய ஜனங்கள் செய்யவேண்டிய சரியான காரியம் தங்களுடைய மனசாட்சியை முறைப்படுத்துவதுதான். அதாவது, பொன்னான கற்பனையின்படியும், வேதாகமம் கூறுகின்ற மொத்த அறிவுரைகளின்படியும், எது சரி, எது தவறு என்பதைக் குறித்த அவர்களுடைய மனசாட்சியை வழிநடத்துவது ஆகும்.

அண்ணகர்கள், கன்னிகைகள், பிரம்மச்சாரிகள்

பாலிய உறவைக்குறித்த கேள்விகள் புதுசிருஷ்டிக்கு ஓர் அளவுக்கு குழப்பத்தை உண்டு பண்ணுவதாக இருக்கிறது, ஆகவே, அவைகளை நாம் இங்கே அசட்டை பண்ணக்கூடாது. ஆவிக்குரிய சந்தோஷங்களுக்கும், ஆசீர்வாதங்களுக்கும், ஐக்கியத்திற்கும், திருவிருந்திற்கும் என ஆவியினால் பிறந்தவர்கள் உடனடியாக உணர்வது என்னவெனில், மாம்சத்திற்குரிய, அல்லது மாம்சீகமான உடல் உறவு ஆவிக்குரிய விதத்தில் உயர்த்துவதாக இல்லாமல், அதற்கு எதிர்மாறான விதத்தில் செயல்படுவதாக உள்ளது. ஆண்டவருக்கென அர்ப்பணம் செய்து கொண்டவர்களில் திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பவர்கள், திருமண பந்தத்திற்குள் பிரவேசிக்கும் முன்னரும், அதன் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்னரும், இந்த விஷயத்தை ஆராய்ந்து

பார்ப்பது மிகவும் நலமாக இருக்கும். ''தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாக பிறந்தவர்களும் உண்டு; மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு; பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக்கொண்டவர்களும் உண்டு'' என்று ஆண்டவர் கூறுவது திருமணம் செய்யாதிருக்கிற நிலையை ஆதரிப்பது போன்று காணப்படுகிறது. (மத்.19:12) அதாவது, தங்களுடைய மனவிருப்பத்தின்படி, ஆண்டவருக்கென தங்களை அர்ப்பணம் செய்து கொண்ட பின்னர், திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்றும், திருமணம் செய்து கொள்ளாத நிலையிலேயே தங்களுடைய கற்பை பாதுகாக்க வேண்டும் என்றும் தீர்மானித்துள்ளார்கள். இவர்களில் ஒருவராக ஆண்டவரே இருந்தார். நிச்சயமாக அவர் நம்முடைய உன்னதமான முன்மாதிரியாக இருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளை நம்மால் இயன்றவரை கவனமாக பின்பற்ற வேண்டும். அப்போஸ்தலர் நம்முடைய கவனத்திற்கு கொண்டு வரும்படி பின்வருமாறு கூறுகிறார்:

''அன்றியும் கன்னிகைகளைக்குறித்து (ஆண், பெண் இருபாலாரும்), கர்த்தரால் எனக்கு கட்டளை இல்லை. ஆகிலும், நான் உண்மையுள்ளவனாயிக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம்பெற்று, என் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறேன். அதென்னவெனில், இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் (தற்போதைய சூழ்நிலைகளில் நம்முடைய பூரணமற்ற நிலையும், இன்னொரு பக்கம் மற்றவர்களுடைய பூரணமற்ற நிலையும், இன்னோரு பக்கம் ஆண்டவருக்கென முழுவதுமாக தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர் களுக்குரிய விசேஷமான கடமைகளும், சிலாக்கியங்களும், தருணங்களும்) விவாகமில்லாதிருப்பது மனுஷனுக்கு நலமாயிருக்கும் என்று எண்ணுகிறேன் (விவாகமானவரோ, விவாகமில்லாதவரோ அவர் சத்தியத்தை ஏற்றுக்கொண்ட அந்த நிலையிலேயே நிலைத்திருப்பது). நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால், அவிழ்க்கப்பட வகைதேடாதே; நீ மனைவி இல்லாதவனாயிருந்தால் மனைவியைத் தேடாதே. நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல.

''ஆகிலும் அப்படிப்பட்டவர்கள்(விவாகத்திநிமித்தம்) சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்பவேண்டுமென்றிருக்கிறேன். மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவி

களில்லாதவர்கள் போலவும், (கூடுமானவரை உலகத்தின் உறவுகளை பாராமுகமாயிருந்து, பரலோக காரியங்கள் மேல் மனதை வைக்க வேண்டும்) அழுகிறவர்கள் (உலகக் கவலையில் இருப்பவர்கள்) அழாதவர்கள்போலவும், (வருங்காலத்தில் நமக்கென வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளவைகளில் களிகூறும் சந்தோஷத்தை எண்ணி உலகத்தில் காணப்படுகிற சோதனைகளையும், ஏமாற்றங்களையும், கஷ்டங்களையும் மறக்க முயற்சிக்க வேண்டும்) சந்தோஷப்படுகிறவர்கள் (உலகத்தில் உள்ள சுபீட்சத்தில்) சந்தோஷப்படாதவர்கள் போலவும், (அவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் சந்தோஷப்படுவது, பூலோகத்தில் கிடைக்கக்கூடிய சந்தோஷத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது) கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும், (உலகத்துக்குரிய காரியங்கள்மேல் மனதை வைக்காமல்) இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதை தகாதவிமாய் அனுபவியாதவர்கள் போலவும் (நிதானத்தை கடைபிடிக்கவும், உலகத்தின் எல்லா காரியங்களிலும் புது சிருஷ்டியின் நலன்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட வேண்டும்) இருக்க வேண்டும்; இந்த உலகத்தின் வேஷம் கடந்து போகிறதே. (புது சிருஷ்டிகளாயிருக்கிற நாம் தொடர்ந்து மாம்சத்தின்படி ஜீவியாமல் நம்முடைய புதிய நம்பிக்கைக்கு ஏற்ப ஜீவிக்க வேண்டும்; ஆனாலும் எல்லா நேரத்திலும் நமது அன்பையும் தெரிந்துகொள்ளு தலையும் உறுதிப்படுத்தி, மகிமையான யுகத்திலும் வரவிருக்கிற உலகத்திலும் இப்படியாக நம்முடைய ஆண்டவரோடு உடன் சுதந்திரராக இருக்கும்படியாகத்தான் நாட வேண்டும்).

''நீங்கள் கவலையற்றவர்களாய் இருக்க விரும்புகிறேன். (உலகப்பிரகாரமான கவலையிலிருந்து , ஆகவே, மேலே சொல்லப்பட்ட மனமாற்றம், அன்புணர்வுகளில் மாற்றம் என்ற எச்சரிக்கையோடு, மேற்கொண்டு மறுக்கமுடியாத சில உண்மைகளை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்). விவாகமில்லாதவன் (முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டவன்) கர்த்தருக்கு எப்படி பிரியமாய் இருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான். விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திலுள்ளவைகளுக்காக கவலைப்படுகிறான். (அவனுடைய வாஞ்சைகள் பிளவுபட்டுவிடுமோ என்று தொடர்ந்து ஒரு ஆபத்திலும் இருப்பதை உணர்வதோடு, ஆண்டவரோடு அவன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு விரோதமாக உலகப்பிரமான வாஞ்சைகள் அவனுடைய

எல்லா நேரத்தையும், அன்பையும் ஆர்வத்தையும் எடுத்துவிடுமோ என்ற பயத்துடன் காணப்படுவான். சத்தியத்தின்மேல் உள்ள ஆர்வம், ஜெயங்கொள்கிற சீடனாகவும், இராஜ்யத்தில் உடன் சுதந்திரராகவும் இருக்க வேண்டுமென்றால் மிக முக்கியமானதாக அது அவனுக்கு இருக்க வேண்டும்). அதுபோல, மனைவியானவளுக்கும் கன்னிகைக்கும் வித்தியாசமுண்டு. விவாகமில்லாதவள் (முற்றுமாக அர்ப்பணித்துக் கொண்டவள்) சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாய் இருக்கும்படிக்கு கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறாள்; விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படி பிரியமாய் இருக்கலாமென்று, உலகத்துக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறாள்.

''இதை நான் உங்களை கண்ணியில் அகப்படுத்தவேண்டுமென்று சொல்லாமல், (உங்களுடைய சுதந்திரத்தை உபயோகிக்க வேண்டாம் என்று சொல்லாமல்) உங்களுக்குத் தகுதியாயிருக்குமென்றும், நீங்கள் கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்றும், உங்கள் சுய பிரயோஜனத்துக்காகவே சொல்லுகிறேன். (உங்களை அடிமைத்தனத்திற்குள்ளாக கொண்டுவரவோ அல்லது எவ்விதத்திலாவது உங்களுடைய பாரத்தைக் கூட்ட வேண்டுமென்றோ இல்லாமல், விவாகமில்லாதிருக்கிறவர்கள், விவாகம் செய்துகொள்ளுவதால் நீங்கள் இழக்கக்கூடிய ஆவிக்குரிய நலன்களையும் சிலாக்கியங்களையும் சிந்தித்து இந்த விஷயத்தை கவனமாக எடைபோட்டு பார்க்க வேண்டுமென்று சொல்லுகிறேன்). ஆகிலும் ஒருவன் தன் புத்திரியின் கன்னிகைப் பருவம் கடந்து போனதினாலே, அவள் விவாகம் பண்ணாமலிருப்பது அவளுக்குத் தகுதியல்லவென்றும், அவள் விவாகம் பண்ணுவது அவசியம் என்றும் நினைத்தால், அவன் தன் மனதின்படி செய்யக்கடவன்; அது பாவமல்ல, விவாகம் பண்ணட்டும். ஆயினும் அதற்கு அவசியத்தை காணாமல் தன் இருதயத்திலே உறுதியுள்ளவனாயும், சுயசித்தத்தின்படி செய்ய அதிகாரம் உள்ளவனாயுமிருந்து, தன் புத்திரியின் கன்னிகைப் பருவத்தை காக்கவேண்டும் என்று தன் இருதயத்தில் தீர்மானிக்கிறவன் நன்மை செய்கிறான். இப்படியிருக்க, அவளை விவாகம் பண்ணிக் கொடுக்கிறவனும் நன்மை செய்கிறான்; கொடாமல் இருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்.

''மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் பிரமாணத்தில் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயும் இருக்கிற

எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள். ஆகிலும் என்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்துவிட்டால் பாக்கியவதியாயிருப்பாள். என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்.'' (நான் ஏற்கனவே கூறியுள்ளபடி இந்த விஷயத்தில் தேவனுடைய சிந்தையை கூறியுள்ளேன். நான் இதைக் கட்டளையாகவோ அல்லது நேரடியாக ஆவியினால் உந்தப்பட்டோ கூறாமல், என்னுடைய உணர்வின்படியாக அல்லது திவ்விய சித்தம் நியாயப்படுத்துகிறபடி கூறுகிறேன்.)(1கொரி. 7:25–40)

விவாகம் ஆன பின்னர், அண்ணகராக வாழவேண்டுமா அல்லது வேண்டாமா என்று ஒருவர் தீர்மானிப்பது மிகவும் காலதாமதமான முடிவாகும். அப்போஸ்தலர் இதைக்குறித்து மிகவும் தெளிவாக கூறுகிறார்: ''மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி.'' விவாகத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்திருக்கும் அளவின்படியாக விவாகத்திற்குரிய நிதானமான, நியாயமான உரிமைகளை மறுப்பது, அநீதியாகவும் விவாக ஒப்பந்தத்திற்கு விரோதமானது என்றும் காணப்படும். இப்படியான ஒரு நிலையைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகையில், ''ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்'' என்கிறார். (1கொரி.7:5) இந்த விஷயங்களை பார்க்கவேண்டிய வேளை திருமணத்திற்கு முன்னரேயாகும். ஒருவரையொருவர் கட்டுப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதோ, விவாக ஒப்பந்தத்திற்குள் இருக்கும்போது அவர்கள் இருவரும் அண்ணகர்களாக வாழவேண்டும் என்று உறுதி செய்து கொள்வதும் தகுதியானதல்ல. எல்லாவிதமான மற்ற உலக காரியங்களிலும் இதிலும் நிதானம் கடைப்பிடிப்பதுதான் பிரமாணமாக இருக்க வேண்டும், இந்த பிரமாணம்தான் புதுசிருஷ்டி தன் மாம்சத்தின்மேல் அதிகாரம் செலுத்தாதபடி பார்த்துக்கொள்ளுகிற தடையாக இருக்க வேண்டும். இதை உபயோகித்து இருதயத்தின் சிந்தனைகளையும்கூட ஆண்டவருக்கு அடிமைப்படுத்த வேண்டும். முற்றிலுமான சுயக்கட்டுப்பாடு, எவ்வளவுதான் விரும்பத்தக்கதாக இருந்தாலும், இது ஒரு கண்ணியாகவும், இச்சையாகவும் வராதபடியும், அதன்மூலம் விவாகத்துக்குரிய கடமைகள் மீறப்படாதபடியும், ஒருவர்மேல் ஒருவர் பலவந்தமாக வற்புறுத்தக்கூடாது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மேலும் அவர் கூறுகிறதாவது:

''புருஷன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன். (அவள் நியாயமாக, இயற்கையாக தகுந்த காரணத்துடன் கேட்பவை). அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன்சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடி இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடிவாழுங்கள். இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன். எல்லா மனுஷரும் என்னைப்போலவே (விரதத்துவம் உள்ளவனாக, சுயாதீனம் உள்ளவனாக, சொல்லப்போனால் ஒரு அண்ணகராக)இருக்க விரும்புகிறேன்..... விவாகமில்லாதவர் களையும், கைம்பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் என்னைப்போல இருந்துவிட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும். ஆகிலும் அவர்கள் விரதத்தராயிருக்கக் கூடாதிருந்தால் விவாகம்பண்ணக்கடவர்கள்; வேகிறதைப்பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்.''– அடக்கமுடியாக இச்சையுடன் வேகும்போது அது அவர்கள் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளுவதற்கு தடையாக இருக்கும், அது அவர்களுக்கு ஒரு கண்ணியாக மாறும். (1 கொரி.7:3–9)

ஆண்டவருக்குள் மாத்திரம்

ஆண்டவருடைய புத்திமதிகள் எவ்வளவு நியாயமானதாகவும், ஞானமுள்ளதாயும் இருக்கின்றன! அவைகளை கேட்கும்படியான காதுள்ளவர்களுக்கும், அந்த ஆலோசனைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கும் அவைகள் எவ்வளவு நன்மை செய்பவைகளாக இருக்கின்றன! ஆண்டவருடைய ஜனங்கள் ஆண்டவருக்குள் இருக்கிறவர்களை மாத்திரம் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று சொல்லும்போது அது முதலாவதாக ஒரு கட்டுப்பாடாக, ஒரு தடையாக, ஒரு அடிமைத்தனமாக தோன்றலாம். ஆனால் அப்படியல்ல, அது ஒரு யோசனைதான். இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளுகிறவர்களெல்லாம் இதனால் ஆசீர்வதிக்கப்பட்டதை காலாகாலத்தில் அறிந்துகொள்வார்கள், இந்த யோசனையை தள்ளிவிடுகிறவர்களெல்லாம், பின்னர் கடுமையான

அனுபவங்கள் மூலம் அவர்கள் எடுத்த முடிவின் ஞானமற்ற வழியை உணருவார்கள்.

இந்த வாழ்க்கையின் எந்த ஒப்பந்தமோ அல்லது ஒழுங்கோ விவாக ஒப்பந்தத்தைப் போல் முக்கியமானதல்ல. ஆனாலும் நல்ல கற்றறிந்த மனதுடையவர்கள்கூட அதை சாதாரண, அற்பமான விஷயம் என்று எடுத்துக்கொள்ளுகிறார்கள். சில பெற்றோர்கள் மனுக்குலத்தை பெருக்குவதில் தங்களுக்குள்ள பங்கை எண்ணிப்பார்ப்பதை விட, ஒரு பண்ணையை, தங்களுடைய ஆடுமாடுகள், குதிரைகள், நாய்கள், பன்றிகள் ஆகியவைகளை பராமரிப்பதில் அதிக கவனமும், நல்ல யோசனையும் காட்டுகிறார்கள். இப்படியாக ஞானமற்று செயல்படுவதைப் பார்ப்பதற்கு கஷ்டமாக இருக்கிறது. ஒரு வேளை, விவாகம் என்பது தற்செயலாக விழக்கூடிய ஒரு லாட்டரி சீட்டைப்போன்றுதான் இருக்கிறது, நல்ல தீர்மானத்தினால் ஏற்படுவது அல்ல என்று நினைப்பது போல தோன்றுகிறது. அப்படியில்லாவிட்டால், மனுக்குலத்தின் ஒவ்வொரு தனி நபரும், தேவனால் முதல் ஜோடியில் செய்து முடிக்கப்பட்ட விவாகம், நம்முடைய மனுக்குலத்தைப் பொறுத்தவரை, அதில் தேவனுடைய பூரண கிரியையை உணரத்தவறிவிடுகிறார்கள். இந்த முதல் ஜோடிக்கு பலுகிப்பெருகும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது, அது அவர்களது சந்ததிக்கும் வந்தது. மனுக்குலத்தை சரியான முறையில் நோக்கும்போது, அது மிருகங்களின் சிருஷ்டிப்பின் உயர்வான மாதிரியாக உள்ளது. மேலும், மற்றவைகளைப் போலவே தன்னுடைய இனத்தைப்போன்றே இன்னொன்றை உற்பத்தி செய்யும் திறனை அளித்துள்ளார். இந்தக் கோணத்திலிருந்து நாம் பார்க்கும்போது, இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கிற மனுக்குலத்தின் குடும்பம் எதுவுமே தேவனின் நேரடிப் படைப்பல்ல என்பது உடனடியாகத் தெரிகிறது. மேலும், மனுக்குலத்தின் பலவிதமான பெலகீனங்கள், பூரணமற்ற நிலை, இயலாமை ஆகியவைகள் அவருடைய கிரியையில் பூரணம் இல்லை என்பதைக் குறிக்காது. ஆனால், அவைகள் யாவும் நமது மனுக்குலம் பாவத்திற்குள் விழுந்ததாலும், இயற்கையாகவே பாவம் புகுந்ததாலும் அந்த நிலை ஏற்பட்டது. இப்படியான நிலை அதிகமாக கீழாக பூரணமற்ற நிலைக்கும், சீரழிவிற்கும், மரணத்திற்கும் நேராக வழிநடத்துகிறது.

ஆகவே, ஜென்ம சுபாவமுள்ள மனிதனும், ஸ்திரீயும் கூட விவாகத்தில் நுழைவது என்பதைக் குறித்த கேள்வியைக் கவனமாக

சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதன்படி மனுக்குலத்தை கீழ்நோக்கி தள்ளுகின்ற காரியங்களை, தங்களால் இயன்றவரை தள்ளி வைப்பதில் தன் பங்கை செய்வார்கள். இரத்த சம்பந்தமுள்ள குடும்பத்திற்குள் விவாகம் செய்யக்கூடாது என்ற சட்டங்களின் தேவையை அவர்கள் உணர வேண்டும். இதன்படி நெருங்கிய, இரத்தசம்பந்தமுள்ள குடும்பத்திற்குள் விவாகம் செய்துகொள்ளக்கூடாது. ஆரம்பத்தில் ஆதாமின் குமாரர்களும் குமாரத்திகளும் தங்களுக்குள்ளாக தீமையில்லாமல் திருமணம் செய்துகொண்டபோது இப்படிப்பட்ட ஒழுங்குகள் தேவையாக இருக்கவில்லை. ஏனெனில், மனுக்குலமானது அவ்வேளையில் கிட்டத்தட்ட பூரணநிலையில் இருந்தபடியால் எந்தவிதமான குறிப்பிடத்தகுந்த பெலகீனங்கள் பிள்ளைகள்மேல் வருவதற்கு எந்தவித காரணமுமில்லை. ஆனால், இப்பொழுதோ மனுக்குலம் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி இருப்பதினால், வியாதிகள் மாத்திரமல்ல, பரம்பரையாக மாறுபட்ட பண்புகள், தன்மைகள், விசித்திரமான பைத்தியக்காரத் தன்மையுள்ள குணங்கள் முதலியன வரத் தொடங்கிவிட்டன. ஆகவே, இவ்வுலகத்திற்குள் அவர்கள் பிறப்பின்மூலம் கொண்டு வரும் பிள்ளைகளுக்காக, அவர்கள் செய்யவேண்டியது, கடமையாக மாத்திரமல்ல, நியாயமான, ஞானமுள்ள செயல் என்னவென்றால், நெருங்கிய இரத்த சம்பந்தமுள்ளவர்களை விவாகம் செய்வதை தவிர்க்க வேண்டும். ஏனெனில், அப்படிச்செய்தால் அது மனத்தளவில், சரீரபிரகாரமான விசித்திரமான, பைத்தியகாரத் தனமான குணாதிசயங்களை அதிகரிக்கச் செய்யும். ஆனால், இதற்கும் மேலாக, தங்களால் இயன்றவரை தங்கள் குடும்பத்தை விட்டு வெளியே வித்தியாசமான சுபாவமுள்ள ஒரு துணையைத் தேடுவது நல்லது என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இயற்கை இந்த விஷயத்தில் ஓரளவுக்கு உதவி செய்வது போன்று தோன்றுகிறது. ஆகவே, பொன்னிற மேனியுள்ளவர்கள் அல்லது மாநிற மேனியுள்ளவர்கள் எதிர்மாறான மனநிலையுள்ள துணையைத்தான், பொதுவாகவும் இயற்கையாகவும் விரும்புவார்கள்.

இந்த ஒழுங்குகள் ஜென்மசுபாவமுள்ள மனிதனுக்கு உள்ளவையாக இருக்கும்போது, விவாகம் செய்துகொள்வது அவனுக்கு எல்லா வழிகளிலும் நலமானது, ஞானமானது என்று புது சிருஷ்டி தீர்மானித்தால், இது அவனுக்கும் உரியதாகும். ஆனாலும், மாம்சத்தின்படியான துணையை புது சிருஷ்டி தேடும்போது அவனை வழிநடத்தும்படியாக

அப்போஸ்தலரிடமிருந்து இன்னும் ஒரு புத்திமதி உண்டு. அதாவது அவன் ஆண்டவருக்குள் இருப்பவரைத்தான் தேடவேண்டும். அப்போது அவன் இயற்கையான காரியங்களிலும் ஆவிக்குரிய காரியங்களிலும் இசைந்த துணையோடு சேரமுடியும். மாம்சத்தில் நெருக்கமானவர்களை விவாகம் செய்யும்போது அது வித்தியாசமான குணங்களையுடைய பிள்ளைகளை உருவாக்கும், அதுபோல ஆவியின்படியாக மிக நெருக்கமானவர்களை விவாகம் செய்துகொள்ளுவதும் தீமையை விளைவிக்கிறதாக இருக்கலாம் என்று சிலர் வாதிப்பார்கள். அது குணாதிசயங்களில், ஆவிக்குரிய விஷயங்களில் இயற்கைக்கு மாறான தன்மையுள்ள பிள்ளைகளை உருவாக்கலாம் என்று சிலர் வாதிப்பார்கள். அப்படியல்ல என்று நாங்கள் கூறுகிறோம். நாம் எந்த அளவுக்கு புதிதான மனதைப் பெற்றுக் கொள்கிறோமோ அதே அளவுக்கு மனதின் ஆற்றல்கள், மாம்சத்தின் இயற்கைக்கு மாறான தன்மைகளுக்கு வித்தியாசமானதாக இருக்கும். அப்போஸ்தலர், ''நமக்கு கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது,'' ''தெளிந்த புத்தியின் ஆவி'' இருக்கிறது என்று கூறுகிறார். நாம் கிறிஸ்து பார்க்கிறவண்ணம் பார்க்கிறோம். புது சிருஷ்டி அவருடைய ஆவியினால் பிறந்தவன், மாம்சத்தின்படி பூரணமற்ற நிலையில் இருந்தாலும், எல்லா விஷயங்களிலும் திவ்விய சித்தத்தை புரிந்துகொள்ளும்படியாக வசனத்தின் மூலமாக ஆவியினால் நடத்தப்படுகிறான்.

உண்மைதான், இந்த புதிய மனம் சாவுக்கேதுவான சரீரத்தின் வழியாகவும், அதன் பூரணமற்ற சிந்திக்கிற முறைகளின் வழியாகவும் செயல்பட வேண்டும். இருந்தபோதிலும், மாம்சத்தில் உள்ள பூரணமற்ற தன்மைகள் மனதை, அது வெகு அழகாகவும் உன்னதமாகவும் உருவாக்கப்பட்டு இருப்பதற்கு வெளியே ஓர் அளவுக்கு குலைச்சலடையவும், மாறுதல் அடையவும் செய்தாலும், சித்தமே உயர்வானதாகும்; மாம்சமானது கிட்டத்தட்ட உயர்வான சித்தத்தினால் ஆதிக்கம்பண்ணப்படுகிறது, மாத்திரமல்ல, சித்தத்தினால் உருவாக்கப் படுகிறது, வடிவமைக்கப்படுகிறது, படிப்படியாக மாறுதல் அடையப் பெறுகிறது. ஆகவே, கிறிஸ்துவின் சிந்தையை பெறுகிறவர்களெல்லாம் அதே அளவுக்கு வாழ்க்கையின் எல்லா நலன்களிலும், எல்லா காரியங்களிலும் நியாயமாக சிந்திப்பதில் உறுதிபெறுவது நிச்சயம். இதனால் இதற்கு முந்தி இருந்ததைவிட ஞானமுள்ளவன் என்று அவன் உலகத்தால் உயர்வாக எண்ணப்படுவான் என்று பொருள்படாது, ஆனால், உண்மையிலேயே அவன் முன்பு இருந்ததைக்காட்டிலும் ஞானமுள்ள

வனாக இருப்பான். அவனுக்குள் வளர்ந்து வருகிற ஞானத்தை உலகம் பகுத்தறியாததின் காரணம் என்னவெனில், உலகமானது குருட்டாட்டத்தில் உள்ளது, ஞானமற்றதாக இருக்கிறது, கிறிஸ்துவின் சிந்தை இல்லாமல் இருக்கிறது. மேலும், விஷயங்களை உலகம் சீரழிந்த, திரிக்கப்பட்ட ஒரு கருத்தோடும், சுயம்நலம் என்ற கருத்தோடும் பார்க்கிறது. நாம் விரும்புகிற ஞானம் பரத்திலிருந்து வருகிறது; அது நம்மை அதிக தூய்மையுள்ளவர்களாக, இரக்கம் உள்ளவர்களாக, சகோதரர்களுக்கும், குடும்பத்தினருக்கும், பொதுவாக மனுக்குலத்திற்கும் அன்புள்ளவர்களாக மாற்றும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஆம், மிருக குணமுள்ள சிருஷ்டிகளுக்கும்கூட அன்பு காட்டுகிறவர்களாக மாற்றும். அப்போஸ்தலர் விவரித்துக் கூறுகிறபடி இவ்வுலகத்தின் ஞானம், உலப்பிரகாரமானதாகவும், மாம்சீக இச்சையுள்ளதாகவும், பிசாசினுடையதாகவும் இருக்கிறது. உலக ஆண்பெண் அனைவரும் மாம்சீக இச்சையுள்ளவர்களாகவும், பேய்த்தனமுள்ளவர்களாகவும் இருப்பதில்லை. ஆனால், பொதுவாக உலக ஞானம் இந்த திசையில்தான் உள்ளது. மனக்குலமானது, எவ்வளவுதான் குருட்டத்தில் காணப் பட்டாலும், அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிற சுயநலம் என்கிற பிரமாணங்களுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் அதே வேளையில், அதை அடிமைத்தனத்திற்கு உட்படுத்தியிருக்கும் சங்கிலியை அதனிடமிருந்தும், அது மாத்திரமல்ல, மற்றவர்களிடமிருந்தும் தொடர்ந்து மறைத்து வைக்க வழி தேடலாம்.

''ஆண்டவருக்குள் இருப்பது'' என்கிற வார்த்தையின் அர்த்தம், ஆண்டவர்மேல் பெயரளவில் வைத்திருக்கிற நம்பிக்கையைக் காட்டிலும், அல்லது பேர்சபையில் சாதாரணமாக ஒரு அங்கத்தினனாக இருப்பதைக் காட்டிலும் அதிகமாக உள்ளது என்று புரிந்து செயல்பட வேண்டும். உலகப்பிரகாரமாக வசிக்கும் ஜனங்கள், உலகப்பிரகாரமான ஜனங்களை விவாகம் செய்துகொள்ள வேண்டும்; பேர் சபையில் அங்கத்தினராக உள்ள கிறிஸ்தவர்கள், பேர்கிறிஸ்தவர்களை விவாகம் செய்துகொள்ள வேண்டும்; கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற கிறிஸ்தவர்கள், அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களை விவாகம் செய்துகொள்ள வேண்டும். ஆனால் முழுமையாக அர்ப்பணம் செய்து கொண்டவர்கள், அதன்படியாக கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினர்கள், புது சிருஷ்டிகள், மறுபடியும் பிறந்தவர்கள், தங்களைப்போன்றே உள்ள புதுசிருஷ்டிகளை, ''ஆண்டவருக்குள்

இருக்கிறவர்களை'' மாத்திரம், கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களை மாத்திரம், அவருடைய பரிசுத்த ஆவியில் பங்குள்ளவர்களை மாத்திரம் விவாகம் செய்துகொள்ள வேண்டும். மேலும், ஏற்கனவே பார்த்துள்ளபடி, சரியான பாலியல் உறவு அவர்களுக்கிடையில் இருக்கிறதா என்பதையும் ஒவ்வொருவரும் பார்த்துக்கொள்ள வேண்டும். ஸ்திரீயும், தன்னால் குடும்பத் தலைவனாக மதிக்கக்கூடியவனாகவும், ஒழுங்கிலும், அறிவிலும், ஆவியிலும் ஆண்டவருக்குள் இருக்கிறவனாகவும் காணப்படுகிற மனிதனையே விவாகம் செய்துகொள்ள கவனமாக இருக்க வேண்டும். மனிதனும்கூட தன்னால் இயன்ற அளவுக்கு நிதானித்து, ஒரு உண்மையான துணையாகவும், சுத்தமான இருதயமும், அன்பும், சாந்தமும், உதவி செய்கிற குணமும் உடையவளாகவும் இயற்கையாகவே காணப்படு கிறவளும், ஆண்டவருக்குள் இருக்கிறவளுமாகிய ஒரு ஸ்திரீயை விவாகம் செய்யும்படி கவனமாக இருக்க வேண்டும். புது சிருஷ்டி தெளிந்த புத்தியின் ஆவியை உடையவர்களாயிருந்து, எவ்வளவுதான் உலகத்தாரால் புறக்கணிக்கப்பட்டவர்களாயிருந்தாலும், துணையை தேடுவதில் அதற்குரிய இந்த விதிமுறைகளை கைக்கொள்ள வேண்டும்; ஏனெனில், இப்படிப்பட்ட உலகத்தார், ஆண்டவரின் சிந்தைபடி வழிநடத்தப் படாதவர்களும், அவர்கள் தங்களை ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்வதோடு, தங்களுடைய சுய விருப்பத்தின்படி வழி நடத்தப்பட்டு தங்களுடைய சொந்த வழியில் செல்கிறவர்களாக இருக்கிறார்கள். சந்தேகங்கள் எழும்புமானால், சரியான முறையில் தீர்த்துக்கொள்ளுங்கள்; அவைகள் சுமுகமாக தீர்க்கப்படும்வரை காத்திருங்கள்.

இப்படியாக ஒரு கோணத்திலிருந்து பார்த்தால் விவாகங்கள் குறைவாகத்தான் நடைபெறும் என்று விவாதிக்கலாம். இது இப்படி இருக்கலாம் என்று நாங்கள் பதில் சொல்லுகிறோம். ஆனால், தற்போது விவாகம் செய்துகொண்டவர்களில் பெரும்பான்மையோர், விசேஷமாக, புதுசிருஷ்டிகளாக ஆண்டவரோடு கொண்டுள்ள உறவை ஆண்டவரின் கிருபையால் தெளிவாக புரிந்துகொண்டவர்கள், மாம்சத்தைப் பற்றிய விஷயத்தில், தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் நலனை மனதில் கொண்டு அவருடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள், இப்பொழுது செய்துள்ளபடி மறுபடியும் ஒருமுறை விவாகம் பண்ணமாட்டார்கள். ஏனெனில், இப்பொழுது அவர்கள் ஞானமுள்ளவர்களாகிவிட்டார்கள். உலகப்பிரகாரமாக வாழ்கிற

அனேகருக்கு, உலகத்திலுள்ள நீதிமன்றங்கள், அதன் உபயோகங்கள் ஒரு முழு விவாகரத்துக்கும், இன்னொரு விவாகத்திற்கும் சாத்தியம் உண்டுபண்ணுகிறபடியால், விவாகம் என்பது முக்கியமானதாக இல்லாததுபோன்று தோன்றலாம், விவாகத்தைக் குறித்து அதிக கவனம் செலுத்தாமல் இருக்கவும் செய்யலாம். ஆனால், புது சிருஷ்டி தன்னுடைய விவாக ஒப்பந்தம் ஆண்டவருக்கும் சபைக்கும் இடையில் உள்ளது போன்றே உள்ளது, நிரந்தந்தரமானது என்பதையும், மத்.19:9 ல் சொல்லப்பட்ட காரணத்தை தவிர வேறு காரணத்திற்காகவும், விவாக ரத்து செய்யவும் இன்னொரு விவாகம் செய்யவும் உலகத்தின் எந்த நீதிமன்றமும் அனுமதி வழங்க முடியாது என்பதையும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, ஆண்டவருடைய ஜனங்களுக்கு, ஆண்டவருக்குள் இருக்கிறவர்களுக்கு, விவாகம் ஒரு முக்கியமான விஷயமாகும். நிதானிக்க முடிந்தவரை, சூழ்நிலையில் காணப்படும் எல்லா அம்சங்களையும், ஜெபத்தோடு சிந்தித்துப்பார்த்து, ஆராய்ந்த பின்னரே விவாக ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

புது சிருஷ்டிக்கு இந்த விஷயத்தில் இன்னோரு பாதுகாப்பு உண்டு. அதாவது, ஆண்டவரோடு அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைபடி, தங்கள் சித்தங்களை ஆண்டவருக்கு ஒப்படைத்துவிட்டு, அதற்கு பதிலாக அவர்களுடைய தலையாயிருக்கிற ஆண்டவருடைய சித்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதுவே அவர்களுடைய மனோபாவமாக இருக்குமென்றால், கீழ்க்கண்ட விஷயங்களில் கிறிஸ்துவின் சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ளுவதில் ஒரு உண்மையான வாஞ்சை உள்ளவர்களாய் இருப்பார்கள். (1) அவர்கள் விவாகம் செய்துகொள்ள வேண்டுமா அல்லது வேண்டாமா. (2) ஆண்டவர், அவர்களுக்காக தெரிந்துகொண்டிருப்பதைப்பற்றி, அவர்கள் நிதானமாக ஆராய்ந்து பார்த்தபின்னர், தாங்கள் சரியென்று தீர்மானிப்பதில் ஆண்டவருடைய வழிநடத்துதல் சாதகமாக இருந்தாலும் அல்லது பாதகமாக இருந்தாலும், சரி என்று எண்ணி தங்களுடைய இருதயங்களை முழு திருப்தியுடன் காத்துக்கொண்டு, அவருடைய ஞானத்தின்படி காரியங்களை விளங்கப்பண்ணும்படி ஜெபித்து தங்களுடைய சொந்த புத்தியின்மேல் சாயாமல், ஆண்டவர்மேல் முற்றிலுமாக சார்ந்திருப்பார்கள். இந்த வழியில் இல்லாமல் வேறு எந்த வழியினாலும் ஆண்டவருடைய ஜனங்கள் சரியான தீர்மானத்தை எடுக்கிறார்கள் என்று நிச்சயமாக உணர முடியாது. மேலே சொல்லப்பட்டவைகளின் பிரகாரம், இந்த விஷயத்தைப் பற்றியதான

ஆண்டவரின் புத்திமதிகளை தெளிவாக மனதில் புது சிருஷ்டி வைத்திருக்கவேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது. அவர்களிடத்தில் சத்தியத்தின் ஆவி காணப்பட வேண்டும்; மேலும், அவர்கள் புது சிருஷ்டிகள் என்கிற சிந்தை எப்பொழுதும் மனதில் காணப்படவேண்டும்; அவர்கள் வாழ்க்கையை அனுபவிக்கவேண்டும், மாம்சத்தின்படி குடும்பத்தை முன்னேற்ற வேண்டும் என்று உலகத்தாரைப்போன்று ஜீவிக்காமல், அவர்களுடைய உன்னதமான நோக்கம், குறிக்கோள், முயற்சி எல்லாம் ஆவியின் பிரகாரம் நடந்து, தற்காலிகமானதும் ஆவிக்குரியபிரகாரமாகவும் உள்ள எல்லா விஷயங்களிலும் ஆண்டவருடைய வழிநடத்துதலை பின்பற்ற வேண்டும் என்பதாகும். அவர்கள் எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய கருத்து என்னவெனில், அவர்கள் ஆண்டவருக்கென அர்ப்பணிக்கப்பட்டவர்கள், இந்த உலகத்தைப் பொருத்தவரையில் மரித்துவிட்டோம் என்பதைத்தான். மேலும், புதுசிருஷ்டியின் நலனுக்காக, அதன் பொதுவான வேலையான பணிவிடை செய்வதிலும், ஆண்டவரை மகிமைப்படுத்துவதிலும், தன்னையும், தன்னைப்போன்றுள்ள விலையேறபெற்ற விசுவாசத்தில் உள்ள மற்றவர்களையும் உயர்த்தும்படியாக, தங்களுடைய தற்போதைய வாழ்க்கையை, பூமிக்குரிய பாத்திரங்களை கூடுமானவரை, ஞானமுள்ள வழியில் உபயோகிப்பதே, இனி அவர்களுடைய முக்கிய குறிக்கோளாகவும், நோக்கமாகவும் இருக்கவேண்டும். விவாகம் செய்துகொண்டவர்களும், விவாகம் செய்துகொள்ளாதவர்களும், விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்று யோசனைபண்ணிக்கொண்டு இருப்பவர்களும், அவர்களுக்குரிய அனைத்தும் பலிபீடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதையும், மேலும், அவர்களுடைய வெற்றியும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மகிமைகளை அடைவதும் பலி அங்கீகரிக்கப்படுவதின் மூலமாகவே வரமுடியும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது பாருங்கள்! ஆகவே, தற்போதைய வாழ்க்கைக்குரிய அனைத்துக் காரியங்களும், இயன்றவரை, தங்களுடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியத்திற்கு நல்ல விதத்தில் உதவிசெய்யும் படியாகவும், சகோதரர்களுக்கு நன்மை உண்டாகும் விதத்திலும் நம்முடைய தலையாயிருக்கிறவருக்கு மகிமை உண்டாகும் விதத்திலும் செய்யப்பட வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது பாருங்கள்!

அவர் அறிவார்

“அவர் அறிவார் நான் செல்கின்ற வழியை,
அது எவ்வளவு இருளாக இருந்தாலும் என்ன,
அல்லது கரடுமுரடானதாக, புதர்நிறைந்ததாக இருந்தாலென்ன
அவருடைய கோல் என்னை தேற்றும்.

“மிகநெருக்கமானதும், அருமையானதும், இனிமையானதுமான
அவருடைய அன்பை தடைபண்ணுகிறவைகளை
பணிவுடன் நான் எடுப்பேன்
அவரது பாதத்தில் வைப்பேன்.

“அவர் அறிவார் என்பதை அறிவது எவ்வளவு இனிமை,
அவர் கரிசனைகொள்கிறார், என் கரத்தைப் பிடித்து தாங்குகிறார்,
வழிநடத்துவார் நான் பத்திரமாக போய் சேருமட்டும்,
பரலோக தேசத்தை அடையுமட்டும்!”

அத்தியாயம் 13

பெற்றோர் என்ற முறையில் புது சிருஷ்டியின் கடமை

இனப்பெருக்கத்திற்கான சக்திகளுக்கு பயிற்சியும் பெரிதான கடமைகளாக சேர்க்கப்பட்டுள்ளது – பெற்றோரின் செல்வாக்குகள் – ''பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து ''– நீதிமானாக்கப்பட்டு பிறந்த பிள்ளைகள் – இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே – கொள்ளை நோயான பொல்லாத யோசனைகள்–ஞாயிறு பள்ளிகளின் செல்வாக்கு – பிள்ளைகளின் நம்பிக்கை– பிள்ளையை நடத்துவதில் யோசனை கூறும் திறமை – ஆபத்துக் காலத்தில் நமது பிள்ளைகள் – முறையான கேளிக்கைகள் – புது சிருஷ்டியினுடைய பிள்ளைகளின் விவாகம் – நம்முடைய பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு உக்கிராணத்துவம்.

பெற்றோர்களின் கடமைகள் மனுக்குலத்திற்குரிய கடமைகளில் மிக முக்கியமானதாகும். மனித இனத்தை விருத்தியடையச் செய்யும் அதிகாரம் மற்றும், இப்படியாக ஜீவனுக்குள் கொண்டு வரப்பட்டவை களோடு கொண்டுள்ள சாத்தியமான எல்லா தொடர்புகளும் ஐக்கியமும் மிக அற்புதமான ஒன்றாகும். இது திவ்விய வல்லமைக்கு மனுக்குலம் வருவதற்கு சுருக்கமான வழியாகும். இது தேவனுடைய பிரதிநிதியாக தெய்வீக வல்லமையை அப்பியாசப் படுத்துவதாகும். ஒவ்வொரு குழந்தையின் பிறப்பிலும் சம்பந்தப்பட்ட சாத்தியக் கூறுகள் அனைத்தும், சிலாக்கியமுள்ளது அல்லது சிலாக்கியமற்றது, நல்லது அல்லது பொல்லாங்கானது, கனத்துக்குரியது அல்லது அவகீர்த்திக்குரியது என்று எதிர்மாறான வியக்கத்தக்க எல்லைக்கு வருகிறது. மனுக்குலமானது இதை இதன் உண்மை நிலையில் புரிந்து

கொண்டால், குழந்தைகளைப் பெற்றெடுப்பதை, உணர்ச்சியும், அறிவுக்கும் சன்மார்க்கத்திற்கும் உரிய கொள்கைகளில் குறைவுபட்ட நிலையிலிருந்து பிரதிஷ்டைசெய்யக்கூடிய ஒரு நிலைக்கு உயர்த்தும். இப்படியான நிலைமையில் தகப்பனின், தாயின் பொறுப்புகள், இன்னும்கூட வெகு சிலர் மட்டுமே அடைந்த ஒரு அளவிலும், விதத்திலும் அறியப்படும். கடைமைகளைக் குறித்த இந்த சிந்தனைகள், மனதிலும், ஒழுக்கத்திலும், சரீர பண்புகளிலும் பெற்றோரை சார்ந்து இருக்கிற குழந்தைக்கு மாத்திரமல்ல, மனுக்குலத்திற்கு விருத்தியடையும்படியான அற்புதமான அதிகாரத்தை வழங்கிய சிருஷ்டிகருக்கும் சேர வேண்டும். அவருக்கே உக்கிராணக் காரராக எண்ணப்பட்டு, இந்த திவ்விய வல்லமையை உபயோகப் படுத்துவதற்கு கணக்கு கொடுக்கும்படியாக எதிர்பார்க்கப்படவேண்டும்.

திவ்விய ஒழுங்கின்படி, குழந்தையானது பிறக்கும் நொடியில் மாத்திரமல்லாது அது கருவில் இருக்கும் காலம் முழுவதிலுமே குழந்தையின் பண்புகள் பெற்றோர்களின் செல்வாக்கினால் பெருகுகின்றது என்பதை உணரும் போது இந்த கடைமைகளைக் குறித்த உணர்வுகளும் அதிகரிக்கின்றன. அந்த காலத்தின் போது தாயின் மன நிலை, அவளுடைய சிந்தனைகள், அவளுடைய நடபடிகள், அவளுடைய உணர்வுகள் எல்லாம் கருவுற்றிருக்கும் காலப்பகுதியில் குழந்தைக்குள் பதிவாகின்றன. அது மாத்திரமல்ல, இப்படியான ஒரு வேளையில் தாயானவளும், அவளைச் சுற்றியிருக்கின்ற சூழ்நிலைகளினால் விசேஷமாக பாதிப்புள்ளாகிறாள். அனேகமாக, எல்லாமுமே என்று சொல்ல முடியாவிடினும், புருஷனுடைய சரியான பராமரிப்பும் காரணமாக உள்ளது. தாயின் மனது தெளிவானதாகவும், மகழ்ச்சியுள்ளதாயும், இருதயப்பூர்வமான சந்தோஷத்துடனும் வைக்கப்பட்டிருந்தால், இவைகள் எல்லாம் கருவிற்கு அனுகூலம் உண்டாக்குவதாக இருக்கும்; ஆனால் இதற்குமாறாக அவள் உபத்திரவப்பட்டால், கவலைப்படுபவளாக, துன்பப்படுபவளாக, வாக்குவாதங்களினாலும் குழப்பங்களினாலும் சூழப்பட்டிருந்தால், இந்த கஷ்டங்கள் நிச்சயமாகவே கருவிற்கு பாதிப்பை உண்டுப் பண்ணும்; இதனால் வாழ்க்கையில் ஒரு சிடுசிடுப்பான ஒரு தன்மையை, அல்லது வருத்தமான அல்லது முன் கோப மனநிலையை உண்டாக்கும். பெற்றோர்களின் சூழ்நிலைகள் நெறிகெட்டதாயும், சுய நலமுள்ளதாயும், அற்பத்தனமுள்ளதாயும் இருந்தால், இப்படியாக கருவிலேயே

பாதிக்கப்பட்ட குழந்தை பிறந்த பின்னர், அற்பத்தனமான, இழிவான குழந்தையாக, நெறி தவறுதல், சுயநலம் போன்ற தன்மைகளோடு காணப்படுவது எவ்விதத்திலாவது ஆச்சரியமானதாக இருக்குமோ?

உலகத்தில் காணப்படுகின்ற எல்லா பொல்லாப்புகளும், குழந்தை கருவில் இருந்தபோது பெற்றோர்கள் செய்த பாவத்தினாலும், பெலகீனத்தினாலும் பிள்ளையின் மேல் வந்தது என்று நாம் கூறுவதாக எண்ணி விடக்கூடாது. அது மாத்திரமல்ல, அதன் பின்னர் குழந்தை மனிதனாக, அல்லது மனுஷியாக வளரும் காலத்தில் அளிக்கப்படும் பயிற்சினால் அப்படியாயிற்று என்று நாம் கூறுவதாகவும் எண்ணவிடக் கூடாது. நல்லவர்களாக பிறந்து, வளர்க்கப்பட்டவர்கள்கூட கெட்டவர் களாக ஆகக்கூடும் என்று நாம் ஒத்துக் கொள்ளுகிறோம். ஏனெனில், சாத்தானும் கூட பூரணமுள்ளவனாக சிருஷ்டிக்கப்பட்டும், சிருஷ்டிகருக்கு கீழாக போதிக்கப்பட்டும், மனப்பூர்வமாக பாவம் செய்தான். ஆனாலும் பொல்லாத குணங்கள், நேர்மையாவதற்கு எப்பொழுதாவது இந்த இரண்டு முக்கியமான உதவிகளும் கிடைத்தனவா என்பதை மிகவும் சந்தேகத்துடன் பார்க்க நேரிடுகிறது. பொதுவான அறிவுரையாக வேதாகமம் வலியுறுத்துவதை நாம் முழு மனதோடு ஏற்றுக் இருக்கிறோம். ‘‘பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.’’ (நீதி.22:6) இந்த வேத வாக்கியத்தின் உண்மையை கேள்வி கேட்க விருப்பமுள்ள பெற்றோர்களில் எத்தனை பேர் ஒரு குழந்தையை பயிற்றுவிக்க ஆரம்பிக்க வேண்டிய நேரம் அதன் பிறந்த நேரத்திலிருந்தே என்பதையும், மேலும் நல்ல குணாதிசய தன்மைகளுடன் பிறக்காத குழந்தை, அது பிறக்கும் முன்னரே அதற்கு பாதிப்பை ஏற்படுத்திய பெலகீனங்களிலிருந்தும், முட்டாள்தனத்தி லிருந்தும், பாவத்திலுமிருந்தும் வெளியே வரும்படியாக பயிற்றுவிக்கப்படவேண்டும் என்பதையும் நினைவில் வைத்திருப்பார்கள்?

தற்போது காணப்படுகின்ற விழுந்து போன நிலைமையிலும், மற்றும் பூரணமற்ற நிலைமையிலும் ஒரு பூரணமான குழந்தை பிறக்க சாத்தியம் உண்டு என்று அறிவிக்க நாங்கள் விரும்பவில்லை. அதற்கு மாறாக ஆண்டவர் அறிவித்ததை நன்றாக நினைவு கூறுகிறோம்: ‘‘அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பித்தக்கவன் உண்டோ?’’ (யோபு 14:4) அதை விட ‘‘ இதோ, நான் துர்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்’’ (சங்.51:5) என்கிற வார்த்தை

உண்மையானது என்று நாங்கள் உணருகிறோம். நாங்கள் வற்புறுத்துவதெல்லாம், இந்த விஷயத்தில் உலகம் எதைப் பார்த்தாலும் சரி பார்க்காவிட்டாலும் சரி, ஆண்டவருடைய ஜனங்களாக உள்ள புது சிருஷ்டி, இந்த விழுந்து போன இனத்திற்கு சொந்தமான கறைகளையும், பெலகீனங்களையும் ஒரு அளவிற்கு நீக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை உணரவேண்டும் என்பது தான். திவ்விய ஒழுங்கிற்கு உட்பட்டு தங்களால் இயன்ற அளவிற்கு தங்களுடைய குழந்தைகள் உயர்வான பண்புகளோடு பிறக்கும்படியாக பார்த்துக் கொள்ளலாமே. இன்னும் விழுந்து போன நிலையில் அவர்கள் இருப்பார்கள், இன்னும் அவர்களுக்கு ஒரு இரட்சகர் தேவைப்படுவார், அவர் இல்லாமல் அவர்களால் ஒரு போதும் பரிபூரண நிலைமையை அடைய முடியாது, அல்லது நித்திய வாழ்வுக்கு தகுதி பெறவும் முடியாது. ஜென்ம சுபாவமுள்ள மனிதன் ஒரு அளவிற்கு இந்த உண்மையை அறிந்து கொள்ளலாம், ஆனால் புது சிருஷ்டி பயன்பெறும் அளவிற்கு ஜென்ம சுபாவமுள்ள மனிதனால் இந்த யோசனைகளினால் பயன் பெறமுடியாது.

எவ்வளவுதான் முயற்சி செய்து பார்த்தாலும், ஜென்ம சுபாவமுள்ள மனிதன் இன்னும் ஜென்ம சுபாவமுள்ள மனிதனாகவே இருக்கிறான். அவன் பூமிக்குரியவனாக, பூமியின் தன்மை உடையவனாக இருக்கிறான். ஆகவே தன்னுடைய மனைவியின் மேலும், அவள் தன் வயிற்றிலிருக்கும் கருவின் மேலும், அவர்கள் ஏற்கனவே கொண்டுள்ள சிந்தனைகளையும், உணர்வுகளையும் மாத்திரமே பதிக்கமுடியும். ஆனால் இவைகளெல்லாம் மேலான உணர்வாகிய ஆவிக்குரிய உணர்வைப் பொறுத்த வரை மிகவும் குறைவாகவேக் காணப்படுகிறது. புது சிருஷ்டியின் மனம் ஆவிக்குரிய நம்பிக்கைகளையும், வாக்குத்தத்தங்களையும், குறிக்கோள்களையும் பற்றிக்கொள்ளுகிறதோடு, நம்முடைய ஆண்டவராகிய கர்த்தர் தன்னுடைய சத்தியத்தினாலும் கிருபையினாலும் அழைப்பது போன்று இவைகளை அநேகர் இருதயங்களில் பதியவைக்கும்படி நாடுகிறார்கள், விசேஷமாக தேவனுடைய பிள்ளைகளாக்கும்படி நாடுகிறார்கள். இருந்த போதிலும், எந்தக் காரணத்தினாலாவது அவர்கள் விவாக உறவிற்குள் நுழைந்து, மனுகுலத்தில் ஒரு குடும்பத்தை ஏற்படுத்துவது ஞானமான செயல் என்று கண்டால், அவர்களுக்கு இந்த விஷயத்தில் ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு, மனுஷிக்கு இருப்பதைக் காட்டிலும் பெரிய அனுகூலம் உண்டு. அவர்களுக்கு உயர்வான குறிக்கோள்கள், பெரிய நம்பிக்கைகள், நல்ல வாஞ்சைகள், தூய்மையான சந்தோஷம் இருக்கிறது;

மேலும், தங்களுடைய சிந்தனைகள், உணர்ச்சிகள், மெய்யுணர்வுகள் எல்லாம் கருவில் இருக்கும் குழந்தையின் மேல் பெரும் பாதிப்பை உண்டாக்கும் என்று உணர்ந்து, மற்ற பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு செய்ய முடிவதைக் காட்டிலும், இப்படிப்பட்ட பெற்றோர்கள் உண்மையாகவே தங்களுடைய குழந்தைகளுக்கு அதிகமாக செய்யக் கூடிய ஒரு நிலையில் இருப்பார்கள்.

ஏறக்குறைய இதே வழியில்தான் உலகமானது ஒரு சுயநலமுள்ள ஞானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. உதாரணமாக, உயர்தரமான கால்நடைகள், செம்மறியாடுகள், குதிரைகள் போன்றவைகளை விரும்புகிறவர்கள், இணையும் ஜோடியை தெரிந்து கொள்வதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள்; அது மாத்திரமல்லாமல், அதற்கும் மேலாக வேகமாக ஓடக்கூடிய குதிரைகளை இனம் விருத்திச் செய்யும்போது, தாய்க்குதிரைக்கு, கருத்திரித்திருக்கிற வேளையில் நல்ல முறையில் கவனம் செலுத்தப்படுகிறது; அவைகளுக்கு தேவையான எல்லா சௌகரியமும் கொடுக்கப்படுகின்றன; குதிரை லாயங்கள் சுத்தமாகவும், வெளிச்சம் உள்ளதாகவும் வைக்கப்படுகின்றன; எந்த அளவுக்கு பெண் குதிரை படங்களை ஆர்வத்துடன் பார்க்கும் என்ற நிச்சயமில்லாமலே, பெண் குதிரையின் லாயங்களின் சுவர்கள் மேல் பந்தயக் குதிரைகளின் படங்கள் ஒட்டப் படுகின்றன. அது மாத்திரமல்ல, கருவுற்ற குதிரைகள், குதிரைப் பந்தயத்தைப் பார்க்கும்படியான இடத்திற்கு எடுத்துச் செல்லப் படுகின்றன. இவைகள் அனைத்தும் செய்யப்படுவதின் நோக்கம் என்னவெனில், தாய் குதிரையில் ஏற்படும் ஒரு ஆர்வம் அதன் கருவிலிருக்கும் குட்டியில் பதிய வேண்டும், அதன்மூலம் அந்த குட்டி வருங்காலத்தில் வேகமாக ஓடுகிற குதிரையாகி அதன் சொந்தக்காரருக்கு செல்வத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதாகும்.

மனித பெற்றோர்களுக்கு தாங்கள் பெற்றெடுக்கும் இப்படியான செல்வம் பற்றிய ஆர்வம் கிடையாது; ஆனால், அவர்களுக்கு இதைக் காட்டிலும் ஒரு ஆழமான, ஒரு சுயநலமற்ற ஆர்வம் தம் பிள்ளைகள் மேல் இருக்கிறது; அவர்களுடைய குழந்தையைப் பற்றிய அவர்களுடைய நம்பிக்கைகளும் ஆர்வங்களும், மனதிலும், சன்மார்க்கத்திலும் நற்பண்பு நிறைந்தவர்களாய் இருப்பதைப் பார்க்க விரும்புவதுதான். புது சிருஷ்டி தன்னுடைய குழந்தையை ஆவிக்குரிய தன்மையுடன் பெற்றுக் கொள்ளும்படி எதிர்ப்பார்க்க முடியாவிட்டாலும் (ஏனெனில் இது அவன்

சக்திக்குட்பட்டதல்ல), ஆவிக்குரிய காரியங்களோடு இசைவாய் காணப்படுகின்ற, இப்படியான உலகப்பிரகாரமான பண்புகளை அவனுக்கு கொடுக்க எதிர்பார்க்க முடியும். இப்படியான காரியங்கள்தான் அவர்களுடைய வாஞ்சையாக, குறிக்கோளாக, நம்பிக்கையாக இருக்க வேண்டும். அநேக குழந்தைகள், நேர்மையான, பயபக்தியுள்ள பெற்றோர்களுக்குப் பிறந்துள்ளன. அதற்கேற்றாற்போல் அவர்களும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள்; இப்படியான ஒரு செல்வாக்கான நிலை, மனுக்குலத்தின் ஒரு உயர்வான நிலை, எங்கெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷம் சென்றுள்ளதோ அங்கெல்லாம் சென்றுள்ளது. ஆகவே புறஜாதி தேசத்தில் காணப்படுவதை விட, இன்றைக்கு நாகரீகமுள்ள பிரதேசங்களில் உயர்ந்த மாதிரியானவைகளும், நிலைமைகளும் பொதுவாக அதிகளவில் பரவலாக இருக்கிறது. தங்கள் பிள்ளைகளைப் பொறுத்தவரையில், கிறிஸ்தவ ஜனங்கள் பொதுவாக அவர்களுக்குரிய சிலாக்கியங்களையும், கடமைகளையும் சரியானபடி புரிந்து கொள்ளாவிடினும் மேலே கூறப்பட்ட நிலைமை காணப்படுகிறது.

சொல்லப்பட்டவைகளின் சாரம்சம் இதுதான்: புது சிருஷ்டிகள் விவாகத்தில் இணைந்தால், மாம்சத்தின்படி குழந்தைகளை பெற்றெடுக்க வேண்டும் என்று நினைத்தால், அவர்களுடைய மனங்களையும், வாஞ்சைகளையும் பயிற்றுவிக்க வேண்டும். ஆகவே பிள்ளைகளைப் பெற்றெடுக்கும் நேரம், ஒருவருக்கொருவர் அன்பையும் மரியாதையையும் காட்டுகிற நேரமாக மாத்திரம் அல்லாமல், சிருஷ்டிகருக்கு பயபக்தியை காட்டும் வேளையாக இருப்பதோடு, அவர்களுக்கு அளிக்கப்பட்ட, சந்ததியை பெருக்குகிற தெய்வீக வல்லமைக்கு மதிப்புக்கொடுக்கும் வேளையாக இருக்க வேண்டும். மேலும் திவ்விய ஆசீர்வாதத்திற்காக ஜெபம் ஏறெடுக்கும் வேளையாக இருக்க வேண்டும். அதன் பின்னர் வாழ்க்கையில் செய்யப்படும் எல்லா ஒழுங்குகளிலும் குழந்தையின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அது வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவந்தானே என்று எண்ணிவிடக்கூடாது, ஆனால் அது முக்கியமான விஷயமாக இருக்கிறது. அது ஆவியின் கிருபைகளை உபயோகிக்கும்படியான ஒரு விசேஷித்த சம்பவமாக இருக்கும். இவைகள் தேவன்மேலும் அவருடைய வாக்குத்தத்தங்கள்மேலும் வைக்கும் விசுவாசம், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், சகோதர அன்பு, சாந்தம், மென்மையான சுபாவம், அன்பு என்பவைகளாகும். இவைகள் இதற்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வளர்க்கப்பட்டிருக்க வேண்டும். புது

சிருஷ்டிகளிடத்தில் இவைகளனைத்தும் எப்பொழுதும் இருக்கிறது. ஆனால், இப்படியான வேளையில் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில், அவர்களுடைய பண்புகளை இன்னொரு சந்ததியினர் மேல் பதியவைத்துக்கொண்டிருக்கிறார்கள், முத்திரையிட்டுக் கொண்டிருக்கிறார்கள், விளங்கும்படியாக செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு தெரியும்.

கூடுமானவரை வீடு வெளிச்சமாகவும், சந்தோஷம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும்; மனமும் பயன்தரக் கூடிய விதத்தில், வாசிப்பதில், எழுதுவதில், கணிதத்தில், வாழ்க்கையின் அன்றாட கடமைகளில் ஈடுபட வேண்டும்; இருதயத்தின் பண்பாடும் ஞாபகப்படுத்திக்கொள்ளப்பட வேண்டும்; நியாயம், அன்பு, ஞானம் என்பவைகளோடு முழுவதுமாக ஒத்திருக்கும்படி இருதயப்பண்பாடு வளர்க்கப்பட வேண்டும்; வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் ஆண்டவரை தொடர்ந்து அறிந்திருப்பதோடு, புருஷன் மனைவிக்கிடையில் அன்பான நம்பிக்கை உடையவர்களாகவும், உலகத்தாரோடு பொதுவாக அன்பும், இரக்கமும் கூடிய உணர்வுடையவர்களாகவும் இருதயம் பண்படுத்தப்பட வேண்டும். வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் இரக்கம், அன்பு, நியாயம் இணைக்கப்பட்டிருக்கும்போது நிலைமை முற்றிலும் நல்லதாக இருக்கும். ஆனால் புருஷனுடைய முழு ஒத்துழைப்பு, தேவையை கவனிப்பது , மேற்பார்வை போன்றவை இல்லாமல் இப்படியான ஒரு நிலைமையை நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. ஏனெனில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளபடி, குடும்பத்தில் தன்னுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டு தன்னுடையதாக இருக்கிற விஷயங்களைக்கூட தாயினால் இப்படிப்பட்ட வேளையில் மேற்பார்வையிடக்கூடாமல் இருக்கிறாள். அப்பொழுதும் கூட புருஷன் சம்பாஷனையை சரியான முறையில் நடத்துவதில் ஜாக்கிரதை உள்ளவனாக இருக்க வேண்டும். மனதிற்கு சரியானபடி பெலம் தரக்கூடியதாக மாத்திரமல்ல, சரீரத்திற்கான உணவையும் கொடுப்பதில் ஜாக்கிரதை உள்ளவனாக இருக்க வேண்டும். மேலும் அவனுடைய மனைவியின் தூய்மையான மனதை, ஆண்டவரைப் பற்றிய காரியங்கள், அவருடைய மகிமையான திட்டம், திவ்ய சுபாவத்தின் எல்லா அம்சங்கள், அதன் ஞானம், அன்பு, இரக்கம், நியாயம், வல்லமை ஆகியவைகளைப்பற்றி தூண்டும்படி பண்ண வேண்டும்.

அதிகமான கிறிஸ்தவப் பெற்றோர், வீட்டுவேலைகள் பராபரிப்புகளிலிருந்து இப்படியான நேரத்தில் விடுதலைப் பெறும்படி

வாழ்க்கையின் எல்லா சௌகரியங்களையும், வசதிகளையும் பெறும்படியான சூழ்நிலைக் கிடையாது என்று இதற்கு பதில் கூறலாம். சீரான குறிக்கோளைத்தான் நாங்கள் குறிப்பிட்டுள்ளோம், மேலும் இயன்றவரை இந்த குறிக்கோளை அடைய முயற்சிப்பது ஆண்டவருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் சார்ந்ததாகும். ஆனால் புது சிருஷ்டி இதில் மாத்திரமல்ல, வாழ்க்கையின் எல்லா அனுபவங்களிலும், அவனுக்கு உண்டாயிருக்கிற எல்லா குறைவுகளிலும், அனுகூலமற்ற நிலைமைகளிலும் ஆண்டவர் தன்னுடைய கிருபையாலும், ஆவியினாலும் அதை சரிகட்டுகிறவராக இருக்கிறார் என்பதை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. இப்படிப்பட்ட ஒருவர், எவ்விதத்திலாவது அனுகூலமற்ற சூழ்நிலையில் இருக்கும்போது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தினால் இருதயம் நிறைந்திருக்கும்படி அதிக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும், அது மாத்திரமல்ல இருதயத்தில் தொடர்ந்து அந்த சமாதானம் நிலைத்திருக்க ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். இருதயத்தில் இந்த சமாதானம் இருப்பதின் ஒரு விளைவு என்னவென்றால், தவிர்க்க முடியாதபடி எவ்வளவுதான் ஒழுங்கின்மை தாயை சூழ இருந்தாலும், அதிகமான அளவு சமாதானத்தையும், அன்பையும் குழந்தை நிச்சயமாகவே– வேறுசூழ்நிலையில் பிறந்த அதன் சகோதரர்கள், சகோதரிகள் அனுபவிப்பதைக் காட்டிலும், அதிகமாக பெற்றுக் கொள்ளும். அந்த குழந்தை சிடுசிடுப்புள்ளதாகவோ பதற்றமுள்ள தாகவோ இல்லாமல், அதிக அமைதியுள்ளதாக, சமாதானமுள்ளதாக, எண்ணத்திலும், நடத்தையிலும் நீதியுள்ளதாக காணப்படும்.

‘‘பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து’’

‘‘பிரம்பை கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்.’’ (நீதி. 13:24) ‘‘தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளா யிருப்பீர்களே.’’(எபி12:7)

பிள்ளைகளை பயிற்றுவிப்பதற்காக தேவையற்ற சமயத்திலும், அடிக்கடியும் பிரம்பை உபயோகிக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. பெற்றோர்கள் தேவையான சமயத்தில் கூட சிட்சை அளிப்பது தவறு என்று எண்ணக்கூடாது என்பதற்காகத்தான் இந்த

வேதாமப்பகுதியைக் காட்டியுள்ளோம். பிரம்பை கையாளுவதின் மூலம்தான் வீட்டில் ஒழுங்கை நிலைநாட்ட முடியும் என்று காணப்பட்டால் அந்த வீடு சந்தோஷம் இல்லாத வீடாகத்தான் இருக்க முடியும். புது சிருஷ்டிகளின் வீடுகள் பிரம்பினாலன்றி அன்பினால் ஆட்சி செய்யப்பட வேண்டும்; அன்பின் விதிமுறைகளை அமுல்படுத்துவதற்காக ஏதோ ஒரு வேளையில் பயன்படுத்தப்படுவதற்காக மட்டும் பிரம்பு வைத்திருக்கப்பட வேண்டும். அது உபயோகப்படுத்தப்படும்போதுகூட அன்புள்ள கரத்தினாலேயேயன்றி ஒருபோதும் கோபக்கரத்தினால் உபயோகப் படுத்தப்படக்கூடாது. புதுசிருஷ்டிகள், தெளிந்த புத்தியுடையவர்கள், பரலோகத்தில் பிரமாணங்களில் முதற்படியானது ஒழுங்கு என்பதை படிப்படியாக கற்றுக் கொள்ளுகிறார்கள்; ஆகவே அதுவே புதுசிருஷ்டிகளின் வீடுகளில் முதாவதாக இருக்க வேண்டிய தனிச் சிறப்பான குணாதிசயமாக இருக்க வேண்டும்.

ஒழுங்குமுறை என்பது முற்றிலும் அமைதியை கடைபிடிப்பது என்று பொருள் படாது, அப்படிச் சொல்வோம் என்றால் வனாந்திரமும், மரித்தோரின் பட்டணங்களும்தான் ஒழுங்குமுறை காணப்படுகிற இடமாக இருக்கும். ஒழுங்குமுறை என்பது மகிழ்ச்சியையும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், இளைப்பாறுதலையும், சுயாதீனத்தையும், பிரமாணத்தையும் குறிப்பிடுவதாக இருக்கலாம். புதுசிருஷ்டிகளுக்கு ஒழுங்குமுறை என்பது பிரமாணத்தைக் குறிக்கிறது. அன்பின் பிரமாணமும், பொன்னான கட்டளையும் வீட்டின் தலைவரையும், துணைவியையும், பிள்ளைகளையும் ஆளுகைசெய்யும்போது, பெற்றோர்கள் எல்லா கிறிஸ்தவ கிருபைகளிலும் பிள்ளைகளுக்கு உதாரணமாக இருக்கச்செய்கிறது. பிரமாணம் என்பது, அன்பின் பிரமாணம் என்பதுகூட வெகுமதிகளையும் தண்டனைகளையும் குறிக்கிறது. குடும்பத்தில் இதை செயல்முறைப் படுத்துவது பெற்றோர்கள் கையிலிருக்கிறது. அவர்களறிந்த அவர்களுடைய பெலகீனங்களில், அவர்களுக்கும் பரலோகத் தகப்பனின் வழிநடத்துதல் தேவைப்படுகிறது. அதன்மூலம் அவர்கள் தங்களுடைய சித்தத்தினாலும், இருதயத்தினாலும் தேவனை மகிமைப்படுத்துவதோடு, அவர்களுடைய வீடுகளும் பூலோகத்தில் நீதிமான்களுடைய வீடுகளுக்கு உதாரணமாகவும், கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களின் வீடாகவும் இருக்கும்.

பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் வெகுமதியானது தேவையான சௌகரியங்களையும் ஆசீர்வாதங்களையும் கொடுப்பதின் மூலம்

கிடைப்பவைகளாக இருக்க வேண்டும்; பிள்ளைகள் மனமாறச் செய்வதற்கு அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற தண்டனைகள் அவர்களது பிடிவாதத்திற்கு ஏற்றபடி கூடக்குறைய இருக்கலாம்; ஆனால் நீதியின்படியாக ஒருபோதும் இருக்கக்கூடாது; அதற்கு சரியான தண்டனை எது என்று ஆராய்ந்து அதன்பிரகாரம் பிள்ளைக்கு அளிக்கும் முயற்சியாக ஒரு போதும் இருக்கக்கூடாது. ஏனெனில் நாமே நியாயத்திற்கு கீழாக இல்லாமல், கிருபைக்கு கீழாக, அன்பிற்கு கீழாக இருக்கிறோம்; ஆகவே, நாம் மற்றவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டியவர்களாக இருப்பதுமட்டுமல்லாமல், விசேஷமாக நம்முடைய பிள்ளைகளிடம் நாம் நடந்து கொள்ளும் விதத்திலும் இரக்கம் காட்ட வேண்டும். ஏனெனில், அவர்களிடத்தில் காணப்படும் கறைகளும், குறைகளும் நிச்சயமாகவே ஒரு குறிப்பிட்ட அளவு நம்மால் அல்லது நம்முடைய முன்னோர்களால் வந்தது. முத்தம் கொடுக்க மறுப்பது என்பது அன்பினால் சில சமயங்களில் தண்டிப்பது போன்று இருக்கலாம், சில சமயங்களில் ஒரு முத்தமே வெகுமதியாக இருக்கக் கூடும்; ஒழுங்கீனமாக நடப்பவரை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு கீழ்படிகின்றவர்களிடமிருந்தும், அவர்களுக்கென்று கொடுக்கப்படும் சலுகைகளிருந்தும் ஒதுக்கி வைப்பதாகவும் இருக்கலாம். அன்பின் பிரமாணம் சில வேளைகளில் ஒழுங்கு என்ற பிரம்பை இரவு சாப்பாட்டை கொடுக்காமல் அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற அப்பத்தையும் தண்ணீரை மாத்திரம் கொடுப்பதின் மூலமும், மேலும் அதற்கு மேலான சௌகரியங்களையும், ஆடம்பரங்களையும் கொடுக்காமல் இருப்பதின் மூலமும் பயன்படுத்தலாம். அல்லது சில சமயங்களில் உண்மையான பிரம்பை உபயோகிக்கலாம், இதன்மூலம் வீட்டில் ஒழுங்கையும் ஆசீர்வாதத்தையும் காத்துக் கொள்ளலாம். இந்த ஆசீர்வாதம் கீழ்ப்படிகின்ற பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, சிட்சிக்கப்பட்ட பிள்ளைக்கும் உரியதாகும், இப்படி செய்வதன் மூலம் அந்தப் பிள்ளையை ஆசீர்வதிக்கவும், இசைவாயிருக்கவும் உதவி செய்யலாம்.

புது சிருஷ்டி தங்களுடைய பிள்ளைகளிடத்தில் கோபமான அல்லது கடினமான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது என்று புத்திமதியாக சொல்லவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், இப்படிப்பட்ட வார்த்தைகளை எந்த சூழ்நிலைகளிலும் யாரிடத்திலும் உபயோகிப்பது சரியானதல்ல என்று அவர்களுக்கே தெரியும். அதற்கு மாறாக அவர்களுடைய வார்த்தை கிருபை நிறைந்ததாயிருக்க வேண்டும்,

கடிந்துகொள்ளும்போது கூட அது அன்பும் இரக்கமும் நிறைந்ததாயிருக்க வேண்டும். அவசரப்பட்டு அடிப்பது மிகத்தவறானதாகும் என்று எடுத்துச்சொல்வதும் தேவையற்றது; ஏனெனில், அப்படிச்செய்யும்போது அது பிள்ளைக்கு சரீரபிரகாரமான காயத்தை உண்டுபண்ணுவதுடன் ஒரு வேளை, அது செவியில் கேட்கும் தன்மையைக்கூட பாதிக்கலாம், மாத்திரமல்ல அது அன்பையும் காயப்படுத்தலாம்; மேலும் பெற்றோர்களிடத்தில் அன்பிற்கு பதிலாக பயத்தை உண்டு பண்ணலாம்; அன்பினால் மாத்திரமே கீழ்ப்படிதலுக்கும் ஒழுங்குமுறைக்கும் வீட்டில் அஸ்திபாரம் போடப்படமுடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அவசரப்பட்டு அடிப்பதும் கடினமான வார்த்தையை உபயோகிப்பதும் தவறானதாக இருக்கும்; பெற்றோர்களிடத்தில் தவறான மனப்பாங்கு இருப்பதையும் அது காட்டுவதாக இருக்கும். இப்படியிருப்பது அன்பின் பிரமாணத்தின்படியாக அந்த விஷயத்தில் சரியான நீதியுள்ள தீர்மானம் எடுப்பதற்கு ஏற்றநிலையாக இருக்காது. தன்னுடைய பிள்ளைக்கு ஏற்றதாக இருப்பதுபோன்று, அது தன்னுடைய ஒழுங்குமுறைக்கும் ஏற்றதாக உள்ளது என்பதை பெற்றோர்கள் உணர்வார்கள்; அதோடு, சரியானபடி யோசித்துப்பார்க்காமல் தேவையற்ற அதிக அளவான ஒரு தண்டனையை கொடுக்காமல், அமைதியாக உணர்ச்சிவசப்படாமல் யோசித்துப்பார்த்து, குறைவாக இருப்பதுபோன்று—தோன்றுகிறதையே அளிப்பான். பிள்ளை சூழ்நிலையை சரியாகப் புரிந்துகொள்ளச் செய்வதும், வீட்டில் ஒழுங்கைக் கடைபிடிக்க அது தேவையானது என்பதை உணரும்படி செய்வதும் பெற்றோரின் கடமையாகும். வீட்டில் உள்ள சந்தோஷம் வீட்டில் உள்ள அனைவருக்கும் தொடர்ந்து ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்று பிள்ளை சரியாக புரிந்து கொள்ளுவதும் பெற்றோரைச் சார்ந்ததாகும். மேலும், பெற்றோர் தன்னிடத்தில் கோபமோ, விரோதமோ, வெறுப்போ இல்லாதிருக் கிறார்கள் என்றும் அவர்கள் தன்னிடத்தில் அன்பாயும், இரக்கமாகவும் இருக்கிறார்கள் என்றும், நன்மை செய்ய வேண்டும் என்ற வாஞ்சையைத் தவிர வேறு எண்ணம் கிடையாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

பூலோகத்தில் உள்ள பெற்றோர் இப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாட்டை கையாள முயற்சிக்கலாம்; ஆனாலும், பரலோக பிதாவுக்கு அவர்கள் தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுக்காமலும், அவருடைய ஆளுகைக்கும், அவருடைய வார்த்தைக்கும் முழுவதுமாக ஒப்புக்

கொடுக்காமலும் இருக்கும்போது அப்படி செயல்படமுடியாதபடி அவர்களிடத்தில் ஒரு முக்கியமான உதவி குறைவுபட்டிருக்கும். அப்படியான சூழ்நிலையில் புது சிருஷ்டியைப் போன்று, திவ்விய பிரமாணத்தையும் அதற்கு கீழ்ப்படிய வேண்டியிருப்பதையும், அதை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதையும், அதற்கு கீழ்ப்படியும்படியாக அவர்கள் எடுத்துள்ள முயற்சிகளையும் சுட்டிக்காட்ட இயலாது. கிறிஸ்தவ பெற்றோரிடம் ஒரு அனுகூல மூலமான சூழ்நிலை உள்ளது. அவர்கள் தேவனுடைய வசனத்திலிருந்து, ஒரு குழந்தை வளர வேண்டிய வழியில் பெற்றோர்கள் அதை வளர்க்க வேண்டும் என்ற திவ்விய கட்டளையை வாசிக்க வேண்டும், அதை அவர்கள் உபயோகிக்க வேண்டும். மேலும், நாம் எல்லோரும் விழுந்து போன நிலையில் இருப்பதினால், நம்மால் திவ்விய திட்ட அளவுக்கு வர இயலாமல் இருக்கிறபடியால் இது அவசியமாயிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவதோடு, நாம் பிறந்துள்ள சூழ்நிலைகளில் காணப்படுகின்ற பொல்லாத நிலைமையிலிருந்து மீளும்படி இப்படியான சீர்திருத்தங் களுக்கு இவைகள் உதவிகளாக இருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். பிள்ளைகளுடைய மனங்கள் இந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாது என்றும், சரியானதிற்கும், தவறானதற்கும் உள்ள வித்தியாசத்தை உணராதிருக்கிறார்கள் என்றும், மேலும், தவறு செய்தால் நியாயமான தண்டனை உண்டு என்பதையும், அதே வேளையில் நன்மை செய்தால் வெகுமதி உண்டு என்பதையும் அறியாதிருக்கிறார்கள் என்றும் நினைப்பது தவறு.

அனேக பெற்றோர்கள், தங்களுடைய சிறு வயதில் நீதியின் ஒழுங்குகளை எப்படி கற்றுக்கொண்டார்கள் என்பதையும், அப்போது, கண்டிக்கவும், திருத்தவும் தேவைப்பட்டபோது சிட்சிக்கவும் பெற்றோர்கள் தவறவில்லை என்பதையும் தங்கள் வாழ்க்கையில் பின்னோக்கி பார்க்க மறந்து விடுகிறார்கள். நாம் குழந்தையாய் இருந்த வேளையில், பெற்றோர்கள் நம்மை கண்டித்தபோது, மனதளவில் அவைகள் நமது குணத்தை அபிவிருத்தி செய்யும் படியாகத்தான் செய்யப்பட்டது என்பதில் உள்ள நியாயத்தை உணர்ந்தோம் என்பதை நாம் கூட நினைத்துப்பார்க்கிறோம்; ஆனால், நாம் குற்றம் செய்யாதபோது, நாம் கண்டிக்கப்பட்ட போது, அல்லது தண்டிக்கப்பட்டபோது, அது நியாமானதல்ல என்று உணர்ந்தபோது எப்படி ஆத்திரமடைந்தோம் என்பதையும், அல்லது நாம் குற்றத்திற்குரிய தண்டனையைக் காட்டிலும்

அதிகமாக தண்டிக்கப்பட்டபோது எப்படி ஆத்திரமடைந்தோம் என்பதையும் நினைத்துப்பார்க்கிறோம். ஒரு குழந்தையின் மனதை சரியானது அல்லது தவறானது, உண்மையானது அல்லது, பொய்யானது, நியாயமானது அல்லது அநியாயமானது என்ற பிரகாரம் நடத்துவதற்கு அதுவே சரியான, நிச்சயமான வழியாக இருப்பது மாத்திரமல்ல, இந்த பருவத்தில் குழந்தை பெற்றோர்களின் சொல்லுக்கு இணக்கம் தெரிவிக்கும் நிலையில் இருப்பதால், அது குணாதிசயத்தில் வளர்ச்சி செய்யவும் உதவி செய்வதாக இருக்கிறது; குழந்தையின் மனசாட்சியும், விஷயங்களை கணிக்கக் கூடிய தன்மையும் உருவெடுக்கின்ற நிலையில் இருப்பதால் இது பண்பை வளர்க்கும் வேளையாக இருக்கிறது; மேலும், இவ்வேளையில்தான் குழந்தை தனது பெற்றோர்கள் மாத்திரமே தனக்கு ஒழுங்குமுறையை கற்றுத்தருபவர்கள் என்பதை சரியான விதத்தில் உணருகிறது. பண்பை வளர்க்கும் இந்த வேலையை குழந்தைப் பிராயத்தில் பார்க்காது விட்டுவிட்டால், இது எதிர்காலத்தில் இன்னும் அதிக கடினமான வேலையாகிவிடும்; மேலும், இடைப்பட்ட காலத்தில் இது பெற்றோர்களுக்கும், குழந்தைக்கும், அயலகத்தாருக்கும், நண்பர் களுக்கும் அதிகமான துர்பயன்களை விளைவிக்கும்.

ஆகவே, ஒரு குழந்தை எப்படி வெளிப்படையாக பண்புடன், சாந்தத்துடன், கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் என்பது போன்றவைகளை கற்றுக் கொடுப்பதில் மாத்திரமே அதன் பயிற்சியாக இருக்கக் கூடாது என்பதை சிந்திப்பதும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது; ஆனாலும், இருதயத்தில் சரியான கருத்துக்களைப் பதிய வைப்பதும், வயோதிகருக்கும் இளமையில் உள்ளவர்களுக்கும் ஆண்டவரின் சிந்தை உடையவர்களாக இருப்பதே வாழ்க்கைக்கு ஏற்ற முறையாகும் என்று சரியானபடி உணர வைப்பதுமே மிக முக்கியமானதாக உள்ளது. பொன்னான கற்பனை, அன்பின் கட்டளை, தயாளம், சாந்தம், அமைதி, பொறுமை என்கிற பிரமாணங்கள், குழந்தைகள் மனதில் பதியும்படியும், குடும்பத்தில் உள்ளவர்கள், நண்பர்கள் முதலானோருடன் குழந்தை கொள்ளக் கூடிய உறவில் காணப்படும்படியாகவும் கற்றுக்கொடுக்க வேண்டும். சுயநலமாக இருக்கும்படியாக கற்றுக் கொடுக்கப்படுகிற குழந்தை, அல்லது இயற்கையாகவே சுயநலத்துடன் காணப்படும் குழந்தை, அதன் சுய நலத்தை குழந்தையிடம் அன்புடன் எடுத்துக் கூறப்படாவிட்டால் (ஆனாலும் மற்றவர் முன்னிலையில் அப்படி செய்யலாகாது), அதை அன்புடன் கண்டித்து, திருத்தாதிருக்கும்போது,

அந்தக் குழந்தை மிகவும் சரியான வேளையில், மிக முக்கியமாக பாடத்தைக் கற்றுக் கொள்ளத் தவறிவிடுகிறது.

குழந்தையின் வெளிப்புற நடத்தையைக் குறித்தும், மனதிற்கும், நிதானித்து அறியும் அறிவுக்கும் ஏற்ற அறிவுரைகளையும் சீர்திருத்தங்களையும் கொடுப்பதற்கு இப்படியான ஒரு தருணத்தை பெற்றோர்கள் பயன்படுத்த வேண்டும்; அப்படி பயன்படுத்தாத பெற்றோர், தன்னுடைய குழந்தையைப் பொறுத்தவரையில் மிக நல்லதொரு தருணத்தை இழப்பது மாத்திரமல்ல, கிருபைகள் மாத்திரமே வளர வேண்டிய மனம் எனும் தோட்டத்தில் களைகளையும் வளர அனுமதிக்கிறார்கள்; இப்படி செய்வதினால் வருங்காலத்தில் அப்படிப்பட்ட பிள்ளைகளோடு உள்ள உறவில் தனக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ, பிரச்சனைகள் வர வழிவகுக்கிறார்கள். நல்ல மனம் படைத்த _பெற்றோர்களின் இருதய வேதனைகளுக்கும், கண்ணீருக்கும் பிள்ளைகளின் வழி தவறிய போக்கும், தன்னிச்சையான செயல்களும், சுயநலமும், இளமையின் ஒழுங்கீனமான செயல்களும் காரணமாக அமைந்து விடுகின்றன; இதற்கு காரணம் அவர்கள் குழந்தைகளாக இருக்கும்போதே பெற்றோர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்யாமல் விட்டு விட்டதே. மேலும், இப்படிப்பட்ட பெற்றோர்கள் தங்களுடைய சொந்த அனுபவங்களில் ஒரு பெரிய ஆசீர்வாதத்தை இழந்து விடுகிறார்கள். குழந்தையை சரியான விதத்தில் சுயநலமற்ற தன்மையிலும், அன்பிலும், கீழ்ப்படிதலிலும், ஆண்டவரிடம் பயபக்தியிலும், தன்னுடன் இருப்பவர்களுக்கு உதவி செய்வது போன்றவைகளிலும் பயிற்சிவிக்கும் பெற்றோர்கள், தாங்களே நல்ல அனுபவங்களை பெற்றுக்கொள்கிறார்கள்; தங்கள் குழந்தைகளுக்கு இந்த குணங்களை கற்றுக் கொடுக்க முயலும் வேளையில் அவர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளருகிறார்கள் என்பது உண்மையாகும். அதே வேளையில், பெற்றோர்களது அன்றாட வாழ்க்கையிலும், ஆண்டவரோடும், சக குடும்ப அங்கத்தினரோடும், சக மனிதர்களோடும் கொண்டுள்ள உறவிலும் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க விரும்புகிற கருத்துக்களை தங்களுடைய சொந்த வாழ்க்கையில் நடந்துகாண்பிக்கும்படி குழந்தைகள் எதிர்பார்ப்பார்கள் என்பதை அவர்களும் கற்றுக்கொள்கிறார்கள். இது அவர்களை, தங்களுடைய சொந்த வார்த்தைகளைக் குறித்தும், தங்களுடைய நடத்தையைக் குறித்தும் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாக்கும். மேலும் இப்படியாக ஜாக்கிரதை யாக இருப்பது, பொதுவான, தனிப்பட்ட வாழ்க்கையின் எல்லா சிறிய

அம்சங்களிலும் கவனம் செலுத்துவது, இப்படியான ஒரு பெற்றோரிடம் நிச்சயமாகவே அதிகமான அளவு ஆண்டவரின் ஆவியின் கிருபைகளை விருத்தியடையப்பண்ணும், மேலும் இப்படியாக அதிக அளவிற்கு தேவனுக்கு பிரியமானவனாக ஆக்குவதோடு கூட, இராஜ்யத்திற்கென அவனை ஆயத்தப்படுத்தவும், தகுதியாக்கவும் செய்யும்.

வீட்டின் சூழ்நிலை எவ்வளவுதான் ஏழ்மையானதாக இருந்தாலும், தூய்மையானதாக காணப்பட வேண்டும். நாம் அறிந்துள்ளபடி தற்போதைய சூழ்நிலையில் சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் முற்றிலும் தூய்மையாக இருப்பது சாத்தியமில்லை. அதே மாதிரி வெளியரங்கமாக தூய்மையாக இருப்பது முடியாத காரியம், ஏனெனில் காற்று தூசியாலும், புகையினாலும் நிறைந்திருக்கிறது. ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவ வீடும் கூடியமான வரையில் முற்றிலும் தூய்மையுள்ளதாக இருக்கவேண்டும். வெளிப்படையான அழுக்கு, குப்பை ஆகியவைகளிலிருந்தும் சுத்தமாக இருக்க வேண்டும். அபூரண மட்பாண்டங்கள் உண்டாக்கப்படுவதுபோல நேர்மையின்மையிலிருந்தும் கறைகளிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும். எவ்வளவுதான், தன்னுடைய வீடு ஏழ்மை நிலையிலிருந்தாலும், எவ்வளவுதான் குறைவான சாமான்களுடன் இருந்தாலும், ஒவ்வொரு குழந்தையும் வீட்டைப் பார்க்கும் போது, அதை ஒரு தூய்மையான இடமாக, தேவனுடைய ஒரு வீடாக, ஒரு பரிசுத்த ஸ்தலமாக காணமுடிய வேண்டும். தன்னுடைய வீட்டை ஞாபகப்படுத்திப் பார்க்கும் போது, குடும்ப பலிபீடத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் சத்தத்தையும், பல சந்தர்ப்பங்களில் தகப்பன் அல்லது தாய் கூறிய அன்பான வார்த்தைகளையும் மனதிருப்தியாலும் ஆண்டவரின் வழி நடத்துதலுக்காக விட்டுக் கொடுத்ததால் ஏற்பட்ட பொதுவான சமாதானத்தின், இளைப்பாறுதலின் ஆவியையும் ஒவ்வொரு குழந்தையும் காணும்படியாக இருக்க வேண்டும். வீட்டில் அன்பின் இனிய வாசனையை காண்பதோடு, வீட்டில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரோடும் இனிய வாசனை இருப்பதையும் அது சாந்தத்திலும், சாதுவான தன்மையிலும், இரக்கத்திலும், உதவி செய்யும் தன்மையிலும் வெளிப்படுவதை அவனால் உணர முடிய வேண்டும்.

இப்படி அன்பின் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த ஒரு குழந்தை அவனுக்கு அறிவு தெரிந்த நாளிலிருந்தே, ஆண்டரைப் பிரியப்படுத்த வாஞ்சையுள்ளவனாயும், அவருக்கு கீழ்ப்படிய வாஞ்சையுள்ளவனாயும் இருப்பான் என்று எதிர்ப்பார்க்கலாம். மேலும், அவன் பத்து அல்லது

பண்ணிரண்டு வயதை எட்டிய காலத்திலிருந்து, ஆண்டவருக்கென தன்னை முற்றிலுமாக அர்ப்பணிப்பது சரியானது என்றுகூறி உற்சாகப்படுத்தப்பட வேண்டும். மேலும், அவன் விஷயங்களை சரியானபடி புரிந்துகொள்ள முடியாமலிருக்கும் போது அவன் ஆண்டவருக்கு முன்னால் எடுக்கும் நிலைமையானது பெற்றோர்கள் மூலமாகத்தான் இருக்கிறது என்பதை அவன் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், மனதில் முதிர்ச்சியைப் பெறும் அளவின்படி ஆண்டவர் தனிப்பட்ட ஒரு அர்ப்பணிப்பை அவனிடம் எதிர்ப்பார்க்கிறார். இப்படியாக பயிற்றுவிக்கப்பட்ட ஒரு குழந்தை ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்ய தவறினால் அல்லது மறுத்தால் அப்பொழுதும் வீட்டில் உள்ள தூண்டுதல் இன்னும் தொடரும் என்று நிச்சயித்துக் கொள்ளலாம்; ஆனாலும் மன வளர்ச்சியின் பருவம் அடைந்தப் பின்னரும், ஆண்டவரோடு உடன்படிக்கை செய்யப்படாமல் இருக்கும் போது, இப்படிப்பட்ட ஒருவன் கிருபையின் சிங்காசனத்தை நெருங்குவதற்கும், மேலும் அவருடையவர்களுக்கு கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற வைகளை அவன் சுதந்தரித்துக் கொள்ளுவதற்கும் அவன் தயங்கலாம்; எனெனில், அவன் அவருக்கு சொந்தமானவனாக ஆக மறுத்துவிட்டான். இருந்த போதிலும், தங்கள் மேலும், குழந்தையாக இருந்த வீட்டின் மேலும் தேவனுடைய பாதுகாப்பும், கிருபையின் சிங்காசனத்திற்கு செல்ல எடுக்கப்பட்ட காலங்களைக் குறித்ததான ஒரு விலையேறப்பெற்ற ஞாபகம் இன்னும் இருந்து கொண்டிருக்கும். மேலும் திவ்விய பாதுகாப்பிற்காகவும், சிருஷ்டிகரை ''அப்பா, பிதாவே'' என்று அழைக்கும்படியாக அணுகக்கூடிய ஒரு சிலாக்கியத்திற்காகவும் அவரோடு உள்ள உறவை உணர்ந்து கொள்ளும்படியான ஒரு வாஞ்சையும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். இப்படிப்பட்ட ஒருவன் ஒரு பெற்றோராக ஆகும்போது, அவன் உடனடியாகவே தனது மனதிற்குள் அவன் பயிற்சியளிக்கப்பட்டபடியே தன்னுடைய பிள்ளைகளுக்கும் பயிற்சியளிக்கும் ஒரு வாஞ்சையை உணருவான்; இந்த எண்ணங்கள் எல்லாம் படிப்படியாக அவனுடைய இருதயத்திற்குள் வரத்தொடங்கும்; மேலும், அந்த வேளை வரும்போது, அவன் அர்ப்பணம் செய்து கொள்ளுவான் என்று எல்லா நிச்சயத்தோடும் கூறலாம். எந்த நிலைமையிலும், தேவ பக்தியுள்ள வீட்டின் நல்ல சூழ்நிலை அவனோடு இருந்திருக்கும், மேலும் அவன் விழுந்து போகக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அனேக தீமைகளிலிருந்து ஒரு பரிசுத்த பாதுகாப்பு அவனோடு நிச்சயமாக இருந்திருக்கும்.

இப்படியாக அன்பின், இரக்கத்தின், பொறுமையின், சாதுவான தன்மையின் இனிமையான வாசனையுள்ள ஒரு வீட்டோடு, ஆண்டவருடைய ஆவி இல்லாத வீட்டை ஒப்பிட்டு பார்க்கும் போது ஆண்டவருடைய ஆவி இல்லாத வீட்டில் சுய நலம் தான் சட்டமாக இருக்கிறது; இப்படியான வீட்டில் உள்ள குழந்தை பெற்றோர்களுக்கு இடையில் உள்ள வாக்குவாதங்களைக் கவனிக்கிறது; மேலும், எப்படி ஒருவருவருக்கொருவர் விட்டுக் கொடாமல் தனது சுயத்தை மட்டும் நிலைநாட்ட ஒவ்வொருவரும் முயற்சிக்கிறார்கள் என்பதை குழந்தை கவனிக்கிறது; இப்படிப்பட்ட வேளையில் குழந்தையின் காதில் விழுவதெல்லாம், கடிந்து கொள்ளுதல், புகார் கூறுதல், குற்றம் கண்டுபிடித்தல், கோபமான வார்த்தைகள், கடுமையான சத்தங்கள் போன்றவைகள்தான். இவைகள் பிள்ளைகளுக்குள் தொற்றிக் கொள்ளுகின்றன, அவர்களும் இதற்குப் பின்னர் சிறிய விஷயங்களுக்காகக் கூட வாக்குவாதம் பண்ணுகிறார்கள், ஒருவரோடு ஒருவர் கோபமாக பேசுகிறார்கள், வீட்டை எப்பொழுதும் குழப்பத்தில் வைக்கிறார்கள். வீட்டில் காணப்படும் இந்த சுயநலம் தொடர்ச்சியாக இருக்கும் போது, இது குழந்தையின் மனதிலும், நடத்தையிலும் வளர்ச்சி பெறுகிறது.

கோபமான ஒரு குரலில் பெற்றோர் குழந்தையை ராஸ்கல் (“ little rascal”) என்று திட்டும்போது, அதன் குணத்திற்கு எதிராக இப்படியாக ஒரு பிரதிபலிப்பு வரும்போது, முதலாவது குழந்தை மன வேதனைப்படுகிறது, பின்பு கடின மனதைப் பெறுகிறது, காலப்போக்கில் ராஸ்கலாக இருப்பதில் பெருமிதம் அடைகிறது. ‘‘ நான் உன்னை நையப்புடைப்பேன்’’ அல்லது ‘‘உன்னுடைய முதுகை உடைப்பேன்’’ என்று கோபமுள்ள தாயின் சத்தம் வரும்போது, இந்த வார்த்தைகளினால் சந்தேகத்திற்கு இடமின்றி ஓர் அளவு பயம் குழந்தையின் இருதயத்திற்கு அறிவிக்கப்படுகிறது; ஆனால், வெகு சீக்கிரத்திலே இவைகளெல்லாம் வெறும் பயமுறுத்துதல் தான் என்று கற்றுக்கொள்ளும் போது, அதே அளவிற்கு பயமும் அதை விட்டு அகன்று விடுகின்றது. மேலும் அரசாங்க சட்டம் தன்னுடைய பெற்றோர்கள் தனக்கு கடுமையான துன்பத்தை அனுமதிக்காது என்பதையும் ஏற்ற சமயத்தில் அறிந்து கொள்ளுகிறது. குழந்தையின் மனமும், தன்னுடைய பெற்றோர்களும் தனக்கு தீங்கு செய்ய நினைத்தாலும் கூட அவர்களுக்கு அந்த சுதந்திரம் கிடையாது என்ற முடிவிற்கு வந்து விடுகிறது. இப்படிப்பட்ட ஒரு சிறு மனதிலிருந்து ஆரம்பத்தில் உள்ள அன்பின் உணர்வு வெளியேற்றப்பட்டுவிட்டது.

கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் கூட பெற்றோர்கள் உண்மையற்றவர்களாக இருப்பதை அது காண்கிறது. அனேக முறைகளில் வாக்குறுதிகள், அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணமே இல்லாமலேயே கொடுக்கப்படுவதையும் குழந்தை காண்கிறது. இப்படியாக, தன்னுடைய உண்மையான நோக்கத்தைப் பொறுத்தவரை குழந்தைக்கு பொய் சொல்லவும், பயமுறுத்தவும், வாக்குக்கொடுக்கவும், மற்றவர்களை ஏமாற்றவும் கற்றுக் கொடுக்கப் படுகிறது. இப்படிப்பட்ட ஒரு குழந்தை ஒரு கடினமான குணம் உடைய குழந்தையாக வளருவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் உண்டா? ஆச்சரியப்படுவது என்பது மோசமான பயிற்சிக்கும், வித்தியாசமான பயிற்சிக்கும் இடையில் நாகரிக உலகமானது பயிற்சியே இல்லாதிருப்பது அதைக் காட்டிலும் மோசமானதல்ல.

நீதிமானாக்கப்பட்டு பிறந்த குழந்தைகள்

இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும், புது சிருஷ்டி தன்னுடைய குழந்தைகளைப் பொறுத்த வரையில் மற்றவர்களைக் காட்டிலும் உண்மையாகவே அனுகூலம் உள்ளவனாக இருக்கிறான். அவர்கள், முதலாவதாக நல்ல பிறப்பை உடையவர்களாக, பிறப்பின் போதே நன்மையானவைகளினால் நிறைந்திருக்க வேண்டும். பெற்றோரால் கொடுக்கப்படுகின்ற இந்த நன்மைகள் குழந்தை பிராயத்தின் ஆரம்பத்திலிருந்தே வழங்கப்பட வேண்டும். தாய் உணர்ச்சியடை கிறவளாகவும், கடுகடுப்புள்ளவளாகவும், கவலைப்படுகிறவளாக இருக்கும் பட்சத்தில் பிறந்து ஒரு சிறு நாட்களே ஆன குழந்தையும் கூட அப்படித்தான் இருக்க வேண்டும். தாயின் குணாதிசயம் குழந்தைக்குள் தாய்ப்பால் மூலமாக மாத்திரமின்றி, மனம் மூலமாகவும், உராசுதல் மூலமாகவும், அவளுடைய சரீரத்திலிருந்து செல்லுகிறது. ஆகவே புது சிருஷ்டிக்கு, ஆண்டவருடைய ஆவி வாசமாக இருப்பதினால், அதன் சமாதானம், அன்பு, மகிழ்ச்சி ஆவியோடு இருப்பதினால் எவ்வளவான பொதுவான அனுகூலம் இருக்கிறது. இப்படிப்பட்ட பராமரிப்புக்குள் உள்ள குழந்தை எவ்வளவு அனுகூலம் பெற்றதாக இருக்க வேண்டும். மனுஷீக தன்மையுடன் சொல்லவேண்டும் என்றால் மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவர்களுக்கு கனம் பொருந்திய மனிதனாக, மனுஷியாக வருவதற்கு அதிகமான சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆண்டவருடைய வசனத்தின்படி பேசும்போது, ஆண்டவருக்கென அர்ப்பணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகளும், தங்களைப்

போன்றே அதிகமான அனுகூலத்தில் இருப்பதோடு தங்களுடைய காரியங்கள் எல்லாவற்றிலும், திவ்விய வழி நடத்துதலின் மேற்பார் வையில் இருக்கிறார்கள். விசுவாசிகளின் குழந்தைகள் கூட ''சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறது'' என்ற வாக்குத்தத்தின் கீழ் வருகிறார்கள்.

தங்களுடைய பெற்றோர்களும், ஆண்டவரும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவினாலும், புது சிருஷ்டியின் பிள்ளைகள் நீதிமானாக எண்ணப்படுகிற நிலையை ஆண்டவரோடு கொண்டுள்ளதை பார்ப்பது கடினமானதல்ல. ஆதாமும், ஏவாளும் கீழ்ப்படியாமையினால், பரலோக பிதாவினிடமிருந்து பிரிந்து வர நேர்ந்தது. இது அவர்களுடைய சந்ததிகள் அனைத்திற்கும் பிரிவைக் கொண்டுவந்தது. அதுபோல, ஆண்டவருடைய ஜனங்களின் ஒப்புரவாகுதல், மாபெரும் மீட்பரின் புண்ணியத்தினால் வந்தது போல, அது அவர்களை தேவனோடு பழையபடி ஒருமனப்பாட்டிற்குள் கொண்டுவருகிறதோடு, அவர்களுடைய பிள்ளைகளும் அவர்களுடைய பெற்றோர்கள் மூலம் நீதிமானாக எண்ணப்படுகிற நிலமைக்கு கொண்டு வருகிறது. அவர்கள் அறிவையும், தங்களுக்கென்று ஒரு சித்தத்தையும் பெறுமளவும் அவர்களுடைய பெற்றோர்களினால் அவர்கள் நீதிமான்களாக எண்ணப்படுவார்கள். இருந்த போதிலும், பெற்றோர்களில் ஒருவர் ஆண்டவருடையவராகவும் மற்றவர் அந்நியரும் பரதேசியுமாயிருக்கும் போது கேள்வி மிகவும் சிக்கலானதாக இருக்கிறது. ஆனால் அப்போஸ்தலர் தைரியமாக கூறுகிறார்: இப்படிப்பட்ட விஷயத்தில், பெற்றோர்களில் ஒருவர் ஆண்டவருடையவராக இருந்தாலும் தேவன் பிள்ளையை தன்னுடையதாக எண்ணுகிறார். குழந்தையைப் பொறுத்தவரையில் விசுவாசியாக இருக்கிற பெற்றோரின் செல்வாக்கு– பிரதிஷ்டை செய்துக் கொண்ட செல்வாக்கு, பிரதிஷ்டை செய்து கொள்ளாத பெற்றோரின் செல்வாக்கை மேற்கொள்ளுகிறதாயும், ஈடுகட்டுகிறதாயும் இருக்கிறது. இந்த விஷயத்தைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது:–

இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே (பாவம் நிறைந்தது, ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டது)

''அவிசுவாசியான புருஷன் (விசுவாசியான) தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் (விசுவாசியான)

தன் புருஷனால் பரிசுத்தமாக்கப் படுகிறாள் (அவர்களுடைய விவாகத்தின்மூலம் பிள்ளைகளைப்பற்றிய விஷயத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம்). இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே (ஆக்கினைக்குள்ளான பாவிகளாக, நீதிமான் களாக்கப்படாதவர்களாக, தேவனுக்கு சொந்தமில்லாதவர்களாக, அவருடைய பாதுகாப்பிற்கும், ஆசீர்வாதத்திற்கும் அந்நியர்களாக); இப்பொழுதோ (திவ்விய கிருபை கொடுக்கப்பட்டிருக்கிறபடியால்) அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன. (தற்சமயத்தில் தேவனோடு நீதிமானாக ஆக்கப்பட்டிருக்கிற நிலையினால், அவர்களை சத்துருக்களாக நடத்தமாட்டார்).'' 1கொரி.7:14

பிள்ளைகளை சரியான முறையில் நடத்துவது என்பது கடினமான ஒன்றாக இருக்கலாம், ஆனால் ஆண்டவரால் பார்த்துக் கொள்ளுவதற்கு மிகவும் கடினமானதல்ல. ஆகவே, பெற்றோர் கிறிஸ்தவராகியுள்ள அளவிற்கு, அவனுடைய விஷயத்தை பொறுத்த வரையில் ஆண்டவருடைய கிருபை பெரிதாக இருக்க எதிர்ப்பார்க்கலாம். எனவே, அவன் மிக கடினமான சூழ்நிலைகளிலும் தன்னுடைய கடைமைகளை செய்யும்படியாக பரத்திலிருந்து வருகிற ஞானத்தையும், உதவியையும் ஊக்கமாக தேட வேண்டும். எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவருடைய கிருபை நமக்குப் போதுமானதாக இருக்கிறது. ஒருவர் புது சிருஷ்டியாகவும், மற்றவர் ஒரு அவிசுவாசியாக அல்லது பிரதிஷ்டை செய்து கொள்ளாதவராக இருக்கும்போது, குடும்பத்தின் தலைமையைப் பொறுத்த வரையில் தெய்வீக ஒழுங்குமுறையை மாற்றாது. இந்த பொறுப்பு இன்னமும் புருஷன் மேல் தான் இருக்கிறது. ஆகவே, அவன் புது சிருஷ்டியாக இருந்தால் பரத்திலிருந்து வருகிற, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஞானத்தினால், இப்படியான சூழ்நிலைகளில் தன்னுடைய குடும்பத்தின் விஷயங்களை நல்வழியில் நடத்தவேண்டும். மனைவி புது சிருஷ்டியாக இருந்தால், அவளுடைய தெளிந்த புத்தி, நீதியான கருத்துகளின் மேல் உள்ள பற்றுதல், அவளுடைய அமைதியான சுபாவம், சாந்தம், ஆழ்ந்த சிந்தனை, ஜாக்கிரதை ஆகியவைகள் அவளை குடும்பத்தில் ஒரு நல்ல ஆபரணமாக ஆக்க வேண்டும்; அது அவருடைய வெளிச்சத்தை புருஷனுக்கு முன்பாக அவ்வளவு அதிகமாக பிரகாசிப்பிக்கும், அதன் விளைவாக அவளுடைய புருஷன், பிள்ளைகளின் முழுப்பொறுப்பையும் அவளிடத்தில் கொடுப்பதில் சந்தோஷம் அடைவான். ஏனெனில், இதற்கு அவள் முற்றிலும்

தகுதியானவள் என்று உணருகிறான். எனினும், அவள் உபயோகிக்கிற எந்த ஒழுங்கும் அல்லது அதிகாரமும் அவளுடைய புருஷனால்தான் அவளுக்கு கொடுக்கப்படும்; புருஷன் பரிசுத்தமானவனாய் இருந்தாலும் பாவியாய் இருந்தாலும் அவனுடைய வீட்டிற்கு அவன்தான் பொறுப்புள்ள தலைவனாக இருக்கிறான்.

இதே மாதிரி புருஷனும், தன்னுடைய வெளிச்சத்தை பிரசாகிப்பிக்கப்பண்ணும் போது, அவன் காலம் செல்வதற்கு முன்னரே தன்னுடைய மனைவியும் பிள்ளைகளும், அவன் தேவனற்ற மனிதர்களிடமிருந்து வித்தியாசமானவனாக இருப்பதை அறிந்துக் கொள்ளுவார்கள்; மேலும் அவனுடைய, அமைதியான பண்பையும் உதவி செய்யும் தன்னமையையும், தெளிந்த புத்தியையும் அறிந்துக் கொள்ளுவார்கள். இருந்தாலும், இப்படியான எதிர்ப்பார்க்கப்பட்ட பலன்கள் காணப்படாவிட்டாலும், அவன் அதிகமான உண்மையுள்ள வனாக காணப்படும் பட்சத்தில், அவிசுவாசியான மனைவியிடமிருந்து வரும் உபசாரம் மிக மோசமானதாக இருக்கலாம், அது பிரிந்து போகும் அளவிற்குக் கூட வரலாம். ஆனாலும் இப்படிப்பட்ட அனுபவம் நமக்கு வருமானால், முன்னெச்சரிக்கையாக ஆண்டவர் நமக்கு கொடுத்த யோசனையை நாம் நினைவில் கொள்ளுவோம். அவர் கூறுகிறார்: ‘‘உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்’’ மறுபடியுமாக அவர் ‘‘ஒரு மனிதனுக்கு, சத்துருக்கள் அவன் வீட்டாரே’’ என்றார். மறுபடியும் அவர் ‘‘பூமியின் மேல் சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன்’’ என்றார். இப்போதைய வேளையில் என்னுடைய செய்தி சமாதானத்தின், ஆசீர்வாதத்தின் ஒரு செய்தியாக இருந்தாலும், அனேக தடவைகளில் அது சச்சரவில் முடிகிறது; ஏனெனில், இருளின் பிள்ளைகள் வெளிச்சத்தை வெறுக்கிறார்கள்; ஏனெனில், அவர்களில் அனேகர் சத்துருவின் தந்திரத்தினாலும் தங்களுடைய சொந்த விழுந்துபோன சுபாவத்தினாலும், அதற்கு எதிராக தொடர்ந்து யுத்தம் செய்வார்கள். ஆகவே அதை புதுமையென்று நினையாமல் உங்கள் சோதனையின் ஒரு பகுதி என்று எண்ணுங்கள், மேலும் ஆண்டவர் தப்பிப்பதற்கான ஒரு வழியைத் திறக்கும் வரை அது திவ்விய சித்தத்தின் ஒரு பகுதி என்று எண்ணி சகித்துக் கொள்ளுங்கள்.

ஆண்டவருக்கென்று அர்ப்பணம் செய்து கொண்ட ஜனங்களில் சிலர், புது சிருஷ்டியின் அங்கங்களாக இருக்கிறவர்கள், புத்திமதி

சொல்லும்படி வேண்டுகோள் விடுவிக்கிறார்கள். அவர்கள் கூறுவதாவது: ‘‘ பேர் கிறிஸ்தவ சபையில் என் இளமைப் பருவத்தின் போது நான் தவறாக கற்பிக்கப்பட்டேன். நான் சபையில் சேர்ந்து, இரட்சிக்கப்பட்ட போது, எனக்கு வேறு ஒன்றும் தேவையில்லை, ஆலயத்திற்கு ஒழுங்காக செல்லவேண்டும், காணிக்கைகளை ஒழுங்காக செலுத்தினால் போதும் என்று நம்பும்படியாக நான் வழிநடத்தப்பட்டேன். என்னுடைய இருதயத்திலிருந்து பாவத்தையும், சுயநலத்தையும் அகற்ற வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும், என்னுடைய இருதயத்தில் அதிகதிகமாக ஆண்டவரின் ஆவியையும், அதோடு சம்பந்தப்பட்ட எண்ணிலடங்காத அன்பையும் என் ஆத்துமாவிற்கான கிருபைகளையும் பெறவேண்டும் என்பதின் அவசியத்தைப்பற்றியும் சிறிதளவே அல்லது சில வேளைகளில் ஒன்றுமே கற்பிக்கப்படாமல் இருந்தேன். எனக்கு இருந்த மற்ற நேரத்தையும், பெலத்தையும் என்னுடைய புருஷனின் வியாபார முன்னேற்றத்திற்காக செலவிட்டேன். மேலும், உலகத்தில் முன்னுக்கு வரும்படியாக முயற்சித்தேன். இந்த வேளையில் ஆவியினால் பிறப்பது என்பதைக்குறித்து அறியாமலிருந்துவிட்டேன். மேலும் ஒரு புதிதான மனதைப் பெறவேண்டும் என்பதையும், அது பூமிக்குரிய காரியங் களுக்காக அதிகமாக _முயற்சிக்காமல், அதிகதிகமாக பரலோகத்திற்குரிய பண்புகளையும், கிருபைகளையும், வல்லமையையும், வளர்ச்சியையும் பெற முயற்சிக்கும் என்பதையும் அறியாமலிருந்து விட்டேன். இந்த வேளையில் என் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்கள் என் வயிற்றில் இருந்தபோது இந்த எனது நோக்கங்களை அவர்களுக்குள்ளாக பெற்றுக்கொண்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் பிறந்த பின்னர், ஒரு குழந்தை பெறவேண்டிய முறையான பயிற்சிகளை அவர்கள் பெற தவறிவிட்டார்கள் என்பதைக் காணும்போது விசனமாக இருக்கிறது. அப்படிச்செய்வதுதான் கிறிஸ்து இயேசுவுக்குள் புதுசிருஷ்டியாக இருக்கிற ஒரு பெற்றோரின் முறையான கடமையாகும். இப்பொழுது எனது பிள்ளைகள் முரட்டாட்டம் உள்ளவர்களாக, அடங்காத, சுயநலமுள்ள, கீழ்ப்படியாத பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தேவனிடத்தில் பக்தியாயில்லாமலிருப்பது மாத்திரமின்றி, எனக்கும் மரியாதை செலுத்துவதில்லை, தேவனைப்பற்றிய என்னுடைய கருத்துக்களுக்கும் மரியாதை செலுத்துவதில்லை. நான் அவர்களை என்ன செய்யமுடியும்? கடந்த காலத்தில் அவர்களுக்கு செய்திருக்க வேண்டிய என்னுடைய கடமையை அறியாமையினால் செய்யத்தவறியதற்காக,

கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் மன்னிப்பு கேட்கிறேன். நான் எதை விதைத்தேனோ அதைத்தான் அறுவடை செய்கிறேன் என்பதையும், என்னுடைய தற்போதைய அனுபவங்கள், கடந்த காலத்தில் என்னுடைய கடமையை செய்யாமல் இருந்ததற்கான நியாயமான பலன் என்று உணருகிறேன். என்னுடைய கிறிஸ்தவ ஆவி எங்கே போயிற்று? தெளிந்த புத்தியின் ஆவி இல்லாமல் எவ்வளவு வெறுமையாக இருந்திருக்கிறேன்! எனக்கு தேவனைப்பற்றி கற்றுக்கொடுக்க வேண்டியவர்கள், வழிநடத்துபவர்கள் எங்கே இருந்தார்கள். அவர்கள் திவ்விய குணாதிசயத்தைப் பற்றியும், திவ்விய திட்டத்தைப் பற்றியும் தவறாக எனக்கு கற்பித்தது மாத்திரமல்ல, நான் இயற்கையாகவே செய்யவேண்டிய கடமைகளை, பெற்றோர் என்ற முறையில் செய்ய வேண்டிய கடமை களைப் பற்றிக்கூட அவர்கள் எனக்கு கற்றுக்கொடுக்க வில்லையே! ஐயோ, உலகப்பிரகாரமாக அல்லது ஆவிக்குரிய பிரகாரமாக திருப்திபடுத்தாததும், அப்பம் இல்லாததுமானதற்கு ஆதரவாக என்னுடைய பணத்தை செலவழித்தேன் என்று நம்புகிறேன். ஆனால் இப்பொழுது என்னுடைய கடமை என்ன? நான் எந்த வழியில் செல்ல வேண்டும்? நான் கடந்த காலத்தில் செய்தவைகளை எந்த அளவிற்கு சீர்திருத்த முடியும்?''

நாம் மற்ற கேள்விகளுக்கு பதிலளித்த மாதிரியே இதற்கும் பதில் சொல்லுகிறோம். ஆண்டவருடைய ஜனங்கள் நம்பிக்கையற்றவர்களைப் போல துக்கிக்கக் கூடாது. ஆண்டவர் நிச்சயமாகவே நாம் கடந்த காலத்தில் கடமையில் தவறியதற்காக மனவருத்தப்படுவதற்கு மகிழ்ச்சியடைவார்; மேலும், இப்படியான குறைபாடுகளுக்காக அவருடைய மன்னிப்பை கேட்பதிலும் அவர் மகிழ்ச்சியடைவார்; மேலும் நம்மை சார்ந்துள்ளவர் களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை செய்யும்படியாக நாடுவதிலும், அதைத் தொடர்ந்து செய்வதிலும், இனிமேல் அதிகமாக உண்மையுள்ளவர்களாக இருப்போம் என்பதை நாம் வாக்குத்தத்தம் பண்ணுவதிலும் அவர் மகிழ்ச்சியடைகிறார். கீழ்ப்படியாத பிள்ளை களோடு உள்ள தற்போதைய அனுபவங்களை –அவர்களுடைய பயிற்சியில் உள்ள குறைபாடுகள் என்கிற பாவத்திற்காக சிட்சை வழங்கும்போது அவர்களது செயல்களை நாம் பொறுமையுடனும், சாந்தத்துடனும் சகித்துக்கொண்டதற்காக அவர் மகிழ்ச்சியுறுவார்; இப்படியான சோதனைகள் இராஜ்யத்திற்கு நம்மை ஆயத்தப் பண்ணும்படியாகவும் இருக்கலாம்.

இப்படியான ஒரு பெற்றோர், குழந்தைகளுக்கு செய்ய வேண்டிய கடமை என்னவெனில், அவர்கள் குழந்தை பிராயத்திலிருந்தே ஆண்டவருக்கு எப்படி அவர்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும், சரியான நீதி, உரிமைகளைக் குறித்த கருத்துக்கள், ஒருவரோடுஒருவர், மற்றும் எல்லாரிடமும் காட்ட வேண்டிய அன்பைக் குறித்தும், அதில் அவர்களுடைய பொறுப்பைக் குறித்தும், கற்றிருக்க வேண்டிய பாடங்களை கற்றுக்கொடுக்கத் தொடங்குவதேயாகும். இந்த போதனை அதிகமான அன்புடனும், சாந்தத்துடனும், பொறுமையுடனும் கொடுக்கப்பட வேண்டும். இப்படிச் செய்யும்போது இது பெற்றோரின் இருதயத்தில் உள்ள கிருபையின் வல்லமையை குழந்தை கவனித்துப் பார்க்கக் கூடிய ஒரு பாடமாக இருக்கும். குழந்தையின் வயதைப் பொறுத்தும், மற்ற சூழ்நிலைகளைப் பொறுத்தும், எந்த அளவிற்கு தவறான கருத்துகள் குழந்தையின் மனதில் வேரூன்றியுள்ளன போன்றவற்றை கவனித்தும், வரும் பலன்களுக்காக பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். இப்படியான கட்டுப்பாடுகள் தேவையென்று கருதப்படும்போது அமைதியான முறையில், விபரமாக கூறுவதோடு, நிதானத்துடன் செயல்படுத்தப்பட வேண்டும். பெற்றோர்களின் அதிகாரம் வீட்டில் மூர்க்கத்துடன் அல்ல, அன்புடன் நிலைநாட்டப்பட வேண்டும். வீட்டில் ஆட்சிபண்ணிக் கொண்டிருக்கிற குழந்தைகள், உடனடியாக நல்ல கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாகி விடுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. வீட்டில் ஒழுங்கு முறைகள், நடத்தும் முறை பற்றிய விபரங்களுக்கு பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தை நாட வேண்டும். ஏனெனில் எந்த வெளி ஆளுக்கும், இன்னொருவரின் குடும்பத்தின் எல்லா விஷயங்களையும் முழுவதுமாக புரிந்து கொள்ளும் திறமை கிடையாது; மேலும், அது எப்படி சரியான விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக குறிப்பாக வழிமுறைகளையும் சொல்லுவதற்கும் திறமை கிடையாது.

இரண்டு கொள்கைகள் வழிநடத்த வேண்டும்: முதலாவது ஆண்டவர் மேலும் குழந்தைகள் மேலும் உள்ள அன்பு. இந்த அன்பு தேவனுடைய வார்த்தையால் வழிநடத்தப்படவும், செயல்படுத்தப்படவும் வேண்டும். இரண்டாவதாக தேவனுடைய வார்த்தையானது, அதிகாரத்திற்கும்,போதனைக்கும் மூலகாரணமாயிருக்கிறது. ஆகையால் அதைத் தொடர்ந்து நாடவேண்டும். அதற்கும் மேலாக எல்லா பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளை கவனத்துடன் நடத்த

கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் சரியான முறையில் பயிற்றுவிக்கப் பட்ட குழந்தையாக இருந்தாலும், இல்லாவிடினும், பெற்றோர்கள் தங்களுடைய மனசாட்சியை மதிக்கிறார்கள் என்பதையும், அவர்கள் நியாயம் என்று கூறுவதை மதிக்கிறார்கள் என்பதையும், இந்த குணாதிசயத்திற்கு ஒத்துப்போகுமாறு அவர்களோடு அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதையும் குழந்தைகள் உணர வேண்டும். விசேஷமாக குழந்தை ஒரு புருஷனாக, பெண்மணியாக வளர்ச்சியடைந்த நிலைமைக்கு வரும்போது அவனுடைய அல்லது அவளுடைய எண்ணங்கள் மதிக்கப்பட வேண்டும், அதே அளவுக்கு சரீரத்தில் சிட்சை அளிப்பது கைவிடப்பட வேண்டும்.

நியாயம் என்கிற கொள்கையைக் குறித்து நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இது ஓர் அளவுக்கு கிட்டத்தட்ட எல்லா மனுஷரிடத்திலும் காணப்படுகிறது, விசேஷமாக நியாயத்தைக் குறித்த உணர்வு சுயநலத்தோடு ஒத்துழைக்கக் காணப்படுகிறது. எனவே, மனுஷன் அல்லது மனுஷி நிலையை எட்டியவுடன், குழந்தை தான் ஒரு குறிப்பிட்ட கோட்டை தாண்டியாயிற்று, ஆகவே, இனியும் ஒரு குழந்தையைப் போல் அல்ல, ஒரு தோழனாக நடத்தப்பட வேண்டும்; இனிமேல் எதைக்குறித்தும் கட்டளையிடப்படக் கூடாது, ஆனால் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்; இனியும் சம்பாதிக்கிற எல்லா பணத்தைக் குறித்தும் மிகவும் சரியானபடி கணக்கு கேட்கக்கூடாது; ஆனால் முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிகமான அளவு விவேகமும், தனிப்பட்ட விதத்தில் நடத்துதலும் இருக்க வேண்டும் என்று குழந்தை தனக்குள்ளாகவே உணருகிறது. வளர்ச்சியடையும்போது வருகின்ற உரிமைகளை மீறும்படியாக ஞானமுள்ள, நியாயமாய் நடக்கிற, அன்பான பெற்றோர்கள் முயற்சி செய்யக்கூடாது; ஆனால், அந்த வேளையிலிருந்து ஒரு தம்பி, தங்கையோடு நடந்து கொளவது போன்று, ஒரு யோசனை சொல்பவராக, நல்ல நண்பராக எண்ண நாட வேண்டும். இந்த விஷயத்தில் நல்ல பெற்றோர்கள் சில சமயங்களில் ஞானமற்றும், அநீதியாயும் காணப்படுகிறார்கள்; அதோடு இதுவரைக்கும் பிள்ளை அறிந்து ஏற்றுக்கொண்ட அதிகாரத்தை தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் மனுஷன் அல்லது மனுஷி நிலைக்கு வந்திருப்பதை உதாசீனப்படுத்தி, இதற்கு முன்பு இருந்த பெற்றோர்களின் அதிகாரத்தை எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். சில சமயங்களில் இந்த முயற்சி ஓர் அளவிற்கு

வெற்றியைத் தருகிறது; ஆனால், ஒருபோதும் இது தங்களுடைய நன்மைக்காவோ அல்லது குழந்தைகளின் நன்மைக்காகவோ இருப்பதில்லை என்று நம்புகிறோம். அவர்கள் குழந்தையின் சாதுவான குணத்தை தங்களுக்கு அனுகூலமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று அவர்களுக்கும் தெரியும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் தெரியும். பிள்ளை முரண்டுபிடிக்கும் என்றால் காரியங்கள் துரிதமாக வித்தியாசமான முறையில் சரிசெய்யப்படுகிறது. அவர்கள் நடந்து கொள்ளும்முறை குழந்தை தங்கள் மேல் கொண்டுள்ள அன்புக்கு தீமையை விளைவிக்கும் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். பிள்ளை தன்னுடைய பெற்றோர்கள் நடந்து கொள்ளும்விதத்தில் சுயநலத்திற்கும், அநீதிக்கும், அவர்கள் இடம் கொடுப்பதைக் காண்கிறான். இதற்கு முன்பாக தன்னுடைய பெற்றோர்களின் உணர்வுகளைக் குறித்து வித்தியாசமாக நினைத்திருந்தான். இப்படியாக பிள்ளையின் மேலுள்ள அன்பு வேர் அளவிலேயே பெலகீனப்பட்டுவிடுகிறது. இப்படியாக, தவறாக நடந்து கொள்வதை பெற்றோர்கள், அது தற்காலிக வெற்றியை கொடுத்தாலும், அவர்கள் மரிப்பதற்குமுன் அறிந்துகொள்ள வேண்டும். பிள்ளை வளர்ச்சியடைந்தவுடன் பெற்றோருக்கு செய்யவேண்டிய கடமைகள் நின்று விட்டது என்று பொருள்படும்படியாகக் கூறவில்லை. நாம் கூறுவது இதற்கு எதிர்மாறானது. உலக அரசாங்கங்களின் விதிமுறைகளோடு இசைவாக நாம் கூறுகிறதாவது: பெற்றோர்கள் ஜீவிக்கும் காலம்வரை அவர்களை பராமரிக்கும் பொறுப்பு பிள்ளைகளுக்குண்டு, குழந்தைகளுக்கும் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் திறமை உண்டு. எங்களுடைய வாதம் என்னவெனில் குழந்தை பருவம் அடையும் வரை, பெற்றோர்கள் அதன்மேல் முழு கட்டுப்பாட்டை வைத்திருப்பார்கள். ஆனால், குழந்தை பருவம் அடைந்த பின்னர் அதற்கென தனித்தன்மையும், சொந்த உணர்வும் உண்டு; அது ஏற்றுக்கொள்ளப்படவும், அங்கீகரிக்கப்படவும் வேண்டும். பெற்றோர் களின் தேவைகளை நிறைவேற்றுவது குழந்தைகளின் கடமை, அது சரியான முறையில் அறிந்துகொள்ளப்பட்டு, தேவைகள் அன்புடனும், உடனுக்குடனும் நிறைவேற்றப்பட வேண்டும். பிள்ளை வயதான பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய உதவி, பிள்ளை, குழந்தை பிராயத்தில், பருவம் அடைவதற்கு முன்னர், பெற்றோர்கள் அதற்கு செய்யவேண்டிய போதுமான அளவு உதவியும், பராமரிப்பும், பொறுப்பும் இருந்ததற்கு சரியானபடி ஒத்திருக்கிறது. தன்னுடைய பிள்ளையை நியாயமாகவும், அன்பாகவும் பராமரித்த பெற்றோருக்கு, அந்த பிள்ளை

தேவையை நிறைவேற்றும் பெலனுடன் இருக்கும்போது, நிச்சயமாகவே குறைவுடன் விடப்படுவது அபூர்வமாயிருக்கும்.

பிள்ளைகளுக்கு பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகளைப் பார்க்கும்போது, சரியான அளவில் கல்வியறிவு, மனத்தில் வைத்துக் கொள்ளக்கூடிய சமாச்சாரங்கள், வாசிக்கக்கூடியவைகளைப் பற்றிய நியாயமான கட்டுப்பாடுகளை வைத்திருப்பது போன்றவைகளைக் குறித்து பலவிதமான கேள்விகள் எழும்புகின்றன. ஒரு கல்வியறிவை பெரியதாக நினைக்கிறவர்கள் நாங்கள், ஆனாலும் ஒரு கல்வியறிவு மகா ஞானத்தை அப்பியாசப்படுத்தக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும் என்று நம்புகிறோம். கல்வியறியவு என்பது மெருகூட்டுவது போன்றது. எந்த கல்லும் கவனமாக மெருகூட்டுவதன் மூலம் அழகாக தோற்றமளிக்க செய்யமுடியும். ஆனால் கவனமாக மெருகூட்டுவது என்பது எல்லா கற்களுக்கும் ஒரே மாதிரியாக உதவியாக, விலைமதிப்புள்ளதாக இருக்காது. ஒரு வைரக்கல் அல்லது மாணிக்கத்தை எடுத்துக்கொண்டால், மெருகூட்டுவது மிக அத்தியாவசியமானது; மெருகூட்டாமல் அதில் மறைந்திருக்கும் குணாதிசயங்களை அபிவிருத்தி செய்ய முடியாது, அது மின்னுவதை பார்க்க முடியாது. ஆனால் ஒரு தெருவில் நடைபாதையில் உள்ள கற்களுக்கு மெருகூட்டுவது வீணான முயற்சியாகும். அதைவிட மோசமானது என்னவெனில் அந்த நடைபாதைக் கல்லை, அதிக முக்கியமானதாக, மெருதுவானதாக மாற்றி, நடைபாதைக் கல்லாக உபயோகிப்பதற்கும் தகுதியற்றதாக்கிவிடும். அதற்குபதிலாக, அதை நடைபாதைக் கல்லாக்குவதற்காக மாத்திரம் சாதாரணமாக செதுக்கினால், அது அதற்கு சரியான தகுதியான கல்லாயிருக்கும்.

கல்வியறிவைப் பொருத்த வரையில், அது கல்லூரியில் ஒரு உயர்வான கல்வியினால் மனத்திற்கு மெருகூட்டுவது என்று காண்கிறோம். சிலர் இதன் மூலம் பயனடையலாம் அல்லது, மற்றவர்கள் தீமையடையலாம். இப்படியாக கல்வியறிவு பெற்ற மனிதர்கள், அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருந்த தாலந்துகளின்படியான ஒரு இடத்திற்கு வரமுடியாமல் இருந்ததை யார்தான் காணாமல் இருந்திருப்பார்கள்? அவர்கள் அதிகமாக கல்வியறிவு பெற்றவர்கள், உவமையில் கூறப்பட்ட மனிதனைப்போன்று அவர்களால் தோண்டமுடியவில்லை, பிச்சை எடுக்கவும் வெட்கப்பட்டார்கள். மேலும், அவர்கள் எதற்குமே தகுதியற்றவர்களாக இருந்தார்கள். ஆண்டவருடைய இரக்கத்தினால், பெற்றோர்கள் தங்களுக்கு மிக புத்திசாலித்தனமான ஒரு பிள்ளை

இருக்கிறது என்று கண்டால், அவர்களுடைய வாழ்க்கையின் காரியங்கள் அப்படி ஒரு இரக்கத்தால் வழி நடத்தப்பட்டால், அதன்படியாக பணம், மற்ற அனுகூலமான காரியங்கள், இப்படிப்பட்ட ஒரு குழந்தைக்கு கல்லூரிபடிப்புக்கு வழியைத் திறந்தால், அவர்கள் தங்கள் பிள்ளைக்கு செய்யவேண்டிய கடமையைப் பொறுத்தளவில் அது ஆண்டவரின் வழிநடத்துதலுக்கு அறிகுறியா என்று எண்ணிப் பார்த்து, அவர்கள் மனதில் தோன்றுகிறபடி நடக்கவேண்டும். இருந்தாலும் அவனை கல்லூரிக்கு அனுப்பும்போது, இந்த சமயத்தில் அவர்கள் ஒரு நடுக்கத்தையும், ஒரு பயத்தையும் உணருவார்கள். எப்படியெனில், அவர்கள் பெற்றோர்களாகவும், ஏற்ற போதனையாளராகவும் இருந்து குழந்தை பருவத்திலும், அதற்கு முன்னரும்கூட விசுவாசத்தையும், இருதய பண்புகளையும் அதற்குள் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்; இவைகளை இந்த உலகத்தின் ஞானம் வெளிப்புறமாக மெருகூட்டுவதால், மெருகூட்டப்பட்ட எல்லா விசுவாசத்தையும், இருதயத்தின் பண்பையும் அகற்றிவிடுமோ என்ற பயமும் நடுக்கமும்தான்.

புதுசிருஷ்டிகளான ஆண்டவரின் ஜனங்கள், மனத்திற்கும், பண்பிற்கும், தேவன் பேரில் வைக்கும் விசுவாசத்திற்கும் பெறுகிற போதனைகள், உலக பள்ளிகளில் பெறக்கூடிய எந்தவிதமான கல்விக்கும் மிக மேலானது என்பதை உணர கற்றுக்கொள்ள வேண்டும். உலகத்திலுள்ள எல்லா ஞானத்தைக்காட்டிலும் ''பரத்திலிருந்து வருகிற ஞானமே, முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் இருக்கிறது.'' உலகத்திலுள்ள எல்லா ஞானத்தைக் காட்டிலும் இந்த ஞானம் அதிகமாக வாஞ்சிக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களுடைய பிள்ளைகள் குணத்திலும், கொள்கையிலும், ஆண்டவர்மேலும், அவருடைய வார்த்தையின் மேலும் வைத்துள்ள விசுவாசத்திலும் ஆழமாக வேறூன்றி இருக்கிறார்களா என்பதை கவனித்துப்பார்க்க வேண்டும். நம்முடைய காலத்திலுள்ள பள்ளிகளில் காணப்படும் பகுத்தறிவு போதனைகள், பரிணாமம், தேவனில்லை போன்றவைகள், ஆண்டவரிலும், அவருடைய வார்த்தையிலும் ஆழமாக வைத்த விசுவாசத்தை ஒருபோதும் அகற்றமுடியாது. உண்மையாகவே ஆபத்து அவ்வளவு அதிகமாக இருக்கிறது, ஆகவே பொதுவான பள்ளிகளிலும், ஆரம்பப்பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் கிடைக்கிற கல்வி அறிவோடே திருப்தியடைய விருப்பம் உள்ளவர்களாக இருப்போம்.

மாம்சீக சிந்தை உள்ளவர்களுக்கு இந்த யோசனை முட்டாள் தனமானதாக அல்லது மோசமானதாக இருக்கும் என்று முழு உணர்வுடன் எழுதுகிறோம். இருந்தாலும், திவ்ய நோக்கமாய் இருக்கிறது என்று நாம் நம்புகிறவைகளை வைத்து விஷயங்களைப் பார்க்கும்படி நாம் கற்றுக் கொண்டோம். இதே மாதிரியாக இந்த விஷயத்தைக் குறித்து தேவனின் நோக்கம் என்ற நிலையில், இதிலும் எல்லா விஷயங்களிலும் பார்க்கும்படியாக ஆண்டவரோடு அர்ப்பணம் செய்துகொண்ட அனைவரும் முயற்சிக்க வேண்டும் என்று நாம் சிபாரிசு செய்கிறோம். மேலும் நாம் வசிக்கிற இந்த கடுமையான காலங்கள், நம்முடைய நாட்கள் அவசரமும், சந்தடியும், கலவரமும் நிறைந்திருக்கும் போது, 21 வயது வரை தனது வாழ்க்கையை கல்லூரிகளில் செலவிடுகின்ற ஒரு நபர், வாழ்க்கையின் காரியங்களுக்காக மெருகூட்டப்பட்டு இருக்கும் வேளையில் ஒரு காரியத்தை தவற விட்டுவிடுகிறான்; அதாவது, இன்னொரு பையன், உயர்நிலைபள்ளிப் படிப்பை முடித்தவன், 14 அல்லது 15 வயதுள்ளவன், ''வாழ்க்கையின் படிகளில் ஏறுதல்'' என்ற இன்னொரு வியாபார பயிற்சி கல்வியை முடித்திருப்பதை, இவன் தவறவிட்டு விடுகிறான். நடைமுறை வியாபாரம் பற்றிய கல்வியில் 6 வருடங்கள் தேர்ச்சி பெற்ற பின்னர், நிச்சயமாகவே, அதே அளவுள்ள வருடங்களை கல்லூரியில் பயிற்சிக்காக செலவழித்தவனைக் காட்டிலும், தற்போதைய சூழ்நிலையில் காணப்படுகிற விஷயங்களை சமாளிப்பதில் அதிக திறமை உள்ளவனாக இருப்பான்.

விளையாட்டைப் பற்றி : விளையாட்டில் உள்ள முக்கியமான அனுகூலங்களில் ஒன்று, அதோடு சம்பந்தப்பட்ட மகிழ்ச்சியான உடற்பயிற்சியாகும். மகிழ்ச்சியோடு செய்யப்பட்ட உடற்பயிற்சி, கடின உழைப்போடு செய்யப்பட்ட அதே உடற்பயிற்சியைக் காட்டிலும் அதிக பயனுள்ளது என்பது சந்தேகத்திற்கிடமில்லாத உண்மையாகும். நாம் அறியாதவண்ணம், நமது உடம்பின் செயல் முறைகள், மனம், மனநிலைகள் எல்லாம் வாழ்க்கை இயங்கும் முறையோடு சம்பந்தப் பட்டிருக்கிறது. நம் மனதின் சந்தோஷமான நிலைகள், நம்முடைய உடலின் செயல்முறை நன்றாக இருப்பதற்கும், இழந்தவைகளை சரிசெய்வதற்கும், இயற்கை இயங்குகிற முறையோடும், சக்திகளோடும் நன்றாக ஒத்துழைக்கின்றன. ஆனால், பயன்தருவது கடின உழைப்பே என்றும், பயனற்றதாக இருப்பது மகிழ்ச்சி, விளையாட்டு மாத்திரம் என்றும் வலியுறுத்துவது தவறான கருத்து ஆகும். இந்த விஷயத்தைப்

பற்றிய ஒரு தவறான எண்ணம் சிந்திக்கக்கூடிய அனேகரை விளையாட்டாக இருப்பதையும், வேலை செய்யாமல் பொழுது போக்குவதையும் ஆதரிக்கும்படி வழிநடத்திற்று என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால், அவர்கள் இதற்கு மாறாக இந்த வழியில் செல்லுகின்ற விழுந்து போன சுபாவத்தின் இயற்கையான உணர்ச்சிகளை எதிர்த்துக்கொண்டிருக்க வேண்டும். பாலர் வகுப்பு என்று சொல்லப் போனால் சிறிது காலத்திற்கு முன்பு வந்ததுதான். அது குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பது மகிழ்ச்சிகரமாயிருக்கிறது, அது சரியான வழி என்று பெருமிதம் கொள்ளுகிறோம். இதனால் ஏற்படும் மகிழ்ச்சி, ஞானமுள்ள பெற்றோர் பெறுகிற சலுகை, ஏதோ ஒரு வகையில் இதே முறையில்தான் இருக்கவேண்டும். நேரத்தையும், திறமையையும் வீணாக்குகிற எதையும் ஆதரிக்கக்கூடாது.

ஓய்வும் பொழுது போக்கும், முக்கியமாக தொழிலை மாற்றுவதன் மூலம்தான் பெறப்பட வேண்டும்; வேலையற்று வீணாக இருப்பதன் மூலமாகவோ அல்லது பயனற்ற உடற்பயிற்சியின் மூலமாகவோ அல்ல. ஒரு சிறுமி அவளுடைய பொம்மைக்கு உடை உடுத்துவதிலும், அதன்மேல் அக்கரைக்கொள்ளுவதிலும், வீடு வைத்து விளையாடுவதிலும் சந்தோஷமடைகிறாள். சிறு பையன், கடை வைத்து விளையாடுவதிலும், மணலைக் கொண்டு தேயிலை, காப்பி, சர்க்கரை, உருளைக்கிழங்கு ஆகியவைகளை விற்பனை செய்வதுபோல கற்பனைப்பண்ணி விளையாடுகிறான்; அல்லது அவன் குதிரை விளையாட்டை விளையாடுகிறான், அல்லது வண்டி ஓட்டுவபனாக, அல்லது தன்னை ஒரு பிரசங்கியாக, அல்லது ஒரு ஊழியக்காரனாக அல்லது பள்ளி ஆசிரியனாக, அல்லது ஒரு மருத்துவனாக கற்பனைபண்ணி விளையாடுகிறான். இப்படியான விளையாட்டுக்கள் எல்லாம் சரியானவைகள், சிறுவர்கள், சிறுமிகள் விளையாடும்படியாக ஊக்குவிக்கப்பட வேண்டும். அவர்கள் வயதுள்ளவர்களாக வளர்ச்சியுறும்போது, அவர்கள் இதிலிருந்து விடுபட்டு, வீட்டை சரியான முறையில் ஒழுங்குபடுத்துவது அல்லது உண்மையான வியாபார ஸ்தலத்தில் தங்களுடைய பெற்றோர்களோடு அல்லது பாதுகாவலரோடு அல்லது மற்றவர்களோடு உதவியாயிருப்பது தங்களுடைய பொழுதுபோக்கின் ஒரு பகுதி என்று எண்ணும்படியாக செய்ய வேண்டும்; அவர்கள் மற்றவர்களோடு பணவிஷயத்திலோ அல்லது வேறுவிதத்திலோ பிரயோஜனமாக இருப்பதில், உதவியாக இருப்பதில் சந்தோஷம் அடையுமாறு கற்பிக்கப்பட வேண்டும்; வீணாக நேரத்தை

செலவிடுவது ஒரு பாவமும், வெட்கமுமாகும் என்றும், எந்த ஒரு நபருக்கும் அது அவகீர்த்தி உண்டுபண்ணும் என்றும், நல்ல தருணங்களை வீணாக்குவதாகும் என்றும் கற்பிக்கப்பட வேண்டும்; இப்படி கற்பிக்கப்பட்டால் அவர்கள் வாழ்க்கையின் கடமைகளை சந்தோஷத்துடன் எதிர்நோக்கும் நிலையில் இருப்பார்கள். மேலும், ஒரு பந்து விளையாட்டைப் பார்ப்பதில் நேரத்தையும் பணத்தையும் வீணாக்குகிறவர்கள் மேல் பொறாமைப்படமாட்டார்கள், அல்லது அதே போன்று முட்டாள்தனமானதும், பயனற்றதுமாயிருக்கிற ஒன்றில் பங்கு பெறுவதையும் பார்த்து பொறாமைப்படமாட்டார்கள்.

நேரத்தையும் பணத்தையும், சிக்கனப்படுத்திக்கொள்வது குழந்தை பருவத்திலிருந்தே கற்பிக்கப்பட வேண்டும். இது சுயநலத்தை வளர்க்கும் நோக்கோடு அல்ல, ஆனால் சிக்கனம் என்பது ஒன்றும் வீணாக்கப்படக்கூடாது என்ற திவ்விய சித்தத்திற்கு ஒத்து இருப்பதாகும். நம்முடைய ஆண்டவர் ஜனங்களை போஷித்த பின்னர், துணிக்கைகள் சேகரிக்கப்பட வேண்டும் என்றும், அவைகள் வீணாக்கப்படக்கூடாது என்றும் கட்டளையிட்டார். இதன்மூலம் எல்லா விஷயத்திலும் வீணாக்குதல் இருக்கக் கூடாது என்கிற அவரது மனதை வெளிப் படுத்துகிறார். இதனால் நாம் அவரிடத்தில் ஒரு நொடிப்பொழுதுக்கும், ஒவ்வொரு ரூபாய்க்கும், ஒவ்வொரு நாளுக்கும் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருப்பதை உணருகிறோம். நம்மை பயத்தில் வைக்கும் பொறுப்பல்ல, ஆனால் திவ்விய சித்தத்தை அறிந்துகொண்டு, அதற்கு முழுவதுமாக முடிந்தவரை ஒத்திருப்பதில் மகிழ்ச்சியுறுவது ஆகும். மேலும் இப்படிச்செய்வது ஆண்டவருக்கு பிரியமானது என்று உணர்வதும், ஆகவே அதன்மூலம் முற்றுமாக அனுபவித்து சந்தோஷம் அடைவதுமாகும்.

பிள்ளையின் மனதை சரியானபடி பயிற்றுவித்தல்

பிள்ளை வளர்ந்து உலகத்தில் படிக்கவேண்டிய காரியம் எவ்வளவு இருக்கிறது என்று அறியும்போது, அவன் வாசிக்கும்படியாக உற்சாகப்படுத்தப்பட வேண்டும்; ஆனால், ஆரம்பத்திலிருந்தே சக்கை போன்றுள்ள கட்டுக்கதைகளையும், அறிவு களஞ்சியத்தையும் விவேகத்துடன் பகுத்துணர கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். சக்கைகளை மனதில் சேகரித்து வைப்பது, முக்கியத்துவம் இல்லாத

ஒன்றைவிட மோசமானது, அது ஒரு தீமையாக, ஒரு தடையாக இருக்கும் என்று போதிக்கப்பட வேண்டும். அது மாத்திரமல்ல, அது முக்கியமான நேரத்தை எடுத்துக்கொண்டது, அறிவை சேர்த்துவைக்கும்படியாக அதை பிரயோஜனப்படுத்தியிருக்கலாம். மேலும், அவனுடைய வாழ்க்கையில் கடமைகளை சரியானபடி செய்வதற்கு அது வெகு சீக்கிரத்தில் அவனுக்கு அதிகமாக தேவைப்படும். அவன் கதை புத்தகங்களையல்ல, அறிவை கொடுக்கிற புத்தகங்களை வாசிக்கும்படியாக உற்சாகப்படுத்த வேண்டும். அவன் தன்னுடைய தேசத்தைக் குறித்தும் அதன் சரித்திரத்தைக் குறித்தும் தகுந்த அறிவுள்ளவனாகவும், உலகத்தின் மற்ற தேசங்களைக் குறித்து போதுமான அறிவுள்ளவனாகவும் இருக்க வேண்டும். இவைகளை சரித்திரங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம். இராஜ்யபாரங்கள், யுத்தங்கள், தளபதிகள் ஆகியவைகளைக் குறித்த சரித்திரத்தை மாத்திரம் அறிந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை, ஆனால் கடந்த காலத்திலும், தற்காலத்திலும் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியடைந்துள்ள சமுதாய நல்லொழுக்கம், அறிவு ஆகியவை காண்பிக்கிறகைளைக் குறித்து நாங்கள் கூறுகிறோம். அவனுடைய எதிர்கால கல்வியின் ஒரு பகுதியாக இந்த அறிவு இருப்பது குழந்தைக்கு காண்பிக்கப்படல் வேண்டும்; அவனுடைய சிந்திக்கும் திறமையும், தீர்மானிக்கும் திறமையும் உற்சாகப்படுத்தப்படவேண்டும்; இப்படியாக, அறிவை கொடுக்கக் கூடியவைகளை வாசிக்கும்படியாக அவனுடைய ஈடுபாட்டை பெற்ற பின்னர், இதற்கு எதிர்மாறாக உள்ள களைகள், குப்பை, மயக்குகிற விஷயங்களைக் கொண்டவைகளை வாசியாமலிருக்கும்படி செய்ய வேண்டும்; ஏனெனில் அவைகள் அவனுக்கு தீமை விளைவிப்பதுடன், வாழ்க்கையின் கடமைகளைச் செய்ய தயாரற்ற நிலையில் விட்டுவிடும்; இவைகளெல்லாம் அன்பான முறையிலும், சந்தோஷமான முறையிலும் காண்பிக்கப்பட வேண்டும்.

கொள்ளை நோயான பொல்லாத யோசனைகள்

“ Church Standard ” என்ற பத்திரிக்கையின் பகுதியில் சமீபத்தில் ஒரு கதையை கேலி செய்து பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. அது நாம் படிக்க வேண்டிய பாடத்தின் மோசமான பகுதியைக் காட்டுகிறது.

“இந்த விஷயத்தைக் குறித்த மோசமான சிந்தனைகள் என்னவெனில் மனுஷனின் நினைவில் பதிந்துவிட்ட அசிங்கமான

காரியங்கள்தான். பல வருடங்களுக்கு முன்னதாக, எத்தனை வருடங்களுக்கு முன்னதாக என்பது முக்கியமில்லை, இந்த தேசத்திலா அல்லது வேறு தேசத்திலா என்பதும் முக்கியமில்லை, மதிப்புக்குரிய ஒரு பெண்மணி அவளுடைய மரணப்படுக்கையில் இருந்தாள். அவள் இன்னும் இளமைப் பருவத்தில் இருந்தாள். அவளுடைய வாழ்க்கை மிகவும் மேன்மையானதாக இருந்தது. அவளின் ஒவ்வொரு செயலிலும் வார்த்தையிலும் அவள் தூய்மையின் மறுபிறப்பாக இருந்தாள். அவளுடைய முழு வாழ்க்கையிலும் அவள் ஒரு கெட்ட வார்த்தை கூட கேட்டிருப்பாள் என்பது நம்ப முடியாததாயிருந்தது. ஆனால், அவளுடைய சித்தப் பிரமையில் அவளுடைய நண்பர்களும், உதவியாளர்களும் கேட்கும்படியாக சரமாரியாக அசிங்கமான கெட்ட வார்த்தைகளை பேசினாள். அதைக் கேட்டு அவர்கள் மலைத்து நின்றார்கள். இப்படிப்பட்ட வார்த்தைகளை அவள் எங்கே கேட்டிருப்பாள் என்பதை அவர்களால் கற்பனைசெய்து கூட பார்க்க இயலவில்லை. அவர்கள் அதை ஒரு போதும் அறிந்துகொள்ளவும் முடியவில்லை. ஆனால், அவள் அவைகளை இரகசியமாக நேசித்து, அவைகள் மேல் பெருமிதம் கொண்டாள் என்று அவர்கள் ஊகிக்கலாமா? அப்படி அல்ல. உண்மையான யூகம் என்னவென்றால், ஒரு பொல்லாத வேளையில் அவள் அதைக்கேட்டு, அவைகளை அவள் முற்றிலுமாக வெறுத்தாள். மேலும், அவைகளை மறக்கும்படியாக அவள் எடுத்த ஒவ்வொரு முயற்சியிலும், அவள் தனது ஞாபகத்தில் இருக்கமாக வைத்துவிட்டாள்; அது அவளுடைய மரணம் வரை அவளோடேயே இருந்தது. அது இரக்கத்தினால் சொல்லப்பட்ட கருத்தாகும், நியாயமான கருத்தாகும். அனால் அது எப்பொழுதும் நிலைத்திருக்க முடியாது. அசுத்தமான எண்ணங்களையும், ஆபாசமான படங்களைப் பற்றிய சிந்தனையை பெறும்படியாக மனதும், கற்பனா சக்தியும் பல மணி நேரங்கள் அல்லது நாட்கள் திறந்து வைக்கப் பட்டிருக்கும்போது, இப்படிப்பட்ட சீர்கெட்ட மன நிலைமையை யார்தான் சொல்ல முடியும்? ஆதிக்கம் செலுத்துகிற சீர்கேட்டையும், நிலைத்து நிற்கிற தந்திரத்தையும் மனதிலே பதிக்கிற, அனேக பொல்லாங்குகளில் மேதாவியான ஒரு மனிதனால் எழுதப்பட்ட ஒரு மோசமான புத்தகத்தைவிட, பொல்லாங்குகள் நிறைந்த இந்த உலகத்தில், திடுக்கிட வைக்கின்ற, தீமை விளைவிக்கிற காரியம் வேறு ஒன்றையும் நாங்கள் அறியோம்.''

குழந்தையின் மனதில் மதம் பற்றிய விஷயத்தில் விசேஷ பயிற்சி தேவை. இதில் கிறிஸ்தவ பெற்றோர் அவனுடைய போதனையாளராக

இருத்தல் வேண்டும். மதத்தைப் பற்றிய குழப்பமான கருத்துக்கள் நிறைந்த உலகநிலைமையிலும், பொதுவான பள்ளிக்கூடம், பொதுவான போதனை ஆகியவற்றின் முன்னேற்றமடைந்த நோக்கங்கள் இருக்கும் நிலைமையிலும், தேவனைப் பற்றி கற்றுக் கொடுக்கும்படியான எந்த முயற்சியும் இதில் நாட்டமுள்ளவர்களின், மனசாட்சிக்கும், எண்ணங்களுக்கும் எதிரிடையாக இருக்கும். ஆகவேதான் பொதுவான பள்ளிக் கூடங்களில், மத சார்புள்ள விஷயங்கள், போதனைகள், முறைகள், சடங்குகளும் இருக்கக் கூடாது என்ற நியதி வற்புறுத்துகிறது. வேதாகமம் தேவனுடையது என்று நாம் மரியாதை செலுத்துவது ஒரு பக்கம் இருந்தாலும், யூதர்கள் புதிய எற்பாட்டின் போதனைகளுக்கு எதிராக இருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம். எப்படியெனில், அனேகர் குறைகூறவேண்டும் என்ற எண்ணத்தில், பழைய ஏற்பாட்டின் அதிகமான பகுதிகளுக்கு எதிராக இருப்பது போன்று புதிய ஏற்பாட்டிற்கும் எதிராக இருக்கிறார்கள். சில நாஸ்தீகர்கள், சந்தேகவாதிகள், புத்த மதத்தினர், பிரம்ம ஞானிகள் ஆகியோர் வேதாகமதத்திற்கு முற்றிலுமாக எதிர்ப்பு தெரிவிப்பவர்கள், மற்றவர்கள் பொதுவான மொழிபெயர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறவர்கள். ஏனெனில், இவர்கள் எல்லோருமே பள்ளிகள் நடத்துவதற்கு வரி செலுத்துபவர்கள், ஆகவே அந்த சௌகரியங்களை அனுபவித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆகவே, மதத்தைப் பற்றிய விஷயங்களை பள்ளிக் கூடங்களில் இருந்து அகற்றிவிடுவது நியாயமானதாகவும், ஞானமுள்ள செயலாகவும் இருக்கும்; அதோடு, வேதாகமத்தை மத சம்பந்தப்பட்ட ஒரு புஸ்தகம் என்று எடுத்துக் கொள்ளாமல், அது ஒரு புராதன சரித்திரம் என்று அங்கீகரித்து பள்ளிகளில் புகுத்தலாம், வேதாகமத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு வெறுப்பூட்டாதபடி இப்படி செய்யலாம்.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்று நாம் பயபக்தியைக் காட்டுவது தெரிந்திருக்கிறபடியால், இந்த யோசனை சிலருக்கு வினோதமாக தோன்றலாம். ஆனால், பொன்னான பிரமாணத்தின் படி, அதுவே சரியான முறை என்று நாம் நம்புகிறோம். உண்மைதான், நாம் ஒரு சிறுபான்மையோராகத்தான் இருக்கிறோம், ஆகவே, நாம் அதை அமுல் படுத்த வேண்டும் என்று எண்ணினால், நம்முடைய முயற்சி பலம் இல்லாத தாகத்தான இருக்கும். மற்ற ஒழுக்கம் பற்றிய சீர்திருத்தங்களை வற்புறுத்துவதைக் காட்டிலும் இதை வற்புறுத்துவது தங்களுடைய கடமை

என்று புது சிருஷ்டிகள் எண்ணக் கூடாது. புது சிருஷ்டிகள் அனைவருக்கும், புது சிருஷ்டியை அபிவிருத்தி பண்ணவேண்டிய உன்னதமான வேலை இருக்கிறது. ஆகவே இப்படியான ஒழுக்கம் பற்றிய சீர்திருத்தங்களை தற்போதைய வேளையில், இராஜ்யம் வரும் வரை, உலகத்தாரின் கையில் விட்டு விடலாம். ஆனால் இந்த விஷயங்களைப் பற்றி நம்முடைய உணர்வுகளைக் கூறும்படியான சந்தர்ப்பம் ஒரு போதும் வராவிட்டாலும், நாம் தெளிந்த புத்தியோடு இருப்பதும், நீதியோடு முற்றுமாக இணைந்து செல்வதும் மிகவும் முக்கியமானது.

எப்படியானலும், வாழ்நாட்களில் ஆறு வருடத்திற்கு குறைவாக, வாரத்தில் ஐந்து நாட்கள், ஒவ்வொரு நாளும் ஆறு மணி நேரம் என்பது நிச்சயமாகவே, நம்முடைய நாட்களில் பிள்ளைகளைச்சுற்றியுள்ள உலகப்பிரகாரமான எண்ணற்ற காரியங்களுக்குகென ஒதுக்கப்படுவது மிக குறைவானதாகும். உலக சம்பந்தப்பட்ட படிப்பிற்காக இப்படி குறைவான நேரம் ஒதுக்கப்படுவதால், பெற்றோர்களுக்கும், அவர்களால் தெரிந்து கொள்ளப்பட்ட ஆவிக்குரிய போதனையாளர்களுக்கும் நல்ல மத போதனையை அளிப்பதற்கு உண்மையிலேயே அதிக நேரம் கிடைக்கிறது. ஒவ்வொரு வாரத்திலும் உள்ள 168 மணி நேரத்தில், உலகப் பிரகாரமான பாடங்களுக்கு நிச்சயமாகவே, அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள 36 மணி நேரமும் முழுமையாக தேவை. விசேஷமாக, நாம் வசித்துக் கொண்டிக்கிற கடினமான காலங்களில் அனேக தடவைகளில் பிள்ளைகள் 3 வருடத்திற்கு மேல் இப்படியான பயிற்ச்சி பெறுவதற்கு தடையாக இருக்கிறது.

ஞாயிறு பள்ளிகளின் செல்வாக்கு

கிறிஸ்தவ உலகம் அனைத்திலும் ஞாயிறு (ஒய்வு நாள்) பள்ளிகள் ஒரு பெரிய ஸ்தாபனமாகிவிட்டது. பிள்ளைகளுக்கான ஒரு சமூக நிலையம் என்கிற நீதியில் பார்க்கும் போது அது வாரத்திற்கு ஒரு முறை அவர்களை கூட்டிச் சேர்த்து சாதாரண வேலை நாட்களிலிருந்து அவர்களுடைய மனதை வேறுபக்கம் திருப்பி, பொதுவான சமூக வழியிலும், மத வழியிலிருந்தும் ஈடுபட செய்கிறது என்று பார்க்கும் போது, ஒய்வு நாள் பள்ளி உலகத்தில் அதிகமான காரியத்தை செய்திருக்கிறது; விசேஷமாக சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு அதிகமாக செய்திருக்கிறது. விசுவாசிகளின்

பிள்ளைகளுக்கு ஞாயிறு பள்ளிகள் தீமையான விளைவுகளை ஏற்படுத்துகிறது என்று நாம் கருதுகிறோம். இருந்த போதிலும், நாம் சொல்லுகின்ற காரணங்களை முற்றுமாக கிரகித்துக் கொள்ளாவிட்டால் இப்படிப்பட்ட உணர்வு மிக தவறானதாக கருதப்படும் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். அவைகள் கீழ்வருமாறு:

1) பெற்றோர்கள், தங்கள் மேல் ஆண்டவர் வைத்த பெற்றோர்களுக்கான பொறுப்பிலிருந்து விடுபட்டு விட்டோம் என்று நினைக்கிறபடியால் ஓய்வு நாள் பாடசாலைகள் கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு தீமை விளைவிப்பதாக இருக்கிறது. ஓய்வு நாள் ஆசிரியர்கள் இப்படியான பொறுப்புக்கு முற்றிலும் தகுதி இல்லாதவராக இருக்கிறார்கள்; பெரும்பாலும் அவர்கள் முற்றிலுமாக அர்ப்பணம் செய்து கொண்டவர்களாக, பரிசுத்த ஆவியினால் பிறந்தவர்களாக இருப்பதில்லை; பிள்ளைகளுக்கு சரியான முறையில் கற்றுக் கொடுக்க முடியாத ஒரு கற்றுக் குட்டியாக இருக்கிறார். பெற்றோர்களுக்கு உள்ள கடமைகளில் முக்கியமாக கடமையாயிருக்கிற இந்த விஷயத்தில், இப்படியான ஆசிரியருக்கு பெற்றோரின் இடம் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு ஒழுங்கு முறையால், கிறிஸ்தவ பெற்றோர்கள் அனுபவிக்கிற நஷ்டம் கணக்கிட முடியாதது. ஆவிக்குரிய விஷயங்களில் நன்கு அறியப்பட்டுள்ள விஷயமானது: மற்றவர்களுக்கு தண்ணீர் பார்ச்சுகிறவன் தனக்கும் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளுகிறான் என்பதாகும். ஆகவே ஒழுக்கம், ஆவிக்குரிய விஷயங்களில் தன்னுடைய பிள்ளைகளை கவனமாக கற்றுக் கொடுத்து, வழி நடத்துகிறவன், அவர்கள் மேல் ஒரு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவது மாத்திரமல்ல, தான் செய்த சேவையினிமித்தம் தன் மேலும் ஒரு பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கின்றான். இன்றைக்கு இந்த ஆசீர்வாதத்தைப் கிறிஸ்தவ பெற்றோர்கள் இழந்திருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் தாங்கள் அறியாமலே திவ்விய ஒழுங்கு முறையிலிருந்து அகன்று சென்றிருக்கிறார்கள்.

2) கிறிஸ்தவ பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு ஞாயிறு பள்ளி நிச்சயமாக ஒரு பிரயோஜனமற்ற ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் மனசாட்சியும், புத்தி கூர்மையுமுள்ள பெற்றோர்கள் கொடுக்கக் கூடிய, கொடுக்க வேண்டிய போதனையை பிள்ளைகள் ஞாயிறு பள்ளி ஆசிரியர்களிடம் இருந்து பெற முடியாது.

3) இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது ஞாயிறு பள்ளி பெற்றோர்கள் மேலும் பிள்ளைகள் மேலும் அனுகூலமற்ற தன்மையை உண்டாக்குகிறது. அது பிள்ளைகள், பெற்றோர்கள் மேல் வைத்திருக்கிற மரியாதையை இழக்கச் செய்கிறது; ஒரு பக்கம் பெற்றோர்களுக்கான மரியாதை குறைவையும், இன்னொரு பக்கம் பிள்ளைகள்மேல் உள்ள மரியாதையை இழக்கச்செய்கிறது. இது தற்போதைய கிறிஸ்தவ உலகில் காணப்படும் நிலைமையாகிய, குடும்பத்தில் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாதிருத்தல், அடங்காதிருத்தல் ஆகிய தன்மைகளோடு, நிச்சயமாகவே அதிக சம்பந்தம் உள்ளதாயிருக்கிறது. மதத்தைப் பற்றி சிந்திக்கக் கூடிய பகுதி தலையின் மேற்பகுதியில் இருக்கிறது. இதை நல்ல நிலையில் வைத்து, நன்றாக அபிவிருத்தி அடையப்பண்ணினால் இதுவே அதிகமாக ஆதிக்கம் _செலுத்துவதாக இருக்கும். பயபக்தி என்பது இவைகளில் ஒன்றாகும், அது சரியானபடி செயல்படுத்தப்பட வேண்டும். பெற்றோர்கள் தேவனிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் பயபக்தியாய் இருப்பதை பிள்ளை பார்க்கையில், இந்த நிலைமையில் இருந்து அவன் கற்பிக்கப்பட்டால், அவன் கற்றுக்கொள்ளும்படியான, வாழ்க்கை முழுவதற்கும் பிரயோஜனமான ஒரு நல்ல பாடம் இருக்கிறது, இந்த பாடம் அவனுடைய பிள்ளைகளையும் சென்றடையும். ஆனால் பெற்றோர்களின் பயபக்தி தேவனிடத்தி லிருந்தும், அவருடைய வார்த்தையிலிருந்தும் அகன்று, பிள்ளை வேதபாட வகுப்பிற்கு அனுப்பப்பட்டால், வேதபாட ஆசிரியர் மூலமாகத்தான் தேவனிடத்திலிருந்து வார்த்தை வரக்கூடும் என்று அவர்கள் எண்ணுவது போல் காணப்பட்டால், நன்றாக சிந்தித்துப் பார்க்காத நிலையில் அல்லது தேவனுடைய வார்த்தையை படிக்காத நிலையில் காணப்பட்டால், பிள்ளையின் மேல் வரக்கூடிய பாதிப்பு, மூடநம்பிக்கையும் குருவானவருக்கு கீழ்ப்படியாமல் இருக்கிற நிலைமையாகும். இப்படியான நிலை ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நல்லதல்ல.

இதற்கும் மேலாக, வேதாகமத்தைக் குறித்த போதனையை பெற்றுக் கொள்ளும்படியாக பிள்ளை ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியரிடம் அனுப்பப்பட்டால், பிள்ளையின் மனதில் வருகிற எண்ணம், பெற்றோர்கள் இந்த பாடத்தை அளிக்க இயலாமல் இருக்கிறார்கள் என்பதுதான். மேலும், சற்று உயர்வான தகுதியில் இருப்பதாக எண்ணப்படும் ஒரு குருவானவரால் பெற்றோர்கள் கற்பிக்கப்படுவதால், ஒரு வேளை அவர் வித்தியாசமான ஒரு சுபாவமுள்ளவராக

இல்லாவிட்டாலும், பிள்ளையும் தன்னுடைய ஞாயிறு பள்ளி ஆசிரியரையும் இதே மாதிரியே எண்ண வாய்ப்புண்டு. இதனால் ஏற்படுகிற விளைவு என்னவெனில், பிள்ளையின் மரியாதையும் பயபக்தியும் பெற்றோருக்கு கிடைக்காமல் போகிறது.

இதற்கு மாறாக, தேவன் தன்னுடைய வசனத்தின் மூலமாக பேசியுள்ளார் என்றும், மேலும், தன்னுடைய பிள்ளைகள் மற்றவர்களுக்கு தேவனுடைய வசனத்தை வியாக்கியானம் பண்ணவும், விளங்கப்பண்ணும் படியாகவும் ஒழுங்கு பண்ணியிருக்கிறார் என்றும், இப்படியாக ஏற்படுத்தப்பட்டவர்களில் பெற்றோரும் அடங்குவர் என்றும், இவர்களே தங்களுடைய சொந்த குடும்பத்திற்கு தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஆசாரியன் என்றும், போதகன் என்றும், தன்னுடைய சொந்த குடும்பத்திற்கு கற்றுக்கொடுக்கும்படியாக நியமிக்கப்பட்டவர்கள் என்றும், சரியான வேத முறையின்படி கற்றுக் கொடுக்கப்பட்ட குழந்தை, அப்பொழுது தன்னை அறியாமலே தேவன் நினைத்தபடி தன்னுடைய பெற்றோர்களிடத்தில் ஒரு வைராக்கியத்தையும் பயபக்தியையும் வைக்கிறது. இப்படியாக, திவ்விய ஒழுங்கு முறையானது, வாழ்க்கை முழுவதும் பிள்ளைகள்மேல் ஒரு பெரிதான முழு செல்வாக்கை பெற்றோருக்கு வழங்கும். மேலும், பெற்றோர்கள் வேதாகம பாடங்களைக் கற்றுக் கொடுத்த பின்னர், தேவனுடைய வார்த்தையிலிருந்து திவ்விய வாழ்க்கையின் ஒழுங்கு முறை, பண்பு, சிந்தனை, பேச்சு, செயல், வாழ்க்கையின் பொன்னான கற்பனை என்பவைகளை சுட்டிக் காட்டிய பின்னர், இப்படியாக செய்த பெற்றோர் தேவனுடைய வார்த்தைகள் கற்றுக் கொடுப்பதை தன்னுடைய வாழ்க்கையில் செயல்படுத்தும் போது தனக்குள்ளே அதிக பலம் வருவதை காணமுடியும். தான் கற்றுக் கொடுத்ததற்கு தானே உதாரணமாக இருக்க வேண்டும் என்பதை உணருவான். மேலும், பாலகர்களுடைய மனங்களும் கூட அனுதின வாழ்க்கைக்கு இந்த மத விதிகளை கடைப்பிடிக்க முடிகிறது என்பதை அவன் உணருவான்.

இப்படியான ஒரு பெற்றோர், தான் அறிவிக்கிற திவ்விய முறைக்கு மிக, மிக நெருக்கமாக தான் ஜீவிக்க நாடுவதை உணருவான். இப்படியானவைகளில் ஏதாவது ஒரு விதத்தில் தவறுவாரானால், அந்த விஷயத்தை அறிந்தவர்களிடத்தில் அது அவனுடைய சொந்த பிள்ளைகளாக இருந்தாலும் சரி, தவறை அறிக்கைச் செய்யும் போது, ஒரு

ஆசீர்வாதத்தைப் பெறுவான். இதன்படி, பெற்றோர்களும், பிள்ளைகளும், திவ்விய திட்டத்தை அறிந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும், கற்றுக் கொள்வதோடுங்கூட, இரக்கத்திற்காகவும், மன்னிப்பிற்காகவும் தேவனை நோக்கிப்பார்க்கவும் கற்றுக் கொள்ளுவார்கள். இப்படியாக, எப்பொழுதுதாவது பெற்றோர்களுக்கு ஏற்படுகிற பின்னடைவுகள், பிள்ளைக்கு தாழ்மைக்கும், திவ்விய கட்டளைக்கு கீழ்படிதலுக்கும், தவறுக்கு மனஸ்தாபப்படுதலுக்கும் ஒரு நிரந்தரமான பாடமாக அமைகிறது.

4) ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் தற்போதுள்ள சபை பிரிவுகளின்படி சபையை ஸ்தாபிக்காததில் ஒரு தவறு செய்துவிட்டார்கள் என்று நினைப்பதோடு, கிறிஸ்துவின் சபையை பிரித்ததினால் அவர்கள் ஒரு ஞானமுள்ள காரியத்தை செய்து முடித்தாயிற்று என்று ஞாயிறு பள்ளியின் சரியான இயக்குமுறைகள் பற்றி அநேகர் தவறாக எண்ணுவது தெளிவாகத் தெரிகிறது. மேலும், ஆண்டவருடைய திட்டத்தின்படி ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சபை என்று இருப்பதினால் கிடைக்கக் கூடிய பயன்களை விட, அவர்கள் சபை பாகுபாடுகளினாலும், கொள்கை பாகுபாடுகளினாலும் அதிகமான பயன்கள் பெறக்கிடைக்கின்றன என்று தவறாக எண்ணுகின்றனர்.

ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட ஞாயிறு பள்ளி சரியாகத்தான் இருந்தது. அது சாதாரண ''ஏழைச் சிறுவர்களுக்கான இலவசப் பள்ளியாக'' 1781ம் வருடம் இங்கிலாந்தில் க்ளொச்செஸ்டர் என்கிற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஏ.டி. ராபர்ட் ரெயிக்ஸ் (A.D. Robert Raikes) என்பவர், க்ளோச்செஸ்டர் பத்திரிக்கையின் (Gloucester Journal) ஆசிரியராக இருந்த ஒரு கிறிஸ்தவர் 10லிருந்து 14 வயதுள்ள பிள்ளைகளுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் காலை 10 மணியிலிருந்து மதியம் வரை வாசிக்கவும், எழுதவும், தையல் போன்றவைகளைக் கற்றுக்கொடுக்கும்படியாக 4 கிறிஸ்தவ பெண்மணிகளை வேலைக்கு அமர்த்தினார். அவர்கள் மத்தியான வேளையில் கிறித்தவத்தின் அடிப்படை சமயக் கருத்துக்களை (catechism) பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்து ஆலயத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இப்படி சிறிய ஆரம்பநிலையில் இருந்துதான் தற்போதுள்ள பெரிய ஞாயிறு பள்ளி அபிவிருத்தியடைந்தது. அது உண்மையிலேயே நல்ல திட்டம்தான், ஆனாலும் அது ஆண்டவராலும், அப்போஸ்தலர் களாலும் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களின் குறிக்கோளுக்கு

அப்பாற்பட்டதாக இருக்கக் கூடாது. இவைகள் கிறிஸ்தவ பெற்றோரை தன்னுடைய பிள்ளைக்கு ஆசிரியராக இயலாமல் போனபோது பண்ணியபோது, கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கத்திற்கும் நாங்கள் சொல்லுகிற யோசனை என்னவெனில்: தங்களுடைய பிள்ளைகளுக்கு மத ஆசிரியர்களாக இருக்கவேண்டிய பெற்றோர்களின் கடமைகள் விஷயத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகள் எதுவாயிருந்தாலும், அவர்கள் அதை உடனடியாக உணர்ந்து நிறைவேற்ற வேண்டும். சூழ்நிலைகள் போன்றவைகள், பிள்ளைகளின் வயது வித்தியாசம், பல விதமான கீழ்ப்படியாமையின் நிலைமை, அவர்கள் ஏற்கனவே பெற்றோருக்கு காட்டிய அவமரியாதை ஆகியவையின்படி மாறுபடலாம்; இவைகள் அமைதியாக, படிப்படியாக, அன்போடு அகற்றப்பட வேண்டும். அதுவும் தேவனால் கொடுக்கப்பட்ட பெற்றோர்களுக்குரிய கடமையில் தவறியதால், இவைகள் பெற்றோர்களால்தான் ஏற்பட்டது என்பதை கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும். நாமோ அல்லது மற்றவர்களோ தேவனைக் காட்டிலும் ஞானமுள்ளவர்கள் அல்ல; அதோடு சபை தலைவராலும், நமக்கு போதிக்கும்படியாகவும், வழிகாட்டிகளாக இருக்கும்படியாகவும் அவர் நியமித்த 12 அப்போஸ்தலர்களாலும் விதிக்கப்பட்ட பொதுவான கொள்கைகளை அபிவிருத்திபண்ண வேண்டும் என்று நினைக்கக் கூடாது. ஆகவே, மனுஷர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம் எவ்வளவு ஆழமாக நிலைநாட்டப்பட்டதாக இருந்தாலும், ஆடம்பரமாக இருந்தாலும், உயர்வாகப் பேசப்பட்டாலும் அவைகளை நாம் கனம் பண்ணவோ, நினைவில் தக்க வைத்திருக்கவோ கூடாது. அவைகள் எல்லாம் ஒரே திட்டத்தை வைத்து, அதாவது தேவ வசனத்தின் படி தீர்க்கப்பட வேண்டும். அவைகள் ஆண்டவருடைய வசனத்தோடு இசைந்திராவிட்டால், அது அவர்களுக்குள் ''வெளிச்சம் இல்லாததினால்'' அப்படி காணப்படுகிறது. அவர்கள் தேவனுடையவர்கள் அல்ல. ஏசா.8:20.

பிள்ளைகளின் நம்பிக்கை

பெற்றோர், இராஜரீக ஆசாரியத்துவத்தின் ஒரு அங்கம், தேவனுடைய ஒரு பிள்ளை, பெற்றோர்கள் ஜெபத்தின் மூலம் தேவனோடு ஐக்கியம் உள்ளவர்கள், அவருடைய வார்த்தையின் மூலம் போதிக்கப்

படுகிறார்கள், ஊழியக்காரர்கள் தேவனுடைய வார்த்தை போன்றவை களை புரிந்து கொள்ள உதவி செய்பவர்கள் மாத்திரம் தான் என்ற கருத்தை அறிந்து பெற்றோர்கள் மேல் பிள்ளைகள் வைக்கிற நம்பிக்கை வேரூன்றுமானால், இதற்கும் மேலாக, வீட்டில் அன்பும், அதன் கனிகளான சாந்தமும் பொறுமையும், பல்வேறு வழிகளில் வருமானால், மேலும் பரத்திலிருந்து வருகின்ற தூய்மையான, சமாதானமுள்ள, இரக்கம் உள்ள ஞானத்தை பெற்றோர்கள் தேடவும், அதை அப்பியாசப்படுத்தவும் செய்வார்களானால் வாழ்க்கையின் எல்லா விஷயங்களைப் பற்றிய பிள்ளையின் நம்பிக்கை இயற்கையாகவே பெற்றோர்கள் மேல் தங்கியிருக்கும். அப்பொழுது, மனதிற்கு வருகிற சமயம், ஒழுக்கம், மதச்சார்பின்மை, சமூகம், சரீரம் ஆகியவைகளை சம்பந்தப்பட்ட கேள்விகள், முற்றிலும் இயற்கையாகவே இப்படிப்பட்ட ஒரு பெற்றோரால் தீர்க்கப்படும்.

இப்படிப்பட்ட கேள்விகள் எதிர்பார்க்கப்பட வேண்டும், வர வேற்கப்பட வேண்டும். அவைகளுக்கு பிள்ளையின் வயதிற்கு ஏற்ப ஞானமான, பொருத்தமான பதில்கள் கொடுக்கப்பட வேண்டும். இரகசியமான கேள்விகள், எளிதாக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது, நம்பிக்கையும் முறிக்கப்படக் கூடாது. அனேக பெற்றோர், அவனுடைய பிள்ளையின் உணர்வுகளையும், இரகசியங்களையும் எளிதாக எடுத்துக் கொள்வதின் மூலம் பிள்ளை எதிர்காலத்தில் வைக்கக் கூடிய நம்பிக்கையை இழந்து விடுகிறான். எல்லா கேள்விகளும் பூரணமாக பதில் சொல்லப்பட வேண்டும் (வயது வரம்பில்லாமல்) என்று நாங்கள் கூறவில்லை. சில வேளைகளில் ஒரு பகுதி விடைகளை மாத்திரம் கொடுப்பது ஞானமுள்ள செயலாகும், முழுமையான விபரம் பின்னால் கொடுக்கப்படும் என்று சொல்லி, ஒரு வேளை ஒரு தேதியைக் குறிப்பிடலாம். உதாரணமாக, இந்த சரியான வழியில் செல்லும்படியாக உன்னுடைய மனதும், குணமும் உனக்கு 13 வயதாகும் போது போதிய அளவு வளர்ச்சியுற்றிருக்கும், அப்பொழுது முழு விஷயத்தையும் கூறுவேன்; அந்த வேளையில் நீ என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்கலாம், இதற்கிடையில், அதை முழுவதுமாக உன் மனதை விட்டு அகற்றி விடலாம் என்று கூறலாம்.

சரியானபடி பயிற்சியளிக்கப்பட்ட பிள்ளைக்கு இந்த முறை உடனடியாக விளங்கும், எப்படியாயினும், பெற்றோருடைய வார்த்தை நம்பிக்கையானது என்றும், அது அதிகமாக சிந்திக்கப்படாமல்

கொடுக்கப்படவில்லை யென்றும், மேலும் இந்த விஷயத்தைப் பற்றி வேறு செய்தி வரவிட்டால், பெற்றோரின் தீர்மானத்தை, அது மாற்றும் வரை, அந்த தீர்மானம் அப்படியே இருக்கும் என்று அது புரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவருடைய வார்த்தையான ''நீங்கள் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்'' என்பதை சரியான முறையில் கடைப்படித்தால் அனேக பெற்றோரை அதிகமான பிரச்சினைகளில் இருந்து காப்பாற்றும், அதோடு வீட்டில் பொதுவான ஒழுங்கையும், சமாதானத்தையும் அதிகரிக்க செய்யும். பாலகனாக இருக்கும் போதே குழந்தை கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டும், அதுவும் இன்னொரு முறை சொல்லப்பட வேண்டிய அவசியமில்லாமல் கீழ்ப்படிய வேண்டும். ஆனால் இது பெற்றோர், தன்னுடைய பொறுப்பையும் உணர்வதுடன், அவனுடைய பிள்ளைகள் நியாயமாக கேட்கிற எல்லாவற்றையும் அவனால் முடிந்த வரை கொடுக்கும்படியாக வாஞ்சை இருக்க வேண்டும் என்பதையும் உணரும்படி செய்கிறது. பெற்றோரின் அதிகாரமும், பலமும் குடும்பத்திற்கும், அதன் அங்கங்களுக்கும் முக்கியமானதாக இருக்கும்படி, அவனுடைய அன்பும், ஞானமும், நீதியும் சேர்ந்து இருக்க வேண்டும்.

பிள்ளையை நடத்துவதில் யோசனை கூறும் திறமை

ஆரோக்கியமும் வியாதியும், மகிழ்ச்சியும் வேதனையும், கீழ்படிதலும்_கீழ்படியாமையும், சரியாக செய்தலும் தவறாக செய்தலும் என்பவைகளைப் பற்றிய மனுஷரின் விருப்பத்தின் முக்கியத்துவத்தை வெகு சிலரே உணருகின்றனர். உண்மையிலேயே வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும், வார்த்தையிலும், சிந்தனையிலும் மனுஷரின் சித்தத்தைக் குறித்து வெகு சிலரே உணருகின்றனர். குழந்தையின் மனம் வாழ்க்கையின் காரியங்களைப் பார்க்க தொடங்கும் போதும், அதன் குணத்திற்கான அஸ்திபாரங்கள் போடப்படும் போதும், கருத்துகளும், யோசனைகளும் பிள்ளையின் மனதில் விசேஷமாக மிகவும் எளிதில் பதிவாகிறது. யோசனைகளும், மனதில் பதிகின்றவைகளும், கிறிஸ்தவ விஞ்ஞானிகள் (Christian Scientist) என்ற மதக் குழுவினரினால் தந்திரமாக அப்பியாசப்படுத்தப்படும் ஞானதிருஷ்டி, ஹிப்நாட்டிசம், வசப்படுத்துதல் ஆகியவைகளோடு சம்பந்தம் உள்ளதாக இருக்கிறது. ஆனால் நாம் வலியுறுத்துவது எல்லாம் உண்மையுள்ள, உதவியாக இருக்கக்கூடிய, பிள்ளையின் விருப்பத்திற்கு பலம் கொடுக்கின்ற, திவ்ய

வார்த்தையோடு இசைந்திருக்கின்ற யோசனைகளைத்தான், அதற்கு மேலாக ஒன்றையும் வலியுறுத்தவில்லை.

வேதாகமம் ஆலோசனைகளால் நிறைந்துள்ளது. அது கூறுகிறபடி சுய நலமுள்ள, பாவமுள்ள எண்ணங்களும், செயல்களும் திவ்விய சலுகைகளை கொண்டுவராமல், நமக்கு அனுகூலமற்ற நிலையை கொண்டு வருகிறது; ஆனால் அன்பான சிந்தனைகள், வார்த்தைகள், செயல்கள் நமக்கும், மற்றவர்களுக்கும், தற்போதும், வருங்காலத்திலும் ஆசீர்வாதமான கனிகளைத் தருகிறது. அப்போஸ்தலர் மனப்பூர்வமாக செய்கிற பாவத்தின் விளைவு இரண்டாம் மரணம் என்று சுட்டுக்காட்டி விட்டு, யோசனையாக பின்வருமாறு கூறுவது அனேகருக்கு பிரயோஜன மாக இருக்கிறதை கவனியுங்கள். ''நாமோ கெட்டுப் போகப் பின்வாங்கு கிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களா யிருக்கிறோம்.'' (எபி.10:39) ஆனால் கிறிஸ்தவ விஞ்ஞானிகள் (Christian Scientist) கூறும் யோசனைகள் எதிர்மாறானதாகவும், பொய்யானதாகவும் இருக்கிறன்றன. அதாவது, ''பாவம் இல்லை, வியாதியில்லை, வேதனையில்லை, மரணமில்லை,'' ஆனபடியினால் மீட்பு இல்லை, இரட்சகர் இல்லை, இளைப்பாறுதல் இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். இப்படியான பொய்யான யோசனைகளுக்கும் தேவனுடைய வார்த்தையும், அவருடைய தூதர்களும் கூறுகிற யோசனைகளுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. அதாவது, அவருக்கு மனப்பூர்வமாக கீழ்ப்படிகிறவர்களுக்கு முழுமையான மீட்புக்கு, தேவனுடைய அன்பும் இரக்கம் நிறைந்த வழியும் உண்டு என்பது சத்தியத்தின் யோசனையாகும்.

தன்னுடைய பிள்ளைக்கு நல்லதாயிருக்கிற, உண்மையான யோசனையை அப்பியாசப்படுத்துதல் என்ற பிரமாணம் ஒரு பெற்றோரின் வெற்றியின் இரகசியமா யிருக்கிறது. (தண்டனை மற்றும் சீர்திருத்த ஸ்தாபனங்களின் முதலாளிகள், நிர்வாகிகள், மேற்பார்வையாளர்கள், ஒவ்வொருவரும் தங்களுக்கு கீழாக இருப்பவர்களிடமும், தங்களுடைய சொந்த மனங்களுக்கும் இந்த நல்ல உண்மையான, மதிப்புக்குரிய, நேர்மையான யோசனை என்ற ஒழுக்கவிதிகளை பயன்அளிக்கும்படி அப்பியாசப்படுத்தலாம். உண்மையிலேயே, வாழ்க்கையில் மிக வெற்றி பெற்ற அனேகர் தங்களை அறியாமலே இதை அப்பியாசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மனத்திற்கான யோசனைகளைத் தவிர நம்பிக்கையான, போற்றக்கூடிய, முன்னேறுவதற்கான ஆர்வம் எது?) சில

பெற்றோர்கள் தங்களை அறியாமலேயே தொடர்ந்து இந்த கருத்தை அப்பியாசப்படுத்துகிறார்கள், அவர்கள்தான் வெற்றியுள்ள பெற்றோர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக தாய் ஒவ்வொரு நாள் காலையிலும் தன்னுடைய குழந்தையை மலர்ந்த முகத்துடன், குரலுடனும் வாழ்த்துகிறாள்; அதன் மனதிற்கும், சரீரத்திற்கும், நலமாயிருக்கக் கூடிய சந்தோஷமான யோசனையைக் கூறுகிறாள். அதற்கு ஆடை அணிவிக்கும்போது, அவளுடைய பேச்சு சத்தம் போடுகின்ற அழகான பறவைகளைக் குறித்தும், ஜன்னலைப் பார்த்து, எல்லோரையும் எழுப்பி, நல்லவர்களாகவும், சந்தோஷமாகவும் இருக்கும்படி அழைக்கும் பெரிய சூரியனைப்பற்றியும் இருக்கிறது. மேலும், தேவனைப் பற்றி போதிக்கும் அதிகமான பாடங்களும், ஒருவருக்கொருவர் உதவியாய் இருக்கும் படியாக கூறுவதும், இன்னும் அதிக பயன் தரும் யோசனைகளாகும். அதே வேளையில் ''இன்னொரு சுட்டெரிக்கிற'' நாளைப் பற்றிய புகார், உஷ்ணம், அசௌகரியம், அதிருப்தி ஆகியவைகளைப் பற்றிய ஒரு யோசனை மகிழ்ச்சியின்மையை உற்பவிக்கும்.

ஆனால், சூரிய வெளிச்சத்திற்குப் பதிலாக, மழையும், மந்தாரமுமாய் காணப்படுமானால், அந்த நாளைக் குறித்து சோர்வுடனும் நினைத்து, மற்றவர்களுக்கு சோர்வான சிந்தனைகளைக் யோசனையாக கூறினால் அது இன்னும் காரியங்களை மோசமாக்கும். மழை நாட்கள் நமக்கும், மற்றவர்களுக்கும் அதற்குரிய ஆசீர்வாதத்தைத் தருகிறது. நம்முடைய மனங்கள் இவைகளை அறிந்து, துரிதமாக யோசனைகள் மூலமாக தோழர்களிடம் கூறவேண்டும். தாய் பிள்ளையின் ஏமாற்றத்தை எதிர்பார்த்து அதை மாற்றுவதற்கு, அதனிடத்தில் தேவன் பூக்கள், மரங்கள், புற்கள் ஆகியவைகள் பருகவும், புத்துணர்ச்சி பெறுவதற்காக ஒரு குளியலையும் கொடுப்பதற்காக அழகான மழையை நமக்குத் தந்திருக்கிறார் என்று கூறவேண்டும்; அதன் மூலம் அவைகள் நமக்கு பிரகாசமாகவும், உற்சாகமாக இருக்கும்படியாகவும், அதன்மூலம் நமக்கு அவைகளின் பலனைத் தரும்படியாக மழையைக் கொடுத்திருக்கிறார் என்றும் கூறவேண்டும்; அது மாத்திரமல்ல, கால்நடைகளும், நாமும் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், சுத்தமாகவும், சந்தோஷமாக இருப்பதற்கும் மழையைத் தந்திருக்கிறார் என்றும் கூறுவதுடன் அவரைத் துதிக்க வேண்டும், அவரை நேசிக்க வேண்டும், அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்றும் கூற வேண்டும். இன்னொரு பயனுள்ள ஒரு யோசனையைக் கூட கூறலாம். பலத்த மழைக்காற்றிலிருந்து பாதுகாத்துக்

கொள்ள அதற்கான ஆடை அணிவதுடன், கடினமான பாதரட்சைகளை போடுவதற்கு இது ஏற்ற தருணம் என்று சொல்லுவதுடன், நமக்கு மழையிலிருந்து பாதுகாக்கக்கூடிய பள்ளியும், வீடும் இருப்பதற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் கூறலாம். இல்லையெனில், இன்னொரு யோசனை இப்படியாகக் கூறலாம்: ''என்னுடைய சிறு பையனும், பெண்ணும் சகதியையும், தேங்கிக் கிடக்கும் தண்ணீரையும் தவிர்ப்பதற்கு மிக கவனமாயிருக்க வேண்டும். அப்படி செய்தால் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருக்க முடியும், மேலும் வீட்டிற்குள்ளோ அல்லது பள்ளிக் கூடத்திற்குள்ளோ சேற்றைக் கொண்டு வரக்கூடாது. பன்றிகள் சேற்றை விரும்புகின்றன, அவைகள் எதைக்குறித்தும் அதிக அறிவில்லாதிருக்கிறது, ஆகையால் அவைகள் ஒரு பட்டியில் அடைத்து வைக்கப்பட வேண்டும். ஆனால் நமக்கோ ஆண்டவர் அழகையும் சுத்தத்தையும் உயர்வாக மதிக்கும்படி நிதானிக்கும் தன்மையையும் சக்தியையும் கொடுத்திருக்கிறார். ஆகவே பன்றிகளையும், கீழ்த்தரமான மிருகங்களையும், அசுத்தம் போன்றவைகளில் பின்பற்றுவது, நம்மையும் நம்முடைய சிருஷ்டிகரையும் கனவீனப்படுத்து வதாகும், அது இழிவுள்ள செயலாகும். பிரயோஜனமான, தேவைப்படுகிற வேலையினிமித்தம் எவராவது அழுக்கடைந்தால் அது மரியாதை குறைவானதல்ல, ஆனால் ஒருவரும் தேவைக்கு மேலாக அழுக்கடையக் கூடாது; மேலும் அவன் சுத்தப்படுத்தும் வரை இளைப்பாறுதல் அல்லது ஓய்வு எடுக்கக் கூடாது.'' இப்படியான பயனுள்ள யோசனைகள் பிள்ளைக்கு மாத்திரமல்ல பெற்றோருக்கும் பிரயோஜனமாக இருக்கும் என்று நாங்கள் சுட்டிக் காட்ட அவசியமில்லை. (இப்படியாக தன்னுடைய பிள்ளையை வாழ்த்துகிற பெற்றோர், முதலாவதாக தன்னுடைய இருதயத்தில் முதலாவதாக சந்தோஷமான யோசனைகளை, முன்னரே வைத்திருக்க வேண்டும். இது உண்மையாக இருக்கிறபடியால், இப்படிப்பட்ட நல்ல சந்தோஷமூட்டும் யோசனைகள் பிள்ளைகளுக் கென்று மாத்திரம் இருப்பதில்லை, இதே போன்று மனைவிக்கு, புருஷனுக்கு, அயலகத்தாருக்கு, வேலையாட்கள் போன்றவர்களுக்கும் செல்லுகிறது. வாய் பேசாத மிருகங்கள் கூட இதனால் ஆசீர்வாதம் பெறும். ஜென்ம சுபாவமுள்ள மனிதனோ, மனுஷியோ ஓர் அளவுக்கு இதை அப்பியாசப்படுத்த முடியும், ஆனால் பரிசுத்த சத்திய ஆவியினால் பிறந்தவர்களிடத்தில் மாத்திரமே, தேவனுடைய அன்பு, இந்த புதிய வாழ்க்கையில் உயர்ந்த அளவுக்கு வெற்றியை அடைய நிச்சயமாக எதிர்ப்பார்க்கப்பட வேண்டும். புதிய வாழ்க்கை சாத்தானின் ஆட்சியின்

கீழ் இங்கேயே ஆசீர்வாதங்களை சிதறடிக்கும்படி தொடங்குகிறது, ஆனால் வெகு சீக்கிரத்திலேயே மேசியாவின் இராஜ்யத்தின் கீழ் ''பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.'') அதிருப்தி என்பது நம்முடைய நாட்களில் காணப்படும் பெரிய பொல்லாப்புக்குகளில் ஒன்றாக இருக்கிறது, இது ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும், தங்களுக்கும், மற்றவர்களுக்கும் சந்தோஷமளிக்கக் கூடிய யோசனைகளைக் கொடுக்க எல்லாரும் முயற்சிக்கும் போது, வளர்ச்சியை உற்சாகப்படுத்துவது கடினமாக இருக்கிறது.

இதே முறை, பிள்ளையின் சுகவீனத்திலும், ஆரோக்கியத்திலும் உணவு முறையில் பின்பற்றப் படவேண்டும். ஒரு போதும் பிள்ளையிடம் வலிகளைப்பற்றியும், வேதனைகளைப்பற்றியும் சொல்லக் கூடாது; ஏனெனில், மனம் உடனே இதை யோசிக்கத் தொடங்கும், அது ஏதாவது பெலகீனம், அல்லது வேதனை இருந்தால் அதை இன்னும் மோசமாக்கும்; மேலும் வலிகளும், வேதனைகளும் சம்பாஷனையின் பொருளாக, விசேஷமாக சாப்பாட்டு மேசையில் இருக்கக் கூடாது, இந்த இடத்தில் ஒவ்வொரு சிந்தனையும், மனப்பாங்கும் சந்தோஷமானதாக ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். நல்ல யோசனை அதிகாலையில் கொடுக்கப்படுவதுடன், மறுபடியும் மறுபடியும் சொல்லப்பட வேண்டும். ''இந்த காலை வேளையிலே என் சிறு பையன் சந்தோஷமாக இருக்கிறானா? அவன் அப்பா, அம்மா, தங்கை, அக்கா, அண்ணன், தம்பி, நாய் ஆகியோரை நேசிக்கிறானா ? ஆம், அது சரிதான். நான் அப்படித்தான் நினைத்தேன். அவன் நல்ல காலை உணவுக்காக பசியுடன் இருக்கிறானா? அவனுக்கு பாலும் சக்கரையும் கலந்த தானியத்தினால் செய்யப்பட்ட கஞ்சி, பிஸ்கட், ரொட்டி, பட்டர், ஜாம் வேண்டுமா ! இன்றைக்கு நாம் வெள்ளரிக்காய் அல்லது பழுத்திராத ஆப்பிள் பழங்களை சாப்பிடக் கூடாது. இவைகள் என் சிறு பையனுக்கு வயிற்று வலியைக் கொடுக்கிறது. இதற்கு பதிலாக, உண்மையிலேயே அவனுக்கு நல்லதாக இருக்கிற வேறு ஒன்றைக் கொடுக்க வேண்டும் . அப்படி செய்வது நல்லதாக இருக்காதா? இன்றைக்கு மேஜையில் சோளம் இருக்கும், ஆனால் என் சிறு குழந்தைக்கு நல்லதாக இருக்காது. உணவு அவன் அருகில் வரும்போது, 'வேண்டாம், நன்றி!' என்று கூறுவான். தேவன் விரும்புகிறபடி, அவனுடைய அப்பாவும் அம்மாவும் விரும்புகிறபடி, அவன் நல்ல சுகத்துடனும், வலுவான சரீரத்துடனும் இருக்க விரும்புகிறான்.'' சுயத்தை வெறுப்பதற்கு அது ஒரு நல்ல பாடமாக

இருக்கும். நல்ல மனிதனாக, மனுஷியாக வளர தேவையான இந்த பெரிய பாடத்தை தங்களுடைய சிறு பையன் (சிறுமி) கற்றுக்கொள்ளுவதில் அப்பாவும் அம்மாவும் மகிழ்ச்சியடைவார்கள். எல்லா கிறிஸ்தவர்களும் பாவ காரியங்களிலும், தேவனுடைய காரியத்தை தடைபண்ணக் கூடிய எல்லா காரியங்களிலும் தன்னைத்தான் வெறுப்பதை அப்பியாசப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். உலகப்பிரகாரமான ஜனங்கள் கூட, பரிதபிக்கக்கூடியவனை பெலகீனமுள்ளவனாக, ஆண்தன்மை யற்றவன் அல்லது பெண்தன்மையற்றவள் என்று அறிந்துகொள்ளு வார்கள். இப்பொழுது அப்பாவும், அம்மாவும் அவர்களுடைய சிறு பையனுடைய சித்தம் எவ்வளவு பலமுள்ளதாக இருக்கிறது என்பதை கவனித்துக் கொண்டிருப்பார்கள். அவன் வெற்றி பெறுவான் என்று நாம் நிச்சயமாகவே நம்புகிறோம். சுயத்தை அடக்குவதை தேவன் எவ்வளவு அதிகமாக விருப்புகிறார் என்பது வேதாகமம் கூறுவதிலிருந்து தெரிகிறது. ''பட்டணத்தை பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.'' (நீதிமொழி. 16:32)

ஒழுக்கம்பற்றிய கேள்விகளுக்குரிய பாடங்கள், யோசனைகள் மூலமாக நடத்துவது நல்லதாகவும் அல்லது பொல்லாததாகவும் இருக்க வாய்ப்புண்டு. நாம் பொல்லாங்கு செய்யலாமென்று கூறுவது பொல்லாத செயல்களுக்கு ஊக்கமளிக்க வலிமையுள்ளதாக இருக்கிறது. நாம் நன்மை செய்வோம் என்று கூறுவது நன்மை செய்வதற்கு ஊக்கமளிக்க வலிமையுள்ளதாக இருக்கிறது. ஆகவே, சரி தவறு, உண்மை பொய், கனத்துக்குரியது கனவீனத்திற்குரியது ஆகியவை அடிக்கடி ஒவ்வொரு நாளிலும் எல்லா காரியங்களிலும் பார்க்கப்பட வேண்டும். உண்மை, கனமுள்ளது, சரியானது ஆகியவை அதன் உண்மையான உன்னத நிலையில் காட்டப்படுகிறது. இவைகள் நம்முடைய ஆண்டவரும், சிருஷ்டிகருமானவரால் அங்கீகரிக்கப்படுவது மாத்திரமல்ல, கனத்துக்குரிய நல்ல ஆண்களாலும், பெண்களாலும் அங்கீகரிக்கப் படுகிறது. அவர்களை மாத்திரமே நாம் பின்பற்ற வேண்டும். பிள்ளையின் மனம், கனத்துக்குரியவைகளையும், உண்மையானவைகளையும் வியப்புடன் பார்க்கும்படியாக ஆரம்பத்திலேயே, தொடர்ச்சியாக கற்றுக்கொடுக்கப்படும்போது, அதன் மனதில் பொதுவாக, அற்பமான, அவகீர்த்தியுள்ள நடத்தைக்கு எதிராக ஓர் அரணை ஏற்படுத்திக் கொள்ளுகிறது. சத்தியத்தினால் இன்னும் பரிசுத்தமாக்கப்படாம லிருந்தாலும், ஆவியினால் இன்னும் மறுபடியும் பிறக்காமலிருந்தாலும்

அவன் அல்லது அவள் கனத்துக்குரிய மனுஷனாக அல்லது மனுஷியாக இருப்பதற்கு தேவையான குணத்தை ஆழமாக பதித்துவிட்டது; மேலும், பரிசுத்தமாக்கப்பட்டால், ஆவியினால் மறுபடியும் பிறந்தால் அவன் அல்லது அவள் தற்போதைய வாழ்விலும், எதிர்கால வாழ்விலும் வெற்றிகரமான ஊழியத்திற்கு அதிகமான தருணங்கள் பெறலாம்.

பிள்ளை கீழ்ப்படியாமல் இருக்கும்பட்சத்தில், அதற்கு திருத்துதல் அல்லது கண்டிப்பு தேவைப்படுகிறது, அதன் நன்மைக்காக இரக்கத்துடனும் நம்பிக்கையுடனும் கடிந்து கொள்ளப்பட வேண்டும். ''என்னுடைய சிறிய பெண்ணை நான் அதிகமாக நேசிக்கிறேன், எப்பொழுதும் சந்தோஷப்படுத்த முயற்சிக்கிறேன், ஆண்டவர் அனுமதிக்கிறபடி நடத்த முயற்சிக்கிறேன், ஆனால் அவள் எனக்கு வேண்டுமென்றே கீழ்ப்படியாமலிருக்கவில்லை. இந்த கீழ்ப்படியாமை அவள் மற்றவர்களின் உதாரணத்தை பின்பற்றியதால் வந்தது, அவளுடைய அம்மா சொன்னபடி செய்வதற்கு அவளுடைய சித்தத்தை பூரணமாக உபயோகிக்காததால் ஏற்பட்டது என்று நிச்சயமாக தெரியும். இம்முறை நான் உன்னை மன்னித்து விடுவேன், தண்டிக்கவே மாட்டேன், ஆனால் இந்த விஷயத்தை உன் மனதில் பதியவைப்பதற்காக நீ படுக்கைக்கு செல்வதற்கு முன் உனக்கு முத்தம் கொடுக்கமாட்டேன். என் அன்பு மகளே! இப்பொழுது உன்னுடைய சித்தத்தை கட்டுப்படுத்துவதில் அதிகமாக பிரயாசம் எடுத்து, இன்னொரு முறை என்று வரும்போது நான் சென்னபடி செய்வாய் அல்லவா மகளே? எனக்குத்தெரியும், நீ அப்படிச் செய்வாய்!'' அடுத்தமுறை இந்த விஷயத்தை இன்னும் அதிகமாக சிந்திக்க வேண்டும், ஆனால் குழந்தையின் உண்மையான வாஞ்சைகளையும், நோக்கங்களையும் பற்றி கேள்வி கேட்கக்கூடாது. ''என்னுடைய சிறிய மகள் மறுபடியும் தவறிவிட்டதற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். அன்பான மகளே, உன்னுடைய நல்ல நோக்கங்களை சந்தேகிக்கவே யில்லை, ஆனால் உன்னால் முடியும் என்று நான் அறிந்திருக்கிறேன், நீ உன்னுடைய சித்தத்தை உபயோகிக்கவில்லை என்பதை காணும்போது வருந்துகிறேன், எதிர்காலத்தில் நீ செய்வாயென்று நிச்சயமாக நம்புகிறேன். என் குழந்தையே, உன்னிடத்தில் என்னுடைய கடமையை செய்வதும், கண்டிப்பதும் அவசியாமாயிருக்கிறது, ஆனாலும் இதைக்காட்டிலும் உன்னை புகழ்ந்து பேசுவது எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும். இப்படிப்பட்ட தவறுகளிலிருந்து, நீ வெற்றிப்பெறும் போது, சீக்கிரத்திலேயே உன்னோடு சேர்ந்து களிகூறமுடியும் என்று நான் நம்புகிறேன். இந்த விஷயம் கீழ்ப்படியாமை

என்பதைவிட அதிகமான பாதிப்பை உண்டாக்குகிறது. இது உன்னுடைய எதிர்காலத்தையே பாதிக்கிறது. மனதில் தூண்டுதல் ஏற்படும்போது 'வேண்டாம்' என்று சொல்ல நீ இப்பொழுது கற்றுக்கொள்ளாவிட்டால், எதிர்காலத்தில் உன் வாழ்க்கையில் வரக்கூடிய முக்கியமான பிரச்சனைகளிலும் நீ தவறுவாய். ஆனாலும் என்னுடைய அன்பும் நம்பிக்கையும், போதனைகளும் இன்னும் அதிக பலன் தரும் என்று நிச்சயமாய் நம்புகிறேன். என் குழந்தையே, இப்பொழுது உனக்கு நடந்ததுபோல, நம்முடைய வாழ்வின் தோல்விகள் எல்லாம் நமக்கு உதவியாக மாறலாம், ஆனால் அதற்கு நம்முடைய சித்தத்தை நியாயமானவைகளின்மேல் உறுதியாக பதித்திருக்க வேண்டும் என்பதை நீ கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய அனுபவத்தின் மூலமாக நாம் எங்கெல்லாம் பலவீனமாக இருக்கக் காண்கிறோமோ அந்த இடங்களில் ஜாக்கிரதையாக இருக்கக் கற்றுக் கொள்கிறோம். இந்த தோல்வி நமக்கு பிரயோஜனமான பாடமாக இருக்கும்படி ஆண்டவருடைய சமூகத்தில் நம்மை தாழ்த்தி அவருடைய ஆசீர்வாதத்திற்காக மன்றாட வேண்டும். அதை இருதயத்தில் பதிய வைக்க அவருடைய உதவியை கேட்க வேண்டும், மேலும் அடுத்தமுறை மனத்தூண்டுதலினால் தாக்கப்படும்போது நீ நடந்துகொள்ளும் விதம் அவருக்கு அதிக பிரியமானதாக இருக்கும்படி கேட்க வேண்டும்.''

எல்லா யோசனைகளும், ''கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்'' என்ற வேத வாக்கியத்திற்கேற்ப கவனிக்கப்பட வேண்டும். வீட்டின் ஒவ்வொரு அறையிலுமுள்ள வேதவசன அட்டைகள் தொடர்ந்து பெற்றோர்களையும், பிள்ளைகளையும் ஞாபகப்படுத்த வேண்டும். அதாவது, தேவனுடைய சித்தமே நியமமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதையும், நம்முடைய எல்லா செயல்களையும் காரியங்களையும் அவர் அறிந்திருக்கிறார் என்பதையும், தேவன் ''நம் பட்சத்தில் இருக்கிறார்,'' அதாவது புதிதாகப் பிறந்துள்ளவர்கள் மற்றும் தாழ்மையாக நீதியைத் தேடுகிற அனைவரின் பட்சத்தில் இருக்கிறார் என்பதையும் அவைகள் ஞாபகப்படுத்த வேண்டும்.

ஆபத்துக்காலத்தில் நம்முடைய பிள்ளைகள்

இப்பொழுது ஜீவித்துக்கொண்டிருக்கிற புது சிருஷ்டிகள் கீழ்க்கண்ட உண்மையை உணருவார்கள். நாம் அறுவடைக்காலத்தில் இருக்கிறோம். கோதுமையை பிரித்து அவைகளை களஞ்சியத்தில்

சேர்க்கும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. வெகு சீக்கிரத்தில் உபத்திரவத்தின் நாட்கள் முழு உலகத்தின் மேலும் வரும். விசேஷமாக அது பேர்கிறிஸ்தவ உலகத்தின் மேல் வரும். இப்பொழுது ஜீவிக்கிற புது சிருஷ்டிகள் தங்கள் பிள்ளைகள் மேல் அதிக அக்கரையுடன், உபத்திரவத்தின் நாளுக்கென்று தங்களால் இயன்றவரை ஞானமாய் அவர்களை தயார்செய்யும்படி விரும்புவார்கள். உபத்திரவம் எல்லா வகுப்பினருக்கும் வரும் என்றும், அது தற்போதுள்ள ஐசுவரியம், சமுதாயம், மதம், அரசியல் ஸ்தாபனங்கள் எல்லாவற்றையும் பாதிக்கும் என்றும் தெளிவாக வேதம் கூறுகிறபடியால், இந்த உபத்திரவங் களிலிருந்து புது சிருஷ்டி அற்புதமாக விடுவிக்கப்படுவான் என்று நாம் எதிர்பார்ப்பது முறையல்ல. அல்லது உலகத்தில் ஒரு இடத்தில், அவர்கள் இயற்கையின் சூழ்நிலைகளிலிருந்து பிரித்து வைக்கப்படுவார்கள் என்று நினைக்கவும் கூடாது. மனிதர்கள் தங்களுடைய வெள்ளியையும் பொன்னையும் தெருக்களில் எரிந்துவிடும் நாட்கள் வரும், அவைகள் அவர்களை தப்புவிக்க மாட்டாது. (எசே.7:19; செப்.1:18) தங்கமும் வெள்ளியும், வங்கி பணமும் பத்திரங்களும் பிரயோஜனமற்றதாக இருக்குமென்றும், அது பாதுகாப்பையோ, சௌகரியங்களையோ அல்லது ஆடம்பரங்களையோ தர முடியாது என்பதும் தெரிகிறது. குறைந்த பட்சம் ஆகாரமாவது கிடைக்கும் என்று கிராமப்புறங்களை நோக்கிப்பார்த்தால் அந்த நாளின் உபத்திரவங்கள் பட்டணங்களோடு கிராமப் புறங்களையும் பாதிக்கும் என்று வேதாகமம் கூறுகிறது. ''போகிறவனுக்கும் வருகிறவனுக்கும் நெருக்கிடையினிமித்தம் சமாதானமுமில்லை; எல்லா மனுஷரையும் ஒருவரையொருவர் விரோதிக்கச்செய்தேன்.'' (சக.8:10)

உபத்திரவத்தின் நாட்களில் நிலைத்திருக்கக்கூடிய ஒரே ஒரு வாக்குத்தத்தம் இருக்கிறது, அதுவும் பொதுவானது போல் தோன்றுகிறது. அது மனத்தாழ்மையும், நீதியையும் தேடுகிற அனைவருக்கும் உரியது. இந்த வகுப்பினரில், அர்ப்பணம் செய்து கொண்டவர்களும், ஆண்டவருடைய நீதிபோதனைகளின்படியும், அவருடைய வசனத்தின் படியும் போதிக்கப்பட்ட அவர்களுடைய வளர்ச்சியடைந்த பிள்ளைகளும் அடங்குவர். இந்த வாக்குத்தத்தம் கூறுகிறதாவது: ''நீதியைத் தேடுங்கள்; மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒரு வேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்.'' (செப். 2:3)

கிறிஸ்தவ பெற்றோர்கள், சில சமயங்களில், திரைக்குள்ளாக கடந்து சென்றவுடன் ஆண்டவரோடு இருப்போம், மறுரூபமாகி முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவோம், ஆண்டவருடனும் அவருடைய பரிசுத்தவான்களுடனும் இருப்போம், மகிமையில் பங்கு பெறுவோம் என்ற முழு நம்பிக்கையுடன் இருந்தாலும், தங்களுக்கு அருமையானவர் களை விட்டுச்செல்ல விருப்பமில்லாதவர்களாயிருக்கிறார்கள். புதிய மனம் சில சமயங்களில் இப்படியாக தடைபண்ணப்படுகிறது, பின்னால் விடப்பட்ட குடும்ப அங்கத்தினர்களைக் குறித்து வியாகுலப்படுகிறது, அவர்களுடைய உதவிக்காக, வழிநடத்தும்படியாக, ஆலோசனை சொல்லும்படியாக அவர்களோடு தொடர்ந்து இருக்க விருப்பமுள்ளவர் களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், ஆண்டவருக்கென்று தங்களுடையவைகளனைத்தையும் கொடுத்துவிட்ட பின்னர், ஆண்டவர் அவர்களுடைய சரியான நலன்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டார் என்பதை உணர வேண்டும்; மேலும், தங்களுடைய உலகப்பிரகாரமான கவலைகளை அவருடைய அன்புள்ள பராமரிப்புக்கு ஞானமாய் விட்டுவிடலாம். திவ்விய அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழத்தைப் பற்றி அவர்கள் அதிகதிகமாக கற்றுக்கொள்ளும்போது, மேலும் எப்படி பெரிய மீட்பின் பலன்கள் இறுதியில் ஆதாமின் சந்ததியினரின் ஒவ்வொரு அங்கத்திற்கும் வரும் என்பதை கற்றுக் கொள்ளும்போது, அவர்களுக்கு அருமையானவர்களைக் குறித்து ஆண்டவரிடத்தில் அதிகமான நம்பிக்கையும், நம்பும் பொறுப்பையும் பெற்றுக்கொள்ளுவார்கள். மேலும் திரைக்கு அப்பால் உள்ள அவர்களே, இப்பொழுது இருக்கிறது போன்றே அவர்களுக்கு அருமையானவர்களின் நலன்களை பார்த்துக்கொள்ளும்படி ஒரு தருணம் இன்னும் இருக்கிறது என்பதையும், இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் திவ்விய ஞானத்தின்படி அவர்களுடைய காரியங்களில் தேவனின் வழிநடத்துதலும் இருக்கிறது என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதை அவர்கள், அப்பொழுது முற்றிலுமாக ஒத்துக்கொள்ளுவார்கள்.

அப்படியானால் மாம்சத்தின்படியாக, புது சிருஷ்டி தன்னுடைய பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய பொருத்தமான காரியம் என்ன? செய்யக்கூடிய நல்ல காரியம் அவர்களுக்குரிய முறையான பயிற்சிதான் என்று நாம் பதில் சொல்லுகிறோம். இது நாங்கள் ஏற்கனவே காட்டியுள்ளபடி, பொதுவான கல்வியறிவும், தேவனுக்கடுத்த காரியங்களில் ஒரு குறிப்பான அளவு பயிற்சியும் போதனையும்தான். அந்த

பயிற்சியும், போதனையும் அவருக்கும், அவருடைய வசனத்திற்கும் செலுத்தும் பயபக்தியிலும், அவருடைய வாக்குத்தத்தங்களின்மேல் உள்ள விசுவாசத்திலும், திவ்விய சித்தம் என்று வேதாகமத்தில் குறிப்பிட்டப்பட்ட பண்புகளை வளர்ப்பதிலும், அதாவது பொன்னான கற்பனையை வளர்ப்பதிலும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பிள்ளைகள் உலகப்பிரகாரமான செல்வத்தில் ஒரு ரூபாய் இல்லாமல் விடப்பட்டாலும், அவர்கள்தான் ஐசுவரியவான்கள். ஏனெனில், அவர்களுடைய இருதயத்திலும், தலையிலும், உருவாக்கப்பட்டுள்ள குணத்திலும் ஒரு வகையான ஐசுவரியம் உண்டு; அதை பூச்சியோ, துருவோ அல்லது அராஜகமோ, அல்லது உலகத்திலுள்ள எதுவுமே அவர்களிடத்திலிருந்து எடுக்க முடியாது. அப்போஸ்தலர் கூறுகிறபடி அவர்கள் தேவனிடத்தில் ஐசுவரியவான்களாக இருப்பார்கள். அவர் மறுபடியும் கூறுகிறதாவது: ''போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்,'' மிகுந்த ஐசுவரியம். தேவனுடைய கிருபையால் இப்படியாக தன்னுடைய பிள்ளைகளை இப்போது உள்ள வாழ்க்கையின், வரப்போகிற வாழ்க்கையிலும் ஏற்படக்கூடிய ஒவ்வொரு சூழ்நிலைக்கும் தகுதியாகும்படி ஊக்கமாக முயற்சிக்கிற புது சிருஷ்டிகள், அனேகமாக உலகப்பிரகாரமான கவலைகளிலிருந்து விடுபட்டு இருக்கலாம். எப்படியெனில், கடந்த காலத்தில் தேவையான, நலமான காரியங்களைக் கொடுத்த தேவன், அவரை நேசித்து, அவரை நம்புகிறவர்களுக்கு, இந்த வேளைக்கும், அந்த வேளைக்கும் ஏற்ப உள்ள சூழ்நிலைகளின்படி, தொடர்ந்து மேற்பார்வையிடவும், தேவைகளை சந்திக்க சித்தமுள்ளவராயும், வல்லமையுள்ளவராயும் இருக்கிறார் என்பதை நினைவு கூறவேண்டும்.

முறையான கேளிக்கைகள்

உல்லாசமும், சிரிப்பும் மனித சுபாவத்தில் இணைந்துள்ளவை களாகும். அது பயனளிக்கக் கூடிய, எல்லாவற்றிலும் மிக முக்கியமான பண்பாக, அடிக்கடி கற்பிக்கப்படுகிறது. குழந்தைகள் தொடர்ந்து ஒரே மாதிரியான வேடிக்கைகள் காட்டப்படுவதினால் அவர்கள் திருப்தியடைந்த நிலை அழிக்கப்படுகிறது. அப்பொழுது அவர்கள் இன்னும் வேடிக்கைக் காட்டப்பட வேண்டும் என்று அழுவார்கள். குழந்தை பருவம் வரை இந்த கேளிக்கைப்பற்றிய எண்ணம் தொடர்கிறது, ஆனால் அந்த வேளையில் வாழ்க்கையின் விஷயங்களை ஆராய்வதுடன்,

புத்தகங்களிலிருந்தும், பெற்றோர்களிட மிருந்தும், விளக்கங்களைக் கேட்டு தன்னை சந்தோஷப்படுத்திக்கொண்டு இருந்திருக்க வேண்டும். இப்படியாக உல்லாசப்படுத்தப்படுவது, வளர்ப்பிக்கப்படுவது, காலம் கடந்து போகும்போது, தியேட்டர் செல்ல வேண்டும், கோமாளியின் கேளிக்கூத்தைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை வருகிறது. புது சிருஷ்டியின் அங்கங்கள், முதலிலிருந்து கடைசிவரை தங்களுடைய சந்ததியினரை எதிர்மாறான வழியில் பயிற்சிக்க வேண்டும். அதாவது வாழ்க்கை என்னும் பெரிய நாடகத்தில் நடிகர்களாக இருக்கும்படி, போலியானவர்களை அகற்றும்படி, அவர்களுடைய தாலந்துகளும் தருணங்களும் அனுமதிக்கிறபடி உலகம் என்னும் மேடையில் உபயோகமான, இரக்கத்திற்குரிய பெரிய காரியங்களைச் செய்யும்படி பயிற்சிக்க வேண்டும்.

புது சிருஷ்டியினுடைய பிள்ளைகளின் விவாகம்

புது சிருஷ்டிகளுக்கு அப்போஸ்தலர்கள் கொடுத்த கட்டளையை ஏற்கனவே நாம் பார்த்துள்ளோம். அதாவது திருமணம் செய்து கொள்ளுகிறவர்கள் நன்றாக இருக்கிறார்கள், ஆனால் திருமணம் செய்துகொள்ளாதவர்கள் அதைவிட நன்றாக இருக்கிறார்கள். ஆனாலும், இந்த புத்திமதி, அர்ப்பணம் செய்துகொள்ளாத பிள்ளைகளுக்கு உரியதல்ல. பிரதிஷ்டை செய்துகொள்ளாதவர்களைப் பற்றி அப்போஸ்தலர் எழுதுகிறார். ''ஆகையால் (யோசனையாக) இளவயதுள்ள விதவைகள் (சபையில் உள்ளவர்கள், ஆனால் விசுவாசிகளல்ல, ஆனாலும் அர்ப்பணம் செய்யாதவர்கள், பரிசுத்தமாக்கப்படாதவர்கள்) விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.'' (1தீமோ.5:14)

புதுசிருஷ்டிகளில் அநேகர், வேண்டுமென்று செய்யா விட்டாலும், இந்த விஷயத்தில் அதிகமாக தவறுகிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். விவாகங்கள் பெரும்பாலான காரியங்களில் அதிகப் படியான பொறுப்புகளைக் கொண்டுவருவது மாத்திரமல்ல, கசப்பான ஏமாற்றங்களையும், துக்கங்களையும், இருதயத்தில் வேதனைகளையும் கொண்டு வருகிறது என்பதை சீக்கிரத்தில் அறிந்து கொள்ளுகிறார்கள். பிள்ளைகள் திருமண வயதை அடைந்துவிட்டால், ஆனால்

ஆண்டவரிடத்தில் தங்களுடைய இருதயங்களை கொடுத்திரா விட்டால், புது சிருஷ்டிகளுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டுள்ள அப்போஸ்தலரின் புத்திமதியை பின்பற்றுவதில் உள்ள ஞானத்தை பார்க்கவும் அவர்கள் ஆயத்தமாக இருக்க மாட்டார்கள். அடக்கமுடியாத ஆசைகளோடு ''வேகிறதைப்பார்க்கிலும்'' விவாகம் பண்ணுகிறது நலம்.

இயற்கையாகவே மனுஷனுக்கும், மனுஷிக்கும், ஆதாமுக்கும் ஏவாளுக்கும், பாவம் உலகத்தில் பிரவேசிப்பதற்கு முன்னர், தேவன் விவாகத்தை உண்டு பண்ணினார் என்பதை நாம் நினைவு கூற வேண்டும். மற்ற எல்லா நல்ல காரியங்களும் துஷ்பிரயோகப்படுத்த படுவது போன்று விவாக உறவும் துஷ்பிரயோகப்படுத்தப்பட முடியுமென்றாலும், அது பொதுவாக துஷ்பிரயோகப்படுத்தப்பட்டாலும், இது விவாகத்தினால் ஏற்படும் தவறு அல்ல, ஆனால் அது துஷ்பிரயோகப்படுத்துவதின் தவறு ஆகும். ''விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.'' (எபி.13:4)

நல்ல பெற்றோர்களிடமிருந்துகூட, இந்த விஷயத்தைப்பற்றிய புத்திமதியை ஏற்றுக்கொள்ள வளர்ந்துவிட்ட பிள்ளைகள் விருப்ப மில்லாமல் இருப்பது இயற்கையானதுதான். இயற்கையின் போக் கெல்லாம் எதிர்திசையில்தான் இருக்கிறது. மேலும், அவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரின் உதாரணமே உள்ளது. ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்கிற அவரது புத்திமதியை அசட்டை பண்ணினால், வாழ்க்கையின் பாடங்களை கட்டளைகளின்படி கற்காமல், அனுபவத்தின் மூலம் கற்கத் தீர்மானிக்கிறார்கள். கற்பதை சீக்கிரத்தில் ஆரம்பிப்பது நல்லது. வாழ்க்கையின் அனேக பாடங்களை விவாகத்தினால் ஏற்படும் அனுபவங்கள் மூலம் கற்றுக்கொள்ளலாம். இதை செய்யும்படியாக கூடுமானவரை புதிதாக விவாகம் செய்து கொண்டவர்கள் தங்களுடைய சொந்த காலிலேயே நிற்கும்படி செய்வது நல்லது. அதாவது அவர்கள் தனியாக ஒரு குடும்பம் அமைக்கும்படி உற்சாகப்படுத்தப்பட வேண்டும். இப்படிச் செய்வதினால் தன்னை சார்ந்து நிற்பது, மனவலிமை, பொறுமை, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தல், ஒத்துழைப்பு என்பவைகளை மதிக்க அதிக வேகமாக கற்றுக்கொள்ளுவார்கள்.

''இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்'' (1கொரி.7:26) என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவது, சீக்கிரத்திலேயே விவாகம் செய்துகொள்வதினால் ஏற்படக்கூடிய துன்பத்தைக் குறித்துகூட இருக்கலாம் என்று கருதுகிறோம். சிந்திக்கும் பழக்கமும், நடத்தையும் பொதுவாக நிலைத்து நிற்பதற்கு முதிர்ச்சியான வயது சில விஷயங்களில் ஆணுக்கு 21 வயதும் பெண்ணுக்கு 18 வயதும் என்று நாங்கள் நினைக்கிறோம். விவாக தம்பதியினர் ஒருவருக்கொருவர் பிணைந்திருக்க வேண்டும். ஆகவே, உணர்வுகளை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பது நல்லது, விசேஷமாக இது பெண்ணிடத்தில் இருக்க வேண்டும். அவள் மதிக்கக்கூடிய, உயர்வாக எண்ணக்கூடிய ஒருவரையே தன்னுடைய துணையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், நாம் அறிந்திருக்கிற ஒழுங்குகள் அனுமதிக்கும் வகையில் விட்டுக் கொடுப்பதில் சந்தோஷப்பட வேண்டும். இதோடு, இளம் தாயின் அதிகமாக வளைந்து கொடுக்கக் கூடிய சரீரத்தின் கட்டமைப்பு, அவளுக்குக் கொடுக்கப்பட்ட விசேஷமான சாபத்தை தாங்கிக்கொள்ளும் படியாக அவளுக்கு அனுகூலமாக இருக்கும். (ஆதி.3:16) தன்னுடைய பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றவும், பயிற்றுவிக்கவும் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஒவ்வொரு சரியான பெற்றோருக்கும் வருகின்ற மதிப்புள்ள அனுபவங்களையும் கூட நாம் மறந்து விடக்கூடாது. இந்த பாடங்கள் மற்ற எதைக் காட்டிலும் அவர்களை பரலோக பிதாவினிடத்தில் துரிதமாக கிட்டிச் சேர்க்க வைக்கலாம், இந்த காரியத்தத்தைதான் புது சிருஷ்டி மற்ற எல்லா விஷயங்களைக் காட்டிலும் தங்களுடைய சந்ததிக்கு தேவையானது என்று வாஞ்சிக்கலாம்.

ஞானமுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் விவாகத்தில் இயற்கையாகவே உள்ள ஆசையை முறியடிக்கக் கூடாது. ஆனால் நாம் ஞானத்துடன் ஒத்துழைத்து, அவர்கள் தங்களுடைய ஞானத்தினால், சரியான துணையைக் கண்டு பிடிக்கும்படி உதவ வேண்டும். சரியான முறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் இயல்பான வாழ்க்கையின் மிக முக்கியமான விவகாரத்தில், அன்பும் கரிசனையும் கொண்ட பெற்றோரின் புத்திமதியை ஒதுக்க மாட்டார்கள். இருந்தாலும், இப்படிப்பட்ட நேரத்தில் தயை உள்ள பெற்றோர் விவாக இணைப்பு சீரான நிலையில் இருக்க வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. அவிசுவாசி அவிசுவாசியுடன், நீதிமானாக்கப்பட்டவர் நீதிமானாக்கப் பட்டவருடன், பரிசுத்தமாக்கப்பட்டவர் பரிசுத்தமாக்கப்பட்டவருடன் என்று ஏற்கனவே

தெளிவுபடுத்தப்பட்டபடி இருக்க வேண்டும். வேறுவிதமாக சொல்லவேண்டு மென்றால், அவர்களுடைய மகன்களும், மகள்களும் பிரதிஷ்டை பண்ணாதவர்களாயிருந்தால், அவர்கள் புதுசிருஷ்டியான ஒருவருக்கு விவாகம் பண்ண முயற்சிக்கக் கூடாது. ஏனெனில், புது சிருஷ்டிகள் ஆண்டவருக்குள் இருக்கிறவரை மாத்திரம் விவாகம் பண்ண வேண்டும். ஆனால் வித்தியாசமான சுபாவங்கள் இணையும்போது அது இருவருக்குமே ஒரு வேளை அனுகூலமாக இருக்காது என்பதை உணர வேண்டும். இந்த விஷயங்ளெல்லாம் தன்னுடைய ஜனங்கள் ''ஆண்டவருக்குள் இருக்கிறவரை மாத்திரம்'' விவாகம் பண்ண வேண்டும் என்கிற திவ்விய கட்டளைக்கு மாறாக இருக்கிறது.

நமது பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு உக்கிராணத்துவம்

சுத்தமான சரீரங்கள், தங்கள் பிள்ளைகள் சுத்தமான மனதுள்ளவர்களாய் இருக்குமாறு உதவி செய்வதால், ஆரோக்கியமான சரீரங்கள், ஆரோக்கியமான மனங்களுக்கு கூடுதலான முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றன என்பதை பெற்றோர்கள் நினைவில் வைத்துக் கொள்ளுவது நல்லது. ஒவ்வொரு புது சிருஷ்டியும் தன்னுடைய தெளிந்த புத்தியோடு, தங்களுடைய சந்ததியினரை அவர்களுடைய சரீரங்கள் அனுமதிக்கிற அளவுக்கு எவ்வளவு நல்ல சரீர சுகத்தை அடைய முடியுமோ, அந்த அளவுக்கு ஆரோக்கியம் பெறவும், அதைக் காத்துக்கொள்ளவும் வழிநடத்தும்படி ஓர் அளவுக்கு வேதாந்தியாயும் இருக்க வேண்டும். சுத்தமான காற்று, சுத்தமான தண்ணீர், சுத்தமான உணவு, மனதிற்கும், சரீரத்திற்கும் சுத்தமான பயிற்சி என்பவைகள், நம்முடைய பெற்றோர்களிடம் நாம் பெற்றவைகள். இவைகளை நல்லபடியாக உபயோகிப்பதற்கு நல்ல அடித்தளமாக இது இருக்கிறது. இதை நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் மூடுபனி காலத்தில் உள்ள காற்று புதிய காற்று அல்ல என்பதை அறிய வேண்டும்; மேலும், போதுமான காற்றோட்டத்திற்கு இசைவாக, அது நுரையீரலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்; வீட்டிற்குள்ளே இருக்கும் காற்றோட்டம் கூடுமானவரை, சூரிய வெளிச்சத்தோடுகூட உள்ளதாக இருக்க வேண்டும், மேலும் பெலகீனமுள்ளவர்கள், அதிகாலைப் பொழுதிலும், பின்மாலைப் பொழுதிலும் ஈரப்பதமுள்ள சூழ்நிலையில் வெளியே இருக்கக் கூடாது.

எல்லா தண்ணீர் சேகரிக்கும் பாத்திரங்கள் போன்றவைகளின் சுத்தத்தை அவன் கவனிக்க வேண்டும், அவைகளை மிகவும் கவனமாக பராமரிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் அதன் தேக பலத்திற்கும், வயதுக்கும் ஏற்றவாறு ஒரு குறிப்பிட்ட வேலை கொடுக்கப்பட வேண்டும், அதை அவன் சரியாக கவனமாக செய்கிறானா என்று பார்க்க வேண்டும்; இந்த வேலை ஒரு பகுதி மனதாலும் இன்னொரு பக்கம் சரீரத்தினாலும் செய்யப்படுவதாக இருக்க வேண்டும். வாசிப்பதும், படிப்பதும், அதுமாத்திரமல்ல சரீர உழைப்பும் கவனமாக கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், வாழ்க்கையின் பல்வேறு கடமைகளுக்கு ஆயத்தப்படுமாறு சரீரத்தை, மனதை சரியானபடி உருவாக்கும்படி, வேலை நேரத்திற்கும் நேரம் மாற வேண்டும். பெற்றோர் தன்மேல் வைத்திருக்கிற கரிசனையை பிள்ளை உணர வேண்டும்; மேலும், அவன் எதிர்காலத்தில் நன்றாக இருக்க வேண்டும் என்று அவர்கள் அன்பினால் உந்தப்படுவதையும், அது திவ்விய கடமையாக இருக்கிறது என்பதை அவன் உணர வேண்டும்.

சாப்பாட்டைப் பற்றிய காரியங்கள் தவறாக புரிந்துகொள்ளப் படுவது வருத்தத்திற்குரியது. இதுவே சந்தேகத்திற்கு இடமில்லாமல் அதிமான மனநோய்க்கு அல்லது சரீரநோய்க்கு காரணமாக இருக்கிறது. உணவுகள் மூன்று வகையாக பிரிக்கப்படலாம் என்பதை பெற்றோர்கள் உணர வேண்டும்:–

1) சதையை, தசையை, நரம்பை உருவாக்குகிற அதிக நைட்ரஜன் வாயுள்ள பொருட்கள். இவைகளில் மீன், கோழி, முட்டைகள், பட்டாணி, அவரைகள் ஆகியவை அடங்கும். இந்த உணவில் ஒவ்வொரு நாளும் ஐந்து அவுன்ஸ், சாதாரண வேலையிலுள்ள ஒரு சராசரி மனிதனுக்கு முழு உணவு என்று கருதப்படுகிறது. பிள்ளைகளுக்கு விகிதாச்சாரப்படி குறைவாக இருக்க வேண்டும். அதிக நேரம் சமைப்பதால் இந்த உணவுகள் பாதிக்கப்படுகின்றன.

2) மாவுச்சத்தும் சக்கரையும் அதிகமாக உள்ள உணவுகள். இவைகள் நரம்புக்கு வேண்டிய சக்தி–பலம், செயல்திறன், சுறுசுறுப்பு, உஷ்ணம் ஆகியவைகளைத் தருகின்றன. இவைகளில் கோதுமை, உருளைக்கிழங்கு, சோளம், ஓட்ஸ் என்னும் தானியம், அரிசி இவைகளிலிருந்து உண்டாக்கப்படும் ரொட்டி, பிஸ்கட், களி ஆகியவை அடங்கும். இவைகள் புதியதாக இருக்கும்போது சமைக்கப்பட வேண்டும். அதிக சத்துடன் இருப்பதற்கும், எளிதில் ஜீரணம் ஆவதற்கும் நன்றாக சமைக்கப்பட

வேண்டும். ஜீரண சக்தி இயற்கையாகவே குறைவாக இருக்குமானால் அதற்கு ஏற்றவாறு இன்னும் நன்றாக சமைக்கப்பட வேண்டும். இயந்திரம் போன்று இயங்குவதும், எளிதாக பிரயாணம் செய்வதும் நம்முடைய காலத்திற்குரிய செயலாகும். அப்படியிருக்கும்போது தசைநாரைக் காட்டிலும், நரம்பு சக்தி அதிகமாக தேய்மானம் அடைகிறது. ஆகவே, முதலாவது கூறப்பட்ட உணவை விட இந்த உணவு அதிகமாக உட்கொள்ளப்பட வேண்டும். சராசரியான ஒரு மனிதனுக்கு ஒரு நாளைய உணவு இருபது அவுன்சாக இருக்க வேண்டும். வளருகின்ற பிள்கைளுக்கு விகிதாசாரப்படியான அளவுக்கு மேல் கொஞ்சம் அதிக அளவு கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் மனதிற்கும், சரீரத்திற்கும் அதிக வேலை கொடுக்கிறார்கள்.

3) பழங்களும் காய்கறிகளும். இவைகள் அதிகமாக நீரும், அதிக பிரயோஜனமான பயோகெமிகல் உப்புக்களும் அதிகமாக உள்ளவை. எலுமிச்சை, பொட்டாஷ் போன்றவைகளில் உள்ள உப்பு எலும்பு உற்பத்தியாவதிலும், நரம்புக்குரிய உணவை கட்டுப்படுத்துவதிலும் உதவுகின்றன. ஆனால் அவைகளில் உள்ள தண்ணீர் போன்ற நார்கள் (முட்டைகோஸ், தர்ணிப் போன்றவைகளில் உள்ளதுபோன்று) நம்முடைய போஷாக்குக்கு ஒன்றும் அளிப்பதில்லை, குடலை சுத்தம் செய்வதிலும், மூலைமுடுக்குகளில் உள்ள அழுக்குகளை அகற்றுவதிலும் உதவுகின்றன. இப்படிச் செய்வதின் மூலம் அதிக சத்துள்ள உணவுகள் தேகத்தின் செயல் முறைகளை அடைத்துவிடாதபடி உதவி செய்கின்றன. இவைகளில் சில பழச்சாறு கலந்த பானம், பீட்ஸ், இனிப்பான ஆப்பிள் போன்றவைகள், அவைகளுடைய இனிப்புத் தன்மைக்கேற்ப சத்துள்ளவைகளாகும். அவைகளில் சிலவற்றில் உள்ள கடினமான அமிலங்கள், இரத்தத்தை சுத்தப்படுத்தவும், மெருதுவாக்கவும் செய்கின்றன. இவைகளில் திராட்சை, புளிப்பான ஆப்பிள், எலுமிச்சை, ஆரஞ்சு போன்றவைகள் அடங்கும். திரவமான உணவு ஏதாவது ஒரு உருவில்–பால், சூப் அல்லது தண்ணீருள்ள பழங்கள், காய்கறிகள், அல்லது வெறும் தண்ணீர்கூட அடங்கும். சராசரியான ஒரு மனிதன் ஐந்து பவுண்டு (5/8 காலன்) தண்ணீர் ஒவ்வொரு நாளும் குடிக்க வேண்டும். பிள்ளைகள் விகிதாசாரப்படி குடிக்க வேண்டும். சாப்பாட்டு நேரத்திற்கு சாப்பாட்டில் போதுமான அளவு திரவம் இருக்கிறது. ஆகையால் சாப்பாட்டிற்கு ஒரு மணி நேரம் கழித்து தண்ணரீர் குடிக்க வேண்டும். அதிகமான ஜனங்கள் மிக குறைவான தண்ணீரையும் காய்கறிகளையும் உபயோகிக்கிறார்கள் என்பதை புள்ளிவிபரம் காட்டுகிறது.

மேலும் மாவுப்பண்டம் உள்ள பொருட்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் (கோதுமை, சோளம், ஓட்ஸ் போன்றவை) நைட்ரஜன் தன்மையுள்ளவைகளும் உண்டு. ஆகவே, குறைவான செலவில் செய்யப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக அல்லது வேறு ஒரு காரணத்திற்காக காய்கறிகளால் மாத்திரம் ஆன சாப்பாடு வெகு சிறிய செலவில் ஒழுங்கு பண்ண முடியும்; இந்த மாதிரியான சாப்பாடு மூளை, வலிமை, சுறுசுறுப்பு ஆகியவற்றில் ஒரு குடும்பத்தை போஷாக்கு உள்ளதாக்கும்.

இந்த உணவுகளை சரிவிகிதத்தில் (விசேஷமாக இரண்டாவது, மிக முக்கியமானது) சாப்பிடாவிட்டால், வியாதிக்கு வழி வகுக்கும். அதிகமாக உட்கொண்டால் இரத்தம் அதிகமாகி, மந்த நிலையில் ஓடுவதுடன், முகப்பருக்கள், கட்டிகள் உண்டாகிறது அல்லது நாக்குமேல் கருப்புப் படரச் செய்கிறது; தலைவலி, முடக்கு வாதம் ஏற்படுகிறது; மூக்கடைப்புடன் ஜலதோஷத்திற்கு வழி வகுக்கிறது; அல்லது போஷாக்கு குறைவு ஏற்பட்டு பெலகீனம், நரம்பு தளர்ச்சி, நாக்கில் வெள்ளைப் படருதல் ஆகியவை வருகிறது. அதுவும் ஜலதோஷத்திற்கு வழி வகுக்கலாம். பிள்ளைகள் தங்கள் உடலில் காணப்படும் அறிகுறிகளைக் கண்டு அதற்கேற்ப சாப்பிடும்படி போதிக்கப்பட வேண்டும்; வியாதியை அதன் ஆரம்பத்திலேயே எதிர்க்கவும், அல்லது முடிந்தால் அதைத் தடுக்கும்படி சாப்பாட்டு மேஜையில் மிதமாக சாப்பிடும்படி, நல்ல நிதானமான தீர்மானம் செய்ய வேண்டும். ஆனால், எல்லோருமே இப்படிப்பட்ட விஷயத்தில் தெளிவாக சிந்திக்க முடியாது; ஆகவே, தேவனுடைய கிருபையால் தெளிந்த புத்தியுள்ள பெற்றோர்கள் சாப்பாட்டைக் கட்டுப்படுத்தவும், அளவின்படி கொடுக்கவும், மாற்று உணவுகளை கொடுக்கவும் முடியும். ஆகவே, சாப்பிடுபவர்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஒரே நேரத்தில் பல்வேறு உணவுகளை பரிமாறுவதை விட, ஒவ்வொரு வேளைக்கும் ஒவ்வொரு வகை உணவை பரிமாறலாம்.

நாங்கள் ஒரு போலியானதை வலியுறுத்தவில்லை. அல்லது புது சிருஷ்டிகளின் மனதை ஆவிக்குரிய உணவிலிருந்து திசைத் திருப்பி சரீரபிரகாரமான ஆரோக்கியத்தின் மேலும், என்னத்தை புசிப்போம், என்னத்தை குடிப்போம் போன்றவைகளின் மேல் சிந்தனையை வைக்க விரும்பவில்லை..... இவைகளை அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள். நாங்கள் முக்கியமாக ஆவிக்குரியவைகளை தேடுகிறோம். எங்களுடைய மனமும் சம்பாஷனையும் விசேஷமாக ஆவிக்குரியவைகளோடு

இருக்கும்போது, தேவனுடைய அனுக்கிரகத்தால் நமக்கு கொடுக்கப் பட்டுள்ள பிள்ளைகளை பராமரிப்பதில் நாம் உறுதியான தீர்மானத்தை எடுப்பது நம்முடைய கடமையாக இருக்கிறது.

உணவைப்பற்றிய விஷயத்தில் முடிவாக ஒரு வார்த்தை. குதிரைகளும், கால்நடைகளும், நல்லதோ, கெட்டதோ, தெளிவாக மனதில் எதையும் எண்ணாமல் சாப்பிடுகின்றன. மனுக்குலத்தில் முரட்டுத்தனமுள்ளவர்களும் அதையேதான் செய்கிறார்கள்; ஆனால், அவர்கள் வெகு சிலரே. ஆகவே ஒவ்வொரு சாப்பாட்டு வேளையிலும் ஒவ்வொரு உணவும், குதூகலம் தரக்கூடியதாக, இன்பம் தரக்கூடியதாக இருக்க வாய்ப்புண்டு–அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், நம்பிக்கை ஆகியவை போல; அல்லது வெறுப்புத்தருகின்ற உணர்வுகளை உண்டாக்க வாய்ப்புண்டு – கோபம், தீய எண்ணம், சச்சரவு போன்றவை. மனநிலை ஜீரணம் ஏற்படுவதில் அதிக பங்கு வகிக்கிறது என்று இப்பொழுது அறியப்பட்டுள்ளது. ஒரு கோபமான, சச்சரவுள்ள மனநிலை ஜீரணசக்தியை பாதிக்கிற அளவிற்கு நரம்புகளை பாதிக்கிறது; அதே வேளையில் உற்சாகமான, சந்தோஷமான மனநிலை எதிர்மறையில் வேலை செய்கிறது. ஆனால், இரசவாதிகள் இதை சரியாக புரிந்துகொள்ளவில்லை. புது சிருஷ்டிகள் பலவிதமான அநுகூலமற்ற சூழ்நிலைகளில் தங்களுடைய ''தேவ சமாதானத்தை'' காத்துக்கொள்ளலாம், ஆனால் மற்றவர்கள் அப்படிச் செய்ய முடியாது; ஆகவே, அவன் குடும்பத்தின் பொறுப்புள்ள தலைவனாக இருந்தால், மதவிஷயங்களைப் பற்றி பேசாவிட்டால், சாப்பாட்டு மேஜை சம்பாஷனையை இன்பகரமானதாயும், பிரயோஜன முள்ளதாகவும் வைத்து வீட்டின் சமாதானத்தைக் காப்பது அவனுடைய கடமையாகும்.

நமது ஆரோக்கியத்தின் கரிசனைகளையும், நம்முடைய பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பற்றிய கரிசனைகளையும் ஆண்டவரிடத்தில் ஒப்படைக்கும்போது நம்மேல் வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும், நம்மால் இயன்றவரை ஞானமாக உபயோகிக்கிறோம் என்பதில் நாம் நிச்சயமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான், வேறுவிதமாக இல்லாமல், எல்லாம் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்கிற உத்திரவாதம் நம்முடைய ஆறுதலுக்கு பொருத்தமாக இருக்கும்.

அத்தியாயம் 14

புது சிருஷ்டியின் பலவிதமான பூலோக கடமைகள்

''எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளை செய்ய நாடுங்கள்''–''எதிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்'' –''திரும்பக் கொடுப்பார்கள் என்று நம்பி கடன் தரவேண்டாம்'' – கிறிஸ்தவ உபசரிப்பு–''நாளைய தினத்தைக் குறித்து கவலைப் படாதே'' – ''கிறிஸ்து மட்டுமே என் நம்பிக்கை''– ''ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்'' – காப்பீட்டு நிதி – பரஸ்பர உதவி போன்றவைகளுக்கான ஸ்தாபனம் – வீண் அலுவல்காரராய் இருப்பது–''தேவனை துதித்து மனிதனை சபிப்பது'' – சமூக கடமைகள் – ''எல்லா மனிதரையும் கனப் படுத்துங்கள்'' – புது சிருஷ்டி பொது தேர்தலில் பங்கு பெறலாமா? – புது சிருஷ்டியும் மனமாற்றமும் – விலையேறப் பெற்ற வஸ்திரங்களை அணிதல் – ''மகிமையினாலும, கனத்தினாலும், அழியாமையினாலும்'' நாம் தரிக்கப்படக் காத்திருப்போம்.

''எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளை செய்ய நாடுங்கள்''

–ரோம.12:17–

புது சிருஷ்டி உலகத்திற்கு மரித்தவர்களாகவும், தேவனிடம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் ஜீவனுள்ளவர் களாகவும் இருக்கிறார்கள் என்று அறிவிக்கபட்டுள்ளது; இந்த உருவகம் முற்றிலுமாக மறுரூபமாக்கப்பட்ட நம்பிக்கைகளுக்கும், குறிக்கோள்

களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் மாத்திரம் உரியது. முதலாம் உயிர்த்தெழுதலில் புது சரீரத்திறக்கு காத்திருக்கும் புதிய மனமானது, மனுஷ சரீரத்தின் மூலமாக செயல்படும்படியாக வற்புறுத்தப்படும்போது, அது சகமனிதர்களிடத்திலும், உலகத்தாரிடத்திலும் உள்ள சில நிச்சயமான கடமைகளை உணர வேண்டும். இவ்வுலகத்திற்குரிய குடும்பத்திற்கும், ''விசுவாச வீட்டாருக்கும்'' உலகப்பிரகாரமான விஷயங்களில் அதற்கு பொறுப்புகள் இருக்கிறபடியால், இவைகள் தளர்த்தப்படாமல், குறைக்கப்படாமல், மனம் மறுரூபமாக்கப்படுவதால் அதிகரிக்கின்றன; அதே மாதிரியாகவே சகமனிதர்களிடத்தில் உள்ள சில கடமைகளும் அதிகரிக்கின்றன.

மனுக்குலம் அனைத்தும், ஒருவரோடொருவர் கொண்டுள்ள விவகாரங்களில் நியாயம், நீதி என்பவைகளின் ஒழுங்கை அறிய வேண்டும்; ஆனால், புது சிருஷ்டி கிறிஸ்துவின் பள்ளியில் இந்த திவ்விய பிரமாணத்தின் ஒழுங்கைக் குறித்து விசேஷமான போதனைகளைப் பெறுகிறபடியால், அனுதின வாழ்க்கையில், இந்த விஷயங்களை அப்பியாசப்படுத்துவதில் மற்றவர்களைக் காட்டிலும் மிக அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானதை செய்ய நாடுங்கள் என்பது முறையானதா, சரியானதா? நிச்சயமாகவே இது சரியானதுதான். ஆகவே இந்த விஷயங்களில், புது சிருஷ்டியின் பொறுப்புகள், அவனுடைய முன்னேற்றமான நிலைமையினிமித்தம், நிச்சயமாகவே அதிகரித்துள்ளது. மற்ற மனிதர்களும், நேர்மையுள்ளவர்களாக, உண்மையுள்ளவர்களாக, குற்றமற்றவர்களாக, கனமுள்ளவர்களாக, பரந்த மனமுள்ளவர்களாக எதிர்பார்க்கப்படுகிறார்களா? ஆண்டவருடைய ஜனங்கள் இந்த வழிகளின்படி, கூர்மையான உள்ளுணர்வு உடையவர்களாக இருக்கும்படி நிச்சயமாகவே எதிர்பார்க்கப்படுவார்கள். மேலும், ஒவ்வொரு நாளும் சிந்தனையிலும், வார்த்தையிலும், நடத்தையிலும், பரிபூரணநிலைமைக்கு வரும்படி முயற்சிக்க நிச்சயமாக எதிர்பார்க்கப்படுவார்கள்.

அப்போஸ்தலரால் கூறப்பட்டுள்ளபடி, ''ஒருவரிடத்திலொருவர் அன்பு கூறுகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் என்பது திவ்விய கட்டளையாகும்.'' (ரோம.13:8) முழு உலகமும் இந்த கட்டளையை அறிந்து அதை கவனமாக பின்பற்றினால் நலமாக இருக்கும். ஏற்ற வேளையில், ஆயிர வருட

யுகத்தின்போது இந்த கட்டளையே அதிக கண்டிப்புடன் நிறைவேற்றப்படும் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், புது சிருஷ்டி இப்பொழுது இந்த கட்டளையை தன் பிரமாணமாக கொண்டுள்ளது. மற்றவர்கள் அதை அறியவும், பின்பற்றவும் தவறினாலும்கூட ஆண்டவருடைய ஜனங்கள் இந்த கட்டளைக்கு மிகச்சரியாகக் கீழ்ப்படிய வேண்டும். ஊழிய வீட்டாராகிய, ஜென்ம சுபாவமுள்ள இஸ்ரயேலுக்கும், தேவன் கட்டளையை விதித்திருக்கிறார், அதாவது அவர்கள் உண்மையுள்ளவர் களாக இருந்தால், அவர்கள் கடன் வாங்குகிறவர்களாக அல்ல, கடன் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும் (உபா.15:6). இந்த கொள்கை, ஞானத்தின் சாராம்சமாக நல்ல தீர்மானம் எடுக்கக்கூடிய ஒவ்வொருவரிடத்திலும் ஆதிக்கம் செலுத்துகிறது. இந்த ஞானத்தை உலகத்திற்கு உரியதாக்க முடியுமானால், நல்லதாக இருக்கும். இந்த ஞானத்தை உலகம் அறிந்திருக்கிறது, ஆனால் ஆண்டவருடைய ஜனங்களில் அல்லது உலகத்தாரில் வெகு சிலரே, அதை வாழ்க்கையில் மாறுதல் உண்டுபண்ணக்கூடிய ஒரு கொள்கை என்று எண்ணி பின்பற்ற முயற்சிப்பார்கள்.

வேறுவிதமாக சொல்ல வேண்டுமென்றால், உலகக்காரியங்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு புது சிருஷ்டியின் அங்கமும், அவனுடைய தகுதிக்கு உட்பட்டு வாழ வேண்டும். நாள் ஒன்றுக்கு ஒரு டாலர் தான் சம்பாதிக்க முடியுமென்றால், அத்தியாவசியமான தேவை இருந்தாலொழிய அவன் அதற்கு மேலாக செலவழிக்க வேண்டும் என்று ஒரு வினாடிகூட நினைக்கக்கூடாது. அதிக அனுகூலமான சூழ்நிலை ஏற்படும்வரை தன்னுடைய நிலைமையை அதற்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும். அவன் மேலும், தன்னுடைய எல்லா விஷயங்களிலும் ஆண்டவருடைய பராமரிக்கும் கரிசனை இருக்கிறது என்பதை உணர்ந்து, இம்மைக்குரிய விஷயங்களைப் பொறுத்த வரையில், அவனுக்குத் தெரிந்தவரை ஞானமாக ஒழுங்குகள் செய்த பின்னர், இவைகள், அதோடுகூட அவனுடைய ஆவிக்குரிய விஷயங்கள் திவ்விய மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கிறது. என்றும், இந்த சூழ்நிலையைப் பொறுத்தவரை ஆண்டவர் அவனுக்கு ஒரு ஆசீர்வாதத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் தீர்மானிக்கிறான். ஆகவே, அவை எவ்வளவு கடினமாக இருந்தாலும், அவைகளோடு அவன் முழு திருப்தி உள்ளவனாக இருக்க வேண்டும். ஏற்ற காலத்தில் திவ்விய அன்பும் ஞானமும் தருகிற உதவிக்காக ஆண்டவரிடம் பொறுமையாக காத்திருக்க

வேண்டும். அவனுடைய வருமானம் தாராளமானதாக இருந்தால், எல்லா விஷயங்களில் இருக்கிறபடி இதிலும் அடக்கம் இருக்க வேண்டும். ''உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக.'' நம்முடைய ஆண்டவராலும், அப்போஸ்தலராலும் உதாரணமாக காட்டப்பட்டுள்ளது போன்று சிக்கனம் திவ்விய ஒழுங்கின் ஒரு பகுதியாகும். ஒன்றுமே இல்லாமல், ஒரு திரளான ஜனங்களுக்கு ஆகாரம் உண்டுபண்ணியபோது, ஆண்டவருடைய உத்தரவின்படி துணிக்கைகளை சேகரிக்க வேண்டும் என்பதில் இது குறிப்பாக, விளக்கமாக கூறப்பட்டுள்ளது.

நம்மிடத்தில் உள்ள செலவழிக்கும் சக்தி ஓர் அளவுக்கு உட்பட்டிருக்கிறதற்கேற்ப, செலவுகள் குறைக்கப்பட்டு வருமானத்திற்கேற்ப கொண்டுவரப்படுவதோடு, வருமானத்திற்கு சற்று குறைவானதாகவும் இருக்க வேண்டும். அதன்படி நாம் எவ்வளவு குறைவாக சம்பாதித்தாலும் பரவாயில்லை, ஒரு பகுதி தனியாக எடுத்து வைக்கப்பட வேண்டும். அது நம்முடைய எதிர்கால தேவைக்காகவோ, அல்லது ஆண்டவருக்கு ஒரு ஸ்தோத்திர காணிக்கைக்காகவோ, அல்லது அப்போஸ்தலர் கூறுகிறபடி, இன்னும் அதிக தேவையுள்ளவர்களுக்கு கொடுக்கும்படியாகவோ பயன்படும். ஆண்டவரை நம்புவது என்பது திருப்தியைக் குறிக்கிறது என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அது நமது இருதயத்திற்கு அமைதியைத் தருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ரொட்டியும், தண்ணீரும் அல்லது உருளைக்கிழங்கும் உப்பும் அதிக ருசியுள்ளதாகக் காணப்படும். மேலும், வித்தியாசமான நோக்கத்தில் எடுக்கப்பட்ட அதிக சத்துள்ள உணவைக் காட்டிலும் கூடுதலான பலனைத் தரும். நம்பிக்கை என்பது எப்பொழுதுமே நன்றியறிதலைக் குறிக்கும். ஆகவே, மிக எளிமையான வாழ்க்கை நடத்தும் ஆண்டவருடைய பிள்ளைகூட, எல்லா நன்மைகளையும் தருகின்றவருக்கு நன்றி செலுத்த வேண்டும். இப்படிச் செய்யும்போது, வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் அவருடைய ஞானத்தின் மேல் சார்ந்து இருப்பதைக் குறிக்கும். இது முன்னேற்றத்திற்கு அலட்சியமாக இருப்பது என்று பொருள்படாது. அதாவது முன்னேற்றத்திற்கும், அதிகமான சுபீட்சத்திற்கும் உள்ள வாசல் நீதியுள்ள வாசலாக இருந்தால், இப்படியான ஒரு வாசல் நமக்கு முன்பாக இருக்கக் கண்டு, அது தேவனுடைய அனுக்கிரகம் என்று எண்ணி ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், அது ஒருவேளை நம்முடைய பெரிய

போதகரிடமிருந்து, இன்னும் அதிகமான பாடங்களைக் கற்றுக்கொள்ள வழிநடத்தும்.

''ஒருவரிடத்திலொருவர் அன்பு கூறுகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும், ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்'' (ரோம.13:8) என்கிற கட்டளை, நாம் ஏதாவது ஒரு வேளையில் கவனக்குறைவால், இந்த திவ்விய ஞானத்திற்கு மாறாக, மற்றவர்களுக்கு கடன்பட்டிருந்தால், நாம் ஒவ்வொரு முறையான வழியிலும், மரியாதையான வழியிலும் கடனை இரத்து செய்ய நாட வேண்டும்– நம்முடைய கடனை திருப்பி கொடுக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆனபோதிலும், கடன் வியாபாரத்தின் நிமித்தம் ஏற்பட்டிருந்தால், கடனை கொடுத்தவர் அபாயகரமான ஒன்றை செய்கிறோம் என்று அறிந்து, இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்று செய்திருந்தால், கடன் உண்மையாகவே, வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டத்தினால் வந்திருந்து, சட்ட பாதுகாப்பை இழந்திருந்தால், முக்கியமாக, அவர்கள் சுபாவம் மாறுவதற்கு முன்னால், புது சிருஷ்டி ஆவதற்கு முன்னால் செய்யப்பட்டிருந்தால், நாம் இப்பொழுது அறிந்துள்ளபடி திவால் அளிக்கும் உதவிக்கு, புது சிருஷ்டி விண்ணப்பிக்கலாம்; அல்லது ஒரு கடனோ அல்லது கோர்ட் தீர்ப்போ, ஐந்து வருடம் கழித்து, மறுபடியும் நீதிமன்றத்தில் புதுப்பிக்கப்படாவிடில், அல்லது ஒருவர் தனிப்பட்ட முறையில் வாக்குறுதி அளிக்காவிட்டால், காலாவதியாகிவிடுகிறது என்பதை தனக்கு சாதகமாக்கிக்கொள்ளுவது தவறல்ல.

இப்படியான ஒரு முறைக்கு வேதாகம உதாரணம், நிழலான இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்ட பிரமாணத்தில் உள்ளது. அதாவது ஏழாவது ஓய்வு வருடத்தில் கடன் தள்ளுபடி செய்யப்படுகிறது; மேலும், 50வது வருட யூபிலியில் திருப்பி செலுத்தப்பட வேண்டியவைகள் அனைத்தும் தள்ளுபடி செய்ய்ப்படுகிறது. இந்த திவ்விய ஒழுங்கில் உள்ள ஞானத்தை உலகம் அறிந்துள்ளது, அனேக தேசங்கள் தங்களுடைய அரசியல் சட்டங்களில் அவைகளை உறுதிப்படுத்தியுள்ளது. புது சிருஷ்டிகள் இந்த உலகப் பிரகாரமான ஒழுங்குகளை தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொண்டு, திவ்விய சித்தத்திற்கு இசைவாக, இப்படியான கடன்களைக் குறித்து ஆறுதல் படலாம். ஆனால், தேவனுடைய அனுக்கிரத்தினால், இதன் பின்னர் பூரணமாக ஆசீர்வதிக்கப் படுவார்கள் என்றால், அப்பொழுது சந்தேகமின்றி, முக்கியமான

பொன்னான கற்பனை, சட்டத்தின்படி அது ஒன்றுமில்லாமல் ஆக்கப்பட்டிருந்தாலும் கூட, எல்லா கடன்களையும் செலுத்த வேண்டியதின் அவசியத்தை உத்தரவிடும்.

ஆனாலும், அது வியாபார கடனாக இல்லாவிட்டால், ஆனால் நட்பினால் வாங்கிய கடனாயிருந்தால், பணம் இரவலாக வாங்கப்பட்டது, அல்லது கடனாக வந்தது என்றால், நண்பன் லாபத்தையோ நன்மையையோ எதிர்பார்க்கவில்லை என்றால், அந்த விஷயம் முற்றிலும் வித்தியாசமானதாகும். இப்படியான கடன் வாழ்க்கை பூராவுக்கும் இருக்கும் என்று எண்ணப்பட வேண்டும்; மேலும், அதை செலுத்தும்படியாக எடுக்கப்படும் முயற்சிகள் எப்பொழுதுமே கடன் வாங்கியவரின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆனால், நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி புது சிருஷ்டியின் அங்கமான பின்னர், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி, வேதாகமத்தின் வழி நடத்துதலின்படி, தெளிந்தபுத்தியின் ஆவியின் வழிநடத்துதலின்படி, புதுசிருஷ்டியின் அங்கங்கள் ஒருவரும் கடனாளியாகக் கூடாது; ஆனால், அவர்கள் வருமானத்திற்குட்பட்டு வாழ வேண்டும் என்பது தேவனின் அனுக்கிரகம் என்று எண்ண வேண்டும். ''ஒருவனுக்கும் கடன் படாதிருங்கள்'' என்ற கட்டளை, ஒருவருடைய சொத்தின் மேல் அடமானம் வைக்கும் போது, அதன் உண்மையான மதிப்பைவிட குறைவான தொகைக்கு வைப்பதினிமித்தம் பொருத்தமாக இருக்காது. இது விலக்கப்பட்ட முறையில் கடன் வாங்குவது என்பதில்லை, ஆனால், மறுபடியும் மீட்டுக் கொள்ள தருணம் வரும் என்று சொத்தின் ஒரு பகுதியை தற்காலிகமாக விற்பதாகும்.

விதவைகளும், அனாதைகளும், முன்பு வீட்டிற்கு தலைவராக இருந்தவரின் கடனுக்கு பொறுப்பாளிகள் அல்ல. இது மனிதனின் சட்டப்படியோ அல்லது திவ்விய பிரமாணத்தின்படியோ பொறுப்பாக்காது. ஒரு புருஷனுக்கோ அல்லது தகப்பனுக்கோ விற்கப்பட்ட பொருட்கள் அவனுடைய சொந்த பொறுப்பிலும், நேர்மையிலும் விற்கப்படுகிறது, மற்றவர்கள், நேரடியாகவோ, அல்லது குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் செய்திருந்தால் ஒழிய, அவர்கள் அவனுடைய கடனுக்காக பொறுப்பாகமாட்டார்கள். அவனுடைய கடன்கள் அவனுடைய சொத்தின் மேல் முன்னரே உரிமை உள்ளதாக (சட்டத்தினால் குடும்பத்திற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட பகுதியைத் தவிர) இருந்தது;

ஆனால், குடும்பத்தில் உள்ள ஒருவர் தானாக முன்வந்து பொறுப்பேற்காவிட்டால் அவனுடைய மரணத்தில் அந்த விஷயம் முற்றுப் பெறுகிறது; நாம் இதைக் குறிப்பிடும் காரணம் என்னவெனில், வறுமையில் உள்ள விதவைகளும், அனாதைகளும் திவ்விய பிரமாணத்தினால், மனிதனின் சட்டப்படியாக இல்லை, புருஷனின், தகப்பனின் கடனைக் கொடுக்கும்படியான முயற்சியில் பல வருடங்கள் சிரமத்தில் இருந்துள்ளார்கள் என்ற செய்திகளை நாம் கேட்டிருக்கிறோம்.

கேள்வியின் இன்னொரு பக்கத்தில், ஆண்டவருடைய ஜனங்களுக்கு அவருடைய ஆலோசனையும் தெளிவாக இருக்கிறது. தங்களுடைய சகோதரர் ஒரு தேவையோடு இருப்பதை அவர்கள் கண்டால், ''திரும்பக்கொடுப்பார்கள் என்று நம்பி நீங்கள் கடன்கொடுக்காதீர்கள்''– இப்படிப்பட்ட அல்லது வேறு உதவிகள் பதிலுக்கு பெறவேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் செய்ய வேண்டும். நாம் கடன் வாங்கக் கூடாது என்கிற மற்ற கட்டளைக்கு இசைவாக, கூட இருக்கிற சகோதரனுக்கு கடன் கொடுக்க வேண்டும் என்கிற இந்த கட்டளையை புரிந்து கொள்ளவேண்டும். ஆகவே, இது அந்த சகோதரனுக்கு வசதி இருக்கிறது, ஆகவே அவரால் திருப்பிக் கொடுக்க முடியும், ஆனால் தற்காலிகமாக அவருக்கு ஒரு தேவை இருக்கிறது, எதோ ஒரு வகையான அடைமான ஒழுங்கையோ உத்தரவாதத்தையோ கொடுக்க முடிந்தது என்பதை அர்த்தப்படுத்துகிறது. ஆனால் தேவையில் இருக்கும் சகோதரருக்கு உதவி செய்வது இலவசமாகவும், வெகுமதி கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பு இல்லாமல் செய்யப்பட வேண்டும். அதுவும் கந்து வட்டி இல்லாமல், கொடுத்த அசல் தொகை மட்டும் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்று செய்யப்பட வேண்டும். அது நிச்சயமாக ஒரு உதவிதான், சகோதர அன்பை வெளிப்படுத்துவதாகும்.

சகோதரன் பணத்தை திருப்பிக் கொடுக்கவோ, உத்திரவாதம் அளிக்க முடியாக சூழ்நிலையில் இருப்பானென்றால் கடனாக பணம் கொடுக்கப்படக்கூடாது; அதற்கு பதிலாக, கொடுப்பவர் எந்த அளவுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்று தீர்மானிக்கிறாரோ அந்த அளவுக்கும், சகோதரனுடைய தேவைக்கேற்ப அது ஒரு தொகை வெகுமதியாகக் கொடுக்கப்படலாம். சகோதரன் அதைத் திருப்பிக்கொடுக்கத் தீர்மானிக்கலாம்; ஆனால், அது ஒரு வெகுமதி என்று வலியுறுத்த வேண்டும். ஆனால், இதன் பின்னர் சகோதரனின் நிலைமைகள்

நிச்சயமாக மாறினால், ஆனால் அவனால் வெகுமதியை தாராளமாக திருப்பிக்கொடுக்க முடியும் என்றால், அப்பொழுது அப்படி செய்ய அவன் இருதயத்தில் வாஞ்சை உள்ளவனாக இருக்க வேண்டும். ஆனாலும் கொடுப்பவர் நல்ல செல்வசெழிப்பில் இருந்தால் அவர் சகோதரனை பார்த்துச் சொல்லலாம், ''வெகுமதியாக கொடுத்ததை திருப்பி வாங்க எனக்கு இஷ்டமில்லை, ஆகவே, உன்னிடம் கேட்டுக் கொள்ளுகிறேன், அதை தேவைப்படுபவருக்கு கொடுத்துவிடு, இப்பொழுது அல்லது வருங்காலத்தில் அதைச் செய்யலாம்.'' ஆனாலும் வியாபாரத்தை பெரிதாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், சகோதரனோ அல்லது வேறு ஒருவரோ கடன் வாங்க நினைத்தால், அதுவும் லாபம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் கடன் வாங்க நினைத்தால், விஷயம் முற்றிலும் வித்தியாசமாக இருக்கும். இப்படிப்பட்டவருக்கு பணம் கடன் கொடுக்க, போதுமான அளவு உத்திரவாதத்தை வாங்கி, வட்டி கேட்பது முற்றும் நியாயமானதே. இப்படிப்பட்ட வட்டி கந்து வட்டியாக இருக்கக்கூடாது, ஆனால் ஆண்டவர் தன்னுடைய உவமையில் சொன்னதோடு இசைவாக இருக்க வேண்டும். அவர் கூறுகிறார்: ''அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டு வைக்க வேண்டியதாக இருந்தது. அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக் கொள்ளுவேனே.'' (மத். 25:27)

இந்த கட்டளைக்கு இசைவாக, வேதாகமம் இன்னொன்றைத் தருகிறது, இதற்கு செவிசாய்ப்பது மிக நல்லது. இது எப்பொழுதும் நன்மைக் கேதுவாக இருக்கிறது, இது புது சிருஷ்டிக்கு மாத்திரமல்ல உலகத்திற்கும் பொதுவானதாகும். இந்தக் கட்டளை கூறுகிறதாவது: ''புத்தியீனன் தன் சினேகிதனுக்கு முன்பாக கையடித்துக்கொடுத்துப் பிணைப்படுகிறான்.'' (நீதி. 17:18) இந்த யோசனைகளின்படி மற்றவர்களுக்காக பிணைக்கப்படுவது, உத்திரவாதம் அளிப்பது, பத்திரங்களை ஆதரித்து கையெழுத்திடுவது போன்றவைகள் தடைப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டவருடைய ஜனங்கள் எல்லாரும் இந்த விதியை கவனமாக கடைப்பிடிப்பது ஞானமான செயலாகும். மிக அவசியமான விஷயத்திலும்கூட, ஒரு சகோதரருக்கு பத்திரம் கையெழுத்திட்டு கொடுக்க வேண்டிய மிக அவசியமான தேவை இருந்தாலும், அதிக பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டியது வராதபடி கவனம் கொள்ள வேண்டும். ஒரு சகோதரனுக்கு ஒருவர் விருப்பப்பட்டு கடன் கொடுக்கிற தொகைக்கு பத்திரம் எழுதப்பட்டால்,

அல்லது தேவை ஏற்பட்டுள்ளபடியால் கொடுத்து உதவுவதனால், அப்பொழுது பத்திரமோ, உத்திரவாதமோ, அனுமதிக்கப்படும், வேறுவிதமாக இருந்தால் கிடையாது. ஆனால், ஒருவருடைய சொந்த கடனுக்கே சங்கடங்கள் வரும் என்றால், அல்லது சொந்த வியாபாரத்துக்கே ஆபத்து வரும் என்றால், இல்லையெனில் ஒருவருடைய குடும்பத்தில் அபிவிருத்தி உண்டுபண்ணுவதற்கு என்றால் ஒருபோதும் கிடையாது. ஒப்பிட்டுப்பார்க்க. (நீதி. 22 : 26; 11:15; 6:1–5)

சிறிய அளவில் கடன் வாங்குவதும், கொடுப்பதும் அனேகரால் கடைப்பிக்கப்பட்டு வருகிறது. விசேஷமாக வீட்டுச் சாமான்கள், சவுக்காரம், சர்க்கரை, தொட்டிகள், கருவிகள் போன்றவைகள் விஷயத்தில் இது உண்டு. இந்த இடத்தில் அது பார்க்கப்பட வேண்டியதாக உள்ளது. தெளிந்த புத்தியின் ஆவியின் ஆளுகைக்குட்பட்டிருந்த புது சிருஷ்டிகள் இப்படியான சிறு தொல்லைகளை தங்களுடைய இருதயத்தில் எதிர்க்க வேண்டும், அதன்படி, இப்படி கடன் வாங்குவதை மிக அரிய விஷயமாக வைத்துக்கொண்டு, அதன்படி தன்னுடைய காரியங்களையும், விருப்பங்களையும் நிச்சயமாக கட்டுப்படுத்துவார்கள். வியாதி அல்லது வேறு அத்தியாவசியமான காரியத்துக்காக அன்றி, கடன் வாங்குவதாக இருந்தாலும் எளிதில் செய்யப்படக்கூடாது; மற்ற ஜனங்களுக்கு கூடுமானவரை தொல்லை கொடுக்காதபடி ஆண்டவருடைய பரிசுத்தவான்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். ஆகவே, தங்களுடைய காரியங்களை சரிவர பார்க்காததினால், சாப்பாட்டுக்கு பட்டர் இல்லாமலும் இருந்தாலும், அயல் வீட்டுக்காரனை தொந்திரவு செய்யாமல், ஒரு மோசமான உதாரணமாக இல்லாமல், பட்டர் இல்லாமலேயே சமாளிக்க வேண்டும். துணி தேய்ப்பதற்கு ஒரேஒரு ஸ்திரிபெட்டி இருந்தால், வேறுஒன்று அவர்களால் வாங்க இயலாமல் இருந்தால், நிலைமையை ஏற்றுக்கொண்டு, இருக்கிற ஒன்றையே உபயோகிக்க வேண்டும்.

தங்களுடைய சொந்த விஷயங்களில் இவ்வளவு அதிக கட்டுப்பாட்டை வைத்திருப்பவர்கள், அண்டை வீட்டாரைத் தவிர மற்றவர்கள் இரவல் வாங்க வந்தால் அதிக எரிச்சல் அடைவது இயற்கையே. இருந்தாலும், ஆண்டவருடைய ஜனங்கள் கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும், கடன் வாங்குகிறவர்களாக இருக்கக் கூடாது. எங்களுடைய புத்திமதி என்னவெனில், எல்லாவிதமான

நிதானத்துடனும், இந்த இரண்டு விஷயங்களிலும் ஆண்டவருடைய ஜனங்கள் புதுமையாயிருப்பதில் பெயர் பெற்றவர்கள் என்ற எண்ணம் உண்டாக்க வேண்டும். அவர்கள் எப்பொழுதுமே இதயப்பூர்வமாக உற்சாகத்துடன் நல்ல மனதோடு கடன் கொடுக்க விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள், தங்களுக்கு இழப்பு உண்டானாலும் பரவாயில்லை என்ற அளவுக்கு பிரியப்படுத்தவும், சமாளித்துக்கொள்ளவும் வாஞ்சையுள்ளவர்களாக இருப்பார்கள்; எப்பொழுதுமே கடன் வாங்க விருப்பம் இல்லாதவர்களாக இருப்பார்கள் என்று பெயர் வாங்க வேண்டும். இப்படிப்பட்டவர்கள் ஆண்டவர்மேல், வசனத்தின்மேல் வைத்திருக்கின்ற பயபக்தியின் நிமித்தம், அவர்கள் புதுமையான ஜனங்கள் என்று அழைக்கப்படுகிறார்களோ இல்லையோ, ''நல்ல அண்டை வீட்டார்'' என்று ஏற்றுக்கொள்ளப்படுவது உறுதி. கடன் வாங்குபவர்கள் எப்பொழுதுமே பொருளைத் திருப்பித் தருபவர்களாயிருப்பார்கள் என்று சொல்ல முடியாது, அது உண்மைதான்; மேலும், அதற்காக முயற்சி எடுப்பதும் பிரச்சினையை உண்டாக்கும்; அல்லது உணவு இரவலாக வாங்கப்படும்போது அதை அவர்கள் திருப்பிக்கொடுக்காமல் இருந்துவிடலாம். ஆனாலும் அவர்கள் இப்படியாக இரவல் வாங்கி, சாப்பிட்டுவிட்டு உணவை திருப்பிக்கொடுக்காவிட்டால் இன்னும் அதிகம் வேண்டும் என்று அவர்கள் இனி வருவது நிச்சயமில்லை என்று நாம் நினைக்கச் சாத்தியமுண்டு. சூழ்நிலைகள் அனுமதித்தால் இரவலாக வாங்கப்பட்ட பொருளை திருப்பிக் கொடுக்கும்படி கேட்காமல் இருப்பது நல்லது. அநீதியுள்ள உலகத்தாரோடு நட்பை உண்டுபண்ணும்படியான நல்ல தருணங்கள் என்று நாங்கள் கருதுவோம். இவை சிறிய உலகப்பிரகாரமான நலன்களை பலி செலுத்துவதற்கு நல்ல தருணங்களாக இருக்கின்றன. இவைகள் மூலமாக நம்முடைய அயலகத்தாரோடு அதிகமான நல்ல நடத்தையை, ஆவிக்குரிய செல்வாக்கை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த விஷயத்தை நாம் பார்க்கும்போது, பொதுவான முறையில் இதோடு அதிக நெருக்கமான ஒன்றைப்பற்றிக் கூறுகிறோம். சிலர் தங்களுடைய நண்பர்களிடம் பார்வையாளராக நுழைய தாங்கள் எல்லா சுதந்திரத்தோடும் இருப்பதாக எண்ணுகிற வழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் அயலகத்தாருடைய நேரத்தை இரவலாக வாங்கிக்கொள்ளுகிறார்கள். உபசரிப்பது என்பது தாராளமாக அன்பின் ஆவியின் ஒரு பகுதியாகும், எல்லா தகுதியான சந்தர்ப்பத்திலும்,

ஆண்டவருடைய ஜனங்கள் இந்த நிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும். இப்படிச்செய்வது ஆண்டவருக்கு பிரியமானது, அவர்களுடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் அது பிரயோஜனமாயிருக்கும். (எபி.13:2) அவர்களுடைய சூழ்நிலைகள் அனுமதிக்கிறபடி அவர்கள் நண்பர்களை, அயலகத்தாரை ஒரு வேளை சாப்பாட்டிற்கு அல்லது ஒரு இரவுக்கு உபசரிப்பதில் சந்தோஷமடைய வேண்டும். உபசரிக்கும்படியாக இருதய வாஞ்சை எப்பொழுதும் இருக்க வேண்டும், அதை நிறைவேற்றுவதற்கு தருணம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி. உபசரிப்பு என்பது ஒருவருடைய பணவசதிக்கு மேலாக ஆடம்பரமாக செலவழிக்க வேண்டும் என்று அர்த்தமுள்ளதல்ல, இல்லாவிடினும் தன்னுடைய சொந்த குடும்பத்திற்கு கொடுப்பதைவிட மேலானதை ஒரு விருந்தாளிக்கு கொடுக்க வேண்டும் என்றும் பொருள்படாது. இருந்தாலும், நம்மிடத்தில் உள்ளவைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள ஒரு வாஞ்சையை அது குறிப்பிடுகிறது.

ஆனால் கேள்வியின் மறுபக்கத்தை நாம் பார்க்கலாம். ஆண்டவருடைய அர்ப்பணம் செய்துகொண்ட புதுசிருஷ்டிகள் ஒருபோதும் அழையாத விருந்தாளிதாக இருக்கக் கூடாது. ஒருவேளை சாப்பாட்டிற்கோ அல்லது ஒரு இரவுக்கோ உபசரிப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்னால், தங்களுக்கு ஒரு திட்டமான அழைப்பும் வரவேற்பும் உள்ளது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த சரியான கொள்கையைக் குறித்து, எவ்வளவு அழகான விளக்கம் நம்முடைய ஆண்டவர் எம்மாவூருக்கு சென்ற இரண்டு சீஷர்களுக்கு நடந்ததில் உள்ளது பாருங்கள்! அவர்கள் வீட்டிற்குச் சென்று, அவர்களோடு ஒரு சாயங்கால போஜனத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது அவருடைய விருப்பம், அதன்மூலம் அவர்களுக்கு அதிகமான ஆசீர்வாதத்தை கொடுக்க முடியும். இருந்தாலும் அவர்கள் அவர்களுடைய வீட்டை சென்றடைந்தபோது, ''அவர் அப்புறம் போகிறவர் போல் காண்பித்தார்.'' அவர்கள் அவரை வருந்தி அழைக்கிறவரை காத்திருந்தார். இது ஒரு வஞ்சகமான செயல் அல்ல, நாமும் அப்படிச்செய்யும்பொழுது வஞ்கமாக இருக்காது. அவர்களோடு தங்கும்படி ஒத்துக் கொள்ளுவதற்கு முன்பாக, அவர்கள் அவரை வருந்திக் கேட்டிருக்கா விட்டால், நம்முடைய ஆண்டவரும் அவர்களோடு தங்கி இருந்திருக்க மாட்டார். நாமும் கூட, இதய பூர்வமான வரவேற்பு நமக்கு யாராவது கொடுக்காவிட்டால் அவர்களோடு தங்கி இருக்கக் கூடாது, மேலும் நம்முடைய சூழ்நிலைகள்

எப்படிப்பட்டதாக இருந்தாலும் இதய பூர்வமான வரவேற்பு இருக்கும் வரைத்தான் தங்கியிருக்க வேண்டும், அதற்கு மேலாக இருக்கக் கூடாது.

இயற்கையாகவே நமக்கு உறவினர்களாக இருப்பவர்களோடு அல்லது ஆவிக்குரிய உறவினர்களோடு உட்கார்ந்திருக்க நமக்கு உரிமை உண்டு என்ற கருத்து சிலருடைய மனங்களில் இருப்பது போன்று தோன்றுகிறது, அது ஒரு பெரிய தவறு. அப்படியான உரிமை இருப்பதில்லை. கொடுப்பதற்கும், தாராள மனப்பான்மையுடன் இருப்பதற்கும் நமக்கு உரிமை உண்டு. ஆனால், இப்படிப்பட்டவைகளை மற்றவர்களிடத்திலிருந்து கேட்கவோ, கோரவோ, நாம் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. அவர்களுக்கு சொந்தமானதை, கொடுக்கவோ தங்களிடம் வைத்துக்கொள்ளவோ அவர்களுக்கு உரிமை உண்டு, ஏனெனில், அவைகளுக்கு அவர்கள் உக்கிராணக்காரர்களாக இருக்கிறார்கள். புது சிருஷ்டிகள், தவறாக புரிந்துகொண்ட சகோதரர்களால் அல்லது மாம்சத்தில் இருக்கும் உறவினர்களால் தங்கள்மேல் அதிகாரம் செலுத்த அனுமதிக்கப்பட வேண்டும் என்பது சூழ்நிலைகளைப் பொறுத்தே இருக்கும். முக்கியமாக விருந்தாளியின் சரீரப்பிரகாரமான, பணம்பற்றிய நிலையை பொறுத்து இருக்கும். இருந்தாலும் தனக்கும் நியாயம் கிடைக்கும்படி, இந்த கேள்வியைப் பொருத்தவரையில் தெளிவற்ற புத்தியோடு உள்ள பார்வையாளருக்கும் நீதி கிடைக்கும்படி, உபசரிப்பவர், தெளிவாக ஆனால் அன்போடு சொல்ல வேண்டும். ‘‘ஒருவேளை நான் உனக்கு சொல்ல வேண்டியுள்ளது, உன்னை எங்களோடு..... நாளுக்கு அதிகமாக வைத்துக்கொள்ள வசதியாக இருக்காது.’’ இப்படிப்பட்ட ஜனங்களை கையாளுவதற்கு இன்னொரு நல்ல வழி என்னவெனில், அவர்களுடைய வருகையின் ஆரம்பத்திலேயே, ஒரு குறிப்பிட்ட நாள்வரை அவர்களை வைத்துக்கொள்ளுவது வசதியாக இருக்கும் என்று அவர்களிடம் சொல்லிவிட வேண்டும்; இல்லையென்றால், ஊகத்திற்கு இடம் கொடாமல் திட்டவட்டமாக அவர்களை ஒரு போஜனத்திற்கோ, அல்லது ஒரு நாளைக்கோ, அல்லது ஒரு வாரத்திற்கோ, எது பொறுத்தமோ அந்தப்படியாக அவர்களை, அழைப்பின் கால அளவை திட்டவட்டமாக குறிப்பிட்டு அழைக்க வேண்டும். இப்படியான முறை வீட்டின் நலனுக்காக, குடும்பத்தின் பணநிலைக்காக, ஒருவருடைய சொந்த நேரத்திற்காக, ஆண்டவரின் ஊழியம் _போன்றவைகளுக்காக, மிகவும் அத்தியாவசியமாக இருப்பது போன்று தோன்றுகிறது. அது மாத்திரமல்ல, இதைப்பற்றி தெளிவற்ற

யோசனையுள்ள அதிகமான ஜனங்களுக்கு முறையானதாகவும் உதவியாகவும் இருக்கும். ஆனால், இதைப்பற்றி நினைக்கவோ, அல்லது பேசவோ, இவைகளைப்பற்றி கடினமாக பேசவோ நமக்கு அவசியமில்லை. இந்த விஷயத்தில் ஒரு வேளை, நம்மைக் காட்டிலும், அல்லது மற்ற சிலரைக் காட்டிலும் அவர்கள் அதிகமாக அனுபவித்திருக்கலாம். மேலும், அவர்கள் மற்ற விஷயங்களில் விழுந்திருப்பதைக் காட்டிலும், நம்முடைய சுபாவத்தின்படி நாம் அதிகமாக விழுந்திருக்கலாம். எப்படியாயினும், அவர்களைப் பற்றி அன்பாக, தயாளத்துடன் நினைக்க வேண்டும். மேலும், நாம் எல்லாவற்றிற்கும் மேலாக ஆட்சேபிக்கக் கூடிய முறையை முற்றுமாக தவிர்ப்போம் என்று உறுதி எடுத்துக்கொள்ளுவோம்.

‘‘நாளைய தினத்திற்காக கவலைப்படாதிருங்கள்’’

–மத்.6:34–

மேலே சொல்லப்பட்ட நம்முடைய ஆண்டவருடைய வசனத்தையும், அவருடைய மற்றொரு வசனமாகிய, ‘‘பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டு திருடுவார்கள்’’ என்பதையும் அவருடைய அனேக நல்ல ஊக்கமுள்ள, சீடர்கள் மிக அதிகமாக தவறாக புரிந்து கொண்டுள்ளனர். சிலர், ஆண்டவர் சொன்னது ‘‘கைக்கும் வாய்க்கும்’’ என்றபடி ஜீவிக்க வேண்டும் என்ற பொருள் உடையது என்று முடிவு செய்துவிட்டு, எதிர்காலத்தைக் குறித்து கவலையே இல்லாமல் இருக்கிறார்கள். இதற்கு மாறாக, நம்முடைய பரமபிதா இப்படிப்பட்ட ஒரு உதாரணத்தை வைக்கவில்லை என்று நாம் பார்க்கிறோம். அவர் தொடர்ந்து நம்மேல் நினைவாக இருக்கிறார், அவர் பருவ காலங்களையும், தானியங்களையும், காய்கறிகளையும், பழங்களையும், அவைகளின் வரிசைப்படி ஒழுங்குபடுத்தியிருக்கிறார். நாம், இதே மாதிரியான கொள்கைகளை அறிய வேண்டும் என்பதையும் அவர் விரும்பி, இயற்கையை அவ்விதமாகவே ஒழுங்கு பண்ணியுள்ளார் என்பதையும் கூட பார்க்கிறோம். ஆகவே, அதன்படி நாம் பயிரிடுவதற்கும், பின்னர் சாப்பிடுவதற்கும், ஆடை வேண்டுமானால் நெய்ய வேண்டும் என்றும், இரவு வேளையில் வெளிச்சத்திற்காக முன் கூட்டியே எண்ணெயை

ஆயத்தம்பண்ண வேண்டும் என்றும் ஒழுங்கு பண்ணியுள்ளார். இதே கருத்து வாழ்க்கையின் எல்லா காரியங்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது. ஆகவே, எல்லா இயற்கையிலும் காட்டப்பட்டுள்ள திவ்விய ஒழுங்கை, நம்முடைய ஆண்டவர், மாற்றும்படியாகவோ, அல்லது மறுக்கும்படியாகவோ குறிப்பிடுகிறார் என்ற எண்ணத்தை நிராகரித்துவிட வேண்டும்.

அப்படியென்றால் நம்முடைய ஆண்டவர் கூறியதின் பொருள் என்ன? ''நாளைய தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.'' ஆண்டவருடைய ஜனங்கள் எதிர்காலத்தைக் குறித்து கவலைப்படக் கூடாது என்பதுதான் அதன் பொருள். அவர்கள், ''வேலையில் அசதியாயிராமல் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்; ஆவியிலே அனலாயிருக்க வேண்டும்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும்.'' (ரோம.12:11) நடும்போதும், விதைக்கும்போதும், களையெடுக்கும்போதும், அவர்களுடைய முயற்சிகள் எல்லாம் திவ்விய மேற்பார்வைக்குட்பட்டதாக இருக்கிறது என்பதையும், மேலும் அவரை நேசிக்கிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதையும் விசுவாசித்தினால் உணரவேண்டும். அவர்கள் முற்றுமாக திவ்விய பராமரிப்பைப் பற்றிய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அப்பியாசப்படுத்த வேண்டும், அதன்படி அவர்களுடைய இருதயங்கள் கவலையிலிருந்து முற்றிலுமாக விடுதலைபெறும்.

கவலையீனமாக இருப்பதற்கும், கவலையுடன் இருப்பதற்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருப்பதை நாம் உணர வேண்டும். அடுத்த நாளைக் குறித்து, நம்முடைய ஆண்டவர் அஜாக்கிரதையாக, ஊதாரியாக, வீணாக்குகிறவராக, யோசனை இல்லாதவராக இருந்திருப்பாரெனில், திரளான ஜனங்களுக்கு போஜனம் கொடுத்த பின்பு, எஞ்சியிருந்த துணிக்கைகளை சேகரிக்கும்படி தன்னுடைய சீஷர்களுக்கு சொல்லியிருக்கமாட்டார். இந்த சம்பவத்தின் மூலமாகவே, அடுத்த வேளை போஜனத்திற்கும், அடுத்த நாளுக்கும் எண்ணம் கொள்ளும்படி விளக்கிக் காட்டினார். ஆனால் கவலையோடுகூடிய எண்ணத்தை அவர் கூறவில்லை. சீஷர்கள் தங்கள் கரங்களில் கொடுக்கப்பட்டவைகளை உபயோகிக்க வேண்டியிருந்தது, அதில் ஒன்றையும் வீணாக்காமல் இருக்கவேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் தவறுசெய்யாதிருக்கும்போது கையிருப்பு தீர்ந்து போனால், அதை அவர்களுக்கு மறுபடியும் நிறைவாக்க

வசதியில்லாவிடில், கவலையை நீக்க, அவர்கள் ஆண்டவரை நம்ப வேண்டும்; ஆனாலும், அவர்கள் தங்கள் பலத்தை இழந்துவிடக்கூடாது. இதே எண்ணம் எகிப்தில் இருந்த யோசேப்பைக் குறித்தும் விளக்கப் பட்டிருக்கிறது. அங்கே திவ்விய வழிநடத்துதலின்டி பரிபூரணமுள்ள ஏழு வருடங்களில் விளைந்த தானியங்களையெல்லாம் சேர்த்து வைத்தான்; அதன்படி, பின்னர் வந்த ஏழு வருட பஞ்சத்தின்போது தேவையான உணவுப்பொருட்களை வைத்திருந்தான்.

தற்போதைய வாழ்க்கையின் நலனுக்காக, நம்முடைய குடும்பத்தின் தேவை போன்றவைகளுக்காக, அனுதின வாழ்க்கையின் காரியங்களில் அஜாக்கிறதை பற்றியும் இரண்டாவது வசனம் குறிப்பிடவில்லை. அப்படியென்றால், அது எதைக் குறிக்கிறது? அது உலகத்துக்குரியவைகள் எதுவும் நம்முடைய பொக்கிஷம் ஆகக் கூடாதென்றும், எல்லாவற்றிற்கும் மேலாக பரலோக பொக்கிஷத்தை மேலாக எண்ண வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. அதன் மேல் நம்முடைய இருதயங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். அதன்மேல் நம்முடைய மனங்கள் விருந்து உண்ண வேண்டும். இப்படியாக ஐசுவரியவான்களாக, திவ்விய வாக்குத்தத்தங்கள்மேல் விசுவாசம் வைத்து, விசுவாசத்தினால் ஆவிக்குரிய இளைப்பாறுதல் பெற்றவர்களாக இருக்க வேண்டும். புது சிருஷ்டிகள் விசுவாசத்தின் மூலம் கொண்டுள்ள இந்த மகா பெரிதும் விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்களில் ஒன்றையும் உலகம் அறிய மாட்டாது. கீர்த்தனை சொல்லுகிறதாவது:

> *"ஒவ்வொரு இருதயமும் தன்னுடையதை நேசிக்க நாடும்,*
> *எனது இலக்கு கிறிஸ்து, கிறிஸ்து மாத்திரமே."*

கிறிஸ்துவை தெரிந்து கொள்வதினால், நாம் அவருடையவர் களுக்கென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தெரிந்து கொள்கிறோம். அது மாத்திரமல்ல, தற்காலத்துக்குரிய பாடுகளையும், அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடப்பவர்களுக்கு, ஒரு தேவையான பாடமாகவும், வரவிருக்கிற மகிமைகளுக்கு ஆயத்தப்படுத்துமாறும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட விசேஷமான பரீட்சைகளையும், அனுபவங்களையும் தெரிந்து கொள்கிறோம். இதற்கும் மேலாக, கிறிஸ்துவை இவ்விதமாக தேடுவோரும், இப்படியாக தங்களை ஆண்டவருக்கென முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட அனைவரும்

தங்களுக்கு சொந்தமானது என்று உலகப்பிரகாரமானவைகள் எதுவும் இல்லாதிருக்கிறார்கள். அவர்கள் உலகத்தில், உலகத்திற்குரியவர்களாக இருந்தபோது, தங்களுடைய சொந்த உடமைகளாக, உலக நலன்களைக் கருதினார்கள். ஆனால், அவர்கள் ஆண்டவருடையவர்களானபோது, தங்களையும் தங்களுக்குரிய எல்லாவற்றையும் அவருக்கு கொடுத்தார்கள். வீடுகள், நிலங்கள், பிள்ளைகள், புருஷன், மனைவி, சகோதரர்கள், சகோதரிகள் எல்லாருமே பயபக்தியாய் ஆண்டவருக்கென அர்ப்பணம் செய்யப்பட்டார்கள். ஆகவே, இப்பொழுது இவைகளில் எதுவும் புதுசிருஷ்டியின் பொக்கிஷங்களாக இருக்க முடியாது.

இது ஒரு மனிதன் தன்னுடைய மனைவியை நேசிக்க முடியாது என்றோ அல்லது மனைவி புருஷனை நேசிக்க முடியாது என்றோ, ஒருவரையொருவர் அதிகமாக உயர்வாக மதிக்கக் கூடாது என்றோ பொருள்படாது; இது அவர்கள் தங்கள் பிள்ளைகளை நேசிக்க முடியாது என்றோ, அவர்களுடைய இருதயத்தின், மனதின் குணாதிசயங்களை மிக உயர்வாக மதிக்க முடியாது என்றோ பொருள்படாது; இன்னும், இது இயற்கையின் அழகை நேசிக்கவோ அல்லது உயர்வாக மதிக்கவோ முடியாது எனறோ பொருள்படாது; இது அவர்களுக்கு சொந்தமாக ஒரு வீட்டை அல்லது ஒரு பிராணியை வைத்திருக்க முடியாது என்றோ பொருள் படாது. ஆனால் எந்த விதத்திலும் இந்த உலக உடமைகள் இனியும் அவர்களுடைய பொக்கிஷங்களாக இருக்க முடியாது, அல்லது இன்னொரு விதத்தில் சொல்லவேண்டும் என்றால் ஆண்டவரோடே போட்டியில் நிற்க முடியாது. ஏனெனில், அவர்கள் அவரை ''பதினாயிரம் பேர்களில் சிறந்தவராக'' ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

பணம் நேசிக்கப்படக்கூடாது, உயர்வாக போற்றப்படக்கூடாது, பூஜிக்கப்படக் கூடாது. நாம் அதன் ஊழியர்களாகவோ அல்லது அடிமையாகவோ இருக்கக் கூடாது. குமாரர்களும், ஊழியர்களுமாக நாம் நம்முடைய பற்றுதலை சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகளுக்குக் கொடுத்துள்ளோம். பணம் என்பது அவருக்கு ஊழியம் செய்யக்கூடிய கருவிகளில் ஒன்றாக இருக்கிறது. ஆகவே, நாமும் அதை அப்படியே எண்ண வேண்டும். அவைகளில் அதிகமானவைகளுக்கு நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம். தேவனுடைய அனுக்கிரகத்தால் அது நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வரலாம்.

''இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன'' என்று ஆண்டவரிடத்தில் கேட்டு வந்த வாலிபனுக்கு, அவர் கூறிய வார்த்தைகளை நாம் நினைவு கூறாமல் இருக்கிறோமா? அவனுக்கு இயேசு சொன்ன வார்த்தைகளான, ''நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்'' என்பதை நினைவு கூறமாட்டோமா? (மத். 19: 16–22) ஆண்டவருடைய ஜனங்கள் எல்லோரும் ஏழைகள் ஆக வேண்டும் என்பதின் அவசியத்தை இது கற்றுக்கொடுக்கவில்லையா? ஆம் என்று நாம் பதில் கூறுகிறோம். ''ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைக் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே (புராதன காலங்களில் கிழக்கத்திய பெரிய பட்டணங்களில் சூரியன் மறையும் வேளையில் மூடப்படும் பெரிய வாசல்கள் இருந்தன. எதிரிகள் அதனை அனுகூலமாக்கி ஒரு தாக்குதலை நடத்த முடியாதபடி அந்த ஒழுங்கு இருந்தது. ஆனால் அதற்குள் சிறிய வாசல்கள் இருந்தன. அவைகள் காவல் காக்கப்பட்டன, அதன் வழியாக ஒரு மனிதன் நுழைய முடியும், அதன் வழியாக தனது ஒட்டகத்தையும், அதன் மேல் உள்ள சுமையை அகற்றிவிட்டு அதை அதன் முழங்காலால் மண்டியிட்டு அனுமதிக்க முடியும். இந்த சிறிய வாசல்கள் ''ஊசியின் காது'' என்று அழைக்கப்பட்டன. இப்படியாக ஒரு ஐசுவரியவான் இராஜ்யத்திற்குள் நுழைய வழியை கண்டுகொள்ளலாம். ஆனால், உலகப்பிரகாரமான ஐசுவரியத்தினாலும் அல்லது பொக்கிஷத்தினாலும் பாராட்டப்படக் கூடாது. இவைகள் அகற்றப்பட வேண்டும்.) நுழைவது எளிதாயிருக்கும்.'' (மத். 19:24) ஐசுவரியவான்களுக்கு இவ்வுலகத்தின் நன்மையானவைகளின் மேல் அதிக நாட்டம் உண்டு. இவைகள் அவர்களுடைய இருதயங்களை கவர்ச்சிக்கவும், அவர்களுடைய விக்கிரகங்களாகவும், பொக்கிஷங் களாகவும் இருக்க காரணமாக இருக்கின்றன. ஆகவே, அவர்கள் இந்த விஷயத்தில் குறைவான அனுகூலத்தில் இருக்கிறார்கள்; ஏழைகளிடத்தில் இந்த உலகத்தின் பொருட்கள்மேல் இருதயங்களை வைக்கும்படி, அவைகள் அவர்களிடத்தில் அதிகமாக கிடையாது; ஆகவே திவ்விய கிருபையின் நல்ல செய்திகளையும், அவரிடத்தில் விசுவாசமாக இருப்பவர்களுக்கென ஆண்டவர் வைத்திருக்கிற ஐசுவரியங்களைப் பற்றியும், மகிழ்ச்சியுடன் கேட்க அதிக ஆவலுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனாலும், உலகப்பொருட்களை வீணாக்காமல் வைத்திருப்பதும், ஆராதிக்காமலும், விக்கிரகங்களைப் போன்று வழிபாடு செய்யாமலும், அதை அவர்களுடைய பொக்கிஷங்கள் என்று

எண்ணாமலும் இருப்பது, ஒருவராலும் செய்யமுடியாத காரியம் என்று எண்ணுவது தவறானதாகும். உலகப்பிரகாரமான ஐசுவரியங்களில் குறைவுபட்டிருப்பவர்கள் அவைகளை ஆராதிக்கவும், அவைகளை பொக்கிஷங்களாக்கவும் முடியாது என்று நினைப்பதும் தவறுதான். செல்வத்தை ஆராதிப்பவர்கள், அதை இச்சித்தவர்கள், அதற்கென தொடர்ந்து பாடுபட்டவர்கள், அவர்கள் இருதயங்கள் பொக்கிஷங்கள் என்று உணர்ந்தவைகளை அடைய முடியாமல் போன ஏழை மக்களைப் பற்றி அறியாதவர்கள், கேள்விப்படாதவர்கள் உண்டோ?

ஆண்டவரிடம் வருகிற அனைவரும், உலகப்பொருட்களை பொருத்தமட்டில் ஐசுவரியவான்களோ, ஏழைகளோ எல்லோரும் அர்ப்பணத்தைக் குறித்த ஒரு அறிவோடு வர வேண்டும். அவர்களுடைய இருதயங்கள் முழுமையாக செலுத்தப்படுகிற பலியோடு, அவர்கள் சித்தங்கள் பலியிடப்படுவதோடு, அவர்களுக்குண்டான எல்லாவற்றோடும் அவரிடத்தில் வரவேண்டும், இல்லையெனில் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். ஆண்டவரிடத்தில் வருகின்ற ஏழை மனிதன் விக்கிரகங்கள் போன்ற அவனுடைய கற்பனாசக்தி, ஆர்வங்கள், அவன் பெற்றுக் கொண்டிராத உலகப் பிரகாரமான பொருட்களுக்கான அவனுடைய இச்சைகள் ஆகியவைகளை விட்டுவிட வேண்டும். இதே மாதிரியாகவே ஆண்டவரிடத்தில் வருகின்ற ஐசுவரியவானும், அவனுடைய திட்டங்களையும், யோசனைகளையும், இதற்கு முன்பாக அவனுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியில் அவனுடைய பெலத்தை இதற்காக செலவழித்துக்கொண்டிருந்தான், ஆகவே, அவைகளைவிட்டு, மாத்திரமல்ல அவனிடத்தில் உள்ளவைகளை மாத்திரம் பலியாக செலுத்துவது போதாது. அவன் நம்பிக்கை வைத்திருந்த, அவன் எதிர்பார்த்திருந்த, அவன் பெற்றுக் கொள்ள வேண்டும் என ஆர்வத்துடன் இருந்த காரியங்களை விட்டு ஆண்டவரிடத்தில் வர வேண்டும். எல்லாம் ஆண்டவருடைய பலிபீடத்தின் மேல் வைக்கப்பட வேண்டும், இல்லையெனில் அவன் அவருடைய சீடனாக இருக்கமுடியாது.

ஐசுவரிய வாலிபன் சரியான மன நோக்கத்துடன் இருந்திருந்தால், நம்முடைய ஆண்டவரின் வார்த்தையை நன்றாக புரிந்து கொண்டிருப்பான். ஏனெனில், ஆண்டவர் விஷயங்களை இன்னும் அதிகமாக விளக்கியிருப்பார் என்று நாம் நம்புகிறோம். ஆண்டவரே, நான் உம்முடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுகிறேன், தேவனுடைய

பிரதிநிதியான உம்மிடத்தில் எனக்குள்ள எல்லாவற்றையும் ஒப்படைக்கிறேன் என்று அவன் சொல்லியிருந்தால்? நான் எப்படி உம்முடைய கட்டளைகளை செயல்படுத்த முற்படுவேன்? என்னுடைய மந்தைகளையும், ஆடுமாடுகளையும், நிலங்களையும், வீடுகளையும் விற்று இதனால் வந்த பணத்தை எடுத்து, ஏழை ஜனங்களைக் கூப்பிட்டு, அவர்களுக்கு கொடுக்கட்டுமா, இல்லையென்றால் நான் எப்படி செய்வேன்? தயவு செய்து எனக்கு இன்னும் அதிகமாக கட்டளையிட்டருளும்.

நாம் இப்படியாக நினத்துப் பார்க்கலாம்: ஆண்டவர் அவனிடம் கூறுகிறார், நீ வர வேண்டும் என்ற நிலைக்கு நீ இப்பொழுது வந்து விட்டாய், என்னுடைய கட்டளைகளை அதிக விபரமாக சொல்லுவேன். உனக்கு உண்டான எல்லாவற்றையும் இப்பொழுது தேவனுக்கு அர்ப்பணித்துவிட்டாய், அதன்படி அவரது சித்தத்திற்கு விட்டுவிட்டாய், அவருடைய சித்தம் இன்னதென்று நீ அறிந்துள்ளபடி உபயோகப்படுத்தும்படி விட்டுவிட்டாய். நான் உனக்குச் சொல்லுவேன், அவருடைய சித்தம் என்னவென்றால் நீயே அவருடைய உக்கிராணக் காரனாக வேண்டும், சொத்தை வைத்திருப்பது மாத்திரமல்ல, ஆனால் அதை செலவழிப்பதிலும், அதை நல்லபடியாக உபயோகிப்பதிலும், நீ அறிந்திருக்கிறபடி ஞானமாக உபயோகிப்பதிலும் நீ உக்கிராணக்காரனாக வேண்டும். நீ வங்கியில் வைத்திருக்கிற பணத்தை எடுத்து உபயோகிக்க தொடங்கு என்று நான் யோசனையாக கூறுகிறேன். உனக்கு விருப்பமானால் நீ இங்கே என்னுடைய அப்போஸ்தலர்களோடும் என்னைப் பின்பற்றி வருகிறகிறவர்களோடும் அதைத் தொடங்கலாம். நீ, அவர்களுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்று பார். அந்த பணம் தீர்ந்த பின்னர் ஒரு வீட்டை அல்லது ஒரு ஆட்டு மந்தையை, அல்லது ஒரு கால்நடை மந்தையை விற்று, இப்படியாக உன் வசம் கொடுக்கப்பட்ட பணத்தை உபயோகப்படுத்தத் தொடங்கு. நீ, அவருடைய உக்கிராணக்கானாயிருக்கிறாய், உனக்குரிய எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணித்துள்ளாய்; ஆகவே, அவர் இறுதியில் கணக்குக் கேட்பார் என்பதை எதிர்பார்த்திரு. நீ அவரிடத்தில் அர்ப்பணித்ததை உனக்கு தெரிந்துள்ளபடி ஞானமாகவும், முழுமையாகவும், உபயோகித்துள்ளாய் என்பதை அவருக்குக் காட்ட முடியும் என்றால், நீ ஆசீர்வதிக்கப்பட்ட வார்த்தைகளை கேட்க எதிர்பார்க்கலாம்: ‘‘நல்லது, உத்தமும்

உண்மையுமுள்ள ஊழியக்ககாரனே, உன் ஆண்டவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி.''

நமக்கு உள்ள எல்லாவற்றையும் ஆண்டவருக்கென்று அர்ப்பணிப்பது, நம்முடைய உடமைகள் அனைத்தும் மத வேலைக்கு மாத்திரமே உபயோகப்படுத்தபட வேண்டும் என்று பொருள்படாது. ஆண்டவருடைய உக்கிராணக்காரனாக அவருக்கு எது பிடித்தமாக இருக்கும் என்பதை அறிய தொடர்ந்து அவரைத் தேட வேண்டும், நமக்கு வருகிற கட்டளைகளை அவருடைய வசனத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அங்கே நாம் அவரை மகிமைப்படுத்தும்படி கற்றுக்கொடுக்கப் பட்டுள்ளோம். அவரை மகிமைப்படுத்தும் படியாக முயலும்போது நம்முடைய குரல்களையும், பேனாக்களையும் மாத்திரம் உபயோகப்படுத்த முயற்சிக்காமல், நம்முடைய எல்லா தாலந்துகளையும், நம்முடைய பணத்தையும், சொத்தையும்கூட உபயோகிக்க முயற்சிக்க வேண்டும். நாம் ஆண்டவருடைய ஜனங்களாக இருக்கிறபடியால், நமக்கு இருக்கிற பொறுப்பெல்லாம், நேரத்தையும், சொத்தையும் பொறுத்துத்தான், நாம் அதை அர்ப்பணித்திருக்கிறோம். உதாரணமாக, ஒரு மனைவி இருக்கிறாளென்றால், அவளுக்கு போதுமான, முறையான கவனிப்பு, குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவது போன்றவை ஒரு கடமையாகும். அதுபோலவே, நமக்கு இருக்கிற சொத்து, அல்லது நேரம் அல்லது தாலந்துக்கு பிள்ளைகள் பாத்தியதை உடையவர்களாக இருக்கிறார்கள்.

இந்த அடமானங்களைக் குறித்து நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும். தகுந்த முறையில் அவர்களுடைய தேவைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். மேலும், ஆண்டவருக் குரியவைகளை நாம் வீணாக்காமல் இருக்க எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளோம் என்பதை மறந்து விடக்கூடாது. ஆனால், வேதசத்தியத்தை எடுத்துக்கூறுவதில், அவைகளை அதிகபட்ச வாய்க்கால்களாக மாற்ற கூடுமானவரை முயற்சிக்க வேண்டும், பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற சிருஷ்டிகளின் நன்மைக்காக நற்செய்தியைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்தை பிரதிபலிக்கும் வண்ணமாக, மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும் நற்செய்தியைப் பரப்புவதற்காக, ஒவ்வொரு நாளும் அவைகளின் தேவைகளை சரியான வழியில் சந்திக்க வேண்டும். நாம் இங்கு சொல்லவிரும்புவது என்னவென்றால் மனைவியையும் பிள்ளைகளையும் பராமரிப்பது, அல்லது வயதான பெற்றோர்களை,

அல்லது நம்மைச் சார்ந்துள்ள மற்றவர்களை பராமரிப்பது போன்றவைகளுக்காக, நாம் அவரிடத்தில் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பகுதியை உபயோகிப்பது சரியானது என்று ஆண்டவர் அறிந்திருக்கிறார். ஆனால் சுவிசேஷத்தை அறிவிப்பதே, இராஜ்யத்தின் நற்செய்தியை அறிவிப்பதே நம்முடைய வாழ்க்கையின் முக்கிய வேலையாக இருக்கிறது. ஆகவே, நம்முடைய பணம், இதை நேரிடையாகப் பாதிப்பை உண்டுபண்ணாதபடி, நாம் ஆடம்பரமான செலவையோ, அல்லது வீணான செலவையோ அனுமதிக்கக் கூடாது.

நம்முடைய குடும்பங்களை சரியான முறையில் பராமரிக்க தேவையானவைகளை நாம் செய்யாமலிருக்கூடாது என்பது மாத்திரமல்ல, அவர்களுடைய தேவைகளை சந்திப்பது நமது கடமையின் ஒரு பகுதி என்றும் வேதம் நமக்கு போதிக்கிறது. நாம் எதிர்காலத்தைக் குறித்தும் ஓர் அளவுக்கு சிந்திக்க வேண்டும் என்ற ஞானியின் செய்திக்கு நாம் கவனமாக செவி சாய்க்க வேண்டும். ''சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளை பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்.'' (நீதி.6:6) எறும்பு தன்னுடைய பிள்ளைகளுக்கு ஆகாரத்தை நல்லபடியாக சேமித்து வைப்பதைப் பார்க்கிறோம். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சேர்த்து வைக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (2கொரி.12:14) நம்முடைய சுயநலமான, விழுந்துபோன சுபாவத்தின் இயற்கையான தன்மையின்படி, செயலின்படி, இதற்கு எதிர்மாறான வழியில் அதிகமாக செல்ல வேண்டியதில்லை என்று யோசனைக் கூறுவதைவிட, இதன்படியும் செல்ல வேண்டாம் என்று வெகு சிலரையே எச்சரிக்க அவசியமா யிருக்கிறது. இந்த விஷயத்தைக் குறித்து அப்போஸ்தருடைய வார்த்தைகள் கூறுகிறதாவது: ''எல்லா மனுஷருக்கும் முன்பாகவும், யோக்கியமானதை செய்ய நாடுங்கள்.'' அவர் மறுபடியும் கூறுகிறார்: ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமல் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.'' (ரோம.12:17; 1தீமோ.5:8)

இங்கே தோன்றுகிற எண்ணம் என்னவெனில், ஒவ்வொரு பெற்றோரும் இந்த உலகத்தில் பிறந்த பூரணமில்லாத, மரித்துப்போகின்ற சரீரத்தை மாத்திரம் கொடாமல், தன்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்க்கையில் முன்னுக்கு வரும்படியாக ஒரு வழியைக் காட்டுவது, அவர்கள் செய்ய வேண்டிய கடமையாகும். இந்த உலகத்தில் குழந்தைகளை பிறப்பித்த பின்னர், அவர்கள், சரியானபடி, போதுமானபடி

நிலை நிறுத்தப்படுவதை காண்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இது உணவையும் ஆடையையும் அவர்களுடைய குழந்தை பிராயத்திலும், வாலிபப்பருவத்திலும் கொடுப்பதை மாத்திரம் குறிப்பிடுவதல்ல, நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி அறிவுக்குரிய, ஒழுக்கத்திற்குரிய போதனைகளையும் கொடுப்பதைக் குறிக்கும். இவைகளெல்லாம் பெற்றோருக்காக அல்ல பிள்ளைகளின் நன்மைக்காக சேர்த்து வைப்பதைக் குறிக்கும். வாழ்க்கையில் காணப்படுகின்ற ஸ்திரமற்ற நிலைமைகளைப் பார்க்கும்போது பிள்ளைகள் வளர்வதற்கு முன்னால் தான் மரிக்க நேர்ந்தால் தன்னுடைய குடும்பத்தின் தேவைகளுக்காக ஏதாவது சேமித்து வைப்பது, வேதாகமம் பெற்றோருக்கு கடமையாக கொடுத்ததை, நடைமுறைப்படுத்துவது தவறானதாக இருக்காது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு செல்வத்தை தேடி வைப்பது, அவர்கள் பிள்ளைகள் அதனால் சண்டைபோட்டுக் கொள்ளவோ, தீமை விளைவிக்க வேண்டும் என்றோ அப்போஸ்தலர் குறிப்பிட்டார் என்று நாங்கள் எண்ணவில்லை. நல்ல முறையில் பிறந்த குழந்தை, வளர்ச்சியுறும்போது, போதுமான அளவு கல்வியறிவையும், வளர்ப்பையும் பெறுகிற குழந்தை நன்றாகத்தான் இருக்கிறது, அவனுக்குள்ளே ஒரு ஐசுவரியமுள்ள பரம்பரைச் சொத்து இருக்கிறது. இப்படிப்பட்ட விதத்தில் தன்னுடைய பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிற பெற்றோர், அவன் தன்னுடைய குடும்பத்திற்கு சொத்தையோ, அல்லது ஒரு வீட்டைத் தவிர வேறு எதையுமோ விட்டுச்செல்லாவிட்டாலும், இந்த விஷயத்தில் அவன் தெளிந்த புத்தியினால், பரிசுத்த ஆவியினால், ஆண்டவரால் ஆதரிக்கப்பட்ட ஒழுங்கினால் குடும்பத்தை நடத்தியிருக்கிறான் என்று உணர எல்லா காரணமும் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு மனிதன் தனது உக்கிராணத்துவத்தை செய்துள்ளான். இப்படிப்பட்ட பிள்ளைகள் நிச்சயமாகவே முடிவில் அவன் உண்மையாய் இருந்ததை மெச்சிக்கொள்ளுவார்கள்.

பரஸ்பர நன்மைகள் போன்றவைகளுக்கான சங்கங்கள்

நாம் சங்கங்கள் இருக்கிற நாட்களில் ஜீவிக்கிறோம். இவைகளில் சில ஞானமுள்ள, நன்மை தருகின்ற முறைகளை உடையதாக இருக்கின்றன. காப்பீட்டுக் கழகங்கள் எல்லாம் வியாபார நோக்குடன் நடத்தப்படுகின்றன. சரியான முறையில் சொல்லவேண்டும் என்றால்

தயாளநோக்குடன் அல்ல. அவைகள் எல்லாம் தற்போதைய வாழ்வில் மனுக்குலத்திற்கு ஏற்படுகிற ஸ்திரமற்ற தன்மையையும், கஷ்டங்களையும் மேற்கொள்ளுவதற்கு எடுக்கப்படும் முயற்சியாகும். அதாவது மரணமும், அதனால் தன்னை சார்ந்துள்ளவர்களுக்கு ஆபத்தான நிலை வரும்போது தேவைகளை சந்திப்பதற்கும் ஏற்படுத்தப்படும் ஒழுங்காகும். இந்த பலவிதமான பாதுகாப்பு நிதியைக் குறித்து விளக்கமாக கூறத் தேவையில்லை, ஆனால் ஆண்டவருடைய ஜனங்கள் இதில் உள்ள சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்களோ இல்லையோ, ஆனால் அது வியாபாரம் என்ற முறையில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானம்தான், மத அடிப்படையில் உள்ள ஒரு கேள்வியல்ல என்று உடனடியாகச் சொல்லலாம்.

நாம் அறிந்துள்ள சூழ்நிலைகளில், தன்னுடைய மனைவி மற்றும் பிள்ளைகளின் நலனுக்காக ஒரு குடும்பத்தில் தகப்பன் ஒரு காப்பீட்டுக் கழகத்தின் பாலிசியை எடுத்தது ஞானமுள்ள செயல் என்று நாம் எண்ணும்படியாக சூழ்நிலைகள் உள்ளன. தற்கால சத்தியத்தின்மேல் மனைவி பற்றுள்ளவளாக இல்லாத நிலையில், புருஷன் எதிர்காலத்தைக் குறித்து நினைக்கும்போது, அவளுடைய மனதிற்கு ஒரு இளைப்பாறு தலையும், உதவியையும், பாதுகாப்பையும் காப்பு நிதி தரும் என்று அவள் விரும்பும்போது, இந்த நிலையில் இது விசேஷமாக ஒரு ஞானமுள்ள செயலாகும். புருஷன் நினைக்கும் விதமும் எந்த அளவிலாவது மனைவியின் விருப்பத்தோடு இணைந்து இருக்கு மென்றால், அவன் அந்த காப்பீட்டு நிதியை தொடர்ந்து வைத்துக்கொள்ளுவது நல்லது என்று நாம் நினைக்கிறோம். காப்பீட்டுக்கழகத்தில் சேரவேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. இந்த விஷயத்தைப் பற்றி முடிவெடுப்பதில் தன்னுடைய விசேஷமான நிலைமைக்கு ஒத்ததாக அவனவன் தன் சொந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றுதான் கூறுகிறோம்.

எங்களுடைய எதிர்பார்ப்புகளின்படி, அதிகமான உபவத்திரவத்தின் அழுத்தம் சீக்கிரமாய் நம்மேல் வரும். அது 1910 –1912 க்கு இடையில் உள்ள காலத்தில் வந்து, ''புறஜாதியாரின் காலத்தின்'' முடிவாகிய அக்டோபர் 1914 ல் அதின் உச்சக்கட்டத்தை அடையும். (தொகுதி 2, அத்தி. 4ன்படி, 1914 ஆம் வருடம் இலையுதிர்காலத்தில் இராணுவம் கூட்டுச்சேர்வது உச்சநிலைக்கு வந்து, ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்தது– சாத்தானின் இராஜ்யம் நீக்கப்படும் நிலை வந்தது.)

உபத்திரவத்தின் உக்கிரம் ஆரம்பிப்பதைக் குறித்து வேதாகமத்தில் துல்லியமாக கூறப்படவில்லை, அது ஒரு யூகம்தான். நாங்கள் யூகிப்பது என்னவென்றால், இவ்வளவு பெரிய உபத்திரவம், உலகம் முழுவது நாசத்தை உண்டு பண்ணுவது, மூன்று வருடங்களுக்கும் குறைவான காலத்தில் செய்து முடிப்பது கூடாத காரியம். மேலும் அது மூன்று வருடங்களுக்கு மேலாக நீடித்தால் ''ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை.'' இந்த எதிர்பார்ப்புகளுக்கு இசைவாக, பொருளாதார புயல் கிறிஸ்தவ உலகின் மீது வீசும்போது, வியாபாரம், வங்கிகள், காப்பீட்டுக் கழகங்களின் நிதி, சொத்துக்களின் மதிப்பு ஆகியவை முற்றிலுமாக வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கிறோம். இது உண்மையிலேயே, பற்றிக்கொள்வதற்கு பரலோக பொக்கிஷங்களைத் தவிர ஒன்றுமே இல்லாத, இருதயங்களுக்கு அச்சத்தையும், ஏமாற்றத்தையும் கொண்டுவரும்படியாக, உபத்திரவத்தின் ஒரு கொடிய அம்சமாக அமையும்.

சகோதரத்துவம் உள்ள காப்பீட்டுக் கழகங்கள் என்று அழைக்கப்படுகிறவைகள் வழக்கமாக உள்ள வியாபார ஸ்தாபனங்களுக்கு முன்பே வீழ்ச்சியடையும் என்று எண்ணுவது சரியானதே. ஏனென்றால் முன்னால் சொல்லப்பட்டதற்கு மூலதனம் கிடையாது, மதிப்பிட்டு வரக்கூடிய தொகைகளின் மேல்தான் சார்ந்துள்ளது. ஏனெனில், அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் நின்றுவிட்டு, தற்போதுள்ள அழுத்தமான சூழ்நிலைகளில் குறைவுபடும்போது இந்த மதிப்பீட்டு தொகை அதிகமாக வலிமை இழக்கும். இந்த பல்வேறு சங்கங்களின் வீழ்ச்சி, சந்தேகத்திற்கிடமின்றி அனேகருடைய நம்பிக்கையை உடைத்துப்போடும். எல்லாவிதமான உலக நன்மைகளைக் குறித்து அவர்கள் எல்லாரையும் அஜாக்கிரதை உள்ளவர்களாக்கும். ஆகவே, ஒவ்வொருவனும் தன்னிடத்தில் இருக்கும் எல்லாவிதமான சொத்துக்களுக்கும் அல்லது வருமானத்திற்கும் அவன் உக்கிராணகாரனாக இருக்கிறபடியால், அவன்தான் தன்னுடைய ஞானமான வழியை தீர்மானிக்க வேண்டும். புதுசிருஷ்டிகள் ஆண்டவர்மேல் வைத்த விசுவாசத்தினால் ஆளப்பட்டு வழிநடத்துகிறபடியால், அவர்கள் இருதயங்களின் பயத்தைக் கொண்டு வரும் அளவுக்கு எதிர்காலத்தைக் குறித்த இப்படி ஒரு நடுக்கத்தை உணர மாட்டார்கள். இல்லையெனினும், இப்படிப்பட்டவர்கள் எந்த ஒரு மனுஷீக வியாபாரத்திலோ, பாதுகாப்பிலோ, அல்லது சங்கத்திலோ இப்படியான ஒரு நம்பிக்கையை

வைக்கமாட்டார்கள். ஏனெனில், அப்படிச்செய்தால் அதுதான் அவர்கள் பொக்கிஷம் என அதன்மேல் சார்ந்து இருக்கச்செய்யும், அது செயலற்று போய்விட்டால் உள்ளம் உடைந்து போவார்கள்.

இது நமக்கு அமைப்புகள், சங்கங்கள் போன்றவைகளைப் பற்றிய கேள்வியை எழுப்புகிறது. மேலும், புது சிருஷ்டிக்கு இப்படிப்பட்ட சங்கங்களில் என்ன சிலாக்கியம் உண்டு? இந்த சங்கங்களில் அவர்கள் அங்கத்தினர்களாக இருப்பது சரியா? சபையின் சங்கங்கள் மத சம்பந்தப்பட்டதாக மாத்திரம் இருக்கிறது; தொழிலாளர், மற்றும் உதவி தருகிற சங்கங்கள் உலகப்பிரகாரமானதாக மாத்திரம் இருக்கிறது; இன்னும் மற்ற சங்கங்கள் மதப்பிரகாரமான அம்சங்களையும், உலகப்பிரகாரமான அம்சங்களையும் இணைக்கிறதாக உள்ளன. இந்த விஷயத்தைப் பற்றி நாங்கள் அறிகிறபடி, Free Masons, Odd Fellows, Knights of Pythias போன்றவை மத சடங்குகளையும், காரியங்களையும் செய்கின்றன. இந்த பல்வேறு சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு எதிராக நாங்கள் எந்தவித யுத்தமும் செய்யவில்லை என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். அதே வேளையில், உலகப்பிரமானதும், மதசம்பந்தப் பட்டதுமான பல்வேறு அமைப்புகளுக்கு எதிராக நாங்கள் யுத்தம் செய்யவில்லை. மத சடங்காச்சாரங்கள், போதனைகள் ஆகியவைகளை உடைய அவைகள் எல்லாவற்றையும் ஒரே நிலையில் வைத்து பார்க்கும்போது, அவைகள் எல்லாமே பாபிலோனின் பகுதிகளாக இருக்கின்றன, சில பகுதிகள் அல்லது பிரிவுகள் சுத்தமாயிருக்கின்றன, மற்றவைகள் அதிக சுத்தம் இல்லாதவைகளாக இருக்கின்றன, இருந்தாலும், எல்லாமே குழப்பம் நிறைந்ததாய், திவ்விய நோக்கத்திற்கு எதிர்மாறாய் இருக்கின்றன; அவைகள் ஆதி திருச்சபையின் திவ்விய நோக்கத்திற்கு எதிராகவும், வார்த்தைகளினாலும், உதாரணங்களினாலும், திவ்விய செல்வாக்குள்ள ஸ்தாபகரும் அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் கொடுத்த போதனைகளுக்கு எதிராகவும் இருக்கின்றன.

புது சிருஷ்டி, இந்த பாதி உலகப்பிரகாரமானதும், பாதி மதப்பிரகாரமானதுமான சங்கங்களோடும், கேளிக்கை விடுதிகளோடும், அமைப்புகளோடும், சபைகளோடும் எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று நாங்கள் எச்சரிக்கிறோம். ஆனபடியால், ‘‘நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்து போய்,

அசுத்தமானதை தொடாதிருங்கள்.'' (2 கொரி. 6:17) அவர்களுடைய காரியங்கள், அவர்களுடைய ஆராதனை, அவர்களுடைய போதனைகள், அவர்களுடைய உபதேசங்கள் ஆகியவைகள் அவர்களுக்கு அசுத்தமாக இல்லாவிட்டாலும், நமக்கு அவைகள் அசுத்தமானவைகள். நம்முடைய மனக்கண் இப்பொழுது திறக்கப்பட்டுள்ளன, நமக்கு இப்பொழுது எல்லா விஷயங்களும் புதிய வெளிச்சத்தில் தெரிகின்றன. ஆகவே ஒரு காலத்தில் நாம் நேசித்தவைகளை இப்பொழுது வெறுக்கிறோம், ஒரு காலத்தில் நாம் வெறுத்தை இப்பொழுது நேசிக்கிறோம்.

ஆனால் மற்ற ஒழுங்குகள், சங்கங்கள், மத சம்பந்தப்பட்டவைகள் இல்லாத அமைப்புகள், அவர்களுடைய ஆராதனை, போதனை, உபதேசம், செயல்பாடு என்பவற்றைப் பொறுத்த வரையில், அவைகள் பரஸ்பர உதவி செய்கிற காப்புநிதி நிறுவனங்கள் மட்டுமே, அவைகள் அடையாளங்களையும், சங்கேத வார்த்தைகளையும், ஒரு மாறுதலுக்காக வைத்துக்கொள்ளுகிறார்கள். மேலும், பரஸ்பர உதவிக்காகவும், அநீதிக்கு எதிராக பாதுகாப்புக்காகவும், நியாயமான சம்பளங்களை பாதுகாக்கவும் உள்ள தொழிற்சங்கங்களுக்கு எதிராக நாங்கள் எதுவும் சொல்வதற்கில்லை. அவைகள் எல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடியபடி, நீதியின்படி, ஒழுங்குபடுத்தப்படிருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். மனித அல்லது திவ்விய சட்டங்களை மீறுகிற நோக்கமே கிடையாது என்று அவர்கள் கூறுகிறார்கள். எந்த ஒரு காரணத்தினாலாவது, புதுசிருஷ்டி அவர்களோடு தொடர்புள்ளவர்களாக இருப்பது அவசியம் என்றால், இவைகளுக்கு எதிராக எழுப்படக்கூடிய தகுதியான ஆட்சேபம் ஒன்றும் கிடையாது என்று பார்க்கிறோம். நாங்கள் தெரிந்து கொண்டதும், மற்றவர்களுக்கு கூறுவதும் என்னவெனில், அவர்களுடைய விஷயத்தில் நடைமுறைக்கு ஏற்ப செய்யவேண்டியது, எல்லா மனுஷீக சங்கங்களிலுமிருந்து விலகியிருப்பதும், ஆண்டவரிடத்திலும், அவருடைய ஆவி உள்ளவர்களிடத்திலும் மாத்திரம் இணைந்து நிற்பதுதான். ஆனால், எவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் இந்த தொழிலாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம்; அவைகள் மாத்திரம் இல்லாவிட்டால் தொழிலாளர்களின் சம்பளங்கள் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் மிக குறைவாக இருந்திருக்கும், அவர்களுடைய பொதுவான நிலைமை மோசமாக இருந்திருக்கும் என்பதை எல்லா நிச்சயத்தோடும் கூறலாம்.

இந்த சங்கங்களின் எல்லா நோக்கங்களைக் குறித்து நாங்கள் பொதுவாக அனுதாபம் காட்டினாலும், சில வேளைகளில், கடைபிடிக்கப்படுகின்ற எல்லா வழிவகைகளையும் ஆதரிக்க இயலாது; ஏனெனில், அநேக வேளைகளில் அவர்கள் சங்கங்களின் அதிகாரத்தை ஒரு கொடுமையான விதத்தில் உபயோகிக்கிறார்கள் என்பதை எல்லாரும் ஒத்துக் கொள்வார்கள். அவர்களுடைய பொதுவான நோக்கத்திற்கு நாம் அனுதாபம் காட்ட வேண்டும். அதாவது அழுத்தம் காணப்படும்போது, எதிர்ப்பு தெரிவிப்பது நிச்சயமாகவே செல்வத்தை குவிக்கச் செய்யும். இப்படியான சூழ்நிலைகளில் பொதுவாகக் காணப்படுவது என்னவெனில், சுயநலக்காரர்களின் கையில், எதிர்ப்பு வரும் அளவுக்கு ஏழைகளைக் கூட்டங்கூடச் செய்வதுதான். தொழிற்சங்கங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருந்து, தொழிலாளர்களின் சம்பளங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிற இப்படிப்பட்ட சமுதாயங்களில் வசிக்கிற சகோதரர்களுக்கு நாங்கள் புத்திமதியாக சொல்லுவது என்னவெனில், அவர்கள் அதில் அங்கத்துவம் உள்ளவர்களாக இருந்தால், அந்த சங்கங்களின் செலவுக்கென என்ன தொகையைக் கொடுப்பார்களோ, அதே தொகையை தன்னிச்சையாக, அதுவும் வழக்கமாக கொடுக்க வேண்டும். மேலும், சங்கங்களின் உத்திரவுகள் தங்கள் மனசாட்சிக்கு விரோதமாக இல்லாவிட்டால் பொதுவாக அவர்கள் அதற்கு கீழ்ப்படிய வேண்டும். ஆனால் அங்கத்தினராவதை தவிர்க்கமுடியு மென்றால், குறிப்பிட்ட தொகையில் தங்களுடைய பங்கை ஏற்றுக்கொள்ளும்போது, தங்களுடைய நிலைமையை கூடிய அளவிற்கு எடுத்துச்சொல்ல வேண்டும். இப்படிச் செய்வதன் மூலமே, தொழிலாளர்களின் நன்மைக்கென, செயல்படும் போது ஏற்படக்கூடிய செலவுகளின் பொறுப்பிலிருந்து விடுபட முடியும்; அங்கத்துவத்திலிருந்து விடுபட விரும்புவது சுயநல எண்ணத்தினால் எடுக்கப்பட்ட முடிவல்ல என்று எல்லாருக்கும் தெரியப்படுத்த முடியும்.

ஆனாலும், நிரந்தர அங்கத்தினராக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று இருந்தால், அங்கத்தினர் ஆவதைத் தடுப்பதற்கென எந்தவிதமான காரணத்தையோ, அல்லது வேத கட்டளையோ நாங்கள் அறிந்ததில்லை; விசேஷமாக அவர்களுடைய அன்றாட போஜனமே அங்கத்தினர் ஆனால்தான் உண்டு என்கிற நிலைமை காணப்பட்டால், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், அவர்கள் சேரட்டும், செலுத்த வேண்டிய தொகையை தவறாமல் செலுத்தட்டும், ஆனால் சமாதானத்தோடும்,

நீதியோடும் சங்கத்தின் காரியங்கள் நடத்தப்படும்படி உதவியாயிருக்க ஏற்ற வேளையில் அவர்களால் ஒரு யோசனை கொடுக்க முடியுமென்று அவர்கள் நம்புவார்களானால், இப்படிப்பட்ட சமயங்களில் மாத்திரம் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். ஒரு வேளை வேலைநிறுத்தம் ஏற்பட்டால் அதற்கு அவர்கள் கீழ்ப்படியட்டும், ஆனால் கலகம் உண்டாக்கக்கூடிய, மற்றவர்களுடைய உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் எதிரான எந்த காரியங்களிலும் அவர்கள் பங்கெடுக்கக் கூடாது; இதை அந்த சங்கத்தின் முக்கியஸ்தர்களுக்கு முற்றிலும் புரியும்படி தெரிவிக்க வேண்டும், அதனிமித்தம், இப்படியான உதவியை இவர்களிடம்(புது சிருஷ்டியிடம்) கேட்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கமாட்டார்கள்.

மனசாட்சியுடன் தலையிடுவது

''அந்நிய காரியங்களில் தலையிடுதல்'' புதுசிருஷ்டியின் புதிய மனங்களுக்கு முற்றிலும் முரணானது என்று அப்போஸ்தலர்களால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. (1தீமோ.5:13; 1பேது.4:15) வீண் அலுவற்காரராய் மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடுகிறவர், அவருக்கு அந்த விஷயத்தில் சரியானபடி செய்வதற்கு ஒன்றுமே இருக்காது. இந்த உலகத்தின் பிள்ளைகள் கூட தற்போதைய வாழ்நாளில் போதுமான அளவு ஒரு தெளிந்த புத்தியுள்ளவனாக, தன்னுடைய சொந்த அலுவல்களைச் சரியான முறையில் பார்க்கும்படிக்கு தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுகிற அளவுக்கு தங்களுடைய சந்ததியிலே ஞானமுள்ளவர்களாக இருக்கிறார்கள். மேலும், அவன் மற்றவர்களுடைய விஷயங்களில் தலையிடுகிறவனாகவும், மற்றவர்களுக்கு புத்திசொல்லும் அளவுக்கு திறமை உள்ளவனாகவும் இருப்பதாக காண்பித்துக்கொண்டு, அதன்விளைவாக மற்றவர்களுடைய வியாபாரத்திற்கு போதுமான அளவு நேரம் ஒதுக்குவானாகில், அவன் நிச்சயமாகவே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தன்னுடைய விஷயங்களை அலட்சியம் பண்ணுகிறவனாக இருப்பான். தெளிந்தபுத்தியின் ஆவியினால் கர்த்தருக்குள் பிறந்த புதுசிருஷ்டிகள் இந்த உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். மேலும், மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடுவதற்கு உலகத்தாரைக் காட்டிலும் தனக்கு நேரம் இன்னும் குறைவாக இருக்கிறது என்பதை உணர வேண்டும். ஏனெனில், தங்களுடைய நேரம், தாலந்து, செல்வாக்கு அனைத்தையும் ஆண்டவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் இயற்கையாகவே இந்த விஷயத்தில் தெளிந்த புத்தி இல்லாதவர்களாக இருந்தால், வேதாகமத்தில் உள்ள கட்டளைகளால், அவர்களுடைய உடன்படிக்கையின் பலியை நிறைவேற்றுவதற்கான காலம் குறுகியதாக இருக்கிறது என்ற உணர்வினால் சரியான வழியில் நடக்கும்படி பலவந்தப்படுத்தப் படுவார்கள். மேலும், புது சிருஷ்டிக்குரிய கட்டளையான பொன்னான கட்டளை அடுத்தவர்களின் விஷயத்தில் தலையிடுவதை தடுக்கிறது என்பதையும் அவர்கள் உணர வேண்டும். நிச்சயமாகவே, மற்றவர்கள் தங்கள் விஷயங்களில் தலையிடுவதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆகவே, அதேமாதிரி அவர்களும் செய்யாதபடி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஆனாலும் பொதுவாக உலகத்தின் ஆவி இதற்கு எதிர்மாறாக உள்ளது என்று அப்போஸ்தலர் உணர்ந்து, அதன்படி, இதைக்குறித்து பரிசுத்தவான்கள் அறிய வேண்டும், அப்பியாசப்படுத்த வேண்டும், கற்கவேண்டும் என்று அவர்களை எச்சரிக்கிறார். அவர் கூறுகிறதாவது: ''அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும்... வேண்டுமென்று புத்திசொல்லுகிறோம்.'' (1தெச. 4:12)

மற்றவர்களுடைய அலுவல்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க முற்படுகிற இயற்கையான குணம், அவர்களை திருத்தும்படியாக ஒரு கரம் நீட்டுவதும், ஒருவன் தன் கண்ணிலுள்ள உத்திரத்தை அசட்டை பண்ணிவிட்டு, மற்ற சகோதரனின் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க முற்படுவதும், ஆண்டவர் விளக்கமாக கூறுகிறபடி (மத்.7: 3–5) சில சமயங்களில் புது சிருஷ்டியை ஒரு புதுமையான வழியில் தாக்குகிறது. அவன், புத்திமதி கூறுவதும், விசாரிப்பதும், கடிந்துகொள்ளுவதும், கண்டிப்பதும் தன்னுடைய கடமை என்று நினைக்கிறான். விஷயத்தை தன்னுடைய மனதில் எடுத்துக்கொள்ளும்போது, _அப்படிச்செய்யாவிடில் அது பாவமாக இருக்கும் என்று தன்னை திருப்திபடுத்திக் கொள்ளுகிறான். இப்படியாக, அவன் வீண் அலுவற்காரன் என்று நாம் சொல்லுகிற அளவுக்கு மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுகிறவனாகிவிடுகிறான். இப்படி தவறாக வழிநடத்தப்பட்ட மனசாட்சியினிமித்தம் இப்படிப்பட்ட வனுடைய தலையீடு இரட்டிப்பான பலமுள்ளதாகவும், எதிர்க்கக் கூடியதாகவும் ஆகிவிடுகிறது. அநேக தடவைகளில், பணிவுள்ள நல்ல ஜனங்கள், உண்மையான புதுசிருஷ்டிகள் ஆண்டவருடைய ஊழியத்தில் அவர்கள் செய்ய முற்படுகிறதெல்லாவற்றிலும் இந்த குறைபாட்டினால்

தடைபண்ணப் படுகிறார்கள். ஒவ்வொருவரும் தன்னை கட்டுப்படுத்தி, நீதியின் கொள்கைகளை அப்பியாசப்படுத்தவும், கற்றுக்கொள்ளவும், ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவைகளை நேசிக்கவும் வேண்டும். அவன் சகோதர கடமைக்கும், மற்றவர்களின் அலுவல்களில் தலையிடுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் காணும்படி தன்னுடைய மனசாட்சிக்கு கற்பிக்க வேண்டும். நாம் பார்த்தபடி, பெரும்பாலான ஆண்டவரின் ஜனங்களும், மாத்திரமல்ல உலகத்தாரும்கூட, நீதி, மற்றும் அன்பின் கொள்கைகள் பொன்னான கற்பனையில் இணைக்கப்பட்டிருப்பதை விரும்பி வந்தபின்னரும், அதை வாழ்க்கையின் அலுவல்களிலும், மற்றவர்களோடு பழகும்போதும் நடைமுறைப்படுத்தும் வேளையில், கடிந்துகொள்ளுதலும், அதட்டுவதும், தவறு கண்டுபிடிப்பதும், எடுத்துப்போடுவதும் மிகக்குறைவாயிருக்கக் காண்பார்கள்.

இதேபோன்று, எந்த விஷயத்தையும் விசாரிப்பது நல்லது. அது என்னுடைய வேலையா? நாம் உலகத்தாரோடு பழகும்போது, பொதுவாக கவனமாக ஆராய்ந்து பார்க்கும் வேளையில், அவர்களை கடிந்து கொள்ளுவதோ, அல்லது கண்டிப்பதோ, அல்லது அதட்டுவதோ நம்முடைய வேலையல்ல என்று காண்கிறோம். நாம் ஆண்டவரால் அழைக்கப்பட்டிருக்கிறோம்; குறுகலான பாதையில் நடக்கும்படியாக உலகத்தின் _பாதையிலிருந்து திரும்பியுள்ளோம்; அதுவே நம்முடைய வேலை. நாம் ஆண்டவரை பின்பற்றும்படியாக உலகம் நம்மை தனியே விட்டுவிட வேண்டும் என்று வாஞ்சிக்க வேண்டும். அதேபோன்று உலகத்தின் கவலைகளை நாம் தனியே விட்டுவிட்டு, நம்மையும் நம்முடைய சுவிசேஷ செய்தியையும் ''கேட்கிறதற்கு காதுள்ளவ னிடத்தில்'' கூற வேண்டும். உலகமானது, ஆண்டவரால் அழைக்கப் படவில்லை, ''இடுக்கமான வாசலுக்குள்'' வரவில்லை. ஆகவே, அது தன் வழியைத் தெரிந்துகொள்வதற்கும், நாம் அதன் வழியில் குறுக்கிட மாட்டோம் என்று எதிர்பார்க்கவும் அதற்கு உரிமை உண்டு, ஏனெனில், நாமும் நம்மில் குறுக்கிடுவதை விருப்பப்படமாட்டோம். இது நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதை தடை பண்ணாது; இப்படியாக, நாம் மற்றவர்களின் விஷயத்தில் தலையிடாமலும், கண்டிக்காமலும் இருந்தாலும், நாம் மறைமுகமாக உலகத்தின்மேல் தொடர்ச்சியான செல்வாக்கை அப்பியாசப்படுத்திக்கொண்டிருப்போம். விஷயம் வியாபாரத்தைப் பற்றி இருக்கும்போது, அதில் நாம் பணம் சம்பந்தமாக

அக்கரையுள்ளவர்களாக இருக்கும்போது, அப்பொழுது அது மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடுவதாகாது; அது நம்முடைய காரியத்தையே பார்ப்பதாகும்; அதில் முறைப்படியான கவனம் செலுத்துவதாகும். குடும்பத்திலும் வீட்டிலும் நடைபெறுகின்ற எல்லா காரியங்களைக் குறித்தும் பெற்றோர்கள் ஒரு அறிவுடன் வழிகாட்டுவது தலையிடுதல் ஆகாது. இருந்தாலும், இங்கு கூட குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரின் தனிப்பட்ட உரிமைகள் கவனிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும். புருஷனும் குடும்பத்தின் தகப்பனும் அதன் தலைவராகவும், முழு அதிகாரம் உள்ளவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கும்போது, அந்த அதிகாரத்தை அன்புடன்கூடிய நிதானத்துடனும், ஞானமுள்ள சிந்தனையோடும் பயன்படுத்த வேண்டும். மனைவியின் தனித்தன்மையும், அவளுக்கு பிடித்தமானவைகளும், சுவையும் அவனுடைய கவனத்தில் இருக்க வேண்டும். அவளும், அவனுடைய பிரதிநிதியாக அவனுக்கு உதவி செய்யும் துணையாக, வீட்டை பராமரிக்கிறவளாக, அவளுடைய விசேஷமான வரம்பிற்குட்பட்டு, முழு அதிகாரமும், ஆளுகையும் அவளுக்கு கொடுக்கப்பட வேண்டும். மேலும், அவன் இல்லாத வேளையில், குடும்பத்தின் எல்லா காரியங்களைப் பொருத்தவரையிலும் அவனுடைய அதிகாரத்தை, பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். பிள்ளைகளுக்கும் கூட, அவர்களுடைய வயதின்படி போதுமான அளவு தனிப்பட்ட முறையில் இடமும், அவர்களுடைய விஷயங்களில் தனித்தன்மையும் கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் வீட்டின் ஒழுங்கு, சௌகரியத்தைப் பொறுத்த விஷயங்களில், வீட்டில் உள்ளவர்கள் மனதில், ஒழுக்கத்தில், சரீர பிரகாரமான விஷயங்களில் வளர்ச்சி பெறுவதைக் குறித்து அவனுடைய அதிகாரத்தையும் மேற்பார்வையையும் மாத்திரமே அப்பியாசப்படுத்த வேண்டும். பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே ஒரு குழந்தை மற்ற குழந்தையிடம் குற்றம் கண்டுபிடிக்காமலிருக்கவும், மற்ற குழந்தைகளின் உடமைகளில் கைபோடாதிருக்கவும், ஆனால், மற்றவர்களுடைய உரிமையை மதிக்கவும், பொன்னான கற்பனையின்படி மற்றவர்களுக்கு தயாளத்துடனும், அன்புடனும், உதவவும் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

வீண் அலுவற்காரராய் இருப்பவர்களுக்கு எதிராக உள்ள எச்சரிக்கையை நினைப்பதற்கு சபையைத் தவிர வேறு இடம் கிடையாது. சகோதரர்கள் வசனத்திலிருந்தும், கட்டளையிலிருந்தும், மூப்பர்களின்

உதாரணத்திலிருந்தும் சீக்கிரமாக கற்றுக்கொள்ள வேண்டியதென்ன வெனில், மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுவதோ, மற்றவர்களைப் பற்றி விவாதிப்பதோ தேவனுடைய சித்தம் கிடையாது என்பதையே யாகும். ஆனால் மற்ற இடத்தில் உள்ளது போலவே இங்கேயும், ''ஒருவரைக் குறித்தும் பொல்லாங்கு பேசாதே'' என்கிற திவ்விய கட்டளை உரியதாக இருக்கிறது. நமக்கு நேரிடையாக அக்கரையில்லாத மற்றவர்களுடைய தனிப்பட்ட விஷயங்களில் தலையிடுதல், பொல்லாப்பு பேசுவதற்கும், புறங்கூறுவதற்கும், கோபம் அடைவதற்கும், பொறாமை அடைவதற்கும், வெறுப்பு அடைவதற்கும், சண்டையிடுவதற்கும், பல்வேறு மாம்சீகத்தின் காரியங்களிடத்திற்கும், பிசாசினிடத்திற்கும் வழி நடத்தும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (கொலோ. 3: 5–10) இப்படியாக, அனேக வேளைகளில் அவதூறு பேசும் பழக்கத்தின் சிறிய விதைகள் விதைக்கப்படுகின்றன, கசப்பின் பெரிய வேர்கள் வளருகின்றன, அதன்மூலம் அநேகர் தீட்டுப்படுகிறார்கள். புதிய மனம் உள்ள அனைவரும் இந்த பொல்லாங்கின் விஷத்தன்மையை உணருகிறார்கள். அவர்கள் எல்லாரும் தங்களுடைய வீடுகளிலும் அயலகத்திலும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். மாம்சீக மனம், கொலை செய்வதும் கொள்ளையடித்தலும் தவறு என்று உணரலாம். ஆனால் திவ்விய பிரமாணத்தின் ஆவியை பெற்றவர்களுக்கு, இன்னும் ஓர் உயர்வான நீதியின் எண்ணம், அதாவது அவதூறு கூறுவது என்பது ஒருவருடைய குணாதிசயத்தை கொலை செய்வதாகும், மேலும் எந்த வழியிலாவது அயலானின் நல்ல பெயரை திருடுவது, கொள்ளையடிப் பதாகும் என்ற எண்ணம் தேவைப்படுகிறது. உலகப்பிரகாரமான எண்ணம் உடையவர்கள் இந்த விஷயத்தை ஓர் அளவுக்கு கிரகித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய உணர்வுகள் புலவரின் வார்த்தையில் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது: ''என்னுடைய பணப்பையைத் திருடுகிறவன் குப்பையைத் திருடுகிறான்..... ஆனால் என்னுடைய நல்ல பெயரைத் திருடுகிறவன் அவனை வளமாக்காத ஒன்றைத் திருடுகிறான், ஆனால் என்னை உண்மையிலேயே தரித்திரனாக விட்டுவிடுகிறான்.''

தேவனை துதிப்பதும் மனிதனை சபிப்பதும்

அப்போஸ்தலனாகிய யாக்கோபு, நாவை ஒரு அடங்காத பொல்லாங்குள்ள அவயவம் என்றும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது என்றும் சொல்லுவதில் ஆச்சரியம் இல்லை;

நம்முடைய சரீரங்களில் அடக்க மிகவும் கடினமான அவயவம் என்று அவர் கூறுவதில் ஆச்சரியமில்லை; அது ஆயுள் சக்கரத்தை கொளுத்தி விடுகிறது என்றும் கூறுவதில் ஆச்சரியமில்லை. (யாக். 3வது அதிகாரம்) இந்த மாதிரியான அனுபவம் யாருக்குத்தான் கிடைக்காமல் இருந்திருக்கும்! குறைந்த பட்சம், வாழ்க்கையின் பிரச்சினைகளில் பாதியளவு இந்த அடங்காத நாவுகளால்தான் ஏற்பட்டது என்பதை அறியாதவர் யார்! முன்பின் ஆராயாமல் அவசரத்தில் சொல்லப்பட்ட, உக்கிரமான வார்த்தைகள் பல இலட்சக்கணக்கான பணத்தையும், ஆயிரக்கணக்கான ஜீவன்களையும் எடுத்துக்கொண்ட யுத்தங்களை ஏற்படுத்தியது என்பதையும், இருக்கிற நீதிமன்ற சட்ட வழக்குகளில் பாதி அளவுக்கு இவைகள்தான் அடிப்படையாக இருந்தன என்பதையும், கடந்த 6000 வருடங்களாக நம்முடைய சந்ததியை பாதித்துள்ள வீட்டுப் பிரச்சனைகளில் பாதியளவுக்கு இவைகள்தான் அடிப்படையாக இருந்தன என்பதையும் யார்தான அறியமாட்டார்கள்! நாவைக்குறித்து அப்போஸ்தலர்கள் கூறும்போது, ''அதினாலே நாம் பிதாவாகிய தேவனை துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம். என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.'' (வச.9) தன்னுடைய அயலகத்தாருடைய பொருளை திருடக்கூடாது அல்லது அவனை கொலைசெய்யக் கூடாது என்கிற நிலையை மாத்திரம் ஒரு கிறிஸ்தவன் அடைந்திருக்கிறான், ஆனால், அவன் தன் அயலகத்தான்மேல் தன்னுடைய நாவால் இழப்பை வரப்பண்ணுகிறான், அவனுடைய நல்ல பெயரை கெடுக்கிறான் அல்லது கொலை செய்கிறான். இப்படிப்பட்ட கிறிஸ்தவன் சரியான பாதையில் மிகவும் குறைவான தூரம்தான் சென்றிருக்கிறான், மேலும் பரலோக இராஜ்யத்தின் நிலையிலிருந்து இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறான்.

நம்முடைய விழுந்து போன சுபாவத்தின் கெட்ட குணத்தை அறிந்த பின்னரும் கூட, நாவை அடக்குவது எவ்வளவு கடினமான ஒரு விஷயம் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே, நாங்கள் நாவை அடக்க அல்லது கட்டுப்படுத்த உள்ள ஒரே ஒரு சரியான வழிக்கு கவனத்தை செலுத்தும்படி கேட்கிறோம், அதாவது இருதயத்தின் மூலமாக. ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வசனம் கூறுகிறதாவது: ''இருயத்தின் நிறைவினால் வாய் பேசும்.'' இது உண்மையாக இருக்கிறது. இது எதைக் குறிக்கிறது என்றால், நம்முடைய நாவுகளை கட்டுப்படுத்த அதிகமான கஷ்டம் இருப்பது, நம்முடைய இருதயங்களில் அநீதியான விஷயங்கள்

அநேகம் உண்டு என்பதைக் குறிக்கிறது. எந்த அளவுக்கு நம்முடைய இருதயங்களை சரிப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நம்முடைய நாவுகளை அடக்குவதில் உள்ள கஷ்டம் குறையும். மற்றவர்களைக் குறித்து தொடர்ச்சியாக இழிவாக பேசுகின்ற உதடுகள், பெருமையான, கர்வமுள்ள, ஆதிக்கம் செலுத்துகிற, தன்னையே நினைத்துக் கொண்டிருக்கிற இருதயநிலையைக் காட்டுகிறது. நேரிடையாகவோ, மறைமுகமாகவோ மற்றவர்களைக் குறித்து பொல்லாங்கு பேசுகிற உதடுகள் வெளிப்படுத்துவது என்னவெனில், உதடுகளின் பின்னால் இருக்கிற இருதயம் சுத்தமாகவும் இல்லை, ஆண்டவரின் அன்பின் ஆவியால் நிரப்பப்பட்டிருக்கவுமில்லை என்பதை குறிக்கிறது. ஏனெனில், ''அன்பு அயலானுக்கு தீங்கு விளைவிக்காது.'' சிந்தனையில் கூட அப்படி செய்யாது. அது ''பொல்லாங்கு நினைப்பதில்லை.'' அது அவனைக் குறித்து பொல்லாங்கை யூகிக்க அனுமதிக்காது. அனுகூலமற்ற தன்மையை யூகிப்பதைவிட அனுகூலமான தன்மையை யூகிக்கும். அது எழும் ஒவ்வொரு ஐயநிலையையும் அவனுக்கு சாதகமாகவே (நன்மையானதையே) யோசிக்கும்.

மனுக்குலத்தில் எல்லாரிடமும் சுயஅன்பு, தன்னையே காயப்படுத்திக் கொள்ளாதபடி, நாவை தடுத்து நிறுத்த பலமுள்ளதாக இருக்கிறது. சரியான அன்பு, சுய நலமற்றதாக இருக்கிறது, அது அயலானையும் தன்னைப்போன்று நேசிப்பது, மாத்திரமல்ல, அயலான் அல்லது சகோதரனுக்கு கேடு விளைவிக்கும்படி பேசுவதைக் கூட வெறுக்கும், அல்லது அவனுடைய நடத்தையைக் குறித்துக்கூட பிரதிபலிக்க விருப்பப்படாது. ஏனெனில், தனக்கு விரோதமாக அப்படி ஒரு வழியை தெரிந்துகொள்ள விருப்பமில்லாமல் இருக்கும். அப்படியானால், இந்த விஷயத்தை எந்த வழியிலிருந்து நாம் பார்த்தாலும், புதுசிருஷ்டியின் மிக முக்கியமான விஷயம் நம்முடைய இருதயங்களில் பரிபூரண அன்பை அடைவதுதான் என்று நாம் பார்க்கிறோம். இது சத்தியத்தின் ஊழியமாகிய திவ்விய ஊழியத்தில் ஒத்துழைக்குமாறும், அதிக வைராக்கியமும், முயற்சியும், தியானமும் உள்ளவர்களாக இருக்கவும் தேவனுக்கு நேராக நம்மை ஊக்குவிக்கும். மேலும் மனிதர்களிடத்திலும் நம்மை இதேமாதிரி நியாயத்துடனும், அன்புடனும், நடக்கும்படியாக மாத்திரமல்ல, கூடுமானவரை அனைவரையும்பற்றி கிருபையாய் நினைக்கவும், பேசவும் ஊக்குவிக்கும். இது பரிசுத்த ஆவியாகும். இதைக்குறித்துதான் நாம் ஜெபிக்க வேண்டும் என்று

நம்முடைய மீட்பர் கற்றுக்கொடுத்தார். மேலும், இதைக்குறித்துதான் அவர், ''பூலோகத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பூலோகத்திற்குரிய நல்ல ஈவுகளை கொடுப்பதைக் காட்டிலும், நம்முடைய பரலோகப்பிதா அதிகமாக கொடுப்பதற்கு மிக வாஞ்சையாயிருக்கிறார்'' என்று அறிக்கையிட்டார். இந்த பரிசுத்தத்தின் ஆவிக்காகவும், அன்பின் ஆவிக்காகவும் ஊக்கமாக ஜெபிப்பது என்பது, நம்முடைய சரீரம் முழுவதும், சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் அன்பு ஊற்றப்பட வேண்டும் என்பதற்காக ஊக்கமான வாஞ்சையையும், முயற்சியையும் குறிப்பிடுகிறது. ஆகவே, நாம் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் பிள்ளைகளாக இருப்போம். இப்படியாக, அவருடைய அன்புக்கும், அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற எல்லாவற்றிற்கும், அவரை நேசிக்கிறவர்களுக்கு என்று அவர் வைத்திருக்கிறவைகளுக்கும் நாம் தகுதி வாய்ந்தவர்கள் என்று எண்ணப்படுவோம்.

சமுதாய கடமைகள்

இந்த அழிவுள்ள சரீரத்தில் உள்ளவரை புதுசிருஷ்டிக்கு அவைகளின் ஊடாக ஜென்ம சுபாவமுள்ள மனிதனோடு ஒரு சமுதாய தொடர்பும், சில சமுதாய பொறுப்புகளும் உண்டு. புதிதாக்கப்பட்ட மனம் இயல்பாகவே மற்ற புதிதாக்கப்பட்ட மனங்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்ள விரும்புகிறது. மேலும், எந்த அளவுக்கு சத்தியத்தின் கிருபையில் அது வளர்ச்சியடைந்துள்ளதோ அந்த அளவுக்கு அது உலகப்பிரகாரமான தொடர்புகள், நோக்கங்கள், ஆர்வங்கள், இலக்கியம் மற்றும் உரையாடல் போன்றைவைகளோடு தொடர்புகள் அற்றுப் போகின்றன. உலகப் பிரகாரமான காரியங்கள், நலன்கள் முதலானவைகளுக்கு தாங்கள் மரித்து விட்டோம் என்று எண்ணுகிற புது சிருஷ்டிகள், அர்ப்பணம் செய்துகொள்ளாத, மாம்சத்தின்படி ஜீவிக்கிற தங்கள் நண்பர்களோடு எந்த அளவு தொடர்பு வைத்துக் கொள்ளலாம் என்கிற இந்த கேள்வி அனேகரிடத்தில் எழும்புகிறது. இது ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் ஜாக்கிரதையாக பார்க்க வேண்டிய ஒரு விஷயமாகும். எந்த இரண்டு பேருக்கும் ஒரே சூழ்நிலை இருப்பதில்லை. ஆகவே, எல்லாருக்கும் எந்த சூழ்நிலைக்கும் பொருந்தும்படி எந்த யோசனையும் தெரிவிக்கப்பட முடியாது.

பொல்லாங்கு செய்கிறவர்களோடு நாம் சகவாசம் வைத்துக் கொள்ளக்கூடாது என்றும், அசுத்தமானவைகள் என்று நாம் நினைக்கிற வழிமுறைகளில் நடக்கிறவர்களோடு கூட்டு வைத்துக் கொள்ளக்கூடாது என்றும், நம்மோடு ஒருமனப்படுகிற புதிதாக்கப்பட்ட மனம் உடையவர்களோடு சகவாசம் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலர் யோசனை கூறுகிறார். இப்படிச்செய்வது நிச்சயமாகவே கேள்விக்கிடமின்றி நம்முடைய அனுகூலத்திற்கு ஏதுவாக இருக்கும். முதலாவது இப்படிப்பட்ட சகவாசம், நம்முடைய விழுந்துபோன வேட்கைக்கு, ஜென்ம சுபாவத்திற்கு, இழிவான தன்மைகளுக்கு தொடர்ந்து ஊக்கம் அளிக்காது. இரண்டாவதாக, ''உண்மையுள்ள வைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவை களெவைகளோ, அன்புள்ளவை களெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள் '' (பிலி.4:8) என்கிற அப்போஸ்தலருடைய கட்டளையை பின்பற்றுவதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளில் அது உதவியாக இருக்கும். மேலும், அதைப்பற்றி சிந்திக்கவும், அப்பியாசப்படுத்தவும் நாம் எடுக்கும் முயற்சிகளில் அது உதவியாக இருக்கும்.

ஆனாலும் பொதுவாக, மனுக்குலத்தோடு நாம் சம்பந்தம் வைத்துக்கொள்வதைக் காட்டிலும், இரத்தம் சம்பந்தப்பட்ட உறவினர்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்வதில் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும். ஆகவே, பொதுவான மனுக்குலத்தின்மேல் _கிருபையாகவும், அன்பாகவும் இருக்கும்படி ஆண்டவரின் ஆவி நம்மை வழிநடத்தி, ஏவுமானால், இது, நம்முடைய உறவினர்கள்மேல் வைத்துள்ள நம்முடைய உணர்வுகள், விசேஷமாக எண்ணப்பட வேண்டும் என்பதையும், நமக்கு கிடைக்கிற தருணங்களின்படி, உதவியாக இருக்கிறது என்பதையும் உணர்த்துகிறது. இருந்தாலும், நம்முடைய பூலோகத்தில் உள்ள ஊறவினர்களோடு, மிக விசேஷமான முறையில் ஐக்கியம் வைத்துக்கொள்ளுவது நம்முடைய தீர்மானத்தின்படி ஞானமுள்ளதாக இருக்காது; மேலும், அது வேதத்தின் போதனைகளுக்கும் ஒத்ததாக இருக்காது; மேலும், நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலர்களும் தங்கள் நடத்தைகள் மூலமாக நமக்கு வைத்துள்ள உதாரணங்களுக்கும் ஒத்துப்போகிறதாக இருக்காது. இல்லையெனில், விசுவாச வீட்டாரை நாம் நடத்துவதுபோன்று, அல்லது அதற்கும் மேலாக அவர்களை நடத்துவதும், வரவேற்பதும் மேற்கூறியவைகளோடு ஒத்துப்போவதில்லை. நாங்கள்

இங்கே இப்படிப்பட்ட நெருங்கிய உறவுகளை தடை செய்கிறோம். ஏனெனில், அப்போஸ்தலருடைய வார்த்தை கூறுகிறபடி, அவைகள் நம்மேல் ஒரு கோரிக்கையை வைக்கும். ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.'' (1தீமோ. 5:8) பொதுவாக கூற வேண்டுமானால், நாம் அப்போஸ்தலருடைய வார்த்தையை அப்பியாசப்படுத்த வேண்டும். ''நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குதக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்யக்கடவோம்.'' (எபே. 6:10) நம்முடைய விசுவாச வீட்டாருக்கு அடுத்தபடியாக, நம்முடைய தூரத்து உறவினர்கள் வரவேண்டும்.

ஆண்டவர் தம்மைப் பின்பற்றி வருகிறவர்களை, ஒரு புது குடும்பமாக, ஒரு புது வீட்டாராக, ஒரு ''விசுவாச வீட்டாராக'' அழைக்க வேண்டும் என்பது ஆண்டவரின் விருப்பமாக இருந்தது என்பது தெரிகிறது. ஆகவே, நாம் பரஸ்பரம் ஐக்கியம் கொள்ள வேண்டும், பரஸ்பரம் உதவி செய்பவர்களாக இருக்க வேண்டும், வழக்கமாக கூடவேண்டும் என்பதற்காக மீண்டும் மீண்டும் சொல்லப்பட்ட கட்டளைகளையும், உற்சாகப்படுத்தலையும் காண்கிறோம். இரண்டு அல்லது மூன்று பேர் எங்கே ஆண்டவருடைய நாமத்தினால் கூடுகிறார்களோ, விசேஷமாக அவர்கள் மத்தியில் அவர் இருப்பார் என்றும், அவர்கள் சபைகூடி வருதலை விட்டுவிடக்கூடாது என்றும் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய ஆண்டவரின் நடத்தை, விசுவாச வீட்டாருக்கு செலுத்தவேண்டிய விசேஷ கவனத்திற்கு இசைவாக இருக்கிறது. ஏனெனில், ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாக ஆசரிக்க வேண்டிய பஸ்காவை (யாத்.12:1–12), கடைசி இராப் போஜனத்தை ஆண்டவர் தன்னுடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களோடு ஒரு தனி குடும்பமாக, அவர்களுடைய எந்த மாம்சீக உறவினர்களும் இல்லாமல், கூடினார். அவரோடு பேசவேண்டும் என்று அவருடைய தாயாரும், சகோதரர்களும் வெளியே நிற்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டபோது, அவர் கூறிய பதிலில் இதே கருத்தைக் காண்கிறோம். அவர் பிரதியுத்திரமாக, ''என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேராக நீட்டி, இதோ என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன்

எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும் தாயுமா யிருக்கிறான் '' என்றார். (மத்.12:47–50)

இந்த திவ்விய விளக்கத்தைத் தொடர்ந்து, நம்முடைய அன்பும், ஆர்வங்களும், விசேஷமாக புது சிருஷ்டியில், சரீரமான சபையில் உள்ள உடன் அங்கங்களுக்கு நேராக ஈர்க்கப்படுவதை நாம் காண எதிர்பார்க்க வேண்டும். ஆனாலும், புது சிருஷ்டியில் இருபாலாருக்கும் இடையில் உள்ள முறையான நடத்தையை எவ்விதத்திலும் இது இரத்து செய்வதாக எண்ணப்படக்கூடாது. இல்லையென்றால், அவிசுவாசியான புருஷனோ அல்லது மனைவியோ உதாசீனப்படுத்தப்பட்டு, புதிதான மனம் உள்ளவர்களுக்கே ஐக்கியம் கொடுக்கப்படலாம் என்றும் எண்ணப்படக் கூடாது. அதற்கு மாறாக, ஒவ்வொருவரும் தன்னுடைய துணைக்கு சரியான சௌகரியமும், சிலாக்கியமும், அல்லது தோழமையும் கொடுக்கப்படும்படி பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை உள்ளது. ஆனாலும், இது கீழே கொடுக்கப்பட்டுள்ள திவ்விய கட்டளைக்கு ஏற்றவாறு இருக்கும்படி, சரணடைய வேண்டும் என்றோ அல்லது அடக்கு முறைக்கோ பணிய வேண்டும் என்றோ பொருள் படாது. ''சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்.'' (எபி.10:23)

எல்லாரையும் கனம் பண்ணுங்கள்

''சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும், உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளா யிருங்கள். எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூறுங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.'' ''ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டுமோ அவனுக்கு வரியையும், எவனுக்கு தீர்வையைச் செலுத்த வேண்டுமோ அவனுக்கு தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்கு பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம் பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூறுகிற

கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்.'' (1பேது.2:16,17; ரோம.13:7,8)

மாம்சத்திற்குரிய போட்டி மனப்பான்மையிலிருந்தும், குறிக்கோளிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்டு, தயாளமும், கிருபையுமுள்ள உத்வேகத்தையும் பெற்ற புது சிருஷ்டி, மற்றவர்களின் இருதயத்தின் நல்ல குணங்களை பாராட்டுவதை தடைபண்ணக்கூடிய பேராசையுடன் கூடிய போட்டி மனப்பான்மைக்கோ, பெருமைக்கோ இடம் கொடுக்கக் கூடாது; உலகப்பிரகாரமான தன்னுடைய சொந்த உரிமைகளும் ஆசைகளும், ஆவிக்குரியவை களுக்காகவும், பரலோகத்துக்குரியவைகளுக்காகவும் துறக்கப் பட்டிருக்கும்போது, மற்றவர்களுடைய உலகத்திற்குரிய உரிமைகளையும், ஆசைகளையும், முழுவதுமாக, முழு மனதுடன் அங்கீகரிகரிப்பதிலும், ஏற்றுக்கொள்வதிலும் சந்தோஷம் அடைய வேண்டும். இப்படிப் பட்டவர்கள் பரலோகத்தின் கட்டளைகளுக்கும், தேவைகளுக்கும் எதிர்மாறாக இல்லாத பட்சத்தில், இயற்கையாகவே, அவர்கள் இந்த உலகத்தின் பெரிதானவைகளை அறிவதில் மிகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாகவும், சட்டங்களுக்கும், சட்டத்தின் தேவைகளுக்கும் மிகவும் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருப்பார்கள். நம்முடைய காலத்தின் ஆட்சியாளர்களில் ஒரு சிலரே ஒரு உன்னதமான சிருஷ்டிகரை ஏற்றுக்கொள்ளுவதிலும், அவருடைய விசுவாச பிரமாணத்திலும் குற்றம் கண்டு பிடிப்பார்கள். ஆகவே, புது சிருஷ்டி போராட்டம் செய்கிறவர்களாக, சச்சரவு செய்கிறவர்களாக, குற்றம் கண்டுபிடிக்கிறவர் களாக இல்லாமல், மிக அதிகமாக சட்டத்திற்கு கீழ்ப்படிகிறவர்களாக காணப்பட வேண்டும். மற்றவர்களைக் காட்டிலும் குற்றம் கண்டு பிடிப்பதற்கு இடம் இருக்கிறது என்பதை அவர்கள் தெளிவாக காண்பது உண்மைதான். சுயநலமான சட்டத்தின் அடிப்படையில் தற்போதுள்ள ஒழுங்குமுறைகள் அனைத்திலும் பூரணமற்ற நிலையை அவர்கள் காண்கிறார்கள். ஆனாலும், திவ்விய வசனத்தினால் பிரகாசமாக்கப்பட்ட அவர்களுடைய அறிவின் கண்களினால், மனுஷீக போராட்டமும், புரட்சியும், தேவையான மாற்றத்தைக் கொண்டுவர பலமற்றதாக இருப்பதை காண்கிறார்கள்; மனுக்குலம் செய்து முடிக்கக் கூடியதைக் காட்டிலும் பத்து மடங்கு சிறப்பானது என்று எண்ணக்கூடிய காரியங்கள் கூட ஆண்டவர் நமக்கு சுட்டிக்காட்டுகின்ற பூரணத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளது. தேவனுடைய சித்தம் பரலோகத்தில்

செய்யப்படுகிறது போல பூமியிலேயும் பூலோகத்திலும் நிறைவேறுகிற அப்படிப்பட்ட ஒரு நிலைமையை அவர் தன்னுடைய இராஜ்யபாரத்தில், ஏற்ற காலத்தில் கைக்கூடி வரப்பண்ணுவார் என்று நாம் நம்பும்படியாக அவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

மனுஷீக முயற்சியின் இயலாத்தன்மையை உணருகிற புது சிருஷ்டிக்கு தற்போதைய நிலைமைகளைக் குறித்து ஒரு தெளிந்த புத்தியின் ஆவி உண்டு; மற்றவர்களிடத்தில் இது கிடையாது; அவர்கள் அவனைக் காட்டிலும் குறைவாக அந்த இயலாத்தன்மையை உணருகிறார்கள். சட்டம் சீர்குலைப்பு, அராஜகம் போன்றவைகளைக் காட்டிலும், மிக மோசமான மனுஷீக ஆட்சியும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்படி தன்னிச்சையாக அதிகமான பலத்தையும், அதிகாரத்தையும், தவறான முறையில் பயன்படுத்துவதும் மேலானது என்று காண்கிறார்கள். யேகோவா தேவன் இந்த விஷயங்களில் நாட்டம் உள்ளவர் என்பதையும், விரும்புகின்ற பலன்களைக் கொண்டுவருவதற்கு அவருடைய காலமும், வழியும்தான் ஞானமுள்ளதாகவும், தகுதியான தாகவும் இருக்கிறது என்பதையும் அவன் கற்றறிந்துள்ளான். ஆகவே, புது சிருஷ்டி பொறுமையாகவும், உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறான். அப்போஸ்தலர் யாக்கோபு கூறுகிறபடி: ''நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.'' (யாக்.5:8) அவருடைய ராஜ்யம் மனுக்குலம் முழுவதுக்கும் நீதியையும் ஆசீர்வாதத்தையும் சீக்கிரமாக கொண்டு வரும்.

புது சிருஷ்டி ஆண்டவருடைய செய்தியையும் கேட்கிறான். ''பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சல் அடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமைகொள்ளாதே. அவர்கள் புல்லைப் போல் சீக்கிரமாக அறுப்புண்டு, பசும்பூண்டைப் போல வாடிப்போவார்கள்.'' (சங்.37:1,2) ஆகவே, மற்றவர்கள் அரசியலின் பல்வேறு அம்சங்களைக் குறித்தும், நல்ல அரசாட்சி, செல்வம் போன்றவைகளைக் குறித்தும் விவாதிப்பது முக்கியமானது என்று நினைக்கும்போது, அதற்கு எதிர்மாறாக அவன், தேவன் இதை முன்கூட்டியே அறிந்திருக்கிறார், தற்போதுள்ள சுயநல ஸ்தாபனங்களுக்கு எதிராக தீர்மானம் ஏற்கனவே எடுக்கப்பட்டாயிற்று என்று உணருகிறான். ''மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் – நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறைய காணப்பட்டாய்.''

(தானி.5: 25–28) இந்த விஷயத்தைப் பற்றிய தேவனுடைய தீர்ப்பு வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி மிகவும் சரியானது, மாற்றமுடியாதது என்பதை உணருகிறான். அவருடைய திவ்விய சித்தத்தின்படியும், கிருபையுள்ள வாக்குத்தத்தங்களின்படியும் ஆண்டவர் மற்ற விஷயங்களைக் குறித்த மாற்றங்களை கொண்டு வரும்படி அவன் பொறுமையாக காத்திருக்கிறான். இதன் அர்த்தம் உலகத்தில் மாபெரும் உபத்திரவம் என்பதை அவன் கண்டாலும், புது சிருஷ்டி திவ்விய வாக்குத்தத்தங்களில் இளைப்பாறுகிறான். மேலும், ''நாளைய தினத்தின் திறவுகோல்களை கிறிஸ்துவின் கரத்தில் விட்டுவிடுகிறான்.'' அவனுடைய வார்த்தைகளோ, அல்லது சிந்தனைகளோ, அல்லது செயல்களோ இறுதியான விளைவுகளை மாற்றாது என்பதை அவன் உணருகிறான். அவனுடைய இருதயம் தேவனுடைய ஞானத்திலும், வல்லமையிலும் உள்ள விசுவாசத்தினால் இளைப்பாறுகிறது. வரவிருக்கிற உபத்திரவ காலத்தில் புது சிருஷ்டியின் நிலைமையைப் பற்றி பேசும்போது, தீர்க்கதரிசி பொருத்தமாக கூறியிருக்கிறார். ''அது (சீயோன்) அசையாது.'' (சங்.46:5) அதனுடைய நம்பிக்கையும் விசுவாசமும் நன்றாக அஸ்திபாரப்படுத்தப்பட்டுள்ளது; அறியாமையினாலும் தவறான நம்பிக்கையினாலும் அல்ல, ஆனால் தேவனுடைய ஜீவனுள்ள, நிலையான வசனத்தில் அஸ்திபாரப்படுத்தப்பட்டுள்ளது.

புது சிருஷ்டிக்கு வருகிற உபத்திரவத்தைக் குறித்து முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றோ அல்லது உலகத்திற்கு எச்சரிக்கை அல்லது விழிப்புணர்ச்சியை உண்டு பண்ண முயற்சிப்பதற்கோ அவசியம் இருப்பதாக தோன்றவில்லை. முதலாவதாக, ஆண்டவர் விசேஷமாக சொல்லியிருப்பதை நினைவு கூறுகிறான்: ''துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்.'' (தானி.12:10) அற்பமான, வேதனைப்படுகிற சிருஷ்டி, தன்னால் தவிர்க்கமுடியாத, வரவிருக்கிற உபத்திரவங்களை எதிர்ப்பார்த்திராமல் அதற்கு அனுதினமும் கொடுக்கப்பட்டதே சுமப்பதற்கு போதுமானதாக இருக்கிறது என்பதையும் கூட உணருகிறான். ''அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.'' காதுள்ளவர்கள் கேட்க ஆயத்தமாய் இருக்கிறார்கள் என்பதை அறியும்போது, ''தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் அறிவிக்க தவறமாட்டார்கள்.'' ஆண்டவரைப்பற்றியும், அவருடைய வசனத்தைப்பற்றியும் அக்கரை காட்டாதவர்களின் கோபத்தைக் கிளராதபடிக்கும், தங்களுடைய

பெலனை வீணாக்காதபடிக்கும் ஞானத்துடனும், சரியான முறையிலும் நடந்து கொள்ளுவார்கள். அவர்கள் தங்கள் முத்துக்களை பன்றிக்கு முன் போடமாட்டார்கள். ஆனால், பரத்திலிருந்து வருகிற ஞானம் அவர்களுக்குள்ளே இருக்கும். அது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் இருக்கிறது. (யாக்.3:17)

மனுஷருக்கு மரியாதை செலுத்துதல், அவர்களுடைய குணத்திற்காக அல்லது உத்தியோகத்திறகாக அவர்களை மதித்தல், சட்டங்களுக்கு கீழ்ப்படிதல் ஆகியவை உலக அரசாங்க காரியங்களில் பங்கு பெறுவது என்று அர்த்தமாகாது. எல்லா மனிதரும் வாக்கு போட வேண்டும் என்று ஒரு சட்டம் வர இருக்கிறது. அந்த சட்டம் அமுல்படுத்தப்படும் போது, புது சிருஷ்டிகள் அதற்குட்படவேண்டும், கீழ்ப்படிய வேண்டும், அதுவும் முறுமுறுப்பில்லாமல் கீழ்ப்படிய வேண்டும். இதை அவர்கள் செயல்படுத்தும்போது, சிறந்த வேட்பாளர் என்பதை நன்று தீர்மானித்து அவர்களுக்கு வாக்குப் போட வேண்டும். அவர்கள்மேல் எந்த வற்புறுத்தலும் இல்லாதிருக்கும்போது, அரசியலைப் பொறுத்த வரையில் அவர்கள் மிக அதிக நடுநிலைமை வகிக்க வேண்டும், வாக்கு போடுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அதற்கான காரணங்களை கீழே கொடுத்துள்ளோம்.

1) நம்முடைய நிலையின்படி, யோசனையின்படி, அந்த ஸ்தானத்திற்கு மிக தகுதியான நபரை நம்மால் கண்டு பிடிக்க இயலாது.

2) தேர்தலில், எப்படியும் நம்முடைய வாக்குகள் தேர்தல் முடிவுகளில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தப்போவதில்லை.

3) புது சிருஷ்டியின் அங்கங்கள், அரசியலில், அதன் பல்வேறு வாக்குவாதங்களில் ஈடுபடுகிறவர்கள், அதனால் அவர்களுடைய நேரம் செலவிடப்படுவதை உணருவது மாத்திரமல்ல, அவர்களுடைய சக்திகளும், பணமும் செலவிடப்படுவதைக் காண்கிறார்கள். அவைகள் எல்லாம் ஆண்டவருக்கும், பரலோகக் காரியங்களுக்கும், மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கவும் அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. அது மாத்திரமல்ல, மேலானவைகளைக்குறித்து அவர்களுடைய தனிப்பட்ட தியானங்களுக்கு இடையூறு பண்ணும் அளவுக்கு, அவர்களுடைய மனங்கள் இந்த அரசியல் காரியங்களோடு

நிரப்பட்டிருக்கும்; அது அவர்கள் ஆண்டவரோடு ஆவியில் ஐக்கியம் கொள்ளுவதற்கும், நெருங்கிய தொடர்புகொள்ளுவதற்கும் இடையூறாக இருக்கும்.

4) ஒரு மனிதனுக்கோ, அல்லது ஒரு கட்சிக்கோ வாக்கு போடுகிறவர்கள் தேர்தலின் முடிவுகளை ஆதரிக்க கடமைப் பட்டுள்ளார்கள், தேவைப்பட்டால் ஒரு துப்பாக்கியை அல்லது ஒரு வாளை உபயோகித்துக்கூட. ஒவ்வொரு குடிமகனும் சட்டத்தின்படி, தான் வசிக்கிற இடத்தில் உள்ள சட்டங்களையும், ஸ்தாபனங்களையும் காப்பாற்ற வாளையும் துப்பாக்கியையும் எடுக்க அழைக்கப்படலாம் என்பது உண்மையாயிருக்கிறது. இப்படிப் பட்ட வேளையில், தேர்தலில் ஒருவன் அதிகமாக பங்கெடுக்கும்போது, ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பொதுவாக செல்லும் வழிக்கு அவன் அதிகமாக ஒரு தார்மீகப்பொறுப்பையும், சமுதாய கடமையையும் பெறுகிறான். ஆகவே, நாம் விரும்புகிற நிலையானது, ஆண்டவருக்கு மிக மரியாதையைக் குரியதாகவும், நமக்கும், சமுதாயத்திற்கும் மரியாதைக்குரியதாகவும் இருக்கிறது. அதாவது, வேதாகமம் சொல்லுகிறபடி நாம் அந்நியரும் பரதேசிகளுமாக இருக்கிறோம். (சங்.39:12; 1பேது. 2:11) அந்நியரும், பரதேசிகளும் சட்டத்திற்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும், அதுபோலத்தான் நாமும் இருக்கிறோம்; அந்நியரும், பரதேசிகளும் சட்டப்படி வரி செலுத்த வேண்டும், அதுபோலத்தான் நாமும் இருக்கிறோம். அந்நியரும், பரதேசிகளும் சட்டங்களுக்குக் கீழாக பாதுகாப்பைத் தேடலாம், அதுபோலத்தான் நாமும் இருக்கிறோம்; அந்நியரும், பரதேசிகளும் தங்களுடைய இராஜாவுக்கே எதிராக சண்டை போடவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டதாக எண்ணமாட்டார்கள், அவர்கள் அங்கீகரித்த விசுவாசம் தொடக்கநிலையானது; நாமும் கூட கூடுமானவரை அதே நிலையில் இருக்க விரும்புவோம், ஏனென்றால், நாம் ''இருளின் அந்தகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தமது அன்பின் குமாரனுடைய (ஆரம்ப நிலையில் இருக்கும்) இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளோம்.'' (கொலோ.1:13)

நாம் மகா ராஜாவின் பிரஜைகளில்லையா? இந்த உலகத்தின் எல்லா இராஜ்யங்களும், கிட்டத்தட்ட இந்த உலகத்தின் பிரபுவோடும், அவனுடைய சுயநலம் என்னும் பிரமாணத்தோடும் இணைந்திருக்க வில்லையா? ஆகவே, நாம் அந்நியரும், யாத்திரிகருமாக இல்லையா?

மேலும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் அயல்நாட்டவரும் பரதேசிகளுமா யில்லையா? நாம் ஒவ்வொரு நல்ல சட்டத்தையும், உலகப்பிரகாரமான சட்டங்களின் வேலையாட்களையும், நேசிப்பதும் ஏற்றுக்கொள்ளுவதும் மிகவும் முக்கியமானது. புது சிருஷ்டியில் பெரும்பான்மையோர் மிக உயர்வான, தற்கால முறைப்படியான அரசாங்கத்தின் கீழ் வசிக்கிறார்கள் என்பதில் மகிழ்ச்சி அடையவேண்டும். அவர்கள் இதை ஒரு திவ்விய சௌகரியம் என்றும், ஆசீர்வாதம் என்றும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆகவே நாம் நம்முடைய சொந்த நாட்டையோ அல்லது அதனுடைய ஆட்சியாளர்களையோ, குறைகூறமாட்டோம். ஆனால், இவைகளுக்காக இவ்வுலகத்திற்குரிய ஆயுதங்களோடு நாம் யுத்தம்பண்ண வேண்டும் என்றோ, அல்லது அவர்களுக்காக நாம் வாக்குப் போட்டு நம்முடைய பொறுப்பை அதிகரிக்க வேண்டும் என்றோ அது பொருள்படாது.

யுத்தத்தை எதிர்பார்ப்பவர்களை, அதில் பங்கெடுப்பதிலிருந்து அரசாங்கம் எப்பொழுதுமே விலக்குவதில்லை, ஆனாலும் கடந்த காலத்தில் யுத்தம் அநீதியானது என்று நம்மைப் போன்று நம்புகிறவர்களுக்கு ஒரு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதாவது, ''நண்பர்களுக்கு'' அதாவது ''நண்பர் கழக உறுப்பினர்களுக்கு'' விசேஷமான தயாள சட்டங்களின் கீழ் இராணுவ பணியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், நாம் வாக்கு போடுகிறமோ இல்லையோ, நாம் இராணுவ பணியில் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். மேலும், தேவைப்பட்டால், அதிகாரத்திற்கு கீழ்ப்படியுமாறு கேட்கப்படலாம்; ஆண்டவரின் விவேகம் இராணுவத்தில் சேர்வதை அனுமதித்திருக்கிறது என்றும், அவர் நம்முடைய அல்லது மற்றவர்களுடைய நன்மைக்காக அதை விட்டுக் கொடுத்தார் என்றும் எண்ணலாம். இப்படிப்பட்ட வேளையில் தகுதியுள்ள அதிகாரிகளிடம் ஓர் அளவு விபரமாக பேசி, மருத்துவ அல்லது ஆஸ்பத்திரி பகுதிக்கு மாற்றும்படி கேட்பதும் தவறு என்று எண்ணமாட்டோம். அந்த இடத்தில் நம்முடைய பணியில் நம்முடைய மனசாட்சி முழுமையாக உபயோகப்படுத்தப்பட முடியும். ஆனாலும், இராணுவத்தில் சேரவேண்டும், நம்முடைய துப்பாக்கிகளால் சுட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டாலும், ஒரு உடன் சிருஷ்டியை சுடுவதற்கு வற்புறுத்தப்பட்டோம் என்று நினைக்கக்கூடாது.

புது சிருஷ்டியும், மனமாற்றமும்

புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் நன்னெறி, நீதி, தூய்மை, நல்லொழுக்கம் என்பவைகளோடு இசைவாயிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அவன் இருயத்தில் தூய்மையாய் இருக்க வேண்டும் என்று வாஞ்சிக்க வேண்டும். இந்த தூய்மை வளரும்போது, நிச்சயமாகவே இது அவனை சரீரத்திலும், பழக்கவழக்கத்திலும் தூய்மையாக இருக்கும்படி வழிநடத்தும். இந்த தூய்மை, அதனுடைய வெளிப்புற ஆடையை மாத்திரம் இல்லாமல், அவனுடைய வாயையும் உள்ளடக்கியதாக இருக்கும். இருந்தாலும் வாய்க்குள் போடப் பட்டவைகள்தான் கேடு விளைவிக்கிறது என்று உலகம் தவறாக நினைப்பது போன்று இப்படிப்பட்டவர்கள் நினைக்காமல் அதற்குள்ளிருந்து வெளியே வருகின்ற வார்த்தைகள்தான் கேடு விளைவிக்கிறது என்று நினைப்பார்கள். இருதயத்தில் உள்ள தூய்மை, அவனுடைய உதடுகளின் தூய்மைக்கும், சத்தியத்திற்கும் நேராக வழிநடத்தும்; மேலும், ஆண்டவருக்கு சொந்தமான சரீரத்திலும், ஆவியிலும் அவன் தேவனை மகிமைப்படுத்தும்படி, எதைச் சாப்பிட வேண்டும், எதை பானம் பண்ண வேண்டும், எப்படி ஆடை அணிய வேண்டும் என்பதைப்பற்றி அவன் கவனமாக இருக்க அது வழிநடத்தும். தேவனுடைய வசனத்தில் காணப்படாத சங்கிலியையும், அடிமைத் தனத்தையும் மற்றவர்கள்மேல் போடுவது நமக்குரியதல்ல. புதுசிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும், தன்னுடைய அர்ப்பணிப்பு தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும் தொடுகிறது என்பதை கூடுமானவரை முழுவதுமாக உணரவேண்டும். ஆகவே, அவன் பெருந்தீனிக்கு, அல்லது குடிக்கு அல்லது வேறு எந்தவிதமான கெட்ட பழக்கத்திற்கும் உட்பட்டிருந்தால், இவைகள் எல்லாவற்றிலும் அவன் தேவனை மகிமைப்படுத்திக் கொண்டிருக்கிறானா என்பதையும், அவனுடைய நடத்தை தன்னுடைய உடன் மனிதருக்கு முன்பாக வசீகரிக்கக் கூடியதாக இருக்கிறதா என்பதையும் அவன் ஜாக்கிரதையுடனும், ஜெபத்துடனும் கவனிக்க வேண்டியது அவனுடைய பொறுப்பாகும். எவ்விதத்திலாவது தங்களுடைய மனத்தளவில், ஒழுக்கம், ஆவிக்குரிய வேலைகளை நல்ல முறையில் அப்பியாசப் படுத்துவதில், இடையூறு உண்டுபண்ணுகிற தங்களுடைய புசிப்பும்,

குடிப்பும் தேவனை மகிமைப்படுத்தும் என்று எந்த ஒரு புது சிருஷ்டியும் எண்ணமாட்டான் என்று நாங்கள் கூறுகிறோம். நமது பலமும், தாலந்துகளும், திறமைகளும், (ஏதேனில்) நாம் வீழ்ந்து போனதினால் வருத்தப்படத்தக்க விதத்தில் பெலகீனப்பட்டுள்ளன. ஆகவே, அவைகள் அழிக்கப்படுவதற்கு பதில் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதை பெரும்பான்மையோர் நிச்சயமாகவே அறிவார்கள்.

விலையுயர்ந்த ஆடைகளை அணிதல்

தன்னுடைய ஜீவனையும், தனக்குண்டான எல்லாவற்றையும், ஆண்டவருடைய ஊழியத்திற்கென அர்ப்பணித்திருக்கிற ஒரு உண்மையுள்ள, விசுவாசமுள்ள, கனத்துக்குரிய தேவ பிள்ளைக்கு மிக சிறந்தது என்று எதுவுமே கிடையாது என்று நாங்கள் ஆணித்தரமாக கூறுகிறோம். சந்தேகத்திற்கு இடம் இல்லாமல், பரலோக தேவதூதர்களும், பரலோகத்தின் ஒழுங்குகள் எல்லாம், அவைகளின் தோற்றத்தில் உன்னதமானதாகவும், மகிமை நிறைந்ததாயும் உள்ளன. ஆகவே, மகிமை என்பது திவ்விய மனதிற்கும், தேவனுடைய ஜனங்களைக் குறித்த சித்தத்திற்கும் அடையாளமாக இருக்கிறது என்று நாம் எண்ணலாம். இந்த விஷயத்தை இந்த கோணத்திலிருந்து பார்க்கும் போது, புது சிருஷ்டியின் அங்கங்கள் அனைத்தும் தங்கள் அழிவுக்குரிய சரீரங்களை தங்கத்தினாலும், ஆபரணங்களினாலும், பகட்டான ஆடைகளினாலும் ஆடம்பரமாக, மிக தாராளமாக அலங்கரித்துக் கொள்ளலாம் என்று முதலில் சொல்லத் தோன்றும்; ஆனால், அப்படி தீர்மானிப்பதற்கு முன்னால் நாம் கேள்வியின் மறுபக்கத்தைப் பார்க்கலாம். ஏன் புது சிருஷ்டிகள் தங்களுடைய அழிவுக்குரிய சரீரங்களை ஆடம்பரமாக, ஊதாரித்தனமாக அலங்கரித்துக் கொள்ளக் கூடாது என்பதற்குரிய காரணங்களைப் பார்க்கலாம்.

1) ஆடம்பரமாக தனிப்பட்ட முறையில் அலங்காரம் செய்வது இயல்பாகவே கிட்டத்தட்ட பெருமைக்கு வழி நடத்துகிறது. பகட்டாக காண்பித்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நோக்கம், மற்றவர்கள் முன்பாக நன்றாக தோற்றமளிக்க வேண்டும் என்ற ஒரு நோக்கம், நம்முடைய விழுந்து போன மாம்சத்திற்கு ஒரு விசித்திரமான சோதனை என்பதை நாம் எல்லோரும் அறிந்து இருக்கிறோம். மேலும், சாந்தத்தின்

ஆவியையும், தாழ்மையின் ஆவியையும் வளர்ப்பதற்கு அனுகூலமற்ற நிலைமையாகும். ஆகவே பெருமை உண்டாக்கும் எதுவும், தாழ்மை குணத்தை வளர்ப்பதை தடை செய்கிற எதுவும் புது சிருஷ்டியின் நலன்களுக்கு எதிர்மாறானதாகும்.

2) மனுக்குல குடும்பத்தில் பெரும்பாலோர், வெளிப்புற ஆடம்பர அலங்காரம் செய்யமுடியாதபடி தரித்திரம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, தங்கள் ஜென்ம சுபாவத்தினால் அலட்சியம் பண்ணப்படுபவர்கள், பணக்காரர்களை பொறாமையோடு பார்ப்பது நிச்சயம், அதுவும் ஆடம்பரமாக செல்வத்தை விளம்பரப்படுத்து பவர்களை பொறாமையோடு பார்ப்பது நிச்சயம். ஆகவே, அன்பின் ஆவி புது சிருஷ்டியை மற்றவர்களுடைய நிலைமைகளையும், உணர்வுகளையும் கவனிக்கும்படி உணர்த்தும்; அது அவர்களை பொறாமை, இச்சை போன்றவைகளுக்கு தூண்டிவிடாது; இல்லையென்றாலும், ஒப்பிட்டுப் பார்க்கையில் தங்களுடைய வாழ்க்கை அவர்களுக்கு கசப்பாக இருக்கும்படிச் செய்யாது.

3) புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும், தனக்கு உண்டான எல்லாவற்றையும், ஆண்டவருக்கென்றும், அவருடைய ஊழியத்திற் கென்றும் அர்ப்பணம் செய்துள்ளார்கள். மேலும், தனக்கு கிடைக்கும் உலகப்பொருட்களை வீணாக்காமல் உபயோகிக்கவும், நம்முடைய மீட்பரும், தலையுமாகிய, ஆண்டவரின் முன்மாதிரியின்படி உபயோகிக்கவும் அர்ப்பணம் செய்துள்ளான். நமக்கு முன்மாதிரியாக வைக்கப்பட்டது பலிசெலுத்துவதே யாகும். பலியாக செலுத்தப்பட வேண்டியது நம்முடைய செல்வாக்கும், நேரமும் மாத்திரமல்ல, நமது பணமும், வசதிகள் போன்றவைகளுமாகும். ''அவர் ஐசுவரியமுள்ள வராயிருந்தும் நம் நிமித்திம் தரித்திரரானாரே.'' ஆகவே, புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும், தன்னுடைய உடன்படிக்கையை உணர்ந்து, அதன் ஜீவிய நிலைக்கு தக்கதாக, ஆடம்பரமாக அணியாமல் தன்னுடைய உக்கிராணத்துவத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பணத்தை நல்ல முறையில் பிரயோஜனமுள்ளபடி உபயோகிக்க விரும்புவான். அவன் ஆடம்பரமாக இருப்பது அவனக்கு தீமை விளைவிப்பது மாத்திரமன்றி மற்றவர்களையும் தீமைசெய்யத் தூண்டும். தன்னால் இயன்றவரை ஒவ்வொரு ரூபாயையும் ஆண்டவருடைய ஊழியத்தில் நல்லமுறையில் செலவிட விரும்புவான்.

இந்த இடத்தில் கீழ்க்கண்டவற்றிற்கு உங்கள் கவனத்தை திருப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஆபரணங்களுக்கு, அல்லது அழகுள்ள ஆடம்பரமான ஆடைகளுக்கு பணத்தை செலவிடுவதை, அவைகளை நமது சரீரங்களில் அணிவதை நாம் செய்திருக்கிற பிரதிஷ்டை அனுமதிக்காது. வீட்டின் மேல் ஆடம்பரமாக செலவிடுவது, பங்குகளில், பத்திரங்களில், வீடு, நிலம் போன்றவைகளில் பணத்தை உபயோகிப்பது விதிமுறைகளின்படி அது உண்மையான உக்கிராணத்துவம் ஆகாது. பணத்தை எதற்காக நாம் செலவிட முடியுமோ அதற்கு அது மதிப்புள்ளதாக இருக்கிறது. ஐசுவரியம் உடைய, புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் உக்கிராணத்துவத்தின் பொறுப்புகளை கவனமாக கவனிக்க வேண்டும்; அவன் திவ்விய சித்தத்தைப் பற்றி எடுத்துள்ள தீர்மானத்தின்படி அதை உபயோகப்படுத்துவதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். விழுந்துபோன சுபாவத்தின் எல்லா தன்மைகளும் சுய நலத்தையொட்டியே இருக்கின்றன. ஆகவே, அவன் பந்தயப் பொருளை பெற வேண்டுமென்றால், புதிதாக்கப்பட்ட மனம் இந்த மாம்சத்தின் குணத்தோடு யுத்தம் செய்து அதை மேற் கொள்ள வேண்டும்.

உயர்ந்த எண்ணங்கள் உள்ள ஒரு உலக மனிதன், தான் ஒரு கிறிஸ்தவன் அல்ல என்றும், தனக்கென்று ஒரு மதம் இருக்குமானல், தான் ஒரு புத்தமதத்தினன் என்றும் அறிக்கையிட்டு, ‘‘எந்த மனிதனும் ஜசுவரியவானாக மரிப்பது அவமானம்’’ என்ற பழமொழியை வைக்கிறானென்றால், புது சிருஷ்டியின் அங்கங்கள் இன்னும் எவ்வளவு அதிகமாக உணரவேண்டும்! தங்களுக்குண்டான எல்லாவற்றையும் ஆண்டவருக்கென்று அர்ப்பணம் செய்தபின்னர், அர்ப்பணம் செய்த பணத்தை தங்களுக்கென ஆடம்பரமாக செலவழித்தார்கள் என்றால், அல்லது இந்த தாலந்தை நல்ல முறையில் உபயோகிக்க வாழ்க்கையில் அதிகமான தருணங்களை கண்டும் அதை பதுக்கி வைப்பார்கள் என்றால் இன்னும் அவர்கள் எவ்வளவு அதிகமாக உணரவேண்டும்! அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறபடி முழு சிருஷ்டியும் ஏகமாய் தவித்து வேதனைப்படுகிறது. மேலும், நம்முடைய ஆண்டவர் கூறியபடி தரித்திரர் எப்பொழுதும் நம்மிடத்தில் இருக்கிறார்கள். நிச்சயமாகவே, நல்ல தூண்டுதல் உள்ள அனைவரும் பரோபகாரமாக இருப்பதற்கு, அதாவது உலகப்பிரகாரமான முறையில் இம்மைக்குரிய காரியங்களில் உதவி செய்வதற்கு, அனேக சந்தர்ப்பங்கள் இருப்பதை காண்பார்கள்.

தங்களுடைய உக்கிராணத்துவத்தை ஞானமான முறையில் உபயோகப்படுத்தும்படிக்கும், தங்களுடைய சொந்த விஷயங்களில் நிதானத்துடன் நடந்து ஆண்டவர் அவர்களுக்கென்று இலவசமாய் வைத்திருக்கிற ஆவிக்குரியப் பொக்கிஷங்களை உபயோகிக்கும்படிக்கும் தங்களை சுற்றியுள்ள தருணங்களை பார்த்து செயல்பட வேண்டியது அவசியம் என்பதை புது சிருஷ்டிகள் எவ்வளவு அதிகமாக உணரவேண்டும். ஒருவேளை, இப்படிப்பட்ட வழியினால்கூட கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தையும், பரத்திலிருந்து வருகிற மன்னாவையும் மற்றவர்களுக்கு எடுத்து செல்ல முற்படலாம்; இந்த உக்கிராணத்துவத்தின் மூலம் அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்தில் நம்மை வரவழைத்தவருடைய துதிகளை அறிவிக்கும்படி அதிகமாக வல்லமையுடன் வெளிப்படுத்தலாம், அந்த வெளிச்சம் இன்னும் அதிகமாக பிரகாசிக்கச் செய்யலாம். இப்படியாக, அவருக்கு ஊழியம் செய்யும்படியாக அவருடைய ஜனங்களுக்கு தக்க தருணம் அளிப்பது நிச்சயமாகவே முறையானது; உக்கிராணக்காரர்களாக தங்களுடைய பயபக்தியையும், விசுவாசத்தையும் காட்டுவதற்கும், அர்ப்பணம் செய்து கொண்ட தன்னுடையவர்கள், தங்களை தாங்களே வெறுத்து, தங்களுடைய சிலுவையை எடுத்து, தேவன் நமக்கு உதாரணமாக அனுப்பியவரை பின்பற்ற தொடர்ந்து வாஞ்சையுடன் இருக்கும்படி தருணம் அளிக்கிறார்.

எவரும் தங்களை பிச்சைகாரர்களாக்கி, தனங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆண்டவருடைய ஊழியத்திற்கென்று கொடுத்துவிட்டு, தாங்கள் மற்றவர்களின் இரக்கத்தின் மேல் சார்ந்து இருக்க வேண்டுமென்றோ, எதிர்காலத்தில் பலன்கள் கிடைக்கும்படி விதையைக்கூட விதைக்காமல் இருக்கவேண்டுமென்றோ நாங்கள் வற்புறுத்தவில்லை. அப்படி இல்லாவிடினும் ஆண்டவருடைய ஜனங்கள் விசித்திரமாக, கஞ்னாக இருக்குமளவுக்கும் பலி செலுத்தப்பட வேண்டும் என்றும் கூறவில்லை. நாம் புரிந்துகொண்டபடி சரியான முறையில் ஆடையணிவது என்பது, சுத்தமானதாகவும், சுற்றியிருக்கிற நிலைமைக்கும், சூழ்நிலைகளுக்கும் பொறுத்தமானதாகவும், கண்ணை உறுத்தாமலும், மேலும், பணவசதிக்கு கூடியமானவரை ஏற்றபடியும் இருப்பதாகும். நிச்சயமாகவே புது சிருஷ்டி இந்த வழியில் உலகத்திற்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். தங்களுடைய சூழ்நிலைகள்

அனுமதிக்காத அளவுக்கு உடுத்தவோ, அல்லது தங்களுடைய சக்தியை மீறி உடுத்தவோ முயற்சிக்காதபடி அவர்கள் கவனமாக இருக்கவேண்டும். தங்களிடம் இல்லாத பணத்தை இருக்கிற மாதிரி காட்டாதிருக்க வேண்டும். மேலும், தங்களுடைய சம்பளம், வருமானம் போன்றவை களுக்கு ஏற்றார் போல தங்களால் இயன்றவரை உடுத்தவேண்டும், ஜீவிக்கவேண்டும் என்றும் இருக்கக்கூடாது. ஆண்டவருடைய ஜனங்கள் தங்களுக்குள்ள வசதிக்குள் ஜீவிக்க வேண்டும், இதனால் வாழ்க்கையின் சாதாரண தேவைகளுக்கு எதிர்காலத்தில் தேவையானவற்றை சேமித்து வைக்கலாம், மேலும், தேவைப்படுகிறவர்களுக்கு தேவனுக்குரிய குணாதிசயங்களான இரக்கத்தையும் தயாளத்தையும் காட்ட ஆயத்தமாக இருக்கவேண்டும்.

அத்தியாயம் 15

புது சிருஷ்டியின் சத்துருக்களும், அவனுக்கு வருகிற தாக்குதல்களும்

''பழைய மனிதன்'' – புது சிருஷ்டிக்கு உலகம் ஒரு சத்துரு – பெரிய சத்துரு – ஆதியிலிருந்து அவன் ஒரு பொய்யனும், கொலை பாதகனுமாயிருக்கிறான் – பொல்லாங்கில் சாத்தானின் கூட்டாளிகள் – பிசாசுகளின் கூட்டங்கள் – சாத்தானின் முதல் பொய் எப்படி நிலைநிறுத்தப்பட்டது – கிறிஸ்தவ விஞ்ஞானமும், பிரம்ம ஞானமும் – ''நாம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் மாத்திரம் போராடவில்லை ''– பொல்லாங்கான ஊழியம் – சத்துருவின் தாக்குதல்கள்–''விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்'' – ''சாத்தானை சாத்தானே துரத்தினால்'' அவனுடைய இராஜ்யம் நலிவுறும் – நீதியை போற்றுங்கள் – அக்கிரமத்தை வெறுத்துத்தள்ளுங்கள் – மாற்கு 16:9–20 – பேர் கிறிஸ்தவ சபை புது சிருஷ்டிக்கு ஒரு சத்துரு–தேவனுடைய சர்வாயுதவர்க்கம்.

புதுசிருஷ்டியின் சத்துருக்களில் முதன்மையானது, ''பழைய மனிதனாகும்,'' அதாவது பழைய சித்தமாகும். பொதுவாக இந்த விஷயத்தைக்குறித்து உண்டாகிற தவறை நாம் தவிர்ப்போம். புது சிருஷ்டிக்கு இரண்டு மனங்கள், இரண்டு சித்தங்கள் உண்டு என்று நினைக்க வேண்டாம். ''இரு மனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.'' (யாக்.1:8) அது அவனுக்கு அதிருப்தியளிக்கிறதாகவும் ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப் படாததுமாயிருக்கிறது. புது சிருஷ்டி இருமனம் படைத்தவனல்ல. அவனுக்கு ஒரு மனம், ஒரு ஆவி, ஒரு நோக்கம், ஒரு சித்தமுண்டு. அதுதான் புதிய சித்தமாகும், கிறிஸ்துவின் ஆவியாகிய பரிசுத்த

ஆவியாகும். கிறிஸ்துவின் சிந்தையை பாதியளவு ஏற்றுக்கொண்டு, மீதியில் தன்னுடைய சித்தத்தை வைத்திருப்பதற்கு பதிலாக, அவன் தன்னுடைய பழைய சித்தத்தை ஆண்டவரிடம் முற்றிலுமாக அர்ப்பணம் செய்துவிட்டான்; அதன்பிறகு பழைய சித்தம் மரித்துவிட்டது, தன்னுடைய அலுவல்களை ஆட்சி செய்வதிலிருந்து அது ஒதுக்கிவைக்கப்பட்டுவிட்டது. இப்படியாக அவன் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டான். அதாவது தனக்கென்று சுய சித்தம் இல்லாமல், தலையாக இருக்கிறவரின் சித்தம் தன்னில் ஆட்சிசெய்யும்படி அனுமதிப்பதாகும். இப்படியாக அவன் கிறிஸ்து இயேசுவுக்குள் புதுசிருஷ்டியானான். ''பழையவைகள் ஒழிந்து போயின் எல்லாம் புதிதாயின.'' இப்படியான ஒரு அர்ப்பணத்தை செய்யாதவர்கள், ''தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்'' அனைவரும் இருக்கக்கூடிய ''விசுவாச வீட்டின்'' அங்கங்களாயிருந்தாலும்கூட, அவர்கள் கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கமாகவில்லை.

ஆனால் பழைய சித்தம் இப்படியாக முற்றிலுமாக, என்றுமே இராதபடி ஒழிக்கப்பட்டாலும், (ஆண்டவராலும், அவருடைய கருத்தின்படி பார்க்கிற அனைவராலும்) மரித்துவிட்டது என்று அறிவிக்கப் பட்டாலும், மாம்சமும் மரித்துவிட்டது என்று எண்ணப்பட்டாலும், அது பாவத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கிறது; வாக்குத்தத்தங்களும் உயிர்ப்பிக்கப்பட்டு புது சித்தத்தின் ஆளுகைக்குள்ளாக கொண்டு வரப்பட்டுள்ளது. (ரோம. 6:11; 8:11) எனினும் மாம்சமும், அதன் சித்தமும் மரிப்பது, மாம்சம் புதிய சித்தத்திற்கு ஊழியம் செய்ய உயிர்ப்பிக்கப்படுவது, ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும் பொன்னான பிரமாணத்தின் கீழ் ஊழியம் செய்வது ஆகிய இவைகள் எல்லாம் கருதப்படுகிற விஷயங்களாக மாத்திரம் இருக்கின்றன. இந்த மரித்த, உயிர்ப்பிக்கப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து நிலைநிறுத்தப்பட வேண்டும். பழைய சித்தத்தின் எந்தவித செயல்பாட்டுக்கும், அது உயிரடைவதற்கும், அது மாம்சத்தின் மேல் கொள்ளக்கூடிய சொல்வாக்குக்கும் எதிராக, புது சித்தம் பாதுகாக்கப்பட வேண்டும். புதிய சித்தம் அசிரத்தையாக இருந்து, அழிவுக்குரிய மாம்சத்தை உன்னதமானவைகளுக்கும், ஆவிக்குரிய விஷயங்களுக்கும் தொடர்ந்து உபயோகிக்காவிட்டால், வெகு சீக்கிரத்திலேயே மாம்சம் தலைதூக்கி, தன்னுடைய சொந்த உணர்வுகளையும், ஆசைகளையும் புதுப்பித்து புதிய மனதிற்கும், புது சிருஷ்டியின் நலன்களுக்கும் விரோதமாக கிரியை செய்ய

ஆரம்பிக்கும். ஆகவே, புது சிருஷ்டி எப்பொழுதுமே கலகம் ஏற்படாதபடி தொடர்ந்து கவனமுடன் இருக்க வேண்டும். மேலும், அப்போஸ்தலர் கூறுகிறபடி அதைக் கட்டுப்படுத்த வேண்டும், மரிக்க வைக்க வேண்டும்; பழைய சித்தத்தை அதன் ஆசை இச்சைகளோடு தொடர்ந்து அழிக்க வேண்டும்; மாம்சத்தின் ஆர்வங்களையும் ஆசைகளையும் மரணத்திற்குள்ளாக்க வேண்டும். அப்போஸ்தலர் தன்னைப்பற்றி கூறுகிறதாவது: ''மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்து கிறேன்.'' (1கொரி. 9:27)

வேத வசனம் கூறுகிறது: ''எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது.'' (எரே. 17:9) இருதயம் என்று அழைக்கப்படுகிற உறுப்பை அல்ல, வேத வசனம் கூறுகிறபடி அது ஜென்ம சுபாவங்களாகும். புது சிருஷ்டி ஒரு புதிய இருதயத்தைப் பெறுகிறான்; ஒரு புதிய சித்தத்தை, ஒரு புது சுபாவ நிலையை பெறுகிறான். இதில் தேவனும், அவருடைய நீதியும், சத்தியமும், திட்டமும், சித்தமும் முதலாவதாக இருக்கின்றன. மற்ற விஷயங்கள் எல்லாம் அவைகள் ஆண்டவரோடும், அவருடைய நீதியோடும் ஒத்திருக்கிற அளவுக்கு கனத்துக்குரிய, அன்புக்குரிய இடத்தில் உள்ளன. இந்த புது இருதயத்தை உடையவர்கள் அனைவருக்கும், புது சிருஷ்டியின் அங்கங்கள் அனைவரும் முதலாவதாகவும், நெருக்கமானவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே அப்போஸ்தலர் கூறுகிறபடி, சகோதரர்கள்மேல் உள்ள அன்பு, புது சிருஷ்டிகளாக ஆண்டவரோடு வைத்திருக்கிற உறவுக்கு நல்ல பரீட்சைகளில் ஒன்றாகும். ஆனால் இது ஏற்கனவே காட்டப்படுள்ளபடி, மற்றவர்களுக்குரிய கடமைகளை நியாயமாக உணர்வதற்கு இடையூறாக இருக்கக்கூடாது.

புது இருதயத்தையும் புது சுபாவத்தையும் உடைய புது சிருஷ்டி, பழைய சுபாவங்களையும், சுயநல குணத்தையும் உடைய பழைய இருதயமாகிய அதன் சத்துருக்களால், தொடர்ந்து தாக்கப்படுகிறது. புது சிருஷ்டி மற்றவர்களிடத்தில் கனிவுடனும், தயாளத்துடனும் இருக்க திவ்விய கட்டளையினால் கட்டப்பட்டிருக்கிறதைக் கண்டு, பழைய இருதயம், அநேக தடவைகளில் புது இருதயத்தின்மேல் வஞ்சகத்தை அப்பியாசப்படுத்துகிறது. அது இப்படியாகக் கூறுகிறது: இப்பொழுது நான் மரித்து விட்டேன் என்று எண்ணுகிறாய், நீ என்னை வெளியே

தள்ளிவிட்டாய், நான் இருதயத்தை பெறுத்தவரையில் மரித்துவிட்டேன், முன்பு இருந்த அதே இருதயமாக இப்போது இல்லை. ஆனால் நீ எனக்கு சிறிதளவு கனிவு காட்ட வேண்டும். நீ என்னை மிகவும் கடினமாக நடத்தக்கூடாது; நான் ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறேன் என்பதை நீ ஒத்துக்கொள்ள வேண்டும்; என்மேல் அதிகமான பாரத்தை சுமத்தக்கூடாது; அது நீதியானதாக இருக்காது. நீ ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சுயநலம் உள்ளவனாக இருக்க வேண்டும். நீ முதலாவதாக உன் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும், அவர்களுடைய தேவைகளை மாத்திரமல்ல, ஆனால் அதற்கும் மேலாக கவனிக்க வேண்டும். நீ அவர்களுக்கு செல்வத்தையும், சமுதாய நன்மைகளையும் கொடுக்க முயற்சிக்க வேண்டும். நீ உன்னை அவர்களுக்காக தியாகம் பண்ண வேண்டும்.

பழைய இருதயம் எவ்வளவு திருக்குள்ளதாக இருக்கிறது பாருங்கள்! அதன் பொய்யான காரணங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! எத்தனை பேர் தங்கள் துக்கத்திற்கு ஏதுவாக இதை நிரூபித்திருக்கிறார்கள்! எத்தனை பேர் கவர்ந்திழுக்கப்பட்டு, புதிய மனம் பழைய மனதினால் சிறைப்பிடிக்கப்படும்படி விட்டிருக்கிறார்கள்! எத்தனை பேர் பழைய இருதயத்தின் தந்திரத்தால் அடிமைத்தனத்திற் குள்ளாக கொண்டுவரப்பட்டதை பார்த்திருக்கிறார்கள். மிக பிடித்தமான வாக்குகளில் ஒன்று ''கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்'' (ரோம. 12:18) என்று புதிய சிருஷ்டி கட்டளையிடப்பட்டிருப்பதுதான். இந்த பொதுவான யோசனை அப்போஸ்தலரிடத்தி லிருந்து வருகிறது. அது தன் நிலைமையைக் காட்டிலும் அதிகமாக உயர்த்த விரும்புகிறது, மேலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள திவ்விய கட்டளைக்கு மேலாக அதை சிறப்புள்ளதாக மாற்ற நாடுகிறது. (1) நம்முடைய ஆண்டவரை நம்முடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் நேசிப்போம், அவரை கனப்படுத்துவோம், அவருக்கு ஊழியம் செய்யவோம், அவருக்குக் கீழ்ப்படிவோம். (2) தன்னைத்தான் நேசிப்பதுபோல பிறனையும் நேசிப்போம். இது எந்த கிரயத்திலும் சமாதானத்தை அனுமதிக்காது. பழைய இருதயம், பழைய மனம், பழைய சித்தம் சமாதானத்தினிமித்தம் சத்தியத்தை அல்லது கடமையை விட்டுக்கொடுக்கும்படி செய்தால், அது ஏற்படுத்தக்கூடிய நிபந்தனைகளுக்கு எல்லையே இருக்காது. இதனால் ஏற்படும் விளைவு

என்னவெனில் சமாதானத்தினிமித்தம் புது சிருஷ்டி வெகு சீக்கிரத்திலேயே ஆண்டவரோடு செய்த அவனுடைய அர்ப்பணத்தின் முக்கிய சாராம்சத்தையே மீறிக்கொண்டிருப்பான்; மேலும் அப்படி அது விரும்பாவிட்டாலும் பழைய சித்தத்திற்கு முற்றுமாக தன்னை ஒப்புவித்துக்கொண்டிருப்பான்; பழைய சித்தத்துக்கு எதிர்த்து நின்றாலும், திவ்விய வார்த்தையை அது திறமையாக தவறாக விளக்குகிறபடியால், அதன் தந்திரத்தினால் சிறைபிடிக்கப்படுகிறான்.

இப்படியாக தாக்கப்பட்டு இருக்கும்போது, புது சித்தம் சுலபமாக சொல்ல வேண்டியது என்னவென்றால், சமாதானம் வீட்டிலும், வேறு எங்கும் விரும்பத்தக்கதாக இருந்தாலும், ஆண்டவருடைய வாக்குத்தத்தின்படி சமாதானம் முதன்மையானதல்ல என்பதாகும். உண்மையாகவே ஆண்டவர், தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று புது சிருஷ்டியை எச்சரித்திருக்கிறார். துன்பம் எல்லோரோடும் சமாதானமாக இருப்பது என்பதைக் குறிக்காது. ஆனால் அதற்கு எதிர்மாறானது. அவர்கள் வெளிச்சம் பிரகாசிக்கும்படி செய்யும்போது நிச்சயமாகவே இருள் வெளிச்சத்தை வெறுத்து, அதோடு போராடும் என்றும், முடிந்தால் வெளிச்சத்தின் சொந்தக்காரரை, அதை ஒரு மரக்காலின் கீழாக மூடி வைக்கும்படி தூண்டும் என்றும், இந்த வெளிச்சத்தை மறைத்து வைக்கும்படி தூண்டுவதற்காக இருள் ஒரு யுத்தத்தை நடப்பிக்கும் என்றும், அதன் அர்த்தம் என்னவெனில் சமாதானத்தைத் தவிர வேறு எதையும் கொடுக்காது என்பதுதான் என்று அவர் கூறியிருக்கிறார். ஆனால், இவைகளெல்லாம் புது சிருஷ்டிக்கு உள்ள பரீட்சைதான் என்று ஆண்டவர் நமக்கு நிச்சயப்படுத்திக் கூறுகிறார். அவன் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், அவனுக்கு முக்கியமான சமாதானம் என்பது மாம்சத்திற்குரிய சமாதானமல்ல, ஆனால் இருதயத்தின் சமாதானமாகிய ''எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம்'' ஆகும்.

எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை தன்னுடைய இருதயத்தில், வெளிப்படையான நிலமைகள் எல்லாம் இந்த சமாதானத்திற்கு எதிராக இருக்கும்போது கூட, புது சிருஷ்டி இதை அடையலாம் என்பதை அவன் கற்க வேண்டும். ஆனால், அது எப்படிப்பட்ட கிரயமாக இருந்தாலும், எப்படிப்பட்ட தியாகமாக இருந்தாலும் ஆண்டவரோடு ஒரு மனதாய் இருக்கிற நிலைமை என்பது

அவரிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கான வெகுமதியாகும். ஆகவே மாம்சீக தூண்டுதல்களினால் வேண்டுதல்கள் வரும்போதும், உலகப்பிரகாரமான உறவினர்கள் வாதிடும்போதும் புது சிருஷ்டி முதலாவதாக தன்னுடைய முக்கியமான கடமையை நினைக்க வேண்டும். அதாவது அவன் தேவனை தன்னுடைய முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவேடும், முழு பலத்தோடும் நேசிக்கவும், ஊழியம் செய்யவும் வேண்டும் என்பதுதான். மேலும், குடும்பத்தோடு அல்லது மாம்சத்தோடு, அல்லது அயலகத்தாரோடு உள்ள உறவு இந்த பிரமாணத்திற்கு உட்பட்டுதான் இருக்க வேண்டும்.

மற்றொரு பக்கம், புது சிருஷ்டி அதிதீவிர மதவெறியை தவிர்க்க வேண்டும்; தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ அது மனோரம்மியமாக இல்லை என்பதற்காக காரியங்களை செய்வதை தவிர்க்க வேண்டும்; தன்னுடைய மன நிலைமைக்கு எதிர்மாறாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆண்டவரின் சிந்தையை தீர்ப்பு செய்வதை தவிர்க்க வேண்டும். புது சிருஷ்டி தன்னுடைய அனுதின வாழ்க்கையின் எல்லா அலுவல்களிலும் தேவனுடைய வார்த்தையின் வழிநடத்துதலை சரியானபடி அப்பியாசப்படுத்த திவ்விய வார்த்தையை ஊக்கமாகவும் பொறுமையுடனும் படிப்பதும், ஆவியையும் திவ்விய எதிர்ப்பார்ப்பு களைப் பற்றிய கருத்துக்களை ஊக்கமாகவும், பொறுமையுடனும் படிப்பதும் அவசியம். ஆனால், ஒப்பிட்டு பார்க்கையில் ஒரு சிலரே இதன்படி சோதிக்கப்படுகிறார்கள். பெரும்பாலோர் மாம்சத்தை திருப்திபடுத்துவதில் சோதிக்கப்படுகிறார்கள். ஆகவே அந்த வழியில் அவர்களுக்கு விசேஷமான கவனம் தேவை. இல்லாவிட்டால் அதை திருப்திபடுத்தும்படி, அதற்கு சேவை செய்யும்படி, அதற்கு விட்டுக்கொடுக்கும்படி மாம்சத்தின்படி நடக்க வேண்டியிருக்கும். அப்படியில்லாத பட்சத்தில் அவர்கள் அர்ப்பணம் செய்துகொண்ட வழிக்கு எதிராக நடக்கிறார்கள். அல்லது அவர்கள் மாம்சத்தின்படி நடவாவிட்டால், அதாவது மாம்சத்தை பின்பற்றாமலும், அதற்கு சேவை செய்யாவிட்டாலும், அவர்கள் விசேஷமாக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், இல்லாவிட்டால் மாம்சம் அவர்களை ஆவியின்படி நடக்காமல் தடைசெய்யும்; ஆவிக்குரிய விஷயங்களில் முன்னேற்றம் அடையாமல் இருக்கச்செய்யும்; அவர்களுடைய ஆவிக்குரிய முன்னேற்றத்தை ஸ்தம்பிக்க வைக்கவும் முயற்சிக்கும்; இப்படியாக, அவர்கள் கனி கொடுப்பதையும், உபயோகமாக இருப்பதில் வளர்ச்சியுறுவதையும்,

அபிவிருத்தி யடைவதையும் தடைபண்ணும். கடைசியாக கிறிஸ்துவோடு, சிறுமந்தையின் அங்கங்களாக, உடன் சுதந்திரர் என்கிற மேலான பரிசை சம்பாதிப்பதையும் தடைபண்ணும்.

எப்பொழுதும் மனதில் இருக்க வேண்டிய சிந்தனை என்னவென்றால், புது சிருஷ்டிகள் தங்களுடைய பூலோக, மாம்சீக ஆசைகளை எல்லாம் பலியிடும்படி அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதாகும். இவைகள் பலியிடப்படுவதைத் தவிர வேறு ஒன்றும் புது சிருஷ்டிகளை முழு வளர்ச்சியடையவும், ஒளியிலுள்ள பரிசுத்தவான் களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கும், கிறிஸ்துவின் சரீரமான சபையில் முதலாம் _உயிர்த்தெழுதலிலும், மகிமையிலும், கனத்திலும் அழியாமையிலும் பங்கடையவும் அனுமதிக்காது. முழு பலிசெலுத்துதல் என்கிற இந்த இலக்கில் உள்ள நாம் அறிய வேண்டிய ஒரு கட்டுப்பாடு என்னவெனில், நம்முடைய வாழ்க்கையோடு மற்றவர்களுடைய வாழ்க்கை நலன்கள் பிணைந்து இருக்கிறது; பொன்னான பிரமாணம் பலிசெலுத்துதலின் மேல் தன்னுடைய கட்டுப்பாட்டை வைக்கும்; இந்த அர்ப்பணிப்பில் சேராத நம்முடைய மாம்சத்தின்படியான அன்புக்குரியவர்களுக்கு போதுமான அளவு இடம் கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தும் என்பதை ஆகும்.

உலகம் புது சிருஷ்டியின் ஒரு சத்துரு

இந்த பொல்லாத உலகத்துக்குரியவைகள் எல்லாம், கிட்டத்தட்ட நீதிக்கு உடன்படாததாக இருக்கின்றன; ஆகவே அவைகள் எல்லாம் ஏறத்தாழ புது சிருஷ்டிக்கும் அதன் நீதி நியமத்திற்கும் எதிர்மாறாக உள்ளன. உலகத்தின் நியதி பொதுவாக சுருக்கமாக கூறினால் சுயநலம் என்பதாகும். உலகம் நீதியை அறிந்திருக்கிறது என்று உயர்வாக குறிப்பிட்ட அளவு உரிமைகொண்டாடினாலும் சுயநலம்தான் அங்கு காணப்படுகிறது. நாகரீகம் அடைந்துள்ள உலகத்தின் எல்லா சட்டங்களும் எல்லா கட்டுபாடுகளும் பொல்லாதது என்று நம்புகிறவர்கள் நாங்கள் அல்ல. அதற்கு மாறாக கிறிஸ்தவ உலகின் சட்டங்கள் எவ்வளவு உயர்வானதாக இருக்கிறது என்பதை பார்ப்பதில் நாம் அனேக வேளைகளில் ஆச்சரியப்பட்டுள்ளோம். அவைகள் எவ்வளவு ஞானமுள்ளதாக எவ்வளவு நீதியுள்ளதாக, எவ்வளவு சிறப்பானதாக உள்ளன. அவைகளில் பெரும்பாலானவைகள் பலவான்களிடத்திலிருந்து

பெலவீனர்களின் நலன்களை காப்பதற்கும் எல்லாருக்கும் நீதியை செலுத்தவும் உண்டாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் முழு உலகத்தின் ஒவ்வொரு சிந்தனையோடும், வார்த்தையோடும், செயலோடும், சுயநலம் பின்னியிருக்கும்போது, அதன் நீதியின் மிக உயர்வான கருத்துக்கள் சில வேளைகளில் வளைக்கப்பட்டு, முறுக்கப்பட்டது பறிக்கப்பட்டுள்ளது ஆச்சரியப்படத்தக்கதல்ல.

இதற்கு மாறாக, நாம் ஆச்சரியப்படுவது என்னவென்றால், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளில் உள்ள சட்டப்புத்தகங்களில் காணப்படுகிற உயர்வான சட்ட திட்டங்களுக்கு விழுந்து போன மனுக்குலம் எட்டும்படியான இடத்திற்கு வந்திருப்பதுதான். மோசேயின்மூலம் கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணம், நம்முடைய ஆண்டவராலும், அப்போஸ்தலர்களாலும் உதாரணமாகக் காட்டப்பட்டது, விருத்திப்பண்ணப்பட்டது கனப்படுத்தப் பட்டது, விளக்கப்பட்டது. இதுவே, மனித சட்டங்களுக்கு ஆதாரமாக அமைந்திருப்பது உண்மையாகும். இருந்தாலும் மனிதனுடைய சுயநலம் மனிதனுடைய நீதியின் வரையறையோடு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். மேலும் அவைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒதுக்கிவைக்கப் பார்க்கிறது; இது உலகில் அதிகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது.; இது புது சிருஷ்டியின் முக்கியமான கஷ்டங்களிலும், யுத்தங்களிலும் ஒன்றாக இருக்கிறது.

உலகமும் அதன் பெருமையின் ஆவி, சுயநலம் போன்றவைகளும் புது சிருஷ்டியின் முக்கியமான சத்துருக்களில் ஒன்று என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மனுக்குலம் முழுவதும், ''இந்த உலகத்தின் ஆவிக்குக்'' கீழ் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது; இது ஒரு பெரிய நதியாக ஒரு பொதுவான திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது, சில பகுதிகளில் வேகம் இருக்கிறது, மற்ற பகுதிகளில் அதிக மந்தம் இருக்கிறது, ஆனாலும் எல்லாம் சுயநலம் என்கிற ஒரே திசையை பின்பற்றுகின்றன. புது சிருஷ்டி தன்னுடைய அர்ப்பணிப்பினால், அவனுடைய புதிய மனதின் ஆவியினால் ஒரு விரோதமான பாதையில் செல்ல கடமைபட்டுள்ளான். ஆகவே, தற்போதுள்ள பிரபலமான மனோபாவம், தத்துவங்கள், பரம்பரை பழக்கவழக்கங்கள் முதலானவைகளால் எதிர்க்கப்படுகிறான், விசித்திரமானவன் என்று

குறிப்பிடப்படுகிறான். அவன் சந்திக்க வேண்டிய எதிர்ப்பு உண்டு; எதிர் திசையில் செல்பவர்களோடும், தன்னோடு தொடர்புகொள்பவர்களோடும் விரோதம் காட்டவும் அவனுக்கு அவசியமாகிறது; மோதல் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அது வெளிப்படையான சமாதானத்தையல்ல வெளிப்படையான முரண்பாட்டை அர்த்தப்படுத்தகிறது. ஆனாலும் இந்த வெளிப்படையான முரண்பாடு உள்ளான சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் குறிக்கிறது. ஏனெனில் திவ்விய ஆமோதிப்பு உணரப்படுகிறது.

உலகத்தின் நோக்கங்களும், இலக்குகளும், முறைகளும் எப்பொழுதுமே இழிவானதும் அநீதியானதுமாக இருப்பதில்லை. ஆனால் அதன் உயர்வான குறிக்கோள்களும் நோக்கங்களும் பொதுவாக புது சிருஷ்டியின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களும் எதிராக உள்ளன. ஏனெனில் உலகம் மனுஷீக ஞானத்தின் துடிப்பின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் புது சிருஷ்டியோ பரத்திலிருந்து வருகிற ஞானத்தினால் இயக்கப்படுகிறான். உலக ஞானம் மதத்தின்மூலம் கெட்டவர்களை பயமுறுத்தி அடக்க உதவுகிறது; அது ஒழுக்கம், தயாளம், விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பவைகளைக் குறித்து தன்னுடைய சொந்த கருத்துக்களை கொண்டுள்ளது; புது சிருஷ்டியின் வித்தியாசமான அணுகுமுறைகளை அது புரிந்து கொள்ள முடியாது; மேலும் புது சிருஷ்டியின் கருத்துக்களை, கடுமையானது, நியாயமற்றது போன்று எண்ணுவது பொருத்தமானது என்று நினைக்கிறது. காரணம் என்னவெனில் அது திவ்விய திட்டத்தைப் புரிந்துகொள்ளுகிறதில்லை. தற்கால வாழ்க்கை திவ்விய கருத்தின்படி எதிர்கால வாழ்க்கையோடு ஒப்பிடும்போது, முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. உண்மையாகவே மனுக்குலம் உயர்த்தப்படுவதில் மனுஷீக முயற்சிகள் இயலாததை உலக ஞானம் ஏற்றுக்கொள்ளுவதும் கிடையாது. ஆண்டவர் தன்னகத்தில் வைத்திருக்கிற மாபெரும், உன்னதமான ஒழுங்குகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்விதமாக இருக்கிறது. அவருடைய தற்போதைய கிரியை முடிந்தவுடன், தெரிந்துகொள்ளப்பட்ட சபை, ஏற்றுக் கொள்ளப்பட்டு, மெருகூட்டப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, மகிமைப் படுத்தப்படும். அதன் பிறகு தேவன் தன்னிடத்தில் வைத்திருக்கிற மாபெரும் உன்னதமான ஒழுங்கு, வெளிச்சத்திற்குள் முழுமையாக கொண்டு வரப்பட்டு, இராஜ்யத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும்.

ஆகவே உலகமும் அதன் ஒழுக்கம், மற்றும் மதத்தில் பற்றுடையவர்களும் வெறுத்தால் கூட புது சிருஷ்டி ஆச்சரியப்படக் கூடாது. உலகத்தின் இந்த வெறுப்பும், எதிர்ப்பும், சில சமயங்களில் கோபமூட்டுவதாக இருந்தாலும் கூட, விசுவாசத்தையும், பொறுமையையும் சோதிப்பதாக இருந்தாலும் கூட சாந்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் உலகமானது இன்னும் ''இந்த உலகத்தின் அதிபதியால்'' குருடாக்கப் பட்டுள்ளது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உலகமானது '' மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும்,'' ''ஆவியின் ஆழமான காரியங்களையும்'' பார்க்கிறதில்லை; இந்தஆவியின் வெளிச்சத்தில் தேவனுடைய கிருபையால் நாம் எல்லாவற்றையும் – இழப்புகள், பரீட்சைகள் போன்றவைகளை குப்பையும் தூசியுமாக எண்ண முடிந்தவர்களாக இருக்கிறோம். அதனிமித்தம் வேதத்தில் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டுள்ள அற்புதமான காரியங்களை நாம் பெறமுடிந்தவர்களாக இருக்கிறோம். உலகத்தின் ஆவிக்கு விட்டுக்கொடுப்பது என்பதும், சமாதானத்திற்காக அதன் உணர்வுகளை நம்மை ஆதிக்கம்பண்ண அனுமதிப்பதும், ஆண்டவரைப்பற்றியும், சத்தியத்தைப்பற்றியும் அவருக்கு ஊழியம் செய்யும்படியான சிலாக்கியத்தைக்குறித்தும் தாழ்வாக எண்ணுவதற்கு இடம் கொடுப்பதாகும். இதனால் வரும் விளைவு என்னவெனில், உலகத்தனத்திற்கு முழுமையாக சென்றதினிமித்தம் எல்லாவற்றையும் இழக்காவிட்டாலும் குறைந்தபட்சமாக, பந்தயப்பொருளை இழந்து, ''திரள்கூட்டத்தில்'' பங்கு பெற்று, வரப்போகிற மகிமைக்கு சம்பந்தப்பட்ட ஒரு தாழ்வான இடத்திற்கு மாபெரும் உபத்திரவத்தின் மூலம் வருவோம்.

அப்போஸ்தலருடைய உறுதியான கட்டளை என்னவெனில், ''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை'' (1யோவா. 2:15) என்பதாகும். ஆகவே உலகத்தின் ஆவிக்கு இரக்கப்படுவதற்கு அல்லது விருப்பம் காட்டுவதற்கு ஏதுவான ஒவ்வொரு அறிகுறிக்கும் எதிராக நாம் ஜாக்கிரயுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதனால் உலகத்தாராயிருக்கிற நம்முடைய நண்பர்களிடத்தில், அனுதாபம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதல்ல; அவர்கள் நலன்கள் போன்றவற்றில் அஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால்

உலகத்தாரிடத்தில் நம்முடைய கடமைகளைச் செய்ய ஜாக்கிரதையுள்ள வர்களாக இருக்கவேண்டும். மரியாதை செலுத்தவேண்டியவர்களுக்கு மரியாதை செலுத்தவும், புகழ வேண்டியவர்களை புகழவும் வேண்டும்; உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவியையும், அன்பு தேவையுள்ளவர் களிடத்தில் அன்பையும், இரக்கம் தேவையுள்ளவர்களுக்கு இரக்கத்தையும் காட்ட வேண்டும். இருந்தாலும், இன்னும் சத்துருவின் செல்வாக்கின்கீழ் இருக்கிற நம்முடைய நண்பர்களுக்கும், அயலகத்தாருக்கும் இடையில் வித்தியாசத்தை காட்ட வேண்டும். இந்த சத்துருவின் செல்வாக்கு, ஆவி அல்லது குணாதிசயம், அவர்களை நடத்துகிறது, அவர்களை வஞ்சிக்கிறது.

தற்போதுள்ள எந்த ஸ்தாபனத்தோடும் நாம் அனுதாபம் உள்ளவர்களாக இருக்கக் கூடாது. அவைகள் சுயநலத்தை சார்ந்தவைகளாகும். அவைகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ திவ்விய கட்டளையாகிய பொன்னான கற்பனைக்கு எதிரானவைகளாக உள்ளன. உலகத்தில் காணப்படுகிற சுயநலம் என்கிற வழியில் நம்முடைய அலுவல்களை அதிகமாக நடத்துவது அவசியமாக இருக்கலாம். ஆனால், தொடர்ந்து கேள்வி கேட்பதை நிறுத்தாமல் செய்யவேண்டும். நம்முடைய இருதயங்கள் சுயநலக்கொள்கைகளுக்கு அனுதாபம் காட்டாத நிலையில் வைக்கப்பட வேண்டும்; அப்படி செய்யும்போது நம்முடைய வாழ்க்கையின் எல்லா அலுவல்களிலும், கூடுமானவரை நாம் உலகத்தோடு கொண்டுள்ள காரியங்களிலும் பொன்னான கற்பனை முழுமையாக ஆளுகை செய்யும்படி விரும்புவோம்.

உலகத்தை மாற்ற முயற்சிப்பதோ அல்லது சமுதாயத்திலும் அதன் முறைமைகளிலும் புரட்சி உண்டுபண்ண முயற்சிப்பதோ நம்முடைய காரியமல்ல. அந்த கஷ்டமான வேலையை ஆண்டவர் தனக்கென்று வைத்திருக்கிறார், வேகமாக சமீபித்துக் கொண்டிருக்கிற ''மகா நாளில்'' அது முற்று பெறும். இதற்கிடையில் ஆண்டவரின் ஜனங்கள் உலகத்தில் இருந்தபோதிலும், உலகத்தின் பழக்க வழக்கங்களிலும், அலுவல்களிலும் தொடர்பு கொண்டிருந்தாலும், அவருடைய வேதத்தால்_வழிநடத்தப் பட்டு அவர்கள் உலகத்தில் அன்பு கூறாமலும், அனுதாபப்படாமலும் இருக்க வேண்டும். அதற்கு மாறாக ஆண்டவரோடு நெருங்கிய உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும், அவருடைய நீதியின் ஒழுங்குகளின் மேல் அதிகமாக அனுதாபம்கொள்ள வேண்டும்

என்பதையும் உணர வேண்டும். இது அவர்கள் சபையிலும், தேசத்திலும், செல்வத்திலும், அரசியலிலும், சமுதாய பழக்க வழக்கங்களிலும், அவைகளின் உபயோகத்திலும் தேவன் எல்லாவிதமான அநீதிக்கும், சமத்துவம் இல்லாத நிலைக்கும், ஒழுங்கீனத்திற்கு, வைத்திருக்கிற அதேவிதமான, அதே அளவு எதிர்ப்பைக் குறிக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

இதை ஓரளவுக்கு தெளிவாக அறிந்த பின்னர் சிலர், தற்கால ஸ்தாபனங்களை, ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் கட்டளையிடாத அளவுக்கும், அவர்கள் வசனத்தின் மூலமும், நடத்தையின் மூலமும் விளக்காத அளவுக்கும் கண்டனம் செய்யும் உச்ச நிலைக்கு சென்றுவிட்டார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். பொதுவாக உலகமானது அது நல்ல உயர்வான நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாக பாராட்டிக்கொண்டிருக்கிறது என்பதையும், மற்றவர்களைப் போல நாமும் திருத்த திறனற்றவர்களாக இருக்கிற காரியங்களில் மிகச்சாதாரணமாக குற்றம் கண்டு பிடிப்பது உபயோகமற்றது என்பதைவிட மோசமானது என்பதையும், ஏனெனில் அது தேவைப்படுகிற பலன்களைத் தராமல் சந்தோஷமற்ற நிலைமையையும், வெறுப்பையும்தான் உண்டாக்குகிறது என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சில ரோம போர்வீரர்கள் யோவான் ஸ்நானகனிடத்தில் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, அவரும் அதேபோல்தான் நல்ல ஞானமான பதிலைக் கொடுத்தார். ''நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும், (நீங்கள் கீழ்ப்படிய வேண்டிய உங்கள் அரசாங்க சட்டதிட்டங்களை மீறாதீர்கள்) பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள்.'' (லூக். 3:14) ஜனங்களை, எளிதாக அவர்களுடைய நிலைமைகளையும், சூழ்நிலைகளையும் குறித்து அதிருப்தியடையச் செய்வது மிகவும் ஞானமற்ற செயலாகும். மாறாக, புது சிருஷ்டியின் ஆவி, சிந்தை எப்பொழுதுமே சமாதானத்தை நோக்கியே இருக்க வேண்டும். தற்போதுள்ள ஸ்தாபனங்களைப் பற்றி நம்மால் உயர்வாக பேச முடியா விட்டாலும், விசேஷமாக அவைகளை கண்டனம் செய்யக் கூடாது.

இப்படிப்பட்ட விஷயங்களில் பிரதான தூதனாகிய மிகாயேலின் உதாரணத்தை பின்பற்றுவது நல்லது. அவன் சாத்தானுக்கு எதிராக தூஷணமாகக் குற்றப்படுத்தாமல், தனக்கான முறையில், தனக்கான

நேரத்தில், ''கர்த்தர் உன்னை கடிந்துகொள்வாராக'' என்று சொன்னான். (யூதா 9) இதுபோல்தான் நாமும் இருக்க வேண்டும். ஆண்டவர் தம்முடைய முறையின்படி, நேரத்தின்படி தற்போதுள்ள ஸ்தாபனங்களை கடிந்து கொள்வார் என்பதை உணர்ந்து, நாமும் அப்போஸ்தலரோடு சேர்ந்து, ''சகோதரரே, பொறுமையுடன் காத்திருங்கள், கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது'' என்றும், சமீபித்து இருக்கிற அவருடைய இராஜ்யம் இந்த கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாக்கும் என்றும் சொல்லலாம். இந்த விஷயங்களைக் குறித்து, காலத்திற்கு முன்னதாகவே போராடுவது, பிரயோஜனமற்றதாக இருப்பது மாத்திரமல்ல, அதற்கும் மேலாக, போராடுபவருக்கும், போராடப்படுபவருக்கும் மோசமானதாகவும், அனுகூலமற்றதாகவும், தீமையை விளைவிக்கிறதாகவும், அதிருப்தியை வளர்க்கிறதாகவும் இருக்கும். போராட வேண்டிய இந்த பிரச்சனைக்காக ஆண்டவருடைய வேளை வரும்போது இந்த உலகத்தின் பிள்ளைகள் மத்தியில் ஏராளமான போராட்டம் செய்கிறவர்கள் இருப்பார்கள். இதற்கிடையில், புது சிருஷ்டியின் எல்லா அங்கங்களும், இப்படியாக கலகத்தையும் அதிருப்தியையும் உண்டுபண்ணக் கூடிய இப்படியான சர்ச்சைகளை ஒதுக்கி வைப்பதில் ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும் காதுள்ளவர்கள் கேட்கக்கடவர்கள் என்கிறபடி முக்கியமாக ஆண்டவருடைய ஜனங்கள் மத்தியில் திவ்விய திட்டத்தைக் குறித்த ஆழமான சத்தியங்களையும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது ஏற்படும் உபத்திரவத்தைக் குறித்தும் ஏற்ற வேளைகளில் பேச வேண்டும்.

இராஜரீக ஆசாரியராகிய புது சிருஷ்டிக்கு உலகம், அதன் எல்லாவிதமான கிளர்ச்சிகளையும் தவிர விசேஷமான ஒரு வேலையுண்டு. அது தற்போது அவர்களுக்குரிய விசேஷ வேலை, ஏற்கனவே காட்டப்பட்டுள்ளபடி, வெள்ளியால் செய்யப்பட்டுள்ள எக்காளத்தை ஊதுவதுதான்; சத்துருவினால், அவனுடைய தந்திரங்களினால் கண் குருடாக்கப்படாதவர்கள், காது செவிடாக்கப்படாதவர்கள் மத்தியில், காதுள்ளவர்கள் கேட்கும்படியாக திவ்விய திட்டத்தில் உள்ள சத்தியத்தை ஊதுவதுதான். அவர்களுடைய வேலை விசேஷமாக ஆண்டவருடைய ஜனங்கள் மத்தியில்தான், சுவிசேஷ யுகத்தின் வேலையை முடித்து கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பதுதான். (மத். 13:37–43)

இன்னொரு விதத்தில் பார்க்கும்போது, சபையின் வேலை கலியாணத்திற்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிற

மணவாட்டியென காட்டப்பட்டுள்ளது. புது சிருஷ்டிகளின் நேரம், செல்வாக்கு, உபாயம் போன்றவைகள்மேல் ஒவ்வொரு வினாடியும் முக்கியமான அழைப்பு இருக்கும்போது அவர்கள் உலகத்தை நேசிக்கவோ, அதன் ஒழுங்குகள், ஸ்தாபனங்கள் போன்றவைகள் நீடித்திருப்பதற்கான முயற்சிகளில் இறங்கவோ கூடாது; அது மாத்திரமல்ல, இந்த பொல்லாத உலகத்தை ''நீதி வாசமாயிருக்கும்'' ''இனி வரும் உலகமாக,'' மாற்றும்படியான ஆண்டவருடைய ஞானமான பிரயோஜனமான ஒழுங்கு முறையை எதிர்பார்க்கவும் கூடாது. (எபி. 2:5; 2பேது. 3:13)

பெரிய சத்துரு, சாத்தான்

''உங்கள் எதிராளியாகிய பிசாசானவன்'' என்று அப்போஸ்தலர் எழுதுகிறார். நம்முடைய சொந்த மாம்ச பெலகீனத்தையும், சக மனிதர்களின் பூரணமற்ற தன்மையைக் காட்டிலும், நாம் அதிகமாக இந்த எதிராளியிடம் போராட வேண்டியிருக்கும் என்பது போல அவர் எழுதுகிறார். நமக்கு ஒரு தந்திரமுள்ள, வஞ்சிக்ககூடிய சத்துரு சாத்தான் உண்டு என்பதை நாம் உணர வேண்டும் என்றும், பொல்லாதவனின் வல்லமையிலிருந்தும், சோதனையிலிருந்தும் நாம் விடுபட வேண்டும் என்றால் நாம் நல்ல மேய்ப்பனுக்கு அருகாமையில் இருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். இந்த சத்துருவைக் குறித்து சொல்லுகிற சில வேதவசனங்களை நாம் கவனிப்போம். அனேகர் இந்த சத்துரு இருப்பதையே இப்பொழுது மறுதளிக்கிறார்கள்.

''உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.'' (1பேது. 5:8)

''அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.'' (மத். 4:1)

''அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.'' (மத். 25:41)

''வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர் களாயிருக்கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப்

பிசாசனவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான்.'' (லூக். 8:12)

''நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறிர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனா யிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியினால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பெய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற படியினால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்திலே எடுத்துப் பேசுகிறான்.'' (யோவா. 8:44)

''சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதத்தை தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்;'' (யோவா. 13:2)

''பிசாசுக்கு இடங்கொடமாலும் இருங்கள்.'' (எபே. 4:27)

''நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர் களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.'' (எபே. 6:11)

''அவன் இருமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, ... பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு .....'' (1 தீமோ. 3:6,7)

''பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும் .....'' (2தீமோ. 2:26)

''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசனவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு'' (எபி. 2:14)

''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.'' (யாக். 4:7)

''பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப் பட்டார்..... இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல.'' (1யோவா. 3:8,10)

''பிரதான தூதனாகிய மிகாயேல் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவன் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்னான்.'' (யூதா 9)

“ நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரை காவலில் போடுவான்.” (வெளி. 2:10)

“உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடே கூட அதைச்சார்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.” (வெளி. 12:9)

“பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து, அந்த ஆயிர வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைப்போட்டான்.” (வெளி. 20:2)

“அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்..... இது இரண்டாம் மரணம்.” (வெளி. 20:10,14)

“இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்.” (யோவா. 12:31)

“இனி நான் உங்களுடனே அதிகமாய் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.” (யோவா.14:30)

“அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.” “இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினலே நியாயத் தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.” (யோவா. 16:8,11)

“அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்” (எபே. 2:2)

“தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமா யிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.” (2கொரி. 4:4)

“பரிசேயர் அதைக்கேட்டு: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: ..... சாத்தானை சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே

பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?'' (மத். 12:24–26)

''அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே!'' (ஏசா. 14:12–14)

''அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே.'' (2கொரி. 11:14)

''அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் கெட்டுப்போகிறவர் களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்.'' (2தெச. 2:9,10)

''ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதி களோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.'' (எபே. 6:12)

''தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னை காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும் உலகமுழுதும் பொல்லாங் கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.'' (1யோவா. 5:18,19)

''ஒரு நாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்.'' (யோபு 1:6–12; 2:1–7)

''அவர் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை எனக்குக் காண்பித்தார்; அவன் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான்; சாத்தான் அவனுக்கு விரோதஞ்செய்ய அவன் வலது பக்கத்திலே நின்றான்.'' (சக. 3:1,2)

''அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.'' (லூக். 10:18)

''..... உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்து கிறதற்காக உனக்குத் தரிசனமானேன்..... அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு, நீ அவர்களுடைய கண்களை திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.'' (அப். 26:16,18)

''சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார்.'' (ரோம. 16:20)

''.....மாம்சத்தின் அழிவுக்காக....அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புச் செய்கிறேன்.'' (1கொரி. 5:5; 1தீமோ. 1:20)

''....விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்கா மலிருக்கவும் வேண்டு மென்றிருக்கிறேன். ஏனெனில் இதற்குமுன்னே சிலர் சாத்தானைப் பின்பற்றி விலகிப்போனார்கள்.'' (1தீமோ. 5:14,15)

''அப்பாலே போ சாத்தானே'' என்று நம்முடைய ஆண்டவர் கூறியபோதும், மறுபடியும் அவர் பேதுருவினிடத்தில் ''எனக்கு பின்னாகப் போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்'' (மத. 4:10; 16:23) என்று சொன்னபோதும், தேவனுக்கு எதிர்த்து நிற்பது என்பது, தேவனோடு ஒருமனப்பட்டு இருப்பவர்களுக்கும் இந்த நிலை உண்டு என்று சொல்வது போல் உள்ளது. ''உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோவென்று சுற்றித்திரிகிறான்'' என்று பேதுரு கூறுவது, அவன் உங்களுடைய (சபையின்) எதிரி மாத்திரமல்ல முழு உலகத்தின் எதிரி என்று கற்பிப்பது போல் இருக்கிறது. இதற்கு இசைவாக ஒத்த கருத்தை நம்முடைய ஆண்டவர் கூறுகிறார். (யோவா. 12:31; 14:30; 16:11)

சாத்தான் தேவனுக்கு மாத்திரமல்ல மனுக்குலத்திற்கும் சத்துருவாக இருக்கிறான் என்று ஆண்டவர் கூறுவது, ஏதோ ஒரு அழகான கற்பனையல்ல, ஆனால் தெளிவான உண்மையாகும். அவன் நம்முடைய சத்துரு என்று கூறுவது, ஒரு வழியில் உலகமும் நமது மாம்சமும் நமக்கு சத்துரு கிடையாது என்று பொருள்படும். நம்முடைய சொந்த மாம்சமே புது சிருஷ்டியை எதிர்க்கிறது. அது எந்த கசப்பினால் அல்லது வெறுப்பினாலோ, அல்லது தற்காலிக அல்லது நித்திய அனுகூல நிலைமைக்காக அல்ல, ஆனால் விழுந்து போன மாம்சத்தின் ஆசை புது சிருஷ்டியின் நலன்களுக்கு எதிர்மாறாகவும், அவன் மறுபடியும் ஜனிப்பிக்கப்பட்டபோது உள்ள நம்பிக்கைகளுக்கு எதிராக இருக்கிறது என்கிற கருத்தினால் எதிர்க்கிறது. இப்படியாக உலகம் எதிர்ப்பது ஒரு கெட்ட எண்ணத்துடன் அல்ல, ஆனால் சுயநல காரணங்களுக்காக மாத்திரமே. அது காரியங்களை வித்தியாசமான வெளிச்சத்தில் பார்ப்பதாலும், நலன்களைப்பற்றி வித்தியாசமான சுய நலத்துடன் காண்பதாலும் எதிர்க்கிறது. சாத்தான் மாத்திரமே வஞ்சகமுள்ள, புத்தியுள்ள, சதி செய்கிறவன், திட்டமிடுகிறவன்; அவன் அனுமதிக்கப் பட்ட அளவுக்கு ஒரு மிக நேர்த்தியான மனுஷீக புத்திசாலித்தனத்தை உபயோகிக்கிறான், மாத்திரமல்ல நம்முடைய விழுந்துபோன மாம்சத்தை

கவர்ச்சிக்கிறான்; இழிவான ஆசைகள் மூலமாக அவன் அனேக முறைகளில் உலகப் பிரகாரமாக ஜீவிப்பவர்களை தனது கருவியாக உபயோகிப்பதுடன், அவர்களை நீதியையும், சத்தியத்தையும், சத்தியத்தில் உள்ளவர்களை எதிர்க்கவும் அவர்கள் அறியாமலே கருவிகளாக பயன்படுத்துகிறான்.

அவன் ஆதிமுதற்கொண்டு பொய்யனும் மனுஷ கொலைபாதகனுமாக இருக்கிறான்

–யோவான் 8:44–

திவ்விய பிரமாணத்திற்கு எதிராக கலகத்தை சாத்தான் ஆரம்பித்தான் என்றும், அதிகாரத்தின் மேல் அவன் கொண்டிருந்த ஆசையின் மூலமாக நமது ஆதி பெற்றோர்களை கீழ்ப்படியாமைக்குள் தள்ளினான் என்றும், மனிதனின் வீழ்ச்சியிலிருந்து இந்த சத்துரு தேவனுக்கும் தேவனுடைய நீதிக்கும் சத்தியத்திற்கும், எதிராக இரக்கமற்ற எதிராளியாக இருந்திருக்கிறான் என்றும், அவன் மனிதர்களை தன் வலையில் சிக்க வைக்கிறவன் மாத்திரமல்ல, கிறிஸ்துவின் மூலமாக செய்யப்படுகின்ற, தேவனின் மீட்பின் மாபெரும் திட்டத்தை எதிர்க்கிறவனாக இருக்கிருக் கிறான் என்றும் வேதாகமம் தெளிவாக உறுதியுடனும், முரணற்ற விதத்திலும் கூறுகிறது. வேதாகமத்தில் பார்க்கும் போது சாத்தான் பிரிந்து பூலோகத்தில் தேவனால் கடைசியாக சிருஷ்டிக்கப்பட்ட மனுக்குலத்தின் மேல் தனது ஆளுகையை செலுத்த முற்பட்ட போது சாத்தானுக்கு அனுதாபம் காட்டுகிறவர்கள், அல்லது அவனோடு சேர்ந்த வஞ்சகர்கள் யாரும் இருந்தார்கள் என்று நமக்கு தோன்றவில்லை. சாத்தானும் நிச்சயமாகவே தேவனுடைய பொதுவான சிருஷ்டிப்பில் ஒரு பகுதியாக இருந்த படியால், அவன் பூரணனனாக, நேர்மை உள்ளவனாக தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப் பட்டான் என்று நாமும் நிச்சயமாக அறிந்து கொள்ளலாம். (எபே. 3:9; உபா. 32:4) நீதி, நியாயம், பரிபூரணம் என்பதைப் பற்றி ஒரே ஒரு நிர்ணய அளவு அவனிடத்தில் இருக்கிறது. அவனே அந்த நிர்ணய அளவு.

ஆனால், பரிபூரணமாக சிருஷ்டிக்கப்படுதலும், பரிபூரணமாக நிலைத்திருப்பதும் இரண்டு வித்தியாசமான விஷயங்கள். தேவன் தனது, புத்தியுள்ள சிருஷ்டிகளில் எதையும் சாதாரண இயந்திரத்தைப் போன்று,

நோக்கத்தையும், நடத்தையும் மாற்ற இயலாதவனாக சிருஷ்டிப்பதில் பிரியம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, தனது சாயலின்படி அல்லது தனது ரூபத்தின்படி அறிவுள்ள தனது சிருஷ்டிகள் எல்லோரையும் சிருஷ்டிப்பதில் பிரியம் உள்ளவராக இருந்திருக்கிறார். அவர்கள் சரியானதை, உண்மையானதை, தூய்மையானதை, நல்லதை, தன்னுடைய சொந்த முன் மாதிரியின்படியாகவும், கட்டளையின்படியாகவும் பின்பற்றும் பூரண சுதந்திரத்துடன் சிருஷ்டித்தார். ஆனால், அதே வேளையில் இந்த விஷயங்களில் தங்கள் பாதையை மாற்றவோ, எதிர்புறம் செல்லவோ வேண்டிய வல்லமையுடனும், அவருடைய நீதியின் பிரமாணத்திற்கு எதிராக கலகக்காரர்கள் ஆகவும் உள்ள பூரண சுதந்திரத்தோடு சிருஷ்டித்தார். ஆனாலும் தேவன் இந்த விஷயத்தில் நித்திய ஜீவனுக்குரிய அதிகாரத்தை தனது கையில் வைத்துக்கொண்டதின் மூலம் தேவன் இதை பாதுகாத்தார். அவரிடம் சூழ்நிலையின் முழு காட்டுப்பாடும் இருக்கிறது, ஆகவே அவருடைய நீதியுள்ள கட்டளைகளை ஏற்க அல்லது கீழ்ப்படிய மறுக்கிற தனது சிருஷ்டிகளில் எவரையும் அவரால் அழிக்க முடியும். அவர்களை முற்றிலுமாக இல்லாமலே ஆக்க நினைக்கிறார், மேலும் அவருடைய கட்டளைகளுக்கு இதய பூர்வமாக ஒரு மனதோடு இசைந்திருப்பவர்களை மாத்திரம் என்றென்றைக்கும் ஜீவனோடிருக்க அனுமதிக்க நினைக்கிறார்.

உயர்ந்த நிலையில் உள்ள தூதர்களில் (ஆதியில் சாத்தானும் அவர்களில் ஒருவன்) ஆதியிலிருந்தும் இப்பொழுதும் வித்தியாசமான வகுப்பார் உண்டு, ஆனால் அனைவரும் அன்பின் ஆளுகைக்குள் இருக்கிறார்கள். அவர்கள் சிருஷ்டிகரின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, யுகாயுக காலங்களாக ஒருமைப்பாடோடும் இசைவாகவும் செயல்பட்டார்கள். நன்மை, அன்பு, இரக்கம், பரலோக தகப்பனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் ஆகியவைகளிலிருந்து வருகிற சந்தோஷம் தான் வெகு காலத்திற்கு அவர்களுடைய அனுபவங்களாக இருந்தன. ஆனால், ஏற்ற காலத்தில் திவ்விய திட்டத்தின் இன்னொரு அம்சம் உண்டாக்கப்பட்டது. மனிதன், தூதர்களிலும் இருந்து சற்று வித்தியாசப் பட்டவனாக சிருஷ்டிக்கப்பட்டான்; தூதர்களிலும் சற்று சிறியவனாக – மனிதனாக, தூதர்களைப் போன்று அல்ல பூமிக்குரியவனாக, வானத்துக்குரியவர்களை போன்று அல்ல, மாம்சத்திற்குரியவனாக, ஆவிக்குரியவனாக அல்ல மாம்ச ஜீவியாக சிருஷ்டிக்கப் பட்டான். மேலும், பூமி மனுக்குலத்திற்கு என்று ஒரு தனிப்பட்ட வீடாக இருந்தது; மனிதன்

ஒரு குடும்ப அமைப்பாக, ஆணும் பெண்ணுமாக ஜோடியாக, சிருஷ்டிக்கப்பட்டான்; அவர்கள் தன் இனத்தை பெருக பண்ணும் அதிகாரம் உடையவர்களாக இருந்தார்கள். இந்த காரியங்களில் அவர்கள் தூதர்களிடமிருந்து வித்தியாசப்பட்டார்கள். தூதர்களில் ஆண் பெண் பாகுபாடு கிடையாது, அவர்களுக்கு குடும்ப ஒழுங்கு முறை கிடையாது, அவர்கள் இனவிருத்தி செய்வதில்லை. சந்தேகத்திற்கு இடமில்லாமல், தேவனின் கடைசி சிருஷ்டியாகிய மனிதன் தூத சேனைகளின் கண்களில் ஒரு அற்புதமானவனாகவும், நன்மை தீமை அறியக்கூடிய திறைமையிலும், அதை அப்பியாசப்படுத்த ஏராளமான தருணங்கள் உடையவனாகவும் காணப்பட்டான்.

அப்பொழுது உயர்ந்த நிலையில் இருந்த ஒரு ஜீவி, விஷயத்தை நன்றாக யோசித்து, சுய நலமும், ஆர்வமும் நிறைந்த எண்ணங்களோடு ஒரு முடிவுக்கு வந்தான். எப்படியாவது புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட மனித ஜோடியை அவன் பிடிக்க முடிந்தால், அவர்களை _தேவனிடத்திலிருந்து பிரிக்க முடிந்தால், அப்பொழுது அவர்கள் மூலமாக தன்னுடைய ஒரு விசேஷமான இராஜ்யத்தை அல்லது ஆதிக்கத்தை உண்டாக்க முடியும், அதன் மூலம் யெகோவா தேவனுக்கு மனுக்குலத்தையும், பூமியையும் பொருத்தவரை இருக்கிற இடத்தையும் கனத்தையும் பரிகரித்து அதன்மேல் தான் கடவுளாக அல்லது அதிகாரம் உள்ளவனாக இருக்க முடியும் என்று தீர்மானித்தான். இந்த குற்றமுள்ள பேராவலை அவன் நிறைவேற்றினதால் தான் தற்போது அவனுக்குள்ள பெயராகிய சாத்தான், தேவனின் சத்துரு என்கிற பெயர் வந்தது. தூதர்கள் மேல் தேவனுக்கு இருந்த ஆதிக்கத்தை அவன் அபகரிக்க திட்டமிடவோ அல்லது முயற்சிக்கவோ இல்லை. இப்படியான ஒரு முயற்சி முட்டாள்தனமானதாக இருந்திருக்கும். ஏனெனில், எல்லா தூதர்களும் தேவனோடு நன்கு பரிச்சயம் உள்ளவர்களாக இருந்தார்கள்; அவர்கள் சாத்தானையும் தங்களில் ஒருவன் என்று அறிந்திருந்தார்கள். ஆகவே, அவர்கள் அவனுடைய வேலையாட்களாக இருக்கவோ, அல்லது அவனை பின்பற்றவோ நினைத்திருக்க மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் சர்வ வல்லமையுள்ளவரின் நீதியும், அன்பும், ஞானமும் நிறைந்த நிர்வாகத்தில், ஒருபோதும் கலகம் செய்யும் நோக்கம் இல்லாமல் முழு திருப்தியுடன் மிகவும் விருப்பத்தோடு இருந்தார்கள்.

இப்படிப்பட்ட சுயநலமுள்ள, கர்வமுள்ள திட்டம் சாத்தானின் இருதயத்தில் இடம் பிடித்த உடனே, அவன் தேவனை தன்னுடைய

பொய்யான திட்ட அளவின்படி அளக்கவும், தேவனாகிய யேகோவா தன்னுடைய கிரியைகள் எல்லாவற்றிலும் ஆர்வமுள்ள சுயநலமுள்ள தனது திட்டங்களை மாத்திரமே செய்து கொண்டு இருக்கிறார் என்று நினைக்கவும் தொடங்கினான். பரிசுத்தமாகவும், இரக்கமுள்ளதாகவும், கீர்த்தியுள்ளதாக எவ்வளவு காலம் இருந்திருந்தாலும், பொல்லாத இருதயம் இப்படியாக எப்பொழுதுமே மற்றவர்களை குற்றம்சொல்ல ஆயத்தமாக இருக்கிறது. ஆரம்பத்தில் தவறான எண்ணத்தினால், ஆவிக்குரிய தேவதூதர்களுக்கு சற்று கீழாக மனுக்குலத்தை தேவன் படைத்ததின் காரணம், அவரது வஞ்சனையான, சுயநல காரணங்களினால் என்றும், அவர்கள் வசிப்பிடமாக பூமியை மட்டுமே எல்லையாக ஏற்படுத்தியது இன்றும் அவர்களை அதிகமாக முழுமையாக அடிமைகளாக்கும்படிதான் என்றும் எண்ணி தான் ஆரம்பத்தில் எடுத்த வழியை நியாயப்படுத்திக்கொண்டான். இப்படியான பொறாமையுள்ள, கலகம் பண்ணுகிற, பரிசுத்தமற்ற சிந்தனை அவனுடைய இருதயத்தில் பிரவேசிக்கும்படி ஒரு முறை அனுமதித்த பின்னர், இந்த சிந்தனை எப்பொழுது இனி வெளியரங்கமான பாவமாக, திவ்விய ஒழுங்கு முறைகளுக்கு எதிரானதாக வரும் என்பது பொல்லாங்கு உருவெடுத்து அதிக காலத்திற்கு பிறகு அல்ல வெகு சீக்கிரத்திலேயாகும்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு அவன் நியாயம் செய்கிறான் என்கிற தவறான எண்ணத்தோடு சாத்தான், ஏதேன் தோட்டத்தில் தாயாகிய ஏவளை அணுகினான். தோட்டத்தில் உள்ள ஒரு மரத்தினால் உண்டான திவ்விய கட்டளையால் ஆதாமும் ஏவாளும் கண்டிப்பான திட்டங்களால் தடுக்கப்பட்டுள்ளார்கள் என்றும், அது தேவன் தன்னுடைய அதிகாரத்தை துர்பிரயோகம் செய்கிறார் என்றும், அதன் மூலம் அவர்களுக்கு வந்து சேர வேண்டிய சுதந்திரங்களை அடையாதபடி தடைபண்ணுகிறார் என்றும், அவைகள் அவர்களுக்கு கிடைக்குமானால் அது அவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கும் என்றும் ஏவாளிடம் சொன்னான். அவன் தாயாகிய ஏவாளிடத்தில், தேவன் விலக்கப்பட்ட மரத்தின் கனியை புசிக்க வேண்டாம், அது அவர்களுடைய அழிவில், மரணத்தில் கொண்டு போய் விடும் என்று பொய் சொன்னார் என்று ஒருவேளை சாத்தான், இப்போழுது தன்னுடைய தவறான தீர்மானத்தில் ஒரு வேளை தன்னுடைய யோசனையையே கூறியிருக்கலாம். தனது சாயலில் தேவன் உருவாக்கிய சிந்திக்கும் திறனுடைய எந்த சிருஷ்டிகளிலும் ஒருபோதும் மரணம் ஏற்பட்டதை சாத்தான் கண்டதில்லை. ஆகவே, இப்பொழுது

முறைகேடான தனது மனதில், சிருஷ்டிப்பைக் குறித்து தேவனுக்கு வஞ்சனையான நோக்கம் இருந்தது என்று பழி சுமத்தியது மாத்திரமன்றி, இப்பொழுது அவர் தன்னுடைய சிருஷ்டிகளிடம் வேண்டு மென்றே பொய் சொன்னார் என்று நினைத்தான்; அதன்படி அவர்களை அவர் ஓர் அளவு அறியாமைக்குள் வைத்து தன்னுடைய திட்டத்தை செயல்படுத்தும்படியாக இந்த சமயம் அவர் எடுத்துக் கொண்டது சந்தேகத்திற்கு இடமில்லாமல் கொடுங்கோல அதிகாரம் தான் என்ற முடிவுக்குள் வந்தான்.

பொல்லாத யோசனை நடைமுறைக்கு வந்தது. தாயாகிய ஏவாளின் மனம் இதுவரை தேவனுக்கு நன்றியுள்ளதாகவும், அவருடைய எல்லா இரக்கங்களுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும், அவரை உயர்வாக மதிக்கத்தக்கதாகவும் இருந்தது. இதுவரை அவரை சத்தியம், கிருபை, இரக்கம், அன்பு ஆகியவற்றின் ஊற்றாக நினைத்திருந்த அவளது மனம், இப்பொழுது தான் ஏமாற்றப்படுகிறதாவும், தான் அதிக அறிவை பெற்றுக்கொள்ளாதபடி சரியான சுதந்திரம் தடுக்கப்படுகிறதாகவும், மேலும், தேவன் அவர்களை அறியாமை என்னும் அடிமைத்தனத்திற்குள் வைக்கும்படியாக, அவளிடத்தில் விஷயங்களை தவறாகக் கூறிக் கொண்டிருக்கிறார் என்றும், அது அவளுக்கு மரணத்தை விளைவிக்கும் என்று பயம் காட்டிக்கொண்டிருக்கிறார் என்றும் நினைக்கும்படி அவளுடைய மனதில் விஷமான எண்ணத்தை சாத்தான் ஏற்படுத்தினான். ஆனால், அவர்களை அதிகமாக நேசித்தவனும், அவர்களுடைய நலனிலும், சுதந்திரத்திலும் அக்கரை உள்ளவனும், இப்பொழுது புதிதாக கிடைத்த நண்பனுமாகிய சாத்தான், அவர்களிடம் விலக்கப்பட்ட கனியை புசிப்பது அழிவையும், மரணத்தையும்கொண்டு வராது என்பது மாத்திரமல்லாது அது அதிகமான அறிவையும் சுதந்திரத்தையும் கொண்டு வருவதோடு அவர்களுடைய அதிகாரம் அனைத்தையும் உபயோகிக்கவும் முடியும் என்று உறுதிபடக்கூறினான். அந்த விஷம் துரிதமாக கிரியை செய்தது. தாயாகிய ஏவாளின் இருதயத்தில் இதற்கு முன்பாக இருந்ததுபோல இல்லாமல் சுயநலமும், அடைந்தே தீரவேண்டும் என்கிற உணர்வும் கிளர்ச்சி பெற்றது. ஏனெனில், அவளுடைய முந்தைய அனுபவத்தில் இப்படியான சிந்தனைகளோ உணர்வுகளோ வந்ததில்லை.

சாத்தானின் இந்த நிலை அவனை நிச்சயமாக, யேகோவா தேவனிடமிருந்து பிரித்தது. அவன் புதிய மனுக்குலத்தை தன்னுடைய

வேலையாட்களாக, தன்னுடைய இராஜ்யமாக பிடித்துக்கொள்ள முடியும் என்று தன்னுடைய திறமை மேல் துணிவுள்ளவனாக இருந்தான். அல்லது அவன் சொல்லியிருந்தபடி, திவ்விய கொடுங்கோன்மையிலிருந்து புதிய மனுக்குலத்தை விடுவிக்கும்படி தன்னுடைய முயற்சியில் துணிச்சல் உள்ளவனாக இருந்தான். மீறுதலினால வந்த விளைவுகளாகிய மனுக்குல ஜோடி ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டதையும், அதன் ஜீவ விருட்சத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதையும், அவர்கள் படிப்படியாக வதங்கவும், அழியவும் தொடங்கியதையும் அவன் பார்த்தபோது, நிச்சயமாகவே அவன் ஏமாற்றம் அடைந்தான். அது மாத்திரமல்ல, தாயாகிய ஏவாளும் ஏமாற்றம் அடைந்தாள். ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை என்று வேதம் சொல்லுகிறது. அவனுக்கு கீழ்ப்படியாமையினால் என்ன வரும் என்பது தெரிந்திருந்தது. இந்த செயலில் அவனுடைய பங்கு, தானாக சம்பந்தப்பட்டதுதான், நாம் அதை ஒரு தற்கொலை என்று கூறலாம். தன்னுடைய மனைவி விலக்கப்பட்ட கனியை புசித்ததினால் மரித்தே ஆகவேண்டும் என்ற எண்ணத்தினால் உந்தப்பட்டவனாக, அவனுடைய சொந்த மகிழ்ச்சி இதனால் அழிந்து போகும் எனறு உணர்ந்து அவளோடு மரிக்க உறுதி எடுத்துக்கொண்டான். அவன் திவ்விய குணாதிசயத்தை நன்றாக அறிந்திருப்பான் என்றால், ஏனெனில் அது, தேவன் மீட்பில் சம்பந்தங் கொண்டிருப்பது அப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருந்தது, நிச்சயமாகவே, கஷ்டத்திலிருந்து வெளியே வரும்படியான உதவிக்கு அவன் தேவனை நம்பியிருப்பான், திவ்விய கட்டளைக்கு எந்த கிரயம் செலுத்தியும் கீழ்ப்படிதலுள்ளவனாக இருந்திருப்பான். ஆனால், இப்பொழுது சாத்தானைப்பற்றி சிந்திப்போ மானால், அவன் பொல்லாத வழியை தெரிந்துகொண்டபடியால், அப்பொழுதிலிருந்து அவனது பயணத்தின் ஒவ்வொரு படியும் அவன் நீதியின் ஒழுங்கிலிருந்து வெகு தூரமாக விலகிப்போவது போன்று தோன்றுகிறது. ஆகவே அவனுடைய முதலாவது பொய்யான ‘‘நீங்கள் சாகவே சாவதில்லை’’ என்பது மிகவும் கனிவுடன் சொல்லப் பட்டிருக்கலாம்; அன்றிலிருந்து இன்றுவரை தன்னுடைய பொய்யான அறிக்கையை நிலைநிறுத்தும்படி ஒவ்வொரு தெரிந்துள்ள வழியின் படியும் முயற்சிக்கிறான்; மேலும், மரணம் என்று ஒன்று கிடையாது என்றும், அவர்கள் மரிக்கும்போது முன்பு இருந்ததை விட ஜீவனோடு இருக்கிறார்கள் என்றும் நம்ப வைத்து ஏமாற்றவும் எல்லா முயற்சி களையும் செய்கிறான். பழைய பொய்யான ‘‘நீங்கள் சாகவே சாவதில்லை’’

என்பது தற்காலிக சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளது. மரணம் முழு மனுக்குல குடும்பத்தின்மேலும் வந்ததால், இப்பொழுது மரணம் நிஜமானது என்பதை சாத்தானைத் தவிர வேறு யாரும் அறிந்திருக்க வில்லை. மேலும், மனுக்குலமானது பாவம் என்கிற விஷயத்தைக் குறித்தும் அதனால் வரும் தண்டனை, ஈடுபலி, அதன் பலனாகிய இழந்ததை திரும்பப்பெறுதல், சத்தியத்தின் ஆற்றல் ஆகியவைகளை தெளிவாகவும் துல்லியமாகவும் அறிந்துகொண்டால், அது மனுக்குலத்தை அதன் நீதியும் இன்னும் இரக்கமுமுள்ள சிருஷ்டிகரிடத்தில் இழுக்கும் என்பதை சாத்தானைத் தவிர வேறு எவரும் இப்பொழுது நன்றாக அறிந்திருக்கவில்லை.

ஆனால், இதைத்தான் சாத்தான் தடுக்க விரும்புகிறான். ஆகவே அவன் தேவனுடைய உண்மையான குணாதிசயத்தையும், திட்டத்தையும் பற்றிய விஷயங்களில் இருந்து மனுக்குலத்தின் மனங்களை குருடாக்க முயற்சிப்பதோடு, அதற்கு மாறாக திவ்ய திட்டத்தையும், குணாதிசயத்தையும் பற்றிய தவறான அவதூறான எண்ணங்களால் அவர்களுடைய மனங்களை நிரப்ப முயற்சிக்கிறான். ஆகவே மரணமும், மரணத்திற் கேதுவான எல்லா உபத்திரவங்களும், அதாவது மனதிலும், நன்னறியிலும், சரீரத்திலும் ஏற்படும் அழிவும், வியாதியும், தேவனுக்கு கீழ்ப்படியாததால் வந்தது, மற்றும் அவனுடைய பொய்யை பின்பற்றிய தினால் வந்ததன் விளவு என்பதை மனிதர்கள் அறிந்துகொள்வதை தவிர்த்து, பெரிய யெகோவா, நீதிக்கும், அன்புக்கும் தானே அடையாளமாக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுபவர், பெரும்பான்மையானவர்களிடம் கெடுதி விளைவிக்கும் எண்ணத்துடன், மனுக்குலத்தின் குடும்பத்தை அநீதியுடனும், அன்பில்லாமலும் சிருஷ்டித்தார், மேலும் தன்னுடைய இருதயத்தில் அவர் யோசனை பண்ணி, ஏற்கனவே தீர்மானித்துவிட்டார், மனிதனை சிருஷ்டிக்க ஆரம்பிப்பதற்கு முன்னரே, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கானவர்கள் நித்திய காலமாக உபத்திரவப்படுத்தப்பட வேண்டும், மேலும் ஒரு ''சிறு மந்தை'' மாத்திரம் மகிமைக்கு எடுத்து செல்லப்பட வேண்டும், அதுவும் அவர் இரக்கமுள்ளவராக இருந்திருந்தால் எல்லோருக்கும் அவர் அதை செய்ய அதிகாரம் உள்ளவராக இருந்து செய்திருப்பார் என்பதற்கு அது ஒரு உதாரணம் என்று சாத்தான் அநேகரை நம்ப வைத்து வெற்றி பெற்றிருக்கிறான். இப்படியாக இன்றும் அதிக, இதைப் போன்ற கண்ணிகளினாலும், ஏமாற்றுதலினாலும், மனுக்குலத்தின் யோசிக்கும்

தன்மையை ஆறாயிரம் வருடங்களாக கெடுத்துப்போட்டதுடன், மனிதர்களின் இருதயங்களை தேவனிடத்திலிருந்தும், சத்தியத்தின் செய்தியிலிருந்தும் திருப்பி விட்டான். அப்போஸ்தலர் இதை உறுதிபட பின்வருமாறு கூறுகிறார்: ''தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராத படிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.'' (2 கொரி. 4:4) அது அவர்களை பிரகாசமாக்கி, அறியாமை, தவறான கருத்து என்பவைகளின் அந்தகார இருளை விரட்டி, அவர்கள் பரலோக தகப்பனின் உண்மையான குணாதிசயத்தையும், கிருபையுள்ள திட்டத்தையும் பார்க்க செய்ய வேண்டும்.

திவ்விய வெளிப்பாடான வெளிச்சம் எங்கெங்கெல்லாம் (வேதாகமம் மாத்திரமன்றி ''சத்தியத்தின் ஆவியும்'') செல்கின்றதோ, அங்கெ சாத்தானின் தவறாக போதிக்கப்பட்ட இருளுக்கு ஆபத்து என்று பொருள்படும். சாத்தானின் பொய்யை விட சத்தியம் ஆயிரம் மடங்கு அதிகமாக நியாயமானது, அவனுடைய தந்திரமான, வஞ்சகமான செயல்கள் இருந்திராவிட்டால் துரிதமாக அது அவனை எதிர்த்து வெற்றி பெறும். இதனால் அவன் தொடர்ந்து வெவ்வேறு விதங்களில் செயல்பட்டு தன்னுடைய பழைய பொய்யை நிலை நாட்டும்படி புதிய ஏமாற்று வேலைகளை கொண்டு வருகிறான்; மேலும், முடிந்தால் ''தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும்'' கூட ஏமாற்ற முயற்சிக்கிறான். சத்தியத்தை மறுக்கவும், தவறை சாத்தியமானதாகவும், உண்மை போன்றும் தோன்றச் செய்வதற்கு அவன் எடுத்துக் கொண்ட முதலாவதான, மிகப் பெரிய வெற்றிகரமான முயற்சிகளில் ஒன்று பெரிய அந்தி கிறிஸ்து முறைமையான போப்பாண்டவரின் ஆட்சியை அபிவிருத்தி செய்ததுதான். அதன்மூலம் அவன் உலகம் பூராவும் மிக அற்புதமான செல்வாக்கை உபயோகித்தான், ஆகவே இன்றைக்குள்ள வெளிச்சத்தின்படியும், அந்த பயங்கரமான ஸ்தாபனத்திலிருந்து ஒரு அளவு சுதந்திரத்துடன், மனுக்குலம் அது ஆளுகை செய்த காலத்தை நோக்கிப் பார்த்து அதை ''இருண்ட காலம்'' என்று அழைக்கிறது. அது அநீதி என்னும் இருளாக, அது தவறு, மூட நம்பிக்கை என்னும் இருளாக, உபத்திரவப்படுத்துதல் என்னும் இருளாக, தங்களுடைய மனசாட்சி கூறுகிறபடி தேவனை ஆராதிக்க முயற்சித்தவர்களுக்கு எதிராக

இடைவிடாது, பயங்கரமாக இருந்தது. அவர்கள் உண்மையான வெளிச்சத்தைப் பெற்று, ஜனங்களுக்கு முன்பாக அதை உயர்த்துவதில் உண்மையாயிருக்க அளவிற்கு அவர்களுக்கெதிராக இடைவிடாது, பயங்கரமாக இருந்தது. இந்த ஸ்தாபனம் அவ்வளவு கொடுரமாக தன்னுடைய செயல்பாட்டிலும், செல்வாக்கிலும் இருந்தது மாத்திரமல்லாது, அது சாத்தானின், தந்திரத்தையும், அபிலாசைகளையும், வஞ்சகத்தையும் பிரதிபலிப்பதாக இருந்தபடியால் அது ஆண்டவரால், அது சாத்தானேதான் என்று அடையாளப்படுத்தி கூறப்பட்டுள்ளது. அது விவரமாக சொல்லவேண்டு மென்றால், வார்த்தையின்படி தேவனின் பிரதிநிதி என்று கூறுகையில் உண்மையிலேயே அது அவனுடைய பிரதிநிதியாக இருந்தது. (தொகுதி 2, அதிகாரம் 9 ஐப் பார்க்க)

தீர்க்கதரிசனம் முழுவதும் சாத்தானுக்கும் அவனது பிரதான பிரகாசிக்கப்பட்ட பிரதிநிதிக்கும் இடையிலுள்ள இந்த ஒருங்கிணைந்த விளக்கத்தையும் கண்டனத்தையும் நாம் காண்கிறோம். உதாரணமாக, பாபிலோனின் வல்லமையை அழித்தபிறகு, அந்த விளக்கம் சொல்லர்த்த மான பாபிலோனுக்கும், மாம்சீக இஸ்ரயேலின் அடிமைத்தனத்திற்கும், இன்னும் விசேஷமாக ஆவிக்குரிய இஸ்ரயேலின்மேல் இரகசிய பாபிலோன் செலுத்திய அடிமைத்தனத்திற்கும் விளக்கமாக உள்ளது. சாத்தானின் சொந்த வழிமுறையை பிரதானமாகவும், இரண்டாவதாக மாம்சீக இஸ்ரயேலின் அபிவிருத்திக்கும் வீழுகைக்கும் பொருந்து வதாகவும், இன்னும் அது இரகசிய பாபிலோனின் அபிவிருத்திக்கும் வீழுகைக்கும் பொருந்துகிற முறையில் தீர்க்கதரிசி தொடர்கிறார்.

''அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனங்களை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீட்டிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்திலே சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய். உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப் பார்த்து, உன்னைக்குறித்துச் சிந்தித்து: இவன் தானா பூமியைத் தத்தளிக்கவும், இராஜ்யங்களை அதிரவும் செய்து, உலகத்தை வனாந்தரமாக்கி அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்.'' (ஏசா. 14:12–17)

பாபிலோன் உலகத்தின் மற்ற இராஜ்யங்களை விட அதிகமாக தன்னை உயர்த்தியது உண்மையானது போல போப்புவாகிய அந்தி கிறிஸ்து, உலகத்தின் தேசங்களுக்கு மேலாக தன்னை ஒரு இராஜ்யமாக உயர்த்தியதும் உண்மையானது. அது அவர்களை ஒரு இருப்புக் கரத்தால் ஆளுகை செய்ய முற்பட்டது, உண்மையான கிறிஸ்துவின் நாமத்தினாலே அப்படி செய்ய அதிகாரம் உண்டு என்று உரிமை கொண்டாடியது. அழிவுக்குகொண்டு வரப்பட்ட ஒன்றுபோல, வேசிகளுக்கெல்லாம் தாயாகிய மகா பாபிலோன், இனிமேலும் எழும்ப முடியாதபடி, கடலில் தள்ளப்பட்ட இயந்திர கல்லைப் போன்ற கடைசியான அழிவு பாபிலோனுக்கு அதிகமாக காத்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற ஆர்வம் மற்றவர்களை விட அதிகமாக இருந்தது போல, சாத்தானுக்கு தேவனுடைய சிருஷ்டிகளுக்கு மேலாக அதிகாரம் செலுத்த வேண்டும் என்றும், தனக்கென்று ஒரு இராஜ்யம் இருக்கவேண்டும் என்றும், தனக்கென்று பிரஜைகள் இருக்கவேண்டும் என்றும், பரலோகத்தில் யெகோவாவின் இராஜ்யத்திற்கு போட்டியாக பூமியில் தனக்கு ஒரு இராஜ்யம் இருக்க வேண்டும் என்றும் இன்னும் அதிகமான ஆர்வம் கொண்டிருந்தான். எனினும் இது நிறைவேறாது. மீட்பரின் ஆயிரம் வருட அரசாட்சியின் போது, சாபம் அகற்றப்பட்டு, உலகம் ஆசீர்வதிக்கப் படும்போது, முதலாவதாக சாத்தானே கட்டப்படுவான். இதன் பின்னர், வேதாகமம் தெளிவாக கூறுகிறபடி, அவன் அழிக்கப்பட இருக்கிறான்; அவனுடை தூதர்கள், பணிவிடை செய்பவர்கள், அவனைப் பின்பற்றி அவனுடைய வழியில் செல்பவர்கள் அனைவரும் அழிக்கப்பட இருக்கிறார்கள்.

பொல்லாங்கில் சாத்தானின் கூட்டாளிகள் – பிசாசுகளின் லேகியோன்

நாம் ஏற்கனவே பார்த்தபடியும், வேதாகமம் கூறுகிறபடியும் ஆரம்பத்தில் சாத்தான் வஞ்கம் பண்ணும்போதும் கலகம் பண்ணும்போதும் அவனுக்கு தூதர்களில் கூட்டாளிகள் யாரும் கிடையாது. அதற்கு மாறாக, எல்லா பரிசுத்த தூதர்களும் திவ்விய ஆட்சியோடு முழுமையாக சம்மதித்திருந்தார்கள் என்றும் நாம் புரிந்து கொள்ளலாம். அவர்களில் சிலர் விழுந்து போன மனிதர்களை ஆளுகை செய்யவும், மனுமக்களுக்கு

உதவி செய்யவும், கூடுமானால் மறுபடியும் தேவனோடு ஒருமித்திருக்கச் செய்யவும், இன்னும் அதிகமான சீர்கேடு வராதபடி கட்டுப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். இது நோவாவின் ஜலப்பிரளயத்திற்கு முன்பாக இருந்த நிலைமை. இதுதான் பாவத்தோடும், பக்தியற்ற நிலையோடும், ஒழுக்கம் வீழ்ச்சியடைந்த நிலையோடும் தூதர்களுக்கு ஏற்பட்ட முதல் அனுபவமாகும். அது அவர்களுக்கு ஒரு பரீட்சையாக அமைந்தது; ஏனெனில், திவ்விய சித்தத்திற்கு விரோதமாக ஒரு பொல்லாத வழியை காட்டியது; இப்படியான வழியில் இன்பமும், நன்மைகளும் கிடைக்கும் என காட்டியது; இப்படியாக அவர்கள் யேகோவா தேவன் மேல் வைத்திருந்த அவர்களுடைய பக்திக்கும் கீழ்ப்படிதலுக்கும் ஒரு பரீட்சையாக அமைந்தது. இதற்கு முன்பாக பரிசுத்தமாகவும், கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் இருந்த சில தூதர்கள் இந்த பரீட்சையில் மீறுதல் பண்ணுகிறவர்களானார்கள், விழுந்தார்கள், பாவத்தினால் கறைபட்டார்கள் என்று வேதாகம் நமக்கு தெளிவாக அறிவிக்கிறது. யூதா, பேதுரு இருவருமே இதைக் குறித்து, ''தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாதவர்கள்'' என்றும், இதன் விளைவாக தேவன் அவர்களுடைய சுதந்திரத்தை மட்டுப்படுத்தினார் என்றும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக் கென்று நித்திய சங்கிலிகளிலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார் என்றும், இந்த நாளிலே அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு நடக்கும் என்றும் கூறுகிறார்கள். (2 பேது. 2:4; யூதா 6)

பரிசுத்த தூதர்களிடம் இருந்து ஒதுக்கப்பட்ட இந்த விழுந்து போன தூதர்கள், அப்பொழுதிலிருந்து பேய்கள் அல்லது பிசாசுகள் என்றும் அறியப்பட்டுள்ளன. சாத்தான் ''பிசாசுகளின் தலைவன்'' என்று அழைக்கப்படுகிறான். இவனோடு அவைகள் மனிதர்கள் மத்தியில் குழப்பம் உண்டு பண்ணுகிற வேலையாட்களாக ஒத்துழைக்கிறார்கள். நற்கிரியைகளில் அவைகளுக்கு வேலை கிடையாது, அவைகள் பொல்லாப்பில் இருக்கும்படி விடப்பட்டு, அவைகள் பொல்லாங்கில் பெருகுகிறதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லை. அவைகள் ஆதியிலே சொல்லப்பட்ட அவனுடைய பொய்யான ''நீங்கள் சாகவே சாவதில்லை'' என்பதை ஆழமாய் பதிய வைப்பதில் சாத்தானின் உண்மையான கூட்டாளிகளாக இருக்கின்றன. ஜலப்பிரளயத்திற்கு பின்னர், இந்த விழந்து போன தூதர்களான பிசாசுகள், மனுக்குலத்தை, மதம் என்ற போர்வையின் கீழ் வழிதப்பி நடக்க செய்தது தெளிவாகத்

தெரிகிறது. சங்கிலியால் கட்டப்பட்டு அல்லது சிறைபிடிக்கப்பட்டு இருக்கும் போது மனிதர்கள் முன்பாக இனியும் மாம்ச சரீரத்தில் தோன்ற முடியாமல், இழிவான மனுக்குலத்தில், தங்களுடைய பிரதிநிதிகளாக அல்லது இடைத் தரகர்களாக தங்களை விட்டுக் கொடுக்க விருப்பமுள்ளவர்களாக இருந்த மனிதர்களை சீக்கிரத்திலேயே கண்டு கொண்டு, தங்களுடைய சரீரத்தில் இருந்து செயல்படாமல் இவர்களின் சரீரங்கள் மூலமாக செயல்பட்டன. இப்படிப்பட்ட இடைத்தரகர்கள் அல்லது மனித தொடர்பு வாய்க்கால்களாக பிசாசுகளுக்கும் மனுக்குலத்தினருக்கும் இடையே இருந்தவர்கள் ஆதிகாலத்தில் ''மந்திரவாதிகள்,'' ''மாந்திரீகர்கள்,'' '' சூனியக்காரிகள்,'' ''செத்துக் போன ஆவிகளோடே பேசுகிறவர்கள்,'' ''மாந்தரீகத்தால் நோயை குணப்படுத்துபவர்கள்,'' பொய்யான மதங்களின் ''ஆசாரியர்கள்'' என்று அழைக்கப்பட்டனர். இவர்கள், உலகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தன்னுடைய பிரதிநிதிகளாக இருக்கும்படியாக தேவன் தெரிந்து கொண்ட இஸ்ரயேலர்கள் மேல் கட்டுப்பாடு வைக்க எடுத்துக்கொண்ட பல்வேறு முயற்சிகள், வேதாகமத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகளுக்கு எதிராக ஜனங்கள் கடுமையாக எச்சரிக்கப்படுகிறார்கள். பிரமாணங்கள் உண்டாக்கப்பட்டன, இஸ்ரயேலுக்கும் பிசாசுகளுக்கும் இடையில் தொடர்பு உண்டாக்கின பிரதிநிதிகளுக்கு எதிராக ஒரு குறிப்பட்ட அளவுக்கு இந்த பிமாணங்கள் அமுல்படுத்தப்பட்டன. அதற்கான தண்டனை மரணமாகும்.

சிருஷ்டிப்பின்படி மனிதன் தேவனுடைய தற்சுரூபமாக இருக்கிறான்; ஒரு தனிப்பட்ட நபராக சுதந்திரமுள்ளவனாக இருக்கிறான். இந்த சுதந்திரம் நன்னெறியை அவன் தெரிந்து கொள்ளும் நிலைக்கு செல்கின்றது. ஆகவேதான் மனிதன் ''சுயாதீனமுள்ளவன்'' என்று அழைக்கப்படுகிறான். அவன் எவ்வளவுதான் தன்னுடைய தனிப்பட்ட சுதந்திரத்தை இழந்தாலும், அல்லது ஆட்களுக்கோ அல்லது தன்னுடைய சொந்த விருப்பங்களுக்கோ அடிமைப்பட்டாலும், அவனுடைய தெரிந்து கொள்ளும் நிலை சுதந்திரமாகத்தான் உள்ளது. அவன் தன்னுடைய சித்தத்திற்கு சுதந்திரம் உள்ளவனாக, அவனுடைய மனதை அவன் விருப்பப்படி எந்த விதத்திலும் உபயோகிப்பதற்கு சுதந்திரம் உள்ளவனாக இருக்கிறான். அவன் தன்னுடைய சித்தத்தை ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க விரும்பினால் அவன் அப்படி செய்யலாம்;

அவன் ஒரு பொல்லாத வசீகர சக்திக்கு விட்டுக் கொடுக்க விரும்பினால் அப்படியே செய்யலாம். அவன் தேவனுக்கும், பொல்லாத வசீகர சக்திக்கும் விலகி தனியாக நிற்க வேண்டுமென்றாலும், அப்படியே செய்யலாம், ஆனால் அவனுடைய சரீர பலமும் மனத்தளவு தீர்மானமும் அனுமதிக்கும் அளவுக்கு அவன் செய்யலாம். ஆனால் வீழ்ச்சியின் நிமித்தம் பலவீனமடைந்து, அதன் பலகீனங்களை சுதந்தரித்துக் கொண்டபடியால், அவனுடைய முடிவு எடுக்கும் திறனும், அறிவும், யோசித்துப் பார்க்கக் கூடிய திறமையும் அதிகமாக குறைந்து விட்டது. ஆகவே அவனுடைய தெரிந்து கொள்ளுகிற நிலையில் சுதந்திரம் இருக்கும் அதே அளவுக்கு ஆபத்தும் இருக்கிறது; '' வஞ்சிக்கிற ஆவிகளினாலும் பிசாசுகளின் உபதேசங்களினாலும்'' தாக்கப்படும் போது இப்படி ஆகிறது. இந்த வஞ்சிக்கிற ஆவிகளும் பிசாசுகளின் உபதேசங்களும் உலகம் பூராவும் கிரியை செய்கிறதாக வேதாகமும் கூறுகிறது. (1 தீமோ. 4:1) ஆகவே இந்த விழுந்து போன தூதர்களாகிய பிசாசுகள் எல்லா தேசங்களிலும், எல்லா நேரத்திலும், இடைத் தரகர்களை, மீடியாக்களை (mediums) பெற்றுக்கொள்வதற்கு சாத்தியமாக இருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த மீடியாக்களாக (mediums) இருக்க யாரை தேடுகின்றன என்று பார்க்கும்போது, மனதில் திறமை உள்ளவர்களை, இயற்கையாகவே இந்த குணாதிசயங்களாலும், திறமைகளாலும் பொதுவாக ஜனக் கூட்டத்தை அடக்கி ஆள்பவர்களையே தேடுகின்றன. அதன் விளைவாக அஞ்ஞானிகளின் நாடுகளிலும் , இந்தியர்கள் மத்தியிலும் இந்த மீடியாக்களாக ஆசாரியர்கள், மாந்திரீகர்கள், சூனியக்காரிகள், இறந்து போனவர்களின் ஆவிகளோடு பேசுகிறவர்கள், கைரேகை பார்க்கிறவர்கள், குறி சொல்லுகிறவர்கள் ஆகியோர் மிக ஞானமுள்ளவர்களாக, மிக திறமை உள்ளவர்களாக இருந்தார்கள். இந்த நாகரீகமுள்ள காலங்களில், கிறிஸ்தவ உலகில், இந்த பிசாசுகள் உபயோகப்படுத்துகின்றவர்கள் அனேக வேளைகளில் ஆவியோடு உறவாடுகிறவர்கள் மத்தியில் ''மீடியாக்கள்'' என்கிற பெயரால் அழைக்கப்படுகிறார்கள். மிக சரியாக சொல்லப்பட்ட பெயர்களில் ஒன்றாக இது இருக்கிறது. ஏனெனில் மிக எளிதாக, கண்டிப்பாக இப்படி தங்களை இப்படியான பொல்லாத வசீகர சக்திகளுக்கு ஒப்புக்கொடுத்து, மனிதர்களுக்கு தொடர்பு உண்டு பண்ணிக்கொடுக்கும் வாய்க்கால்களாக இருப்பவர்கள், வார்த்தையின் மூலமாகவோ, தட்டுகள் மூலமாகவோ, எழுதுவதின் மூலமாகவோ,

அல்லது வேறு எந்த வழியிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பவார்கள் இந்தப் பெயரால் அழைக்கப்படுகிறார்கள்.

இப்படிப்பட்ட மீடியாக்கள் மூலமாக வருகிற, இந்த பிசாசுகளின் பொதுவான முறைகளும், பொதுவான போதனைகளும் எல்லா நேரங்களிலும் எல்லா தேசங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. அவைகள் தங்களை தவறாக எடுத்துக்காட்டுகின்றன, மரித்தவர்களைப் போன்று தோன்றுகின்றன; வெகு சில சந்தர்ப்பங்களில், தாங்கள் பிசாசுகள்தான் என்று அறிமுகப்படுத்திக் கொள்ள துணிவு உள்ள நேரங்களைத் தவிர மற்ற எல்லா நேரங்களில் மரித்தவர்களைப் போன்று தோன்றுகிறார்கள். உதாரணமாக, சீனர்கள் மத்தியில் இப்படி நடக்கிறது. 1 கொரி. 10:20 யும் பாருங்கள். தங்களை இறந்து போன மனிதர்கள் போல் மறைத்துக் கொள்ளுவதால், அநேக வேலைகளை வெற்றிகரமாக முடித்துக் கொள்ளுகிறார்கள்:

1) ஏதேன் தோட்டத்தில் சாத்தான் ஆதியிலே பிரகடனம் பண்ணிய, ''நீங்கள் சாகவே சாவதில்லை'' என்கிற பொய்யை அவர்கள் ஆதரிக்கின்றார்கள்.

2) இந்த பொய்யை பயன்படுத்தி மனுக்குலத்தின் மனதை சுவிசேஷத்திற்கும் அதன் எல்லா நன்மைகளுக்கும் எதிராக வெறுப்புணர்ச்சி கொள்ளச் செய்கிறார்கள்.

3) பாவத்தையும் அதற்கான தண்டனையான மரணத்தையும், மனிதனின் மீட்புக்கும், பாவத்திலிருந்து மீளவும் உண்டான திவ்விய நன்மைகளையும், இவ்விதமாக பொருத்தமற்றதாக, நியாயமற்றதாக, முட்டாள்தனமானதாக தோன்றும்படி செய்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை மறுத்து, பாவத்தின் சம்பளம் நித்திய ஆக்கினை என்று சொல்கிறபடியால், அவர்களுடைய தத்துவம் திவ்விய குணாதிசயத்தை அவதூறுபண்ணுகிறது மாத்திரமல்லாது, அதை அநீதியின் அவதாரமாக, கொடுமையின் பிரதிபிம்பமாக சித்தரிக்கிறது. அது வேத உபதேசமான ஈடுபலியை ஒரு கேலியாக்குகிறது. விழுந்துபோயிருக்கிற நிலைமையின் யோசனையால் கல்வாரியில் நம்முடைய ஆண்டவரின் மரணம் கூட நித்திய வேதனையிலிருந்து மீட்க முடியவில்லை என்று தீர்மானிக்கிறது; மேலும் தண்டனைக்கும், ஈடு பலியாக செலுத்தப்பட்ட கிரயத்திற்கும் இடையில் உடன்பாடு இருக்க முடியாது என்று தீர்மானிக்கிறது.

4) உயிர்த்தெழுதல் என்கிற உபதேசத்தை, பிரயோஜனமற்றதாகவும் நியாயமற்றதாகவும் ஆக்குகிறது; ஏனெனில் மரணம் இல்லாவிட்டால், மரித்தோரின் உயிர்த்தெழுதல் எப்படி இருக்கும்? எல்லாரும் மரிக்கும் போது அவர்கள் இதற்கு முன்பதாக இருந்ததைக் காட்டிலும் அதிக ஜீவன் உள்ளவர்களாகவும், முன்பு இருந்ததைக் காட்டிலும் நல்ல நிலையிலும் இருந்தால், உயிர்த்தெழுதலினிமித்தம் என்ன பிரயோஜனம் இருக்க முடியும்? அல்லது சுவிஷேசத்தில் கூறப்பட்டுள்ளபடி, அது நம்பிக்கையாக, ஒரே நம்பிக்கையாக ஏன் நம்முன் வைக்கப்பட வேண்டும்?

5) அது தவறுகளுக்கு அடிமையாக்க வழி வகுக்கிறது. அஞ்ஞானிகள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, பெற்றோர்களை ஆராதிக்கிற நிலையை உருவாக்குகிறது, மேலும் ஆத்துமாக்கள் மறு பிறவிகளாக வரமுடியும் என்கிற நம்பிக்கையை உருவாக்குகிறது. அதாவது மனிதர்களாக மரிப்பவர்கள், சிறிது காலம் சரீரம் அற்ற நிலையில் இருந்த பின்னர், மறுபடியும் உலகத்தில் நாய்களாக அல்லது பூனைகளாக, குதிரைகளாக அல்லது மாடுகளாக, எலிகளாக அல்லது சுண்டெலிகளாக பிறந்து, இந்த வாயில்லா பிராணிகளின் பலவிதமான அனுபவங் களுக்கூடாக கடந்து செல்லுகிறார்கள்; தகுதி உள்ளவர்களாக இருந்தால் உயர்குடியினரின் நிலைமைகளுக்கு கடந்து செல்லுகிறார்கள்.

6) கிறிஸ்தவ உலகில் இந்த பொல்லாங்கு சாத்தானின் உருவில் அதிகமாக வந்தது. கிறிஸ்தவ உலகம் திருப்தி அடைந்துள்ள எல்லா மொத்த தவறுகளுக்கும், முட்டாள் தனத்திற்கும், தப்பறையான போதகமே அடிப்படையாக அமைந்தது. பிசாசுகளினால் உருவாக்கப் பட்ட இந்த உபதேசத்தினாலன்றி நித்திய வேதனை என்கிற கோட்பாடு வந்திருக்காது; அதன் உபதேசமான மரித்தவர்கள் உயிரோடு இருக் கிறார்கள், அவர்களால் வேதனையை தாங்கிக் கொள்ளமுடியும் என்கிற கோட்பாடும் இருந்திருக்காது. இவ்வித போதனை இருந்திராவிட்டால் உத்தரிக்கும் ஸ்தலம் என்ற கோட்பாடும் போதனையும் இருந்திருக்காது; மரித்தவர்களுக்காக திருப்பலி பூஜைக்கு செலவழிக்கவும் தேவையிருந் திருக்காது. இதன் விளைவாக, இந்த பொய்யினால் வளர்ந்த குருத்துவத்திற்கான பெரிய ஸ்தாபனங்களும் விருத்தியடைந்திருக்க முடியாது. இந்த ஸ்தாபனங்கள் திவ்விய குணாதிசயத்தையும் திட்டங்களையும் அவர்களுடைய குதர்க்கமான வாதத்தினாலும் திரித்துக்கூறுதலினாலும் மனுக்குலத்தை அடிமைத்தனத்துக்குள்ளாக்கி யிருக்கிறது.

7) போப்பாண்டவரின் ஆதிக்கம் பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாபெரும் சீர்திருத்த இயக்கத்தால் முறிவுற்றாலும், பிசாசுகளால் கற்றுக் கொடுக்கப்பட்ட இந்த அடிப்படையான, தவறான கருத்துக்கள் உலகத்தின் எல்லா தேசங்களிலும் பல்வேறு ஆதாரங்களுடன் ஆதரிக்கப் பட்டன, விளக்கிக்காட்டப்பட்டன, வெளிப்பாடுகள் கவனமாக பாதுகாக்கப்பட்டன. சீர்திருத்தவாதிகள் முன்னேறினாலும், பொய்களின் பிதாவினால் கற்பிக்கப்பட்டு, அவனுடைய பொல்லாத ஆவிகளின் சேனைகளால் ஆதிரிக்கப்பட்டிருந்த இந்த ஆதி பொய்யினால் இன்னும் அவர்கள் கட்டப்பட்டிருந்தார்கள். புராட்டஸ்டான்ட சபையிலும் கூட, இன்றைக்கும் போராட்டமாக இருக்கும் எல்லாவிதமான கஷ்டங்களுக்கும் தவறுகளுக்கும் அடிப்படையாக அது ஆயிற்று. அது திவ்விய வெளிச்சத்திற்கு, பெரிய அளவில் அவர்களை குருடாக்கி, ''சகல பரிசுத்தவான்களோடும் கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று'' உணரமுடியாதபடி அவர்களை தடைபண்ணிற்று. எபே. 3:18

8) அது தன்னை புதிய நிலைக்கு ஏற்ப, கடந்த ஐம்பது வருடங்களில் சபைக்கு ஒளியின் தூதன் என்ற ஸ்தானத்தை எடுத்துக் கொண்டது. மேலும் சத்தியத்தை வாஞ்சிக்கிற அனைவரையும் வழி நடத்தும்படி நடித்தது. தேவனுடைய வசனத்தில் அதனுடைய குணாதிசயத்தைப் பற்றி சொன்னது சரியாக இருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ''சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்ளுவானே.'' 2 கொரி. 11:14

9) ஆவி உலகம் பெரும்பான்மையான கிறிஸ்தவ மக்களை பிடிப்பதில் வெற்றி பெறவில்லை. அவர்களுடைய மரித்துப்போன நண்பர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்ற பொய்யான கருத்தினால் குறைவுற்றவர்களாயிருந்தாலும், இந்த மீடியாக்கள் (சாத்தானால் பயன்படுத்தப்படக் கூடிய சிறந்த ஒன்று) செய்திகளை அறிவிப்பதற்கு தேவனால் ஒழுங்கு பண்ணப்பட்ட மீடியாக்கள் அல்ல என்றும், மேலும் தனக்கும் தன்னுடைய நண்பர்களுக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்தும் பாலமாக இருக்க இப்படிப்பட்ட மீடியாக்களை தேவன் ஒழுங்கு பண்ணமாட்டார் என்றும் கிறிஸ்தவர்கள் பொதுவாக தங்களுடைய உள்ளுணர்வில் அறிந்து கொண்டார்கள்; இந்த நண்பர்கள் உயிரோடு இருக்கிறார்கள் என்றும், காணமுடியா விட்டாலும் அடிக்கடி அருகில் இருக்கிறார்கள் என்றும் தவறாக நினைக்கிறார்கள். இதன் பின்னர் பெரிய

சத்துருவானவன், கூடுமானவரை அனேகரை கூடும்படி செய்யவும், பிடித்துக் கொள்ளவும், பொல்லாங்கில் கொண்டு வரவும், ஆவி உலகத்தை அனுமதித்தபோது, கிறிஸ்தவ விஞ்ஞானம், பிரம்மஞானம் போன்ற பல நாமங்களின் கீழாக அனேக தந்திரமான இச்சைகளை புகுத்தவேண்டும் என்றும், இன்னும் அதிகமாக மெய் கிறிஸ்துவத்துக்கு நெருக்கமாக கொண்டு வருவது அவசியம் என்றும் கண்டு கொண்டான்.

கிறிஸ்தவ விஞ்ஞானம், பிரம்ம ஞானம்

இந்த ஒழுங்குகள் திவ்விய வார்த்தைக்கு பயபக்தியாய் இருப்பது போன்று நடித்து, கிறிஸ்துவின் நாமத்தை வீணாக பயன்படுத்துகின்றன; அவரை மீட்பராக விசுவாசிப்பதில்லை; மனுக்குலத்தின் சடங்காச்ச சாரங்களில், தாங்கள் இது வரை அனுபவித்ததைக் காட்டிலும் ஏதாவது புதியதாக, அதைவிட மேலானது இருக்கிறதா என்று ஆசைப்படுகிற, தற்காலத்தில் விழிப்பு உணர்வுக்குள் வந்திருக்கிற கிறிஸ்தவர்களை திருப்திபடுத்துவதற்காக இந்த ஒழுங்குகள் ஆசை காட்டுகின்றன; வசனத்தின் முழு அர்த்தத்தின்படி போதிக்காமல், அதை புறக்கணித்து, அவர்கள் தங்களைப் பின்பற்றி வருபவர்களுக்கு விஞ்ஞான உண்மை, விஞ்ஞானம் என்பவைகளை ஊட்டுதாக கூறிக்கொள்ளுகிறார்கள்.

10) இழந்தவைகளை திரும்பப் பெறுதல் என்பது, கூடிய சீக்கிரத்தில் நடைபெறக் கூடிய திவ்விய திட்டம் என்பதைக் கண்டு, சத்துரு கிறிஸ்தவ விஞ்ஞானிகள், பிரம்ம ஞானிகள், ஞானதிருஷ்டிகாரர்கள் ஆகியோர் மூலம் மனுக்குலத்தின் கவனத்தை திவ்விய திட்டத்திலிருந்து திசைதிருப்ப முயற்சிசெய்துகொண்டு இருக்கிறான். ஏமாற்றக் கூடிய இந்த சத்தியத்தின் போலிகள் வேதாகமத்தில் அடிப்படை சத்தியத்தையே (ஈடுபலி) மறுப்பது நல்ல அறிவுள்ள மக்களைப் பொறுத்த வரை கிறிஸ்தவ உலகை ஏமாற்றுகிற சாத்தானின் அதிகாரம் குறைத்து கொண்டு வருகிறது, அவனுடைய வீடு விழுவதற்காக ஆடிக் கொண்டு இருக்கிறது என்பதை நமக்கு சாட்சி பகருவதாகஇருக்கிறது. ஆயிரம் வருட விடியற்கால வெளிச்சம் மனுக்குலத்தின் மேல் வந்து கொண்டு இருக்கிறது, மேலும் பாவத்தின் பாதுகாவலன் அவனுடைய இறுதி எல்லையில் இருக்கிறான். அவன் சீக்கிரமாக கட்டப்படப் போகிறான், கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியில் உலக ஜனங்களை ஏமாற்றிக் கொண்டிறாதபடி தடைபண்ணப் படப்போவதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்

உண்டாகட்டும். இந்த காலத்தின் போது சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல முழு உலகமும் அறிவின் வெளிச்சத்தினால் நிறைந்திருக்கும்.

அஞ்ஞான உலகத்தை பார்க்கும் போது, இந்த பேய்களின் கொடுமையான, இழிவான கிரியைகளை தெளிவாக காண்கிறோம்; மாத்திரமல்ல, தங்களுடைய மனித பிரதிநிதிகள் மூலமாக, உதாரணமாக இன்றைக்கு இந்தியாவில் உள்ள துறவிகள் (ஆண்டிகள்) மூலமாகவும், கடந்த இருண்ட காலத்தில் உலகம் பூராவும் பொதுவாக அப்பியாசப் படுத்தப்பட்ட '' மந்திர தந்திரங்கள்'' மூலமாகவும் அவைகள் எப்படி, இவர்கள் மூலமாக அற்புதமான வல்லமையை உபயோகித்ததினால் தங்களுடைய சங்கிலிகளை ஜனங்கள் மேல் உறுதியாக மாட்டிவிட்டார்கள் என்பதையும் தெளிவாகக் காண்கிறோம்.

இந்த பேய்களின் கிரியைகள் மேல் சுவிசேஷத்தின் விளைவுகள் இருப்பதை வேதம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. மேலும் திவ்விய சத்தியத்தின் வெளிச்சமானது ''உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறது'' என்பதையும் அது மாத்திதமே சத்துருவின் அந்தகார இருளை அகற்ற முடியும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. அப்போஸ்தலர் பவுல் உண்மையான ஒளியைப் பிடித்துக் கொண்டு ஆசியா, ஐரோப்பாவில் பிரயாணம் செய்தபோது, ஒளிக்கும், இருளுக்கும் இடையில் ஏற்பட்ட விரோதத்தைப் பற்றி அவரது அனுபவத்தை வேதாகமத்தில் எழுதியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். ''விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கை யிட்டார்கள். மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள். இவ்வளவு பலமாய்க் காத்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.'' அப். 19:18–20.

அப்போஸ்தலர் இந்த பொல்லாத ஆவிகளோடு தொடர்ந்து விரோதம் கொள்ள வேண்டியதிருந்தது. சில சமயங்களில் அவைகள் சுவிஷேசத்தை எதிர்க்க முயற்சித்தன, ஆனால் அப்போஸ்தலர்கள் மூலமாக கிரியை செய்து கொண்டிருக்கிற உன்னதமான ஆவியின் வல்லமைகளுக்கு எதிர்த்து நிற்க முழுவதுமாக முடியாமல் இருப்பதை பொதுவாக உணர்ந்தன. ஒரு சமயத்தில், பொல்லாத ஆவி சுவிஷேசத்திற்கு

இணக்கம் தெரிவிக்க முற்பட்டதைக் குறித்து வாசிக்கிறோம். அது ஏவுகிற ஆவியை உடைய பெண்ணை அப்போஸ்தலரையும், அவரோடு கூட இருந்தவர்களையும், பின்பற்றிக் செல்ல தூண்டியது; அந்தப் பெண் அப்போது ''இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்; இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்'' என்று சப்தமிட்டுச் சொன்னது. ஆனால் சுவிசேஷத்தை பேய்களின் காரியங்களோடு, அல்லது ஏவும் ஆவியோடு சம்பந்தப்படுத்த எடுக்கப்பட்ட ஒரு முயற்சியா, அல்லது அதற்குபின் நடந்த காரியத்தை முடிக்கும்படி முன்னரே எதிர்பார்த்திருந்த பேயின் தந்திரமான வேலையா என்பது தெரியவில்லை. ஏனெனில், அதற்கு பின்பு ஜனங்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்டது, அப்போஸ்தலர்களுக்கு ஒரு எதிர்ப்பு இருந்தது. ஆனால் எல்லா வேளைகளிலும், ஒரு காரியம் தெளிவாகிறது. அதாவது அப்போஸ்தலர் இந்த ஏவுதலின் ஆவியை மரித்தவர்களின் ஆவி அல்ல என்பதையும், விழுந்துபோன தூதர்கள் என்று அறிந்து கொண்டார்கள். ஆனால் அப்போஸ்தலர்களுக்கு முன்பாக இந்த பேய்கள் ஒரு போதும் தங்களுடைய உண்மையான ரூபத்தை மறுக்கவில்லை. அப். 16:16–19; 19:15; யாக். 2:19

அதே போன்று நம்முடைய ஆண்டவரின் ஊழியத்திலும், இந்த பொல்லாத ஆவிகள் யூதர்கள் மத்தியில் அவைகளை ஏற்றுக் கொள்ள விருப்பமுள்ள அனேகரை பிடித்துக் கொண்டன. இவர்கள் ''பிசாசு பிடித்தவர்கள்'' என்று அழைக்கப்பட்டனர். இவ்விதமாக பிசாசுகளினால் பிடிக்கப்பட்டவனுக்கு, பொரும்பாலான நேரங்களில், தன்மேல் கட்டுப்பாடு இருப்பதில்லை; அவனுடைய வார்த்தைகள், செயல்கள், சிந்தனைகளை எல்லாம் இந்த அசுத்த ஆவிகளால் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன; அவனுடைய நடத்தை பைத்தியக் காரனைப் போன்று இருந்தது. நம்முடைய ஆண்டவருடைய காலத்தில் பிசாசுகளினால் பிடிக்கப்பட்டிருந்தவர்கள் அனேகர் அவரால் குணமாக்கப்பட்டார்கள், அல்லது அவருடைய ஆவியால், வல்லமையால், செல்வாக்கினால் நிறையப்பட்டு அவரால் அனுப்பப்பட்டவர்களால் சுகமடைந்தார்கள். அசுத்த ஆவிகளை துரத்தம் சம்பவங்களைபற்றிய அருமையான குறிப்பு லூக்.4:34–37, மத்.8:23–33ல் காணப்படுகிறது. இந்த சம்பவங்களில், மறுக்கவில்லை, ஆனால் அவைகள் மேல் ஆண்டவருக்கு இருந்த அதிகாரத்தையும், வல்லமையையும் ஒத்துக் கொண்டன, அவதோடு கூட அவைகளுடைய சிறை தண்டனை அல்லது தற்போது

கொண்டுள்ள கட்டுப்பட்டு ஒரு எதிர்கால முடிவுக்கு வரும், அவைகளுடைய விஷயத்தில் ஒரு முற்றுப் பெறுவது, அல்லது நியாயத்தீர்ப்பு உண்டு என்ற எதிர்பார்ப்பையும் ஒத்துக் கொண்டன.

‘‘மாம்சத்தோடும், இரத்தத்தோடும் (மாத்திரம்) நாம் போராடவில்லை’’

தேவனுக்கு எதிராகவும், பாவிகளுக்கென்று ஈடுபலியாக நம்முடைய ஆண்டவர் தனது முதலாவது வருகையின் போது அவருடைய மரணத்தின் மூலம் செலுத்திய கிரயத்திற்கும், திட்டமிடப்பட்டு, செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டதுமான, அவருடைய மீட்பின் திட்டத்திற்கும் எதிராகவும், சாத்தானும், அவனுடைய பொல்லாத ஆவிகளின் சேனைகளும் பெரும் சக்தியாக மனுக்குலத்தின் மூலமாக கிரியை செய்கிறதை மேலே சொல்லப்பட்டவைகளில் இருந்து நாம் பார்க்கிறோம். இந்த கருத்திலிருந்து தான் அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளின் முக்கியத்துவத்தை தெளிவாக புரிந்து கொள்ளமுடியும். ‘‘மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் (உயர்த்திக் கொண்டவை) சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு.’’ (எபே.6:12) விழுந்து போன மனிதன் இந்த வஞ்சகமுள்ள சத்துருவிடம் இருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள அவ்வளவு திறமை இல்லாதவனாக இருக்கிறான்; மேலும், ஆண்டவரிடமும், அவருடைய வார்த்தையின் மேலும் விசுவாசமாயிருப்பதைப் பொறுத்தே, தேவனுடைய ஜனங்கள் அவனுடைய தந்திரங்களில் இருந்து தப்பமுடியும்; இப்படிப் பட்டவர்களுக்கு அவர் விசேஷ உதவியை அளிப்பதோடு, பொல்லாப்பிலிருந்து விடுதலையும் கொடுப்பார்; இந்த உதவி இல்லாவிட்டால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் சத்துரு ஏமாற்றுவான்; இவைகளை யெல்லாம் அறிந்து இப்பொழுது நாம் கீழ்க்கண்ட கேள்வியை கேட்கும்படி உந்தப்படுகிறோம். ஏன் தேவன் இந்த பெரிய சத்துருவை இப்படியாக மனிதனை ஏமாற்றக் கூடிய தப்பறைகளாலும், தவறான உபதேசங்களாலும், ஒரு குறிப்பட்ட அளவுக்கு இவைகளுக்கு ஆதாரமாக இருக்கும்படி அற்புதங்களாலும் அவனை வஞ்சிக்க அனுமதிக்க வேண்டும்?

இந்த கேள்விக்கான ஒரே திருப்தியான பதில் என்னவெனில், தேவன் தற்காலத்தில் முழு உலகத்தின் ஒப்புரவாகுதலை நாடவில்லை; முழு மனுக்குலத்தையும் தன்னோடு ஒருமனப்படுமாறு முயற்சிக்க வில்லை. அதற்கு மாறாக, திவ்விய அனுகூலத்தின் மூலம், தங்களுடைய இருதயத்தில், தேவனுடைய பிரியமான குமாரனும், தங்களுடைய மீட்பரும், ஆண்டவரும், மணவாளனுமாகிய கிறிஸ்துவின் பிரதியாக, தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிற, புது சிருஷ்டியை, மீட்கப்பட்ட ஜனத்திலிருந்து மாத்திரமே தெரிந்துகொண்டு வருகிறார். சத்துருவின் இந்த வஞ்சகமான உலகத்தின் அனுபவம் ஆயிரம் வருட யுகத்தின் போது முற்றுமாக வெளிப் படுத்தப்படும். அப்பொழுது நீதியுள்ள பாதையைத்தவிர தேவனுடைய ஆவியாகிய சத்திய ஆவியை விட மற்ற எல்லா ஆவியையும் அதன் செல்வாக்கையும் பார்த்து, மற்ற வழிகளில் உள்ள வஞ்சகமான, வலைவிரிக்கின்ற, இழிவான வசீகர சக்திகளை அறிந்து கொள்வார்கள். இப்படியாக எல்லாரும் அவர்கள் எப்படி முழுவதுமாக பிடிக்கப் பட்டுள்ளார்கள் என்பதைக் காண்பதோடு, ''சாத்தானுடைய இச்சை யின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டுள்ளார்கள்'' என்பதையும் காண்பார்கள். (2 தீமோ. 2:26) மேலும், எப்படி இப்பிரஞ்சத்தின் தேவனால் அவர்கள் கிறிஸ்துவின் மூலமாக பிரகாசிக்கிற தேவனுடைய குணாதிசயத்தின் உண்மையான ஒளியைப் பார்க்க முடியாதபடி குருடாக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் காண்பார்கள். (2 கொரி. 4:4) மேலும் அநேக பாடங்களை கற்றுக்கொண்டிருப்பார்கள்:

1) தேவன் தன்னுடைய சிருஷ்டிகள் அனைவருக்கும் உண்மையான நண்பனாக இருக்கிறார்; அவருடைய பிரமாணங்கள் அனைத்தும் அவர்களுடைய நலனுக்காகவும் என்பதையும் கற்றிருப்பார்கள்.

2)விழுந்துபோன தூதர்களில் உள்ள, சாத்தானால் உதாரணமாக காட்டப்பட்டபடி பொல்லாங்கனின் வஞ்சகமான குணத்தைப் பற்றி அறிந்துகொண்டிருப்பார்கள்; மேலும், தங்களுடைய சொந்த அனுபவங்களினாலும் அதைக் கற்றிருப்பார்கள்.

3)தங்களுடைய சொந்த தீர்மானத்தை துல்லியமாக நம்ப முடியாது என்பதையும், மேலும் மனிதனுக்குள்ள அளவான அறிவின்படி, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், வெளிச்சம் இருள் போன்று தோன்றவும், இருள் வெளிச்சம் போன்று தோன்றவும், நன்மை தீமை போன்று

தோன்றவும், தீமை நன்மை போன்று தோன்றவும் சாத்தியம் இருக்கிறது என்பதைக் கற்றிருப்பார்கள். இந்த பாடம் நித்திய காலத்திற்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கும்; இதன் மூலம் மனுக்குலம் அனைத்தும், திவ்விய ஞானத்திலும், திவ்விய நன்மையிலும், வல்லமையிலும் முழுமையாக நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ளும்.

பொல்லாத ஊழியம்

இதற்கிடையில் இந்த தவறுகளும், மூட நம்பிக்கைகளும் மனிதர்கள் தங்கள் சுதந்திரத்தை சரியான விதத்தில் உபயோகிக்க இயலாமல் இருக்கச் செய்து, அவர்களை அடிமைத்தனத்திற்குள் வைக்க செய்கிறது. ஏனெனில், தேவனால் வழி நடத்தப்பட்டு, தேவனுடைய முழு சாயலை உடைய பூரண மனிதர்கள் மாத்திரமே தங்களுக்கு பயன் தரும்படியான தன்னடக்கத்திற்கு முழுவதுமாக ஆயத்தமாக இருப்பார்கள். இதற்கிடையில் சாத்தான், மற்றும் அவனுடைய பொல்லாத கூட்டாளின் எதிர்ப்பும், உலகத்தின் எதிர்ப்பும் அவைகளின் தவறுகள், மாயங்கள் மூலமாக சத்தியத்திற்கு எதிராக செலுத்தப்படுகின்றன; சத்தியத்திற்கு உண்மையாகவும் அந்த ஊழியத்தில் ஊக்கமாக உள்ள அளவின் படியாகவும், சத்தியத்தின் ஊழியர்களாகிறவர்களுக்கு எதிராக செலுத்தப் படுகின்றன. ஜீவனுள்ள தேவனுடைய மிக உண்மையான ஊழியக்கார ராகிய நம்முடைய இராஜரீக ஆண்டவர் தனது காலடியை பின்பற்றுகிறவர் களுக்கு கூறியுள்ளதாவது: ''உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சினேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்ட படியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.'' (யோவா. 15:18,19) இதன் விளைவாக, இயற்கை விதியின்படி நாம், ''அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்'' என்று கூறலாம். இந்த உபத்திரவங்கள், உலகத்திலிருந்து வரும் எதிர்ப்புகள், மாம்சத்தினாலும், பிசாசினாலும் வருகின்ற எதிர்ப்புகள் ஆகியவை புது சிருஷ்டியை உருவாக்குவதில் ஆண்டவர் உபயோகப்படுத்துகிற சுத்தியலும், உளியும் மெருகூட்டும் உபகரணங்களுமாகும்.

எதிர்ப்புகளை சத்துருவே கொடுத்துக் கொண்டு இருக்கிறான்; அவனது இந்த எதிர்ப்பு என்கிற உபகரணங்களை ஆண்டவர் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்; கோபமும், எதிர்ப்பும் (மனிதர்களுடைய, பிசாசின் எதிர்ப்பு) அவரை துதிக்கும்படி செய்கின்றன. அவர்களுடைய தெரிந்து கொள்ளப்பட்ட சபைக்கு இந்த அனுபவங்களும் உபத்திரவங் களும் நமக்கு ''மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்கு கிறது.'' (2 கொரி. 4:17) இந்த உபகரணங்களைக் கொண்டு, மாபெரும் சிற்பியின் வடிவமைப்புக்கு இசைந்திருக்கும்படி தேவனுடைய பெரிய தேவாலயத்தின் ஜீவனுள்ள கற்கள், வடிவமைக்கப்படுகின்றன, மெருகூட்டப்படுகின்றன, ஆயத்தம் பண்ணப்படுகின்றன. இப்படி செய்யப்படுவதின் நோக்கம், கூடிய சீக்கிரத்தில், இந்த ஜீவனுள்ள தேவாலயத்தின் ஊடாக பூலோகத்தின் எல்லா குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள், அநேகர் மீட்புக்குள் கொண்டுவரப் படுவார்கள், ஆண்டவரோடு ஒப்புரவாக்கப்படுவார்கள். இப்படியாக மனுஷர்களுடைய எதிர்ப்பு முக்கியமாக அவர்களுடைய விழுந்துபோன நிலைமையினிமித்தம்தான் என்று அவர்கள் உணருவார்கள்; மேலும், அவர்கள் மேல் வந்த தவறுகளும், குருட்டுத்தனமும் தேவனுக்கும், நீதிக்கும் பெரிய எதிராளியாகிய சாத்தானின் தந்திரத்தால் வந்தது என்று அவர்கள் அறிந்து கொள்ளுவார்கள்; அப்போது, ஆண்டவருடைய ஜனங்கள், பொதுவாக உலக ஜனங்கள் மேல் மாத்திரமல்ல, அவர்களுடைய எதிராளிகள் மேலும், அவர்களை உபத்திரவப்படுத்து கிறவர்கள் மேலும் அதிகமாக இரக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் மேல் பழிவாங்க விருப்பப்படுவதை விட அவர்கள் சரியான விதத்தில் அவர்களுடைய சத்துருக்களை நேசிக்கலாம், அவர்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு நன்மை செய்யலாம், இதற்கிடையில் ''அவர்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்'' என்கிற வார்த்தையின் முழு அர்த்தத்தின்படி அப்படி செய்யலாம். பாவப்பரிகாரத்தை எதிர்க்கிற அநேகர், பல்வேறு வழிகளில், பல விதமான நோக்கங்களுடன், பெரிய சத்துருவோடு சேர்ந்து தேவனுக்கும் மீட்பின் வேலைக்கும் எதிர்ப்பு தெரிவிக்கிறதை நாங்கள் காண்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்குள் முதலாவதாக விபசார விடுதிக்காரர், மதுபான கடைக்காரர், சூதாட்ட விடுதிக்காரர், மந்திரவாதிகள், ஆவியை ஏவி விடுபவர்கள், பில்லி சூனியம் பண்ணுகிறவர்கள், குருமார்கள் இருப்பார்கள் என்று கூறுவது பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளுக்

கூடிய கருத்தாக இருக்கும். ஆனால் திவ்ய கருத்தின்படி, நாம் கூறவிரும்புகிறோம். அது இதற்கு எதிர்மாறாக இருப்பது போன்று தோன்றும், நாகரீகமடைந்த உலகில் உள்ள நல்ல சிந்தனையாளர்கள், சத்திய வெளிச்சத்தை எதிர்க்கிறவர்கள், அதற்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆகியோர் தேவனுடைய பார்வையில் மிக அதிகமாக சாத்தானின் பூமிக்குரிய உபகரணங்களாக இருக்கிறார்கள். அனேக வேளைகளில் அவர்கள் அறியாமலே அப்படி இருக்கிறார்கள். அப். 3:17

சுவிசேஷ யுகத்தின் முழு காலத்திலும் சத்தி ஒளிக்குள் வந்த அனேகருக்காகவும், இப்பொழுது யுகத்தின் இறுதியில் உள்ளவர்களுக் காகவும் நாம் வைத்திருக்கிற நம்பிக்கை என்னவெனில், அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்கு ஒரு காரணம், குருட்டாட்டம் தான். இது அப்போஸ்தலர் நம்முடைய ஆண்டவரை சிலுவையில் அறைந்தவர்களைப் பற்றி குறிப்பிட்டது போல் உள்ளது. ''நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்.'' அப்.3:17 இதிலிருந்து நாம் பார்க்கும் போது, சத்தியத்தை அதிகமாக எதிர்த்தவர்களுக்குள் சிலர் மீது ஓர் அளவு நம்பிக்கை வைக்கலாம். அவர்கள் பரிணாம கொள்கைக்காரர், பிரம்ம ஞானிகள், ஆவியுலக கோட்பாட்டாளர், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், ரோமன் கத்தோலிக்கர்கள், புரட்டஸ்டண்ட் ஆவர்கள். எதிர் காலத்தை குறித்த நம்முடைய நம்பிக்கை, தற்கால சத்தியத்தினால் இந்த விஷயங்களில் பிரகாசிக்கப்படுள்ளவர் களிடம் குறைவாகத்தான் உள்ளது. ஆனால் முக்கியஸ்தர்களாக வேண்டும் என்ற ஆசையினால் ஆர்வத்தினிமித்தம் அல்லது பொறாமை, அல்லது பெருமையுள்ளவர்களாயிருந்து ஆண்டவருடைய வேலைக்கு எதிராளிகளாக மாறினவர்கள் மேல் அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் பொதுவாக, ஆண்டவருடைய பிரசன்னத்தைக் குறித்து, அல்லது அவருடைய ஈடு பலியைக் குறித்து கூட குருடராகி, உலகம் பூராவும் இரட்சிக்கப்படும் என்கிற தவறான கோட்பாட்டில் விழுந்துவிடுகிறார்கள். இவர்களை நியாயம் தீர்ப்பது நம்முடைய வேலையல்ல. இருந்தாலும், அவர்கள் நிமித்தமாக நாம் பயப்படவேண்டியதுள்ளது. மேலும், அவர்களுடைய விஷயத்தைக் குறித்து வேதாகமம் கூறுவதைக் கவனிக்க வேண்டும். ''ஏனெனில், ஒரு தரம் பிரகாசிக்கப்படும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையும் இனி வரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும், மறுதலித்துப் போனவர்கள்,

தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற் கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.'' (எபி. 6:4–6) நாம் இந்த வேத வாக்கியங்கள் நிறைவேறுதலை அறிந்து கொண்டு, இப்படியான இருளின் கனியற்ற கிரியைகளோடு ஐக்கியம் வைத்துக் கொள்ளக் கூடாது, ஆனால் அவர்களை கண்டிக்க வேண்டும், அப்போஸ்தலர்களின் போதனை களின்படி நடவாதிருக்கிறவர்களிடமிருந்து நாம் விலகி நிற்க்க வேண்டும், பரிசுத்தவான்களுக்கு அளிக்கப்பட்ட விசுவாசத்தில் நிலைத்திராதவர் களிடம், அல்லது அதன் ஆவியில் நிலைத்திராதவர் களிடம் இருந்து விலகி இருக்க வேண்டும். ஏனெனில், இப்படிப் பட்டவர்கள் அனைவரும் சாத்தான் பக்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரையும், அவருடைய திட்டத்தையும் எதிர்க்கிறார்கள். தேவனுடைய திட்டத்தில் மீட்பும், ஈடுபலியும் மையமாக இருக்கிறது. 2பேது. 2:21; 2தெச. 3:6; யூதா 3.

தாக்குதலைப்பற்றிய இந்த விஷயத்தைக் குறித்து நாம் பார்க்கும் போது, நமது ஆண்டவர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டதை நினைவு கூறுவது நல்லது. புது சிருஷ்டிகளும் இப்படிப்பட்ட சோதனைக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதை விளக்குகிறது.

சத்துருவின் தாக்குதல்கள்

மாம்சீக ஆசைகளோடு நன்றாக ஒத்துப் போவது போன்று தோன்றுகின்ற சத்துருவின் தாக்குதல் என்னவெனில், புது சிருஷ்டி திவ்விய பாதுகாப்பின் கீழ் உள்ளதால் அவர்களுடைய உலகப்பிரகாரமான நலன்கள் எல்லாம் சுபீட்சமாக இருக்க வேண்டும் என்கிற விவாதமாகும். ஜென்ம சுபாவமுள்ள மனிதன் நினைக்கிற மாதிரி மேலே கூறப்பட்டதற்கு, புது சிருஷ்டியின் மனதை வழி நடத்த வேண்டிய தேவனுடைய வசனத்தில் ஆதாரம் கிடையாது. பழைய மனம் உறுதியுடன் கூறுகிறதாவது: சுவிகாரத்தின் நெருங்கிய உறவும் வருங்காலத்தில் உடன் சுதந்திரராக இராஜ்யத்தில் இருப்பதைப் பற்றிய அதன் வாக்குத்தத்தமும், இம்மைக்குரிய எல்லா விஷயங்களிலும் அது ஆசீர்வாதங்களையும், பாதுகாப்புகளையும், அனுகூலங்களையும் கொண்டு வர வேண்டும் என்பதாகும். முக்கியமான வாதம் தேக ஆரோக்கியத்தை பற்றியதாகும். நமது அர்ப்பணிக்கப்பட்ட அழிவுக்குரிய சரீரங்கள் ஏன் சுகவீனப்

படவேண்டும் அல்லது வேதனைப்பட வேண்டும்? நிச்சயமாகவே, தேவன் வலிகளையும், வேதனைகளையும் அனுப்பமாட்டார். ஆகவே, அது பிசாசினிடத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும். அது நம்முடைய சத்துருவினிடத்தி லிருந்து வந்ததென்றால், அது தேவன் நம்மேல் பிரியமில்லாமல் இருப்பதற்கு அடையாளமாக உள்ளது, ஆகவே அதை கவனித்து அவைகளிலிருந்து விடுதலைக்காக ஜெபிக்க வேண்டாமா? இவைகள் தான் விவாதங்களாகும்.

*சத்துரு பல்வேறு வழிகளில், இந்தக் கேள்விகளை விடாப்பிடியாக தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருக்கிறான். அனேகர் அது அவனுடைய தூண்டுதலினால் வருகிறது என்று சந்தேகப்படாமல் இருக்கும்படியாக அவன் ஒரு உறுதியுடன் உடன்பாடான பதிலைக் கூறிக் கொண்டிருக் கிறான். அதாவது தேவனுடைய ஜனங்களின் சரீர சுகவீனம் தேவன் பிரியமில்லாதிருப்பதற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது; மேலும், அதற்கு பரிகாரம் தேடுவது தேவன் மேல் வைத்துள்ள விசுவாசம் குறைபட்டிருக்கிறது என்பதை அடையாளப்படுத்தும்; ஆகவே, அதற்குப் பதிலாக விசுவாச ஜெபத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும்; ஜென்ம சுபாவமுள்ள இஸ்ரயேலுக்கும் இப்படிப்பட்ட சிலாக்கியங்கள் இருந்தன, அவைகளை அவர்கள் உபயோகப்படுத்தினார்கள்; அப்படியானால் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தேவனே தங்கள் பரிகாரி என்று எவ்வளவு அதிகமாக அவர் மேல் சார்ந்திருக்க வேண்டும்! மொர்மோன் எனப்படுபவர்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், கிறிஸ்தவ அலயனிஸ்ட் (*Christian alliancists*) ஆகியோர் இந்த விவாதத்தை தவறாக வழி நடத்தவும், அடிமைப்படுத்தவும், அவர்களுடைய கவனத்தை சத்தியத்திலிருந்து திசை திருப்பும்படி, அதிக உறுதியுடன் இப்படியாக கூறுகிறார்கள். ''கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும்'' வஞ்சிக்கத்தக்கதாக அப்படி கூறுகிறார்கள்.*

உண்மை என்னவெனில் புது சிருஷ்டியின் உண்மையான நலன்களும் அவர்களுடைய சரீர நிலைமைகளும் எதிர் திசையில் இருக்கிறது. தாவீது தீர்க்கதரிசி கூறுகிறார்: ''நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்.'' புது சிருஷ்டிதான்– அவர்களுடைய அழிவுக்குரிய சரீரங்களல்ல – உண்மையாகவே தேவனுடைய குமாரர்களாக இருக்கிறார்கள். நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, உண்மையிலேயே, தேவன் மாம்சத்தின் பலியை (அது நீதி என்று

ஆக்கப்பட்ட பின்னரும்) செலுத்தினார். நாம் ஐநிப்பிக்கப்படும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படும் நிலைக்கு முந்திய நிலை. மாம்சீக இஸ்ரயேலில் இது இப்படியாக இருக்கவில்லை. அவர்களுடைய சரீர நன்மைகளும், இம்மைக்குரிய ஆசீர்வாதங்கள் போன்றவைகள் ஆயிரம் வருட யுகத்தின் போது இருக்கின்ற நிஜமான இராஜாவும் இராஜ்யமும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் வரையறைகளுக்கு நிழலாயிருந்தது. யாத். 15:26; லேவி. 26:3–15; உபா. 28:1–14.

அதற்கு மாறாக, புது சிருஷ்டிகளின் சோதனையில், உலகப் பிரகாரமான காரியங்களில் ''அவர்கள் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும்'' என்பதை சோதிப்பதில் ஒரு முக்கியமான பங்கை அது வகிக்கிறது. ஆம் இதைக்காட்டிலும் அதிகமாக உபத்திரவத்தை அனுபவிக்க வேண்டும், சுயத்தை மறுக்க அப்பியாசம் பண்ணவேண்டும், ஏமாற்றுகிறவர்களைப் போன்று இருக்க வேண்டும், அனாலும் உண்மையாயிருக்க வேண்டும்; ஒன்றுமே இல்லாதவர்கள் போன்று இருக்க வேண்டும், ஆனாலும் உண்மையிலே (விசுவாசத்தினால்) எல்லாம் உடையவர்களாக இருக்க வேண்டும்; ஞானமற்றவர்களைப் போன்று, ஆனாலும் உண்மையிலேயே தேவனிடத்தில் ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இது இப்படியாக இருக்க, அவருடைய அடிச்சுவட்டை நெருக்கமாக பின் பற்றுகிறவர்கள் அனைவருக்கும் ஆண்டவரைப் பற்றிய தீர்க்க தரிசன விளக்கம் பெரிய அளவில் உரியதாக இருக்க வேண்டும். அது சொல்லுகிறதாவது: ''நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.'' தீர்க்கதரிசி கூறுகிறார்: ''நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது: அவருடைய தழும்புகளால் (பாவிகளாகிய நாம்) குணமாகிறோம்.'' நாம் சுகமாக்கப்படுவதோ, அல்லது நீதிமான்களாக்கப்படுவதோ, கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கங்களாக நாம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னரே, புது சிருஷ்டியின் அங்கங்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னரே வந்தது; நாம் குமாரனாக, உடன் சுரந்திராக, உயர்வான இடத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு, நாம் ''அவரோடு பாடுகளை சகிப்போம்'' என்கிற விசேஷமான நிபந்தினையின் மேல் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னரே அல்லது மறுபடியும் சொல்லப் பட்டுள்ளபடி ''கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நாம் நிறைவேற்றுகிறோம்'' என்பதற்கு முன்னரே வந்தது. ஏசா. 53:4,5 ; ரோம. 8:17 ; கொலே. 1:24.

உண்மைதான், நம்முடைய ஆண்டவரிடத்தில் எந்த சுகவீனமும் கிடையாது, ஏனெனில், அவர் பூரணராக இருந்தார். இருந்தாலும், ''அவர் நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடியவராக இருந்தார்'' என்றும், '' அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டார்'' என்றும், '' அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினதால்'' பெலகீனம் அவருக்குள் செல்கிறது என்றும் எழுதப்பட்டுள்ளது. எபி.4:15 ; மத்.8:17 ; லூக்.6:19

இளநிலை ஆசாரியர்களாக நாமும் கூட ''தொடப்பட்டு'' உலகத்தாரோடு இரக்கப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். சீக்கிரத்திலே இவர்களுக்கு நாம் இராஜாக்களும், ஆசாரியர்களும், நியாயாதிபதிகளாகவும் இருப்போம். ஆனால் நமது அதிகமான சரீர பலத்தை கொடுப்பது கூடாத காரியம், அது தேவையானதும் அல்ல. அல்லது மற்றவர்களுடைய பெலகீனங்களையும், சுகவீனங்களையும் நீக்குவது சாத்தியமானது அல்ல, தேவையானதும் அல்ல; நாம் வீழ்ச்சியில் பங்குள்ளவர்களாக இருப்பதால், இந்த மாதிரியான சில அனுபவங்கள் நம் ஒவ்வொருவருக்கும் எப்படியாயினும் உண்டு; ஏனெனில், மாம்சத்தின்படி நாமும் ''மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம்.'' மேலும், பிரசவ வேதனைப்படுகின்ற சிருஷ்டிகளின் உபத்திரவங்களிலும் நாம் பங்குள்ளவர்களாக இருந்தோம். நம்முடைய ஆண்டவர் அவருடைய வல்லமையை செலவிட்டது சபைக்காக அல்ல. ஏனெனில், பெந்தெகொஸ்தே நாள் வரை, அதாவது அவருடைய பலி முற்றுப்பெற்று பிதாவினிடத்தில் அளிக்கப்பட்டு நம்முடைய சார்பில் அவரால் ஏற்றுப் கொள்ளப்படும் வரை, சபை அங்கீகரிக்க முடியாததாக இருந்தது. அவரைப் பின்பற்றிய சீடர்களுக்கு பரிசுத்த ஆவி கொடுக்கப்படும் வரை, அவர்களுக்கு பரலோக காரியங்களைக் குறித்து சொல்லுவது பிரயோஜமைற்றதாக இருந்தது. (யோவா. 3:12; 16:13; 1கொரி. 2:10 –12) ஆகவே, நம்முடைய ஆண்டவரின் வல்லமை உவமைகளைக் கூறுவதிலும், ஆவியின் உதவியினால் பின்னர் புரிந்து கொள்ளப்படக் கூடிய மறைவான காரியங்களைச் சொல்லுவதிலும் செலவிடப்பட்டது; ஆனால், முக்கியமாக சரீர வியாதிகளை சுகப்படுத்துவதில் செலவிடப்பட்டது. இதன் மூலமாக, ஒரு நிழலாக இப்பொழுதும், இராஜ்யத்திலும் நாம் பங்கு பெறக்கூடிய பெரிய காரியங்களையும், மாபெரும் சுகமாக்குதலையும் இது காட்டுகிறது. அதாவது மனக்கண்கள் திறக்கப்படுவதும், மரித்துப்போன நிலையில்

உள்ளவர்களை ஆண்டவருடைய வார்த்தையை கேட்கப்பண்ணுவதும், இப்பொழுதும் கூட ஒரு புதிய வாழ்க்கையை தொடங்கச் செய்வதுமாகும். இப்படியாக அப்போஸ்தலர் கூறுகிறார். ''நாமும் சகோதருக்காக ஜீவனைக் கொடுக்கும்'' சிலாக்கியத்தைப் பெற்று இருக்கிறோம். ''கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக'' நிறைவேற்றும் சிலாக்கியத்தை பெற்றுள்ளோம். (1யோவா.3:16; கொலோ. 1:14)

நம்முடைய சகோதரர்களுக்காக ஜீவனைக் கொடுப்பது என்பது சரீர பெலத்தை குறையப் பண்ணாது என்றோ, ''கிறிஸ்துவின் உபத்திரவங்கள்'' வேதனையைத் தராது என்றோ எண்ணி, இந்த வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தை நாம் இழந்து விடக்கூடாது. நம்முடைய ஆண்டவரின் களைப்பும், ''பெலத்தை'' இழந்ததும், ''நம்முடைய பெலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடியவராக இருந்தார்'' என்பதும் இப்படியான எண்ணத்தை மறுக்கிறது. ஆகவே நம்முடைய பூமிக்குரிய நலன்களில் உலகத்தாரை விட நான் நன்றாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய எதிர்பார்ப்பாக இருக்கக் கூடாது, அதற்கு மாறாக நஷ்டத்தை அனுபவிக்கவும், அவரோடு உபத்திரவங்களை சகிக்கவும் எதிர்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நஷ்டங்கள் மனுஷர்கள் மத்தியில் உயர்வாக எண்ணப்படுகிறது. பணத்தில் சுபீட்சத்தை பொறுத்தவரை நம்முடைய ஆண்டவர், ''நமது நிமித்தம் தரித்திரர் ஆனார்.'' மற்றவர்களை ஐசுவரியவான்களாக ஆக்க வேண்டும் என்று அவர் விருப்பப்பட்டதால் அப்படியானார். மேலும், நமக்கு ஒரு உதாரணமாக இருக்கும்பொருட்டு அப்போஸ்தலர்களும் இது போன்ற அனுபவங்களுக்குள் கடந்து சென்றார்கள். அப்படியானால் தீமோத்தேயுவிற்கு ''அடிக்கடி வந்த பெலவீனங்களையும்,'' பவுலின் ''மாம்சத்தில் உள்ள முள்ளையும்'' எப்பாபிராத்துவின் ''வியாதியையும்'' பார்க்கையில், இப்பொழுது ஆண்டவருக்கு உண்மையாக இருக்கிறவர் களுக்கு அனுமதிக்கப்படுகின்ற வியாதிகள்தான் அவர்களுக்கும் இருந்தது என்று ஏன் எல்லாரும் நினைக்கக் கூடாது? அவைகள் எல்லாம் பிசாசினால் வந்தவைகள், எப்படியெனில் பாவம் சாந்தானால் தொடங்கப்பட்டது, இந்த வியாதிகள் அதனால் வந்த விளைவுகளாகும். ஆனால் அவர்களுக்கு சிறைவாசமும், அடிகளும், கப்பற்சேதமும், மரணமும் பிசாசினால் வந்தவைகள் அல்ல.

ஒரு வேளை சாத்தான் நேரிடையாக இல்லாவிட்டாலும், பொதுவாக எல்லா மனிதருக்கும் வந்த சரீரத்தின் ஆபத்துகளை

மறைமுகமாக தூண்டி விடுகிறவனாக இருந்தான். இருந்தாலும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் தேவன் தங்களை கைவிட்டு விட்டார் என்று அப்போஸ்தலர்கள் நினைக்கவில்லை. ஆனால் தேவன் அனுமதித்த பலியிலும், ஆண்டவருக்காகவும், சத்தியத்திற்காகவும் அவர்கள் சகிக்க அனுமதிக்கப்பட்ட உபத்திரவங்களிலும் பங்கு பெற்றதால் அதனிமித்தம் தேவன் மகிமைப்பட்டார். மற்ற மனுஷருக்கு வந்ததைக் காட்டிலும் தங்களுக்கு அதிகமாக வந்தபோது, அவர்கள் களிகூர்ந்தனர், அதன்மூலம் அவர்கள் வருங்காலத்தில் அடையப் போகிற மகிமை பெருகும் என்று எண்ணினர். இருந்தாலும் நீதியினிமித்தம் உபத்திரவப்படுவதற்கும், தீமை செய்து அதனிமித்தம் உபத்திரவப்படுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் கண்டு கொள்ள வேண்டும். அதிகமாக உபத்திரவம் ஜனங்களுக்கு வருவதற்கு காரணம் மற்றவர்களின் அலுவல்களிலும், மற்ற விஷயங்களிலும் தலையிடுவதினால்தான் என்று அப்போஸ்தலர் சுட்டிக் காட்டுகிறார். நாங்கள் விசேஷமாக பெருந் தீனியும் (பிலி. 3:19), சுயத்தை அடக்க முடியாமல் இருப்பதும் இந்த பெல்லாத விஷயங்களுக்குள் அடங்கியிருக்கிறது என்று கூறுகிறோம். இவைகள் நீதியினிமித்தம் உபத்திரவப்படுவது என்று எண்ணப்படமுடியாது என்று கூறுகிறோம். ஒருவரும் இப்படிப்பட்ட உபத்திரவங்களில் களி கூறக்கூடாது. ஆனால் அதைவிட துக்கிக்கவும், ஜெபிக்கவும், உபவாசம் இருக்கவும் வேண்டும். ஆனால், புது சிருஷ்டி தனது யூகத்தின்படி, தேவனுடைய அனுக்கிரகத்தினால் தருணம் என்னும் கதவு திறக்கப்பட்டுள்ளது என்று கண்டு, அதில் பற்றார்வத்துடனும், சுயதியாகத்துடனும் பிரவேசிக்கிறான். அப்பொழுது, சரீரப்பிரகாரமான வியாதிகள் வருகிறது என்றால், உலகம் அது ஆராயாத செயலின் அடையாளமாக இருக்கிறது என்று நினைக்கும்போது, அவன் வெட்கப்படக் கூடாது; ஆனால், கிறிஸ்துவி னிமித்தம் இப்படிப்பட்ட பாடு அனுபவிக்க பாத்திரராக எண்ணப் பட்டதற்காக களிகூறவேண்டும்.

உண்மையிலேயே சுகவீனங்கள், பாவம் அல்லது சுயநலம் இல்லாத வேறு காரணங்களினிமித்தம் வந்தால் அவைகள் பொறுமையோடும், நன்றியறிதலோடும் ஏற்றுக் கொள்ளப்படலாம்; மேலும், பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகளின் மேல் பரிதாப்படக்கூடிய பாடங்களை கற்றுக் கொள்வதுடன், ஆயிரம் வருட யுக காலையில் சாபம் அகற்றப்படும் என்கிற வாக்குத்தத்தில் உள்ள நம்பிக்கையும், உறுதியும் உடையவர்களாய் அவைகளை ஏற்றுக் கொள்ளலாம். நிச்சயமாகவே

இருதயத்தில் உள்ள கிருபை, வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அனுகூலமான செல்வாக்கை உண்டு பண்ணுகிறது. ஆனால் (திவ்விய குறுக்கீடு இல்லாமல்) அது நம்முடைய அழிவுக்குரிய சரீரத்தை செப்பனிடவோ மறுபடியும் புத்துயிர் அளிக்கவோ இயலாது. தேவன் இப்படிப்பட்ட அதிசயங்களைச் செய்கிறதில்லை, அது நாம் விசுவாசித்து நடவாமல் தரிசித்து நடப்பதற்கு தீமை விளைவிக்கும்; மேலும், தேவன் தேடாத ஒரு கூட்டத்தினர் சபைக்குள் வரும்படியாகி விடும். நாம் இப்பொழுது பார்த்துள்ளபடி, அவர் விசுவாசத்தினால் நம்மை நீதிமான்களாக ஆக்குகிறார், அதற்கு பதிலாக நாம் முழுமையாக எப்போதும் போல் உண்மையாகவே பூரணமற்றவர்களாக விடப்பட்டதாக எண்ணகிறார். இருதயத்தில் கிருபை காணப்படுவதினால் உஷ்ணத்திற்கோ, குளிருக்கோ, அல்லது பசிக்கோ, தாகத்திற்கோ கவலையற்றவர்களாக இருக்க முடியாது; ஆனால் நம்முடைய பரலோக தகப்பனின் பராமரிப்பில் நம்பிக்கை வைக்கவும், பொறுமையுடனும், விசுவாசத்துடனும் சரியானபடி பெற்றுக் கொள்வோமாயின் காலாகலாத்தில் எல்லாம் நம்முடைய நன்மைக்கேதுவாக நடைபெறுகிறது என்கிற அவருடைய வாக்குத்தத்தில் நம்பிக்கை வைத்து, அவைகள் தவிர்க்க முடியாத பட்சத்தில் வரும்போது அவைகளை சகிக்க நமக்கு பொறுமையை தருகிறது.

உலகமானது அந்த வியாதிகளுக்கு வேர்களையும், மூலிகைகளையும், தைலங்களையும் தேடும் போது, புது சிருஷ்டிகள் இவைகள் ஒன்றையும் தேடவும், உபயோகிக்கவும் கூடாது, அதன் மூலம் அவர்கள் அவர்களுடைய விசுவாசத்தைக் காட்டுவதற்காக வேதனையை சகிக்க வேண்டும் என்று பொருள்படுமா? அப்படி இல்லவே இல்லை. நாம் மனதில் ஆழமாக பதியும்படி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது என்னவெனில், இந்த சுவிசேஷ யுகத்தில், தேவன் தன்னுடைய ஜனங்களோடு செயல் படுகிறபோது, மாம்சத்தின் படியாக அல்ல, ஆனால் புது சிருஷ்டி என்கிற முறையில் செயல்படுகிறார். ''மாம்சம் ஒன்றுக்கும் உதவாது'' – எனினும் நாம் அதை மரணத்திற்கென, அழிவிற்கென அர்ப்பணித்திருக்கிறோம், புது சிருஷ்டி என்கிற முறையில் தான் நமது நலன்கள் நமது முக்கிய கரிசனையாக உள்ளது. இருந்தாலும், நம்முடைய அழிவுக்குரிய சரீரத்தை கூடுமானவரை நல்ல ஆரோக்கியத்தில் வைத்திருக்க, வியாதிகள் நம்முடைய கவனத்தை சிதறடிக்காதபடி நம்மால் இயன்றதை செய்ய ஒரு சிலாக்கியம் உண்டு. நம்முடைய சரீரம்

பலியிடுவதற்கென்று நாம் எடுத்துக் கொண்ட உடன்படிக்கையின் ஊழியத்தை செய்வதற்கு நமக்கு எப்பொழுதும் நம்முடைய வேளையாட்களாக இருக்க வேண்டும். அவைகள் பசி எடுத்து உணவையும், குடிபானத்தையும் கேட்கிறதா? நியாயமானபடி அவைகளின் தேவையை நாம் நிறைவேற்ற வேண்டும். நம்முடைய ஆண்டவர் அனுமதிப்பார் என்று நாம் நம்புகிறபடி, அவருடைய வேலையை உண்மையாக செய்யும்படியாக நாம் உணவுப் பொருட்களை சரீரத்திற்கு வழங்கலாம். அவைகளுக்கு குளிரும் அசௌகரியமுமிருந்தால், ஆண்டவர் அனுமதிக்கிறபடியான ஆடையை கொடுப்பது நமக்கு கிடைத்த சிலாக்கியமாகும் நாம் நினைக்கிறோம். அவைகள் காய்ச்சலினால் கஷ்டப்படுகிறன்றனவா அல்லது வேதனையால் துடிக்கின்றனவா? நாம் பயன் தரும் என்று நினைக்கிற எந்த பரிகாரத்தினாலும் காய்ச்சலை குறைத்து வேதனையை நிறுத்துவது நமக்கு கிடைத்த சிலாக்கியம். ஆனால் நம்மை, ஞானதிருஷ்டிகாரர்களிடமோ, கிறிஸ்தவ விஞ்ஞானிகளிடமோ, ஹிப்னாட்டிஸம் செய்பவர்களிடமோ அல்லது நம்முடைய சத்துருவின் உதவியைக் கொண்டு, துன்பத்தை மந்திரசக்தியால் விரட்ட முற்பட்டு நம்முடைய மனதை வசியம் பண்ணுகிறவர்களிடமோ நம்மை ஒப்படைக்க கூடாது. புது சிருஷ்டிக்கு ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு உள்ளது போலவே, அவர்களுடைய களைத்துப்போன, மெலிந்த, மரிக்கிற சரீரங்களை பராமரிக்க சிலாக்கியம் உண்டு. இல்லை, இதைக் காட்டிலும் அதிகமுண்டு. ஒவ்வொரு சிருஷ்டிக்கும் தன்னுடைய சரீரத்தை சரியானபடி பராமரிக்க கடமை உண்டு, ஆனால் புது சிருஷ்டியைப் பொறுத்த வரையில் இந்த பராமரிப்பு தீவிரப்படுத்தப்படுகிறது. ஏனெனில், அவர்களுடைய சரீரங்கள் ஆண்டவருடைய ஊழியத்திற்கென, மரண பரியந்தம் என சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவைகளைக் கொண்டு முடிந்த அளவுக்கு ஒரு பெரிய பலியின் ஊழியத்தை செய்ய வேண்டும்.

சிலர் இப்படி சொல்லுவதற்கு ஆயத்தமாக இருப்பார்கள். ‘‘ஒரு தீ புண்ணுக்கு நானே தயாரித்த ஒரு களிம்பு அல்லது ஒரு சாதாரண தைலத்தை சீக்கிரமாக தடவுவேன், அல்லது வித்தியாசமான உணவுகளை உபயோகிப்பதில் கவனமாக இருந்து என்னுடைய உடல் உறுப்புகளை கட்டுப்பாட்டிற்குள் வைப்பேன்; ஆனால் மருந்துகளையோ, தைலங்களை வாங்குவதோ, அல்லது ஒரு மருத்துவரை வரவழைப்பதோ முற்றிலும் வித்தியாசமான விஷயமாகும்.’’ ஆனால், இப்படி பாரபட்சம் காட்டுவது அர்த்தமற்றது. குளிராக இருக்கும் போது நாம் சொல்லக் கூடும்: ‘‘ நான்

ஆடை அணிந்து அனலடைவேன். என்னால் செம்மறியாடுகளை சொந்தமாக வைத்திருக்க முடியுமென்றால், ஆட்டு ரோமத்தை எடுத்து என்னை குளிரிலிருந்து பாதுகாக்கும்படி எனக்கு தேவையான ஆடைகளை நெய்து கொள்ளுவேன். ஆனால் மற்றவர்களால் கொடுக்கப்படும் ஆடைகள் எவ்வளவுதான் உயர்வானதாக அல்லது அதிக வசதியுள்ளதாக இருந்தாலும் சரி அவைகளை உபயோகப்படுத்த மாட்டேன்.'' அல்லது நாம் பசியாயிருந்தால் விதைக்க வேண்டும், அறுவடை செய்ய வேண்டும், போரடிக்க வேண்டும், அரைக்க வேண்டும், அதை ரொட்டியாக சுட வேண்டும் என்று எண்ணி நம்மை ஏமாற்றுகிறோமா? நம்முடைய சரீர நலனுக்காக வேலையாட்களையும், குடியானவர்களையும், கறிக்கடை காரர்களையும், ரொட்டி செய்பவர்களையும், ஆடை தைப்பவர்களையும் பயன்படுத்துக் கொள்ளுகிறோம். அப்படி அவர்களுடைய திறமையை நாம் உபயோகிக்கும் போது, உடலின் வலியை குறைப்பதற்கு, ஒரு சகோதரனின், அல்லது அயல்வீட்டுக்காரனின் அல்லது ஒரு அந்நியரின் உதவியை நாடுவது ஒரு பாவம் என்று நினைக்கிறோமா? நிச்சயமாக இல்லை. மாத்திரைகள் வாங்குவதை நாங்கள் ஆதரித்துக் பேசுகிறோம் என்று தவறாக புரிந்து கொள்ளக் கூடாது, ஆனால் நாங்கள் பொது அறிவை பயன்படுத்த வேண்டும் என்றுதான் கூறுகிறோம். மாத்திரைகள் அதிகமாக உபயோகிப்பது நிச்சயமாகவே முட்டாள்தனமானது, அது குற்றத்திற்கும் வழிவகுக்கும். கூடுமானவரை உணவை கட்டுப்படுத்துவது உடல் உறுப்புகளுக்கு நல்லது. புது சிருஷ்டிக்குள்ள கட்டளை சொல்லுகிறதாவது, ''உங்கள் சாந்த குணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக.'' (பிலி. 4:5) இது மருந்து, உணவு முதலானவை களுக்கும் உரியதாகும்.

இயேசு என்ன செய்தார்? அவருடைய காலடியை பின்பற்றுவதில் அப்போஸ்தலர்கள் எந்த முறையை பின்பற்றினார்கள்? இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களோ சபையில் உள்ள எவரையும் சுகப்படுத்திய தாக வேதத்தில் குறிப்பு ஏதும் கிடையாது என்று நாங்கள் பதில் சொல்லுகிறோம். ஆண்டவர் வியாதியஸ்தலர்களை குணப்படுத்தியது திவ்விய சித்தத்தை இந்த விஷயத்தில் காட்டியது என்று கூறுகிறதா? சுகம் அடைந்தவர்களல்ல சுகப்படுத்தியவரே நமது உதாரணம் என்று நாம் பதில் கூறுகிறோம். நம்முடைய ஆண்டவர் அற்புதமாக திரளான ஜனங்களை போஷித்தார். ஆகவே நாமும் அற்புதமான விதத்தில் போஷிக்கப்பட வேண்டும் என்று சொல்லுவோமா? இல்லை. இதற்கு மாறாக, புது

சிருஷ்டியின் தலையானவர் திவ்விய வல்லமையை தனது சுயசௌகரியத்திற்கு உபயோகிக்க மறுத்தது போன்று நாமும் செய்ய வேண்டும். (மத். 4: 2–4; 26: 53) அவர் பசியாக இருந்த போது அப்பம் வாங்கும்படி சீஷர்களை அனுப்பினார். களைப்பாயிருந்தபோது கிணற்றண்டை அல்லது வேறு இடத்தில் ஓய்வெடுத்தார். அல்லது அவருடைய ஜீவன் தொடப்பட்டபோது, அதை அவர் உணர்ந்த போது, இந்த இயற்கையான துன்பங்களில் இருந்து விடுவிக்கும்படி ஒருபோதும் அவர் ஜெபித்ததில்லை. ஆனால் அது அவருடைய பலியின் ஒரு பகுதி என்று உற்சாகமாக சகித்தார். நாமும் அதுபோலவே இருக்க வேண்டும்.

இதைக் காட்டிலும் அதிகமானது: இம்மைக்குரிய இப்படிப்பட்ட தேவைகளிலிருந்து விடுதலை பெறுவதற்காக பரிசுத்த ஆவியின் உதவியை உபயோகித்து இருப்பாரெனில், அது வல்லமையை தவறாக பயன்படுத்திய பாவமுள்ள செயலாக இருந்திருக்கும் என்று நம்முடைய ஆண்டவர் அறிவிக்கிறார்; ஏனெனில், அது அவரிடத்தில் வேறொரு காரியத்திற்காக இருந்தது. மரித்துக் கொண்டிருக்கிற நிலைமையிலிருந்த எந்த ஒரு கட்டத்திலும், அவருக்கு உதவி அல்லது பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக திவ்விய வல்லமையை கேட்டிருந்தால் அது பாவமாக இருந்திருக்கும். ஏனெனில், பலிசெலுத்துவதற்காக அவர் ஒரு உடன்படிக்கையை செய்திருந்தார். அந்த விளைவுகளில் இருந்து விடுபட கேட்பது ''பின்வாங்கிப் போவதாகும்.'' ''ஒருவன் பின்வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது.'' எபி. 10:38; மத். 26:53.

சபைக்கும் இதே நிலைமைதான். ஏனெனில், நாம் நம்முடைய ஆண்டவரை பின்பற்றுகிறோம். நம்முடைய அழிவுக்குரிய சரீரத்திற்காக, மரணத்திற்கென அர்ப்பணம் செய்யப்பட்ட சரீரத்திற்காக திவ்விய உதவியைக் கேட்பது நம்முடைய உடன்படிக்கையை இழிவு செய்வதாகும். இதன்படி மனிதர்களாக நாம் நம்முடைய பூமிக்குரிய எல்லா சௌகரியங்களையும், உரிமைகளையும் (விலையேறப் பெற்ற இரத்தத்தால் கிரயத்துக்கு வாங்கப்பட்ட இளைப்பாறுதிலின் ஆதாயம்), பெரிய பந்தயப் பொருளான ''மகிமை, கனம், அழியாமை'' என்பதைப் பெறுவதற்காகவும், ஓட்டப் பந்தயத்தில் புது சிருஷ்டிகளாக ஓடும் சிலாக்கியத்தை பெறும்படியாகவும் அர்ப்பணம் செய்தோம். நாம் அவரிடத்தில் ஒப்புவித்ததை திரும்பக் கேட்பது, பலியை செலுத்துவதிலிருந்து பின்வாங்குவது என்றும், உடன்படிக்கையை இரத்து

செய்து, புது சிருஷ்டிகளுக்கான நமது சுதந்திரத்தை விட்டு விடுவது என்றும் பொருள்படும். ஜெபத்தைப் பற்றிய இந்த கருத்து சிலருக்கு புதியதாக இருக்கும்; இந்த காரியத்தை அறியாமல் செய்து விட்டோம், தேவன் அந்த ஜெபத்திற்கு பதில் கொடுத்து விட்டார் என்பதை நினைத்துப் பார்க்கும் போது சிலருக்கு நிச்சயமாகவே, ஒரு அதிர்ச்சியைக் கொண்டுவரும். அப்படியானால் பந்தயப் பொருளுக்கான ஓட்டத்திலிருந்து அவர்கள் தள்ளப்படுவார்கள் என்று பொருள் படுமா? நாம் அப்படி நினைக்கவில்லை. ஒரு பூலோக பெற்றோர் தன்னுடைய அறியாமையிலுள்ள சிறு குழந்தையினிடத்தில் நீடிய பொறுமையாக இருப்பது போன்று, ஆண்டவரும் தன்னுடைய ஜனங்களிடத்தில் பொறுமையாக இருக்கிறார்; அவர்கள் அறியாமையினால் செய்த பிழைகளை பொறுத்துக் கொண்டு, அவர்களுடையை வார்த்தையை மட்டும் பாராது, அவர்களுடைய நோக்கங்களைப் பார்த்து அவர்களிடத்தில் பொறுமையாக இருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு பெற்றோர் தன்னுடைய சிறிய பிள்ளையின் முறையற்ற வேண்டுகோளை நிறைவேற்றுவது போல, ஆண்டவரும் தம்முடைய ஜனங்கள் முறையற்ற விதத்தில் தங்களுடைய விசுவாசத்தை அப்பியாசப்படுத்தியிருந்தாலும், அநேக தடவை அவர் தம்முடைய ஜனங்களின் விசுவாசத்தை கனப்படுத்தியுள்ளார் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் நாம் கிருபையிலும், அறிவிலும் வளரும் போது இது வித்தியாசப் படுகிறது; அப்பொழுது அது பாவமாக இருக்கும், திவ்விய அனுக்கிரகத்திலிருந்து பின்னடைவது என்றும், உடன்படிக்கையை முறிப்பது என்றும் பொருள்படக்கூடும்.

விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்.

–யாக்கோபு 5:14–16–

இந்த வசனமும் மாற்கு 16:17,18 ஆம் வசனமும், புது சிருஷ்டி வியாதியிலிருந்து சுகம் பெறுவதற்கு திவ்விய வல்லமையின் மேல் சார்ந்து இருக்க வேண்டும் என்பது திவ்ய நோக்கம் என்பதைக் காட்ட உள்ள ஆதாரப் பகுதிகளாக இருக்கின்றன. மாற்குவில் உள்ள இந்த வசனத்தை வெகு எளிதில் ஒதுக்கிவிடலாம்; ஏனெனில், அது பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் காணப்படவில்லை. ஆகவே, அது இடையில், 5ம் நூற்றாண்டு அளவில் செருகப்பட்டது என்று எண்ணப்படுகிறது.

யாக்கோபு 5: 16 வது வசனத்தைப் பார்க்கும் போது சொல்லப் படுகிற வியாதி பாவங்களுக்காக சிட்சிக்கப்படுவது என்று தெரிகிறது; இது சாதாரண வியாதியல்ல, சபையின் எல்லா மூப்பர்களையும் கூடிவரச் செய்வது நல்லது என்கிற அளவுக்கு கடுமையான ஒன்றாக இருக்கிறது என்பது தெளிவாகிறது. இதில் உள்ள கருத்து , பாவம் வாசற்படியில் படுத்திருந்தபடியால் வியாதிப்பட்ட பாவி தேவனோடு ஐக்கியம் கொள்வதிலிருந்து முற்றிலுமாக பிரிக்கப்பட்டது போன்று தோன்று கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் கீழ், பாவங்கள் அறிக்கை செய்யப்பட வேண்டும், பாவமன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும் என்று தான் நாம் எதிர்பார்ப்போம். 15ம் வசனம் கூறுகிறதாவது: ''அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை (அவனுடைய ஆக்கினியிலிருந்து) இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார் (சுகத்திற்கு பழைய நிலைக்கு கொண்டு வரப்படுவது); அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.''

சாத்தானை சாத்தான் துரத்தினால் அவனுடைய இராஜ்யம் நலிவுறும்

–மத். 12:26–

முதலாவது வருகையின் போது, நம்முடைய ஆண்டவர் பிசாசுகளை சாத்தானின் அதிகாரத்தைக் கொண்டு துரத்துகிறார் என்று பரிசேயர்கள் குற்றப்படுத்திய போது, அவர் தெளிவாக பதில் கூறினார். இப்படி செய்வது சாத்தானால் கூடும், ஆனால் அது தான் முடிவானது என்று நினைத்து விடக் கூடாது, அப்படி நடந்தால் அவனுடைய அதிகாரம் மட்டுப்பட்டு வருகிறது என்பதற்கு அடையாளம், அவனுக்கு மிக சங்கடமான நிலை, கடைசி முயற்சியாக அவன் இதை கையாளுகிறான், அவனுடைய ஏமாற்றுகிற குணத்தின் மேல் உள்ள பிடி தளர்ந்து விடாமல் இருப்பதற்காக இப்படிச் செய்கிறான் என்று கூறினார். சுகப்படுத்து தலையும், அற்புதங்களையும் சாத்தானுடையது என்று நாங்கள் பொதுவாக கூறவில்லை. ஆனால், ஒவ்வொரு நபரும், அல்லது ஒழுங்கு முறையும் தங்களை அற்புதங்களினால் ஸ்திரப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதை கவனமாக சோதித்துப் பார்க்க வேண்டும் என்பதை ஆதரிக்கிறோம். புது சிருஷ்டி ஆவியினால் காட்டப்பட்ட வழியைப் பார்க்க வேண்டும். ''அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று

சோதித்தரியுங்கள் அல்லது சாத்தானுடையதா என்று சோதித்தரியுங்கள்.'' அவர்களை சோதித்தறிந்து அதன்படி நடவுங்கள். 1யோவா. 4:1

இந்த யுகத்தின் ஆரம்பத்தில் சபையை ஸ்தாபிப்பதற்காக அற்புதங்கள் பிரயோஜனப் படுத்தப்பட்டன என்பதை நாம் ஞாபகத்தில் கொண்டு வரவேண்டும். ஆனால், இப்பொழுது சபை ஆரம்பிக்கப்பட்டு 19 நூற்றாண்டுகள் முடியப் போகிற நிலையில் இவைகள் வலியுறுத்தப் படக் கூடாது. ஆவியினால் உந்தப்பட்ட அப்போஸ்தலர், சாத்தான் தன்னை, ஒரு ஒளியின் (சமாதானத்தின், ஆரோக்கியத்தின், விஞ்ஞானத்தின் தூதன் என்று தவறாக அழைக்கப்படுகிற) தூதனாக மாற்றிக் கொள்ளுவான், தப்பறைகளைக் கொண்டு ஏமாற்றுவான் என்று கூறும் போது நம்முடைய யுகத்தின் முடிவை சுட்டிக் காட்டினார். ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் பெயர்கள் எழுதப்படாதபடி, பூமியில் வசிக்கிறவர்கள் எல்லாரையும் ஏமாற்றும்படி, இந்த ஒளி ஓர் அளவுக்கு வெற்றி பெறவும் தேவன் அனுமதிக்கிறார் என்றும் கூட அப்போஸ்தலர் காட்டுகிறார். அவர் கூறுகிறதாவது: ''ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.'' '' சகல வல்லமையும் அடையாளங்களும் பொய்யான (ஏமாற்றுகிற) அற்புதங்களும்,'' இந்த நாட்களில், யுகத்தின் இந்த அறுவடை காலத்தில் எதிர்பார்க்கப்பட வேண்டும். (2தெச. 2:9–12.) நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளைக் கூட நாம் மறந்துவிடக் கூடாது. '' அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! **உமது நாமத்தினாலே** தீர்க்கதரிசனம் (பிரசங்கித்தோம்) உரைத்தோம் அல்லவா? **உமது நாமத்தினாலே** பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? **உமது நாமத்தினாலே** அனேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் **ஒருக்காலும் உங்களை அறியவில்லை;** அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.'' மத். 7:22,23

நாம் யுகத்தின் இறுதியில் வசித்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை உணரும் படிக்கு யாருடைய மனக் கண்களெல்லாம் திறக்கப்பட்டு உள்ளதோ, எங்கே இந்த முன்னறிவிப்புகள் எல்லாம் நிறைவேறும்படி எதிர்பார்க்கப்பட வேண்டியதுள்ளதோ, அவைகளை

காணும்படி ஜாக்கிரதையாக இருப்பதற்கும், கிறிஸ்தவ உலகம் பூராவும் பரவியுள்ள கவர்ச்சிகரமான போதனைகளையும், அற்புத அடையாளங் களையும் கண்டு பிடிப்பதற்கும் நிச்சயமாக இதுவே காலமாயிருக்கிறது.

ஆனால், இவைகள் எல்லாம் சாத்தானின் மாயம் என்றும், அவைகளில் ஒன்றும் தேவனிடத்தில் இருந்து வருவது அல்ல என்றும் எப்படி நிச்சயத்துக் கொள்ளுவது ? ஆவியின் பாஷையில் நாங்கள் பதில் கூறுகிறோம். ''இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.'' (ஏசா. 8:20) அவர்கள் வார்த்தையிலிருந்து விலகுவது பல்வேறு விதமாக இருக்கிறது. ஒருவர் ஒரு வழியிலும், மற்றவர் இன்னொரு வழியிலும் செல்கின்றனர். அவர்களில் பெறும்பான்மையோர் போலியாக இருப்பதை, சுவிஷேத்தின் அடிப்படை உபதேசமான ஈடு பலி என்பதோடு இசைவில்லாதிருப்பதின் மூலம் வெகு சீக்கிரத்திலேயே கண்டு கொள்ளலாம். அவர்கள் ஈடு பலியை மறுக்கிறோம் என்று சொல்லாமல் இருக்கலாம். எல்லாருக்கும் ஈடுபலியாகவும், பாவ மன்னிப்புக்கும், பிதாவோடு ஒப்புரவாகிதற்கும் அடிப்படையாகவும், கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட பெரிய பாவ நிவாரண பலி இருக்கிறது என்பதையும் அதன் முக்கியத்தையும் விசுவாசிக்கிறோம் என்று கூட சொல்லுவார்கள். எப்படியாயினும், ஈடுபலிக்கு கிரேக்க பதமான ஆன்டி லுட்ரான் (anti-lutron) என்பதையும், அது ''அதற்கேற்ற கிரயம்'' என்று அர்த்தப்படுத்துவதையும் ஞாபகத்தில் வைத்திருப்பவர்களை அதிக காலம் ஏமாற்ற முடியாது. திவ்விய சத்தியமாகிய இந்த உரைகல் பரிணாமம் என்பது சத்தியத்திற்கு எதிர்மாறானது என்று சீக்கிரமாக காண்பிக்கும். ஏனெனில் பரிணாமம் மனிதன் விழுந்து போனதையும், எல்லாருக்கும் மீட்பு தேவை என்பதையும் மறுக்கிறது; அது கிறிஸ்தவ விஞ்ஞானம் கிறிஸ்தவத்திற்கு விரோதமானது என்று சரியானபடி குற்றப்படுத்துகிறது. ஏனெனில், கிறிஸ்தவ விஞ்ஞானம், பாவத்தையும், மரணத்தையும், எல்லா பொல்லாப்பையும் மறுத்து, அவைகளெல்லாம் மனதின் மருட்சி என்று கூறுகிறது. மேலும், பாவம், பொல்லாப்பு ஆகியவைகளுக்கு தேவன்தான் காரண கர்த்தா, தூண்டுகோலாயிருந்தவர் என்ற கருத்தை இந்த உரைகல் குற்றப்படுத்தி, அவர் எப்பொழும் பாவத்தை எதிர்த்திருக்கிறார், ஆகவே மீட்பின் மூலமாக மனிதனை அதன் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார், அதன் பலன்கள் ''இளைப்பாறுதலின் காலங்களில்'' படிப்படியாக வரும் என்று காட்டுகிறது.

ஆனால் பிசாசுகளில் உபதேசங்களை போதித்து தேவனுடைய பரிசுத்த நாமத்தை தூஷிக்கிறவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? அவர்கள், ஜீவித்துக் கொண்டிருக்கிற மனுக்குலத்தின் பெரும் திரளான ஜனங்களை உபத்திரவப்படுத்தும்படி ஒரு நித்திய சித்திரவதை காத்துக் கொண்டிருக்கிறது என்றும், ஏற்கனவே 50,000,000,000ல் பெரும் பான்மையிரை அது தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது என்றும் போதிக்கிறார்கள். ஆனால், வேதமோ அவர்கள் '' தங்களுடைய கல்லறையில்'' இருக்கிறார்கள் என்றும், அவர்கள் பூமியிலுள்ள சகல வம்சங்களுக்கெல்லாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங் களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறுகிறது. இப்படிப்பட்ட ஜனங்கள் ''**என்னுடைய நாமத்தினாலே**'' குணமாக்குகிறார்களென்றால், இப்பொழுது ஆண்டவர் அவர்களது தப்பறையான போதனைகளை ஆமோதித்துக் கொண்டிருக்கிறார் என்று எண்ணலாமா? கூடாது. அதுவும் இப்பொழுது ஆயிரம் வருட யுகம் உதயமாகிக் கொண்டு இருக்கிற வேளையிலும், அதோடு கூட இப்படிப்பட்ட அந்தகார இருளானது மறைந்து கொண்டிருக்கிற வேளையிலும் நாம் அப்படி நினைக்கக் கூடாது. அப்போஸ்தலர் எழுதுகிறார்: ''சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர் களல்லவே.'' ஆகவே, இப்பொழுது அப்போஸ்தலரால் குறிப்பிடப் பட்டவர்கள் மத்தியில் மேலே கூறப்பட்டவர்கள் இருப்பதாக நாம் எண்ணமுடியாது. அவர்களுடைய ''அற்புதமான கிரியைகளால்'' அவர்களுடைய வருகிற இராஜா, சீக்கிரத்தில் வருகிறார் என்று கூறி கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறோம் என்று கூறுவதினால் ஒன்றும் ஆகப்போவதில்லை. அவர்களுடைய வாய்களிலும் இருதயங்களிலும் இப்படியான பிசாசின் உபதேசங்கள் இருக்கும் போது, அவர்களுடைய விசுவாச –சுகமாக்குதலும், அற்புதமான கிரியைகளும் ஆவி உலகம், கிறிஸ்தவ விஞ்ஞானம், மொர்மொனிஷம் போன்றவர்களால் செய்யப்படுகின்ற பிசாசின் கிரியைகள் போல உள்ளன என்று தீர்மானம் செய்ய வேண்டும்.

இருந்தாலும், அஞ்ஞனிகள் மத்தியில் ஊழியக்காரர்களை அனுப்புவதில் அவர்கள் அதிகமான வைராக்கியம் காட்டுகிறார்களே என்று ஒருவர் கேட்கலாம்! **இயக்கத்தைப்** பற்றி நமது பொதுவான கருத்தை இது மாற்றாது என்று நாம் பதில் கூறுகிறோம். (நாங்கள்

சந்தோஷமாக ஒத்துக் கொள்ளுகிறோம். ஆம், இந்த இயக்கத்தினால் பிடிக்கப்பட்ட, வஞ்சகமாய் சிக்கவைக்கப்பட்ட சிலர் தேவனுடைய உண்மையான பிள்ளைகள்தான் என்று நாங்கள் ஊக்கமாக நம்புகிறோம். அவர்களை இந்த மாயமான பாபிலோனிலிருந்து அவர் விடுவிப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்). அவருடைய நாட்களில் இருந்த வைராக்கியமான ஊழிய முயற்சிகளை பற்றி நம்முடைய ஆண்டவரின் கணிப்பை நம்முடைய மனிதற்கு கொண்டு வருவோம். அவர் பரிசேயர்களைப் பார்த்து சொன்னார்: (அந்த நேரத்தில், அந்த தேசத்தில் இருந்த ''பரிசுத்தத்திற்குரிய ஜனங்கள்'') ''மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித் திரிகிறிர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் (இரண்டாவது மரணம்) மகனாக்குகிறீர்கள்.'' (மத். 23:15) சத்துருவின் பொய்யான உபதேசங்களை அஞ்ஞானிகளுக்கு கொடுப்பதின் மூலம் என்ன நன்மை வரப்போகிறது? சந்திக்கப்பட்ட சிலர் இளைப்பாறுதலின் காலங்கள் வரும்போது கற்றவைகளை அதிகமாக மறக்க வேண்டியதிருக்கும். முதல் வருகையின் போது இருந்ததே இன்றைக்கும் உண்மையாயிருக்கிறது. ''நீங்கள் அவருடைய ஊழியக்காரர், அவருக்கே ஊழியம் செய்யுங்கள்'' என்பதே இப்போதும் உண்மையாயிருக்கிறது. அப்படியானால் உண்மையாகவே, கிறிஸ்தவ உலகில் உள்ள பேர் சபைகளில் விசேஷமாக அவர்களுடைய பிரசங்க மேடைகளில் சத்துரு பெரிய வேலையை செய்து கொண்டிருக்கிறான். பிரதான ஆசாரியர்களும், வேதபாரர்களும், வேதத்தில் பட்டம் பெற்றவர்களும் இன்றைக்கு சத்தியத்தை வெறுப்பதும், ஒளியை வெறுப்பதும், கூடுமானவரை எல்லாவிதத்திலும் அதோடு போராடுவதிலும் ஆச்சரியம் ஏதுமில்லை. '' நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு (பாபிலோன்) வெளியே வாருங்கள்.'' வெளி. 18:4

சாத்தான், நம்முடைய ஆண்டவரின் மேலே குறிப்பிடப்பட்ட வார்த்தைகளின்படி புறக்கோடியில் இருக்கிறான். (மத். 12:26) அறியாமையின் திரை அகற்றப்படும் போது – எல்லா விஷயத்தைப் பற்றிய அறிவு பொதுவாக அதிகரிக்கும் போது, முற்காலத்தில் உபயோகித்தைப் போன்று மூட நம்பிக்கைகளை உபயோகிப்பது முடியாமல் போகிறது.

புதிய மாயைகள் கொண்டு வரப்பட வேண்டும், இல்லையென்றால் சத்தியத்தை பெற்றுக் கொண்டு, அவனிடம் இருந்து தப்பி விடுவார்கள். அவன் ''ஒரு ஒளியின் தூதனாக'' மிகவும் அலுவல் நிறைந்தவனாக, சிலருக்கு பரிணாமத்தை பிரசங்கிக்கிறவனாக, நித்திய ஆக்கினையை போதிக்கிற ஒரு ஊழியக்காரானாக, அஞ்ஞானிகளுக்கு கெட்ட செய்தியை அறிவிக்கிற ஊழியக்காரனாக, தன்னையே மனுக்குலத்தை பழைய நிலைக்கு கொண்டு வருகிற எலியா என்று அறிவிப்பவனாக, ஒரு விஞ்ஞானியாக (?) ஜனங்கள் தங்களுடைய வலிகளையும் வேதனை களையும் மறுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறவனாக இருக்கிறான்; பொய் சொன்னதற்கு வெகுமதியாக, அவர்கள் வியாதியை குணப்படுத்திய போது, அவர்கள் திரிக்கப்பட்ட சத்தியத்திலிருந்து, மெய் சத்தியத்தை பிரித்து அறிய முடியாதபடி செய்துவிடுகிறது. சாத்தான் தான் வெற்றி பெறுவதாக நம்பிக் கொண்டு இருக்கலாம்; ஆனால், நம்முடைய ஆண்டவருடைய வார்த்தை அதைப்பற்றி சொல்லுகிறது: அவனுடைய வீடு சீக்கிரத்தில் விழும்; அவன் சீர்திருத்தவாதி, நல்ல மருந்துவன் என்று காட்டிக் கொள்ளுவதற்கான வீழ்ச்சி சமீபமாயிருக்கிறது என்பதற்கு அடையாளமாக இருக்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திரம், வெகு சீக்கிரத்திலேயே அவன் முழுவதுமாக கட்டப்பட்டு, ''ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு'' தள்ளி வைக்கப்படுவான். வெளி. 20:2

நீதியை நேசித்து அக்கிரமத்தை வெறுத்துவிடு

தற்காலத்தில் புது சிருஷ்டியோடு தொடர்புகொள்ளுகிற தேவனுடைய தத்துவத்தை புரிந்து கொள்வோம் என்றால், இந்த திவ்விய சுபாவத்திற்கு பூரணப்படுபவர்கள், நல்ல நோக்கங்களோடு இருப்பது மாத்திரமல்லாது, தவற்றை விட சரியானதை தெரிந்து கொள்ளுவார்கள், ஆனால் இதற்கும் மேலாக ஒரு பரந்த அனுபவத்தின் வழியாக சரியாகவும் நீதியாகவும் இருப்பதின் சொளகரியங்களையும், சிலாக்கியங்களையும் தெளிவாக புரிந்து கொள்ளுவார்கள், முற்றுமாக விரும்புவார்கள், மேலும் தவறு செய்வதினால் உண்டாகும் குழப்பத்தையும், தீமையையும் தெளிவாக புரிந்து கொள்ளுவார்கள் என்ற அவருடைய நோக்கத்தை மறந்துவிடக்கூடாது. இந்த காரணத்திற்காகவே இந்த புது சிருஷ்டி புதுமையான சோதனைகளுக்கும் பரீட்சைகளுக்கும் உட்புகுத்தப் படுகிறான்; தூதர்கள் மேல் வந்ததைக் காட்டிலும், உலகம்

நியாயந்தீர்க்கப்படும் நாளில், ஆயிரம் வருட யுகத்தின் போது மனுக்குலத்தின் உலகத்தின் மேல் வருவதைக் காட்டிலும், அதிக நிச்சயத்தோடு வரும். நாம் அறிந்த வரை சாத்தான் பூலோகத்தின் ஆட்சியை அபகரிக்க வேண்டும் என்ற அவனுடைய மிக ஆர்வத்துடன் கூடிய முயற்சி வரும்வரை பரிசுத்த தூதர்களுக்கு, குறிப்பிடப்பட்ட பரீட்சை எதுவும் வரவில்லை. ஆனால் அவன் பாவத்தில் விழுந்ததும் அதனிமித்தமாக மனுக்குலத்தின் வீழ்ச்சி வந்ததும் பரீட்சிப்பதற்கு வந்த வேளையாக அமைந்தது, தங்களுடைய ஆதி மேன்மையை காத்துக் கொள்ளாமல், பிசாசுகளான தூதர்களுக்கு மாத்திரமல்ல, பரிசுத்தமுள்ள எல்லா தூதர்களுக்கும் அது பரீட்சையாக அமைந்தது என்று நினைப்பதற்கு எல்லா காரணமும் உண்டு. பொல்லாத வழியை யொகோவா பார்க்கும்படியாக அவருக்கு உள்ள வல்லமையில் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்திற்கும், தேவனுக்கு அதை கட்டுப்படுத்தும்படி, அழிக்கும்படி வல்லமை இல்லாதிருப்பதை தெளிவாக காண்பதிலும், அவர்களுடைய விசுவாசத்திற்குள்ள ஒரு பரீட்சையாக இருந்திருக்க வேண்டும். இதைப்பார்த்து, அவர்களும் கூட தண்டனை யில்லாமல் பாவம் செய்யலாம் என்று ஒவ்வொருவரும், எல்லோரும் கூட இச்சித்திருக்கலாம், அல்லது அந்த சிந்தனையோடு முயற்சித்திருக்கலாம். ஆனால் அவர்கள் ஆண்டவருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்தார்கள் என்பது, அவர்களுடைய இருதயங்கள் தாழ்மைக்கும், நீதியன் கருத்துக்களுக்கு சரியான நிலையில் இருந்தன என்பதைக் காட்டுகிறது. அவர்கள் ஏற்கனவே கிறிஸ்து மூலம் திவ்விய திட்டம் செம்மையாக செயல்படுவதை காண்கிறார்கள்; மேலும், கிறிஸ்து இயேசுவின் மூலமாகவும், மகிமையடைந்த சபை மூலமாகவும் அவருடைய பிரமாதமான திட்டம் முற்றுப் பெறுவதில் யெகோவாவின் ஞானத்திலும், அன்பிலும், நீதியிலும், வல்லமையிலும் உள்ள அவர்களுடைய நம்பிக்கை அதிகமாக நியாயமென்று நிருபிக்கப்பட்டதை சீக்கிரத்திலே காண்பார்கள். மனுஷனின் பூரணமற்ற நிலைமையோடு, விசுவாசம், பொறுமை, வைராக்கியம், அன்பு ஆகியவைகளில் மரணபரியந்தம் உள்ள சோதனைகளோடு தொடர்ச்சியாக சம்பந்தம் கொண்டுள்ள கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புது சிருஷ்டிகளுக்கு வருகிற பரீட்சையைக் காட்டிலும், பரிசுத்த தூதர்கள் பரீட்சிக்கப்பட்டது, சில விஷயங்களில், அவ்வளவு முக்கியமானது அல்ல. அதே போன்று ஆயிரம் வருட யுகத்தின் போது, உலகம் சோதிக்கப்படும் போது, அது முக்கியமானாதாகவும்

முழுமையாகவும் இருக்கும் போது, ஆண்டருக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் யாரெல்லாம் இருதயத்தில் முழுமையாக விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறார்கள், யாரெல்லாம் அப்படி இல்லாதிருக் கிறார்கள் என்பதை காட்டும். இருந்தாலும், அவைகள் தற்காலத்தில் சபைக்குரிய பரீட்சைகளில் இருந்து வித்தியாசமாக இருக்கும். ஏனெனில், கீழ்ப்படிவதிலும் நீதியை முழுமையாக, சரியானபடி உணர்ந்து கொள்ளுவதிலும் அவர்களுக்கு எல்லாம் அனுகூலமாக இருக்கும். அதற்கு மாறாக அப்போஸ்தலர்,'' தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் உபத்திரவப்படுவார்கள் '' என்று கூறியபடி புது சிருஷ்டி தற்காலத்தில் இருப்பதை காண்கிறான். ஆண்டவருக்கும், அவருடைய ஆட்சியின் கொள்கைகளுக்கும், விசுவாசத்திற்கும் உண்மையாக இருப்பதற்காக உபத்திரவத்தை அனுவிக்க வாஞ்சையுடன் இருப்பது, விசேஷமான குணத்திற்கான அடையாளம். இது ஆண்டவருக்கு ஏற்புடையதாக இருக்கிறது. தற்காலத்தில் தேவன் புது சிருஷ்டிகளோடு தொடர்புகொள்ளுவது, இவர்களை மிக உயர்வான நிலை வரை பூரணப்படுத்த வேண்டும், ஆண்டவருக்காகவும், சத்தியத்திற்காகவும் சிலாக்கியம் இல்லாத நிலைமையை மகிழ்ச்சியுடன் உபத்திரவத்தில் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அவர்களை பூரணப்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் ஆகும். ஆம், சத்தியத்திற்காக பூமிக்குரிய சௌகரியங்கள், புகழ், வருமானம், ஜீவனைக் கூட கிரயமாக செலுத்தி ஊழியம் செய்ய முற்படுபவர்களை அவர் பூரணப்படுத்துவார்.

திவ்விய திட்டத்தைக் குறித்த இந்த தத்துவம் தெளிவாக கண்டு கொள்ளப்படாததால், சிறுமந்தையோடு தேவன் கொண்டுள்ள தெய்வாதீனமான சம்பந்தத்தை குறித்து அனேகர் குழப்பமடைந் துள்ளார்கள். மென்மையான இரும்பு கருவியை வலுவாக்குவதற்கு விசேஷமான அனல் சிகிச்சைக்கு அனுப்ப வேண்டியது போல, சீக்கிரத்திரத்திலே ஆண்டவரால் தன்னுடைய விசேஷ பிரதிநிதிகளாவும், கருவிகளாகவும் மனுக்குத்தின் மாபெரும் வேலையான இளைப்பாறுதல் போன்றவைகளில் உபயோகப்படுத்துவதற்கு என உருவாக்கப் படுவர்களுக்கு இப்படி விஷேசமான அக்கினி சோதனைகளும் அனுபவங்களும் தேவை என்பதை அவர்கள் காண்கிறதில்லை. பொல்லாப்பு ஒரு போதும் நல்லதல்ல, தேவன் ஒரு போதும் பொல்லாப்புக்கும், பாவத்திற்கும் காரண கர்த்தா அல்ல; எந்த விதத்திலுருந்து நோக்கினாலும், எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும்

கிடையாது. இருந்தாலும், அவருடைய ஞானமும், வல்லமையும், அதன் விளைவுகளை நன்மைக்கு மாற்றத்தக்க அவ்வளவு வல்லமை உள்ளதாக இருக்கிறது. உதாரணமாக, நாம் பார்த்துள்ளபடி, சாத்தான் பாவம் செய்ய தேவன் காரணரல்ல. அவனை பூரணனாக, சுத்தவானாக நேர்மையான வனாக படைத்தார்; அவனுக்கு கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களில் ஒன்றாக சுயமாக சிந்திக்கும் சுதந்திரம் இருந்தது. அது திவ்விய முறைக்கு எதிராக உபயோகப்படுத்தப்பட்ட போது, அது ஒரு காலத்தில் பரிசுத்த தூதனாக இருந்தவனை ஒரு சத்துருவாக சாத்தானாக ஆக்கிற்று. சர்வ வல்லவருக்கு அவருடைய சத்துருவை உடனடியாக அழித்திருக்க கூடிய வல்லமை இருந்தது; ஆனால், பொல்லாப்பினால் வரும் கறைகளையும் அதன் கனிகளின் கசப்பையும் நன்மை தீமையினிமித்தம் தூதர்களுக்கு மாத்திரமல்லாது, மனுக்குலத்திற்கும் வருகிற அனுபவங்களின் மாபெரும் பாடங்களை அவர் முன் கூட்டியே அறிந்திருந்தார். அதே போன்று மனுக்குலத்தின் மத்தியில் பாவம் இருப்பதையும் முன் கூட்டியே அறிந்திருந்தார். தேவனால் அதை முற்றிலுமாக, எந்த நேரத்திலும் அகற்றுவது எளிதாக காரியமாக இருந்தது, ஆனால் அவர் அதை காலா காலத்திலும் செய்வார். ஆனால், இதற்கு இடையில் மனிதனுடைய கோபாக்கினை எப்படி அவரை மகிமைப்படுத்த முடியும் என்பதை முன் கூட்டியே அறிந்திருந்தார். ஆகவே, ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தத்தின்படி, ஆண்டவர் பாவிகள் மேலும், பாவத்தின் மேலும் இறுதியான வெற்றியைப் பெறுவதைக் குறித்து தேவனுடைய பிள்ளைகளுக்கு எந்த விதமான பயமும் இருக்கத் தேவையில்லை. ஆகவே முக்கிய சதி ஆலோசனை பண்ணுகிறவனோ, அல்லது அவனுடைய பொல்லாப்பை பின்பற்றுக்கின்றவர்களோ இறுதியில் ஒரு நிபணுத்துவம் பெறமாட்டார்கள் என்று அவர்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம். ஆண்டவருக்கும், அவருடைய விசுவாசிகளுக்கும் எதிராக, ஒரு காலத்திற்கு பாவமும், பாவிகளும் பெருகுவதைக் குறித்தும், அவர்களுடைய சுபிட்சத்தைக் குறித்தும், இவைகள் அனுமதிக்கப் படுவதில் உள்ள பெரிய இரகசியத்தை வெளிப்படுத்துகிற அளவுக்கு தேவனுடைய திட்டம் ஏற்கனவே முன்னேற்ற மடைந்துள்ளதாக இருக்கிறது.

உலகத்தில் எல்லா வியாதிகளும், மரணமும், கிட்டத்தட்ட நேரடியாக பெரிய சத்துருவினால் வந்தது என்பதையும், அது அவனுடையது என்பதையும், மனிதனை கறைபடுத்தி, அவனை ஒன்றும்

இல்லாமல் ஆக்கும்படி பாவம் அவன் மூலமாக மனிதனின் மனதில் புகுந்தது என்பதையும் நாம் கவனிக்க மறக்கக் கூடாது. ஆனால் உலகத்தையும் புதுசிருஷ்டியையும் பொறுத்தவரை, பாவத்தினால் மனுக்குலத்தின் மேல் வந்த சாபத்தை, அதன் பல்வேறு பகுதிகளை மனிதனின் போதனைக்காகவும் படிப்பிற்காகவும் ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்துக் கொண்டிருக்கிறார். உலகத்தாருக்கு, பொதுவான கருத்தின்படி, தவித்துக் கொண்டிருக்கிற முழு சிருஷ்டியும் பாவத்தின் அதிகமான பாவதன்மையையும், பாவம் விரும்பப்படதகாததாக உள்ளதையும் குறித்து சிலவற்றை கற்றுக் கொண்டிருக்கிறது. புது சிருஷ்டியாகிய சபையைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு பெறுமாறு கொடுக்கப்படுகிற அனுமதி, மனுக்குலத்தின் எஞ்சியிருக்கிறவர்களுக்கு பொதுவாயிருக்கிற பாடுகளில் ஒரு பங்கை உள்ளடக்கியதாகவும், குறிப்பிடுவதாகவும் இருக்கிறது. நம்முடைய ஆண்டவருடைய விஷயத்தில், மனுக்குலத்திற்கு பிரதான ஆசாரியராக இருக்கும்படி நம்முடைய பெலகீனங்களால் தொடப்பட வேண்டியது அவசியமாக இருந்தது என்பது குறிப்பாக நமக்கு அறிவிக்கப்படுகிறது. இது ஆண்டவராகவும், தலையாகவும் இருக்கிற அந்த ஆசாரியரின் சரீரத்தில் அங்கமாக இருக்கிற ஒவ்வொருவரையும் பொறுத்தவரையில் உண்மையாக இருக்கிறது. நிச்சயமாக கிறிஸ்துவின் முழு சரீரத்திலும், பரிதாபப்படாத ஒரு அங்கம் இருக்காது. அவர்களின் இளைப்பாறுதலுக்கான காலம், வரும் யுகத்தில் நியாயத்தீர்ப்பினாலும், சோதனைகள், பரீட்சைகள், சீர்திருத்தல் ஆகியவைகளினால் கீழ்ப்படிதல் மூலமாக வரும்போது, எல்லோரும் அனுபவங்கள் மூலமாகவும் தொடப்பட்டு இருப்பார்கள்; மேலும், மோசமான உலகத்திற்காக எப்படி பரிதபிப்பது என்பதையும் அறிந்து இருப்பார்கள். மாம்சத்தில் பூரணரான நம்முடைய ஆண்டவர், வியாதியுள்ளவர்களை சுகமாக்குவதில் தன்னுடைய பலத்தை செலவிட்டு, அவர் சுகப்படுத்தினவர்களின் ஒரு பெலகீன உணர்வையும், உபத்திரவத்தையும் அனுபவித்தார். அது இப்படியாக அறிவிக்கப்பட்டுள்ளது: '' அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்.'' (மத். 8:17) கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக அழைக்கப்பட்டவர் களிடத்தில் பொதுவாக ஒரு அற்புதமான விதத்தில் கொடுப்பதற்கு கொஞ்சம் பலம் தான் இருக்கிறது. ஆனால் உலகத்தாரின் பொதுவான அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் போது, அவர்களுடைய சொந்த

பூரணமற்ற மனித உறுப்புகள் சம்மந்தமாக இவர்களும் மனுகுலத்தின் பெலகீனங்களைக் குறித்து தொடப்படுகிறார்கள். இது அவர்களை பொதுவான துயரத்தில் முழுமையாக பரிதாபப்பட உதவுகிறது.

கிறிஸ்துவின் சரீரமான சபையில் உள்ளவர்கள் உலகத்தாருக்குள்ள, சரீரப்பிரகாரமான, சமுதாய மற்றும் பணம் சம்பந்தப்பட்ட சோதனைகளிலிருந்தும் கஷ்டங்களிலிருந்தும் விலக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டும் என்கிற கருத்து சிலரால் கொண்டுவரப் பட்டுள்ளது; இந்தக் கருத்து எங்களுக்கு ஏற்புடையது அல்ல என்பது இதிலிருந்து காணப்படும். உண்மைதான், நிழலான இஸ்ரயேலரோடு இப்படியாகத்தான் இருந்தது. அவர்கள் ஆண்டவருக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் உண்மையாயிருந்ததற்கு அவர்களுக்கு கிடைத்த வெகுமதி, உபத்திரங்களிலிருந்து, சோதனைகள் போன்றவைகளில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் புது சிருஷ்டியிடம் விஷயம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது; ஏனெனில், அவர்கள் மாம்சத்தின்படி இஸ்ரயேலர்கள் அல்ல, ஆனால் ஆவியின்படி இஸ்ரயேலர்களாகவும், ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகவும் இருக்கிறார்கள். இஸ்ரயேலின் நிஜமான ஆசீர்வாதங்கள் எல்லாம் புது சிருஷ்டிக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாகும். அவர்களுக்கு எல்லாம் நன்மைக்கேதுவாக ஆவிக்குரிய விதத்தில் நடைபெறுகிறது. அவர்கள் கிறிஸ்துவிக்கு விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் நிலைத்திருக்கும் வரை அவர்களுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்கள் உறுதி பண்ணப் பட்டிருக்கின்றன. ஆகவே, அவர்கள் தங்கும் இடத்திற்கு பொல்லாப்பு வராதபடி அவர்களுக்கு தீமை விளைவிக்கக் கூடிய எல்லாவற்றிலும் இருந்து மறைக்கப்பட்டு இரகசியமாக வைக்கப்பட்டுள்ளார்கள். இருந்தாலும் அவர்கள் இந்த ஆவிக்குரிய உறவை ஏற்றுக் கொள்ளுவது தொடர்ந்து பரீட்சிக்கப்படுகிறது, இயற்கையானவைகளுக்கு மேலாக அவர்கள் ஆவிக்குரியவைகளை எற்றுக் கொள்ளுகிறார்களா என்பதை நிரூபிப்பதற்காக அவர்கள் தொடர்ந்து பரீட்சிக்கப்படுகிறார்கள். அதன்மூலம் ஆவிக்குரியவைகளை பரிபூரணமாக, அதிகமாக அனுபவிக்க முடியும். இறுதியில் பூமிக்குரிய பலிகளை முற்றுமாக செலுத்தி முடிக்கப் பட்டிருக்கும் போது புது சிருஷ்டிகளாக பூரணப்படுத்தப்பட்டிருப்பார்கள்.

ஆகவே, கிறிஸ்து இயேசுவுக்குள் உள்ள புது சிருஷ்டிகளுக்கு அநேக கொடிய சோதனை வந்தாலும், அவைகள் எந்த முறையில்

வந்தாலும், அவர்கள் உண்மையாக இருப்பதற்கான அடையாளங்களாக அவைகள் இருக்கின்றன என்பதை அவர்கள் உணர வேண்டும்; மேலும், தேவன் அவர்களைப் புத்திரர்களாக எண்ணுகிறார் என்பதையும், அவர்களுடைய உடன்படிக்கையின்படி பரீட்சிக்கப்பட்டு, வர விருக்கும் மகிமைகளுக்காக ஆவியில் பூரணராகும்படி, தகுதிபடுத்தப்பட்டு ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் அவர்கள் உணர வேண்டும். ஆகவே, இப்படிப்பட்டவர்கள் மேல் ஆபத்துகள் வரும்படி ஆண்டவர் அனுமதிக்கும் போது, உலகத்தார் மேல் விழுந்தவைகளைப் போன்ற ஆபத்தாக இதையும் எண்ணிவிடக்கூடாது. உலகமானது மரணம் எனும் தெய்வீக தண்டனைக்கு உட்பட்டு இருக்கும் போது, விபத்துக்களுக்கும், அழிவுகளுக்கும் வாய்ப்புண்டு, ஆனால் அதோடு ஆண்டவருக்கு எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. இதைக்குறித்து ஆண்டவர் இப்படியாகக் கூறினார். சிலோவாமிலே கோபுரம் 18பேர் மேல் விழந்து கொன்றது; மேலும் பிலாத்து மற்றவர்களுடைய இரத்தத்தை பலிகளோடே கலந்திருந்தான்; இதனால் மற்றவர்களை விட அவர்கள் பாவிகள் என்றோ, தள்ளிவிடப்பட்டவர்கள் என்றோ, திவ்விய நிராகரிப்புக்குள்ளானவர்கள் என்றோ நினைத்துவிடக் கூடாது. (லூக். 13:1–5) மானிட உலகைப் பொறுத்த வரையில், சில எல்லைக்குட்பட்டு தேவன் மனிதர் மற்றும் சாத்தானுடைய கோபாக்கினையை அனுமதிக்கிறார். ஆனால் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட சபையைப் பொறுத்தவரையில் அது வித்தியாசமாக இருக்கிறது. அவர்களுக்கு நேரிடுவது ஒன்றும் தற்செயலாக நிகழ்வது அல்ல. ''கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.'' ''உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.'' (சங். 116:15; மத். 10:30) பிலாத்து, ஆண்டவரிடம் ''உன்னை சிலுவையில் அறையவும் ..... எனக்கு அதிகாரம் உண்டு என்றும் உனக்குத் தெரியாதா'' என்று கேட்டபோது, ''பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது'' என்று ஆண்டவர் சொன்னார். (யோவா. 19:10,11) புது சிருஷ்டியாக பிறந்த வினாடியிலிருந்து கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கமாக இருக்கிற ஒவ்வொருவருக்கும் இது உண்மையாகவே இருக்கிறது. ஆம், யாருடைய ஜீவியமும், நலன்களும் புது சிருஷ்டியின் வாழ்வோடு நெருக்கமாக இணைந்திருக்கிறதோ அவர்களுக்கும் கூட ஓர் அளவுக்கு திவ்விய அனுகூலம் கிடைக்கிறது என்பதை நம்புவதற்கு காரணமுண்டு.

அப்படியானால் புது சிருஷ்டிகள் அக்கினி போன்ற சோதனைகளை அனுபவிக்கும் போது, அவைகளை அவர்கள் ஏதோ புதுமையென்றும், விசித்திரமானது என்றும் நினைக்கக் கூடாது; ஆனால், இதே போன்ற சோதனைகள், தலையிலிருந்து கீழ் வரை உள்ள கிறிஸ்துவின் சரீரமான சபையின் எல்லா அங்கங்களுக்கு நடந்தது என்பதையும், பாத வகுப்பாராகிய கடைசி அங்கங்கள் பரீட்சிக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டு, மகிமைப்படுத்தப்படும் வரை இப்படி நடக்கும் என்பதையும் அவர்கள் அறிய வேண்டும். ஆகவே இவைகள், எதிர்ப்பு, உபத்திரவம் போன்ற ரூபத்தில் வீட்டிலிருந்தோ, அல்லது முன்னால் நண்பர்களிடமிருந்தோ அல்லது அயலகத்தாரிடம் இருந்தோ, அல்லது பேர் கிறிஸ்தவர்களிடமிருந்தோ வந்தால், அல்லது பண நஷ்டம், வறுமை போன்ற ரூபத்திலோ அல்லது வியாதி, வேதனை, சரீரப் பிரகாரமான விபத்து போன்ற ரூபத்திலோ, அல்லது வேறு எப்படி வந்தாலும் சரி, ஆண்டவருடைய ஜனங்கள், அவர்களுடைய ஒவ்வொரு நலனைக் குறித்தும் பிதா வைத்துள்ள அன்பையும் திவ்விய பராமரிப்பையும் உணர்ந்து திருப்தியுடன் இருக்க வேண்டும். இதில் முழு நம்பிக்கை வைப்பது அவர்களுடைய விசுவாசத்திற்கு சோதனையின் ஒரு பகுதியாக இருக்கிறது. நாம் பிள்ளைகள், சுதந்திரவாளிகள் என்று ஆண்டவரால் உறுதிபடுத்தப்பட்டும், தேவனுடைய மேற்பார்வையைக் குறித்து அறிவுறுத்தப்பட்டும் இருக்கும் போது, அதே வேளையில் அதிகமான உபத்திரவங்களை அனுபவிக்க அனுமதிக்கப்படும் வேளையில் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க அழைக்கப்பட்டவர்களுக்கு, ஏற்ற காலத்தில் ஜெயம் கொள்ளுகிறவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால், அவர்களுடைய விசுவாசத்திற்கு இது ஒரு கடுமையான பரீட்சையாகும். அப்படியானால், நமக்கு ஆண்டவருடைய அனுக்கிரகம், நன்மைகளையோ அல்லது துன்பங்களையோ எதை அனுப்பினாலும், நாம் நம்பிக்கையுடனும், அன்புடனும், பொறுப்புடனும் ஏற்றுக் கொள்ளுவோம், அவைகளின் பாடத்தைக் கற்று நாம் அதில் பயன் பெறுவோம்.

வாழ்க்கையின், பூலோகத்துக்குரிய பரலோகத்துக்குரிய எல்லா நலன்களிலும் திவ்விய பராமரிப்பு இருப்பதை உணர்ந்து கொள்ளுவது, நம்முடைய இம்மைக்குரிய காரியங்களில் அலட்சியத்திற்கு வழி நடத்தப்படக் கூடாது. அதற்கு மாறாக, நாம் சிலாக்கியங்கள், தருணங்கள், பொறுப்புகள், சமுதாயம், பணம் மற்றும் ஆரோக்கியம் ஆகியவைகளைப்

பற்றிய பொறுப்புகளுக்கு நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது. ஆகவே, ஏதாவதொரு சமுதாய பிரச்சினை வருமானால் நம்மால் இயன்ற வரை அவைகளை சரி செய்வது நம்முடைய கடமையாகிறது. நாம் அன்புடனும், நிதானத்துடனும் விளக்கிச் சொல்ல வேண்டும், நம்முடைய குறிக்கோள் களையும், நோக்கங்களையும் தவறாக புரிந்து கொள்ளாதபடி நம்மால் இயன்ற வரை செயல்பட வேண்டும். ஏதாவது மூடநம்பிக்கைக்குறியதாக, அதிக தீவிரமுள்ளதாக காணப்பட்டால், அதை ஞானத்துடன் தவிர்க்க முயல வேண்டும். இவ்விதமாக நம்முடைய தேவனையும், அவருடைய குணாதிசயத்தையும், அவருடைய வேதத்தையும், அவருடைய சபையையும் மற்றவர்களிடம் மகிமைப்படுத்த வேண்டும். இவ்விதமாக நம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்கப்பண்ணுவோமாக. பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் விவேகமாகவும், சிக்கனமாகவும் இருக்க வேண்டும். வியாபாரத்தில் சோம்பலாக இருக்கக் கூடாது. ஆனால் நமக்கு தேவன் இல்லாதது போன்றும், எல்லாமே நம்முடைய சொந்த முயற்சியில் உள்ளது போன்றும் இருக்கக் கூடாது. இருந்தாலும், நம்முடைய இருதயங்களிலும், விஷயங்களைக் குறித்து விசுவாச வீட்டாரிடம் நாம் சம்பாஷிக்கும் போதும், நாம் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறதை உணரவும், அதை வெளிப்படுத்தவும் வேண்டும். ஏனென்றால், நாம் அவருடையவர்களாய் இருக்கிறோம், நம்முடைய நலன்கள் எல்லாம் அவருடைய பாதுகாப்பின் பராமரிப்பில் உள்ளது. அப்படியானால், நாம் ஞானமாய், விவேகமாய் நடந்திருந்தாலும், தரித்திரமோ அல்லது பண நஷ்டமோ ஏற்பட்டால், நம்முடைய பரலோக தகப்பன் புது சிருஷ்டிகளாகிய நமக்கு அதிக சுபீட்சத்தைக் காட்டிலும், இப்படியான அனுபவங்கள் நல்லது என்று கண்டார் என்று நாம் நினைக்க வேண்டும். அவருடைய வழி நடத்துதல்கள், நம்முடைய அனுபவங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், நம்முடைய அலுவல்களில் அவருடைய ஆசீர்வாதமான மேற்பார்வை இருப்பதைப் அறிய வேண்டும். ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் இதே மாதிரியாகவே இருக்கிறது. வியாதி நமக்கு வந்தால், அழிவுக்குரிய இந்த சரீரங்களின் மேல் நமது உக்கிராணத்துவம், நம்முடைய நல்ல யோசனையின்படியும், அறிவின்படியும், பரிகாரம் தேடுவதில் சரியான முறைகள் உபயோகிக்கப் பட வேண்டும் என்று வற்புறுத்தும். முயற்சிகள் வெற்றி பெற்றால், நாம் மருந்தையல்ல, இருதயத்தில் ஆண்டவருடைய கிருபை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அவைகள் வெற்றிகரமாக இல்லாவிட்டால்,

அவருடைய வல்லமையை நாம் சந்தேகிக்கக் கூடாது, ஆனால் அனுபவித்த சோதனைகள் சம்பந்தமான மேற்கொண்டு வரக்கூடிய ஆசீர்வாதங்களை நோக்கிக் பார்க்க வேண்டும். புது சிருஷ்டிக்கு வருகிற ஒவ்வொரு துன்பத்திற்கும் அல்லது பெரிய ஆபத்துக்களுக்கும் அந்த கஷ்டத்தை நிவிர்த்தி செய்ய கவனத்தை உபயோகிப்பதுடன், அவர்களுடைய அனுபவங்களிலிருந்து என்ன பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ளலாம், இந்த பாடங்கள் சிட்சிப்புக்காகவா, அல்லது தவறு செய்ததற்காக உள்ளதா இல்லையா, அல்லது மேய்ப்பனின் காலடிகளைவிட்டு தவறான வழியில் சென்று கொண்டிருக்கிற செம்மறி ஆட்டை திருப்பி கொண்டு வருவதற்காக உள்ள கோலும், தடியும் போன்று உள்ளதா என்பதை அறியும்படி தங்களுடைய இருதயங்களை ஆண்டவரிடத்தில் நம்பிக்கையுடனும், பொறுப்புடனும் உயர்த்த வேண்டும். ''உமது கோளும் உமது தடியும் என்னை தேற்றும்.'' ஆண்டவருடைய ஜனங்கள், தங்களுடைய மகிழ்ச்சிக்காகவும், சமாதானத்திற்காகவும், சௌகரியங் களுக்காகவும் சராசரியான தேக ஆரோக்கியத்தின் மேலோ அல்லது சமுதாய சுபீட்சத்தின் மேலோ, பண சுபீட்சத்தின் மேலோ சார்ந்து இருக்க வில்லை; ஆனால், எல்லா நிலைமைகளிலும், சூழ்நிலைகளிலும் தேவ சமாதானத்தில் களி கூறலாம்; மேலும், மேய்ப்பனின் கோலிலும், தடியிலும் இதய பூர்வமாக மகிழ்ச்சியடையலாம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி, ''நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பிச் சென்றேன்'' என்று சொன்னது போல புது சிருஷ்கடிகளில் அனேகர் சொல்லலாம். உபத்திவங்களில், அதிகமான ஆசீர்வாதங்கள் உண்டு என்பதை அவர்களில் அநேகர் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

சபையைக் குறித்தும், அதன் மேல் உள்ள ஆண்டவரின் கரிசனையைக் குறித்தும் தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டுள்ளது. ''அவர் என் நோய்களை யெல்லாம் _குணமாக்குகிறார்'' (சங். 103:3) இந்த வசனம் சுவிசேஷ சபையின், சரீர நிலைமையை குறித்து கூறுகிறதாக சொல்ல முயற்சிப்பது முட்டாள்தனமானதாகவும், பெலகீனமானதாகவும் இருக்கும். அவர்களுடைய சரீர வியாதிகள் எல்லாவற்றையும் குணமாக்குவதில் ஆண்டவர் பிரியம் வைக்கவில்லை என்று தலையிலிருந்து, பாதம் அங்கம் வரை உள்ளவர்களில் யார் தான் அறியமாட்டார்கள் ? பரிசுத்தவான்களில் அனேகர் அவர்களுடைய சரீர வியாதினிமித்தம் மரித்துள்ளார்கள் என்பதை யார்தான் அறிய மாட்டார்கள்? மருத்துவ விஞ்ஞானத்தின்படி நமது அருமை மீட்பர், பூரண

சரீரம் உள்ளவராக இருந்தாலும், அவர் கெத்சமனே தோட்டத்தில் இரத்த வியர்வை சிந்தின போது விஞ்ஞானிகளுக்கு தெரியாத ஒரு வியாதியினால் தாக்கப்பட்டார்; அதே விஞ்ஞானத்தின்படியும், உண்மைகளின்படியும் முழுமையாக மாம்சத்தில் பூரணராக இருந்த அவர், அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களை விட, வெகு சீக்கிரமாக ஒரு வியாதியினால் – அவருடைய இருதயம் வெடித்ததினால் மரித்தார். அப்போஸ்தலனாகிய பவுல் தனது மரணம்வரை தன்னோடு ''மாம்சத்தில் உள்ள ஒரு முள்ளை'' எடுத்துச் சென்றார் என்பதையும், ஆண்டவர் அதை அகற்ற மறுத்து விட்டார் என்பதையும், அதை அவர் பொறுமையாக தாங்கிக் கொள்ளுவார் என்றால் அகற்கேற்ப, கிருபை என்ற ஆசீர்வாதத்தை வாக்குத்தத்தம் பண்ணினார் என்பதையும் யார்தான் அறிய மாட்டார்கள்? யுகம் முழுவதிலும் தேவனுடைய கனத்திற்குரிய பரிசுத்தவான்களில் அநேகர் வியாதினால் பீடிக்கப்பட்டார்கள், அவர்கள் அனைவரது வியாதிகளும் சுகப்படுத்தப்படுவதற்கு பதிலாக, பூரணராக்கப் படுவதற்கு பதிலாக, அவர்கள் மரித்தார்கள் என்பதை யார்தான் அறியமாட்டார்கள்? சரீர வியாதிகளுக்கு இந்த வசனத்தை உபயோகிப்பது, வேதத்தோடு முரண்பாடு உள்ளதாக இருக்கும், ஆனால் புது சிருஷ்டியின் ஆவிக்குரிய நிலைக்கு அதை ஒரு தீர்க்கதரிசனமாக உபயோகிப்பது உண்மையிலேயே பொருத்தமாக இருக்கும். புது சிருஷ்டி, ஆவிக்குரிய வியாதிகளோடும் சுகவீனங்களோடும் போராட வேண்டியதிருக்கிறது. இவைகள் கீலேயாத்தின் தைலமான ஆண்டவருடைய வார்த்தைகளில் உள்ள மாபெரும், விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களினால் குணப்படுத்தப் படக்கூடும் என்று புது சிருஷ்டிகள் எதிர்பார்க்க வேண்டும் என்று இந்த வேதாகாம பகுதி உறுதியுடன் கூறுகிறது. இது ஒரு மனிதனாலும் கொடுக்க முடியாத, எடுக்க முடியாத சமாதானத்தினாலும், மகிழ்ச்சி யினாலும் ஈடுபடுத்தப்படுகிறது; இதனால் இருதயத்தின் வியாதி, அமைதியின்மை போன்றவைகள் இனியும், அன்பும், களிப்பும், பரிசுத்த ஆவியின் சமாதானமும் தங்கி இருக்கிற, ஆட்சி செய்கிற இடத்தில் உட்புக முடியாது.

மாற்கு 16:9–20 போலியானது

எல்லா வேதபண்டிதர்களாலும் இந்த வசனங்கள் இடையில் சேர்க்கப்பட்டது என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது எந்த ஆரம்ப கால கிரேக்க மூலபிரதிகளிலும் காணப்படவில்லை, நிச்சயமாக

இவைகள் உண்மையானவைகள் அல்ல. ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசம் வைத்துள்ள அனைவரும் விஷம் குடிக்கலாம், விஷமுள்ள சர்ப்பங்களை எடுக்கலாம், தொற்று நோய் உள்ளவர்கள் மேல் கை வைக்கலாம், தீங்கு வராது என்பது உண்மையல்ல; மாத்திரமல்ல எல்லோருக்கும் வியாதிகளை குணமாக்கவும், பிசாசுகளை விரட்டவும் வல்லமை கிடையாது. திருத்தப்பட்ட வேதாகமத்திலும் எல்லா தற்காலத்து மொழி பெயர்ப்பு வேதாகமங்களிலும் இந்த பகுதி விடப்பட்டிருப்பதை கவனிக்க வேண்டும். ஆகவே அதை ஏற்றுக் கொள்ளுவதோ, அல்லது வேதாகமம் என்று மேற்கோள் காட்டுவதோ, தேவனுடைய வார்த்தையோடு கூட்டுவதாகும். மேலும், ஒரு முக்கியமான விஷயத்தின் மேல் பொதுவான குழப்பத்தோடு இன்னும் கூட்டுவதாகும்.

சரீர சுகத்தையும், மற்ற சௌகரியங்களையும் பொறுத்தவரையில், ஆண்டவருடைய ஜனங்கள் (உலகத்தாரைக் காட்டிலும் அதிகமாக) அவரால் அதிகமாக நன்மை பெறுவார்கள் என்கிற எண்ணம் ஒரு மாயம், ஒரு கண்ணி. மேலும் மேலே காட்டப்பட்டது போன்று புது சிருஷ்டியின் எல்லா சரியான எதிர்பார்ப்புகளுக்கும் மாறானது. ஆண்டவரும், அப்போஸ்தலர்களும், சபைக்கு உதாரணமாக இருந்தார்கள், தவிக்கிற சிருஷ்டியை தாக்குகிற பொதுவான கஷ்டங்களிலிருந்து விடுபட எதிர்பார்க்காமல் அவர்களுடைய அர்ப்பணிப்பு அந்த வருத்தங்களில் மனுஷீக பெலகீனங்களினால் தொடப்படும்படியாக, அதில் பங்கு பெறுவதுதான். ஆண்டவர் நாற்பது நாள் வனாந்தரத்தில் உபவாசம் இருந்த போது அவருடைய பசியை போக்கும்படி சத்துரு ஒரு யோசனையைக் கொண்டு வந்த போது அதை ஒரு சோதனை என்று கூறி ஆண்டவர் அதை மறுத்தார். (மத். 4:3,4) அவர் களைப்படைந்தவராய் சமாரியாவின் கிணற்றின் அருகில் ஓய்வெடுத்தபோது அவருடைய சீஷர்கள், அப்பம் வாங்கச் சென்றிருந்தார்கள். அதே வேளையில் அவருடைய பலத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளும்படிக்கு அவர் திவ்விய வல்லமைக்காக வேண்டியிருக்கலாம், உபயோகப்படுத்தியிருக்கலாம். (யோவா. 4:6) இந்த சந்தர்ப்பங்களில் பசிக் கொடுமைக்கு உணவுதான் சரியான மருந்தாகும். மேலும் சரீர களைப்புக்கு, ஓய்வுதான் சரியான மருந்தாகும். நம்முடைய ஆண்டவர் இந்த பரிகாரங்களை உபயோகித்தார். அவருக்கு தீராத வியாதி இருந்தது என்று நமக்கு வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. அவர் சாதாரணமாக உணவு, ஓய்வு என்கிறவைகளை உபயோகித்தது போன்று எந்த விதமான வேர்களையோ, அல்லது மூலிகைகளையோ, அல்லது மற்ற

பரிகாரங்களை உபயோகிப்பதில் எந்த விதமான தடையும் இருந்திருக்காது என்று நாங்கள் நம்புகிறோம். இரத்த வியர்வையை உண்டாக்குகிற நரம்பு வியாதியும், அவருடைய கடைசி வியாதியான இருதயம் வெடிப்பதும் அவருடைய ஊழியத்தின் இறுதியில் வந்தது. அவருடைய வேளை வந்தது என்று அவர் அறிந்தார். தூதர்களின் பாதுகாப்பு வேண்டும் என்று பரலோக வல்லமையைக் கேட்க அவர் மறுத்து விட்டார். (மத். 26:53) அவருடைய பசியை போக்கவும், அவருடைய களைப்பை தீர்க்கவும் அவர் கேட்க மறுத்த அதே வல்லமைகளை, அவரைப் பின்பற்றி வருவார்களின் நலனைக் கருதி, உதாரணமாக ஜனக்கூட்டத்தை போஷித்ததிலும், கடும் புயலை அடக்கியதிலும், வரி செலுத்த தேவையை சந்தித்ததிலும் உபயோகிக்க அவருக்கு முழு சுதந்திரம் இருந்தது. மத். 14:15–21; மாற்கு 4:36–41; மத். 17:24–27.

அதே மாதிரியாக அப்போஸ்தலர்களும் அவர்களிடம் இருந்த விசேஷமான சிலாக்கியங்கயும் ஆசீர்வாதங்களையும் தங்களுடைய உலகப்பிரகாரமான வியாதிகளிலிருந்தும், தேவைகளிலிருந்தும் விடுபடுவதற்காக உபயோகிக்கவில்லை என்று காண்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுலைத் தவிர 12 அப்போஸ்தலர்களில் எவருக்காவது வியாதி இருந்ததா என்பதைக் குறித்து நமக்கு எந்த குறிப்பும் கிடையாது. (அப். 9:8,18; கலா. 4:15; 6:11) அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பெலகீனமான கண்கள் இருந்தன, அவர் கேட்ட போது கூட ஆண்டவர் குணப்படுத்த விரும்பவில்லை. ஆனால் அது அவரைக் குட்டும் சாத்தானுடைய தூதனான போது, அவருடைய பொறுமை, தாழ்மை போன்றவற்றை சோதிக்கும் போது, அது ஆண்டவருடைய ''போதுமான கிருபையால்'' தேவைக்கும் அதிகமாக ஈடு கட்டப்படும் என்று ஆண்டவர் உறுதியளித்தார். (2 கொரி. 12:7–9) ஆண்டவர் மேல் அப்போஸ்தலர்கள் வைத்த விசுவாசமும், நம்பிக்கையும் அந்த காலத்திலிருந்து இந்த காலம் வரை இடுக்கமான பாதையில் நடப்பவர்களுக்கு ஆறுதலின் ஒரு ஆதாரமாக இருக்கிறது. இருந்தாலும், இவர்களில் சிலரைப்போல், ஆண்டவரிடத்தில் இம்மைக்குரிய நன்மைகளாகிய பணம், வீடு, நிலம், உணவு, ஆடைகள் போன்றவை களுக்காக அவர் செல்லவில்லை. சில நேரங்களில் அவர் குறைவு பட்டபோது, அப்படிப்பட்ட நேரங்களில் அவர் வேலை செய்தார்; படகுகளுக்கான பாய்கள், மற்றும் கூடாரம் பண்ணுதல் போன்ற சாதாரண வேலைகளை தன் கரங்களினாலேயே செய்தாரென அவருடைய வசனமே கூறுகிறது. பரிசுத்தத்தில் அவரைக் காட்டிலும்

அதிகமாக குறைவு பட்டிருக்கிறவர்களும், ஆண்டவரோடு அவரைக் காட்டிலும் குறைவாக தொடர்புள்ள வர்களும், இப்படி மிக எளிமையான வேலையை அலட்சியம் பண்ணியிருப்பது மாத்திரமல்ல, இருக்கிற வேலையை உதறித் தள்ளிவிட்டு, அவர்கள் கூறுகிற ''விசுவாசத்தில் ஜீவிப்பதை'' அதாவது வேலையில்லாமல் வாழ்க்கை நடத்துவதை நாடியிருப்பார்கள். இதைக் குறித்து அப்போஸ்தலர் திட்டவட்டமாக கூறுகிறதாவது: ''ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது.'' ''திருடுகிறவன் இனி திருடாமல் குறைச்சலுள்ள வனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன்.'' (2தெச. 3:10; எபே. 4:28) மற்றவர்கள் வேலை செய்து அவர்களை தாங்கும் போது, தாங்கள் இப்படி விசுவாசத்தினால் ஜீவிக்க வேண்டும், அது தேவனுடைய சித்தம் என்று தவறாக நினைக்கிற அநேகர், அதிகமான வேளைகளில், பணம், உணவு, உடை போன்றவைகளுக்காக ஜெபிக்க துணிச்சல் உள்ளவர்களாக இருக்கிறார்கள், ஆனால் அதற்காக இவர்கள் வேலை செய்ய மாட்டார்கள். இப்படிப்பட்ட எல்லாருமே கெட்டவர்கள் என்று நாங்கள் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஆண்டவருடைய ஜனங்களில் சிலர் பொய்யான உபதேசங்களிலும், திவ்விய தொடர்பைத் தவறாக புரிந்து கொள்ளுவதாலும், அவர்களுடைய அழைப்பின் நோக்கத்தை தவறாக புரிந்து கொள்ளுவதாலும், இப்படி தவறாக சிந்தனை உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது எங்களுடைய நம்பிக்கை. ஆண்டவர் சில சமயங்களில், திவ்விய சித்தத்தோடு முழுமையாக இசைந்திராத இவர்களுடைய ஜெபங்களையும் கேட்கிறார், பதில் அளிக்கிறார் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. புது சிருஷ்டிகளுக்கான சரியான வழி –ஆண்டவருக்கு மிகவும் பிரியமானவழி – நம்முடைய ஆண்டவர் மற்றும், அப்போஸ்தலர்களுடைய கட்டளைகளையும், பழக்க வழக்கங்களையும் குறிப்பாக நேரடியாக பின்பற்றுவதுதான் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் புது சிருஷ்டிகள் என்று எண்ணப்பட்டது, தங்களது சிருஷ்டிகரோடு ஒருமனப்பட்டு இருக்கிற ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்குத்தான் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் சொந்தமாக இருக்கின்றன என்கிற கருத்தை அவர்கள் உணர்ந்தார்கள் என்று பொருள்படுவதைக் குறிக்கிறது. ஆகவே, இவைகள் எல்லாம் தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தால் முக்கியமாக நீதிமான்களாக்கப் பட்டவர்களுக்கு, சொந்தமானது என்று எண்ணப்பட்டது. புது

சிருஷ்டிக்குள்ள பரலோக, ஆவிக்குரிய, உன்னதமான ஆசீர்வாதங்களுக்காகவும், சிலாக்கியங்களுக்காகவும் இந்த மனித உரிமைகளை அவர்கள் கொடுத்தார்கள அர்ப்பணித்தார்கள், சமர்பித்தார்கள், பலி பீடத்தின் மேல் வைத்தார்கள். இப்படியான பரலோக, ஆவிக்குரிய, உன்னதமான ஆசீர்வாதங்களுக்கும், சிலாக்கியங்களுக்கும்தான் இந்த சுவிசேஷ யுகத்தின் போது விசுவாசிகள் அழைக்கப்படுகின்றனர். இப்படி பூமிக்குரிய இந்த உரிமைகள் ஆண்டவரிடத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தால், ஆவிக்குரிய சிலாக்கியங்கள், நம்பிக்கைகள் போன்றவைகளுக்காக பரிவர்த்தனை செய்யப் பட்டிருந்தால், எந்த முறையில் அல்லது எந்த காரணத்தினால் புது சிருஷ்டிகள், ஏற்கனவே அர்ப்பணிக்கப்பட்ட அல்லது தியாகம் செய்த பூமிக்குரிய ஆசீர்வாதங்களை வற்புறுத்திக் கேட்கலாம்? நமக்கு நல்ல தென்று ஆண்டவர் காண்கிற இப்படியான இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஆண்டவரிடத்தில் கேட்பது முற்றிலும் வேறு விஷயம். ஆவியின்படி இல்லாமல், மாம்சத்தின்படி நமக்கு அருமையானவர்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஆசீர்வாதம் கேட்பது மற்றொரு விஷயம்; இருந்தாலும் நம்முடைய வேண்டுகோள்கள் எல்லாவற்றிலும் ஆண்டவருடைய அன்பும், ஞானமும் நம்முடையதைக் காட்டிலும் உயர்வானது என்பதை அறிய வேண்டும். அது மாத்திரமல்ல, ஒவ்வொரு விஷயத்திலும் நம்முடைய சித்தம் அவருக்கு முழுமையாக ஒப்படைக்கப்படுவதை நாம் உணர்ந்து கொள்வது மட்டுமன்றி அவரிடத்தில் இப்படிப்பட்ட விண்ணப்பங்களில் அவரிடம் அதைக் கூற வேண்டும். புது சிருஷ்டி தேவனுடைய வார்த்தையின் மூலமாக சரியாக போதிக்கப் பட்டு, அதன் ஆவியை மெச்சிக் கொள்ளுகிறவனாய், அதன் ஆவிக்குரிய நலன்களை எந்த ஒரு இம்மைக்குரிய நலனை விட அதிக மதிப்புள்ளதாக எண்ண வேண்டும்; இப்படிப்பட்டவைகளே, இப்படிப்பட்ட மாம்சத்தில் உள்ள அனுபங்கள் மாத்திரமே, புது சிருஷ்டியின் புதிய சுபாவத்தின் வளர்ச்சிக்கு அதிகமாக பயனுள்ளதாக இருக்கும் என்றும், இராஜ்யத்திற்கு ஆயத்தம் செய்ய அதிக பயனுள்ளதாக இருக்கும் என்றும் வாஞ்சிக்க வேண்டும். புதிய ஏற்பாடு, மற்ற எல்லா அப்போஸ்தலர்களை காட்டிலும், யூதாவின் இடத்தில் ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலரின் அனுபவங்களைக் குறித்து அதிகமாகக் கூறுகிறது; அவர் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதோடு அவரது அனுபவம் தொடங்கிறது. அவருடைய பல்வேறு அனுபவங்களுக்கு ஊடாக பார்க்கும் வேளையில், அப்பொழுது உள்ள சபையில் அற்புதங்களை செய்யும் வரத்தை

உபயோகித்ததில் அவர் அனேக வேளைகளில் சத்தியத்திற்குள் வருகிறவர்கள்மேல் உபயோகித்தார் என்று காண்கிறோம். ஆனால் வேதம் கூறுகிறபடி தனக்கு விடுதலை வேண்டும் என்பதற்காக இந்த குணமாக்கும் வல்லமையை தனக்காக அவர் உபயோகிக்கவில்லை; மாத்திரமல்ல, தங்களை முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொண்ட பரிசுத்தவான்ககளின் விடுதலைக்காகவும் அவர் அதை உபயோகிக்கவில்லை. அந்த காலத்தில் பரிசுத்தவான்கள் வியாதி இல்லாமல் இருந்தார்கள் என்பதற்காக இப்படியாக இருக்கவில்லை. மாறாக தீமோத்தேயுவுக்கு, இப்பொழுது நாம் சொல்லுகிற வழக்கத்தின்படி அஜீரணம் இருந்தது, எப்பாப்பிரோதீத்துவுக்கு வியாதி வராமல் இல்லை, ஆம் அவன் மரணத்திற்கு ஏதுவாக இருந்தான். அது பாவத்தினால் அல்ல, ஆனால் அப்போஸ்தலர் விளக்குகிறபடி, ''கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்.'' (பிலி. 2:25–30) எப்பாப்பிரோதீத்துவை எந்த விதமான விசேஷ உணவினால் அல்லது மருந்தினால் ஆண்டவர் ஆசீர்வதிக்க பிரியப்பட்டார் என்பதை நாங்கள் அறியோம். ஆனால் தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலர் ஜெபிக்கவும் இல்லை, கைத்துண்டையோ அல்லது சிறு துணியையோ வியாதியை குணமாக்கும்படி அனுப்பவில்லை, ஆனால் தீமோத்தேயுவுக்கு பின் வறுமாறு எழுதினார். ''உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்ச ரசமும் கூட்டிக்கொள்.'' (1 தீமோ. 5:23) திராட்ச ரசம் ஒரு பானமாக அல்ல, அல்லது ஒரு போதையூட்டும் பொருளாகவும் அல்ல, ஆனால் ஒரு மருந்தாக மாத்திரமே சிபாரிசு பண்ணப்பட்டது. இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்ன வெனில், நமக்கு அறிவிக்கப்பட்டபடி திவ்விய வல்லமை கேட்கப்படவும் இல்லை, அர்ப்பணம் செய்து கொண்ட இந்த இரண்டு சகோதரர்கள் சார்பில் உபயோகிக்கப்படவு மில்லை என்பதுதான். அவர்கள் அறிந்து வைத்திருந்த மிக சரியான உணவுகளையும், பரிகாரங்களையும் உபயோகிப்பதின் மூலம் அவர்கள் தங்களுடைய பெலகீனங்களையும் வியாதிகளையும் தாங்கிக் கொண்டார்கள், அவைகளின் மூலமாக ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டார்கள். அர்ப்பணம் செய்துகொண்ட அனைவராலும், எல்லா புது சிருஷ்டிகளாலும் கடைபிடிக்கப்பட வேண்டிய சரியான வழிக்கு ஏற்ற விளக்கம் இது என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் சரீர சுகத்திற்காக, வாழ்க்கையின் ஆடம்பரங்கள் போன்றவைகளுக்காக ஜெபிக்கக் கூடாது. முக்கியமானது என்னவெனில், நம்முடைய ஆண்டவரின் மாதிரியான

விண்ணப்பத்தின்படியாக அவர்களுக்கு நல்லது என்று ஆண்டவரே காண்கிற அனுதின அப்பத்திற்காக ஜெபிக்க வேண்டும். அனுதின ஆகாரத்திற்காக ஜெபிக்கும் போது கூட அவர்கள் தங்கள் கையின் பிரயாசத்தை முன் வைக்க வேண்டும். மேலும், அவர்களுடைய அனுபவங்கள் போன்றவைகளின் ஊடாக அவர்களுடைய குணாதிசயம் வளர்ச்சி பெறுவதற்காக, ஆண்டவரின் ஞானத்தின்படி எது அவர்களுக்கு அதிக பிரயோஜனமாக இருக்குமோ அதின்மேல் ஆண்டவருடைய ஆசீர்வாதம் இருக்க எதிர்பார்க்க வேண்டும். மிக அத்தியாவசிய தேவைகளான உணவையும், ஆடையையும் மாத்திரமே கொடுப்பது நலம் என்று அவர் கண்டால், அது அவர் மேல் அவர்கள் வைத்திருக்கிற விசுவாசத்திற்கும், பொறுமைக்கும், அன்புக்கும் உள்ள பரீட்சையாகும். அதை அவர்களுக்கு பூரணமாக கொடுத்தால் அவர்களுக்கு அதே விசுவாசத்திலும், அன்பிற்கும், பயபக்திக்கும் உள்ள பரீட்சையாக இருக்கும், ஆனால், அது எதிர் திசையில் இருக்கும். எந்த அளவுக்கு இந்த நல்ல ஈவுகளை அவருடைய காரியங்களுக்காக, அவருடைய சகோதரர்களுக்கான ஊழியத்தில் பலியாக செலுத்த அவர்கள் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை இது காட்டும். அதே போன்று திவ்விய ஞானமானது திடகாத்திரமான ஆரோக்கியத்தையும், பலத்தையும் கொடுப்பது நல்லது என்று கண்டால், அப்பொழுது விசுவாசத்தின் பரீட்சை என்னவென்றால் அன்பும், பயபத்தியும் பலி செலுத்தி இந்த பலத்தை முற்றிலுமாக ஆண்டவருடைய காரியங்களுக்காக பயன்படுத்துமா, அல்லது சுயநல காரியங்களுக்காக பயன்படுத்துமா என்பதுதான், இல்லையெனில் இன்னொரு பக்கம், ஆண்டவர் தன்னுடைய அனுக்கிரகத்தில் ஒரு குறிப்பட்ட அளவு பெலத்தையும், ஆரோக்கியத்தையும் கொடுத்தால் விசுவாசம் மற்றும் பயபக்தியின் பரீட்சை எதிரான கருத்தின்படியாக இருக்கும்; அன்பையும், கீழ்ப்படிதலையும் பொறுமையையும் வைராக்கியத்தையும் நிருபிப்பதற்காக, சிறிய தருணங்களை தேடி, தொடர்ச்சியாக உபயோகிப்பதாக இருக்கும்.

பேர்ச்சபை புது சிருஷ்டிக்கு ஒரு சத்துரு

பேர்ச்சபையில் இருக்கும் போது, அதன் பிரதிநிதிகள் மூலமாக அல்லது ஸ்தாபனங்கள் மூலமாக ஆண்டவரைப்பற்றிய அவர்களுடைய முதலாவது அறிவு வந்தபடியால், அநேகர் அந்த சபையை தங்களுடைய

ஆவிக்குரிய தாயாக எண்ணும்படி மனவிருப்பங்கொண்டிருக்கிறார்கள்; ஆகவே அதன்படி அவர்கள் அவைகள் மேல் ஒரு அன்பையும் நன்றிக்கடனையும் வைத்திருக்கிறார்கள்; அப்படிப்பட்டவர்கள் இவைகளெல்லாம் உலகப்பிரகாரமான ஒழுங்குகள் –பாபிலோன்– என்பதையும், புது சிருஷ்டிக்கு உண்மையான எதிராளிகள் என்பதையும் அறியாதிருக்கிறார்கள். இதை அவர்கள் புரிந்துகொள்ள முடியாததற்கு காரணம் அவர்கள் இந்த விஷயத்தைக்குறித்து மிகவும் குறுகிய எண்ணங்கொண்டிருப்பதுதான். அவர்கள் தங்களுடைய கண்களை உயர்த்திப் பார்த்து, திவ்விய கருத்தின்படி உண்மையான சபைக்கும், பேர் சபைக்கும் உள்ள வித்தியாசம் கோதுமைக்கும், பதருக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் போன்று இருப்பதை அறிய வேண்டும். பதர்கள் நல்ல கோதுமையை விளைவிக்க முடியாது, அதே போன்று பேர் கிறிஸ்தவ சபைகள் உண்மையான கிறிஸ்தவர்களைப் பிறப்பிக்க முடியாது. அதன் நோக்கங்கள் எதிர் திசையில் உள்ளன. அவருடைய வல்லமைதான் நமக்குள் இருந்து, ‘‘தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்’’ என்று வேதம் சொல்லுகிறது. புதிய வாழ்க்கையின் வல்லமைதான், ஏற்ற காலத்தில் திவ்விய அனுக்கிரகத்தினால் வளர்ச்சி பெறுகிறது. உலக ஆவியினால் பிறப்பிக்கப்பட்டது இந்த பலனை தராது. பேர் சபை, மெய்ச்சபையி லிருந்து மாறுபாடானதாக இருந்தாலும், அது திவ்விய சத்தியத்தின் சில அம்சங்களை கேட்டும், கண்டும் இருக்கிற ஒரு சபை மக்களைக் கொண்டது; அவர்கள் நல்லது, பொல்லாததைக் குறித்து கொஞ்சம் கூட குறைய வெளிச்சத்தைப் பெற்றவர்கள்; ஆகவே, நல்லது அல்லது பொல்லாதது என்பதைக் குறித்து ஓர் அளவுக்கு மனசாட்சிக்குள் கொண்டுவரப் பட்டுள்ளார்கள்; இப்படிப்பட்ட அறிவைப் பெற்ற அவர்கள் திவ்விய சித்தத்தைக் குறித்து கவலையற்று, அதை உதாசினம் பண்ணுபவர்களாக இருக்கிறார்கள்; இவர்கள் தங்களுக்கு பிடித்தமானபடி திவ்விய கிருபைகளை உபயோகிக்கிறார்கள், விசேஷமாக அவர்கள் தங்களுடைய பிரயோஜனத்திற்காக அல்லது சமுதாயத்தின் நன்மைக்காக தற்காலத்தில் ஊழியம் செய்வார்கள், அதற்கு மேல் கிடையாது. உண்மையான சபை, அதற்கு எதிர்மாறாக நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, சத்தியத்தை கேட்டுள்ளவர்களை மாத்திரமல்ல, தங்களை நேசித்து, கிரயம் கொடுத்து வாங்கிய ஆண்டவருக்கு தங்களுக்குரியவை முற்றிலுமாக அர்ப்பணித்தவர்களை கொண்டுள்ளது; தங்களால் இயன்றவரை

ஆண்டவரை அறியவும் அவருக்கு கீழ்ப்படியவும் உள்ளவர்களை கொண்டுள்ளது. இவர்கள் இப்படியாக பின்பற்றி வரும்போது, தங்களுடைய ஜீவனையே தங்களுக்கு அருமையானது என்று எண்ணாதவர்களாக இருக்கிறார்கள். பேர் சபை உலகத்திற்கு வெளிச்சமல்ல, ஆனால் இருளில் வெளிச்சத்தை விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் அஞ்ஞான உலகின் பலதரப்பட்ட ஒழுங்கு முறைகளில் உள்ள வெளிச்சத்தோடு கலக்கப்பட்ட உண்மையான கிறிஸ்தவர்களின் வெளிச்சத்திலிருந்து சிறிதளவு வெளிச்சம் பெற விரும்புகிறார்கள். உண்மையான சபையின் அங்கங்கள், அவர்கள் எங்கு இருந்தாலும், எரிந்து பிரகாசிக்கிற விளக்காக இருக்கிறார்கள்.

இந்த இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் அதிக விசாலமாக இருக்கிற அளவுக்கு, பொதுவாக உண்மையான சபைக்கு நல்லதாக இருக்கிறது. உண்மையிலேயே, பேர் சபை எந்த அளவுக்கு இருளிலும், மூட நம்பிக்கையிலும் மூழ்கி இருந்ததோ, அந்த அளவுக்கும், பேர் சபையால் எந்த அளவுக்கு உண்மையான சபை உபத்திரவப்படுத்தப்பட்டதோ அந்த அளவுக்கும் விசுவாசத்தினால் விளக்காயிருக்கிற மெய்ச்சபை, அதிக வெளிச்சத்துடன் பிரகாசிக்கிறது. உண்மையிலேயே பேர் சபையிலிருந்துதான் உபத்திரவங்கள் வந்துள்ளன.

தேவன் வழி நடத்துகிறார், புது சிருஷ்டியின் ஒவ்வொரு விஷயத்திலும், அவர்களுடைய அழைப்பில் மாத்திரம் அல்ல அவர் களுடைய கஷ்டங்களிலும் வழிநடத்துகிறார் என்பதையும், அவர்களை இராஜ்யத்திற்கென்று தகுதிப்படுத்துவதற்கும் மெருகூட்டுவதற்கும் சோதனைகளும், உபத்திரவங்களும் தேவையானது என்பதையும் நாம் ஒரு முறை அறிந்துகொண்டால், ஆண்டவரால் உண்டாக்கப்படாத அல்லது அவரால் அங்கீகரிக்கப்படாத மனுஷீக ஸ்தாபனங்கள் இந்த திவ்விய திட்டங்களில் கொண்டுள்ள பங்கு, ஆண்டவர் கூறியபடி, இச்சையுள்ளதாக, மாம்சீகமானதாக, ஆவிக்கு எதிராக உள்ளதாக இருப்பதை அறிந்துகொள்ளுவோம். பேர் சபைகளோடு, உண்மையான சபை ஓர் அளவுக்குக்கூட நெருக்கமாக இருக்கவில்லை என்று நாங்கள் கூறவில்லை, ஆனால் உண்மையான சபைகள் எப்பொழுதுமே வித்தியாசமான ஆவி உடையதாக இருந்தபடியால், அவர்கள் எண்ணத்தில் அவர்களைக் காட்டிலும் வித்தியாசமாக இருந்தார்கள் என்று கூறுகிறோம். தேவனுடைய வார்த்தையின் கிருபையால் பிறப்பிக்கப்பட்ட இந்த ஆவிக்குரிய பிள்ளைகள், பதராயிருக்கிற இந்த பேர் சபைகளினால் ஓர்

அளவுக்கு வாஞ்சையுடன் ஆதரிக்கப்பட்டு, சத்தூட்டப்பட்டு, வளர்க்கப்பட்டார்கள். இது சில பூச்சிகளை உதாரணமாக கொண்டு விளக்கப் பட்டிருக்கிறது. இளமையாக இருக்கிற இந்த பூச்சிகள் தங்களின் எதிரிகளினக முதுகில் உட்பக்கமாக செலுத்தப்படுகின்றன. அவைகள் அங்கே இருக்கும் போது, அவைகள் முழுமையாக பிறந்து வெளியே வரும் வரை, அனலூட்டப் படுகின்றன, சத்தூட்டப்படுகின்றன, வளர்ப்பிக்கப்படுகின்றன. அவைகள் வெளியே வரும்போது, அவைகளை தற்காலிகமாக சுமந்த பூச்சியின் மரணம் ஏற்படுகிறது. ஆகவே இப்பொழுது, ஆண்டவரால் பெற்றெடுக்கப்பட்ட புது சிருஷ்டிகள் பாபிலோனின் ஸ்தாபனங்களோடு கொஞ்சம், அல்லது அதிக நெருக்கமாக சம்பந்தப்பட்டவர்கள், பாபிலோனின் விருப்பத்திற்கு எதிராக இப்பொழுது திவ்ய மேற்பார்வையின் கீழ், ஒழுங்கின் கீழ், வெளியே வரும் நிலை ஏற்பட்டிருக்கும் போது புது சிருஷ்டியைப் பெற்றெடுத்தவர் அவர்களிடம் அழைப்பு விடுவிக்கிறார்: ''அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும், இருக்கும்படிக்கு அவனைவிட்டு வெளியே வாருங்கள்.'' வெளி. 18:4

பேர்சபைகளினால் புது சிருஷ்டிக்கு தொடர்ச்சியாக சோதனை வந்துகொண்டிருக்கிறது. அது தப்பறையான உதசேங்களினால் மாத்திரமல்ல, சம்பிரதாய தெய்வ பக்தியினாலும், மாய்மாலத்தினாலும் வருகிறது. பேர்ச்சபையார் தங்கள் உதடுகளினால் ஆண்டவரிடத்தில் கிட்டிச் சேருகிறார்கள், ஆனால் அவர்கள் இருதயமோ அவரை விட்டு தூரமாக விலகியிருக்கிறது. இந்த வேளையில் அவர்களுடைய சிந்தனைகள், உணர்வுகள், வார்த்தைகள், செயல்கள் எல்லாம் சத்திய ஆவிக்கும், அது கற்றுத்தருகிற அர்ப்பணிப்புக்கும் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. பேர் சபை உலகப்பிரகாரமான ஆவியையும், நோக்கங்களையும், அபிலாஷைகளையும் கிறிஸ்துவின் பெயரோடும் அவருக்கு செய்யும் தாழ்மையான ஊழியத்திலும் ஒன்றாக இணைக்கா விட்டால், உலகத்திலிருந்து புது சிருஷ்டிகளுக்கு வருகிற சோதனைகள் அதிக வல்லமை உடையாதக இருக்காது. வசதிகள், மனிதரின் மரியாதை, வருமானங்கள், தியாகம் பண்ண வேண்டாத ஒரு நிலை, இந்த உலகம் கொடுக்கக் கூடிய நல்ல காரியங்களை அடையலாம் என்ற உறுதி போன்றவைகள் புது சிருஷ்டிக்கு பாபிலோன் காட்டுகின்ற கண்ணிகளும், ஆசைகளும், வலைகளும், பொறிகளுமாக, தொடர்ச்சியாக வருகின்றவை

களாக உள்ளன. சத்துருவின் வேறு எந்த கண்ணிகளும் இதைப் போன்று இவ்வளவு ஆசை காட்டுவதாக, ஏமாற்றுவதாக, அதிக பலமுள்ளதாக இருப்பதில்லை.

தேவனுடைய சர்வாயுத வர்க்கம்

– எபே. 6:11–13 –

''நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர் களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.''

இங்கேயும் அப்போஸ்தலர் மறுபடியும் நம்மை முன்னதாகவே எச்சரிக்கிறார். யுகத்தின் இறுதியில் நம்முடைய நாள் விசேஷமாக தீங்கு நாளாக இருக்கும் என்றும், அந்த நாளில் கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கும்படி சாத்தானின் வல்லமைகள் விசித்திர மாக உபயோகப்படுத்தப்படும் என்றும் அப்போஸ்தலர் நம்மை முன்னதாகவே எச்சரிக்கிறார். பிசாசின் எல்லா தந்திரங்களோடு எதிர்த்து நிற்கக் கூடிய ஒரு சர்வாயுதவர்க்கத்தைப்பற்றி அவர் கூறுகிறார். அந்த சர்வாயுதவர்க்கம் மாம்சத்திற்குரியது அல்ல, ஆனால் அது ஆவிக்குரியது, புது சிருஷ்டிக்குரியது . தேவன் அதை மனிதன் மூலமாக செய்கிறவரா யிருக்கிறார். அது அவருடைய வார்த்தையாக, அவருடைய செய்தியாக, அவருடைய சத்தியமாக, அவருடைய அனுகூலமாக இருக்கிறது. இந்த மிக பாரதூரமான விஷயத்திற்கு, இந்த தீங்கு நாளுக்கு வேறு எந்த ஆயுதமும் போதாது, இந்த முழு ஆயுதமும் தேவைப்படும். ஆனாலும் முக்காலங்களில், மற்றவர்கள் அதின் சில பகுதிகளை மாத்திரம் வைத்து வாழ்ந்தார்கள்.

சத்தியம் என்னும் கச்சை ஊழியத்திற்கென செய்யப்பட்ட அர்ப்பணத்தைக் குறிக்கிறது; அப்போஸ்தலர் பவுல் தவறான ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்துவிடக் கூடாது, ஆனால் சத்தியத்தின் ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்று கட்டளை யிடுகிறார். ஒவ்வொருவனும் தன்னுடைய கச்சையை ஆராய்ந்து பார்க்க வேண்டும், சரியாக உள்ளதா என்று பார்க்க வேண்டும், அதை கட்டிக்கொள்ள வேண்டும். சத்தியத்தின் ஊழியக்காரனாயிருக்க வேண்டும் அல்லது குறைந்த பட்சம் ஊழியத்திற்கான ஆவியுள்ளவனாக இருக்க வேண்டும்.

நீதியென்னும் மார்க்கவசம் (அல்லது நீதிமானாக்கப்படுதல்) வரிசையில் அடுத்தப்படியாக உள்ளது. ஏனெனில், தன்னுடைய நீதியின் நிலையை பகுத்தறியாத, ஏற்றுக்கொள்ளாத எவரையும் தேவன் சிலுவையின் போர் வீரராக அங்கீகரிக்க முடியாது; அதே வேளையில் அவருடைய குமாரனின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உண்டான கிருபையான நீதிமானாக்கப்படுதலை (விசுவாசத்தினாலும், அர்ப்பணிப்பினாலும்) உதறித்தள்ளிவிடுபவர்களையும் தேவன் சிலுவையின் போர் வீரர்களாக அங்கீகரிக்க முடியாது.

சமாதானத்தின் பாதரட்சைகள் மறக்கப்படக்கூடாது. சிலுவையின் போர் வீரன், கரடு முரடான இடங்களில் போருக்குச் செல்ல ஆரம்பிக்கிற வேளையில் அவனுக்கு உதவி செய்யும்படியான தேவனுடைய சமாதானம் இல்லாமல், குறைவாகதான் சாதிப்பான், அதுவும் கஷ்டப்பட்டு மிகக் குறைவாகத்தான் சாதிப்பான்; எல்லா மனிதரோடும் சமாதானமாயிருக்க விரும்புகிறவனைவிட, அதாவது சத்தியத்தை விட்டுக்கொடுக்காமல் கூடுமானவரை எல்லாரோடும் சமாதானமாக இருக்க விரும்புகிறவனைக் காட்டிலும் குறைவாகத்தான் சாதிப்பான்.

விசுவாசமென்னும் கேடகம் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையும் அவித்துப்போட தேவைப்படுகிறது; அவையாவன: சந்தேகம், மோசமாக குறைகூறுவது, பரிணாமம், பிசாசுகளைப் பற்றிய அறிவு ஆகியன. ''விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்.'' '' நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.'' (எபி. 11:6 ; 1யோவா. 5:4)

இரட்சண்யமென்னும் **தலைச்சீரா** என்பது திவ்விய திட்டத்தை, அறிவின் மூலமாகவும், தத்துவ ரீதியாகவும் மதிப்பிடுவதை அல்லது புரிந்து கொள்ளுதலைக் குறிக்கும்படியாக உள்ளது. அது இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் முன்பு அதிகமாக தேவைப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஆனால் இப்பொழுது அறுப்பின் காலத்தில் சத்துரு கோபத்துடன் சத்தியத்தை தாக்கி எல்லாவற்றையும் விஞ்ஞான ரீதியாகவும், கல்வியின் வழியிலும் மாற்றி அழிவின் ஆயுதமாக்கிக்கொண்டிருக்கிறான். இப்பொழுது தலைச்சீரா மிக அத்தியாவசியமானது; இப்பொழுது, இப்பொழுதுதான் சிலுவையின் மிகத்தாழ்மையான போர் வீரர்கூட அணிந்துகொள்ளுகிற அளவிலும்,

வடிவிலும் இது கொடுக்கப்படுகிறது. விசுவாசம் என்னும் கேடகம் மூலம் ஆண்டவர் தாக்குகிறவனை நிறுத்தி வைத்தார். ஆனால் இப்பொழுது முழு ஆயுதங்களும் கொடுக்கப்படுகின்றன, அதுவும் அவரில் விசுவாசம் வைத்தவர்களுக்கு உடனே கொடுக்கப்படுகின்றன.

ஆவியின் பட்டயம் – தேவனுடைய வார்த்தை, ஆண்டவரிடம் உள்ள சிறிய ஆயுதக்கூடத்தில் இது ஒன்றுதான் எதிர்த்துத் தாக்கக்கூடிய ஆயுதமாகும். நம்முடைய தலையானவர் ''அது எழுதியிருக்கிறதே'' என்று சொல்லி சத்துருவின் மேல் வெற்றிச் சிறந்தார். இதுதான் அவரைப் பின்பற்றி வருபவர்களின் யுத்த சத்தமாகும். உண்மையான போர் வீரர்களைத் தவிர மற்றவர்கள் ஆண்டவருக்கென் மாம்சீக ஆயுதங்களைக்கொண்டு யுத்தம் செய்திருக்கிறார்கள்; மனுஷீக தத்துவங்கள், உலகப்பிரகாரமான ஞானம், ஸ்தாபனம், மற்ற ஆலய குழுக்களின் கட்டளைகள் ஆவியவைக் கொண்டும் யுத்தம்பண்ணி யிருக்கிறார்கள். ஆனால் நாம் இந்த ''தீங்கு நாளின்'' போராட்டத்திற்கு தேவனுடைய வார்த்தையின் மேல் சார்ந்திருக்க வேண்டும் – ''எழுதியிருக்கிறதே'' என்கிற தேவனுடைய வார்த்தையின் மேல் சார்ந்திருக்க வேண்டும். சாத்தானின் அஸ்திரங்களான கோபம், வெறுப்பு, பொறாமை, சண்டை, சச்சரவு போன்றவைகளை உபயோகிக்கக்கூடாது. இந்த ''ஆவியின் பட்டயத்தை,'' தேவடைய வார்த்தையை கவனமாக படித்து, வாழ்க்கையை அர்ப்பணித்து, அவருடைய சைனியத்தில் சேர்ந்த பின்னரே நாம் பெற்றுவைத்துக் கொள்ள முடியும்.

அத்தியாயம் 16

புது சிருஷ்டியின் தற்கால சுதந்தரம்

ஆவியின் முதற்கனிகள்–சரியான நம்பிக்கைகளும் தவறான நம்பிக்கைகளும் – நம்முடைய நம்பிக்கை – பரதீசில் கள்ளன் – பரி. பவுலின் ஊக்கமான வாஞ்சை – ''நம்முடைய பூமிக்குரிய வீடும்'' ''நம்முடைய பரலோக வாசஸ்தலமும்'' – மறுரூபக்காட்சி – மரித்தோரிலிருந்து முதலாவது எழுந்திருக்கவேண்டியவர் – புது சிருஷ்டியின் தற்கால சந்தோஷங்கள் – ''கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்ளுவீர்கள்'' – விசுவாசம் ஆவியின் ஒரு கனி, புது சிருஷ்டியின் தற்கால சுதந்தரத்தின் ஒரு பங்கு.

புது சிருஷ்டியின் எல்லா ஆசீர்வாதங்களும், திரைக்கு அப்பால், எதிர் காலத்துக்குரியவைகள் அல்ல. தற்கால வாழ்விலே பின்வரும் ஆசீர்வாதத்தின் முன்னுகர்வு, ஆவியின் முதற்கனி புது சிருஷ்டிக்கு கொடுக்கப்படுகின்றன. இந்த முதற்கனிகளில் பலவகையான கனிகள் பரிசுத்த ஆவியின் கிருபைகளினால் கிடைக்கப்பெறலாம். அவையாவன: விசுவாசம், நம்பிக்கை, சமாதானம், அன்பு முதலானவைகளாகும். இவைகளெல்லாம் புரிந்து கொள்ள முடியாதவைகள் என்றும், நிஜமானவைகள் அல்ல என்றும் சிலர் கூறலாம். புது சிருஷ்டிகள் இருப்பது எப்படி உண்மையோ அதே அளவுக்கு இவைகளும் உண்மை என்று நாங்கள் பதில் கூறுகிறோம். மேலும், புது சிருஷ்டி வளருகிற அதே அளவின்படி, அவனுடைய அனுபவம், ஆசீர்வாதம், விருத்தியடைதல் ஆகிய இந்த பகுதிகளும் வளர்ச்சி பெறும். இதே குணாதிசயங்கள் தான், உலகப்பிரகாரமான காரியங்களைப் பொறுத்த வரையில், ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு உள்ள ஆசீர்வாதங்களில் முதன்மை யானவைகள், அதாவது அவனுக்கு அதிக அளவிலான ஆசீர்வாதத்தையும்

சிலாக்கியத்தையும் கொடுக்கின்றவைகள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக இருக்கிறவர்கள், பரலோக நன்மைகளுக்கென பூமிக்குரிய நம்பிக்கைகளையும், சிலாக்கியங் களையும், அன்பையும் பண்ட மாற்று செய்த பின்னர், ஒப்படைக்கப் பட்டவைகளை விட மற்றவைகள், அவைகளைக் காட்டிலும் விலையேறப் பெற்றதாக இருப்பதைக் காண்கிறான். பூமிக்குரிய அன்பு நிலையற்றது, பொதுவாக சுய நலம் உள்ளது. பூமிக்குரிய நம்பிக்கைகள் பெரும்பாலும் தற்காலிகமானது, மாயையானது. பூமிக்குரிய சந்தோஷங்கள், சொற்ப காலத்திற்குரியது, ஆழமற்றது. பூமிக்குரிய அபிலாஷைகள் எளிதாக திருப்தியடைவதில்லை, இன்பகரமானதாக இருந்தாலும், கசப்பு உள்ளதாகவும் இருக்கிறது. இருந்தாலும், முழு உலகமும், இந்த அபிலாஷைகளையும், சந்தோஷங்களையும், நம்பிக்கைகளையும், அன்பையும், அடைவதற்கு முயற்சித்துக் கொண்டு இருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். மேலும், அவர்களுடைய முயற்சியில் உள்ள சந்தோஷத்தோடு, அவைகளில் ஏதாவது ஒன்றை அடையும் போது ஓர் அளவு ஏமாற்றமும் வருகிறது என்பதற்கு நாங்கள் சாட்சிகளாக இருக்கிறோம்.

ஆனால் புது சிருஷ்டிகளுக்கு அப்படியில்லை. அவர்களுடைய நம்பிக்கைகள், அவர்களுடைய சந்தோஷங்கள், அவர்களுடைய அன்பு, அவர்களுடைய அபிலாஷைகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டு இருக்கின்றன; மிகவும் பெரியதும், விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்களால் போஷிக்கப்பட்டு அவைகள் அவ்வாறு வளருகின்றன; அவைகள் ஏமாற்றத்தைக் கொண்டு வருவதில்லை, ஆனால் திருப்தியையும், எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தையும், அதிகதிகமாக அவர்களுடைய இருதயங்களுக்குள்ளாக கொண்டு வருகின்றன; ஏனெனில், அவர்களது விசுவாசக் கண்கள், திவ்விய ஞானத்தையும், அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழத்தையும் புரிந்து கொள்ளும்படியாக அதிகதிகமாக திறக்கப்படும் போது அப்படியாக வருகிறது. இந்த மேலான ஆசீர்வாதங்களுக்கு, அவர்களது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவர்கள் சுதந்தரரும், உடன் சுதந்தரமாயிருக்கிறார்கள்.

புது சிருஷ்டிகள், தாங்கள் அர்ப்பணம் செய்து கொண்ட வினாடியில், புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது,

அதை உருவகப்படுத்திப் பார்க்கும் போது, அது பாலும் தேனும் ஒடுகின்ற, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாக இருக்கிறது. அதற்கு அதன் சோதனைகளும், அதனால் ஏற்படும் விளைவுகளும், உள்ளும் புறம்பும் சண்டைகளும் இருந்தாலும், அதன் வெற்றிகள் மாத்திரம் சந்தோஷம், சமாதானம் என்று பொருள்படாமல், ஆனால் திவ்விய போதனைக்குக் கீழ், வழி நடத்துதலுக்குக் கீழ், அவரால் அதன் தோல்விகளும் நம்பிக்கை, விசுவாசம், சந்தோஷம் ஆகியவையின் ஆதாரமாக மாற்றப்படுகின்றன; அவரால் எல்லாம் கூடும், அவர்களுடைய நன்மைக் கேதுவாக எல்லாவற்றையும் செய்ய அவர் வாஞ்சையுள்ளவராக இருக்கிறார்.

உண்மையான நம்பிக்கைகளும், பொய்யான நம்பிக்கைகளும்

சாத்தான், புது சிருஷ்டிக்கு, தன்னை ஒரு தூதனாக அல்லது ஒளியின் தூதனாக காட்டி தீமை விளைவிக்க முயற்சிப்பான் என்று கூறி அப்போஸ்தலர் நம்முடைய கவனத்தை ஈர்க்கிறார். யாராவது, சத்தியம் என்ற ஒளிக்குள், பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப் பட்டோம் என்று அறிக்கை பண்ணினால், அவர்கள் மனுக்குலத்தை மூடியிருக்கிற, இருளில் இருந்தும், மூட நம்பிக்கையில் இருந்தும், மாயையில் இருந்தும் முழுவதுமாக தப்பிக்கும் படியான வழியில் இருக்கிறார்கள் என்பதை சாத்தான் அறிகிறான். அதற்கு பின்னர் அவன் தன்னை மாற்றிக் கொள்ளுகிறான், இனிமேலும், நேரடியாக மூட நம்பிக்கைக்குள்ளாகவும், இருளுக்குள்ளாகவும் நடந்த முயற்சிக்காமல், அதிகமான ஒளியின் ஒரு தலைவனாக பாவனை செய்கிறான்; தற்போது தெளிவான ஒளி இருக்கும் வேளையில் அவன் இந்த விஷயத்தில் அதிக ஜாக்கிரதை உள்ளவனாக இருந்தாலும், அப்போஸ்தலர் இந்த வசனங்களை எழுதிய நாட்களில் இருந்து இதே வழியில் அவன் அதிகமாக செயல்படுவனாக இருக்கிறான் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இதைக் குறித்த சாட்சியங்களை கிறிஸ்தவ உலகின் பல்வேறு மத கோட்பாடுகளில் காண்கிறோம். இவைகளெல்லாம் இருளிலிருந்து வெளியே வருவதற்கான முயற்சிகளை குறிக்கின்றன. ஆனால், அவைகளெல்லாம் பொய்யான கருத்துக்களாலும், பொய்யான நம்பிக்கைகளினாலும், அதாவது ஏமாற்றுகிற குணாதிசய முடையவைகளால் நிறைந்துள்ளன. இவைகள், கிறிஸ்துவனுக்கு உதவியாக இருப்பதாகவும், தேவனைக் கனப்படுத்துவதாகவும்,

அவருடைய வசனத்தை வியாக்கியானம் பண்ணுவதாகவும் கூறிக்கொள்ளுகிறது. ஆனால், உண்மையில் இவைகளெல்லாம் சத்தியத்தை சரியாக புரிந்து கொள்ளாதபடி தடை பண்ணுகின்ற கண்ணிகளும், சிக்கவைக்கின்றவைகளாகவும் இருக்கின்றன. எல்லா விதத்திலும் மிக நியாயமுள்ளதாய் இருக்கிற தேவனுடைய அற்புதமான அன்பையும், இரக்கத்தையும், சத்துரு நேரடியாக மாத்திரமல்ல, மறைமுகமாகவும் எதிர்க்கிறான்; ஆண்டவருடைய ஜனங்களுக்கு முன்பாக சத்தியத்தினால் தெளிவுபடுத்தப்பட்டவைகளைக் காட்டிலும், சரியாக நிதானிக்க முடியாத அவர்களது அந்த நிலையில், அவர்களுக்கு உயர்வானது போன்று முதலில் தோற்றமளிக்கிற நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும், அவர்கள் முன் வைத்து அவன் எதிர்க்கிறான். இருந்தாலும், தவறு செய்யும் மனப்பாங்கு சத்தியத்திலிருந்தும், திவ்விய திட்டத்திலிருந்தும், சுவிசேஷத்தின் எளிமையிலிருந்தும் வெகு தூரத்தில் சென்று, குழப்பமான சிந்தனைக்கும், மூடநம்பிக்கைக்கும், குருத்துவ குணத்திற்கும் வழி நடத்துகிறது.

மாயையான நம்பிக்கைகளுக்குள் ஒன்று, மனிதர்கள் மரிக்கும் போது அவர்கள் உண்மையிலேயே மரிக்கவில்லை, அதாவது மரிக்கும்போது இதற்கு முன்பாக இருந்ததைக் காட்டிலும் அதிகமாக உயிரோடு இருக்கிறார்கள் என்பதாகும். இந்த நம்பிக்கை வேதாகம நம்பிக்கையான மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்பதை எதிர்ப்பதற்கு சத்துரு நுழைத்த ஒரு தப்பறையாகும். இந்த இரண்டு நம்பிக்கைகளில் ஏதாவது ஒன்று தவறாக இருக்க வேண்டும். சத்துரு இந்த பொய்யான நம்பிக்கையை கிறிஸ்தவ உலகில் நுழைப்பதில் குறிப்பிடும்படியான வெற்றி பெற்றுள்ளான். இதை தேவனுடைய வசனம் ஆதரிக்கவில்லை; மேலும், இது மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய வேதாகம போதனைக்கு மாறாக உள்ளது. ஏனெனில், யாரும் மரிக்காவிட்டால் ''மரித்தோரின் உயிர்த்தெழுதலும்'' இருக்கமுடியாதே.

மற்றொரு தவறான நம்பிக்கைகளில் ஒன்று, ஆண்டவருக்கு உண்மையாக இருந்தவர்களுக்கு வெகுமதியைக் கொடுக்கும் நேரம் பற்றியது. மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்காக காத்திராமல், முதலாம் உயிர்த்தெழுதலில் ஒரு பங்கின்மேல் நம்பிக்கை வைக்காமல், அதாவது அதுதான் வெகுமதியைப் பெறுவதற்கான நேரம் என்று நம்பாமல், உயிர்த்தெழுதல் என்ற வாசலின்மூலம் வெகுமதிக்குள் பிரவேசிக் கிறார்கள் என்ற வேதாகம கூற்றுக்கு மாறாக, மரித்தோர்கள்

(மரிக்கவில்லை, ஆனால்) மரண வாசலின் ஊடாக வெகுமதிக்குள் பிரவேசிக்கிறார்கள் என்று பேர்ச் சபையை நம்ப வைப்பதில் சத்துரு, குறிப்பிடும்படியான வெற்றி பெற்றுள்ளான். இந்த பொய்யான நம்பிக்கைகள், தற்காலத்திற்கு இவைகள் எவ்வளவு அருமையானதாக காணப்பட்டாலும் கூட, மற்ற எல்லா பொய்யான நம்பிக்கைகளைப் போன்று தீமை விளவிப்பவையாகும். தேவனுடைய வசனம்தான் நம்முடைய வழிகாட்டியாக இருக்க வேண்டும். மேலும், வருங்காலத்திற்குரிய ஆசீர்வாதங்கள், சந்தோஷம் முதலானவைகளைப் பற்றிய நம்முடைய நம்பிக்கைகள் எல்லாம் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் உள்ளது என்று அது போதிக்கிறது.

கடந்த காலத்தின் தவறான எதிர்பார்ப்புகள், அதாவது மரணத்தின் நொடிப்பொழுதே பரலோக மகிமைக்குள் பிரவேசிக்கிற நேரமாக இருக்கும் (இவைகள் எல்லாம் மாம்சீக சிந்தனைக்கும் கருத்துக்கும், சூழ்நிலைகளுக்கும் எதிராக இருப்பது மாத்திரமின்றி, நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையின் போது நிறைவேற்றப்பட உள்ள உயிர்த்தெழுதலைக் குறித்த அனேக வேதாகம கூற்றுகளுக்கும் எதிராக உள்ளது.) என்கிற கூற்று ஆண்டவருடைய ஜனங்களுக்கு அதிக தீமை விளைவிக்கிறதாக இருந்துள்ளது. எப்படியெனில், இதினிமித்தம் ஆண்டவருடைய ஜனங்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்தும், அது கற்பிக்கின்ற நம்பிக்கைகளிலிருந்தும் வழிவிலக நேர்ந்துள்ளது. இவைகள் எல்லாம் தெளிவான காரண காரியங்களோடும், நம்மைக்குறித்து அவைகள் வெளிப்படுத்துகிற உண்மைகளோடும் முழுதுமாக ஒத்திருக்கிறது.

மரித்த இமைப்பொழுதிலேயே பரலோக நிலைக்கு மாற்றப் படுவதைக் குறித்த இந்த நம்பிக்கையானது, புது சிருஷ்டியின் கடைசியான அங்கங்களுக்குரியது. இந்த நம்பிக்கைதான் இங்கே வலியுறுத்தப் பட்டுள்ளது என்று கூறலாம். இது உண்மை. ஆனால், 1878ம் ஆண்டுக்கு முன்னால் நிரூபிக்கக் கூடாத ஒரு நம்பிக்கையை நாம் இப்பொழுது ஆதரிப்பதற்கு ஒரு காரணம் உண்டு. இந்த ஆண்டிலிருந்து தான் ஆண்டவருடைய ஜனங்களுடைய காலக்கணக்கின் நம்பிக்கை விரிவாக்கப்பட்டது என்று நாம் கூறுகிறோம். இந்த அறுவடையின் காலத்தில் புது சிருஷ்டியின் நம்பிக்கைகள் விரிவடைவது வேதாகமத்தோடு முழுவதுமாக ஒத்திருக்கிறது. நம்முடைய நம்பிக்கை

என்னவெனில், யுகத்தின் காலங்கள் முழுவதிலும், எல்லா மனிதரும், புது சிருஷ்டியின் அங்கங்கள் கூட அவர்கள் மரிக்கும் நொடிப் பொழுதில் மாற்றப்படவில்லை என்பதாகும், ஆனால் வேதாகமம் கூறுகிறபடி அவர்கள் கிறிஸ்வுக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்கள் உயிர்த்தெழுவது, தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறபடி புதியநாளில், ஆயிரம் வருட நாளில்தான் நடக்கும் என்கிற நம்பிக்கையை அதே அதிகாரத்துடன் கூறுகிறோம். நம்முடைய நம்பிக்கையானது, திவ்விய வார்த்தையின் மேல் கட்டப்பட்டுள்ளது. அதன்படி, இந்த புதிய விடியற்கால வேளைக்குள் நாம் ஏற்கனவே வந்து விட்டோம். இம்மானுயேல், ஏற்கனவே வந்திருக்கிறார், அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டு இருக்கிறார். முதல் பகுதியானது, பூமியின் இராஜ்யத்தை திரும்ப பெற்றுக்கொள்ள வரும்போது முடிக்கப்பட வேண்டிய வேலை, அவர் குறிப்பாக அவருடைய உவமைகளில் விளக்கமாக சுட்டிக் காட்டியபடி, அவருடைய ஊழியக்காரரிடத்தில் கணக்கு கேட்பதாகும். அவர் தன்னுடைய சொந்த ஊழியக்காரரை, அழைத்து அவர்களிடம்தான் அவர் பணத்தையும் தாலந்துகளையும் கொடுத்துள்ளார்; ஆகவே, உலகத்தாரிடத்தில் கணக்கு கேட்கும் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர், இந்த ஊழியக்காரரிடத்தில் கணக்கு கேட்பார் என்று உவமைகள் கூறுகின்றன.(லூக்கா 19:15; மத்.25:14)

இந்த வேலை முதலாவதாக, சபையில், புது சிருஷ்டிகளிடத்தில், தேவனுடைய வீட்டாரிடத்தில் துவங்குகிறது. நாம் ஏற்கனவே தொகுதி 2, அதி.7ல் குறிப்பிட்டுள்ளபடி கிபி 1878 தான் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவதாக எழும்பவேண்டிய தேதியாகும். இது வேதாகமத்தோடு முழுவதும் ஒத்து இருக்கிறது. ஆகவே, இன்றைய நம்முடைய நாள் வரைக்கும், முழுயுகத்திலும் உள்ள அப்போஸ்தலர் களும், உண்மையுள்ள பரிசுத்தவான்களும் ஏற்கனவே மகிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவிக்குரிய சரீரங்களை ஏற்கனவே உடையவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம். ஆனாலும் ''மாற்றப்பட்டு'' நம்முடைய ஆண்டவரைப் போன்று இருக்கிறபடியால், அவர்கள் ஆவியின் ஜீவிகளாய் மனிதனின் பார்வையில் மறைக்கப்பட்டு திரைக்கு பின்னால் இருக்கிறார்கள். வேதாகம போதனைகளின்மேல் கட்டப்பப்பட்டுள்ள இந்த நம்பிக்கைக்கு இசைவாக மாம்சத்தில் இன்னும் இருக்கிற ஒவ்வொரு புது சிருஷ்டியின் அங்கத்திற்கும் நாங்கள் போதிப்பதாவது: அவர்கள்

இப்பொழுது நித்திரையடைய வேண்டியதில்லை; ஆனால், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான வேளைக்காக காத்திருக்க வேண்டும்; ஏனெனில் இராஜாவும், இராஜ்யமும், ஏற்கெனவே இங்கு இருக்கிறார்கள்; புதிதான நிர்வாகத்தில் ஜீவனைக் கொடுக்கிற வேலை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது; புது சிருஷ்டியாக தெரிந்து கொள்ளப்பட்ட பெரும்பான்மையினர் ஏற்கெனவே மகிமைப்படுத்தப்பட்டுவிட்டார்கள்; ஜீவித்துக் கொண்டிருக்கிற அங்கங்கள், முதலாம் உயிர்த்தெழுதலில் அவர்களுடைய பங்கை அனுபவிப்பதற்கு முன்னதாக, அவர்கள் மெருகூட்டப்படுவதிலும், இணைக்கப் படுவதிலும், பரீட்சிக்கப் படுவதிலும் இறுதி நிலையை அடைகிறார்கள். அவர்கள் ''எடுத்துக் கொள்ளப்படுவது'' அல்லது ''மறுரூபமாக்கப்படுவது'' ஒரு நொடிப் பொழுதில், ஒரு இமைப்பொழுதில் நடைபெறும்; மாம்சமானது மரணம் அடையும் நொடிப் பொழுதில், புதிய வீடு, அதாவது ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படுவதற்காக மேற்கூறப்பட்ட காரியங்கள் நடைபெறு கின்றன. 2கொரி.5:1; 1தெச.4:17

இந்த விஷயத்தைக் குறித்து பார்க்கும்போது, இந்த ''அறுவடையின்'' காலத்தைப் பற்றிய விசேஷித்த நம்பிக்கைகளை மாத்திரம் நம்முடைய மனங்களுக்கு முன்பாக வைக்காமல், புது சிருஷ்டியின் எல்லா அங்கங்களின், சகோதரர்களின் நம்பிக்கைகள் என்ன– நமக்கு முன்பாக சுவிசேஷத்தில் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைகள் என்ன என்பதை, முழுமையாக பார்க்க வேண்டும். தேவனுடைய வார்த்தை இந்த நம்பிக்கைகளை தெளிவுபடுத்தட்டும், அதன்பின் கிறிஸ்தவ உலகத்தினரால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கருத்துகளில் இருந்து அவைகள் வித்தியாசமாக இருப்பது நமக்கு அதிர்ச்சியை உண்டுப்பண்ணாதிருக்கட்டும். உண்மைதான், கிறிஸ்தவ உலகம் அதன் கோட்பாடுகளில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும், மரித்தோரின் உயிர்த் தெழுதலிலும் ஒரு நம்பிக்கை வைத்திருக்கிறது, ஆனால் இவைகள் எல்லாம் வாயால் சொல்லப்பட்டவைகள்தான், இவைகளின் மூலம் அது வேதாகமத்தோடு ஏதோ ஒரு உறவை வைத்துக் கொள்ள முயற்சிக்கிறது. இவைகள் எல்லாம் பேர் கிறிஸ்தவ உலகின் நம்பிக்கைகள் அல்ல, அதற்குப் பதிலாக அவைகள் அவர்களுக்கு பயமூட்டுவதாக உள்ளன. அவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திராமல், அதற்கு பயப்படுகிறார்கள்; மேலும், மரித்தோரின் உயிர்த்தெழுதலை எதிர்பார்த்திராமல் அதற்கு பயப்படுகிறார்கள்; ஏனெனில், திவ்விய

குணாதிசயத்தையும், திட்டத்தையும் குறித்து தவறான எண்ணம் கொள்ளும்படி பெரிய சத்துருவினால் தவறாக வழி நடத்தப் பட்டுள்ளார்கள். பொதுவாக அவர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நம்பிக்கையின் முடிவாக, தேர்வு காலத்தின் முடிவாக, இரக்கத்தின் முடிவாக இருக்கிறது என்று நம்புகிறார்கள். வேதாகமம் குறிப்பிடுகிறபடி, உண்மையாகவே, அது பூமியின் எல்லா குடும்பங்களையும் அதிகமாக ஆசீர்வதிப்பதின் ஆரம்பமாகத்தான் இருக்கிறது, இதை தேவன், ஏற்கனவே வெகு காலத்திற்கு முன்பாகவே வாக்குத்தத்தம் பண்ணி, கடந்த நாலாயிரம் வருடங்களாக ஆயத்தம்பண்ணிக்கொண்டு இருக்கிறார் என்பதை புரிந்து கொள்ளாமல் மேற்கூறியபடி நம்புகிறார்கள்.

உயிர்த்தெழுதலும் பயத்துடன் எதிர்நோக்கப்படுகிறது, ஏனெனில் பொய்யான உபதேசம், ஒரு தவறான நம்பிக்கைக்கு வழி நடத்தி யிருக்கிறது. அதாவது ஆவி அல்லது ஜீவசுவாசம், சரீரம் இல்லாமல் ஒரு உணர்வுடன் இருக்கிறது; மேலும், சரீரமானது ஒரு விதமான ஜெயில் வீடு, அதிலிருந்து ஆவிகள் விடுதலையாக்கப்பட்டு சந்தோஷமாக உள்ளன, திரும்பி அதற்குள் செல்வது என்பது ஒரு தண்டனை போன்று இருக்கும். இப்பொழுது, அனேகரை குருடராக்கியிருக்கிற இந்த உலகத்தின் அதிபதியின் வசீகர சக்திக்கு உட்பட்டு, மனிதர்களுடைய பழக்க வழக்கங்கள் தேவனுடைய வார்த்தையை வெறுமையாக்கியிருக்கிறது. ஆனால், வேதாகமம் இதைக் குறித்து சாட்சியாக கூறுவதைக் காண்போம்; மேலும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடும் ஒவ்வொரு வேளையிலும் எப்படி குறிப்பாக, தெளிவாக, துல்லியமாக கூறுகிறது என்பதையும், உயிர்த்தெழுதல் என்பது முதலாவதாக புது சிருஷ்டியாகிய சபையின் நம்பிக்கையாக இருக்கிறது என்பதையும், இரண்டாவதாக, உலகத்தின் நம்பிக்கையாக இருக்கிறது என்பதையும் தெளிவாக, துல்லியமாக கூறுவதைக் காண்போம்.

''ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கை யுள்ளவர்களாயிருங்கள்.'' 1பேதுரு 1:13

''அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமும்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம். அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்

பட்டிருக்கிறோம். (நாம் உண்மையிலேயே இரட்சிக்கப் படவில்லை, ஆனால் அதை எதிர்நோக்குகிற உணர்வில் இருக்கிறோம்.)'' ரோம. 8:23,24.

''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார். கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம்சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும்.'' 1பேது. 1 :3–7

''இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதி பதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்கு தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.'' 2தீமோ. 4:8

''ஆயினும், நான் வெட்கப்படுவதில்லை; எனென்றால், நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவரா யிருக்கிறாரென்று நிச்சயத்துமிருக்கிறேன்.'' 2தீமோ. 1:12

''நாம் தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்கருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்கு போதிக்கிறது. அவர்.....நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.'' தீத். 2:12–14

''உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன்; அதென்ன வென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து நியாயப் பிரமாணத்திலேயும் தீர்க்கதரிசிகள் புஸ்தகங்களிலேயும் எழுதியிருக்கிற எல்லாவற்றையும் நான் விசுவாசித்து, நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந் திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறது போல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.'' அப். 24:14,15

''நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது,

நீங்களும் அவரோடுகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.'' கொலோ. 3:3,4

''மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன்.'' அப். 23:6

''இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றைக்கும் மரியாமலுமிருப்பான்.'' யோவா. 11:25,26

''பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.'' யோவா.5 :28, 29

''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.'' யோவா. 14: 2,3

''மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தின வராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்கு பலனளிப்பார்.'' மத்.16:27

''இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியை களின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.'' வெளி.22:12

''இதோ, உன் இரட்சிப்பு வருகிறது; இதோ, அவர் அருளும் பலன் அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது.'' ஏசா.62:11

''இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்..... நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது.'' யாக். 5:7,8

'' மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன் கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியை சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள். அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்..... வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடு வெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்.'' ஏசா.35:4–6

''அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாக காணப் படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். பூமியின் தூளிலே

நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய்.'' தானி. 12:1–3,13

''கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும், அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாமகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.'' மல். 3:16,17

திரித்துக்கூறப்பட்ட கோட்பாடுகளும், உண்மையல்லாத கற்பனைகளும் பெரும்பாலும் தத்துவ ஞானிகளிடமிருந்து வருகிறது. அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் வார்த்தைகளின் வழிநடத்துதலைப் பெற்றிருக்கவில்லை; அவர்கள் ஆண்டவருடைய பரிசுத்தவான்களின் கருத்துகளை மிகவும் தவறாக பயன்படுத்துகிறார்கள். ஆண்டவருடைய பிள்ளைகளிடமிருந்து வரக்கூடிய மெய்யான நம்பிக்கைகளைப்பற்றிய பல தெளிவான அறிவிப்புகளுக்கு, உருவகமாக சொல்லப்பட்ட சில வசனங்கள் எதிர்மறையாகவும், அதனுடைய வல்லமையையும், அழகையும், சக்தியையும், குறைப்பதாகவும், இந்த தெளிவான அறிவிப்புக்கு மாறான கருத்தை வெளிப்படுத்துகிறதாயும் இருக்கின்றன. புரிந்துகொள்ளும் கண்களுக்கு மிக தெளிவாகவும் எளிமையாகவும் தெரியும் அளவுக்கு, விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் கீழ்ப்படிதலுக்கும் ஒரு வழியை ஏற்படுத்தும்படிக்கு இவைகளை நாம் ஆராய வேண்டும். முதற்பலனான நமது சுதந்தரத்தின் ஒரு பங்காகிய இந்த வாழ்க்கையின் பலவகையான மற்ற ஆசீர்வாதங்களை மேலும் அறிய தொடர்ந்து செல்வோம்.

பரதீசில் கள்ளன்

''இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: (மனம் திருந்திய திருடன்) இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.''லூக். 23:42,43

நித்திய ஆக்கினையிலிருந்து தப்பித்து பரதீசின் பெரும் சந்தோஷத்திற்கு செல்வதற்கு இரட்சிப்பு உதவுகிறது என்று நினைப்பவர்களும், அனுக்கிரகம் தற்செயலாக கிடைக்கிற சூழ்நிலைகளின் மேல் சார்ந்துள்ளது என நினைப்பவர்களும், தெரிந்து கொள்ளப்படுதல் என்கிற உபதேசம் இந்த மாதிரி சம்பவத்தில் உதாரணப்படுத்தப் பட்டிருக்கிறதை சிந்தித்துப்பார்க்கிறார்கள்; அதாவது, நம்முடைய ஆண்டவராகிய இயேசு ஒரு கள்ளனின் ஆறுதலான வார்த்தைகளில் பிரியப்பட்டு, அவனை பரலோகத்திற்கு தெரிந்து கொண்டார் என்றும், அதே போன்று மற்றவனும், பரிதாபம் காட்டப் படாமல், விடுதலையாக்கப்படாமல் நித்திய காலமாக வேதனையை அனுபவிக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டார் என்றும் நினைக்கிறார்கள். உண்மையாகவே, தேவன் இரட்சிப்பை இப்படி ஒரு லாட்டரி மாதிரியும், ஏதோ தற்செயலாக நடப்பது போன்றும் வைத்திருப்பதாக நம்புகிறவர்கள், சபை நடத்தும் லாட்டரிகளைப் பற்றியும், உலகத்தார் நடத்துபவைகளைப் பற்றியும் தவறாக எதுவும் பேசக்கூடாது.

ஆனால் விஷயம் இதுவல்ல. இந்த வசனம் மிக தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அதன் உண்மையான கருத்தைப் பெறுவதற்கு நாம் சூழ்நிலைகளையும், சம்பந்தங்களையும் சேர்த்து பார்ப்போம்.

ஆண்டவர் இப்பொழுதான் குற்றவாளி என தீர்க்கப்பட்டிருக்கிறார். தன்னை ஒரு இராஜா என்று சொன்னது, இராயருடைய அரசாங்கத்திற்கு எதிராக தேசத்துரோகம் என்று குற்றம் சாட்டப்பட்டு, மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தார். தன்னுடைய ராஜ்யம் ''இவ்வுலகத்துக்குரியது அல்ல'' என்று அவர்களுக்கு சொல்லி யிருந்தாலும் கூட, அவர் தண்டனைக்குட்படுத்தப்பட்டார். அங்கே அவருடைய தலைக்கு மேலாக சிலுவையில், அவருக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றம் மூன்று மொழிகளில் ''இவன் யூதருடைய ராஜா'' என்று எழுதப்படிருந்தது. அவர் சொன்னவைகளைக் கேட்டிருந்தவர்கள் அனைவரும், அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளர்களில் ஒருவனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அவரை இகழ்ந்தார்கள். அந்த கள்ளன் நிச்சயமாகவே இயேசுவைப் பற்றியும், அவருடைய அற்புதமான குணாதிசயத்தைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறான். அவன் தன்

இருதயத்தில் சொன்னான்: உண்மையிலேயே இவர் ஒரு விசித்திரமான, அற்புதமான மனிதன். அவன் சொன்னவைகளுக்கு ஆதாரம் இல்லை என்று யார்தான் சொல்ல முடியும்? நிச்சயமாகவே அவர் தேவனோடு நெருக்கமாக ஜீவிக்கிறார். நான் அவருடன் அனுதாபத்தோடு பேசுவேன். அது எந்த தீங்கும் விளைவிக்காது. அதன் பின்னர், தன்னுடைய சக கள்ளனிடம் ஆண்டவருடைய பாவமில்லாத நிலையைக் குறிப்பிட்டு அவனைத் திட்டினான். அதன் பின்னர் மேற்சொல்லப்பட்ட சம்பாஷனை நிகழ்ந்தது.

இந்தக் கள்ளனுக்கு இயேசுவைக் குறித்த ஒரு சரியான, திட்டவட்டமான கருத்து இருந்தது என்று நாம் எண்ண முடியாது. அவன் மரிக்கப் போகிறபடியால், எந்த ஒரு துரும்பைப் போன்ற நம்பிக்கையும் கூட, ஒன்றுமில்லாததை விட மேலானது என்ற ஒரு எண்ணத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. அவனுக்கு அதிக மதிப்பு கொடுப்பது என்பது அவனை விசுவாசத்தில், ஆண்டவருடைய அப்போஸ்தலர்களுக்கும், அவரை பின்பற்றினவர்களுக்கும் மேலாக உயர்த்துவது போன்று இருக்கும். ஏனெனில், இந்த நேரத்தில் அவர்கள் எல்லோரும் பயந்து ஓடி விட்டார்கள். இவர்கள் மூன்று நாட்கள் கழித்து சொன்னார்கள்: ''அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்.'' லூக். 24:21

அவனுடைய விண்ணப்பத்தின் கருத்தைக் குறித்து நமக்கு சந்தேகம் இருக்க முடியாது. இயேசு அவருடைய இராஜ்யத்தின் அதிகாரத்தை பெறுகிற அவ்வேளையில் அவன் அனுகூலம் பெற வேண்டும், அக்கரை காட்டப்பட வேண்டும் என்று வாஞ்சித்தான். இப்பொழுது நம்முடைய ஆண்டவரின் பதிலைக் கவனியுங்கள். அவருக்கு இராஜ்யம் கிடையாது என்று அவர் கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக கள்ளனுடைய வேண்டுகோள் சரியானது தான் என்று அவர் தன்னுடைய பதிலின் மூலம் சுட்டிக் காட்டுகிறார். ''மெய்யாகவே'' அல்லது ''உண்மையாகவே'' என்கிற வார்த்தை கிரேக்கப் பதமான ''amen'' என்பதிலிருந்து வருகிறது; மேலும், அது ''அப்படியாகட்டும்'' என்று அர்த்தப்படுத்துகிறது; அல்லது உன்னுடைய வேண்டுகோள் உனக்கு அருளப்பட்டது என்று பொருள்படும். ''நான் உனக்கு சொல்லுகிறேன் இன்றைக்கு (இந்த அந்தகாரத்தின் நாளில், நான் ஒரு வஞ்கனைப் போல் காணப்படுகின்ற நாளில், நான் ஒரு குற்றவாளியைப் போல் சாகிற நாளில்), நீ என்னோடு

பரதீசில் இருப்பாய்.'' இந்த வாக்குத்தத்தத்தின் சாராம்சம் என்னவெனில், ஆண்டவர் தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கும் போது, அது ஒரு சொர்க்கமாக இருக்கும், கள்ளன் நினைக்கப்பட்டு, அதில் இருப்பான் என்பதாகும். நாங்கள் ''இன்றைக்கு'' என்ற வார்த்தைக்கு முன்னால் இருந்த காற்புள்ளியை வார்த்தைக்கு பின்னால் மாற்றியிருப்பதைக் கவனியுங்கள்.

இது நமது ஆண்டவருடைய வார்த்தைகளை மிக தெளிவான தாகவும், நியாயமானதாகவும் ஆக்குகிறது. அவர் விரும்பியிருந்தால் கள்ளனிடம் அதிகமாகக் கூறியிருக்க முடியும். அவனுக்கான ஈடுபலி அங்கேயே அப்பொழுதே அவரால் செலுத்தப்படுவதுதான் அவன் பரதீசில் இருப்பதற்கான சிலாக்கியத்தின் காரணம் என்று அவர் கூறியிருக்கலாம். அவர் அவனுக்காகவும், மற்ற கள்ளனுக்காவும், அவர் முன்னால் நின்று சத்தமிட்டு இகழ்கின்ற திரளான ஜனங்களுக்காகவும், கல்லறையில் உள்ள லட்சக்கணக்கானவர்களுக்காகவும், இன்னும் பிறக்காதிருக்கிற லட்சக்கணக்கானவர்களுக்காகவும் மரித்து, ஈடுபலி செலுத்திக் கொண்டு இருக்கிறேன் என்று மேற்கொண்டு கூறியிருக்கலாம். ஏனெனில், ''இயேசு கிறிஸ்து தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்'' என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர் தன்னை ஒரு ஈடுபலியாக எல்லாருக்காகவும் ஈந்தார். அதன்படி ஏற்ற காலத்தில் ஆதி மனிதனின் பாவத்தால் இழக்கப்பட்ட ஏதேன் தோட்டத்து நிலைமைக்கு திரும்பும் சந்தர்ப்பம் ஏற்படும். இது கிறிஸ்துவின் நீதியுள்ள பலியால் மனிதர்களுக்கென மீட்கப்பட்டது. எபி. 2:9; 1தீமோ. 2:5,6; அப். 3:19.

ஏற்கனவே காண்பிக்கப்பட்டபடி, ஏதேன் தோட்டம் என்பது பூமியானது முழுவதுமாக சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, பரிபூரணப் படுத்தப்பட்டு, அழகுபடுத்தப்படும்போது எப்படி இருக்கும் என்பதைக் காட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு உதாரணமாகும். ''பரதீசு'' என்கிற வார்த்தை அரேபிய மொழியில் இருந்து வந்தது, அதன் அர்த்தம் ''தோட்டம்'' என்பதாகும். ஆதியாகமத்தின் ஆசிரியர் ஆதி. 2:8ல் கூறுகிறார்: ''தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கினார்.'' கிறிஸ்து தன்னுடைய இராஜ்யத்தை ஸ்தாபித்தல், பொல்லாங்கனை கட்டுதல் முதலானவைகள் ஏற்படும் வேளையில், இந்த பூமி படிப்படியாக ஒரு பரதீசாக மாறும். அப்பொழுது

இரண்டு கள்ளர்களும், மற்ற அனைவரும், அவர்களுடைய கல்லறையில் இருந்து அந்த இராஜ்யத்திற்குள் வருவார்கள்; அதன் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்த பின்னர், அவர்கள் அதில் வசித்து என்றென்றைக்கும் சந்தோஷமாக இருப்பார்கள். இருந்தாலும், பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிற இரட்சகருக்கு, அந்த சோகமான வேளையில் சொல்லப்பட்ட அன்பான வார்த்தைகள், அவருடைய சீஷனுக்கு ஒரு கலசம் தண்ணீரை கொடுப்பதற்கோ, அல்லது வேறு சிறிய அன்பான செயலுக்கோ கிடைக்கிற பலனைக் காட்டிலும், ஒரு விசேஷமான, சரியான பலனைப் பெறும் என்பதில் எங்களுக்கு சந்தேகம் இல்லை. (மத்.10:42) இந்த ராஜா சீஷர்களை '' சகோதரர் என்று சொல்ல வெட்கப்பட வில்லை.'' எபி. 2:11

சாபமும், பாவத்தின் கேடு நாசமும் உலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னர், தன்னுடைய சிருஷ்டிகரோடு ஒரு மனப்பட்டு இருந்த போது ஆதியில் ஆதாமில் காணப்பட்ட பேரின்பத்தை விளக்குவற்காக பரதீசு என்கிற வார்த்தை வேதாகமத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. மனுக்குலம் இழந்த இந்த பரதீசு, பழைய நிலைக்கு கொண்டு வரப்படும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. பொன்னான யுகம் ஆரம்பாமாகும்படி ஏறக்குறைய முழு சிருஷ்டியும் ஒரு தெளிவற்ற நிலையில் நம்பி காத்துக் கொண்டிருக்கிறது. பரதீசு என்ற நிலை நம்முடைய ஆண்டவரின் மரணத்தினால், மனிதனுக்காக மீட்கப்பட்டது என்கிற சிந்தனையை வேதாகமம் நமக்கு தருகிறது; மேலும், அதன் விளைவாக, இளைப்பாறுதலைத் தரும் அவருடைய மகிமையான வேலையின் ஒரு பகுதி பரதீசை –''கெட்டுப்போனதை''– விலைக்கிரயம் கொடுத்து வாங்கப்பட்டதை– பழைய நிலைக்கு கொண்டு வருவதாக இருக்கும் என்கிற சிந்தனையையும் வேதாகமம் நமக்கு தருகிறது. மத். 18:11; எபே. 1:14; வெளி. 2:7

ஆனால் காற்புள்ளி இருக்கும் இடத்தை மாற்ற நமக்கு அதிகாரம் உண்டா? நிச்சயமாக உண்டு. ஏனெனில், வேதாகமத்தில் நிறுத்தற் குறிகள், தேவஆவியால் ஏவப்படவில்லை. வேதாகம எழுத்தாளர்கள் நிறுத்தற் குறிகளை உபயோகிக்கவில்லை. அது 400 வருடங்களுக்கு முன்பாக கண்டு பிடிக்கப்பட்டது. அது ஒரு நவீன காலத்து சௌகரியம். அது மற்ற வேதவாக்கியங்களோடு இசைவான அர்த்தத்தைக் கொண்டு வருவதற்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

நவீன காலத்தில் உள்ள இலக்கியத்தில், இன்றைக்கு (''today'') என்கிற வார்த்தையை இதே போன்ற வேளைகளில் உபயோகிப்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. கீழ்க்கண்ட வேதாகம வசனங்களை கவனிக்கவும்.

''ஆகையால் நான் இன்று இந்த காரியத்தை உனக்கு கட்டளையிடுகிறேன்.'' உபா. 15:15

''இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்.'' உபா. 30:15

''நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூறவும்..... நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன்.'' உபா. 30:16

''நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சம் குறைய மாத்திரமல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான்.'' அப். 26:29

இந்தப் பகுதியின் அர்த்தத்திற்கு தேவையான நிறுத்தற்குறிகள் (Punctuation) இருக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல, இதையொத்த எஞ்சியிருக்கிற வேதாகம வசனங்கள் எல்லாம் ஒத்திருக்கும்படி, அவைகள் வற்புறுத்தப்படுகின்றன. ஆகவே, அது கொடுக்கப்பட்டதற்கு, சரியான அல்ல நியாயமான மறுப்பு இருக்க முடியாது. நம்முடைய ஆண்டவர் உடனடியாக பரதீசுக்கு சென்றார் என்று நினைப்பது இயலாத காரியமாகும், ஏனெனில் பரதீசு இன்னும் மறுபடியும் ஸ்தாபிக்கப்படவில்லை. மேலும், நம்முடைய ஆண்டவருடைய சரீரம் யோசேப்பின் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டது என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளது; மேலும், அவருடைய ஆத்துமா, அல்லது ஆவி ஷியோலுக்கு (Sheol), ஆதேசுக்கு (hades), மறதியின் இடத்திற்கு (oblivion) சென்றது என்றும், மேலும் அவர் மரித்திருந்தார், இதற்கிடையில் பரதீசிலோ அல்லது வேறு இடத்திலோ அவர் உயிரோடு இருக்கவில்லை என்றும் வேதாகமம் தெளிவாக உறுதிபட கூறுகிறது. நம்முடைய ஆண்டவர், அவருடைய உயிர்தெழுதலின்போது, பரலோகத்திலிருந்தோ, அல்லது பரதீசிலிருந்தோ வரவில்லை. ஆனால், அவர் ''வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.'' (1கொரி. 15:4) ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்பு, அவருடைய வார்த்தைகளாவன: ''எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது.'' (லூக். 24:46) மறுபடியும் அவர் மரியாளினிடத்தில் சொன்னதாவது: ''நான்

இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.'' யோவான் 20:17.

பரிசுத்த பவுலின் ஊக்கமான வாஞ்சை

''கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலன் உண்டாயிருப்பதால், நான் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் (திரும்புதலுக்கும் கிறிஸ்துவோடு இருப்பதற்கும் எனக்கு ஊக்கமான வாஞ்சை உண்டு, ஏனெனில் அது மிகவும் நல்லது) நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசை உண்டு, அது அதிக நன்மையாய் இருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.'' பிலி. 1:21–24

*இந்த வசனத்தின் மேற்கூறிய டயக்ளாட்டின் மொழிபெயர்ப்புக்கும் (*diaglot translation*), பொதுவான மொழிபெயர்ப்புக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் என்னவெனில் இந்த ''*depart*'' என்கிற வார்த்தைக்கு பதிலாக '' *return*'' என்று போடப்பட்டுள்ளதேயாகும். ''*return*'' என்கிற வார்த்தையை போட்டது சரிதான் என்று மொழிப்பெயர்ப்பாளர் அதற்கு பின் வருமாறு காரணங்களைக் கூறுகிறார்:–*

'' analusai, *(மறுபடியும் இழந்து போகுதல்) அல்லது திரும்புதல் (*returning *) என்பதைத் தான் பவுல் ஊக்கமாக வாஞ்சித்தார். அது கடந்து செல் (*depart*) என்கிற வார்த்தை பொதுவான மொழிப்பெயர்ப்பில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது, இது மரணம் (*death*) அல்லது இல்லாமல் போகுதல் (*dessolution *) என்பதற்கு சரியான அர்த்தத்தை கொடுக்காது. ஏனென்றால் பவுலுக்கு இரண்டுமே வித்தியாசமானதாக தெரியவில்லை. அவர் ஜீவனை அல்லது மரணத்தை தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அவர் வாஞ்சித்தது* analusai, *இது மூன்றாவது விஷயம். அவர் விருப்பப்பட்ட இரண்டு காரியங்களைத் தவிர அவர் அதிகமாக விருப்பப்பட்ட மூன்றாவது விஷயம்* analusai *ஆகும்.* analusai *என்கிற வார்த்தை லூக்கா 12:36ல் வருகிறது. அங்கே அது (*return*) என்று*

காட்டப்பட்டிருக்கிறது. 'எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்' என்று கற்றுக் கொடுத்திருந்தார்; தான் மறுபடியும் வருவதைக் குறித்து இயேசு அவர்களுக்கு போதித்திருந்தார் (யோவா.14:3,18); இப்படியாகத்தான், அவர் பரமேறும் போது தூதர்களும் அவர்களிடத்தில் சொன்னார்கள். (அப்.1:11) இந்த உபதேசத்தை பவுல் நம்பினார், மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தார். மேலும், அவர் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்கும்படியாக, இரட்சகர் பரலோகத்திலிருந்து திரும்பி வருவதை (analusai) எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்.'' (பிலி. 3:20; 1தெச. 1:10; 4:16,17)

analusai என்கிற கிரேக்க பதத்தை ஆராயும்போது பிளாட்டோ என்பவர் அதை கிரேக்க இலக்கியத்தில் இரண்டு வழிகளில் உபயோகித்திருப்பது தெரிகிறது. சில வேளைகளில் பிரிந்து செல் (depart) என்றும் சில வேளைகளில் திரும்பிவருதல் (return) என்றும் அர்த்தப்படும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை மாத்திரமே வருகிறது. அது இந்த இடத்திலும்(பிலி.1:23), லுக்கா 12:36 லும் வருகிறது. முன்பு கூறியபடி லூக்.12:36ல் திரும்பி வருதல் (return) என்ற அர்த்தத்தில் உள்ளது. இது வேறு முறையில் உபயோகிக்கப்பட்டால் சரியான அர்த்தம் கிடைக்காது என்பது தெரிகிறது. அது பிலி. 1:23ல் (return) திரும்பி வருதல் என்று இருக்க வேண்டும் என்று கூறுகிறோம். காரணம், மிகச் சாதரணமாகும். அது (depart) பிரிந்து செல்லுதல் என்பதை குறிக்கும்படி உபயோகப்படுத்தப்பட்டிருந்தாலும், அது மறுபடியும் (again) பிரிந்து செல்லுதல் என்ற அர்த்தத்தை உடையதாக இருக்க வேண்டும், அதாவது ஒருவர் தான் முன்பிருந்த இடத்திற்கு திரும்பி செல்வதாகும். கிரேக்க வார்த்தையில் முன்னதாக ana என்பது ana- lusai ல் சேர்க்கப்பட்டுள்ளது. மறுபடியும் (again) return என்கிற நம்முடைய வார்த்தையில் re என்கிற வார்த்தை return என்கிற வார்த்தையில் சேர்க்கப் பட்டுள்ளது போல இது மறுபடியும் என்கிற அர்த்தத்தைக் காட்டுகிறது. ஆகவே பிரிந்து செல் (depart)என்று வந்தால் (re-depart)இன்னொரு முறை பிரிந்து செல் அல்லது (depart again) மறுபடியும் பிரிந்துசெல் என்கிற கருத்தை நாங்கள் கொடுக்க வேண்டியதிருக்கும். இது பரிசுத்த பவுலைப் பொறுத்த வரை, அவருடைய காரியத்தை கெடுத்துவிடும், ஏனெனில் அவர் கிறிஸ்துவுடன் மகிமையில் ஒருபோதும் இருந்ததில்லை. ஆகவே, அவர் திரும்பி பிரிந்து

(depart again) கிறிஸ்துவுடன் அங்கே இருக்கும்படியாக செல்ல முடியாது. ஆனால் நாம் analusai என்ற வார்த்தையை மறுபடியும் திரும்பி வருதல் என்று மொழி பெயர்த்து ஆண்டவரைப் பற்றிய விஷயத்தில் உபயோகிப்போம் என்றால் எல்லா சந்தேகமும் நீங்கியதுபோன்று தோன்றுகிறது.

இந்த அர்த்தம் வருவதற்கான சூழ்நிலைகளை நாம் கவனிப்போம். சில காலத்திற்கு அப்போஸ்தலர் ரோமாபுரியில் சிறைக்கைதியாக இருந்திருக்கிறார். அங்கு இருக்கும்போது சில வேளைகளில் பேரரசர்களால் அவர் நன்கு நடத்தப்பட்டுள்ளார். ஏதோ ஒரு காரணத்திற்காக, அவருக்கு எப்பொழுது வேண்டுமானாலும் மரணதண்டனை விதிக்கப்படலாம் என்கிற நிலமை இருந்தது. பிலிப்பியர் சபைலிருந்து வந்த ஒரு நல்ல வெகுமதியை ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்த நிருபத்தை அவர் எழுதினார். இந்த வேளையில் தன்னுடைய நிலைமையைக் குறித்தும், ஆண்டவருடைய ஊழியத்தில் உள்ள முன்னேற்றம் போன்றவைகளைக் குறித்தும் விபரமாக எழுதவும், கடைசிவரை நிலைத்திருக்க வேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்தவும் அவர் இந்த தருணத்தை எடுத்துக் கொண்டார்.

அவருடைய விடுதலையைப்பற்றிய சாத்திய கூறுகளை அவர்கள் அறிந்து கொள்ள விருப்பமுள்ளவர்களாக இருப்பார்களானதால் அவர் கூறுகிறார்: அவருடைய சத்துருக்கள் (அவர் இரண்டு வருடங்கள் விடுதலையில் இருந்ததைப் பார்த்து –அப். 28:30) கிறிஸ்துவை போதித்துக்கொண்டு இருக்கிறார்கள், இப்படிச் செய்து அவருடைய கட்டுகளோடே உபத்திரவத்தையும், கூடுமானால் மரணத்தையும் கொண்டுவருகிற எண்ணத்துடன் அப்படிச் செய்கிறார்கள். (பிலி. 1:16–19) ஆனால் அவருக்காக சபை ஜெபிக்கிறது என்பதை அவர் உணர்ந்து கொண்டார். மேலும், நீரோ மன்னன் முன்பு அவருடைய விசாரணை வரும்போது அது அவருடைய விசாரணையில், ஒன்று நிரபராதி என்று விடுதலைப் பெற வேண்டும் அல்லது மரண தண்டனை வழங்கப்பட்டால் மரணத்தின்மூலம் விடுதலை கிடைக்கும் என்று நம்பினார். அதன் பின்னர் அவர் விரும்புகிறதை குறித்துச் சொல்லுகிறார். அவருக்கு (உபத்திரவங்களுடன் கூடிய) ஜீவனுக்கும் மரணத்திற்கும் (உபத்திரவத்திலிருந்து விடுதலை) இடையில் தெரிவு செய்துகொள்வது கடினமாக இருந்தது. ஏனெனில் அவருக்கு, முடியாது என்று அவர் அறிந்து

வைத்திருந்த ஒரு விஷயத்தில் அவருக்கு மிகவும் ஆழமான வாஞ்சை இருந்தது. அதை அவர் நன்கு அறிந்திருந்தார், சபைக்கு அதை போதித்திருந்தார், அது வெகு தூரத்தில் இருந்தது என்றும் அறிந்திருந்தார். அந்த வாஞ்சை (2தெச. 2:1–8) கிறிஸ்துவின் வருகையும் அவரோடு கூட இருப்பதுமாகும். அதன் பின்னர் நடக்கமுடியாதவைகளைவிட்டுத் திரும்பி சாத்தியமானவைகளுக்கு வந்து, அவர்களிடத்தில் நம்பிக்கையுடன் கூடிய உறுதியுடன் கூறுகிறதாவது: தேவன் சபைக்கு அவர் செய்யும்படியாக இன்னும் ஒரு வேலையை வைத்திருக்கிறார் என்ற உள்ளுணர்வும், அவர் விடுதலையாக்கப்படுவார் என்ற உள்ளுணர்வும் அவருக்கு இருக்கிறது என்பதாகும். வேதவாக்கியங்கள் அதைக்குறித்து கூறாவிட்டாலும் வழிவழியாய் வந்த கருத்துக்கள் கூறுகின்றதாவது: அவர் நீரோ மன்னரால் விடுதலையாக்கப்பட்டார் என்றும், அவருக்கு ஐந்து வருடம் சுதந்தரமும் ஊழியமும் இருந்தது என்றும், அதன் பின்னர் அவர் மறுபடியும் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று கூறுகிறது.

பிரிந்து செல்லுதல் (depart) என்ற அர்த்தம் வரும்படியாக பவுல் மற்றும் லூக்கா ஆகிய இருவருடைய எழுத்துக்களில் மற்ற வார்த்தைகள் அடிக்கடி உபயோகப்படுத்தப் பட்டுள்ளதை கவனிப்பது நல்லது. மேலும், அப்போஸ்தலருடன் லூக்காதான் அதிகமாக பயணம் செய்தார். அவரே அப்போஸ்தலரின் காரியதரிசி போன்று இருந்து அவர் கூறியவைகளை எழுதினார் என்பதையும், வார்த்தைகளை அதே அர்த்தத்தில் உபயோகிக்க பழக்கப்பட்டிருந்தார் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆனால் எவரேனும் திரும்பி வருதல் (return) என்கிற வார்த்தையை விட பிரிந்து செல்லுதல் (depart) என்கிற வார்த்தையில் திருப்தி யடைந்தால், நாங்கள் கீழ்க்கண்டவற்றை தருகிறோம்.

பவுல் விசேஷமாக அவருக்கு இருந்த அறிவின்படி ஆண்டவருடைய இரண்டாம் வருகை சீக்கிரமாக இருக்க முடியாது என்பதை அறிந்திருந்தார், ஆகவே, உடனடியாக ஆண்டவரோடு இருக்கும்படியாக, அவர் பரலோகத்திற்கோ அல்லது வேறு இடத்திற்கு பிரிந்து செல்ல வேண்டும் என்று நிச்சயமாகவே விருப்பப்பட்டிருப்பார். ஆனால் திவ்விய திட்டத்திற்கு மாறாக இப்படியான வாஞ்சை நிறைவேற அருளப்பட முடியாது. ஆகவே, அது அவருடைய ஊக்கமான வாஞ்சையாக இருந்தாலும், அது சாத்தியமாகக்கூடிய காரியங்களில் ஒன்று என்று அவருடைய எண்ணத்தில் வரவில்லை. சாத்தியமாகக்கூடிய இரண்டு

விஷயங்களில் அவருடைய விருப்பம் என்ன என்பதைக்குறித்து அவர் இன்னமும் ஒரு சரியான தீர்மானம் எடுக்க முடியாத கஷ்டமான நிலையில் இருந்தார். அதாவது, உபத்திரவப்பட்டு ஜீவித்து சபைக்கு ஊழியம் செய்வதா அல்லது மரித்து, அவருடைய கஷ்டங்களிலிருந்து இளைப்பாறுவதா என்பதாகும். அதாவது ''நாம் நம்பிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நம்முடைய இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படியாகவும்,'' ஆண்டவர் ''நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்தும்படியாகவும்'' காத்திருப்பதாகும். (தீத். 2:13; பிலி. 3:21)

''நம்முடைய பூமிக்குரிய வீடும்''
''நம்முடைய பரலோக வாசஸ்தலமும்''
–2கொரி. 5:1–10–

அப்போஸ்தலர் ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு எழுதாமல், புது சிருஷ்டியின் நிலைமையைக் குறித்து எழுதுகிறார். அவர் புதிய சித்தத்தை, புது சிருஷ்டியாகவும், பழைய சரீரத்தை அதன் வாசஸ்தலம் அல்லது கூடாரமாக இருக்கிறது என்றும், அது திருப்தியில்லாத நிலையில் இருந்தாலும்கூட, அது ஒன்றுமே இல்லாதிருப்பதைவிட மேலானது என்றும் அவர் கருதுகிறார். இந்த தேகத்தில் பூரணமாக புது சிருஷ்டி குடியிருக்க முடியாது. ஆனாலும், புதுசிருஷ்டி தனக்கென்று நம்முடைய ஆண்டவர் ஆயத்தம் செய்வதாக வாக்குத்தத்தம் செய்துள்ள நித்திய வீட்டில் அல்லது, வாசஸ்தலத்தில் ஒரு பங்கு பெரும்படியாக– உயிர்த்தெழுதலில், அவனுடையதாக இருக்கும்படியாக பூரணமான சரீரத்திற்காக ஊக்கமாக வாஞ்சிக்கிறான். (யோவா. 14:2) ''பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு (மனுஷீக சக்திகளால் உண்டாக்கப்படாதது) உண்டென்று அறிந்திருக்கிறோம்.''

உண்மைதான், இந்த தற்போதைய சரீரத்தில், அல்லது யாத்திரையின் தற்காலிக வீட்டில் நாம் தவிக்கிறோம். உலகத்தின் பொல்லாத சக்திகளாலும், இன்னொரு பக்கம் பிசாசினாலும் துன்புறுத்தப்படுவது மாத்திரமல்ல, நம்முடைய சொந்த சரீரத்தின் பலவீனத்தினாலும்

துன்புறுத்தப்படுகிறோம். நாம் நன்மை செய்யும்போது, தீமை நம்மோடிருக்கிறது. ஆகவே, அனேக நேரங்களில் நன்மை செய்வதற்கு தடை ஏற்படுகிறது. அதே நேரத்தில் நாம் விரும்பாத பொல்லாப்பை நம்மேல் திணிக்கிறது. ஆகவே, அது தொடர்ந்து எதிர்க்கப்பட்டு மேற்கொள்ளப்படவேண்டியிருக்கிறது. அப்போஸ்தலர் இன்னொரு இடத்தில் கூறுகிறபடி, ''ஆவியின் முதற்பலன்களை பெற்ற நாமும் கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்கு காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்.'' (ரோம. 8:23) அதாவது, சபையாகிய நாம் ஆண்டவருடைய மகிமையான சாயலை பெறத்தவிக்கிறோம்.

ஆனால், நம்முடைய தவிப்பு தரித்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்ற வாஞ்சையுடன் இருக்கவில்லை; நாம் சரீரமற்று இருக்க விரும்பவில்லை. அப்படியானால், நல்ல முறையில் கூட அது சுவிசேஷ யுகம் பூராவுமே, ''நித்திரையாயிருப்பது'' என்று பொருள்படும்; அதாவது, நம்முடைய புதிய, பூரணமான, நித்திய சரீரமாகிய ''நம்முடைய பரம வாசஸ்தலத்தை தரித்துக்கொள்ளும்படி'' உயிர்த்தெழுதலின் காலை வேளைக்காக காத்திருப்பது என்பதாகும். நாம் விரும்புவது எல்லாம் தற்போதைய வாழ்க்கையில் இருக்கும் சிறிய பொறி அணைக்கப்பட வேண்டும் என்பதல்ல, ஆனால் அது விழுங்கப்பட்டு, நாம் ஜெநிப்பிக்கப் பட்டிருப்பதின் நோக்கம் நிறைவேறும்படியாக, பூரண வாழ்க்கைக்குரிய பூரண நிலைமைகளுக்குள் ஈர்க்கப்பட வேண்டும். நாம் பூரண சரீரத்துடன் உயிர்த்தெழுதலின் பிறப்பிற்கு காத்திருக்கிறோம்.

''இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே. ஆவி என்னும் அச்சாரத்தை தந்தவரும் அவரே.'' இந்த பூரணமான நிலைமையை நாம் உயிர்த்தெழுதலில் பெற இருக்கிறோம். அது தேவன் வாக்குத்தத்தம் பண்ணின நம்முடைய இரட்சிப்பின் உன்னதமான நிறைவேறுதலாகும். சத்திய ஆவியால் ஜெநிப்பிக்கப்ப்பட்ட புதிய மனம், புதிய சித்தம் என்பவைகள், அந்த புது சிருஷ்டியின் ஆரம்ப நிலை என்று எண்ணப் படுகிறது; முதலாம் உயிர்த்தெழுதலில் அது திவ்விய சுபாவத்தில் பூரணப்படுத்தப்படும். தற்காலத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவி ஒரு முந்திய பலனாகும், அதாவது ஒரு அச்சாரமாக அல்லது நாம் எதிர்பார்த்து, முயற்சித்து, தவித்து, ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிற உன்னதமான, கிருபையுள்ள பலன்களுக்கான உறுதியாகும்.

'' நாம் இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் (தற்போதைய நிலைமை களோடு, நம்மோடு, நம்முடைய சூழ்நிலைகளோடு, முற்றிலுமாக

திருப்தியடைந்து இருக்கும்வரை) கர்த்தரிடத்தில் குடியிராதவரா யிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாக இருக்கிறோம்.'' நாம் அவரோடு நெருங்கி ஜீவிப்போமென்றால், அவரோடு நடப்போமென்றால், தற்போது நாம் அடைந்துள்ளவைகள், மற்றும் நிலைமைகள் போன்றவைகளோடு பூரண திருப்தியுள்ளவர்களாக இருக்க மாட்டோம்; ஆனால், '' தேவன் தன்னை நேசிக்கிறவர்களுக்கென ஆயத்தம் பண்ணியிருக்கிற'' ஒரு நல்ல இளைப்பாறுதலை, ஒரு நல்ல வாசஸ்தலத்தை தேடுகிற அந்நியரும், பரதேசிகளுமா யிருப்போம். ஆனால் இது,''தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்களுக்கு மாத்திரமே'' என்று அப்போஸ்தலர் விளக்குகிறார்.

ஆனால், நாங்கள் உறுதியான நம்பிக்கைக்கொண்டிருக்கிறோம் (தேவன் மேல் முழு விசுவாசத்துடன், விசுவாசித்து நடப்பதில் களி கூறுகிறோம்), தேகத்தில் (பூமியில் வீடற்றவர்களாக அந்நியரும், பரதேசிகளுமாய்) குடியிருப்பதை விரும்பாமல், நம்முடைய ஐக்கியத்தின் ஆவியினால் ஆண்டவரோடு குடியிருக்க விரும்புவோம்.

இந்த காரணத்திற்காகவே, மெல்ல மெல்ல நம்முடைய வாசஸ்தலத்தை அடையும்போதோ, அல்லது உண்மையாகவே வாசஸ்தலத்தை விட்டு வெளியே தற்காலத்தில் அந்நியரும், பரதேசிகளுமாய் இருக்கையிலோ, நாங்கள் ஆண்டவருக்கு பிரியமானவர்களாக இருக்க நாடுகிறோம். அவருடைய அனுக்கிரகத் தையும், ஆசீர்வாதத்தையும், பெறும்படியாகவும், அவருடைய ஐக்கியத்தையும், பிரசன்னத்தையும், உணரும்படியாகவும், இறுதியில் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்பதை அறியும்படியாகவும் நாடுவோம்.

''சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காகவது, தீமைக்காவது, தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.'' இந்த யாத்திரையின் முழு காலத்திலும் நம்முடைய ஆண்டவரின் நியாயத்தீர்ப்பின் விளிம்பில் நின்று கொண்டு இருக்கிறோம். நாம் அவரை நேசிக்கிறோமா இல்லையா, நீதிக்கும், சமாதானத்திற்கும் ஏற்றவைகளை நாம் நேசிக்கிறோமா என்பதைப் பார்ப்பதற்காக அவர் நம்மை சோதிக்கிறார், உறுதிபடுத்துகிறார். அப்படியானால், நீதியின் நிமித்தம் நாம் எந்த அளவுக்கு பலி செலுத்த வாஞ்சையுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை

காண்பதற்காக சோதிக்கிறார். அவருக்காகவும், சத்தியத்திற்காகவும், நாம் சுயத்தை விட்டுக்கொடுக்கும் அளவின்படியும், நம்மையே பலியாக செலுத்துகிற அளவின்படியும் நம்முடைய அன்பை கணக்கிடுகிறார்.

ஆனால், இப்படியாக நம்முடைய சரீரங்களை வாசஸ்தலங்களாக பேசுவது, ''பரிசுத்தவான்களுக்கு'' அதாவது கிறிஸ்துவுக்குள் ''புது சிருஷ்டியாக'' இருக்கிறவர்களுக்கு மாத்திரமே பொருந்தும். மனுக்குலத்தில் உள்ள மற்றவர்கள், இரண்டு சுபாவங்கள் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களை ரோம. 8;10,11 ல் சொல்லப்பட்டவைகளுக்கு சரியாக ஒப்பிட முடியாது. ''மேலும், கிறிஸ்து உங்களில் இருந்தால், சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும் (எண்ணப்படுகிறது), ஆவியானது (கிறிஸ்துவின்) நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.'' பரிசுத்தவான்களின் புதிய சுபாவம், சத்திய ஆவியினால் பிறந்தது. அதுதான் உண்மையிலேயே புதிய மனமாக இருக்கிறது. ஆகவே இதுதான் இப்பொழுது உண்மையான நபராக கூறப்படுகிறது, அது மாத்திரமே தேவனால் அங்கீகரிக்கப்படுகிறது. அவர் நம்மை மாம்சத்தின்படி அறியாமல், நம்முடைய புதிய சிந்தையின்படி, அதாவது கிறிஸ்துவின் சிந்தையின்படி அறிகிறார். (ரோம. 6:3,4 பார்க்க) இந்த புது சிருஷ்டி ஒரு பழைய மனுஷனை, அல்லது புறம்பான மனுஷனை, அழிந்து போகிற மனுஷனை உடையவனாக இருக்கிறான். மேலும், ஒரு புதிய மனுஷன், உள்ளான மனுஷன், அல்லது இருதயத்தில் மறைந்திருக்கிற மனுஷன் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகிறான். 2கொரி. 4:16; கொலோ. 3:9,10; எபே. 4:23,24; 1பேது. 3:4

மறுரூபக்காட்சி

மனுஷகுமாரன் அவருடைய இராஜ்யத்தில் வருவதை பார்க்கும்வரை அவர்களில் சிலர் மரணத்தை ருசிபார்க்க மாட்டார்கள் என்கிற ஆண்டவருடைய வார்த்தை, பேதுருவுக்கும், யாக்கோபுக்கும், யோவானுக்கும் மறுரூப மலையில் ஆறு நாட்களுக்குள் நிறைவேறும் என்பதை சீஷர்கள் சற்றுக் கூட நினைத்துப் பார்க்கவில்லை. ஆனாலும் அது அப்படியாகவே நிறைவேறியது. அது சாட்சிகளின் மேல் ஒரு பெரிய, எதிர்பார்த்த விளைவை ஏற்படுத்தியது. அதைக்குறித்த சாட்சிகளில் ஒருவர் எழுதுகிறதாவது: ''நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்

வல்லமையையும், வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேச குமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி, பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றபோது, அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்.'' (2பேது. 1:16–18)

மறுரூபக் காட்சி, அது தோற்றமளித்தது போல உண்மையானது கிடையாது. பருவதத்திலிருந்து இறங்கி வரும்போது, ஆண்டவர் சீஷர்களுக்கு விவரித்துக் கூறும்போது அது ஒரு ''தரிசனம்'' என்றார். இந்த தரிசனத்தில், மற்ற எல்லா தரிசனங்களிலும் உள்ளது போன்று மாயமானது நிஜமானதாக காண்பிக்கப்படுகிறது. அதுபோலவே வெளிப்படுத்தின விசேஷத்தில் விளக்கப்பட்டுள்ள, பத்மூத் தீவில் யோவானுக்கு ஏற்பட்ட தரிசனத்தில் இருந்தது. அவர் பார்த்தார், கேட்டார், அவர் பேசினார்; இருந்தாலும் இப்படியாக தரிசனங்களில் காட்டப்பட்டவைகள் உண்மையானவைகள் அல்ல; அநேக தலைகளும், அநேக கொம்புகளும் உள்ள மிருகங்கள், தூதர்கள், குப்பிகள், சிங்காசனங்கள், வலுசர்ப்பம் போன்றவைகள் உண்மையானவைகள் அல்ல, அவைகள் சாதாரண தரிசனங்கள்தான். ஒவ்வொரு தரிசனமும், வார்த்தையின் அர்த்தப்படி, நல்லதாக இருக்கிறது. அது உண்மையானவைகளைக் காட்டிலும் திட்டத்திற்கு உண்மையிலேயே நல்ல தகுதி உள்ளதாக இருக்கிறது.

மரித்தோரிலிருந்து முதலாவது எழுந்திருக்க வேண்டியவர்

மோசேயும், எலியாவும், பருவதத்தில் தாங்களாகவே, நேரில் பிரசன்னமாகவில்லை, ஆனால் தரிசனத்தில் சீஷர்களுக்கு தங்களைக் காட்டுபவர்களாக இருந்தார்கள். இதை நம் ஆண்டவர், அதை ஒரு ''தரிசனம்'' என்று கூறின வார்த்தையிலிருந்து மாத்திரம் அறியவில்லை, ஒருவனும் பரலோகத்திற்கு ஏறிச் சென்றதில்லை என்ற அவருடைய வார்த்தையிலிருந்தும் அறிகிறோம். (யோவா. 3:13; அப். 2:34) மோசேயும், எலியாவும் அங்கே இருந்திருக்க முடியாதென்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் இன்னும் அவர்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவில்லை. ஏனெனில் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான்

''நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.'' ''எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.'' 1கொரி. 15:20; கொலோ. 1:18.

மேலும், எபிரேயருக்கு அப்போஸ்தலர் எழுதும்போது மோசேயைக் குறித்தும், தீர்க்கதரிசிகளைக் குறித்தும் (இதில் எலியாவும் அடங்கும்), அவர்களுடைய கடந்த கால விசுவாசத்தைக் குறித்தும், அவர்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறித்தும் தெளிவாக எழுதுகிறார்; ஆனால், அவர்கள் இன்னும் தங்களுடைய வெகுமதியைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றும், நாம் (சுவிசேஷக சபை) கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உடன் சுதந்திரராக நம்முடைய வெகுமதிகளைக் பெற்றுக் கொள்வதற்குமுன், அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் சுட்டிக் காட்டுகிறார். ''இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிப்பெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்.'' எபி. 11:39–40

மோசேயும், எலியாவும் நம்முடைய ஆண்டவரோடு தோன்றியது, சாதாரணமான ஒரு காட்சி என்றால், இந்த தரிசனத்தின் நோக்கம் அல்லது அர்த்தம் என்ன என்று நாம் தக்க முறையில் கேட்கிறோம். நாம் பதில் சொல்லுகிறோம். அது ஒரு காட்சி, நம்முடைய ஆண்டவர் முன்னதாகவே கூறியபடியும், பேதுரு அதை புரிந்து கொண்டு கூறியபடியும், அது கிறிஸ்துவின் மகிமையான ராஜ்யத்தை விளக்கிக் கூறுவதாக இருந்தது. இந்த காட்சியில் மூன்று சீஷர்களுக்கும் பங்கு இல்லை. அவர்கள் சாட்சிகளாக மட்டுமே இருந்தார்கள். கிறிஸ்துதான் மையப் பொருள். அவருடைய முகமும் வஸ்திரமும், அற்புதவிதமாக வெண்மையாக பிரகாசிப்பது, ஆவிக்குரிய சுபாவத்தின் மகிமையை உருவத்தில் அடையாளப்படுத்திற்று. இதை ஆண்டவர் அவருடைய உயிர்த்தெழுதலில் பெற்றார். ''பிதாவின் தற்சுரூபமான சாயலைப் பெற்றார்.'' வெளிப்படுத்தின விசேஷத்தில், இதே ஆவியின் மகிமை தரிசனங்களில் காணப்படுகிறது. அங்கே நம்முடைய ஆண்டவர் அக்கினி சுவாலையைப் போன்ற கண்களையும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களையும் உடையவர் என்றும் சொல்லப்பட்டுள்ளது. (வெளி. 1:14,15; 2:18) அவருடைய இரண்டாம் வருகையின் போது, இனியும் நம்முடைய

ஆண்டவர் மாம்சத்தில் இருப்பதில்லை. ஏனெனில், ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை.'' அவர் இப்பொழுது இருக்கிறார், ஒரு மகிமையான, ஆவியின் ஜீவிகளின் உன்னத நிலையான தெய்வீக ஜீவியாக நித்திய காலமாக என்றென்றைக்கும் இருப்பார். மறுரூபக் காட்சி, சீடர்களுடைய மனதிற்கு மேலான நிலையில் உள்ள மகிமையைப் பற்றிய லேசான ஒரு கருத்தை கூறும்படி அமைந்திருந்தது.

நம்முடைய ஆண்டவருக்கு முன்னதாக இருந்த முற்பிதாக்களுக்கு – ஜெயங்கொண்ட விசுவாசிகளுக்கு மோசே அடையாளமாக இருந்தார். இது அப்போஸ்தலரால் விவரமாக எழுப்பட்டுள்ளது. (எபி.11:39,40) இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்வரை அவர்கள் பூரணப்படுத்தப்பட முடியாது. எலியா சுவிசேஷ யுகத்தில் ஜெயம்கொள்பவர்களுக்கு அடையாளமாக இருந்தார். (தொகுதி 2. அத்தி. 8ஐப் பார்க்க)

புது சிருஷ்டியின் தற்கால சந்தோஷங்கள்

''என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.'' யோவா. 15:11.

''புத்திரரின் வீட்டிற்கு'' வெளியே இருப்பவர்கள் – தங்களை அர்ப்பணித்துக் கொள்ளாதவர்கள், ஆதலால், இராஜரீக ஆசாரியத்துவத்திலும், புது சிருஷ்டிகளிலும் அங்கம் ஆகாதவர்கள்– கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக இருப்பவர்கள், தங்களுடைய ஆண்டவரை போலவே, தங்களையும், பூமிக்குரிய எல்லா நலன்களையும் ஆண்டவருக்கென முழுமையாக அர்ப்பணித் திருப்பதைப் பார்த்து, இந்த பலியில் எல்லா சந்தோஷமும் இழக்கப்பட்டாயிற்று என்று நினைப்பது பொருத்தமானது என்று எண்ணுகிறார்கள். ஆனால், புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கமும் இதற்கு எதிர்மாறாக இருப்பதை காணமுடிகிறது. மேலும், இது ஒரு பெரிய தவறு என்று உறுதிப்படக் கூறலாம். எப்படியெனில், ஒரு காலத்தில், மிக அருமையாக எண்ணப்பட்டிருந்த உலக சந்தோஷங்கள், ஒன்றன்பின் ஒன்றாக பலியாக செலுத்தப்படும் போது அந்த இடத்தில், இழந்ததை சரிக்கட்டுவதைவிட அதிகளவில் பரலோக சந்தோஷங்கள் வருகின்றன. நம்முடைய ஆண்டவர், ''நீங்கள்

துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்'' (யோவா. 16:20) என்று கூறியப்பிரகாரம், நம்முடைய ஆண்டவர் கசப்பானப் பாத்திரத்தில் பானம்பண்ணியதுபோல புது சிருஷ்டியும் அந்த கசப்பான பாத்திரத்தில் பானம் பண்ணவேண்டும்; அவர்கள் எல்லோரும் மாம்சீக பெலகீனங்களினால் இரக்கத்துடன் தொடப்பட வேண்டும்; மேலும், அதிகமான பாவநிறைவையும், பாவத்தின் கசப்பையும் தெளிவாக உணரவேண்டும். மேலும், பரலோக பிதாவின்மேல் வைத்துள்ள பக்திக்காக, அவர்கள் எல்லோரும் பரீட்சிக்கப்பட வேண்டும்; மாத்திரமல்ல, அவருக்காக பூமிக்குரிய எல்லா நலன்களையும் பலியாக செலுத்த விருப்பமாயிருப்பது பரீட்சிக்கப்பட வேண்டும்; மேலும், உண்மையுள்ளவர்களாக இருப்பதும் பரீட்சிக்கப்பட வேண்டும். ஆனால், ஆசீர்வாதங்கள் எல்லாம் இப்படியான கண்ணீர்கள், துக்கங்கள், ஏமாற்றங்கள் மூலமாக வருகின்றன. அந்த ஆசீர்வாதங்களாவன: திவ்விய அங்கீகாரத்தை உணருதல், ஜென்ம சுபாவமுள்ள மனிதனுடைய சந்தோஷத்திற்கு மேலான சந்தோஷம், ஆண்டவரில் மன மகிழ்ச்சி, பிதாவோடு ஐக்கியம், நெருங்கிய உறவுப் போன்றவைகள்.

நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கைகள் இல்லாமல் இப்படிப்பட்ட சந்தோஷங்கள் இருக்க முடியாது. நம்முடைய சந்தோஷங்கள் இந்த வாழ்வின் சூழ்நிலையைப் பொறுத்து மாத்திரம் இருந்தால், நாம் சந்தோஷம் இல்லாதவர்களாய் இருக்க வேண்டும். மேலும், அப்போஸ்தலர் கூறியுள்ளபடி, ''எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாய் இருப்போம்.'' 1 கொரி. 15:19. தேவனுடைய வார்த்தையில் உள்ள பெரியதும், விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்கள் மேல் நம்பிக்கை உறுதியாக இருக்கும் போது, ஒரு பாலைவனத்தில் உள்ள பூக்கள் போன்று சந்தோஷங்கள் தோன்றுகின்றன. அவைகள் நம்முடைய கண்ணீர்களால் உற்சாகமூட்டப்பட்டு அப்படி எழும்புகின்றன. பாலைவனம் போன்று இருக்கிற இந்த உலகம் இப்படியான சந்தோஷம், ஆசீர்வாதம் போன்ற பூக்களை உண்டாக்க முடியாது, நினைத்துக் கூட பார்க்க முடியாது. நம்முடைய சந்தோஷங்கள் நம்முடைய நம்பிக்கைகளை சார்ந்து உள்ளதுபோல, அவைகள் நம்முடைய செயல்களையும் சார்ந்து உள்ளன. நமக்கு ஒரு வாக்குத்தத்தம் வைக்கப்பட்டிருக்கிறது, நம்முடைய நம்பிக்கை அந்த வாக்குத்தத்தை பற்றிக்கொண்டது போதாது. திவ்விய ஒழுங்கின்படி, நமக்குள் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கைகள்,

எதிர்பார்ப்புகள் மூலமாக எழும்புகின்ற சந்தோஷங்கள் ஜெபத்தின் மூலமும், ஆண்டவருடைய ஊழியத்தின் செயல்கள் மூலமும் பராமரிக்கப்பட வேண்டும். ஜெபத்திற்கும் நம்முடைய சந்தோஷங்கள் நிலைத்திருக்கும்படி செய்வதற்கும் இடையில் உள்ள நெருங்கிய உறவை நம்முடைய ஆண்டவர், பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றார்.

கேளுங்கள், அப்பொழுது உங்கள சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்

– யோவா. 16:24 –

''உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு'' என்கிறார் தீர்க்கதரிசி. (சங். 16:11) ஏனெனில், ஜெபம் ஆத்துமாவை தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டு வருகிறது, அதன்படி திவ்விய ஆசீர்வாதங்களுக்கும் மிக உயர்ந்த சந்தோஷத்திற்கும் வழிவகுக்கிறது. உண்மையாகவே, கிருபையின் சிங்காசனத்தை ஆண்டவருடைய ஜனங்கள் கிட்டி சேருவதற்கான வழியை திறப்பது, திவ்ய சித்தத்தை அல்லது திட்டங்களை அவர்கள் மாற்ற வேண்டும் என்கிற நோக்குடன் அல்ல. இப்படியான ஒரு சிந்தையுடன் இருப்பது, இந்த விஷயத்தைப் பற்றிய ஒவ்வொரு நியாமான எண்ணத்திற்கும் ஒத்துவராததாகும். ஆகவே, சரியானபடி ஜெபிப்பது என்பது, நம்முடைய சித்தங்கள் நிறைவேற வேண்டும் என்கிற வழியில் விண்ணப்பங்களை ஏறெடுப்பதோ அல்லது திவ்விய சித்தத்திற்கு விரோதமாக செய்யப்படுவதோ அல்ல, ஆனால் அவருக்கு முற்றிலுமாக தாழ்த்தி, அந்த வழியின்படியே ஜெபிப்பதாகும் என்று ஆண்டவர் நமக்கு போதிக்கிறார். அப்போஸ்தலர் கூறுகிறார்: '' நீங்கள் தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியால் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்.'' யாக். 4:3

இதே வழியில் நம்முடைய ஆண்டவர் கண்டிப்புடன் கூறினார்: ''அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.... உங்கள் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளு கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அறிந்திருக்கிறார்..... ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தை

குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும்.'' அவருடைய ஞானத்தின்படி பரலோகத்தில் உள்ள உங்கள் பிதாவினால் கொடுக்கப்படும். (மத்.6:25–34) மறுபடியும் நம்முடைய ஆண்டவர் கூறுகிறார்: ''நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவது எதுவோ, அது உங்களுக்கு செய்யப்படும்.'' (யோவா. 15:7). கீழே காணப்படுகிற நிபந்தனைகள் மிக முக்கியமானவைகள்.

1) ஜெபத்தை ஏறெடுக்கிறவன் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும்; தன்னுடைய மீட்புக்கென்று செய்யப்பட்ட பாவநிவாரண பலியின் புண்ணியத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமும், அவருடைய சித்தத்திற்கும், ஊழியத்திற்கும் முழுவதுமாக தன்னை அர்ப்பணம் செய்வதன் மூலமும் அவருடன் மிக முக்கியமான உறவுக்குள் வந்திருக்க வேண்டும். இதற்கும் மேலாக, ஜெபத்தினால் கிடைக்கும், இங்கே சொல்லப்பட்ட, சிலாக்கியங்களைப் பெறுவதற்காக அவருடைய சரீரத்தின் ஒரு அங்கமாகவும், புது சிருஷ்டியின் ஒரு அங்கமாகவும் இப்படியாக கிறிஸ்துவுக்குள் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.

2) தேவனுடைய வார்த்தை அவனுக்குள் நிலைத்திருக்கவும் செய்ய வேண்டும். ஆண்டவர் கொடுக்க விருப்பப்படுகிறவைகளை, அவருடைய சித்தத்தின்படி கேட்க தேவையான ஞானத்தை பெறும்படியாக அவன் சத்தியத்தின் வார்த்தையிலும் கிருபையிலும் பங்கு பெற வேண்டும். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக இருந்தாலும், ''தகாதவிதமாய்'' கேட்பதினால் அவனுடைய ஜெபங்கள் அடிக்கடி கேட்கப்படாமல் போய்விடக்கூடும். இந்த இரண்டு குணாதிசயங்களை உடையவர்கள் மாத்திரம், முழு நம்பிக்கையுடன் விசுவாசத்தின் முழு உறுதியுடன், தேவனின் குறித்த காலத்தில் அவர்களுடைய விண்ணப்பங்கள் பதில் பெறும் என்கிற முழு நம்பிக்கையுடன் முழு உறுதியுடன் பரலோக கிருபையின் சிங்காசனத்தை அடைய எதிர்பார்க்கலாம். இப்படிப்பட்டவர்கள் மாத்திரம் நிறைவான சந்தோஷத்தை உணர முடியும்.

வேத வாக்கியங்கள் கூறுகிறபடி, ஜெபமானது தேவனுடைய பிரசன்னத்திற்கு செல்லவும், அவரோடு ஐக்கியம் கொள்ளவும்

வழியைப்பெற ஒரு முயற்சியாக இருக்கிறது. அப்படியானால், ''இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரவும்'' யாரால் முடியும்? (எபி 4:16) அப்போஸ்தலர்களோடு சேர்ந்து நாம் பதில் கூறுகிறோம்: பொதுவாக உலகத்தாருக்கு இந்த வழி கிடையாது, ஜெபம் பண்ணும் சிலாக்கியமும் கிடையாது. உண்மைதான், லட்சக்கணக்கான அஞ்ஞானிகள், தங்கள் தெய்வங்கள் யார், எப்படிப்பட்டவர் என்பதைக் குறித்து பல்வேறு கருத்துக்களோடு அந்த தெய்வங்களுக்கு ஜெபம் ஏறெடுக்கிறார்கள்; ஆனால் அவர்களுடைய ஜெபங்களை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. ''தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் (அவர் ஏற்கனவே இருக்கிறவர் என்பதை உணர வேண்டும்), அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் (அவரை அறிய முயல வேண்டும், அவருக்கு கீழ்ப்படிய வேண்டும், அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும்) பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.'' (எபி. 11:6) கொர்நேலியு, இரண்டாவதாக கூறப்பட்டவர்களுக்குள் ஒருவன். அவன் உண்மையான தேவனை அறிந்து கொண்டான், மரியாதை செலுத்தினான், அவருடைய சித்தத்தை அறியவும் அதன்படி செய்யவும் முயன்றான்; புற ஜாதியினருக்கு தேவனுடைய அனுக்கிரகம் அனுமதிக்கப்படுவதற்காக தெய்வீக திட்டத்தின் குறித்த காலம் வந்தபோது அவனுடைய ஜெபங்களும், காணிக்கைகளும் ஒரு பதிலைப் பெற்றன. ஆனாலும் சரியான, முழுமையான விதத்தில் தேவனோடு ஐக்கியம் கொள்ள அவன் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பேதுருவுக்கு ஆள் அனுப்பும்படியாக கட்டளை பெற்றான், அவர் அவனுக்கு ''வசனங்களைக்'' கூறுவார். அதன்படி அவன், தனித்துவிடப்பட்ட, பிரிந்து வைக்கப்பட்ட அவனுடைய நிலையிலிருந்து புத்திரன் என்கிற நிலைக்கு கொண்டு வரப்பட முடியும். இப்படி குமாரன் என்கிற நிலைக்கும், இணக்கமான நிலைக்கும் கொண்டுவரப்படப்படும் போது, அவனுக்கு புத்திரன் என்கிற சிலாக்கியமும், கிருபையின் சிங்காசனத்தில் பிதாவினிடத்தில் செல்லும் வழியைப் பெறும் சிலாக்கியமும் கிடைக்கும்.

இந்த விஷயத்தைக் குறித்து பரவலாக, பொதுவாக மேலோங்கி யிருக்கும் கருத்து என்னவெனில், யார் வேண்டுமானாலும் சரி, எந்த இடத்திலும் சரி, எந்த நேரத்திலும் சரி, எப்படிப்பட்ட சூழ்நிழைகளின் கீழ் இருந்தாலும் பரவாயில்லை, கிருபையின் சிங்காசனத்தை நாட முடியும்

என்பது தவறான கருத்தாகும். கொர்நேலியுவுக்கு ஜெப– ஐக்கியம் என்னும் சிலாக்கியத்தை உபயோகப்படுத்துவதற்கு முன்னர், பேதுரு கிறிஸ்துவின் இரத்தித்தினால் வரும் மீட்பைக் குறித்தும், இதன் மூலம் வந்த ஒப்புரவாகுதலைக் குறித்தும், மேலும், இப்படியாக தேவனுடைய குடும்பத்தில் புத்திர சுவிகார சிலாக்கியத்தை பெறுவதைக் குறித்தும், சொல்ல வேண்டியது அவசியமாக இருந்தது. இதே மாதிரியான ஒரு அறிவு ஒவ்வொரு நபருக்கும் அவசியமாக தேவைப்படுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுலும் இதே யோசனையைத் தெரிவிக் கிறார். அவர் கூறுகிறார்: கிறிஸ்து நமக்காக ''ஒரு புதியதும் ஜீவனுமான மார்க்கத்தை'' திறந்தார் அல்லது '' ஒரு புதிய வாழ்க்கையின் மார்க்கத்தை'' மாம்சமாகிய திரையின் வழியாகத் திறந்தார். இதன் மூலம் சகோதரர் களாக, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்படியான தைரியம் நமக்கு உண்டாயிருக்கிறது. இப்படியான சகோதரர்கள் தேவனுடைய வீட்டின் மகா பிரதான ஆசாரியருக்கு சொந்தமானவர்களாய், ''உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்'' என்று புத்திசொல்லப் பட்டுள்ளார்கள்; அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களும் முழுவதுமாக மூடப்பட்டுவிட்டன என்பதையும், அவர்கள் பிதாவினால் முற்றுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் என்பதையும் அறிந்து சேரக்கடவர்கள் என்று புத்தி சொல்லப்பட்டுள்ளார்கள். (எபி 10:17–22) மறுபடியும் அதே அப்போஸ்தலர் கூறுகிறார்: நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடிய பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால், ''நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்.'' எபி. 4:15,16

ஆனால், பிரதிஷ்டை செய்துகொண்டவர்கள், ஆசாரியத்துவம் உள்ளவர்கள், புது சிருஷ்டியானவர்கள் மாத்திரமே சிங்காசனத்தை தைரியத்தோடும், நம்பிக்கையோடும் சேரும்படி இப்படியாக உற்சாகப்படுத்தப்பட்டுள்ள வேளையில், ''விசுவாச வீட்டாராயிருக்கிற'' அனைவரும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஜெபிக்கும் சிலாக்கியத்தையும், ஸ்தோத்திரம் செய்யும் சிலாக்கியத்தையும், பரிந்து பேசுதலையும், பெற்று பயனடைகிறார்கள்; தேவ சமாதானத்தில் களிகூறுகிறார்கள்; பாவநிவாரணத்தின் புண்ணியத்தினால் பாவமன்னிப்பை உணர்ந்து அந்த

சிலாக்கியங்களை அனுபவிக்கிறார்கள். இருந்தாலும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு, தைரியத்தோடு வேறு எந்த வழியிலாகிலும் வருவதற்குரிய சிலாக்கியம் அவர்களுடையதல்ல. ஆனாலும், பிரதிஷ்டை செய்து கொண்டவர்கள், புது சிருஷ்டியானவர்கள், பிரதான ஆசாரியரின் சரீரத்தில் அங்கமாக இருக்கிறவர்கள் மாத்திரமே, இந்த விசேஷ உட்கருத்தின்படி தேவனுடைய சமூகத்திற்குள் ஜெபத்தில் பிரவேசிக்க சிலாக்கியம் பெற்றுள்ளார்கள். இவர்கள் மாத்திரமே ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற நிறைவான சந்தோஷத்தைப் பெற முடியும். ஆகவே, நாங்கள் அவிசுவாசிகளுக்கு ஜெபம் உரித்தானது என்று கூட சொல்ல முடியாது; ஆனால், முதலாவது ''வசனங்களைக்'' கொண்டு அவர்களுக்கு, பேதுரு கொர்நேலியுவுக்கு போதித்தது போல, போதிக்க வேண்டும். அதாவது, தேவனுக்கு முன்னால் நிற்பதற்கு முன்னதாக, அவர்கள் யாரை அறிந்துகொள்ள வேண்டும், யாரை விசுவாசிக்க வேண்டும் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்; இருந்தாலும், ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்த அனைவரும், நன்றியையும் ஸ்தோத்திரத்தையும் இயேசு மூலமாக பிதாவுக்கு ஏறெடுக்குமாறு உற்சாகப்படுத்துகிறோம். ஆனாலும் இப்படிப்பட்டவர்கள், தற்காலிகமாக நீதிமான்களாக ஆக்கப்பட்டிருப்பது, அவர்களுக்குள்ள திவ்விய சித்தத்தின் முடிவான செயல் அல்ல என்று புரிந்து கொள்ளும்படியாக, எல்லா விதத்திலும் விளக்கப்பட வேண்டும். ஆனாலும், அது தேவனை கிட்டிச்சேர உள்ள வழியின் முதலாவது படியாக, சரியான வழியின் ஆரம்பமாக இருக்கிறது என்றும், மேலும், ஜெபத்திற்கும், தேவனுடைய ஐக்கியத்திற்கும், அதோடு சம்பந்தப்பட்ட நிறைவான சந்தோஷத்திற்கும் உள்ளதான சரியான சிலாக்கியங்களை அனுபவிக்க, திவ்விய சித்தத்திற்கான முழு அர்ப்பணிப்பான இரண்டாவது படியை எடுக்க வேண்டும் என்று அவர்கள் புரிந்து கொள்ளும்படி செய்வது அவசியம்.

இரண்டாவது படியை எடுக்கத் தவறுவது தேவனுடைய கிருபையை விருதாவாய் (நீதிமானக்கபடுதல்) பெறுவது என்று அர்த்தப்படும் என்பது அவர்களுக்கு சுட்டிக் காட்டப்பட வேண்டும். (2 கொரி. 6:1) இப்படியாக, ஜெபம் பண்ணும் சிலாக்கியங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அனுபவித்த பின்னர், தங்களை முற்றுமாக ஆண்டவருக்கு அர்ப்பணிக்க மறுப்பவர்கள், ஜெபத்தைக் குறித்து ஒரு சந்தேகம் வருவதை உண்மையாகவே காணவேண்டும்; அதே வேளையில், ஆண்டவருக்கென

தங்களுடைய இருதயங்களையும், தங்களுடைய நியாயமான ஊழியத்தையும் அர்ப்பணிக்காமல், தொடர்ந்து திவ்விய அனுகூலங்களைப் பெற்றுக்கொண்டிருப்பதும், இன்னும் அதிகமானவைகளை கேட்பதும் சரியானதல்ல என்று உணர வேண்டும். பிரதிஷ்டை செய்து கொண்ட வகுப்பார் வேதவாக்கியங்களில் கிறிஸ்துவின் மணவாட்டியாக குறிப்பிடப்பட்டு இருப்பது போன்று, பொதுவான விசுவாச வீட்டாரும், மணம்புரிவதற்கான சிலாக்கியங்கள் வழங்கப்பட்டுள்ளவர்களுக்கு சரியான அடையாளமாக இருப்பார்கள். கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக நிச்சயிக்கப்பட்டுள்ள புது சிருஷ்டி, தனது இருதயத்தையும், நாவையும், எல்லா அதிகாரத்தையும், பலத்தையும் ஆண்டவருக்கென்றும் அவருடைய ஊழியத்திற்கென்றும் அர்ப்பணம் செய்துகொண்டு, தனது மணவாட்டிக்கென்று அவர் பிரியமாய் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள, ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும், பாதுகாப்பையும், மேற்பார்வையையும், வெகுமதிகளையும் அவரிடம் இருந்து நியாயமாகவும், நன்றியோடும் பெற்றுக்கொள்ளலாம்.

தன்னுடைய காதலனை நிராகரித்து விட்ட ஒரு பெண், தன்னுடைய கரத்தையும் இருதயத்தையும் அவனுக்கு கொடுக்க மறுத்துவிட்டவள் அதன் பிறகு நியாயமானபடி, அவனுடைய கரிசனைக்கும், பாதுகாப்பிற்கும், ஆசீர்வாதத்திற்கும், சிலாக்கியங்களுக்கும், சந்தோஷங்களுக்கும், அவன் ஏற்கனவே இலவசமாக கொடுத்திருப்பவைகளுக்கு என்று இனியும் அவனை நோக்கி பார்க்கமுடியாதிருக்கிறாள். அதைப்போன்று, தங்களிடம் உள்ள சிறியவற்றையெல்லாம் ஆண்டவருக்கென்று அர்ப்பணிக்க மறுத்து, அதனால் திவ்விய அனுக்கிரகத்தை தொடர்ந்து நிராகரிக்கிறவர்கள், தங்களுடைய பக்தியினாலும், அர்ப்பணிப்பினாலும் தங்களுடைய அன்பை வெளிப்படுத்திக் காட்டுகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள ஆசீர்வாதங்களுக்காக அவரை நோக்கிப்பார்ப்பதோ, அவரிடத்தில் கேட்பதோ எந்த விதத்திலும் முறையானது அல்ல. ஆண்டவரின் கரத்திலிருந்து பாவமன்னிப்பை மாத்திரம் பெற்றுக் கொண்டவர்களுக்கும், இந்த நீதிமான்களாக்கப்படுதலை பயன்படுத்தி, ஆண்டவரோடு முழு அர்ப்பணிப்பிற்கும், உறவுக்கும் சென்றவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை சரியானபடி புரிந்து கொள்ள வேண்டும். மாறுபாடான விசுவாச வகுப்பினருக்கு இடையில் திவ்விய ஏற்பாட்டின்படி வரையப்பட்ட கோடுகள் இன்னும் அதிக தெளிவுடன்

புரிந்துகொள்ளப்படவில்லை என்கிற காரியம், இரண்டு வகுப்பினருக்குமே நன்மையை தராததாக இருக்கிறது. விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் திட்டவட்டமாக வரையறுக்கப்பட வேண்டும். விசுவாசிகள் அனைவரும் ''விசுவாச வீட்டாரின்'' சகோதரர்கள் என்று அறிந்துகொள்ளப்படவேண்டும், ஆனால் அவிசுவாசிகள் அப்படியல்ல. மறுபடியும், தங்களை அர்ப்பணம் செய்து கொண்ட விசுவாசிகளுக்கும், அர்ப்பணம் செய்துகொள்ளாத விசுவாசிகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் தெளிவாக கண்டுபிடிக்கப்படவேண்டும். விசுவாசிகள் சபையாக, புது சிருஷ்டியாக, இராஜரீக ஆசாரியத்துவம் உள்ளவர்களாக அறிந்து கொள்ளப்பட வேண்டும், அவர்களுக்குத்தான் பெரிதும், விலையேறப்பெற்றதுமான அனைத்து வாக்குத்தத்தங்களும் சொந்தமாக உள்ளன.

இந்த வித்தியாசம் தெளிவாக அறிந்துகொள்ளப்பட்டால், அது கீழ்க்கண்டவை களுக்கு பிரயோஜனமாக இருக்கும்.

1. அதிகமாக ஆராய்ந்து பார்க்கும்படியாகவும் இன்னும் அதிகமான விசுவாசத்திற்கு வழிநடத்தும்படியாகவும் உலகத்திற்கு பிரயோஜனமாக இருக்கும்.

2. பிரதிஷ்டை செய்துகொள்ளாத விசுவாசிகளுக்கு பிரயோஜன மாக இருக்கும். அவர்கள் முழுமையாக அர்ப்பணம் செய்து கொள்ளா விட்டால், வசனத்தின் முழு அர்த்தத்தின்படி பரிசுத்தவானகளோடு அவர்கள் உடன் சுதந்திரர் அல்ல, அதன்படி வருங்கால மகிமைக்கும், தற்கால சிலாக்கியங்களுக்கும், மகிழ்ச்சிக்கும் அவர்கள் பரிசுத்தவான் களோடு உடன் சுதந்தரர் அல்ல என்பதை அறியும்படி அது வழிநடத்தும்.

3. இதை அறிந்து கொள்ளும்போது, பிரதிஷ்டை செய்து கொள்ளாதவர்கள்மேல் ஒரு தூண்டுதலை ஏற்படுத்துகிறது. அது ஆதாரமற்ற கற்பனைகளை அகற்றி ஒரு திட்டமான தீர்மானம் எடுக்கும்படியாக வழி நடத்துகிறது. பிரதிஷ்டை செய்துகொள்ளா மலேயே கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை மாத்திரம் வைத்திருப்பவர்களை எப்படியாவது அது தேவனுடைய புத்திரர்களும் சுதந்திரர்களுமாக்குகிறது; தற்கால, மற்றும் வருங்கால வாழ்விற்குரிய உன்னதமான திவ்விய வாக்குத்தத்தங்களுக்கு பங்குள்ளவர்களாக ஆக்குகிறது என்று நாம் நம்புகிறோம்.

நெரிந்த நாணலை நாங்கள் முறிக்க மாட்டோம், மங்கி எரிகிற திரியை நாங்கள் அணைக்கமாட்டோம். ஆனால் நெரிந்த நாணல்கள், தேவனுடைய தற்கால, வருங்காலத்திற்குரிய ஆசீர்வாதங்களில் பங்கு பெறுவதற்கு, அவர்கள் திவ்விய நிபந்தனையின்படி திவ்விய நன்மைகளை பெறுவதற்கு– இன்னமும் நெரிந்த நாணல்களாக இருக்க வேண்டாம் என்றும், ஆண்டவருடைய ஊழியத்திற்கு பயனுள்ளவர்களாக வேண்டும் என்றும் அவர்கள் நினைத்தால்– தங்களை முற்றுமாக அர்ப்பணிக்க வேண்டும் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்றும் விரும்புவோம். மங்கி எரிகிற விசுவாசத்தை நாங்கள் அணைக்க மாட்டோம், ஆனால் அது பரிசுத்த அன்பின் ஜுவாலைகளாக மாறும்படி காற்று வீசுவோம்; அது தன்னை முற்றுமாக அர்ப்பணிக்கும்படியாக, இப்படியாக தற்கால, வருங்கால சந்தோஷங்களில் பங்கு பெறும்படியாக வழிநடத்தும்.

நாம் ஏற்கெனவே பார்த்துள்ளபடி, விசுவாசிகளின் பிள்ளைகள், நீதிமானாக்கப்படுதல் என்கிற திவ்விய கிருபையில் அவர்களோடு கூட பங்கு பெறுபவர்கள் என்று எண்ணப்படுகிறார்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். அவர்கள் இனியும் பரிசுத்தமற்றவர்கள் அல்ல, ஆனால் பரீட்ஷார்த்தமான விதத்தில் நீதிமான்களாக்கப் பட்டுள்ளார்கள். இந்த நீதிமான்களாக்கப்பட்ட நிலை, அதன் திவ்விய பராமரிப்புக்கும், திவ்விய அனுகூலத்திற்கும் உள்ள உறவுமுறை பிறப்பிலிருந்து தானாக எதையும் தெரிந்து கொள்ளும்நிலை வரை வருகிறது. இப்படிப்பட்ட பிள்ளைகள், நீதிமான்களாக்கப்பட்ட வர்களைப் போலவே ஜெபத்தில் அதே சிலாக்கியத்தைப் பெற்றவர்களாக இருப்பதுடன், பின்வரும் சந்தோஷங்களிலும், ஆசீர்வாதங்களிலும், அதே மாதிரியான பங்கைப் பெறுகிறார்கள். சிறு பாலகர்களாக இருக்கும்போதே சர்வவல்லமையுள்ள தேவனை, தங்கள் பெற்றோர்களின் தேவனை தங்கள் தேவனாக எண்ண கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். சிறு வயதிலிருந்தே புரிந்துகொள்ளும் படியாக அவர்கள் போதிக்கப்பட வேண்டியது என்னவெனில், கிறிஸ்து மூலம் தேவனோடு அவர்களுடைய பெற்றோர்களுக்கு ஒரு நிலை இருப்பது போன்று, நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக அவர்களுடைய பெற்றோர்கள் மூலமாக குழந்தைகளுக்கும் ஒரு நிலையும் ஒரு உறவுமுறையும் இருக்கிறது என்பதாகும். ஒவ்வொரு கிறிஸ்தவ வீட்டிலும் உள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்ட பெற்றோர் அல்லது பெற்றோர்கள், ஒரு விதத்தில் அந்த வீட்டாரின் ஆசாரியர்கள் என்று

எண்ணப்படலாம். குழந்தை ஆண்டவரிடம் ஜெபிக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிற அதே வேளையில், குடும்பமும் அதன் எல்லா நலன்களும், கரிசனைகளும், ஒரு குடும்பம் என்பதின்படி திவ்விய மேற்பார்வையில் கீழ் உள்ளது என்கிற பாடத்தை (பிரதிஷ்டை செய்து கொண்ட பெற்றோர் அல்லது பெற்றோர்கள், புது சிருஷ்டியின் அங்கங்களாக இருப்பதினால்) அசட்டை பண்ணக்கூடாது. குழந்தை தனது மனம் பக்குவமடைகிற காலத்தை, தன்னால் தீர்மானம் எடுக்கக்கூடிய காலத்தை ஆர்வத்துடன் நோக்கிப் பார்க்க கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்த பக்குவம் வரும்போது அது ஆண்டவருக்கென தன்னை முழுமையாக அர்ப்பணிக்கவும், இப்படிப்பட்டவர்களுக்கென்று வைக்கப்பட்டுள்ள சிலாக்கியங்களையும் சந்தோஷங்களையும் பெறுவதற்கு சரியானபடி தயாராகும்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உள்ள புது சிருஷ்டிகள், தேட வேண்டாம், கவலைப்பட வேண்டாம், பூமிக்குரிய காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டாம், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுத்துவோம் என்று கவலைப்படாமல், இந்த விஷயங்கள் எல்லாவற்றிற்கும், பிதாவின் அன்பிலும், ஞானத்திலும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று மேலே சொல்லப்பட்ட பகுதியில் வலியுறுத்தப் பட்டுள்ளார்கள். மேலும், அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு அதிகமாக பலனளிக்கத்தக்கதாக தேவன் பிரியப்படுகிற ஒரு விஷயம் உண்டு, அந்த ஒன்றைக் குறித்து ஜெபிப்பதில் தேவன் பிரியமுள்ளவராக இருப்பார் என்று அவர்களுக்கு கற்பிக்கப்பட்டுள்ளது. ஒரு காரியத்தைக் குறித்து அவர்கள் விசேஷமாக தேட வேண்டும், விசேஷமாக ஜெபிக்க வேண்டும் என்றால் அது பரிசுத்த ஆவி– பரிசுத்தத்தின் ஆவி, தேவனுடைய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, சத்திய ஆவி, தெளிந்த புத்தியின் ஆவி, அன்பின் ஆவி ஆகும். ஆண்டவருடைய வசனம் கூறுகிறதாவது: ‘‘பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிற வர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?’’ (லூக்.11:13)

நாம் பதில் பெற வேண்டும் என்றால், நம்முடைய விண்ணப்பங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக எது இருக்க வேண்டும் என்பதைக்

குறித்து நமக்கு தெளிவான அறிவிப்பு இருக்கிறது. இப்படியாக தகாதவிதமாய் விண்ணப்பம் ஏறெடுக்காமல் ஜெபம் பண்ண வேண்டும். நம்முடைய விருப்பங்கள் மேலானவைகள்மேல் இருக்க வேண்டும். கீழான (பூமிக்குரிய) விஷயங்கள்மேல் அல்ல. அது கிறிஸ்துவினுடைய நீதியின் வஸ்திரங்கள் மேலும், நம்முடைய எதிர்கால மகிமையான வஸ்திரத்தின் மேலும் இருக்க வேண்டும். அப்பொழுது நாம் அவரைப் போன்று இருப்போம், அவர் இருக்கிற வண்ணமாக அவரை தரிசிப்போம். பூமிக்குரிய வஸ்திரத்தை நாடுவதைவிட இது மேலானது. நம்முடைய விருப்பங்கள் ஆவிக்குரிய உணவின் மேல் இருக்க வேண்டும், பரத்திலிருந்து வந்த மன்னாவின் மேலும், கிறிஸ்து மையப்பொருளாக இருக்கிற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மேலும் இருக்க வேண்டும். இவைகளை நாம் தேடவேண்டும், இவைகளை நாம் உயர்வாக எண்ண வேண்டும். ஆகவே, இவைகளே நம்முடைய ஜெபத்தின் பொருளாக இருக்கும். எனவே, இப்படியாக நம்முடைய காத்திருத்தல், ஜெபம், அனுதினமும் தேடுதல் ஆகியவை முழுமையாக ஒருங்கிணைந்ததாக இருக்கும். மேலும், திவ்விய அனுக்கிரகத்தின் ஆழம், அகலம், நீளம், உயரத்தை நாம் கற்றுக் கொண்ட நேரத்திலிருந்து, நன்றி செலுத்துதல், விண்ணப்பத்தில் அதிகமான இடத்தை பெற வேண்டும். புது சிருஷ்டிக்கும், மாம்சத்தில் அவர்களுடைய அருமையானவர் களுக்கும், பூமியில் உள்ள எல்லா குடும்பங்களுக்கும் தேவன் அளித்த அனுக்கிரகத்திற்காக நன்றி செலுத்துதல் ஏறெடுக்கப்பட வேண்டும். தேவன் ஏற்கனவே வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதைக்காட்டிலும் நாம் வேறு என்னத்தை அதிகமாக கேட்க முடியும்?

நிச்சயமாகவே, புது சிருஷ்டிக்கென வாக்குத்தத்தம் பண்ணப் பட்டுள்ள வருங்கால மகிமைகளைக் காட்டிலும் வேறு எதையும் நாம் அதிகமாக கேட்க முடியாது. இல்லை யென்றாலும், இதே வகுப்பை சேர்ந்தவர்களுக்குரிய தற்கால சந்தோஷங்களைக் காட்டிலும் அதிகமாக எதையும் கேட்க முடியாது. நம்முடைய மனம் கற்பனை செய்துபார்க்கக் கூடிய ஒவ்வொரு ஏற்பாடும், ஒவ்வொரு விருப்பமும், ஒவ்வொரு தேவையும் நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், எதிர்பார்க்கப்பட்டு, ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திவ்விய ஏற்பாடுகளை எப்படி எடுத்துக் கொள்வது, எப்படி உயர்வாக எண்ணுவது என்பது பற்றிய ஞானத்தில்தான் நாம் குறைவுபட்டுள்ளோம். ஆகவே நாம் நன்றி

செலுத்தும் போது, நம்முடைய சந்தோஷம் நிறைவாக இருக்கும்படி, அதில் பங்கெடுக்க வேண்டிய ஞானத்தையும், கிருபையும்தான் கேட்கிறோம். ஆகவே, நம்முடைய வேண்டுகோள்கள், அதிக அளவு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்காகவும், பரத்திலிருந்து வரும் ஞானத்திற்காகவும் இருக்க வேண்டும்.

திவ்விய ஏற்பாட்டின்படி, ஏற்கனவே உலகத்திற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறவைகளைத் தவிர வேறு எதை நாம் கேட்க முடியும்? ஒன்றுமே இல்லை! மகா பெரிய ஞானிகளின் எதிர்பார்ப்புகள் அல்லது நம்பிக்கைகளை காட்டிலும், வேதத்தில் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டுள்ள மகிமையான ''திரும்பப்பெறுதலின் காலங்கள்'' அதிகதிகமாக பயன் விளைவிக்கக் கூடியதாக உள்ளது. ஆகவே, நாம் தேவனுக்கு நன்றி செலுத்தவும், அவருடைய நன்மையை ஏற்றுக்கொள்ளவும், அங்கே ஒத்துழைப்பை தேடவும், நமக்கு ஞானம் தேவையாக இருக்கிறது என்பதை உணரவும்தான் முடியும். ஆகவே, ''பரத்திலிருந்து வருகிற ஞானமாகிய'' தேவனுடைய பரிசுத்த ஆவி அல்லது வல்லமையின் உதவியை கேட்பதே நம்முடைய விண்ணப்பமாக இருக்கிறது. ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்துகொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன்.'' (யாக்.1:5) இந்த ஞானம் நாம் நடக்க, பேச, செயல்பட உதவிபண்ணுவதோடு இது மற்றவர்களுக்கும் உதவியாக இருக்கும். ஆகவே, இந்த நோக்கில்தான் நம்முடைய ஜெபங்கள் இருக்க வேண்டும். தேவன், ஏற்கனவே திட்டமிட்டிருக்கின்ற தயாளமுள்ள, இரக்கமுள்ள வழியின்படி நாம் அவருடன் ஒத்துழைக்கும்படி ஜெபம்செய்ய வேண்டும். இதைக்காட்டிலும் மேலானதைக் கேட்பது முட்டாள்தனமாக இருக்கும்.

தேவனுடைய பிரசன்னத்திற்கான வழிமுறைக்கான இந்த பெரிய சிலாக்கியம், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் விசுவாசத்தின்மூலம் செல்லும் சிலாக்கியம், கிருபாசனத் தண்டைக்கு செல்லும் சிலாக்கியம், தேவையான ஒவ்வொரு சமயத்திலும், இரக்கமும் உதவியும் பெறும் சிலாக்கியம் ஆகியவை நாம் சூழப்பட்டுள்ள பல்வேறுவகையான நிலைமைகளுக்கு ஏற்றபடி மாற்றியமைக்கப்படலாம்.

நாம் ஆண்டவரோடு தனித்திருந்து, அவரோடு ஐக்கியம் கொள்ளவும், நம்முடைய சொந்த பிரயோஜனத்திற்காக இது இருக்கிறது.

மற்றவர்களிடம் இருந்து நாம் உண்மையாகவே ஒதுங்கியிருக்கும்போது, அவருடைய இரக்கத்தினால் நாம் அவரோடு கொள்ளும் இந்த ஐக்கியத்தை, சிந்தனையை ஒருமுகப்படுத்தும் இந்த காரியத்தை சந்தோஷமாக அனுபவிக்கலாம். இது சாத்தியம் இல்லாத இடத்தில், முழங்கால்கள் மடங்க தருணம் இல்லாத இடத்தில், மெல்லிய குரலில்கூட பேச முடியாதபோது, பிதாவுடன் மானசீகமாக ஐக்கியம் கொள்ளுகிறதற்காக புது சிருஷ்டிக்கு கிடைத்துள்ள சிலாக்கியம் ஆகும். தெருவில் இருக்கும்போது, குழப்பமும், கலக்கமும் சூழ இருக்கும்போது, இருதயத்தை உயர்த்தி கிருபாசனத்தண்டையில் ஞானத்திற்காகவும், பலத்திற்காகவும் கேட்கலாம். இந்த சிலாக்கியங்கள் எவ்வளவு ஆசீர்வாதமுள்ளவைகள்! அவைகளை அதிகமாக உபயோகிப்பவர்கள் அதிகமாக ஆனந்தம் அடைகிறார்கள். பூமிக்குரிய காரியங்களைப் போன்று இல்லாது, அவைகள் அதிகமாக பரிட்சயமாகும்போது அவைகள் அதிக விலையேறப்பட்டவைகளாக ஆகின்றன.

குடும்பமாக ஜெபிப்பது என்பது, குடும்பம் அவரோடு ''இரகசிய அறையில் தனித்திருப்பதாகும்,'' ஆண்டவருடைய பிரசன்னத்திற்குள் செல்வதாகும், உலகத்தை விட்டு தூர செல்வதாகும். இது எப்பொழுதும் சாத்தியமாகாது; ஆனால், தருணம் கிடைக்கும்போது இது அலட்சியப் படுத்தப்படக்கூடாது. ஆனால் தகுந்த தருணம் கிடைக்காவிட்டால், ஆண்டவர், சந்தேகத்திற்கிடமின்றி நம்முடைய செய்கையை அல்ல, அதற்குப் பதிலாக சித்தத்தை எடுத்துக்கொள்ளுகிறார், அதன்படியாக ஆசீர்வாதத்தைத் தருகிறார். குடும்பத்தின் ஜெபபீடம், ஜெபதூபம் ஆகியவற்றின் செல்வாக்கு, அங்கிருந்து பரலோக பிதாவினிடத்தில் ஏறிச்செல்வதும், அங்கே அவருடைய கிருபையால், இரக்கத்தினால், வல்லமையினால், ஆசீர்வாதத்தினால் அங்கீகரிக்கப்படும்போது, அது தன்னுடைய குடும்பத்திற்கு இராஜரீக ஆசாரிய ஊழியம் செய்கிறவனுக்கு மாத்திரமல்ல, அந்த குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் அதிகப்படியான ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவது நிச்சயம். தேவனுக்கென்று ஒரு பயபக்தியையும், அவருகென்ற ஒரு பொறுப்பையும் உணருவதும், அவருடைய அன்பையும், பாதுகாக்கும் கரிசனையையும் உணருவதும் அந்த குடும்பத்தோடு, அந்த நாள் முழுவதும் இருக்கிறது. சாயங்காலத்தில் மறுபடியும் ஒரு குடும்பமாக, திவ்விய இரக்கங்களை அறிக்கை செய்யவும், நன்றி தெரிவிக்கவும் கூடி

வரமுடிந்தால், விதவையின் குடத்திலிருந்த எண்ணெய், தொடர்ந்து ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொரு பாத்திரத்திற்கென ஊற்றப்பட்டபோல ஆசீர்வாதம் இன்னும் பெருகும். (2 இராஜா. 4:1–7)

சபையில் ஜெபம் செய்வது என்பது, உலகத்தை விட்டு விலகி, ஆண்டவருடைய குடும்பம் திவ்விய பிரசன்னம் உள்ள ''இரகசிய அறைக்குள்'' செல்வதாகும். அதன் முன்னேற்றத்திற்கு, அதன் ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கு, அதன் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அது மிக அத்தியாவசியமானது. அதை அலட்சியப்படுத்துவது, நிச்சயமாக வல்லமையை இழப்பதாகும், சிலாக்கியத்யும், ஊழியத்யும் அதற்கொத்த சந்தோஷத்தையும் இழப்பதாகும். ஆனாலும், ஒரு போஸ்டன் நகர் பத்திரிக்கை குறிப்பிட்ட பொதுவான இடத்தில் செய்யப்பட்ட ஜெபத்தை நாங்கள் ஏற்கவில்லை. ஒரு மத சம்பந்தப்பட்ட கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது அந்த பத்திரிக்கை கூறுகிறதாவது: ''Rev.Dr —— போஸ்டன் நகரில் உள்ள ஒரு கூட்டத்தின் மத்தியில் மிக அழகான, நாவன்மைமையோடு இதற்கு முன்பு செய்யப்படாத ஜெபத்தைச் செய்தார்.'' இந்த ஜெபத்தின் கருத்துக்களில் பெரும்பாலானவை தேவனிடத்தில் ஜெபிப்பதைவிட்டு, கூட்டத்தினரிடம் ஜெபிப்பது போல இருந்தது. வேதவாக்கியங்கள், பொதுவான இடத்தில் தேவனுடைய ஜனங்கள் மத்தியில், சத்தமாக ஜெபிப்பதை உற்சாகப்படுத்துகிறது; மாத்திரமல்ல, ஜெபம் பண்ணுகிறவன், அவனுடைய ஊழியத்தோடு சம்பந்தம் உள்ள ஜனங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், கேட்கிறவர்கள சத்தமாகவோ அல்லது தங்களுடைய இருதயத்திலோ '' ஆமென்'' என்று சொல்லும்படியாக ஆராதனை நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுச் சொல்லுகிறது. (1கொரி. 14:13–17)

அப்போஸ்தலானகிய பவுல் சுவிசேஷத்தோடு ஒரு புதிய நகரத்திற்கு சென்று, ''வழக்கமாய் ஜெபம் செய்யப்படுகிற இடத்தில்'' கூடி வந்தவர் களை தேடும்படி சென்றபோது, பரிசுத்த ஆவியாகிய பரத்திலிருந்து வந்த ஞானம்தான் அவரை வழிநடத்துகிறது. (அப். 16:13) ஒருவருக் கொருவரும், ஒருவருடன் ஒருவரும், அவர்களுடைய சந்தோஷம் நிறைவாக இருக்க வேண்டும் என்றும் ஜெபிக்கிறவர்கள் மத்தியில் அறிவும், தேவனுடைய அன்பும் நிரம்பி வழிவது இன்றைக்கும் உண்மையாக இருக்கிறது. இருந்தாலும், தேவனுடைய வசனத்தை

படிக்கும்படியாக கூடும் இடத்திலும், ஒருவரையொருவர் மகா பரிசுத்த விசுவாசத்தில் உறுதிப்படுத்தும்படிக்கு கூடிவருகிற இடத்திலும் முதலாவதாக வசனத்தை படிப்பதில் தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கும்படியாக கேட்கப்படாவிட்டால், ஒரு ஆராதனையும் சரியான விதத்தில் ஆரம்பிக்கப்படவில்லை என்று நாம் கூறுகிறோம். மேலும், ஆண்டவர் கொடுக்கிற சிலாக்கியங்களுக்காகவும், ஆசீர்வாதங் களுக்காகவும், ஊற்றப்பட்ட அவருடைய ஆசீர்வாதங்களுக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்தாவிட்டால், எந்த ஒரு கூட்டமும் சரியான விதத்தில் முடிவுற்றது என்று எண்ணக்கூடாது. அவருடைய சித்தத்தை அறியவும், அதன்படி நடக்கவும் உள்ள வாஞ்சையோடு ஊக்கமாக கேட்ட அனைவருக்கும், அவருடைய கிருபையுள்ள வசனங்கள் அவர்களுடைய இருதயங்களுக்கு போஜனமாக இருக்கும்படியாக ஜெபிக்க வேண்டும்.

விசுவாசம் ஆவியின் ஒரு கனி, புதுசிருஷ்டியின் தற்கால சுதந்தரத்தின் ஒரு பங்கு

தேவனுடைய பிள்ளைகளாவதற்கு முன்பு விசுவாசம் நம்முடையதாக இருக்க வேண்டும்; ஆம், நாம் நீதிமான்களாக்கப் படுவதற்கு முன்பே இருந்தாக வேண்டும். எனெனில், நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டுள்ளோம். தேவனோடு சமாதானமும் பாவங்களிலிருந்து மன்னிப்பும் பெறுவதற்கு முன்னரே இது இருந்தாக வேண்டும். ஆகவே, பரிசுத்த ஆவியை பெறுவதற்கு முன்னால் நம்மிடமிருந்த இந்த விசுவாசம், ஆவியின் கனியாக இருக்கிற விசுவாசமாக இருக்க முடியாது. தேவனையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் பொறுத்த வரையில் விசுவாசம், நம்முடைய மனங்களின் செயல்பாடாக, பயிற்சியாக இருக்கிறது. அறியாமையினாலோ அல்லது விழுந்துபோன மனநிலையினாலோ தேவனிடத்தில் நம்பிக்க வைக்க முடியாதவர்கள், இந்த சுவிசேஷ யுகத்தில் உள்ள ஏற்பாட்டின் கீழ் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவது முடியாததாக இருக்கிறது. ஆனால், வரவிருக்கிற ஆயிரவருட யுக ஆசீர்வாதத்தின் பங்கிலிருந்து அவர்கள் தடைபண்ணப்படுகிற நிலையில் இல்லை. இந்த சுவிசேஷம் யுகத்தின் அழைப்பு விசுவாசத்தின்படி நடப்பவர் களுக்குத்தான், தரிசித்து நடப்பவர்களுக்கல்ல. விசுவாசத்தின்படி நடக்க

இயலாவர்களால் அல்லது நடக்காதவர்களால், இப்பொழுது தேவனோடு நடக்க முடியாது. ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருப்பது கூடாத காரியம்.'' ஆரம்பிப்பதற்கு தேவையான இந்த விசுவாசம் இல்லாதவரெல்லாம், தற்காலத்தில் ஆரம்பிக்க முடியாதவர்களாய் இருக்கிறார்கள். எனினும் ஆரம்பிப்பதற்கு தேவையான விசுவாசம் அவனுக்கு இருந்தாலும் கூட, அது வளர்ந்து, அபிவிருத்தியடையா விட்டால் ஜெயங்கொள்ளுகிறவனாக இருப்பதற்குரிய வல்லமையில் அவன் குறைவுபட்டிருப்பான். ஏனெனில் ''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.'' (1யோவா. 5:4)

விசுவாசத்திற்கும், மூட நம்பிக்கைக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருப்பதை நாம் அறிய வேண்டும். இலட்சக்கணக்கான ஜனங்கள் நம்பிக்கை உள்ளவர்கள், மூடநம்பிக்கை உள்ளவர்கள், அவர்கள் தங்களால் போதுமான அளவு சாட்சியங்களைக் கொண்டு நிரூபிக்க முடியாவிட்டாலும் ஆயிரத்தொரு நியாயமற்ற காரியங்களை நம்புகிறார்கள். நம்பக்கூடாத காரியங்களை நம்புகிற இந்த மூட நம்பிக்கையுள்ள ஜனங்கள் அஞ்ஞானிகளின் பிரதேசங்களில்தான் காணப்படுகிறார்கள் என்று அல்ல. இலட்சக்கணக்கானவர்கள் கிறிஸ்தவ பேரையும் சபையையும்கொண்டவர்களாக இருக்கிறார்கள். மூட நம்பிக்கையும், அறியாமலேயே நம்பிக்கை வைப்பதும் கண்டிக்கப்பட வேண்டியது, தவிர்க்கப்பட வேண்டியது, மேற்கொள்ளப்பட வேண்டியது. உண்மையான விசுவாசம் உற்சாகப்படுத்தப்பட வேண்டும், பலப்படுத்தப் படவேண்டும், உறுதிப்படுத்தப்பட வேண்டும், வளரச்செய்யப்பட வேண்டும். தேவபக்தியே விசுவாசமாகவும் உறுதியான நம்பிக்கையாகவும் இருக்கிறது. அது மனுஷீக சம்பிரதாயங்கள், தத்துவங்கள் அல்லது கற்பனைகளின் மேல் அல்ல, திவ்விய வாக்குத்தத்தங்களின்மேல் உறுதிப்படுத்தப்படுகின்றதாக இருக்கிறது.

அவருடைய நாமத்தின் பொருளின்படி, தேவன் சதா காலங்களிலும் இருக்கிறவராகவே இருக்கிறவர் என்றும், சர்வவல்லவர், சர்வ ஞானி, சர்வ நியாயாதிபதி, எப்பொழுதும் நேசிக்கிற சிருஷ்டிகர் என்றும் விசுவாசிப்போமானால், அவரை ஊக்கமாகத் தேடுகிறவர்களுக்கு நன்மை செய்கிறவர் என்றும் விசுவாசிப்போமானால், இதனால் வரும் விளைவு என்னவென்றால், நாம் அவரைத் தேடுவோம்; அவருடைய வார்த்தையை

அறிந்து, புரிந்துகொள்ளவும் நாடுவோம், நாம் அதில் விசுவாசம் வைப்போம்; நம்முடைய வாழ்க்கையின் பாதையை அதன்படி அமைப்போம். தேவ கிருபையின் கீழாக, இந்த விசுவாசத்தின் ஆரம்பம் கிறிஸ்துவை சுட்டிக் காட்டுகிறது; தேவனோடு மறுபடியும் உண்டாகும் ஐக்கியத்திற்கும், அவருடைய அனுக்கிரகத்திற்கு திரும்புவதற்கும் கிறிஸ்துவே புதிதும் ஜீவனுமான மார்க்கம் என்றும் சுட்டிக்காட்டுகிறது. இந்த விசுவாசம் இயேசுவைப் பற்றிக்கொள்ளும்போதும், அது தன்னைக் கீழ்ப்படிதலில் அப்பியாசப்படுத்தும்போதும் அது அதிகரிக்கிறது. ஆண்டவருடைய ஆசீர்வாதம் அதன்மேல் அதிகமாக வருகிறது. ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனையையும், புது சிருஷ்டியின் அங்கத்துவத்தையும் அதை பிரகாசிக்கப்பண்ணுகிறது. வளருகிற விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் பற்றிக்கொள்ளுகிறது. தேவனுடைய சுதந்தரரும், ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்தரருமாகிற தேவனுடைய வாக்குத்தத்தங்களை பற்றிக்கொள்ளுகிறது. இதன் பலன் ஆவியின் ஆசீர்வாதமாகிய ஜெநிப்பிக்கப்படுதல், அபிஷேகம் பெறுதல், புத்திர சுவிகாரம் ஆகியவையாகும்.

பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பொன் குத்துவிளக்கின் வெளிச்சத்தினால் அதிகமாக பிரகாசிக்கப்படுவது, காணமுடியாதவை களை விசுவாசக்கண்களால் பார்க்க உதவி செய்வது ஆகியவை அதிகப்படியான பலனாகும். அதாவது பிரதான ஆசாரியனின் விசேஷித்த ஊழியமாகிய வெளிச்சத்தைக் குறித்தும், சமூகத்து அப்பங்கள், பொன்னாலான தூபகலசம், திரைக்கு அப்பால் உள்ள கிருபாசனம் ஆகியவைகளைக் குறித்தும் அறிவதாகும். தேவ வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள திவ்விய நன்மையின், ஆசீர்வாதத்தின் பல்வேறு அம்சங்களில் ஜீவனுள்ள, கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் படிப்படியாக பங்கெடுக்கும்போது அது அதிகமாக பலத்திற்குமேல் பலம் அடைகிறது, தெளிவுக்கு மேல் அதிக தெளிவு பெறுகிறது, புதிய சிந்தையின் ஒரு ஆரம்பப்பகுதியாகிறது. இந்த அனுகூலமான இடத்திலிருந்து, இதற்குமுன் தன்னால் பார்க்க முடியாதவைகளைப் பார்க்கிறது. இதைக்குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ‘‘எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை,

அவைகள் (ஜென்மசுபாவமுள்ள) மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.'' (1 கொரி. 2:9)

வாக்குத்தத்த வசனத்தின்மூலமாக, ஆவியினால் விளக்கமாக கூறப்பட்டபடி, அது பெரிய, விலையேறப்பெற்ற காரியங்களை, அதாவது பரலோக காரியங்களை, முதலாம் உயிர்த்தெழுதலில் அடையப்போகிற மகிமையை, அப்பொழுது ஸ்தாபிக்கப்படவேண்டிய இராஜ்யத்தை, பூமியின் வம்சங்களுக்கெல்லாம் ஆசீர்வாதத்தை கொண்டு வரும் நீதியின் ஆட்சியை, திவ்விய அன்பின் பிரமாணத்திற்கும் தேவனுடைய மகிமைக்கும் ஒத்துழைக்காத ஒவ்வொரு தனிப்பட்டவனின் அழிவையும், பாவம் வென்றடக்கப்படுதலையும் காண்கிறது. புது சிருஷ்டி இவைகள் எல்லாவற்றையும் விசுவாச கண்களினால், புரிந்துகொள்ளும் கண்களினால் காண்கிறான். ஜென்மசுபாவமுள்ள மனிதனுக்கு தெளிவாகவும், துள்ளியமாகவும் தெரியாத அனேக காரியங்களை இந்த கண் காணும் என்று அப்போஸ்தலர் நமக்கு உறுதியாகக் கூறுகிறார். ''நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.'' (1 கொரி. 2:9,10)

ஆவியினால் பிறந்த இந்த விசுவாசம், இதுவரை காணப்படாதவை களில் இருப்பது புது சிருஷ்டியின் தற்கால சுதந்தரத்தின் ஒரு பங்காக இருக்கிறது. மேலும், அது ஒவ்வொரு நம்பிக்கையோடும், ஒவ்வொரு சந்தோஷத்தோடும் நெருக்கமாக தொடர்பு கொண்டிருக்கிறது. அது ''பின்வரும் மகிமைகளைப்'' பற்றி சாத்தியமான ஒரு முன் அறிவிப்பை மட்டும் கொடுக்கிறது. உண்மையிலேயே அப்போஸ்தலர் விளக்கமாக கூறுகிறபடி, ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.'' மேலும், அவர் கூறுவதுபோல அதுவே நம்முடைய எல்லா சந்தோஷங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் அஸ்திபாரமாக இருக்கிறது. இதன்மூலம் இதுவரை காணப்படாதவைகள் நம்முடைய மனங்களுக்கு, பார்க்கப்படுகிற பொருள்களைப் போலத் தெளிவாகத் தெரிகிறது. அப்போஸ்தலர் ஆம், என்கிறார். மேலும், இந்த கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, நம்முடைய இயற்கையான கண்களினால் காண்கிற காரியங்கள் இம்மைக்குரியது என்பதையும், அதே வேளையில் நம்முடைய

விசுவாசக்கண்களால் பார்க்கக் கூடியவைகள், உண்மையானவைகள், அடையக்கூடியவைகள் நித்தியமானவைகள் என்பதையும் உணரும்படி கற்றுக் கொள்ளுகிறோம்.

நம்முடைய தற்கால சுதந்தரத்தை அடைவதற்கும், தக்க வைத்துக்கொள்ளுவ தற்கும், பின்வரும் ஆசீர்வாதங்களை ருசிபார்க்கவும் விசுவாசம் எவ்வளவு அவசியமாக இருக்கிறது. இது அப்போஸ்தலர் யாக்கோபினால் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது: ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாத வருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.'' அவர் தொடர்ந்து கூறுகிறார்: ''ஆனாலும், அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று நினையாதிருப்பானாக. இருமன முள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.''(யாக். 1:5–8) இப்படியாக, அப்போஸ்தலர் ஒருவன் விசுவாசத்தில் உறுதியுள்ளவனாகாமல் ஜெயங்கொள்ளுகிறது இயலாத காரியம் என்று கூறுகிறார். ஆகவே, வேதவாக்கியங்கள் எல்லா இடத்திலும், விசுவாசத்தில் வளரும்படி போதிக்கிறது; மேலும், ஆண்டவருடைய ஜனங்களனைவரும் அப்போஸ்தலர்களைப் போன்று ஜெபிக்க வேண்டும் என்றும் போதிக்கிறது. ''ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்;'' இப்படியாக, ஜெபிக்கும்போது, இந்த ஜெபம் நிறைவடைவதற்கு, ஆண்டவர் ஏற்படுத்தியுள்ள வசதிகளை உபயோகிக்க வேண்டும். அவர்களுடைய ஜெபங்கள் உண்மையுள்ளதாக இருந்தால் அந்த வசதிகளை ஊக்கமாக உபயோகிப்பார்கள், அவர்கள் ஆண்டவரை ஜெபத்தில் தேடுவார்கள், அவருடைய வசனத்தைத் தேடுவார்கள், அவருடைய ஊழியத்தில் ஆனந்தம் அடைவார்கள், ஆவியின் எல்லா கிருபைகளையும், தரித்துக்கொள்ள விரும்புவார்கள். இது அவர்களுடைய நோக்கமாக இருப்பதால் அவர்களுக்கு உறுதியான விசுவாசம் இருக்கும், விசுவாசத்தின் முழுநிச்சயம் இருக்கும், இவர்கள் ''ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் அவர்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.'' (2 பேது. 1:10,11)

புது சிருஷ்டியின் ஜீவ கீதம்

என்னுடைய வாழ்க்கை எல்லையில்லா கீதத்தில் கடந்து செல்லுகிறது;
பூமியின் புலம்பலுக்கு மேலாக,

நான் இனிமையான, வெகு தூரத்தில் இல்லாத கீர்த்தனையை கேட்கிறேன்,
அது ஒரு புது சிருஷ்டியை வாழ்த்துகிறது.
எல்லா குழப்பத்தின் கலகத்தின் ஊடாக,
சங்கீதம் இசைக்கப்படுவதை நான் கேட்கிறேன்;
அது என்னுடைய ஆத்துமாவில் ஒரு எதிரொலியை காண்கிறது–
நான் எப்படி பாடாமல் இருக்க முடியும்?

என் சந்தோஷங்களும் ஆறுதல்களும் மரித்தாலும்!
என் ஆண்டவராகிய இரட்சகர் ஜீவிக்கிறார்,
எப்படிப்பட்ட இருள் சூழ்ந்து வந்தாலும்!
இரவின் கீதங்களை அவர் தருகிறார்.
எந்தப்புயலும் என்னுள் இருக்கிற அமைதியை அசைக்க முடியாது,
அதற்கான அடைக்கலத்தை பற்றிக்கொண்டிருக்கும்போது;
கிறிஸ்து வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால்,
நான் எப்படி பாடாமல் இருக்க முடியும்?

என் கண்களை ஏறெடுக்கிறேன், மேகம் மெல்லியதாக மாறுகிறது;
அதற்கும் மேலாக நான் நீல நிறத்தைக் காண்கிறேன்;
நாளுக்கு நாள் இந்த பாதை மென்மையாகிறது,
நான் அதை முதலில் நேசிக்க கற்றுக்கொண்டபடியால்.
கிறிஸ்துவின் சமாதானம் என் இருதயத்தை புதிதாக்குகிறது,
எப்பொழுதும் ஒரு ஊற்று எழும்புகிறது;
நான் அவருடையவனானபடியால் எல்லாம் என்னுடையவைகள்–
நான் எப்படி பாடாமல் இருக்க முடியும்?

அத்தியாயம் 17

புது சிருஷ்டியின் உயிர்த்தெழுதலின் சுதந்திரம்

ஆவிக்குரிய காரியங்களை தெளிவாக புரிந்துகொள்ள விசுவாசக் கண்ணும் காதும் பயிற்சிக்கப்பட வேண்டும் –''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள்'' – உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் உள்ள வாழ்க்கை – அனாஸ்டசிஸ் – மறுபடியும் எழுதல் அல்லது உயிர்த்தெழுதல் – கடந்தகால பாவங்களுக்காக தண்டனையோ அல்லது தீர்ப்போ அல்ல; ஆனால் ஜீவனுக்கான இன்னொரு பரீட்சை – ''மரித்தோரிலிருந்து உயிர்த்தெழ பாத்திரவான்கள்'' – இந்த வாழ்க்கையின் பாவங்களுக்கான தண்டனை – ''சிலருடைய பாவங்கள் நியாத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்'' – ''(விசேஷமாக) மரித்தோரின் (பிரதான) உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்'' – ''இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்பட வில்லை'' – ''அவருக்கு ஒப்பாயிருப்போம்.''

தேவனுடைய வசனத்தின்மூலம் விசுவாசக் கண்களும், விசுவாசக் காதுகளும் பயிற்றுவிக்கப்பட்டுள்ள அளவின்படியே, புது சிருஷ்டிகள் தங்களுடைய எதிர்கால சுதந்திரத்தின் மேன்மையையும், மகிமைகளையும் தெளிவாகப் புரிந்துகொண்டு மகிழ்ச்சியுற முடிகிறது. இவைகளை அவர்கள் ஜென்ம சுபாவ மனிதர்களாக இருக்கும்போது உயர்வாக எண்ண ஆரம்பிக்கக் கூட முடியாது; ஒரு முழு அர்ப்பணிப்பைச் செய்யும்வரை, பரிசுத்த ஆவியை ஒரு எதிர்காலத்தின் அச்சாரமாகப் பெறும்வரை அவர்களால் அப்படி எண்ணமுடியாது. அந்த நேரம் வரை, விசுவாசத்தினாலும், நீதிமானாக்கப்பட்டதினாலும், அவர்கள்

தேவனுடைய ஐக்கியத்தில் வந்த பிறகும் கூட எதிர்காலத்தைக் குறித்த அவர்களுடைய அறிவு, லேவியருக்கு ஒப்பிடப்படுகிறது. லேவியர் ஆசரிப்புக் கூடாரத்தில் ஆராதிக்கிறவர்களாக, வேலையாட்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், அவர்கள் அதற்குள் பிரவேசிக்கவோ, பொன்னாலான பலிபீடத்தில் தூபம் காட்டவோ, அதன் மேன்மையை பார்ப்பதற்கோகூட அனுமதிக்கப்படவில்லை; பரிசுத்த ஸ்தலம், அதன் மகிமை, அதன் விளக்குத்தண்டு, அதனுடைய வெளிச்சம், சமூகத்து அப்பத்தின் மேஜை, பொன்னாலான பலிபீடம், தூபம் ஆகியவைகளைக் குறித்து என்ன அறிவு அவர்களுக்கு இருந்தாலும், அவைகளெல்லாம், அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியரிடமிருந்து கற்றுக் கொண்டவைகள் தான்; ஆசாரியர்களுக்கு மாத்திரமே உள்ளே பிரவேசிக்க அதிகாரம் இருந்தது.

புது சிருஷ்டியின் இராஜரீக ஆசாரியர்களைக் குறித்து அப்போஸ்தலர் கூறும்போது, அவர்கள் கிருபையையும், அறிவையும், விசுவாசத்தையும் ஆவிக்குரிய பார்வையையும் அடைந்திருந்தாலும், தற்கால வாழ்க்கையில், வருங்கால காரியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பார்கள் என்றும், இன்னமும் கூட அவர்கள் அவைகளை விசுவாசத்தினால்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் காட்டுகிறார். அவருடைய வார்த்தைகளாவன: ''இனி எவ்விதமாய் இருப்போம் என்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாய் இருப்போம் என்று அறிந்திருக்கிறோம்.'' (1யோவா. 3:2) ஆண்டவருடைய ஜனங்களுக்கு உரிமை இல்லாவிட்டாலும், தங்களுடைய ஆவிக்குரிய சரீரங்களைக் குறித்தும், உருவம், அளவு, மூலகங்கள் போன்றவைகளைக் குறித்தும் அறிந்துகொள்ள ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட அப்போஸ்தலரின் பதிலே போதுமானது. எப்படிப்பட்ட விபரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட பரவாயில்லை, புதிய ஆவியின் சரீரம், மனிதனின் மூளை புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு தற்போதைய நிலைமைகளில் இருந்து மிக வித்தியாசமாக இருக்கும் என்பதை அவர்கள் உணரவேண்டும். ஆனால் சபையானது அதனுடைய ஆண்டவரைப் போன்று இருக்கும்; அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைக் காணும் என்ற நிச்சயத்தோடு முழு கேள்விக்கும் பதில் கிடைக்கிறது. சபை அவரைக் காணும் போது, அவர்

இழிவுபடுத்தப்பட்ட நாட்களில் இருந்ததைப் போல அல்ல, மனிதானாகிய கிறிஸ்துவை போல அல்ல, அல்லது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வெவ்வேறு உருவத்தில் அதற்கேற்றாற்போன்ற வஸ்திரங்களை தரித்துக்கொண்டு அவருடைய சீஷர்களுக்கு தோன்றியது போலவும் அல்ல, ஆனால் அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைக் காணும்; அவருடைய மகிமையைக் காணும்; அவரைப் போல், அவருடைய மகிமையில் பங்கு பெறுகிறவர்களாக இருக்கும். இதுவே போதுமானது.

ஆனாலும், அப்போஸ்தலனாகிய பவுல் முதலாம் உயிர்த்தெழுதலைப் பற்றி கொடுத்த விளக்கத்தின்படி, நம்முடைய வருங்கால சுதந்திரத்தின் புது நிலைமைகளைக் சுருக்கமாக காணும்படி, ஆண்டவர் திரையை ஒரு சிறிய அளவுக்கு அகற்றினார் என்பதைக் குறித்து நாம் சந்தோஷமடைகிறோம். (1 கொரி. 15:41–44) முழு அதிகாரமும் புது சிருஷ்டியின் ஒவ்வொரு அங்கத்திற்கும் மிகவும் ஆர்வத்தைக் கொடுக்கக் கூடியதாக உள்ளது; அதன் வசனங்கள் முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்து காட்டுவதுமன்றி இந்த முதலாம் உயிர்த்தெழுதலினால் சபையாகிய சிறுமந்தை, இராஜரீக ஆசாரியர்கள், பூரணப்படுத்தப்பட்டு, ஆண்டவரின் சந்தோஷத்திறக்குள் பிரவேசிப்பார்கள் என்பதையும் காட்டுகின்றன; அது மாத்திரமல்ல உலகத்தின் எதிர்கால நம்பிக்கையைப் பற்றி அவைகள் சொல்லுகிற கருத்துக்களும் ஆர்வத்தை அதிகமாக தூண்டுவதாக உள்ளன. அப்போஸ்தலர் இந்த நிருபத்தை பரிசுத்தவான்களுக்குத்தான் எழுதினார், மற்றவர்களுக்கு அல்ல என்பது உண்மையாக இருந்தாலும், அவர் முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர் விவரித்தது, குறிப்பிடும்படியான ஒரு ஆசீர்வாதமும் எஞ்சியுள்ள மனிக்குலத்திற்கு கிடையாது என்று சிலர் எண்ணுவதை மாத்திரமல்ல, உலகத்தின் உயிர்த்தெழுதலும் இதே மாதிரியாகத்தான் இருக்கும், ஆனால் அது பின்னால்தான் இருக்கும் என்கிற சிந்தையுடைய மற்றவர்களையும் அது நியாயப்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே வேத வாக்கியங்களின் சாட்சியான, சபைக்கென தேவன் ஒரு விசேஷமான பங்கை, ஆவிக்குரிய பங்கை பரலோகத்தில் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிறார், அதே போன்று அவரிடம் ஒரு பூமிக்குரிய பங்கும் உண்டு, அது ஏற்ற காலத்தில் வெளிப்படுத்தப்படும், அது பொதுவான உலகத்திற்கு வழங்கப்படும் என்ற கூற்றை ஆதரிக்கும் வண்ணமாக இரண்டு உயிர்த்தெழுதல்களைக் குறித்து சொன்னது விசேஷமாக பயனுள்ளதாக இருக்கிறது. ஆசீர்வதிக்கப்பட்ட, பரிசுத்தமான சபையின் முதலாம்

உயிர்த்தெழுதலுக்கும், அதன் பின்னர் கிறிஸ்துவின் அனுக்கிரகத்தை காலா காலத்தில் ஏற்றுக் கொள்ளுகிற மற்ற எல்லா மனிதரின் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் இருக்கிற தொடர்பினால், அப்போஸ்தலர் கூறுகிறபடியே நாம் இந்த விஷயத்தை எடுத்து, இரண்டு உயிர்த்தெழுதல்களையும் கவனிப்பது நலமானதாக இருக்கும்.

"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"

–1 கொரி. 15:22–

இதற்கு முன்னால் பார்த்த அப்போஸ்தலரின் விவாதத்திற்கு இந்த வசனம் முடிவைத் தருகிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலை மறுக்கின்ற எண்ணமுடைய சிலரோடு அவர் உயிர்த்தெழுதல் உண்டு என்று வாதாடுகிறார். அவர் அவர்களுடைய வாக்குவாதம் நியாயமற்றது என்கிறார். ஏனெனில், மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. மேலும், கிறிஸ்து எழுந்திராவிட்டால், நமக்கு இரட்சகர் இல்லை, பரிந்து பேசுகிறவர் இல்லை, உதவி செய்பவர் இல்லை. அப்படியானால், சபை மற்றும் உலகத்தினுடைய நிலை நம்பிக்கையற்றதாக இருக்கும் என்று அவர் சுட்டிக் காட்டுகிறார். பாவத்துக்குரிய தண்டனை மரணமாக இருக்கிறபடியால், வேதவாக்கியங்களின்படி கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிப்பது அவசியமாக இருந்தது. ஆனால் அவர் மரித்தோரிலிருந்து ஒருபோதும் எழுந்திராவிட்டால், அவர் ஒரு போதும் நம்முடைய மீட்பை பொறுப்பேற்கவில்லை என்பது போல நாம் நம்பிக்கையற்றவர்களாக இருப்போம். ஏனெனில், மனுக்குலமானது ஆதாமின் மீறுதலினிமித்தம் வந்த சாபமாகிய மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், அது இன்றும் நம்பிக்கையற்ற நிலையில் தான் காணப்படும், இழந்ததைத் திரும்பப் பெறுதல் அதற்கு அவசியமாக இருக்கும். அதைப் பெறுவதற்கு அதற்கு மாபெரும் மருத்துவர், புதுப்பிப்பவர் தேவைப்படுகிறார்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மாத்திரமல்ல மரணமும் அத்தியாவசியமானது என்று கற்பனை செய்து பார்க்கக் கூடிய மிகுந்த முக்கியத்துவத்தைக் காண்பித்து, "கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள்

விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே'' என்று கூறுகிறார். ''ஆனால், கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்'' என்று கூறி இந்த விஷயம் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுவிட்டது, எல்லா தர்க்கங்களுக்கும் பதில் கொடுக்கும் வகையில் தீர்க்கப்பட்டாயிற்று என்று மேற்கொண்டு கூறுகிறார்.

இப்படியாக இந்த விஷயத்தை விளக்கிக்காட்டிய பின்னர், ஒரு உயிர்த்தெழுதல் சாத்தியமானது மாத்திரமல்ல, அது அவசிமானதும் கூட என்கிற உண்மையையும், மேலும், இதற்கான ஆதாரமாகிய நம்முடைய ஆண்டவர் மரித்தவர் போன்று பாவனை செய்யாமல், நம்முடைய பாவங்களுக்காக உண்மையாகவே மரித்தார், உண்மையாகவே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்கிற பொதுவான உண்மையையும் தன்னுடைய வாசகர்கள் மனதில் பதித்து, அவர்கள் விசுவாசத்தில் அதை ஸ்தாபித்தார். மேலும், இந்த விசுவாசத்தின் அடிப்படையில்தான், நம்முடைய மனுக்குலம் ஆதாமுக்குள் மரித்துவிட்டது– ஒழிந்துப் போய்விட்டது என்றல்ல, உண்மையிலேயே மரித்துவிட்டது என்றல்ல, ஆனால் நித்திரையிலிருக்கிறது என்று நினைக்கும் சிலாக்கியத்தை நாம் பெற்றுள்ளோம் என்று அவர் சுட்டிக்காடுகிறார். அவர்களுக்காக நாம் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். எப்படியெனில், ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தின்படி, உயிர்த்தெழுதலின் காலை வேளையில், அவர்கள் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள்; அதிலிருந்து இப்பொழுது இருக்கிற நிலைமையை விட மேன்மையான நிலைமையிருக்கும் காலத்தில் வருவார்கள்; அப்பொழுது பாவமும் மரணமும் ஆட்சி செய்யாது; சாத்தானுக்கு மரணத்தின்மேல் அதிகாரம் இருக்காது; ஆனால், அவன் கட்டப்படுவான்; மரணத்தில்மேல் இரட்சகருக்கு முழு அதிகாரம் இருக்கும். அந்த அதிகாரத்தை, மரணம் என்கிற பெரிய சிறைச்சாலையிலிருந்து கைதிகளை விடுவிக்க உபயோகப்படுத்துவார். எழுப்பப்பட்ட வர்கள் இப்படியான நன்மையான நிலைமைகளில் அவருடைய சத்தத்தை கேட்பார்கள் (கீழ்ப்படிவார்கள்), பரிசுத்த பாதையில் நடப்பார்கள், மரண இருளின் பள்ளத்தாக்கிலிருந்து ஏறி வெளியே வந்து, பூரண வாழ்க்கைக்கும், சமாதானத்திற்கும், தங்களுடைய சிருஷ்டிகரால் ஆதியில் கொடுக்கப்பட்டிருந்த

ஆசீர்வாதத்திற்கும் வருவார்கள். இந்த ஆசீர்வாதத்தை அவர்களுடைய தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்திருந்தார்கள், ஆனால் அதை இரண்டாம் ஆதாமின் புண்ணியத்தினாலும், அவருக்கு கீழ்ப்படிவதாலும் திரும்பப்பெறுவார்கள். இது அப்போஸ்தலர்களின் ஆலோசனைக்கு (வச.21) வழி நடத்துகிறது. அதாவது ''மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று'' என்பது தேவனுடைய திட்டம் என்பது அவருடைய ஆலோசனை. முதல் மனுஷனாகிய ஆதாம் மூலமாகத்தான் மரணம் வந்தது, இரண்டாவது மனுஷன் மூலமாக உயிர்த்தெழுதல் வருகிறது. ''மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின்'' மூலம் என்கிற அப்போஸ்தலருடைய அர்த்தத்தில் தவறில்லை. இயேசு மாம்சத்திலிருந்த நாட்களில் அவர் கூறியதாவது : ''உலகத்தின் ஜீவனுக்காக என் மாம்சத்தைக் கொடுப்பேன்.'' மறுபடியும் இந்த பலியினால் வரக்கூடிய பலன்களைப் பற்றி அவர் பேசும்போது, அவர் கூறியதாவது : ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.'' யோவா. 6:51; 11:25

நம்முடைய பொதுவான மொழி பெயர்ப்பு வேதாகமத்தில், ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' என்று கூறப்பட்டுள்ளது தவறான மொழி பெயர்ப்பாகும் என்பது தெளிவாக விளங்குகிறது. அது இப்படியிருப்பதினால் மற்ற வேத வாக்கியங்களுக்கு முரண்பாடாக உள்ளது. அது கிறிஸ்து மூலமாக உயிர்த்தெழுபவர்களின் எண்ணிக்கையை தெளிவாக கட்டுப்படுத்துகிறது. இந்த தவறான மொழி பெயர்ப்பு, பொதுவான இரட்சிப்பு என்ற போதனையை ஆதரிக்கிறது. அதைப் பார்க்கும்போது, ஜீவன் கொடுக்கப்படுகிறவர்களின் குணாதிசயங்களை, கிறிஸ்து மூலமாக வருகிற தேவனின் அனுக்கிரகமும், ஆசீர்வாதமும் வசனத்தின் பிரகாரம் கணக்கில் எடுப்பதில்லை என்று கூறுவது போன்று உள்ளது. எனினும் மற்ற வேத வாக்கியங்கள் வெகு தெளிவாக கூறுகிறதாவது: ''எல்லாரும் ஜீவனுக்குள் பிரவேசிப்பதில்லை.'' ''ஆனால், பரலோகத்தில் உள்ள பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்கள் மாத்திரமே ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள்.'' ஆனால் இந்த விஷயத்தைக் குறித்து மிக தெளிவான அறிக்கை ஆண்டவருடைய வசனத்தில் உள்ளது: ''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.'' 1யோவா. 5:12

இந்தப் பகுதியை வாசிக்கிற அநேகர், ‘‘ உயிர்ப்பிக்கப்படுவார்கள்’’ என்கிற வார்த்தைக்கு சரியான முக்கியத்துவத்தைக் கொடுப்பதில்லை. அவர்கள் இந்தப் பகுதி, ‘மரணம் என்கிற நித்திரையிலிருந்து விழித்து எழும்புவது’ என்று மாத்திரம் அர்த்தப்படுத்துகிறது என்று நினைக்கிறார்கள். ஆனால், அதன் அர்த்தம் இதைவிட அதிக விசாலமானது, இதைவிட அதிக விலையுயர்ந்தது. ஆதாம் மூலமாக வந்த மரணம், ஜீவனின் ஒரு சிறிய பகுதியை (உலகத்தார் தற்போது பெற்றிருக்கிறது) இழந்துவிடுவது அல்ல. ஆனால் முழு மனுகுலத்தின் பிரதிநிதியாக ஆதாம் பெற்றிருந்த ஜீவனை இழந்து போவது என்பது அதன் முழுமையான அர்த்தத்தில், முழுமையான அளவில் இருந்தது. ‘‘மரிப்பது’’ என்பது முழு ஜீவனையும் இழப்பது என்று அர்த்தப்படுகிறது. ஆதாமின் மரணமும், அவனுக்கு தண்டனை கொடுக்கப்பட்ட உடனேயே ஆரம்பித்தது. ஆகவே ‘‘உயிர்ப்பிக்கப்படுவது’’ என்பது மரணத்தை விட்டு, பூரணமான வாழ்க்கைக்கு நேராக திரும்ப நடப்பது என்று அர்த்தப்படாது. ஆனால் பாவம் செய்வதற்கு முன்பு ஆதாமிடம் இருந்த முழு பூரண வாழ்க்கைக்கு முழுவதுமாக திரும்பி வருதல் என்று சரியாக புரிந்து கொள்ளப்படும். உயிர்ப்பிக்கப்படுவது என்பது மரணத்திலிருந்து எழுப்பப்படுதல் என்று பொருள்படும். இந்த ‘‘ஜீவன்’’ என்கிற வார்த்தையின் முழு அர்த்தத்தையும், இந்த பகுதியை கவனிக்கும் போது உணர்ந்துகொள்வது நல்லது. மேலும் ஆண்டவரின் கருத்தின்படி ஆதாமின் முழு இனமும் மரித்து விட்டது. அது கல்லறைக்குள் சென்றுள்ளவர்களை மாத்திரமல்ல, அங்கு செல்லும் வழியில் உள்ளவர்களையும் குறிக்கும். நம்முடைய ஆண்டவர் ஜீவனையும், மரணத்தையும் மதிப்பிட்டவிதம் அவருடைய வார்த்தைகளில் விளக்கமாக உள்ளது. ‘‘மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீ என்னை பின்பற்றி வா.’’ (மத். 8:22) இங்கே அவிசுவாசிகள் இன்னும் மரித்தவர்களாகக் குறிப்பிடப் படுகிறார்கள். ஏனெனில், ஜீவன் கொடுப்பவரோடு ஐக்கியம் இல்லாதிருக் கிறார்கள். விசுவாசிகள் ஜீவனோடு இருப்பதாக குறிப்பிடப்படும்போது, அவர்கள் நம்பிக்கையினால் தான் மரணத்திலிருந்து தப்புவிக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் உயிர்த்தெழுதல் வரும்வரை மரணத்தின் வல்லமையிலிருந்து உண்மையான விடுதலையை அனுபவிக்க முடியாது. 2 கொரி. 1:10; ரோம. 8:24.

உயிர்த்தெழுதலுக்குப் பிறகு உள்ள வாழ்க்கை

''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' என்று நாங்கள் கூறும்போது இந்த பகுதியை சரியாக மொழி பெயர்க்கிறோம். ஆதாமின் பாவத்தினால் அவனோடு முக்கியமாக சம்பந்தப்பட்டிருந்த வர்கள் மரித்தார்கள். சாத்தான் ஆதியிலிருந்து பொய்க்கு பிதாவும், கொலைபாதகனுமாக இருந்தாலும், அவன் ஆதாமின் பாவத்தினால் மரிப்பதில்லை; ஏனெனில், ஆதாம் மரணத்திற்கேதுவாக ஆக்கினைக்குட்பட்டபோது சாத்தான் ஆதாமுக்குள் இல்லை. அதே போன்று தங்கள் ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாத தூதர்கள் ஆதாமின் மரணத்திற்குள் பங்கெடுக்கவில்லை, ஏனெனில் அவர்கள் ஆதாமுக்குள் இல்லை. அப்போஸ்தலரின் கருத்து என்னவெனில், ஆதாம் ஒரு சந்ததியின் தகப்பனாக அல்லது அதற்கு ஜீவனை கொடுப்பவனாக இருந்தான். ஆனால் கீழ்ப்படியாமையால் அவனும் அவனுடைய அரையிலிருந்த சந்ததியும் கூட, மரண நிலையை சம்பாதித்துக் கொண்டார்கள். இது அதிகமான வேகத்திலோ அல்லது குறைவாகவோ அவர்களை கல்லறைக்கு நேராக துரிதப்படுத்துகிறது என்பதாகும். அப்படியானால் அப்பொழுது ஆதாமுக்குள் இருந்த அனைவரும் அவனுடைய தண்டனையிலும் ஆக்கினைத் தீர்ப்பிலும் பங்கு பெற்றார்கள். அது போலவே கிறிஸ்துவுக்குள் உள்ள அனைவரும் அவர் மூலமாக திவ்விய நன்மையில் பங்கு பெறுவார்கள்.

ஆதாமின் சந்ததியினர் அவனுக்குள் இருந்தது, அவர்கள் விருப்பத்தின்படியோ அல்லது சந்தர்ப்பவசத்தினலோ அல்ல, உண்மையாகவும் சட்டரீதியாகவும் சுபாவத்தின் படியாகவும் அவனுக்குள் இருந்தார்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் கிருபையினால் வந்தார்கள், தனிப்பட்ட முறையில் வந்தார்கள், ஆனால் நிபந்தனையுடன் வந்தார்கள். திவ்ய ஏற்பாட்டின்படி மரண ஆக்கினையிலிருந்து ஆதாம் மீட்கப்படுவது, இறுதியில் அவனுடைய சந்ததியை மரண தண்டனையிலிந்து விடுவிக்கும் அளவுக்கும், அதற்கும் மேலாக அவர்களுக்கு ஒளியைக் கொடுக்கும்படியாகவும், கிறிஸ்துவுக்குள் வரும்படியான அறிவையும், தருணத்தையும் கொடுக்கும்படியாகவும், அவனுடைய சந்ததியினர் எல்லாருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் இந்த சிலாக்கியத்தை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவுக்குள் வருகிறவர்கள் மாத்திரமே, ஜீவனுக்குள் கொண்டுவரப்படுவார்கள், அந்த வசனத்தின்

முழு அர்த்தத்தின்படி கூற வேண்டுமானால் அவர்கள் மரணத்திலிருந்து முற்றிலுமாக எழுப்பப்படுவார்கள். ஆதாமின் மனைவி அவனுடையவள், அவனுக்கு அடையாளமாக இருந்தவள், அவனுடைய அரையில் இருந்த பிள்ளைகளும் அப்படியே இருந்தார்கள். அதுபோலவே கிறிஸ்துவினுடையவர்களும் அவருக்கு அப்படியே இருக்கிறார்கள். அவருடைய மணவாட்டி, அல்லது சபை முதலாவது வளர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அவருடைய ஜீவனிலிருந்து ஜீவனைப் பெறுகிறது. அதன் பிறகு உலகத்தார், மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு, ஆயிரம் வருட யுகத்தின் போது சத்திய அறிவுக்குள்ளாக கொண்டு வரப்பட்டு, அர்ப்பணிப்பின் மூலமாக அவர்களுடைய பிதாவாகிய அவருக்குள் (ஏசா. 9:6) வரும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள். மேலும் அவர்கள் இந்த உறவில் நிலைத்திருந்தால், மனிதனின் பூரண நிலைக்குள் பழையபடி கொண்டு வரப்படுவதற்கு அவர்கள் வளர்ச்சி பெறுதல் என்று பொருள்படும், அதாவது முதலாம் ஆதாமுக்குள் இழந்து போன எல்லாவற்றையும் திரும்பப் பெறுதல் என்று பொருள்படும். இப்படியாக கிறிஸ்துவுக்குள் உள்ள அனைவரும் பூரண வாழ்க்கைக்கு, ஜீவனுக்குள் கொண்டுவரப்படுவார்கள். ''எழுப்பப்படுவார்கள்'' என்பதற்கு இதுவே முழுமையான சரியான பொருள். அவர்கள் சுபாவத்தின்படி முதலாவது ஜீவனைக் கொடுக்கிறவனிடத்தில் இருந்தார்கள், அவனுடைய தவற்றின் மூலமாக தவறு செய்துவிட்டார்கள். அவர்கள் வெகு சீக்கிரத்தில், இரண்டாம் ஆதாமிடம் அல்லது ஜீவனைக் கொடுக்கிறவரிடத்தில் வரும்படியான தருணத்தைப் பெறுவார்கள்; மேலும், சரியான பிள்ளைகளைப் போன்று அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவார்கள் என்றால், அவர்கள் ஜீவிப்பார்கள், ஜீவனுக்குள் கொண்டு வரப்படுவார்கள்.

இந்த வியாக்கியானத்தைத் தவிர வேறு எதுவும் இந்த வசனத்திற்கு இந்த இடத்தில் சரியானபடி பொருத்தமாக இருக்காது. ''கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' என்று கூறிய பிறகு, அவர் மேற்கொண்டு கூறுவதாவது: ''அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்.'' அவர் முதலாவது வரிசையாக சபை, மணவாட்டி, கிறிஸ்துவின் சரீரம், ''முதற்பலனானவர்கள்,'' ''கிறிஸ்து,'' முதலாம் உயிர்தெழுதல் என்று குறிப்பிடுகிறார். (பிலி. 3:10) இவர்கள், இந்த சுவிசேஷ யுகத்தின் போது அதனுடைய ''பரம அழைப்பின்படி'' கிறிஸ்துவோடு கூட உள்ள உறவுக்குள் வந்து கிறிஸ்துவின் ''விசேஷமான

பொக்கிஷமாகிறார்கள்.'' அவர்கள் ஒரு விசேஷமான நிலைமையில் மகிமை, கனம், அழியாமை ஆகியவையுடன் கூடிய ஜீவனைப் பெறுவார்கள். இப்பொழுது, இது காணப்படுகிறது, பின்னர் அதிகமாக காண்பிக்கப்பட உள்ளது.

''அதன் பிறகு'' என்று அப்போஸ்தலர் வேறொரு முறையைப் பற்றி குறிப்பிடுவது போல, ஜீவனுக்குத் தகுதியுள்ளவர்களாக எண்ணப்பட்ட எஞ்சியுள்ளவர்கள் ஜீவனுக்குள் கொண்டுவரப்படுவார்கள், அல்லது பாவத்தினின்றும், மரணத்தினின்றும் முற்றிலுமாக எழுப்படுவார்கள் என்கிறார். இந்த இரண்டாவது வகுப்பினரை எழுப்புவது என்பது, ஆயிரம் வருட யுகத்தின் வேலையாக இருக்கும், அவர்கள் உயிர்ப்பிக்கப்படுவது படிப்படியாக நடைபெற்று, அந்த காலத்தின் இறுதியில் நிறைவடையும். ஒரு விதிவிலக்கானவர்கள் – ஒரு வேளை சரியானபடி அழைக்கப்பட வேண்டுமானால், இன்னொரு வகுப்பினர் – பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னால் இருந்த ஜெயம் கொண்டவர்கள், விசுவாசமுள்ள முற்பிதாக்கள் என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்டவர்கள். (எபி. 11:39,40) இவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள்; ''நற்சாட்சி பெற்றவர்கள்;'' அவர்களுடைய சோதனை ஏற்கனவே முடிந்துவிட்ட நிலையில், அவர்கள் மறுபடியும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுதலும், ஜீவனுக்குள் கொண்டுவரப்படுதலும் படிப்படியான வேலையாக இருக்கத் தேவையில்லை. அவர்களுடைய குறைபாடுகள் நியாயத்தீர்ப்புக்கு முன்சென்று விட்டன. ஆகவே, அவர்களுடைய உயிர்த்தெழுதல் உடனடியாக நடைபெறுகிற ஒன்றாக இருக்கும். ஆனால், அது தலையும், சரீரமும் சேர்ந்த கிறிஸ்து என்கிற வகுப்பிலிருந்து வித்தியாசமானதாக இருக்கும்.

ஜென்ம சுபாவமுள்ள மனுஷனின் உயிர்த்தெழுதலில் முதல் வரிசையில் வருபவர்கள் விசுவாசமுள்ள முற்பிதாக்கள் ஆகும். மனத்திலும் சரீரத்திலும் இவர்கள் ஒரு பூரணத்தைப் பெற்றிருப்பார்கள். இதைத் தொடர்ந்து பூமியின் ஜனங்களின் – உயிர்த்தெழுதல் வேலை இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வேளையில் துவங்கும். பொதுவாக உயிரோடு இருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ளப்பட்டாலும் பத்தில் ஒன்பது பேர் மரித்தவர்கள் என்ற நிலையில், உயிர்த்தெழுதல் வேலை தொடங்க நாம் எதிர்பார்க்கலாம். அவர்கள் பிரேதக்குழிகளில் இல்லாவிட்டாலும், திவ்விய கருத்தின்படி அவர்கள் மரித்தவர்களாக

இருப்பார்கள். அவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பது, அல்லது இழந்ததைத் திரும்பப் பெறுகிற செயல் உடனடியாகத் துவங்கும். நீதி, அன்பு ஆகிய பிரமாணங்களின்படி ஆட்சி செய்யும் தேவனுடைய ராஜ்யம் உலகத்தில் அவர்களுக்கு முன்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கும். தேவனை அறிகிற அறிவு அவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கும்படி பூமியெங்கும் நிறைந்திருக்கும். அப்பொழுது நீதியைத்தெரிந்து கொள்ளுவதற்கோ அல்லது அநீதியையும், கீழ்ப்படியாமையையும், இரண்டாம் மரணத்தையும் தெரிந்துகொள்ளுவதற்கோ முழு வாய்ப்புண்டு. அவர்கள் தங்கள் மேம்பாட்டுக்காக இராஜ்யத்தின் தேவைகளுக்கு இணங்கும்போது இழந்தவைகள் எல்லாவற்றையும் திரும்பப் பெறுவதுடன் முழு பூரணத்திற்கும், பூரண ஜீவனை அடையும் நிலைக்கும் வருவார்கள்.

இவர்கள் எல்லாம் ஜீவனுக்கான வழியில் செல்ல ஆரம்பித்த பின்னர், மரணம் என்னும் பெரிய சிறைச்சாலையில், கல்லறையில் உள்ளவர்கள் இதேமாதிரியாக நடத்தப்படுவதற்காக அழைக்கப் படுவார்கள், எழுப்பப்படுவார்கள். அவர்களை ஏற்றுக்கொள்ள உலகம் ஆயத்தமாகிற வேளையில் மற்றவர்கள், இன்னும் மற்றவர்கள், கல்லறையிலிருந்து வெளியே வருவார்கள்; நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் மீட்பின் மூலமாக தேவனுடைய கிருபையால் கொடுக்கப்பட்ட திரும்பப்பெறுதல், உயிர்த்தெழுதல் போன்ற ஆசீர்வதிக்கப்பட்ட அந்த தருணங்களை ஆனந்தமாக அனுபவிக்கும் படியாக வெளியே வருவார்கள். எல்லா காரியங்களிலும் சோதனை ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ''அந்தத் தீர்க்கதரிசியின் (கிறிஸ்துவின்) சொற்கேளாதவன் (கீழ்ப்படியாதவன்) எவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு (ஜீவனை காணாதபடிக்கு இரண்டாம் மரணத்தில்) நிர்மூலமாக்கப்படுவான்.'' (அப். 3:23) அதற்கு மாறாக, அந்த தீர்க்கதரிசிக்கு செவிகொடுக்கிறவனோ, அவன் மரண நிலையிலிருந்து படிப்படியாக வெளியே கொண்டுவரப்படுவான்; அவன் கிறிஸ்துவுக்குள் இருந்து, முற்றிலுமாக அவருக்கு கீழ்ப்பட்டிருக்கும்போது, ஜீவனுக்குள் அதன் முழுமையில் பூரணம் அடைவான்.

சிலரிடம் இந்த கேள்வி எழும்பும். அந்த உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிப்பதற்கு முன்னால் மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கமும் கல்லறைக்குள் செல்லுவது அவசியமாக இருக்காதா? முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறக்கூடியவர்கள் அனைவரும் அதற்கு

முன்னால், உண்மையான மரணத்திற்குள் செல்ல வேண்டியது அவசியமானதாக இருக்கும் என்று நாங்கள் பதில் கூறுகிறோம். எனெனில், அவர்களுடைய உடன்படிக்கை அப்படிப்பட்டதாக இருந்தது. மேலும் அவர்களுக்கு ஆண்டவருடைய வாக்குத்தத்தமும் அப்படியாகத் தான் இருந்தது. ''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது உனக்கு ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'' (வெளி. 2:10) என்பது அவருடைய வாக்குத்தத்தமாகும். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய நமது ஆண்டவர் தம்மை ஒரு ஜீவபலியாக மரணபரியந்தம் அர்ப்பணிப்பது மாத்திரமல்ல, உண்மையான மரணத்தில் அந்த அர்ப்பணிப்பை நிறைவேற்றுவதும் அவசியமாக இருந்தது. அவருடைய சரீரமாகிய சபைக்கு இதே காரியம் உரித்தாகுகிறது. அவருடைய உயிர்த்தெழுதலாகிய முதலாம் உயிர்த்தெழுதலில் உள்ள மகிமையிலும் ஆசீர்வாதங்களிலும் பங்குடையவர்களாக இருக்க வேண்டும் என்றால் அவருடைய சரீரமான சபை ''கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்ற வேண்டும்.'' ஆனால் மனுக்குலத்தைப் பொறுத்தவரை, அவர்கள் இழந்ததை திரும்பப்பெறுதலில், உயிர்தெழுதலில், மேம்படுத்தப்படுவதில் பங்கு பெறுவதற்கு முன்னர் எல்லாரும் கல்லறைக்குள் செல்ல வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, கீழ்ப்படியாமையினால் ஆதாமின் மேல் ஆக்கினை வந்ததிலிருந்து, முழு உலகமும் திவ்விய கருத்தின்படி மரித்து விட்டது எனறு எண்ணப்பட்டிருக்கிறது. முழு உலகமும் தற்பொழுது, மனம், சரீரம், ஒழுக்கம் என்பவைகளின் பலவீனங்களினால் விலங்கிடப்பட்டு சிறையிலுள்ளது. இந்தச் சிறைச்சாலையில் பலவிதமான பகுதிகள் உண்டு; அவர்களில், உயிரோடு இருக்கிறார்கள் என்று மனிதர்களால் அழைக்கப்படுவர்களை தேவன் மரித்தோர் (மீறுதல்களிலும், பாவங்களிலும், திவ்விய தண்டனைக்கு உட்பட்டவர் களாக இருக்கிறார்கள்) என்று அழைக்கிறார். அதை இப்படியாகக் கூறலாம், அவர்கள் இன்னும் சிறைச்சாலையின் முற்றத்தில் நடந்து கொண்டு இருக்கிறார்கள், அவர்கள் இன்றும் சிறை அறையில் (கல்லறையில்) அடைக்கப்படவில்லை, ஆனால் அவர்கள் சிறையில் இருக்கிறார்கள், மேலும் அவர்கள் மேலுள்ள மரணம் என்கிற சங்கிலியிலிருந்து உடைத்துக் கொண்டு அவர்களில் யாரும் வெளியே வரமுடியாது. எல்லாச் சிறைக் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்கிற உத்தரவு சிறைக் காவலருக்கு அனுப்பப்படுமானால் அது,

சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் வசனத்தின் முழு அர்த்தத்தின்படி சொல்ல வேண்டுமானால், சிறை காவலரின் அதிகாரத்திற்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டிருக்கிற, சிறைக் கம்பிகளுக்கு பின் இருப்பவர்களுக்கும் (முற்றத்தில் நடந்து கொண்டிருப்பவர்களுக்கும்) பொருந்தும் என்று நாங்கள் விளங்கிக் கொள்ளுகிறோம். அதுபோலதான் பெரிய சிறைக்காவலனான மரணமும் இருக்கிறது. அவன் லட்சக் கணக்கான சந்ததியினரை கல்லறைக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறான். இன்றும் லட்சக் கணக்கானோர் ஓர் அளவு சுதந்தரத்துடன் முற்றத்தில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உறுதியாக, பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளார்கள்; தவிப்போடும், வேதனையோடும் வேலைசெய்து கொண்டு, விடுதலைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மனுஷகுமாரனின் சத்தத்தைக் கேட்கும்படியாகவும், அதற்குக் கீழ்ப்படிவதினால் ஜீவனோடிருக்கும்படியாகவும் கல்லறை எனப்பட்ட சிறைச்சாலையின் எல்லைக்குள் சென்றிருக்கிறவர்கள் எப்படி வெளியே கொண்டுவரப்படுவார்கள் என்பதைக் குறித்த விவரங்களை ஆண்டவர் விளக்கமாக கூறவில்லை. (யோவா. 5:25) ஆகவே, எப்படிப்பட்ட முறை இருக்கும் என நாமாகவே தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க முடியாது. இந்த விஷயத்தைக் குறித்த விவரங்களை நாம் அறிந்துகொள்ளுவது அவசியம் இல்லை என்று தெரிகிறது. இருந்தாலும் அதைக்குறித்து யோசிப்பது அருமையாக இருக்கிறது. மேலும் இதன் முறையைக் குறித்துச் சற்று யோசிப்பது ஆண்டவருக்கு கோபமூட்டுவதாக இருக்காது என்று நாம் நம்பலாம். எங்களுடைய கருத்து ஏற்கனவே சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. (தொகுதி 4, அதி.13) அதாவது நன்மையைப் பெற்ற ஒவ்வொருவனும் அவன் அறிவிலும் அன்பிலும் வளரும் போது, மற்றவர்களுடைய ஆசீர்வாதத்திற்கு தன்னால் எவ்வளவு அதிகமாக ஒத்துழைக்க முடியுமோ அவ்வளவுக்கு ஒத்துழைக்க வாஞ்சையாக இருப்பான். விசேஷமாக தனக்கு நெருங்கிய உறவினர்களின் ஆசீர்வாதத்தில் வாஞ்சையாக இருப்பான். இந்த விஷயத்தில் ஆண்டவரிடம் செல்லுவதற்கு பொதுவான வழி ஜெபமும் ஆயத்தமும் தான். இதற்கு பதில் கிடைக்கும் பட்சத்தில் விழித்தெழுதல் நடைபெறும். அப்பொழுது உலகமானது வியாதிகள் போன்றவைகளில் உதவிக்கு இராஜரீக ஆசாரியர்களை அணுகும் என்று நாங்கள் யூகிக்கிறோம். யூதர்கள் மோசேயின் ஆசாரியத்துவத்தினிடம் முறையிட்டது இதற்கு

முன்மாதிரியாக இருக்கிறது. ஆகவே ஆசீர்வாதங்களுக்கு ஜெபம் தான் வழக்கமான வழியாக இருக்கும்.

அனாஸ்டாசிஸ்– மறுபடியும் நிற்குதல் அல்லது உயிர்த்தெழுதல்

வேதவாக்கியங்களில் ஒரு வாக்குத்தத்தமாக நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள வார்த்தையான உயிர்த்தெழுதல் என்பதின் உண்மையான அர்த்தம் பொதுவாக பார்க்கப்படாமல் இருக்கிறது. இதற்கு ஒரு காரணம், ஆங்கில வார்த்தையான resurrection பல்வேறு விதங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக ஒரு ஆடை அதிக காலமாக உபயோகிக்கப்படாமல் இருந்து அதை மறுபடியும் உபயோகத்திற்கு கொண்டு வரும்போது இந்த வார்த்தை (resurrection) உபயோகப் படுத்தப்படுவதை பார்ப்பது சாதாரணமானது. அதே மாதிரி ஒரு கல்லறைத் தோட்டம் பாழாகி இருக்கும் நிலையில், அங்கே புதைக்கப்பட்டுள்ள சடலங்களை வெளியில் எடுத்து மறுபடியும் புதைக்கும்போது இந்த வார்த்தை உபயோகிக்கப்படுகிறது. இந்த வார்த்தையின் சரியான அர்த்தத்தைப் பார்க்கும்படியாக நெருங்கி வருகையில், அனேக கிறிஸ்தவ மக்கள் லாசரு உயிரோடு எழுப்பப்பட்டது பற்றியும், நாயீன் ஊர் விதவையின் மகன் உயிரோடு எழுப்பப்பட்டது பற்றியும், யவீருவின் மகள் உயிரோடு எழுப்பப்பட்டது பற்றியும் பேசுகிறார்கள். இதே சிந்தனையைத்தான், ஆயிரம் வருட யுகத்தின் போது, அந்த காலை வேளையில், நடக்க வேண்டியது என்று வேத வாக்கியங்கள் கூறுகின்ற வாக்குத்தத்தங்களைக் குறித்து பேசும் போது தங்கள் மனதில் வைத்திருக்கிறார்கள். இந்த பெரிய பிழை இந்த முக்கியமான விஷயத்தைக் குறித்த சிந்தனையை அதிக மங்கலாக்கியிருக்கின்றது. லாசருவும், குறிப்பிடப்பட்ட மற்றவர்களும் உயிர்த்தெழுதல் பெறவில்லை. அவர்கள் எழுப்பப் பட்டார்கள், பழையபடி ஜீவன் பெற்றார்கள், அவ்வளவுதான். சாதாரணமாக எழுப்பப்படுவதற்கும், பூரணமான வாழ்க்கைக்கு மரணத்திலிருந்து உயிர்த்தெழுவதற்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. எழுப்புவது என்பது இயந்திரம் போன்று இயங்கிக் கொண்டிருக்கும் வாழ்க்கையை பழையபடி இன்னொரு முறை துவக்குவது, மறுபடியும் மூச்சு விடச் செய்வதாகும். இதுதான் லாசருவுக்கோ, நாயீன் ஊர் விதவையின் மகனுக்கோ, அல்லது யவீருவின்

மகளுக்கோ செய்யப்பட்டதாகும். அவர்கள் இன்றும் மரணம் என்கிற தண்டனைக்கு உட்பட்டு இருந்தார்கள், தற்போதுள்ள மரிக்கும் காலம் அவர்களுக்குச் சற்றுக் கூடுதலாக்கிக் கொடுக்கப்பட்டது. அவர்கள் மரணத்திலிருந்து பரிபூரண வாழ்வுக்குள் கொண்டு வரப்படவில்லை.

உயிர்த்தெழுதல் என்கிற வார்த்தை ஆங்கில புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறபடி அது கிரேக்க பதமான ''anastasis'' என்கிற பதத்திலிருந்து வருகிறது. ஒரே ஒரு இடத்தில் மாத்திரம் (மத். 27:53) அது கிரேக்க பதமான ''egersis'' என்பதிலிருந்து வருகிறது. (அது சரியானபடி மறுமலர்ச்சி அல்லது மறுபடியும் ஜீவன்பெறுதல் என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்க வேண்டும். ''anastasis'' என்கிற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 43 தடவை வருகிறது; அதன் அர்த்தம் மறுபடியும் நிற்பது அல்லது மறுபடியும் எழுப்புவது என்பதாகும். அது கல்லறையிலிருந்து ஒரு பிணத்தை நிற்கும் நிலைக்கு எழுப்புவதைக் குறித்தோ, அல்லது சாதாரணமாக பழைய நிலைக்குக் கொண்டு வருவதைக் குறித்தோ, அல்லது வாழ்க்கை எனும் இயந்திரத்தை மறுபடியும் முடுக்கி விடுவதைக் குறித்தோ ஒரு போதும் உபயோகிக்கப்படவில்லை. அது அதைக் காட்டிலும் முக்கியமானதைக் குறிக்கிறது. அது மரணத்திற்கு எதிர்மாறானதைக் குறிக்கிறது, மரணத்திலிருந்து திரும்பி எடுத்தலைக் குறிக்கிறது. ''anastasis'' என்கிற வார்த்தையின் அர்த்தத்தைக் குறித்து சரியான கருத்தைப் பெறுவதற்கு, திவ்விய கண்ணோட்டத்திலிருந்து ஜீவன் என்பதை எது அமைக்கிறது என்பதைக் குறித்து ஒரு சரியான பார்வை இருக்க வேண்டும். அதன் பிறகு மரித்தல், மரணம் என்பவைகளை எது அமைக்கிறது என்று காண வேண்டும். இந்த இரண்டு சிந்தனைகளையும் நம்முடைய மனதிற்கு முன்பாக வைத்து நாம் உயிர்த்தெழுதலின் கருத்தைப் புரிந்து கொள்ளலாம், அல்லது ஆதாமிலிருந்து நாம் இழந்தபோன பரிபூரண வாழ்வுக்குள், மரணத்திலிருந்து மறுபடியும் எழுப்பப்பட்டு கொண்டு வரப்படும் கருத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இரண்டே பேர்தான் ஜீவன் உள்ளவர்களாக இருந்தார்கள். முதலாவதாக, ஆதாம் மீறுதலுக்கு முன்பாக, அவன் தன்மேல் சாபத்தை அல்லது மரணம் என்னும் தண்டனையையும், அதன் விளைவான மரிக்கின்ற நிலையையும் கொண்டு வருவதற்கு முன்னதாக, அப்படி இருந்தான். இரண்டவதாக மனுஷனாகிய கிறிஸ்து இயேசு. ஆதாம் மேல்

மரண தண்டனை விதிக்கப்பட்ட வினாடியிலிருந்து, அவனுடைய ஜீவன் அவனிடத்தில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டது, மரிக்கிற நிலைமை துவங்கியது, இதற்கு மேலும் அவன் ஜீவனுக்குள் இல்லை. அவன் மரணத்திற்குள்ளாக அதிகமதிகமாக மூழ்கிக் கொண்டிருந்தான், கடைசியில் அவன் முற்றிலுமாக மரிக்கும் வரை. ஏனெனில் நியாயமானபடி தண்டனை கொடுக்கப்பட்ட வினாடியிலிருந்து அவன் மரித்துவிட்டான். ஆதாமின் சந்ததிக்கு ஒருபோதும் ஜீவன் இருந்ததில்லை. சில வருடங்கள் மினுக்குகின்ற பொறிகள் தேவனால் ஜீவனுடையவர் களாக அங்கீகரிக்கப்படவில்லை. ஏனெனில் மரண தண்டனை எல்லார் மேலும் உள்ளது, உலகத்தில் பிறந்தவர்கள் எவரும் வசனத்தின் முழு அர்த்தத்தின்படி ஜீவனை பெறாமல் ஒரு மரிக்கின்ற நிலைமையை பெறுகிறார்கள். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, நீதியின் கோணத் திலிருந்து பார்க்கும்போது முழு உலகமும் ஏற்கனவே மரித்திருக்கிறது. ஜீவன் உள்ளவர்கள் என்று தேவன் ஏற்றுக்கொள்ளுவது (எண்ணப் படுவது) தேவனுடைய குமாரனிடத்தில், மனுக்குலத்தின் மீட்பரிடத்தில், ஜீவனை கொடுப்பவரிடத்தில் ஐக்கியப்பட்டுள்ளவர்களை மாத்திரமே.

எது ஜீவனை அமைக்கிறது, எது மரணத்தை உண்டாக்குகிறது என்கிற இந்த சிந்தனையை மனதில் வைக்க வேண்டும்; எவ்வளவு மகிமையின் சிகரத்திலிருந்து, பரிபூரண வாழ்விலிருந்து மனிதன் தற்போதுள்ள இழிவு, மரணம் என்கிற நிலைமைக்குள் விழுந்தான் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்; அப்போழுதுதான், அப்பொழுது மாத்திரமே ‘‘anastasis’’ என்ற இந்த வார்த்தையின் அர்த்தம் வீழ்ச்சி ஏற்பட்ட நிலைமைக்கு திரும்பவும் எழுப்பப்படுவதை, மறுபடியும் நிற்பதைக் குறிக்கிறது என்று சரியாக புரிந்து கொள்ள முடியும். அதாவது தகப்பனாகிய ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட பூரண நிலைமைக்கு திரும்பவும் எழுப்பப்படுவது என்று பொருள்படும். மானிட உலகில் விருப்பம் உள்ள அனைவரையும் கிறிஸ்து மூலமாக தேவன் பூரணமான நிலைக்கு கொண்டுவர உத்தேசிக்கிறார். நிபந்தனை என்னவெனில், சத்தியத்தை அறிகிற அறிவுக்குள் அவர்கள் கொண்டு வரப்படும்போது, அவர்கள் திவ்விய நன்மையை ஏற்றுக்கொண்டு, அதன்படி திவ்விய பிரமாணத்தின் ஆவிக்கு கீழ்ப்படிவதன் மூலமாக தங்கள் விசுவாசத்தைக் காட்ட வேண்டும்.

‘‘anastasis’’ என்ற இந்த வார்த்தை மரித்தவர்களுக்கு மறுபடியும் புத்துயிர் அளித்தல் சம்பந்தமாக ஒருபோதும் உபயோகப்படுத்தப்

படவில்லை. வேதாகமத்தில் இந்த வார்த்தையான ‘‘anastasis’’ 43 வேதாகம பகுதிகளில் வருவதை கவனமாக ஆராய்ந்து பார்க்கும்போது, இங்கே அந்த வார்த்தைக்கு கொடுக்கப்பட்ட அர்த்தத்திற்கு முற்றிலும் ஒத்து வருவதைக் காணலாம். அதாவது மறுபடியும் நிற்பது, மரணத்திலிருந்து மறுபடியும் பெறப்படுவது, பரிபூரண வாழ்க்கைக்குள் மறுபடியும் பிரவேசிப்பது என்பவைகளாகும். 43ல் ஒரு பகுதி மட்டும் மங்கலாக தெரிகிறது என்று சிலரால் எண்ணப்படலாம். இது எபி. 11:35ல் காணப்படுகிறது. இங்கே ‘‘anastasis’’ என்கிற வார்த்தை ‘‘உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்’’ என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. முழு அறிக்கையும் கூறுகிறதாவது: ‘‘ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்.’’ இந்த வார்த்தையைக் குறித்த பொதுவான எண்ணம் என்னவெனில், தீர்க்கதரிசிகள் எலியா, எலிசா ஆகிய இருவரும் இரண்டு ஸ்திரீகளின் மகன்களின் ஜீவனை திரும்பி வரும்படி செய்ததை அப்போஸ்தலர் இங்கு குறிப்பிடுகிறார் என்பதாகும். (1 இராஜா. 17:17–23; 2 இராஜா. 4:18–37) இந்தக் கருத்திலிருந்து கீழ்க்கண்ட காரணங்களுக்காக நாங்கள் வேறுபடுகிறோம்.

1) இது ‘‘anastasis’’ என்கிற வார்த்தையின் அர்த்தத்தோடு ஒத்ததாக இல்லை; இந்த வார்த்தை புதிய எற்பாட்டில் 42 இடங்களில் உபயோகிக்கப்பட்ட இடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஒத்ததாக இல்லை.

2) ஏனென்றால் இப்படி பொருள்கொள்ளுதல் அப்போஸ்தலர் எபி. 11ல் கூறிய விவாதத்தோடு அந்த அளவுக்கு ஒத்து வருவதாக இருக்காது. இங்கே கூறப்பட்டுள்ள விவாதம் என்னவென்றால் தேவனுக்குள் இருந்த ஆதியில் மேன்மைபெற்றோரின் விசுவாசம், 40வது வசனத்தில் கூறப்பட்டதுபோல, எதிர்காலத்தில் வரும் உயிர்த்தெழுதலில் சபை மகிமையடைந்த பின்னர் பலன் பெறவேண்டும்.‘‘மேன்மையான உயிர்த்தெழுதலுக்கு’’ அவர்கள் எதிர்பார்த்து இருந்திருக்கலாம், அதுதான் அவர்களது விசுவாசத்தை அமைத்தது, 39வது வசனத்தின்படி அது இன்னும் எதிர்காலத்தில்தான் நிறைவேறும். அது இப்படியாக காட்டப்பட்டுள்ளது: அவர்கள் ‘‘வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள்.’’ அவர்கள் பலனைப் பெறவில்லை. ஆகவே, அது அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாக்குத்தத்தம் கிடையாது,

அவர்களில் நித்திரை செய்துகொண்டிருப்ப வர்கள் எழுப்பப்படுவதும் அவர்களுடைய பலன் அல்ல. கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுயேல் என்பவர்களையும் தீர்க்கதரிசிகளையும் குறித்து அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அவர்கள் ஆண்டவரின் வல்லமையின்படி, அவர்களுடைய விசுவாசத்தின்படி அற்புதமான காரியங்களைச் செய்தார்கள்; அவர்கள் ஆபத்துக்குட்பட்டு, அநேக வேளைகளில் ஆண்டவரின் ஊழியத்தில் தங்களுடைய ஜீவனையே பலியாகக் கொடுத்தார்கள். இந்த விஷயத்தில் ஸ்திரீகளுக்கு அதிகமான தருணங்கள் இல்லாமல் இருந்தது. ஆனாலும் அப்போஸ்தலர்கள் நாம் அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புவது என்னவென்றால் இஸ்ரயேலில் மனைவிகளும், தாய்மார்களும், குமாரத்திகளும் ஆண்டவர்மேல் வைத்த விசுவாசம் அவ்வளவாக இருந்தபடியால், இந்த யுத்தங்களிலும், பலிசெலுத்துவதிலும் ஈடுபட்டிருந்த மனிதர்களுக்காக இரக்கம் காட்டவும், அவர்களோடு ஒத்துழைக்கவும் வழி காட்டியது. அவர்கள் தங்களுடைய புருஷர்களோடும், பிள்ளைகளோடும் தகப்பன்மார்களோடும் இவைகளில் பங்கு பெற்றார்கள், அவர்களை விசுவாசத்திற்கு நேராக உற்சாகப்படுத்தியதால், விசுவாச பலிகளில் பங்குள்ளவர் களானார்கள். மேலும் எதிர்காலத்திற்குள் உற்றுப்பார்த்து, ஆண்டவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களுக்கு இறுதியில் ஒரு மேலான உயிர்த்தெழுதல் வரும் என்பதை உணர்ந்தார்கள். விசுவாசக்கண்களால் எதிர்காலத்திற்குள் பார்த்து, அவர்கள் விசுவாசத்தினால் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடே எழுந்திருக்கப் பெற்றார்கள், அல்லது ''உயிர்த்தெழுதல் மூலமாக'' பெற்றார்கள். ஆபிரகாமின் விசுவாசம், அவனுடைய குமாரன் ஈசாக்கை கொடுக்க விருப்பமாயிருந்ததால், அது தேவனுக்கு ஏற்புடையதாக இருந்தது என்பதை யார் மறுக்க முடியும்? இஸ்ரயேலின் மனைவிகள், தாய்மார்கள், குமாரத்திகள் ஆகியோரின் விசுவாசம், அவர்களுடைய ஆண்களோடு அவர்களுடைய பாடுகள், யுத்தங்கள், சகிப்புத்தன்மை ஆகியவைகளோடு ஒன்றாக இணைந்திருந்தது என்றால், அதுவும் ஆண்டவருக்கு பிரியமானதாக இருந்திருந்திருக்கும் என்பதை யார்தான் மறுக்க முடியும்? மேலும், அவர்களுக்கு ஆண்களுக்குரிய பலம் இருந்திருந்தால் அவர்களும் யுத்தத்தில் வல்லவர்களாக இருந்திருப்பார்கள், மேலும் கொடூரமான பரிகாசங்களில், அடிகளில், கட்டுகளில், சிறைவாசம் போன்றவைகளில், அவைகளின் சோதனைகளில் உண்மையுள்ளவர்களாய் இருந்திருப்பார்கள் என்பதை

யார்தான் மறுக்க முடியும்? இப்படிப்பட்ட ஸ்திரீகள் (அப்போஸ்தலர் குறிப்பிட்ட ஆண்களை விட எண்ணிக்கையில் ஒரு வேளை குறைவாக இருந்திருக்கலாம்) கூட ஆண்டவரால் கொடுக்கப்பட்ட, இந்த ஆதிகாலத்து மேன்மையுள்ளவர்களின் மேலான உயிர்த்தெழுதலில் ஒரு பங்கு பெறுவார்கள்.

''anastasis'' என்கிற வார்த்தை மறுபடியும் எழும்புவதைக் குறிக்கும் வேளையில், அது அந்த செயல் முறையை, அதை உடனடியாக, அல்லது படிப்படியாக என்று இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்துவதில்லை. நாம் பார்க்கப் போனால், நம்முடைய ஆண்டவருடைய உயிர்த்தெழுதல், மரணத்திலிருந்து, பரிபூரண வாழ்க்கைக்கு உடனடியாக வந்தது என்று காண்கிறோம். ஆனால் உலகமோ, பொதுவாக ஒரு படிப்படியான உயிர்த்தெழுதலுக்காக, அல்லது இளைப்பாறுதலின் காலங்களின் வேலைக்காக நியமிக்கப்பட்ட ஆயிரம் வருடத்தின் ஒரு பெரும் பகுதியை எடுத்துக் கொள்ளும். மேலும், எழுப்பப்பட்டவர்களின் சுபாவத்தை ''anastasis'' மாற்றுவதில்லை என்பதோடு, எழுப்பப்பட்டவர்களின் சுபாவம் அவர்கள் மரிக்கும் போது எப்படி இருந்ததோ அதே போன்று இருக்கும். இந்த விஷயத்தைக் குறித்து அப்போஸ்தலர், விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மகிமையையே கொடுக்கிறார், உயிர்த்தெழுதலின் போது இதன்படி ஆண்டவர் செய்கிறார் என்று நமக்கு உறுதிபடக் கூறுகிறார். (1 கொரி. 15:35–38) ஒரு மனுஷன் மரணத்திற்குள்ளாக செல்லும் போது உயிர்த்தெழுதலின் செயல் முறை, ''anastasis'' என்ற வார்த்தையின் அர்த்தத்தின்படி அவனுடைய சுபாவத்தை மாற்றாது. அது எளிய முறையில் குறிப்பிடுவது என்ன வெனில் மரணத்தில் இருக்கிறவன், அவனேதான் மறுபடியும் ஜீவனுக்குள் எழுந்துநிற்கும்படி செய்யப்படுகிறான் என்பதாகும்.

இங்கே நாம் பார்க்கும் போது வேதாகமத்தின் போதனையில் ஒரு இசைவு, ஒரு ஒற்றுமை இருப்பதைக் கீழ்க்கண்டவாறு காண்கிறோம்.

1) நம்முடைய ஆண்டவராகிய இயேசு பிதாவின் மகிமையை விட்டு, நம்முடைய சுபாவத்தை எடுத்து மனிதனான போது அவருடைய சுபாவத்தை மாற்றினார்.

2) அவர் தன்னை ஒரு மனிதனாக, பலியாக ஈந்த போது அவருடைய சுபாவத்தை மறுபடியும் மாற்றினார், அவர் 30 வது வயதில் ஞானஸ்நானம்

பெற்றபோது ஒரு புது சிருஷ்டியாக பிறந்தார். இந்த புது சிருஷ்டிதான், இனிமேலும் பூமிக்குரியதல்ல, பரலோகத்துக்குரியது, மூன்றாவது நாளில் உயிரோடு எழுப்பப்பட்டது; பிதாவின் விருப்பப்படி ஒரு ஆவிக்குரிய சரீரத்தை, ஒரு தகுதியுள்ள சரீரத்தைப் பெற்றது. அவர் இதற்கு முன்பாக பிறந்திருந்த அதே பரிபூரண ஜீவனுக்கு மரணத்திலிருந்து முற்றிலுமாக எழுப்பப்பட்டார். அதே போன்று, சபையாகிய புதுசிருஷ்டி, தலையாக இருக்கிற அவளுடைய ஆண்டவரோடு ஐக்கியம்பெற்று அவருக்கு கீழாக இருந்து, இதே உயிர்த்தெழுதலில் பங்கு பெற உள்ளது. ஏனெனில், அவர்கள் அவருடைய சரீரத்தின் அங்கங்கள் என்று கருதப்படுகிறார்கள், அவர்கள் அவருடைய உயிர்தெழுதலில் அதாவது முதலாம் (பிரதான, முக்கியமான) உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அவர்களும் கூட மறுபடியும் பிறந்தவர்கள், புது சிருஷ்டிகளாக ஆவியினால் பிறந்தவர்கள், ஆகவே அவர்களுடைய உயிர்த்தெழுதலும் வித்தியாசமானது.

ஒரு புது சிருஷ்டியாகாத, புது சிருஷ்டியாக மறுபடியும் பிறக்கிற அனுபவம் இல்லாத ஒரு மனிதன் ஜென்ம சுபாவமுள்ள மனிதனாகவே இருப்பான். அவனுடைய ''anastasis'' அல்லது மறுபடியும் எழுந்து நிற்பது, ஜென்ம சுபாவ பரிபூரணமான நிலைக்கு, மனிதனாக இருக்கையில் அவன் உயர்த்தப்படுவது என்ற அர்த்தத்தைக் கொடுக்கும். ஆதாமில் முன்பு இருந்த பரிபூரண நிலையிலிருந்து முழு சந்ததியும் விழுந்தது. ஆதிகாலத்து மேன்மையுள்ளவர்கள் எதிர்பார்த்திருந்த ''மேலான உயிர்த்தெழுதல்'' முதலாம் உயிர்த்தெழுதலாக இருக்காது, அது சுவிசேஷ யுகத்தின்போது –கிறிஸ்து தலையாகவும் அவருடைய சபை சரீரமாகவும் – அழைக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே என்று நமக்கு அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த ஆதிகாலத்து மேன்மை பெற்றோர் பெறுகிற ''மேலான உயிர்த்தெழுதல்,'' அவர்களோடு இருந்த மானிடர்கள் பெறுவதைவிட உயர்வானதாக இருக்கும்; மேலும், ஆயிரவருட யுகத்தின்போது, அதன் ஆரம்பத்தில் ''நியாயத்தீர்ப்புகள்'' மூலமாக வருகிற படிப்படியான உயிர்த்தெழுதலைவிட இது மேலான, உடனடியாக மனுஷனின் பரிபூரண நிலைக்கு கொண்டுவருகிற ஓர் உயிர்த்தெழுதலாக இருக்கும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இது அவர்களை கிறிஸ்துவின் கனத்துக்குரிய ஊழியக்காரர்களாக இருக்கவும், ஆயிரவருடத்தின் போது இராஜ்யத்தின் ஊழியக்காரர்களாக இருக்கவும், மேலும் பரிபூரண மனிதர்களாக ''பூமியெங்கும் பிரபுக்களாக''

(முதன்மையானவர்கள்) இருக்கவும் அனுமதிக்கும். (சங். 45:16) இவர்கள், மனிதர்களால் காணக் கூடாத ஆவிக்குரிய கிறிஸ்துவுக்கு பிரதிநிதிகளாக, காரியஸ்தர்களாக இருந்துகொண்டு இராஜ்யத்தின் பிரமாணங்களை நிர்வகிக்கும் சிலாக்கியத்தை பெற்றிருப்பார்கள். அவர்களோடு உள்ளவர்களை (திரள்கூட்டம், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறு பவர்களாக, அதன் மகிமையிலும், கனத்திலும், சாவாமையிலும் பங்குள்ளவர்கள் என்று எண்ணப்பட முடியாவிட்டாலும், இல்லை யெனினும், அதிகாலத்து மேன்மை பெற்றோரோடு எண்ணப்பட விட்டாலும், ஜெயம் கொண்டவர்கள் என்று எண்ணப்பட வேண்டும். ஜெயங்கொள்ளுவது என்பது மகா உபத்திரவத்தின் ஊடாக இருந்தாலும் கூட அவர்கள் ஜெயம் கொண்டவர்களாக, மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து வந்தவர்கள் என்று எண்ணப்பட வேண்டும்; ஆகவே, உலகத்தாருக்கு உள்ளது போல, அவர்களுடைய சோதனை எதிர்காலத்தில் உள்ளது; உலகத்தாருக்குள்ளது போன்று படிப்படியாக வருவதாக இருக்காது; ஆனால் அவர்கள் உடனடியாக வருகிற ஒரு உயிர்த்தெழுதலுக்கு உட்பட வேண்டும்) காட்டிலும், அவர்களுடைய ஆசீர்வாதம் இரண்டு மடங்காக இருக்கும். முதலாவதாக, அவர்களுடைய சோதனை கடந்த காலத்தில் முடிவடைந்துவிட்டது. அவர்களுடைய பலனாகிய பூரணத்துவம் உடனடியாக இருக்கும். இந்த காரணத்தினால், மற்றவர்களை விட கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள் அனுகூலம் கிடைக்கும். இரண்டாவதாக தேவனுடைய ஏற்பாட்டில், இது அவர்களை மகா பெரிய வேலையாகிய திரும்பப்பெறுதலிலும் ஆசீர்வாதத்திலும் இராஜ்யத்தின் பூமிக்குரிய அம்சத்தில் பங்குபெறவும், மனுக்குலத்தின் பிரதிநிதிகளாக, அல்லது கிறிஸ்து அதிகமாக கிரியை செய்கின்ற வாய்க்கால்களாக இருக்கவும் அனுமதிக்கும்.

பொதுவாக உலகத்தின் அனாஸ்டஸிஸ் (''anastasis'') ஒவ்வொரு தனி நபரைச் சார்ந்து இருக்கும், பரிசுத்த ''பெரும்பாதையில்'' அவனுடைய சொந்த முன்னேற்றத்தைப் பொறுத்துதான் இருக்கும். (தொகுதி1, அத்தி. 11) ஆண்டவர் விளக்கமாக கூறியபடி, ''பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்..... எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.'' எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள் என்பது இதற்கு முன்பாக நியாயத்தீர்ப்போ அல்லது சோதனையோ வெற்றிகரமாக நடக்கப் பெறாமல் இருப்பவர்கள் எழுப்பப்படுவதைக் குறிக்கும். மேலும் இந்த சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொண்டவர்கள் மாத்திரமே முதலாம் உயிர்த்தெழுதலுக்கு வருவார்கள்; கடந்த யுகங்களின் ஜெயங்

கொண்டவர்கள் (முற்பிதாக்கள்) ஒரு மேன்மையான உயிர்த்தெழுதலுக்கு ஜென்ம சரீரத்தில் வருவார்கள்; உலகத்தில் எஞ்சியிருப்பவர்கள் ஆண்டவர் கூறியுள்ளபடி ஒரு நியாயத்தீர்ப்பின் உயிர்த்தெழுதலுக்கு வருவார்கள். யோவா. 5:29. (''ஆக்கினை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாக'' என்று நம்முடைய பொதுவான மொழிபெயர்ப்பில் கொடுக்கப்பட்டிருப்பது, ஒரு பெரிய தவறாகும். இந்த தவறு, இந்தப் பகுதியின் உண்மையான அர்த்தத்தை அநேகருடைய மனங்களில் மங்கலாக தெரிய உதவி செய்துள்ளது. இதனால், சிலர் ஆக்கினைக்குள்ளாக்கப் படும்படி உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்று சிலர் சிந்திக்க முற்படுகிறார்கள். இது உண்மைக்கு மிகவும் மாறானது. இது ''krisis'' என்கிற கிரேக்க பதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது அதே அதிகாரத்தில் நியாயத்தீர்ப்பு என்று பலமுறை சரியாக கொடுக்கப் பட்டுள்ளது. இந்த இடத்திலும் இது திருத்திய மொழிபெயர்ப்புகளில் உள்ளதுபோல நியாயத்தீர்ப்பு என்றே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.)

யோவான் 5:25 ல் நம்முடைய ஆண்டவர், மரணத்திலிருந்து ஜீவனுக்கு வருவது எப்படி என்பதைப் பற்றிக் கூறுகிறதாவது: ''மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' திவ்விய கருத்தின்படி முழு உலகமும் மரித்துள்ளது என்பதை மனதில் வைத்துப்பார்க்கும் போது, அப்போஸ்தலர்களும், ஆதி சபையும் இந்த மரித்த உலகத்திலிருந்துதான் அழைக்கப்பட்டார்கள் என்பதையும், அதன் அங்கங்களாக இருந்து தேவனுடைய குமாரனிடமிருந்து ஜீவ வார்த்தையை கேட்கும்படி அவர்களுக்கு தருணங்கள் கொடுக்கப்பட்டன என்பதையும் பார்க்கிறோம். எந்த அளவுக்கு அதிகமாக செவி கொடுத்தார்களோ, அந்த அளவுக்கு ஜீவனை கொடுக்கிறவருடன் ஒரு மிக நெருங்கிய உறவுக்குள் வந்தனர்; மேலும், அந்த நாளிலிருந்து இன்று வரை அவரோடு ஒன்றாக ஆன அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்டிருக்கிறார்கள் (கீழ்ப்படிந்திருக்கிறார்கள்), அவருடைய செய்திகளை கேட்டிருக் கிறார்கள்; அந்த அளவின்படியே அவருடைய அனுக்கிரகத்திற்குள் வருவார்கள், அவருடைய பலன்களில் பங்கு பெறுவார்கள். வருகிற யுகத்திற்கும் இதே செய்முறைதான் இருக்கும். ''பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.'' ''இனி ஒருவனும் தன் அயலானையும் தன் சகோதரனையும் நோக்கி கர்த்தரை அறிந்து கொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன்மட்டும்

எல்லாரும் அவரை அறிந்துகொள்வார்கள்.'' ''பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் வெளியே வருவார்கள்.'' தேவகுமாரனின் சத்தத்தைக் கேட்கும்படியாக எழுப்பப்படுவார்கள்; ''அதைக் கேட்கிறவார்கள் (கீழ்ப்படிகிறவர்கள்) பிழைப்பார்கள்.''

தற்போதுள்ள சுவிசேஷ சபையைப் பொறுத்த வரையில் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பது, படிப்படியான, கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமுமாக இருக்கிறது. ஆயிர வருட யூகத்தின் போது உலகத்தாரிடமும் இப்படியே இருக்கும். கீழ்ப்படிகிறவர்கள், திவ்விய அன்பு, நீதி ஆகியவற்றின் நீளம், அகலம், உயரம், ஆழம் என்பவைகளை உயர்வாய் எண்ணும்படியாகப் படிப்படியாக நெருங்கி வருவார்கள். ஆனால், அந்த பெரிய போதகரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்கள், இப்பொழுது அவருடைய வார்த்தையைப் பின்பற்றி வருபவர்களைப் போன்று அப்பொழுது உபத்திரவங்களையும், எதிர்ப்புகளையும் சந்திக்க மாட்டார்கள்; ஏனெனில், அப்பொழுது சாத்தான் கட்டப்பட்டிருப்பான். மேலும், இராஜ்யத்தின் பிரமாணங்கள் நடை முறையில் இருக்கும்; நீதியோடு ஒரு மனப்பட்டு இருக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு, உயர்த்தப்படுவார்கள்; இராஜ்யத்திற்கு எதிராக சண்டை போடுகிறவர்களும், எந்த குறிப்பிட்ட விதத்திலாவது அதை எதிர்க்கிறவர்களும் ஒரு நியாயமான சோதனைக்குப் பின், தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறவர்கள் என்று எண்ணப்பட்டு ஜனத்திலிராதபடி நிர்மூலமாக்கப்படுவார்கள். அப். 3:23; ஏசா. 65:20.

அப்படியானால், மரித்தவர்கள் பொதுவாக எழும்புவதைக் குறித்த நம்முடைய ஆண்டவரின் அறிக்கை, ஒரு பெரிய ஆசீர்வாதத்தை, அவருடைய மீட்பின் வேலையின் கனியைக் குறிக்கிறது என்று நாம் காண்கிறோம். நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக இருப்பார்கள் என்று காண்கிறோம். அதாவது முழுமையாக ஜீவனோடு எழும்புகிறவர்கள் யார் என்று பார்க்கும்போது அது ஜெயங்கொள்ளுகிற வகுப்பினர்களாகிய சபை, முற்பிதாக்கள், திரள் கூட்டம் ஆகியோரைத்தைத்தான் குறிக்கக் கூடும். இவர்கள் மாத்திரமே நன்மை செய்தவர்களாக சொல்லப்பட முடியும், ஆண்டவரின் கருத்தின்படி நன்றாக செய்தவர்கள், திவ்விய ஆமோதிப்பைப் பெற்றவர்கள் ஆவார்கள். ''நன்மை செய்தவர்கள்'' என்று கூறும் போது,

திவ்விய நிர்ணயத்தின்படி, சிந்தனையிலும், வார்த்தையிலும், செயலிலும் பூரணமாக நன்மை செய்தவர்கள் என்று பொருள் கொள்ளக்கூடாது. ஏனெனில், அப்போஸ்தலர் இந்த குறிப்புகளில் விளக்கமாக கூறும்போது, ''நீதிமான் ஒருவனாகிலும் இல்லை'' என்று உறுதிபடக் கூறுகிறார். நீதியை நெருங்கிச் செல்லுவது என்பது, நம்மில் யாருக்காவது முடியும் என்றால், அது இருதயத்தில் சுத்தமாக இருப்பதுதான்– நோக்கத்தில் நீதியுடன் இருப்பதுதான்.

உலகத்தில் மிஞ்சியுள்ள அனைவரும் – தேவனால் ஏற்றுக் கொள்ளப்படாதவர்கள் ''தீமை செய்தவர்கள்'' என்கிற வார்த்தையில் ஒன்றாக சேர்க்கப் பட்டுள்ளார்கள். இவர்களில் அஞ்ஞானிகளும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஏனெனில், அவர்கள் பெரிய இரட்சகரை அறியவில்லை, ஆகவே பிதாவை அவர் மூலம் நெருங்க சிலாக்கியம் பெற்றிருக்கவில்லை. அது மாத்திரமல்ல, அதே வேளையில் இயேசுவைப் பற்றிக் கொஞ்சம் கேள்விபட்டவர்கள் கூட இதில் அடங்குவார்கள்; அது மாத்திரமல்ல அவருடைய ஒப்புரவாக்குதலின் வேலையைப் பற்றி ஏதோ கொஞ்சம் புரிந்து கொண்டவர்கள், இன்னும் பல்வேறு வழிகளில் இந்த அறிவைப் பெற்றவர்கள், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சிலாக்கியங் களுக்கும், தருணங்களுக்கும் பதில் கொடுக்காதவர்கள், முழுவதுமாக, முற்றிலுமாக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளதவர்கள் ஆகிய அனைவரும் இதில் அடங்குவர். திவ்விய கருத்தின்படி, இவர்களெல்லாம் ''தீமை செய்தவர்கள்,'' தேவனால் ஏற்றுக்கொள்ளப்படாதவர்கள் ஆவர்.

இந்த வகுப்பினரில் மனிதர்களுக்குள் உயர்வாக எண்ணப் பட்டவர்களும், பேர் சபை முறைமைகளுக்கு உள்ளேயும், வெளியேயும் இருப்பவர்களும், கனவான்களும், ஞானிகளும், பணக்காரர்கள், மேன்மையானவர்கள், கற்றறிந்தவர்கள் என்றுள்ளவர்களில் அநேகரும் இதில் அடங்குவர் என்பது உடனடியாக தெரிய வருகிறது. அப்பொழுது ஆண்டவர் இவர்களும் எழும்புவதற்காக ஏற்பாடு செய்துள்ளார் என்பதை காணும்போது நம்முடைய இருதயங்கள் களி கூறும். அவர்கள் ஜீவனை பெற்றுக்கொள்ளம்படியான உயிர்த்தெழுதலுக்கு வராவிட்டாலும், ஆயிர வருட யுகத்தில் நியாயத்தீர்ப்பின்படியான படிப்படியான உயிர்த் தெழுதலில் பங்கு பெறும்படியாக உள்ளான தருணத்திற்காக வெளியே வருவார்கள். அவர்கள் தேவனுடைய வசனம் சுட்டிக்காட்டியபடி,

இப்படியான அனுகூலமான நிலைமைகளில் அவர்கள் பரீட்சைக்கு நிற்கலாம்.

அவர்கள் தேவகுமாரனின் சத்தத்தைக் கேட்பார்கள்; ஆனால் உலகம் மற்றும் கிறிஸ்தவ உலகில் உள்ள வித்தியாசமான சபைப் பிரிவுகளின் பிதற்றலான முரண்பாடான சமயக் கோட்பாடுகளோ அங்கே கேட்கப்படுவதில்லை. அது சுத்தமான பாஷையாக அல்லது சுத்தமான செய்தியாக அவர்களுக்கு கொடுக்கப்படும். (செப். 3:9) அவர்களுடைய குருடான கண்கள் திறக்கப்படும்; அவர்களுடைய கேட்காத செவிகள் திறக்கப்படும்; அவர்கள் கேட்பார்கள்; அவர்கள் அறிந்து கொள்ளுவார்கள்; அவர்கள் சந்தோஷமான செய்தியைக் கேட்டு பலன் அடையாவிட்டால், ஜீவனைக் கொடுக்கிறவரான கிறிஸ்து மூலம் தேவன் அவர்களுக்கு கொடுத்த நன்மைகளைப் பற்றிக்கொள்ளாவிட்டால், அது முற்றிலும் அவர்களுடைய தவறாக இருக்கும். அவர்கள் இப்படி படிப்படியாக, அங்குலம் அங்குலமாக, தங்களுடைய மனம், நன்னெறி, சரீரத்தின் பெலகீனம் ஆகியவைகள் மீதும், பூரணமற்ற நிலைமைகள் மீதும் வெற்றிகளை சம்பாதிக்கிறார்கள்; அவர்களுடைய நியாயத்தீர்ப்பின் காலம் முடிவதற்குள் வெற்றிகளை சம்பாதித்து ஜீவனுக்குரிய, பரிபூரணத் திற்குரிய நிலைமைக்கு வந்திருப்பார்கள். அதாவது ஆதாமுக்குள் இழந்த எல்லாவற்றிலுமிருந்தும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்ட நிலைமையை அடைந்திருப்பார்கள்.

கடந்த கால பாவங்களுக்கு ஒரு நியாயத்தீர்ப்போ அல்லது தண்டனையோ அல்ல; ஆனால் ஜீவனுக்கான இன்னொரு சோதனை

அப்போது சோதனைகளும், பரீட்சைகளும் தற்காலத்தில் உலகத்தின் மேல் பொதுவாக இருக்கக்கூடியது போன்று இருக்காது என்பதையும், குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் சோதனை போன்று இருக்காது என்பதையும், குற்றவாளி பிழை செய்திருக்கிறாரா இல்லையா என்பதைப் பார்க்க நீதி மன்றங்களும், ஜீரிகளும் சாட்சியை அலசிப்பார்த்து, அவர்கள் குற்றவாளிகளா இல்லையா, அப்படியானால் என்ன தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்பது போன்று இருக்காது என்பதையும் நாம் நினைவு கூற வேண்டும். நம்முடைய இனத்தின்

குற்றத்தைக் குறித்து கேள்வியே கிடையாது, மேலும் மனிதன் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை என்ற குற்றம் உள்ளவனாக இருக்கிறானா என்று பார்ப்பதற்கு, அல்லது தேவன் கொடுத்த மரணதண்டனை நியாயமானதா என்பதைப் பார்ப்பதற்கு சோதனையே, நியாயத்தீர்ப்போ நடத்துவதற்கான உத்தேசம் கிடையாது.

நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை, ஆயிர வருட யுகத்தில் முற்றிலும் வித்தியாசமான முறையில் இருக்கும். அது அனேகமாக ஒரு குழந்தை பெற்றோர்களால் நடத்தப்படுவதைப் போன்று இருக்கும். பெற்றோர் குழந்தையை விசாரித்து குற்றம் செய்துள்ளது என்று கண்டு அடிக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்து, அந்த தண்டனையும் செலுத்தப்பட்ட பின்பு, அந்த குழந்தையிடம் பெற்றோர் ''இப்பொழுது உன் குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறாயா!'' ''நீ பெற்றுக் கொண்ட தண்டனை சரியானது என்று ஒத்துக் கொள்ளுகிறாயா'' என்று கேட்கலாம். உடன்பாடான ஒரு பதிலைக் பெற்ற பின்னர், பெற்றோர் அதனைப் பார்த்து, ''நான் பார்க்கிறேன்! இன்றைக்கு நான் தீர்மானிப்பேன், அல்லது இன்றைக்கு நான் உன்னை சோதித்துப் பார்ப்பேன், மேலும் நீ உண்மையாகவே மனஸ்தாபப்படுகிறாய், உண்மையாகவே நீ என் சித்தப்படி செய்ய விரும்புகிறாய் என்று நான் கண்டால், சாயங்கால வேளையில் நான் உன்னை முழு ஐக்கியத்திற்கு கொண்டு வருவேன், மீறுதலுக்கு முன்பு உனக்கிருந்த சிலாக்கியங்களையும் உனக்குத் தருவேன்'' என்று சொல்லலாம். அடுத்த யுகத்தின் நியாயத்தீர்ப்பு அல்லது சோதனை இப்படியாகத்தான் இருக்கிறது. அதாவது, குற்றம் நிறைந்த உலகத்தில் எந்த அங்கங்கள், பாவத்தின் சம்பளமான மரணத்தை 6000 வருடங்களாக அனுபவித்து விட்டு தவிப்பினாலும், பிரசவ வேதனையோடும், அதிகமான பாவத்தினால் உண்டான பாவ உணர்வை அனுபவித்து, அதனிமித்தம் பாடங்களை கற்றுக்கொண்டு, நீதியினிமித்தம் வருகிற பெரிய ஆசீர்வாதங்களைக் குறித்து அறிந்து, எல்லா விஷயங்களிலும் தேவனுடைய சிந்தத்திற்கு ஒத்து வர விருப்பப்படுகிறார்கள் என்பதை தீர்மானிப்பதாக இருக்கும்.

ஆரம்பத்திலிருந்தே கீழ்ப்படிதல் நடைமுறைப்படுத்தப்படும்; முன்னேற்றம் காண உறுதியாக மறுக்கிறவர்கள் மாத்திரம், நூறு வருட சோதனைக்குப் பிறகும்கூட நிர்மூலமாக்கப்படுவார்கள். வெளிப் படையான முன்னேற்றம் காட்டுகிறவர்கள் கூட, இராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு வெளிப்படையாக இணங்குகிறவர்கள் கூட தொடர்ந்து

செல்ல அனுமதிக்கப்படுவார்கள்; மேலும், கிருபையிலும் அறிவிலும் அன்பிலும் வளரும்படியாக சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவார்கள். ஆனால் ஆயிர வருட யுகத்தின் இறுதியில் மிக முக்கியமான ஒரு பரீட்சை வரும், அவர்களுடைய வெளிப்புற நடத்தையைப் பற்றி அல்ல, அது நன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும், இல்லையென்றால் இதற்கு முன்பாகவே இரண்டாம் மரணத்தில் நிர்மூலமாக்கப்பட்டிருப்பார்கள். கடைசி பரீட்சை நீதியின் கொள்கைகளுக்கு அவர்கள் இருதயத்தில் காணப்படுகிற பயபக்தியைக் குறித்து இருக்கும். எல்லாரும் இந்த விஷயத்தில் பரீட்சிக்கப்படுவார்கள். ஆண்டவருக்கு முழு விசுவாசத்துடனும், கீழ்ப்படிதலுடனும் இல்லாதவர்கள் இரண்டாம் மரணத்தில் நிர்மூலமாக்கப்படுவார்கள்; திவ்விய நன்மைகளை அனுபவிக்கும்படி இதற்கு மேலும் அவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இப்படியான திவ்விய அனுக்கிரகம் எவ்வளவு கிருபை உள்ளதாக இருக்கிறது பாருங்கள்! நீண்டகால துன்பம் எப்படி இந்த திவ்விய திட்டத்தை ஏற்படுத்தியது என்பது, நம்முடைய பரலோக தகப்பனும், நம்முடைய மீட்பரும் மனுமக்களிடத்தில் எவ்வளவு பொறுமையுடன் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது பாருங்கள்! நிச்சயமாக இப்படியான பொறுமையும், சகிப்புத் தன்மையும், நித்திய வாழ்வுக்குத் தகுதியான அனைவரையும் ஆண்டவரிடத்தில் இழுக்கும். மற்றவர்களின் அழிவைப் பொறுத்தவரை, ஆண்டவரோடு இசைந்திருக்கக் கூடிய அனைவரும், உற்சாகமாக கீழ்க்கண்டவாறு சொல்லக் கூடும்: ‘‘சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும், நியாயமுமானவைகள்.’’ – வெளி. 16:7

மரித்தோரிலிருந்து எழுந்திருக்கத் தகுதியுள்ளவர்கள் என்று எண்ணப்படுதல்

இந்த கோணத்திலிருந்து, நாம் ஆண்டவருடைய வசனமாகிய ‘‘மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்கள்’’ (லூக். 20:35) என்பதின் அர்த்தத்தைக் காண்கிறோம். வெகு குறைவானவர்களே, ‘‘சிறு மந்தையினர்’’ மட்டுமே, ஆயிர வருட யுகத்திற்கு முன்னதாக மறுமையையும், மேலான உயிர்த்தெழுதலையும் அடையப் பாத்திரவான்

களாக எண்ணப்படுகிறார்கள். ஆண்டவர் இந்த வார்த்தையை யாரிடம் கூறினாரோ அவர்கள் உள்ளடங்கிய மனுக்குலத்தின் பெரும் பாலானோர், நியாயத்தீர்ப்பு அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள், அதன் பின்னர் பிரிபூரண ஜீவனுக்கு தகுதியுள்ளவர்கள் என்று நிரூபிப்பது அவர்களைச் சார்ந்தது. அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே ஆயிர வருட யுகத்திற்குப்பின் எதிர்காலத்தில் உள்ள நித்திய யுகங்களுக்குள் நீடித்திருக்க அனுமதிக்கப்படுவார்கள். கீழ்ப்படிதலுள்ளவர்கள் மாத்திரமே உயிர்த்தெழுதலை பெறும்படியாக, மரணத்திலிருந்து முழுமையாக, முற்றுமாக உயர்த்தப்படுவார்கள். அது படிப்படியாக முன்னேறி, படிப்படியாக அடைவதொன்றாகும். நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, அப்பொழுது பரிசுத்த பெரும்பாதையான வழியில் நடப்பவர்கள் மாத்திரமே அங்கே போவார்கள். அது மேலே செல்லும், ஏறுமுகமாகச் செல்லும் வழியாக இருக்கும்; மனித பரிபூரணத்தை– இழந்து போன எல்லாவற்றையும் திரும்பிப் பெறுவதற்காக அவர்களுக்கு முயற்சியும், ஜெயமும் தேவைப்படுகிறது.

திவ்விய திட்டத்தின் இந்த அம்சத்தை கவனமாக ஆராய்ந்து பார்க்கும்போது, அது நியாயமானதாகவும், முரண்பாடற்றதாகவும் இருப்பதைக் குறித்தும், அது யாருக்கென்று ஏற்பாடு பண்ணப் பட்டிருக்கிறதோ அவர்களுக்கு அது அளிக்கிற சிலாக்கியங்களைக் குறித்தும் நாம் ஆச்சரியப்படுக்கிறோம். ஆயிரம் வருட யுக சிலாக்கியங்கள் விசேஷமாக யாருக்காக உருவாக்கப்பட்டுள்ளதோ அவர்களுக்கு வேறு எந்த திட்டமும் நன்மை தருவதாக இருக்காது என்பதை நாம் சட்டென்று தெரிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக நீரோ மன்னனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு ஜீவனை அடையும்படியான உயிர்த்தெழுதல் கொடுக்கப்பட்டால், அவன் கல்லறையிலிருந்து மனதில் நல் நடத்தையில், சரீரத்தில் பூரணமானவனாக வெளியே வருவானானால் அது நீரோவாக இருக்கமுடியாது; பூரணத்துவம் என்கிற வார்த்தையின் முழு அர்த்தத்தின்படி, அது கடந்த காலத்தின் நீரோவை அங்கீகரிக்காது; அவனோடு கூட இருந்தவர்களும் அவனை அடையாளம் சொல்ல முடியாது. நாமும் கூட அவனை சரீரப் பிரகாரம் பூரணமானவனாகவும், மனதிலும், குணாதிசயத்திலும் பூரணமற்ற வனாகவும் எழுந்து வருவதை கற்பனை செய்து பார்க்க முடியாது. சரீர சாஸ்திரத்தின் முதலாவது அடிப்படை கோட்பாடுகளைக் கற்றவர்கள் கூட, இப்படிப்பட்ட கூற்று பகுத்தறிவுக்கு ஒவ்வாதிருப்பதை சட்டென்று உணர்ந்து கொள்வார்கள்.

குணாதிசயமும், உறுப்புகள் இயங்கும் விதமும் ஒன்றாக இருக்கின்றன என்று அந்த பிரமாணங்கள் வெகு தெளிவாக நமக்கு கற்றுக் கொடுக்கின்றன. அதாவது பூரண நிலையில் இயங்கும் உறுப்புகள் ஒரு பூரணமான குணாதிசயத்தை சுட்டிக் காட்டுகின்றன. ஆனால், நாம் இந்த நியாயமற்ற யோசனைகளில் ஏதாவதொன்றை எடுத்துக் கொள்வோம் என்றால், ஒரு பூரணமான மனிதனின் கீழ்படிதலை அல்லது கீழ்ப்படியாமையை சோதித்துப் பார்ப்பதற்கு ஆயிரம் வருடங்கள் மிக அதிகமான காலம் என்று ஆட்சேபிக்க வேண்டியிருக்கும். வேத வாக்கியங்களிலிருந்து நாம் தீர்மானிப்பது ஆதாம், பூரணமான மனிதனாக இருந்து, மிக சுருக்கமான சோதனைக்குட்படுத்தப்பட்டான் என்பதாகும்.

மேலும், உலமானது பூரணத்திலும், சோதனையிலும் இருக்கிறது என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமென்றால் அவர்களும் பூரண பிரமாணத்திற்கு உட்பட்டு இருக்கிறார்கள் என்று கற்பனை செய்து பார்க்க வேண்டும். மேலும் அவர்கள் பூரணமானவர்களாக இருக்கிறார்கள் என்றால், எந்த விதமான திரையோ அல்லது கறைகள் மூடப்படுதலோ இருக்கக் கடாது. ஆகவே இதே நிலைமையில்தான் ஆரம்பத்தில் ஆதாம், அவனுடைய சோதனைபோது இருந்தான் என்று கற்பனை செய்து பார்க்க வேண்டும். இந்த விஷயங்கள் இப்படியிருந்தால் கிறிஸ்துவின் மத்தியஸ்தமான இராஜ்யத்திற்கும், ஆயிரம் வருட அரசாட்சிக்கும் அவசியம் இருக்காது. ஏனெனில் ஆரம்பத்தில் ஆதாமோடு செயல்பட்ட அதே பூரண பிரமாணம் திவ்விய நியாயத்திற்கு அடையாளமாக இருக்கிறது. மேலும், இதே பிரமாணம் தான் ஆயிரம் வருட யுக இறுதியில், மனுக்குலத்தின் மேல் வரவேண்டும், உலகமானது நித்திய நன்மைக்காக தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர் வர வேண்டும். ஆகவே, இப்படியான கருத்துக்கள் திவ்விய ஒழுங்கிற்கு முரண்பாடாக உள்ளதை நாம் பார்க்கிறோம்.

நாம் இப்பொழுது நியாயத்தீர்ப்பு அடைகிறவர்களாக புறப்படுகிற உயிர்த்தெழுதலைப் பற்றிய திட்டத்தில் உள்ள அழகையும், பொருத்தத்தையும், நியாயத்தையும், முரணற்ற தன்மையையும் கவனிக்கலாம். உலகமானது, அது கல்லறைக்குள் சென்ற கிட்டத்தட்ட அதே மனதின்படி, நடத்தையின்படி, சரீர நிலைமையின்படி எழுந்து வருவது, உடனடியாக தங்களை மற்றவர்களுக்கு சரீரத்திலும் குணத்திலும் அடையாளங் காட்ட ஏதுவாயிருக்கும். ‘‘எங்கே மரம் விழுகிறதோ அந்த

இடத்தில் அது கிடக்கும்.'' எழுப்பப்படுதல் அல்லது கல்லறையிலிருந்து அழைக்கப்படுதல் தூக்கம் கலைந்து வருவதைப் போன்று இருக்கும். இதே அடையாளத்தை கிறிஸ்து தன் சரீரத்திற்கு மட்டும் உபயோகிக்காமல், உலகத்துக்கும் பொதுவாக உபயோகிக்கிறார். உலகம் எதிர்காலத்தில் எழுப்பப்படுவது அவருடைய திட்டத்தின் ஒரு பங்காக இருக்கும் போது, அது தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பப்படுவதைப் போன்று சொல்லப் பட்டிருக்கிறது. தூக்கத்தில் இருந்து ஒருவன் எழும்பும் போது எந்த நிலையில் நித்திரைக்கு சென்றானோ அதே நிலையில் இருக்கக் காண்பது போன்று, ஆனால் சிறிதளவு உற்சாகத்துடன் காணப்பட்டு, அவன் நித்திரை செல்வதற்கு முன்பு இருந்த சம்பவங்களையும், சூழ்நிலை களையும் அவனால் துரிதமாக எண்ணிப் பார்க்க முடிகிறது. உலகத்தார் எழும்பும்போதும் இதே போன்றுதான் இருக்கும் என்று நாம் நம்புகிறோம். அப்பொழுது ''அவர்கள் மனுஷ குமாரனின் சத்தத்தைக் கேட்டு வெளியே வருவார்கள்.''

நாங்கள் இப்படிக் கூறுவதினால், அவர்கள் மரிக்கும்போது இருந்த அதே சரீர நிலையில் எழும்பி வருவார்கள் என்று அர்த்தப்படாது. ஏனெனில், இது பகுத்தறிவுக்கு ஒவ்வாத காரியமாக இருக்கும். உதாரணமாக, ஒருவன் மரிக்கும்போது அவனுடைய நூரையீரல்கள் பெலகீனமுள்ளதாக இருந்திருந்தால், அவன் மூச்சுத் திணறலோடு நுரையீரல் இல்லாமல் வருவான் என்று நாம் எதிர்பார்க்கத் தேவையில்லை. ஒருவரின் தலை சரீரத்திலிருந்து துண்டிக்கப்பட்டு இருந்தால், அவர் தலையில்லாமல் எழுப்பப்படமாட்டார். அதே போன்று ஒருவர் கைகளை, அல்லது பாதங்களை, அல்லது விரல்களை அல்லது சுண்டு விரல்களை இழந்திருப்பார் என்றால், நியாயமானபடி இந்த அங்கங்கள் இன்றி அவர்கள் வெளியே வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. நம்முடைய இந்த யோசனைகளை ஆதரிக்கும்படி வேதவாக்கியங்கள் இல்லா விட்டாலும், உலகத்தார் வெளியே வருவது இப்பொழுது உள்ள சராசரியான ஆரோக்கியத்தோடும், பெலத்தோடும் இருக்கும் என்று எண்ணலாம். இப்படிப்பட்டதை ஆண்டவருடைய முதலாம் வருகையின் போது அவர் சுகப்படுத்தியவர்களுக்கு கொடுப்பதற்கு அவர் பிரியமுள்ளவராக இருந்தார். சுகம் பெற்றவர்கள் முழுவதுமாக பரிபூரணம் பெறவில்லை; இல்லையென்றால், பூரணமான ஆதாம் வாழ்ந்தது போன்று அவர்களில் அநேகர் நூற்றாண்டு காலம் வாழ்ந்திருப்பார்கள். ஆகவே, நாம் பழைய நிலைக்கு கொண்டு வரப்பட்டது என்பது சராசரியான

ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கும்தான் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே, உயிர்த்தெழுப்புதல் நேரத்திலும் அதுபோலதான் இருக்கும். அந்த வேளையிலும், மரணம் என்னும் நித்திரையிலிருந்து, அதே சத்தம் தான் வெளியே கொண்டு வரும்; அவருடைய சத்தத்தை அவர்கள் கேட்டும்படியாகவும், கீழ்ப்படிதலின் மூலமாக நித்திய ஜீவனை அடையவும், அதன் பூரண நிலை மனதிலும், சரீரத்திலும் வரும்படியாகவும் இருக்கும் என்றுதான் நாம் எதிர்பார்க்க வேண்டும். இதற்கென்றே அவர் இளைப்பாறுதலின் காலங்களையும், ஒழுங்குகளையும், நியாயத் தீர்ப்புகளையும், ஆசீர்வாதங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

மரணத்தில் போடப்பட்ட ஜீவ நூல் இழைகளை, அதே இடத்தில் இருந்து எடுக்கும் போது, அனுபவம் என்ற நெய்தல் வேகமாக மாற்றப்பட்டுள்ள நிலைமைகளுக்கு ஏற்ப தன்னை தகுதியுள்ளதாக்கிக் கொள்ளும். இதற்கிடையில் தனிப்பட்ட மனிதன் தன்னுடைய தனித்தன்மையை இழக்கமாட்டான், அதோடு அவன் சம்பந்தப்பட்டிருந்த உலகத்திலோ, அல்லது சமுதாயத்திலோ அவன் இருந்த இடத்தை இழக்க மாட்டான். இப்படியாக கடந்த காலத்தின் போது பாவத்தோடும், சுயநலத்தோடும் உள்ள அனுபவங்கள், அதிகமாக அறிவு என்றும் பொக்கிஷத்தைத் தரும்; வருங்காலத்தில் சரியானபடி யோசிக்க உதவும்; மேலும் இதற்கு முன்பாக இருந்த பாவம், மரணம் ஆகியவையின் ஆட்சிக்கு எதிர்மாறாக நீதியின் ஆட்சியில் இருந்து வருகிற சிலாக்கியங்களை எண்ணிப் பார்க்க உதவும். முதலாவதாக கிறிஸ்துவை தன்னுடைய இராஜாவாகவும், மீட்பராகவும் ஏற்றுக் கொள்ளுவதோடு, தன்னுடைய பூரணமற்ற, தகுதியில்லாத நிலையை ஒப்புக் கொள்ளுவதுடன், அவன் பரிசுத்த வழியில் செல்ல துவங்குவதற்கு முன்னரே ஜீவன் கொடுப்பவர்மேல் சார்ந்திருப்பது அவனுக்கு நன்மையாக இருக்கும். மேலும், தன்னுடைய பெலவீனங்களை மேற்கொள்ளும் படியாக அவன் நடவடிக்கை எடுப்பதிலும், அவனுக்கு முன்பாக குறிக்கோளாக வைக்கப்பட்டுள்ள பூரணத்தை அடைவதிலும், அவன் முயற்சி செய்யும்போது அது அவனுக்கு பிரயோஜனமாக இருக்கும்.

இப்படியாக அனுபவத்தின் வாயிலாகக் கற்றுக்கொண்ட பாடங்கள், அவனுடைய ஞாபகத்தில் ஆழமாக பதியும், அவனுடைய குணாதிசயத்தில் ஆழமாக பதியும். ஆயிர வருட யுக இறுதியில் முழுமையான இருதய விசுவாசம் தேவைப்படும் இறுதியான

பரீட்சைக்கென அது அவனை தயார் பண்ணி தகுதிப்படுத்தும். இதற்கிடையில், எப்படியாயினும், அவனுடைய குறைகள் அவனுடைய நஷ்டத்திற்கோ, தடைபடுத்தும்படியாகவோ வேலை செய்யாது. அவனுடைய குணத்தின் பெலவீனங்கள் அல்லது பலங்களுக்கு ஏற்றபடி நியாயாதிபதிகள் தேவைப்படுவார்கள்; இந்த நியாயாதிபதிகள் எல்லாரும் பாவத்தோடும், பெலவீனங்களோடும் தங்களுடைய அனுபவங்களினால், இரக்கத்துடன் நியாயந்தீர்க்கும் படியாகவும், உண்மையிலேயே உதவியாக இருக்கும்படியாகவும் ஆயத்தம்பண்ணப்படுகிறார்கள். நியாயத்தீர்ப்பிற் குள்ளான உயிர்த்தெழுதல்– இந்த படிப்படியாக பழைய நிலைக்கு திரும்பி வருதல் என்கிற திவ்விய திட்டம் இல்லாது இருந்திருக்குமென்றால் நியாயாதிபதிகளுக்கு இப்படியான அனுபவங்கள் இவ்வளவு முக்கியமானதாக இருந்திருக்காது.

உயிர்த்தெழுதலைப்பற்றி தானியேல் தீர்க்கதரிசியின் வாயிலிருந்து வந்த திவ்விய அறிக்கையோடும் இந்தக் கருத்து முற்றிலுமாக ஒத்ததாக இருக்கிறது. ''பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.'' (தானி. 12:2) நம்முடைய ஆண்டவர் குறிப்பாக விளக்குகின்ற எழுப்பப்படுகிறவர்களில் உள்ள இதே பிரிவை இங்கே நாம் காண்கிறோம். அதன் அர்த்தத்தின்படி ஒரு பிரிவினர், நித்திய ஜீவனுக்கென்று முழுமையாக எழுப்பப்படுகிறார்கள். மற்ற பிரிவினர் எழுப்பப்படுகிறார்கள், ஆனால் ஜீவனுக்குள்ளாக அல்ல. எழுப்பப்பட்ட போது இன்னும் மரணத்தில் தான் இருக்கிறார்கள், ஏனெனில் இன்னும் தேவனால் அங்கீகரிக்கப்படவில்லை, குமாரனோடு மிக முக்கியமாக இணைக்கப்படவில்லை. ''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.'' அப்பொழுது உலகம், மகா பெரிய மீட்பின் பலியினால் ஜீவனும், இளைப்பாறுதலும் தேவனுடைய கிருபையினால் கொடுக்கப் பட்டிருக்கிறது என்கிற சத்தியத்தை அறிகிற அறிவுக்குள் வரும்படியாக அவர்கள் வெளியே கொண்டு வரப்படுவார்கள்; மேலும், ஜீவனைக் கொடுக்கிறவர் தன்னுடைய மகா வல்லமையையும், மகிமையையும், தீர்க்கத்தரிசி, ஆசாரியர் மற்றும் இராஜா என்கிற முறையில் எடுத்துள்ளார் என்பதையும், மேலும் அவருக்குள்ளாக வருவதினால், அவர்கள் படிப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக ஜீவனை அடைவார்கள் என்பதையும் அறியும்படியாக வெளியே கொண்டு வரப்படுவார்கள்.

இந்த இரண்டாவது பிரிவினரைக் குறித்து தீர்க்கதரிசியின் அறிக்கை, அதாவது அவர்கள் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் வருவார்கள் என்று கூறியிருப்பது முக்கியமானது. அவர்கள் பூரணராக வெளியே வருவார்கள் என்றால், அவர்கள் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் உரிய நிலைமையில் இருக்க மாட்டார்கள், ஏனெனில் பூரணத்துவம் எப்பொழுதுமே போற்றப்படத்தக்கதாகும். ஆகவே அவர்கள் அபூரணர்களாக வருவார்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்துகிறது. மேலும் நம்முடைய ஆண்டவரின் கூடுதலான விளக்கம், அவர்கள் தங்களுடைய அபூரணத்தோடு வருவார்கள் என்பதை உறுதிப்படுத்து கிறது; அதாவது, அவர்கள் விருப்பப்பட்டால் அவர்கள் உட்படவேண்டிய சோதனைக்கு, அல்லது நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டு அவர்கள் உயிர்த்தெழுதலை, பூரணத்தை அடையலாம்; அவர்கள் தங்களுடைய கீழ்ப்படியாமையிலிருந்து திருந்தி, கீழ்ப்படிதல் சிட்சிப்பு, ஒழுங்கு படுத்துதல் ஆகியவை மூலம் தங்களுடைய பலனைப் பெற்று உயிர்த்தெழுதலுக்குள் வரலாம்.

நாம் ஏற்கனவே நீரோவை ஒரு உதாரணமாக உபயோகித் துள்ளோம். அவன் நித்திய இகழ்ச்சிக்கும், நிந்தைக்கும் வருபவர்களில் ஒருவனாக நிச்சயமாக இருப்பான். நாம் மேற்கொண்டும் விளக்கு வதற்காக அவனை உபயோகிக்கலாம். உலகத்தின் தற்கால சந்ததி இராஜ்யத்தின் அதிகாரத்திற்குள்ளும், ஓரளவு நீதிக்குள்ளும் புத்திசாலித்தனத்திற்குள்ளும் கொண்டுவரப்படுவதற்கு முன்னால் நித்திரையிலிருக்கிற உலகத்தின் விழித்தெழுதல் துவங்காது என்பதை நாம் நினைவுகூறுகையில், நீரோ வெளியே வரும்போது, அவன் இறந்த வேளையில் இருந்ததைக் காட்டிலும் வித்தியாசமான சமுதாய நிலைமைகள் இருப்பதை அவன் காண்பான் என்று உடனடியாக நாம் யோசிப்போம். அவனால் வளர்க்கப்பட்டு, கைக்கொள்ளப்பட்ட கெட்ட பழக்க வழக்கங்கள் அவமானத்தை கொண்டுவருவதையும், அவனால் வெறுத்து விலக்கப்பட்ட நற்குணங்கள் முக்கியமானதாக கருதப் படுவதையும், ஆளுகையில் இருப்பதையும் அவன் காண்பான்; அவனைக் காட்டிலும் குறைவாக வேண்டுமென்றே செய்தவர்கள், குறைவாக சீர் கெட்டவர்கள், குறைவாக துஷ்டத்தனம் உள்ளவர்கள், குறைவாக இகழ்ச்சியுள்ளவர்கள் ஆகிய இவர்களைக் காட்டிலும் அவன் அதிகமாக தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையிலிருப்பான்; சரித்திரத்தின் வாயிலாக அவன் நன்றாக

பிரபலமடைந்திருந்ததாலும், மேலும் அவன் தன்னுடைய அதிகாரங்களையும் தருணங்களையும் துஷ்பிரயோகம் பண்ணியதால் மாத்திரமல்ல, தன்னுடைய சொந்த தாயை கொலை செய்தவனாகவும், ஆண்டவரின் விசுவாசிகளை உபத்திரவப்படுத்தினவனாகவும், கொடுமைப்படுத்தினவனாகவும் இருந்ததினிமித்தமும் பொதுவாக இகழ்ச்சிக்குரியவனாக இருக்கக் காண்பான்.

ஒவ்வொரு நல்ல நேர்மையான குணமுள்ள மனிதனும் இப்படியான அவனுடைய குணாதிசயத்தை இகழ்வாக நினைப்பான். மேலும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நீரோ மிகவும் வெட்கமடைவான். இருந்தாலும், அவன் நியாயத்தீர்ப்பினால் உண்டான உயிர்த்தெழுதலுக்கு அவன் வருகிறான். அவனுடைய வெட்கமான இகழ்ச்சியான நிலையிலிருந்து வெளியே வந்து மனித சுபாவத்தின் பரிபூரணத்திற்கு வரும்படியாக ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதற்காக நியாயத் தீர்ப்பின்படியான ஒரு உயிர்த்தெழுதலுக்கு அவன் வருகிறான். அவன் எந்த அளவுக்கு ஜீவனை அடையும்படி வருவான், எந்த அளவுக்கு மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலுக்கு வருவான் என்பது முற்றிலும் அவனைச் சார்ந்ததாக இருக்கும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக அவன் சத்தியத்தை அறிய வேண்டும்; அவனே தனது சொந்த நிறங்களைப் பார்க்க வேண்டும்; அந்த காலத்தில் ''பிரபுக்களாக'' இருக்கும் ஆதிகாலத்து மேன்மை பெற்ற (முற்பிதாக்களாகிய) பூரணமான மனிதரோடு தன்னை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்; நீதியின் பிரமாணங்களின் செயல்பாடு, பாவமும், மரணமும் ஆட்சி செய்த தனது முந்திய ஆளுகையின் செயல்பாட்டைக் காட்டிலும் முற்றிலுமாக மாறுபட்டிருப்பதைக் காண வேண்டும்; அப்பொழுது அவன் ஒரே பிடிவாதமாக தனது பொல்லாத குணத்தோடு தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்திக் கீழ்ப்படிய மறுப்பானானால், அவனுக்கும், எல்லா மனுக்குலத்திற்கும் ஆண்டவர் கொடுத்த தருணங்களையும் சிலாக்கியங்களையும் அனுபவித்த பின்னர் அவைகளை அவன் நிராகரிப்பானானால் அவன் இரண்டாம் மரணத்தில் மரிக்க வேண்டும்.

ஆனால், அதற்கு மாறாக அவன் தன்னை தாழ்த்தினால், தன்னுடைய பாவத்தை உணர்ந்துகொண்டால், இராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு அவன் கீழ்ப்படிந்தால், அவன் ஜீவனுக்கான உயிர்த்தெழுதலுக்கு அல்லது எழுப்புதலுக்கு, வீழ்ச்சியிலிருந்து முழுவதுமாக விடுதலை பெறுவதற்கு

–இப்படியாக உடனடியாக மேல் நோக்கியுள்ள பாதையைத் துவக்குவான். இப்படியாக, அவன் பரிசுத்த பெரும்பாதையில் மேல்நோக்கிச் செல்வான் என்றால், சகமனிதர்களின் இகழ்ச்சியிலிருந்து தன்னை சுத்திகரிப்பான், அதே சமயத்தில், அதற்கேற்றாற்போல் தன்னை அவமானத்திலிருந்தும் விடுவிப்பான். மனம் திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாயிருக்குமானால், பூலோகத்திலும் நல்ல மனதுள்ள ஜனங்கள் மத்தியிலும் சந்தோஷம் உண்டாயிருக்கும். ஏனெனில், அவ்வப்போது பாவிகள் தங்கள் பாவ வழிகளிலிருந்து திரும்பி கீழ்ப்படிதலுக்கு ஆண்டவரிடம் வருவதை அவர்கள் காண்பார்கள். முற்கால பாவத்திற்கும் அதன் அற்பத்தனத்திற்கு போற்றத்தக்க வகையில் அலட்சியம் காட்டி, நீதியின் வழிகளில் எடுக்கப்படுகிற முயற்சிகளை உயர்வாக கருணையுடன் எண்ணுவதற்கு படிப்படியாக வழி கொடுக்க வேண்டும். ஆகவே,_எப்பொழுதாவது நீரோ ஆண்டவருக்கு முழுவதுமாக கீழ்ப்படிகிறவனாக மாறுவானானால், நியாயத்தீர்ப்பினால் உண்டான உயிர்த்தெழுதலில் நித்திய ஜீவனை அடைவான் என்றால், அவன் மிக உயர்வாக மதிக்கப்படுவான், அவனுடைய முற்கால பாவங்கள் முற்றிலுமாக மறக்கப்படும். ஆனால் இப்பொழுதோ, அப்போஸ்தலர் பவுலைக் குறித்து எண்ணும் போது, உபத்திரவப்படுத்துகிற, ''பாவிகளில் பிரதான பாவி நான்'' என்று அறிக்கையிடப்பட்ட சவுலில் இருந்து தனியாக பிரித்து, அவருடைய கனத்துக்குரிய சுய–பலிகளையும், ஆண்டவருக்கு உண்மையாக இருந்ததையும் நாம் நினைவு கூறுகிறோம்.

இந்த வாழ்க்கையின் பாவங்களுக்கான தண்டனை

தற்கால பாவங்களுக்கு தண்டனை கிடையாதா என்று ஒருவர் கேட்கிறார் என்றால் அவருக்கு நாம் பதில் கூறுகிறோம். ஒவ்வொரு பாவத்திற்கும் நீதி நிச்சயமாக தண்டனை வழங்கும். நாம் எல்லோரும் அறிந்துள்ளபடி ஆதாமின் பாவம் 6000 வருடங்களாக தண்டிக்கப் பட்டுள்ளது. அந்த தண்டனைக்குக் கீழ் எல்லா சிருஷ்டிகளும் ஏக்கத்துடன், பிரசவ வேதனைப்பட்டு மரணத்திற்குள் மூழ்கிவிட்டது. அந்த பாவமும், ஆதாமின் பாவத்தினால் வந்த சீரழிவினாலும், பெலவீனங்களினாலும் உந்தப்பட்ட எல்லா மேலதிகமான பாவங்களும், பாவங்களுக்காக செலுத்தப்பட்ட பெரிய பாவ நிவாரண பலியினால்

செய்து முடிக்கப்பட்ட மீட்பில் அடங்கியுள்ளது. ஆதாமிய வீழ்ச்சியினாலும், சீர்கேட்டினாலும் நேரடியாக வராத பாவங்கள் மட்டுமே மேற்கொண்டு தண்டனைக்கு உட்பட்டதாகும்; இப்படிப்பட்ட பாவங்கள் ஓர் அளவுக்கு வேண்டுமென்றே செய்யப்பட்டவையாகும். இப்படி மனப்பூர்வமாக செய்யப்பட்ட பாவங்கள் எல்லாம் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் ஓரளவுக்கு அல்லது முழுமையாக இப்படி மனப்பூர்வமாக செய்யப்பட்ட பாவங்களுக்கு எது சரியான அல்லது நியாயமான தண்டனையாக இருக்கும் என்பதை தீர்மானிக்க தற்காலத்தில் நமக்கு நிச்சயமாக திறமை கிடையாது.

''காலத்துக்குமுன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்'' என்று ஆண்டவர் கட்டளையிட்டதற்கு, சந்தேகத் திற்கு இடமின்றி இந்த ஒரு காரணமும் உண்டு. ''பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?'' என்று எழுதியிருக்கிறபடி, காலாகாலத்தில் நியாயந்தீர்ப்பது நம்முடைய கரத்தில் இருக்கும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு இந்த நீதி வழங்குவர்களில் முதன்மையானவராக இருக்கிறார். ஆண்டவருடைய வார்த்தை சொல்லுகிறதாவது: ''தன் எஜமானனுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான்.'' (லூக். 12:47,48) மனப்பூர்வமாக செய்த பாவத்திற்கான குற்றம், ஆண்டவரைப் பற்றியும், அவருடைய சித்தத்தைப் பற்றியும் நாம் கொண்டுள்ள அறிவின் அளவின்படி, அதிகமாக அளக்கப்படும் என்று இது சுட்டிக் காட்டுகிறது. ஆகவே,சபையும், இந்த சுவிஷேச யுகத்தின் போது சபையின் வெளிச்சத்திற்குள்ளும் செல்வாக்கிற்குள்ளும் வருகிறவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக அளவிற்கு பொறுப்பு உள்ளவர்கள் என்று கருதப்படுவார்கள். நீரோ சபையை சேர்ந்தவன் அல்ல; ஆவியினால் பிறந்தவன் அல்ல; ஆகையால் சபையாரைக் காட்டிலும் குறைவாக பொறுப்புள்ளவன். ஆனாலும் ஒளியின் பிள்ளைகளிடத்தில் போதுமான அளவுக்கு தொடர்பு கொண்டவனாக இருந்தான். ஆகவே அவன் தன்னுடைய குற்றங்களுக்கு அதிக அளவில் பொறுப்பு உள்ளவனாக இருந்தான் என்று எண்ணலாம்!

"சிலருடைய பாவங்கள் நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும்"

மனப்பூர்வமாக செய்யப்பட்ட பாவங்களுக்குரிய தண்டனைகளை சத்திய வெளிச்சத்தில் கவனிக்கும்போது, அப்போஸ்தலர் கூறியதை நாம் மறந்து விடக்கூடாது. "சிலருடைய பாவங்கள்..... நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும், சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின் தொடரும்." (1 தீமோ. 5:24) நீரோவின் பாவங்கள் எந்த அளவிற்கு ஏற்கனவே தண்டனை பெற்றுள்ளன என்று நமக்குத் தெரியாது; எந்த அளவுக்கு அவன் மனதிலும், சரீரத்திலும் உபத்திரவப்பட்டான் என்று நமக்குத் தெரியாது; ஆகவே, நியாயத்தீர்ப்பின் நாளில், எந்த அளவுக்கு பாவங்கள் அவனை தொடர்ந்து வரும், அவனை முந்திக் கொள்ளும் என்று நமக்குத் தெரியாது. விவாதத்திற்கென நாம் எடுத்துக் கொண்டால், அவன் கடந்த காலத்தில் அவன் விசேஷமான தண்டனைகளைப் பெறவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம்; அவனுடைய பாவங்களுக்காக தண்டனை அவனைத் தொடர்ந்து வரும் என்று வைத்துக் கொண்டால், அவனுக்கெதிரான குற்றச்சாட்டு எப்படிப்பட்டதாக இருக்கும், எப்படிப்பட்ட அடிகளும், உபத்திரவங்களும் அவனுக்கு கொடுக்கப்படும் என்று நாம் கேட்கலாம்? இந்தக் கேள்விக்கு தயக்கமின்றி, நிபந்தனைகள் இன்றி பதில் சொல்ல நாம் திறமை உள்ளவர்களாக இல்லை, ஆனால் ஒவ்வொரு மனிதனிலும் ஏற்கனவே செயல்படுகிற ஒரு பொதுவான ஒழுங்கை நாங்கள் அறிந்திருக்கிறோம். அது அவன் அறிவையும், மனசாட்சியையும் மீறும்போது அதன் விளைவுகளைக் குறிக்கிறது. எந்த அளவுக்கு ஒளியும், சத்தியமும், அறிவும், மனசாட்சியும் மீறப்படுகிறதோ அந்த அளவுக்கு குணம் தாழ்வானதாக எண்ணப்படுகிறது; மேலும், எந்த அளவுக்கு இது தொடருகிறதோ அந்த அளவுக்கு அவனுக்கு இளைப்பாறுதல் கிடைப்பது கடினமாக மாறும் என்று நாம் காண்கிறோம்.

நீரோ உண்மையிலேயே ஒரு பெரிய அளவிற்கு அவனுடைய குணத்தையும், மனசாட்சியையும் குறைவாக மதிப்பிட்டு இருக்க வேண்டும் என்று நாம் நியாயமானபடி நிதானிக்கலாம். அப்படியானால் எழுப்பப்படும் போது, அவன் மரித்த மாதிரியே, அபிவிருத்திக்கு வழி செய்யும் ஒரு தருணத்திற்கு வருவான். ஆகவே, கடந்த காலத்தில் கீழ் நோக்கிச் செல்லும்படியாக அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும்,

ஒவ்வொரு மனச்சாட்சி மீறுதலும், நீதிக்கு எதிரான ஒவ்வொரு எதிர்ப்பும் அவனுடைய குணாதிசயத்திற்கு தீமை விளைவித்தது என்பதை நாம் உடனடியாகப் பார்க்கலாம். எப்பொழுதாவது அது மேற்கொள்ளப்பட வேண்டுமானால், அந்த அளவிற்கேற்ப அவன் பின்னால் நோக்கி பார்த்து, அவன் வேண்டுமென்றே அழித்த குணாதிசயத்தின் பகுதியை அவன் உயர்த்த வேண்டும். இதுதான், இது மாத்திரமே தற்காலத்தின் பாவங்களுக்கான தண்டனை என்று நாம் கூறுவதற்கில்லை. ஆனால், இதுதான் நியாயமானதாக இருக்கும் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. எப்படியாயினும், ஆண்டவருடைய ஆவி உள்ளவர்கள் அனைவரும் மகிமையடைந்த சபையின் தீர்மானங்களை முற்றிலுமாக ஆதரிப்பார்கள் என்கிற நம்பிக்கையில், இந்த விஷயத்தை இதோடு விட்டுவிடுவதில் திருப்தி அடைகிறோம். நம்முடைய ஆண்டவர் தீமைக்கு பதிலாக தீமை செய்வதில் சந்தோஷமடைவார் என்றோ, அதிக துஷ்டனாக இருப்பவனுக்குத் தேவையற்ற தண்டனை கொடுப்பதில் பிரியப்படுவார் என்றோ நாம் யூகிக்க முடியாது. ஆனால், ஏற்கனவே கொடுக்கப்பட்ட மகா பெரிய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நிலைத்திருக்கும். அது ''பாவத்தின் சம்பளம் மரணம்,'' அதாவது இரண்டாம் மரணம் என்பதாகும்.

"இப்படியாக (விசேஷமாக) மரித்தோரின் (முதன்மையான) உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்"

–1 கொரி. 15:42–

சபையின் உயிர்த்தெழுதல் முதலாம் உயிர்த்தெழுதல் என்று கூறப்பட்டுள்ளது, அது தான் முதலில் இருக்க வேண்டும் என்றல்ல (அதற்கு முதல் இடம் இருந்தாலும் கூட) ஆனால் முதன்மையானதாக, உயர்வானதாக இருக்கிறபடியால் அப்படி கூறப்பட்டுள்ளது. உயிர்த்தெழுதலில் பல்வேறு வகை உண்டு என்று நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். அவைகளின் மூன்று வித்தியாசமான நிலைகளில் ஜீவனுக்கும், பரிபூரணத்திற்குமானது ஆகும். சபை முதல் இடத்திலும், அதன் பின்னர் திரள் கூட்டமும், அதன் பின்னர் ஆதிகாலத்து மேன்மை பெற்றோர் (முற்பிதாக்கள்) என்று இந்த முறையில் வரும். அதன் பின்னர், கடைசியாக உலகத்தாரின் பொதுவான உயிர்த்தெழுதல் முழு

மனுக்குலத்திற்கும் உரியதாகும். அது திவ்விய ஏற்பாட்டையும், ஒழுங்குகளையும் ஏற்றுக் கொள்ளுபவர்களுக்குரியது, அது நியாயத்தீர்ப்பினால் உண்டாகும் உயிர்த்தெழுதலாக இருக்கும். அது ஆயிரம் வருட யுகத்தின் இறுதியில் தான் முடிவு பெறும். ''மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியும் வரை உயிரடையவில்லை'' என்ற வசனத்தின் அர்த்தத்தின்படி இது உண்மை. அதாவது முழு அர்த்தத்தின்படி அவர்களுக்கு முழுமையான ஜீவன் இருக்காது. அதுவரை அவர்கள் மரணத்திலிருந்து முற்றிலுமாக எழுப்பப்பட மாட்டார்கள். இப்படியாக பார்க்கும்போது சேர்க்கப்பட்ட (போலியான) வசனம் வெளி. 20:5 (''மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை'' என்கிற வசனம், 5ம் நூற்றாண்டுக்கு முந்திய காலத்தில் புராதன மூலப்பிரதிகளில் இல்லை என்கிற கருத்துக்கு நாம் ஏற்கனவே கவனத்தைக் செலுத்துமாறு குறிப்பிட்டிருந்தோம். இருந்தாலும், இப்பொழுது நாம் கூறுவதோடு இது முற்றிலும் ஒத்ததாக இருக்கிறது. ''உயிரடையவில்லை'' என்கிற பதம், எழுப்பப்படுதல் என்கிற அர்த்தத்தில் புரிந்து கொள்ளக் கூடாது, ஆனால் பழையபடி ஜீவனுக்குள், பூரணமான நிலைமைக்குள் கொண்டு வரப்படுதல் என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். தொகுதி1, அத்தி. 14) வேதவாக்கியங்களின் பொதுவான நோக்கத்தோடு முற்றிலுமாக ஒத்து இருப்பதாக காணப்படுகிறது. இந்த உயிர்த்தெழுதல்கள் எல்லாம், முதலாம் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வருவதாகும், சந்தேகத்திற்கு இடம் இன்றி இவைகளெல்லாம் மகிமையடைந்த சபையின் அதிகாரத்திற்கும், கட்டுப்பாட்டுக்குள்ளும் இருக்கும். இதற்காக இதன் மகிமையான தலையானவர் பிதாவிடமிருந்து எல்லா வல்லமையையும், அதிகாரத்தையும் பெற்றுக் கொண்டார்.

மற்றவர்களுக்காக சபை செய்யும் உயிர்த்தெழுதல் வேலையைப் பார்த்த பின்னர், இப்பொழுது நாம் முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்து வேத வாக்கியங்கள் குறிப்பாக என்ன சொல்லுகின்றன என்பதை காணலாம். எப்படிப்பட்ட சரீரத்தோடு புது சிருஷ்டி எழுந்திருப்பார்கள்? அவர்களுடைய தன்மைகளும், அதிகாரங்களும் எப்படிப்பட்டதாக இருக்கும்?

அப்போஸ்தலர் கூறுகிறார்: ''மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே.'' (1 கொரி. 15:48) உலகத்தார் பொதுவாக மனிதனின் பூரணத்திற்கு

இளைப்பாறுதலை அனுபவிப்பவர்கள், மண்ணானவனைப் போன்று, ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு எப்படி இருந்தானோ அதே போன்று, மேலும் ''பரிபூரண மனிதனாகிய கிறிஸ்து இயேசுவைப்'' போன்று, அவர் புதிய சுபாவத்திற்கு மறுபடியும் பிறப்பதற்கு முன்பு இருந்ததைப் போன்று இருப்பார்கள் என்று இந்த வசனம் அர்த்தப்படுத்துவதை நாம் காண்கிறோம். திவ்விய சிருஷ்டிகரின் முழுமையான மண்ணான சாயலை மறுபடியும் உலகத்தார் பெறுகிற இந்த உன்னத திட்டத்தைக் குறித்து நாம் களி கூறுகிறோம்; திவ்விய திட்டத்தின்படி ''அழைக்கப்பட்டவர் களாகிய,'' சுவிசேஷ யுக சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களைக் குறித்து இன்னும் அதிகமாக களி கூறுகிறோம். அவர்கள் வானத்துக்குரியவரின் சாயலை– சிருஷ்டிகரின் சாயலை, இன்னும் அதிக உயர்வான, அதிக விசேஷித்தவிதமாக, ஆவிக்குரிய சாயலைப் பெறுபவர்களாக இருக்கிறார்கள். ''அவர் இருக்கிறவண்ணமாகவே (மகிமையடைந்த, ''மறுரூபமடைந்த'' இயேசு) நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம்.'' அவர் ஆவியின் ஜீவியாக, தேவனுடைய தற்சொரூபமாக, எல்லாத் துரைத்தனத்திற்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக இருக்கிறார். அதினிமித்தமாக பூரண மனுஷீகத்திற்கும் மேலாக உயர்ந்து இருக்கிறார். நாம் அவருக்கு ஒப்பாக இருந்து, அவருடைய மகிமையிலும், சுபாவத்திலும் பங்கு பெறுவோம் என்றால் நாமும் கூட பிதாவின் சாயலில் காணப்படுவோம் என்று அர்த்தமாகிறது. பிதா ''சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறார்.'' ஆனால் நாம் ''மறுரூபமடைந்துள்ள படியால்'' அவரிடம் சேரமுடியும், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசிக்க முடியும். –1 யோவா. 3:2; 1 தீமோ. 1:17; 6:16; யாத். 33:20.

யாரும் அவரை தவறாக புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அப்போஸ்தலர் மேலே கூறியவற்றில் கவனமாக இருக்கும்படி கீழ்க்கண்டதையும் சேர்த்துள்ளார். ''மண்ணானவனுடைய சாயலை நாம் (சபை) அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.'' இதன்படி எல்லாருமே எப்பொழுதுமே வானவருடைய சாயலை அணிந்துகொள்வார்கள் என்பது அப்போஸ்தலருடைய எண்ணமல்ல. இது நம்முடைய சிருஷ்டிகரின்

திட்டமுமல்ல. அவர் மனிதனை உண்டாக்கிய போது அவன் ஒரு மாம்சமான, மனுஷீக, மண்ணானவனாக தன்னுடைய சாயலில் (நன்னெறியில், மனப்பாங்கில்) இருக்க வேண்டும் என்கிற திட்டத்தில், அவனுடைய பரலோக சிருஷ்டிகரின் பிரதிநிதியாக இருந்து பூமியைக் கீழ்ப்படுத்தி, ஆண்டுகொள்ளும்படியாக உண்டாக்கினார். (ஆதி. 1:26–28 ; சங். 8:4–7) புது சிருஷ்டியை தெரிந்துகொண்டது, நாம் கவனித்துள்ளபடி மண்ணானவனின் சிருஷ்டிப்பிலிருந்து முற்றிலும் வேறானதாக, அப்பாற்பட்டதாக இருக்கிறது. அவர்கள் உலகத்திலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், ஆனாலும் அவர்கள் ஒரு ''சிறுமந்தை'' யாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஆயிரம் வருட யுகத்தின்போது உலகத்தை ஆசீர்வதிக்கும்படியாக ஆண்டவரின் இராஜரீக வகுப்பாராக இருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளார்கள். அதன் பின்னர் அவர்கள் மிக உயர்வான, பொறுப்பான இடத்தில் இருந்துகொண்டு, திவ்விய திட்டங்களின் மிக முக்கியமான வேலையைச் செய்து கொண்டு, ஒரு வேளை மற்ற உலகங்களையும், சிருஷ்டிகளையும் பொறுத்த வேலைகளைச் செய்துகொண்டு இருப்பார்கள் என்று நாம் நிச்சயிக்கலாம்.

ஆனால், அப்போஸ்தலர் இந்த விஷயத்தில் இன்னும் கவனமாக இருந்து, மேலே கூறியதை இன்னும் விளக்கும்போது, ''சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை'' என்கிறார் (வசனம் 50). இப்படியாக, தற்போது, மாம்சத்தில் இருக்கும் நம்முடைய நிலைமைக்கும் எதிர்காலத்தில் ஆவிக்குரியவர்களாக இருக்கும் நிலைமைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறார். அவர் உறுதியாகக் கூறுவது என்னவெனில், நாம் மாம்சத்தில் இருக்கும் காலம் வரை, எந்த விதத்திலும், நாம் தேவனுடைய இராஜ்யமாக ஆகமுடியாது, ஏனெனில் இராஜ்யம் என்பது ஆவிக்குரியதாக, ஆவிக்குரிய ஜீவிகளை கொண்டதாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவரே தலையானவர், முதன்மையானவர், தலைவர், தன்னுடைய சபைக்கு உதாரணமாக இருப்பவர், மகிமையான ஆவியின் ஜீவியாக இருக்கிறார். இந்த மகிமையின் தரிசனம்தான் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கொடுக்கப்பட்டது. (1 கொரி. 15:8) அப்போஸ்தலனாகிய யோவானுக்கும் இப்படிப்பட்ட மகிமையின் தரிசனம்தான் வெளிப்படுத்தினாகமத்தில் கொடுக்கப்பட்டது. ''நாம் அவருக்கு ஒப்பாக இருப்போம்''–மாம்சமும் இரத்தமுமாக அல்ல, நாம் தெரிந்து கொள்ளப்பட்ட மானுட இனத்தில் மீந்திருப்பவர்கள் போன்றும்

அல்ல. இவர்களின் இளைப்பாறுதலின் காலங்களினால் அல்லது நியாயத்தீர்ப்பினால் உண்டாகும் உயிர்த்தெழுதல் மூலம்தான் இவர்கள், மாம்சமும் இரத்தமுமான பூரண நிலைமைக்கு வருவார்கள். ஏனெனில் அதே இளைப்பாறுதலின் காலங்கள்தான் உலகத்தை, ஆதியில் ஏதேன் தோட்டம் இருந்த அதே நிலைக்கு கொண்டு வரும்.

சபையானது மாம்சத்திலிருந்து, மண்ணானவனின் நிலைமைகளிலிருந்து வானத்துக்குரிய, ஆவிக்குரிய நிலைமைகளுக்கு, இப்படி மறுரூமாக்கப்படுவதைக் குறித்த ஒரு காரியத்தை முற்றிலுமாக புரிந்துகொள்வது கடினமானது என்பதை அப்போஸ்தலர் அறிந்து கொண்டார். மரணத்தில் நித்திரைக்குள் இருப்பவர்களைக் குறித்த நம்முடைய சிந்தனையைக் குறித்த கஷ்டத்தைக் காட்டிலும், ஜீவனோடு, ஆண்டவருடைய பிரசன்னம்வரை உள்ளவர்களைக் குறித்த கஷ்டம் குறைவாக உள்ளதாகவே இருக்கும் என அவர் கண்டார். ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணினபடி, நித்திரை செய்பவர்கள், ஆவிக்குரிய சரீரத்தில் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்கிற எண்ணத்தை பற்றிக்கொள்ளுவதைக் காட்டிலும், ஆண்டவரின் இரண்டாம் வருகையின் போது ஜீவத்துக் கொண்டிருக்கிற அந்த பரிசுத்தவான்கள் அவருடைய ஆவிக்குரிய இராஜ்யத்தில் அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் என்கிற எண்ணத்தைப் பற்றிக்கொள்ளுவது கடினமாக உள்ளது. இதை ஆண்டவர் அப்போஸ்தலர் மூலமாக நமக்கு மிக தெளிவாக்குகிறார். அவர் கூறுகிறார்: ''இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் (ஏழாம் எக்காளம்) தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.'' –1 கொரி. 15:51,52.

இந்த வார்த்தைகளால் ஆண்டவர் அப்போஸ்தலர் மூலமாக ஓர் அளவுக்கு ஒரு இரகசியத்தை தெளிவுபடுத்தினாலும், இந்த சாதாரண விளக்கத்திலும் கூட ஓர் குறிப்பிட்ட அளவு இரகசியம் மங்கலாகவே தெரிகிறது. ஏனெனில் தேவனுடைய அருமையான ஜனங்களில் அநேகர் ''நித்திரை'' என்கிற வார்த்தையை ''மரித்தல்'' என்கிற வார்த்தையோடு குழப்பியிருக்கிறார்கள். மேலும் அந்த விளக்கத்தின்படி மிஞ்சியுள்ள பரிசுத்தவான்கள் ஆண்டவருடைய வருகையில் மரிக்காமல் மறுரூபமாக்கப்படுவார்கள் என்று நினைத்துள்ளார்கள். ஆனால்

அப்படியாக சொல்லப்படவே இல்லை. உதாரணத்திற்கு அப்போஸ்தலர் களை எடுத்துக் கொள்ளுவர்கள். அவர்கள் மரித்தார்கள். அவர்கள் மரித்த நேரத்திலிருந்து உயிர்த்தெழுதலின் காலம் வரை, நித்திரையில் இருப்பதாக எண்ணப்பட்டார்கள். மரிப்பது என்பது அந்த தருணத்தில் நடப்பது, ஆனால் நித்திரை அல்லது சுயநினைவு இல்லாமல் இருப்பது, நூற்றாண்டுகளுக்கு தொடர்ந்தது.

இந்த ''நித்திரை'' என்கிற வார்த்தையைக் குறித்த சிந்தனை அப்போஸ்தலருடைய வார்த்தையோடு, புரிந்து கொள்ளுவதற்காக சோக்கப் பட வேண்டும். எப்படியெனில்: ஆண்டவருடைய ஜனங்கள், அவருடைய இரண்டாம் வருகைவரை இருப்பவர்கள் சுயநினைவு இல்லாமல் ஒரு வினாடிக்கு கூட மரணத்தில் நித்திரையாக இருப்பது அவசியமாக இருக்காது. சபையைக் குறித்து தீர்க்கதரிசி மூலமாக ஆண்டவர் கூறுவது போன்று அவர்கள் மரிப்பார்கள். ''நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப் போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப் போல விழுந்து போவீர்கள்.'' (சங். 82: 6,7) பொதுவாக உலகம் லோகப் பிரபுவான ஆதாமைப் போல மரித்து, அவன் பிள்ளைகளாக இருக்கிறபடியால், அவனுடைய தண்டனையில் பங்குபெறுகிறார்கள். ஆனால் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசம் உள்ளவர்கள் அவரோடு, பிரபுவான இயேசுவோடு கூட மரிக்கிறார்கள். (ஏசா. 9:6; அப். 3:15; 5:31) அவருடைய பலியினால் நீதிமான்களாக்கப் பட்டு, உடன் சுதந்திரராக அவரோடு மரிக்கிறார்கள். அவர்கள் மரணத்திற்குள், இரண்டாம் பிரபுவைப் போன்று, பலியாக விழுகிறார்கள். ''நாம் அவரோடுகூட மரித்தோமானால் அவரோடுகூடப் பிழைத்து மிருப்போம்.'' ஆனால், அப்போஸ்தலர் நமக்கு சுட்டிக் காட்டுகிறபடி, இவர்களின் மரணம் சுயநினைவு இல்லாமல் நித்திரையாயிருப்பது என்று பொருள்படாது. அவர்கள் மரிக்கும் அந்த வினாடியே மறுரூபமாக்கப் படும் வினாடியாக இருக்கும், அல்லது ஆவிக்குரிய சரீரத்தை, பரலோக வாசஸ்தலத்திலிருந்து உடுத்துவிப்பதாக இருக்கும்.

ஆண்டவருடைய வருகைவரை உயிரோடிருப்பவர்கள் அடையப்போகிற ''மறுரூபமாகுதல்'' என்ற வார்த்தையின் முழு அர்த்தத்தின்படி, அது முதலாம் உயிர்த்தெழுதலின் ஒரு பகுதி என்று விளங்குகிறது. ஒரே சரீரத்திலுள்ள எல்லா அங்கங்களுக்கும் பொதுவாக

இருக்கிற மரண அனுபவத்திலிருந்து எந்த குறிப்பிடத்தக்க விதத்திலும் அது மாறுபடவில்லை. ஒரே ஒரு வித்தியாசமானது, சரீரத்தின் மற்ற அங்கங்களுக்கும் இவர்களுக்கும் இடையில் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறதுபோன்று அவர்கள் ''நித்திரை'' அடைவதில்லை என்பதாகும். சரீரத்தின் இந்த கடைசி அங்கங்கள் நித்திரையடைய தேவையில்லை. அவர்கள் இராஜ்யம் வருவதற்காக காத்திருக்க வேண்டியதில்லை. ஏனெனில் இராஜ்யம் அப்பொழுதுதான் ஸ்தாபிக்கப்படும். அவர்கள் உடனடியாக மாம்சமான திரையின் இந்த பக்கத்தில் உள்ள ஊழியத்தின் வேலைகளில் இருந்து, திரையின் மறுபக்கத்தில் உள்ள ஊழியத்தின் வேலைகளில், பரிபூரணமாக்கப்பட்ட சிருஷ்டிகளாக கிறிஸ்துவின் அங்கங்களாக கடந்து செல்வார்கள்.

''நாம் எவ்விதமாயிருப்போமென்று இன்னமும் வெளிப்படவில்லை''

பரிபூரணமாக்கப்பட்ட புது சிருஷ்டியின் அதிகாரங்கள், குணங்கள்பற்றி _அப்போஸ்தலர் கூறும்போது, அவர்கள் எல்லாரும் வானத்துக்குரிய அல்லது ஆவிக்குரிய ஜீவிகளாக ஒரே விதமான மகிமையில் இருந்தாலும் கூட, அவர்கள் எல்லோருக்கும் ஒரே அளவான மகிமை இருக்காது. இந்த வானத்துக்குரிய ஜீவிகளுக்கு, ஒரே பொதுவான மகிமை இருக்கும். பூமிக்குரிய மாம்சீக ஜீவிகளுக்கு வேறொரு பொதுவான மகிமை இருக்கும். ஒவ்வொன்றும் அதன் பூரணத்தில் மகிமையுள்ளதாக இருக்கும். ஆனால், வானத்துக்குரிய மகிமைகள் உயர்வானதாக, எல்லாவற்றையும் விட மேலானதாக இருக்கும். முழு சபையானது ''சூரியனைப் போலப் பிரகாசிக்கும்'' (மத். 13:43) என்று வேத வாக்கியங்கள் சொல்லுகின்றன. வருங்கால மகிமையைப் பற்றி ஆண்டவராலேயே கொடுக்கப்பட்ட இந்த விளக்கம், ''கோதுமை'' வகுப்பை சேர்ந்த அனைவருக்கும் உரித்தாகும். ஆனாலும் அப்போஸ்தலர் விளக்கிதைப் பார்க்கும்போது (1கொரி.15: 41) சபை அங்கங்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் வித்தியாசமான ஸ்தானங்களும், கனமும் உண்டு என்று தெரிகிறது. எல்லாரும் பரிபூரணராக இருப்பார்கள், மிகவும் அதிகமாக சந்தோஷமாக இருப்பார்கள். ஆனால் பிதாவானவர் எல்லாவற்றிக்கும் மேலாக இருப்பதால், குமாரனை தனக்கு அடுத்தபடி உட்காரும்படி அவரே

உயர்த்தி இருக்கிறபடியால், இது வித்தியாசப்பட்ட மகிமையை, மாட்சிமையை, அதிகாரத்தை காட்டுகிறது. அதைப் போல ஆண்டவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரைப் பின்பற்றி வருபவர்கள் மத்தியிலும் இந்த வித்தியாசம் இருக்கும்; பிரகாசத்திலும், அளவிலும் ''நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருப்பது'' போன்று அவர்கள் மத்தியிலும் வித்தியாசமான நிலைமைகள் காணப்படும். (1கொரி. 15:41)

நம்முடைய ஆண்டவர் தன்னுடைய இரண்டு உவமைகளில் அவருடைய மகிமையடைந்த சீடர்கள் மத்தியில் உள்ள இந்த வித்தியாசத்தைத் தான் காண்பிக்கிறார். ஐந்து தாலந்துகளோடு உண்மையாயிருந்தவன், ஆண்டவருடைய வருகையில் விசேஷமான பாராட்டுதல்களைப் பெறுகிறவனாக இருந்தான். உண்மையாயிருந்த மற்றவர்கள், குறைந்த எண்ணிக்கையில் தாலந்தை பெற்றிருந்தவர்கள், விகிதாசாரப்படி நடத்தப்படுவார்கள். அவரிடம் ராத்தலைப் பெற்று உண்மையாக இருந்து, பத்து ராத்தலைப் பெறும்படியாக தன்னுடைய ராத்தலை உபயோகப்படுத்தியவன், பத்து பட்டணங்கள் மேல் அதிகாரியாக இருக்கும் அதிகாரத்தை பெறுகிறவனாக இருந்தான். தன்னுடைய ராத்தலின் மேல் உண்மையாக இருந்து ஐந்து ராத்தலை சம்பாதித்தவனும், அதன் விகிதாசாரப்படி அதிகமான தாலந்துகளையும் ஆசீர்வாதங்களையும், தருணங்களையும், அதிகாரத்தையும் பெறுவான். (மத். 25:14–30; லூக். 19:11–27)

நாமும் இதைக் குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில், நாம் பின்னாக நோக்கிப் பார்க்கும் போது, ஆண்டவர் 12 அப்போஸ்தலர்களை தெரிந்தெடுத்து, அவர்கள் எல்லாரையும் நேசித்த போது, அவர்களில் மூன்று பேரை அவர் விசேஷமாக நேசித்தார் என்று நாம் பார்க்கிறோம். அவர்கள் அநேக வேளைகளில் அவரோடேகூட இருந்தார்கள், மற்றவர்களைக் காட்டிலும் அதிக நெருங்கிய உறவு உடையவர்களாக இருந்தார்கள். மேலும் ''ஜீவ புத்தகம்'' திறக்கப்படும் போது சிங்காசனத்தில் இருந்த ஆண்டவருக்கு அருகில் உள்ள நிலைகள், பகிர்த்து கொடுக்கப்படும் போது வலது பக்கத்தில் உள்ளவர்களுக்கும் இடதுபக்கத்தில் உள்ளவர்களுக்கும் (அவருக்கு அருகாமையில் உள்ளவர்கள்) கொடுக்கப்பட்ட கனத்திற்கும், ஸ்தானத்திற்கும் தகுதி உள்ளவர்கள் என்று எல்லாராலும் அறியப்படுவார்கள் (மாற். 10:40) என்பது நிச்சயம். ஒரு வேளை, அப்போஸ்தலனாகிய பவுல்

ஆண்டவருக்கு அடுத்தும், யோவான் அவருடைய மற்ற கை பக்கத்திலும் காணப்பட்டால் அது நமக்கு ஆச்சரியமாயிருக்காது. கருத்து என்ன வெனில், முக்கியத்துவம் இடத்தைப் பற்றியோ, அல்லது நிலைமைப்பற்றியோ, அல்லது சிங்காசனத்தின் மேலோ கிடையாது; ஆனால் அதிகாரத்தின் மேலும், இராஜ்யத்தின் மாட்சிமையின் மேலும் நெருக்கமான உறவு கொண்டிருப்பது என்பதைப் பற்றி ஆகும். சிறு மந்தையில் உள்ள அனைவரும், ஆண்டவருடைய ஆவியினால் அந்த அளவுக்கு நிரப்பப்பட்டு உள்ளதால் கனம் என்று வரும்போது அவர்கள் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பார்கள் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். ஆனால் அங்கு பொறாமைகள் இருக்காது என்றும் ஆனால் தகுதியைப் பற்றிய திவ்விய தீர்மானம் புது சிருஷ்டிகள் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் நாங்கள் நிச்சயமாக அறிந்துள்ளோம். தற்காலத்தில் காரியம் இப்படியாக இருக்கிறது, எதிர்காலத்தில் இதைக்காட்டிலும் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கலாம். ''தேவன் தமது சித்தப்படி, அவயவங்கள் எவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்'' (1கொரி. 12:18) என்று நாம் தற்போது வாசிக்கிறோம். மேலும் ஆண்டவரோடு இசைவாய் உள்ளவர்கள் அனைவரும் திவ்விய ஒழுங்கை மாற்றாதபடி அதை அறியவும், அதற்கு ஒத்துழைக்கவும் தொடர்ந்து நாடுகிறார்கள். வருங்காலத்திலும் அப்படியேதான் இருக்கும்.

தற்போதுள்ள நிலைமைகளுக்கும், வருங்காலத்தில் உள்ளவை களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் குறித்து அப்போஸ்தலர் இப்படியாக கூறுகிறார்: ''அது அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்.'' அது, புது சிருஷ்டி, பிரதிஷ்டையின் வேளையில், ஆவியினால் பிறந்த வேளையில் துவங்கியது. திவ்விய சித்தத்தின்படி வளர்ச்சி பெற்று, மாம்சத்தை அடக்கி அதை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயற்சிக்கும் போது, மாம்சத்தில் வசித்ததாக கூறப்படும் புது சிருஷ்டி, ஆசரிப்பு கூடாரத்தில் இருந்தது போன்று புதிய சரீரத்திற்காக காத்துக் கொண்டிருந்தது. அது அழிவுள்ளதாய், அழியக்கூடிய சரீரத்தில் விதைக்கப்பட்டது; அது மரணத்திற்குள்ளாக சென்றிருந்தாலும், அது மரித்ததாக எண்ணப்படவில்லை; ஆனால் நித்திரையில் இருப்பதாக, அதன் பூமிக்குரிய கூடாரம் கலைக்கப்பட்டதாக எண்ணப்பட்டது. ''அது'' என்று அழைக்கப்படுகிறது புது சிருஷ்டியைக் குறிக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதலின் போது புது சிருஷ்டிதான் பரலோக வீட்டால், ஆவிக்குரிய சரீரத்தால் தரிக்கப்பட இருக்கிறது.

இந்த ஆவிக்குரிய சரீரத்தில் அது எழுப்பப்படுகிறது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மேலும், அது அழியாமை உள்ளதாக இருக்கும், அது அழியக் கூடாதது, அது மரிக்காது என்று அவர் கூறுகிறார். இங்கே சொல்லப்பட்ட அழியாமை என்பது ''அப்தார்ஸியா'' (aphtharsia)என்ற கிரேக்க பதத்திலிருந்து வந்ததாகும். அது மரணத்திற்கு சாத்தியமில்லாதது, அழிக்க முடியாதது, மரிக்க அல்லது கடந்து செல்லமுடியாதது என்று பொருள்படும். அதே வார்த்தை இந்த அதிகாரத்தில் 50,53,54ம் வசனங்களில் சாகாமை என்று சொல்லப்பட்டு உள்ளது. இதே வார்த்தைதான் ரோம. 2:7 லும் மற்றும் 2 தீமோ. 1:10 லும் அழியாமை என்று கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய ஆவிக்குரிய சரீரங்கள் அழியாமையுள்ளது, சாவாமையுள்ளது என்று கூறப்படுவது மிக முக்கியமானதாகும். எனெனில், இந்த அழியாமை என்கிற தன்மை இயற்கையாகவே யேகோவா தேவனுக்கு மாத்திரமே சொந்தமானது என்று நமக்கு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அது நம்முடைய ஆண்டவராகிய இயேசுவுடையது என்று சொல்லப்பட்டிருப்பது, அது அவர் உண்மையுடையவராயிருந்த குணத்தினால் உயர்த்தப்பட்டதைக் குறிக்கிறது. பிதா தம்மில்தாமே ஜீவன் உடையவராய் இருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவன் உடையவராய் இருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அங்கே இருக்கிற சிந்தனை இதே சிந்தனைதான். அதாவது சபையின் மகிமையான தலையானவர் இப்படியாக சாவாமைக்கு மாத்திரமல்ல, அழியாமைக்கு, திவ்ய சுபாவத்தில் பங்கு பெறுவதற்கு ஒரு மறுரூபப்படுத்துவதை அனுபவித்தார். நம்முடைய மீட்பருக்கு தேவனுடைய திட்டம் தயாளத்துடன் இருப்பது நம்மை ஆச்சரியப்படுத்துவ தில்லை. ஆனால், இந்த திவ்விய சுபாவத்தின் தன்மை, நம்முடைய ஆண்டவருக்கும், அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றி, கனத்தையும், மகிமையையும், அழியாமையும் தேடுகிற அவருடைய சரீரத்தின் அங்கங்களையும் தவிர வேறு யாருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்படாதது, நிச்சயமாகவே நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. (2 பேது. 1:4; ரோம. 2:7)

''அது கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்.'' இங்கே மறுபடியும் புது சிருஷ்டி அது என்கிற

வார்த்தையால் அழைக்கப்படுகிறது. தற்கால வாழ்க்கையில் உலகம் நம்மை அறியவில்லை; நாம் பிதாவினால் பிறந்தவர்கள், ஆவிக்குரிய விதத்தில் அவருக்கு பிள்ளைகளாக இருக்கும்படி பிறந்தவர்கள், நாம் மாம்சத்தில் தற்காலிகமாகத்தான் பரதேசிகளாக உள்ளோம் என்பதை அறியவில்லை; நம்முடைய பலியிலான உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா என்று நாம் சோதிக்கப்படுவதற்காக, நாம் மாம்சத்தில் தற்காலிகமாகத்தான் பரதேசிகளாக உள்ளோம் என்பதை அறியவில்லை. ''நாம் இப்பொழுது தேவனடைய பிள்ளைகளாயிருக்கிறோம்.'' ஆனால் உலகத்தில் அறியப்படாதவர்களாக, மதிக்கப்படாதவர்களாக இருக்கிறோம். ஆனால் நாம் ஆண்டவருக்கு நம்மை அர்ப்பணித்திருப்பதால், மனிதர்கள் மத்தியில் மதிப்புக்குரிய ஸ்தானங்களில் கூட நாம் இல்லாமல் இருக்கலாம். ஏனெனில், நமக்கு இயற்கையான தாலந்துகள் இருந்தால் நாம் அவைகளை உலகப்பிரகாரமான ஆதாயத்துக்கு உபயோகிக்கக் கூடும். எப்படியாயினும், மாம்சத்தில் உள்ள சபை இப்பொழுது, தனியாகவும் சேர்ந்தும் அப்போஸ்தலர் கூறுகிறபடி கனவீனத்தில் இருக்கிறது, அதாவது மதிப்பற்று இருக்கிறது. இன்னொரு இடத்தில் அவர் கூறுகிறபடி நம்முடைய சரீரம் தற்போது அற்பமான சரீரமாக இருக்கிறது. (பிலி. 3:21) ஆனால் போகப் போக நிலைமை எப்படிப்பட்டதாக இருக்கும்? எல்லா கனவீனமும் கடந்து போகுமா? சபையானது (தலையும், சரீரமும்) தூதர்களும், மனிதர்களும் போற்றக் கூடியதாக, மதிக்கக் கூடியதாக இருக்குமா? இப்படியாக புது சிருஷ்டி மகிமையில் இருக்குமா? நிச்சயமாக இருக்கும். இதுவே வாக்குத்தத்தம்.

''அது பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.'' புது சிருஷ்டி இங்கே குறிப்பிடப்படுவது பலவீனம் என்று சொல்லப்படுவது, தற்போதுள்ள அழிவுக்குரிய சரீரங்களைப் பற்றியது, அவர்களுடைய குறைகளைப் பற்றியது. இதைக் குறித்து எல்லா புது சிருஷ்டிகளும் விசனப்படுகிறார்கள். இதை புது சிருஷ்டியின் பலவீனம் அல்ல என்று தேவன் கிருபையாய் எண்ணுகிறார். புது சிருஷ்டி தேவனிடம் வைத்திருக்கிற நோக்கங்கள், கருத்துகள் எல்லாம் சுத்தமானதாகவும், பூரணமானதாகவும், பயபக்தி உள்ளதாயும், பலமுள்ளதாயும் உள்ளன. தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் இந்த பலவீனங்கள், அவர்களுடைய புது உயிர்த்தெழுதலின் சரீரங்களில் சேராது என்பது மிக விசேஷமாக கூறப்பட்டுள்ளது. ''அது பலமுள்ளதாய்

எழுந்திருக்கும்.'' பூரணத்தின் பலமாக, புது சிருஷ்டியின் பலமாக, தேவனின் பலமாக இது இருக்கிறது.

''அது ஜென்ம சரீரமாய் விதைக்கப்படும், அது ஆவிக்குரிய சரீரமாய் எழுந்திருக்கும்.'' அது என்பது புது சிருஷ்டியைக் குறிக்கிறது. இப்பொழுது அது ஜென்ம சரீரமாக இருக்கிறது. கண்ணுக்கு தெரியக்கூடியதாக இருப்பது மாம்சமாகும். தேவனுடைய கிருபையினால் மாத்திரமே புதிய மனதை ஒரு புது சிருஷ்டி என்று எண்ணுவதற்கும், மேலும் இந்த புதிய மனம், அதற்கேற்றவிதமாயிருக்கிற ஒரு ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படுவதற்குரிய காலத்திற்கு காத்திருக்கும்படி அனுமதிக்கப்பட்டுள்ளோம். இப்பொழுது ஜென்ம சரீரம் அது என்று அழைக்கப்படுவது போன்று, அப்பொழுது ஆவிக்குரிய சரீரம் அது என்று இருக்கும். எவ்வளவு மகிமையான எதிர்பார்ப்பாக இது இருக்கிறது! ஜென்ம சுபாவ மனிதனுக்கு பொதுவாக இருக்கிற அனுபவங்களைத் தவிர, வேறு அனுபவமே இல்லாத நமக்கு அதை புரிந்துகொள்ளுவதற்கு முடியாததாக இருக்கிறது. மேலும் நம்முடைய மனங்கள் விசுவாசத்தினால் தேவனின் வாக்குத்தத்தங்களையும், வெளிப்பாடுகளையும் பிடித்துக் கொண்டதைத் தவிர வேறு அனுபவம் கிடையாது. இதன்படி ''இன்னும் காணப்படாதவைகளின்'' ஆவிக்குள்ளாக பிரவேசித்துள்ளோம்.

ஆனால் வரவிருக்கிற மகிமைகளைக்குறித்த சிந்தனையே நம்மை உலகத்திற்கு மேலாக, அதன் கரிசனைகளுக்கும், அதன் சந்தோஷங் களுக்கும் மேலாக உயர்த்தியிருக்குமென்றால், உண்மையிலேயே நாம் பூரணமாக இருந்து, நம்முடைய ஆண்டவருக்கு ஒப்பாக இருந்து, அவருடைய மகிமையில் பங்குபெறும்போது நமக்கு எவ்வளவு அதிக அர்த்தமுடையதாக இருக்கும் பாருங்கள்! ஆண்டவர் நிக்கோதோமுவிடம், ''பூமிக்குரிய காரியங்களை நான் உங்களுக்கு சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?'' என்று கூறியதில் ஆச்சரிப்படுவதற்கில்லை. நாம் பரலோகத்துக்குரிய காரியங்களைப் பற்றி புரிந்துகொள்ள ஆரம்பிப்பதற்கே, முதலாவதாக பரிசுத்த ஆவியினால் பிறக்க வேண்டும் என்று அது அறிவிப்பதில் ஆச்சரியமில்லை. ஆகவே நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள ஓட்டப்பந்தயத்தில் ஓடும்படியாக உள்ள நம்முடைய திறமை, உலகத்தின் ஆவியையும் சத்துருவின் தாக்குதலையும் மேற்கொள்ள நாம் எடுக்கும் முயற்சி, நாம் தேவனுடைய

ஆலோசனைக்கு கீழ்ப்படிகிற அளவின்படியாக, உலகத்தை நேசிக்காமல் இருக்கும் அளவின்படியாக, எல்லா பாரங்களையும் ஒதுக்கிவைத்து எளிதாக சூழ்ந்திருக்கும் பாவத்தையும் ஒதுக்கி வைக்கும் அளவின்படியாக, நாம் சபை கூடிவருதலை மறக்காமல் இருக்கும் அளவின்படியாக, வேதவாக்கியங்களை தினந்தோறும் ஆராய்ந்து பார்க்கும் அளவின்படியாக, வசனத்தின் எல்லா அர்த்தத்தின்படி, தேவனுடைய பிள்ளைகளான நம்மேல் பொழியப்பட்டுள்ள சிலாக்கியங்களையும், இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும் உபயோகிக்கும் அளவின்படியாக அது இருக்கும். இந்த காரியங்களைச் செய்தால் நாம் ஒரு போதும் வீழ்ச்சியடையோம். ஆனால், நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாக இருக்கிறவரின் நித்திய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்காக நமக்கு ஒரு பிரவேசம் பரிபூரணமாகக் கொடுக்கப்படும். 1யோவா. 3:2; ரோம. 8:17; யோவா. 3:12; 1கொரி. 2:14; 1யோவா. 2:15; எபே. 6:10–18; எபி. 12:1, 2; 10:25; யோவா. 5:29; அப். 17:11; 2பேது. 1:4–11.

****

வாசஸ்தலத்திற்காக ஏங்குதல்

மான்கள் நீரோடையை வாஞ்சிப்பது போல,
என் ஆத்துமா உம்மையே வாஞ்சிக்கிறது.
ஓ! நான் எப்பொழுது உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்,
எப்பொழுது எனக்காக அழைப்பு விடுப்பீர்?

இரவிலே எத்தனை முறை என் கண்களைத் திருப்புகிறேன்
என் பரம வாசஸ்தலத்திற்கு நேராக,
அந்த ஆசீர்வதிக்கப்பட்ட வேளைக்காக ஏங்குகிறேன், நீர்
என் ஆண்டவரே எனக்கு சொல்லுவீர், ''வா!''

இருந்தாலும் நான் அறிந்திருக்கிறேன், அவர்கள் மாத்திரம்
உம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட முகத்தைக் காண்பார்கள்,
அவர்களுடைய இருதயங்கள் எல்லா பாவ கறைகளிலிருந்தும்
தூய்மையாக்கப்பட்டுள்ளன, விடுதலையாக்கப்பட்டுள்ளன.

ஓ! என் எஜமானனே, என் ஆண்டவரே,
நான் அறிந்திருக்கிறேன், நான் அதிக தூரத்தில் இருக்கிறேன்
சந்திப்பதற்கு
உம்முடைய எல்லா பரிசுத்தவான்களோடும், ஒளியில்
இனிமையாக ஐக்கியம் கொள்ளுவதற்கு.

நான் அறிந்திருக்கிறேன் உம்முடைய சிங்காசனத்தில் பங்குள்ளவர்கள்
உம்முடைய சாயலில் இருக்க வேண்டும்,
ஆவியின் விலையேறப்பெற்ற கனிகள் எல்லாம்
அவர்களில் உண்டு பிதாவானவர் பார்ப்பதற்கு.

ஆண்டவரே கிருபை எனக்குத்தாரும், பொறுமையுடன்
என்னுடைய நலிந்த இருதயத்தோடு முயற்சிக்க,
உம்முடைய வேளைக்காக காத்திருக்கிறேன் உம்மோடு இருக்கும்படியாக
நீர் இருக்கிறபடியே, உம்மை பார்க்கும்படியாக!

எமது இலவச பிரதிகள்

1. விழித்தெழ வேளை இதுவே
2. பைபிள் தான் ஒரே மெய்க்கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரே வேதம்
3. கடைசிக்கால எச்சரிக்கை
4. உயிர்த்தெழுதலும் நியாயத்தீர்ப்பும்
5. ஞானஸ்நானம்
6. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி
7. அற்புத சுகமளிக்கும் வரம்
8. அந்நிய பாஷை வரம்
9. வேதம் கூறுகிற நரகம் எது?
10. இரட்சிப்பு
11. மரித்தோர் எங்கே?
12. ஆவி, ஆத்துமா, சரீரம்
13. பரிசுத்த ஆவியும் அதன் கிரியைகளும்
14. கிறிஸ்து(மஸ்) பிறந்தநாள்
15. கடவுளும் விக்கிரகங்களும்
16. மூன்று உலகங்கள்
17. வெளியாக்கப்பட்ட இரகசியம்
18. பஸ்காவும் இராப்போஜனமும்

Studies In The Scriptures

You will find the Studies in the Scriptures series outstanding textbooks on the Bible.

THE DIVINE PLANE OF THE AGES Gives an outline of the Divine Plan revealed in the Bible, relating to man's redemption and resitution. - 358 pages

THE TIME IS AT HAND Deals with Bible chronology and time prophecies, identifies the Antichrist, and points out the time and manner of our Lord's return. - 371 pages

THY KINGDOM COME Discusses time prophecies relating to the work of the church at this end of the age, the restoration of Israel, and the setting up of Christ's kingdom. One chapter pertains to the great Pyramid of Egypt - 384 pages

THE BATTLE OF ARMAGEDDON Shows the dissolution of the present order. It discusses many prophecies relating to the end of the age, noting especially our Lord's great prophecy of Matt. 24. -660 pages

THE ATONEMENT BETWEEN GOD AND MAN Devoted to the fact and philosophy of Christ's atoning work; the nature of man, the divine punishment for sin, the truth about hell, and the operation of the Holy Spirit. - 498 pages

THE NEW CREATION The first chapter deals with the Genesis account of creation. The remainder of the book discuss the laws, duties, privileges, and hopes of the consecrated followers of Jesus. - 738 pages

COMPLETE SET OF BOOKS

COMPANION QUESTION BOOKS

— — — — — — — — — — — — — — — — — —

DAWN PUBLICATIONS

199 Railroad Avenue, East Rutherford, NJ 07073